வானொலிப் பெட்டிகள் உள்ள பள்ளிகள், விவரம். 168

**ல்வளம்—**

கார்டு இல்லாதவர்களுக்கு பால் வழங்கல், சித்திரக்குளம், வக்கீல்கள் முறையீடு. 299

பால் குளிரூட்டும் நிலையம், பாலுசெட்டி. 119

பால் சேகரிப்புச் சங்கங்கள், வலங்கைமான். 300

**கிருஷ்ணன், திரு. சோ.—**

ஆளுநர் உரை (தி)— 358—364, 557, 865

**ங்கள்—**

அடப்பாற்றின் குறுக்கே. 68

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.


பாலங்கள்—தொடர்ச்சி.

அதிவீரராமனார் பாலம் (கூத்தாநல்லூர்), பஞ்சாயத்து நிதி திருப்பி வழங்குதல். 636

அய்யாவையனாற்றின் குறுக்கே. 282

இரயில்வே பாலம் (திட்டை), சுரங்கப் பாதையில் தண்ணீர் தேக்கம். 635—636

இரயில்வே மேம்பாலம், தூத்துக்குடி—ஸ்பிக் நெடுஞ் சாலையில். 284

எட்டிமடை பேரூராட்சி அமைத்தல். 59

எருசலேம்—பள்ளிப்பத்து வாய்க்காலின் குறுக்கே. 118

கமண்டல ஆற்றின் குறுக்கே. 74

காரமடை ஒன்றியம். 63—64

சிளிக்குடி அருகே கட்டுதல். 162

குத்தாலம் தொகுதி, ஆறுகளின் குறுக்கே. 93—94

குன்னத்தூர் ஆற்றின் குறுக்கே, ஊத்தங்கரை தாலுகா. 179

கூக்கல்துறை—கோத்தகிரி பாதையில் ஆற்றின் மேல். 82

சங்கராபரணி (தென்னாற்காடு) ஆற்றின் குறுக்கே புதுப் பித்தல். 59

சேயாற்றின் குறுக்கே. 54

திருமணி ஊராட்சி குறுகிய நெடுஞ்சாலை, அகலப்படுத்தல். 71

திருமலைராசன் ஆற்றின் குறுக்கே. 94

நன்டொடை ஆற்றின் குறுக்கே. 155

திலக்கோட்டை-செம்பட்டி சாலை ஒட்டுப்பட்டி ஓடைகளின் குறுக்கே. 121

பவானி ஆற்றின் குறுக்கே. 63

பனஅட்டி காட்டாற்றின் மேல். 119—120

பனையூர் அருகே, பெரிய கால்வாயின் குறுக்கே. 95

புதியது, ரத்தினபுரி. 100—101

மூன்னி ஆற்றின் குறுக்கே, 69




பக்கங்கள்

ப—தொடர்ச்சி.


பாலங்கள்—தொடர்ச்சி.

மேல மூங்கிலடி வாய்க்கால், பாலம் கட்டுதல். 136

வத்தலக்குண்டு-தும்பலப்பட்டி சாலை ஓடையின் மீது. 121

வளவன் ஆற்றின் குறுக்கே. 67

வெள்ளப் பள்ளம் வடிகால் வாய்க்கால் பாலம். 156

பாலன், திரு. சு.

அரிசன நலத் துறை, சென்னை, சொந்தக் குடியிருப்புகள். 87—88

ஆளுநர் உரை (தீ). 737

பாலிடெக்னிக்—

பெண்கள் பாலிடெக்னிக் துலக்கம், பூண்டி கிராமம், கலசப் பாக்கம் தொகுதி. 252

பாலுச்சாமி, திரு. அ.

பாலம், திலக்கோட்டை-செம்பட்டி சாலை ஒட்டுப்பட்டி ஓடைகளின் குறுக்கே. 121

பாலம், வத்தலக்குண்டு-தும்பலப்பட்டி சாலை ஓடையின்மீது. 121

வனத்துறை சாலை, ராஜதானி-தெப்பத்துப்பட்டி மேம் படுத்துதல். 121

ருஷோத்தமன், திரு. து.—

ஆளுநர் உரை (தீ). 788—793

ங்காக்கள்—

கூவம் ஆறு, கரைகளில் பூங்கா. 637—640

ரியசாமி, திரு. ரா.—

ஆளுநர் உரை (தீ). 539—545

### ப—தொடர்ச்சி.


**பெருமாள், திரு. ரா. கு.—**

அரசினர் தொழிற் பயிற்சி நிறுவனம் திருவான்மியூர் புதிய பிரிவுகள். 297

அரிசன, பிற்பட்ட மாணவியர்களுக்கு விடுதி, விளாத்திகுளம். 142

கண்மாய் அமைப்புத் திட்டம், விளாத்திகுளம். 295

தொழில் பயிற்சி நிலையங்கள் நிறுவுதல், கோவில்பட்டி, இராஜபாளையம், தாம்பரம், திண்டிவனம். 295

**பொருட்காட்சி—**

அகில உலகப் பொருட்காட்சி, 1977–1978, சென்னை வருவாய். 97

**பொன்னுசாமி, டாக்டர் ஏ.—**

மருத்துவம், உணவு விடுதிகளில் பணியாற்றுவோர்க்குப் பரிசோதனை. 283

மாவட்ட நிர்வாகம், பெருந்துறைப் பகுதியை தனி வட்டமாக்கல். 283

**பொன்னுரங்கம், திரு. ப.—**

துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள். 195

**போக்குவரத்து—**

கழகங்கள், பேருந்து கூடுகள் கட்டும் பணிமனைகள். 50—51

சிறு பேருந்துகள், கொல்லிமலைப் பகுதி. 180

சுரங்கப் பாதைகள், சென்னை நகரில் கட்டி முடிப்பதற்கான காலவரையறை. 178—179

சென்னை நகர சாலை அபிவிருத்தி போக்கு வரத்துத் திட்டக் குழு, அறிக்கை. 194—195

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், தொழிலாளர் பங்கு. 33—37

திண்டிவனம்—பெங்களூர் விரைவுப் பேருந்து. 297

திருக்கோவிலூர் பேருந்து நிலையம், நவீனப்படுத்துதல். 23—24

நிலையங்கள், போர்ட்டர் அமைப்புத் திட்ட செயற்படுத்துதல். 214






### ப—தொடர்ச்சி.


**போக்குவரத்து—தொடர்ச்சி.**

பிளாட்வே, பயணிகளது சாமான்களை பேருந்தில் ஏற்றுதல். 22—23

பேருந்து நிற்குமிடங்கள், நிழற்கொடைச் செலவு. 42

மினி பஸ்கள், எண்ணிக்கை. 44

மினி பஸ்கள், திருப்பத்தூர், வாணியம்பாடி தாலுகாக்கள். 186—187

மினி பஸ், நிலக்கோட்டை. 180

மினி பஸ், முசிறி தொகுதி. 55

மினி பஸ், வடார்க்காடு மாவட்டம். 305—306

மோட்டார் வாகனச் சட்டம் பேருந்துகள் மீது நடவடிக்கை. 96

மோத்தக்கல்—வேலூருக்கு மினி பஸ். 91

வாடகைக்காரர்கள், வன்மம் அடித்தல். 180—181

விரைவுப் பேருந்து, தஞ்சை—சென்னை இடையே. 64


### ம.


மாறன், திரு. ஆர்.—

ஆளுநர் உரை (தீ.). 925—94[illegible]

தோல் பதனிடும் தொழிற்சாலைகள், கிராமப் பகுதிகளில் அமைத்தல். 640—643

மாறன், திரு. மா.—

அரிசன நலம், தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் வழக்குகள். 98

ஆளுநர் உரை (தீ.). 737

உடற்பயிற்சி, ஆசிரியர்கள் உயர்நிலைப்பள்ளி, வேறுபாடு. 98

ஒத்தநாடு கால்நடைப் பண்ணைக்கு இறக்குமதி செய்யப்பட்டவை. 288

கல்லூரி, மருதமலைக் கோவில் நிதியிலிருந்து ஏற்படுத்த நடவடிக்கை. 166

கிராம வீட்டுவசதி திட்டம், மைய அரசு மானியம். 98

கைப்பம்புகள், திருமருகல் ஒன்றியம். 190

பக்கங்கள்

ம—தொடர்ச்சி.


மணிமாறன், திரு. மா.—தொடர்ச்சி.

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், உரவகைகளுக்கு மானிய வரம்பு. 281

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், நன்னிலம், திருமருகல் ஒன்றியங்கள். 280

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், மானியம் அளிக்கப் படும் உர வகைகள். 281

தீண்டாமை, வழக்குகள். 184

தீ விபத்து, இறந்தவர்கள். 191

துறவு வெட்ட மானியம், தஞ்சை மாவட்டம். 136

தேனிவளர்ப்புத் திட்டம். 644—645

தொழிலாளர்கள், என். எம். ஆர்., மதுரை மாநகராட்சி. 185

நிலங்கள், உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டவை, விவரம். 166, 186—281

மருத்துவக் கல்லூரி, மாணவர்கள், சேர்க்கப்பெற்றோர். 184

மருத்துவமனை. செயற்கை உறுப்புகள் பொருத்தும் நிலையம், தஞ்சை. 185, 186

மாம்பழ விளைச்சலைப் பெருக்க நடவடிக்கை. 288

மின் இணைப்பு, ஆழ் குழாய் கிணறுகள், தஞ்சை மாவட்டம், எண்ணிக்கை. 165—166

மீனளம், தஞ்சையில் மீன் வளர்ப்புக்கு உதவி. 280

மூன்று சக்கர சைக்கிள், முடமானவர்க்கு வழங்கியவை, எண்ணிக்கை. 279

லஞ்ச வழக்குகள். 190

வழக்குகள், உணவுப் பண்டம் பதுக்கல். 190

வாக்காளர் பட்டியல், ஊராட்சி. 191

விவசாயம், ஐ.ஆர். 20 ரக நெல். 282

விற்பனை வரி, நிலுவை. 135—136

வீடுகள், அரிசன நலத் துறையால் கட்டப்பட்டவை. 97




பக்கங்கள்

ம—தொடர்ச்சி.


மருத்துவம்—தொடர்ச்சி.

துவிலக்கு—

சாராய வழக்குகள், சென்னையில் பதிவானவை விவரம். 304

சாராய வழக்குகள், விவரம். 304

மது அருந்துவதற்கான உரிமங்கள் (1974-77), விவரங்கள்.— 45—46

வழக்குகள், அவினாசி. 152

ருத்துவம்—

உணவு விடுதிகளில் பணியாற்றுவோர்க்கு மருத்துவப் பரிசோதனை. 283

கண் சிகிச்சை, தஞ்சை மாவட்டம். 267

ருத்துவமனைகள்—

அரசு மருத்துவமனை, கோத்தகிரி, புதிய கட்டிடங்கள். 135

கிளை, ஆலாப்பட்டி. 105

இரத்த சேமிப்பு நிலையங்கள், தென்னாற்காடு, விவரங்கள். 65

ஒட்டன்சத்திரம், கட்டடம். 645

சித்த மருத்துவ மனை, வரட்டனப்பள்ளி. 178

சிதம்பரம், இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தல். 99

செயற்கை உறுப்புகள் பொருத்தும் நிலையம், தஞ்சை. 185—186

சேலம், காச நோய்ப் பிரிவு. 58

பஞ்சாயத்து மருந்தகம், கந்தலி. 187

பஞ்சாயத்து யூனியன் மருந்தகம், ஜோலார்பேட்டை. 187

மஞ்சூர் (உதகமண்டலம் வட்டம்), கட்டும் பணி முற்றுப் பெறல். 169

மருத்துவக் கல்லூரி, தஞ்சை, இ.சி.ஜி. கருவிகள். 267

மருத்துவர்கள், ஒதுக்கப் பணியிடங்கள். 510—514

மாயூரம், இ.சி.ஜி. கருவி 265

மேல் ஒலக்கூரில் (தென்னாற்காடு) அமைத்தல். 59

பல் சிகிச்சைப் பிரிவுகள், வட்ட மருத்துவ மனைகள். 514—515

பக்கங்கள்

ம—தொடர்ச்சி.


மருத்துவமனைகள்—தொடர்ச்சி.

விக்கிரமசிங்கபுரம், விரிவுபடுத்துதல். 135

மனோகரன், திரு. கி.—

ஆளுநர் உரை—(தீ). 348, 350, 701, 820 832, 919—920

உறுப்பினர் திரு. ரா. உமாநாத் அவர்களின் வீடு தாக்கப்பெற்றது குறித்து (ஒ.தீ.). 730—732

பச்சையப்பன் கல்லூரி, வன்முறை சம்பவங்கள் (ஒ.தீ.). 672—675

பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை (அ.தீ.). 706

முதலமைச்சர் மீது வெளிநடப்பு குறித்து வெளியிட்ட சில கருத்துக்கள் பற்றி (உ.பி.). 524, 527, 528, 529, 530—531, 533. 660

முருகையன், எம்.பி. மறைவுக்கு இரங்கல் தீர்மானம் இல்லாமை (த.கோ.). 3—4

முருகையன் கொலை பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் எடுக்கப் பெறாமை (ஒ.பி.) 655—658

மாணிக்கம், திரு. செ.—

அதிதீஸ்வரர் ஆலயம் (வாணியம்பாடி), புதுப்பித்தல். 182

அரிசன நலப்பள்ளி, கடையக்குடி, கட்டடம். 221

கட்டிடங்கள், (கடையக்குடி) அரிசன நலப்பள்ளி. 184

சிறைத்துறை அலுவலர், பயிற்சித் திட்டம். 234—235

தேவர் ஹால் புதுப்பித்தல், திருச்சிராப்பள்ளி. 505

நிலக்கரி, தூத்துக்குடி புது துறைமுகத்தில் வசதி. 245—246

மாநகராட்சிகள்—

சென்னை, ஊழியர்கள் குடும்பப் பாதுகாப்பு நிதி. 196

சென்னை, குப்பையகற்றும் நவீன இயந்திரங்கள். 627—628

சென்னை, வரவு-செலவு. 115




பக்கங்கள்

ம—தொடர்ச்சி.


மாநாடுகள்—

கூட்டுறவு அமைச்சர்கள் மாநாடு, டெல்லி. 491—492

மின்துறை அமைச்சர்கள் மாநாடு, டில்லி, முடிவுகள். 484—488

மார்க்கபந்து, திரு. ரா.—

ஆளுநர் உரை (தீ). 803—809

முந்திரி, ஆண்டிமடம், உடையார்பாளையம் பகுதிகளில் மகசூல் குறைச்சல். 274—275

மாரிமுத்து, திரு. எ. ஆர்.—

ஆளுநர் உரை.—(தீ) 380, 381, 382, 383, 738, 853—854, 913, 970—985

ஊராட்சிகள் (திருத்த), சட்ட முன்வடிவு, 1979. 537

மாவட்ட நிர்வாகம்—

கள்ளக்குறிச்சி தாலுகா, பிரித்தல். 89—90

பெருந்துறைப் பகுதி, தனி வட்டாங்கள். 283

மி.

மின்சாரம்—

கடல் அலைகள் மூலம் தயாரித்தல். 275—276

பம்பு செட்டுகள், மனுக்கள் விபரம், சிதம்பரம் வட்டம், புடையூர் சோமசுந்தரம் அவர்கள். 1977—1978

பர்மா தமிழர்கள் குடியிருப்பு, நேதாஜி நகர், சென்னை. 196

பரளியாறு மின்திட்டம், கன்னியாகுமரி மாவட்டம். 483—484


D-II A 128—293—11

பக்கங்கள்

ம—தொடர்ச்சி.


**மின்சாரம்—தொடர்ச்சி.**

மின் இணைப்பு—

ஆழ் குழாய் கிணறுகள், தஞ்சை மாவட்டம். 165—166

குழாய் கிணறுகளுக்கு, மறுக்கப்பட்டவை—பூம்புகார் தொகுதி. 282

பணிக்க நாடார் குடியிருப்பு கிராமம், நீர்த்தேக்கத் தொட்டி. 130

பம்பு செட்டுகள், வடலையாத்தூர் (சிதம்பரம் வட்டம்), மனுக்கள் விவரம். 163—164

பம்பு செட்டுகள், கருங்குழி. 107

பம்புசெட்டுகள். கும்பகோணம் தாலுகா. 183

பம்பு செட்டுகள், சிதம்பரம். 110

பம்பு செட்டுகள், தஞ்சாவூர் மாவட்டம். 221

பம்பு செட்டு, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம் 183

பம்பு செட்டுகள், மன்னார்குடி வட்டம். 107

பம்பு செட்டுகள், வாஜார் ஒன்றியம். 138

விவசாயப் பம்பு செட்டுகள், விவரம். 160

ஜவ்வாது மலைவாழ் விவசாயிகள், கலசப்பாக்கம். 251—252

மின் கட்டணத் தொகை, திருவை மதுரை ராஜா மில் உரிமையாளர். 123

**மீனளம்—**

இறால் வளர்ப்பு நிலையம், சென்னை. 99

சங்கு குளிப்பு, இடங்கள், வருமானமும். 131

தஞ்சையில் மீன் வளர்ப்புக்கு உதவி. 280

மீன்பிடி படகுகள், 1977-78-ல் வழங்கியவை. 290—291

மீனவர்கள், தொழில் முன்னேற்ற மூலதன உதவி. 137—138

முத்துக் குளிப்பு. 80—81

**முசிறிப்புத்தன், திரு. பி.—**

ஆளுநர் உரை, (தீ.). 545, 561, 944




பக்கங்கள்

ம—தொடர்ச்சி.


**முத்துசாமி கரையாளர், திரு. சு.—**

ஆளுநர் உரை (தீ.). 706—709

**முத்தையா, திரு. இரா.—**

ஆளுநர் உரை, (தீ.). 319—318, 331

**முருகேசன், திரு. கூ. ச.—**

ஆளுநர் உரை, (தீ.). 736—737

காவிரி, வடிகால் மதகுகள் அமைத்தல். 52

**முனுசாமி, திரு. பொ.—**

ஆளுநர் உரை (தீ.). 751, 752

ய.

**யூசுப், திரு. யா. சை. மு.—**

அரசினர் பெண்கள் பள்ளி, ஆசிரியர் பயிற்சிப்பள்ளி, இட மாற்றுதல். 171

ஆளுநர் உரை (தீ.). 545—554

இராதாபுரம் கால்வாய், சிமெண்ட் பூச்சு. 198

சப்-மாஜிஸ்ட்ரேட் அலுவலகம், நாங்குநேரி, கூடுதல் துணை மாஜிஸ்ட்ரேட் நியமனம். 305

தொலைபேசி வசதி (தானியங்கி), திருநெல்வேலி-பாளையங் கோட்டை. 116

பனைமரங்கள், வளர்க்கும் திட்டம். 182

பூமிதான இயக்கம், நிலம் வழங்கியவர்கள், நெல்லை மாவட்டம். 182

வட்ட பல் சிகிச்சைப் பிரிவுகள், மருத்துவ மனைகள். 514—515

ர.

**ரகுமான்கான், திரு. அ.—**

ஆளுநர் உரை (தீ). 591, 594, 930, 934

மேலவையில் முதலமைச்சர் குறிப்பிட்ட தகவல் (ஒ.பி.). 736, 736

பக்கங்கள்

ர—தொடர்ச்சி.


ரகோத்தமன், திரு. கோ.—

சித்தப்பட்டினம் கால்வாய்த் திட்டம், முகையூர். 506—507

பட்டா வழங்கல், தென்னாற்காடு ராணுவத்தினர்க்கு. 12

மினி பஸ் முகையூர் தொகுதி. 55

விபச்சாரத் தடைச்சட்டம், தண்டனை அடைந்த பெண்கள். 109

ரசாக், திரு. எம். எம். ஏ.—

சாலை, பன்மொழி—வடகரை, விரிவுபடுத்தல். 103

புறம்போக்கு நிலம், புதுக்குடி கிராமத்தில் ஆக்கிரமிப்பு. 103

ரமணி, திரு. கு.—

ஆளுநர் உரை (தி). 368—376, 865, 969

உறுப்பினர் திரு. ரா. உமாநாத் அவர்களின் வீடு தாக்கப் பெற்றது குறித்து (ஒ.தி.) 725

குடிநீர் மெயின் குழாய்கள் (சிறுவாணி), கோவை அம்பிகா லே-அவுட். 92

குடும்பக் கட்டுப்பாடு, அறுவை சிகிச்சை செய்து கொள்வோர், வெகுமதித் தொகை அதிகரிப்பு. 310

சாலைகள், குத்தியாலத்தூர் மலைச் சாலை அகலப்படுத்தல். 53

சிந்தாமணி சிறப்பங்காடி (கோவை), நிர்வாகம். 488—491

சின்கோனா துறை ஊழியர்கள் (நீலகிரி மாவட்டம்), போனஸ். 624—626

சின்கோனா துறைத் தொழிலாளர்கள், நிரந்தர விதிகள் அமுலாக்கல். 52

நீர்ப்பாசன வரிகளில் வித்தியாசம், குண்டடம், காங்கேயம் பஞ்சாயத்து யூனியன்கள். 301

மின்துறை அமைச்சர்கள் மாநாடு, டில்லி முடிவுகள். 484—488

வினாக்கள் எடுத்துக்கொள்வது (ஒ.பி.) 67




பக்கங்கள்

ர—தொடர்ச்சி.


ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு.—

ஆளுநர் உரை (தி). 846—852

ராஜூ, திரு. செ. மெ.—

ஆளுநர் உரை (தி). 776—778


ல.


லஞ்ச ஒழிப்பு—

வழக்குகள். 190

லத்தீப், திரு. எம். ஏ.—

ஆளுநர் உரை (தி). 810—815, 818—823, 944, 945,

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979. 538

பச்சையப்பன் கல்லூரி, வன்முறை சம்பவங்கள் (ஒ.தி.). 671—672

முதலமைச்சர் மீது, வெளிநடப்பு குறித்து வெளியிட்ட சில கருத்துக்கள் பற்றி (உ.பி.). 528, 529

முருகையன் கொலைப்பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப் பெறாமை (ஒ.பி.). 655


வ.


வடிவேல், திரு. கு.—

ஆளுநர் உரை (தி). 761—764, 767—768

வரதராஜன், திரு. என்—

ஆளுநர் உரை (தி). 739—741, 778—785

உறுப்பினர் திரு. ரா. உமாநாத் அவர்களின் வீடு தாக்கப் பெற்றது குறித்து (ஒ.தி.) 725

டோபிகானா, சாத்தமங்கலம் சலவையாளர்கள். 161—162

வ—தொடர்ச்சி.


வரிகள்—

கேளிக்கை வரி வசூல், 1975-77. 120

நிலவரி வருவாய், நிலுவை. 77—78

நீர்ப்பாசன வரிகளில் வித்தியாசம், காங்கேயம், குண்டடம் பஞ்சாயத்து யூனியன்கள். 300

பொருள்கள், பிராட்வே பேருந்து நிலையத்திற்குள் எடுத்துச் செல்லுபவை. 61

விற்பனை வரி நிலுவை. 135—136

வழக்குகள்—

குற்றப்பிரிவு பகுதி, தூத்துக்குடி, பதிவான வழக்குகள். 261

வறட்சி—

நிவாரணப்பணி, பொன்னமராவதி ஒன்றியம். 92

வனவிலங்குகள்—

வனவிலங்குகள் சரணாலயம், தமிழகத்தில் உள்ளவை. 286—287

வாசன், திரு. சி. மு.—

கதர் உற்பத்தி, பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம், உளுந்தூர் பேட்டை. 231—232

குளங்களைத் தூர் எடுத்தல், பழனி சுற்று வட்டாரம். 246

கோழிப் பண்ணை, செம்பியம்மாதேவி, கட்டடம். 224—225

கோழிப்பண்ணைகள், நிதியுதவி. 225

செங்கல், ஏற்றுமதி. 507—509

பாதை, பைத்தம்பாடி அரிசனக் காலனியிலிருந்து மயானத் திற்குச் செல்ல. 182

பாப்பான் வாய்க்கால், சிமெண்ட் தளம். 246

விடுதிகள்—

அரிசன நல மாணவர் விடுதி, கட்டனூர். 112

அரிசன பிற்பட்ட வகுப்பு மாணவர்கள், விளாத்திகுளம். 142

அரிசன மாணவர்கள், அரூர். 183




பக்கங்கள்

வ—தொடர்ச்சி.


விடுதிகள்—தொடர்ச்சி.

எம். சி. ராஜா விடுதியில் சேர்க்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்கள். 394

பணியாற்றும் மகளிர் தங்கும் விடுதிகள், தூத்துக்குடி. 283—284

மாணவர், சீர்காழி, வாடகை. 106

விபத்துக்கள்—

இராயப்பேட்டை மணிக்கூண்டு சந்திப்பு, தடுப்பு நடவடிக் கைகள். 173—174

தீ, இறந்தவர்கள். 191

தீ, காயம். 300

முதலமைச்சர் விபத்து நிவாரண நிதி. 276—277

வாகனங்கள், சென்னை மாநகர். 166

விளையாட்டுக்கள்—

சர்க்கஸ் கம்பெனிகள், இட ஒதுக்கீடு. 184

வின்சென்ட், திரு. எம்.—

ஆளுநர் உரை—(தி) 853

ஜயராகவன், திரு. பொ.—

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், பேருந்து கூடுகள் கட்டும் பணி மனைகள், 50—51

ஆளுநர் உரை—(தி). 852—860

பரளியாறு மின் திட்டம், கன்னியாகுமரி மாவட்டம். 483—484

வீட்டுவசதி—

அரிசனங்கள், திண்டிவனம் தொகுதி. 171

அரிசனங்களுக்கு வீடுகள், புதுக்கோட்டை மாவட்டம். 141

காவல் துறையினர், மனல்மேடு, மாயூரம் தாலுக்கா, வீடுகள். 268

காவலர் குடியிருப்புகள், பாலையூர். 123—124

கிராம வீட்டு வசதி திட்டம், மைய அரசு மானியம். 98

குடிசை மாற்று வாரியம், சென்னையில் கட்டிய வீடுகள். 293

பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

வீட்டு வசதி—தொடர்ச்சி.

குடிசை மாற்று வாரியம் வீடுகளின் எண்ணிக்கை. 129

குடியிருப்பு, பல்லாங்குளம் கண்மாய், பகடை இனத்தவர் (இராமநாதபுரம் மாவட்டம்). 178

தக்கைக்கல், அண்டை மாநிலங்களில் உபயோகம். 298

தாழ்த்தப்பட்டோர், தஞ்சை மாவட்டம். 308

பல்லாங்குளம் கண்மாய், திருவில்லிப்புத்தூர் தொகுதி. 178

பல்லங்குளம் கண்மாய், பகடை இனத்தவர் (இராமநாதபுரம் மாவட்டம்). 178

மனைப் பட்டாக்கள், அரிசனங்கள் பேரூர் தொகுதி. 95—96

மனைப் பட்டாக்கள், சிதம்பரம். 110—111

மீனவர் குடும்பங்கள், ஆரோக்கியபுரம். 160

வீட்டு மனைகள், அரிசனங்களுக்கு. 134

வீட்டு மனைகள், கூடலூர் தேவாலா கிராமத்தில் வழங்கல். 81—82

வீட்டுமனை மனுக்கள் விவரம், வடாற்காடு மாவட்டம். 173

வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு திரு. ரா.—

சிங்காநல்லூர் கமலா மில் குட்டையில் உள்ள கழிவுநீரை அப்புறப்படுத்தல். 288—289

வேணுகோபால், திரு. த.—

பீம்பாப்பட்டி அணைத் திட்டம், செங்கம் வட்டம், நிறைவேற்றல். 61

ரெட்டியார்பாளையம் குடிமராமத்து அணை, உடைப்பு. 130—131

வேலுச்சாமி திரு. ஓ. சோ.—

நக்சல்பாரி கைதிகள், சிறைச்சாலைகளிலிருந்து விடுவிப்பது (ஒ.தீ.). 666—667

நீண்டதூரப் பேருந்துகள், பெண்களுக்குத் தனி இடம். 134

வீட்டு மனைகள், அரிசனங்களுக்கு வழங்குதல். 134





பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

வேளாண்மை உரங்கள்—

நுண்ணூட்டச் சத்துக் கலவைகள் தொழிற்சாலை, உற்பத்தி விவரம். 175

நுண்ணூட்டச் சத்துக் கலவைகள், வேளாண்மைத் துறை உற்பத்தி செய்தல். 174

மானியம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம். 281

கடலை—

விவசாயிகள் தீர்மானம், தஞ்சை மாவட்ட மாநாடு. 163—164

விவசாயிகள் விண்ணப்பம், தஞ்சை மாவட்டம். 164

கடன்கள்—

கூட்டுறவுக் கடன்கள், தஞ்சை மாவட்டம். 286

கூட்டுறவுக் கடன்கள், விவசாய வங்கி, நிலவள வங்கி 1977-78-ல் அளித்தவை. 289

கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம், நார்த்தாம்பூண்டி, துவங்குதல். 305

துறவு வெட்ட மானியம், தஞ்சை மாவட்டம். 136

கரும்பு—

சாகுபடி, குமரி மாவட்டம். 159, 198

கருவிகள்—

பொறியியல் ஆராய்ச்சித் துறை, கண்டுபிடிப்பு. 171

கன்றுகள்—

தென்னை, மா கன்றுகள், விவசாயிகளுக்கு வழங்கல், அரூர், ஊத்தங்கரை வட்டங்கள். 257—258

பழங்கன்று வைக்க திட்டம், திருவில்லிப்புத்தூர். 309—310

கிழங்கு—

குச்சிக்கிழங்கு சாகுபடி மானியம், தர்மபுரி மாவட்டம். 255—256

பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

வேளாண்மை—தொடர்ச்சி.

நெல்—

ஐ.ஆர் 20 ரகம். 482

குறுவைப் பயிர் பரப்பளவு, தஞ்சை மாவட்டம். 302

பருத்தி—

நோய்த் தடுப்பு நடவடிக்கை. 260—261

பருப்பு—

உற்பத்தி, தஞ்சை மாவட்டம். 262—263

பழங்கள்—

ஆப்பிள், ஆராய்ச்சி நிலையம், கொடைக்கானல். 248—249

தோட்டங்கள், அபிவிருத்தி. 640

மரங்கள்—

பனை மரங்கள், அழியும் நிலை. 233

முந்திரி—

மகசூல், ஆண்டிமடம், உடையார்பாளையம் பகுதிகள். 274—275

ஜ—தொடர்ச்சி.

ஜப்தி—

உடுமலை தாலுகா. 195—196

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், நன்னிலம், திருமருகல் ஒன்றியங்கள். 280

சிறைகளில் வேளாண்மைப் பண்ணைகள். 243—244

தொழில் அமைப்புகள். 277

பண்ணை அறிவியல் நிலையங்கள், அமைத்தல். 307

பருவநிலை ஆராய்ச்சி, விவரங்கள். 176

மண்வள ஆராய்ச்சி, ஆத்தூர். 105

மின்சார இணைப்பு, விவசாய பம்பு. 169

விவசாயிகள் கிளர்ச்சி. 265





பக்கங்கள்

ஜ—தொடர்ச்சி.

ஜான் வின்சென்ட், திரு. மு.—

ஆளுநர் உரை—(தீ). 569—573

குடிநீர் வழங்கல், நாங்குனேரி பகுதி, நான்கு ஊராட்சிகளில். 76—77

ஜெபமணி, திரு. ர.—

ஆளுநர் உரை (தீ). 556, 557, 583—595 807, 920, 929

ஜெயராமன், திரு. வே. இரா.—

ஆசிரியர் சேமநல நிதிப்பிடித்தம், பெரியகுளம். 22

ஜேம்ஸ், திரு. ஜே.—

ஆளுநர் உரை (தீ). 912—925, 970, 971 972

ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979. 537

ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்), திருத்த சட்ட முன்வடிவு, 1979. 677

நக்சல்பாரி கைதிகள், சிறைச்சாலைகளிலிருந்து விடுவிப்பது (ஒ.தீ.). 665—666

நம்பிக்கையில்லாத் தீர்மானம், எடுத்துக்கொள்வது (த.கோ.). 312

முருகையன் கொலை பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக்கப் பெறாமை (ஒ.பி.). 688

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் ஆறாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்.

---

## திங்கட்கிழமை, 1979 பிப்ரவரி 12-ம் தேதி.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. இரங்கல் குறிப்புகள்.

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான—

(1) திரு. எம். வில்லியம் அவர்கள் 13—10—1978 ஆம் தேதியன்றும்,

(2) திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் 22—11—1978ஆம் தேதியன்றும்,

(3) திரு. வி. வி. ராமசாமி அவர்கள் 27—12—78 ஆம் தேதியன்றும்,

(4) திரு. கிருஷ்ணசாமி வாண்டையார் அவர்கள் 15-1-1979 ஆம் தேதியன்றும்,

(5) திரு. பைடா வெங்கட்டநாராயணா அவர்கள் 18-1-1979 ஆம் தேதியன்றும்,

(6) திரு பி. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் 19-1-1979 ஆம் தேதியன்றும்,

(7) திரு. ஏ. கே. மாசிலாமணி செட்டியார் அவர்கள் 3-2-1979 ஆம் தேதியன்றும்,

மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். வில்லியம், 1957 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியிலிருந்தும், 1967 ஆம் ஆண்டிலிருந்து 1970 ஆம் ஆண்டு வரை கிள்ளியூர் தொகுதியிலிருந்தும், சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம், 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரை, திருக்கோவிலூர் பொது கிராமப் புறத் தொகுதியிலிருந்தும், 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை சேலம் பொது கிராமப் புறத் தொகுதியிலிருந்தும், அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 1952 ஆம் ஆண்டிலிருந்து 1966 ஆம் ஆண்டு வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் இருந்தார்கள்.

திரு. வி.வி. ராமசாமி, 1952 ஆம் ஆண்டிலிருந்து 1953 ஆம் ஆண்டு வரை விருதுநகர் தொகுதியிலிருந்து சட்ட மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 1954 ஆம் ஆண்டு முதல் 1960 ஆம் ஆண்டு வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் இருந்தார்கள்.

திரு. ஏ. கிருஷ்ணசாமி வாண்டையார், 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை கும்பகோணம் பொது கிராமப் புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 1957 ஆம் ஆண்டிலிருந்து 1968 ஆம் ஆண்டு வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் இருந்தார்கள்.

திரு. பைடா வெங்கட்டநாராயணா, 1946 ஆம் ஆண்டிலிருந்து, 1952 ஆம் ஆண்டு வரை காக்கிநாடா பொது நகர்ப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

திரு. பி. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை மானாமதுரை தொகுதியிலிருந்து சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 1957 ஆம் ஆண்டிலிருந்து 1960 ஆம் ஆண்டு வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் இருந்தார்கள்.

திரு. ஏ. கே. மாசிலாமணி செட்டியார், 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை வேலூர் பொதுத் தொகுதியிலிருந்து சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 1957 ஆம் ஆண்டு முதல் 1960 ஆம் ஆண்டு வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் இருந்தார்கள்.



அன்னார்கள் சிறந்த முறையில் சட்டமன்றப் பேரவையில் பணியாற்றியுள்ளார்கள். அவர்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(பேரவையிலிருந்த அனைத்து உறுப்பினர்களும் இரண்டு நிமிட நேரம் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. தகவல் கோரல்.

(அ) திரு. முருகையன் மறைவு குறித்து இரங்கல் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 1.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து கேள்வி நேரம் முடிந்த பிறகு கேட்க வேண்டிய பிரச்னை.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தங்களுக்கு நினைவுபடுத்துவதற்காக கூற விரும்புகிறேன். சட்டமன்றத்திற்கு அப்பாலுள்ள பாராளுமன்ற உறுப்பினரான திரு. முருகையன் அவர்கள் மறைவு குறித்தும், இப்படி இப்போது இந்த மன்றத்தில் தீர்மானம் கொண்டு வரும்போது கொண்டு வந்திருக்கலாமே என்பதை நினைவு படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுவரை நம்முடைய அவையில் பாராளுமன்ற உறுப்பினருக்கு நினைவு படுத்தும் வகையில் அனுதாபத் தீர்மானம் கொண்டு வந்ததில்லை. நம்முடைய சட்டமன்றத்தின் தொடர்புள்ளவர்களுக்குத்தான் இரங்கல் தீர்மானம் போடுவது மரபு, வழக்கமாக இருந்திருக்கிறது. இதற்கு பாராளுமன்றத்திலேயே தீர்மானம் போடுவார்கள். அங்கே நம் பிரதிநிதிகள் அப்போது வருத்தம் தெரிவிப்பார்கள்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : சட்டமன்றத்திற்கு அப்பாற்பட்டுள்ள பெரியவர்களுக்கும் இங்கே தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி நான் கேள்வியும் பட்டிருக்கிறேன், பத்திரிகைகளிலும் படித்திருக்கிறேன். அப்படியிருக்குமானால், இங்கே தீர்மானம் கொண்டு வருவதில் தவறில்லை.

1979 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்கள் கிளப்பிய இந்தப் பிரச்சினை முருகையன் அவர்களின் மறைவைக் குறித்து சட்டமன்றத்திலே ஒரு தீர்மானம் கொண்டு வரக் கூடாதா என்பதாகும். இது வரை அப்படிப்பட்ட மரபு இல்லை என்பதை சபாநாயகர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல் முருகையன் அவர்களைப் பற்றி நாடாளு மன்றத்திலே இப்படிப்பட்ட தீர்மானம் வர இருக்கிறது.

மூன்றாவது, எந்த அளவிற்கு முருகையன் அவர்களின் மறைவு பற்றி இந்த அவை, இந்த அரசு ஆழ்ந்த கவலை கொண்டிருக் கிறது என்பதை ஆளுநர் உரையில் நாம் தெளிவாகத் தெரி வித்திருக்கிறோம். அதற்குப் பிறகு ஒரு புதிய மரபை உரு வாக்குவது சரியாக இருக்காது என்ற எனது தாழ்மையான கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. ஒழுங்குப் பிரச்சினை.

### வினாக்கள் எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, லிஸ்டிலே கேள்விகளைச் சேர்ப்பது பற்றி, நான் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்ப விரும்புகிறேன்.
விதி 83-ல்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உமாநாத் அவர்கள் கேள்வி நேரம் முடிந்த பிறகு கூட இதைச் சுட்டிக் காட்டலாம். ஆனாலும் தாங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அனுமதிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : நம்முடைய பேரவை விதி 83 (3) இல் " A point of order shall relate to the interpretation or enforcement of these rules... ..என்று இருக்கிறது. என்போர்ஸ்மென்ட் என்று வருகிறபோது விதி 34-னுடைய என்போர்ஸ்மெண்டைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். விதி 34-ன் படி நீங்கள் ஒரு கேள்விக்கு 42 நாட்கள் டைம் கொடுக்கிறீர்கள். 42 நாட்கள் முடிந்து விட்டால் கட்டாயமாக இங்கே வரவேண்டும் என்பது தான். ஆனால் அதிலே ஒரு 'ப்ரொவைசோ' இருக்கிறது. அரசாங்க இலாக்காவிற்கு இன்னும் நேரம் தேவை என்ற நிலை வந்தால் 15 நாட்கள் அதிக பட்சம் கொடுக்கலாம் என்று இருக் கிறது. அது கொடுத்தாகிவிட்டது என்று சொன்னாலும்



1979 பிப்ரவரி 12] [திரு. ரா. உமாநாத்]

"Provided that in case the answer to a question cannot be sent to the Secretary within forty-two days from the date of admission, the Speaker may, if sufficient cause is shown, extend the time therefor not exceeding two weeks and after the expiry of such extended time the question shall be included shall be included in the list of questions. "

என்று இருக்கிறது. 42 நாட்களையும், 15 நாட்களையும் சேர்த்து மொத்தம் 57 நாட்கள் தான் கொடுக்கப்பட வேண்டும். 52 நாட்களைத் தாண்டினால் அனுப்பிய கேள்வி இங்கே வந்துவிட வேண்டும்.

The rule says 'shall be included', but the question has not been included.

52 நாட்கள் ஆகியும் கூட கேள்விகள் வரவில்லை. அந்த வய லேஷனுக்கு நான் உங்களுடைய செகரட்டேரியேட்டை சார்ஜ் பண்ணவில்லை. உங்கள் செக்கரேட்டடேரியட்டுக்கு ஒரு சிக்கல் இருக்கிறது. அது என்ன சிக்கல் என்றால் அரசாங்கத் துறைகளி லிருந்து ரெபரன்ஸ் பேக் என்ற முறையிலே திருப்பி எங்களையே கேட்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் இலாகாவிற்கு டி.வி.எஸ்ஸிலே ..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்வியைப் போட் டால் அதற்குப் பதில் வருவதற்கு காலதாமதம் ஆகிறது, அது வும் குறிப்பிட்ட கால வரம்புக்கு மீறிப் போகிறது என்று தாங்கள் சொன்னாலே போதும், புரிந்து கொள்ளலாம். அதற்கு முன் னோடியாக ஒரு காரணத்தைத் தாங்கள் காட்ட வேண்டிய தில்லை.

திரு. ரா. உமாநாத் : என்னுடைய சங்கடத்தை நான் சொல்கிறேன், ரெபரன்ஸ் பேக் என்ற முறையிலே செய்கி றார்கள். நாங்கள் ஒரு கேள்வி கொடுத்தால் நீங்கள் சம்பந்தப் பட்ட துறைக்கு அனுப்புகிறீர்கள், அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று நீங்கள் அவர்களைக் கேட்கிறபோது அவர் கள் ரெபரன்ஸ் பேக் என்ற முறையிலே கேள்வி கொடுத்த எங்களுக்கு அனுப்பி எங்களை எந்தத் தேதியிலே கொடுத்தீர்கள் என்று கேட்கிறார்கள், ஏதோ நாங்கள் மந்திரி என்பதைப் போல வும் அவர்கள் எம்.எல்.ஏ.-க்கள் போலவும் அதிகாரிகள் எங் களைக் கேட்கிறார்கள்.

You are an independent body. You are not subordinate to the Executive. The Executive is subordinate to the Legislature என்ற முறையிலே தாங்கள் கராராக இன்டிபென்டன்ட்டாக

கண்டிப்பாக இருக்க வேண்டும். அப்படி பண்ணுவதிலே உங்களிடத்திலே கொஞ்சம் தயக்கம் இருக்கிறது, அது கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. உமாநாத் அவர்களுடைய பிரச்சினை ஏற்கெனவே வந்த ஒன்றாகும். அலுவல் ஆய்வுக் குழுவிலே ஒரு நாளைக்கு 20 கேள்விகள் மட்டும் தான் எடுத்துக் கொள்வது அதற்கு மேலே எடுத்துக் கொண்டால் மற்ற அலுவல்கள் கெட்டுவிடும் என்ற முறையிலே முடிவு எடுக்கப் பட்டது. அதனால் பல கேள்விகள் தேங்கிக் கிடக்கின்றன. ஏதோ ஒரு குறிப்பிட்ட வினாவைப் பற்றிக் கேட்பார்களானால் அதைப்பற்றிக் கேட்பதற்கோ விசாரிப்பதற்கோ தயாராக இருக்கிறேன். பதில்கள் வந்திருக்கின்றன. ஒரு நாளைக்கு 20 கேள்விகளுக்கு மேல் போனால் மற்ற அலுவல்கள் கெட்டு விடும். திரு. உமாநாத் அவர்கள் சொன்ன யோசனையை எடுத்துக் கொண்டு ஏற்ற நடவடிக்கை எடுக்கிறேன். ஆனால் அதற்கு அதுவே முழுக் காரணமும் இல்லையென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 9–10.]

அதேநேரத்தில் 500 அன்ஸ்டார்ட் கேள்விகளுக்குப் பதில் அளித்துப் புத்தக வடிவில் உங்களிடம் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கூடுமானவரையில் தாங்கள் சொன்ன யோசனைகளை ஏற்கத் தயாராக இருக்கிறேன். அதேநேரத்தில் அதுவே காரணம் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: இன்றைய தாளையும் பார்த்தேன், நாளைய தாளையும் பார்த்தேன். என்னுடைய கேள்விகளில் ஒரு கேள்விகூட ஸ்டார்ட் கேள்வியாக உங்களுடைய செக்ரடேரியட்டால் கருதப்படவில்லையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய தனிப்பட்ட பிரச்னையைப்பற்றி என்னிடத்தில் சொல்லிக் காட்டுங்கள், அதை நான் யோசிக்கிறேன். ஆனால் அதற்காக மொத்த வடிவிலே சொல்லிவிட முடியாது.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, தனிப்பட்ட பிரச்னையாக இதை நீங்கள் பார்க்க வேண்டாம். இதிலே........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து மீண்டும் சொல்கிறேன். தனி நபர் பிரச்னை என்ற கருத்தில் எடுத்துக் கொள்ளுங்கள், அந்தக் கருத்தில் சொன்னேனே தவிர வேறல்ல.



திரு. கு. ரமணி: நானே கடிதம் எழுதினேன், அதற்கு உங்களிடமிருந்து பதில் வந்தது. ஆனால் அந்தப் பதில் இந்த விஷயத்தில் திருப்திகரமாக இருந்திருக்குமா என்று நீங்களே யோசனை செய்து பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்வதில் ஓரிரு பிரச்னைகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏற்கெனவே திரு. உமாநாத் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டேன். இப்படிப்பட்ட ஒரு சில பிரச்னைகள் இருக்கலாம். அதைத் திருத்திக்கொள்வதில் உங்களுடைய யோசனைகளை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் மொத்தமும் அப்படி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: ஒரு சில பிரச்னைகள் மட்டும் அல்ல. இப்படிப்பட்ட நிலையில் ரூலே நிலை நிற்காது என்று வருகிறது. ஒரு நாளைக்கு இருபது கேள்விகள்தான் எடுத்துக் கொள்ளப்பட முடியும், காரணம் அங்கத்தினர்கள் நூற்றுக்கணக்கில் கேள்விகள் போட்டால் நேரம் இருக்காது என்பதால். அப்படிப் பார்க்கும்பொழுது இந்த ரூலுக்கே பலன் இல்லாமல் போகிறது, எனவே, இதற்கு வேறு என்ன வழி என்று கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் சங்கரய்யா, உமாநாத் ஆகியோர்களைக் கேட்டால் பதில் சொல்வார்கள். அலுவல் ஆய்வுக் குழுவிலே அவர்களும் பங்கு கொண்டவர்கள். அவர்களையே நீங்கள் இதுபற்றிக் கேளுங்கள். அலுவல் ஆய்வுக் குழுவிலே சொன்னால் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: அலுவல் ஆய்வுக் குழுவிலே அவர்கள் பேசினாலும், தலைவர் என்ற முறையில் இந்த ரூலை அமலாக்கும் போது எங்கள் உரிமையைப் பாதுகாக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முதலில் திருவாளர்கள் உமாநாத், சங்கரய்யா ஆகியவர்களிடம் சொல்லுங்கள், அவர்கள் சரி என்று ஒப்புக்கொண்ட பிறகு மற்றவர்களிடம் வாருங்கள். முதலில் உங்கள் தலைவர்களை ஏற்றுக் கொள்ளச் சொல்லுங்கள்.

திரு. க. சுப்பு: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், தமிழக அரசு எழுத்துச் சீர்திருத்தம் பற்றி ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்த அரசாணை வந்த பிறகும் வினாப் பட்டியலில் பழைய 'ஞ' போடப்பட்டிருக்கிறது. ஒருவேளை அந்த அரசு ஆணையை நிராகரித்து வேறு ஆணை போடப்பட்டிருக்கிறதா'

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விநேரத்தில் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புவதற்கு இடம் இருக்கிறதா? திரு. சுப்பு அவர்கள் விஷயம் தெரிந்தவர்கள். கேள்விநேரத்திலே பல பிரச்னைகளைப்பற்றி இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். கேட்ட கேள்விகளுக்கே பதில் சொல்ல முடியாமல், நூற்றுக்கணக்கான கேள்விகள் அன் ஸ்டார்ட் கேள்விகளாகி, ஸ்டார்ட் இல்லை என்று உமாநாத் அவர்கள் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், எனவே நேரம் பாழ் ஆகிறது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது விவாதம் இல்லை.

திரு. க. சுப்பு : விளக்கத்திற்காகக் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபற்றிக் கேள்வி நேரத்தில் எடுக்க வேண்டாமென்று அவர்கள் சொன்னார்கள்.

' ரிலேடிங் டு தி கொஸ்டின் ' என்று சொல்லி

எழுத்திலே கால் இல்லை என்பதுபோன்ற இதையெல்லாம் சொல்ல வேண்டுமென்றால் அதற்கு இப்பொழுது நேரம் இல்லை.

## 4. வினாக்கள்-விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### திருவொற்றியூர் பகுதியில் கடலரிப்பு.

*வினா எண். 1—திரு. பொ. சிகாமணி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் கடலோரப் பகுதியில் ஏற்படும் கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச்சுவர் கட்டும் திட்டத்தை அரசு மேற்கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.





திரு. பொ. சிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, நீண்ட வருஷங்களாக இந்தக் கடலரிப்பினால் ஊரில் பெரும்பகுதி அழிந்து விட்டது. இன்னும் ஒரு வருஷத்திற்குள்ளாகப் பல தொழிற்சாலைகள் கடலரிப்பின் காரணமாக மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் அரசு உடனடியாக ஏதேனும் தற்காலிகத் திட்டம் தீட்ட இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) பேரவைத் தலைவரவர்களே, மத்திய பாசனம் மற்றும் மின் வாரியத்தின் நிதி உதவியுடன் பூனாவிலுள்ள மத்திய நீர் மற்றும் மின் ஆய்வுக் கூடத்தில் நடத்தப்படவுள்ள ஆராய்ச்சிகளின் முடிவுகள் தெரிந்த பின்னரே இப்பகுதியில் கடலரிப்பினைத் தடுக்கும் செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்படும். இருப்பினும், கடலரிப்பை நிரந்தரமாகத் தடுப்பது குறித்து ஓர் தகுந்த திட்டத்தை உருவாக்குவதற்காக, பூண்டியில் உள்ள ஹைடிராலிக்ஸ் மற்றும் ஹைடிராலஜி நிலையத்தில் ''மாதிரி ஆய்வுகளை'' நடத்திக் கொண்டு வருகிறது. இவ்வாய்வுகள் முற்றுப் பெறுமுன்னரே, கட்டிடத் தலைமைப் பொறியாளர், ராயபுரம், எண்ணூர் பகுதிகளில் கடலரிப்பு சம்பந்தமாக உடனடி நிவாரணப் பணிகளுக்காகத் தற்காலிகப் பாதுகாப்புத் திட்டங்கள் அடங்கிய செயற்குறிப்புகளை அனுப்பியுள்ளார். ரூ. 30·80 இலட்சம் மதிப்புள்ள இத் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பல்லாண்டு காலத்திற்கு முன்பாகவே காவிரிப்பூம்பட்டினம் கடலால் கொள்ளப்பட்டது என்பதை அறிவோம். இப்போது புதிய பூம்புகார் உருவாக்கப்பட்டுள்ள நிலையில், அந்தப் புதிய பூம்புகாரும் கடலரிப்பால் பாதிக்கப்பட்டு வருகிறது என்று பல முறை சட்ட மன்றத்தில் சொல்லியும்கூட இன்னும் அதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தபாடில்லை. இப்புதிய பூம்புகாரைக் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுத்து இந்தப் புதிய பூம்புகாரைக் காப்பாற்ற முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்களுடைய கருத்தை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. கடலரிப்புப் பிரச்சினையில் மிகப் பெரிய அளவில் தமிழகத்தின் எல்லையைக் காப்பாற்ற வேண்டிய பெரிய பொறுப்பு இருக்கும் காரணத்தால் மிகப் பெரிய திட்டமாக அதனை ஏற்றுக்கொண்டு தமிழகம் முழுவதிலும் அதைப் பற்றிப் பரிசீலிக்க ஏற்பாடு செய்து இந்த அரசு தன்னால் முடிந்த அளவுக்கு பணி செய்ய முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 பிப்ரவரி 12

திரு. க. சுப்பு : இந்தக் கேள்விக்குப் பதிலளித்த பார்லி மெண்டரி செக்ரடரி அவர்கள் கடலரிப்பைத் தடுப்பது பற்றிய பழைய திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது தெரிவித்த விளக்கம் கட லரிப்பைத் தடுப்பது பற்றிய புதிய திட்டமாகும். திருவொற்றி யூருக்குள்ளேயே கடல் வந்து கொண்டிருக்கிறது. தமிழக அரசு இந்தக் கடலரிப்பைத் தடுக்க என்ன புதிய திட்டம் வைத்திருக்கி றது ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அதுபற்றிய திட்டம் முழுமையாக உருவாக்கப்பட்டவுடன் நிச்சயமாக இந்த அவையில் வைக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபகாலத்தில் வெளிநாடுகளுக்குச் சென்று வந்ததற்குப் பிறகு, கடலை நிலமாக்குவோம், அந்த நிலத்தை வீடாக்குவோம் என்ற திட்டத்தோடு வந்திருக்கிறார்கள் என்று பத்திரிகை வாயிலாகப் பார்த்தோம். அப்படி ஏதேனும் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறதா இல்லையா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : முன்பு நான் குறிப்பிட்ட பதிலிலேயே இதற்கும் பதில் அடங்கியிருக்கிறது என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மினி பரிசுச் சீட்டுத் திட்டம்.

* வினா எண் —திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மினி பரிசுச் சீட்டுகளை நடத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



1979 பிப்ரவரி 12]

திரு. என். கிட்டப்பா : அண்மையில் கர்நாடக மாநிலத்தில் கூட வாரந்தோறும் குலுக்கப்படும் பரிசுச் சீட்டுகளை வெளியிட் டிருக்கிறார்கள். அதைப்போல் தமிழ்நாட்டிலும் வாரந்தோறும் குலுக்கக்கூடிய பரிசுச் சீட்டுகளை நடத்த அரசு ஆலோசிக்குமா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செய லர்) : பரிசீலிப்போம்.

திரு. மு. அரங்கநாதன் : இந்தப் பரிசுச் சீட்டு தமிழக அரசின் சார்பில் வெளியிடப்படுகிறது. இந்தப் பரிசுச் சீட்டை விற்கிற ஏஜன்சிகள் தமிழகப் பரிசு சீட்டு தேவையானால் அடுத்த மாநில பரிசுச் சீட்டை வாங்கினால்தான் தருவோம் என்று தகராறு செய்கிறார்கள், தனியாக இந்தச் சீட்டு மட்டும் வேண்டு மென்றால் ஒரு ரூபாய் சீட்டுக்கு ஒன்றேகால் ரூபாய் கொடுத் தால்தான் தருவோம் என்று சொல்லுகிறார்கள். அண்ணா சாலையில் நானே வாங்கியபோது இப்படிச் சொன்னார்கள். அப்போது என் கூட ஆளும் கட்சி உறுப்பினர் திரு. சமரசம் கூட இருந்தார்கள். அப்போது பெரிய குழப்பமே வந்து விட்டது. இதைப் பற்றி அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செய லர்) : தனிக் கேள்வி போடவும்.

திரு. என்.கிட்டப்பா: நமது தமிழ்நாட்டில் தனிப்பட்டவர்கள் சில பேர் கலை நிகழ்ச்சி, நாடக மன்றம் என்று வைத்துக் கொண்டு டிக்கட் விற்று பரிசுக் குலுக்கல்கள் நடத்தி பெரும் லாபம் பெறுவது அரசுக்குத் தெரியுமா ? இவ்வாறு தனியார் பரிசுச் சீட்டு விற்பனை செய்து லாபம் பெறுவதைத் தடை செய்ய அரசு முன்வருமா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செய லர்) : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. க. மருதாசலம் : வேறு மாநில பரிசுச் சீட்டுகளை இங்கே விற்கக் கூடாது என்ற அரசு ஆணை முன்பு இருந்த அரசால் பிறப்பிக்கப்பட்டிருந்தும் கூட வேறு மாநில பரிசுச் சீட்டுக்களை இங்கே விற்று வருகிறார்கள். அதைத் தடுக்க நம்முடைய அரசு தீவிரமான நடவடிக்கை எடுக்குமா ?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செய லர்) : கேள்வி ‘ மினி ’ பரிசுச் சீட்டுத் திட்டம் துவக்கும் செயற்குறிப்பு உள்ளதா என்பதைப் பற்றியது.

[1979 பிப்ரவரி 12

[முற்பகல் 9.20].

திரு. ரெ. வி. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நடத்தப்படும் பரிசுச் சீட்டுக் குலுக்கலிலாவது மினி குலுக்கல் நடத்துவதற்கு இந்த அரசுக்கு எண்ணம் உண்டா ?

திரு. எம். வின்சென்ட் அமைச்சரின் பேரவை செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கேள்வியிலேயே நான் பதில் சொல்லிவிட்டேன்.

ராணுவத்தினருக்கு வழங்கப்பெற்ற பட்டாக்கள்.

*வினா எண். 3—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ல் தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர், விழுப்புரம் தாலுக்காக்களில், தற்பொழுது பணிபுரியும் ராணுவத்தினர், முன்னாள் ராணுவத்தினர் முறையே எத்தனை பேர் பட்டா வழங்கக் கோரியுள்ளார்கள் ?

(ஆ) எத்தனை நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :—(அ) 1977–78 ஆம் ஆண்டில் தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூர் வட்டத்தில், 36 பேர்களும், விழுப்புரம் வட்டத்தில் 15 பேர்களும் நில அடமானம் கோரி மனு செய்துள்ளனர்.

(ஆ) அதில் திருக்கோவிலூர் வட்டத்தில் ஒருவருக்குக் கூட நில அடமானம் செய்யப்படவில்லை. விழுப்புரத்தில் 3 பேர்களுக்கு 8·50 ஏக்கர் பரப்புள்ள நிலம் அடமானம் செய்யப்பட்டுள்ளது.

வேளார்குளம் இனாம் கிராமம்.

* வினா எண். 4—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி தாலுக்கா, வேளார்குளம் கிராமம் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வந்துள்ளதா ?



1979 பிப்ரவரி 12] [திரு. சோ. அழகர்சாமி]

(ஆ) இக் கிராம விவசாயிகள் பல ஆண்டுகளாக சாகுபடி செய்து வந்த நிலங்களிலிருந்து வெளியேற்ற முயற்சி நடக்கிறது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) நில உடைமை மற்றும் அனுபவம் குறித்து நிலச் சொந்தக்காரர்களுக்கும் குடியானவர்களுக்குமிடையே ஏற்பட்ட தகராறில் சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் தொடரப் பெற்று முறையே சென்னை உயர்நீதி மன்றத்திலும் உரிய துணை மாவட்ட ஆட்சி தலைவரிடமும் வழக்குகள் உள்ளன.

துணைத் தாலுகா அலுவலகக் கட்டடங்கள்.

* வினா எண். 5—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துணை தாலுகா அலுவலகங்களுக்காக சொந்தக் கட்டடம் கட்டும் உத்தேசம் உண்டா ?

(ஆ) இளையான்குடி துணை தாலுகா அலுவலகக் கட்டடம் கட்டும் பணி எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் தாலுகா, துணைத் தாலுகா கோட்டாட்சி அலுவலகங்களுக்கு புதிதாகக் கட்டடங்கள் கட்டுவதற்கு 1979-80 மொத்தத்திற்குத் திட்டங்கள் திட்டப்பட்டுள்ளன. அதிலேயே இளையான்குடி துணை தாலுகாவும் சேர்க்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, இந்தப் பிரச்னை கிட்டதட்ட 6 வருஷமாக அங்கிருந்து கொண்டிருக்கிறது. தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் அடுத்த ஆண்டு கட்டப்படும் அடுத்த ஆண்டு கட்டப்படும் என்று சொல்லப்படுகிறது. உண்மையிலேயே, இப்பொழுது சொல்லப்பட்ட மதிப்பிற்குரிய மந்திரி அவர்களுடைய இந்த வாக்குறுதி இந்த ஆண்டிலேயே நிறைவேறப்படுமா என்று உறுதியாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து பல ஆண்டுகள் இருக்கின்றன என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். 5 ஆண்டுகள், அதற்குப் பிறகும் தேவைப்பட்டிருக்கிறது. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டம் மட்டும் அல்ல, தமிழகத்திலே உள்ள

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 பிப்ரவரி 1

பல மாவட்டங்களில் இப்படி துணை தாலுகா, தாலுகா என் பதைப் பற்றியெல்லாம், வாடகைக் கட்டடங்களிலே இருப்பதைப் பற்றியெல்லாம் வருவாய் வாரியத்திலே பரிசீலனை செய்து, இருக் கிற நிதி நிலைக்கேற்ப முக்கியத்துவம் கொடுத்து 5 ஆண்டுகளிலே முடிப்பதற்கு இந்த அரசு திட்டமிட்டிருக்கிறது.

## வரதட்சணை தடுப்புச் சட்டம்.

* வினா எண். 6—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

வரதட்சணை தடைச் சட்டத்தின் கீழ் இந்த அரசு பதவி ஏற்றதற்குப் பிறகு எத்தனை பேர் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

THE Hon. Thiru K. NARAYANASWAMY MUDALIAR : Prosecution has not been launched against any body so far.

திரு. என். பழனிவேல் : இந்த அரசு பதவியேற்றதற்குப் பின்னால் வரதட்சணை தடைச் சட்டத்தின்கீழ் எத்தனை பேர் தடை செய்யப்பட்டிருக்கிறார்கள், அதன் விவரம் என்ன என்று கேட்டிருந்தேன். அமைச்சரவர்கள் ஆங்கிலத்தில் சொல்லி யிருக்கிறார்கள். அது எனக்கு விளங்கவில்லை. ஆகவே, தயவு செய்து தமிழிலே சொல்ல வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் : இது வரையும் ஒரு ப்ராசிக்யூஷன் கூட யார் மேலேயும் லாஞ்ச் பண்ண வில்லை.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத் துறை அமைச் சரவர்கள் இதுவரையில் யாரும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப் படவில்லையென்று குறிப்பிட்டார்கள். தமிழ் நாட்டில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் மட்டுமல்லாமல், பெரும்பாலான சமூகத் திலுள்ளவர்கள் பணமாகவோ, ஸ்கூட்டராகவோ (குறுக்கீடு) ஆடு, மாடாகவோ—நமது நிதியமைச்சரவர்கள் அறிந்திருக்கிறபடி— வரதட்சணை பெற்றிருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்கு வதற்கு தனி பிரிவை உருவாக்க அரசு முன் வருமா ? எல்லோருக் குமே நன்றாகத் தெரிகிறது, வரதட்சணை வாங்கப்படுகிறது என்று. அமைச்சரவர்களுக்கும் தெரியும். அவர்களும் அறி விக்கிறார்கள் நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்று. நட வடிக்கை எடுக்காமல் இருப்பதற்குக் காரணம் அலட்சியம் என்று நான் சொல்லவில்லை. இதைத் துரிதப்படுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு அரசு இனியேனும் தகுந்த முறையில் ஆவன செய்ய புது முறையைக் கையாளுமா என அறிய விரும்புகிறேன்.



1979 பிப்ரவரி 12 ]

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் : தலை வர் அவர்களே, செக்ஷன் 3, செக்ஷன் 4 ஆகிய இருசட்டங் களும் நான்-காக்னிசிபிள். போலிசார் வாரன்ட் இல்லாமல் அரஸ்ட் செய்ய முடியாது. இந்த கம்ப்ளைன்டை கோர்ட்டில் தாக்கல் பண்ணவேண்டியிருக்கிறது. செக்ஷன் 3-ன் படி டௌரி வாங்கினவர்கள் புகார் கொடுக்கவேண்டும் அதாவது 'எக்ஸ்' வந்து 'ஒய்' இடம் வாங்கினான் என்று கம்ப்ளைன்ட் பண்ண வேண்டும். இப்படி அட்வைசர் ரெஜிமிலே ஒரு கேஸ் போட் டிருந்தார்கள். சரியாக புரூவ் பண்ணாததால் 'அக்யுட்டல்' ஆகிவிட்டது. அடுத்து செக்ஷன் 4-ன்படி சாங்ஷன் வாங்கி ஒரு கேஸ் போட்டார்கள். ஆனால் கம்ப்ளைனன்ட் கோர்ட்டுக்கு வராமல் ஆப்சென்ட் ஆகிவிட்டார். ஏதாவது ஸ்பெசிபிக் இன்ஸ் டன்ஸ் இருந்தால் சாங்ஷன் வாங்கி கேஸ் போடலாம்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதிலே படுதோல்வி அடைந்திருக்கிறது. ( abs lute failure ) கேன்சர் மாதிரி இந்த டௌரி சிஸ்டம் சமுதாயம் பூராவிலும் பரவி யிருக்கிறது. வரதட்சணை வாங்கி அடுத்த வரதட்சணை வாங்க வேண்டும் என்பதற்காக புதுப் பெண்ணை கொலை செய்து அது தற்கொலை என்று சொல்லக்கூடிய அளவுக்கு (most atrocious thing) செகன்ட் மேரேஜ் நடந்து கொண்டிருக் கிறது. ( Latest Central Government Report ) பயங்கர மாக எக்ஸ்போசர் செய்திருக்கிறது. வரதட்சணைக்குக் கொடுக்க பணம் வேண்டும் என்பதற்காக, ஏழையாக இருக் கின்ற தகப்பனார் தன்னுடைய திருமணம் ஆகாத பெண்ணை வேசி கிரகத்திற்கு அனுப்பக்கூடிய நிலைமை இருக்கிறது. என்னுடைய கேள்வி என்னவென்றால், இப்போது இருக்கக் கூடிய சட்டத்தின் ஓர்க்கிங்கை ரெவ்யூ பண்ணுவதற்கும், அதில் இருக்கக்கூடிய ஓட்டைகளை அடைப்பதற்கும், புது சட்டம் அல்லது அமன்டட் லா கொண்டு வருவதற்கு ஏதேனும் புரபோசல் இருக்கிறதா.

மேலும் (Mass Social Reform) ஊக்குவிப்பதற்கு அரசாங்கத் திடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் உமாநாத் அவர்களின் கருத்தை அரசு முழுமையாக ஏற்கிறது. அதைக் கவனத்தில் வைத்து ஆவன செய்ய முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, சட்டத்தின் பிரகாரம் வரதட்சணை வாங்குவது தவறு. ஆனால் அன்பளிப்பு என்ற பெயரில் வாங்குவதைத் தடுக்கும் வழி உண்டா ? வரதட்

[திரு. துரைமுருகன்] [1979 பிப்ரவரி 12

சனையை யாரும் கேட்டு வாங்குவதில்லை. உங்கள் பெண்ணுக்குத்தானே என்று கேட்டு வாங்குகிறார்கள். ஆகவே எந்தப் பெண்ணும் சீதனமாக எதையும் கொண்டு வரக்கூடாது என்று சட்டம் போடப்படுமா? இரண்டாவதாக வரதட்சணை கொடுக்க முடியாத பல பெண்கள் திருமண வயதைக் கடந்தும் திருமணம் ஆகாமலே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெண்கள் எவ்வளவு பேர்கள் இருப்பார்கள் என்று நியாயமான ஸ்டேடிஸ்டிக்சை எடுத்து அப்படி திருமண வயது வந்து திருமணம் ஆகாமல் இருக்கக்கூடிய பெண்களுக்கு வாழ்வளிக்க வருகின்றவர்களுக்கு சர்க்கார் உத்தியோகங்களில் முதலிடம் அளிக்கப்படும் என்கின்ற ஒரு புரட்சித் திட்டத்தை அறிவிக்க அரசு ஆலோசனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் ஆளுநர் உரையை நன்கு கவனித்துப் படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அதிலே இருக்கும் எங்களுடைய கொள்கையை பரிசீலித்துப் பார்த்தால், இதற்கென்று தனியாக பாதுகாப்பு தரவேண்டும் என்பதில்லை. வாழ்விழந்தவர்கள், வாழ முடியாதவர்கள் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு தருவதற்கு இந்த அரசு முயன்று கொண்டிருக்கிறது என்று அவர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

<u>திரு. துரை முருகன்:</u> தலைவர் அவர்களே, வாழ்விழந்தவர்களுக்குத் திருமணம் செய்து வைப்பது வேறு, அது விதவைத் திருமணம். ஆனால் நான் கேட்பது திருமணம் ஆகாமல் இருக்கும் கன்னிப் பெண்கள் அவர்களைப் பற்றித்தான் கேட்கிறேன். விதவைத் திருமணம் என்பது வேறு.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் என்கிற வகையில்தான் எங்களுடைய கொள்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை மறுபடியும் படித்துப் பார்த்தால் புரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

<u>திரு. துரை முருகன்:</u> திருமணம் ஆகாத பெண்களுக்கும் திருமணம் செய்து வைக்கும் திட்டம் இருக்கிறது என்று சொன்னதற்காக முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ரா. உமாநாத்:</u> வேலையில்லாதவர்களுக்கு எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் இருப்பதைப்போல "மாப்பிள்ளை எக்சேஞ்ச்" அமைக்கும் திட்டம் இருக்கிறதா?

(பதில் இல்லை.)



1979 பிப்ரவரி 12]

[முற்பகல் 9-30]

<u>திரு. ரா. கிருஷ்ணன்:</u> தலைவரவர்களே, வரதட்சணை கொடுமையால் ஆந்திரா மாநிலத்தில் பிராஸ்டிடியூஷனை அனுமதியுங்கள் என்று கேட்கும் சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. வரதட்சிணை தடைச்சட்டம் என்று ஒன்று இருப்பதாக மக்களுக்குத் தெரியவில்லை. ஆகவே, அது குறித்து விளம்பரப்படுத்த அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார்:</u> இந்த அரசு அந்த சஜஷனைப் பரிசீலிக்கும்.

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:</u> தலைவரவர்களே, வரதட்சிணை வாங்குவது என்பது ஒருபுறம் இருக்க சில குடும்பங்களில் ஏழ்மை காரணமாக அத்தியாவசியமான செலவுக்குக்கூட ரூ. 1 000, ரூ. 500 என்று கூட இல்லாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட குடும்பங்களுக்கு மான்யமாகவோ, கடனாகவோ பணம் கொடுத்து அக் குடும்பங்களில் இருக்கும் பெண்களுக்கு திருமணம் செய்து வைக்க அரசாங்கம் சோசியல் வெல்பேர் என்ற முறையில் திட்டம் தொடங்க முன்வருமா?

(<u>திரு. துரை முருகன்:</u> அனைத்தும் கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது).

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:</u> தலைவரவர்களே, திரு. துரை முருகன் அனைத்தும் கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்று கூறியதற்கு நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்களின் எண்ணம் நல்ல எண்ணம். அதை கவனத்தில் கொண்டு பரிசீலனை செய்ய இந்த அரசு தவறாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தற்போது உத்தரவாதம் தரமுடியாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. க. சுப்பு:</u> தலைவரவர்களே, கலப்புத் திருமணத்தை ஊக்குவிப்பதாக இந்த அரசாங்கம் அறிவித்தது. அப்படி அறிவித்த பின்பும் அதற்கான பணம் கொடுக்கப்படவில்லை. வேலை வாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்று மாண்புமிகு சுகாதார அமைச்சரை வைத்துக்கொண்டு உமன்ஸ் வெல்பேர் அதிகாரி பேசியிருக்கிறார். கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE Hon. Thiru K. Narayanaswamy Mudaliar: A Separate question may be put.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, வரதட்சணை தடைச் சட்டம் வந்திருந்தபோதிலும், அரசு அலுவலகங்களில் வேலை செய்பவர்கள் இந்த வரதட்சிணையைப் பெற வேண்டும் என்பதற்காக, உத்தியோகத்தில் இருக்கிறோம் என்ற ஒரே காரணத்திற்காக, இரண்டாவது திருமணம் செய்து கொண்டு, அதன் மூலம் வரதட்சிணை என்ற பெயரில் பணம் பெற முயற்சிக்கிறார்கள். அப்படிப்பட்ட வகையில் இரண்டாவது திருமணம் செய்துகொண்டு அரசாங்க உத்தியோகங்களில் உள்ளவர்கள் மீது இந்த அரசு என்ன நடவடிக்கையை சுயோமோட்டோவாக எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE Hon. Thiru K. Narayanaswamy Mudaliar : A Separate question may be put to the Government.

## Sub-Court at Pattukottai.

* Q. 7—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Law be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up a Sub-Court in Pattukottai in Thanjavur District; and

(*b*) if so the details thereof ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR :

(*a*) Yes, Sir.

(*b*) The constitution of a Sub-Court at Pattukottai in Thanjavur District to exercise original and appellate jurisdiction over Pattukottai and Mannargudi Munsifs after removing the same from the Sub-Court and the District Court, Thanjavur respectively is in the 12th place in the priority list sent by the High Court. Due to paucity of funds, this year, the proposal for constitution of a Sub-Court at Pattukottai will be considered during 1979-80.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டை பன்னிரண்டாவது வரிசையில் போடப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நிதி ஆதாரத்தைப் பொறுத்து இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ அது முடிக்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். பட்டுக்கோட்டை மிகவும் பின் தங்கிய பகுதி என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆகவே, பட்டுக்கோட்டை பன்னிரண்டாவது வரிசையில் இருக்கிறது என்பதற்கு பதிலாக அதை இன்னும் கொஞ்சம் முன்னுக்கு.... மாண்புமிகு காங்கிரஸ்



கட்சித் தலைவர் கூட சொல்கிறார்கள்.... அதை முதலிடத்திற்கு கொண்டு வரவேண்டும் என்று. ஆகவே, அவர் சார்ந்து இருக்கிற பகுதியாகவும் இருக்கிற காரணத்தால் முதலாவது வரிசையில் அதைக்கொண்டு வந்து விரைந்து அதை செயல்படுத்திக்கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

THE Hon. Thiru K. Narayanaswamy Mudaliar : The Government will try its best to give a higher priority to this question.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பட்டுக்கோட்டைக்கு சப்-கோர்ட் ஏற்படுத்துவது பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் மன்னார்குடியில் இருக்கிற எஸ்.டி.எம். கோர்ட்-இரண்டரை லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு நிரந்தர கட்டடமாக இருக்கிறது. பட்டுக்கோட்டைக் கொண்டு செல்லும் முயற்சி நடைபெறுகிறது. மாண்புமிகு சட்ட அமைச்சருக்கும் மாண்புமிகு முதலமைச்சருக்கும் நான் இதை எடுத்துக்கூறி மனு கொடுத்து இருக்கிறேன். அதை தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

THE Hon. Thiru K. Narayanaswamy Mudaliar : The hon. Member may please put a separate question.

திரு. எஸ். வி. இராமசாமி : தலைவரவர்களே, துணை நீதிமன்றங்களை அமைப்பதில் இந்த அரசு கடைப்பிடிக்கும் தலையாயக் காரணங்கள் என்னென்ன என்பதை அறிவிப்பார்களா ?

THE Hon. Thiru K. Narayanaswamy Mudaliar : The policy of this government is to decentralise as much as possible so that the facility may be available to the litigant public.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் நிதிவசதியைக் கொண்டு கூடியவிரைவில் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். இது நீண்ட நாட்களாக இருந்து வருகின்ற ஒரு பெரிய கோரிக்கை. ஆகையால் இந்தக் கருத்தை உறுதியாகச் செய்து முடிப்போம் என்ற உறுதியை அளிப்பார்களா ?

THE Hon. Thiru K. Narayanaswamy Mudaliar : So far as this Government is concerned, very very sympathetic and earnest consideration is given to the transfer of this Court from Tanjore to Pattukkottai and every effort is being made.

[1979 பிப்ரவரி 12

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, 12-வது இடத்தில் பட்டுக்கோட்டை இருக்கிறது என்று அறிவித்தார்கள். மீதமுள்ள 11 இடங்கள் எவை எவை என்பதை அறிய விரும்புகிறேன்.

THE Hon. Thiru K. Narayanaswamy Mudaliar : I cannot now reveal it out of my memory. Hon. Member may please put a separate question.

தேர்தல் வேலைகளில் கலந்துக்கொண்ட ஆசிரியர்கள்.

* வினா எண். 8—திரு. எஸ். ஜெ. இராமசாமி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1977-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின் போது உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் கட்சியின் பெயரால் வேலை செய்தார்கள் என்பது பற்றி புகார்கள் ஏதேனும் வந்ததா, மாவட்டவாரியாக ?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம், மொத்தம் 19 நபர்களைப் பற்றி புகார் வந்தது. அவர்களைப் பற்றிய விவரம் மாவட்டவாரியாக கீழே கொடுக்கப் பட்டுள்ளது:—

| | |
|---|---|
| வடஆற்காடு .. .. .. .. | 2 |
| சேலம் .. .. .. .. | 3 |
| இராமநாதபுரம் .. .. .. | 7 |
| புதுக்கோட்டை .. .. .. | 3 |
| கன்னியாகுமரி .. .. .. .. | 4 |
| | 19 |

(ஆ) 19 நபர்கள் மீதும் விசாரணை தொடரப்பட்டது. இரண்டு பேர் மீது விசாரணை புலனானது. அவர்கள் வடஆற்காடு மாவட்டத்தில் ஒரு நபரும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு நபரும் ஆவார்கள்.



1979 பிப்ரவரி 12]

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, அரசியலில் ஈடுபட்டார்கள் என்று சொல்லும்போது, ஆளும் கட்சிக்கு வேலை செய்கிறவர்கள் இதில் வரமாட்டார்கள் என்பது இப்போதல்ல: காலம் காலமாக இருந்துவருகிற ஒன்று. ஆசிரியர்களுக்கும் வாக்களிக்க உரிமை இருக்கிறது. கேரளாவில் ஆசிரியர்கள் பள்ளி நேரத்தில் அரசியலில் ஈடுபடக்கூடாது; மற்ற நேரங்களில் பங்குகொள்ளலாம் என்ற நிலை இருக்கிறது. அதைப்போல நம்முடைய மாநிலத்திலும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பாடம் சொல்லிக்கொடுக்கிற பள்ளி நேரத்தில் அரசியலில் ஈடுபடாமல் மற்ற நேரங்களில் அவர்கள் அரசியலில் பங்குகொள்ளலாம் என்ற முறையைக் கொண்டுவந்து, ஆசிரியர்கள் மீது எடுத்துள்ள நடவடிக்கை கைவிடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பாடம் சொல்லித் தருவதோடு பெற்றோர்களிடத்தில் நல்ல தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அவர்கள் விருப்பு வெறுப்புகளை வெளியே காட்டினால் மாணவர்கள் மத்தியில் அமைதியின்மை ஏற்பட அதுவே காரணமாக அமைந்துவிடும்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, சர்விசில் இருக்கும்போது தேர்தலிலே நிற்பதற்கும், தேர்தலிலே வேலை செய்வதற்கும் 'ஃபண்டமென்டல் ரைட்' வேண்டுமென்று பல்வேறு மாநாடுகளிலே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் அரசியலில் ஈடுபட்டால் 'டிசிப்ளின்' கெட்டுவிடும் என்று சொன்னார்கள். பக்கத்து மாநிலங்களில் அந்த ரைட் கொடுக்கப்பட்டிருக்கும் போது, அங்கு டிசிப்ளின் கெடாமல் ஜெனரல் பொசிஷன் இருக்கும்போது, இந்த எக்ஸ்பீரியன்சை கணக்கில் எடுத்துக்கொண்டு, நம்முடைய மாநிலத்திலும் அந்த ஃபண்டமென்டல் ரைட்டை அளிக்க இந்த அரசு பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அடுத்த மாநிலத்தில் என்னென்ன தண்டனை இருக்கிறது என்பது பற்றி முழுமையான தகவல் கிடைக்கவில்லை. அந்தத் தகவல் கிடைத்தபிறகு எங்கள் கருத்தை வெளியிடுவோம்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, புகார்களை விசாரித்து இரண்டு ஆசிரியர்கள்மீது தவறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது என்று அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். அவர்களுக்கு என்ன தண்டனை அளிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒருவருக்கு ஆறு மாத காலம் ஊதிய உயர்வு பின் பாதிப்பின்றி நிறுத்திவைக்கப்பட்டது. இன்னொருவருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

[1979 பிப்ரவரி 12

## ஆசிரியர் சேமநல நிதிப் பிடித்தம்.

* வினா எண். 9.— திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், பெரியகுளம் கல்வி மாவட்டத்தில் பல தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களின் சேமநலநிதி, நிர்வாகிகளால் பிடித்தம் செய்யப்பட்டும், அஞ்சலகத்தில் செலுத்தப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்தப் பள்ளிகளில் அவ்வாறு செலுத்தப்படவில்லை?

(இ) சேமநல நிதியை செலுத்தாத நிர்வாகிகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) தற்சமயம் இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை.

## சென்னை பிராட்வே பேருந்து நிலையத்தின் மூலம் எடுத்துச் செல்லும் சாமான்கள்.

* வினா எண். 10.—திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை பிராட்வே பேருந்து நிலையத்தில் பயணிகள் கொண்டுவரும் சாமான்களை பேருந்தில் ஏற்றும் பயணிகளை மேற்கொள்வது மாநகராட்சி, தனி நபருக்கு அனுமதி வழங்கி உள்ளதா?

(ஆ) அதற்கு எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.



1979 பிப்ரவரி 12]

திரு. கெ. சொக்கலிங்கம் : தலைவரவர்களே, இல்லை என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இன்றைக்கும் அங்கே சாமான்களைக் கொண்டு செல்லும்போது அங்கே இருக்கின்ற கூலிக்கு வேலைசெய்கின்ற தொழிலாளர்கள் பயணிகள் கையிலிருக்கின்ற சாமான்களை பிடுங்கி, வண்டியில் ஏற்றுவதற்கு கூடுதலாக கட்டணம் வசூல் செய்கிறார்கள். அது அரசுக்குத் தெரியுமா? அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இதுபற்றி ஏற்கெனவே புகார் வந்த காரணத்தால் யாரையும் குத்தகைக்கு அனுமதிப்பதில்லை என்றும், உரிமம் பெற்ற போர்ட்டர்களை நியமிப்பது என்றும் மாநகராட்சி முடிவு செய்திருக்கிறது.

[முற்பகல் 9·40]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, எனக்கே ஒரு நேரடியான அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. நான் பேருந்து நிலையத்திற்குச் சென்றிருந்த காலத்தில் பெட்டியை எடுத்து வைப்பதற்கு ஆளே கிடைக்கவில்லை. ஆகவே இந்த மாதிரி நிலைமை இனி ஏற்படாமல் மக்களுடைய தேவைகளைக் கவனிக்கின்ற வகையில் அங்கு தேவையான அளவுக்கு அந்த ஊழியர்கள் அரசாங்கத்தினால் அமர்த்தப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்த ஊழியர்களைப் பொறுத்த மட்டில் மாநகராட்சியால் நியமனம் செய்யப்படுபவர்கள் தான் அந்தப் பணியை மேற்கொள்கிறார்கள். போதுமான அளவுக்கு ஊழியர்களை நியமிக்கவில்லை என்றால் அது பற்றி அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## திருக்கோயிலூர் பேருந்து நிலையம்.

* வினா எண். 11.—திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் பேரூராட்சி பஸ் நிலையத்தை நவீன முறையில் மாற்றி அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?

[1979 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) இந்த வேலை நடந்து வருகிறது. அடுத்த மார்ச் இறுதிக்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இந்த முயற்சியை மேற்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அதற்கான திட்டச் செலவு எவ்வளவு? வேலை துவங்கி விட்டதா என்பனவற்றை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, வேலை துவங்கிவிட்டது. பேருந்து நிலையத்தில் பேருந்து நிற்பதற்கு நிழற்கொட்டகை அமைப்பதற்கு ரூ. 23,000-மும் தென்புறமாக ஓடும் வாய்க்காலுக்குத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு ரூ. 28,000-மும் பொது நீரடிக்கழிவிடம் அமைப்பதற்கு ரூ. 20,000-மும் என்ற மதிப்பீடுகளில் வேலை துவங்கப்பட்டு விட்டது.

## வடாற்காடு மாவட்டத்தில் இரயில்வே செஸ் திட்டத்தின்கீழ் எடுக்கப்பெற்ற வேலைகள்.

* வினா எண். 12.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1977–78-ல் வடாற்காடு மாவட்டம், காட்பாடி, ஜோலார்பேட்டை, அரக்கோணம் பகுதிகளில் இரயில்வே செஸ் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் எவை, எவை ?

(ஆ) அதற்கென எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) மற்றும் (ஆ) இல்லை.



1979 பிப்ரவரி 12]

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்தக் காட்பாடி ஜங்ஷனில் மேலே போகக்கூடிய இரயில்வே பாலம் இருக்கிறது. அது சுமார் 60, 70 வருஷத்திற்கு முன்னாலே கட்டியது. ஆனால் இன்றையதினம் போக்குவரத்து மிகமிக அதிகமாக இருக்கக் கூடிய இந்த நேரத்திலே போக்குவரத்து ஸ்தம்பிக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே அந்தப் பாலத்தை அகலப்படுத்தி, உயர்த்தி நல்லமுறையில் கட்டுவதற்காக மாண்புமிகு அமைச்சரவர்கள் மத்திய சர்க்காரை வலியுறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் நிலை உண்டா அல்லது இனிமேலாவது அவ்வாறு செய்யப்படுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சர் மூலமாக மத்திய அரசிற்கு வலியுறுத்தி அதனை நிச்சயமாக நல்லமுறையில் கட்ட முயற்சிகள் செய்யப்படும். ஆனால் அந்தப் பகுதியைப் பொறுத்தமட்டில் இரயில்வே செஸ் நிதி என்பது கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கோமதி மில் தொழிலாளர்களுக்கு E.S.I. திட்டம்.

வினா எண். 13—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகாவிலுள்ள வீரவநல்லூர் கோமதி மில்லில் E.S.I. திட்டம் அமுல்படுத்த வேண்டாமென அரசு கூறியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்] [1979 பிப்ரவரி 12

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, அம்பாசமுத்திரம் தாலுகாவிலே இருக்கக்கூடிய அந்த வீரவநல்லூர் கோமதி மில் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகின்றது. ஆனாலும் இதுவரை அங்கு ஈ.எஸ்.ஐ. திட்டம் அமல் நடத்தப்படவில்லை. அமல் நடத்துவதற்கு அரசும் உத்தரவிடவில்லை. ஆகவே இனிமேலாவது அரசாங்கம் அந்த முயற்சியை எடுத்து அமல் நடத்துவதற்கு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, கேள்வி ஈ. எஸ். ஐ. திட்டத்தை அமல் படுத்த வேண்டாம் என்று அரசு கூறியுள்ளதா என்பதுதான். வேண்டாம் என்று இந்த அரசு சொல்லவில்லை என்று பதில் கூறி இருக்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, அமல் நடத்த வேண்டும் என்றாவது அரசாங்கம் உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, அங்குள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 675 ஆகும். தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆயிரமும் அல்லது அதற்கு மேலும் உள்ள இடங்களில்தான் ஈட்டுறுதித் திட்டம் ஏற்படுத்த முடியும். ஆகவே வீரவநல்லூர் கோமதி மில்லில் ஈட்டுறுதித் திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு இயலவில்லை. இருப்பினும் ஒரு நடமாடும் மருந்தகம் அதாவது மொபைல் டிஸ்பென்சரி மூலம் இந்தப் பகுதியிலுள்ள தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகளை ஏற்படுத்துவதற்கு அரசின் பரிசிலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த செயற்குறிப்பை உறுதி செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டால் வீரவநல்லூர் கோமதி மில் தொழிலாளர்கள் ஈட்டுறுதித் திட்டத்திற்குரிய பலனைப் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : வீரவநல்லூர் கோமதி மில்லில் 679 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆயிரம் பேர்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது. பக்கத்திலுள்ள



1979 பிப்ரவரி 12]

'ஸன் பேப்பர் மில்லில்' 400-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவ் விரண்டையும் இணைத்து ஒரு திட்டத்தை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஏரியாக்களைப் பிரித்து அந்த ஏரியாவில் ஆயிரம் பேர்கள் இருந்தார்கள் என்றால் நிதி ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டு முடிவு எடுக்கிறோம். உங்களுக்கு ஏற்பாடு செய்வதாகக் கூறிவிட்டேன். அது குறித்து உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சி பெறுவார்கள் எனக் கருதுகிறேன்.

## தூத்துக்குடி ஒன்றியப் பகுதிகளில் குடிநீர் வழங்கல்.

* வினா எண். 14—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தூத்துக்குடி யூனியனில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக கிராமப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் தண்ணீர்த் தொட்டிகள் கட்டப்படும், குழாய்கள் பதிக்கப்பட்டும், தண்ணீர் வழங்காத நிலை இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்திற்காக ஏற்கனவே நிறுவப்பட்ட ஆழ்துளைக் கிணற்றிலிருந்து குடிநீர் எடுத்தால் உவர் நீர் (Saline water) ஊடுருவி விவசாயத் தொழில் பாதிக்கப்படுமென்று ஆட்சேபித்து விவசாயிகள் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்திருப்பதால், பொதுமக்களின் ஆட்சேபணைகளை தவிர்க்க மாற்று ஆழ்த்துளைக் கிணறுகள் ஏற்படுத்தி இத் திட்டத்திற்கான அனைத்து பணிகளும் தொடரப்பட்டு இருக்கிறது. விரைவில் நடைமுறை செயலாக்கத்திற்கு கொண்டுவர எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

[1979 பிப்ரவரி 12

திரு. ந. தனசேகரன் : இந்தத் திட்டத்தின்கீழ் எல்லாப் பணிகளும் முடிந்து விட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வழக்குமன்றத்துக்குச் சென்று தடை உத்தரவு வாங்கி இருப்பதன் காரணமாகத்தான் அங்கு குழாய்கள் பதிக்கப்பட்டும், ரூ. 45 இலட்சம் செலவழிக்கப்பட்ட பிறகும் கூட தண்ணீர் கொடுக்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. பணிகள் எல்லாம் முடிந்துவிட்டும் வழக்குமன்ற தடை காரணமாக தண்ணீர் கொடுக்கமுடியாத ஒரு நிலை இருப்பதால், அந்தத் தடையை நீக்கினால் நாளையே தண்ணீர் கொடுக்க முடியும். ஆகவே அந்தத் தடையை நீக்க அமைச்சர் அவர்கள் உடனடி நடவடிக்கைகள் எடுப்பார்களா ? அவ்விதம் நடவடிக்கைகள் எடுத்து இரண்டு மூன்று தினங்களுக்குள் அல்லது ஒரு வாரத்திற்குள் அல்லது ஒரு மாதத்திற்குள் அங்கு தண்ணீர் கொடுக்க முயற்சி மேற்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்தச் சிக்கலிலிருந்து விடுபடுவதற்காக, இதற்கிடையில் பொது மக்களின் ஆட்சேபணையைத் தவிர்க்க மூன்றாவதாக மாற்று ஆழ்துளைக் கிணறு ஒன்று மதுராணிக்குட்டம் என்ற இடத்தில் நிறுவப்பட்டது. இந்த இடம், சேர்வைக்காரன்மடம் கிராமத்திலுள்ள ஐக்கம்மாள்புரம் குடியிருப்புக்குப் பின்னால் உள்ள பொதுப்பணித்துறையின் ஏரி புறம்போக்கு நிலமாகும். இந்த ஆழ்துளைக் கிணற்றிலிருந்து கிடைக்கக்கூடிய நீரின் அளவும் 27 கிராமங்களுக்கான குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு இருக்கிறது என்று தெரிந்து கொள்ளப்பட்டது. எனவே இந்த ஆழ்துளைக் கிணற்றைப் பயன்படுத்திக் கொள்ள பொதுப்பணித்துறையினரின் அனுமதி கேட்கப்பட்டது. 1978 மே திங்களில் பொதுப் பணித்துறை அதிகாரிகள், ஏரி புறம்போக்கு நிலத்தில் ஆழ்துளைக் கிணறு அமைத்து அதைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கியுள்ளனர். இத்திட்டத்துடன் இணைந்த அனைத்துப் பணிகளும் தொடரப்பட்டு, இத்திட்டத்தை நடைமுறைச் செயலாக்கத்திற்கு விரைவில் கொண்டுவர அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. க. சுப்பு : பொது மக்களின் ஆட்சேபணை இருப்பதால் மாற்று ஆழ்துளைக் கிணறுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். வரவேற்கிறோம். ஆனால் அருப்புக் கோட்டையில் உள்ள பூவாளங்குறிச்சியில் பொது மக்கள் ஆட்சேபணை செய்தும் அதை ஏற்றுக்கொள்ளாது, அந்த மக்கள் மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். அந்த வழக்கை கைவிட உத்தேசித்திருக்கிறதா ?



1979 பிப்ரவரி 12]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ந. தனசேகரன் : பொதுப்பணித்துறை இலாகாவிலிருந்து இந்த மாதிரி ஆழ்த்துளைக் கிணறுகள் போடுவதாகச் சொன்னார்கள். தடை வாங்கி இன்றையதினம் கோர்ட்டுக்குச் செல்லக்கூடிய அளவிற்கு இருக்கிறார்கள். இன்றையதினம் என்று சொல்லும்போது இன்றைக்குத்தான் அந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதைத் தடுக்க இந்த அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : எல்லா மக்களுக்கும் குடிநீர் கொடுக்க வேண்டும் என்பது இந்த அரசின் கொள்கையில் மிக முக்கியமானதாகும் என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். எனவே இந்த வகையில் அரசு எடுத்துக் கொள்ளும் எல்லா முயற்சிகளுக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் நல்ல ஆதரவு தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

### சடையனோடையில் அரிசனங்களுக்குக் குடியிருப்புகள்.

* வினா எண். 15—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியம் சடையனோடை கிராம அரிசனக் காலனி மக்கள் அரசு நிலம் பெற்றும் வீடு கட்டும் வசதி இல்லாமல் உள்ளார்கள் என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு.பெ.சௌந்தரபாண்டியன் : (அ) துரிஞ்சாபுரம் ஒன்றியம், சடையனோடை கிராம அரிசன காலனி மக்கள் அரசு நிலம் பெற்றும் வீடு கட்டும் வசதி இல்லாமல் உள்ளவர்கள் என்பதை அரசு அறியும். இக் கிராமத்தில் உள்ள 20 நபர்களில் 8 நபர்கள் வீடு கட்டி வாழ்கிறார்கள். 12 நபர்கள் வீடுகட்டும் வசதியில்லாமல் உள்ளனர்.

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1979 பிப்ரவரி 12

(ஆ) இந்தக் கிராமத்தில் வீடு கட்டித் தருவது பற்றி அரசு எதிர் காலத்தில் பரிசிலனை செய்யும்.

[முற்பகல் 9·50].

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக அரசாங்கத்தால் இடம் கொடுக்கப்பட்டு, குடி தண்ணீர் போன்ற வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே புதிதாக அரிசன வீட்டு வாரியத்தால் கட்டப்படுகின்ற வீடுகளில் இதையும் இந்த ஆண்டு எடுத்துக்கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன்: என்னுடைய பதிலில் இவை பற்றி எதிர் காலத்தில் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன்.

அரிசன மாணவர்களுக்கு மத்திய அரசு உதவித் தொகை.

*வினா எண் 16 : திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு அரிசனநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ் நாட்டிலுள்ள அரிசன மாணவர்களுக்கு மத்திய அரசு கொடுத்து வந்த ஸ்காலர்ஷிப் பணம் 1975 முதல் ஒரு குடும்பத்தில் இரண்டு பேருக்கு என்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் தமிழ்நாடு அரசு அது விஷயமாக என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) ஆம். இக்கட்டுப்பாடு கல்வி ஆண்டு 1974–75 முதல் நடைமுறையில் உள்ளது.

(ஆ) மேற்படி கட்டுப்பாட்டைத் தளர்த்தி எல்லா குழந்தைகளுக்கும் உதவித்தொகை கொடுக்க வேண்டும் என்று தமிழக அரசு இந்திய அரசைக் கேட்டுக்கொண்டது. ஆனல் இந்திய அரசு அகில இந்திய ரீதியில் அமுல்படுத்தப்படும் இத் திட்டத்தை மாற்ற இயலாது எனக் கூறி விட்டது.



1979 பிப்ரவரி 12]

திரு. வி. கே. கோதண்டராமன் : ஸார், ஜனதா அரசு வருவதற்கு முன்னால் நெருக்கடி காலத்தில் எமெர்ஜென்சி காலத்தில் நடைமுறையில் இருந்ததை எல்லாம் மாற்றப்பட்டிருந்தது. அதை எல்லாம் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கண்டிப்பாக மீண்டும் மாற்றி அமைப்போம் என்று சொன்னவர்கள் ஏற்கெனவே அரிசன மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த ஸ்காலர்ஷிப் இப்போது இரண்டு பேருக்கு மட்டும்தான் என்று கொண்டுவரப்பட்டுள்ளது. இதை மாற்றி எல்லா மாணவர்களுக்கும் கொடுக்கக் கூடிய முறையில், எல்லா அரிசன மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில் அதை நிரூபிக்கின்ற வகையில், இந்த அரசு தீவிரமாக கவனம் செலுத்துமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 1977-ம் ஆண்டு ஜூலை மாதத்திலேயே மத்திய அரசுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது தெரிவித்த கருத்தை எழுதினோம். அதற்கு இது அகில இந்திய ரீதியில் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தின் அடிப்படையில் மத்திய அரசு கொண்டுள்ள கொள்கை என்றும், ஆகவே இதை மாற்றுவது என்பது இயலாது என்று மறுத்து விட்டது. ஆனால் இந்த அரசு இரண்டு குழந்தைகளுக்கு மேல் உள்ளவர்களுக்கும் உபகாரச் சம்பளம் வழங்கி வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, அரிசன மக்களில் இரண்டு குழந்தைகளுக்கு மேல் என்று இருந்தாலும் உதவி கொடுக்கப்பட்டு வந்தாலும் பின்தங்கிய மக்களாக இருந்தால், அந்த உதவி கிடையாது என்று நிறுத்தப்பட்டுள்ளது. கல்விக்காக எவ்வளவு செலவு செய்தாலும், முக்கியமாக பின்தங்கிய மக்களுக்கு எந்த அளவுக்கு உதவி செய்யப்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் கல்வி வளர முடியும். ஆகவே பின்தங்கிய மக்களுக்கும் உதவித் தொகை அளிப்பதற்கு இந்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : என்னுடைய பதிலிலேயே இதற்கும் பதில் சொல்லியிருக்கிறேன். இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு, மத்திய அரசை உரிய நேரத்தில் கேட்டோம், அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : இந்த அரசாங்கம் வந்த பிறகு, மத்திய அரசாங்கம் நிர்பந்தமாக குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை செயல்படுத்தப் போவதில்லை என்று அறிவித்த பின்னால் ஏன் இந்தவிதமான நிலைமை வந்திருக்கிறது என்று தெரியவில்லை. நேற்று முதல்நாள்கூட குடும்பக்கட்டுப்பாட்டை சரியாக அமல் படுத்தவில்லை என்ற காரணத்திற்காக தாசில்தாரிடம் காரணம் கேட்டு சம்பளத்தை பிடித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அப்படியெல்லாம் ஏன் இந்த அரசாங்கம் இன்னும் அதை கடைப்பிடித்துக்கொண்டிருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்படி இருக்கும்போது, இந்த அரசு ஏன் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தின் கொள்கையை கடைபிடித்து வருகிறது என்பதை அறியவிரும்புகிறேன். (பதில் இல்லை).

திரு. ரா. மார்க்கப்பந்து : பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பதின் நோக்கம், அவர்களது, ஸோஷியல் ஸ்டேட்டஸ், பொருளாதார நிலையில் அவர்கள் உயரவேண்டும் என்பதற்காகக்கொடுக்கப்படுகின்ற ஒரு சலுகை, அதை ஏன் மத்திய அரசு நிறுத்திவிட்டது என்று தெரியவில்லை. அதே நேரத்தில் மிகப் பின்தங்கிய மக்களுக்கு இன்கம் ஸீலிங் வைக்கப்பட்டிருக்கிறது. இதை நீக்குவதற்கு இப்போதாவது அரசாங்கத்தினிடத்தில் ஏதாவது குறிப்பு வைத்திருக்கிறதா? மிகப் பின்தங்கிய மக்களுக்கு வரைமுறை இல்லாமல் ஸ்காலர்ஷிப் வழங்குவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மக்கள் பெருக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தான் இந்த





விதி முறையை மத்திய அரசு நிர்ணயித்தது. இப்போது பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு மாநில அரசு உபகாரச் சம்பளம் வழங்கி வருகிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே அரிசன மாணவர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவி மிகவும் காலம் கடந்து கிடைத்து வருவதாகவும், சில இடங்களில் ஆண்டு இறுதியில்தான் கிடைத்து வரும் குறைபாடுகள் இருந்து வருவதாகவும், இதுபற்றி சில அரிசன மாணவர்கள் அமைச்சர் அவர்களை சந்தித்து புகார் கூறியதாகவும் செய்தி வந்திருப்பது உண்மையா ? அப்படியென்றால் இனிமேலாவது வருட ஆரம்பத்தில் இந்த நிதி உதவியை கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, உபகார சம்பளத்தை வேகமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. கல்லூரி அளவில் பாரங்களைப் பூர்த்தி செய்து அனுப்புவதில் சில பல இடங்களில் தவிர்க்க முடியாத அளவில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. அதையும் நிவர்த்தி செய்து, துரிதமாக வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

## தந்தை பெரியார் கழகத்தில் தொழிலாளர் பங்கு.

*வினா எண் 17. திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் தொழிலாளர் பங்கு எவ்வளவு ?

(ஆ) எத்தனை பேர் உள்ளார்கள் ?

(இ) லாபம் வந்தால் தொழிலாளருக்குப் பங்கு, நட்டம் வந்தால் என்ன செய்யப்படுகிறது ?

[1979 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இதுவரை ரூ. 4,46,400-க்கு மதிப்புள்ள மாற்றத்தக்க கடன்சுட்டுப் பத்திரங்கள் தொழிலாளர்களுக்கு வாங்கப்பட்டுள்ளது. இக்கழகத்தால் வழங்கப்படலாம் என்று வரையறுக்கப்பட்டுள்ள மாற்றத் தக்க கடன்சுட்டுப் பத்திரத் தொகை ரூ. 10,00,000 ஆகும்.

(ஆ) மொத்தத் தொழிலாளர்களான 1,783 பேரில் 1,553 தொழிலாளர்கள் இத் திட்டத்தில் உள்ளார்கள்.

(இ) மாற்றத்தக்க கடன் சுட்டுப் பத்திரங்களுக்கான வட்டி வீதம் 8 சதவிகிதம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கழகத்திற்கு இலாபமோ அல்லது நஷ்டமோ ஏற்படினும், இந்த வட்டித் தொகை ஒவ்வொரு அரையாண்டும் வழங்கப்படவேண்டியது. மாற்றத் தக்க கடன் சுட்டுத் பத்திரங்கள் (Convertible Debentures) முதலீட்டுப் பங்குகளாக (Equity Shares) மாற்றப்படும் வரை—லாபம் வந்தாலோ அல்லது நஷ்டம் வந்தாலோ, கழகம் அவற்றைத் தொழிலாளர்களுடன் பகிர்ந்து கொள்ளாது.

திரு. துரை முருகன் : சென்ற கேள்வி மிகவும் முக்கியமானது. அதைப் பற்றி அரை மணி நேரம் விவாதிக்க நேரம் ஒதுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். அடுத்த கேள்வி எடுத்துக்கொண்டாகி விட்டது. என் அனுமதியோடு தான் எழுந்திருக்கவேண்டும்.

திரு. துரை முருகன் : இது மிகவும் முக்கியமான கேள்வி. மிகமிகப் பின்தங்கியவர்களைப் பற்றியது. எனவே அரை மணி நேரம் விவாதிப்பதற்கு நேரம் ஒதுக்குகிறேன் என்று சொல்லி விட்டால் போதும். உங்கள் ஆணைக்கு நான் தலை வணங்கு கிறேன்.



1979 பிப்ரவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களை அனுமதிக்கவில்லை. தயவுசெய்து நீங்கள் பேசக் கூடாது. நீங்கள் மிகமிகப் பின்தங்கியவர் என்பதும் எனக்குத் தெரியும். இருந்தாலும், இப்போது தயவு செய்து உட்காருங்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கு பொதுத் துறை நிறுவனங்களின் நிர்வாகத்தில் பங்கு இருக்கிறது என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகத்தான் இந்த பங்குத் தொகை கொடுப்பதற்கு வகை இருக்கிறது. சமீபத்தில் ருமேனியா நாட்டில் இப்படிப்பட்ட தொழில் நிறுவனங்களில் அவர்களுக்கு எப்படிப்பட்ட பங்கு இருக்கின்றது என்பதைப் பார்க்கிறபோது, அங்கு மானேஜிங் டைரக்டர் அப்பாயின்மென்டை கவர்ன்மென்ட்தான் செய்திருக்கிறார்கள். ஆனால், subject to the approval of the General Body of the Wo kers of the factory. அந்தத் தொழிலாளர்களுடைய 'அப்ரூவல்' இருந்தால்தான் அந்த அப்பாயின்மென்ட் 'கன்பர்ம்' ஆகும். அப்படி இல்லாவிட்டால், சர்க்கார் அதை மாற்றுவார்கள். அப்படிப்பட்ட ஒரு முறை அவர்களுக்கு நிர்வாகத்திலே பங்கு இருக்கிறது. எனவே, அத்தகைய ஒரு முறையை தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலும், மற்ற அதுபோன்ற நிறுவனங்களிலும் கொண்டு வருவதற்கு இந்த அரசு தயாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய நடைமுறையை தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் கொண்டுவருகின்ற உத்தேசம் இல்லை. காரணம், ஏற்கனவே தந்தை பெரியார் போக்குவரத்து நிறுவனத்தைப் பொறுத்தவரைக்கும் 75 சதவிகிதத்திற்கு மேற்பட்ட இந்த கடன்சுட்டுபத்திரங்கள் வாங்குவதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. ஆறு லட்சம் ரூபாய்க்கான இப்படிப்பட்ட கடன்சுட்டு பத்திரங்களை ஈகுவிடி ஷேர்களாக மாற்றிக்கொள்வதற்கு முன்வருவார்களானால், அவர்கள் சார்பில் இரண்டு டைரக்டர்களை அரசாங்கம் நியமிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அன்றைய போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு புலியூரார் அவர்கள் (புலியூர்தான் அவரது ஊர், பன்ருட்டி அல்ல) இந்த

[திரு. என். கிட்டப்பா] [1979 பிப்ரவரி 12

திட்டத்தை செயல்படுத்த மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டார்கள். எனவே, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலுள்ள தொழிலாளர்களுக்கு பங்கு என்ற................

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: பேரவையின் அனுமதியோடு சபையின் கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

[முற்பகல் 10·00].

<u>திரு. என். கிட்டப்பா</u>: அரசு போக்குவரத்து நிறுவனங்களில் இந்த முறை கையாளப்படும்போது சில நன்மைகள் ஏற்படுவதாக மாண்புமிகு போக்துவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். தொடர்ந்து அந்தத் தொழிலாளர்களை ஊக்குவிக்க மேலும் பல புதிய சலுகைகளை அவர்களுக்கு அளிப்பதற்கு புதிய திட்டங்களை உருவாக்க அரசு ஆலோசித்து வருகிறதா?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்</u>: மூல வினா 'கன்வர்டிபிள் டிபென்சர்ஸ் அண்டு ஈக்விடி ஷேர்ஸ்' என்பது பற்றியதாகும். கன்வர்டிபிள் டிபென்சர்ஸ் என்று சொல்லப்படுகிற கடன் ஈட்டுப் பத்திரங்களைப் பொறுத்தவரை தொழிலாளர்களே முன்வந்து 'ஈக்விடி ஷேர்ஸ்' ஆக மாற்றிக்கொள்ள முன்வருவார்களானால் அவர்களுக்குப் பல வாய்ப்புகள் இருக்கின்றன. தமிழக அரசே மத்திய அரசிடம் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறது. அந்த 'ஈக்விடி ஷேர்ஸ்' அடிப்படையில் அவர்களுக்குத் தொகை லாபத்தில் ஓடினாலும், நஷ்டத்தில் ஓடினாலும் குறைந்த பட்ச டிவிடெண்ட் கிட்ட வேண்டும். அவ்வாறு டிவிடெண்ட் கொடுக்கிறபோது இன்கம் டாக்சில் இருந்து விதிவிலக்கு வேண்டுமென்று மத்திய அரசிடத்தில் கேட்டிருக்கிறோம். இது பற்றிப் பல முறை மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம். மத்திய அரசு ஒப்புதல் கிடைத்த பிறகு அது நடைமுறைக்கு வரும்போது தொழிலாளர்களுக்கு மேலும் பலன் கிடைக்கக் கூடும்.



1979 பிப்ரவரி 12]

<u>திரு. கு. ரமணி</u>: அரசாங்கத்தின் தலைமையின்கீழ் நடக்கும்படியான இந்தக் கார்ப்பரேஷன்களில் தொழிலாளர்களின் பணத்தை பங்குகளாக, கடன் பத்திரங்கள் மூலமாகப் பெற்றுக் கொள்ளும்போது, தனியார்கள் நடத்துகிற தொழிற்சாலைகளில், மோட்டார் கம்பெனிகளில் இப்படிப்பட்ட பங்குகளுக்கு அளிக்கின்ற சலுகைகளுக்கு மேல் இந்த அரசாங்கம் அந்தத் தொழிலாளர்களுக்கு அளிக்கின்ற அதிகப்படியான சலுகைகள் என்ன?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்</u>: இந்தக் குறிப்பிட்ட மூல வினா அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் பணி புரிகிற தொழிலாளர்களுக்கு கன்வர்டிபிள் டிபென்சர்ஸ் என்று சொல்லுகிற கடன் ஈட்டுப் பத்திரம் சம்பந்தப் பட்டதாகும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: கேள்வி எண் 18 ....

<u>திரு. கு. ரமணி</u>: நான் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: நான் வலியுறுத்த முடியாது....

<u>திரு. துரை முருகன்</u>: கேட்ட கேள்விக்கு அமைச்சர் என்ன வேண்டுமானாலும் பதில் சொல்லலாம், அமைச்சரை வற்புறுத்த முடியாது என்று சொன்னால் அது சரியா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: நான் பேசுவதாக இல்லை. தயவு செய்து அமருங்கள்.

## <u>பொறியியல் கழகங்கள்.</u>

<u>* வினா எண். 18—திரு. மு. அம்பிகாபதி</u>: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ் நாட்டில் பொறியியல் கழகங்கள் துவக்கப்பட்டதன் அடிப்படை என்ன?

(ஆ) இதற்கு மத்திய அரசின் உதவி உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ''அரைமில்லியன் வேலை வாய்ப்புத் திட்டம்'' என்ற மத்திய அரசு உருவாக்கிய திட்டத்தின்கீழ் வேலையில்லாத பொறியியல் பட்டதாரிகள், தொழில் நுணுக்க பயிற்சி பெற்றவர்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு தமிழகத்தில் உள்ள போக்குவரத்துக் கழகங்களின் உதவியுடன் பொறியியற் கழகங்களை கம்பெனி சட்டத்தின்கீழ் அமைத்து மேற்படி திட்டத்தை அமுலாக்க முடிவு செய்தது.

(ஆ) ஆம்.

திரு. மு. அம்பிகாபதி : தமிழ்நாட்டில் எந்தெந்தக் கழகங்களில் எவ்வளவு பேர் வேலை பார்க்கிறார்கள்? இவர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கக்கூடிய பந்தத் தொகை எவ்வளவு என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பல்லவன் பொறியியற் கழகத்தில் பட்டதாரிகள் 15 பேரும், டிப்ளோமா பெற்றவர்கள் 47 பேரும், தொழிற் பயிற்சி நிலைய சான்றிதழ் பெற்றவர்கள் 482 பேரும் பணிபுரிகிறார்கள். அதே போன்று பாண்டியன் பொறியிற் கழகத்தில் பட்டதாரிகள் 12 பேரும், டிப்ளோமா பெற்றவர்கள் 56 பேரும், தொழிற் பயிற்சி நிலைய சான்றிதழ் பெற்றவர்கள் 340 பேரும் பணிபுரிகிறார்கள். சேரன் பொறியியற் கழகத்தில் 15 பட்டதாரிகள் 57 டிப்ளோமா பெற்றவர்கள், 443 தொழிற் பயிற்சி நிலைய சான்றிதழ் பெற்றவர்கள் பணிபுரிகிறார்கள். சோழன் பொறியியற் கழகத்தில் 16 பட்டதாரிகள், 54 டிப்ளோமா பெற்றவர்கள், 259 தொழிற் பயிற்சி நிலைய சான்றிதழ் பெற்றவர்கள் பணிபுரிகிறார்கள். அண்ணா பொறியிற் கழகத்தில் 9 பட்டதாரிகள், 23 டிப்ளோமா பெற்றவர்கள், 256 தொழிற்பயிற்சி நிலைய சான்றிதழ் பெற்றவர்கள் பணிபுரிகிறார்கள். இவர்களில் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி நிலைய சான்றிதழ் பெற்று வந்தவர்களிடமிருந்து 2,000 ரூபாயும், டிப்ளோமா பெற்று வந்தவர்களிடமிருந்து 3,000 ரூபாயும், பட்டதாரிகளிடமிருந்து 5,000 ரூபாயும் என டிபென்சர்கள் வசூலிக்கப்பட்டிருக்கின்றன.



திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களிடத்திலே நீண்டகாலம் பணியாற்ற வேண்டும் என்று ஒப்பந்தம் கட்டாயமாக எழுதி வாங்கப்பட்டிருக்கிறதா? அப்படி எழுதி வாங்கப்பட்டிருப்பது அரசின் கவனத்திற்கு வந்தால் அதை ரத்து செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இந்தக் கழகங்கள் அனைத்தும் அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களினுடைய உதவியோடும் மத்திய அரசினுடைய 50 சதவிகித நிதி உதவியோடும் அந்தத் தொழிலாளர்களிடமிருந்து 24 சதவிதம் பணமும் பெற்றுத்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவையனைத்தையும் தனித்தனிப் போக்குவரத்துக் கழகங்களுடன் இணைத்து அவர்கள் நிரந்தரமாகப் பணியாற்றுவதற்கான ஏற்பாட்டை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

## கீழ்பவானி அணை நீர்மட்டம்.

* வினா எண். 19—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

கீழ்பவானி பாசனத் திட்டம் (கோவை மாவட்டம்) அணையின் நீர் மட்டத்தை மற்ற அணையின் நீர் அளவுகளை பத்திரிக்கையில் அறிவிப்பதைப் போல அறிவித்திட உத்திரவு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அரசாணை எண் 1438 பொதுப்பணித்துறை, 1978-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ம் நாளில் கீழ்பவானி அணை மற்றும் அமராவதி அணையின் நீர்மட்டத்தைப் பத்திரிகையில் அறிவிப்பதற்கும், அகில இந்திய வானொலியில் ஒலிபரப்புவதற்கும் உத்திரவு அளிக்கப்பட்டுள்ளது.

[1979 பிப்ரவரி 12

திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதைப்பற்றி தெரிவித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போலவே நீர் விடுகின்ற நேரங்களிலேயும் ஊராட்சி ஒன்றியங்கள், கிராம அதிகாரிகள் ஆகியவற்றின் மூலமாக அறிவிக்க அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நீர் விடுகின்ற நேரத்திலே விவசாயிகளுக்கு வானொலி மூலமாகவும் கிராம அதிகாரிகள் மூலமாகவும் ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டு வருகிறது. அந்த முறை மீண்டும் கையாளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வீடூர் அணை.

* வினா எண். 20—திரு. மொ. பரமசிவம் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வானூர் தொகுதியில் உள்ள வீடூர் அணைக்கட்டில் பாசன வசதியையும் அதன் முறையையும் சீர்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) இதில், தற்போது நடந்துள்ள தவறு அரசினர் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) தவறு எதுவும் நடந்ததாக இதுவரை தகவல் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.



1979 பிப்ரவரி 12]

## (ஆ) உடுக் குறியிடாத வினாக்கள்.

## கிராமங்களுக்கு தார் சாலை அமைக்கும் திட்டம்.

வினா 1—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1500 மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கு தார் சாலை அமைக்கும் திட்டத்தின் கீழ் எத்தனை கிராமங்களுக்கு சாலை போடப்பட்டது ?

(ஆ) இன்னும் எத்தனை கிராமங்களுக்கு சாலை போடப்படாமலுள்ளது ?

விடை

(அ) 31-3-1978 வரை 1236 கிராமங்களில் தார் சாலைகள் போடப்பட்டுள்ளன.

(ஆ) 1772 கிராமங்களுக்கு தார் சாலை போடப்படாமலுள்ளது.

## தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

வினா 2—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், மரக்காணம், மேல் சித்தாமூர், வளத்தி, சத்தியமங்கலம் ஊர்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் கடந்த ஆறு, ஏழு மாதங்களாக பொதுப்பிரிவில் டாக்டர் போடாமல் இருக்கிறார்களா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை

(அ) மற்றும் (ஆ) இந்நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் காலியாக இருந்த பணியிடங்களில் மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டு விட்டார்கள்.

[1979 பிப்ரவரி 12

## நிழற் குடைகளுக்கு ஆகும் செலவு.

வினா 3—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகரில் பேருந்து பயணிகள் நிற்பதற்காக பேருந்து நிற்குமிடங்களில் கட்டப்படும் நிழற்குடைகளுக்கு ஆகும் செலவு என்ன ?

(ஆ) இதற்காகப் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் வசூலிக்கப்படுகிறதா ?

விடை

(அ) மற்றும் (ஆ) ஒரு நிழற்குடை அமைக்க ரூ. 2,500 ஆகும் என்று முன்பு கருதப்பட்டது. இந்த அடிப்படையில் பொது மக்களிடமிருந்து ஒரு நிழற்குடைக்கு ரூ. 2,500 வீதம் 45 நிழற் குடைகட்கு நன்கொடை பெறப்பட்டது. ஒரு நிழற்குடைக்கு 10 வருட பராமரிப்புச் செலவு உள்பட ரூ. 4,000 பெறவேண்டு மென தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

## தஞ்சை மாவட்டத்தில் உப்பு மற்றும் கடல் இரசாயனப் பொருட்கள் தொழிற்சாலை.

வினா 4—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டத்தில் மெரைன் காம்ப்ளெக்ஸ் தொழிற் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை

தஞ்சாவூர் மாவட்டத்தின் தென்புறத்தில் கடற்கரையைச் சார்ந்துள்ள 60,000 ஏக்கர் சதுப்பு நிலப்பரப்பைப் பயன்படுத்தி ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் டன் உப்பு மற்றும் கடல் இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறுவும் சாத்தியக்கூறுகள் பற்றி தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) மாநில அரசுக்கு செயற் குறிப்புகளை அனுப்பியிருந்தது. வனம் மற்றும் மீன்துறை இப்படிப்பட்ட



1979 பிப்ரவரி 12]

பெரிய அளவிலான தொழிற்சாலையை அப்பகுதியில் அமைப்பது அப்பகுதியின் இயற்கை சமநிலையை (Ecology) பாதிக்க லாம் என்ற அபிப்பிராயத்தை தெரிவித்து இருந்தது. ஆகை யால் இயற்கை சமநிலையைப் பாதிக்காத வகையில் சதுப்பு நிலங்களில் எந்தெந்த பகுதிகளை மட்டும் மேற்கொண்டு அவற்றின் அடிப்படையில் உப்பு மற்றும் கடல் இரசாயனப் பொருட்கள் உற்பத்தி செய்ய தொழிற்சாலைகள் நிறுவ இயலும் என்று பரிசீலனை செய்து வடக்காடு, மரவக்காடு என்ற இரு கிராமங் களில் உள்ள 5,400 ஏக்கர் நிலத்தில் ஒரு உப்பளம் நிறுவ தமிழ் நாடு உப்பு நிறுவனத்திற்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

## பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் உள்ள பேருந்து செல்லும் சாலைகள்.

வினா 5—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) பஞ்சாயத்து யூனியன்களில் பஸ் போக்குவரத்துள்ள ரோடுகளில் தார் போடாமல் இருப்பவை எத்தனை கிலோ மீட்டர்கள் ? மாவட்டவாரியாக ?

(ஆ) எல்லா ரோடுகளுக்கும் தார் ரோடு போடும் உத்தேசமுண்டா ?

விடை

(அ)

| | | கி.மீ. |
|---|---|---|
| (1) | செங்கல்பட்டு மாவட்டம் .. .. | 161.05 |
| (2) | வட ஆற்காடு மாவட்டம் .. | 495.30 |
| (3) | தென்னாற்காடு மாவட்டம் .. | 224.30 |
| (4) | திருச்சிராப்பள்ளி மாவட்டம் .. | 415.00 |
| (5) | தஞ்சாவூர் மாவட்டம் .. .. | 101.60 |
| (6) | மதுரை மாவட்டம் .. .. | 419.50 |
| (7) | புதுக்கோட்டை மாவட்டம் .. | 176.40 |
| (8) | கோயம்புத்தூர் மாவட்டம் .. | 593.61 |
| (9) | நீலகிரி மாவட்டம் .. .. | 0.40 |
| (10) | சேலம் மாவட்டம் .. .. | 244.50 |
| (11) | தர்மபுரி மாவட்டம் .. .. | 265.40 |
| (12) | திருநெல்வேலி மாவட்டம்.. .. | 141.50 |
| (13) | இராமநாதபுரம் மாவட்டம் .. | 305.86 |
| (14) | கன்னியாகுமரி மாவட்டம் .. | 161.00 |

(ஆ) சாலைகளுக்கு தார் போடும் வேலையை, நிதி நிலைமைக்கேற்ப அந்தந்த ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களே மேற்கொள்ளலாம். பேருந்து செல்லும் அனைத்து சாலை களையும் தார் சாலைகளாக மாற்றும் செயற்குறிப்பு ஏது மில்லை.

[1979 பிப்ரவரி 12

## தென்னாற்காடு மாவட்டத்தில் மினி பஸ் போக்குவரத்து.

வினா 6—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் 1–7–1977-க்குப் பிறகு எத்தனை மினி பஸ்கள் விடப்பட்டன ?

(ஆ) தமிழகம் எங்கும் எத்தனை விடப்பட்டன ?

விடை

(அ) ஒன்றுமிலலை.

(ஆ) தமிழகம் முழுவதும் மொத்தம் 25 மினி பஸ்கள் விடப்பட்டுள்ளன.

## தாவுத் கொட்டாய் கிராமத்தில் காலரா நோய்த் தடுப்பு நடவடிக்கை.

வினா 7—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தர்மபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம் மகனூர்ப்பட்டி ஊராட்சிக்குப்பட்ட தாவுத் கொட்டாய் கிராமத்தில் காலரா நோய்த் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை

(அ) ஆம்.

(ஆ) தாவுத் கொட்டாய் கிராமத்தில் 1977–78 ஆம் ஆண்டிலும் 1979ஆம் ஆண்டிலும் (207.78 வரை) காலரா நோய் ஏற்படவில்லை. ஆயினும் ஊத்தங்கரை வட்டத்தில் ஏனைய சில கிராமங்களில் சந்தேகிக்கப்படக்கூடிய காலராவினால் (Acute Gastro Enteritities) சிலர் பாதிக்கப்பட்டனர். எனவே சுற்றியுள்ள கிராமங்களில் தடுப்பு நடவடிக்கை எடுப்பதுபோல் தாவுத் கொட்டாய் கிராமத்திலும் வழக்கமான காலரா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. கிராமத்திலுள்ள எல்லாக் கிணறுகளிலும் குளோரின் கலக்கப்பட்டது. மக்களுக்கு காலரா முன் தடுப்பு ஊசிகள் போடப்பட்டிருக்கின்றன.



979 பிப்ரவரி 12]

## மது அருந்துவதற்கான உரிமங்கள்.

வினா 8—திரு எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1974 ஜனவரி முதல் 1977 ஏப்ரல் வரை மேல் நாட்டு மதுவகைகள் அருந்துவதற்கான உரிமங்கள் கோரி எத்தனை மனுக்கள் வந்தன ? மாவட்ட வாரியாக ?

(ஆ) எத்தனை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன ? எத்தனைக்கு அனுமதி வழங்கப்பட்டது ?

(இ) இதனால் அரசுக்கு வரும் ஆண்டு வருமானம் எவ்வளவு ?

விடை

(அ) மேல் நாட்டு மதுவகைகள் அருந்துவதற்கான உரிமங்கள் கோரி 59,360 மனுக்கள் வந்துள்ளன. மாவட்ட வாரியான விபரம் கீழ் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | சென்னை.. .. .. .. | 33,858 |
| 2. | செங்கற்பட்டு .. .. .. | 1,400 |
| 3. | வட ஆற்காடு .. .. .. | 1,272 |
| 4. | தென் ஆற்காடு .. .. .. | 267 |
| 5. | தஞ்சாவூர் .. .. .. | 809 |
| 6. | திருச்சிராப்பள்ளி .. .. | 1,600 |
| 7. | சேலம் .. .. .. .. | 3,098 |
| 8. | மதுரை .. .. .. .. | 2,357 |
| 9. | இராமநாதபுரம் .. .. | 634 |
| 10. | திருநெல்வேலி .. .. | 688 |
| 11. | தர்மபுரி .. .. .. | 159 |
| 12. | கோயம்புத்தூர் .. .. .. | 10,661 |
| 13. | புதுக்கோட்டை .. .. | 318 |
| 14. | கன்னியாகுமரி .. .. .. | 251 |
| 15. | உதகமண்டலம் .. .. .. | 1,988 |
| | மொத்தம் .. | 59,360 |

[1979 பிப்ரவரி 12

(ஆ) 295 மனுக்கள் நள்ளுபடி செய்யப்பட்டன.—

| | | |
|---|---|---|
| 1. | சென்னை .. .. .. .. | 53 |
| 2. | செங்கற்பட்டு .. .. .. | 180 |
| 3. | சேலம் .. .. .. | 8 |
| 4. | தர்மபுரி .. .. .. | 9 |
| 5. | திருநெல்வேலி .. .. | 8 |
| 6. | கன்னியாகுமரி .. .. .. | 37 |
| | மொத்தம் .. | 295 |

59,065 மனுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.—

| | | |
|---|---|---|
| 1. | சென்னை .. .. .. .. | 33,805 |
| 2. | செங்கற்பட்டு .. .. .. | 1,220 |
| 3. | வட ஆற்காடு .. .. .. | 1,272 |
| 4. | தென் ஆற்காடு .. .. .. | 267 |
| 5. | தஞ்சாவூர் .. .. .. | 809 |
| 6. | திருச்சிராப்பள்ளி .. .. | 1,600 |
| 7. | சேலம் .. .. .. .. | 3,090 |
| 8. | மதுரை .. .. .. .. | 2,357 |
| 9. | இராமநாதபுரம் .. .. | 634 |
| 10. | திருநெல்வேலி .. .. | 680 |
| 11. | தர்மபுரி .. .. .. | 150 |
| 12. | கோயம்புத்தூர் .. .. .. | 10,661 |
| 13. | புதுக்கோட்டை .. .. | 318 |
| 14. | கன்னியாகுமரி .. .. .. | 214 |
| 15. | உதகமண்டலம் .. .. .. | 1,988 |
| | மொத்தம் .. | 59,065 |

(இ) இதனல் அரசுக்குக் கிடைத்த ஆண்டு வருமானம் :—

| வருடம் | தொகை. |
|---|---|
| | ரூ. |
| 1974 .. .. | 10,68,500 |
| 1975 .. .. | 4,39,800 |
| 1976 .. .. | 21,78,500 |
| 1977 .. .. | 5,60,550 |
| மொத்தம் .. | 42,47,350 |



9 பிப்ரவரி 12]

## பலநோக்கு பணியாளர் திட்டம்.

வினா 9.—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமி கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட ாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பலநோக்கு பணியாளர் திட்டம் மக்கள் நல்வாழ்வுத் றையில் ஆரம்ப சுகாதார நிலையத்தின் மூலமாக அமுல் ்ய எந்தெந்த மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) அதில் தென்னாற்காடு மாவட்டத்தில் எத்தனை என் . எம்.) நர்சுகள் வேலையில் சேர்ந்துள்ளனர் ?

(இ) காலியிடம் எத்தனை ?

(ஈ) இதனை நிரப்ப அரசு என்ன நடவடிக்கை எடுத் ளது ?

டை

(அ) முதற்கட்டத்தில் கீழ்க்கண்ட 5 மாவட்டங்களில் நோக்கு பணியாளர் திட்டம் செயல்பட ஒப்புதல் அளிக்கப் ட்டது.—

(1) செங்கற்பட்டு.

(2) தென்னாற்காடு.

(3) மதுரை.

(4) கன்னியாகுமரி.

(5) சேலம்.

(ஆ) தென்னாற்காடு மாவட்டத்தில், பலநோக்கு சுகா ர பணியாளர் திட்டத்தின்கீழ் பதினொன்கு துணைச் செவிலியர் ர் (ANMS) பணியில் சேர்ந்துள்ளனர்.

(இ) தென்னாற்காடு மாவட்டத்தில் 103 துணைச் சவிலியர் இடங்கள் காலியாக உள்ளன.

(ஈ) தமிழ்நாட்டில் துணைச் செவிலியர் (ANM) வலைக்கு ஆட்கள் பற்றாக்குறை இருந்து வருகிறது. இதனை ிவர்த்தி செய்வதற்காக அரசினரால் நடத்தப்படும் நான்கு ணைச் செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சியளிக்கப்படுவ ற்கு அனுமதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கையை இரட்டிப்ப நற்கும், மேலும் நான்கு புதிய பள்ளிகளை ஆரம்பிப்பதற்குமான செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்விலுள்ளது இதற்குத் தேவை ான நிதி உதவி அளிக்குமாறு மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

## India Meters.

Q. 10—Thiru R. Umanath : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) Whether India Meters has been re-opened ;

(b) if so, since when ;

(c) how many workers have been taken back ; and

(d) their service conditions and terms under which they have been absorbed ?

*Ans :*

A statement * is placed on the Table of the House.

## ஊனமுற்றோருக்கான மாநில குழு.

வினா 11—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் ''ஊனமுற்றோருக்கான மாநில குழு'' அமைக்கப் பட்டிருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அது இதுவரை ஆற்றியுள்ள வேலை என்ன ?

விடை

(அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை ** ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

## ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

வினா 12—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் 1975-ம் ஆண்டிலிருந்து இதுவரை நிறுவப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) இதற்காக செலவு செய்த தொகை எவ்வளவு ?

(இ) எந்தெந்த இடத்தில் அமைக்கப்பட்டது ?

* 420-431ம் பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

** 431-436 ம் பக்கங்களில் இணைப்பு IV—ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



விடை

(அ) 1974–75-ம் ஆண்டிலிருந்து இதுவரை நிறுவப்பட்டு செயல் பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் மொத்த எண்ணிக்கை நான்கு. சேலம் மாவட்டத்தில் இரண்டு. நீலகிரி மாவட்டத்தில் இரண்டு. இத்துடன் தமிழகத்தில் தற்சமயம் மொத்தம் 384 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) 1974–75 முதல் 1977–78 வரை செலவு செய்த தொகை அதாவது மருந்துகள், கருவி, மரச்சாமான்கள் வாங்க ரூபாய் இலட்சம் 3.60 இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு, சேலம் மாவட்டத்திலும், ரூபாய் இலட்சம் 4·74 இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நீலகிரி மாவட்டத்திலும் ஆகும். நீலகிரி மாவட்டத்திலுள்ள இரு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மலைவட்டார பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் துவக்கப்பட்டு இருப்பதால் இதற்குண்டான செலவை மத்திய அரசு ஏற்று வருகிறது.

(இ) சேலம் மாவட்டம், ராசிபுரம் வட்டாரம், பிள்ளாநல்லூர்; (2) சேலம் மாவட்டம் இலச்சிபாளையம் வட்டாரம், மாணிக்கம் பாளையம்; (3) நீலகிரி மாவட்டம், ஊட்டி வட்டம், தூனேரி; (4) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டாரம், நெல்லக் கோட்டா.

## சங்கராபுரம் தொகுதியில் தாய் சேய் நல விடுதிகள்.

வினா 13—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் சங்கராபுரம் தொகுதியில் கட்டப்பட்டுள்ள எஸ். வி. பாளையம் பாண்டலம், மேல் சிறுவள்ளூர், பிர்மகுண்டம், சோழம்பட்டு, தாய் சேய் நல விடுதிகள் கட்டி முடிக்கப் பட்டனவா?

(ஆ) ஆம் என்றால் அது தற்போது இயங்குகின்றதா ? அதன் விபரம் என்ன ?

விடை.

(அ) ஆம்.

(ஆ) தாய் சேய் நலப் பணிகள் அங்கே செயல் படுத்தப் படுகிறது.

[1979 பிப்ரவரி 12

## பேருந்து கூடுகள் கட்டும் பணிமனைகள்

வினா 14—திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்கு வரத்துக் கழகங்களில் பேருந்துகளுக்கான கூடுகள் (Bus Body) கட்டும் பணிமனைகள் எந்தெந்தக் கழகங்களில் உள்ளன?

(ஆ) மேற்படி வேலைகள் தனியார் துறையினரிடம் கொடுக்கப்பட்டு வருகின்றனவா?

(இ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் இவ்வேலைகளை தனியாரிடம் கொடுக்கின்றதா?

(ஈ) அப்படியானால் அதற்கான காரணங்கள் யாவை?

(உ) தனியார் துறையில் ஒரு பேருந்துக்குக் கூடு கட்ட எவ்வளவு பணம் செலவாகிறது?

(ஊ) அரசுத்துறையில் இதற்காக ஆகும் செலவு என்ன?

விடை.

(அ) பாண்டியன், சேரன், சோழன், அண்ணா, பல்லவன் மற்றும் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகங்களிலும் பேருந்து கூடுகள் கட்டும் பணிமனைகள் உள்ளன.

(ஆ) ஆம். சில கழகங்கள் கொடுக்கின்றன.

(இ) ஆம்.

(ஈ) தனது திறனுக்கு இயன்ற அளவு கட்ட பொம்மன் போக்குவரத்துக் கழகம் இவ்வேலையைச் செய்கிறது. வேலை அதிகமாகும் பட்சத்தில் ஏனைய கழகங்களிடத்தில் இவ்வேலையை ஒப்படைக்கிறது. ஏனைய போக்குவரத்துக் கழகங்களுக்கும் திறனுக்கு மீறிய அளவிற்கு வேலையிருந்தால், காலதாமதத்தால் ஏற்படும் நட்டத்தை தவிர்க்க இவ்வேலையை தனியாரிடம் கொடுக்கப்படுகிறது.

(உ) மற்றும் (ஊ) அரசுத் துறையிலும் தனியார் துறையிலும் கூடு கட்டும் வேலையைச் சார்ந்த விவரங்கள் பின்வருமாறு:—

| வரிசை எண்ணும் போக்குவரத்துக் கழகங்களின் பெயர்கள். (1) | அரசுத்துறையில் பேருந்துக் கூடு கட்ட ஆகும் செலவு (வரிகள் தனி) (2) |
|---|---|
| 1. பல்லவன் போக்குவரத்துக் கழகம். | ரூ. 45,000 |
| 2. பாண்டியன் போக்குவரத்துக் கழகம். | ரூ. 36,000 |
| 3. சேரன் போக்குவரத்துக்கழகம் | ரூ. 35,000 |
| 4. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம். | ரூ. 48,939 |



1979 பிப்ரவரி 12]

| வரிசை எண், தனியார் துறையின் பெயர். (1) | தனியார் துறையில் பேருந்து கூடு கட்ட ஆகும் செலவு (வரிகள் உட்பட). (2) |
|---|---|
| 1. சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் (டி. வி. எஸ்.) | ரூ. 42,750 |
| 2. எல். ஜி. பி. கரூர் .. | ரூ. 55,000 |

## உதகமண்டலத்தில் நடைபெற்ற மலர்க்காட்சியில் நுழைவுக் கட்டணம்.

வினா 15—திரு. பொ. கோபாலன்: மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976-ம் ஆண்டில் நடைபெற்ற ஊட்டி மலர்கண்காட்சிக்கு நுழைவுக் கட்டணம் மூலம் வசூலான பணம் எவ்வளவு?

(ஆ) அந்தப் பணம் எதற்குப் பயன்படுத்தப்படுகிறது?

விடை

(அ) ரூ. 1,10,502 ஆகும்.

(ஆ) மொத்த வசூல் தொகையில் 10 சதவிதம் உதகமண்டலத்தில் உள்ள அரசு தாவரவகை இன வளர்ச்சிப் பூங்காவின் நிர்வாகச் செலவுக்கும் எஞ்சியுள்ள தொகை, மலர்க் கண்காட்சியினை நடத்திய விவசாயத் தோட்டக்கலைச் சங்கத்தின் நிர்வாகச் செலவுக்கும், உதகமண்டலத்தில் கண்காட்சிகளை நடத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டது.

## உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்கள்.

வினா 16—திரு. பொ. கோபாலன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் பழுதடைந்த நிலையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனைப் புதுப்பிக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

விடை—(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் நிர்வாகப் பொறியாளரிடமிருந்து மதிப்பீடு பட்டியலை விரைவில் பெற்று தக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கோவை முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

[1979 பிப்ரவரி 12

## சின்கோனா துறைத் தொழிலாளர்களுக்கு பணி விதிகள்.

வினா 17—திரு. கு. ரமணி: மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் அரசு சின்கோனாத் துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நிரந்தர விதிகள் அமுலாக்கப் பட்டு வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், இந்த விதிகள் இறுதியாக்குமுன் தொழிற்சங்கங்களின் ஆலோசனையும், அரசின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளதா ?

விடை

(அ) ஆம்.

(ஆ) தற்போது நடைமுறையில் இருக்கின்ற நிரந்தர விதிகள் அரசு ஆணை (நிலை) எண். 193, அபிவிருத்தித்துறை, நாள் 3–2–1941-ல் வெளியிடப்பட்டவை. அச்சமயம் சின்கோனாத்துறை தொழிலாளர்களின் தொழிற்சங்கங்கள் இருந்ததாக தகவல் இல்லை. ஆகையினால் தொழிற்சங்கங்களின் ஆலோசனை பெறப்படவில்லை.

## காவிரியில் வடிகால் மதகுகள் அமைத்தல்.

வினா 18—திரு. கூ. ச. முருகேசன்: மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சமீப வெள்ளத்தினால் காவிரியில் உடைப்பு எடுத்த கிளிக்கூடு, கவுத்தரசநல்லூர் பகுதியில் வடிகால் மதகுகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை

இத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு கைவிடப்பட்டுள்ளது.

## அரிசனங்களுக்கு வீடுகள் கட்ட மான்யம்.

வினா 19—திரு. வ. மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏழை அரிசனங்களுக்கு வீட்டுமனையிடம் வழங்குவதோடு அரசாங்கச் செலவிலே வீடுகள் கட்டித்தரவோ அல்லது அவர்களே வீடுகள் சொந்தமாக கட்டிக்கொள்வதற்குக் கடனாகவோ மானியமாகவோ அளிக்கும் திட்டம் அரசிடம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



79 பிப்ரவரி 12]

டை

(அ) ஆம்.

(ஆ) ஏழை அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்கு
தோடு அரசாங்கச் செலவில் வீடுகள் கட்டித்தரத் திட்டமுள்ளது.
ந்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக்
கத்தின் மூலம் அரிசனங்களுக்குப் புதிய வடிவமைப்புடன்
7 சதுர அடி பரப்பளவுள்ள வீடுகள் ரூ. 6,000 மதிப்பீட்டுச்
லவில் சமவெளிப் பிரதேசங்களிலும், ரூ. 9,000 மதிப்பீட்டுச்
லவில் மலைப் பிரதேசங்களிலும் வீடுகள் கட்டப்பட்டு வரு
றன. இந்த வீடுகள் இலவசமாக அரிசனங்களுக்கு வழங்கப்
டு வருகின்றன.

கிராமப்புற வீட்டுவசதிச் சங்கங்களின் வாயிலாக வருவாய்க்
ட்டங்களின் அளவில் அரிசனங்களுக்கு வட்டியில்லாக்
னாக ரூ. 5,000 வரை அளிக்கப்பட்டு வருகிறது. நகர்ப்புறக்
டுறவு வீடுகட்டும் சங்கங்களின் மற்ற உறுப்பினர்களுக்கு வீடு
டக் கடன் கொடுப்பது போல் அரிசன உறுப்பினர்களுக்கும்
டியுடன் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டம்
டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையினால் செயல்
த்தப்பட்டு வருகிறது.

## த்தியாலத்தூர் மலைச் சாலையை அகலப்படுத்தல்.

வினா 20—திரு. கு. ரமணி: மாண்புமிகு போக்குவரத்
த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு
டையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம் குத்தி
லத்தூர் மலைக்கு செல்லும் சாலை அகலப்படுத்தி செப்ப
னிடும் வேலை நடந்துகொண்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை முடியும்? ஆரம
க்கப்பட்டது எப்போது? செலவு மதிப்பீடு என்ன?

டை

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவுக்கு இடமில்லை.

[1979 பிப்ரவரி 12

## காட்டுப்புத்தூர் ஏரி பராமரிப்பு.

வினா 21.—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை வட்டம் காட்டுப்புத்தூர் கிராமத்தில் உள்ள ஏரி எந்த ஆண்டு கட்டப்பட்டது?

(ஆ) தற்சமயம் எந்த துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது ?

(இ) கடைசியாக எந்த ஆண்டு பழுது பார்க்கப்பட்டது?

விடை

(அ) 1958 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

(ஆ) தற்சமயம் துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

(இ) கடைசியாக ஆகஸ்ட் 1976-ல் இந்த ஏரி துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்தினால் ரூ. 2,700 செலவில் பழுது பார்க்கப்பட்டது.

## செயாற்றின் குறுக்கே பாலம்.

வினா 22—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமி... போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்... வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் கலசபாக்கம் அருகில் செயாற்றின் மீது மேம்பாலம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் திட்டத்தில் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எந்த அளவில் உள்ள...

(இ) அத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.



...979 பிப்ரவரி 12]

## முகையூர் தொகுதியில் மினி பஸ் போக்குவரத்து.

வினா 23.—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதியில் மாம்பழப்பட்டிலிருந்து அனந்தபுரம், மல்லிகைப்பட்டு, கோழிப்பட்டு, அரியலூர், அத்தியூர், திருக்கை, அடங்குணம், குசப்பாளையம், பனமலை, அனந்தபுரம் வழியாக மினி பஸ் விட பொதுமக்களும் சட்டமன்ற உறுப்பினரும் கொடுத்த மனு மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை

(அ) ஆம்.

(ஆ) பம்பை ஆற்றில் மேம்பாலம் இல்லாததால், மல்லிகைப்பட்டிலிருந்து மாம்பழப்பட்டுவரை பேருந்து போக்குவரத்து வசதி அளிக்க இயலாமல், அனந்தபுரத்திலிருந்து பனமலைப்பேட்டை, அடங்குணம், குசப்பாளையம், அரியூர், திருக்கை, பள்ளியாண்டூர் மற்றும் கோழிப்பட்டு வழியாக மல்லிகைப்பட்டு வரை செல்லத்தக்க வகையில் ஜீப் வண்டித் தடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வினா 24.—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதியில் திருக்கோவிலூரிலிருந்து அருமலை பரனூர், வீர சோழபுரம், ஆற்காடு, கடலூர், ஆயந்தூர் வழியாக மினி பஸ்விடக்கோரி பொதுமக்கள் கொடுத்துள்ள மனுக்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை

திருக்கோவிலூரிலிருந்து, அரகண்டநல்லூர், வி. புதூர், கொண்டூர், வீரசோழபுரம், ஆற்காடு, அ. கடலூர், ஆயந்தூர் மற்றும் மாம்பழப்பட்டு வழியாக கல்பட்டுவரை செல்வதற்கு புதிய ஜீப் வண்டித்தடம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. வி. புதூரிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அருமலை வரை ஏற்கனவே ஜீப் வண்டி ஒன்று ஓடிக் கொண்டிருக்கிறது.

## செம்பரம்பாக்கம் அரசினர் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலை.

வினா 25.—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கிராமத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் செம்பரம்பாக்கத்தில் உள்ள அரசினர் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலையில் 1975 மார்ச்சு முதல் 1977 மார்ச்சு 30 வரையிலும் தயாரிக்கப்பட்ட செங்கற்களின் மதிப்பு என்ன ஆண்டு வாரியாக?

(ஆ) விற்பனை செய்யப்பட்ட செங்கற்கள் முறையே வருட வாரியாக எவ்வளவு?

(இ) உடைந்து சிதறிய செங்கற்களை ஏலம் விட்ட வகையிலும் மற்ற முறையிலும் வருடவாரியாக கிடைத்த வருவாய் எவ்வளவு?

(ஈ) இதை விஸ்தரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

விடை.

அரசினர் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட செங்கற்களின் மதிப்பு பின்வருமாறு:

(அ) 1975–76-ல் ரூ. 11.26 இலட்சம்.
1976–77-ல் ரூ. 10.38 இலட்சம்.

(ஆ) 1975–76-ல் ரூ. 84.77 இலட்சம் செங்கற்கள்.
1976–77-ல் ரூ. 45.50 இலட்சம் செங்கற்கள்.

(இ) 1975–76-ல் ரூ. 10,038.74
1976–77-ல் ரூ. 11,661.41.

(ஈ) இந்த நிறுவனத்தில் நட்டத்தைக் குறைக்கும் வகையில் செங்கற்களின் உற்பத்தியைப் பெருக்கவும் தட்டை ஓடுகள் போன்ற மாற்றுப் பொருள்களைத் தயாரிக்கவும் வேண்டிய மாற்றங்களைச் செய்வது பற்றிய செயற்குறிப்புகள் நிறுவனத்தின் பரிசீலனையில் உள்ளன.



## திருவலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

வினா 26.—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு தல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை ளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருவலம் கூட்டுறவு சர்க் ரை ஆலைக்கு எந்திரங்கள், ஆரம்பத்திலிருந்து எவ்வளவு தாகைக்கு எந்த கம்பெனியிடம் வாங்கப்பட்டன?

(ஆ) கட்டடங்கள் எவ்வளவு மதிப்பீட்டில் கட்டப்பட்டன?

(இ) விவசாயிகளிடமிருந்து பங்குப்பணம் எவ்வளவு சூலிக்கப்பட்டது?

(ஈ) சர்க்கரை நிறுவனத்திடமிருந்து எவ்வளவு கடன் ந்த வட்டி விகிதத்தில் வாங்கப்பட்டது வருடவாரியாக?

(உ) இக்கடன் குறிப்பிட்ட கால அளவுக்குள் அடைக்கப் டவேண்டும் என்ற நிபந்தனை ஏதேனும் உண்டா?

விடை—

(அ) வடஆற்காடு மாவட்டத்தில் குடியாத்தம் வட்டம் ம்முண்டி கிராமத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள வேலூர் கூட் றவு சர்க்கரை ஆலைக்குத் தேவையான இயந்திர தளவாடங் ள் மராட்டிய மாநிலத்தில் பூனுவுக்கு அருகாமையிலுள்ள ால்ச்சந்த் நகர் நிறுவனத்தாரிடம் வாங்கப்பட்டன. மேற்படி றுவனத்தாரிடம் செய்துகொண்ட ஒப்பந்தப்படி இயந்திர தனங்கள் விலை, அவற்றைப் பொறுத்தி ஓட்டித் தரப்படுவதற் ன தொகை, இயந்திரங்கள் செய்வதற்கான இதர சாமான் ின் விலையேற்றம் மற்றும் கூலி உயர்வு முதலிய இனங்களுக்கு செய்யப்பட வேண்டிய தொகை எல்லாமாகச் சேர்த்து இது ரை வாங்கி பொறுத்தப்பட்டுள்ள இயந்திரங்களின் மதிப்பு:—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| பிரதான உற்பத்தி இயந்திரங்களின் மதிப்பு | 438.31 |
| இயந்திரங்கள் அடித்தளம் மற்றும் கட்டுமானச் செலவு .. .. .. .. | 9.85 |
| | 448.16 |
| இன்னும் வாங்கப்படவேண்டியது .. | 2.14 |
| | 450.30 |
| பணிமனை, சோதனைச்சாலை, எடைபோடும் கருவி, குழாய் கிணறு மற்றும் தண்ணீர் ஆய்மைப்படுத்தல், அலுவலக கருவிகள் முதலியன. | 21.29 |
| ஆக மொத்தம் .. | 471.59 |

[1979 பிப்ரவரி 12

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (ஆ) ஆலைக்கட்டடங்களின் மதிப்பீடு— | |
| 1. தொழிற்சாலை கட்டடங்கள் .. .. | 47.89 |
| 2. சர்க்கரை வைப்புக் கட்டடம் .. .. | 17.00 |
| 3. தண்ணீர்த்தொட்டி, தண்ணீர் பாதைகள், கழிவுப் பாகு தேக்கத்தொட்டி, தண்ணீர் தெளிவிப்புக் குட்டை, தொழிலாளர் வருகைப் பதிவுக் கட்டிடம் முதலியன. | 11.13 |
| 4. தொழிலாளர் குடியிருப்புக் கட்டிடங்கள் .. | 26.64 |
| 5. அலுவலகக் கட்டடம் .. .. .. | 4.20 |
| ஆக மொத்தம் .. | 106.86 |

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (இ) விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட பங்குத்தொகை முழுவதும் செலுத்தப்பட்ட பங்குத் தொகை. | 13.44 |
| பகுதியாகச் செலுத்தப்பட்ட பங்குத்தொகை | 23.38 |
| ஆக மொத்தம் .. | 36.82 |

(ஈ) சர்க்கரை நிறுவனத்திடமிருந்து கடன் எதுவும் வாங்கப்படவில்லை.

(உ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## சேலத்திலுள்ள காசநோய் மருத்துவப் பிரிவு.

வினா 27.—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் அரசினர் மருத்துவமனையிலுள்ள காசநோய்ப்பிரிவை ஏற்காடு மலையடிவாரத்திற்கு மாற்றும் உத்தேசம் உண்டா?

விடை—

இல்லை.



1979 பிப்ரவரி 12]

## எட்டிமடை பேரூராட்சியில் பாலம் அமைத்தல்.

வினா 28—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், எட்டிமடை பேரூராட்சியில், குங்கா கவுண்டன் புதூருக்கும் சின்னையா கவுண்டன் புதூருக்கும் இடையில் உள்ள ஆற்றில் பாலம் கட்டும் செயல் குறிப்பு பரிசீலிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## சங்கராபரணி ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா 29—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் செஞ்சி-திண்டிவனம் சாலையில் உள்ள சங்கராபரணி ஆற்றின் குறுக்கே உள்ள பழுதடைந்த பாலத்தை புதுப்பிக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—

இல்லை.

## மேல் ஒலக்கூரில் அரசு மருத்துவமனை.

வினா 30—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், வல்லம் ஊராட்சி ஒன்றியத்தில் மேல் ஒலக்கூரில் அரசு மருத்துவமனை (Government Dispensary) ஒன்று ஏற்படுத்த முடிவு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது செயல்பட துவங்கும்?

விடை

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழாது.

[1979 பிப்ரவரி 12

## மலுமச்சம்பட்டி மாரியம்மன் கோவில் இடத்தில் ஆக்கிரமிப்பு.

வினா 31—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், மலுமச்சம்பட்டி மாரியம்மன் கோவில் இடத்தில் தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பொதுமக்கள் அகற்ற அரசை கோரியுள்ளதால் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம், மலுமச்சம்பட்டி மாரியம்மன் கோவில் இடத்தில் ஒரு செண்டு நிலத்தில் குடிசை வீடு கட்டி ஆக்ரமணம் செய்து இருந்த திருமதி. காந்தியம்மாள் தனது ஆக்ரமணத்தை அப்புறப்படுத்தி விட்டார். எனவே இப்பொழுது தனியார் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.

## திருப்பத்தூர் மாவட்டக் கல்வி அலுவலகக் கட்டடம்.

வினா 32—திரு. பி. சுந்தரம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு திருப்பத்தூர் மாவட்டக் 'கல்வி அலுவலகம் 1967 ஆம் ஆண்டில் திறந்தது முதல் வாடகைக் கட்டிடத்தில் நடைபெற்று வருகிறதா ?

(ஆ) அதற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இடமும் ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், கட்டிடம் கட்டி முடிக்க அரசு இடத்தில் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஆம். 339 நில அளவை எண் கொண்ட 12,463 சதுரஅடி புறம்போக்கு நிலம் திருப்பத்தூர் மாவட்டக் கல்வி அலுவலகக் கட்டிடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.



1979 பிப்ரவரி 12]

## பீம்பரப்பட்டி அணைத் திட்டம்.

வினா 33—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கம் வட்டம், பீம்பரப்பட்டி அணைத்திட்ட வேலை துவக்கப்பட்டு இடையில் நிறைவுறாமல் உள்ளதா ?

(ஆ) அத் திட்டத்தை நிறைவு செய்ய அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) அண்டு (ஆ) : பணி நடைபெற்று வரும் பாம்பனாற்றில் நீர் ஓடிக்கொண்டிருக்கும் காலத்தில் வேலை தொடர முடியாமல் தடைப்பட்டது. நீர்வரத்து நின்றதும், பணி தொடரப்பட்டு வேலையின் 50 சதவிகிதம் முடிவுற்றது. மீதமுள்ள வேலைகள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பிராட்வே பேருந்து நிலையத்திற்குள் பொருள்கள் மீதான வரி.

வினா 34—திரு. எஸ்.ஜே. இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 'சென்னை நகரில் உள்ள பிராட்வே பஸ் நிலையத்திற்குள் எடுத்துச் செல்லப்படும் மூட்டைகள் அல்லது கனமான சாமான்களுக்கு பிரயாணிகளிடம் வரி ஏதேனும் வசூலிக்கப்படுகிறதா ?

(ஆ) இந்த வசூல் நேரடியாகவோ அல்லது குத்தகை மூலமோ செய்யப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், இந்த வரி வசூல் ஆரம்பித்த நாளிலிருந்து வருட வாரியாக மாநகராட்சிக்கு வரும் வருமானம் என்ன?

(ஈ) இந்த வரியைக் குறைக்க அல்லது மாறுதல் செய்ய உத்தேசமுண்டா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ), (இ), (ஈ) } கேள்விகளுக்கு இடமில்லை.

[1979 பிப்ரவரி 12

## உணவுக்கலப்பட தடைச் சட்டத்தின் கீழ் தொடுக்கப்பட்ட வழக்குகள்.

வினா 35—திரு. என். திட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1977–78 ஆம் ஆண்டில் இதுவரை உணவுப் பொருட்களில் கலப்படம் செய்யப்பட்டதாக மாவட்ட வாரியாக எத்தனை வழக்குகள் தொடுக்கப்பட்டன ?

விடை—

உணவுக் கலப்பட தடைச் சட்டத்தின் கீழ் மாவட்ட வாரியாக தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை விபரம்:—

| மாவட்டத்தின் பெயர். | தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | |
|---|---|---|
| | 1977 ஜனவரி முதல் டிசம்பர் முடிய. | 1978 ஜனவரி முதல் மே முடிய. |
| (1) | (2) | (3) |
| 1. சென்னை நகரம் .. | 202 | 47 |
| 2. செங்கல்பட்டு .. .. | 446 | 182 |
| 3. தென்னாற்காடு .. | 462 | 191 |
| 4. தஞ்சாவூர் .. .. | 968 | 384 |
| 5. திருச்சிராப்பள்ளி .. | 795 | 356 |
| 6. புதுக்கோட்டை .. | 168 | 94 |
| 7. மதுரை .. .. | 997 | 376 |
| 8. இராமநாதபுரம் .. | 182 | 81 |
| 9. திருநெல்வேலி .. | 998 | 393 |
| 10. கன்னியாகுமரி .. | 58 | 12 |
| 11. வடஆற்காடு .. | 298 | 126 |
| 12. சேலம் .. .. | 913 | 301 |
| 13. தர்மபுரி .. .. | 47 | 14 |
| 14. கோயம்புத்தூர் .. | 490 | 175 |
| 15. நீலகிரி .. .. | 104 | 48 |
| மொத்தம் .. | 7,128 | 2,780 |



1979 பிப்ரவரி 12]

## மினி சினிமா அரங்குகள்.

வினா 36—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1977–78 ஆம் ஆண்டில் இதுவரை எத்தனை மினி சினிமா தியேட்டர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது ? மாவட்ட வாரியாக ?

விடை—

1977–78 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நான்கு மினி சினிமா அரங்குகளுக்கும், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒன்றுக்கும், மதுரை மாவட்டத்தில் ஒன்றுக்கும் தடையிலாச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு திரையரங்கு கூட இதுவரை கட்டி முடிக்கப்பட்டு, உரிமம் வழங்கப்படவில்லை.

## பவானி ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா 37—திரு. சு. பழனிச்சாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மேட்டுபாளையத்தில் பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்படும் பாலவேலை எப்போது முடிவடையும் ?

விடை—

ஒப்பந்த நிபந்தனைகளின்படி இவ்வேலை 1979-ம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டும்.

## காரமடை ஒன்றியத்தில் புதிய பாலங்கள்.

வினா 38—திரு. சு. பழனிச்சாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) காரமடை யூனியன், தோளம்பாளையம் அரசு சாலையிலும், பக்கத்தூர் ஊராட்சி ஒன்றிய சாலையிலும் உள்ள பள்ளங்களில் பாலங்கள் கட்டுவதற்கு செயற்குறிப்புகள் உண்டா?

(ஆ) ஆம், எனில் அவ்வேலை எப்போது துவங்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

ஏலாக்குறிச்சி-தூத்தூர் சாலை.

வினா 39— திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஏலாக்குறிச்சியிலிருந்து தூத்தூர் வரை ரூ. 10 லட்சம் மதிப்பீட்டில் கிராம சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சாலை அமைக்க அனுமதி கோரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்பட உள்ளதா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

தஞ்சை-சென்னை விரைவுப் பேருந்துப் பணி.

வினா 40 :— திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;—

தஞ்சைக்கும் சென்னைக்கும் இடையே திருமானூர், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், ஸ்ரீமுஷ்ணம் வழியாக விரைவு பேருந்து விடக்கோரும் பொதுமக்கள் கொடுத்த மனுமீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

விடை—

இந்தக் கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, தஞ்சாவூருக்கும் சென்னைக்கும் இடையே ஜெயங்கொண்டம் வழியாக 5—8—1978 முதல் ஒரு விரைவுப் பேருந்து விடப்பட்டுள்ளது.



தென்னாற்காடு மாவட்டத்தில் இரத்த சேமிப்பு நிலையங்கள்.

வினா 41— திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் எத்தனை மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு கிடங்கு (Blood Bank) உள்ளது ?

(ஆ) கள்ளக்குறிச்சி பொது மருத்துவமனையில் அத்திட்டம் உண்டா?.

(இ) இல்லை என்றால், இத்திட்டத்தை அங்கு நிறைவேற்ற உத்தேசம் உண்டா?

விடை

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கடலூர், விழுப்புரம், திண்டிவனம் ஆகிய ஊர்களிலுள்ள அரசு மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு கிடங்குகள் உள்ளன. சிதம்பரத்திலுள்ள அரசு மருத்துவ மனையிலும் இரத்த சேமிப்பு கிடங்கு அமைத்திட அண்மையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) & (இ): இரத்தசேமிப்பு கிடங்கிற்கு போதிய கட்டட வசதியும் தண்ணீர் வசதியும் இல்லாத காரணத்தால், இந்த வசதிகள் செய்தவுடன்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற பரிசீலிக்கப்படும்.

சாக்கான்குடி காலனி மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டு மனைகள்.

வினா 42 — திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், கிரபாளையம் யூனியன் சாக்கான்குடி காலனி மக்களுக்கு வீடுகட்ட வழங்கப்பட்ட இடம் பள்ளமாக உள்ளதால் அதை சரிசெய்ய உதவித் தொகை கோரி அரசுக்கு மனு ஏதும் வந்துள்ளதா?

விடை

தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், கீரப்பாளையம் யூனியன் சாக்காங்குடி காலனி மக்களுக்கு வீடுகட்ட வழங்கப்பட்ட இடம் பள்ளமாக உள்ளதால் அதை சரிசெய்ய உதவித் தொகை கோரி விண்ணப்பங்கள் எதுவும் இதுவரை அரசுக்கு வரவில்லை.

[1979 பிப்ரவரி 12

## கீரபாளையம் ஒன்றிய அரிசனக் குடியிருப்புகள்.

வினா 43—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், கீரபாளையம் யூனியன், குச்சிபாளையம், புளியங்குடி ஆகிய இரண்டு காலனி கிராமங்களுக்கும் சுடுகாட்டுப்பாதை இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதன்மேல் நடவடிக்கை எடுக்கப் பட்டதா?

விடை

(அ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், கீரபாளையம் யூனியன், குச்சிபாளையம், புளியங்குடி ஆகிய இரண்டு கிராமங்களிலுள்ள காலனிகளிலிருந்து சுடுகாட்டிற்குச் செல்ல பாதைகள் இல்லை என்பதை அரசு அறியும்.

(ஆ) குச்சிபாளையம் காலனியிலிருந்து சுடுகாட்டிற்குச் செல்ல பாதை அமைக்க நில ஆர்சிதம் செய்வதற்கான கருத்துரு தென்னாற்காடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது. புளியங்குடி காலனியிலிருந்து சுடுகாட்டிற்குச் செல்ல பாதை அமைக்க நில ஆர்சித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சிதம்பரம் அரிசன நல தனி தாசில்தார் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார்.

வினா 44—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா .—

(அ) தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், கீரபாளையம் யூனியன் குச்சிபாளையம், புளியங்குடி காலனி மக்களுக்கு பாதை வசதி இல்லை என்பது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை

(அ) புளியங்குடி அரிசனக் காலனிக்கு செல்லக்கூடிய நல்ல நிலையில் ஒரு பாதை இருக்கிறது. குச்சிபாளையம் கிராமத்திலிருந்து அரிசனக் காலனிக்குச் செல்ல பாதை இல்லை.

(ஆ) குச்சிபாளையம் அரிசனக் காலனிக்கு பாதையமைக்க வேண்டிய நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



1979 பிப்ரவரி 12]

## விளக்குடி-மணலி சாலைமேம்பாடு திட்டம்.

வினா 45—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருத்துறைப்பூண்டி தாலூகா விளக்குடியிலிருந்து மணலி செல்லும் சாலையினை மேம்பாடு செய்ய அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை

இல்லை.

## பாமணி-கள்ளிமேடு சாலை மேம்பாடு.

வினா 46—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருத்துறைப்பூண்டி தாலூகா பாமணியிலிருந்து கள்ளிமேடு செல்லும் சாலையை மேம்பாடு செய்ய அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை

இல்லை.

## பாலங்கள்

வினா 47—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருத்துறைப்பூண்டி தாலூகா பாண்டியிலிருந்து ஆதிரங்கம் செல்லும் சாலையில் வளவன் ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை

பாண்டியிலிருந்து ஆதிரங்கம் செல்லும் சாலையில் வளவன் ஆற்றின் குறுக்கே ரூ. 70,000 செலவில் ஒரு பாலம் கட்டிக் கொள்ள திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு ஊரக வளர்ச்சி இயக்குநர் அனுமதி வழங்கியுள்ளார்.

<u>வினா 48—திரு. பொ. உத்திராபதி</u> : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருத்துறைப்பூண்டியிலிருந்து உம்பளச்சேரி வழியாக கள்ளிமேடு செல்லும் ரோட்டில் கொருக்கை, தலைக்காடுக்கு செல்ல அடப்பாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

<u>விடை</u>

திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றிய உபரி நிதியிலிருந்து ரூ. 1,50,000 செலவில் அடப்பாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்ட ஊராட்சி ஒன்றியத்திற்கு ஊரக வளர்ச்சி இயக்குநர் அனுமதி வழங்கியுள்ளார்.

<u>வினா 49—திரு. பொ. உத்திராபதி</u> : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருத்துறைப்பூண்டி - வேதாரண்யம் ரோட்டிலிருந்து, ஆதிலிங்கம் பஞ்சாயத்து கிராமமான நாகலுடையான் இருப்பு கிராமத்திற்கு முள்ளி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா ?

<u>விடை</u>

இல்லை.

<u>முள்ளியாற்றின் குறுக்கே பாலம்.</u>

<u>வினா 50—திரு. பொ. உத்திராபதி</u> : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

திருத்துறைப்பூண்டி பேரூராட்சி 1 ஆவது வார்டு மன்னார்குடி ரோட்டிலிருந்து வரம்பியம் பஞ்சாயத்து வீட்டுக்கட்டி கிராமத்திற்கு குறுக்குப் பாதை அமைக்கும் வகையில் முள்ளியாற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா ?

<u>விடை</u>

இல்லை.





<u>திருத்துறைப்பூண்டி வட்டத்தில் இறைவைப் பாசனத் திட்டம்.</u>

<u>வினா 51—திரு. பொ. உத்திராபதி</u> : மாண்புமிகு வேளாண்மை-நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

முத்துப்பேட்டை வட்டாரத்தைச் சேர்ந்த உப்பூர் கிராமத்திற்கு இறைவை நீர்ப்பாசன வசதி கோரி அரசு கவனத்திற்கு மனுக்கள் வந்துள்ளனவா ?

<u>விடை</u>

திருத்துறைபூண்டி தாலுக்கா, உப்பூர் கிராமத்தில் இறைவை நீர்ப்பாசனம் அளிக்கும் திட்டத்திற்கான ஆய்வு செய்வதற்கு முன்பு உபரி நீர் இருக்கிறதா இல்லையா என்று மதிப்பீடு செய்த பிறகே விரிவான திட்டமும் மதிப்பீடும் தயாரிக்கப்படும். அதனால் மூன்று பருவங்களின் மழை அளவுகளை பார்வையிட்ட பிறகு உபரி நீரை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேற்சொன்ன குறிப்புரைகளை கண்டறிந்த பிறகு கண்காணிப்பு பொறியாளர் விரிவான அறிக்கை அனுப்பவேண்டுமென்று அறிவுரை கூறப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்பட இயலக்கூடியதாக இருந்தால் மட்டுமே அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>வினா 52—திரு. பொ. உத்திராபதி</u> : மாண்புமிகு வேளாண்மை-நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருத்துறைப்பூண்டி தாலுக்கா 107-ஏ நம்பர் மேல தொண்டியக்காடு கிராமத்திற்கு இறைவை நீர்ப் பாசனம் அளிக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா ?

<u>விடை</u>

திருத்துறைப்பூண்டி தாலுக்கா 107-ஏ நம்பர், மேலத்தொண்டியக்காடு கிராமத்திற்கு இறைவை நீர்ப்பாசனம் அளிக்க முன்நிலை ஆய்வு நடைபெற்று வருகிறது. போதுமான அளவு நீர்வரத்து, மற்றும் விவசாயத்திற்கு நிலம் தகுதியுடையனவா என்பது பற்றிய கருத்துரையை மேற்கொள்ளுமாறு ஸ்தல அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். இதன் முழு விபரம் தெரிந்த பிறகுதான் மேல்நடவடிக்கை எடுக்க முடியும்.

[1979 பிப்ரவரி 12

## திருத்துறைப்பூண்டி—பரவாக்கோட்டை சாலை.

வினா 53—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திருத்துறைப்பூண்டியிலிருந்து பரவாக்கோட்டை செல்லும் சாலையை மேம்பாடு செய்து வடசேரி வரை பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை

இல்லை.

## காடுகுட்டை வாய்க்கால் திட்டம்.

வினா 54—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மதுக்கரை ஒன்றியம் செட்டிபாளையம் காடுகுட்டை வாய்க்கால் திட்டம் சரிவர நிறைவேற்றப்படாததால் செட்டிப்பாளையம் குட்டைக்கு தண்ணீர் வரவில்லையென்று 5-11-1977-ல் பொதுமக்கள் மனு கொடுத்தனரா ?

(ஆ) ஆம் எனில், அந்த வாய்க்காலை சீர்ப்படுத்த எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை

(அ) மற்றும் (ஆ) பெரும் மழைக்காலம் தவிர்த்து இதர காலங்களில் செட்டிபாளையம் குட்டைக்கு தண்ணீர் எட்டுவதில்லை. வாய்க்கால் மணல் கலந்த பூமியாதலினால் தண்ணீர் இடையிலேயே உறிஞ்சப்பட்டுவிடுகிறது. எல்லா காலத்திலும் குட்டைவரை தண்ணீர் எட்டச் செய்வது இயலவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கு தொலைபேசி வசதி.

வினா 55—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கோட்ட வளர்ச்சி அதிகாரிகளுக்கு (Divisional Development Officer) தொலைபேசி வசதி இல்லாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கு ஏதேனும் செயற்குறிப்பு உண்டா ?



1979 பிப்ரவரி 12]

விடை

(அ) மற்றும் (ஆ) கோட்ட வளர்ச்சி அலுவலகங்களுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுப்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதுவரை 19 கோட்ட வளர்ச்சி அலுவலகங்களுக்கு இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

## திருமணி ஊராட்சியில் உள்ள பாலம்.

வினா 56—திரு. பி. சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

செய்யாறு பஞ்சாயத்து யூனியனில் திருமணி ஊராட்சி அருகில் உள்ள குறுகிய நெடுஞ்சாலைப் பாலத்தை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை

இல்லை.

## கிளியனூரில் அரசு உயர்நிலைப் பள்ளி.

வினா 57— திரு. எம். பரமசிவம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

வானூர் ஒன்றியம், கிளியனூர் கிராமத்திற்கு அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்று அமைத்துத்தர கோரப்பட்டுள்ளதன்மேல் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை

1978–79 ஆம் கல்வி ஆண்டில் 6 முதல் 9 வரை வகுப்புகளோடு புதிய அரசு உயர்நிலைப் பள்ளி ஒன்று திறக்க அரசு ஆணை (நிலை) எண் 1205, கல்வித்துறை, நாள் 3–7–78-ல் அனுமதி அளித்துள்ளது.

[1979 பிப்ரவரி 12

## வாலாஜா—வள்ளுவம்பாக்கம் சாலையைத் தார்ச்சாலையாக்கல்.

வினா 58—திரு. துரைமுருகன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் வாலாஜா நகரில் இருந்து வள்ளுவம்பாக்கம் செல்லும் சாலையை தார் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## மகாதேவ மலைச்சாலையை செப்பனிடல்.

வினா 59—திரு. துரைமுருகன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் குடியாத்தம் வட்டம் மகாதேவ மலைக்குச் செல்லும் சாலை பழுதுபட்ட நிலையில் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றைச் செப்பனிட அரசுக்கு உத்தேசம் உண்டா?

விடை

(அ) ஆம்.

(ஆ) இச் சாலையில் ஆங்காங்கே குழி பள்ளங்கள் உள்ளது. இவ்வாறு பழுது ஏற்பட்டுள்ள இடங்களில் கருங்கற்கள் பரப்பி தார்போடும் வேலை ரூ. 12,500 மதிப்பீட்டில் இவ்வாண்டிலேயே வருடாந்திர பராமரிப்பு நிதியில் மேற்கொள்ளப்படும். இப்பணி முடிவடைந்தபின் மேற்படி சாலை உபயோகத்திற்கு ஏற்றவாறு அமையும்.



1979 பிப்ரவரி 12]

## மேல்பாடி அரிசனக் காலனிக்கு சாலை அமைப்பு.

வினா 60—திரு. துரைமுருகன் : மாண்புமிகு அரிசனநலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜா வட்டம், மேல்பாடி அரிசனக் காலனி சாலையின்றி இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்குச் சாலை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

விடை

(அ) ஆம்.

(ஆ) வாலாஜா வட்டம், மேல்பாடி அரிசனக் காலனிக்கு ஒரு சாலையைப் போடத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுக் இருக்கிறது.

## தேம்பள்ளி அரிசனக் குடியிருப்புக்குச் சாலை வசதிகள்.

வினா 61—திரு. துரைமுருகன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், வாலாசா வட்டம், தேம்பள்ளி காலனிக்கு சாலை போடும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை

(அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டம், தேம்பள்ளி காலனி மக்களின் வேண்டுகோளின்படி பொன்னை திருவலத்திலிருந்து தேம்பள்ளி அரிசன காலனிக்கு நடைபாதை வசதி செய்யும் பொருட்டுத் தேவையான நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்திய பின் பாதை வசதி செய்து தரப்படும்.

## போளூர் வட்டத்தில் அரிசனங்களுக்கு வீடுகள்.

வினா 62—திரு. கே. ஜே. சுப்பிரமணியம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பாண்டில் வடாற்காடு மாவட்டம், போளூர் வட்டத்தில் அரிசன மக்களுக்கு எத்தனை வீடுகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது?

(ஆ) எத்தனை பேருக்கு வீடு கட்டப் பட்டா மனைகள் வழங்க உத்தேசம் உள்ளது ?

விடை

(அ) நடப்பாண்டில் எந்தெந்த கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படவேண்டும் என இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

(ஆ) போளூர் வட்டத்தில் நடப்பாண்டில் (1978–79) 223 பேர்களுக்கு வீடு கட்ட பட்டா மனைகள் வழங்க உத்தேசம் உள்ளது.

## கமண்டல ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா 63—திரு. கே. ஜே. சுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், போளூர் வட்டம், படவேடு ரேணுகாம்பாள் சன்னதிக்கு போகும் வழியில் உள்ள கமண்டல ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அரசிடம் திட்டம் ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும்?

விடை

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



## வரதமாநதி அணையிலிருந்து கண்மாய்களுக்குத் தண்ணீர்.

வினா 64—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டத்திலுள்ள வரதமாநதி அணையிலிருந்து எத்தனை கண்மாய்களுக்கு தண்ணீர் விடப்படுகிறது?

(ஆ) மேற்கொண்டு புதிய குளங்களுக்கு தண்ணீர் விடக் கோரி அப்பகுதி மக்களிடம் இருந்து கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) இப்போது எத்தனை ஏக்கர் பாசன வசதி பெறுகிறது?

விடை

(அ) வரதமாநதி திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளபடி 20 குளங்களுக்கு தண்ணீர் விடப்படுகிறது.

(ஆ) மேற்கொண்டு புதிய குளங்களுக்குத் தண்ணீர் விடக் கோரியும் புதிய கால்வாய் வெட்டக் கோரியும் பொது மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளன. இத்திட்டத்தில் பழைய பாசன பகுதிகளுக்கு தண்ணீர் வினியோகம் செய்வதற்கு மட்டுமே வழி செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த அணையின் நீர்பிடிப்பு பகுதியில் இருந்து கிடைக்கும் மொத்த நீரின் அளவான ·722 மி.கன அடி தற்போது பழனி தாலூகாவில் உறுதி செய்யப்பட்டுள்ள பழைய ஆயக்கட்டு நிலங்கள் நீர்ப்பாசன வசதி பெற மட்டும் போதுமானதாக உள்ளது. ஆகவே இத்திட்டத்தில் மேற்கொண்டு ஆயக்கட்டு விஸ்தரிப்பு செய்வதற்கு வாய்ப்புகள் இல்லை.

(இ) 1977–78 ஆம் ஆண்டில் 5,747.38 ஏக்கர் நிலத்தில் முதல்போக பயிறும், 1,105.41 ஏக்கர் நிலத்தில் இரண்டாம் போக பயிறும், இத்திட்டத்தால் பயன் அடைந்தன.

## பேரம்பாக்கம் உயர்நிலைப் பள்ளிக்கு விஞ்ஞானக்கூடம்.

வினா 65—திரு. ஆர். சண்முகம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேரம்பாக்கம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் விஞ்ஞானக்கூடம் அமைப்பது பற்றி அரசிடம் குறிப்பில் உள்ளதா ?

[1979 பிப்ரவரி 12

விடை

பேரம்பாக்கத்திலுள்ள அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக்கூடம் ஒன்று கட்டித் தர 1974–75-ம் ஆண்டில் ஏற்பளிக்கப்பட்டது. இக் கட்டடம் கட்டுவதற்கான ஒப்பந்தத்துக்கு செங்கல்பட்டு மேற்பார்வை பொறியாளரின் ஒப்புதல் பெறப்பட்டு மேற்படி பணி விரைவில் ஆரம்பிக்கப்படும்.

## பெரிய சோலைநாடு காணி பாதை பழுது பார்த்தல்.

வினா 66—திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973–74 நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியில் புதிதாக போடப்பட்ட பெரிய சோலை நாடு காணி பாதை பழுது பார்க்கப்படாமல் உள்ளதா ?

(ஆ) அந்தப் பாதையை புதுப்பிக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

விடை

(அ) & (ஆ) ஆம்.

இச் சாலையை மேம்பாடு செய்ய வேண்டுமானால் இச்சாலையில் கி.மீ. 3/10-ல் பாண்டியாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்ட வேண்டும். இச்சாலை மேம்பாடு செய்து சாலையில் குறுக்கிடும் பாண்டியாற்றில் ஒரு பாலமும் கட்ட தோராயமாக மொத்தம் ரூ. 12.00 லட்சம் தேவைப்படுகிறது. இப்பணிகள் தற்போது எவ்வித அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திலும் இடம் பெறவில்லை. எனவே, இச்சாலையின் மேம்பாட்டுப் பணிகளை இனி வரும் திட்டக்கால வேலைகளின் பட்டியலில் சேர்த்து, நிதி வளம், வேலையின் முக்கியத்துவம் ஆகியவைகளை கருத்திற் கொண்டு பரிசீலனை செய்யப்படவேண்டும்.

## நாங்குனேரி பகுதியில் குடி தண்ணீர் வழங்கல்.

வினா 67—திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், நாங்குனேரி பகுதியில் நான்கு ஊராட்சிகளில் குடிநீர் உப்பாக உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?



1979 பிப்ரவரி 12]

விடை

(அ) ஆம்.

(ஆ) குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மாற்று ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது வரை இரண்டு கிணறுகள் அமைக்கப்பட்டுவிட்டன.

## கிராமங்களில் மறுநில அளவை.

வினா 68—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 40 வருடங்களுக்கு மேல் நில அளவை செய்யப்பட்ட கிராமங்களை மறு நில அளவை (ரீ-சர்வே) செய்யலாம் என்று விதி உள்ளதா ?.

(ஆ) அதன்படி ரீ-சர்வே செய்ய வேண்டிய கிராமங்களை ரீ-சர்வே செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

விடை

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## நிலவரி வருவாய் நிலுவை.

வினா 69—திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் நிலவரி வருவாய் நிலுவைகள் 1—4—1973 முதல் 31—3—1976 வரை எவ்வளவு உள்ளது ?

(ஆ) எந்த மாவட்டத்தில் பெரும் அளவு நிலுவை உள்ளது ?

(இ) அதன் மீது அரசு நடவடிக்கை என்ன ?

விடை

(அ) தமிழகம் முழுவதும் நிலவரி வருவாய் நிலுவைகள் 1—4—1973 முதல் 31—3—1976 வரை ரூபாய் 2,74,43,172 ஆகும்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெரும் அளவு நிலுவை உள்ளது.

[1979 பிப்ரவரி 12

(இ) பசலி 1384, 1385 ஆண்டுகளில் தமிழ் நாட்டில் வறட்சியின் காரணமாக நிலவரி வசூல்கள் பல பகுதிகளில் தள்ளி வைக்கப்பட்டது. நிலுவை வசூல்கள் இரு வார அறிக்கைகள், மாத அறிக்கைகள் மூலம், வருவாய் வாரியம் ஆய்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவ்வப்போது விரைவில் வசூல் செய்ய வேண்டிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 1387 ஆம் பசலி ஆண்டில் நிலவரி கடன் பாக்கிகளை வசூல் செய்ய கீழ்க்கண்ட மாவட்டங்களில் தனி அதிகாரிகளும் அவர்களுக்கு உதவியாக வருவாய் ஆய்வாளர்களும் மார்ச் முதல் ஜூன் மாதம் வரை நியமிக்கப்பட்டனர் :

மாவட்டங்கள் :

வட ஆற்காடு

தர்மபுரி

இராமநாதபுரம்

சேலம்

தென் ஆற்காடு

திருநெல்வேலி

செங்கல்பட்டு

கோயம்புத்தூர்

மதுரை

கடந்த நவம்பர்-டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்ட கிராமங்களில் உள்ள நிலவரி நிலுவைத் தொகையை 1387 ஆம் பசலி ஆண்டில் வசூல் செய்ய வேண்டாம் எனவும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் ஐப்தி முதலிய நடவடிக்கைகள் மூலம் நிலவரி, கடன் முதலியவைகளை சிறு விவசாயிகளிடமிருந்து வசூலிக்கக்கூடாதென்று அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்திரவு பிறப்பித்துள்ளது. அடுத்த 1388 பசலி ஆண்டில் நல்ல வசூல் எதிர்பார்க்கப்படுகிறது.



1979 பிப்ரவரி 12]

## திருமயம் உயர் நிலைப் பள்ளிக்கு இடவசதி.

வினா 70 திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு பக்கத்தில் உள்ள காலி இடத்தை விளையாட்டுத் திடலாக ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை

(அ) ஆம்.

(ஆ) பள்ளிக்கு அருகில் உள்ள சுமார் 3.5 ஏக்கர் நிலத்தை பள்ளிக்கு மாற்றம் செய்யும் வகையில் திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் பள்ளிக் கல்வி இயக்குநர் தொடர்பு கொண்டு மேல் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

## நத்தம் தொகுதியில் புதிய அணைக்கட்டுத் திட்டங்கள்.

வினா 71 திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, அழகர்மலையில் வேம்பரளி பக்கம் ஓர் அணையும், தேத்தாம்பட்டி பக்கத்தில் ஓர் அணையும், புதுக்கோட்டைப் பக்கத்தில் ஓர் அணையும், கரந்தமலையில் மணக்காட்டூர் பக்கம் அய்யனூர் ஓடையில் ஓர் அணையும் கட்ட அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அது குறித்த பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

விடை

(அ) "வேம்பரளி, தேத்தாம்பட்டி, புதுக்கோட்டை, மணக்காட்டூர் ஆகிய இடங்களில் அணைக்கட்டும் செயற்குறிப்புகள் ஏதும் அரசிடம் இல்லை".

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## கால்வேஹல்லி அரிசனங்களுக்கு மனைப்பட்டாக்கள் வழங்கல்.

வினா 72—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தர்மபுரி மாவட்டம், காவேரிப்பட்டணம் தொகுதி கால்வேஹல்லி கிராமத்திலுள்ள அரிசனங்களுக்கு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதா ?

விடை

1976-77-ம் ஆண்டில் சத்தேரி கிராம மதுரா கால்வேஹல்லியில் 7 அரிசனக் குடும்பங்களுக்கு வீட்டுமனைக்கான பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. மீதியுள்ள 8 குடும்பங்களுக்கு பட்டாக்கள் கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## நகராட்சிப் பகுதிகளில் கால்நடைகள் வளர்க்க அனுமதி.

வினா 73—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பகுதிகளில் நாய்களுக்கு லைசென்ஸ் கட்டணம் வசூலிக்கப்படுவது போல ஆடு, மாடு, பன்றிகளுக்கும் வசூலிக்கப்படுகிறதா ?

விடை

ஆம்.

## தமிழ் நாட்டில் முத்துக்குளிப்பு.

வினா 74—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் எந்தெந்த பகுதிகளில் முத்துக்கள் கிடைக்கின்றன ?

(ஆ) முத்துக் குளிப்பவர்களுக்கு அரசு என்னென்ன சலுகைகள் அளித்துள்ளது ?

விடை

(அ) தமிழ்நாட்டில், மன்னார் வளைகுடா பகுதியில் கீழக்கரை, தூத்துக்குடி, குமரி ஆகிய மூன்று பிரிவுகளிலும் முத்துக்கள் கிடைக்கின்றன.



(ஆ) (1) சுறா மீன் கடி போன்றவைகளால், காயமடையும் முத்துக் குளித் தொழிலாளர்கள், தொழிலுக்கு வரமுடியாத நாட்களில் ஏற்படும் இழப்பை சரிக்கட்டும் வகையில், காயங்களின் தன்மைக்கேற்றபடி அரசு உதவித் தொகைகளை அளிக்கிறது.

(2) முத்துக்குளித் தொழிலாளி, முத்தெடுக்கும்போது அல்லது அதன் காரணமாக இறப்பின், மதக் குழுக்களின் முத்தொகுதிகளுக்கு சிறப்புப் பிரார்த்தனைகள் நடத்த தலா ரூ. 15 வீதம் ரூ. 45 சமய நன்கொடைகள் அளிக்கப்படுகிறது. இத்துடன், இறந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு, ஈமச்சடங்கு செலவிற்காக ரூ. 50 அளிக்கப்படுகிறது.

(3) தொழிலாளர் நஷ்டஈடு சட்டத்தின்படி, ஒரு தொழிலாளர் முத்துக் குளிக்கும் பொழுதோ அல்லது அதன் காரணமாகவோ இறக்க நேர்ந்தால், அத்தொழிலாளியின் சராசரி ஊதியத்தை அடிப்படையாகக் கொண்டு, அரசின் அனுமதியின் பேரில் அத்தொழிலாளியின் வாரிசுதாரர்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

(4) முத்துக்குளிப்பவர்களுடைய குடிசைகள், தற்செயலாக ஏற்படும் தீ விபத்தால் எரிந்து அல்லது சேதமடையும் பொழுது, நிவாரணம் தரப்படுகிறது. தொற்று நோய்கள் தோன்றும் பொழுதும் சுகாதார வசதிகள் செய்து தரப்படுகிறது. முகாம்களில் இறக்கும் அனாதை முத்துக் குளிப்பவர்களின் ஈமக்கிரியைகள் செய்யத் தேவையான பணமும் கொடுக்கப்படுகிறது. இதற்காக தமிழ்நாடு நிதி விதித் தொகுப்பின்படி மீனளத்துறை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

## தேவாலா கிராமத்தில் வீட்டு மனைகள் வழங்கல்.

வினா 75—திரு. கே. உச்சி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதி, தேவாலா என்ற கிராமத்தில் வீட்டு மனை கோரி மனுக்கள் வந்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அவை எத்தனை ?

(இ) வீட்டு மனைப் பட்டா எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது ?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) 550 மனுக்கள் வந்துள்ளன.

(இ) 279 பேர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்கூறியவைகள் விட்டுமனைகளே தவிர வீட்டு மனைப் பட்டாக்கள் அல்ல. நிலத்தீர்வை சம்பந்தமான பணிகள் முடிவடைந்தபின்னர் முறையான பட்டாக்கள் வழங்கமுடியும்.

### கூக்கல் ஊராட்சி பகுதியில் பாசனவசதி.

வினா 76—திரு. கே. உச்சி: மாண்புமிகு வேளாண்மை-நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றியம் கூக்கல் ஊராட்சியில் விவசாயம் செய்ய பாசன வசதிக்கோரி மனு ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) இந்த வினாவுக்கு இடமில்லை.

### உதகை கோத்தகிரி சாலையில் பாலம்.

வினா 77—திரு கே. உச்சி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகை ஊராட்சி ஒன்றியத்தையும் கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்தையும் இணைக்கும் கூக்கல் துறை—கோத்தகிரி பாதையின் குறுக்கே ஓடும் ஆற்றின்மேல் ஒரு பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது கட்டி முடிக்கப்படும்?

**விடை—**

(அ) & (ஆ) இவ்வேலைக்காக ரூ. 3.25 இலட்சத்திற்கு அரசு ஜூலை 1978-ல் ஒப்புதல் வழங்கியது. இதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளரால் இவ்வேலை கூடிய விரைவில் செயல்படுத்தப்படும்.



### கலசப்பாக்கம் தொகுதி ஒன்றியங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள்.

வினா 78—திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள ஒன்றியங்களில் எத்தனை ஊராட்சிகளுக்கு நடப்பு ஆண்டில் டெலிவிஷன் பெட்டி வழங்கும் திட்டம் உள்ளது?

(ஆ) எப்போது வழங்கப்படும்?

**விடை—**

(அ) கலசப்பாக்கம் தொகுதி 150 கி. மீட்டருக்கு அப்பால் உள்ளதாலும், அரசால் ஒப்பளிக்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகள் 100 கிலோ மீட்டருக்குள்ளேயே அமைக்கப்படுவதாலும், 100 கிலோ மீட்டருக்கு அப்பால், அப்பெட்டிகள் சரிவர இயங்க இயலாததாலும், இத்தொகுதிக்குத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கும் திட்டமே இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

### வள்ளிவாகை அரிசன காலனிக்கு சாலை

வினா 79—திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியம் வள்ளிவாகை அரிசன காலனிக்கு ரோடு போடும் திட்டம் அரசினிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அந்த திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(இ) எப்போது வேலை துவங்கும்?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) & (இ) வட ஆற்காடு மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியம், வள்ளிவாகை கிராமத்திலிருந்து அரிசன காலனிக்கு ரூ. 6,500 மதிப்பீட்டில் இணைப்புச் சாலை போட்டு முடிக்கப்பட்டு விட்டது.

[1979 பிப்ரவரி 12

## சத்துணவுத் திட்டம்.

வினா 80—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் சத்துணவுத் திட்டம் அமுல்படுத்தப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

வினா 81—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை ஊராட்சி ஒன்றியங்களில் சத்துணவு திட்டம் செயல்பட்டு வருகிறது?

(ஆ) எந்த அடிப்படையில் வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன?

விடை—

(அ) 33 ஒன்றியங்களில்.

(ஆ) பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலைப்பயிற்சி நிலையங்கள், கல்விக்கூடங்கள், சுகாதார நிலையங்கள் மற்றும் மகளிர் மன்றங்கள் இவற்றின் முழு ஒத்துழைப்பு, உதவி மற்றும் தேவையான மனித சக்தி இவை கிடைத்திடத்தக்க வாய்ப்பு—மற்றும் உள்ளூர் மக்களின் ஆர்வம்—இவற்றின் அடிப்படையில்தான் வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

## வேலூரிலுள்ள அண்ணா கலை அரங்கம்.

வினா 82—திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூரில் உள்ள அண்ணா திரையரங்கம் புதுப்பிக்கும் வேலை நடைபெற்று வருகிறதா?.

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படுகிறது?

(இ) எப்போது வேலை முடியும்?



1979 பிப்ரவரி 12]

விடை—(அ–இ)

வேலூரில் உள்ள அண்ணா கலை அரங்கம் ரூ. 2,49,590.00 செலவில் புதுப்பிக்கப்பட்டு 5–5–1978 அன்று மீண்டும் திறக்கப்பட்டது.

## கலசபாக்கம் தொகுதியில் குடிநீர் வசதி.

வினா 83—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் தொகுதியில் உப்புத் தண்ணீராக உள்ள கிராமங்கள் எத்தனை?

(ஆ) தண்ணீர் கிடைக்காத பாறை நிறைந்த கிராமங்கள் எத்தனை?

(இ) அந்த கிராமங்களுக்கு குடிநீர் வசதி அளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இரண்டு.

(ஆ) பதினொன்று.

(இ) கீழ்க்குப்பம் கிராமத்தில் இரண்டு குழாய்க் கிணறுகளும் வேடந்தோப்பு, குளிகாந்தெரு ஆகிய ஊர்களில் ஒவ்வொரு குழாய்க்கிணறும் அமைக்கப்பட்டுள்ளது. ஐம்பாமரத்தூர், முள்ளிப்பட்டு ஆகிய ஊர்களில் திறந்தவெளி கிணறுகளும் மற்ற இடங்களில் குழாய்க் கிணறுகளும் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## வடாற்காடு மாவட்டத்தில் உள்ள பள்ளிகள்,

வினா 84—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை பள்ளிகள் அரிசன நல இலாகாவால் நடத்தப்பட்டு வருகின்றன?

(ஆ) எத்தனை பள்ளிகள் நிரந்தர கட்டடத்தில் உள்ளவ?

[1979 பிப்ரவரி 12

விடை—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் மொத்தம் 163 பள்ளிகள் அரிசன நலத் துறையால் நடத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) அவற்றில் மூன்று பள்ளிகள் நீங்கலாக மற்றைய 160 பள்ளிகள் நிரந்தரக் கட்டிடத்தில் உள்ளன.

## கொளக்கரவாடி கிராம அரிசன மக்களுக்கு வீட்டு மனை.

வினா 85—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியம் கொளக்கரவாடி கிராம அரிசன மக்கள் வீட்டுமனை கேட்டு அரசுக்கு கோரிக்கை அனுப்பியுள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம். கொளக்கரவாடி கிராம அரிசனங்களிடமிருந்து வீட்டு மனைகள் கேட்டு விண்ணப்பம் அரிசன நல தனி தாசில்தார் அலுவலகத்தில் 4-2-1976 அன்று வரப்பெற்றது.

(ஆ) போளூர் அரிசன நல தனித் தாசில்தார் அதற்குரிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

## மேப்பத்துரை கிராம அரிசன மக்களுக்கு வீட்டு மனை.

வினா 86—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியம் மேப்பத்துரை கிராம அரிசன மக்கள் வீட்டு மனை கோரியுள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?



1979 பிப்ரவரி 12]

விடை :

(அ) மற்றும் (ஆ) துரிஞ்சாபுரம் ஒன்றியம் மேப்பத்துரை கிராமத்தில் உள்ள அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்க 4-3-1975-ல் 5.71 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு உள்ளது. இதில் 72 அரிசனங்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

## வள்ளிவாகை அரிசன காலனியில் நீர்த்தேக்கத்தொட்டி

வினா 87 : திரு. பெ.சு. திருவேங்கடம் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியம் வள்ளிவாகை அரிசன காலனியில் தரை மட்ட நீர்த்தேக்க தொட்டி கட்டப்பட்டு வேலை முடிவு பெறாமல் நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

(இ) இவ்வேலை எப்போது முடிவு பெறும் ?

விடை :

(அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டம் துரிஞ்சாபுரத்தைச் சேர்ந்த வள்ளிவாகை அரிசன காலனியில் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி கடக்கால் (தரை மட்டம்) வரை கட்டி முடிக்கப்பட்டது. 1975–76-ல் சிமெண்ட் தட்டுப்பாட்டின் காரணமாக இவ்வேலையை மேற்கொண்டு செய்யாமல் ரத்து செய்யப்பட்டது.

(இ) நடப்பாண்டில் (1978–79) இவ்வேலை ஒன்றிய பொது நிதியிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டு, அது இன்னும் ஆறு மாத காலத்திற்குள் முடிக்கப்படும்.

## சென்னையில் அரிசன நலத்துறைக்குச் சொந்தமான குடியிருப்புகள்.

வினா 88 : திரு. சு. பாலன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் அரிசன நலத்துறைக்குச் சொந்தமான குடியிருப்பு பகுதிகள் எத்தனை ?

(ஆ) அவை யாவை ?

(இ) அந்த இடத்தில் வாழும் மக்களுக்கு அவர்கள் வசிக்கும் இடத்தை பட்டா செய்து கொடுக்கும் திட்டம் உண்டா?

(ஈ) இது குறித்து மனுக்கள் ஏதேனும் வந்துள்ளனவா ?

[1979 பிப்ரவரி 12

விடை :

(அ) சென்னையில் அரிசன நலத் துறைக்குச் சொந்தமான குடியிருப்புகள் 24.

(ஆ) அவை பின்வருமாறு :—

1. அரசு பண்ணை காலனி
2. மங்களாபுரம் (தெற்கு மங்களாபுரம் மற்றும் ஜகனாதபுரம்)
3. பரமேஸ்வரன் நகர்
4. சுதந்தராபுரம்
5. கண்ட்ஸ் ரோடு
6. சிவராஜபுரம்
7. மீனாம்பாள்புரம்
8. கவிகுன்றம்
9. சாரதாபுரம்
10. கிண்டிரோடு (அடையார்)
11. சிரணிபுரம்
12. சைதாபேட்டை (கோடம்பாக்கம் புதூர்)
13. மல்லிகப்பூச்செட்
14. மீனாம்பாள் சிவராஜ நகர்
15. நேரு நகர்
16. குஜசாமி நகர் (சிவராஜபுரம் சுந்தராபுரம்)
17. கல்யாணபுரம்
18. ராஜா தோட்டம்
19. காந்திபுரம்
20. நேருஜி ஜோதி நகர்
21. ஏகாங்கிபுரம்
22. தேபர் நகர்
23. ஔவை புரம்
24. முத்திருளாண்டி அரிசனக் காலனி

(இ) இந்த இடங்களில் வாழும் மக்களுக்கு அவர்கள் வசிக்கும் இடத்தைப் பட்டா செய்து கொடுப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

(ஈ) இது குறித்து மனுக்கள் ஏதும் வரவில்லை.



1979 பிப்ரவரி 12]

புளியங்கால் ஓடை சீர் அமைப்பு.

வினா 89: திரு. எம். பரமசிவம் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மரக்காணம் ஒன்றியத்திலுள்ள புளியங்கால் ஓடை சீர் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திண்டிவனம்—பாண்டிச்சேரி சாலையினை அகலப்படுத்தல்.

வினா 90: திரு. எம். பரமசிவம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனத்திலிருந்து மரக்காணம் வழியாக பாண்டிச்சேரி செல்லும் சாலையினை அகலப்படுத்தும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

கள்ளக்குறிச்சித் தாலூகாவை இரண்டாகப் பிரித்தல்.

வினா 91: திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி தாலூகாவை கள்ளக்குறிச்சி தாலூகா என்றும் சங்கராபுரம் தாலூகா என்றும் பிரிக்கும் உத்தேசம் உண்டா ?

[1979 பிப்ரவரி 12

(ஆ) சங்கராபுரம், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளையும் கல்வராயன் மலைப்பகுதியையும் ஒன்றாக இணைத்து தனித் தாலூகாவாக அமைக்க முறையீடு ஏதும் வரப்பெற்றுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

விடை :

(அ) இல்லை.

(ஆ) திரு. துரை முத்துசாமி அவர்களிடமிருந்து 28-2-1978 தேதியிட்ட முறையீடு ஒன்று வரப்பெற்றது.

(இ) மாநிலம் முழுதும் மாவட்டங்கள், வட்டங்கள் ஆகியவற்றினைச் சீரமைக்கும்பொழுது கருதப்பட வேண்டியவற்றுள் இதுவுமொன்றாகும்.

## குடும்பநல துணை மையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள்.

**வினா 92 : திரு. துரை முத்துசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1977-78-ம் ஆண்டு வரை எத்தனை குடும்பநல துணை மையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்டது ?

(ஆ) இதுவரை எத்தனை கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன?

(இ) கட்டிய துணை நிலையங்களில் எத்தனை மையங்கள் இயங்குகின்றன?

விடை :

(அ) 1,395 கட்டடங்கள் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது.

(ஆ) 1,215 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

(இ) 1,212 கட்டடங்களில் செயல்படுகின்றன.



1979 பிப்ரவரி 12]

## சென்னை நகரில் வடிகால் குடிநீர்த் திட்டங்கள்.

**வினா 93 : திரு. மு. அரங்கநாதன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகர எல்லைக்குள் உள்ள 120 வட்டங்களில் எந்தெந்த வட்டங்களில் கழிவு நீர், வடிகால், குடிநீர்த் திட்டங்கள் அமைக்கப்படாமல் உள்ளன ?

(ஆ) அதற்குக் காரணம் என்ன ?

விடை :

(அ) & (ஆ) ஒரு சில தெருக்களையும் மாநகராட்சியுடன் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள சில பகுதிகளையும் தவிர்த்து எல்லா வட்டங்களிலும் வடிகால், குடிநீர்த் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அரும்பாக்கம்—அமிஞ்சிக்கரைத் திட்டம், கிண்டி—வேளச்சேரித் திட்டம் வேலைகள் தொடங்கப்பெற்று நடந்து வருகின்றன. இவை நிறைவேற்றப்பட்டவுடன் சென்னை மாநகரின் எல்லா பகுதிகளும் பயன்பெற்றுவிடும்.

## மோத்தக்கல் வேலூர் மினி பஸ் போக்குவரத்து.

**வினா 94: திரு. கே. ஜே. சுப்பிரமணியம் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம், போளூர் தொகுதி, கனியம்பாடி வட்டாரத்தைச் சேர்ந்த மோத்தக்கல், அருணகிரி பேட்டை, கம்பசமுத்திரம் காலனி, கம்மவன்பேட்டை வழியாக வேலூருக்கு மினி பஸ் வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை :

வேலூரிலிருந்து, பாகாயம் நாயக்கனேரி, காசநோய் மருத்துவமனை வழியாக கனியம்பாடி வரையும், கண்ணமங்கலத்திலிருந்து, கம்மசமுத்திரம், மோத்தக்கல், பூசிமலைக்குப்பம், பட்டாங்குளம், ஆரியபாடி, ஆக்ராபாளையம், அடையாபுலம் கிராஸ், அடையாபுலம், சேலூர் வழியாக ஆரணி வரை செல்லவும் மேற்கூறிய இரண்டு தடங்களில் மினி பஸ் வசதி செய்யுமாறு வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து வந்த கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

[1979 பிப்ரவரி 12

## கோவை அம்பிகா லே-அவுட் பகுதிக்கு சிறுவாணி நீர்.

வினா 95: திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரம் கிழக்கு சட்ட மன்றத் தொகுதி முதல் வார்டு சித்தாபுதூரில் உள்ள அம்பிகா லே-அவுட்டில் கடந்த பத்தாண்டுகளாக சிறுவாணி குடிநீர் மெயின் குழாய்கள் போடப் படாமலிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், எப்போது குழாய்கள் போடப்படும் ?

விடை :

(அ) ஆம்.

(ஆ) அம்பிகா லே-அவுட் மற்றும் புதியதாகத் தோன்றியுள்ள நகர விஸ்தரிப்பு அமைப்புப் பகுதிகள் அனைத்திற்கும் தற்போது அமுலாக்கப்பட்டு வரும் கோவை சிறுவாணி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புதிய மெயின் குழாய்களும் கிளைக் குழாய் களும் போடப்பட உள்ளன. இத்திட்டம் 1980ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நிறைவு பெறும்பொழுது குடிநீர் விநியோகம் செய்யப்படும்.

## பொன்னமராவதி ஒன்றியத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்.

வினா 96: திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி ஒன்றியத்தில் 1975ஆம் ஆண்டு பஞ்ச நிவாரண நிலுவை வேலைகளுக்கு எவ்வளவு தொகை கோரப்பட்டது ?

(ஆ) எவ்வளவு தொகை அனுமதிக்கப்பட்டது.

விடை :

(அ) மற்றும் (ஆ) கோரப்பட்ட தொகை ரூ. 11,09,836—ம் அனுமதிக்கப்பட்டது.



1979 பிப்ரவரி 12]

## மட்பாண்டத் தொழிற் கருவிகளுக்கு மான்யம்.

வினா 97: திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மட்பாண்டக் குடிசைத் தொழில் கைவினைஞர்களுக்கு தொழிற் கருவிகளை அரசு மான்ய அடிப்படையில் வழங்கி வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

விடை :

(அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு மட்பாண்டத் தொழில் கைவினைஞர்க்கும் கீழ்க்கண்ட தொழிற் கருவிகளைக் கொள்முதல் செய்ய ரூ. 650 மான்யமாகவும், ரூபாய் 650 மூலதனக் கடனாகவும் வழங்கப் படுகின்றது.

1. அச்சு செட்.
2. நவீன சக்கரங்கள்.
3. மண் அடிக்கும் மற்றும் அச்சு எடுக்கும் கருவிகள்.
4. ஸ்குரு பிரஸ்.
5. ஷைலா சக்கரம்.

ஷைலா சக்கரம் கொள்முதல் செய்ய ரூ. 900 மான்யமாகவும், ரூ. 900 கடனாகவும் மொத்தம் ரூ. 1,800 வழங்கப்படுகிறது.

## குத்தாலம் தொகுதியில் ஆறுகளின் குறுக்கே பாலங்கள்.

வினா 98: திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி வடமட்டம், பரவாக்கரை சர் ...னேஸ்வரம், கூந்தலூர் ஆகிய ஊர்களை இணைக்கும் வகையில் ...ட்டையார் அரசலார் ஆகிய ஆறுகளின் குறுக்கே பாலங்கள் ...டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவை குறித்து அரசு எடுத்துள்ள நட ...க்கை என்ன ?

[1979 பிப்ரவரி 12

விடை :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திருமலைராசன் ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா 99 : திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், தேதியூர் ஊராட்சி எல்லையில் திருமலைராசன் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும் ?

விடை :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

சென்னை—கன்னியாகுமரி கடற்கரை நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டம்.

வினா 100 : திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை—கன்னியாகுமரி கடற்கரை நெடுஞ்சாலை மேம்பாட்டிற்காக 1975—76, 1976—77, 1977—78 ஆகிய ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

விடை :

மேற்படி மேம்பாட்டிற்காக ஆண்டு வாரியாக ஒதுக்கப்பட்ட தொகைகள் பின்வருமாறு :—

| ஆண்டு. | தொகை. (ரூபாய் இலட்சங்களில்). |
|---|---|
| (1) | (2) |
| 1975—76 .. .. | 50.00 |
| 1976—77 .. .. | 35.00 |
| 1977—78 .. .. | 18.91 |



1979 பிப்ரவரி 12]

பாபநாசம், மணிமுத்தாறு நீர்த்தேக்கப் பாசனம்.

வினா 101 : திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாபநாசம் நீர்த் தேக்கத்திலிருந்தும், மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலிருந்தும் கீழ்ப்பகுதிக்கு 1978 ஆம் வருடம் 'அட் வான்ஸ் கார்'க்கு என தண்ணீர் கொடுக்க திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை :

(அ) மற்றும் (ஆ) : பாபநாசம் அணையிலிருந்து ஸ்ரீவை குண்டம் அணை வாய்க்கால்கள் மூலமாக 11,293 ஏக்கர் 'அட் வான்ஸ் கார்' பயிருக்கு 1978-ல் தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. 'அட்வான்ஸ் கார்' (விவசாயத்திற்கு பாபநாசம் நீர்த் தேக்கத்தி லிருந்து மட்டும் தான் தண்ணீர் விடப்படுகிறது). மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலிருந்து நீர் 'அட்வான்ஸ் கார்' விவசாயத்திற்கு பயன்படுத்தப்படுவதில்லே.

பனையூர் அருகே புதிய பாலம்.

வினா 102 : திரு. வீ. அர்சுனன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணி தாலுக்கா, பனையூர் கிராமத்தின் அருகில் உள்ள பெரிய கால்வாயின் குறுக்கே பாலம் ஒன்று கட்ட உத்தேசித் துள்ளதா ?

விடை :

இல்லை.

பேரூர் தொகுதியில் அரிசனங்களுக்கு மனைப் பட்டாக்கள்.

வினா 103 : திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வரு வாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் பேரூர் தொகுதி மதுக்கரை ஒன்றி யம், நாச்சிபாளையம் அரிசன மக்கள் ஏற்கனவே குடியிருக்கும் புறம்போக்கு இடத்தை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கும் திட்டத்தினை அரசு பரிசீலித்து வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

[1979 பிப்ரவரி 12

விடை :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

வினா 104: திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, சீரபாளையம் கிராமத்திலுள்ள அரிசன மக்களுக்கு அவர்கள் குடியிருக்கும் புறம்போக்கு நிலத்தை பட்டா செய்து தர அரசு ஆய்வு செய்கிறதா?

விடை :

இல்லை.

பச்சாபாளையம் கிராமத்தில் குட்டை அமைத்தல்.

வினா 105 : திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் பேரூர் தொகுதி பச்சாபாளையம் கிராம ஆற்றில் க.ச. எண். 63-ல் குட்டைகட்டும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) இவ்வாண்டு நிறைவேற்றப்பட உள்ளதா ?

விடை :

(அ) கோவை மாவட்டம் பேரூர் தொகுதியில் உள்ள பச்சாபாளையம் கிராமம் க.ச. எண். 63-ல் குட்டை கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ்பேருந்துகள் மீது நடவடிக்கை.

வினா 106 : திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977–78 ஆம் ஆண்டில் அதிகமாக புகையினை கக்கிக் கொண்டு சென்றதற்காக எத்தனை பேருந்துகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை :

358 பேருந்துகள்.



1979 பிப்ரவரி 12]

அகில உலக பொருட்காட்சியின் மூலம் வசூலான தொகை.

வினா 107—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ம் ஆண்டு சென்னையில் நடந்த அகில உலக பொருட்காட்சியில் மொத்தம் வசூலான தொகை எவ்வளவு ?

(ஆ) அதில் செலவுபோக அரசுக்குக் கிடைத்த லாபமென்ன?

விடை—

(அ) 1977–78 ஆம் ஆண்டு சென்னையில் நடந்த அகில இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் மொத்தம் வசூலான தொகை ரூ. 18,34,000.00.

(ஆ) பொருட்காட்சியை நடத்திய தமிழ்நாடு சுற்றுலா வாரியத்திற்குக் கிடைத்த நிகர லாபம் ரூ. 6,25,000.00.

அரிசன நலத்துறையில் கட்டப்பட்ட வீடுகள்.

வினா 108—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரிசன நலத்துறையால் 1976–77, 1977–78-ம் ஆண்டுகளில் எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன?

விடை—

அரிசன நலத்துறையால் 1976–77-ம் ஆண்டில் அரிசனங்களுக்கு 3,021 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.

1977–78-ம் ஆண்டில் 5,000 வீடுகள் கட்ட ஆணையிடப்பட்டு இதுவரை 2,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மீதி வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

[1979 பிப்ரவரி 12

## கிராம வீட்டு வசதி திட்டத்திற்கு மைய அரசு மான்யம்.

வினா 109—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம வீட்டு வசதி திட்டத்திற்கு மைய அரசின் மானியம் ஏதும் உண்டா ?

(ஆ) அத்திட்டம் இப்பொழுது நடைமுறையில் உள்ளதா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இல்லை.

## உயர்நிலைப்பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர்கள்.

வினா 110—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் உடற்பயிற்சி ஆசிரியர்கள் லோயர் (Lower) ஹையர் (Higher) என்ற வேறுபாட்டை நீக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

உடற்பயிற்சி ஆசிரியர்கள் கிரேட் I கிரேட் II என்ற இரு நிலைகள் தான் உள்ளன. இந்த இரண்டு பிரிவுகளில் உள்ள வேறுபாட்டை நீக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

## தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகள்.

வினா 111—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீண்டாமை ஒழிப்பின் கீழ் 1975–76-லும், 1976-77-லும் 1977–78-லும் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டது? எத்தனை குற்றங்கள் நிரூபிக்கப்பட்டது?

விடை—

| ஆண்டு. | 1975–76 | 1976–77 | 1977–78 |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| பதிவு செய்யப்பட்ட வழக்குகள். | 996 | 1,563 | 1,146 |
| நிரூபிக்கப்பட்டவை .. | 616 | 674 | 288 |



1979 பிப்ரவரி 12]

## சிதம்பரம் மருத்துவமனை.

வினா 112—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் நகரில் அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) அரசு ஆணை எண். 1278, சுகாதாரம், நாள் 20—7—1978-ல் சிதம்பரம், அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஒன்று நிறுவ அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## கிள்ளையில் இரால் வளர்ப்பு நிலையம்.

வினா 113—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம் கிள்ளையில் இரால் வளர்ப்பு நிலையம் ஏற்படுத்தும் ஆலோசனை ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : சிதம்பரம் வட்டம் கிள்ளை கிராமத்தில் ஏறத்தாழ, பதின்மூன்று இலட்சத்து ஏழாயிரத்து ஐந்நூற்று அறுபது ரூபாய் (ரூ. 13,07,560) செலவில் உவர் நீர் மீன் வளர்ப்புப் பண்ணை ஒன்று ஏற்படுத்த அரசு 1978 ஆம் ஆண்டு மே மாதத்தில் அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான செலவு முழுவதையும் மத்திய அரசு மானியமாகத் தர இசைந்துள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1979 பிப்ரவரி 12

## சிதம்பரம் வட்டத்தில் வழங்கப்பட்ட மூன்று சக்கர வண்டிகள்

வினா 114 —திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில் 1977–78-ல் உடல் ஊனமுற்றவர்களிடமிருந்து மூன்று சக்கர வண்டிகள் கேட்டு மனுக்கள் வந்துள்ளனவா ?

(ஆ) எத்தனை பேர்களுக்கு கொடுக்கப்பட்டது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 11 பேர்.

## அவினாசித் தொகுதியிலுள்ள அரிசனக் குடியிருப்புகள்.

வினா 115 —திரு. சொ. ந. பழனிச்சாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அவினாசித் தொகுதியில் அரிசன மக்கள் வசிக்கும் பகுதியில் கூடுதலாகத் தண்ணீர் வழங்கவும் தெரு விளக்குகளை கண்காணிக்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

அவினாசித் தொகுதியில் உள்ள அரிசன காலனிகளுக்கு அதிகப்படியாக தேவையாகும் குடிநீர் வழங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துடன் கலந்து ஆலோசித்து தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எல்லா அரிசன காலனிகளுக்கும் போதுமான எண்ணிக்கையுள்ள தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு அவைகள், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன்களால் சரிவர கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

## ரத்தினபுரியில் புதிய பாலம்.

வினா 116—திரு. சொ. ந. பழனிச்சாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தாலுக்கா, ரத்தினபுரி கிராமத்தில் உள்ள அபாயகரமான பள்ளத்தின் மீது ஒரு பாலம் கட்டும் திட்டம் நடப்பு ஆண்டில் மேற் கொள்ளப்பட்டுள்ளதா ?



1979 பிப்ரவரி 12]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) கருவலூர்-மொண்டிபாளையம் சாலையில், நல்லாற்றில் குறுக்கே பாலம் ஒன்று அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) கருவலூர்-மொண்டிபாளையம் சாலையில் நல்லாற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

## அசநல்லிப்பாளையத்திற்குக் குடிநீர் வசதி.

வினா 117 —திரு. சொ. ந. பழனிச்சாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அவினாசி ஒன்றியத்தைச் சார்ந்த வேட்டுவபாளையம் ஊராட்சி மன்றத்திற்குட்பட்ட அசநல்லிபாளையத்தில் குடிநீர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

அசநல்லிபாளையத்தில் உள்ள அரிசனக் கிணற்றையும், பொதுக் கிணற்றையும் ஊராட்சி நிதியிலிருந்து மேலும் ஆழப்படுத்தி துரித நடவடிக்கை எடுக்கும்படி அவினாசி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

## புதுக்கோட்டை காவேரி நூற்பு மற்றும் நெசவாலைத்தொழிலாளர்கள்.

வினா 118 —திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் உள்ள காவேரி மில்லில், எல்லா தொழிலாளர்களுக்கும் மீண்டும் வேலை வாய்ப்பு கொடுக்கப்படுகிறதா ?

[1979 பிப்ரவரி 12

(ஆ) ஆம் எனில், எப்பொழுது எல்லாத் தொழிலாளர்களுக்கும் முழு அளவில் வேலை கொடுக்கப்படும்?

விடை—

(அ) & (ஆ) : காவேரி நூற்பு மற்றும் நெசவாலையில், அதன் 727 நிரந்தர தொழிலாளர்களுக்கும் 128 கூடுதலாக உள நிரந்தர தொழிலாளர்களுக்கும், ஆக மொத்தம் 855 தொழிலாளர்களுக்கும், மாதம் 20 முதல் 22 நாட்களுக்குத்தான் சுழற்சி முறையில் (ரொட்டேஷன்) வேலை கொடுக்கப்படுகிறது. தற்போது திட்டப்பட்டுள்ள நவீன மயமாக்கும் திட்டங்களை அமுல் செய்த பிறகும்கூட எல்லாத் தொழிலாளர்களுக்கும் முழுஅளவில் வேலை கொடுக்க இயலாது எனக் கருதப்படுகிறது.

திருமயம், அரிமளம் ஒன்றியங்களில் உள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்.

வினா 119 —திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம், அரிமளம் ஒன்றியங்களில் எத்தனை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இயங்காமல் இருக்கின்றன.

(ஆ) அதற்கான காரணம் யாது ?

விடை—

(அ) 8 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இயங்காமல் உள்ளன.

(ஆ) சிலவற்றின் மின் மோட்டார்கள் பழுது அடைந்துள்ளன; மற்றும் சிலவற்றிற்கு மோட்டார் பொருத்தப்படவில்லை. விரைவில் எல்லா நீர்த்தேக்கத் தொட்டிகளையும் இயங்கவைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



1979 பிப்ரவரி 12]

புதுக்குடியில் அரசுப் புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு.

வினா 120—திரு. எம். எம். எ. ரசாக் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசித் தாலுகா, புதுக்குடி கிராமத்தில் அரசு புறம்போக்கில் உள்ள நான்கு ஏக்கர் நிலம் தனி நபர் ஒருவரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் என்றால் அவரை வெளியேற்ற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(இ) அந்த நிலத்தை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனைக்கு ஒதுக்கப்படுமா ?

விடை—

(அ), (ஆ) & (இ) : புதுக்குடி என்ற பெயருள்ள எந்த கிராமம் தென்காசி வட்டத்தில் இல்லை. எனினும் கம்பநேரி-புதுக்குடி என்ற பெயருள்ள கிராமம் தென்காசி வட்டத்தில் இருக்கிறது. ஆனால் அங்கும், அரசு புறம்போக்கு நான்கு ஏக்கர் நிலத்தில் ஒருவரும் ஆக்கிரமிப்புச் செய்யவில்லை.

பன்பொழி-வடகரை சாலை.

வினா 121—திரு எம். எம். எ. ரசாக் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசித் தாலுகாவில் உள்ள குறுகலான பன்பொழி வடகரை சாலையினை விரிவுபடுத்தும் ஆலோசனை உண்டா ?

(ஆ) ஆம் என்றால், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1979 பிப்ரவரி 12

## குமாரக்குடி சாலை.

வினா 122—திரு எஸ். கணேசன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

செம்பனார்கோவில் ஒன்றியம் குமாரக்குடி அரிசன, மீனவ காலனிகளுக்குப் புதிய பாதை அமைத்துத்தர வேண்டும் என அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

விடை—

செம்பனார்கோவில் ஒன்றியத்தைச் சேர்ந்த குமாரக்குடி அரிசனக்காலனிக்கு புதிய பாதை அமைத்துத்தர வேண்டும் என அரசுக்கு கோரிக்கை ஏதும் வரவில்லை.

ஆக்கூர்-சின்னங்குடி கப்பிச்சாலையிலிருந்து இணைப்புச் சாலை குமாரக்குடி அரிசன, மீனவ காலனிகளுக்கு ஏற்கனவே கிராம ஊராட்சி மன்றத்தால் அமைக்கப்பட்டுள்ளது என்றும், அரிசனக் காலனியிலிருந்து மீனவர் காலனிக்குச் செல்லவும் பாதை வசதி உள்ளது எனவும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

## எட்டிமடை பேரூராட்சியில் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

வினா 123—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் எட்டிமடை பேரூராட்சியில் இதுவரை எத்தனை மனைப்பட்டாக்கள் அரிசன மக்களுக்கு கொடுக்கப் பட்டுள்ளன ?

(ஆ) 'வெள்ளிவிழா சீரூர்' திட்டப்படி கட்டப்பட்ட வீடு களுக்கு பட்டா தரப்பட்டதா ?

(இ) அவ்வீடுகள் பழுதடைந்துள்ளதா ?

விடை—

(அ) எட்டிமடை கிராமத்தில் 5–5–1974 நாளில் அரிசன மக்களுக்கு 38 வீடுகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளன 6–7–1976-ல் 41 குடும்பங்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) எட்டிமடைக்கிராமத்தில் 23 வீடுகள் வெள்ளிவிழா சீரூர் திட்டப்படி கட்டப்பட்டு ஜெயந்தி கிராமம் எனப் பெயரிடப் பட்டுள்ளது. இன்னும் பட்டா தரப்படவில்லை.

(இ) மேற்சொன்ன 23 வீடுகளும் நல்ல நிலையில் உள்ளது. பழுதாக இல்லை.



1979 பிப்ரவரி 12]

## வெள்ளாற்றிலிருந்து குடிநீர்க் குழாய்கள்.

வினா 124—திரு கே. சௌந்தரராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளாற்றிலிருந்து ஸ்ரீமுஷ்ணம், ஆண்டிமடம், கவரைப்பாளையம், வரதராசன்பேட்டை ஆகிய ஊராட்சி களுக்கு குடிநீர் கொண்டு வரும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

## ஆளப்பட்டியலில் கிளை மருத்துவமனை.

வினா 125—திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருட்டினகிரி பஞ்சாயத்து யூனியனில் ஆலாப்பட்டி கிராமத்தில் கிளை மருத்துவமனை அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## ஆத்தூர் தாலுக்காவில் மண்வள ஆராய்ச்சி.

வினா 126—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூர் தாலுக்காவில் 'மண்வள ஆராய்ச்சி' ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா ?

[1979 பிப்ரவரி 12

(ஆ) ஆம் எனில், எந்தெந்த யூனியன் பகுதிகளில் செய்யப்பட்டது?

(இ) அதன் முடிவு என்ன?

(ஈ) மேலும் எந்தெந்த பகுதிகளில் 'மண்வள ஆராய்ச்சி' செய்யும் உத்தேசம் உள்ளது?

விடை—

விவர அறிக்கை * பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

சீர்காழி அரசினர் மாணவர் விடுதி.

வினா 127—திரு. கா. சுப்ரவேலு: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சை மாவட்டம், சீர்காழி அரசினர் மாணவர் விடுதிக்கு அரசு கொடுக்கும் மாத வாடகை எவ்வளவு?

(ஆ) அந்தக் கட்டடம் மாணவர் வசதிகளுக்கேற்ப உள்ளதா?

விடை—

(அ) ரூ. 181 (ரூபாய் நூற்று எண்பத்தொன்று மட்டும்).

(ஆ) மேற்படி கட்டடம் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு போதுமானதாக உள்ளது.

குலசேகரன்பட்டினம் பேரூராட்சி.

வினா 128 திரு.இரா.அமிர்தராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குலசேகரன்பட்டினம் பேரூராட்சி மன்றத்தின் வருட வருமானம் எவ்வளவு?

(ஆ) எத்தனை அரசு அலுவலர்கள் அங்கு பணியாற்றி வருகிறார்கள்?

*433—446ம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



1979 பிப்ரவரி 12]

விடை—

(அ) ரூ. 52,754.

(ஆ) நிர்வாக அலுவலர் மட்டும் அரசுப் பணியாளர் நிதிப் பற்றாக்குறையால் இப்பதவி 1973-லிருந்து நிரப்பப்படவில்லை. இந்தப் பேரூராட்சி இரண்டு ஊராட்சிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. தேர்தலுக்குப்பின் இது செயலுக்கு வரும்.

ஆடலூர்—தாண்டிக்குடி இணைப்புச் சாலை.

வினா 129—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் ஆடலூரிலிருந்து தாண்டிக்குடி மலைப் பகுதியை இணைக்கும் சாலை, வேலை கடந்த 4 வருடங்களாக ஆரம்பிக்காமலிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், என்ன காரணம், எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்.

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு.

வினா 130—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், செஞ்சி வட்டத்தில், கருங்குழி கிராமத்தில் கடந்த 6 ஆண்டுகளாக பம்பு செட் மின் இணைப்புக்கு ஒப்பந்தமாகியும் இதுவரை மின் இணைப்பு தராதது அரசுக்குத் தெரியுமா?

விடை—

ஆம். மனுதாரர் தயார் நிலையில் இல்லாததால் மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

[1979 பிப்ரவரி 12

## கள்ளக்குறிச்சியில் நெடுஞ்சாலைத்துறை இடங்கள் ஆக்கிரமிப்பு.

வினா 131—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சியில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப் பட்டுவிட்டனவா?

(ஆ) இன்னும் எத்தனை ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட உள்ளன?

விடை—

(அ) கள்ளக்குறிச்சி உட்கோட்ட நெடுஞ்சாலைப் பிரிவில் உள்ள சாலை ஓரங்களில் அவ்வப்போது தற்காலிகமாக செய்த ஆக்கிரமிப்புகளை உடனுக்குடன் அகற்றப்பட்டன.

(ஆ) நிலையான ஆக்கிரமிப்புச்செய்தவர்களுக்கு நோட்டீஸ் அளித்து அகற்றியதுபோக, எஞ்சிய ஆறு ஆக்கிரமிப்புக்காரர்கள் அகற்றும் தறுவாயில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

## தென்னாற்காடு மாவட்டத்தில் உப்பு உற்பத்தி.

வினா 132—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டத்தில் 1977-78 ஆம் ஆண்டில் எவ்வளவு உப்பு, எத்தனை ஏக்கரில் உற்பத்தி செய்யப்பட்டது?

விடை—

இம்மாவட்டத்தில் 1977-78-ம் ஆண்டில் (ஜூன் 1978 முடிய) 38,486 டன்கள் உப்பு 949 ஏக்கரில் உற்பத்தி செய்யப் பட்டது.



979 பிப்ரவரி 12]

## தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகள்.

வினா 133—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் மூலம் தமிழகத்தில் இதுவரை எத்தனை கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

(ஆ) அவைகளில் எத்தனைகளுக்குப் படிகள் எடுக்கப்பட்டுள்ளன?

(இ) எத்தனை புத்தகமாக வெளி வந்துள்ளன?

விடை—

(அ) 4,597

(ஆ) 4,597

(இ) 10 புத்தகங்களாக 1,268 கல்வெட்டுகளைப்பற்றி வெளிவந்துள்ளன.

## விபச்சாரத் தடைச்சட்டத்தின்கீழ் தண்டனை அடைந்த பெண்கள்.

வினா 134—திரு. கோ. ரகோத்துமன்: மாண்புமிகு சுகநலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78-ல் தமிழகத்தில் விபச்சாரத் தடைச் சட்டத்தின்கீழ் எத்தனைப் பெண்கள் தண்டனை அடைந்துள்ளார்கள்?

(ஆ) அவர்களுள் எத்தனை பேர் பெண்கள் காப்பகத்திற்கு அனுப்பப்பட்டனர்?

விடை—

| | |
|---|---|
| (அ) தண்டனை அடைந்தவர்கள் | 6,738 |
| (ஆ) காப்பகத்துக்கு அனுப்பப் பட்டவர்கள். | 175 |

## சாலை ஆய்வாளராகப் பணியாற்றும் பெண்கள்.

வினா 135—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தற்சமயம் நெடுஞ்சாலைத்துறையில் சாலை ஆய்வாளர்களாகப் பணியாற்றும் பெண்கள் எத்தனை பேர்?

விடை—

மொத்தம் நான்கு பேர்.

## சிதம்பரம் வட்டத்தில் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு.

வினா 136—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ல் சிதம்பரம் வட்டத்தில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கேட்டு வந்த மனுக்கள் எத்தனை ?

(ஆ) எத்தனை மனுக்கள் மின்இணைப்பு கொடுக்க தயாராய் உள்ளன ?

விடை—

(அ) 76 மனுக்கள்.

(ஆ) 5 மனுக்கள்.

## சிதம்பரம் வட்டத்தில் வழங்கப்பெற்ற மனைப்பட்டாக்கள்.

வினா 137—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில் 30—6—77 முதல் இதுவரை எத்தனை கிராமங்களில் எத்தனை பேர்களுக்கு மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன ?

(ஆ) எத்தனை கிராமங்களில் எத்தனை மனைப் பட்டாக்களுக்கான மனுக்கள் இன்னும் ஆய்வில் உள்ளன ?





விடை—

(அ) சிதம்பரம் வட்டத்தில் 30—6—77 முதல் 31—5—78 வரை வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட கிராமங்களும் நபர்களின் எண்ணிக்கையும் கீழ்வருமாறு—

| கிராமங்கள். | நபர்கள். |
|---|---|
| (1) சி. கோதங்குடி .. .. .. | 4 |
| (2) பேட்டை .. .. .. .. | 6 |
| (3) சின்னபுதுப்பேட் H/O அரியகோஷ்டி .. | 196 |
| (4) மேல்புவனகிரி .. .. .. | 3 |
| மொத்தம் .. | 209 |

(ஆ) வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்கு இன்னும் ஆய்வில் உள்ள கிராமங்களும், மனுக்களின் எண்ணிக்கையும் :—

| கிராமங்கள். | மனுக்கள். |
|---|---|
| (1) மதுராந்தகநல்லூர் .. .. | 13 |
| (2) கிளியனூர் .. .. .. .. | 26 |
| (3) பேராம்பட்டு .. .. .. | 15 |
| (4) கட்டளை .. .. .. | 9 |
| (5) சிதம்பரம் நகரம் .. .. .. | 69 |
| மொத்தம் .. | 132 |

## பு. ஆதிவராகநல்லூரில் சமுதாயக் கூடம்.

வினா 138—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம் பரங்கிப்பேட்டை யூனியன் பு. ஆதிவராகநல்லூரில் சமுதாய கூடம் அமைக்க யூனியனால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் அது நடைமுறைப்படுத்தப்பட்டதா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சம்பந்தப்பட்ட ஊராட்சி அரசுமானியம்போக மீதமுள்ள தொகையினைத் தன் நிதியிலிருந்து செலுத்த சம்மதித்து தீர்மானத்தை அனுப்பாததாலும் சமுதாய கூடம் கட்ட உத்தேசிக்கப்பட்ட இடம், விவரம் முதலியவற்றினை தெரிவிக்காததாலும், இத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை.

[1979 பிப்ரவரி 12

## தென்னாற்காடு மாவட்டத்தில் இயங்கிவரும் ஆர்டீஷியன் ஊற்றுகள்.

வினா 139 :—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை நீர்பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் அரசு துறையால் போடப்பட்ட ஆர்டீஷியன் ஊற்றுகள் 133-ல் தற்போது எத்தனை இயங்குகிறது ?

(ஆ) சிதம்பரம் வட்டத்தில் எத்தனை இயங்குகிறது ?

விடை—

(அ) 92

(ஆ) 91

## சிதம்பரம் நகரில் பாதாளச் சாக்கடை அமைப்புத் திட்டம்.

வினா 140 :—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிதம்பரம் நகரில் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டதா ?

(ஆ) எவ்வளவு வீடுகளுக்கு சாக்கடை இணைப்பு கொடுக்கப்பட்டது ?

(இ) எத்தனை கொடுக்கப்பட வேண்டும்.

விடை

(அ) சிதம்பரம் நகராட்சியில் தற்போது புதைசாக்கடைத் திட்டம் 3 ச. கி. மீ. பரப்பளவு வரை அமுலில் உள்ளது. மேலும் இத்திட்டம் 2 கி. மீ. பரப்பளவு விரிவு படுத்தவேண்டியுள்ளது.

(ஆ) இத்திட்டத்தினால் 4,560 விடுகள் பயன்பெறும். அவற்றில் தற்போது 1,020 வீட்டிணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

(இ) மேலும் 3,540 வீட்டிணைப்புகள் கொடுக்கப்பட வேண்டியுள்ளது.



79 பிப்ரவரி 12]

## சிதம்பரம் வட்டத்தில் அம்பர் சர்க்காக்கள் விநியோகம்

வினா 141 :—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு ...த்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் ...ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சிதம்பரம் வட்டத்தில், 1977–78-ம் ஆண்டில் எத்தனை ...ம்பர் சர்க்காக்கள் அரசு மான்யத்தில் விநியோகம் செய்யப் ...டது ?

(ஆ) எத்தனை மனுக்கள் நிலுவையில் உள்ளன ?

...டை

(அ) தற்போது அம்பர் ராட்டைகள் ஒரு நிலையத்திற்கு 25 ராட்டைகள் விதம் கதர் மற்றும் கிராமத்தொழில் வாரியத்தி...ல் வழங்கப்பட்டு தொழிற்சாலை முறையில் தொழில் நுட்ப...ியாளர்களின் மேற்பார்வையில் இயக்கப்படுகின்றன. தென்...ற்காடு மாவட்டத்தில் இவ்வித நிலையங்கள் எட்டு உள்ளன. ...னால் சிதம்பரம் வட்டத்தில் ஏதும் இல்லை.

(ஆ) சிதம்பரம் வட்டத்தைச் சார்ந்த ஆதிவராகநல்லூர் குடி...குப்பில் கிராமிய நூற்பு நிலையம் ஒன்று தொடங்கவேண்டும் ...ன்று கடலூரில் உள்ள கதர் மற்றும் கிராமத்தொழில் வாரி...த்தின் உதவி இயக்குநரிடம் ஒரு மனு வந்துள்ளது. கிராமிய ...ற்பு நிலையம் ஒன்றை நிறுவினால் ஆண்டு முழுவதும் பணி...செய்யும் வகையில் தேவையான நூற்பாளர்கள் முன்வருவார்...ளா என்று ஆராய்ந்து அறிந்தபின் இந்த மனுவின்மீது ஒரு ...டிவு எடுக்கப்படும்.

## திருவான்மியூர் பகுதியில் குழாய்க் கிணறுகள்

வினா 142—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தொழி...ளர் நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்...களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னைதிருவான்மியூர் பகுதியில் குடி தண்ணீருக்காக ...த்தனை குழாய் கிணறுகள் போடப்பட்டன ?

(ஆ) தற்போது எத்தனை வேலை செய்கிறது ?

விடை

(அ) சென்னை திருவான்மியூர் பகுதியில் குடிதண்ணீருக்காக ...8 அங்குல விட்டமுள்ள 15 குழாய்கிணறுகள் போடப்பட்டுள்ளன.

[1979 பிப்ரவரி 12

(ஆ) போடப்பட்டுள்ள 15 குழாய் கிணறுகளில் 6 கிணறுகள் போதுமான தொடர் நீர் ஊற்று இல்லாமையால் தற்போது பயன்படுத்தப்படவில்லை. மிகுதியுள்ள 9 கிணறுகளில் 7-ல் நீரேற்று இயந்திரங்கள் மின்வாரிய சாதனங்கள் பழுதுபட்டுள்ளன. இவை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே, இரண்டு குழாய் கிணறுகள் மட்டும் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## அரசுத்துறையில் செங்கல் தயாரிப்புத் தொழிற்சாலைகள்

வினா 143—திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுத்துறையில் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலை எத்தனை உள்ளது ?

(ஆ) எந்தெந்த இடத்தில் உள்ளது ?

(இ) அரசுக்குச் சொந்தமான செங்கல் தொழிற்சாலையில் எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் ?

(ஈ) 1976–77 ஆண்டுகளில் அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலையில் எவ்வளவு செங்கல் தயாரிக்கப்பட்டது?

(உ) என்ன விலைக்கு விற்கப்பட்டது ?

விடை

(அ) அண்டு (ஆ) அரசுத் துறை நிறுவனமான தமிழ்நா பீங்கான் நிறுவனம் திருமழிசையில் ஒரு இயந்திர செங்க தொழிற்சாலை நிறுவியுள்ளது.

(இ) 126 நிரந்தரத் தொழிலாளர்கள், 40 தற்காலிக தொழிலாளர்கள்.

(ஈ) 57.83 இலட்சம் செங்கற்கள்.

(உ) ரூபாய் 170-லிருந்து ரூ. 200 வரை (1,000 கற்க மொத்த விற்பனையின் மதிப்பு ரூ. 8,17 இலட்சம்.



979 பிப்ரவரி 12]

## சென்னை நகர எல்லைக்குள் ஒரு வழிச்சாலைகள்

வினா 144—திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகர எல்லைக்குள் உள்ள சாலைகளில் ரு வழிச்சாலை என்று எத்தனை சாலைகள் காவல் துறை வரால் அறிவிக்கப்பட்டுள்ளன ?

(ஆ) அப்படி ஒரு வழிச்சாலை என்று அறிவிக்க வேண்டிய வசியம் என்ன ?

டை

(அ) 115 சாலைகள்.

(ஆ) சாலைகள் குறுகியதாக இருந்தாலும், சாலையில் பாக்குவரத்து அதிகமாக இருந்து, அவ்வழியே போகவும் வரவும் பாக்குவரத்து அனுமதிப்பதால் போக்குவரத்து நெருக்கடியும், பித்துக்களும் ஏற்படுவதைத் தவிர்க்கவும், பொது மக்கள் உப யாகிப்பதற்கு மாற்றுவழி இருப்பதையும் பொறுத்து, விபத்துக் ள் ஏற்படாவண்ணம் தவிர்க்கவே ஒரு வழிச்சாலைகள் ற்படுத்தப்படுகின்றன.

## சென்னை மாநகராட்சியின் வரவு-செலவு

வினா 145—திரு. மு. அரங்கநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் றை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை ளிப்பாரா—

1972–73 முதல் 1976–77 வரை சென்னை மாநகராட்சி ன் மொத்த வருவாய்—மொத்த செலவு எவ்வளவு?

டை

| | | வரவு ரூபாய். | செலவு ரூபாய். |
|---|---|---|---|
| 972–73 | .. | 30,05,74,095·01 | 28,07,64,092·33 |
| 973–74 | .. | 23,67,85,226·68 | 25,72,55,378·78 |
| 974–75 | .. | 24,78,47,057·02 | 24,39,00,862·36 |
| 975–76 | .. | 29,51,59,728·67 | 24,46,06,325·29 |
| 976–77 | .. | 32,03,40,368·28 | 32,75,07,954·44 |
| மொத்தம் | .. | 140,07,06,475·66 | 135,40,34,613·20 |

[1979 பிப்ரவரி 12

## திருநெல்வேலி—பாளையங்கோட்டை நகர் பகுதிகளில் தானியங்கி தொலைபேசி வசதி

வினா 146—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி—பாளையங்கோட்டை நகர் பகுதிகளில் தானியங்கி தொலைபேசி வசதி ஏற்படுத்த இந்த அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா ?

(ஆ) தற்பொழுது அத்திட்டத்தின் நிலை என்ன ?

விடை (அ & ஆ)

திருநெல்வேலி, பாளையங்கோட்டையில் தானியங்கி தொலைபேசி இணைப்பகம் அமைப்பதற்கான திட்ட மதிப்பீட்டுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்றும் மேற்படி தொலைபேசி இணைப்பகத்திற்கான கருவிகள் 1979-80 ஆண்டில் வந்துவிடும் என்றும் மத்திய அரசின் தபால் தந்தித்துறை தெரிவித்துள்ளது.

## திருப்பூவனம் வாரச்சந்தை

வினா 147—திரு. வ. மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூவனத்தில் நடைபெறும் வாரச்சந்தையை பேரூராட்சிக்கு ஒப்படைக்கக்கோரி அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன

விடை

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

## சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள்

வினா 148—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் உள்ள மொத்த தண்டனை கைதிகள், ரிமாண்ட் செய்யப்பட்டவர்கள் முறையே எத்தனை பேர் ?



1979 பிப்ரவரி 12]

விடை

தமிழ்நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் 1—8—1978-ம் நாளில் தண்டனை கைதிகள் மற்றும் ரிமாண்ட் செய்யப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளன.

(1) தண்டனை கைதிகள் .. 8,218

(2) ரிமாண்ட் செய்யப்பட்டுள்ள கைதிகள்—7,554

## அரிசனங்களுக்கு மனைப் பட்டாக்கள்.

வினா 149—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், காயாமொழி கிராமத்தில் உள்ள அரிசன மக்கள் வீட்டு மனைப் பட்டா கேட்டு மனுக்கள் அனுப்பியுள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை மனுக்கள் வரப்பெற்றன ? எத்தனை பேர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளன ?

விடை

(அ) ஆம். திருநெல்வேலி மாவட்டம், காயாமொழி கிராமத்தில் உள்ள அரிசன மக்கள் வீட்டு மனைப் பட்டா கேட்டு மனுக்கள் அனுப்பியுள்ளார்கள்.

(ஆ) வீட்டு மனைப் பட்டாக்கள் கோரி 53 மனுக்கள் வரப்பெற்றன. அதில் 7 பேர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கு பட்டா வழங்குவது பரிசீலனையில் உள்ளது. விரைவில் வழங்கப்படும்.

[1979 பிப்ரவரி 12

## எருசலேம் பள்ளிப்பத்து வாய்க்காலின் குறுக்கே பாலம்.

வினா 150—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட எருசலேம் பள்ளிப்பத்து வாய்க்காலின் குறுக்கே இணைப்புப் பாலம் கட்டும் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

விடை

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## மாலைக் குட்டியாவிளை அரிசனப் பகுதிக்கு மயான நிலம் ஒதுக்கல்.

வினா 151—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலூக்கா, பள்ளிப்பத்து ஊராட்சி மாலைக் குட்டியாவிளை அரிசன மக்கள் வசிக்கும் பகுதியில் இதுவரை மயான நிலம் ஒதுக்கப்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை

(அ) திருச்செந்தூர் தாலூகா, பள்ளிப்பத்து ஊராட்சியைச் சேர்ந்த மாலை குட்டியாவிளையில் வசிக்கும் அரிசன மக்களுக்கு மயானத்திற்கு நிலம் இதுவரை ஒதுக்கப்படவில்லை.

(ஆ) மயானத்திற்கு நில ஆர்ஜிதம் செய்ய தற்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



1979 பிப்ரவரி 12]

## பாலுசெட்டியில் உள்ள பால் குளிரூட்டும் நிலையம்.

வினா 152—திரு. இரா. சண்முகம் : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதியிலுள்ள பாலுசெட்டியில் உள்ள பால் குளிரூட்டும் நிலையம் (Chilling Centre) எந்த நிர்வாகத்தின்கீழ் இயங்குகின்றது.

(ஆ) அதற்கான காரணம் யாது ?

விடை

(அ) பாலுசெட்டியிலுள்ள பால் குளிரூட்டும் நிலையம், சென்னை அயன்புரத்திலுள்ள சென்னை கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியத்தின் நிர்வாகத்தில் தற்போது இயங்கி வருகிறது.

(ஆ) சென்னை கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றிய அலுவலகத்தில் 5—6—1976 அன்று நடந்த இயக்குநர்கள் கூட்டத்தில் சென்னை அயன்புரத்திலுள்ள சென்னை கூட்டுறவு பால் வள ஒன்றியத்தின் பால் விநியோகம் செய்யும் உரிமையையும் ஒன்றியத்தைச் சார்ந்த கட்டடம் பால் குளிரூட்டும் இயந்திர சாதனங்களுடன் கூடிய ஆலை முதலியவைகளையும் தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு மாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டு 1—7—1976 அன்று மாற்றம் செய்யப்பட்டது. ஒன்றியம் தற்போது செங்கை மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. மேற்படி சங்கங்களில் உற்பத்தியாகும் பாலை அவ்வொன்றியம் சேகரித்து கெடாமல் தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு தினந்தோறும் கொடுக்க பாலை குளிர்வித்து பதப்படுத்த ஒரு குளிரூட்டும் நிலையம் அவ்வொன்றியத்திற்கு தேவைப்பட்டது. ஆகையால் செங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள பாலுசெட்டி குளிரூட்டும் நிலையத்தைக் குளிரூட்டும் இயந்திர சாதனங்களுடன் அவ்வொன்றியத்திற்கு மாற்ற கேட்டுக் கொண்டதின் பேரில் பாலுசெட்டி குளிரூட்டும் நிலையம் 1—4—1977 முதல் சென்னை கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியத்திற்குப் பரிவர்த்தனையாக மாற்றப்பட்டது.

## பனஅட்டி அருகே பாலம்.

வினா 153—திரு. கே. உச்சி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கக்குச்சி-பில்லிக்கொம்பை நெடுஞ்சாலையில் பனஅட்டி என்ற இடத்தில் ஓடும் காட்டாற்றின் மேல் ஓர் பாலம் கட்டும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

விடை

இப்பாலம் கட்ட சுமார் இரண்டு லட்சம் ரூபாய் தேவைப் படுகிறது. தற்போது இத்திட்டம் எந்தவித அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திலும், சேர்க்கப்படவில்லை. எனினும், பின்வரும் காலத் திட்டங்களில், நிதி வசதி வேலையின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, மாநில சாலைத் திட்டத்தில் சேர்க்க பரிசிலனை செய்யப்படும்.

## உயிலட்டி நீர் வீழ்ச்சியை அழகு படுத்தல்.

வினா 154—திரு. கே. உச்சி : மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகை தாலூகா, கூக்கல் ஊராட்சியை சேர்ந்த உயிலட்டி யிலுள்ள நீர்வீழ்ச்சியின் இரு கரைகளையும் அழகு படுத்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை

இல்லை.

## கேளிக்கை வரி வசூல்.

வினா 155—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்கு விடையளிப்பாரா?

1975–76, 1976–77 ஆண்டுகளில் அரசு பெற்ற கேளிக்கை வரி எவ்வளவு?

விடை

1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் 1975–76 ஆண்டுகளில் ரூ. 1,341·10 இலட்சமும், 1976–77 ஆண்டுகளில் ரூ. 1,488·21 இலட்சமும் பெறப்பட்டது.

1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்கள் நிதி சட்டத்தின்கீழ் 1975–76 ஆண்டுகளில் ரூ. 542·87 இலட்சமு[illegible] 630·62 இலட்சமும் வசூலிக்கப்பட்டது



## நிலக்கோட்டை-செம்பட்டி சாலையில் பாலம்.

வினா 156—திரு. அ. பாலுச்சாமி : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதியில் நிலக்கோட்டை-செம்பட்டி சாலையில் ஒட்டுப்பட்டி பக்கமுள்ள 2 ஓடைகளின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை

இல்லை.

## ராஜதானி-தெப்பத்துப்பட்டி வனத்துறை சாலை.

வினா 157—திரு. அ. பாலுச்சாமி : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி ராஜதானிக்கோட்டையிலிருந்து தெப்பத்துப்பட்டி வரை உள்ள வனத்துறை சாலையை செப்பனிட்டு மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை

உத்தப்பநாய்க்கனூர்-ராஜதானி-தெப்பத்துப்பட்டி வனத் துறை சாலையை ரூபாய் ஒரு இலட்சம் செலவில் வனத்துறை னர் செப்பனிட்டு வருகின்றனர். இவ்வேலை இந்த நிதி ண்டு (1978–79) இறுதிக்குள் முடிக்கப்படும் என எதிர்பார்க் ப்படுகிறது.

## வத்தலக்குண்டு-தும்பலப்பட்டி சாலையில் பாலம்.

வினா 158—திரு. அ. பாலுச்சாமி : மாண்புமிகு போக்கு ரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் ளுக்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி வத்தலக்குண்டில் இருந்து தும்பலப ட்டி செல்லும் சாலையின் குறுக்கே ஓடையின்மீது ஒரு பாலம் ட்டும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

விடை

இல்லை.

[1979 பிப்ரவரி 12

## வடாற்காடு மாவட்டத்தில் அரிசன நலப்பள்ளிகளுக்கு நிரந்தர கட்டடங்கள்.

வினா 159— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா: —

வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை அரிசன நலப்பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டடங்கள் இல்லை ?

விடை—

வட ஆற்காடு மாவட்டத்தில் கீழ்க்காணும் மூன்று அரிசன நலப்பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டடங்கள் இல்லை:—

(1) அரிசன நல ஆரம்பப்பள்ளி, கீழ்வன்னகம்பாடி (Kilvonnakambadi), செங்கம் வட்டம்.

(2) அரிசன நல ஆரம்பப்பள்ளி, சு. வாழாவெட்டி (Su. Valavetti), திருவண்ணாமலை வட்டம்.

(3) அரிசன நல ஆரம்பப்பள்ளி, வாழாத்தூர் (Valathur), குடியாத்தம் வட்டம்.

## செய்யாற்றின் குறுக்கே அணை.

வினா 160— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம், குப்பநத்தம் கிராமத்தின் அருகில் செய்யாற்றின் குறுக்கே அணைக்கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் செய்யாறு வடி நிலப்பரப்பின் தற்போதைய நீர் இருப்பைப் பொறுத்து அதன்படி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ஆய்வுப் பணிகள் 1979 பிப்ரவரி வாக்கில் முடிவடையும். ஆய்வு முடிந்த பின்னர்தான் இத்திட்டத்தின் விவரம் தெரியவரும்.



1979 பிப்ரவரி 12]

## கல்லணை விரிவாக்கக் கால்வாய்ப் பாசனம் பெறும் நிலங்கள்.

வினா 161—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை, நீர்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் கல்லணை விரிவாக்கக் கால்வாய் மூலம் பாசனம் பெறும் பரப்பளவு எவ்வளவு ?

விடை—

தஞ்சை மாவட்டத்தில் கல்லணை விரிவாக்கக் கால்வாய் மூலம் பாசனம் பெறும் ஆயக்கட்டு ரிக்கார்டுகளின்படி 8,428·84 ஏக்கர் ஆகும்.

## மதுரை ராஜா மில் மின் கட்டணத்தொகை பாக்கி.

வினா 162—திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மதுரை ராஜா மில் உரிமையாளர் மின் வாரியத்திற்கு ஏதாவது பாக்கித் தொகை செலுத்த வேண்டியுள்ளதா ?

விடை—

ஆம். நிலுவை ரூ. 82,858·95.

## பாலையூர் கிராமத்தில் காவலர் குடியிருப்புகள்.

வினா 163— திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயவரம் வட்டம், பாலையூர் கிராமத்தில் பணியாற்றும் காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் திட்டம் அரசு பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இப்பணி எந்த ஆண்டு துவங்கப்படும்?

[1979 பிப்ரவரி 12

விடை —

(அ) மற்றும் (ஆ) காவலர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் காவலர்களுக்குப் படிப்படியாக குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. மாயவரம் வட்டம், பாலையூரில் காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்காக 93 செண்ட் நிலம் 1976-ல் ஆர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கும்போது பாலையூரில் குடியிருப்புகள் கட்டும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

கூடலூர் தொகுதியில் சாண எருவுக்கான கட்டணம்.

வினா 164—திரு. கே. உச்சி : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியிலுள்ள மசினகுடி, மாவனள்ளா, ஆனைகட்டி, பொக்கபூர், சிரியூர் ஆகிய பகுதிகளிலிருந்து வன இலாக்கா அதிகாரிகளின் அனுமதியுடன் வழங்கப்படும் காய்ந்த சாண எருவுக்கு கட்டணம் ஏதாவது விதிக்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) மேலே குறிப்பிட்ட இடங்களிலுள்ள மாட்டுப் பட்டிகளிலிருந்து சாண எருவை எடுத்துச் செல்ல விவசாயிகளிடமிருந்து கீழ்க்கண்ட கட்டணத் துகைகள் வசூலிக்கப்படுகின்றன :—

ஒரு வண்டி பாரத்திற்கு (½ டன்) ரூ. 3.

ஒரு லாரி பாரத்திற்கு (5 டன்) ரூ. 30.

நீலகிரி மாவட்ட ஆதிவாசிகளுக்குச் சலுகைகள்.

வினா 165—திரு. கே. உச்சி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் குடியிருக்கும் ஆதிவாசிகள் கோத்தர்கள். தொதுவர்கள், குரும்பர்கள், இருளர்கள் எத்தனை பேர்கள் ?

(ஆ) அவர்களுக்காக அரசு செய்துள்ள நன்மைகள் யாவை?



1979 பிப்ரவரி 12]

விடை —

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஆதிவாசிகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

கோத்தர்கள்— 3,425

தொதுவர்கள்— 852

குரும்பர்கள்— 4,376

இருளர்கள்— 5,544

(ஆ) மத்திய அரசின் வழி முறைகளின் பேரில் தமிழ் நாட்டில் நிலவும் சூழ்நிலைகளுக்கேற்ப சில மாறுதல்கள் செய்து துணைத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பழங்குடியினரின் மேம்பாட்டு திட்டப் பகுதிகள் வரையறுக்கப்பட்டன. அதாவது, குறைந்த பட்சம் 10,000 மக்கள் வாழும் தொடர்ச்சியான கிராமங்களில் 50 விழுக்காடு பழங்குடி மக்கள் வாழும் பகுதிகள் துணைத் திட்டப்பகுதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. நீலகிரி மாவட்டத்தில் வாழ்கின்ற பழங்குடியினர் மேற்சொன்ன வழிமுறைக்குட் படாததால், இம்மாவட்டம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. எனினும் 1978-83-ம் ஆண்டிற்கான மத்தியகால திட்டத்தின் கீழ் பண்டையப் பழங்குடியினருக்கான திட்டம் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மத்திய அரசின் ஒப்புதலுடன் இத் திட்டம் செயல்படும்போது நீலகிரி மாவட்டத்தில் உள்ள எல்லாப் பண்டையப் பழங்குடியினரும் சமுதாய பொருளாதார முன்னேற்றம் பெறுவார்கள். இதற்கிடையில் அரிசனம் மற்றும் பழங்குடி நலத்துறையின் மூலமும், நிதித் துறையின் மூலமாக செயல் படுத்தப்படுகின்ற மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமும் கூடலூர் தாலூகாவிலுள்ள பழங்குடியினர் கீழ்க்கண்ட பல நன்மைகளையும், சலுகைகளையும் பெற்று வருகின்றனர்:—

1. கல்வி வசதி.—22 பள்ளிகள் திறக்கப்பட்டு 1,500 பழங்குடியினரின் குழந்தைகள் கல்வி வசதி பெறுகிறார்கள்.

2. வீட்டு வசதி.—985 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு 985 பழங்குடியினர் பயனடைந்துள்ளனர்.

3. குடி தண்ணீர்வசதி.—29 பழங்குடியினர் வாழும் கிராமங்களில் 180 குடி தண்ணீர் கிணறுகள் தோண்டப் பட்டுள்ளன.

4. மின் இணைப்பு.—பழங்குடியினர் வாழ்கின்ற 207 கிராமங்களில் மின் இணைப்பு வசதி செய்யப்பட்டுள்ளது.

[1979 பிப்ரவரி 12

5. சாலை மற்றும் போக்குவரத்து.—பழங்குடியினர் வாழ்கின்ற 202 கிராமங்களுக்கு சாலை மற்றும் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

6. கூடை பின்னுதல் போன்ற தொழில் வசதி.—உதகமண்டலத்தில் இயங்குகின்ற இரண்டு கூட்டுறவு சங்கங்களின் மூலம் 460 பழங்குடியினர் கூடை பின்னுதல் போன்ற கைத்தொழில் செய்து அவைகளின் மூலம் பயனடைகின்றனர்.

7. விவசாயம்.—190 பழங்குடியினர்களுக்கு விவசாயக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. பழங்குடி விவசாயிகளுக்கு 149 ஜோடி உழவு மாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

590 ஏக்கர் பரப்பளவிற்கு மண் அரிப்பு ஏற்படாமல் பாதுகாப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டு 737 பழங்குடி விவசாயிகள் நன்மையடைந்துள்ளனர்.

8. நில ஒப்படைப்பு.— 1,898 பழங்குடியினர்களுக்கு 3,449 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலங்கள் அவர்களின் விவசாயத்திற்காக ஒப்படைப்பு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

9. பொது சுகாதாரம்.—மூன்று ஆரம்ப பொது மருத்துவ நிலையங்கள் மூலம் சுமார் 14,000 பழங்குடியினர் பயனடைந்து வருகிறார்கள்.

வினா 166 —திரு. கே. உச்சி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நீலகிரி மாவட்ட கூடலூர் தாலூக்காவில் குடியிருக்கும் குரும்பர்கள், இருளர்கள், பணியர்கள், எத்தனை பேர்கள் ?

(ஆ) அவர்களின் நலனில் அக்கரை கொண்டு அரசு செய்துள்ள நன்மைகள் யாவை ?

விடை—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலூக்காவில் 3,403 குரும்பர்களும், 705 இருளர்களும், 5,178 பணியர்களும் வசிக்கிறார்கள்.



1979 பிப்ரவரி 12]

(ஆ) மத்திய அரசின் வழிமுறைகளின் பேரில் தமிழ்நாட்டில் நிலவும் சூழ்நிலைகளுக்கேற்ப சில மாறுதல்கள் செய்து துணைத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பழங்குடியினரின் மேம்பாட்டுப் பகுதிகள் வரையறுக்கப்பட்டன. அதாவது குறைந்தது 10,000 மக்கள் வாழும் தொடர்ச்சியான கிராமங்களில் 50 விழுக்காடு பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளின் துணைத் திட்டப் பகுதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டு, நீலகிரி மாவட்டத்தில் வாழ்கின்ற பழங்குடியினர் பகுதிகள் மேற்சொன்ன விதிமுறைக்குட்படாததால், இம்மாவட்டம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. எனினும், 1978-83-ம் ஆண்டிற்கான மத்திய கால திட்டத்தின்கீழ் பண்டைய பழங்குடியினருக்கான திட்டம் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மத்திய அரசின் ஒப்புதலுடன் இத்திட்டம் செயல்படும்போது நீலகிரி மாவட்டத்தில் உள்ள எல்லாப் பண்டையப் பழங்குடியினரும், சமுதாய பொருளாதார முன்னேற்றம் பெறுவார்கள். இதற்கிடையில், அரிசனம் மற்றும் பழங்குடி நலத்துறையின் மூலமும், நீதித்துறையின் மூலமாகவும் செயல்படுத்தப்படுகிற மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமும் கூடலூர் தாலுக்காவிலுள்ள பண்டையப் பழங்குடியினர் கீழ்க்கண்ட பல நன்மைகளையும் சலுகைகளையும் பெற்று வருகின்றனர்:—

1. கல்வி வசதி.—கூடலூர் தாலுக்காவில் 10 பள்ளிகள் திறக்கப்பட்டு சுமார் 715 மலைவாழ் மக்கள் கல்வி பெறுகின்றனர்.

2. வீட்டு வசதி.—இத்தாலுக்காவில் பழங்குடியினர் குடும்பங்களுக்கு 269 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

3. குடி தண்ணீர் வசதி.—இத்தாலுக்காவில் உள்ள மலைப் பகுதி மக்கள் வாழும் கிராமங்களில் 25 குடிநீர் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன.

4. மின் இணைப்பு.—இத்தாலுக்காவில் 116 கிராமங்கள் மின் இணைப்பு பெற்றுள்ளன.

5. சாலை மற்றும் போக்குவரத்து.—116 குடியிருப்புகள், சாலை மற்றும் போக்குவரத்து வசதிகள் பெற்றுள்ளன.

6. உழவு மாடுகள் வழங்குதல்.—149 ஜோடி உழவு மாடுகள் இப்பகுதி பழங்குடியினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

7. நில ஒப்படைப்பு.—இத்தாலுக்காவில் 917 ஆதிவாசிகளுக்கு 1,258.04 ஏக்கர் நிலங்கள் விவசாயத்திற்கு ஒப்படைப்பு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

[1979 பிப்ரவரி 12

8. பொது சுகாதாரம்.—இரண்டு ஆரம்ப பொது மருத்துவ நிலையங்கள் மூலம் சுமார் 10,600 ஆதிவாசிகள் பயனடைகின்றனர்.

உதகை தொகுதி முள்ளி பகுதியை சுற்றுலா மையமாக்கல்.

வினா 167—திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகை தொகுதியில் முள்ளியில் ஓடும் ஆற்றில் படகு குழாம் கட்டவும், சுற்றுலா பயணிகள் சென்று பார்க்கத்தக்க வகையில் மேம்படுத்தவும் உத்தேசம் உண்டா?

விடை

இல்லை.

மாஞ்சோலை எஸ்டேட்டில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி.

வினா 168—திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மாஞ்சோலை எஸ்டேட்டில் உள்ள அரசு உயர் நிலைப் பள்ளியில் ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித்தனியாக வகுப்பு நடத்தும் முறையில் தடுப்புகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிலையை மாற்ற அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது?

விடை

(அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித்தனியாக வகுப்பு நடத்தும் முறையில் தடுப்புகள் அமைப்பது பற்றி வரும் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.



1979 பிப்ரவரி 12]

குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள்.

வினா 169—திரு. டி.கே. கபாலி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசை மாற்று வாரியம் 1970-ல் இருந்து 1976 முடிய கட்டிய வீடுகள் எத்தனை?

(ஆ) 1977-ம் வருடம் கட்டிய வீடுகள் எத்தனை?

(இ) கட்டிய வீட்டில் எல்லாம் குடியேறிவிட்டார்களா?

(ஈ) இல்லையெனில், எத்தனை வீடுகள் காலியாக இருக்கின்றன?

விடை—

(அ) குடிசை மாற்று வாரியத்தால் 1970ம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு முடிய கட்டி முடிக்கப்பட்டக் குடியிருப்புகளின் எண்ணிக்கை } 20,291

(ஆ) 1977-ல் கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை. 1,552

(இ) இல்லை.

(ஈ) 1032 குடியிருப்புகள் (31-12-1977 நிலவரப்படி) காலியாக உள்ளன.

கிரிஸ்தியா நகர உயர்நிலைப் பள்ளி.

வினா 170—திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கிரிஸ்தியா நகரம் (T.D.T.A) உயர்நிலைப் பள்ளியில் 9-வது நிலைக்கு மேல் (9th Standard) மாணவிகள் சேர்க்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

(அ) ஆம்.

[1979 பிப்ரவரி 12

(ஆ) கிறிஸ்டியா நகரம் டி.டி.டி.ஏ. (T.D.T.A.) உயர்நிலைப் பள்ளியில் மாணவிகளைச் சேர்க்க அனுமதி வேண்டி பள்ளிக் கல்வி இயக்குநரால் பெறப்பட்ட கோரிக்கை அன்னாரால் பரிசீலனை செய்யப்பட்டு, மேற்படி பள்ளியில் மாணவிகளைச் சேர்க்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. கிறிஸ்டியா நகரத்திலிருந்து சுமார் 3 பர்லாங் தூரத்தில் பண்டாரச் செட்டிவிளை என்ற ஊரில் ஏற்கனவே பெண்களுக்கான தனி உயர்நிலைப்பள்ளி நல்லமுறையில் இயங்கி வருவதாலும், கிறிஸ்டியா நகரத்துப் பள்ளி மாணவிகளை பிரித்து அங்கு சேர்க்கப்பட்டு வருவதாலும் அக்கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

## பணிக்க நாடார் குடியிருப்பு நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் இணைப்பு.

வினா 171—திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் தாலூகா பணிக்க நாடார் குடியிருப்பு கிராமத்தில் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு பல வருடங்களாக மின் இணைப்பு கொடுக்கப்படாமலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் மின் இணைப்பு கொடுக்க, அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

(அ) & (ஆ) இம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 11-8-78 அன்று மின் இணைப்பு கொடுக்கப்பட்டுவிட்டது.

## ரெட்டியார் பாளையம் குடிமராமத்து அணை

வினா 172—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம் ரெட்டியார் பாளையம் ஊராட்சியில் குடிமராமத்து அணை எப்போது உடைந்தது?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) கடந்த ஆண்டு வெள்ளத்தினால் பக்கச் சுவர் சேதமடைந்தன. அணைக்கு சேதம் இல்லை.



79 பிப்ரவரி 12]

(ஆ) திருவண்ணாமலை பொதுப்பணித்துறை செயல் பொறியாளர், சேதங்களைச் சீர்செய்ய ரூ. 46,300-ல் மதிப்பீடு தயாரித்து ஒதுக்கீடு கேட்டு விண்ணப்பித்துள்ளார். 1977–78 ஆம் ஆண்டில் போதிய நிதி ஒதுக்கீடு இல்லாமையால் அவ்வாண்டிலேயே வேலை மேற்கொள்ள இயலவில்லை.

## சங்குக் குளிப்பு.

வினா 173—திரு. சி. கோவிந்தராசன்: மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக கடல்களில் தற்போது சங்குகள் எங்கெங்கு எடுக்கப்படுகின்றன?

(ஆ) அவற்றினால், ஆண்டொன்றுக்கு அரசுக்குக் கிடைக்கும் வருமானம் எவ்வளவு?

விடை—

(அ) தற்போது பெருமளவில் தூத்துக்குடி கடலிலும், மன்னார் வளைகுடாவிலும், சிவகெங்கை, கன்னிராஜபுரம் பகுதியிலுள்ள கடலிலும் சங்குகள் எடுக்கப்படுகின்றன.

(ஆ) சங்குக் குளிப்பு மூலம் 1975–76, 1976–77, 1977–78 ஆகிய மூன்று ஆண்டுகளில், அரசுக்குக் கிடைத்த ஆண்டு வருமானம் கீழ் வருமாறு:—

| | ரூபாய். |
|---|---|
| 1975–76 .. .. .. .. | 35,408·31 |
| 1976–77 .. .. .. .. | 22,276·66 |
| 1977–78 .. .. .. .. | 5,216·56 |

## இடைக்காட்டூர் அரிசன குடியிருப்பில் வைகைக் கரைக்குத் தடுப்புச் சுவர்.

வினா 174—திரு. வ. மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மை - நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மானாமதுரைத் தொகுதி, இடைக்காட்டூர் அரிசன குடியிருப்பு வைகை வெள்ளத்தால் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க ஒரு தடுப்புச் சுவர் கட்டும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா?

விடை—

இல்லை.

[1979 பிப்ரவரி 12

### கட்டனூரில் அரிசனநல மாணவர் விடுதி.

வினா 175—திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கட்டனூரில் அரிசன நல மாணவர் விடுதி ஒன்றை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் என்றால், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### ஆதிவராகநல்லூர்—அரியகோஷ்டி பாசன வாய்க்கால்.

வினா 176—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை—நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சிதம்பரம் வட்டம் ஆதிவராகநல்லூர்—அரியகோஷ்டி வாய்க்கால் பாசன குழாயை பெரிதுபடுத்த வேண்டி கோரிக்கை மனு அரசுக்கு கிடைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

### பக்கிரிமான்யம் ஒன்றிய ஆரம்பப் பள்ளிக் கட்டிடம்.

வினா 177—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிதம்பரம் வட்டம் கீரபாளையம் ஒன்றியம் பக்கிரிமான்யம் ஒன்றிய ஆரம்பப் பள்ளிக்குக் கட்டிடம் இல்லாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மாவட்ட ஆட்சியர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.



1979 பிப்ரவரி 12]

### பொந்தியாகுளம் தொடக்கப் பள்ளிக்கு நிரந்தரக் கட்டிடம்.

வினா 178—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டம் அம்மாபேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த பொந்தியாகுளம் தொடக்கப்பள்ளிக்கூடத்திற்கு நிரந்தரமான கட்டிடம் இல்லாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிதாக ஒரு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை:

(அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றிய உபரி நிதியிலிருந்து அப்பள்ளிக்கு சொந்தக் கட்டிடம் கட்ட கருத்துரு ஒன்று ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

### சேரங்கோடு தேயிலை தொழிற்சாலை.

வினா 179—திரு. கே. : உச்சி மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதி சேரங்கோடு பகுதியில் புதிதாகக் கட்டப்பட்ட தேயிலை தொழிற்சாலைக்கு எப்பொழுது திட்டம் போட்டு அடிக்கல் நாட்டப்பட்டது ?

(ஆ) அதற்கான திட்ட செலவு தொகை எவ்வளவு ?

(இ) அத்தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களில் இலங்கைத் தமிழர்கள் எத்தனை பேர்கள் ?

விடை—

(அ) கட்டிடம் கட்டும் வேலை 29—10—1976-ம் தேதி துவங்கப்பட்டது.

(ஆ) திட்ட மதிப்பீடு ரூபாய் 100 இலட்சம்.

(இ) தற்போது 44 இலங்கைத் தமிழர்கள் இத்தொழிற்சாலையில் பல்வேறு இருக்கைகளில் பணியாற்றி வருகின்றனர்.

[1979 பிப்ரவரி 12

## நீண்டதூரப் பேருந்துகளில் பெண்களுக்குத் தனி இடம்.

வினா 180—திரு. ஓ. சோ. வேலுச்சாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீண்டதூரப் பல்லவன் துரிதப் பேருந்துகளில் பெண்களுக்கு தனி இடம் ஒதுக்கும் உத்தேசம் உண்டா?

விடை

பெண்களுக்கென பிரத்யேகமாக இரண்டு இடங்கள், பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்துகளில் 16—11—78 முதல் ஒதுக்கப்பட்டுள்ளன.

## அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குதல்.

வினா 181—திரு. ஓ. சோ. வேலுச்சாமி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கயத்தாறு, ஒட்டப்பிடாரம் (திருநெல்வேலி மாவட்டம்) ஆகிய இரண்டு ஒன்றியங்களிலும் எத்தனை கிராமங்களில் அரிசனங்களுக்கு இதுவரை வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன?

விடை—

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கயத்தாறு ஒன்றியத்தில் 12 கிராமங்களிலும், ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தில் 9 கிராமங்களிலும் அரிசனங்களுக்கு இதுவரை வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

## கடனாநதி அணையிலிருந்து உயர்மட்டக் கால்வாய்.

வினா 182—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள கடனாநதி நீர்த்தேக்கத்தின் தென் பகுதியில் கடனா அணையின் வலது புறத்தில் உயர் மட்டக் கால்வாய் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தால் பயன் அடையும் குளங்களின் பெயர்களும் நில விஸ்தீரணமும் யாது?



1979 பிப்ரவரி 12]

விடை—

(அ) இத்திட்டம் முதல்நிலை ஆய்வில் உள்ளது. இது குறைந்த முன்னுரிமையுடையத் திட்டமாகும்.

(ஆ) ஆய்வு முடிந்த பிறகுதான் இத்திட்டத்தைப் பற்றிய விவரங்கள் கிடைக்கக்கூடும்.

## விக்கிரமசிங்கபுரம் மருத்துவமனை.

வினா 183—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள விக்கிரமசிங்கபுரம் ஆஸ்பத்திரியை விரிவுபடுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

## கோத்தகிரி மருத்துவ மனை.

வினா 184—திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோத்தகிரி அரசு மருத்துவ மனைக்கு புதிய கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

விடை—

இல்லை.

## விற்பனை வரி நிலுவை.

வினா 185—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977-78-ல் வசூலாகாமல் நிலுவையில் இருக்கும் விற்பனை வரித்தொகை எவ்வளவு?

விடை—

1977-78ல் வசூலாகாமல் நிலுவையில் இருக்கும் வலரிகவரி ரூ. 2,190.50 இலட்சமாகும்.

தஞ்சை மாவட்டத்தில் துறவு வெட்ட மான்யம்.

வினா 186—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் 1977-78-ல் விவசாயிகள் துறவு வெட்டுவதற்கு அரசு மான்யம் ஏதேனும் வழங்கியுள்ளதா ?

விடை—

இல்லை.

மேல மூங்கிலடி வாய்க்கால் பாலம்.

வினா 187—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிதம்பரம் வட்டம் மேலமூங்கிலடி வாய்க்கால் பாலம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1978-79ல் பாலம் கட்டும் வேலை மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் பணி மேற் கொண்டு முடிக்கப்படும்.

பத்திரப் பதிவுத் துறையில் நகல் எழுதுவோர் தேர்வு.

வினா 188—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கூட்டு றவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரப்பதிவுத் துறையில் நகல் எழுதுவோர் தேர்வு 1974 ஆம் ஆண்டு நடந்ததா ?

(ஆ) அந்தத் தேர்வில் தேறியவர்கள் எத்தனை பேர் ?

(இ) 1974 ஆம் ஆண்டுக்குப்பின் தேர்வு நடக்காதகாரணம் என்ன ?



விடை

(அ) ஆம்.

(ஆ) 5,217 பேர் தேர்வு பெற்றனர்.

(இ) 1974-ல் தேர்வு நடத்தப்பட்டு 1975-ல் உரிமங்கள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட உரிமங்கள் போதுமானவை என்பதால், 1974-ம் ஆண்டிற்குப்பின் தேர்வு நடத்தப்பட வில்லை.

வானூர் தொகுதி அரிசனக் குடியிருப்புகளுக்குச் சாலை வசதிகள்.

வினா 189—திரு. மொ. பரமசிவம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

வானூர் தொகுதியில் அரிசன நலத்துறையால் கிராம சாலைகள், சுடுகாடு செல்லும் பாதைகள் அமைத்துத் தரும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை

வானூர் தொகுதியில் உள்ள கோ. மடிப்பட்டு, திருவக் கரை, தேவநந்தல் ஆகிய கிராமங்களில் அரிசன நலத் துறையினரால் கிராம சாலைகள் மற்றும் மயான பாதை வசதி யளிக்க நில ஆர்சித முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு வரு கின்றன. விரைவில் நில ஆர்சிதம் செய்யப்பட்டு பாதைகள் அமைத்துத்தரப்படும் என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித் துள்ளார்.

மரக்காணம் பகுதியில் மீனவர்களுக்கு தொழில் முன்னேற்ற மூலதன உதவி.

வினா 190—திரு. மொ. பரமசிவம் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மரக்காணம் மற்றும் சுற்றுப்புற பகுதியில் வாழும் பெரும்பாலான மீனவத் தொழிலாளர்களுக்கு தொழில் முன் னேற்ற மூலதன உதவி செய்யும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போதுமுதல் அமுல்படுத்தப்படும்?

விடை

(அ) மரக்காணம் மற்றும் சுற்றுப்புற பகுதியில் வாழும் பெரும்பாலான மீனவத் தொழிலாளர்களுக்கு, தொழில் முன்னேற்ற மூலதன உதவி செய்யும் உத்தேசம் எதுவும் மீனளத் துறையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## வானூர் ஒன்றியத்தில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

வினா 191—திரு. மொ. பரமசிவம்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நடப்பு ஆண்டில் வானூர் ஒன்றியத்தில் புதிய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புகள் வழங்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

விடை

இப்பகுதியில் நடப்பு ஆண்டில் சுமார் 150 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க மின் வாரியம் உத்தேசித்துள்ளது.

## கந்தாடு அரிசன காலனியிலிருந்து சுடுகாட்டுக்குச் செல்லும் பாதை அமைத்தல்.

வினா 192—திரு. மொ. பரமசிவம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மரக்காணம் ஒன்றியம், கந்தாடு அரிசன காலனியிலிருந்து சுடுகாட்டுக்குச் செல்லும் பாதை அமைத்துத் தரும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுல் படுத்தப்படும்?]

விடை

(அ) ஆம்.

(ஆ) தற்போது நில ஆர்ஜிதம் செய்வதற்கான முன்மொழிவு தென் ஆற்காடு மாவட்ட ஆட்சியாளரால் தயாரிக்கப்பட்டு வருகின்றது. கூடிய விரைவில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு பாதை அமைத்துத் தரப்படும்.



## உடன்குடி—வேப்பங்காடு சாலை.

வினா 193—திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் உடன்குடி—வேப்பங்காடு (வழி ...ாகைவிளை) நெடுஞ்சாலை, பேருந்து செல்ல முடியாத அளவுக்கு, பழுதடைந்துள்ளதை இந்த அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தச் சாலையைப் புதுப்பிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை

(அ) சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்ற சாலை அரசு இதர மாவட்ட சாலை. இது கருங்கல் பரப்பு கொண்டதாக நல்ல முறையில் நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருவதாகவும், தற்சமயம் பேருந்துகள் சென்று கொண்டிருக்கின்றன என்பதாகவும் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை-கிராமப் பணித் துறை) தெரிவித்துள்ளார்.

(ஆ) இச் சாலை மேம்படுத்துதலுக்கென்று நடப்பு நிதி ஆண்டில் பராமரிப்பு மதிப்பீட்டில் ரூ. 5,300 மதிப்பிற்கு சரள் சேகரிப்பு தளத்தை செம்மைப்படுத்துவதற்காக அங்கீகாரம் செய்யப்பட்டு மேற்படி வேலை துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றது. நிதி நிலைமையைப் பொறுத்து இச்சாலைக்கு கற்பரப்பு புதுப்பித்தல் வேலை எடுத்துக் கொள்ளப்படும்.

## ஆறுமுகனேரி—அம்மன்புரம் சாலை.

வினா 194—திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஆறுமுகனேரி—அம்மன்புரம் சாலையினை (வழி மூலைக்கரைப்பட்டி) தார் சாலையாக மாற்றும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்?

[1979 பிப்ரவரி 12

விடை

(அ) ஆம்.

(ஆ) ஆறுமுகனேரி—அம்மன்புரம் சாலையில் ஒரு கிலோ மீட்டருக்கு வேலை முடிவு பெற்றுள்ளது. மீதமுள்ள பகுதிக்கு படிப்படியாக நிதி நிலைமைக்குத் தகுந்தவாறு தார்ச் சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

## வேடநாயக்கர் இனத்தவரை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்தல்.

வினா 195—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்வராயன் மலையின் கீழ் வாழும் வேடநாயக்கர் என்ற பின்தங்கிய இனத்தவரை தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை

செயற்குறிப்பில்லை.

## நாகனூர் அரிசன மாணவர் விடுதிக் கட்டடம்.

வினா 196—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், நாகனூரில் அரிசன நல இலாகாவால் நடத்தப்பட்டு வரும் விடுதிக்கு சொந்தக் கட்டிடம் ஒன்று கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை

தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், நாகனூரில் நடத்தப்பட்டுவரும் அரிசன மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை.



1979 பிப்ரவரி 12]

## சிதம்பரம் வட்டத்தில் உள்ள ஊராட்சி நூல் நிலையங்கள்.

வினா 197—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில் எத்தனை ஊராட்சி மன்றங்களில் நூல் நிலையங்கள் உள்ளன ?

(ஆ) மாதா மாதம் எவ்வளவு ரூபாய்க்குப் புத்தகங்கள் வாங்க அனுமதிக்கப்படுகிறது ?

(இ) எத்தனை பஞ்சாயத்துக்களில் நூலகக் கட்டடங்கள் உள்ளன ?

விடை

(அ) 80 ஊராட்சிகள் நூல் நிலையங்கள் நடத்துகின்றன.

(ஆ) மாதா மாதம் புத்தகம் வாங்கத் தொகை ஏதும் அனுமதிக்கப்படவில்லை.

(இ) நான்கு ஊராட்சிகளில்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் அரிசனங்களுக்கு வீடுகள்.

வினா 198—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் அரிசனங்களுக்கு அரசு சார்பில் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகள் எத்தனை ?

(ஆ) அவற்றுள் தற்போது இடிந்த நிலையில் உள்ளது எத்தனை ?

(இ) இடிந்ததற்கான காரணம் என்ன ?

விடை

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் அரிசனங்களுக்கு அரசு சார்பில் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 1,096.

(ஆ) மற்றும் (இ). அவற்றுள் குடியிருப்பதற்கு வகையற்றதாக இடிந்த நிலையில் உள்ள வீடுகள் ஏதுமில்லை.

[1979 பிப்ரவரி 12

விளாத்திக்குளத்தில் அரிசன, பிற்பட்ட வகுப்பு மாணவியர் களுக்கு விடுதி.

வினா 199—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளத்தின் அரிசன பிற்பட்ட வகுப்பு மாணவி யர்களுக்குத் தனி விடுதி ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவங்கப்படும் ?

(இ) எத்தனை மாணவியர் தங்கிப் படிக்க ஏற்பாடு செய் யப்படும்?

விடை

(அ) விளாத்திக் குளத்தில் அரிசன, பிற்பட்ட வகுப்பு மாணவியர்களுக்கு விடுதி துவங்குவதற்கான உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) & (இ) இவ்வினாக்கள் எழவில்லை.

மாநிலங்களுக்கிடையே சர்க்கரை கொண்டு செல்லுதல்.

வினா 200—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலங்களுக்கு இடையே இருந்து வந்த சர்க்கரை போக்குவரத்தின் மீதான தடை அண்மையில் நீக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் இதன் விளைவாக ஏற்பட்டுள்ள பலன் என்ன?

விடை

(அ) & (ஆ) சர்க்கரையின் மீது இருந்த கட்டுப் பாடுகள் (விற்பனை விநியோகம் விலை நடமாட்டம்) அனைத்தும் 16-8-78முதல் நீக்கப்பட்டுவிட்டதாக மையஅரசு அறிவித்துள்ளது. இதன் விளைவாக வெளிச்சந்தை சர்க்கரையின் விலை தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது.



1979 பிப்ரவரி 12]

சென்னை அண்ணா சாலையை அகலப்படுத்தும் திட்டம்

வினா 201—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அண்ணா சாலையை அகலப்படுத்தும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

விடை

அண்ணா சாலையை அகலப்படுத்துவதற்குத் தேவையான கையகப்படுத்த வேண்டிய கட்டடங்களின் மதிப்பு தற்போது தலைமைப் பொறியாளர் (நெ. கி. ப.) துறையால் ஆராயப்பட்டு வருகிறது. எனவே இம்மதிப்பீடு தயார் செய்யும் பணி முழு அளவில் முடிவு பெற்றதும், அரசின் ஒப்புதல் பெற்று, வேலை தொடங்கப்பெறும்.

கன்னியாகுமரியில் விவசாயக் கல்லூரி.

வினா 202—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை நீர்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் விவசாயக் கல்லூரி அமைக்ககோரி விண்ணப்பம் ஏதேனும் அரசுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு அதுபற்றி மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை யாது ?

விடை (அ) ஆம்.

(ஆ) தற்போது கோவை, மதுரை மற்றும் அண்ணாமலை நகரிலுள்ள வேளாண்மைக் கல்லூரிகளிலிருந்து வெளிவரும் வேளாண்மைப் பட்டதாரிகள் மாநிலத்தின் தேவைக்குப் போது மானதாக இருக்கிறார்கள். எனவே மேலும் ஒரு வேளாண்மை கல்லூரியை அமைக்கத் தேவையில்லை.

தாழ்த்தப்பட்டோருக்கு பணியாளர் தேர்வுப்போட்டிக்குப் பயிற்சி அளித்தல்.

வினா 203—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் குழு நடத் தும் தேர்வு எழுத தாழ்த்தப்பட்டோருக்கு அரசின் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றதா?

[1979 பிப்ரவரி 12

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் எத்தனை பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

விடை

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக்குழுவினரால் நடத்தப்படும் நான்காவது பிரிவு அரசு ஊழியர் (எழுத்தர்) தேர்வு போட்டிக்கு அரசு செலவில் மலைசாதியினருக்கும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் அதிலிருந்து மதம்மாறிய கிருத்தவர்கட்கும் 1974–75 முதல் தனிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

(ஆ) சென்ற 1977-78 ஆம்ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக்குழுவானது குரூப்: பணிக்காகத்தேர்வு நடத்தாமையால் அரிசன மற்றும் மலைவாழ் நபர்களுக்குத் தனிப்பயிற்சி அளிக்கவில்லே. நடப்பாண்டில் 1978-79 அம்மாதிரி குரூப் 4 பணிக்கு மேற்படி தேர்வுக்குழு தேர்வு நடத்துமேயானல் மேற்படி தனிப்பயிற்சித் தொடர்ந்து அளிக்கப்படும்.

ஊராட்சிகளில் வானொலி மன்றங்கள்.

வினா 204— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி மன்றப் பகுதிகளில் வானொலி மன்றங்கள் அமைத்திட அரசு நிதி உதவி ஏதேனும் வழங்கி வருகின்றதா?

விடை இல்லை.

அரிசன, பழங்குடி மாணவர்கள் பகலுணவுத் திட்டச் செலவு.

வினா 205— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1977–78-ம் ஆண்டில் அரிசன மற்றும் பழங்குடி மாணவர்களின் பகலுணவுத்திட்டத்திற்காக செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை

அரிசன நலத்துறையின் கீழுள்ள பள்ளிகளில் பயிலும் அரிசன மற்றும் பழங்குடி மாணவர்களின் 1977–78-ம் ஆண்டு பகலுணவுத் திட்டச் செலவு—ரூ. 32,95,798.94



1979 பிப்ரவரி 12]

அரிசன நலத்துறையின்கீழ் இல்லாத இதர பள்ளிகளில் பயிலும் அரிசன மற்றும் பழங்குடி மாணவர்களின் 1977–78-ம் ஆண்டு பகலுணவுத் திட்டச் செலவு—ரூ. 6,75,419.90.

1977-78-ம் ஆண்டில் அரிசன மற்றும் பழங்குடி மாணவர்களின் பகலுணவுத் திட்டத்திற்காக செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகை—ரூ. 39,71,218.84.

அரிசன நல உயர்நிலைப் பள்ளிகளில் நூலகங்கள்

வினா 206—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ம் ஆண்டில் நூலக வசதிபெற்ற அரிசன பழங்குடி மக்களுக்கான உயர்நிலைப் பள்ளிகள் எவை?

(ஆ) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

விடை

(அ) 1977-78 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட 15 அரசு அரிசனப் பள்ளிகளும், பழங்குடி மக்களுக்கான 3 உறைவிடப் பள்ளிகளும் நூலக வசதி பெற்றுள்ளன.

அரசு அரிசனப் பள்ளிகள்:

(1) கன்னிகாபுரம், சென்னை.
(2) வடகரை, செங்கல்பட்டு மாவட்டம்.
(3) மீனம்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம்.
(4) பாலூர், செங்கல்பட்டு மாவட்டம்.
(5) செவ்வாப்பேட்டை, செங்கல்பட்டு மாவட்டம்.
(6) நாகல்கேணி, செங்கல்பட்டு மாவட்டம்.
(7) இஞ்சப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம்.
(8) நல்லம்மாள்புரம், திருநெல்வேலி மாவட்டம்.
(9) திருத்தலையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
(10) துலையாநத்தம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
(11) காட்டுப்பாப்பாக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
(12) நெடுங்குளம், தஞ்சாவூர் மாவட்டம்.
(13) கீழ்புனவாசல், தஞ்சாவூர் மாவட்டம்.
(14) அரக்கோணம், வட ஆற்காடு மாவட்டம்.
(15) கலங்காணி, சேலம் மாவட்டம்.

[1979 பிப்ரவரி 12

அரசு பழங்குடி உறைவிடப் பள்ளிகள்:

(1) வாழவந்திநாடு, சேலம் மாவட்டம்.

(2) முள்ளுக்குறிச்சி, சேலம் மாவட்டம்.

(3) பேச்சிப்பாறை, கன்னியாகுமரி மாவட்டம்.

(ஆ) இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 18,107·75 (ரூபாய் பதினெட்டாயிரத்து நூற்றி ஏழும் பைசா எழுபத்தி ஐந்தும்.)

## முன்னோடிப் பயிற்சி நிலையத்தில் பயின்று வெற்றிப் பெற்ற அரிசன மாணவர்கள்.

வினா 207—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முன்னோடி பயிற்சி நிலையத்தில் பயின்று இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி மற்றும் இந்திய காவல்துறைப் பணியாளர் தேர்வில் 1977-78-ம் ஆண்டில் வெற்றிப்பெற்ற அரிசன மாணவர்கள் எத்தனை பேர்?

விடை

சென்னையிலுள்ள முன்னோடி பயிற்சி நிலையத்தில் பயின்ற மாணவர்களில் 1977-78-ம் ஆண்டில் 2 (இரண்டு மாணவர்கள் மட்டும்) இந்திய ஆட்சி பணிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள். இந்திய காவல் பணிக்கு யாதொரு மாணவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

## மாயூரம் ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கான பராமரிப்புச் செலவுகள்.

வினா 208—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78-ம் ஆண்டில் மாயூரம் ஊராட்சி ஒன்றிய சாலைகளுக்காகவும் அவைகளின் பராமரிப்புக்காகவும் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) அதில் அரசின் மான்யத் தொகை எவ்வளவு?

விடை

(அ) ரூ. 1,48,323.05

(ஆ) ரூ. 74,568·00 அரசின் மான்யத் தொகை ஆகும்.



79 பிப்ரவரி 12]

## பள்ளிகளில் ஒலி, ஒளிக்காட்சிகள்.

வினா 209—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பள்ளிகளில் ஒலி, ஒளிக் காட்சியின் மூலம் கல்வியறிவினை மேம்படுத்த 1977-78-ம் ஆண்டில் அரசு செலவழித்த தொகை எவ்வளவு? மாவட்ட வாரியாக?

விடை

பள்ளிகளில் ஒலி, ஒளிக் காட்சியின் மூலம் கல்வியறிவினை மேம்படுத்த, 1977-78 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட ஐந்து மாவட்டங்களிலுள்ள ஐந்து அரசு உயர் நிலைப் பள்ளிகளுக்கு மி.மீ. புரொஜக்டர், அரசு செலவில் வழங்க ரூ. 50,000மும் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலுள்ள மாநில பட நூலகத்திற்கு கல்வி சம்பந்தமான திரைப்படங்கள் வாங்க ரூ. 7,600-ம் ஆக மொத்தம் ரூ. 57,600 செலவழித்துள்ளது.

1. அரசு உயர்நிலைப் பள்ளி, தக்கலை, கன்னியாகுமரி மாவட்டம்—ரூ. 10,000.
2. அரசு உயர்நிலைப் பள்ளி, ஆலங்குடி, புதுக்கோட்டை மாவட்டம்—ரூ. 10,000.
3. அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்—ரூ. 10,000
4. ஆர். எஸ். அரசு உயர்நிலைப் பள்ளி, பரமக்குடி, ராமநாதபுரம் மாவட்டம்—ரூ. 10,000.
5. அரசு உயர்நிலைப் பள்ளி, திமிரி, வடஆற்காடு மாவட்டம் —ரூ. 10,000.

## தனியார் பள்ளிகளுக்குக் கட்டட மான்யம்

வினா 210 திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1977-78 ஆம் ஆண்டில் தனியார் பள்ளிக்கூடங்களுக்கு கட்டடங்கள் கட்டிக் கொள்ள அரசு வழங்கிய மான்யத் தொகை எவ்வளவு? மாவட்டவாரியாக?

விடை

1977-78ஆம் ஆண்டில் தனியார் நடத்தும் ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், மற்றும் உயர் நிலைப் பள்ளிகள் கட்டடம் கட்டிக் கொள்வதற்காக மான்யமாக வழங்க அரசு ரூபாய் இரண்டு லட்சம் அனுமதித்து ஆணையிட்டது. அதில்

[1979 பிப்ரவரி 12

1977–78 ஆம் ஆண்டில் எட்டு நடு நிலை ஆரம்ப பள்ளிகளுக்கு ரூ. 80,075 மான்யத் தொகை வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட வாரியாக வழங்கப்பட்ட தொகை கீழ்க் கண்டவாறாகும்.

| | ரூ. |
|---|---|
| இராமநாதபுரம் .. .. .. .. | 30,000 |
| வட ஆற்காடு .. .. .. .. | 8,000 |
| கோயம்புத்தூர் .. .. .. .. | 8,000 |
| திருநெல்வேலி .. .. .. .. | 21,075 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. .. | 13,000 |
| மொத்தம் .. | 80,075 |

## உயர் நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள்

வினா 211 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ம் ஆண்டில் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசுக்கு செலவான தொகை எவ்வளவு

(ஆ) மாவட்ட வாரியாக ?

விடை

(அ) 17,85,118 ரூபாய் செலவு செய்யப்பட்டது.

(ஆ)

| மாவட்டத்தின் பெயர். (1) | உயர் நிலைப் பள்ளிகளுக்கு செலவான தொகை (2) |
|---|---|
| | ரூ. |
| சென்னை மாவட்டம் .. .. .. | 32,13( |
| செங்கற்பட்டு மாவட்டம் . .. | 4,11,13( |
| வட ஆற்காடு மாவட்டம் . .. | 4,12,65 |
| தஞ்சை மாவட்டம். .. .. .. | 61,71 |
| திருச்சி மாவட்டம் .. .. .. | 4,419 |
| புதுக்கோட்டை மாவட்டம் .. .. | 6,347 |
| மதுரை மாவட்டம் .. .. .. | 3,78,277 |
| இராமநாதபுரம் மாவட்டம் .. .. | 1,21,950 |
| கன்னியாகுமரி மாவட்டம் .. .. | 49,560 |
| சேலம் மாவட்டம் .. .. .. | 2,34,561 |
| கோயம்புத்தூர் மாவட்டம் .. .. | 73,373 |
| மொத்தம் .. | 17,85,118 |





## அரசு இசைக் கல்லூரி

வினா 212 —திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் எத்தனை மாணவர்கள் பயிலுகின்றனர்?

(ஆ) 1977-78 ஆம் ஆண்டில் அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

விடை

மாணவர்களைப் பற்றிய விவரம் வருமாறு :

| (அ) 1977–78 | 1978–79 |
|---|---|
| 520 | 256 |
| (மாலை நேரக் கல்லூரி உள்பட) | (மாலை நேரக் கல்லூரி நீங்கலாக) |

(ஆ) 1977–78 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை ரூ. 4·81 இலட்சம்.

[1979 பிப்ரவரி 12

## தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்

வினா 213—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் தனியார் நடத்தும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் எத்தனை ?

(ஆ) 1977–78 ஆம் ஆண்டில் அரசு அவற்றிற்கு வழங்கிய மான்யத் தொகை எவ்வளவு ?

விடை

(அ) நமது மாநிலத்தில் தனியார் நடத்தும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் 46.

(ஆ) 1977–78 ஆம் ஆண்டில் அரசு வழங்கிய மான்யத் தொகை ரூ. 6,59,378·50 ஆகும்.

## கொற்கை கிராமத்தில் உயர்நிலைப் பள்ளி அமைக்க நன்கொடை வசூல்.

வினா 214 — திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் ஒன்றியம் கொற்கை பஞ்சாயத்தில் உயர் நிலைப் பள்ளி அமைத்திட நன்கொடை திரட்டப்பட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை

(அ) மாயூரம் ஊராட்சி ஒன்றியம் கொற்கை கிராமத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி துவங்குவது குறித்து நன்கொடை வசூலிப்பதாக குற்ற முறையீடுகள் எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

## டேனிஷ் கோட்டையில் தொல்பொருள் ஆராய்ச்சி.

வினா 215—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் தரங்கம்பாடியிலுள்ள டேனிஷ் கோட்டையில் தொல் பொருள் ஆராய்ச்சி பணியினை மேற்கொள்ளும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் மேற் கொள்ளப்படும்?



1979 பிப்ரவரி 12]

விடை

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 'யுனெஸ்கோ' உதவி.

வினா 216—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு யுனெஸ்கோ நிறுவனம் உதவி புரிந்து வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை

அவைமுன் ஒரு விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

## வேடப்பட்டி திரையரங்கில் திரையிடப்பட்ட ஆபாசப் படம்.

வினா. 217—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் வாரத்தில் திண்டுக்கல் அருகே வேடப்பட்டியில் உள்ள திரைப்படக் கொட்டகையில் ஆபாச சினிமாப் படம் காட்டப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

விடை

(அ) மற்றும் (ஆ): 1978 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் வாரத்தில் திண்டுக்கல் அருகேயுள்ள வேடப்பட்டி கிராமத்திலுள்ள ரவி நடமாடும் திரையரங்கில் ஆபாசப் படம் காண்பிக்கப்படுவதாக காவல்துறையினருக்கு தகவல் கிடைத்து, அத்திரையரங்கில் அப்பொழுது திரையிடப்பெற்ற ''சொல்லு கண்ணா சொல்லு'' என்னும் 'A' சான்றிதழ் பெற்ற தமிழ்த் திரைப்படப் பிரதியை காவல் துறையினர் கைப்பற்றி, சோதனை செய்ததில் தணிக்கைக் குழு அனுமதித்த காட்சிகளைத் தவிர ஆபாசமான காட்சிகள் எதுவும் அப்படத்தில் இல்லையென்ற காரணத்தால் அந்தப் படம் தொடர்ந்து திரையிடப்பட அனுமதிக்கப்பட்டது.

---

* 442-443ம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1979 பிப்ரவரி 12

## சென்னை நகரில் காபரே நடனக்காட்சிகள்.

வினா 218—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை நகரில் எத்தனை இடங்களுக்கு காபரே நடனக் காட்சி நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது ?

(ஆ) அவை எவை, எவை ?

விடை —

(அ) நான்கு இடங்கள்.

(ஆ) 1. ஹோட்டல் கோகுலா.
2. ஹோட்டல் இம்பீரியல்
3. பால்ஸ் ரெஸ்டாரண்ட்.
4. ஹோட்டல் சவேரா.

## போலீஸ் துப்பாக்கி சூடு, கண்ணீர் புகை பிரயோகம்.

வினா 219—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 30-6-1977 முதல் இதுவரை நமது மாநிலத்தில் போலீசார் எத்தனை முறை துப்பாக்கிச் சூடு நடத்தினர் ?

(ஆ) எத்தனை இடங்களில் கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்துள்ளனர்?

விடை

(அ) பதினோரு முறை.

(ஆ) 24 இடங்கள்.

## மதுவிலக்கு வழக்குகள்.

வினா 220— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977 டிசம்பர் இறுதியிலும் 1978 ஜனவரி முதல் வாரத்திலும் கோவை மாவட்டம் அவினாசி நகரத்தில் மூன்று பேர் கள்ளச்சாராயம் கடத்தியதற்காக காருடன் கைது செய்யப் பட்டார்களா ?

(ஆ) ஆம் எனில், அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



979 பிப்ரவரி 12]

## தஞ்சை மாவட்டத்தில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளைப் பழுது பார்த்தல்.

வினா 221—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்த்துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினாவுக்கு விடைளிப்பாரா—

1977 அக்டோபர்-நவம்பரில் ஏற்பட்ட புயல் வெள்ள சேதத்னால் பாதிக்கப்பட்ட சாலைகளைப் பழுது பார்க்க தஞ்சை ாவட்டத்திலுள்ள எந்தெந்த நகராட்சிகளுக்கு எவ்வளவு உதவித் தாகை வழங்கப்பட்டுள்ளது ?

விடை—

| | கடன். ரூ. | மான்யம். ரூ. |
|---|---|---|
| ம்பகோணம் நகராட்சி .. | 1,50,000 | 1,50,000 |
| ஞ்சாவூர் நகராட்சி .. .. | 50,000 | 50,000 |
| ாயவரம் நகராட்சி .. .. | 25,000 | 25,000 |
| ாகப்பட்டினம் நகராட்சி .. .. | 8,00,000 | 8,00,000 |
| ிருவாரூர் நகராட்சி .. .. | 25,000 | 25,000 |
| ட்டுக்கோட்டை நகராட்சி .. | 25,000 | 25,000 |
| ன்னார்குடி நகராட்சி .. | 1,00,000 | 1,00,000 |
| ர்காழி நகராட்சி .. .. | 50,000 | 50,000 |

## புதுக்கோட்டை மாவட்டத்தில் அசிடிக் அமில ஆலை.

வினா 222—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் ாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் அசிடிக் அமில ஆலை ற்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் திரு. வெங்கடசாமி என்பவருடன் கூட்டுத்துறையில் ஆண்டொன்றுக்கு ,000 டன் அசிடிக் அமிலமும் 1,000 டன் அசிடிக் அன் ஹைட் ரேடும் தயாரிப்பதற்காக சதர்ன் ஹைட்ரோ கார்பன் லிமிடெட் என்னும் நிறுவனத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தொழிற்சாலை தொழிலில் பின் தங்கிய புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், லட்சுமணபுரி என்னும் இடத்தில் நிறுவப்படும். திட்ட மதிப்பீடு ரூ. 220 இலட்சமாகும். இந்தத் தொழிற்சாலைக் கான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வர்த்தக ரீதி யான உற்பத்தி 1979 ஆம் ஆண்டு சூலை திங்களில் தொடங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. இந் நிறுவனம் முழு அளவிலான உற்பத்தியை துவங்கும் போது 100 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு கிடைக்கும்.

[1979 பிப்ரவரி 12

## புதுக்கோட்டையில் குளுகோஸ் தொழிற்சாலை.

வினா 223—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் குளுகோஸ் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

ஆம்.

## அரசு அலுவலகங்கள், கட்டடங்களில் படங்கள்.

வினா 224—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு அலுவலகங்களில் கட்டடங்களில் வைக்க வேண்டிய படங்கள் பற்றி அரசு ஆணை ஏதேனும் பிறப்பிக்கப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கீழ்க்கண்ட பெரியோர்களின் உருவப் படங்கள் அரசு அலுவலகங்களிலும் கட்டடங்களிலும் வைக்கலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பதவியில் உள்ள குடியரசுத் தலைவர், பதவியில் உள்ள பிரதமர் மகாத்மா காந்தியடிகள், பண்டித ஜவஹர்லால் நேரு, திருவள்ளுவர், பேரறிஞர் அண்ணா, திரு. கே. காமராஜர், திரு. சி. இராஜகோபாலாச்சாரியார், தந்தை பெரியார்.

## கைத்தறித்துணி விற்பனைக்குச் சிறப்புத் தள்ளுபடி.

வினா 225—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976–77-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் கைத்தறிததுணி விற்பனையின் சிறப்புத் தள்ளுபடிக்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) இதில் மத்திய, மாநில அரசின் பங்குத் தொகை முறையே எவ்வளவு ?

விடை—

(அ) மற்றும் (ஆ) 1976–77ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கைத்தறித்துணி விற்பனையில் சிறப்புத் தள்ளுபடியாக (9-3-1977 முதல் 7-5-1977 வரை) கொடுக்க வேண்டிய தொகை ரூபாய் 340·87 இலட்சம் ஆகும். இதனை மத்திய அரசும், மாநில அரசும், சம அளவில் பொறுப்பேற்கின்றன.



1979 பிப்ரவரி 12]

## நிலத்தடி நீர் குறித்த ஆய்வு.

வினா 226—திரு. கா. சுப்பிரவேலு : மாண்புமிகு வேளாண்மை—பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இயற்கையாக சேரும் நிலத்தடி நீர் அளவு நாளுக்கு நாள் குறைந்து வருவதை நிறைவு செய்ய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா ?

விடை—

* விவர அறிக்கை பேரவை முன் வைக்கப்படுகிறது.

## நன்டோடை ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா 227—திரு. கா. சுப்பிரவேலு : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலுகா பாகசாலை கிராமத்தையும் சீர்காழி தாலுகா காத்திருப்பு கிராமத்தையும் இணைக்கின்ற சாலையின் குறுக்கே நன்டோடை ஆற்றில் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) அதற்கான மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## குழந்தைகள் மூளை வளர்ச்சி.

வினா 228—திரு. கா. சுப்பிரவேலு : மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூளை வளர்ச்சி, குழந்தை பிறந்த மூன்று ஆண்டுகளோடு முடிந்து விடுகிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மூளை வளர்ச்சிக்கான உணவுப் பொருள்கள் எவை, எவை என்று விளக்க ஏடுகளை (Pamphlets) மகப்பேறு மனைகளில் தாய்மார்களுக்கு வழங்கி உதவ அரசுமுன்வருமா?

விடை—

(அ) மூளை வளர்ச்சி, குழந்தை பிறந்த மூன்று ஆண்டுகளோடு முடிந்து விடுவதில்லை. முதலாண்டில் 75 சதவீத வளர்ச்சி நிகழ்கிறது. இரண்டாம் ஆண்டிலிருந்து பதினேழாம் ஆண்டுவரை மூளை வளர்ச்சி தொடர்ந்து மெல்ல மெல்ல நிகழ்கிறது.

[*443–446ம் பக்கங்களில் இணைப்பு VII ஆக அச்சிடப்பெற்றுள்ளது.]

[1979 பிப்ரவரி 12

(ஆ) விளக்க ஏடுகள் (Pamphlets) பொது உடல் நலத் துறையினராலும் மக்கள் நல்வாழ்வுத் துறையினராலும் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. பிரசுரிக்கப்பட்ட விளக்க ஏடுகளை தாய்மார்களுக்கும் பொதுமக்களுக்கும் விநியோகிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வெள்ளப்பள்ளம் வடிகால் வாய்க்காலின் குறுக்கே பாலம்.

வினா 229—திரு. கா. சுப்பிரவேலு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சீர்காழி தாலூகா, வெள்ளப் பள்ளம் கிராமத்தின் குறுக்கே ஓடும் ஒரு வடிகால் வாய்க்காலில் பாலம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை—

இல்லை.

திருவான்மியூர் பகுதியில் குழாய்க் கிணறுகள்.

வினா 230—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, திருவான்மியூர், எண்ணூர் போன்ற இடங்களில் குழாய்க் கிணறு மத்திய அரசு உதவியுடன் இறக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை இடங்களில் இறக்கப்பட்டன?

விடை—

(அ) சென்னை, திருவான்மியூர் பகுதியில் மத்திய அரசு உதவியுடன் குழாய்க் கிணறு இறக்கப்படவில்லை. ஆனால் தமிழக அரசின் உதவியால் 15 இடங்களில் 8 அங்குல விட்டமுள்ள குழாய்க் கிணறுகள் போடப்பட்டன. எண்ணூர் பகுதியில் குழாய் கிணறு எதுவும் இறக்கப்படவில்லை.

(ஆ) திருவான்மியூர் பகுதியில் தமிழ்க அரசின் உதவியால் 15 இடங்களில் குழாய்க் கிணறுகள் போடப்பட்டன.



1979 பிப்ரவரி 12]

லால்பேட்டை அரசு கல்லூரிக்கு அரசு மான்யம்.

வினா 231—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தைச் சேர்ந்த லால்பேட்டையில் உள்ள அரசு கல்லூரிக்கு அரசு மான்யம் அளிக்கப்படுகிறதா?

(ஆ) மற்றும் என்னென்ன சலுகைகள் கொடுக்கப் படுகிறது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

ராதாபுரத்தில் துணைக் கருவூலம்.

வினா 232—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரத்தில் ஒரு துணைக் கருவூலம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை

இல்லை.

துரிஞ்சாபுரம் ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமனம்.

வினா 233—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் உள்ள நடுநிலைப்பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமனம் செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?.

விடை—

(அ)&(ஆ): மாணவர் பதிவு 400-க்கு அதிகமாகவும் குறைந்தது ஒரு ஏக்கர் பரப்பளவுள்ள விளையாட்டுத் திடலும் கொண்ட நடுநிலைப்பள்ளிகட்கு உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமனம் செய்யலாம் என சில வரைமுறைகள் தெரிவிக்கப்பட்டன. இந்தத் தகுதி பெற்ற நடுநிலைப் பள்ளிகள் துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் ஒன்றுமில்லை.

[1979 பிப்ரவரி 12

திருவண்ணாமலையில் சுற்றுச்சாலை.

வினா 234—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை நகரத்தைச் சுற்றி புதிய ரோடு போடும் திட்டம் அரசின் ஆலோசனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டுத் தொகையில்?

(இ) எந்தெந்தப் பக்கங்களில் போடப்பட உள்ளன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

ஜவ்வாது மலையில் ஆசிரியர்களுக்குக் குடியிருப்புகள்.

வினா 235—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு குடியிருப்புகள் கட்டித் தரும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஜவ்வாது மலையில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் பள்ளியில் பணிபுரியும் 28 பேர்களுக்கு 28 குடியிருப்புகள் கட்ட செயற்குறிப்பு அனுப்பியிருந்தார். அவைகளில், அரசு நிதி நிலைமையை கருத்தில்கொண்டு, நடப்பு நிதியாண்டில் ரூபாய் 3,40,000 செலவில் 18 ஆசிரியர்கள் குடியிருப்பு கட்டடங்கள் கட்டி முடிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அவைகளின் விவரம் பின்வருமாறு:—

(1) திருப்பத்தூர் வட்டத்திலுள்ள, அத்திப்பட்டு, வீரப்பனூர், கொமிட்டேரி, கோவிலூர், ஜம்னுமருதூர் ஆகிய 5 ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு குடியிருப்புகள் கட்ட ஒரு குடியிருப்புக்கு ரூபாய் 13,000 வீதம் ரூ. 65,000.



1979 பிப்ரவரி 12]

(2) புதூர் உயர்நிலைப்பள்ளிக்கு 3 ஆசிரியர்களுக்கு குடியிருப்புகள் கட்ட ஒரு குடியிருப்புக்கு ரூ. 25,000 விதம் ரூ. 75,000.

(3) வேலூர் வனக்கோட்டத்திலுள்ள கீழ்க்கண்ட 8 பள்ளிகளுக்கு ஆசிரியர்களுக்கு குடியிருப்பு கட்ட ஒரு குடியிருப்புக்கு ரூ. 20,000 வீதம் 10-க்கு ரூ. 2;00,000.

| | |
|---|---|
| 1. புலியூர் .. .. .. | 1. |
| 2. .. .. .. | 1. |
| 3. கல்யாமந்தை .. .. | 1. |
| 4. .. .. .. | 1. |
| 5. பெரும்பள்ளி .. .. | 2. |
| 6. .. .. .. | 2. |
| 7. தியாகர்குப்பம் .. .. | 1. |
| 8. மேல்பட்டு .. .. | 1. |

ஜவ்வாது மலை துவக்கப்பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள்.

வினா 236—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையில் 1977-78-ல் துவக்கப்பள்ளிகளுக்கு புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பள்ளிகளுக்கு கட்டடம் கட்டப்பட்டது?

(இ) பாக்கியுள்ள பள்ளிகள் எத்தனை?

(ஈ) பாக்கியுள்ள பள்ளிகளுக்கு எப்போது கட்டடம் கட்டப்படும்?

விடை—

(அ) வடாற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையில் 1977-78-ல் நான்கு பள்ளிகளுக்குப் புதிய கட்டடமும், ஒரு பள்ளிக்கு கூடுதல் விடுதிக் கட்டடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) அக்கட்டடங்களின் விவரம் பின்வருமாறு :—

| கட்டடத்தின் பெயர். | இடம். | எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (1) பள்ளிக்கட்டடம் .. .. | செங்கம் .. | 1 |
| (2) பள்ளிக்கட்டடம் .. .. | பெரும்பள்ளி .. | 1 |
| (3) கூடுதல் உயர் துவக்கப்பள்ளிக் கட்டடம். | புதூர் .. .. | 1 |
| (4) கூடுதல் பள்ளி விடுதி கட்டடம் | புதூர் .. | 1 |
| (5) கூடுதல் துவக்கப்பள்ளிக் கட்டடம். | ஜம்னாமரத்தூர். | 1 |
| | மொத்தம் .. | 5 |

(இ) திருப்பத்தூர் கோட்டத்தின் செங்கம் வனச்சரகத்தில் மேல்பட்டு என்னும் இடத்தில் உள்ள பள்ளிக்கூடத்திற்கு மட்டுமே புதிய கட்டடம் கட்டப்பட வேண்டியுள்ளது.

(ஈ) மேற்குறிப்பிட்ட பள்ளிக்கு கட்டடம் கட்ட 1978-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் அரசு ஆணை வழங்கியுள்ளது. இக் கட்டடம் 1979-ம் ஆண்டில் கட்டி முடிக்கப்படும்.

## சாத்தனூர் அணைப் பாசன கிராமங்கள்.

**வினா 237—திரு. கோ. ரகோத்தமன் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் அணை பாசனம் பெறும் திருவண்ணாமலை, செங்கம் தாலூக்காக்களில் உள்ள எத்தனை ரெவின்யூ கிராமங்கள் தனித்தனி ரெவின்யூ கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு தனித்தனி கிராம முன்சீப் நியமனம் செய்யப்பட்டுள்ளன ?

(ஆ) அதேபோல் திருக்கோவிலூர் தாலூக்காவில் உள்ள ரெவின்யூ கிராமங்களையும் தனித்தனியே பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?



விடை :—

(அ) சாத்தனூர் அணைப் பாசனம் பெறும் ரெவின்யூ கிராமங்கள் திருவண்ணாமலை தாலூகாவில் 19-ம் செங்கம் தாலூகாவில் 19-ம் இருக்கின்றன. சாத்தனூர் நீர்ப்பாசன திட்டத்தினால் ஏற்பட்ட வேலைப்பளு காரணமாக அரசு ஆணை எண். 4722, வருவாய்த் துறை, நாள் 1973-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8-ந் தேதியில் கீழ்க்கண்ட கூடுதல் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன :—

| | |
|---|---|
| மணியம் .. .. .. | 7 |
| கர்ணம் .. .. .. | 7 |
| கிராம காவலர் .. .. | 7 |
| கிராம பணியாளர்.. .. | 8 |

மேற்கண்ட கூடுதல் பதவிகள் ஏற்படுத்தப்பட்டதால் திருவண்ணாமலை மற்றும் செங்கம் தாலூகாக்களில் உள்ள சில கிராமங்கள் கீழ்க்கண்டவாறு மாற்றப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டன.

| தாலூகா. | இருந்த கிராம தொகுதி. | 1—9—1973 முதல் மாற்றியமைக்கப் பட்ட கிராம தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| திருவண்ணாமலை. | (1) தலையாம்பள்ளம் சக்கரதாமடை. | (1) தலையாம்பள்ளம் சக்கரதாமடை. |
| | நரியப்பட்டு பரையம்பட்டு. | (2) நரியப்பட்டு பரையம்பட்டு. |
| | (2) பழையனூர் வெள்ளையம்பாக்கம் கண்டியங்குப்பம். | (3) பழையனூர் அத்திப்பாடி கல்லொட்டு. |
| | ஆத்திபாடி கல்லொட்டு. | (4) கண்டியங்குப்பம் வெளையம்பாக்கம். |
| | (3) காட்டாம்பூண்டி சு. பாப்பாம்பாடி. | (5) காட்டாம் பூண்டி பாவுபட்டு. |
| | அரடாபட்டு பாவுபட்டு. | (6) சு. பாப்பாம்பாடி அரடாபட்டு. |
| செங்கம் .. | (1) அகரம்பள்ளிபட்டு தொண்டமானூர். | (1) அகரம்பள்ளிபட்டு தொண்டமானூர். |
| | சதகுப்பம் க. யுன்னாமலை பாளையம். | (2) சதகுப்பம் க. யுன்னாமலை பாளையம். |
| | (2) தென்கரிம்பலூர் கோட்டயூர் வாழவச்சனூர். | (3) தென்கரிம்பலூர் (4) கோட்டயூர் வாழவச்சனூர். |

| தாலூகா. | இருந்த கிராம தொகுதி. | 1–9–1973 முதல் மாற்றியமைக்கப் பட்ட கிராம தொகுதி. |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| | (3) வாணாபுரம் குங்குளியநத்தம் எடக்கல் பெருந்துரைப்பட்டு பேராயம்பட்டு மலுவம்பட்டு. | (5) வாணாபுரம் குங்குளியநத்தம் மலுவம்பட்டு பேராயம்பட்டு. (7) எடக்கல் பெருந்துரைபட்டு. |

(ஆ) ஆம்.

## முகையூர் தொகுதியில் குடிநீர்த் தொட்டிகள்.

வினா 238—திரு. கோ. ரகோத்தமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதியில் உள்ள வீரங்கிபுரம், முகையூர், அத்தியந்தல், சித்தாதூர், ஆலம்பாடி, மேலந்தல், காரனை, சத்தி, கண்டானூர், மேல் காரனை, சங்கீத மங்கலம், கருவாட்சி, நல்லாபாளையம், கடையம், ஒட்டம்பட்டு, ஒதியந் தூர் ஆகிய கிராமங்களில் நோய் தடுப்பு நடவடிக்கையாக பாது காக்கப்பட்ட மேல்நிலை தொட்டிகள் கட்டி குடிநீர் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

செயற்குறிப்பு எதுவும் இல்லை.

## நத்தம் கருவூலத்திற்கு நிரந்தரக் கட்டடம்.

வினா 239—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, நத்தத்தில் உள்ள டிரெஷரி அலுவல கத்திற்கு நிரந்தர கட்டடம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?.

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டடம் கட்டிக் கொடுக்கப் படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கட்[illegible] கான திருத்திய திட்ட மதிப்பீடு அங்கி காரம் பெற்ற [illegible] பிரைவில் கட்டிடம் கட்டிக் கொடுக்கப் படும்.





## வியாசர்பாடியில் பர்மா அகதிகளுக்குப் புதிய வீடுகள்.

வினா 240—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சமூக நலத்துறைஅமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, வியாசர்பாடியில் பர்மா அகதிகளுக்காகப் புதிதாக கட்டப்படவிருக்கும் வீடுகள் எத்தனை?.

(ஆ) அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) அதில் மத்திய அரசின் உதவித் தொகை எவ்வளவு?

விடை—

(அ) புதிதாகக் கட்டப்படவிருக்கும் வீடுகளின் எண்ணிக்கை 3,132.

(ஆ) மதிப்பீட்டுத் தொகை ரூ. 177.60 இலட்சம்.

(இ) மேல்கண்ட தொகை முழுவதையும் மத்திய அரசு கடனாக அளித்துள்ளது.

## பரிசுச் சீட்டு மூலம் கிடைத்த வருவாய்.

வினா 241—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

1978-ம் ஆண்டில் இதுவரை தமிழக அரசு பரிசுச் சீட்டின் வாயிலாக கிடைத்த வருவாய் எவ்வளவு ?

விடை—

1978, ஜனவரியிலிருந்து 1978, ஜூன் வரையில் தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுக்களை விற்பனை செய்ததில் கிடைத்த மொத்த வருவாய் ரூ. 228.87 லட்சமாகும். நிகர வருவாய் சுமார் ரூ. 82.00 இலட்சமாகும்.

## கடலையாத்தூரில் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு

வினா 242—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ல் சிதம்பரம் வட்டம் கடலையாத்தூர் கிராமத்தில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கோரி அரசுக்கு வந்த மனுக்கள் எத்தனை ?

[1979 பிப்ரவரி 12

(ஆ) எத்தனை மனுக்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப் பட்டது ?

(இ) மற்ற மனுக்களுக்கு எப்போது மின் இணைப்பு கொடுக்கப்படும் ?

விடை—

(அ) மூன்று மனுக்கள்.

(ஆ) ஒன்றும் இல்லை.

(இ) மின் இணைப்பு வழங்கும் முறைகள் திருத்தி அமைக்கப் பட்டு 1978 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 1 ஆம் தேதி முதல், மனுச் செய்த தேதியின் அடிப்படையில் மட்டும் முன்னுரிமை அளிக்கப் பட்டு மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

பரங்கிப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள்.

வினா 243—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், பரங்கிபேட்டை ஒன்றியத்தி லுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் எத்தனை டாக்டர்கள் உள்ளனர் ?

(ஆ) அவர்களுக்கு குடியிருப்பு கட்டித் தரப்பட்டுள்ளதா ?

(இ) அங்கு தங்கும் டாக்டர்கள் எத்தனை பேர்கள் ?

விடை—

(அ) மூன்று டாக்டர்கள் உள்ளனர்.

(ஆ) இரண்டு டாக்டர்களுக்கு குடியிருப்பு கட்டித் தரப் பட்டுள்ளது.

(இ) மூன்று டாக்டர்களும் அக்கிராமத்திலேயே தங்கு கிறார்கள்.



1979 பிப்ரவரி 12]

காட்டுமன்னார்குடி பேரூராட்சி

வினா 244—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், காட்டுமன்னார்குடி பேரூராட் சியை நகராட்சியாக ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(ஆ) அதற்கு மக்கள் தொகையும் வருவாய் முதலிய தகுதி கள் உள்ளனவா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வருவாய் தகுதி உள்ளது. மக்கள் தொகை தகுதி இல்லை.

கிள்ளை பகுதிகளில் இறால் பண்ணைகளுக்கு அனுமதி

வினா 245—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், கிள்ளை பகுதியில், தனியார்கள் இறால் வளர்க்க அரசு அனுமதி கோரியுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர் மனு செய்துள்ளார்கள்?

(இ) அரசு உதவி எந்த அளவில் செய்யப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ)&(இ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

தஞ்சை மாவட்டத்தில் ஆழ்குழாய் கிணறுகளுக்கு மின் இணைப்பு.

வினா 246—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் எத்தனை ஆழ் குழாய் கிணறுகளுக்கு இதுவரை மின் இணைப்பு கொடுக்கப் பட்டுள்ளது?

(ஆ) இன்னும் எத்தனை பேர் மின் இணைப்புக் கோரி விண்ணப்பித்துள்ளனர்?

[1979 பிப்ரவரி 12

விடை—

(அ)&(ஆ) தமிழ் நாடு மின்சார வாரியம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கும்போது, ஆழ்குழாய் கிணறுகள் பற்றி தனியே தகவல் வைத்துக்கொள்வதில்லை.

## உச்ச வரம்பு சட்டத்தின்கீழ் அரசு மேற்கொண்ட நிலங்கள்.

வினா 247—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975–76-ல் உச்சவரம்பு சட்டத்தின்கீழ் மொத்தம் எவ்வளவு நிலம் அரசு மேற்கொண்டது?

(ஆ) அதில் அரிசனங்களுக்கு ஒப்படை செய்தது எவ்வளவு?

(இ) 1976 முதல் 1978 வரை உச்சவரம்பு சட்டத்தின்கீழ் அரசு மேற்கொண்ட நிலம் எவ்வளவு?

விடை—

| | | (ஏக்கர்கள்.) |
|---|---|---|
| (அ) | 1975 .. .. .. | 7,316 |
| | 1976 .. .. .. | 5,348 |
| (ஆ) | 1975 .. .. .. | 2,616 |
| | 1976 .. .. .. | 1,875 |
| (இ) | 1976 .. .. .. | 5,348 |
| | 1977 .. .. .. | 607 |
| | 1978 (30—6—1978 முடிய) | 18 |

## மருதமலைக் கோவில் நிதியிலிருந்து கல்லூரி ஏற்படுத்துதல்

வினா 248—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மருதமலைக் கோவில் நிதியிலிருந்து தற்போது நடத்தப்படும் உயர்நிலைப் பள்ளியை ஒட்டி ஒரு கல்லூரி ஏற்படுத்த அரசால் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

விடை—

இல்லை.



979 பிப்ரவரி 12]

## மன்னார்குடி வட்டத்தில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

வினா 249—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி தாலுக்காவில் பம்பு செட்டுகளுக்கு துவரை மின் இணைப்பு பெற்றுள்ளவர்கள் மொத்தம் த்தனை பேர்?

(ஆ) விண்ணப்பித்துள்ளவர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) 1,866 பேர்.

(ஆ) 469 விண்ணப்பங்கள் நிலுவையிலுள்ளன.

## மூளை நோயால் பாதிக்கப்பட்டோர்.

வினா 250—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் ல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட னாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ம் ஆண்டு நமது மாநிலத்தில் மூளை ாய்ச்சல் (என்சபலிடிஸ்) என்ற நோயால் பாதிக்கப்பட்ட குழந் தைகளின் எண்ணிக்கை என்ன?

(ஆ) அதில் இறந்தவர்களின் எண்ணிக்கை என்ன?

விடை—

(அ) 1977–78-ல் (நவம்பர் 1977 முதல் ஜூன் 1978 முடிய) மூளை காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 355. இந்நோய் நவம்பர் 1977-ல் தான் முதல் முதல் தோன்றியது.

(ஆ) அதில் இறந்தவர்களின் எண்ணிக்கை 105.

[1979 பிப்ரவரி 12

## வானொலிப் பெட்டிகள் உள்ள ஆரம்ப, உயர்நிலைப் பள்ளிகள்.

வினா 251—திரு எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நமது மாநிலத்தில் வானொலிப் பெட்டிகள் உள்ள ஆரம்பப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் முறையே எத்தனை?

விடை—

வானொலிப் பெட்டிகள் உள்ள பள்ளிகளின் விவரம்—

| | | | |
|---|---|---|---|
| உயர்நிலைப் பள்ளிகள் | .. | .. | 2,951 |
| நடுநிலைப் பள்ளிகள் | .. | .. | 5,409 |
| ஆரம்பப் பள்ளிகள் | .. | .. | 23,023 |
| மொத்தம் | | | 31,383 |

## மாநிலத்தில் சிறுதொழில்கள்.

வினா 252—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் 1974–75, 1975–76, 1976–77, 1977–78 ஆண்டுகளில் இருந்த சிறு தொழில்களின் எண்ணிக்கை என்ன?

விடை—

மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் ஆண்டு வாரியாக கீழே தரப் பட்டுள்ளது—

| | | |
|---|---|---|
| 1974 | .. | 20,305 |
| 1975 | .. | 18,399 |
| 1976 | .. | 22,168 |
| 1977 | .. | 18,487 |
| 1978 | .. | 19,740 |

(ஜூன் திங்கள் இறுதி வரை).



1979 பிப்ரவரி 12]

## நீலகிரியில் குறும்பர் இனத்தவர்க்கு விவசாய நிலப் பட்டாக்கள் வழங்கல்.

வினா 253—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78ல் நீலகிரி மாவட்டத்திலுள்ள குறும்பர் இனத்தவர்க்கு விவசாய நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட் டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ), மற்றும் (ஆ): 1977–78 நிதி ஆண்டு (1-4-1977 முதல் 31–3–1978 வரை) நீலகிரி மாவட்டத்திலுள்ள, குறும்பர் இனத் தவர்க்கு, விவசாய நிலப் பட்டா எதுவும் கொடுக்கப்படவில்லை. ஆனால், 7–4–1978-ல் (அதாவது 1978–79-ல்) உதகமண்டலம் வட்டத்தில், கீழ்குந்தா கிராமத்தில் உள்ள 10குறும்பர் இனத்த வர்க்கு 9·93 ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

## மஞ்சூர் மருத்துவமனை.

வினா 254—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்டவினாவுக்கு விடையளிப்பாரா—

உதமகண்டலம் வட்டம், மஞ்சூரில் மருத்துவமனை கட்டு கின்ற பணி முற்றுப் பெற்றுவிட்டதா?

விடை—

ஆம்.

புதிய கட்டிடத்தில் 1–3–1978 முதல் அரசு மருந்தகம் செயல்பட்டு வருகிறது.

[1979 பிப்ரவரி 12

நீலகிரியில் உள்ள சிறுதொழில் நிறுவனங்கள்.

வினா 255—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

நீலகிரி மாவட்டத்தில் 30–6–78 அன்றைய நிலைப்படி இயங்கிவரும் சிறு தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 82 ஆகும்.

நீலகிரியில் கற்பூரத் தைலம் தயாரிப்புக்குக் கடனுதவி.

வினா 256—திரு. போ. கோபாலன் : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரியில் கற்பூரத் தைலம் தயாரிக்கும் தொழிலாளர்களுக்கும் கடனுதவி வழங்கப்படுகிறதா?

விடை—

இந்தத் தொழிலாளர்களுக்கு கடனுதவி வழங்குவதற்கான திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

கிளியனூர் பாலர் பள்ளிக்கு கட்டிடம்.

வினா 257—திரு. எம். பரமசிவம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் ஒன்றியத்திலுள்ள கிளியனூரில் உள்ள பாலர் பள்ளிக்கு கட்டடம் கட்டும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமுல்படுத்தப்படும்?



1979 பிப்ரவரி 12]

விடை—

(அ) வானூர் ஒன்றியத்தின் எல்லைக்குட்பட்ட கிளியனூரில் உள்ள பாலர் பள்ளிக்கு கட்டடம் கட்டும் உத்தேசம் அரசுக்கு தற்சமயம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடம் இல்லை.

முனஞ்சிப்பட்டி ஆசிரியர் பயிற்சிப் பள்ளி.

வினா 258—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள முனஞ்சிப்பட்டி பெண்கள் அரசினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை சமூக ரெங்கபுரத்திற்கும் அங்கு இருக்கின்ற ஆண்கள் அரசினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை முனஞ்சிப் பட்டிக்கும் மாற்ற அரசு தீர்மானித்துள்ளதா?

விடை—

இல்லை.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறி, மற்றும் விசைத்தறி துணிகளின் மதிப்பு.

வினா 259—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1976–77, 1977–78 ஆண்டுகளில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறி துணி, பவர்லூம் துணியின் மதிப்பு எவ்வளவு ?

[1979 பிப்ரவரி 12

விடை—

தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு 1976–77-ம் ஆண்டில் ரூ. 37·49 கோடி மதிப்புள்ள கைத்தறி துணிகளும் 1977–78 ஆம் ஆண்டில் ரூ.53·88 கோடி மதிப்புள்ள கைத்தறித்துணிகளும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

விசைத்தறி துணி ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் விசைத்தறி உரிமையாளர்கள் ஏற்றுமதி சம்பந்தப்பட்ட விவரங்களை அரசுக்கோ, அரசைச் சார்ந்த இதர நிறுவனங்களுக்கோ தெரியப்படுத்துவதில்லை. கோயமுத்தூர் தென்னிந்திய மில் அசோசியேஷன் அளித்துள்ள புள்ளி விவரப்படி 1976–77-ல் ரூ. 8·94 கோடி மதிப்புள்ள விசைத்தறியில் நெய்யப்பட்ட துணிகளும் 1977–78-ல் ரூ. 15·09 கோடி மதிப்புள்ள விசைத்தறியில் நெய்யப்பட்ட துணிகளும் அகில இந்திய அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

புடையூரிலும் சோழதரத்திலும் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

வினா 260—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ம் ஆண்டில் சிதம்பரம் வட்டம் புடையூர், சோழதரம் ஆகிய ஊர்களிலிருந்து மின் இணைப்பு கேட்டு வரப்பெற்ற மனுக்கள் எத்தனை ?

(ஆ) அவற்றுள் எத்தனைக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டது ?

(இ) கொடுக்கப்படாமல் உள்ளதற்கு காரணம் என்ன ?

விடை—

(அ) 8 மனுக்கள்.

(ஆ) 1–7–1978 வரை 3 மனுக்கள்.

(இ) பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கும் முறைகள் திருத்தி அமைக்கப்பட்டு 1—7—1978 முதல், மனுச் செய்த தேதியின் அடிப்படையில் மட்டும் முன்னுரிமை அளிக்கப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படுகிறது.



1979 பிப்ரவரி 12]

மலட்டார் ரிசர்வாயர் திட்டம்.

வினா 261—திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : மாண்புமிகு வேளாண்மை நீர்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தாலுக்காவில் உள்ள மலட்டார் (ரிசர்வாயர்) திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

விடை—

இத்திட்டம் முன்னோடி ஆய்வில் உள்ளது. முன்னோடி ஆய்வு அறிக்கை 1979-ம் ஆண்டு மார்ச் மாதம் அரசுக்குத் தலைமை (ஆய்வு) பொறியாளரால் அனுப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் பரிசீலிக்கப்பட்ட பிறகுதான் இதை நிறைவேற்றுவதைப் பற்றிய முடிவு எடுக்க முடியும்.

அரக்கோணம், வாலாஜா வட்டங்களில் வழங்கப்பெற்ற வீட்டு மனைகள்.

வினா 262— திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம், அரக்கோணம், வாலாஜா ஆகிய இரு வட்டங்களிலும் 1976 ஏப்ரல் முதல் 1978 மார்ச் முடிய வீட்டு மனை கோரி வந்த மனுக்கள் எத்தனை ?

(ஆ) எத்தனை பேர்களுக்கு வீட்டு மனை வழங்கப்பட்டது?

இ) வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கும் மனுக்கள் எத்தனை?

விடை—

| | | |
|---|---|---|
| (அ) | அரக்கோணம் .. .. .. .. | 589 |
| | வாலாஜா .. .. .. .. .. | 581 |
| (ஆ) | அரக்கோணம் .. .. .. .. | 388 |
| | வாலாஜா .. .. .. .. | 474 |
| (இ) | அரக்கோணம் .. .. .. .. | 156 |
| | வாலாஜா .. .. .. .. | 29 |

[1979 பிப்ரவரி 12

## செவ்வாத்தூரில் வெர்மிகுலைட் தொழிற்சாலை.

வினா 263— திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டம் நட்டாரம்பள்ளி தொகுதி செவ்வாத்தூர் பகுதியில் ஒரு வெர்மிகுலைட் பதப்படுத்தும் தொழிற்சாலை ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

விடை—

செவ்வாத்தூர் பகுதியில் பல வருடங்களாக வெர்மிகுலைட் சிறிய அளவில் தோண்டி எடுக்கப்பட்டு வருகிறது. அங்கு சுமார் 2.5 இலட்சம் டன்கள் வெர்மிகுலைட் கனிப்பொருள் கிடைக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. தமிழக அரசால் சமீபத்தில் நிறுவப்பட்ட தமிழ்நாடு கனிவள நிறுவனம் இப்பகுதியில் அதிக அளவில் வெர்மிகுலைட்டை தோண்டியெடுத்து, சுரங்கத்தின் அருகிலேயே அதனை தரமாக்கி (Crushing and Grading) விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது. சுரங்கத் தொழிலிலும் வெர்மிகுலைட் விற்பனைத் தொழிலிலும் வேரூன்றிய பிறகு வெர்மிகுலைட்டை பதப்படுத்தும் (Exfolidation) தொழிற்சாலை ஒன்று செவ்வாத்தூர் பகுதியிலேயே ஆரம்பிப்பது பற்றி ஆராயப்படும்.

## திருப்பத்தூரில் பெண்கள் கல்லூரி.

வினா 264— திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகரில் பெண்கள் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

வடஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகரில் பெண்கள் கல்லூரி அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1979 பிப்ரவரி 12]

## திருச்செந்தூர் ஆவுடையார் குளம் தூர் எடுத்தல்.

வினா 265— திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு வேளாண்மை, நீர்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் ஆவுடையார் குளம் பல ஆண்டுகளாக தூர் எடுக்கப்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்போது திருச்செந்தூர் வட்டத்திலுள்ள ஆவுடையார் குளத்தை தூர் வாரி புனரமைக்கும் திட்டத்தின் கீழ் எடுத்து புனரமைப்பு செய்யத் தேவையில்லை. குளத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு 48·05 ஏக்கர், அதில் 1375 முதல் 1383 பசலிகளில் 2.27 ஏக்கர் தான் இடைவெளி இருந்தது.

## வீரப்பனூர் துவக்கப்பள்ளிக் கட்டிடம்.

வினா 266— திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு செய்தி-அறநிலைய துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலை போளூர் வட்டத்தைச் சேர்ந்த வீரப்பனூர் கிராமத்தில் வனத்துறையினரால் 1977 ஆம் ஆண்டு துவக்கப்பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டப்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(இ) இக்கட்டிடத்திற்கும் பொறியாளர் சான்றிதழ் பெறப்பட்டுள்ளதா ?

விடை—

(அ) வேலூர் கோட்டத்தைச் சேர்ந்த வடஆற்காடு மாவட்டம், ஜவ்வாது மலையில், போளூர் வட்டத்தைச் சேர்ந்த விரப்பனூரில், 1976–77-ம் ஆண்டு ஆரம்பபாடசாலைக்கு புதிய கட்டடம் கட்டப்பட்டது.

(ஆ) அதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 27,783·70 (அதாவது மேற்படி கட்டிடம் கட்ட செலவிடப்பட்ட மொத்த தொகை).

(இ) வனத்துறையினுல் கட்டப்படுகிற கட்டிடங்களுக்கு, பொறியாளர் சான்றிதழ் ஏதும் பெற வேண்டிய அவசியமில்லை. தற்போதுள்ள விதிகளின்படி, ரூ. 10,000 அதற்கு மேலும் முதலீடு செய்யப்பட்ட கட்டடங்கள் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை பொது பணித்துறையினரால் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

## ஜவ்வாது மலைப் பகுதியில் காட்டு மரங்கள் திருடு பற்றிய வழக்குகள்.

வினா 267— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த இரண்டு ஆண்டுகளில் வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலைப் பகுதியில் காட்டு மரங்கள் திருடு பற்றிய வழக்குகள் தொடுக்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர் மீது?

(இ) எவ்வளவு மதிப்புள்ள மரம் பிடிக்கப்பட்டது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருட்டில் சம்பந்தப்பட்ட 5,404 நபர்கள் மீது 4,870 வழக்குகள் கடந்த 2 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டன ?

(இ) இதில் ரூ. 4,84,445 மதிப்புள்ள மரங்கள் பிடிக்கப்பட்டன.



## ஈயக்கொளத்தூர் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

வினா 268— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி ஈயகொளத்தூர் அரிசன காலனியில் வீட்டு மனைப்பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) எப்பொழுது பட்டாக்கள் வழங்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கலசப்பாக்கம் தொகுதி ஈயக்கொளத்தூர் அரிசன காலனியில் 32 வீடில்லா அரிசனங்களுக்கு வீட்டு மனை வழங்கத் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

(இ) நில ஆர்சித சட்ட விதிகளை அனுசரித்து விரைவில் பட்டாக்கள் வழங்கப்படும்.

## பத்தியவாடி கிராம அரிசன குடியிருப்பிலிருந்து சுடுகாட்டிற்கு பாதை அமைத்தல்.

வினா 269—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் தொகுதியைச் சேர்ந்த பத்தியவாடி கிராம அரிசன குடியிருப்பிலிருந்து சுடுகாட்டிற்கு பாதை அமைத்துத்தரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அத்திட்டம் எப்போது செயற்படுத்தப்படும்?

விடை—

(அ) பத்தியவாடி புல எண் 65/8 பி-ல் உள்ள சுடுகாடு பத்தியவாடி அரிசன காலனியிலிருந்து வரும் வண்டிப் பாதையிலிருந்து புல எண் 64/3-லுள்ள நடைப்பாதை மூலம் இணைக்கப்பட்டுள்ளதால் புதியதாக சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை அமைக்கத் தேவையில்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்வி எழவில்லை.

[1979 பிப்ரவரி 12

## பல்லங்குளம் கண்மாயில் வீடுகட்டிக் குடியிருப்போர்.

வினா 270—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதியைச் சேர்ந்த சில் நாயக்கன்பட்டி கிராமத்தில் பகடைகள் இனத்தைச் சேர்ந்தவர்கள் நீண்ட காலமாக பல்லங்குளம் கண்மாய்க்குள் வீடு கட்டி குடியிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு வேறு இடத்தில் வீடுகள் கட்டிக்கொடுக்கும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதியைச் சேர்ந்த சில் நாயக்கன் பட்டி கிராமத்தில் பகடைகள் இனத்தைச் சேர்ந்தவர்கள் நி. அ. எண் 621/2 நத்தத்தில் 0.79 ஏக்கரில் 10 குடிசைகளில் 13 குடும்பங்கள் வசிக்கின்றனர்.

(ஆ) அந்த நிலம் தாழ்வான பகுதியில் இருப்பதால் மேடான பகுதிக்கு அவர்களைக் குடியேற்ற நி.ஆ. எண் 620/1 மற்றும் 620/2-ல் 0·76 ஏக்கர் நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றது. நிலம் கையகப்படுத்திய பின்னர், வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றி ஆய்வு செய்யப்படும்.

## வரட்டனப்பள்ளி சித்த மருத்துவ மனை.

வினா 271—திரு. எச்.ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி தாலுக்கா பர்கூர் தொகுதி வரட்டனப்பள்ளி கிராமத்தில் உள்ள மூடப்பட்ட சித்த வைத்திய மனையை ஆரம்பச் சுகாதார நிலையமாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழாது.



1979 பிப்ரவரி 12]

## ஊத்தங்கரை தாலுக்கா குன்னத்தூர் ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா 272—திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தருமபுரி மாவட்டம் ஊத்தங்கரை தாலுக்காவில், உள்ள குன்னத்தூர் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## பெரிச்சிபாளையம் அரிசனங்களுக்கு வீட்டு வசதி.

வினா 273— திரு. சொ. ந. பழனிச்சாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் டவுன் பெரிச்சிபாளையத்திலுள்ள அரிசனங்களுக்கு வீடு கட்ட நிலம் ஏதேனும் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) திருப்பூர் டவுன் பெரிச்சிபாளையத்திலுள்ள அரிசனங்களுக்கு வீடுகட்ட, கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் வட்டம் திருப்பூர் கிராமத்தில் நி.அ. எண் 285 (பகுதி) லும், 286-லும் மொத்தம் 5.77 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) மேற்கூறிய நிலங்களை கையகப்படுத்த நிலமெடுப்புச் சட்டம் 4 (1) பிரிவின்படி முன் மொழிவு அரசினரால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. நிலமெடுப்பு அதிகாரி நிலமெடுப்பு சட்டம் 5-ஏ பிரிவின்படி விசாரணை செய்து தக்க விளம்பல் அறிவிக்கைக்கான செயற்குறிப்புகளை அனுப்புவதாகக் கூறியுள்ளார்.

[1979 பிப்ரவரி 12

## நெடுஞ்சாலை கிராமப் பணித்துறையில் தினக்கூலி அடிப்படையில் வேலை செய்பவர்கள்.

வினா 274—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலை கிராமப் பணித்துறையில் தினக்கூலி அடிப்படையில் ஓராண்டுக்கு மேலாக வேலை செய்து வருபவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்குவதற்குரிய செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

(அ) நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் மட்டும்தான் 79 பேர் தினக்கூலி அடிப்படையில் ஓராண்டுக்கு மேலாகப் பணி புரிந்து வருகிறார்கள்.

(ஆ) 1977-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாளன்று 10 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்திருக்கிற 16 நபர்களின் பணியை, அரசு ஏற்கனவே நிரந்தரம் செய்துள்ளது. வேறு செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

## நிலக்கோட்டை பகுதியில் மினி பஸ் போக்குவரத்து.

வினா 275— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ம் தேதியன்று மதுரை மாவட்டம் நிலக்கோட்டையில் மினி பஸ் சர்வீஸ் துவக்கி வைக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அத்தகைய பஸ் சர்வீஸ் எங்கெங்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டத்தைத் தவிர, கோவை, தர்மபுரி, சென்னை, வட ஆற்காடு, இராமநாதபுரம், தஞ்சாவூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஏற்கனவே மினி பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இதைத் தவிர மேலும் சில தடங்களிலும், மற்றும் இதர மாவட்டங்களிலும், சுமார் 194 தடங்களில் மினி பஸ்கள் விடுவதற்கான செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.



1979 பிப்ரவரி 12]

## சின்னசேலம் நாககுப்பம்சாலை.

வினா 276—திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னசேலத்திலிருந்து நாககுப்பம் போகும் சாலையை செப்பனிடும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரமென்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு குடியிருப்புகள்.

வினா 277— திரு. ஆ. நடராஜன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) போக்குவரத்துக்கழகங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) பல்லவன் போக்குவரத்துக்கழகம் (பெருநகர் பிரிவு), பல்லவன் போக்குவரத்துக் கழகம் (விரைவு பிரிவு),சேரன் போக்குவரத்துக் கழகம், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகங்களில் மட்டும் குடியிருப்புகள் தொழிலாளர்களுக்குக் கட்டித்தரப்பட்டுள்ளது.

(ஆ) விவர அறிக்கை ஒன்று * அவை முன் வைக்கப்பட்டுள்ளது

* 445-446ம் பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1979 பிப்ரவரி 12

## ஊராட்சி ஒன்றியங்களில் பனை மரங்கள் வளர்க்கும் திட்டம்.

வினா 278—திரு. யா. சை. மூ. யூசுப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனை மரங்களை வளர்க்கும் பொருட்டு, ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் ஏதேனும் திட்டங்கள் திட்டப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எந்நிலையில் உள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

## நெல்லை மாவட்டத்தில் பூமிதான இயக்கத்திற்கு நிலம் வழங்கியோர்.

வினா 279—திரு. யா. சை. மூ. யூசுப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் நில உச்சவரம்புக் குட்பட்டு அதிகமான நிலத்தை பூமிதான இயக்கத்திற்கு நிலம் வழங்கியவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவ்வாறு வழங்கிய நிலத்தின் பரப்பு எவ்வளவு?

(இ) இந்த நிலங்கள் தற்போது பூதான இயக்கத்தினரிடம் உள்ளதா?

(ஈ) இல்லை எனில், யார் அந்த நிலங்களை பராமரித்து வருகின்றனர்?

(உ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

(அ) இருவர்—(1) சுப்பராய ரெட்டியார் மகன் ரங்கசாமி ரெட்டியார், (2) கழுகுமலை காமு ரெட்டியார்.

(ஆ) 151.62 ஏக்கர் மற்றும் 33.45 ஏக்கர்.

(இ) ஆம், நிலங்கள் பூதான வாரியத்திடம் உள்ளது.

(ஈ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.



1979 பிப்ரவரி 12]

## கும்பகோணம் தாலுக்காவில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.

வினா 280—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ல் கும்பகோணம் தாலூகாவில் மின் மோட்டார்களுக்கு எவ்வளவு பேர் மின் இணைப்பு கேட்டு மனுச் செய்துள்ளனர்?

(ஆ) அவற்றுள், இன்னும் எத்தனை மனுக்கள் நிலுவையில் உள்ளன?

விடை—

(அ) 175 பேர்.

(ஆ) 131 மனுக்கள்.

## கேளம்பாக்கத்தில் உப்பு உற்பத்தி.

வினா 281—திரு. கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் ஒன்றியத்தில் அடங்கிய கேளம்பாக்கத்தில் உற்பத்தியாகும் உப்பை பக்குவப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் அங்கு ஒரு தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் உண்டா?

விடை—

தற்போது இல்லை.

## வசப்பத்தூரில் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கல்.

வினா 282—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ல் சிதம்பரம் வட்டம், வசப்பத்தூர் அரிசன மக்கள் எத்தனை பேர் வீட்டு மனை கேட்டு அரசுக்கு மனு அனுப்பியுள்ளனர்?

(ஆ) அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

[1979 பிப்ரவரி 12

விடை—

(அ) 1977–78-ல் சிதம்பரம் வட்டம், வசபப்பத்தூர் கிராம அரிசன மக்கள் வீட்டு மனை கேட்டு அரசுக்கு மனு எதுவும் கொடுக்கவில்லை.

(ஆ) எனினும் வசபப்பத்தூரில் வீட்டு மனை இல்லாத அரிசன குடும்பங்கள் உள்ளனவா என்று நேரில் பார்வையிட்டு தேவை ஏற்பட்டால் நில ஆர்சித நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும் என்று தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

## தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகள்.

வினா 283— திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976–77-ம் ஆண்டில் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை?

(ஆ) அதில் தண்டனையில் முடிந்த வழக்குகள் எத்தனை?

விடை—

| | |
|---|---|
| (அ) 1976–77-ம் ஆண்டில் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள். | 1,716 |
| (ஆ) அவற்றில் தண்டனையில் முடிந்த வழக்குகள் .. .. .. .. | 658 |

## மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப் பெற்ற மாணவர்கள்.

வினா 284— திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்லூரியில் 1977–78-ம் ஆண்டில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அதில் தாழ்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

(அ) 1,301.

(ஆ) 182.



1979 பிப்ரவரி 12]

## மதுரை மாநகரில் பணிபுரியும் என். எம். ஆர். தொழிலாளர்கள்.

வினா 285— திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சியில் பணிபுரியும் என். எம். ஆர். தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களில் வேலை உறுதி செய்யப்பட்டவர்கள் எத்தனை சதவிகிதம்?

விடை—

(அ) 746.

(ஆ) இவர்களில் இதுவரை ஐந்து பேர் வேலை உறுதி செய்யப்பட்டுள்ளனர். 0.7 சதவீதம்.

## தஞ்சை மருத்துவ மனையில் செயற்கை உறுப்புகள் பொருத்தும் நிலையம்.

வினா 286— திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்ட மருத்துவமனையில் உறுப்புகள் பொருத்தும் நிலையம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன என்ன செயற்கை உறுப்புகள் பொருத்தப்படுகின்றன?

விடை—

(அ) & (ஆ) இராஜா மிராஸ்தார் மருத்துவ மனையில் ஒரு செயற்கை உறுப்புகள் துணை-நிலையம் (Artificial-Limbs Sub-Centre) செயல்படுகிறது. இந்நிலையத்தில் செயற்கை உறுப்புகள் (Artificial Limbs) செய்யப்படுவதற்கான வசதிகள் தற்போது இல்லை. கீழே குறிப்பிட்டுள்ள முடநீக்கு சாதனங்கள் (Orthopaedic appliances) மட்டுமே தயார் செய்யப்பட்டு பொருத்தப்படுகின்றன—

(1) முழங்கால் மூட்டுக்கு மேல் அணியும் முடநீக்கு சாதனம் (Above Knee Calipers).

(2) முழங்கால் மூட்டுக்கு கீழ் அணியும் முடநீக்கு சாதனம் (Below Knee Calipers).

(3) முதுகு தண்டுக்கு ஆதார சாதனம் (Spinal Supports).

(4) கழுத்துக்குப் பொருத்தப்படும் பட்டைகள் (Cervical Collers).

(5) இடுப்பிற்கு பொருத்தப்படும் பட்டைகள் (Lumbescral Belts)

(6) வாதநோய்க்கெனப் பிரத்தியேகமாகத் தாயாரிக்கப் படும் பலவகைக் காலணிகள் (Various types of Surgical boots).

## உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள்.

வினா 287— திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976–77-ம் ஆண்டில் உச்சவரம்பின்கீழ் எடுக்கப் பட்ட நிலம் எவ்வளவு ?

(ஆ) அதில் நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலம் எத்தனை ஏக்கர் ?

விடை—

(அ) 1976 .. .. 5,348 ஏக்கர்கள்.
1977 .. .. 607 ஏக்கர்கள்.

(ஆ) நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலம்.—
1976 .. .. 7,678 ஏக்கர்கள்.
1977 .. .. 1,845 ஏக்கர்கள்.

## திருப்பத்தூர், வாணியம்பாடி தாலூக்காக்களில் மினி பஸ்களுக்கு உரிமங்கள்.

வினா 288— திரு. பி. சுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர், வாணியம் பாடி தாலூக்காக்களில் மினி பஸ்கள் புதியதாக விடுவதற்கு அனுமதி கோரி எத்தனை மனுக்கள் வந்துள்ளன ?

(ஆ) எத்தனை மனுக்களுக்கு ரூட் கொடுக்கப்பட்டது?



விடை—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் வாணியம்பாடி தாலூகாக்களில் கீழ்க்கண்ட தடங்களில் மினிபஸ் விடுவதற்கு மனுக்கள் கோரப்பட்டது.

(1) நாராயணபுரம் .. ஆம்பூர்.
(2) ஆலங்காயம் .. வாணியம்பாடி.
(3) ஆலங்காயம் .. நெல்லிவாசல் நாடு.

மேற்கண்ட தடங்களில் அனுமதிச் சீட்டுக்கோரி முறையே 31, 31, 11 விண்ணப்பங்கள் வந்தன.

(ஆ) மூன்று மனுதாரர்களுக்கு மட்டுமே மேற்கண்ட தடங்களில் அனுமதிச்சீட்டு வழங்கப்பட்டது.

## கந்தலி பஞ்சாயத்து மருந்தகம்.

வினா 289—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறைஅமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தாலூகா, கந்தலி என்னுமிடத்திலுள்ள பஞ்சாயத்து மருந்தகத்தை அரசாங்க மருத்துவமனை ஆக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

## ஜோலார்பேட்டை பஞ்சாயத்து யூனியன் மருந்தகம்.

வினா 290— திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், ஜோலார்பேட்டையிலுள்ள பஞ்சாயத்து யூனியன் மருந்தகத்தை அரசாங்க மருத்துவமனை யாக ஆக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

[1979 பிப்ரவரி 12

## திருப்பத்தூரிலுள்ள C.K.C. நகர்.

வினா 291—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் D/C. கண்டிஷனிலுள்ள C.K.C. நகர் என்னுமிடத்தை பட்டா நிலம் ஆக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்த திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இது சம்பந்தப்பட்ட செயற்குறிப்பு வடாற்காடு மாவட்ட வருவாய் அலுவலரிடம் உள்ளது. செயற்குறிப்பு வருவாய் வாரியத்தின் மூலம் அரசிற்கு கிடைக்கப்பெற்றபின் இது குறித்து முடிவெடுக்கப்படும்.

## திருப்பத்தூர் தாலூகாவில் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு.

வினா 292—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78ல் வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தாலுகாவில் உள்ள விவசாயிகளிடமிருந்து பம்பு செட்டுக்கு மின் இணைப்பு கேட்டு வந்த மனுக்கள் எத்தனை ?

(ஆ) எத்தனைக்கு மின் இணைப்பு தரப்பட்டது ?

(இ) பாக்கியுள்ள மனுக்கள் எத்தனை ?

விடை—

(அ) 291 மனுக்கள்.

(ஆ) & (இ) 'அ'வில் குறிப்பிட்ட விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. ஆனால் இதற்கு முன் நிலுவையிலிருந்த மனுக்களில் 239 கிணறுகளுக்கு 1977–78-ல் மின் இணைப்பு வழங்கப் பட்டது.



1979 பிப்ரவரி 12]

## திருப்பத்தூரில் அரிசன மாணவியர் விடுதி.

வினா 293—திரு.ப. சுந்தரம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் அரிசன மாணவியர் விடுதி கட்டும் உத்தேசமுண்டா ?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?

விடை—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் அரசு அரிசன மாணவியர் விடுதிக்குக் கட்டடம் கட்டும் உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## குரும்பேரி அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

வினா 294—திரு.ப. சுந்தரம்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தாலூகா குரும்பேரியில் அரிசனங்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்கு இடம் ஒதுக்கப்பட்டு உள்ளதா ?

(ஆ) எப்போது எத்தனை வீட்டுக்கு ஒதுக்கப்பட்டது?

விடை—

(அ) ஆம்.

(ஆ) குரும்பேரி கிராமத்தில் குடியாத்தம் அரிசன நல தனி வட்டாட்சியர் 15-12-1976 தேதி தீர்ப்பாணையில் 40 வீட்டு மனைகள் வழங்க நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. நில உரிமை தாரர்கள் தங்கள் ஆக்ரமணங்களை அகற்றி வேறு இடத்திற்கு குடிபோக 3 மாத காலம் அவகாசம் கோரியதன் பேரில் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஆக்ரமணங்களை அகற்றி நிலங்களை எடுத்து கொள்ள அரிசன நல தனி வட்டாட்சியர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். ஆர்ஜித நிலங்களை அரசு தரப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு விரைவில் பயனாளிகளுக்கு வீட்டு மனைகள் வழங்கப்படும்.

[1979 பிப்ரவரி 12

## திருமருகன் ஒன்றியத்தில் போடப்பட்ட கைப்பம்புகள்.

வினா 295—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமருகல் ஒன்றியத்தில் போடப்பட்ட மொத்த கைப்பம்புகள் எத்தனை?

(ஆ) அவற்றில் இயங்கிக் கொண்டிருப்பவைகள் எத்தனை?

விடை—

(அ) திருமருகல் ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 1,040 கைப்பம்புகள் போடப்பட்டுள்ளன.

(ஆ) அவை அனைத்தும் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

## லஞ்ச வழக்குகள்.

வினா 296—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977–78-ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட லஞ்ச வழக்குகள் எத்தனை?

விடை

1977–78-ம் ஆண்டில் 510 லஞ்ச வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

## உணவுப் பண்டங்கள் பதுக்கல் குற்றத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்.

வினா 297—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977–78-ம் ஆண்டில் உணவு பண்டப்பதுக்கல் குற்றத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை?

விடை—

1977-ம் ஆண்டில் 759 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

1978-ம் ஆண்டில் ஆகஸ்ட் திங்கள் 19-ம் நாள் வரை 467 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.



1979 பிப்ரவரி 12]

## ஊராட்சித் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல்.

வினா 298—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சித் தேர்தலுக்காக முன் தேர்தலிலிருந்து இது வரை எத்தனை முறை வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது?

(ஆ) அதன் மொத்தச் செலவு எவ்வளவு?

விடை—

(அ) மூன்று முறைகள் தயாரிக்கப்பட்டன.

(ஆ) அதன் மொத்தச் செலவு ரூ. 83,28,423·33.

## தீ விபத்தில் இறந்தவர்கள்.

வினா 299—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977–78-ம் ஆண்டில் தீ விபத்தின் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

27 பேர்கள், 1977–78-ம் ஆண்டில் தீ விபத்தினால் இறந்துவிட்டனர்.

## செம்பரம்பாக்கம் செங்கல் உற்பத்தித் தொழிற்சாலை.

வினா 300—திரு. எஸ்.ஜே. இராமசாமி: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் செம்பரம்பாக்கத்தில் உள்ள அரசினர் செங்கல் உற்பத்தி தொழிற்சாலையில் 1971 முதல் 1978 மார்ச் முடிய உற்பத்தி செய்யப்பட்ட செங்கற்களின் மதிப்பு என்ன? வருடவாரியாக?

(ஆ) எவ்வளவு தொகைக்கு விற்பனை செய்யப்பட்டது? வருடவாரியாக?

(இ) இதற்கு கூடுதல் கட்டடங்கள் ஏதும் கட்டப்பட்டுள்ளனவா?

(ஈ) ஆம் எனில், அதற்கு எவ்வளவு செலவு செய்யப்பட்டது?

(உ) தற்போது அந்த தொழிற்சாலை லாபத்தில் இயங்குகிறதா? அல்லது நஷ்டத்தில் இயங்குகிறதா?

[1979 பிப்ரவரி 12

விடை

(அ) 1970–71-லிருந்து 1977–78 முடிய டாசெல் இயந்திர செங்கற் தொழிற்சாலையில் உற்பத்தியான செங்கற்களின் அளவும் அதன் மதிப்பும் (ரூபாயில்) கீழே தரப்பட்டுள்ளன:-

| வருடம். | | உற்பத்தியான செங்கற்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | மதிப்பு ரூபாய் (இலட்சத்தில்). |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 1970–71 | .. | 91.74 | 8.53 |
| 1971–72 | .. | 102.28 | 11.08 |
| 1972–73 | .. | 69.35 | 7.77 |
| 1973–74 | .. | 58.28 | 7.98 |
| 1974–75 | .. | 79.63 | 12.33 |
| 1975–76 | .. | 76.28 | 11.26 |
| 1976–77 | .. | 57.83 | 10.38 |
| 1977–78 | .. | 36.81 | 6.26 |

(ஆ) 1970–71-லிருந்து 1977–78 முடிய விற்பனை செய்யப்பட்ட செங்கற்களின் மதிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| வருடம். | | எண்ணிக்கை (இலட்சத்தில்). | மதிப்பு ரூபாய். (இலட்சத்தில்). |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 1970–71 | .. | 92.12 | 8.57 |
| 1971–72 | .. | 96.43 | 10.45 |
| 1972–73 | .. | 66.23 | 7.42 |
| 1973–74 | .. | 56.39 | 7.72 |
| 1974–75 | .. | 78.60 | 12.18 |
| 1975–76 | .. | 84.77 | 12.51 |
| 1976–77 | .. | 45.50 | 8.17 |
| 1977–78 | .. | 40.50 | 6.88 |

(இ) ஆம்.

(ஈ) ரூ. 12.20 இலட்சம் (தளவாடங்களின் செலவும் சேர்த்து).

(உ) இந்த இயந்திர செங்கற் தொழிற்சாலை தொடக்கத்திலிருந்து நஷ்டத்தில்தான் இயங்கிக் கொண்டு வருகிறது.



1979 பிப்ரவரி 12]

## Regional Engineering College, Tiruchi.

Q 301—Thiru R. Umanath : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) Whether a four member committee with the Secretary, Education Department, as Chairman, has been constituted in December 1977 or any other date to go into the affairs of the Regional Engineering College, Tiruchy ;

(b) If so, the personnel of the Committee; and

(c) the terms of reference of the Committee ?

Ans—

(a) The Government did not appoint any committee. But the Board of Governors of the College appointed a Committee.

(b) The following are the members of the Committee—

(1) Thiru C.G. Rangabashyam, I.A.S., Commissioner & Secretary to Government, Education Department—Chairman.

(2) Dr. V.C. Kulandaiswamy, Former Director of Technical Education—Member.

(3) Thiru S.K. Handa, Formerly Deputy Educational Adviser to Govt. of India, Ministry of Education & Social Welfare, Madras-6—Member.

(4) Dr. P. Venkata Rao, Professor in charge of special Assignment, Indian Institute of Technology-Member.

(5) Prof. P.S. Manisundaram, Principal, Regional Engineering College, Tiruchi-Member.

(c) To review and report on the working and development of the College at the next Board meeting.

The Committee met twice. Further delebrations could not be held as Thiru V.C. Kulandaiswamy and Thiru S.K. Handa could not continue as members. After these vacancies in the Committee are filled up by the Board of Governors, the Committee will resume its work.

[1979 பிப்ரவரி 12

**Association of Regional Engeering College Tiruchi.**

Q 302—Thiru R. Umanath : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) The names of the Associations representing the teaching staff, non-teaching staff and Hostel employees of the Regional Engineering College, Tiruchi.

(b) Whether these association have represented to the Government to help them to secure recognition?

(c) If so, the action taken by the Government.

Ans—

(a) The following Associations were formed by the employees of the Regional Engineering College, Tiruchirapalli, which have not been recognised by the board of Governors of the College :

(1) Tiruchirapalli Regional Engineering College (Faculty) Association.

(2) Regional Engineering College Staff Welfare Association.

(3) Regional Engineering College Hostel Employees Association.

(b) No.

(c) Does not arise.

**சென்னை நகர சாலை அபிவிருத்தி போக்குவரத்துத் திட்டக்குழு.**

வினா 303 —திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகர சாலை அபிவிருத்தி போக்குவரத்துத் திட்டக்குழு தன்னுடைய அறிக்கையை அரசுக்கு அளித்துவிட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?



1979 பிப்ரவரி 12]

விடை—

(அ) சென்னை நகர சாலை அபிவிருத்தி போக்குவரத்துத் திட்டக்குழு தன்னுடைய அறிக்கையை அரசுக்கு அளிக்க வேண்டுமென்று நியதி இல்லை. அது சென்னை நகர போக்குவரத்து அபிவிருத்தி, போக்குவரத்தைத் திட்டமிடல் சம்பந்தமான, முக்கிய செயற் குறிப்புகளை ஆராய்ந்து, எடுக்கப்பட்ட முடிவுகளை சம்பந்தப்பட்ட இலாக்காக்கள் துரிதமாக நிறைவேற்றுமாறு பார்த்துக் கொள்ள ஏற்படுத்தப்பட்ட குழுவாகும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள்.**

வினா 304 —திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-ம் ஆண்டு ஜுன் திங்கள் 30-ம் நாளிலிருந்து இம்மாநிலத்தில் துப்பாக்கிச் சூட்டினால் இறந்தவர்கள் எத்தனை பேர் ? அவர்கள் குடும்பத்துக்கு வழங்கப்பட்ட மான்யத் தொகை எவ்வளவு ?

(ஆ) துப்பாக்கிச் சூட்டில் காயமுற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ? அவர்கள் பெற்ற மான்யத் தொகை எவ்வளவு ?

விடை—

(அ) 1977-ம் ஆண்டு ஜுன் திங்கள் 30-ம் நாள் முதல் இது வரையில் துப்பாக்கிச் சூட்டினால் மரணமடைந்தவர்கள் 12, பேர்கள். அவர்களின் ஒவ்வொரு குடும்பத்துக்கும், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 5,000 அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், மரணமடைந்தவர்களில் ஒருவருக்கு வாரிசுதாரர்கள் எவரும் இல்லாததால், அத்தொகை யாருக்கும் அளிக்கப்படவில்லை.

(ஆ) 14 பேர். அவர்களுக்கு மான்யத் தொகை எதுவும் அளிக்கப்படவில்லை.

**உடுமலை தாலுக்கா விவசாயிகளிடமிருந்து தண்டவரி வசூல்.**

வினா 305 —திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு வருவாய்த்துறை, அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கோவை மாவட்டம், உடுமலைத் தாலுக்கா விவசாயிகள் மீது 1973-ம் ஆண்டுக்குப் பின் விதிக்கப்பட்ட தண்டவரி பாக்கிக்காக ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

[1979 பிப்ரவரி 12

விடை—

கோவை மாவட்டம், உடுமலை வட்டத்தில் தண்ணீர் தண்டத் தீர்வை நிலுவைக்காக மட்டும் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. நிலவரி, தண்ணீர்த் தீர்வை, தண்ணீர் தண்டத் தீர்வை, தனித் தண்ணீர் மேல்வரி ஆகிய நிலுவைக்காக நான்கு பேர்கள் மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டது. மூன்று நபர்களிட மிருந்து நிலுவைத் தொகை வசூலானதும் ஜப்தி செய்யப்பட்ட பொருள்கள் அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டன. ஒரு நபரிடமிருந்து நிலுவைத் தொகை இன்னமும் வசூல் ஆகவில்லை. எனவே, ஜப்தி செய்யப்பட்ட பொருட்கள் திருப்பிக் கொடுக்கப் படவில்லை.

## சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு குடும்பப் பாதுகாப்புத் திட்டம்.

வினா 306—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை மாநகராட்சி மன்ற ஊழியர்கள் பணி காலத்தில் இறந்துபோனால் குடும்பப் பாதுகாப்பு நிதி ரூ. 10,000 கொடுக்கப்படுகிறதா ?

(ஆ) 1976 முதல் 1978-ல் இதுவரை எத்தனை குடும்பங் களுக்கு இந்த நிதி அளிக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 456 குடும்பங்கள்.

## சென்னை, நேதாஜி நகர் பர்மா தமிழர்கள் குடியிருப்புக்கு மின் வசதி.

வினா 307—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை, தண்டையார்பேட்டை நேதாஜி நகரில் இருக்கும் பர்மா தமிழர்கள் தாங்கள் குடியிருந்து வரும் பகுதி களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கும்படி அரசுக்கு கோரிக்கை விடுத்திருக்கிறார்களா ?

(ஆ) இப்பகுதியில் வாழும் மக்களின் எண்ணிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை. 1,636

அவற்றில் (பர்மா அகதிகள் ) .. 500



1979 பிப்ரவரி 12]

## ஏலகிரி மலைவாழ் மக்களுக்கு தொழிற் கடன்கள்.

வினா 308—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டம், ஏலகிரி மலையிலுள்ள மலைவாழ் மக்களுக்கு ஆடு, மாடு, கோழி வளர்ப்பதற்காக 1974 முதல் 1977 வரை எவ்வளவு கடன் கொடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) எந்த அடிப்படையில் கடன் கொடுக்கப்படுகிறது ?

விடை—

(அ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டம் 1976–77-ம் ஆண்டு முதல்தான் இம்மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பழங்குடி மக்களுக்கு ஆடுகள், மாடுகள், கோழி, பன்றி முதலியவை வளர்ப்பதற்காக தமிழக அரசால் மலைவாழ் மக்களுக்கு, அதன் தொகையில் 50 விழுக்காடு, மான்யமாக 1976–77-ம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. வட ஆற்காடு ஏலகிரி மலைவாழ் மக்களுக்கு இத்திட்டத்தின்கீழ் 1976–77-ம் ஆண்டில் ரூபாய் 40,956-ம் மற்றும் 1977–78-ம் ஆண்டில் ரூ.57,925-ம் மானியத்தொகையாக வழங்கப்பட்டன. 1978–79-ம் ஆண்டிற்கு ஆடுகள் வளர்க்க மான்யமாக ரூ. 50,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஆ) "மலைவாழ் மக்களுக்காக பல நல் வாழ்வுத் திட்டங் களை வகுத்து அவைகளை நிறைவேற்றப்படும்போது ஏற்படும் நன்மைகள் அச்சமுதாயத்தின் அடித்தளத்திலிருக்கும் மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ள தகுதி வாய்ந்தவர்களுக்குத்தான் கிடைக்க வேண்டும் என்பதை மத்திய-மாநில அரசுகளின் கொள்கையாகும். துணைத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் மேற் சொன்ன கொள்கையினை செயல்படுத்தும் வகையில் பல சந்தர்ப் பங்களில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆகவே துறைத் தலை வர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அவர்களுடைய அலுவலர்களும் மலைவாழ் மக்களின் பகுதிகளில் நிலவும் சூழ் நிலைகளுக்கேற்ப, சமூக பொருளாதாரத்தின் மிக அடிதளத்தில் உழலுகின்ற பழங்குடி மக்களையே தேர்ந்தெடுத்து தேசியமய மாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாகவும், கூட்டுறவு பெருமளவு பல நோக்குச் சங்கங்களின் மூலமாகவும் மிகக் குறைந்த, வட்டிக்குக் கடன்களும் அரசின் மான்யமும் வழங்குகின்றனர்.

[1979 பிப்ரவரி 12

## இராதாபுரம் இரண்டாம் நிலைக் கால்வாய்க்கு கான்கிரீட் போடுதல்.

வினா 309—திரு. யா. சை. மூ. யூசுப் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தொகுதியில் உள்ள இராதாபுரம் மைல் 4-7-315-ல் உள்ள தண்ணீர் வழங்கு கால்வாய்க்கு சிமெண்ட் பூச டெண்டர் ஏதேனும் கோரப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

(இ) இதன் மேல் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(ஈ) இத்திட்டத்திற்குரிய மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ) இராதாபுரம் கால்வாயிலிருந்து 7/891 (மைல் 4-7-315) பிரிகின்ற இரண்டாம் நிலைக் கால்வாய் கான்கிரீட் போடுவதற்காக டெண்டர்கள் கோரப்பட்டன.

(ஆ) டெண்டர்கள் பெற்றுக் கொள்ளும் கடைசி தேதி 3-2-1978 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

(இ) ஒப்பந்தம் நிர்ணயிக்கப்பட்டு வேலை செய்யும் பொருட்டு ஒப்பந்தக்காரருக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இவ்வேலை 21-4-1978-ல் தொடங்கப்பட்டது.

(ஈ) இந்த வேலையின் மதிப்பீடு ரூ. 23,000.

## குமரி மாவட்டத்தில் கரும்பு சாகுபடி.

வினா 310—திரு. செ. கிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குமரி மாவட்டத்தில் கரும்புசாகுபடியினை ஊக்குவிப்பதற்கான திட்டம் ஏதாவது உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

விடை —

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



1979 பிப்ரவரி 12]

## ஆசிராமம் கிராமத்தின் அருகே உள்ள அணை.

வினா 311—திரு. செ. கிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி தொகுதியில், ''ஆசிராமம்'' என்ற கிராமத்தின் அருகாமையில் ஓடிக்கொண்டிருக்கிற பழைய ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணையின் நீர்த்தேக்க மட்டம் கணிசமான அளவுக்கு குறைந்து சுமார் இரண்டாயிரம் ஏக்கர் ஆயக்கட்டு நிலங்கள் பாதிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அதனை செப்பனிடும் பணியினை மேற்கொள்ளும் உத்தேசம் உண்டா ?

விடை

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி தொகுதியில் ''ஆசிராமம்'' என்ற கிராமத்தின் அருகாமையில் பழைய ஆற்றின் குறுக்கே சோழந்திட்டை அணைக்கட்டு, குமரி அணைக்கட்டு என்ற இரண்டு அணைக்கட்டுகள் உள்ளன. சோழந்திட்டை அணைக்கட்டு 1976 ஆம் ஆண்டு கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. இவ்வணையின் நீர் இருப்பைப் பொறுத்து விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர் அளிக்கப்படுகின்றது. குமரி அணைக்கட்டு பெருமழையின் காரணமாக 1970-ம் ஆண்டு உடைந்துவிட்டது. சுசீந்திரம் கால்வாய் இதனின்று பிரிகிறது. ஆயினும், மணல் தடுப்புகள் போடப்பட்டு, சுசீந்திரம் கால்வாய் செயல்படுத்தப்பட்டது. இந்த உடைப்பால் ஆயக்கட்டுகள் பாதிக்கப்படவில்லை. ஆயினும் உடைந்த அணை மறுபடியும் கட்டப்பட்டு மதகுப் பலகைகளுடன் தேவையான நீளத்திற்கு விரிவுபடுத்த வேண்டியுள்ளது. குமரி அணைக்கட்டை முன்போல் திரும்பக் கட்டுவதற்கு ரூ. 13 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பெற்று அது அரசின் ஆய்வில் உள்ளது.

## ஆரோக்கியபுரம் மீனவர் குடும்பங்களுக்கு புதிய வீடுகள்.

வினா 312—திரு. செ. கிருஷ்ணன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

குமரி மாவட்டம் கன்னியாகுமரியிலிருந்து கிழக்கு கடற்கரை ஓரத்தில் சுமார் ஒன்றரை மைல் தொலைவில் உள்ள ''ஆரோக்கியபுரம்'' என்ற மீனவர் கிராமத்திலுள்ள இரு நூறு குடும்பங்களுக்கும் புதிய வீடு கட்டித்தருவது சம்பந்தமாக அரசுக்கு மனுக்கள் வந்துள்ளதா ?

விடை

இல்லை.

[1979 பிப்ரவரி 12

## இறச்ச குளம் கேசவன்புதூர் உயர்நிலைப்பள்ளி கட்டிடங்கள்.

வினா 313— திரு. செ. கிருஷ்ணன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதியைச் சார்ந்த இறச்சகுளம், கேசவன்புதூர் ஆகிய ஊர்களில் உயர்நிலைப்பள்ளிகளுக்கு அரசு அனுமதி வழங்கப்பட்டு அப்பகுதி மக்களால் இடமும் உரிய பணமும் கட்டியும் இந்நாள் வரை கட்டிட வேலை துவங்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் எப்போது வேலை துவங்கப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இறச்சகுளம், அரசு உயர்நிலைப்பள்ளிக்கு கட்டடம் கட்டுவது குறித்து ஆய்வு செய்ய வரைபடமும் மதிப்பீடும் பொதுப்பணித்துறையிடம் கோரப்பட்டுள்ளன. அவை கிட்டியதும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும். கேசவன் **புதூர்** அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு கட்டடம் கட்டும் பணி 1979–80-ம் ஆண்டில் பரிசீலிக்கப்பட்டு நிதிநிலை இடம் தருமாயின் எடுத்துக்கொள்ளப்படும்.

## கன்னியாகுமரி கடற்கரையை அழகுபடுத்தல்.

வினா 314— திரு. செ. கிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கன்னியாகுமரி கடற்கரையில் உள்ள காந்தி மண்டபத்திலிருந்து மணல்தேரி வரை சுமார் நான்கு பர்லாங் நீளமுள்ள கடற்கரையை அழகுபடுத்தி சிறந்த பூங்கா ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

விடை—

தற்போது இல்லை.

## சாத்தமங்கலம் சலவையாளர்களுக்கு டோபிகானா கட்டுதல்.

வினா 315— திரு. என். வரதராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை நகர், சாத்தமங்கலம் சலவையாளர் சங்கம் தங்களுக்கு டோபிகானா கட்டித் தர வேண்டும் என்று கோரியனுப்பிய மனு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துவரும் நடவடிக்கைகள் யாவை ?



1979 பிப்ரவரி 12]

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(a) No.

(b) Does not arise.

## தென்னலூர் கிராமப்பள்ளிக் கட்டிடம்.

வினா 316—திரு. வி. சின்னையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஒன்றியத்தைச் சேர்ந்த தென்னலூர் கிராமத்தில் உள்ள பள்ளிக்கூடம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் மேற்படி பள்ளிக்கூடத்தை சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

இந்த பள்ளிக்கட்டடம் பழுதுபார்க்கப்பட்டுவிட்டது.

## கிளிக்குடி அருகே புதிய பாலம்.

வினா 317—திரு. வி. சின்னையா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஒன்றியத்தைச் சேர்ந்த கிளிக்குடி அருகே உள்ள ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஒன்றியத்தைச் சார்ந்த கிளிக்குடி-பேயல் சாலையில் கிலோ மீட்டர் 0/8-ல் வெள்ளாற்றின் மீது ஒரு பாலம் அமைக்கும் பணி ரூ. 5·00 இலட்சம் மதிப்பீட்டில் வெள்ள நிவாரணப் பணித்திட்டத்தில் தலைமைப்பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) வெள்ளப்பணிகள் அவர்களால் சேர்க்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. வேலை விரைவில் துவக்கப்படும்.

[1979 பிப்ரவரி 12

## திருச்செந்தூர் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

வினா 318—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு கிராம தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் தாலுகாவில் உள்ள பனைவெல்லக் கூட்டுறவு சங்கங்கள் இயங்காமலிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அவைகளை இயங்க வைக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

விடை—

(அ) நெல்லை மாவட்டம் திருச்செந்தூர் வட்டத்தில் 88 பனைவெல்லக் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. அவற்றுள் 15 சங்கங்கள் மட்டுமே இயங்குகின்றன. மீதமுள்ள 73 சங்கங்கள் இயங்காமல் உள்ளன.

(ஆ) இயங்காமல் உள்ள 73 சங்கங்களை இயங்கவைக்க சாத்தியக்கூறுகள் உள்ளனவா என ஆராயப்பட்டது. 73 சங்கங்களில், 42 சங்கங்கள் 1965 முதல் பெற்றுக்கொண்ட கடன்களை திரும்பச் செலுத்தாமல் உள்ளன. ஆகவே, கடன் நிலுவைகள் தவணை தவறியுள்ளன. தவணை தவறிய கடன்களை வசூல் செய்ய மேற்கண்ட 42 சங்கங்களின் மீதும் வழக்கு தொடரப்பட்டு, டிக்ரிகள் பெற்று, நிறைவேற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தவணை தவறிய கடன்களை வசூல் செய்த பிறகு தான் மேலும் நிதி உதவிகள் செய்து மேற்காணும் 42 சங்கங்களை இயங்க வைப்பது சாத்தியமாகும்.

மீதமுள்ள 31 இயங்காத சங்கங்களை மீண்டும் இயங்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் இதுவரை பலனளிக்கவில்லை. பனைத் தொழிலாளர்கள் இதில் அதிக சிரத்தை காட்டாததே இதற்கு முக்கிய காரணம்.

## தஞ்சை மாவட்ட கடலை விவசாயிகள் கோரிக்கை.

வினா 319—திரு.மு. அம்பிகாபதி: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையில் 26—3—78 அன்று நடந்த தஞ்சை மாவட்ட கடலை விவசாயிகள் மாநாட்டின் முடிவுகள் அரசுக்கு வந்ததா?

(ஆ) அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?



1979 பிப்ரவரி 12]

விடை—

பட்டுக்கோட்டையில் 26—3—78 அன்று நடந்த தஞ்சை மாவட்ட கடலை விவசாயிகள் மாநாட்டின் தீர்மானங்கள் கொண்ட கடிதம் ஏதும் அரசுக்கு வரவில்லை. இருப்பினும் மேற்கண்ட மாநாட்டின் தீர்மானங்கள் மீது அரசின் கவனம் செலுத்தப்பட்டது

தீர்மானங்கள் (1): 80 கிலோ அடங்கிய ஒரு மூட்டை நிலக்கடலையின் விலையை ரூ. 320 ஆக நிர்ணயம் செய்வது மற்றும் நிலக்கடலை கொள்முதலை அரசே ஏற்பது.

(2) எண்ணெய், வனஸ்பதி ஆலைகளையும் மற்றும் சோப்பு தொழிற்சாலையை அரசே ஏற்று நடத்துவது.

நிலக்கடலையின் விலையை நிர்ணயம் செய்யும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது. மாநில அரசுக்கு விலையை நிர்ணயம் செய்வதற்கு அதிகாரம் இல்லை. அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட அதிகமாக வெளிச்சந்தையில் விற்கப்படுவதால் நிலக்கடலை கொள்முதல் செய்ய அவசியம் ஏற்படவில்லை.

வினா 320—திரு.மு. அம்பிகாபதி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 31—3—78 அன்று தஞ்சை மாவட்ட கடலை விவசாயிகள் சார்பில் விண்ணப்பம் மாண்புமிகு அமைச்சரிடம் அளிக்கப்பட்டதா ?

(ஆ) அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

## காளப்பநாய்க்கன்பட்டி குடிநீர்த் திட்டம்.

வினா 321—திரு.வ. சின்னசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி காளப்பநாய்க்கன்பட்டி குடிநீர்த் திட்டத்திற்கு ரூ. 16 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) அத்திட்டம் எந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) ஆனால் இத்திட்டம் தற்சமயம் ஆய்வில் உள்ளது. ஆய்வு முடிந்ததும் திட்டச்செலவு முதலியவைகள் தெரிந்த பின்னர் அரசின் ஒப்புதல் கிடைத்தால் எடுத்துக்கொள்ளப்படும்.

[1979 பிப்ரவரி 12

### வாழவந்திக்கோம்பை பஞ்சாயத்து மலைவாழ்மக்கள் பகுதியில் ஆக்கிரமிப்பு.

வினா 322—திரு. வ. சின்னசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் ஒன்றியம், வாழவந்திக்கோம்பைப் பஞ்சாயத்து புளியங்காடு, கொசவங்குட்டை, வால்காடு ஆகிய ஊர்களில் உள்ள மலைவாழ் மக்களின் சுடுகாடுகள் வசதி படைத்த மேல் வகுப்பினர்கள் ஆக்ரமித்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்புகளை அகற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சேந்தமங்கலம் ஒன்றியம் வாழவந்திக்கோம்பை பஞ்சாயத்தில் உள்ள புளியங்காடு, கொசவங்குட்டை, வால்காடு ஆகிய கிராமங்களில், மலைவாழ் மக்களின் உபயோகத்திற்கு என தனியாக ஒதுக்கப்பட்ட சுடுகாடுகள் இல்லை. புளியங்காடு கிராமத்தில் சுடுகாடாகப் பயன்படுத்தப் படும் புல எண். 60/4ல் (ஓடை புறம்போக்கு) ஒரு பகுதியான 6 செண்டு நிலத்தில், பழனியப்ப கவுண்டர் என்பவர் விவசாயம் செய்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார். அதுபோல, வால்காடு கிராமத்தில் புல எண். 188/2-ல் (சுடுகாடு புறம்போக்கு) 4 செண்டு நிலத்தில் திரு. ஆர். பி. ஆறுமுகம் விவசாயம் செய்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார். மேற்கூறிய இரு ஆக்கிரமிப்புகளும் ஆட்சேபணைக்குரியதாக கருதி, வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப் பட்டு, நாமக்கல் கூடுதல் வட்டாட்சியர் வெளியேற்றும் நடவடிக்கையை எடுத்து வருகிறார்.

### சேந்தமங்கலம் தொகுதியில் வனத்துறை நிலங்கள்.

வினா 323—திரு. வ. சின்னசாமி : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கம் தொகுதியிலுள்ள நாரைக்கிணர் பகுதியிலும், முள்ளுக்குறிச்சிப் பகுதியிலும் முள் புதர்கள் நிறைந்துள்ள காட்டுப் புறம்போக்கு நிலங்களைப் பிரித்து ஏழை நிலமில்லாத விவசாயிகளுக்கு தர அரசு யோசித்துள்ளதா ?

விடை—

தமிழ்நாட்டில் காடுகளின் பரப்பளவு மிகக்குறைவாக இருப்பதாலும், வன நிலங்களை வன மேம்பாட்டிற்கன்றி வேறு காரியங்களுக்கு உபயோகப்படுத்தக்கூடாது என்பது அரசின் கொள்கையாக இருப்பதாலும் வன நிலங்கள் எதுவும் விவசாயத்திற்கு கொடுக்கும் உத்தேசம் இல்லை.



1979 பிப்ரவரி 12]

### *Fatal traffic accidents in Madras City.*

Q. 324—THIRU M. ARUMUGAM: Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) the number of fatal traffic accidents in Madras City during the financial year 1977-78 ; and

(*b*) the number of (1) Lorries (2) State Transport vehicles and (3) vehicles of the private parties involved in these accidents ?

*Ans.* (*a*) 197.

(*b*) (1) Lorries : 56 ; (2) State transport Vehicles : 60; (3) Vehicles of private parties : 81.

விடை

### *Licence fee for manufacture of Sugar by Vacuum Pan Process.*

Q. 325—THIRU M. ARUMUGAM: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state :

(*a*) whether the licence fee for the manufacture of sugar by the Vacuum Pan Process have been increased in this State;

(b) if so, the details thereof ; and

(*c*) the reasons therefor ?

*Ans.*—(*a*) Yes.

(*b*) Licence fee for crushing sugarcane by the Vacuum Pan Sugar Mills in Tamil Nadu has been increased from Rs. 200 to Rs. 750 per annum from the current financial year. The increased licence fee will be collected for the entire financial year or for the part of the financial year.

(*c*) The fee of Rs. 200 fixed in 1963 was not commensurate with the services rendered by Government to the Sugar Factories in various respects. Hence Government increased the licence fee from Rs. 200 to Rs. 750.

1979 பிப்ரவரி 12]

The following are the benefits enjoyed by the Vacuum Pan Sugar Mills in the State.

(1) Demarcation of cane area to the individual Sugar Mills is done by Government so as to enable the mills to get sufficient and assured supply of cane for crushing.

(2) During the periods of sudden strike or lock-outs at the time of crushing in the Sugar Mills orders are issued by Cane Commissioner for cane diversion which will enable both the factory and the cane growers to avoid heavy losses.

(3) The Cane Commissioner issues orders for the supply of nursery seed material of new cane varieties from the Sugarcane Research Stations to the Mills, which will enable the mills to introduce more new cane varieties.

(4) The Cane Commissioner advices the Sugar Mills about the incidence of pests and diseases in Sugarcane and various control measures on scientific basis are given to the mills by the Department of Agriculture.

(5) The Cane Development staff of the Sugar Mills are given training in the latest scientific techniques on cane cultivation and development aspectes in the Sugarcane Research Stations run by the Department of Agriculture.

(6) Registration of cane area of the individual sugar Mills is regulated by the Director of Sugar and planting programmes of new varieties are approved by his Directorate to avoid over or under-registration.

(7) The Director of Sugar as State Molasses Controller issues orders for the proper distribution of Molasses, which is a by-product of the Sugar Mills.

(8) Various disputes and problems related to the Management and the Labourers are settled amicably by respective Department of the Government.

(9) The proposal for financing the Mills for the expansion, renovation, etc., are examined and cleared by the Director of Sugar.



1979 பிப்ரவரி 12]

**பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு.**

**வினா 326—திரு. பு. ஆர். இராஜாராம் ரெட்டி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

30—6—1977-க்குப் பின் எத்தனை விவசாய பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்பு தரப்பட்டுள்ளது, மாவட்ட வாரியாக?

விடை—

30—6—1977-க்குப் பின் மாவட்ட வாரியாக மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ள விவசாய பம்பு செட்டுகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு :—

| வரிசை எண் | மாவட்டம். | 1—7—77 முதல் 31—7—78 வரை மின் இணைப்பு தரப்பட்ட பம்பு செட்டுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | செங்கற்பட்டு | 1,603 |
| 2. | கோயம்புத்தூர் | 2,463 |
| 3. | தருமபுரி | 2,311 |
| 4. | கன்னியாகுமரி | 66 |
| 5. | மதுரை | 2,165 |
| 6. | நீலகிரி | 20 |
| 7. | வட ஆற்காடு | 2,855 |
| 8. | இராமநாதபுரம் | 1,619 |
| 9. | தென் ஆற்காடு | 3,139 |
| 10. | சேலம் | 2,400 |
| 11. | தஞ்சாவூர் | 1,294 |
| 12. | திருச்சிராப்பள்ளி | 1,257 |
| 13. | புதுக்கோட்டை | 563 |
| 14. | திருநெல்வேலி | 1,734 |
| | மொத்தம் | 23,489 |

[1979 பிப்ரவரி 12

## விவசாயிகளுக்கு வழங்கப்பெற்ற கடன்கள்.

வினா 327—திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக விவசாயிகளுக்கு அரசுத் துறைகளின் மூலம் கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் என்ன கடன், எத்தனை கோடி ரூபாய், எத்தனை நபர்களுக்கு ஆண்டுவாரியாக தரப்பட்டுள்ளது?

விடை—

அவை முன் ஒரு அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

வினா 328—திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் விவசாயிகளுக்கு தரப்பட்ட கடன்கள் எத்தனை சதம் திருப்பித் தரப்படுகிறது ?

விடை—

கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிலும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் திருப்பித் தரப்பட்ட சதவிகித விபரம் (குறுகிய கால, நடுத்தரக் கால, மற்றும் நீண்டகாலக் கடன்கள்) பின்வருமாறு :—

| ஆண்டு. | ஆண்டு முடிவில் வசூலித்த தொகையின் சதவிகிதம். | |
|---|---|---|
| | குறுகியகால மற்றும் நடுத்தரக் கால கடன்கள். | நீண்டகால கடன்கள். |
| 1973–74 .. .. .. | 82.6 | 82.1 |
| 1974–75 .. .. .. | 79.5 | 60.1 |
| 1975–76 .. .. .. | 75.2 | 63.7 |
| 1976–77 .. .. .. | 72.1 | 50.5 |
| 1977–78 .. .. .. | 67.1 | 32.9 |

447 ம் பக்கத்தில் இணைப்பு IX ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



979 பிப்ரவரி 12]

## புதிய வேளாண்மைக் கருவிகள்

வினா 329—திரு டி. ஆர். இராஜாராம் ரெட்டி : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயப் பொறி இயல் ஆராய்ச்சித் துறையினரால் கடந்த 7–8 ஆண்டுகளில் விவசாயிகளுக்குப் பயன்படத் தக்க கருவிகள் ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அவை எத்தகையது ? எங்கு உபயோகத்தில் உள்ளது ? எங்கு கிடைக்கும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை* அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

## திண்டிவனம் தொகுதி அரிசனங்களுக்கு வீட்டு மனை வழங்கல்.

வினா 330—திரு டி. ஆர். இராஜாராம் ரெட்டி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதியில் நீண்டகாலமாக பல ஊர்களில் அரிசனங்களுக்கு வீட்டுமனை தரப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், துரிதமாக மனைப்பட்டாக்கள் வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) திண்டிவனம் தொகுதியில் நீண்டகாலமாக அரிசனங்களுக்கு வீட்டுமனை தரப்படாத கிராமங்கள் ஏதும் இல்லை.

(ஆ) 1977–78-ஆம் ஆண்டில் திண்டிவனம் தொகுதியில் அரிசனங்களுக்கு வீட்டு மனைக்காக நில ஆர்ஜிதம் செய்ததில் 24 கிராமங்களில் உள்ள 1,410 குடும்பங்களுக்கு மனைப் பட்டாக்கள் விரைவில் வழங்கப்பட உள்ளது.

[* 448-472–ம் பக்கங்களில் இணைப்பு X ஆக அச்சிடப் பட்டுள்ளது.]

[1979 பிப்ரவரி 12

## திண்டிவனம் தொகுதியில் கிராம அதிகாரிகள் பதவிகள்.

வினா 331—திரு டி. ஆர். இராஜாராம் ரெட்டி: மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதியில் நிரந்தரமாக நியமிக்க வேண்டிய கிராம அதிகாரி, கர்ணம், தோட்டி தலையாரிகள், காலியாக உள்ள இடங்களில் மீண்டும் மீண்டும் தற்காலிகமாகவே மூன்று மாதத்திற்கு ஒரு முறை நியமித்து வருவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன பதவிகள், எத்தனை ஆண்டு காலமாக, தற்காலிகமாக நியமிக்கப்பட்டு வருகிறது?

(இ) இப்படி செய்யவேண்டியதன் அவசியம் என்ன?

(ஈ) நிரந்தரமாக நியமிக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது?

விடை

(அ) ஆம்.

(ஆ)

| பதவியின் பெயர். | எந்த ஆண்டிலிருந்து தற்காலிக நியமனம் செய்யப்படுகிறது. | பதவியின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) மணியம் .. | 1971-ம் ஆண்டிலிருந்து | 2 |
| | 1972-ம் ஆண்டிலிருந்து | 1 |
| | 1975-ம் ஆண்டிலிருந்து | 1 |
| | 1976-ம் ஆண்டிலிருந்து | 2 |
| | 1977-ம் ஆண்டிலிருந்து | 2 |
| | | 8 |
| (2) கர்ணம் .. | 1973-ம் ஆண்டிலிருந்து | 1 |
| | 1975-ம் ஆண்டிலிருந்து | 2 |
| | 1976-ம் ஆண்டிலிருந்து | 1 |
| | 1977 ம் ஆண்டிலிருந்து | 2 |
| | 1978-ம் ஆண்டிலிருந்து | 4 |
| | | 10 |
| (3) தலையாரி .. | 1976-ம் ஆண்டிலிருந்து | 1 |



1979 பிப்ரவரி 12]

(இ) தகுதி வாய்ந்த நபர்கள் விண்ணப்பிக்காத காரணத்தால் தற்காலிக அடிப்படையில் ஒவ்வொரு மூன்று மாத காலத்திற்கும் நியமனங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

(ஈ) கிராம அதிகாரிகள் மற்றும் கிராம அலுவலர்கள் பதவிகளுக்கு விண்ணப்பம் செய்பவர்கள் பதவிகள் நிரந்தரமாக காலியான தினத்தன்று 21 வயதிற்கு மேற்பட்டவராகவும், 40 வயதிற்குட்பட்டவராகவும் இருக்க வேண்டுமென்று விதி இருந்தது. இந்த விதியின் காரணமாக தகுதி வாய்ந்த நபர்கள் கிடைப்பது சிறிது சிரமமாக இருந்தது. எனவே இந்த விதியை திருத்த வேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை வந்தது. அரசு இந்த கோரிக்கையை ஏற்று மேற்கண்ட வயது வரம்பு, விண்ணப்பங்கள் பெறுவதற்கு கடைசி நாள் என்று நிர்ணயம் செய்யப்பட்ட தினத்தன்று இருத்தல் வேண்டுமென்று அரசு ஆணை எண். 683, வருவாய்த் துறை, 1978ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் நாளில் மேற்கண்ட விதி திருத்தப்பட்டது. இத்திருத்தத்தின் படி மேலே குறிப்பிட்ட காலி இடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரி நிரந்தர நியமனம் செய்வதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## வாணியாற்று சிரமைப்புப் பணி.

வினா 332—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டம், வாணியாற்று கணக்கன் அணை, ரிங்காபுரம் கால்வாய் வழியாக நரசனேரிக்கு செல்லும் வாய்க்காலை செப்பனிடவும் ஏரியைப் புதுப்பிக்கவும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை

இல்லை.

## *Accidents at cross roads near Royapettah Tower clock.*

Q. 333. —THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) whether the Government are aware of constant road accidents at the Royapettah Clock Tower Corner in Madras City ; and

(b) if so, the steps taken in this regards?

*Ans.*—

(*a*) and (b) There were only three accidents, of which one was fatal, in 1976 and two accidents each in 1977 and 1978. Originally there existed a three phase signal installed in July, 1964. Due to increase in vehicular traffic, the three phase signal was presenting conflicts and hence, it was changed into a four phase signal from 7—3—1977. Accident at present is only due to driver's behaviour.

*Manufacture of micronutrient Mixtures.*

Q. 334—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state:

(*a*) whether Micronutrient mixtures are being purchased from private sectors by the Agriculture Department ; and

(*b*) if so, the steps taken to set up its own plant as a rural Industry.

*Ans.*—

(*a*) No.

(*b*) In September 1977, the Government Agriculture Department, set up at Kudumiamalai in Pudukkottai district a Plant for the manufacture of Micronutrient Mixtures required for different crops grown in the State.

This unit has an annual capacity to manufacture about 1,200 M.T. of Micronutrient mixtures. The capacity could be increased gradually by providing additional facilities when found necessary.



Q. 335—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(*a*) whether the Agriculture Department is preparing micro-nutrient mixtures in this State ; and

(*b*) if so, the details thereof ?

*Ans.*—

(*a*) & (*b*) A Statement* is placed on the table of the House.

*Renewal of Licences Multiple Hullers.*

Q. 336—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Food be pleased to state :

(*a*) whether licences for multiple hullers for rice mills have been directed to be renewed by the officials concerned in the districts ; and

(*b*) if so, the details thereof.

*Ans.*—

(*a*) No. The licensing authorities under Rice Milling Industry (Regulation) Act, 1958 are renewing the licences for rice mills under the Act with reference to the provisions of the Act. Existing multiple huller mills have been granted time till 30th April 1980 by the Government of India for modernisation.

(*b*) Does not arise.

---

*473 ம் பக்கத்தில் இணைப்பு XI ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

## Monsoon study in Tamil Nadu.

**Q. 337—THIRU N. KITTAPPA:** Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state—

(a) whether the State Government are undertaking 'monsoon study' in this State; and

(b) if so, the details thereof?

விடை—(அ) இந்த அரசினுல் பருவநிலே ஆராய்ச்சி ஏதும் நடத்தப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## Porter System in State Transport Bus Terminals

**Q. 338—THIRU N. KITTAPPA:** Will the Hon. the Minister for Transport be pleased to state:

(a) whether the porter system has been introduced in the State Transport bus terminals in this state; and

(b) the number of porters so recognised in this State, terminal-wise.

விடை—

(அ) "போர்டர் அமைப்பு" திட்டம் பல்லவன் போக்குவரத்துக் கழகம் (விரைவு), கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் நீங்கலாக மற்றக் கழகங்களில் இதுவரை அறிமுகப்படுத்தப்படவில்லை. இந்த இரண்டு கழகங்களும் இந்த சுமை தூக்குபவர்களுக்கு எந்தவிதமான சம்பளமோ வேறு ஊதியமோ அளிப்பது இல்லை. தற்போது நடைமுறையில் இருந்து வரும் முறையின்படி ஒவ்வொரு சுமை தூக்கும் கூலி கட்டணம் செலுத்தி ஒரு அனுமதிச் சீட்டு நிர்வாகத்திடமிருந்து பெற்றுக் கொண்ட பிறகு தான் இவ்வேலையை செய்ய அனுமதிப்பார்கள். அந்த நபர் நல்ல யோக்யதாம்சம் உள்ளவரா என்பதற்கு உண்டான அத்தாட்சி





சட்டமன்ற உறுப்பினர், காவல்துறை அதிகாரிகள் போன்றவர்களிடமிருந்து பெற்ற பிறகுதான் இந்த அனுமதிச்சீட்டு வழங்கப்படுகிறது.

(ஆ) விபரங்கள் பின் வருமாறு :—

| வரிசை எண். (1) | சுமை தூக்குபவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள இடங்கள். (2) | எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| **(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் (விரைவு):—** | | |
| 1 | கோயம்புத்தூர்—பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையம். | 7 |
| 2 | திண்டுக்கல்—மாநகராட்சிப் பேருந்து நிலையம். | 2 |
| 3 | கன்னியாகுமரி—கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையம். | 6 |
| 4 | சென்னை—பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையம். | 14 |
| 5 | மதுரை—பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையம். | 12 |
| 6 | மண்டபம்—மாநகராட்சி பேருந்து நிலையம். | 1 |
| 7 | நெய்வேலி—என். எல். சி. பேருந்துநிலையம் | 1 |
| 8 | நாகர்கோவில்—பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையம். | 9 |
| 9 | பழனி—மாநகராட்சி பேருந்து நிலையம் | 2 |
| 10 | பொள்ளாச்சி—மாநகராட்சிப் பேருந்து நிலையம். | 1 |
| 11 | பாண்டிச்சேரி—மாநகராட்சிப் பேருந்து நிலையம். | 2 |
| 12 | சேலம்—பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையம். | 4 |
| 13 | திருநெல்வேலி—மாநகராட்சிப் பேருந்து நிலையம். | 11 |
| 14 | தூத்துக்குடி—மாநகராட்சிப் பேருந்து நிலையம். | 4 |
| 15 | திருச்செந்தூர்—மாநகராட்சிப் பேருந்து நிலையம். | 2 |
| 16 | திண்டிவனம்—பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையம். | 2 |

| வரிசை எண். | சுமை தூக்குபவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள இடங்கள். | எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 17 | திருச்சி—பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையம். | 3 |
| 18 | தஞ்சாவூர்—பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையம். | 1 |
| 19 | உளுந்தூர் பேட்டை—மாநகராட்சிப் பேருந்து நிலையம். | 1 |
| 20 | விழுப்புரம்—மாநகராட்சிப் பேருந்து நிலையம். | 2 |
| 21 | வேலூர்—பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையம். | 2 |
| | மொத்தம் .. | 89 |

(ஆ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் :—

| | | |
|---|---|---|
வினா 391—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு ...க்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட ...னாவுக்கு விடையளிப்பாரா—

குடும்பநல ஊழியர்களின் கோரிக்கைகளைப் பரிசிலனை ...சய்ய "அட்ஹாக் கமிட்டி" அமைக்கும் குறிப்பு எந்த நிலையி...ள்ளது?

...டை—

குடும்பநல ஊழியர்களின் கோரிக்கைகளைப் பரிசிலனை செய்ய ...அட்ஹாக் கமிட்டி" அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் ...ரசிடம் இல்லை.

## மூளை நோய் காரணமாக இறந்தவர்கள்.

வினா 392—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு ...க்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட ...னாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1–1–1978 முதல் தமிழ்நாட்டில் மூளை நோய் காரண...க எவ்வளவு பேர்கள் இறந்தனர்? மாவட்ட வாரியாக?

(ஆ) அது குறித்து எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

...டை—

(அ) தமிழ்நாட்டில் 1—1—1978 முதல் 30—6—1978 ...டிய மூளை நோய் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை ...வட்ட வாரியாக பின்வருமாறு :—

| மாவட்டம். | இறந்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| (1) தென் ஆற்காடு .. .. .. | 8 |
| (2) திருச்சிராப்பள்ளி .. .. | 2 |
| (3) இராமநாதபுரம் .. .. | 1 |
| (4) திருநெல்வேலி .. .. .. | 91 |
| மொத்தம் | 102 |

[*476—477ம் பக்கங்களில் இணைப்பு XIV ஆக அச்சிடப் பெற்றுள்ளது]

[1979 பிப்ரவரி 12

(ஆ) இம் மூளைக்காய்ச்சல் நோய் குறித்து திருநெல்வேலி மாவட்ட சுகாதார அதிகாரியிடமிருந்து முதல் தகவல் கிடைத்ததும், ஓர் ஆய்வுக் குழுவை உடனடியாக அனுப்பும்படி தந்தி மூலம் "பூனா நுண் நோய் கிருமி ஆராய்ச்சி நிலையத்திற்கு" தெரிவிக்கப்பட்டு அங்கிருந்து வந்த ஓர் துணை இயக்குநர் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் ஓர் ஆய்வகம் அமைத்தார். மேலும், சென்னையிலுள்ள பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவத் துறையைச் சேர்ந்த "கொசுக்களை நோய் ஆய்வகப் பகுதி" யும், பூனாவிலிருந்து வந்த குழுவிற்கு உதவுவதற்காக திருநெல்வேலிக்கு அனுப்பப்பட்டது. பூனாவிலிருந்து வந்த நுண் நோய் கிருமி ஆராய்ச்சிக்குழு, நோய் கண்டவர்களின் இரத்த மாதிரியையும், இறந்தவர்களின் மூளைத் திசு மாதிரியையும் சேகரித்து ஆராய்ந்து "ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நுண் கிருமி" தான் நோய்க்கான காரணம் என கண்டுபிடித்தது.

பாண்டிச்சேரியிலுள்ள "பூச்சியின் கட்டுப்பாடு ஆராய்ச்சி நிலைய" மும் மூளைக்காய்ச்சல் நோய் பரப்பும் கொசுவை அடையாளபடுத்தி அறிவித்தது.

இம் மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் வீட்டிலிருந்து மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்ல வாகன வசதி செய்துதரப்பட்டு மருத்துவமனைகளில் உரிய மருத்துவச் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. இந்நோய் குறித்து தேவையான அறிவுரைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. இந்நோய் கண்ட இடங்களிலும், சுற்றியுள்ள இடங்களிலும் வீடுகளிலும், தொழுவங்களிலும், கொசு குறைப்பிற்காக 'பைரித்ரம்', பி.எச்.சி., டி.டி.டி. போன்ற மருந்துகள் தெளிக்கப்பட்டன. இதனால் இப்போது இந்நோய் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது.

## தர்மபுரி மாவட்ட விவசாயிகளுக்கு நிலப் பட்டாக்கள்.

வினா 393—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1977-78 ஆம் ஆண்டில் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களை பாடுபட்டு வந்துள்ள விவசாயிகளுக்கு பட்டா கொடுக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

(ஆ) எத்தனை பேர்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் நீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலங்களில் நிலமற்ற ஏழை மக்களால் சாகுபடி செய்து ஏற்பட்ட ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்த வட்டாட்சியாளர்களால் தனி முயற்சி எடுக்கப்பட்டு ஆக்கிரமிப்புதாரர்களில் தகுதியுள்ளவர்களுக்கு நிலம் அடமானம் செய்யப்பட்டது.



1979 பிப்ரவரி 12]

(ஆ) 1977-78 ஆம் ஆண்டில் (1-4-1977 முதல் 31-3-1978 முடிய) 972.14 ஏக்கர் பரப்பளவு அரசு தரிசு நிலம் 518 பேர்களுக்கு அடமானம் செய்யப்பட்டது.

## அரூர் வட்டத்தில் வெட்டப்பட்ட மரங்கள் ஏலம்.

வினா 394—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1978 ஏப்ரல் மாதம் மிராஸ்தார்கள் நடத்திய போராட்டத்தின்போது அரூர் வட்டத்தில் வெட்டியும் வெட்டி வைத்தும் சாய்க்கப்பட்ட மரங்கள் அரூர் நெடுஞ்சாலை பொறியாளரால் எவ்வளவு ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது?

விடை—

தர்மபுரி மாவட்டம், அரூர் தாலூகாவில் மிராஸ்தார்கள் நடத்திய போராட்டத்தில்போது வெட்டி சேதப்படுத்தப்பட்டு சாய்ந்த மரங்களைப் பொது ஏலத்தின் மூலம் ரூ. 8,254.00 (ரூபாய் எட்டாயிரத்து இருநூற்று ஐம்பத்து நான்கு மட்டும்)-க்கு ஏலம் விடப்பட்டது.

## அரூர் வட்டத்தில் வெட்டப்பட்ட சாலை ஓர மரங்கள்.

வினா 395—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

அண்மையில் நடந்த தமிழ்நாடு விவசாயிகள் போராட்டத்தின்போது அரூர் வட்டத்தில் வெட்டி சாய்க்கப்பட்ட சாலை மரங்களின் மதிப்பீடு எவ்வளவு?

விடை—

அண்மையில் நடந்த தமிழ்நாடு விவசாயிகள் போராட்டத்தின் போது அரூர் வட்டத்தில் வெட்டி சாய்க்கப்பட்ட மரங்களின் மதிப்பு ரூ. 8,254 ஆகும்.

## ஜவ்வாது மலைப்பகுதியில் விவசாயிகளுக்கு மின் இணைப்பு

வினா 396—திரு. [illegible] சு. திருவேங்கடம் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கலசபாக்கம் தொகுதியிலுள்ள ஜவ்வாது மலைவாசி விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1979 பிப்ரவரி 12

(இ) எத்தனை கிராமங்களுக்கு விவசாயத்திற்கு மின் இணைப்பு கொடுக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : இக் கேள்விகளுக்கு இடமில்லை.

பூண்டி கிராமத்தில் பெண்கள் பாலிடெக்னிக்.

வினா 397—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) கலசப்பாக்கம் தொகுதியைச் சேர்ந்த பூண்டி கிராமத்தில் பெண்கள் பாலிடெக்னிக் ஒன்று ஆரம்பிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

கோயிலூர் ஊராட்சியில் அரிசன வீட்டு வசதி வாரியம்மூலம் புதிய வீடுகள்.

வினா 398—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கலசப்பாக்கம் தொகுதி ஜவ்வாது மலையில் உள்ள கோயிலூர் ஊராட்சியில் உள்ள கிராமங்களில் அரிசன வீட்டு வசதி வாரியத்தின் மூலம் புதிய வீடுகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், மொத்தம் கட்ட திட்டமிடப்பட்டுள்ள வீடுகள் எத்தனை?

(இ) கட்டி முடிக்கப்பட்டவை எத்தனை?



1979 பிப்ரவரி 12]

விடை—

(அ) கலசப்பாக்கம் தொகுதி ஜவ்வாது மலையில் கோயிலூர் ஊராட்சியில் உள்ள கிராமங்களில் தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம் புதிய வீடுகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டுவிட்டது.

(ஆ) மொத்தம் திட்டமிடப்பட்ட வீடுகள் நாற்பத்து இரண்டு.

(இ) கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் நாற்பத்து இரண்டு.

விவரங்கள் பின்வருமாறு :—

| கிராமத்தின் பெயர். (1) | கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| கோயிலூர் உட்கிராமங்கள்:— | |
| 1 அந்திப்பட்டு .. .. .. | 12 |
| 2 பெருங்காட்டூர் .. .. .. | 10 |
| 3 ச[illegible]நகர் .. .. .. | 20 |
| மொத்தம் | 42 |

ஊராட்சிகளில் வானொலிப் பெட்டிகளைப் பழுதுபார்த்தல்.

வினா 399—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) ஊராட்சிகளின் ரேடியோக்களை ரேடியோ சூப்பர் வைசர்களே ரிப்பேர் செய்து வருவதால் காலதாமதம் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(இ) மாற்று ஏற்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ): ஊராட்சிகளில் நிறுவப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகள் பழுதுபட்டால் உடனுக்குடன் குறைந்தபட்சம் 2 நாட்களிலும் அதிகபட்சம் 30 நாட்களிலும் செப்பனிடப்பட்டு, ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டு வருகிறது. ஆனால் சில இடங்களில் பழுதுபட்ட வானொலிப் பெட்டிகளில் பொருத்துவதற்கான உதிரிப் பொருட்கள் வானொலி மேற்பார்வையாளர்களின் இருப்பில் இல்லாத காரணத்தால் அப் பெட்டிகளைச் செப்பனிடுவதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கக்கூடும். இக்காலதாமதத்தைத் தவிர்க்க, வானொலி மேற்பார்வையாளர்களுக்கு உதிரிப் பொருட்கள், தலைமை வானொலி அலுவலரால் உடனுக்குடன் அனுப்பப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கலசப்பாக்கம் ஒன்றியத்தில் உள்ள குழந்தைகள் காப்பகங்கள்.

வினா 400—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1977–78 ஆம் ஆண்டு கலசப்பாக்கம் ஒன்றியத்தில் உள்ள குழந்தைகள் காப்பகங்களில் பயன்பெற்ற குழந்தைகள் எத்தனை பேர்?

(ஆ) செலவழிக்கப்பட்ட தொகை என்ன?

விடை—

(அ) 2320 குழந்தைகள்.

(ஆ) ரூ. 48,028.78

## ஊராட்சிகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள்.

வினா 401—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் டெலிவிஷன் கொடுக்கப்பட்டுள்ள ஊராட்சிகள் எத்தனை?

(ஆ) பொருள் வசதியுள்ள மற்ற ஊராட்சிகளும் டெலிவிஷன் வாங்கிக் கொள்ள அரசு அனுமதி வழங்கப்படுகிறதா?

விடை—

(அ) அரசின் மூலம் 25 ஊராட்சிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. 13 ஊராட்சிகள் தம் சொந்த செலவிலேயே வாங்கியுள்ளன.



(ஆ) சென்னையைச் சுற்றி 90 கி. மீ. தூரத்தில் உள்ள நிதிவசதியுள்ள ஊராட்சிகள் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கிக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

## வட ஆர்க்காடு மாவட்ட அரசினர் உயர்நிலைப்பள்ளிகள்.

வினா 402—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் இவ்வாண்டு 10-வது வகுப்பில் மிகக்குறைந்த சதவீதத் தேர்வுகளுக்குள்ளான பள்ளிகள் எத்தனை?

விடை—

50.

## பாம்பையாறு நீர்த்தேக்கத் திட்டப் பணியாளர்களுக்கு திட்ட கட்டுப்படி.

வினா 403—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை வட்டம் பாம்பையாறு நீர்த்தேக்கத் திட்டப் பணியாளர்களுக்கு திட்ட கட்டுப்படி வழங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

விடை—

ஆம்.

## குச்சிக்கிழங்கு சாகுபடிக்கு மான்யம்.

வினா 404—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு வேளாண்மை—நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ல் தர்மபுரி மாவட்டத்தில் சிறு விவசாயிகளுக்கு குச்சிக்கிழங்கு சாகுபடிக்கு கொடுக்கப்பட்ட மான்யத் தொகை எவ்வளவு?

(ஆ) இவைகளுக்கெனப் பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை என்ன, யூனியன்வாரியாக?

[1979 பிப்ரவரி 12

விடை—

(அ) ரூபாய் 90,931.35.

(ஆ) சிறு விவசாயிகள் மிகச் சிறு விவசாயிகள் ஆகியோருக்கு அவர்களது நிலங்களில் செயல் விளக்க வயல்கள் அமைத்தல் மற்றும் சாகுபடிப் பரப்பினை விஸ்தரித்தல் ஆகியவற்றிற்கு மானியம் அளிக்கப்பட்டது. ஆதலால் நேரடியாக விண்ணப்பங்களை வாங்குவது என்ற கேள்வி எழவில்லை. இருப்பினும் வட்டார வாரியாக பயனடைந்தவர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு:—

பயனடைந்தவர்களின் எண்ணிக்கை.

| | செயல் விளக்க வயல் மூலம். | சாகுபடிப் பரப்பை விஸ்தரிப்பதின் மூலம். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 பாலக்கோடு .. | .. | 150 | 150 |
| 2 பாப்பிரெட்டிபட்டி | 71 | 575 | 646 |
| 3 மொரப்பூர் .. | 20 | 84 | 104 |
| 4 ஊத்தங்கரை .. | 32 | 128 | 160 |
| 5 பென்னகரம் .. | 14 | 7 | 21 |
| 6 அரூர் .. .. | 63 | 496 | 559. |
| மொத்தம் .. | 200 | 1,440 | 1,640 |

தர்மபுரி மாவட்டத்தில் சூரியகாந்தி உற்பத்தி.

வினா 405—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு வேளாண்மை-நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977–78-ல் தர்மபுரி மாவட்டத்தில் சூரியகாந்தி உற்பத்தி அளவும் எண்ணெய் உற்பத்தியின் முன்னேற்றம் பற்றிய விவரங்களும் யாவை?



1979 பிப்ரவரி 12]

விடை—

1977–78-ல் தர்மபுரி மாவட்டத்தில் சூரியகாந்தி உற்பத்தியின் அளவு 1,120 மெட்ரிக் டன் என்று மதிப்பிடப்பட்டது. தமிழ்நாடு விவசாய தொழிற் கழகம் தர்மபுரி மாவட்டத்தில் 90 டன் சூரியகாந்தி விதை கொள்முதல் செய்து தனியார் ஆலைகள் மூலம் எண்ணெய் தயாரித்திருக்கிறார்கள். உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் மிகுதியான அளவு சூரியகாந்தி விதைகள் கொள்முதல் செய்து எண்ணெய் தயாரித்துள்ளார்கள்.

அரூர் வட்டத்தில் ஏரிகள் சீரமைப்பு.

வினா 406—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு வேளாண்மை - நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏரிகளில் உள்ள களிமண்களை அகற்றி பள்ளமாக்கி நீர்த் தேக்கும் பொருட்டு அரூர் வட்டத்தில் உள்ள பெரிய ஏரி, ஊத்தங்கரை ஏரி, சிங்காரப்பேட்டை ஆகிய ஏரிகளில் நவீன எந்திரங்களை கொண்டு ஆழப்படுத்தும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இது மாதிரியான திட்டங்கள் எதுவும் தற்சமயம் இல்லை. ஆயினும் தூர் எடுக்கும் திட்டங்களின் மூலமாகக் குறிப்பிட்டுள்ள ஏரிகரை சீரமைப்பதற்காக சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஸ்தல அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் அரூர், ஊத்தங்கரை வட்டங்களில் வழங்கப்பெற்ற தென்னை, மா கன்றுகள்.

வினா 407—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு வேளாண்மை-நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ல் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் அரூர், ஊத்தங்கரை வட்டங்களில் உள்ள எத்தனை சிறு விவசாயிகளுக்கு தென்னை, மா கன்றுகள் வழங்கப்பட்டன?

(ஆ) இதற்கு கொடுத்த மானியத் தொகை எவ்வளவு?

(இ) இவை எங்கிருந்து சப்ளை செய்யப்பட்டது?

விடை—

(அ)

| | வழங்கப்பட்ட சிறு விவசாயிகளின் எண்ணிக்கை. | | வழங்கப்பட்ட கன்றுகள் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| | (1) | | (2) |
| அரூர் வட்டம் . | 431 | தென்னை | 8,458 |
| | 19 | மா .. | 3,420 |
| ஊத்தங்கரை வட்டம் | 37 | தென்னை | 1,527 |
| | 44 | மா .. | 5,460 |

| | | | (ரூபாய்) |
|---|---|---|---|
| (ஆ) அரூர் வட்டம் .. | தென்னை | .. | 5,375.75 |
| | மா .. | .. | 42,514.00 |
| ஊத்தங்கரை வட்டம் | தென்னை | .. | 916.20 |
| | மா .. | .. | 18,325.00 |

| (இ) | தென்னை. | மா. |
|---|---|---|
| | கா.குப்பம் மற்றும் பொஜ்ஜை கவுண்டன் புதூரில் உள்ள அரசாங்க நாற்றங்கால்களி னின்று வழங்கப்பட்டன. | திம்மாபுரம் அரசு பழப் பண்ணை மற்றும் சாந்தூர் தனியாரிடமிருந்து பெறப் பட்டன. |

## வாசனைப் பாக்குகளில் சாக்கரின் கலப்பு

**வினா 408—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசனைப் பாக்குகளில் சாக்கரின் என்ற இனிப்பு கலந்து விற்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கை யாது ?



விடை—

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ் நாட்டில், சென்னை ற்றும் இதர பகுதிகளில் 33 வாசனைப் பாக்குத்தூள் மாதிரிகள் டுக்கப்பட்டு பரிசோதனை செய்ததில் 6 மாதிரிகளில் சாக்கரின் லக்கப்பட்டிருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 6 மாதிரிகளில் சாக்கரின் கலக்கப்பட்டிருந்ததற்கு டந்தையாய் இருந்தவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டதில் வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு ழக்குகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஒரு வழக்கில் டுதலை அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் பேரில் உயர்நீதி ன்றத்தில் வழக்குத் தொடர அரசு அனுமதி அளித்திருக்கிறது.

உணவு கலப்பட தடைச் சட்டம் (திருத்தப்பட்ட) 1976-ன் ழ் பாக்கு மற்றும் அதன் செய்பொருள்களில் சாக்கரின் என்ற னிப்பு பொருளை கலந்து விற்பனை செய்யப்படுவது தடை சய்யப்பட்டுள்ளது.

பாக்கு மற்றும் அதன் செய்பொருள்கள், உணவு கலப்பட டைச் சட்டத்தின்கீழ் மாதிரி எடுக்கப்பட்டு அவைகளில் சாக் ரின் சேர்க்கப்பட்டிருந்தால் சம்பந்தப்பட்ட வியாபாரி ளின் மீது வழக்கு தொடரப்படுகிறது. ''உணவு கலப்பட டைச் சட்டம், 1954 கீழ் பாக்குத்தூளில் சாக்கரின் கலந்து ற்பனை செய்வது குற்றமாகும்'' என்பது பத்திரிகைகளில் ளம்பரம் செய்யப்பட்டும் உள்ளது.

## திருச்சி மத்திய சிறையிலிருந்து தப்பியோடிய கைதிகள்.

**வினா 409—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருச்சி மத்திய சிறையிலிருந்து 1977-78ஆம் ஆண்டில் தப்பியோடிய கைதிகள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களில் மீண்டும் எத்தனை பேர் பிடிபட்டனர்

விடை—

(அ) 1977-78 ஆம் ஆண்டில் (31—8—1978) திருச்சி மத்திய சிறையிலிருந்து ஒன்பது கைதிகள் தப்பியோடினர்.

(ஆ) அவர்களில் ஒருவர் தவிர மற்றையோர் மீண்டும் பிடிபட்டுவிட்டனர்.

[1979 பிப்ரவரி 12

## பருத்தி பயிரில் நோய்த் தடுப்பு நடவடிக்கை

வினா 410—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை—நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பருத்திப் பயிரில் வாடல் நோய் வேர் அழுகல் நோய் ஆகியவைப் பெருகுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை ஏதேனும் மேற்கொண்டு வருகின்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பருத்திப் பயிரில் தோன்றும் வாடல் நோயைக் கட்டுப் படுத்த கீழ்க்கண்ட முறைகளைப் பின்பற்ற அரசு பரிந்துரைத் திருக்கிறது:—

1. முடிந்தவரையில் நோயை எதிர்க்கும் ஆற்றலுள்ள செடி களையும், நோய் தோன்றினுல் எளிதில் தாங்கிக் கொள்ளும் திறன் உள்ள வகைச் செடிகளையே வளர்த்தல்.

2. பருத்தி பயிரிடுவதற்கு முன்போ பின்போ கத்தரி பயிரிடுவதைத் தவிர்த்தல்.

3. பாதிக்கப்பட்டச் செடியை களைந்து அழித்து விடுதல்.

4. அதிக விதைகளை விதைத்து பயிரின் எண்ணிக்கையை அதிகப்படுத்துதல்.

5. நோய் தாக்காத காலத்தை தேர்ந்தெடுத்து விதைகளை விதைப்பதன் மூலம் நோய் தாக்குதலினின்றும் காத்தல்; ஜூலை மாதத்தின் கடைசி வாரம் முதல் ஆகஸ்ட் முதல் வாரம் வரை விதைக்கப்பட்ட பயிர்களை நோய் அதிக அளவில் தாக்குவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

6. பாதிக்கப்பட்ட செடியும் அதனருகிலுள்ள செடியை யும் சுற்றியுள்ள மண்ணை, ''பென்லேட்'' (Benlate) அல்லது ''அகல்லால்'' (Agallal) மருந்தை 1 கிராம் அளவை 1 லிட்டர் நீரில் கரைத்து தெளித்தல் அல்லது தாமிர ஆக்ஸி குளோரைடு மருந்து 3 கிராமை 1 லிட்டர் நீரில் கரைத்து தெளித்தல்.



1979 பிப்ரவரி 12]

வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த, பாதிக்கப்பட்ட நாற்றின் வேர்ப் பகுதியிலும், அதைச் சுற்றியுள்ள செடிகளின் வேர்ப் பகுதிகளிலும் ''அகல்லால்'' (Agallal) மருந்து 1 கிராமை 1 லிட்டர் நீரில் கரைத்து தெளித்தும் அல்லது ''பிராஸ் ஸிகல்,, அல்லது ''தாமிர ஆக்ஸிகுளோரைடு,, மருந்து 3 கிராமை 1 லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கலாம் என்று பரிந்துரைக்கப் படுகிறது.

## தூத்துக்குடி நகராட்சி ஆண்டு வரவு—நிர்வாகச் செலவு.

வினா 411—திரு. ந. தனசேகரன் ; மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தூத்துக்குடி நகராட்சியில் 1977-78 ஆம் ஆண்டுக்கான வரவு நிர்வாகச் செலவு முறையே எவ்வளவு ?

விடை—

| | |
|---|---|
| தூத்துக்குடி நகராட்சியின் 1977-78 ஆம் ஆண்டுக்கான வரவு (வைப்புத் தொகை, முன்பணம், கடன் முதலியவை நீங்கலாக) .. .. .. | ரூ. 91,16,448 |
| நிர்வாகச் செலவு .. .. .. | ரூ. 81,59,429 |

## தூத்துக்குடிப் பிரிவில் பதிவான வழக்குகள்

வினா 412—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) 1977-78 ஆம் ஆண்டில் தூத்துக்குடி குற்றப்பிரிவு பகுதியில் பதிவான வழக்குகள் எத்தனை ?

(ஆ) அவற்றுள் களவுபோன பொருட்கள் பற்றிய வழக்கு கள் எத்தனை?

(இ) எத்தனை வழக்குகளில் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன ?

விடை—

(அ) 296 (1—4—1977 முதல் 31—3—1978 வரை)
(ஆ) 213
(இ) 155

## தஞ்சை மாவட்டத்தில் பருப்பு உற்பத்தி அதிகரிப்பு.

வினா 413—திரு. என், கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மை-நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் பருப்பு உற்பத்தியை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதுபற்றி மேற்கொண்டு வரும் நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்டத்தில் பருப்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கு 1970-71 ஆண்டு முதல் மாநில அரசுத் திட்டமும், மற்றும் 1974-75 முதல் மத்திய அரசு உதவி பெறும் தீவிர பருப்பு உற்பத்தித் திட்டமும் செயல்பட்டு வருகின்றன.

1978-79 ஆம் ஆண்டின் இத்திட்டங்களுக்கான குறியீடுகள் கீழ்வருமாறு :—

| மாநில அரசுத் திட்டம். | 1978-79-ம் ஆண்டிற்கான குறியீடு. |
|---|---|
| (1) | (2) |
| 1. பயறு சாகுபடி பரப்பளவு | 2,33,600 ஹெக்டேர். |
| 2. சான்றிதழ் பெற்ற பயறு விதை விநியோகம். | 581 டன். |
| 3. நுண்ணுயிர் கலவை விநியோகம் | 23,360 ஹெக்டேர். |
| 4. பயிர் பாதுகாப்பு | 38,000 ஹெக்டேர். |
| 5. டை அமோனியம் பாஸ்பேட் உரத்தை இலைமேல் தெளிக்கும் முறை. | 30,000 ஹெக்டேர். |
| 6. சான்றிதழ் பெறும் விதைப் பண்ணை அமைத்தல். | 1,400 ஹெக்டேர். |
| 7. சான்றிதழ் பெற்ற விதைக் கொள் முதல். | 350 டன்கள். |



| மாநில அரசுத் திட்டம். | 1978-79-ம் ஆண்டிற்கான குறியீடு. |
|---|---|
| (1) | (2) |
| 8. குறிப்பிட்ட அளவு செடிகளின் எண்ணிக்கையை வயல்களில் நிர்ணயித்தல். | 2,000 ஹெக்டேர். |
| 9. அடியுரம் இடுதல். | 200 ஹெக்டேர். |
| 2. மத்திய அரசு உதவி பெறும் திட்டம் : | |
| 1. விளக்க வயல்கள் | 300 ஹெக்டேர். |
| 2. ஆதார விதைப் பண்ணை அமைத்தல். | 55 ஹெக்டேர். |
| 3. ஆதார விதைக் கொள்முதல். | 15 டன்கள். |
| 4. 50 சதவிகிதம் சகாய விலையில் பயிர் பாதுகாப்பு கருவிகள் விநியோகம் (தெளிப்பான்கள் தூவிகள்) | 10 என். |
| 5. பூச்சிக்கொல்லி மருந்தின் விலையில் 25 சதவிகிதம் மானியமாகக் கொடுக்கப்படும். ஆனால் இம் மானியத் தொகை, பூச்சிக் கொல்லி மருந்தாக உபயோகப் படுத்தப்படும். இரசாயனப் பொருள்களைப் பொறுத்து ஹெக்டேருக்கு ரூபாய் 5 முதல் ரூ. 15 வரை கட்டுப்படுத்தப் படும். பட்டாணி போன்ற பருப்பு வகைகளில் ஏற்படும் ஒருவகைப் பூச்சியைக்கட்டுப்படுத்த (Control of Powdery Mildew) அதிகபட்சம் ஹெக்டேருக்கு ரூ. 25 மானியமாகக் கொடுக்கப்படும். | 25,000 ஹெக்டேர். |

மேற்கண்ட திட்டங்களைத் தஞ்சாவூர் மாவட்டத்தில் 1978-79-ல் செயல்படுத்துவதால் பயறு உற்பத்தி அளவை 68,000 டன்னிலிருந்து 88,900 டன்னுக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## நிலக்கரி தட்டுப்பாடு காரணமாக ரத்து செய்யப்பட்ட இரயில்கள்.

வினா 414—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23 ஆம் தேதி முதல் நிலக்கரி தட்டுப்பாட்டின் காரணமாக தமிழ்நாட்டில் ரத்து செய்யப்பட்ட இரயில்களின் எண்ணிக்கையினை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அவைகளைத் தொடர்ந்து மீண்டும் ஓட விட அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : நிலக்கரி தட்டுப்பாட்டினால் 58 இரயில்கள் (fully) முழுமையாகவும் 41 இரயில்கள் (Partially) ஒரு தலையாகவும் ரத்து செய்யப்பட்டன. ரத்து செய்யப்பட்ட இரயில்களை மீண்டும் விடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு இரயில்வே நிர்வாகத்தை மாநில அரசு கேட்டுக்கொண்டது. இதற்கு நிலக்கரி தட்டுப்பாடு இன்னும் அபிவிருத்தி அடையவில்லை என்றும், அபிவிருத்தி அடைந்தவுடன் ரத்து செய்யப்பட்ட இரயில் வண்டிகள் மீண்டும் விடப்படும் என்றும் தென் பிராந்திய இரயில்வே பொது மேலாளர் தெரிவித்துள்ளார்.

## சிறப்பு அங்காடிகளில் அந்நிய நாட்டுப் பொருட்கள் விற்பனை.

வினா 415—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சுங்க இலாகாவினரால் கைப்பற்றப் படும் கைக்கடிகாரம் போன்ற அந்நிய நாட்டுப் பொருட்கள் தமிழக சிறப்பு அங்காடிகளில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : சுங்க இலாகாவினரால் கைப்பற்றப் படும் அந்நிய நாட்டுப் பொருட்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்படுவது 29—8—1977 முதல் நிறுத்தப்பட்டுள்ளது.



## விவசாயிகள் கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்டோர்.

வினா 416—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகள் கிளர்ச்சி தொடர்பாக 1978 ஆம் ஆண்டு ஜூன் 2-ந் தேதி கைது செய்யப்பட்டோர் எத்தனை பேர், மாவட்டவாரியாக ?

விடை—

விவசாயிகள் கிளர்ச்சி தொடர்பாக 1978 ஆம் ஆண்டு ஜூன் 12-ந் தேதி கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை மாவட்டவாரியாக பின்வருமாறு :

| | |
|---|---|
| (1) மதுரை .. .. .. .. | 147 |
| (2) கோயம்புத்தூர் .. .. .. | 709 |
| (3) வட ஆற்காடு .. .. .. | 430 |
| (4) திருச்சிராப்பள்ளி .. .. .. | 211 |
| (5) சென்னை நகரம் .. .. .. | 1,062 |
| மொத்தம் .. | 2,559 |

மற்ற மாவட்டங்களில் எவரும் கைது செய்யப்படவில்லை.

## மாயூரம் மருத்துவமனைக்கு இ. சி. ஜி. கருவி.

வினா 417—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் அரசினர் பொது மருத்துவமனைக்கு இ.சி.ஜி. கருவி வாங்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது தற்போது இயக்கப்பட்டு வருகின்றதா ?

விடை—

[1979 பிப்ரவரி 12

## மனைப்பட்டாக்கள் வழங்கல்.

வினா 418—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977–78-ம் ஆண்டில் எத்தனை பேருக்கு அரசு மனைப் பட்டாக்களை வழங்கியுள்ளது? மாவட்ட வாரியாக?

விடை—

1977-78-ம் ஆண்டில் அரசு புறம்போக்கு நிலத்திலிருந்து வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கிய எண்ணிக்கை மாவட்ட வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது—

| மாவட்டம். | 1977-78. (1—4—77 முதல் 31—3—78 முடிய) |
|---|---|
| (1) செங்கல்பட்டு .. .. .. | 1,536 |
| (2) தென் ஆற்காடு .. .. .. | 1,325 |
| (3) வட ஆற்காடு .. .. .. | 799 |
| (4) தஞ்சாவூர் .. .. .. | 3,075 |
| (5) திருச்சிராப்பள்ளி .. .. .. | 1,667 |
| (6) இராமநாதபுரம் .. .. .. | 1,188 |
| (7) திருநெல்வேலி .. .. .. | 4,589 |
| (8) சேலம் .. .. .. .. | 8,048 |
| (9) தர்மபுரி .. .. .. .. | 7,361 |
| (10) கோயம்புத்தூர் .. .. .. | 2,729 |
| (11) நீலகிரி .. .. .. .. | 101 |
| (12) மதுரை .. .. .. .. | 12,073 |
| (13) புதுக்கோட்டை .. | 2,676 |
| (14) கன்னியாகுமரி .. .. .. | 495 |
| (15) சென்னை .. .. .. | 174 |

## தமிழகத்தில் பழங்கால உலோகச் சிற்பங்கள் கண்டுபிடிப்பு.

வினா 419—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அண்மையில் பழங்கால உலோக சிற்பங்கள் எவையேனும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?



1979 பிப்ரவரி 12]

விடை—

(அ) ஆம்.

(ஆ) கோவையில் போளுவாம்பட்டி என்ற ஊருக்கருகில் கோட்டைக்காடு என்ற இடத்திற்கு அருகில் மூன்றடி ஆழத்தில் தற்செயலாக உலோகத்தால் ஆன காளைமாடு ஒன்று (16-ம் நூற்றாண்டைச் சார்ந்தது) திரு. ஐ. இராமசாமி என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஆகஸ்ட் 1977-ல் தொல்பொருள் ஆய்வுத் துறையிடம் சேர்க்கப்பட்டுள்ளது.

## தஞ்சை மாவட்டத்தில் இலவச கண் சிகிச்சை.

வினா 420—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் 1978-79ஆம் ஆண்டில் 2,300 பேருக்கு இலவச கண் சிகிச்சை அளித்திட அரசு ஆலோசித்து வருகின்றதா?

விடை—

ஆம். 1978-79ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் 2,300 பேருக்கு பார்வை அறுவை அளிக்க ஒரு குறியீட்டை நிர்ணயித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் இ.சி.ஜி. கருவிகள்.

வினா 421—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் இ. சி. ஜி. கருவிகள் உள்ளனவா?

(ஆ) அவைகளை இயக்குவதற்காக அமர்த்தப்பட்டுள்ளோர் எத்தனை பேர்?

விடை—

(அ) உள்ளன.

(ஆ) எக்ஸ்ரே பிரிவில் இருக்கும் இ.சி.ஜி. கருவியை இயக்க ஒரு தொழில் நுட்ப பணியாளர் அமர்த்தப்பட்டுள்ளார். ஆர். ஐ. சி. எஸ். பிரிவில் இக்கருவியை இயக்குவதில் பயிற்சி பெற்ற 5 செவிலியரும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

[1979 பிப்ரவரி 12

## மணல்மேடு பகுதியில் காவல் துறையினருக்கு வீடுகள்.

வினா 422—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தாலூகா மணல்மேட்டில் உள்ள காவல் துறையினருக்கு வீடுகள் கட்டித் தரும் செயற் குறிப்பு உள்ளதா ;

(ஆ) ஆம் எனில், அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இதற்கான உத்தேச மதிப்பீடு ரூபாய் 3.20 இலட்சங்களாகும்.

## இலங்கை அகதிகள் மறுவாழ்வுக்கு நிதி உதவி.

வினா 423—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்து சேர்ந்த அகதிகள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களது மறுவாழ்வுக்கென அந்த ஆண்டில் மத்திய அரசு மாநில அரசுக்கு அளித்த உதவித் தொகை எவ்வளவு?

விடை—

(அ) 1977-78ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களின் எண்ணிக்கை 8,305 குடும்பங்களை கொண்ட 32,314 நபர்கள் ஆகும்.

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (ஆ) வியாபாரக் கடன் | .. .. | 371·28 |
| வீட்டு வசதிக் கடன் | .. .. | 50·00 |
| நிலக்காலனித் திட்டம் | .. .. | 20·00 |
| மான்ய உதவித் தொகை | .. .. | 61·22 |
| மொத்தம் | .. | 502·50 |



1979 பிப்ரவரி 12]

## பட்டு நூல் உற்பத்தி.

வினா 424—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கிராமத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டத்தில் தரமான பட்டு நூல் தயாரிக்கலாமென மத்திய அரசு ஆய்ந்துள்ளதை நமது மாநில அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதுபற்றி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ராமனாதபுரம் மாவட்டத்தில் ஏற்கெனவே 60 ஏக்கரா பரப்பு முசுக்கொட்டை பயிர் செய்யப்பட்டுள்ளது. மேற்கொண்டு நடப்பாண்டில் 200 ஏக்கரா பரப்பளவில் முசுக்கொட்டை பயிர் வளர்க்கவும், 10 பட்டுநூல் நூற்பு நிலையங்களும் நிறுவ உத்தேசித்துள்ளது.

## செவிலியர்களுக்குப் பதவி உயர்வு.

வினா 425—திரு. துரை. முத்துசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நர்சுகளுக்கு எந்த முறையில் பதவி உயர்வு கொடுக்கப்படுகிறது ?

(ஆ) பயிற்சி பெற்ற நர்சுகள் எவ்வளவு பேர் தற்போது வேலை இல்லாமல் இருக்கிறார்கள் ?

(இ) ஐம்பத்தாறு படுக்கைகொண்ட கள்ளக்குறிச்சி மருத்துவமனைக்கு ஹெட் நர்ஸ் பதவி உண்டா ?

[1979 பிப்ரவரி 12

**விடை—**

(அ) நர்சுகளுக்கு அவர்களது முதுநிலைப் பட்டியல்படி (சீனியாரிட்டி) தகுதியின் அடிப்படையில் பதவி உயர்வு கொடுக்கப் படுகிறது.

(ஆ) அரசு உதவிப்பணம் பெற்று ஜூன் 1978-ல் பயிற்சி முடித்த 70 நபர்கள் உள்ளனர். அவர்களுக்கு நியமன ஆணைகள் அனுப்பப்பட்டு வருகின்றன.

(இ) உள்ளிருப்பு படுக்கைகள் 56 ஆக உயர்த்தப்பட்டதால் ஒரு தலைமைச் செவிலியர் பதவி ஏற்படுத்த இம் மருத்துவ மனை தகுதி பெற்றுள்ளது. ஆயினும் அதிகப் பணியிடங்கள் ஏற்படுத்துவதற்கு பொதுவான தடை விதிக்கப்பட்டுள்ளதால் இப்பதவி ஏற்படுத்தப்படவில்லை. இது குறித்து மருத்துவத்துறை இயக்குநர் ஆய்ந்து நடவடிக்கை எடுப்பார்.

## ஆதாளியூரில் கூட்டாற்றின் குறுக்கே அணை.

**வினா 426—திரு. எம். அண்ணாமலை :** மாண்புமிகு வேளாண்மை, நீர்பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை வட்டம், ராமகிருஷ்ணம்பதி ஊராட்சி ஆதாளியூர் கூட்டாற்றின் குறுக்கே அணைக்கட்டி பாப்பாரப்பட்டி ஏரி, தாகம்பட்டி இடையனேரி, காரப்பட்டு ஆவ ஏரி, கல்லனூர் ஏரி, தொரவாயன் குட்டை, நல்லானூர் ஏரி, வண்ணாம்பள்ளி ஏரி ஆகிய ஏரிகளுக்கு தண்ணீர் விடக்கோரி இப்பகுதி விவசாயிகளிடமிருந்து மனுக்கள் வந்துள்ளனவா ?

**விடை—**

இது போன்ற மனுக்கள் ஏதும் கிடைக்கப் பெறவில்லை.

## தருமபுரி வட்டத்தில் கையகப்படுத்தப்பட்ட வீட்டு மனைகள்.

**வினா 427—திரு. எம். அண்ணாமலை :** மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தருமபுரி மாவட்டத்தில் அரிசனங்களுக்கு 1977-78 ஆம் ஆண்டுகளில் வீட்டு மனைகளுக்கு கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் விபரமும் வழங்கப்பட்ட மனைகளின் விபரங்களும் யாவை ?



1979 பிப்ரவரி 12]

**விடை—**

1977–78 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் வீட்டு மனைகளுக்கு கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் விபரமும் வழங்கப்பட்ட மனைகளின் விபரங்களும் கீழே தரப்பட்டுள்ளது.

| வரிசை எண்ணும், கிராமத்தின் பெயரும். | கையகப் படுத்தப் பட்ட நிலம். | வழங்கப்பட்ட வீட்டு மனைகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. இருமத்தூர் .. .. .. | 3.29 | 38 |
| 2. போதாநத்தம் .. .. | 3.56 | 42 |
| 3. மல்லிக்குட்டை .. .. | 2.24 | 27 |
| 4. வீரப்பநாயக்கன்பட்டி .. .. | 3.00 | 35 |
| 5. நாசன்கோட்டை (அரூரின் குக்கிராமம்). | 1.25 | 14 |
| 6. மாதரஹள்ளி (நாகம்பட்டியின் குக்கிராமம்). | 2.58 | 30 |
| 7. திருவாணம்பட்டி .. .. | 2.03 | 41 |
| 8. போகனபள்ளி .. .. .. | 5.78 | 85 |
| 9. கிரணஹள்ளி (பேவுஹள்ளியின் குக்கிராமம்). | 2.08 | 40 |
| 10. அமீதனஹள்ளி (பேலாமாரனஹள்ளியின் குக்கிராமம்). | 1.09 | 15 |
| 11. கூத்தப்பாடி .. .. .. | 1.27 | 15 |
| 12. சுன்னாம்பட்டி (ஹனுமந்தபுரத்தின் குக்கிராமம்). | 10.99 | 172 |
| 13. பிட்டாபள்ளி .. .. | 4.83 | 77 |
| 14. ரேக்கடஹள்ளி .. .. .. | 3.45 | 56 |
| 15. செல்லமுடி (மஞ்சரஹள்ளியின் குக்கிராமம்). | 2.68 | 44 |
| 16. உம்மியம்பட்டி. (தோப்பூவின் குக்கிராமம்). | 3.46 | 42 |

[1979 பிப்ரவரி 12

## தர்மபுரி மாவட்டத்தில் பட்டு உற்பத்தி.

வினா 428—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு கிராமத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் பட்டு உற்பத்திக்கு ஊக்கமளிக்க செயல் படுத்தப்பட்ட திட்டங்கள் எத்தனை ?

(ஆ) அதன் மூலம், பயனடைந்த விவசாயிகளின் விபரம் யாது ?

விடை—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் பட்டு உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் வகையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பின்வருமாறு—

1. தீவிர பட்டு அபிவிருத்தி திட்டம்.
2. வறட்சி பாதிப்பு பகுதித் திட்டம்.
3. ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம்.

(ஆ) தற்போது 4,450 ஏகரா பரப்பானது முசுக்கொட்டை பயிரின்கீழ் உள்ளது. சுமார் 20,000 நபர்கள் இத்தொழில் மூலம் வேலைவாய்ப்பு பெற்றுள்ளார்கள்.

திட்டவாரியான பயன் அடைந்தோர் விபரம் வருமாறு :

பயன் அடைந்தவர் எண்ணிக்கை.

| | ஏக்கராக்கள். | நபர்கள். |
|---|---|---|
| தீவிர பட்டு அபிவிருத்தி திட்டம்.. | 400 | 2,000 |
| வறட்சிப் பாதிப்பு பகுதி திட்டம் | 300 | 1,500 |
| ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சி திட்டம். | 200 | 1,000 |
| ஏற்கனவே உள்ள பழைய திட்டங்கள். | 3,550 | 15,500 |



1979 பிப்ரவரி 12]

## இராமேஸ்வரத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்.

வினா 429—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரத்தில் குடிநீர் உற்பத்தி சாதனம் சூரியனால் இயங்குவதாக நிறுவப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக செலவழிக்கப்படும் தொகை எவ்வளவு ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

## லேவா தேவிக்காரர்கள் மீது நடவடிக்கை.

வினா 430—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு விதித்துள்ளதைவிட அதிகப்படியாக வட்டி வாங்கும் லேவா தேவிக்காரர்கள் எத்தனை பேர் மீது 1978ஆம் ஆண்டில் இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

விடை—

1978ஆம் ஆண்டில் 25 லேவா தேவிக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## மருத்துவக் கல்லூரித் தேர்வுக்குழு.

வினா 431—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1978ஆம் ஆண்டில் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களை தேர்ந்தெடுக்க அமைக்கப்பட்ட தேர்வுக் குழுவில் எத்தனை மருத்துவர்கள் இடம் பெற்றனர்?

விடை—

1978-79ஆம் ஆண்டு மருத்துவக் கல்லூரிகளில் முதல் வருட எம்.பி.பி.எஸ். பட்ட படிப்பிற்கு மாணவர்களை தேர்ந்தெடுக்க அமைக்கப்பட்ட தேர்வுக் குழுவில் 23 மருத்துவர்கள் இடம் பெற்றனர்.

## நெல்லிக்குப்பம் பகுதியில் சர்க்கரை ஆலையினர் பரிந்துரைத்த சாலைகள்.

வினா 432—திரு. துரை முருகன்: மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத்துறை அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைக்கு கரும்பு எடுத்துச் செல்ல சர்க்கரை ஆலையினர் பரிந்துரைத்த ரோடுகளின் விவரமென்ன?

(ஆ) அவைகளில் எந்தெந்த ரோடுகள் அமைக்கும் பணி நடப்பு ஆண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையினர் பரிந்துரைத்த சாலைகளின் விவரம் பின் வருமாறு:—

(1) மணமேடு மற்றும் வன்பாக்கம் ஆகியவற்றை இணைக்கும் பெண்ணார் தரைப்பாலம்.

(2) வத்திப்பாளையத்திற்கு கடலூர்—சித்தூர் சாலை.

(3) சித்தரசூர் வழியாக பாலாருக்கு கடலூர்—சித்தூர் சாலை.

(4) துளுக்கநத்தம் வழியாக பாக்கம்-கிருஷ்ணாபுரம் சாலை.

(ஆ) தற்போது உள்ள நிதி நிலைமையை அனுசரித்து மேற்சொன்ன சாலைகளில் எந்த சாலைப்பணியையும் 1978-79-ல் மேற்கொள்ள உத்தேசம் இல்லை.

## திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முந்திரி உற்பத்தி.

வினா 433—திரு. ஆர். மார்க்கபந்து: மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) ஆண்டிமடம் உடையார்பாளையம் பகுதிகளில் இவ்வாண்டு முந்திரி மகசூல் குறைந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணம் என்ன?

விடை—

(அ) ஆம். ஆண்டிமடம் உடையார்பாளையம் அடங்கிய திருச்சி மாவட்டத்தில் 1977-78-ல் முந்திரி உற்பத்தியில் 160 டன் (முந்திரிக் கொட்டை) குறைந்துள்ளது.

(ஆ) நவம்பர், டிசம்பர் 1977-ல் பெய்த மழையும், அதைத் தொடர்ந்து எதிர்பாராதவிதத்தில் பூச்சி, நோய்கள் தாக்கியதும் உற்பத்திக் குறைவிற்கு காரணங்களாகும். ஆனால், தமிழகம் முழுதும் எடுத்த கணக்கின்படி முந்திரி மகசூல் 370 டன்கள் அதிகரித்துள்ளது. இந்த அதிக உற்பத்தி 1976-77ஆம் ஆண்டைவிட 3.7 சதம் அதிகமாகும். இதன் விபரம் கீழே கொடுக்கப்படுகிறது.

| | முந்திரி உற்பத்தி (முந்திரிக் கொட்டை) டன்களில் 1976-77 | 1977-78 | வித்தியாசம். |
|---|---|---|---|
| திருச்சி மாவட்டம் (ஆண்டிமடம், உடையார்பாளையம் அடங்கியது) | 2,940 | 2,780 | (—) 5.4% |
| தமிழகம் முழுவதும் ... | 10,150 | 10,520 | (+) 3.7% |

## கடல் அலைகள் மூலம் மின்சாரம் தயாரித்தல்.

வினா 434—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் கடல் அலைகளின் மூலம் மின்சாரம் தயாரிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனின், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## கைத்தறியில் புதிய ரகங்கள் உற்பத்தி.

வினா 435—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கைத்தறி, பஞ்சாலைகள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி துணிகளில் காம்பிரிக், டு-பை-டு ரகங்களைப் பெருமளவில் உற்பத்தி செய்ய அரசு ஏற்பாடு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) & (ஆ): திருவில்லிபுத்தூர், சேலம் அம்மாப்பேட்டை போன்ற இடங்களில் சுமார் 580 தறிகளில் சுமார் ரூ. 7 இலட்சம் பெறுமானமுள்ள கேம்பிரிக் மற்றும் டு-பை-டு ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இவ்வித உயர்ந்தரக துணிகளை பதனிட்டு விற்பனை செய்யவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு கழகம் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் இப்பணி விரைவான முறையில் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வித ரகங்களை அதிக அளவில் உற்பத்தி செய்ய மேலும் தறிகள் ஒதுக்கீடு செய்யப்பட நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

## முதலமைச்சர் விபத்து நிவாரண நிதி.

வினா 436—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாலை விபத்துக்கள் சம்பந்தமாக ஒரு நிதி ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம். முதலமைச்சர் விபத்து நிவாரண நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.



(ஆ) சாலை விபத்துக்களில் பேருந்துகளினால் மரணம்/காயம் அடைபவர்களுக்கு, அவர்கள் உறவினர்களுக்கு விபத்தின் தன்மையைக் கொண்டு முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியிலிருந்து மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக உதவி வழங்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு, வருடம் ஒன்றுக்கு ரூ. 50 இலட்சம் மோட்டார் வாகன வரியிலிருந்து ஒதுக்கீடு செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது. இது 20—2—1978 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

### வழங்கப்படும் நிதி அளவு.

| (1) | (2) |
|---|---|
| | ரூ. |
| 1. விபத்தில் மரணம் அடைந்தவர்களுக்கு .. | 1,000 |
| 2. இரு கண் அல்லது இரு அவயவங்கள் அல்லது ஒரு கண்ணும் வேறு ஒரு அவயமும் இழந்தவர்களுக்கு. .. | 800 |
| 3. ஒரு கண் அல்லது வேறு ஒரு அவயமும் இழந்தவர்களுக்கு. .. | 400 |
| 4. இதரவகை காயம் அடைந்தவர்களுக்கு .. | 50 |

## விவசாயத் தொழில் அமைப்புகள்.

வினா 437—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத்தையும் கிராமக் கைத்தொழில்களையும் இணைப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் விவசாயத் தொழில் அமைப்புகள் ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

## கைத்தறி நெசவாளர்களைக் கூட்டுறவுத் துறையின் கீழ கொண்டுவரும் திட்டம்.

வினா 438—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கைத்தறி, பஞ்சாலைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1979 பிப்ரவரி 12

(அ) தமிழ் நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களில் பெரும் பகுதியினரை கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டுவர அரசு சிறப்பு திட்டம் தீட்டியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சிவராமன் கமிட்டியின் சிபாரிசின் அடிப்படையில் 60 சதவீத கைத்தறி நெசவாளர்களை கூட்டுறவு துறையின் கீழ் கொணர்ந்து பல வளர்ச்சி திட்டங்களைப் புகுத்தி கைத்தறி தொழிலை துரிதமுடன் வளர்க்க மத்தியஅரசு ஒப்புக் கொண்டது. தமிழ் நாட்டில், மத்திய மாநில அரசுகளில் நிதி உதவியுடன் ஏற்கனவே உள்ள கூட்டுறவு சங்கங்களைப் புதுப்பித்தும், புதிய பல நெசவாளர் சங்கங்களை அமைத்தும் தற்போது கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள 33 சதவீதத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்களை 60 சதவீதமாக அதிகப்படுத்தி கூட்டுறவுத்துறையின் கீழ் கொண்டுவர விரிவான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. 1976–77, 1977–78 ஆம் ஆண்டுகளில் 202 புதிய நெசவாளர் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 60,000 நெசவாளர்கள் தனியார் துறையிலிருந்து கூட்டுறவுத் துறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். தற்சமயம் 2·07 இலட்சம் நெசவாளர்கள் கூட்டுறவு துறையின் கீழ் உள்ளனர். ஆருவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் 400 வழக்கமான வகைகளில் உள்ள நெசவாளர் சங்கங்களையும், 200 தொழிலியல் நெசவாளர் சங்கங்களையும் ரூபாய் 1,605 இலட்ச செலவில் அமைப்பதன் மூலம் 1.25 இலட்சம் தனியார் துறையில் உள்ள நெசவாளர்களை கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டுவர முடியும்.

## தானியப் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் வழங்கப்பட்ட உலோகக் குதிர்கள்.

வினா 439—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய அரசின் தானியப் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் தமிழ் நாட்டில் இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ள உலோகக் குதிர்களின் எண்ணிக்கை என்ன ?



1979 பிப்ரவரி 13]

விடை

மத்திய அரசின் தானியப் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் தமிழ் நாட்டில் இதுவரை (அதாவது 31-8-1978 வரை) விநியோகிக்கப்பட்டுள்ள உலோகக் குதிர்களின் எண்ணிக்கை 5,125 ஆகும். அதன் விபரம் வருமாறு—

| ஆண்டு. | விநியோகிக்கப்பட்ட குதிர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1976-77 | 2,002 |
| 1977-78 | 2,295 |
| 1978-79 (31-8-78 வரை) | 828 |
| மொத்தம்.. | 5,125 |

## மந்திக்குளாம்பட்டி கிராமத்தில் குடிநீர் வழங்கல்.

வினா 440—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டம், பெரியபட்டி ஊராட்சி, மந்திக்குளாம்பட்டி கிராமத்தில் குடிநீர் பற்றுக்குறையைப் போக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

விடை—

மந்திக்குளாம்பட்டி கிராமத்தில் ஏற்கனவே இரண்டு குடிநீர் கிணறுகள் அமைக்கப்பட்டு அவை உபயோகத்தில் உள்ளன. மேலும் ஒரு குழாய் கிணறும் அந்தப் பகுதியில் இறக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் தற்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்தி குடிநீர் வசதியைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## முச்சக்கர வண்டிகள் வழங்கல்.

வினா 441—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977–78-ம் ஆண்டில் மூன்று சக்கர சைக்கிள் முடமானவர்களுக்கு எத்தனை வழங்கப்பட்டுள்ளது ?

விடை—

465 மூன்று சக்கர சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

## நன்னிலம் திருமருகல் ஒன்றியங்களில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்.

வினா 442—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நன்னிலம், திருமருகல் ஒன்றியங்களை சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சேர்க்க அரசிற்கு வேண்டுகோள் வந்ததா ?

விடை—

ஆம். திரு. மா. மணிமாறன், எம்.எல்.ஏ. அவர்கள் தமது 25-3-1978 நாளிட்ட கடிதத்தில் பின் தங்கியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் சிறு விவசாயிகளாக உள்ள நன்னிலம், திருமருகல் ஒன்றியங்களைச் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டுவர ஆவன செய்யும்படி இவ்வரசைக் கோரியிருந்தார்.

அன்னருக்கு, புதிய பகுதிகளை ஷெ திட்டத்தின் கீழ் சேர்க்க இயலாது என 16-6-1978-ல் ஒரு பதிலும் அனுப்பப் பட்டுள்ளது.

## தஞ்சை மாவட்டத்தில் மீன் வளர்ப்புக்கு உதவி.

வினா 443—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயது செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் உள்ள குளங்களில் மீன் வளர்ப்பை ஊக்குவிக்க அரசு ஏதேனும் சிறப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா ?

விடை—

ஆம். தஞ்சை மாவட்டத்தில் மீன் வளத்தை குளங்களில் பெருக்குவதற்கு மீன் வளர்ப்போர் வளர்ச்சி நிறுவனம் நிறுவப்பட்டிருக்கிறது. இத் திட்டத்திற்கு மத்திய அரசு முழு நிதியுதவி செய்கிறது. மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்கான முழு வசதியை, தமிழ்நாடு அரசு செய்துள்ளது. இத் திட்டத்தின்கீழ், சமீப கால மீன் வளர்ப்பில் தொழில் நுட்பங்களுடன் பலரக மீன் வளர்ப்பு, மீன் வளர்ப்போருக்கு பயிற்சி அளித்தல் போன்ற செயல் முறைகள் பின்பற்றப்படுகின்றது. குளங்களை சீரமைப்பதற்கு நிதி உதவியும், தரமான மீன் குஞ்சுகளும் மீன்களுக்கு உணவு வாங்க உதவி முதலியன வழங்கப்பட்டு வருகிறது. இம்முறைகளை கையாளுவதால், குறைந்தபட்சம், ஒரு ஹெக்டேர் நிலத்தில் 1,500 கிலோ மீன் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.



## உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள்.

வினா 444—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1974-75, 1975-76, 1976-77, 1977-78 ஆகிய ஆண்டுகளில் உச்சவரம்பின்கீழ் அரசு கைப்பற்றிய நிலம் எவ்வளவு?

விடை—

| | | | | |
|---|---|---|---|---|
| 1975 | .. | .. | .. | 9,181 ஏக்கர்கள் |
| 1976 | .. | .. | .. | 7,327 ஏக்கர்கள் |
| 1977 | .. | .. | .. | 192 ஏக்கர்கள் |
| 1978 (30-6-1978 வரை) | .. | .. | .. | 44 ஏக்கர்கள் |

## சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மானியம்.

வினா 445—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு அளிக்கப்படும் மானியத்திற்கு வரம்பு உண்டா ?

விடை—

உண்டு. சிறு விவசாயிகளுக்கு 25 சத விகிதமும், குறுநில விவசாயிகளுக்கு 33 1/3 சத விகிதமும் வேளாண் தொழிலாளிகளுக்கு 33 1/3 சத விகிதமும் மான்யம் அளிக்கப்படுகிறது.

வினா 446 —திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் மானியத்தில் எந்தெந்த உர வகைகளுக்கு அளிக்கப்படுகிறது ?

விடை—

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சாம்பல் சத்து (Potasic Fertilisers) மணிச்சத்து (Phosphatic Fertilisers) ஆகிய உரங்கள் வாங்குவதற்கு சொற்ப நில உழவர்களுக்கு மட்டும் மானியம் அளிக்கப்படுகிறது.

## ஐ. ஆர். 20 ரக நெல்.

வினா 447—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஐ.ஆர். 20 என்ற நெல் எந்த ரகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது?

விடை—

இந்தவகை நெல் சன்னரகத்தில் (Fine Variety) சேர்க்கப்பட்டுள்ளது.

## பூம்புகார் தொகுதியில் குழாய்க்கிணறுகளுக்கு மின் இணைப்பு.

வினா 448—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பூம்புகார் தொகுதியில் பல குழாய் கிணறுகள்(Bore Wells) அமைக்கப்பட்டு மின் இணைப்புத்தர மறுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை குழாய்க்கிணறுகள் ? காரணம் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 10 குழாய்க்கிணறுகள். நிலத்தடிநீர் ஒழுங்குமுறை காரணமாக மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

## அய்யாவையனாற்றின் குறுக்கே பாலம்.

வினா 449—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

செம்பனார் கோவில் ஒன்றியத்தில் ஆலவேலி—சேமங்கலம் இரண்டு கிராமங்களையும் இணைக்க அய்யாவையனாற்றில் பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.





## பெருந்துறைப் பகுதியை தனி வட்டமாக்கல்.

வினா 450—டாக்டர் ஏ. பொன்னுசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் பெருந்துறையைத் தனி வட்டமாக (தாலூகா) மாற்றும் எண்ணம் உண்டா ;

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேறும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) மாநிலம் முழுவதும் மாவட்டங்கள், வட்டங்கள் ஆகியவற்றினைச் சீரமைக்கும் பொழுது கருதப்பட வேண்டியவற்றுள், கோவை மாவட்டம் பெருந்துறையைத் தனி வட்டமாக மாற்றுவதுமொன்றாகும்.

## உணவு விடுதிகளில் பணியாற்றுவோர்களுக்கு மருத்துவப் பரிசோதனை.

வினா 451—டாக்டர் ஏ. பொன்னுசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

உணவு விடுதிகளில் பணியாளர்களாக அமர்த்தப்படுவோருக்கு தொற்றுநோய்கள் இல்லையென மருத்துவச் சான்றிதழ் பெறவேண்டும் என்பது குறித்த விதிகள் வகுக்கப்பட உள்ளதா?

விடை—

1957-ம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட 22-ம் விதியின்கீழ் உணவகங்களில் வேலை புரியும் பணியாளர் ஒவ்வொருவரும், பதிவு பெற்ற மருத்துவர் ஒருவரால் ஆண்டுக்கு ஒருமுறை பரிசோதனை செய்யப்பட வேண்டும். அவ்வாறு பரிசீலனை செய்யப்படுகையில் அவர் தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவோ அல்லது அவர் மூலம் அத் தொற்று நோய் பரவலாம் எனத் தெரியவந்தாலோ அவர் அந்த உணவகத்தில் பணியாற்றுவதை உடனடியாக விட்டுவிடவேண்டும்.

## தூத்துக்குடி பகுதியில் பணிபுரியும் மகளிர்க்கான தங்கும் விடுதிகள்.

வினா 452—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி பகுதியில் அரசு துறையில் பணியாற்றும் மகளிர் தங்குவதற்கு விடுதிகள் அமைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

[1979 பிப்ரவரி 12

விடை—

இது சம்பந்தமாக செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

## தூத்துக்குடி ஸ்பிக் சாலையில் இரயில்வே மேம்பாலம்.

வினா 453—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி—ஸ்பிக் நெடுஞ்சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைப்பதில் காலதாமதம் ஏற்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இதனை விரைந்து முடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடியிலிருந்து ஸ்பிக் செல்லும் மாற்று வழிச் சாலையின் (நீளம் 10.81 கி. மீ.) முழுமையாக முடிவுபெற்றுள்ளது. இச்சாலையில் கி. மீ. 6.528-ல் "மீளவிட்டான்" இருப்புப்பாதை குறுக்கிடுவதால், இவ்விடத்தில் மேம்பாலம் கட்ட, இரயில்வே துறையினரிடம் வைப்புத் தொகை வேலையாக செய்வதற்கு ரூ. 5.98 லட்சம் வைப்புத் தொகையாக கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி மேம்பால வேலைக்கான வரைபடம் மற்றும் மதிப்பீடு ஆகியவை இரயில்வே துறையினரால் அங்கீகாரம் செய்யப்பட்டு வேலைகள் "டெண்டர்கள்" மூலம் ஒப்படைக்கப்பட்டு, அத்துறையினரால் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வேலை கூடிய விரைவில் இரயில்வே துறையினரால் முடிக்கப்பட்டுவிட ஆவன செய்யப்பட்டு வருகின்றன.

## தூத்துக்குடியில் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டம்.

வினா 454—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி நகராட்சியில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்கு மொத்த ஒதுக்கீடு எவ்வளவு ?

(ஆ) இதுவரை முடிந்துள்ள பணிகள் எவ்வளவு ? அதற்கான செலவுத் தொகை எவ்வளவு?



1979 பிப்ரவரி 12]

விடை—

(அ) தூத்துக்குடி நகராட்சி முழுமைக்கும் பாதாள சாக்கடை அமைக்க வேண்டுமென்றால் ரூ. 547 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது தூத்துக்குடி ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மக்கட் தொகை மிக அதிகமுள்ள இரண்டு பகுதிகளான பகுதி ஒன்றிலும் (5 தெருக்களுக்கு மட்டும்) பகுதி நான்கிலும் (22 தெருக்கள் அடங்கிய முழு பகுதிக்கும் மட்டும்) பாதாள சாக்கடை அமைக்க ரூ. 150 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் வரையப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத் திட்ட ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ. 1.32 இலட்சம் ஆகும்.

(ஆ) இத்திட்டத்தில் கழிவுநீர்க் குழாய்கள் பதித்தல், வீடுகளிலிருந்து கழிவு நீர் எடுத்துச் செல்லும் குழாய்கள் பதித்தல் கழிவுநீர் வெளியேற்றும் நிலையம் கட்டுதல் போன்ற எல்லாவேலைகளிலும் 55 விழுக்காடு வேலைகள் முடிவுற்றுள்ளன. இத்திட்டத்திற்கு 1978-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரை ரூ. 90.99 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது.

## தாமிரபரணி பாசனக் கால்வாய்களுக்கு லைனிங் அமைத்தல்

வினா 455 :—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு வேளாண்மை-நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தாமிரபரணி பாசனத்தின்கீழ் உள்ள பிரதான கால்வாய் கிளைக்கால்வாய் முழுவதும் லைனிங் செய்யக்கோரி அரசிற்கு ஏதேனும் கோரிக்கைகள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள முடிவு யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்போது தாமிரபரணி பாசனத்தின்கீழ் உள்ள கோடைமேல் அழகியன் கால்வாய்களை லைனிங் செய்ய திட்டங்கள் பொதுப்பணித்துறையினரால் ஆராயப்பட்டு வருகின்றன. பரிசீலனை முடிந்த பிறகு, இத்திட்டங்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[1979 பிப்ரவரி 12

## விவசாயிகளுக்கு வழங்கப்பெற்ற கூட்டுறவுக் கடன்கள்.

வினா 456—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978–79 குறுவை சாகுபடிக்கென நாணய சங்கங்கள் மூலமாக தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு ?

(ஆ) அதனால் பயனடைந்த விவசாயிகள் எண்ணிக்கை என்ன?

**விடை—**

(அ) ரூபாய் 505·88 இலட்சம்.

(ஆ) பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை 35,795

## வனவிலங்குகள் சரணாலயம்.

வினா 457—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வன விலங்குகள் சரணாலயம் தமிழகத்தில் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றில் உள்ள வகைகளின் எண்ணிக்கை என்ன ?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் மொத்தம் 8 இடங்களில் வனவிலங்கு சரணாலயங்கள் உள்ளன.

அவையாவன.

1. முதுமலை வனவிலங்கு சரணாலயம் (நீலகிரி மாவட்டம்).
2. களக்காடு வனவிலங்கு சரணாலயம் (திருநெல்வேலி மாவட்டம்).
3. முண்டந்துறை வனவிலங்கு சரணாலயம் (திருநெல்வேலி மாவட்டம்).
4. கொடியக்கரை பறவைகள் சரணாலயம் (தஞ்சை மாவட்டம்).



1979 பிப்ரவரி 12]

5. ஆனைமலை வனவிலங்கு சரணாலயம் (கோவை மாவட்டம்).
6. வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் (செங்கை மாவட்டம்).
7. வேட்டங்குடி பறவைகள் சரணாலயம் (இராமநாதபுரம் மாவட்டம்).
8. கிண்டி தேசியப் பூங்கா பறவைகள் சரணாலயம் (செங்கை மாவட்டம்).

மேற்குறிப்பிட்ட சரணாலயங்களில் காணப்படும் மிருகங்கள் பின்வருமாறு :—

முதுமலை வனவிலங்கு சரணாலயம்.—யானை, புலி, சிறுத்தை, கரடி, புள்ளிமான், கூடுமான், காட்டெருமை, ஓநாய், பலரக அணில்கள், சருகு மான், காட்டு ஆடு, பலரக குரங்கினங்கள், செந்நாய், அலங்கு, மலைப்பாம்பு, நரி, கீரி, காட்டு பூனை, கழுதைப் புலி, முள்ளம்பன்றி, மற்றும் நானாவித பறவைகள்.

களக்காடு வனவிலங்கு சரணாலயம்.—கருங்குரங்கு, புலி, சிறுத்தை, செந்நாய், யானை, சருகு மான், கூடுமான், புள்ளி மான், காட்டாடு, வரையாடு, மலைப்பாம்பு, ராஜநாகம், உடும்பு, நானாவித பறவைகள்.

முண்டந்துறை வனவிலங்கு சரணாலயம்.—புள்ளிமான், கூடு மான், சருகு மான், முள்ளம்பன்றி, செந்நாய், கரடி, பலவகை குரங்குகள், தேவாங்கு, சிறுத்தை, புலி.

ஆனைமலை வனவிலங்கு சரணாலயம்.—யானை, காட்டெருமை, புலி, சிறுத்தை, கூடுமான், புள்ளிமான், காட்டாடு. சருகு மான், செந்நாய், அலங்கு, பல்வகை குரங்குகள், காட்டுப் பன்றி.

கொடியக்கரை சரணாலயம்.—முறுக்கு மான், புள்ளிமான், காட்டு குதிரை, நரி, கீரி, குளிர்காலத்தில் செங்கால் நாரைகள், அதிக அளவில் கூடி இனப்பெருக்கம் செய்யும் காட்சி மற்றும் பல்வேறு பறவையினங்கள்.

வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்.—பல்வேறு பறவையினங்கள்.

வேட்டாங்குடி பறவைகள் சரணாலயம்.—பல்வேறு பறவையினங்கள்.

கிண்டி தேசியப் பூங்கா.—புள்ளி மான், முறுக்கு மான், நரி, குரங்கு, கீரி, முயல்.

1979 பிப்ரவரி 12]

**ஒரத்தநாடு கால்நடைப் பண்ணைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மாடுகளின் வகைகள்.**

வினா 458—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு அரசு மாட்டுப் பண்ணைக்கு அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட மாட்டின் வகைகள் என்ன ?

விடை—

அண்மையில் ஒரத்தநாடு மாவட்ட கால்நடைப் பண்ணைக்காக கால்நடைகள் ஏதும் இறக்குமதி செய்யப்படவில்லை.

**மாம்பழ விளைச்சல்**

வினா 459—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாம்பழ விளைச்சலைப் பெருக்க அரசு ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா ?

விடை—

ஒரு விவர அறிக்கை* அவையின் முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

**சிங்காநல்லூரிலுள்ள கழிவு நீர்க் குட்டை**

வினா 460—திரு. ஆர். வெங்கடசாமி என்கிற வெங்கிடு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூர் நகரின் மையத்தில் கமலா மில் குட்டையில் உள்ள கழிவு நீரை அப்புறப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

* [477—479-ம் பக்கங்களில் இணைப்பு XV ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]



1979 பிப்ரவரி 12]

விடை—

கமலா மில்லிற்கு அருகே உள்ள குட்டையில் தேங்கியுள்ள கழிவு நீரை அப்புறப்படுத்த ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் குட்டையைத் தூர்த்து அந்த இடத்தில் ரூ. 25 இலட்சம் செலவில் ஒரு பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர வளர்ச்சித் "திட்டத்தின்" (I.U.D.P.) கீழ் சேர்க்கப்பட்டு மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**விவசாயிகளுக்கு வழங்கப்பெற்ற கூட்டுறவு கடன்கள்.**

வினா 461—திரு. எஸ். ஜெ. இராமசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78ஆம் ஆண்டுகளில் மாவட்டந்தோறும் கூட்டுறவு விவசாய வங்கி கூட்டுறவு நிலவள வங்கி ஆகியவைகள் சாகுபடிக்கென குறுகியகால கடனாக எத்தனை விவசாயிகளுக்கு எவ்வளவு தொகை கடனாக வழங்கியுள்ளன? மாவட்ட வாரியாக ?

(ஆ) இதற்கு வட்டி விகிதங்கள் குறைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு?

விடை—

(அ) அவையில் ஓர் அறிக்கை* தனியே வைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு நிலவள வங்கிகளால் சாகுபடிக்கான குறுகியகாலக் கடன்கள் வழங்கப்படுவதில்லை.

(ஆ) ஆம்.

(இ) வட்டி விகிதம் 12.6 விழுக்காடிலிருந்து, சிறு விவசாயிகளுக்கு 10.5 விழுக்காடாகவும் மற்றவர்களுக்கு 12 விழுக்காடாகவும் 11-5-1978 முதல் குறைக்கப்பட்டுள்ளது.

* [479—480-ம் பக்கங்களில் இணைப்பு XVI ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

## கிராம விவசாயக் கூட்டுறவு கடன் சங்கங்களில் வழங்கப் பெற்ற நகைக் கடன்கள்

வினா 462 — திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கியின் தலைமையில் இயங்கி வருகின்ற கிராம விவசாய கூட்டுறவு கடன் சங்கங்களில் எத்தனை சங்கங்களில் நகைக் கடன்கள் கொடுக்கப் பட்டு வருகின்றன ?

(ஆ) அவை குறித்த விவரம் என்ன ?

விடை—(அ) கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கியின் தலைமையில் இயங்கி வருகின்ற கிராம கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களில் 31-8-1978-ல் உள்ளபடி 60 சங்கங்கள் நகைக் கடன் வழங்கி வருகின்றன.

(ஆ) 1978-79 ஆம் ஆண்டில் (1-4-1978 முதல் 31-8-1978 முடிய) 7,997 உறுப்பினர்களுக்கு ரூபாய் 80.13 இலட்சம் அளவுக்கு நகைக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

## நொச்சி ஓடைப்பட்டியில் துப்பாக்கி சூடு

வினா 463—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ந் தேதி மதுரை மாவட்டம், நொச்சி ஓடைப்பட்டி பகுதியில் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதில் உயிரிழந்தவர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) நல்லமநாயக்கன்பட்டியைச் சேர்ந்த ஆரோக்கியம் பிள்ளை என்பவர் உயிரிழந்தார்.

## மீன்பிடி படகுகள் வழங்கல்

வினா 464—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு [illegible] துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977-78 ஆம் ஆண்டில், மீனவர்களுக்கு அரசு வழங்கிய மீன்பிடிப்படகுகள் எத்தனை ? மாவட்ட வாரியாக ?





விடை — 1977-78 ஆம் ஆண்டில் மீனவர்களுக்கு தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் வழங்கிய மொத்த மீன் விசைப் படகுகள் 167, அதன் விவரம் பின் வருமாறு :—

| மாவட்டம். | 30' | 32' | மொத்தம். |
|---|---|---|---|
| சென்னை .. .. .. | 14 | 16 | 30 |
| செங்கற்பட்டு .. .. | 6 | 8 | 14 |
| தென் ஆற்காடு .. .. | 27 | 11 | 38 |
| தஞ்சாவூர் .. .. .. | 8 | 2 | 10 |
| இராமநாதபுரம் .. .. | 1 | 13 | 14 |
| திருநெல்வேலி .. .. | 2 | 8 | 10 |
| கன்னியாகுமரி .. .. | 38 | 13 | 51 |
| மொத்தம் .. | 96 | 71 | 167 |

## மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை

வினா 465—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு 1977-78-ம் ஆண்டில் அரசு அளித்த உதவித் தொகை யாது ? மாவட்ட வாரியாக?

விடை—

தமிழ்நாட்டில் மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக 1977-78-ம் ஆண்டில் மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு கருவிகள் வாங்க ரூ. 1,78,750 மானியமாகவும், ரூபாய் 1,78,750 முதலீட்டு செலவு கடனாகவும் (Capital Expenditure Loan) தொழிலினை அபிவிருத்தி செய்ய ரூபாய் 2,25,000 கடனாகவும் மற்றும் மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு ஷூலா விசைச் சக்கரங்களை வாங்க ரூபாய் 46,800 மானியமாகவும், ரூபாய் 46,800 கடனாகவும் வழங்கப்பட்டது. அரசிடமிருந்து மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு நேரடியாக உதவித் தொகை வழங்கப் படவில்லை.

[1979 பிப்ரவரி 12

2. மேற்குறிப்பிட்ட நிதி உதவி கீழ்க்கண்ட கதர், கிராமத் தொழில் வளர்ச்சி மாவட்டங்களிலுள்ள மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது:—

| வரிசை எண். | கிராமத் தொழில் வளர்ச்சி மாவட்டத்தின் பெயர். | மானியம். | முதலீட்டுச் செலவு கடன். | மூலதனக் கடன். |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. | ரூ. |
| **1.** | **தனிப்பட்ட மட்பாண்ட தொழிலாளர்கள்—** | | | |
| 1 | மதுரை .. .. | .. | .. | 13,000 |
| 2 | பரமக்குடி .. .. | 5,850 | 5,850 | 9,000 |
| 3 | ஸ்ரீவில்லிபுத்தூர் .. | 10,400 | 10,400 | 39,000 |
| 4 | கோவில்பட்டி .. | .. | .. | 13,000 |
| 5 | கோயம்புத்தூர் .. | 11,700 | 11,700 | .. |
| 6 | திருப்பூர் .. .. | 22,600 | 22,600 | .. |
| 7 | சேலம் .. .. | 3,250 | 3,250 | 5,000 |
| 8 | ஈரோடு .. .. | 27,950 | 27,950 | .. |
| 9 | கடலூர் .. .. | 9,900 | 9,900 | 25,000 |
| 10 | கரூர் .. .. | 3,900 | 3,900 | 6,000 |
| 11 | புதுக்கோட்டை .. | 14,950 | 14,950 | 10,000 |
| 12 | திருவாரூர் .. .. | 17,550 | 17,550 | 27,000 |
| 13 | தஞ்சாவூர் .. | 50,700 | 50,700 | 78,000 |
| | மொத்தம் .. | 1,78,750 | 1,78,750 | 2,25,000 |
| **2.** | **ஷூலா விசைச் சக்கரங்கள்—** | | | |
| 1 | திருநெல்வேலி .. | 18,000 | 18,000 | .. |
| 2 | பரமக்குடி .. .. | 14,400 | 14,400 | .. |
| 3 | திருவாரூர் .. .. | 4,500 | 4,500 | .. |
| 4 | கோவில்பட்டி .. | 8,100 | 8,100 | .. |
| 5 | திண்டுக்கல் .. | 1,800 | 1,800 | .. |
| | மொத்தம் .. | 46,800 | 46,800 | .. |



1979 பிப்ரவரி 12]

## சென்னையில் குடிசைப்பகுதி மாற்று வாரியப் பணிகள்

வினா 466— திரு. என். சிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78ஆம் ஆண்டில் சென்னையில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் மொத்தம் எத்தனை ?

(ஆ) எந்தெந்த பகுதிகளில் ?

விடை—

(அ) 1977–78ஆம் ஆண்டில் சென்னையில் குடிசை பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள் மொத்தம் 1,048.

(ஆ) அவை கட்டப்பட்டுள்ள பகுதிகளின் விவரங்கள் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1 | வேம்புலி அம்மன் கோயில் திட்டம் .. | 144 |
| 2 | மாம்பலம் ஏரிக்கரை .. .. .. | 208 |
| 3 | ஜாபர்கான்பேட்டை நிலை—1 .. .. .. | 120 |
| 4 | ஜாபர்கான்பேட்டை நிலை—2 .. .. .. | 32 |
| 5 | குயில்தோட்டம் .. .. .. .. | 64 |
| 6 | பப்புமஸ்தான் தர்கா .. .. .. .. | 168 |
| 7 | ராதாகிருஷ்ணபுரம் .. .. .. .. | 24 |
| 8 | வாலஸ் தோட்டம் .. .. .. .. | 8 |
| 9 | ராமகாமத்புரம் .. .. .. .. | 32 |
| 10 | சைவ முத்தைய முதலி தெரு .. .. .. | 40 |
| 11 | சத்தியவாணிமுத்து நகர் .. .. .. | 80 |
| 12 | பல்லக்குமான்யம் .. .. .. .. | 64 |
| 13 | விசாலாட்சி அம்மாள் தோட்டம் .. .. | 64 |
| | | 1,048 |

## கணேசபுரம் பள்ளிக் கட்டடம்.

வினா 467—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறைஅமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதியிலுள்ள குறிச்சி கிராமம் கணேசபுரத்தில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டிடத்தின் மதிப்பு என்ன ?

(ஆ) எப்போது கட்டி முடிக்கப்பட்டது ?

[1979 பிப்ரவரி 12

(இ) வகுப்புகள் எப்போது இக்கட்டடித்திற்கு மாற்றப் படும்?

(ஈ) பழைய கட்டிடத்திற்கான வாடகை எவ்வளவு?

விடை—

(அ) ரூ. 29,302.

(ஆ) 18—5—1978.

(இ) 1—9—1978 முதல் வகுப்புகள் நடைபெறுகின்றன.

(ஈ) ரூ. 100.

பெட்டமுக்காளம் பகுதியில் காப்பித்தோட்டம் அமைத்தல்.

வினா 468—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெட்டமுக்காளம் பகுதியில் அரசு நிலத்தில் 'காப்பித் தோட்டம்' அமைக்க ஏதேனும் கோரிக்கைகள் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

எம்.சி. ராஜா விடுதியில் சேர்க்கப்பட்ட பின்தங்கிய வகுப்பு மாணவர்கள்.

வினா 469—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எம். சி. ராஜா விடுதியில் இவ்வாண்டு 1977–78 பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர் சேர்க்கப்பட்டார்கள்?

விடை—

1977–78-ம் ஆண்டில் எம்.சி. ராஜா விடுதியில் பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் 60 பேர் சேர்க்கப்பட்டார்கள்.



1979 பிப்ரவரி 12]

பூதலப்புரத்தில் புதிய கண்மாய் அமைப்புத் திட்டம்.

வினா 470—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியில் பூதலப்புரம், புதிய கண்மாய் அமைப்புத் திட்டம் அரசு ஒப்புதலுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இத்திட்டம் நிறைவேற்றப் படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

தொழிற் பயிற்சி நிலையங்கள்.

வினா 471—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி, இராஜபாளையம், தாம்பரம், திண்டிவனம் ஆகிய இடங்களில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் நிறுவும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

இராமேஸ்வரம்—தூத்துக்குடி சாலை

வினா 472—திரு. டி. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தூத்துக்குடி சாலை என்ற கடலோர (இராமேஸ்வரம்-தூத்துக்குடி) சாலையான மங்கம்மா சாலையை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

விடை —

இந்த சாலை சென்னையிலிருந்து கன்னியாகுமரி செல்லும் கிழக்கு கடற்கரை சாலையின் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். இத் திட்டத்தை மத்திய திட்டங்களில் ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ளுமாறு இம்மாநில அரசு மத்திய அரசுக்கு பல தருணங்களில் பரிந்துரை செய்தும் மத்திய அரசு இத்திட்டத்திற்கு இதுகாறும் ஒப்புதல் அளிக்கவில்லை.

## செஞ்சி, திண்டிவனம் வட்டங்களில் குடிநீர் வழங்கல்.

வினா 473 :— திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி, திண்டிவனம் ஆகிய வட்டங்களில் 1977–78-ல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க எத்தனை கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன ?

(ஆ) அவைகள் எப்போது நிறைவேற்றப்படும்?

விடை —

(அ) 1977–78 ஆம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தேர்ந்தெடுத்த கிராமங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| | கிராமங்களின் எண்ணிக்கை. | கைப்பம்பு போடப்படும் கிராமங்கள். | மின் விசைப் பம்புகள் போடப் படும் கிராமங்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| செஞ்சி வட்டம் | 35 | 18 | 17 |
| திண்டிவனம் வட்டம். | 53 | 33 | 20 |
| மொத்தம் .. | 88 | 51 | 37 |

(ஆ) செஞ்சி வட்டத்தில் 9 கைப்பம்புகள் போடும் திட்டங்களும், திண்டிவனம் வட்டத்தில் 16 கைப்பம்புகள் போடும் திட்டங்களும் முடிக்கப்பட்டு விட்டன. எஞ்சியுள்ள கைப்பம்பு திட்டங்கள் 31—3—1979-க்குள் முடிக்கப்பட்டு விடும் எல்லா மின் விசைப் பம்பு திட்டங்களும் 30—6—1979-க்குள் முடிக்கப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.





## திண்டிவனம்—பெங்களூர் விரைவுப் பேருந்துப் பணி

வினா 474— திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திண்டிவனத்திலிருந்து செஞ்சி, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, மத்தூர் வழியாக பெங்களூருக்கு விரைவு பேருந்து விட அரசிடம் திட்டமுள்ளதா ?

விடை —

இல்லை.

## இராமநாதபுரத்தில் சுற்றுலா மாளிகை.

வினா 475— திரு. டி. இராமசாமி : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பா :—

இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரத்தைச் சுற்றி பல முக்கிய ஸ்தலங்கள் உள்ளதால் இராமநாதபுரத்தில் சுற்றுலா மாளிகை ஒன்று அமைக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

விடை —

தற்பொழுது இல்லை. இராமநாதபுரம் மாவட்டத்தின் முக்கிய ஸ்தலமான இராமேசுவரத்தில் தற்சமயம் ஒரு சுற்றுலா மாளிகை இயங்கி வருகிறது.

## திருவான்மியூர் அரசினர் தொழிற்பயிற்சி நிறுவனம்.

வினா 476— திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருவான்மியூர் தொழிற்பேட்டையில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிறுவனத்தில் புதிய தொழிற் பிரிவுகள் துவக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ? என்ன பிரிவுகள்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## Buffalo Farm at Hosur.

Q. 477—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister fo Social Welfare be pleased to state—

(a) whether any Buffalo farm with Australian Assistance is to be set up in Hosur in this State; and

(b) If so, the details thereof?

A. :—

(a) There is no proposal to set up a Buffalo Farm with Australian Assistance in Hosur of this State;

(b) Does not arise.

## Use of "Celcrete" in neighbouring State.

Q. 478:—THIRU N. KITTAPPA: Will the Hon. Minister for Labour be pleased to state whether the Tamil Nadu Housing Board has been negotiating with the State Governments of Andhra Pradesh and Karnataka for the use of Celcrete produced by its Units in recent times?

A.—

1. The Tamil Nadu Housing Board has taken steps to popularise the use of Celcrete in the neighbouring States of Andhra Pradesh and Karnataka. It has addressed the various Government Departments of Andhra Pradesh to place orders for Celcrete to be used in their construction works and their reply is awaited.

2. After ascertaining the salient features of Celcrete, the Government of Karnataka has purchased Celcrete worth Rs. 29,042 for using them in their Kudremukh Mining Project. Certain private contractors in Karnataka State have also purchased Celcrete worth Rs. 49,278.



## Supply of milk to non-card holders at Chitrakulam

Q. 479—THIRU N. KITTAPPA: Will the Hon. Minister for Rural Industries be pleased to state—

(a) whether Advocates have complained to the Milk Commissioner at Madras about the supply of milk to non-card holders in preference to card holders at the booths at Chitrakulam area operated by the Dairy Development Corporation about August, 1978; and

(b) if so, the action taken thereon?

A.—

(a) Yes.

One Thiru R.K. Balasubramaniam, B.A.B.L., Advocate, has complained about non-card holders standing in the queue and drawing the milk preventing the bona fide card holders from taking milk from the automatic milk vandina Machine at Chitrakulam in Mylapore.

(b) The complaint was investigated in detail. After investigations it is observed that the card holders, when they want to get milk over and above their quota, will also have to obtain, their requirement by cash sales by standing in the same queue. This practice cannot be avoided. It is not possible to prevent other customers from drawing their requirements after meeting the entire demand of card holders. It is also not possible to open separate outlets for consumers purchasing milk against cards and those who are purchasing for cash. This has also been explained to Thiru R.K. Balasubramaniam by the Marketing Staff.

## Heavy Water Plant at Tuticorin.

Q. 480—THIRU N. KITTAPPA: Will the Hon. the Chief Minister be plased to state—

(a) whether any Heavy Water Plant has been commissioned at Tuticorin recently; and

(b) if so, the details there of ?

A.—

(a) and (b) The Department of Atomic Energy, Bombay (Government of India) has set up a heavy water plant adjacent to Southern Petrochemical Industries Corporation Limited in Tuticorin using the lean gas from the Southern Petrochemical Industries Corporation Limited. The installed capacity of the plant is 72 M.T. per annum. The heavy water is used as a moderator in Atomic Power Stations.

காயாம்பட்டு கிராமத்தில் ஏற்பட்ட தீவிபத்து.

வினா 481 — திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 31—7—1978-ல் வட ஆற்காடு மாவட்டம், செங்கம் அருகிலுள்ள காயாம்பட்டு என்ற கிராமத்தில் சொத்துக்கள் சேதமடையும் அளவில் தீ விபத்து ஏற்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரங்கள் என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 28—7—1978 அன்று வடஆற்காடு மாவட்டம் செங்கம் வட்டம், காயாம்பட்டு என்ற கிராமத்தில் தற்செயலாக ஏற்பட்ட தீ விபத்தினால் 96 குடிசைகள் தீக்கிரையாகின. இதனால் ரூபாய் 1.53 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் சேதமடைந்தன. உயிர்ச் சேதம் எதுவுமில்லை. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மொத்தம் ரூ. 8,450 மானியமாக அளிக்கப்பட்டது.

வலங்கைமான் தொகுதியில் பால் சேகரிப்பு நிலையங்கள்.

வினா 482—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு கிராம தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டம் வலங்கைமான் தொகுதியில் பால் வள வளர்ச்சி நிறுவனத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள பால் சேகரிப்பு சங்கங்கள் எத்தனை ?

(ஆ) இன்னும் எத்தனை சங்கங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன ?

விடை—

(அ) தஞ்சை மாவட்டத்தில் வலங்கைமான் சட்டமன்றத் தொகுதியில் கீழ்க்கண்ட இரு கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள் உள்ளன :—

1. பம்பப்படையூர் கூட்டுறவு பால் விநியோக சங்கம்.
2. வளையமாபுரம் கூட்டுறவு பால் விநியோக சங்கம்.

(ஆ) பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை அமைக்கத் தக்க சூழ்நிலையும், தகுதியும் இருந்தால் புதியதாக சங்கங்களை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



பரம்பிக்குளம் ஆளியார் ஆயக்கட்டுகளுக்கு பாசன வரி

வினா 483—திரு. கு. ரமணி: மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் பி. ஏ. பி. பாசன ஆயக்கட்டு பிரதேசங்களில் குண்டடம் பஞ்சாயத்து யூனியனுக்கும், காங்கேயம் யூனியனுக்கும் இடையில் நீர்ப்பாசன வரிகளில் வித்தியாசங்களுண்டா ?

(ஆ) உண்டென்றால் அவை பற்றிய விவரங்கள், அதற்கான காரணங்கள் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியில் புதிய சாலைகள்.

வினா 484— திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970 முதல் 1977 வரை ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு செஸ் நிதியாக ஆண்டுதோறும் எவ்வளவு ரூபாய் கொடுத்துள்ளது ?

(ஆ) அதைக்கொண்டு என்னென்ன அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டன ?

(இ) அதன் விவரம் என்ன ?

விடை—

(அ)

| கரும்பு ஆண்டு. | செஸ் செலுத்திய தொகை (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 1970–71 | 11.02 |
| 1971–72 | 12.78 |
| 1972–73 | 11.04 |
| 1973–74 | 17.89 |
| 1974–75 | 15.05 |
| 1975–76 | 7.72 |
| 1976–77 | 12.71 |

(ஆ) மற்றும் (இ) கரும்பு மேல்வரி நிதியிலிருந்து கரும்பு அபிவிருத்தி, ஆராய்ச்சி மற்றும் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டங்களுக்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்கின்றது. மேலும் புதிய சர்க்கரை ஆலைகள் தொடங்குவதற்கான பங்கு மூலதனமாகவும் மேற்படி நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 1972–73 மற்றும் 1975–76-ம் ஆண்டுகளில் ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியில் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ. 47.60 லட்ச மதிப்பீட்டில் 11 சாலைப் பணிகளுக்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இப்பகுதியில் கடந்த 5 ஆண்டுகளில் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட தொகை விபரம் வருமாறு :—

| கரும்பு ஆண்டு. | செலவு செய்த தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1973–74 .. .. .. | 3.96 |
| 1974–75 .. .. .. | 2.53 |
| 1975–76 .. .. .. | 4.57 |
| 1976–77 .. .. .. | 4.30 |
| 1977–78 .. .. .. | 2.64 |

### தஞ்சை மாவட்டத்தில் குறுவை பயிரிடல்.

வினா 485 — திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை, நீர்ப்பாசனத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1388-ம் பசலியில் தஞ்சை மாவட்டத்தில் குறுவை பயிரிட்டுள்ள பரப்பளவு எவ்வளவு ?

(ஆ) குறுவைப் பட்டத்தில் உபயோகித்த விதைகள் எவை?

விடை—

(அ) 1388-ம் பசலியில் தஞ்சை மாவட்டத்தில் குறுவை நெல் 1.48 லட்சம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டது.

(ஆ) குறுவைப் பட்டத்தில் அமோக விளைச்சல் தரும் ஏ. டி. டீ. 31, ஏ.டி.டீ. 27, கோ. 33, ஐ. ஆர். 20, ஐ. இ. டி. 1722 நெல் விதைகளும் மற்றும் உள்ளூர் ரகங்களும் பயன்படுத்தப்பட்டன.

### *Stri- Sadhana at Mylapore.*

*Q.* 486—THIRU. N. KITTAPPA: Will the Honourable Minister for Social Welfare be pleased to state the total number of inmates kept in the Stri-Sadana at Katcheri Road, Mylapore, Madras, at present?



A.—

69 (Adult—68, Child—1).

### 'மனோரா' பகுதியினை சுற்றுலா மையமாக்கல்.

வினா 487 — திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணித் தொகுதியிலுள்ள "மனோரா"வை சுற்றுலா இடமாக அறிவிக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

விடை

தற்போது இல்லை.

### திருச்சிற்றம்பலத்தில் சார் பதிவாளர் அலுவலகம்.

வினா 488 — திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணித் தொகுதி திருச்சிற்றம்பலத்தில் சார் பதிவாளர் அலுவலகம் தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

விடை—

இது பதிவுத்துறையின் பரிசீலனையில் உள்ளது.

### மதுரை மாவட்ட அரிசன மக்களுக்கு வீடுகள்.

வினா 489 — திரு. என். பழனிவேல் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ல் மதுரை மாவட்டத்தில் அரிசன மக்களிடம் இருந்து வீடுகள் கட்டித் தரக் கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை ?

(ஆ) அதில் கட்டித் தரப்பட்ட வீடுகள் எத்தனை ?

விடை—

(அ) 1977–78-ல் மதுரை மாவட்டத்தில் அரிசன மக்களிடமிருந்து வீடுகள் கட்டித் தரக் கோரி வந்துள்ள மனுக்களின் எண்ணிக்கை 197.

(ஆ) அதில் கட்டித்தரப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 107.

சாராய சம்பந்தப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.

வினா 490—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் 1—1—1978 முதல் 1—9—1978 வரை பதிவான சாராய சம்பந்தமான மொத்த வழக்குகள் எத்தனை ?

விடை—

1—1—1978 முதல் 30—9—1978 முடிய சாராய சம்பந்தமான மொத்த வழக்குகள் 3,17,457.

வினா 491—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சென்னை நகரில் 1—1—1978 முதல் 1—9—1978 வரை பதிவான சாராய வழக்குகள் (காய்ச்சியதாக, வைத்திருந்ததாக, குடித்ததாக) எத்தனை ?

விடை—

1. காய்ச்சியதாக—இல்லை.
2. வைத்திருந்ததாக— 17,290
3. குடித்ததாக— 7,635
4. இதர வழக்குகள்— 3,354

28,279

புறநகரின் பகுதியான செங்கல்பட்டு மாவட்டத்தில் (Belt Area) 540 வழக்குகள் காய்ச்சியதாக நகர மதுவிலக்கு பிரிவினரால் பதிவு செய்யப்பட்டுள்ளது.



நான்குனேரியில் கூடுதல் துணை மாஜிஸ்டிரேட் அலுவலகம்.

வினா 492—திரு. யா.சை.மு. யூசுப் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நான்குனேரியில் தற்சமயம் உள்ள சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு மேற்கொண்டு கூடுதல் துணை மாஜிஸ்டிரேட் (Additional Sub-Magistrate) நியமனம் செய்ய அரசு தீர்மானித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போதுமுதல் நடைமுறைப்படுத்தப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

நார்த்தாம்பூண்டியில் புதிய கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம்.

வினா 493—திரு. பெ.சு. திருவேங்கடம் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா .—

(அ) கலசபாக்கம் தொகுதியில் உள்ள நார்த்தாம்பூண்டி கிராமத்தில் புதிய கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம் துவக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு கட்டிட வசதி செய்து தர அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

விடை—

(அ) ஆம், 14–8–1978 அன்று சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) கட்டிடம் கட்டுவதற்கான கோரிக்கை ஏதும் அரசுக்கு வரவில்லை.

வட ஆற்காடு மாவட்டத்தில் மினி பஸ் விடும் திட்டம்.

வினா 494—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் மினிபஸ் விடும் திட்டத்தின் கீழ், மினிபஸ் விடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரமென்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கீழ்க்கண்ட 11 வழித் தடங்களில் மினிபஸ் விடப் பட்டுள்ளது:—

1. லாலாபேட்டை—சர்வந்தாங்கல் (மொத்த தூரம் 24கி. மீட்டர்), (வழி) சிப்காட், ராணிப்பேட்டை, ஆர்க்காடு மற்றும் சாத்தூர்.

2. ஆர்க்காடு—மேலக்குப்பம் (மொத்த தூரம் 25 கி. மீட்டர்), (வழி) தாழனூர், ஆயிலம், அருங்குன்றம், விஷாரம் மற்றும் பூட்டுத்தாக்கு.

3. புதுப்பாடி—மோரணம் (மொத்த தூரம் 19 கி. மீட்டர்), (வழி) சக்கரமல்லூர், புதேரி, வளவனூர் மற்றும் சத்துவந் தாங்கல்.

4. ராண்டம் ரோட் ஜங்சன்—மாம்பாக்கம் (மொத்த தூரம் 27 கி. மீட்டர்), (வழி) மேச்சேரி, கலவை மற்றும் பாலி.

5. ஆர்க்காடு—எஸ். வி. நகரம் (மொத்த தூரம் 34 கி. மீட்டர்) (வழி) திமிரி, பளயனூர், வளயத்தூர் மற்றும் சியம்பாடி.

6. கலவை—செய்யார் (மொத்த தூரம் 21 கி. மீட்டர்), (வழி) சிட்டந்தாங்கல், பாலி, தோணிமேடு.

7. திமிரி—மாம்பாக்கம் (மொத்த தூரம் 25 கி. மீட்டர்), (வழி) குணியனூர், குட்டியம், பெண்ணகர்.

8. நாராயணபுரம்-ஆம்பூர் (மொத்த தூரம் 42 கி.மீட்டர்), (வழி) அலசந்தாபுரம், தம்மபெட், வடக்குப்பட்டு, ஏகலசபுரம், ஐப்ரசங்கராபுரம், சிக்கனாங்குப்பம், அழிஞ்சிகுளம், தும்பேரி, பாடி, வாணியம்பாடி, உதயேந்திரம், வடசேரி, மேலசாணன் குப்பம், தேவளாபுரம் மற்றும் ஆம்பூர்.

9. ஆலங்காயம்—வாணியம்பாடி (மொத்த தூரம் 22 கி. மீட்டர்), (வழி) நிம்மியம்பட்டு முல்லை, பெரியகுரும்பத்தெரு, [illegible]புரம், பாலப்பனூர், வள்ளிப்பட்டு, கலவாய்புதூர் மற்றும் வாணியம்பாடி.



10. ஆலங்காயம்—நெல்லிவாசல்நாடு (மொத்த தூரம் 64 கி. மீட்டர்), (வழி) ஆண்டியப்பனூர், புதூர்நாடு, நெல்லிவாசல் நாடு.

11. பள்ளிகொண்டா-ஒடுகத்தூர் (மொத்த தூரம் 19.5 கி. மீட்டர்), (வழி) அகரம்சேரி, பள்ளிகுப்பம், அக்ரகாரம், தேளப்பள்ளி, அகரம், ஜி.ஆர். பாளையம் மற்றும் வேப்பன் குப்பம்.

## *Admission of students in Tamil Nadu Film Institute.*

*Q.*—495 THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Information and Religious Endowments be pleased to state—

(*a*) whether there was rush for admission into the Tamil Nadu Film Institute, during the 1978–79 academic year; and

(*b*) if so, the details of the applications received for the various courses during the last three academic years?

*A.*—

(*a*) Yes Sir.

(*b*) Statement *is placed on the Table of the House separately.

## *Farm Science Centres.*

*Q.*496.— THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state:

(*a*) whether the Tamil Nadu Agricultural University is to open Farm Science Centres in this State in collaboration with the Indian Council of Agricultural Research, New Delhi; and

(*b*) if so, the details thereof?

விடை—

(அ) மற்றும் (ஆ) : ஆறாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் கீழ்க்கண்ட மூன்று இடங்களில் பண்ணை அறிவியல் நிலையம் அமைப்பதற்காக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தை அணுகியுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | காவேரிபட்டிணம் | தர்மபுரி மாவட்டம் |
| 2. | கோவில்பட்டி | திருநெல்வேலி மாவட்டம் |
| 3. | தஞ்சாவூர் மாவட்டத்தில் தகுதியான ஒரு இடம். | |

*[481-482 பக்கங்களில் இணைப்பு XVIIஆக அச்சிடப்பெற்றுள்ளது]

[1979 பிப்ரவரி 12

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

## குறுவை சாகுபடிக்கு வழங்கப்பெற்ற கூட்டுறவுக் கடன்கள்.

வினா 497—திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கென தஞ்சை, குடந்தை மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் வழங்க அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) விவசாயிகளுக்கு குறுவை சாகுபடிக்கென இதுவரை வழங்கிய தொகை யாது?

விடை —(அ) 1978-79ஆம் ஆண்டுக்கு குறுகிய காலக் கடனுக்கு திட்டமிடப்பட்ட தொகை, தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி ரூபாய் 900 இலட்சமும், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி ரூபாய் 1,625 இலட்சமுமாகும். இதில், 31-10-1978 வரை தஞ்சாவூர், கும்பகோணம் வங்கிகளால் வழங்கப்பட்ட தொகை முறையே ரூபாய் 8,08.20 இலட்சமும், ரூபாய் 9,40.55 இலட்சமுமாகும்.

(ஆ) இவற்றுள், குறுவைச் சாகுபடிக்கென 31-10-78 வரை வழங்கப்பட்ட தொகை :—

தஞ்சாவூர் வங்கி—ரூபாய் 1,40.16 இலட்சம்.

கும்பகோணம் வங்கி—ரூபாய் 3,75.98 இலட்சம்.

## தஞ்சை மாவட்டத்தில் தாழ்த்தப்பட்டோருக்கு வீடுகள்.

வினா 498—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1976-77, 1977-78 ஆம் ஆண்டுகளில் முறையே தஞ்சை மாவட்டத்தில் தாழ்த்தப்பட்டோருக்கு அரசு இலவசமாகக் கட்டித்தந்த வீடுகள் எத்தனை? தாலுகா வாரியாக ?



979 பிப்ரவரி 12]

விடை தஞ்சை மாவட்டத்தில் தாழ்த்தப்பட்டோருக்கு 1976-77, 1977-1978 ஆம் ஆண்டுகளில் அரசு கட்டித்தந்த வீடுகளின் விபரம் பின்வருமாறு—

| தொடர் எண்ணும், வட்டத்தின் பெயரும். | 1976-77ஆம் ஆண்டில். | 1977-78ஆம் ஆண்டில். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 தஞ்சாவூர் .. .. .. | 166 | 175 |
| 2 பட்டுக்கோட்டை .. .. | 50 | 53 |
| 3 ஒரத்தநாடு .. .. .. | 59 | .. |
| 4 திருவாரூர் .. .. .. | 87 | 44 |
| 5 நன்னிலம் .. .. .. | 41 | .. |
| 6 திருத்துறைப்பூண்டி .. .. | 77 | 50 |
| 7 மாயூரம் .. .. .. | 12 | 27 |
| 8 கும்பகோணம் .. .. | 4 | 20 |
| 9 பாபநாசம் .. .. .. | 1 | 47 |
| 0 சீர்காழி .. .. .. .. | 6 | .. |
| 1 மன்னார்குடி .. .. .. | .. | 9 |
| மொத்தம் .. | 503 | 425 |

## திருவில்லிப்புத்தூர் தொகுதியில் பழக்கன்றுகள் வைத்தல்.

வினா 499—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மை நீர்ப்பாசனத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில் இலந்தக்குளம் கிராமத்திலிருந்து சேத்தூர் வரையில் மேற்கு மலைத் தொடரின் அடிவாரத்தில் பழக்கன்று வைக்க திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில் அந்த திட்டம் எந்த அளவில் உள்ளது ?

விடை— (அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியைச் சேர்ந்த இலந்தைக்குளம் கிராமம் முதல் சேத்தூர் கிராமம் வரையுள்ள

பகுதி மேற்கு மலைத் தொடர் அபிவிருத்தி திட்டப் பகுதிக்கான அட்டவணையின் ஒரு பகுதியாக உள்ளது.

ஆனால், தற்போது மேற்கு மலைத் தொடர் அபிவிருத்தி திட்டம் கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் மட்டுமே செயல்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட கிராமங்கள் அமைந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது செயல்படவில்லை. எனவே, மேற்குறிப்பிட்ட இலந்தைகுளம் கிராமம் முதல் சேத்தூர் கிராமம் வரையுள்ள மலைத் தொடரின் அடிவாரத்தில் பழக் கன்றுகள் வைக்கத் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

## குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துக் கொள்வோருக்கு வெகுமதி.

**வினா 500—திரு. கு. ரமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்வோருக்கு கொடுக்கப்படும் வெகுமதித் தொகை அதிகப்படுத்தப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரங்கள் யாவை ?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினக்கள்–விடைகள் முடிவுற்றன.

**குறிப்பு:**—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 5. அறிவிப்புகள்.

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 6 (1)-ன் படி கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர் களாக (Panel of Chairmen) நான் நியமிக்கிறேன் :

1. திரு. எஸ். ஜே. இராமசாமி
2. திரு. பி.எச். பாண்டியன்
3. திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா
4. திரு. சோ. பாலகிருஷ்ணன்
5. திரு. ரா. உமாநாத்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (ஆ) அறிக்கைகள் குறித்து.

**திரு. என். சங்கரய்யா :** பேரவைத் தலைவர் அவர்களே, 1979ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9-ம் தேதியன்று என்னுடைய கட்சி உறுப்பினர்கள் திரு. ரா உமாநாத், திரு.கு. ரமணி, திரு. சி. கோவிந்தராஜன் ஆகியோர்களுடைய பெயரில் 55 (1)—வது விதியின்படி இந்த அரசின் தொழிலாளர்கள் பற்றிய கொள் கையை இந்தச் சட்டமன்றப் பேரவை நிராகரிக்கிறது என்ற தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். அது எப்போது பரி சீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது என்னுடைய ஆய் விலே இருக்கிறது. நாளைக்கு அதுபற்றி வரும்.

**திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவர் அவர்களே, என் கட்சியின் சார்பாக நம்பிக்கையில்லாத் தீர் மானம் ஒன்று நாங்கள் முன்மொழிய அனுமதி கோரியிருக் கிறோம். எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறிவிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் 55-வது விதியின்படி பேரவைத் தலைவரின் இசைவைப் பெற்ற பின்னர் தான் ஒரு தீர்மானத்தை அவைக்குக் கொண்டுவர வேண்டும். தீர்மானங்கள் என்னுடைய பரிசீலனையில் இருக்கின்றன. எனது முடிவை நாளைக்குத் தெரிவிக்கிறேன்.

[1979 பிப்ரவரி 12

திரு. ஜே. ஜேம்ஸ் : அதுபோன்று நானும் ஒரு தீர்மானம் கொடுத்து இருக்கிறேன், அது என்ன ஆயிற்று என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுவும் ஆய்விலே இருக்கிறது. நாளை அதுபற்றி அறிவிக்கப்படும்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின் விதி 42-இன் கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். எதிர்க்கட்சித் தலைவரைக் கொலை செய்கின்ற முயற்சி தொடர்ந்து நடைபெறுவதை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமருங்கள். இல்லாவிட்டால் பேசியது அனைத்தையும் நீக்க வேண்டி வரும்.

திரு. அ. ரகுமான்கான் : இதைக் காட்டிலும் வேறு முக்கியமான நிகழ்ச்சியில்லை. இதைப்பற்றிய தீர்மானத்தை எடுத்துக் கொண்டு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதித்ததற்குப் பின்னர்தான் நீங்கள் பேச வேண்டும்.

THIRU A. RAHMANKHAN : In rule 9-A(3), it has been stated that 'The discussion on the Address may be interrupted in the course of a sitting by an adjournment motion under rule 42.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 42-இன் கீழ் கொடுத்தது என்ன ஆயிற்று என்று கேட்க விரும்பினால் என்னுடைய சேம்பரிலே வந்து கேளுங்கள்.

[முற்பகல் 10·10]

திரு. அ. ரகுமான்கான் : விதிகளுக்குப் புறம்பாக நீங்கள் நடக்கிறீர்கள், அது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பரிசீலனை செய்த பிறகுதான் அதை அனுமதிக்க முடியும்.

திரு. அ. ரகுமான்கான் : எங்கள் உயிருக்குப் பாதுகாப்பு இல்லை, நாங்கள் வெளியே போனால் எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை.....



1979 பிப்ரவரி 12]

திரு. துரை முருகன் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசும்பொழுது நீங்கள் எழுப்புகிறீர்கள்.

திரு. துரைமுருகன் : I am trying to raise a point of order.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துரை முருகன், பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பியிருக்கிறார், தாங்கள் உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : - * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துரை முருகன் நீங்கள் உட்காருங்கள். துரை முருகன் பேசியவை அத்தனையையும் நீக்கிவிட உத்திரவிடுகிறேன்.

திரு. துரை முருகன் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க் கட்சித் தலைவர்கள் வரிசையிலே அமர்ந்திருக்கின்றவர்கள் இது முறைதானா என்று சொல்லவேண்டும். நான் இப்பொழுது ஒன்றும் பேசப்போவதில்லை. எதிர்க் கட்சித் தலைவர்கள் வரிசையிலே அமர்ந்திருக்கின்ற நீங்கள் இப்படிப்பட்ட மரபை அனுமதிக்கிறீர்களா? அதைப் பற்றி முதலில் முடிவு செய்து கொள்வோம். திரு. துரை முருகன் முதலிலிருந்து கடைசிவரையில் பேசிய பேச்சுக்கள் அத்தனையையும் நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : உங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்பதுதான் எங்கள் நோக்கமே தவிர நிச்சயமாக வேறொன்றும் இல்லை. நமது சட்டப் பேரவை விதிகளுக்கு உட்பட்டு, ஆளுநர் உரையின்மீது விவாதம் நடந்துகொண்டிருக்கும்பொழுது நாம் இப்படிப்பட்ட ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக்கொண்டு வரலாம் என்று நமது சட்டப்பேரவை விதி தெளிவாக இருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் வெளியே சென்றால் பாதுகாப்பு இல்லாத நிலை இருக்கிறது. சட்ட மன்றத்தில் உயிரோடு இருக்கிறோம், வெளியே சென்றால் இருப்போமா என்று சொல்ல முடியாத நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் எந்த விதியின் கீழ் பேசுகிறீர்கள்?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1979 பிப்ரவரி 12

திரு. துரை முருகன் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துரை முருகன், உங்களைப் போன்று பேசுவதற்கு நான் தயாராக இல்லை.

திரு. துரை முருகன் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சாதிக் பாட்சா அவர்கள் இப்படிப்பட்ட மரபை நியாயப்படுத்துகிறாரா? அது தெரிய வேண்டும், அவ்வளவுதான்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே ** ** *** இத்துடன் இந்தப் பிரச்னையை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து சாதிக் பாட்சா அவர்கள் பேசியதைக்கூட நீக்கிவிடும்படி கேட்டுக் கொள்கிறேன். நான் கேட்டுக்கொண்டது, அவர்கள் கட்சி உறுப்பினர்கள் நடந்துகொள்கின்ற முறை மரபுக்கு உகந்தது தானா என்பது.

திரு. துரை முருகன் : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவருக்குத்தானே பொறுப்பு தவிர, நீங்கள் யார் அதைக் கேட்க.....

திரு. துரை முருகன்: நீ யார் கேட்பதற்கு? ஓட்டு வாங்கி வந்தவன்; என்னைப் பார்த்து நீ யார்என்று கேட்பது ஒரு சபாநாயகருக்கு அழகா? (குறுக்கீடு) (கூச்சல்-குழப்பம்)நீ போ, போ...........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இந்த இடத்திலே இருப்பதால்தான் சபாநாயகராக இருக்கிறேன். தாங்கள் இங்கே வந்து உட்காருங்கள்.

(திருவாளர்கள் அ.ரகுமான்கான்,கோ. இளங்கோவன், செஞ்சி ந. இராமச்சந்திரன் ஆகியோர் எழுந்து நின்றனர் — கூச்சல் — குழப்பம்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1979 பிப்ரவரி 12]

திரு. துரை முருகன்: நீ யார் என்று கேட்கிறாயே, முறை தானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள்.

திரு சி. ஆறுமுகம்: நீங்கள் யார் என்று சபாநாயகர் கேட்கலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் யார்என்று கேட்ட பிறகுதான் நான்.............

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, தாங்கள் கோபப்படாமல் இருக்க வேண்டும். எங்களைப் பார்த்து நீங்கள் யார் என்று கேட்கவேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே எதிர்க் கட்சித் தலைவராக உட்கார்ந்து கொண்டு கேளுங்கள், எல்லா உறுப்பினர்களுக்கும் தான்தான் என்று துரைமுருகன் கேட்பது சரியல்ல, விதிகளுக்கு உட்பட்டு பேசவேண்டும்........

திரு. சி. ஆறுமுகம்: எங்களையெல்லாம் வழி நடத்திச் செல்ல வேண்டிய தாங்கள் தங்கள் வழியிலே இருந்து தவற வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களுடைய ஆலோசனைக்கு நன்றி.

(திருவாளர்கள் செஞ்சி ந. இராமச்சந்திரன், அ. ரகுமான்கான் ஆகியோர் நின்று கொண்டிருந்தவர்)

தாங்கள் உட்காருங்கள், கட்டுப்பாடோடு உட்காருங்கள். அவர் நிற்கிறார், தயவுசெய்து அதைத் தெரிந்துகொள்ளுங்கள். ஒருவர் நிற்கும்போது மற்றொருவர் பதில் சொல்லக்கூடாது—நிற்கக் கூடாது.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நிற்கிறேன். விதிகளைப் பாருங்கள்........

திரு. சி. ஆறுமுகம்: விதிகளைப் பற்றி தாங்கள் தெரிவிக்கும்போது, எங்களையும் மரியாதையாக நடத்தவேண்டும். நீங்கள் யார் என்று எங்களைப் பார்த்து கேட்டால், நாங்கள் வேறு எங்கு போய் முறையிடுவது?

[1979 பிப்ரவரி 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்தப் பிரச்னை வந்தாலும் அந்தக் கட்சியின் சார்பிலே விளக்கிச் சொல்வதற்கோ, ஒரு உறுப்பினர் சொல்வதை விளக்கிச் சொல்வதோ, இங்கே தலைவர்களாக இருப்பவர்களுடைய கடமை. ரகுமான்கான் அவர்கள் சொல்வதை நான் மறுக்கிறேன், ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்கின்ற உரிமை எனக்கு உண்டு. மீறிப் பேசினால் அந்தக் கட்சியின் வரிசையிலே இருக்கிற தலைவர்களைக் கேட்கிறேன். அவர்கள் மூலம் சுமுகம் ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. ஆனல் துரைமுருகன் தலைவருக்காகப் பேசுகிறேன் என்று பேசுகிறார். இங்கே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர் பேசட்டும் என்று சொன்னேன்.

திரு. சி. ஆறுமுகம்: நீங்கள் யார் என்று கேட்ட வார்த்தை சரிதானா? நாங்கள் செய்தோம் என்பதற்காக நீங்களும் செய்யக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானாவது நீங்கள் யாரென்று சொன்னேன். அவர், நீ யார் ஐயா, நீ யார், என்றெல்லாம்......

திரு. சி. ஆறுமுகம்: நாங்கள் செய்கின்ற குற்றத்தை நீங்கள் செய்யக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சொன்னது, நீ யார் ஐயா, நீ போ ஐயா, என்றெல்லாம்........

திரு. சி. ஆறுமுகம்: ஆனல், நீங்கள் அதே தவறைச் செய்யக்கூடாது.

[முற்பகல் 10.20]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே இங்கே, பிரச்சினை வந்துவிட்டதால் ஒரு விளக்கத்தை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன். ரகுமான்கான் அவர்கள் கொடுத்த அந்தப் பிரேரணையை அவையிலே பரிசீலிப்பதாக தாங்கள் சொன்னதாக நான் அறிகிறேன். ஆனல் அந்த அட்ஜார்ன்மெண்டு மோஷனை இங்கே வேண்டாம், சேம்பரிலே பரிசீலிக்கவேண்டும் என்று தாங்கள் சொன்னது சரியான விளக்கமாக இல்லை என்று நான் நினைக்கிறேன். எனவே இந்தப் பிரச்சினையை இதுடன் விட்டுவிட்டு வேறு பிரச்சினைக்குப் போகலாம்.

(திருவாளர்கள் சி. ஆறுமுகம், க. சுப்பு, அ. ரகுமான்கான் எழுந்து நின்றார்கள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அத்தோடு நிறுத்துங்கள். உங்கள் தலைவர் சொல்லிவிட்டார்.



1979 பிப்ரவரி 12]

திரு. மு. அம்பிகாபதி: நான்தான் முதலிலே பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினேன். செக்ஷன் 55லே மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் கொடுத்ததைப்போல நானும் கொடுத்தேன். அது இருக்கட்டும். செக்ஷன் 41லே 12—1—79 அன்று கொடுத்த கால் அட்டன்ஷன் மோஷனிலே தோழர் எஸ். ஜி. முருகையன் அவர்கள் படுகொலை செய்யப்பட்டதற்காகக் கொடுத்தேன். ஆனால் அதற்கு உங்கள் ரிப்ளையில் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால் அது அண்டர் இன்வெஸ்டிகேஷன், அதனால் அதைப்பற்றிப் பேசக்கூடாது என்று சொல்லி இருக்கிறீர்கள். பாயின்ட் என்னவென்றால், இதே சபையிலே தோழர் வெங்கடாசலம் கொலையைப்பற்றிவிவாதித்திருக்கிறோம். அதுவும் அண்டர் இன்வெஸ்டிகேஷன்தான், என்பதை வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன். இது ஒரு மோசமான கொலை .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எல்லோருடைய இதயத்தையும் தொடுகிறது. நீங்கள் அதை அறையிலே வந்து கேளுங்கள்.

அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்.

திரு. இரா. முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 9—2—1979ஆம் நாளன்று இந்த மாமன்றத்தில்........

திரு. க. சுப்பு: பாயின்ட் ஆப் ஆர்டர்.

திரு. சி. ஆறுமுகம்: பிரிவிலேஜ் கொடுத்தவர்களுக்குப் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அழகான கட்டுப்பாடு.

திரு. க. சுப்பு: பிரிவிலேஜை நீங்கள் சொல்லுகிறீர்களா அல்லது நான் சொல்லட்டுமா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் சுப்பு அவர்கள் முதலமைச்சர் மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார். அது என்னுடைய ஆய்வில் உள்ளது. பிறகு தெரிவிக்கப்படும்.

திரு. க. சுப்பு: பிரிவிலேஜ் என்ன என்று சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்புவுக்குத் தெரிகிறது. இன்றைக்குத்தான் கொடுத்தார்கள்.

<u>திரு. க. சுப்பு:</u> அறையிலே நீங்கள் கொடுத்த வாக்குறுதியை நான் சொல்லுகிறேன். உரிமைப் பிரச்சினை என்னவென்று அவையிலே சொல்லுகிறேன் என்று சொன்னீர்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்.</u> அது ஆய்விலே உள்ளது.

<u>திரு. ப. சந்திரன்:</u> தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். என்னுடைய இருக்கையிலே உள்ள இணைப்புகள் உடைந்திருக்கின்றன. அது எனக்கு மிகுந்த அசௌகரியத்தைத் தருகின்றது. அதை உடனே சீர்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## 6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்.

<u>திரு. இரா. முத்தையா:</u> பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணியம் மிக்க இந்த மன்றத்திலே மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய சிறப்பான உரைக்கு, பின்வரும் நன்றி உரையை அளிக்க வேண்டும் என்ற என்னுடைய தீர்மானத்தை தங்களின் அனுமதியோடு முன்மொழிகின்றேன்.

" 1979-ம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 9-ம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர் ".

<u>திரு. த. இராமசாமி:</u> தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்தையா அவர்கள் முன்மொழிந்துள்ள தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

## (5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொடுப்பது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு திருத்தங்கள் சட்டமன்ற பேரவைச் செயலாளரிடம் 1979-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13-ம் நாள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் கொடுக்கப்பட வேண்டும்.

---

* 412—414ம் பக்கங்களில் ஆளுநர் உரை இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது. அதன் தமிழாக்கம் 421—420 ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



## 6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்—தொடர்ச்சி.

<u>திரு. இரா. முத்தையா:</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னாலே முன்மொழியப்பட்டு இருக்கிற ஆளுநர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தின் மீது இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிற விதத்தில் ஆளுநர் உரையில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பல்வேறு சிறப்புக்களையும் இந்த ஆட்சியின் மாட்சிகள் சிலவற்றையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த அரசு மாசுமறுவற்ற எங்களுடைய தலைவர், மங்கா புகழ் படைத்த இதயக்கனி புரட்சித் தலைவர் தலைமையில் இயங்குகிறது என்பதை ஆளுநர் உரையில் ஒவ்வொரு வரியும் சுட்டிக் காட்டுகிறது என்பதை நான் இங்கே எடுத்துக் காண்பிக்க கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த நாட்டில் வறுமை, வாட்டம், ஏழ்மை இல்லாமை, ஏக்கம், துக்கம், துயரம், துன்பம் இவைகளைத்தான் தங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் சந்தித்து, நொந்து, சாம்பலாகி, ஏக்கப் பெருமூச்சே தங்களுடைய கதகதப்பான இதயத்திற்குச் சொந்தமாக, தரித்திர நாராயணர்களாக இருக்கும் ஏழை எளிய கிராமப்புற, குடிசை வாழ்மக்களுக்கு எல்லாம் ஓரளவிற்கு நம்பிக்கை வரவழைத்துக் கொடுக்கிற வகையில் இந்த ஆளுநர் உரை அமைந்து இருக்கிறது என்பதை நல்லெண்ணம் உடையவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அந்த நம்பிக்கைக்குக் காரணம், இன்றைக்கு ஒட்டுமொத்தமாக தமிழகத்திலே இருக்கிற ஆதாரவற்றவர்கள், உடல் உழைப்பால் வாழ்ந்து கொண்டு இருக்கிற ஏழை எளிய மக்கள் எல்லாம் யாரை தங்களுடைய விடிவெள்ளி என்று வணக்கத்தோடு ஏற்றுக் கொண்டு இருக்கிறார்களோ அந்தப் புரட்சித் தலைவர் அந்த ஏழை எளியவர்களின் வாழ்வுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் இந்த ஆளுநர் உரை அமைந்து இருக்கிறது என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்டிக் கொள்கிறேன். இந்த ஆட்சி நம்மை வாழ வைக்கும், வாழ வழி காட்டும், அதன் மூலம் நாம் தலை நிமிர்ந்து வாழ முடியும் என்ற அளவிற்கு நம்பிக்கை ஊட்டுகிற அளவில் இந்த ஆளுநர் உரையில் திட்டம் தீட்டப்பட்டு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. இரா. முத்தையா] [1979 பிப்ரவரி 12

இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது எதிர்க்கட்சியில் இருக்கிற நண்பர்களும் கலந்து கொண்டு பேசலாம். அவர்கள் வழக்கமான பாணியில், கடந்த இரண்டு முறை ஆளுநர் உரை மீது பேசுகிறபோது எந்த வகையில் குறிப்பிட்டார்களோ, அதே பாணியில் அதே பாட்டை திருப்பிப் பாடி இதிலே என்ன இருக்கிறது. ஒன்றுமே இல்லை, புரட்சி இல்லை, புதுமை இல்லை, அது இல்லை, இது இல்லை என்று அவர்களுடைய பாணியில் சுட்டிக்காட்டி இங்கே பேசுவார்கள். ஆனால் இந்த முறை இந்த ஆளுநர் உரையில் எடுத்து இயம்பி இருக்கிற காரியங்களைப்பற்றி நான் விளக்கமாகச் சொல்கிறபோது, இந்த அரசு செய்து இருக்கிற காரியங்களை இதற்கு முன்னாலே இருந்த அரசுகள், அதிலும் குறிப்பாக 1972-லே இருந்து 1976 சனவரி வரையில் ஒரு ஆட்சி இருந்ததே, அந்த ஆட்சி செய்த காரியங்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால்தான் இந்த ஆட்சி செய்து இருக்கிற காரியங்களின் சிறப்பு, மாட்சி தெரிய வரும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த ஆட்சி செய்து இருக்கிற சாதனைகளில் சிறப்பானதாக நான் முதலாவது சுட்டிக் காட்ட விரும்புவது, கடந்த நவம்பர்-டிசம்பர் மாதங்களில் இந்த நாட்டிலே ஏற்பட்ட கடுமையான புயல்-வெள்ளச்சேதம் பற்றியதாகும். அந்த நேரத்தில் இந்த அரசு எந்த அளவிற்கு நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையில் அவர்களுடைய பிரச்சினையில் ஒன்றி இருந்து இருக்கிறது என்பதை அந்த புயல்-வெள்ளச் சேதத்தின்போது, இந்த அரசு செய்த நிவாரணப் பணிகளின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

(முற்பகல் 10.30).

என்னுடைய பகுதியாகிய மதுரை மாவட்டம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. டிசம்பர் மாதம் 26-ந் தேதி எந்தக் காலத்திலேயும் காணாத அளவுக்கு ஒரு பெருவெள்ளம் அந்தப் பகுதியிலே சூழ்ந்து கொண்டது. டிசம்பர் 26-ந் தேதி இரவு ஒரு மணிக்கு வெள்ளம் வருகிறது. காலையிலே 5 அல்லது 5½ மணிக்கு எல்லாம் அந்தப் பகுதியிலே இருக்கிற பெரிய அதிகாரிகள் எல்லாம் மார்பளவு தண்ணீரில் வந்து நின்று, நிவாரணப் பணிகளைத் தொடங்கி, செய்து கொண்டிருக்கிறார்கள்., இதை எடுத்துச் சொல்லுகிறபோது இது என்ன பெரிய காரியம். நாங்களும் செய்யவில்லையா என்று கேட்பார்கள். செய்தார்கள். வீடு இடிந்ததா, வீடு தண்ணீரில் இழுத்துச் செல்லப்பட்டதா, பாதிக்கப்பட்டார்களா, இந்தா ஆளுக்கு 80 ரூபாய் என்ற பெயரில் இடையிலே இருக்கிற காரியக்காரர்கள் கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு இருந்தார்களே தவிர உண்மையிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைத்ததா என்றால் இல்லை.



1979 பிப்ரவரி 12] (திரு. இரா. முத்தையா)

ஆனால் இன்றைக்கு அந்த நிலை இல்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கெல்லாம், ஆளுக்கு 100 ரூபாய், 50 கிலோ நல்ல அரிசி, முதல் தரமான அரிசி, ஒரு புடவை அல்லது சேலை, ஒரு லுங்கி என்ற அளவுக்கு நிவாரணப் பணிகள் இந்த அரசு வழங்கி இருக்கிறது என்றால் இத்தகைய நிவாரணப் பணிகளை எங்களுடைய ஒப்பற்றத் தலைவர் புரட்சித் தலைவர் ஆட்சியிலே தான் வழங்கப்பட்டிருக்கிறது ; இதற்கு முன்னால் எந்தத் தலைவர் ஆண்ட காலத்திலும் இந்த அளவுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நான் முதலிலே சொன்ன ஒரு கருத்தை வைத்துக் கொண்டு நண்பர்கள் கொஞ்சம் ஆவேசமாகக்கூட எழுந்தார்கள். இப்போது என்ன நடந்தது என்று கேட்பார்கள். அதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு 100 ரூபாய் தரவேண்டுமென்று ஆணை பிறப்பித்த புரட்சித் தலைவர், அதை எப்படித் தரவேண்டுமென்று நாசூக்காக இன்னொரு உத்தரவையும் பிறப்பித்தார்கள். ஒவ்வொரு குடும்பத்திற்கும் முழு 100 ரூபாய் நோட்டாகக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். அதன் உள்ளர்த்தம் எங்களுக்கு புரியவில்லை. அதனால் நாங்கள் புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டோம். அண்ணே, முழு 100 ரூபாய் நோட்டாகக் கொடுக்கச் சொல்கிறீர்களே, அதைப் பார்த்தே அறியாத ஏழைக் குடும்பங்கள் அதை சில்லரையாக மாற்ற கஷ்டப்படுவார்களே என்று கூறினோம். அப்போதுதான் புரட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள். தம்பி , உங்களுக்கு அதன் உள் அர்த்தம் புரியாது. 100 ரூபாயாகக் கொடுக்கும்போது, அந்த மொத்த 100 ரூபாயும் அவர்கள் கைக்குப் போய்ச் சேரும். அதை 10, 10 ரூபாயாக மாற்றிக் கொடுக்கும்போது அல்லது சில்லரையாகக் கொடுக்கும் போது முன்னாலே நடந்த மாதிரி இடையிலே இருக்கிற காரியக்காரர்கள் கொஞ்சம் சுருட்டிக் கொள்ளும் வேலை நடந்துவிடும்; அது கூடாது, ஆகையால் ஒரே 100 ரூபாய் தாளைக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறேன் என்று சொன்னார்கள்.

அந்த அளவுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று உத்தரவு போட்ட புரட்சித் தலைவர் அவர்கள், அந்த நிவாரணம் ஒழுங்காகப் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போய் சேர வேண்டுமென்றும் கண்ணும் கருத்துமாக இருந்து செயலாற்றினார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

ஐம்பது கிலோ அரிசி, ஒருபுடவை, ஒரு லுங்கிஎன்று சொல்லும் போது சாதாரணமாக 50 கிலோ அரிசி என்பது ஒரு சாதாரண குடும்பத்திற்கு ஒரு மாத காலத்திற்கு உணவுத் தேவையைப்

பூர்த்தி செய்வதாக இருக்கிறது. அப்படி ஒரு மாதம் ஒரு குடும்பத்தை வாழ வைக்கிற பொறுப்பை ஒரு சர்க்கார் ஏற்றிருக்கிறது. இந்தமாதிரியாக எந்தக் காலத்தில் ஒரு மாத காலத்திற்கு ஒரு குடும்பத்திற்கு உணவு போடும் வேலையை ஒரு சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டுக் கேட்க நான் ஆசைப்படுகிறேன். 50 கிலோ அரிசியை தூக்க முடியாமல் தூக்கினார்கள். 3பேர் சேர்ந்து தூக்கினார்கள். முக்கால் மூட்டை அரிசியை முழுமையாகத் தூக்கி ஒவ்வொரு குடும்பத்திற்கும் அனுப்பி வைத்தது எங்களுடைய புரட்சித் தலைவர் ஆட்சிதான்.

நான் பாதிக்கப்பட்ட பகுதியில் இருக்கிறேன் என்ற காரணத்தால், இந்த நேரத்தில் ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் எதிர்ப்பார்க்காத அளவுக்கு உதவிகள் எங்களைத் தேடி வந்தன. பாதிக்கப்பட்ட மக்களே எதிர்பார்க்கவில்லை. அந்த அளவுக்கு ஒரு மாத காலத்திற்கு நடந்த கொடுமைகளை மறந்து, வாழ வழிகாட்டி இருக்கிறது இந்த சர்க்கார் என்பதை நன்றிப் பெருக்கோடு எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இன்றைக்கு ஆளுநர் உரையிலே குறிப்பிட்டுக்காட்டி இருக்கின்ற, கோதுமைக்கு கொடுப்பதைப் போல நியாயமான கொள்முதல் விலை நெல்லுக்கும் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கை சீரிய அளவில் நிலைமை உருவாகிட ஒரு முயற்சியாகும்.

மேலும் பினாமி நிலங்களையும் உச்சவரம்புக்குட்பட்ட நிலங்களையும் பறித்து வீடற்ற ஏழை எளியோருக்கு வீடு கட்ட மனைகள் வழங்கும் திட்டம், கிராமப்புறங்களில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டும் திட்டம், கிராமப்புறங்களில் ஊர் அமைப்புத் திட்டம் அதாவது வில்லேஜ் ப்ளானிங் ஸ்கீம், நிலமற்றோர் மற்றும் கல்வி வாசனையே இல்லாதவர்கள் ஆகியோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை, சிறு தொழில் வளர்ச்சி, பொருளாதாரத்தில் தாழ்ந்துவிடாமல் இருக்க பெரிய தொழில்களுக்கும் ஊக்கம், எல்லோருக்கும் வேலை வாய்ப்பு என்ற அடிப்படையில் வேலைவாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டம் இப்படிப்பட்ட பல திட்டங்களையும் ஆளுநர் உரையிலே பார்த்ததற்குப் பின்னாலும் இதை வரவேற்கின்ற வகையிலே ஒன்றுமே இல்லை என்று சொல்லத்தான் போகிறார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு விளங்கவைக்க வேண்டிய வகையில் என்ன வார்த்தைகள் இருக்கின்றன என்பதைக் கண்டறிய முடியவில்லை.

ஊர் அமைப்புத் திட்டம் என்கிற வில்லேஜ் ப்ளானிங் ஸ்கீம் என்பதை இன்றைக்கு ஆளுநர் அவர்களுடைய உரையில் இந்த அரசாங்கம் ஏற்படுத்தி இருக்கிறது என்று சொன்னால் அது மிக சிறப்பான ஒன்றாகும். இதனைச் சுட்டிக்காட்டு





கிறபோது ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். இரண்டாண்டுகளுக்கு முன்னாலே எங்களுடைய புரட்சித் தலைவரவர்கள் தேர்தல் அறிக்கையிலே சொன்னார்கள். எங்களுடைய அரசு அமைந்தால் அந்த அரசாங்கம் இந்த நாட்டில் கிராமங்கள், நகரங்கள் என்று இருக்கக்கூடிய பலத்த வேறுபாட்டை நீக்கி வேறுபாடு இல்லாத வகையில், அப்படியே வேறுபாடு இருக்குமானாலும் சிறிய நகரங்கள் பெரிய நகரங்கள் என்கிற வேறுபாட்டைத்தான் காணமுடியும், அத்தகைய வகையில் கிராமப்புறங்களில் வளர்ச்சியை ஏற்படுத்துவோம் என்று அறிவித்தார்கள். ஆனால் அப்போது மற்றவர்கள் குறை பேசினார்கள். இவர் ஏதோ சொல்கிறார், கிராமங்களை நகரமாக்குவதா என்றெல்லாம் கேலி பேசினார்கள். இது முடியுமா என்றெல்லாம் கூடச் சொன்னார்கள். அந்த உரையினை உண்மையாக்கிட எங்களுடைய புரட்சித் தலைவரவர்கள் இன்றைக்கு திட்டம் தீட்டி இருக்கிறார்கள். கிராமங்கள் நகரங்களாக மாறக்கூடிய அளவில் அனைத்து வசதிகளையும் பெறத்தக்க திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள் என்பதை அன்றைக்குக் குறை பேசியவர்கள் இன்றைக்கு புரிந்துகொள்வார்கள் என்று கருதுகிறேன்.

இந்த ஆட்சி அமைந்தவுடன் இங்கே ஆளுநர் அவர்கள் தனது முதல் உரையிலேயே எடுத்துச் சொன்னார்கள், தமிழகத்தில் 16 ஆயிரம் கிராமங்களுக்கு நியாயவிலைக் கடைகளை அரசாங்கம் தொடங்க இருக்கிறது என்கிற அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். அன்றைக்கு பெரிய அனுபவப் பழங்களாக இருந்த பழைய தலைவர்கள் எல்லாம் கூட அரசாங்கத்திற்கு ஆலோசனை சொன்னார்கள். 16 ஆயிரம் கிராமங்களில் நியாயவிலைக் கடைகளை உங்களால் திறக்க முடியுமா இதற்கு நிதி இலாக்காவுடன் சேர்ந்து ஆலோசனை செய்தீர்களா என்றும் இவைகளைத் திறக்க எந்த வகையில் பணம் வரும் என்றும் கேட்டார்கள். உங்களால் முடியுமா, இயலுமா என்றெல்லாம் சொன்னார்கள். இப்படியெல்லாம் வக்கணையாகக் கேட்டார்கள். ஆனால் இன்றைக்கு அந்த 16 ஆயிரம் கடைகளில் 13,400 கடைகளை அரசாங்கம் ஆரம்பித்து முடித்திருக்கிறது கடந்த ஆண்டு ஜனவரி 31 ஆம் தேதி வரையிலும் என்று அறிவிக்கப்பட்டு விட்டது என்றும் இரண்டாயிரத்து சொச்சம் கடைகள் விரைவில் ஆரம்பிக்க இருக்கிறோம் என்றும் சொல்லுகிறபோது அன்றைக்கு சொன்னவர்கள், முடியுமா இயலுமா என்று கேட்டவர்கள் இன்றைக்கு என்ன சொல்லப் போகிறார்கள் என்றுதான் எனக்குத் தெரியவில்லை.

அடுத்து, இன்றைக்கு இந்த அரசாங்கத்தைப் பற்றி குறை பேசியவர்கள், குறைத்து மதிப்பிட்டவர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். மதுவிலக்குக் கொள்கையில் அண்ணாவினுடைய பாதையில் அசையாத நம்பிக்கை கொண்ட இந்த அரசு இதில் தீவிரம் காட்டி இருக்கிறது என்பதைச் சொல்கிறபோது சிலர் சொன்னார்கள், எல்லாம் ஆளும் கட்சிக்காரர்கள்தான் செய்தார்கள் என்று. அப்படி எல்லாமே ஆளும் கட்சிக்காரர்கள் செய்கிறார்கள் என்று சொல்கிறபோது உண்மையில் யார் செய்கிறார்கள், யார் காய்ச்சுகிறார்கள் என்று ஊருக்குத் தெரிந்துதான் இருக்கிறது.—அவர்கள் சொல்வதை வாதத்திற்காக ஒத்துக் கொண்டாலும் இது ஆளும் கட்சிக்காரர்கள் செய்கிறார்கள் என்பது உண்மையாக இருக்குமேயானால் இத்தகைய ஒரு கடுமையான சட்டம் வந்த நேரத்தில் அவர்கள் என்ன சொல்லியிருக்கவேண்டும். இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துங்கள், இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி சாராயம் காய்ச்சுபவர்களை, விற்கிறவர்களைப், பிடியுங்கள் என்றல்லவா சொல்லியிருக்கவேண்டும். மாறாக என்ன சொன்னார்கள்? அய்யோ, இப்படிப்பட்ட சட்டமா, எங்களுடைய ஆட்களை எல்லாம் பழி வாங்குவதற்குத்தான் இந்தச் சட்டம் வருகிறது என்று சொன்னார்களே தவிர, ஆளும் கட்சிக்காரர்கள்தான் செய்கிறார்கள், ஆகவே இந்தச் சட்டத்தை முழுமையாகப் பயன்படுத்தி அவர்களை எல்லாம் பிடியுங்கள் என்று அறிக்கை விடவில்லை. இந்தச் சட்டத்தை இன்னும் தீவிரப்படுத்துங்கள், நானே கொடுக்கிறேன் என்றும் பட்டியலை நாங்களே தருகிறோம். அவர்களை எல்லாம் கைது செய்யுங்கள் என்றும் கூறியிருக்கவேண்டும்.

[முற்பகல் 10,40.]

அவர்களை எல்லாம் இந்தச் சட்டத்திற்கு முன்னால் கொண்டுவந்து நிறுத்துங்கள் என்று கூறியிருக்கவேண்டும். அதையெல்லாம் விடுத்து இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள், இந்தச் சட்டம் எங்களைப் பிடிக்கத்தான் என்று குரல் கொடுத்தார்கள் என்றால் அதிலிருந்து தெரிந்து கொள்ளலாம், யார் இந்த நாட்டில் அத்தகைய குற்றங்களை, கொடுமைகளைச் செய்து கொண்டிருந்தார்கள் என்பதை. இன்னும் கூட சிலர் தப்பித்துக் கொண்டிருக்கலாம். அப்படித் தப்பித்துக் கொண்டிருக்கிறவர்கள் நீண்ட நாட்கள் தப்பித்துக்கொண்டிருக்க முடியாது என்பதை அறிவிக்கிற அளவிற்கு மேதகு ஆளுநர் அவர்கள் ஒரு இடத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். மதுவிலக்கை நன்கு செயல்படுத்துவதற்காக காவல் துறையைச் சீரமைத்து அதைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்று. அப்படி பலப்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுகிற காரணத்தினால்தான் இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள் என்று ஒருபக்கத்தில் குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.





அடுத்து, ஆளுநர் அவர்கள் தமது உரையைப் படிப்பதற்கு முன்னால் பல்வேறு எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு செய்தனர் என்று பத்திரிகைகளில் போட்டார்கள். எதிர்க்கட்சிகள் அனைத்தும் வெளிநடப்பு செய்தனவா என்றால் இல்லை. இந்தச் சட்டப் பேரவையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு எதிர்க்கட்சியாகத் திகழ்கிற இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இங்கு அமர்ந்து கொண்டிருந்தனர். பார்வேர்ட் ப்ளாக் கட்சி உறுப்பினர்கள் இங்கு அமர்ந்துகொண்டிருந்தனர். உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியினர் இங்கே அமர்ந்திருந்தனர். காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த அருமை சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் இங்கு அமர்ந்திருந்தார்கள். இத்தனைக்கும் மேல் காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி வெளிநடப்பு செய்தது என்று கூட சில பத்திரிகைகளில் எழுதி கொஞ்சம் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அனைவரும் ஒன்றையே சொல்லிக் கொண்டிருந்தார்கள். இந்த மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று எல்லோரும் ஒருமுகமாகச் சொன்னார்கள்.

இந்த நாட்டில் உள்ள ஒரு சில எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சியைப் பார்த்து சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்கிற காரணத்தால் உண்மை அதுவாக இருக்குமா என்று கேட்டால் இன்றைக்கு நாம் பத்திரிகைகளில் படிக்கிறோம், இந்தியா பூராவிலும் உள்ள எல்லாச் சட்டசபைகளிலும் எதிர்க்கட்சிகள் சொல்கிற ஒரே ஒரு பெரிய குற்றச்சாட்டு இந்தச் சர்க்காரில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்லக்கூடிய ஒன்றாக இருக்கிறது. சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று இரண்டு மூன்று எதிர்கட்சிகள் சொல்கிற காரணத்தால் அதை அப்படியே ஏற்றுக்கொள்வோமானால் இந்தியா பூராவிலும் எந்த மாநிலத்திலும் சட்டம் ஒழுங்கு இருப்பதாக ஏற்றுக்கொள்ள முடியாது.

இங்கு பேசிய மதிப்பிற்குரிய ஜனதாக் கட்சி தலைவர் திரு. ஜேம்ஸ் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள், இம்மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று. பாராளுமன்றத்தில்கூட எதிர்கட்சியினர் அதைத்தான் சொல்கிறார்கள். இந்தியா பூராவிலும் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று குரல் பாராளுமன்றத்தில் எதிர்கட்சியினரால் எழுப்படுகிறது. திரு. ஜேம்ஸ் அவர்களின் வாதத்தை ஏற்றுக் கொண்டால், இந்தியா பூராவிலும் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்கிறார்களா? ஆக இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள எல்லா மாநிலங்களிலும் சட்டம்

ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்லி ஜனதாக் கட்சி சார்பில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கிற தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் எல்லாம் வெளிநடப்பு செய்யச் சொல்லித் தூண்டுகிறாரா மதிப்பிற்குரிய ஜேம்ஸ் அவர்கள் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால் இன்றைய நிலை என்ன? நம் நாட்டில் ஒரு இடத்தில் சட்டம் ஒழுங்கு ஒழுங்காக இருக்கிறது என்று சொன்னால் அது தமிழ் நாட்டிலேதான் என்பதை நியாய உள்ளம் படைத்த அனைவரும் ஏற்றுக்கொள்வர். தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு இல்லை என்று சொன்னால் இந்தியத் துணை கண்டத்தில் எந்தப் பகுதியிலும் இனி சட்டம் ஒழுங்கை இனிமேல் நீங்கள் எதிர்பார்க்க முடியாது. சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில் இந்த அரசு எத்தகைய அணுகுமுறையை இன்றைக்குக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டக் கடைமைப்பட்டிருக்கிறேன். இன்றைய அரசின் அணுகுமுறை எப்படி இருக்கிறது, முன்பு இருந்தவர்களின் அணுகுமுறை எப்படியிருந்தது என்பதை நான் எடுத்துக் காட்டக் கடைமைப்படிருக்கிறேன்.

கடந்த மாதம் 7-ம் தேதி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதிக்கு ஒரு திருமணத்திற்கு வந்திருந்தார்கள். மதுரையில் உள்ள வாடிப்பட்டி என்ற கிராமத்திற்கு வந்திருந்தார்கள். அங்கு செல்கிறபோது, விவசாயிகள் சங்கம் என்ற பேரால் ஒரு பத்து பதினைந்து மாட்டு வண்டிகளை வைத்துக் கொண்டு ஒரு பத்து, நூறுபேர்கள் சேர்ந்து இடையில் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தார்கள். இவ்விதம் 100 பேர் நின்றுகொண்டிருக்கிறார்கள், புரட்சித் தலைவரின் கூட்டத்தில் ஒரு இலட்சம் பேர் இருந்துகொண்டிருக்கிறார்கள். 100 பேருக்கு பாதுகாப்புக் கொடுக்க 150 போலீஸ்காரர்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். அவர்கள், ரோட்டில் வண்டிகளை மறித்துக்கொண்டு முதலமைச்சருடைய வண்டியை மறிக்கிறார்கள். கட்டை வண்டியின் மேலே இருந்து கொண்டு தகர டப்பாக்களைக் கையில் வைத்துக்கொண்டு அடித்துக் கொண்டிருக்கிறார்கள், ஆபாசமான குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள், முதலமைச்சரைப்பற்றி ஆபாசமான குரல் எழுப்புகிறார்கள். எங்களைப்பற்றியெல்லாம் பார்த்து கேவலமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். அதே நேரத்தில் போலீஸ்காரர்கள் பாதுகாப்பு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த முறை தான் இப்போது அரசாங்கம் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கு எடுத்துக்கொள்கின்ற அணுகு முறை.

ஆனால், இதற்கு முன்னால்—அதாவது 72 முதல் 76 ஜனவரி வரை இருந்த ஆட்சியின் முதலமைச்சராக இருந்தவர் ஒரு பகுதிக்கு வருகிறார், 74-வது ஆண்டில் கடைசி மாதத்தில் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வருகிறார், மதுரையிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வருகிறார். அங்குள்ள தோழர்கள் அன்றைக்கு தங்





களுடைய எதிர்ப்பை தெரிவிப்பதற்காக கடை அடைப்பு செய்வதாக அறிவிப்பு கொடுத்திருந்தார்கள். செல்லுகின்ற வழியில் இடையில் கல்லுப்பட்டி என்ற ஊர் இருக்கிறது. ஒரு நிகழ்ச்சி ரோட்டுப் பகுதியில் கிணறு வெட்டிக்கொண்டிருக்கிறார்கள். அய்ந்நாறு பெண்கள் கூலி வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது சேறு சகதி பட்டுவிடும் என்று எண்ணி கறுப்புச் சேலையை அந்த பெண்கள் கட்டிக்கொண்டு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். காவல்துறை சும்மா விட்டதா, அந்த நான்கைந்து பெண்களையும் பிடிக்கிறார்கள். எதற்கு பிடித்துக் கொண்டு போகிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. போலீசார் இழுத்துக் கொண்டு போகிறார்கள். முதலமைச்சருக்குக் கறுப்புக்கொடி காட்டவா இப்படி கறுப்புச் சேலையை கட்டிக்கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். கிணறு, தோண்டும் பொழுது சேறுசகதி பட்டுவிடுமே என்றுதான் அவர்கள் கறுப்புச் சேலையை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படியே பிடித்துக்கொண்டு போனவர்களை கல்லுப்பட்டி ஸ்டேஷனில் கொண்டுபோய் வைத்துவிட்டு, விட்டிருக்கலாம். அவர்களைக் கொண்டு போய் அய்ந்தாறு மைலுக்கு அப்பாலுள்ள பேரையூர் என்ற இடத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் கொண்டு போய் வைக்கிறார்கள். பின்னால் விட்டுவிடுகிறார்கள். ஏன் இவர்களைக் கல்லுப்பட்டியிலேயே வைத்து இருக்கலாமே என்று கேட்டபோது, கல்லுப்பட்டி போலீஸ் ஸ்டேஷன் ரோட்டின் மேலேயே இருக்கிறது அங்கே வைத்திருந்தால் முதலமைச்சர்—அப்போது இருந்த முதலமைச்சர், 72 முதல் 76 ஜனவரி வரை இந்த நாட்டை ஆண்டுக்கொண்டிருந்த முதலமைச்சர்—வருகிறபோது, அவரது கண்ணில் இந்த கறுப்பு பட்டுவிடக்கூடாது, அதற்காகத்தான் வேறு இடத்தில் கொண்டு போய் வைத்தோம் என்றார்கள. இவரே தொடர்ந்து முதலமைச்சராக இருந்திருந்தால், பெண்கள் வேலை செய்கின்ற இடங்களில் எல்லாம் அவர்களது கருங்கூந்தலைக்கூடக் காண்பிக்கக்கூடாது என்று மொட்டை அடித்து இருப்பார்கள். இவ்விதம் இருந்தது அவர்களது அணுகுமுறை என்பதற்காகத்தான் இதை சொல்லுகிறேன்.

அடுத்து, இங்கு சில நண்பர்கள் கொலை முயற்சியைப்பற்றி சொன்னார்கள். கொலை முயற்சியைக் கண்டிக்கிற இந்த அரசாங்கத்தைப் போல் வேறு எந்த அரசாங்கத்தையும் காண முடியாது. இன்றைக்கு மறைந்த முருகையன் படுகொலையைப்பற்றி ஆளுநர் அவர்களது உரையிலேயே ஒரு பகுதியில், அவருடைய மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து, இந்தக் கொலைக்கு சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்க அனுமதிக்க மாட்டோம் என்ற குரலை எழுப்பியிருக்கிறது, இந்த அரசாங்கம்.

முன்னால் இருந்த சர்க்கார் முன்னால் என்ன சொன்னது, இதைப்போன்ற ஒரு நிகழ்ச்சி. அன்றைக்கு சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்த வெங்கா அவர்கள் அண்ணா திராவிட

முன்னேற்றக் கழகத்தில் இணைந்த நேரத்தில், சட்டமன்ற விடுதியின் முன்னால் குத்தப்பட்டார். ஒரு டாக்ஸியில் நான்கைந்து பேர்கள் வந்து குத்தினார்கள். இந்தக் கொடுமையை நேரில் பார்த்துக்கொண்டிருந்த எங்கள் கட்சி கொறடாவாக இருக்கின்ற திரு. துரை கோவிந்தராசன் அவர்கள், அன்றைக்கு அருகில் இருந்திருக்காவிட்டால், வெங்கா அவர்களின் உயிர் தப்பியிருக்க முடியாது. ஆனால், இங்கே என்ன நடந்தது ? சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியின் முன்னால் தாக்கப்படுகிறார், குத்தப்படுகிறார், வெட்டப்படுகிறார், அவரது உயிரை வாங்குவதற்கு முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியை இந்த சட்டமன்றத்தில் கொண்டு வந்த நேரத்தில் அன்றைக்கு இருந்த முதலமைச்சர் என்ன சொன்னார் தெரியுமா ? அப்படியா செய்தி, யார் யாரைக் குத்தினார்கள் ? குத்தினார்களா ? குத்திவிட்டர்களா ? என்றெல்லாம் கேட்டு, அந்த நிகழ்ச்சியையே ஒப்புக்கொள்ள மறுத்தவர் அன்றைக்கு இருந்த முதலமைச்சர். ஆனால், இன்றைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் படுகொலை செய்யப்படுகிறார், இப்படிப்பட்ட கொலைவெறி அரசியலில் நடை பெற எந்த அளவிலும் அனுமதிக்க முடியாத ஒன்று என்று அழுத்தம் திருத்தமாக சொன்ன அரசாங்கம் இது. இது சட்டம் ஒழுங்கை பாதுகாக்கின்ற ஒரு உயர்ந்த கொள்கை இல்லையா ? உயர்ந்த அணுகுமுறை இல்லையா ? அதற்காகத்தான் இதைக் குறிப்பிட்டேன்.

அடுத்து, ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ள சில கருத்துக்களை மட்டும் எடுத்துக்கூறி எனது உரையை முடிக்க விரும்புகிறேன்.

*[முற்பகல் 10.50]*

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1968 ஜனவரித் திங்கள் 23 ஆம் தேதி தமிழகத்தில் தமிழ் மொழிதான் அரியணை ஏறும் இரு மொழிகள் தமிழ், ஆங்கிலம் தான் இங்கே, மூன்றாவது மொழியாகிய இந்திக்கு இங்கே எந்த வகையிலும் தமிழகத்திலே இடமில்லை என்று மிகவும் அழுத்தம் திருத்தமாக அறிவித்தார்கள். அதைச் சட்ட மன்றத்திலேயும் அரசாங்கத்தின் கொள்கையாக, அறிவிப்பாக அறிவித்தார்கள். அன்றைக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் இரு மொழிக் கொள்கையைப் பிரகடனப்படுத்தியதோடு, மட்டுமல்லாமல், இந்தச் சட்டமன்றத்திலே இன்னொரு அறிவிப்பையும் செய்தார்கள். நான் என்னால் முடிந்ததைச் செய்துவிட்டேன். மத்திய சர்க்கார் அவர்களால் முடிந்ததை செய்து கொள்ளட்டும். மத்திய ஆட்சி மொழியாக இந்திய துணைக் கண்டத்தில் 14 மொழிகளும் அரியணை ஏறத்தக்க வகையில் மத்திய அரசு அரசியல் சட்டத்தைத் திருத்தியே தீர வேண்டும். அதற்கு கால அவகாசம் ஒரு ஆண்டு தருகிறேன் என்று அன்றைக்குச் சொன்னார்கள்.



அவர்கள் சொன்னது 1968 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23 ஆம் நாள். அண்ணா அவர்கள் இதே மாமன்றத்தில் மத்திய சர்க்காருக்கு கால அவகாசம் ஓராண்டு தருகிறேன். இந்த ஓராண்டுக் காலத்தில் எங்களுடைய கோரிக்கையை அவர்கள் நிறைவேற்றியே தரவேண்டும் என்று கேட்டார்கள். ஆனால், அந்த ஓராண்டுக் கால கெடு முடிகிறபோது, நமது அண்ணா அவர்கள் மரணப்படுக்கையிலே படுத்து, பிப்ரவரித் திங்களிலே நம்மை விட்டுப் பிரிந்தார்கள்.

ஆனால், அதற்குப் பிறகு இந்த நாட்டை ஆளுகின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்ட அந்த அரசாங்கம் என்ன செய்திருக்க வேண்டும்? அண்ணா அவர்கள் காலக் கெடு ஓராண்டுக் காலம் என்று சொல்லி, அந்தக் காலக் கெடு கொடுத்தார்களே, அந்தக் காலக் கெடு முடிகிறதே என்று சொல்லி, அந்தத் தீர்மானத்தை கண்காணிக்கின்ற வேலையைச் செய்திருக்க வேண்டுமா ? வேண்டாமா ? செய்தார்களா ? 1976 ஜனவரி 31 ஆம் நாள் அவர்கள் பதவியிலிருந்து வெளியேறுகின்ற வரையிலும், எந்த அளவிற்கு இந்தப் பதவியைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்க வேண்டுமோ, அந்தக் காரியங்களைச் செய்தார்களே தவிர, அண்ணா அவர்கள் பிரகடனப்படுத்தினார்களே, அந்தக் கால கெடுவை காலக் கெடு முடிந்ததற்குப் பின்னால், அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துகின்ற, கண்காணிக்கிற வேலையைச் செய்தார்களா என்றால் இல்லை. ஆனால், இன்றைக்கு அமைந்திருக்கிற இந்தச் சர்க்கார் சலுகை போனால் போகட்டும், அலுவல் போனால் போகட்டும் என்று புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் கவிதைக்கு ஒப்ப, இந்த அரசு போனால் போகட்டும், இந்தப் பதவி போனால் பரவாயில்லை, இந்த நாட்டு மக்களுக்கு அண்ணா அவர்களுடைய கொள்கையை அரியணை ஏற்றத்தக்க வகையிலே, ஆளுநர் அவர்களுடைய உரையில் அழுத்தம் திருத்தமாக இந்தச் சர்க்கார் இந்த இரு மொழிக் கொள்கையை—இந்தித் திணிப்பை எந்த வகையிலும் அனுமதிக்க மாட்டோம் என்று அழுத்தம் திருத்தமாக அறிவித்திருக்கிறது என்று சொன்னால், தமிழ் மொழியைப் பாதுகாக்க வேண்டும் தமிழ் மொழியைப் பாதுகாப்பதற்கு நாங்கள்தான் என்று சொல்லிக் கொண்டிருந்த அந்தச் சர்க்கார் அன்றைக்கு இந்தத்தீர்மானத்தை போட்டிருக்க வேண்டுமா ? இல்லையா ? அண்ணா அவர்கள், 1968, ஜனவரி திங்கள் 23 ஆம் நாள் சொன்னதை, இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறவர் புரட்சித்தலைவர் அவர்கள் ஆவார்கள் . . . . . . . . . .

<u>திரு. சி. ஆறுமுகம் :</u> மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முத்தையா அவர்கள் இந்தி எதிர்ப்புத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமா, வேண்டாமா என்றால், நாங்கள் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தி எதிர்ப்பு மாநாடு என்று போட்டு, பின்னர் அதை வீர வணக்க மாநாடாக மாற்றினால், அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வீர வணக்க மாநாடு என்று சொல்லும்போதே, அதிலேயே இந்தச் சர்க்காரின் கொள்கை அடங்கியிருக்கிறது. அண்ணா அவர்கள் மறைந்ததற்குப் பிறகு, அவர்கள் ஏற்கெனவே அறிவித்தபடி, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25 ஆம் தேதியை வீரவணக்க நாளாக இந்த அரசு நடைமுறைப்படுத்துகிறது. அன்றைக்கு ஆளும் கட்சியாக இருந்தவர்கள் இதனை நடைமுறைப் படுத்தியிருக்க வேண்டும். ஆனால், வீர வணக்க மாநாட்டை நடத்தினால், எங்கே உள்ளே பிடித்துப் போட்டு விடுவார்களோ என்ற நிலையில்...........

திரு. சி. ஆறுமுகம் : மன்னிக்க வேண்டும். துணைத் தலைவர் அவர்களே, உள்ளே, தள்ளி விடுவார்கள் என்பதற்கு அல்ல. நாங்கள் சிறை போகத் தயார்............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்துப் பேச இருக்கிற திரு. துரை முருகன் அவர்கள் இதைப்பற்றிப் பேசலாம்.

திரு. இரா. முத்தையா : வீர வணக்க மாநாடு நடத்தும் பொறுப்பை நாங்கள் ஏற்றுக் கொண்டோம் என்றால், இன்றைய நிலையிலே அல்ல. இந்தக் கட்சி தோன்றிய காலத்திலே இருந்து, மாணவர் அமைப்பு ஒவ்வொரு ஆண்டும் இந்த வீர வணக்க மாநாட்டை ஜனவரி 25 ஆம் தேதி அன்று ஒவ்வொரு ஊரிலே கொண்டாடி வருகின்றது. அத்தகைய ஒரு வீர வணக்க மாநாடு சிதம்பரத்திலே நடந்தபோது, எங்கள் கட்சியைச் சார்ந்த மாவீரன் பாலசுந்தரம் படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. அப்படிப்பட்ட ஒரு வீர வணக்க மாநாட்டிலே தான் ஓர் இளைஞனுடைய உயிரைப் பறி கொடுத்திருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : அன்று எங்களுடைய கட்சி ஆட்சியில் இருந்தபோது அந்தப் படுகொலை சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுத்தது. யார் கொலை செய்தார்கள் என்று பார்க்காமல் திராவிட முன்னேற்றக் கழக அரசு வித்தியாசம் இல்லாமல் பார்த்து அவரை நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தி அவர் தண்டிக்கப்பட்டிருக்கிறார் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. முத்தையா அவர்கள் பேசிய பிறகு நீங்கள் பேசப் போகிறீர்கள். அப்பொழுது நீங்கள் பதில் சொல்லலாம். ஆகவே, நடுவில் குறுக்கே எழுந்து பேச வேண்டாம்.





திரு. இரா. முத்தையா : துணைத் தலைவர் அவர்களே, எங்களைப் பார்த்து அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டு வீர வணக்க மாநாடு போட்டு விட்டீர்களே என்பது. இன்றைக்கு அல்ல. 1972-ல் இருந்தே வீர வணக்க மாநாட்டை ஆண்டு தோறும், கடுமையான சவால் இருந்த நேரத்திலும், எவ்வளவோ கடுமையான சோதனைக்கு ஆட்பட்டிருந்த நேரத்திலும் கூட வீர வணக்க மாநாட்டை ஆண்டுதோறும் நடத்திக் கொண்டிருக்கும் இயக்கம், புரட்சித் தலைவர் தலைமையில் இருக்கும் இந்த இயக்கம் என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன். அத்தகைய வீர வணக்கம் செலுத்தும்போது ஒரு உயிரையும் பலி கொடுத்திருக்கிறோம் என்பதையும் கூற விரும்புகிறேன். ஆளுகின்ற பொறுப்புக்கு வந்துவிட்ட காரணத்தால் நாங்கள் முன்னால் செய்து வந்த காரியத்தைச் செய்யாமல் விட்டுவிடவில்லை. வீர வணக்க மாநாட்டை நடத்தத் தவறவில்லை. அதை எடுத்துக் காட்டுகிற நிகழ்ச்சியாகத்தான் கோவையில் வீர வணக்க மாநாடு நடத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அண்ணா அவர்களுக்குப் பின்னால் ஆட்சி புரிந்தவர்கள் வீர வணக்கம் என்று சொல்லிவிட்டால் அனுபவித்து வரக்கூடிய சுகம் எங்கே போய்விடுமோ, பதவி பறிபோய்விடுமோ என்று அஞ்சி ஒடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

நாங்கள் எந்த வகையிலும் விட்டுக் கொடுக்க வில்லை என்பதைச் சொல்லி, இந்த அரசாங்கம் பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டிய நெறியிலிருந்து சிறிதும் வழுவாமல் இன்றைக்கு ஆளுகிற பொறுப்பில் இருந்து கொண்டிருக்கிறது, தன்னுடைய கடமையைச் செய்து கொண்டிருக்கிறது. அத்தகைய நல்ல கடமையை ஆற்றுகிற விதத்தில், இந்தச் சர்க்காரைப் பாராட்டுகிற விதத்தில் பணியைப் போற்றி, ஆளுநர் உரையை வரவேற்று, பாராட்டி, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை முன்மொழிந்து அமர்கிறேன். நன்றி வணக்கம்.

*திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் ஆளுநர் ஆற்றிய உரையின்மீது நடைபெறுகிற இந்த விவாதத்தில் கலந்து கொண்டு என்னுடைய கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன் வைக்க நான் விழைகிறேன்.

ஆளுநர் உரை என்பது ஒரு நூலுக்கு அமைகிற பாயிரம் போன்றது. வரவு-செலவுத் திட்டத்திற்கு முன்னோடியாக அமைவது. அரசாங்கத்தினுடைய திட்டங்களை அல்லது அதற்கு ஒதுக்கப்பட்ட தொகைகளை விளக்குவது பட்ஜெட். அரசாங்கத்தினுடைய கொள்கைகளை, லட்சியங்களை விளக்குவது ஆளுநர் உரை. இந்த இலட்சியங்களை நாங்கள் கடைப்பிடிக்கிறோம் என்று சொல்வது ஆளுநர் உரை. அப்படி பல்வேறு லட்சியங்களை இந்த ஆளுநர் உரை தாங்கி இருக்கு

மென்று நான் அவற்றைக் கொஞ்சம் கூர்ந்து படித்துப் பார்த்தேன். ஆனால், அதிலே எந்தவிதமான லட்சியங்களும் இல்லை. ஆனால் அதைப் படித்ததுதான் என்னுடைய தப்பு. அ.தி.மு.க. சர்க்காரில் கொள்கைகளும், லட்சியங்களும் இருக்குமென்று நினைத்து படித்து ஏமாந்துபோனேன். அவ்வாறு படித்த நான்தான் பைத்தியக்காரன் என்று என்னை நானே ஆசுவாசப்படுத்திக் கொண்டேன்.

பேசிய ஆளும் கட்சி உறுப்பினர் அவர்கள் இது ஒரு புரட்சித் திட்டம், புதுமையான திட்டம் என்று வழக்கம்போல் அந்த வார்த்தைகளைச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் — துரை முருகன் அவர்கள் கவர்னர் உரையைக் கூர்ந்து படித்திருக்க வேண்டும் ; அதிலே இல்லாதது இல்லை, சொல்லாதது இல்லை, அத்தனையும் நிறைந்தது என்றார்கள். இது என்ன சர்வலோக சஞ்சீவினியா? லா காலேஜுக்கு எதிரில் மேகம் , கருமேகம், வெள்ளை, வெட்டை, மூலச்சூடு, துர்நீர் இப்படி பல்வேறு வியாதியைப் போக்கக் கூடிய சர்வ ரோக சஞ்சீவினி, 48 நாளைக்குச் சாப்பிட வேண்டும் என்று விற்பான். அதைப் போல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், இதிலே எல்லாம் இருக்கிறது என்று.

[முற்பகல் 11.00].

இது சர்வலோக சஞ்சீவி ; இது ஒரு புரட்சி சஞ்சீவி ; இது அண்ணாயிஸத்திலே புடம்போட்டு எடுக்கப்பட்ட அறிக்கை என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இதைப் புரட்டிப் பார்த்தால் இதிலே லட்சியமும் இல்லை. இதிலே கொள்கையும் இல்லை, இதிலே கோட்பாடும் இல்லை. இதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் ஏற்கெனவே ஆற்றப்பட்ட கவர்னர் உரைகளிலே இருந்து கொஞ்சம் வெட்டியெடுத்தார்கள், காமராஜர் காலத்திலேயிருந்து கலைஞர் காலம் வரையிலே நடைபெற்ற சாதனைகள் இருக்கின்றனவே, அதிலேயிருந்தும் எடுத்தார்கள், மத்திய சர்க்காருக்கு இவர்கள் கடிதம் எழுதினார்களே, அந்த வீரப் பிரதாபத்தை எல்லாம் தொகுத்தார்கள், மத்திய சர்க்கார் ஆரம்பிக்கப் போகின்ற DRDAT போன்ற திட்டங்களை நுழைத்தார்கள், இவர்கள் விளக்கெண்ணைத் தத்துவத்தைச் சேர்த்தார்கள். கூட்டிக் குழப்பினார்கள், இது தான் கவர்னர் உரை என்றார்கள். கவர்னரும் படித்துவிட்டுப் போய்விட்டார். ஆகவே, இதிலே தத்துவம் கித்துவம் எதுவும் இல்லை.

சமீபத்திலே டெல்லியிலே என்.டி.சி. கூட்டம் நடைபெற்றது. அதிலே காட்கில் பார்முலாவைப் பற்றி விவாதிக்கப் போகிறார்கள் என்றெல்லாம் செய்திகள் வந்தன. அதிலே கலந்துகொள்ள தமிழ்நாட்டிலிருந்து முதலமைச்சர்தான் போவார், முதன் முதலாக தமிழ்நாட்டு முதலமைச்சர் பேசுவது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் இந்த முறை அந்தக் கூட்டத்திற்கு நம்முடைய பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் தான் அதுவும் ஒரே ஒரு நாள் தான் போய்விட்டு திரும்பி வந்துவிட்டார். ஒன்று நிதியமைச்சர் போய் இருக்க வேண்டும் அல்லது முதலமைச்சர் போய் இருக்க வேண்டும். என்.டி.சி.-யிலே தமிழ்நாட்டின் குரல்தான் டாமினேட் பண்ணுவதாக இருக்கும். ஆனால் இந்தத் தட்வை பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் தான் சென்றார்கள். இவர்களிடம் பார்முலாவும் இல்லை, காட்கிலையும் இவர்களுக்குத் தெரியாது, இருக்கிற பிரச்சினைகளைப் பற்றியும் தெரியாது, ஆளை விட்டால் போதும் என்று இருந்துவிட்டார்கள். அந்த நேரம் எங்கே கிரிக்கெட் நடக்கிறது என்று பார்த்தார்கள். அங்கே போய் உட்கார்ந்து கொண்டார்கள். *** *** *** நாங்கள் எல்லாம் டி.வி.-யிலே பார்த்தோம். போய்ப் பார்க்கட்டும் நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை.



<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> திரு. துரை முருகன் பேசும்போது ஏதோ சர்வரோக நிவாரணி பற்றியெல்லாம் சொன்னார்கள், சுவையாக இருந்தது, ஆனால் அப்படியே அவர்கள் பேச்சைத் தொடர்வார்களானால் அவர்களுடைய பேச்சு நன்றாக அமைந்திருக்கும். நடந்து முடிந்த தேசிய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ள இயலாததற்குக் காரணம் நம்முடைய பாரதப் பிரதமர் இரண்டு நாட்கள் சுற்றுப் பயணம் செய்தார்கள், அப்போது நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் உடல்நலம் சரியில்லாமல் இருந்தார்கள். நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே காட்கிலைப் பற்றியும் திட்டக் கமிஷன் கொடுத்திருக்கிற பார்முலா பற்றியும் ஓரளவிற்கு எங்களுக்குத் தெரிந்ததை வைத்து — அவர்கள் சொன்னார்கள் காட்கிலைப்பற்றித் தெரியாது என்று— எங்களுக்குத் தெரிந்ததை வைத்து அழுத்தந்திருத்தமாகப் பேசி, மற்ற மாநிலங்கள் பாராட்டத்தக்க வகையில் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. மேலும் தகவல்களை மாண்புமிகு உறுப்பினர் தருவார்களேயானால் நிச்சயமாக நான் வரவேற்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு முதலமைச்சர் * * * * * என்ற அந்த வாசகத்தை சபைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு ஆணையிடுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

* * *

திரு. துரை முருகன் :

சரி இருக்கட்டும். நாங்கள் எல்லாம் அங்கே போய்விட்டு வந்தோம் என்று சொன்னார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் காட்கிலைப்பற்றி மெத்தப் படித்தவர், அங்கே 3 நாட்கள் இருந்து இருக்க வேண்டாமா? தமிழ்நாட்டின் குரலை பத்திரிகையிலே படிக்க முடியவில்லையே என்று வருத்தப்பட்டுத்தான் சொன்னேன். சென்ற ஆண்டு கவர்னர் உரையிலேயிருந்து கொஞ்சம் வெட்டியெடுத்தார்கள். சென்ற ஆண்டும் நியாய விலைக் கடைகளைப் பற்றிச் சொல்லியிருந்தார்கள். நடக்குமா, ஆகுமா என்றெல்லாம் நம்முடைய உறுப்பினர் திரு. முத்தையா அவர்கள் பேசும் போது அபிநயம் பிடித்துக் காட்டினார்கள். நியாய விலைக் கடைகளைப்பற்றி மீண்டும் இதிலே சொல்லியிருக்கிறார்கள். கிரடிட் சொஸைடிகளைவிட்டு நியாய விலைக் கடைகளை நடத்தச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே வருகிற லாப நட்டம் அவர்களைச் சேர்ந்தது, சர்க்காருக்கு அதிலே ஒன்றும் நட்டம் இல்லை. அங்கே என்ன வைத்திருக்கிறார்கள், சோப்பு, சீப்பு, கண்ணாடிதான், உப்பு, புளி, மிளகாய் கேட்டால் ஒன்றும் இல்லை. என்னுடைய தொகுதியிலே உள்ள சுமைதாங்கி என்ற ஊரிலே சோப்பு, சீப்பு, கண்ணாடிதான் இருக்கிறது. உப்பு, புளி, மிளகாய் இல்லை. கிராம மக்களுக்குப் பயன் படும் என்று சொல்லியிருக்கிறார்கள். எல்லாக் கிராமங்களி லேயுமா, ரெவின்யு கிராமங்களிலே மட்டுமா என்று தெரிய வில்லை. தெளிவாக இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த உரையிலே 13 ஆயிரம் கிராமங்கள் பயன்பெற்றுவிட்டன என்று சொல்லியிருக்கிறார்கள். ரெவின்யூ கிராமங்களா இல்லையா தெளிவாகச் சொல்லவில்லை. மீதமுள்ள கிராமங்கள் ஒன்றிரண்டு மாதங்களில் பயனடையும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, எல்லாக் கிராமங்களுக்கும் வைக்கப் போகிறார்களா அல்லது ரெவின்யூ கிராமங்களுக்கு மட்டும் வைக்கப்போகிறார்களா என்பதை முதலமைச்சரவர்களோ அல்லது நிதியமைச்சரவர்களோ பதில் சொல்லும்பொழுது குறிப்பிட்டுக் காட்டிச்சொல்லவேண்டும். இது ஒரு திட்டம். சென்ற ஆண்டு கவர்னர் உரையிலிருந்து வெட்டி எடுத்தது.

அடுத்து கிராமப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு 30,000 பேர் களுக்கு வேலை வாய்ப்பு உண்டு என்று சென்ற ஆண்டு கவர்னர் உரையிலே தெரிவித்திருந்தார்கள். அதைப் பற்றியே மறு

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் இணங்க அகற்றப் பெற்றது.





படியும் பேசக்கூடாது. பட்டுப்புழு வளர்ப்பின் காரணமாக 20,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று சென்ற ஆண்டு கவர்னர் உரையிலே சொல்லியிருந்தார்கள். 50,000 மக்கள் தொகைக்கு மேற்படாத கிராமங்களுக்கெல்லாம் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேற்படாத இயந்திரங்களை அவர்களுக்கு வழங்கி 900 ஷெட்டுகளைப் போட்டு தொழில் மயமாக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். அதனால் எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்று நாங்கள் கேட்டோம், ஒரு இலட்சம் பேருக்குக் கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆகையால் நாங்கள் கேட்பதெல்லாம் சென்ற ஆண்டு கதை செத்த கதைதானா? அது இந்த ஆண்டு வராதா? 20,000 பேர்களுக்கு பட்டுப் புழு வளர்ப்பினால் வேலை கிடைத்ததா? 30,000 பேர்களுக்குக் கதர் கிராமத் தொழில் வாரியத்தினால் வேலை கிடைத்ததா? 50,000 மக்கள் தொகைக்கு மேற்படாத ஊர்களில், 900 ஷெட்டுக்கள் வைத்துக் கொடுக்கப்பட்டு தொழில் மயமாக்கப்பட்டிருக் கிறதா? அது மட்டுமல்லாமல், 10,000 போலீஸ்காரர்களை எடுப்போம் என்று சொன்னார்கள். அதை எடுத்தார்களா? பத்து இலட்சம் பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்று சொன்னார்கள், அதைச் செய்திருக்கிறார்களா ? ஒட்டுமொத்த மாகப் பார்த்தால் ஐந்து இலட்சம் பேருக்காவது சென்ற, ஆண்டு அதாவது செப்டம்பர் அக்டோபர் மாதத்திற்குப் பிறகு வேலை கொடுத்திருக்க வேண்டும். போன வருஷம் கவர்னர் உரை தலை கீழாக இருந்தது. இந்த வருஷம் கவர்னர் உரையாற்றும் நிகழ்ச்சி முறையாக வந்திருக்கிறது. அதற்குப் பிறகு ஐந்து இலட்சம் பேர்களுக்காவது வேலை கிடைத்திருக்கிறதா என்று பார்த்தால் இல்லை.

சென்ற ஆண்டு இன்னொரு புதுத் திட்டமும் சொல்லப் பட்டது. அதாவது வெளி நாடுகளில் குறிப்பாக அரபு நாடுகளுக்குச் செல்பவர்கள் வேலையற்று அலைகிறார்கள். எனவே வெளிநாடுகளுக்கு யார் யார் போகிறார்களோ அவர்களையெல்லாம் சர்க்காரே வரவழைத்து, வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டு இவர்கள் அரசாங்கம் அவர்களைப் பிழைப்புக்கு அனுப்பும் 'ஓவர்சீஸ் எம்ப்ளாய்மென்ட் கார்ப்பரேஷன்' என்ற அமைப்பு, நிறுவப்படும் என்று சொன்னார்கள். அது நிறுவப் பட்டதா? எத்தனை பேர்கள் வேலைக்குப் போனார்கள் என்று சொல்லியிருந்தால் பரவாயில்லை, அது பற்றி ஒன்றும் கிடையாது, அதையெல்லாம் விட்டுவிட்டு இந்த வருஷமும் புதுக் கதையைப் பற்றிச் சொல்லுகிறார்கள்.

இன்னொன்றும் சொல்லியிருக்கிருர்கள். அதுதான் ஊரமைப்புத் திட்டம். அதன் மூலம் குடிநீர் வடிகால் வசதி, கல்வி வசதி, தெருவிளக்கு வசதி போன்றவற்றைத் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அரிசனங்களுக்கு வீட்டு வசதித் திட்டம் என்பது ஏற்கெனவே இருப்பது. மேலும் 'மெட்ராஸ்

[திரு. துரை முருகன்] [1979 பிப்ரவரி 12

இன்ஸ்டிட்யூட் ஆஃப் மேனேஜ்மென்ட்' என்ற' கோர்சைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இது புரட்சித் திட்டம். புதுத் திட்டம் என்று சொல்கிறார்கள். ஆனுல் இதில் புதிதோ அல்லது புரட்சியோ இருக்கிறதா என்றால் இல்லை. "கிராமப் பகுதிகளிலும் புதிய கிராமங்களை உருவாக்கவும் தற்போதுள்ள கிராமங்கள் திட்டமிட்ட முறையில் விரிவாக்கப்படுவதற்கும் ஊரமைப்புத் திட்டங்கள் தீட்ட அரசு முடிவு செய்துள்ளது." என்று சொல்லப்படுகிறது. இது எப்படிச் சரியாகும்?. மேலும், " கிராமப் பகுதிகளில் நிலமற்ற ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் வீடு கட்டுவதற்குத் தேவையான வீட்டு மனைகளை வழங்கும் புதிய பெரும் திட்டமொன்றை அரசு வகுத்துள்ளது." என்று சொல்லப்படுகிறது. இதுவரையில் யாருமே மனை கொடுக்காதது போலவும், இவர்கள்தான் புதிதாகத் கொடுக்கப் போவது போலவும் சொல்கிறார்கள். அதிலே, " பினாமி நிலங்ளையும் தேவைக்கதிகமாக நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து உபரி நிலங்களையும் அரசு கைப்பற்றி அந்த நிலங்களை இத் திட்டம் செயற்பட பயன்படுத்தும்" என்று கூறப்படுகிறது. பினாமி நிலங்களை எடுத்து, தேவைக்கு அதிகமாக நிலங்களை வைத்திருப்பவர்களிடமிருந்து எடுத்து, அவர்கள் கேசுக்குப் போய் ஹைகோர்ட்டுக்குப் போய் இதெல்லாம் முடிந்த பிறகு கொடுப்பார்கள். இது, கொக்கு தலையில் வெண்ணெய் வைத்து, காலையிலே சூரியன் வந்ததும், உருக வைத்து அது கண்ணில் விழ கண் எரிச்சலோடு கண்ணை மூடிக்கொண்டால் பிடித்துக் கொள்ளலாம் என்று சொல்வதைப்போல இது வேண்டுமானால் காட்சியாக இருக்குமே தவிர ஆட்சியில் இருக்கின்றவர்கள் சொல்கின்ற வகையில் பெருமை அளிக்கக்கூடியதாக இல்லை. இது கவைக்கு உதவாத பேச்சு. அதேபோல்தான் ஊரமைப்புத் திட்டமும், வீட்டு மனைத் திட்டமும் ஆகும். நாம் யொத்த மல்லியைக் காட்டி இது என்ன செடி என்று சாதாரண மக்களைக் கேட்டால் கொத்தமல்லிச் செடி என்று சொல்வார்கள். அதையே பாட்டனி படிக்கின்ற மாணவனிடம் கேட்டால் அதற்குரிய பொட்டானிக்கல் நேமிலே சொல்வார்கள். அதுபோல்தான் இதுவும் இருக்கிறது. இதில் புதிய திட்டம் இருக்கிறதா என்றால் சந்தேகம்தான்.

ஊரமைப்புத் திட்டம் என்கின்ற திட்டத்தினைத் தீட்டி அரசு என்ன செய்யப் போகிறார்கள். குடிநீர் வடிகால் வசதி செய்யப் போவதாகச் சொல்கிறீர்கள். குடிநீர் வசதிக்காக உலக வங்கியிடம் போகிறீர்கள். குடி நீர் கொடுக்க வேண்டும். அதில் மறுப்பு இல்லை. ஆனால் சின்னச் சின்ன குக்கிராமங்களிலே வடிகால் வசதி செய்வது என்றால், அது தேவையா? அவர்கள் சாப்பிட்டு முடிந்தபிறகு அதை கழுநீர்த் தொட்டியில் கொட்டி அதை எருமை மாட்டுக்குத்தான் கொடுப்பார்களே தவிர வீணாக்கமாட்டார்கள். அதேபோல் கல்வியை எடுத்துக் கொண்டால், காமராஜர் காலந்தொட்டு தொடங்கி கலைஞர் காலத்தோடு முடிந்து விட்டது. இனிமேல் புதிதாக நீங்கள் பள்ளிகளைத் திறக்கப் போகிறீர்களா?



1979 பிப்ரவரி 12] [திரு. துரை முருகன்]

[முற்பகல் 11.10].

நல்லா காது குத்துகிறாங்க சார், சர்க்காரிலே, என்ன அக்கிரமம்? இனிமேலா பள்ளிக்கூடங்கள் கட்டப்போகிறார்கள்?. தெரு விளக்குகள் போடப் போகிறார்கள்? எல்லா பஞ்சாயத்து பிரசிடென்டுகளும் தெரு விளக்குகள் போட்டுவிட்டார்கள். எல்லா பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே, அரியானா, தமிழ்நாடு இரண்டு மாநிலங்களில்தான் எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுத்த நிறைவு ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது, யாரோ, தெரியாதவனுக்குச் சொல்கிற மாதிரி, தெரு விளக்கு தரப்போகிறேன் பள்ளிக்கூடம் கொடுக்கப் போகிறேன், வடிகால் தரப்போகிறேன் ஆகவே, இது புரட்சித் திட்டம் இல்லையா, என்று கேட்கிறார்கள். இது புதுத் திட்டமும் அல்ல. புரட்சித் திட்டமும் அல்ல.

அடுத்து, அரிசனங்களுக்கு வீட்டு வசதித் திட்டம். ஒரு வழியாக அந்தத் திட்டத்தை ஒழித்து விட்டது இந்த அரசு. அரிசனங்களுக்கு இலவசமாக வீடு கொடுக்க வேண்டுமென்று தி.மு.க. அரசு திட்டம் தீட்டி, ரூ. 6,000, ரூ. 5,000 -லே வீடு கட்டிக் கொடுத்தது. சென்ற ஆண்டு எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள், அரிசனங்களுக்கு வீடு கட்ட ஒதுக்கப்பட்ட பணம் ஏன் இலாகாவிற்குப் போகவில்லை யென்று கேட்டார். அதற்கு அரிசன நலத்துறை அமைச்சர், அரிசனங்களுக்கு புது மாதிரியாக வீடு கட்டிக் கொடுப்பதைப் பற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள வீடுகளை மாற்றத் திட்டமிருக்கிறது. என்று சொன்னார். நான் உடனேகேட்டேன், புதிய அரசு எப்படி கட்டப் போகிறது? தி.மு.க. அரசு, அடியிலே கடைக்கால் கட்டி, அதற்குமேல் சுவர் எழுப்பி, அதற்கு மேல் கூரைபோட்டது. நீங்கள் வேண்டுமானால், சுவரை முதலில் எழுப்பி, இடையிலே கூரை போட்டு அதன்மேல் கடைக்கால் எழுப்பி கட்டுங்கள் என்று சொன்னேன். எதற்காகச் சொல்கிறேன் என்றால், புதிய திட்டம் என்று சொல்கிறார்கள். அரிசனங்களுக்கு வீடு கட்டுகிற திட்டம் அப்படியே விடப்பட்டிருக்கிறது. என்னுடைய இராணிப்பேட்டை தொகுதியிலே கீழ் மின்னலில் இரத்தினகிரி என்ற ஒரு பகுதி இருக்கிறது. அங்கு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைப்பதற்கு முன்னால் சுவர் எழுப்பினார்கள். நான் சிறைக்குப் போய்விட்டு வந்தபிறகு, ஓட்டு கேட்பதற்கு அங்கு போன போது, அந்தச் சுவர் அப்படியே நிற்கிறது. என்னப்பா அதற்குமேல் கட்டவில்லையா என்று . கேட்டால், இல்லையென்று அங்குள்ளவர்கள் பதில் சொன்னார்கள். புதிய சர்க்கார் வந்த பிறகு கட்டுவார்களா என்று பார்த்தால், அந்தச் சுவர் இப்பொழுதும் அப்படியே இருக்கிறது என்பதோடு, அந்தத் திட்டத்தை எப்படியாவது குளோஸ் செய்வதற்கு நடவடிக்கைகளை மெல்ல எடுத்திருக்கிறது இந்த அரசு.

ரூ. 4,200-க்கு மேற்படாமல் வருமானம் உள்ளவர்களுக்கு இந்தத் திட்டம். எந்த அரிசனனுக்கு ரூ.4,200 வருமானம் வருகிறது அப்படி இருக்கிறவனைத் தேர்ந்தெடுத்து, ப்ரீயாக வீடு கட்டிக் கொடுக்காமல், ரூ. 600 மானியம் வழங்குமாம் அரசு. ரூ.6,000-ல் வீடு கட்டி இலவசமாகக் கொடுத்தது தி.மு.க. அரசு. ரூ. 600 மானியம் கொடுப்போம் என்று மார்தட்டி நிற்கிறது அ.இ.அ.தி.மு.க. அரசு. முதலமைச்சர் முதல் முறை பேசும் போது அழகாகச் சொன்னார். அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறோம். அவர்களுக்கு மட்டும் கொடுத்தால் போதுமா? அரிசனங்களல்லாத ஏழையானவர்களுக்கு வீடு கொடுக்க வேண்டாமா? அது பற்றி எங்களுடைய சர்க்கார் யோசித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னார் பரவாயில்லை. ''வெல் அண்ட் குட்''. அரிசனங்களுக்கு நாம் கட்டினோம். அவர்கள் அரிசனங்கள் அல்லாதவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப் போகிறார்கள் என்று நினைத்தேன். தாழ்த்தப்பட்டவர்கள் பெரும்பான்மையாக உள்ள இடங்களில் வீடு கட்டும்போது மற்ற பிரிவினருக்கும் இதைப் போலவே மானியம் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறது அரசு. அரிசனங்களல்லாதவருக்கு வேண்டுமானால், அரிசனங்கள் பெரும்பான்மையாக உள்ள இடங்களில் வீடு கட்ட வேண்டும். அப்பொழுதுதான் இந்த மானியம் அரிஜன் அல்லாதவர்கட்கு கிடைக்கும். அரிசனங்கள் இல்லையென்றால், நான்—அரிசன்ஸ்ஸுக்கு மானியம் கிடைக்காது. ஒரு வக்கீல் கட்சிக்காரனுக்குச் சொல்லிக் கொடுத்தானாம், ஜட்ஜ் எதைக் கேட்டாலும், பேபே, பேபே என்று சொல், எதிர்க்கட்சி வக்கீல் எதைக் கேட்டாலும், பேபே என்று சொல் என்று. இவன் எதிர்க்கட்சி வக்கீலிடமும், ஜட்ஜிடமும் பேபே என்று சொல்லிவிட்டு, இறுதியில், இவனது வக்கீல் பீஸ் கேட்ட போது, அதற்கும் பேபே என்று சொன்னான். அதுபோல் ரூ. 4,200-க்கு மேற்படாமல் ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு, அரிசனங்களுக்கு ரூ. 600 மானியம் கொடுத்து வீடு கட்டித் தரப்போகிறேன் என்று சொல்லிவிட்டு, அரிசனங்களல்லாதவர்களுக்கு, அரிசனங்கள் அதிகமாக உள்ள இடத்திலே இருந்தால்தான் அந்த மானியத்தைக் கொடுப்பேன் என்று ஒரு திட்டம் போட்டு இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் 10 கிராமங்களில் எந்த (அரிசன) காலனியும் கிடையாது. அதுவும் பெருமான்மையாக அரிசனங்கள் இருக்கிற பகுதிகளில் என்று திட்டம் போட்டிருக்கிறார்கள். அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தையும் ஒழித்தாயிற்று. அரிசனங்களல்லாதவர்களுக்கும் திட்டம் இல்லாமல் ஒழித்தாயிற்று.

இதை விட பெரிய விசித்திரம் என்னவென்றால், முன்பு அரிசன் அவுசிங் கார்ப்பரேஷன்—அரிசன் வெல்பேர் துறையின் கீழ் இயங்குவது—சென்னையில் இருந்தது. அதை விழுப்புரத்திற்கு மாற்றிவிட்டார்கள். ஏற்கெனவே அத்துறைக்கு ஒதுக்கப்பட்ட பணம், அங்கிருந்து அதிகாரிகள் அமைச்சரைப் பார்க்க



10 தடவை சென்னை வந்தால், எல்லா பணமும் குளோஸ். அதேமாதிரி பட்டுத் தொழில் இயக்குநரகத்தை சேலத்தில் வைக்கிறார்கள். வேண்டுமென்றால், தர்மபுரியிலேயே வைத்திருக்க வேண்டும். அங்குதானே பட்டு உற்பத்தி அதிகமாக நடைபெறுகிறது.

இன்னும் சொல்லப்போனால், நமது முதலமைச்சருக்கு ஒரு புரட்சிகரமான எண்ணம் தோன்றலாம். எல்லா அமைச்சர்களும் சென்னையிலேயே இருந்தால் சரியல்ல. ஆகவே இராமநாதபுரத்தில் இரண்டு அமைச்சர், திருச்சியில் இரண்டு அமைச்சர், தஞ்சாவூரில் இரண்டு அமைச்சர் தங்கள் அலுவலகத்தை வைத்துக் கொள்ளட்டும், என்று சொல்வார். கொஞ்ச காலம் கழித்து அது சரியாக வரவில்லை, ஆகவே, சென்னைக்கே கொண்டு வரவேண்டும் என்று சொல்வார். இப்படி தேவநாகிரி டு டெல்லி, டெல்லி டு தேவநாகிரி என்று மாற்றி அமைத்தால் ஆச்சரியம் இல்லை.

ஏன் விழுப்புரத்தைத் தேர்ந்தெடுத்தீர்கள்? விழுப்புரத்திலே தான் நீங்கள் மாட்டிக்கொண்டீர்கள். அந்த அலுவலகத்தை விழுப்புரத்திலே கொண்டுபோய் வைத்தால், அங்குள்ள மக்கள் நம் ஊருக்கு திட்டம் வந்து விட்டது, மொத்த பேருக்கும் வீடு கட்டி, எல்லோருக்கும் சோறு சமைத்துப் போடுவார்கள் என்று நினைத்துக்கொள்வார்கள் என்று நம்பிக்கொண்டுபோய் வைத்தீர்கள். ஆனால் அரிசன மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் விழித்துக் கொண்டார்கள். எனவே நீங்கள் இனி மேல் ஒன்றும் முடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, ஒரு புதிய திட்டம், புரட்சித் திட்டம். இந்தப் புதிய திட்டத்திலே என்ன சொல்லுகிறார்கள்? Madras Institute of Management என்று ஒன்று துவக்கப் போகிறார்கள். இது ஒரு பெரிய புரட்சி. நான்கூட ஒரு பெரிய திட்டத்தை அமல்படுத்தப் போகிறார்கள் சர்க்கார், பரவாயில்லை, Brain Work கூட நடக்கிறது என்று நினைத்தேன். பிறகு பார்த்தால், பாலிடிக்ஸ் அண்ட் பப்ளிக் அட்மினிஸ்டிரேஷன் என்று எம்.ஏ-க்கு பாடங்களாகும். இதில் பப்ளிக் அட்மினிஸ் டிரேஷனை டிப்ளமா கோர்சாக யுனிவர்சிடியிலே வைத்திருக் கிறோம். அதை கலைஞருடைய காலத்திலே செய்தோம். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.க்குக்கூட யாரும் போவது கிடையாது. இதிலேதான் நிறையப் பேர்கள் வருகிறார்கள் என்று எண்ணி, அதை புல்டைம் டிக்ரியாக மாற்ற வேண்டும் என்று எண்ணி 1967க்குப் பின்னாலே கலைஞர் காலத்திலே அப்போதிருந்த வைஸ் சான்சலர் சுந்தரவடிவேலு அவர்களால் புல் டைம், பார்ட் டைம் என்று வைத்து அதற்கு Master of Management Science என்று பெயர் வைத்தார்கள். அதற்குப் பின்னர் வந்த மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள், இதைப் பரிசீலனை செய்து, உலகம்

முழுவதும் Master of Business Administration (MBA) என்று பெயர் வைத்திருக்கிறார்கள், Master of Management Science என்ற பெயர் புரியவில்லை என்று சொல்லி பெயரை மாற்றினார்கள். இதில் பிரைவேட் செக்டார், பப்ளிக் செக்டார், இரயில்வே, சென்ட்ரல், ஸ்டேட் யார் வேண்டுமானாலும் ஸ்பான்சர் பண்ணினால் அவர்களுக்கு 50 சதவீதம் அட்மிஷன் கிடைக்கும். மீதி உள்ள 50% கம்யூனல் ஜி. ஒ. படி அட்மிஷன் கிடைக்கும் இங்கே போதிய இடம் கிடைக்கவில்லை என்று கருதி, பி.எஸ்.ஜி. ஆர்ட்ஸ் கல்லூரியிலும் தொடங்கி இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

இந்த சர்க்கார் வந்தவுடன் புதிய திட்டம் ஒன்றும் கிடைக்கவில்லை. இந்த எம்.பி.ஏ.-வை மாற்றி Madras Institute of Management என்று பெயர் கொடுத்தார்கள். முன்பிருந்த Master of Management Science பின்னர் Master of Business Administration என்று மாற்றப்பட்டது. இப்போது Madras Institute of Management என்று மாற்றியிருக்கிறார்கள். பெயர் மாறிப்போச்சு, சப்ஜக்ட் ஒன்றுதான். ஒரே சப்ஜக்டை வைத்துக் கொண்டு பெயரைத்தான் மாற்றி இருக்கிறார்கள். Object is same இது எப்படி இருக்கிறது என்றால், பழைய காலத்தில் எம். கே. ராதா நடித்த அபூர்வ சகோதரர்கள் என்ற படத்தை புதிதாக நீரும் நெருப்பும் என்று எடுத்ததைப் போல் இருக்கிறது. டைட்டிலை மாற்றினார்கள். அதே Master of Business Administrationஐ Madras Institute of Management என்று மாற்றி இருக்கிறார்கள். கேட்டால் புரட்சித் திட்டம், புதுமைத் திட்டம், வாழ்வளிக்கும் திட்டம் என்கிறார்கள். இவை எல்லாம் தேவையில்லாத ஒன்று. இவைகளை எல்லாம் நாங்கள் செய்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இன்னொரு திட்டம், கப்பல்களைப் பழுது பார்ப்பது, Dry Deck இது சென்ட்ரல் கவர்ன்மென்ட் சப்ஜெக்ட். இந்த டிரை டாக் சென்ட்ரல் கவர்ன்மென்ட் ஸ்கீம். இதிலே உங்களுக்கு என்ன பங்கு.

அடுத்து தூத்துக்குடியிலே உள்ள ஆல்கலிக் கெமிகல்ஸ் நிறுவனம் ஜப்பானிய நாட்டு இட்டாசி கம்பெனியுடன் முதலமைச்சர் முன்னிலையில் கையொப்பம் ஆனதாம். இது தான் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற புரட்சித் திட்டம் இந்தத் திட்டம் கவர்னர் உரையில் உள்ளது. இதை போற்றுவோம், போற்றுவோம், போற்றுவோம்.

[முற்பகல் 11–20]

அடுத்து, கரும்புச் சக்கையில் காகிதம். இதைப் படித்த உடனே எனக்கு சீமா மீட்டரில் ஷாக் அடித்தது. பள்ளிப்பாளையத்தில் முதலமைச்சர் பேசியது நினைவுக்கு வந்து நின்றது



எப்படி போகப்போகிறதோ? காசி விஸ்வநாதா, ராமச்சந்திரா என்ன திட்டமோ எனக்குப் புரியவில்லை. அதற்கு காகிதம் எழுதியிருக்கிறீர்கள். கரும்புச் சக்கையில் இருந்து காகிதம் நாங்கள் செய்யப்போகிறோம் என்று டெல்லிக்கு எழுதியிருக்கிறீர்கள். அதை ஒரு பெரிய திட்டம் என்று கூறியிருக்கிறீர்கள்.

மொரார்ஜி தேசாய் இந்தியைப் பற்றி என்ன கடிதம் எழுதியிருக்கிறார் என்று கேட்டதற்கு, முதலமைச்சர் சொன்னார், 'காலம் வற்புறுத்தும்போது சொல்வேன்', காலம் வற்புறுத்துகிறபோது—என்று சொன்னார் (தண்ணீர் குடித்துக் கொள்கிறேன்)—காலம் வற்புறுத்துகிறபோது என்றால் எப்போது? அனைத்துக் கட்சிகளும் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்துகிறார்கள். சர்வ கட்சிகளையும் சார்ந்த தலைவர்களை அழைத்து கேட்கிறார்—இந்தி திணிக்கப்படுகிறதா—ஆமாம், ஆமாம், திணிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னால் போதாது என்று நாவலரும் சர்வ கட்சிக் கூட்டத்தில் பேசினார். கடைசியில், ராஜா மந்திரியைப் பார்த்து, மந்திரி, நாட்டில் மழை மும்மாரி பொழிந்ததா என்று கேட்க, அவர் ஆமாம் என்று சொன்ன பிறகு தான் ராஜாவுக்கு அது தெரிந்த மாதிரி ஓ, இந்தி திணிக்கப்படுகிறதா என்று முதலமைச்சருக்கு சர்வ கட்சிக் கூட்டத்தில் தலைவர்கள் பேசிய பிறகுதான் தெரிகிறது. நாடகம் பரவாயில்லை; அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். கரும்புச் சக்கையில் காகிதம் தயாரிக்க கடிதம் எழுதினோம் என்று சொல்கிறபோது, இவற்றை ஏன் சொல்லக்கூடாது என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம் எனக்குத் தெரிந்தாக வேண்டும். இந்தச் சர்க்காரிடத்தில் எனக்கு ஆயிரம் வித்தியாசம் இருந்தாலும், அண்ணாவின் பெயரைத் தாங்கி இருக்கிறார்கள். திராவிட இயக்கத்தின் பாரம்பரியத்தில் வந்தவர்கள் கேட்கிறேன். ஒருக்கால், விட்டகுறை, தொட்ட குறை, திராவிட இயக்கத்தின் பெயரை வைத்திருக்கிறார்கள், அந்த உணர்வுகள் பட்டுப்போகாமல் இருக்கும், அந்தக் கொள்கைகளில் உறுதியாக இருப்பீர்கள் என்று நான் கேட்கிறேன். இப்போது கூட நான் அப்படித்தான் நம்புகிறேன். நான் உங்களை சந்தேகிக்கவில்லை. இந்த அறிக்கையில் 16-வது பத்தியில் சொல்லப்பட்டு இருப்பதை அருள்கூர்ந்து படியுங்கள். அதிலே என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்பதை அருள் கூர்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். "வேலையற்றிருப்போர் எண்ணிக்கை மிகுதியாகவும், அரசினர் வேலைவாய்ப்புகள் குறைவாகவும் உள்ள நிலையில், ஏழை எளியவர்களின் மக்களுக்கு, அதிலும் அவர்களிடையே பள்ளிகளின் வாயிற்படிகளையே கண்டறியாத குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டுமென்று அரசு விரும்புகிறது. தாழ்த்தப்பட்டோர், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தோர் ஆகியோர்க்கான சிறப்புச்

சலுகைகட்கு சரிவேற்படாமல், இதனை அரசு நடைமுறைப்படுத்தும், இதன் மூலம் தலைமுறை தலைமுறையாக வாய்ப்புகளை இழந்து நிற்கும் மக்களின் புதிய தலைமுறையினர், புத்துணர்வும் புது வேகமும் பெறும் வாய்ப்பு கிடைக்க முடியும் என்று நான் கருதுகிறேன்.'' என்று அதிலே சொல்லியிருக்கிறார்கள்.

இதற்கு என்ன விளக்கம்? தயவு செய்து முதலமைச்சர் அவர்களோ அல்லது பதில் சொல்லப்போகிற யாராவதோ அதைச் சொல்ல வேண்டும். நான் என்ன விளக்கம் அறிய விரும்புகிறேன் என்றால், எந்தப் பிரிவினருக்கு அந்தச் சலுகையை நீங்கள் வழங்கயிருக்கிறீர்கள். அதுவும், தாழ்த்தப்பட்டோர், பின்தங்கியோருக்கு வழங்கப்பட்டு வரும் சலுகைகளில் சரிவு ஏற்படாமல்—வித்தவுட் டெட்ரிமென்ட் டு தி பேக்வார்ட் கிளாஸ் அண்டு ஷெட்யூல் காஸ்ட்ஸ் என்று போட்டு— புவர் அண்டு இல்லிட்ரேட்டாக இருப்பவர்களுக்கு சலுகை அளிப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று தரப்பட்டுள்ளவைகளுக்கு சரிவு ஏற்படாமல் தருவோம் என்று சொல்கிறபோது நாங்கள் பயப்படுகிறோம். எங்கேயோ சரிவு வருகிறது என்று இந்த சர்க்காரே நினைக்கிறது. ஆகவே நான் தெரிந்து கொள்ள விரும்புவது—அந்த வகையில் யாருக்கு நீங்கள் வேலை கொடுக்கப்போகிறீர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் பாதிக்கப்படாவண்ணம் யாருக்கு வேலை கொடுக்கிறேன் என்று சொல்கிறீர்கள். பூவர், ஏழையாக இருக்கிறவன், இல்லிடரேட்--படிப்பறியாமல் இருக்கிறவன் என்று எப்படி கணக்கு எடுக்கப்போகிறீர்கள். பூவர் என்று சொல்லி சர்டிபிகேட் வாங்கலாம். ஆனால், இல்லிடரேட் என்று சொல்லி, அதுவும் எங்கள் போர்-பாதர்ஸ், மூதாதையர்கள் பள்ளிக்குச் சென்றதே இல்லை என்று யாரிடம்போய் எப்படி சர்டிபிகேட் வாங்கிவரமுடியும். பூவர் என்று சொல்லவேண்டுமானால், தாசில்தார் ஆபீசுக்குச் சென்று ரூ. 5, ரூ. 10 கொடுத்து சர்டிபிகேட் வாங்கிவரலாம். படிக்கவே இல்லை என்று யார் சர்டிபிகேட் கொடுக்க முடியும். பள்ளிவாயிற்படியே அறியாதவன், அந்தப் பக்கம் ஒதுங்கவே இல்லை என்று யார் சர்டிபிகேட் கொடுக்க முடியும். அந்த வகையில் யாரை நீங்கள் கொண்டுவரப்போகிறீர்கள்? இந்த நாட்டிலே வகுப்புவாரி பிரதிநிதித்துவம்—அதாவது கம்யூனல் ஜி.ஓ. வேண்டும் என்று 50–60 ஆண்டு காலம் உழைத்த வெண்உடை வேந்தர், பனகல் ராஜா, முத்தையா முதலியார், டி. என். நாயர், நடேசனார் ஆகியோர் கொண்டு வந்த கம்யூனல் ஜி.ஓ.-வுக்கு சாவுமணி அடிக்கிறீர்கள். பகிரங்கமாக நான் குற்றம் சாட்டுகிறேன். எனக்குத் தெரியும். முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இனி ஜாதியின் அடிப்படையில் வேலை இல்லை. திறமையின் அடிப்படையில் தான் வேலை தருவோம் என்று, ஹாண்டே அவர்கள் அமைப்புச் செயலாளராகவும், ஆனந்தவிகடன்





மணியன் ஆலோசகராகவும் பக்கத்திலே வந்திருக்கிற காரணத்தால் இது நடக்கும் என நினைக்கிறேன். ஏ, திராவிட சமுதாயமே, உங்களை உயர்த்துவதற்காக வெண்தாடி 60 ஆண்டுகாலம் உழைத்து, உங்களுக்கு சமுதாய சுதந்திரம் வாங்கித்தரவேண்டும் என்பதற்காக டி. எம். நாயர் லண்டன் மாநகரம் வரையில் சென்று புரட்சிக்கொடி நாட்டி, சமுதாய சுதந்திரத்தை வாங்கித்தந்தாரே, அந்த உயர்ந்த மனிதர்களின் உணர்ச்சிகளுக்கு நீங்கள் சாவு மணி அடிக்கப்போகிறீர்கள்.

யாரைச் சொல்கிறீர்கள் என்பதை நான் பச்சையாகவே சொல்கிறேன். 'பூவர்'—ஏழை புரோகிதன், பள்ளிக்கூடத்திற்கே போய் படிக்காத ஒருவன் இருக்கிறான். அவன் ஒரு புரோகிதன். அவனுடைய மகனைக் கொண்டுவந்து, பிற்பட்ட மக்களோடு, தாழ்த்தப்பட்ட மக்களோடு நிறுத்தப்போகிறீர்கள். அது எங்கே கொண்டுபோய் சேர்க்கப்போகிறதோ தெரியவில்லை. இதை பணிவோடு மட்டுமல்ல; உணர்ச்சியோடு எச்சரிக்க விரும்புகிறேன். எதை வேண்டுமானாலும் இழக்கலாம். ஆனால் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 60 ஆண்டு காலமாக வழங்கியிருக்கிறார்களே வகுப்புவாரி அடிப்படையில் கம்யூனல் ஜி.ஓ.— அந்த உரிமையை எந்த பிற்பட்ட மகனும் தாழ்த்தப்பட்ட மகனும் இழக்க சம்மதிக்கமாட்டான். அப்படிப்பட்ட ஒரு நிலைமை உருவானால் இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடும். நாங்கள் அதை நிறைவேற்றுவோம். அது எங்களுடைய கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக்கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து இன்னொரு முக்கியமான பிரச்சனை. கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஈரோட்டை தலைமையிடமாகக்கொண்டு புதியதொரு மாவட்ட அமைப்பை உருவாக்க வேண்டும் என்பது அரசின் முடிவு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. 'வெல் அன்ட் குட்'. அதை வரவேற்கிறோம். ஆனால் கோவை மாவட்டத்தை இரண்டாக்கி, ஈரோட்டை தலைநகராக்குவதில் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபமில்லை. முதலமைச்சர் சொன்னார். அந்த விழாவில் இது பெரியார் மாவட்டம் என்று வைக்கப்படும் என்று சொன்னார். அது பெரியார் மாவட்டம் என்று ஆகுமா அல்லது மதுரை பல்கலைக் கழகத்திற்கு காமராஜ் பல்கலைக் கழகம் என்று பெயர் சூட்டி, அதற்குப் பின்னால் யாரோ குரலெழுப்பினார்கள் என்பதற்காக மதுரை காமராஜ் பல்கலைக் கழகம்—விருதுநகர் காரர் மதுரைக்காரர் ஆகிவிட்டார்—என்று மாற்றி விட்டார்களே அதைப்போல பெரியார் மாவட்டம் என்று சொல்வதை ஈரோடு பெரியார் மாவட்டம் என்று மாற்றிவிடுவார்களோ என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது. அதுபற்றி இதிலே ஒன்றும் குறிப்பிடவில்லை.

[திரு. துரை முருகன்] [1979 பிப்ரவரி 12

கோவை மாவட்டத்தில் பெரியார் விழாவிலே முதலமைச்சர் கூறியதைப்போல, ஈரோட்டை தலைநகராகக்கொண்டு பெரியார் மாவட்டம் செயல்பட வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். அதோடு, ஈரோட்டில்தான் 'அய்யா' அவர்களின் இல்லம் இருக்கிறது. பெரியாரின் இருதயம் வேலூர் சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் இருக்கிறது. அந்த இருதயத்தைப் பெற்று, அங்கே அதை காட்சிப் பொருளாக வைக்க வேண்டும். அதை முதலமைச்சர் செய்வார் என்று எதிர்பார்க்கிறோம். நம்முடைய உறுப்பினர் ப. உ. சண்முகம் அவர்கள் இங்கே வரவில்லை. அவர்கள் ஒரு அறிக்கையில் சொன்னார்கள். என்மீது கோபம் இருக்கலாம். ஆனால் வேலூர் சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் இருக்கும் பெரியாரின் இருதயத்தை அவருடைய இல்லத்தில் காட்சிப் பொருளாக வைப்பதில் தயக்கம் இருக்காது என்று. அதை மீண்டும் கேட்பார்கள் என்று நம்புகிறேன். அய்யா அவர்களுடைய இருதயத்தைப் பார்க்க வேண்டுமென்பதில் எங்களுக்கெல்லாம் மிகுந்த ஆசை. அந்தப் பேறு எப்போது கிடைக்கும் என்று ஏங்கிக்கொண்டிருக்கிறோம். பெரியாரின் இருதயம் அங்கே இருக்கிறதா என்று தெரியாமலோ வேண்டுமென்றோ முதலமைச்சர் சொல்லி இருப்பார். அவருக்கு நிச்சயமாக தெரிந்து இருக்கும். அது சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் இருக்கிறது. கேட்டால் அவர்கள் இல்லை என்றா சொல்வார்கள். ஆசியாவில் பெரிய டாக்டர்கள் எல்லாம் சொல்கிறார்கள், பெரியாருடைய இருதயம் அங்கே இல்லை என்று. அது பற்றி என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? திடீரென்று ஒருநாள் இதிலும் புரட்சி என்று சொல்லி, அந்த இருதயத்தைக் கைப்பற்றி விடுவார், கைப்பற்றிவிட்டோம் என்று அறிவிப்பார் என்று நினைக்கிறேன். அதற்கு முன்னாள் அமைச்சர் ப.உ.ச: அவர்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முயற்சிகள் செய்தும் கிடைக்கவில்லை என்றால் அங்கே இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டறிய ஒரு விசாரணைக் கமிஷன் போடுங்கள். ஏனென்றால் இப்போது விழுப்புரம் கமிஷன் முடிந்துவிட்டது. அந்த கமிஷன் நீதிபதி சதாசிவம் இருக்கிறார். அவர்தான் * * * ஆயிற்றே. அவரை வைத்து ஒரு கமிஷன் போட்டு, இதை விசாரிக்கலாம். அய்யா அவர்களின் இருதயம் அங்கே இருக்கிறதா இல்லையா என்பதை அவர் சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேகமாகப் பேசும்போது ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். அவர்கள் * * * என்று சொன்னார்கள். அது ஏற்றதாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1979 பிப்ரவரி 12]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. துரை முருகன் : நான் அதை மாற்றிக்கொள்கிறேன். மாற்றிக்கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. இன்னும் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு வரிக்கும் ஒரு விளக்கம் சொல்லிக் கொண்டே இருக்கலாம். அதற்கு காலம் போதாது. வழக்கம்போலவே இப்போதும் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது வழக்கமாகி விட்டது. ''நிர்வாகத்திலும் பிற துறைகளனைத்திலும் ஊழல் களையப்பட வேண்டும் என்பதில் அரசு திடமான நம்பிக்கை கொண்டுள்ளதை மன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளின் விளைவாகவும் மன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பின் காரணமாகவும் நல்ல பலன்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதையும் மன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆம், ஆம். அறிவோம். எவ்வளவு நாளாக இதைச் சொல்லியே காலத்தை ஓட்டிக் கொண்டிருக்க முடிவு செய்திருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

எங்கள் பகுதியிலே ஒரு கோழித் திருடன் கதை உண்டு. ஒரு சமயம் அவன் ஒரு கோழியைத் திருடிவிட்டான். சொந்தக்காரர்கள் கோழியைக் காணோம் கோழியைக் காணோம் என்று சொல்லி தேடினார்கள். கோழித் திருடனும் எங்கே, எங்கே என்று சொல்லி அவர்களோடு சேர்ந்து தேடினான். கடைசியில் அவன் தலையிலே ஒட்டியிருந்த ஒரு கோழி இறகை வைத்து, அவன்தான் திருடன் என்று கண்டுபிடித்தார்கள். அதைப் போலத்தான் இன்றைக்கு ஊழல், ஊழல் என்று சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள் நிலையும்.

ஊழல், ஊழல், சர்க்காரியா கமிஷன் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். இங்கே கொண்டுவந்து போடுங்கள் சர்க்காரியா ரிப்போர்ட்டை. கிழி, கிழி என்று கிழித்தெறிந்து விடுகிறோம். என்ன பெரிய சர்க்காரியா கமிஷன்! இன்றைக்கு உங்களுடைய ஆட்சியிலே எவ்வளவு ஊழல்? எங்களுக்குத் தெரியாதா? கோவையிலே ஒரு மாநாடு நடத்தினார்கள். அது வீர வணக்க மாநாடா அல்லது இந்தி எதிர்ப்பு மாநாடா என்று தெரியவில்லை.

[முற்பகல் 11.30]

முதலில் இந்தி எதிர்ப்பு மாநாடு என்று போட்டுவிட்டு பிறகு அதைக் கிழித்து எறிந்துவிட்டு இரவோடு இரவாக அதனை வீர வணக்க மாநாடு என்று எழுதி ஒட்டிவிட்டார்கள். அந்தப் பிரச்சினைக்கெல்லாம் கூட நான் போக விரும்பவில்லை. அந்த

மாநாட்டிற்கு கெடுபிடி வசூல் செய்திருக்கிறார்கள். கிட்டத் தட்ட 5 இலட்ச ரூபாய் வசூல் பண்ணியிருக்கிறார்கள். ஒரு லாட்டரிச்சீட்டுக் கடைக்காரரிடம் இருந்து 5 ஆயிரம் ரூபாய் கேட்கிறார்கள். அவர் கொடுக்க மறுத்ததால் அவருக்கு வெளி மாநிலச் சீட்டுக்களை விற்கின்ற லைசென்சு ரத்து செய்யப்பட் டிருக்கிறது. அவர் சிறு குழந்தைகளை வேலைக்கு அமர்த்தினார் என்ற குற்றம் சாட்டப்பட்டு அவரது லைசென்சு ரத்து செய்யப் பட்டிருக்கிறது. ஆக கிட்டத்தட்ட 5 இலட்ச ரூபாய் வசூல் செய்திருக்கிறார்கள். பஸ் முதலாளிகளிடம் இருந்து ஒன்றரைக் கோடி ரூபாய் வாங்கியாகிவிட்டது. அடுத்து தியேட்டர் முத லாளிகளிடமிருந்து 25 லட்ச ரூபாய் வாங்கிவிட்டார்கள். வட்டிக்கடைக்காரர்களிடமிருந்து 17 இலட்ச ரூபாய் வாங்கி விட்டார்கள்.

அடுத்து * * * * * * *

இப்படியெல்லாம் நடந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது அங்கே வாங்கினார்கள், அவரிடம் வாங்கினார்கள் என் றெல்லாம் அடுக்கிக் கொண்டே போகிறார்கள். அது எந்த வகையிலே பொருத்தம் என்பதை நான் அறிய விரும்புகிறேன். எங்கோ ஒரு லாட்டரிக்கடை பற்றியெல்லாம் சொன்னார்கள். அதனைக் குறிப்பிட்டுச் சொல்வாரேயானால் அதிலே பொருத்தம் இருக்கிறது. அது மட்டுமல்லாமல் அங்கிருந்து பேசுபவர்கள் இவ்வளவு வாங்கினார்கள் என்று சொல்வது அதேபோல் இங் கிருந்து பேசுகின்றவர்கள் அப்படி இல்லை என்று மறுத்துச் சொல்லுகின்ற நிலையும் மன்றத்தின் மரபுக்கு ஏற்றதுதானா என்பதை துணைத் தலைவர் அவர்கள் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தமாதிரி குறிப்பிட்டு ஏதேனும் குற்றச்சாட்டுகள் சொல்வதாக இருந்தால் என்னிடம் முன் அனுமதி பெற்ற பிறகுதான் சொல்ல வேண்டும். அடுத்து * * * * * * * என்றெல்லாம் சொல்வது முறையானதல்ல. ஆகவே அதுபற்றி * * * * * * அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகின்றேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர் களே, அது மட்டுமல்ல. பஸ் முதலாளிகளிடம் கேட்டார்கள், வாங்கினார்கள் என்றெல்லாம் அடுக்கிக் கொண்டேபோனார்களே அதற்கும் சேர்த்துத்தான் சொன்னேன்.

திரு. துரை முருகன் : துணைத் தலைவரவர்களே, பஸ் முதலாளிகளிடம் இத்தனை இலட்சம் கேட்டார்கள், வாங்கினார் கள் என்றுதான் சொன்னேன். அது எப்படி முறையில்லை என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் அதையெல்லாம் நீக்கப்போகிறேன் என்று சொல்லப் போகிறீர்கள். ஆனால் நான் அதற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் பெயர் குறிப்பிட்டுச் சொன்னதை எல்லாம் * * * * * * *

நீக்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

மற்றபடி அவர்கள் பேசியதற்கெல்லாம் அமைச்சரவர்கள் பதில் பேசும்போது மறுப்பு தெரிவித்துக் கொள்ளலாம்.

திரு. துரை முருகன்: ஊழலை ஒழிப்போம் ஊழலை ஒழிப்போம் என்றெல்லாம் பேசுகிறார்கள். திருச்சியிலே ஒரு பெரிய நிகழ்ச்சி யிலே லட்சக்கணக்கில் பணம் வாங்கியிருக்கிறார்கள். ஒரு நடன நிகழ்ச்சி. அதா இதா லதா என்றெல்லாம் பணம் வசூலிக்கிறார்கள் நீங்கள் ஊழலை ஒழிக்கப்போகிறேன் என்று சொல்லுகிறீர்கள். நான் முக்கியமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நிதி யமைச்சர் அவர்களும் இங்கே வந்திருக்கிறார்கள். எனக்கு ரொம்பவும் மகிழ்ச்சி. அவர்கள் ரிசர்வ் பாங்க், சென்ட்ரல் பாங்க் பற்றி எல்லாம் நன்கு தெரிந்தவர்கள். ஜெயலலிதா என்பவர் ஒரு நடிகை. அவர் அமெரிக்காவிற்கு போய்விட்டு வந்தார்கள். அமெரிக்கா போய்விட்டு வருவதற்கு அவர் பேஷன்ட் என்ற முறையில் செலவிட்ட தொகை எவ்வளவு என்றால் கிட்டத் தட்ட 10 ஆயிரம் டாலர்கள் அதாவது 80 ஆயிரம் ரூபாய் ரிசர்வ் பாங்க் கொடுத்தது.

கொடுப்பது ரிசர்வ் பாங்க், ரிசர்வ் பாங்க் பற்றி நாங்கள் சொல்லலாமா என்று கேட்பார்கள். கொடுத்திருப்பது சென்ட் ரல் கோவாபரேட்டிவ் பாங்கா, ரிசர்வ் பாங்க் கொடுத்திருக்கி றார்கள், அதைப்பற்றி நாங்கள் எப்படிச் சொல்வது என்று கேட்கலாம். சென்ட்ரல் கவர்ன்மென்ட், ரிசர்வ் பாங்க் தருகி றார்கள் என்று சொல்லலாம். நான் சொல்லுவது என்னவென் றால், இந்த அம்மாவிற்கு பெரிய வியாதி, இந்த வியாதியை தமிழ்நாட்டிலோ அல்லது இந்தியாவிலேயோ குணப்படுத்த முடி யாது; வெளிநாட்டுக்குப் போனால்தான் இந்த அம்மையார் பிழைப்பார்கள் என்ற நிலைமை இருந்து ஒரு சர்டிபிகேட்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

கொடுக்கப்பட்டால்தான் அந்தப் பணத்தை அவர்கள் தருவார்கள் என்று நான் அறிந்த வரையில் அறிகிறேன். அந்த அம்மையாருக்கு ஒரு வியாதி இருக்கிறது, அதை தமிழ்நாட்டிலோ அல்லது இந்தியாவிலேயோ குணப்படுத்த முடியாது, ஆகவே ........

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் இல்லாத ஒருவரைப் பற்றி நல்லெண்ணத்தோடோ அல்லது செய்திகளை தெரிய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடோ பேசுவதைக் குறைத்துக்கொண்டு தயவு செய்து அவர்கள் உள்ளத்தைப் புண்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அவர்கள் நீங்கள் இங்கே எழுப்புகிற கேள்விகளுக்கு பதில் சொல்வது முடியாது, அவர்கள் இந்த அவையின் உறுப்பினர் அல்ல. இந்த முறைகளை எல்லாம் தெரிந்த துரை முருகன் அவர்களுக்கு இன்னும் ஒரு வேண்டுகோள். தயவு செய்து சகட்டுமேனிக்கு குற்றச்சாட்டுகளை அள்ளி வீசாமல் பொறுப்போடு ஒன்று, இரண்டு, மூன்று என்று, ஆதாரங்களோடு அவர்கள் பேசுவார்களேயானால் அவர்களது பேச்சு சிறப்பாக இருக்கும், அவர்களின் பணியும் சிறக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு மூன்றாவது வேண்டுகோள் கொஞ்சம் உடல் நலத்தையும் பேணிப் பாதுகாத்துக் கொள்ளத்தக்க அளவிற்கு அவர்கள் கொஞ்சம் உணர்ச்சிவசப்படாமல் பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் என்மீது பொழிகிற அன்பிற்கு நன்றி. நான் கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவெனில், அந்த நடிகைக்கு வியாதி என்றும் அந்த வியாதியை தமிழ்நாட்டிலோ அல்லது இந்தியாவிலோ குணப்படுத்த முடியாது, வெளிநாடு போனால்தான் குணப்படுத்த முடியும் என்று ஒரு டாக்டர் சர்ட்டிபிகேட் கொடுக்கப்பட்டதா? அப்படி கொடுக்கப்பட்டது என்றால் அப்படிக் கொடுத்தவர் தமிழ்நாடு அரசின் உயர்தர அதிகாரியா, அந்த அதிகாரிதான் டி. எச். எஸ்.-யா? அந்த அதிகாரிக்கு முதல் அமைச்சர் அவர்கள் போன் செய்து சொன்னாரா? அப்படிச் சொன்னதின் பேரில்தான் கொடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன். இப்படி நடக்கவில்லை என்றால், அப்படி ஒரு சர்ட்டிபிகேட் கொடுக்கப்பட்டிருக்குமானால் இல்லாத வியாதிக்கு கொடுத்த ஒரு சர்ட்டிபிகேட், பொய் சர்ட்டிபிகேட் கொடுத்திருந்தால் நாம் எல்லோரும் அல்ல, மத்திய அரசு மட்டுமல்ல ரிசர்வ் பாங்கையே ஏமாற்றி 10,000 டாலர் தருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். இன்னொன்று. நமது முதலமைச்சர் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டு வந்தார்கள். மகிழ்ச்சி. தமிழர்கள் பெருமை பாரெல்லாம் உயரவேண்டும் என்று போய்விட்டு வந்தார்கள். போகட்டும். நான் சொல்லுவது என்னவென்றால், முதல் அமைச்சர் அவர்களிடம் ஒரு





நிருபர் கேட்டார், நீங்கள் வெளிநாடு போகிறீர்களே, நீங்கள் மருத்துவத்திற்காகப் போகிறீர்களா என்று. அப்படி அந்த நிருபர் கேட்டபோது அதற்கு முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள்? எனக்கா மருத்துவச்செலவு.... கான்ஸர் என்றா சொல்கிறார்கள், சொல்லுகிறவர்கள் தான் இன்றைக்கு ஆஸ்பத்திரிக்குப் போய் படுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றார். முதல்வர்க்கு அனுமதி கொடுக்கும் போது ரிசர்வ் பாங்க் என்ன எழுதியிருக்கிறது? அதிலே அவர்கள் வைத்தியச் செலவிற்கு என்று, அவர்கள் வைத்தியம் செய்து கொள்ளப் போகிறார்கள் என்று எழுதியிருக்கிறது. ஒருக்கால் முதலமைச்சர் அவர்கள் வைத்தியத்திற்கு என்று செல்லாமல், வைத்தியச் செலவிற்கு என்று இல்லாமல் வாங்கியிருந்தால் ஒன்று செய்திருக்கலாம், ஏரோட்ரோமிற்கு வந்தவுடன் பணத்தை ரிட்டேர்ன் செய்திருக்கலாம். வைத்தியச் செலவிற்கு என்று வாங்கிவிட்டு மக்களிடம் சொல்லுகிறபோது வைத்தியமா, எனக்கா, அப்படிச் சொன்னவர்தான் ஆஸ்பத்திரிக்குப் போனார் என்றால் அந்த சர்ட்டிபிகேட்டைக் கையில் வைத்துக் கொண்டு முதல் அமைச்சர் அவர்கள், அவ்வளவு பெரியவர் இவ்வளவு பெரிய உண்மைக்கு மாறானதைச் சொல்கிறதா, அதைத் தெளிவுபடுத்த வேண்டும். இன்னும் ஒன்று. டெல்லியில் ஒரு அதிகாரியை நீங்கள் போட்டிருக்கிறீர்கள். அவர் பெயரைச் சொல்லலாம் அல்லவா, ராஜாராம். அவர் இந்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் இடையே உள்ள ஒரு இணைப்புப் பாலம். ஏற்கனவே ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசரைப் போட்டிருக்கிறார்கள். இவரையும் போட்டிருக்கிறார்கள். இவருக்கு என்ன வேலை, என்ன சம்பளம் என்று தெரியவில்லை. அவருக்கு அங்கே வேலை, இங்கே பங்களா, அங்கே, இங்கே கார் சவாரி. அவருக்கு போய் வர டீ. ஏ. ஒரு அவசரக் கேள்வி போட்டிருக்கிறேன், அதற்காகும் செலவு எவ்வளவு என்று. குருடி தண்ணீருக்குப் போனாள் கூட எட்டு பேர்களுக்கு வேலை கெட்டது என்பார்கள். அந்த அதிகாரிக்கும் சம்பளம், ராஜாராமிற்கும் சம்பளம். அவருக்கும் வீடு, இவருக்கும் அலவன்ஸ், இவருக்கு போய் வர ப்ளேன் பேர் என்றால், இவர் என்ன சாதித்திருக்கிறார்? இங்கிருந்து என்.டி.ஸி. மீட்டிங்க்கு திரு. இராமச்சந்திரன் அவர்கள் போகிறார்கள். நிதி அமைச்சருக்கு உடல் நலம் சரியில்லை என்பதால் அவர்கள் போகவில்லை.

[முற்பகல் 11.40]

ஒரு பொறுப்புள்ள பத்திரிகை ** * * *
நான் சொல்ல விரும்புவது......

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1979 பிப்ரவரி 12

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் * * பத்திரிகையில் வந்த செய்தி என்று குறிப்பிட்ட பகுதிகள் அத்தனையையும் சபைக் குறிப்பிலிருந்து நீக்கும்படியாக உத்தர விடுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இப்படி பத்திரிகைகளை படித்துக் காட்டுவதற்கு முன்பு....

திரு. துரை முருகன் : நான் பத்திரிகைகளை படித்துக் காட்டவில்லையே....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சரி, பத்திரிகைகளில் வந்திருக்கிற செய்திகளை வெளியிடுவதற்கு முன்பு அவைத் தலைவரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பது இந்த அவையின் மரபாக இருந்துவந்திருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது என்பதை மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு உதவி சபா நாயகர் அவர்கள் அளித்த தீர்ப்பு மிகவும் நியாயமான தீர்ப்பு என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. துரை முருகன் : அவை முன்னவர் அவர்கள் பத்திரிகையைப் படித்ததாகச் சொன்னார்கள், படிக்கவில்லை. பத்திரிகையின் பெயரைத்தான் சொன்னேன். பத்திரிகையை நான் காட்டவும் இல்லை. கையில் வைத்திருக்கிறேன் அவ்வளவுதான், ஏன் இதைக் குறிப்பிட்டேன் என்றால், அரசாங்கத்திலிருந்து சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார் ஆகவே அவரைப்பற்றி வந்திருக்கின்ற செய்தியைத்தான் சொன்னேன். நான் பத்திரிகையை கையில் வைத்துக்கொண்டிருக்கிறேன் என்றால் எத்தனையோ பத்திரிகைகளை வைத்துக்கொண்டிருக்கிறேன், . சினிமா பாட்டுப் புத்தகம் கூட வைத்துக்கொண்டு இருக்கிறேன். பத்திரிகையிலுள்ள செய்தியைத்தான் சொன்னேனே தவிர பத்திரிகையைக் காட்டவில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிகையைக் காட்டியதோடு மட்டுமல்லாமல், அந்தப் பத்திரிகையைப் பற்றியும், அதன் ஆசிரியரின் மரியாதையைப் பற்றியும் எடுத்துச் சொல்லி, அந்தப் பத்திரிகையில் வந்த செய்தியைப் பற்றியும் சொல்லிவிட்டு, நான் அப்படி பத்திரிகையைக் காட்டவில்லை என்று இப்போது அவர்கள், தான் செய்யாததைப் போல் சொல்வது—அவருடைய திறமையை நான் பாராட்டுகிறேன்—ஆனால் அந்தத் திறமை வேறு நல்ல காரியங்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதுதான் எனது விருப்பம்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1979 பிப்ரவரி 12]

திரு. துரை முருகன் : இப்படி ஒரு செய்தி வந்திருக்கிறது, இதை அவரும் மறுக்கவில்லை. அரசாங்கமும் மறுத்து எவ்வித அறிக்கையும் வெளியிடவில்லை. இப்படி வெளியிட்டதற்கு வக்கீல் நோட்டீசும் வரவில்லை. ஆகவேதான் நான் குற்றஞ் சாட்டுகிறேன்.... * * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே அவை முன்னவர் [illegible] சொன்னதுபோல் இப்படிப்பட்ட குற்றச் சாட்டுகளைச் [illegible] ம்போது, பத்திரிகைகளிலுள்ள செய்திகளைச்சொ[illegible] அல்லது வாசிக்கும்போது என்னிடம் கேட்டிருக்க[illegible]

[illegible] : நான். வாசிக்கவில்லையே....

[illegible] ரவைத் துணைத் தலைவர் : வாசித்தாலும் [illegible] னப்பாடம் செய்து கொண்டு சொன்னாலும் [illegible] கள் பத்திரிகையைக் காட்டித்தான் பேசினீர்கள். [illegible] ராம் பற்றியும் அதன் தொடர்பாக * * * * [illegible] தனை குறிப்புகளையும் நீக்கும்படி உத்தரவிடுகின் [illegible] * ராஜாராம் பற்றி தனியாகக் கூறியவைகள் வேண்டு [illegible] ல் இருக்கலாம் * * *

திரு. துரை முருகன் : துணைச்சபாநாயகர் அவர்களே, நான் பத்திரிகையை காட்டவில்லை. கையில்தான் வைத்திருந்தேன் * * * * * என்று சொன்னால் அதற்காக ஏன் இவர்கள் பயப்படுகிறார்கள் * * * * என்று தெரிகிறது, அல்லது சொல்லப்படுகிறது என்றெல்லாம் செய்திகள் வருகின்ற நேரத்தில் * * * * ஏன் நினைக்கக் கூடாது ? இதற்கு இந்த சர்க்கார் உடந்தையாக இருந்திருக்க வேண்டும்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் மீண்டும் வேறுவிதமாகத்தான் பேசிக்கொண்டேயிருக்கிறீர்கள், இப்படிப் பேசிக்கொண்டிருந்தால் என்னால் இதை அனுமதிக்க முடியாது. மீண்டும் சொல்லுகிறேன். பத்திரிகை * * * * இவைகளை எல்லாம் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. துரை முருகன் : நான் சும்மா சொல்லவில்லை. அரசாங்கத்தின் பணத்தை அவர் சம்பளமாகப் பெறுகிறார். இவர் வாங்குகின்ற பணம் யார் வீட்டுப்பணம், யார் அப்பன் வீட்டுப் பணம், இவருக்கு அரசாங்கச் சம்பளம், பங்களா, கார்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் இதை விட்டுவிட்டு, வேறு விஷயங்களைப் பேசுங்கள் * * * சம்பந்தப் பட்ட விஷயங்களை குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் பேசுகின்றபோது, நான் அந்த அரசின் மீது சாட்டியுள்ள குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்பேற்கிறேன் என்று சொல்லுகிறபோது, அதை ஏற்பதற்கு என்ன தடை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் அரசின் மீது குற்றம் சாட்டவில்லை. * * என்றுதான் சொன்னார். அதற்கு அவர் பொறுப்பேற்கிறேன் என்று சொன்னால், அதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : இன்னொரு முக்கியமான விஷயம். அரசாங்கத்திலே சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிற அவரைப் பற்றி, மத்திய சர்க்காருக்கும் மாநில அரசாங்கத்திற்கும் இடையே நல்லெண்ண தூதுவராக பணியாற்றும் அவரைப் பற்றி அதுவும் மேலவை உறுப்பினர் ஒருவர் நடத்தும் பத்திரிகையிலே இப்படியெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது. இதுவரையில் அவரும் மறுக்கவில்லை, தனிப்பட்ட வகையில். இந்தச் சர்க்காரும் மறுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சாரி, தயவு செய்து அமருங்கள். பத்திரிகையிலே இப்படியெல்லாம் செய்தி வந்திருக்கலாம். இந்த * * * அவர் காட்டிய பத்திரிகைச் செய்திகளையும் சபைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தர விடுகிறேன்.

திரு. துரை முருகன் : நான் பத்திரிகையைப் பார்த்துப் படிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் * * பத்திரிகையை தாங்கள் கையில் வைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேனே. எனவே, நீங்கள் தொடர்ந்து இப்படிப் பேசினால், அடுத்து மாண்புமிகு உறுப்பினர் சௌந்திரராசன் அவர்கள் பேசுவார்.

திரு. துரை முருகன் : ஒன்றே ஒன்று, முக்கியமான விஷயம். அதைச் சொல்லி முடித்துவிடுகிறேன். இதேபோன்றுதான் சட்டம் ஒழுங்கைப் பற்றி இங்கே நண்பர்கள் பேசினார்கள். நாட்டிலே என்ன நடக்கிறது என்று சொன்னால், எதிர்க் கட்சித்

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





தலைவர் அவர்கள் காரிலே போகின்றபோது, உளியால் தாக்கப்படுகின்றார். ஆனால், இந்த சர்க்கார் அதற்கும் ஒரு திட்டம் தீட்டுகின்றது. அப்படி அந்த உளியை வீசியவனுக்கு மூளைக் கோளாறாக இருக்கலாம் என்று சொல்லுகிறது. அவனுக்கு மூளைக் கோளாறா அல்லது இந்த சி.ஐ.டி. டிபார்டுமென்டு இருக்கிறதே, அதிலே உள்ளவர்களுக்கு மூளைக் கோளாறா என்று தெரியவில்லை. என்ன அக்கிரமம். யார் என்ன செய்தாலும், அதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதில்லை. ஏதாவது காரணங்கள் கூறப்படுகின்றது. இதேபோல் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களது இல்லம் தாக்கப்பட்டபோது, போலீசார் நான்கு பேர்களை கைது செய்தார்கள். ஒருவர் அந்தப் பகுதி செயலாளர் ; மற்றொருவர் தலைவர், மன்றச் செயலாளர் ; இன்னொருவர் தி.மு.க. உறுப்பினர் என்று சொல்லி, அவர்கள் மீதே வழக்கு தொடர்ந்தார்கள். உண்மையிலே நான் மிகவும் வருந்தப்படுகிறேன். உரிய நடவடிக்கைகளை எடுத்தோம் என்று எடுத்துச் சொல்வதற்கு வக்கில்லாத இந்த சர்க்கார், ஏதாவது ஒரு காரணத்தை எடுத்துச் சொல்லுகிறது. பைத்தியக்காரனாக இருக்கலாம் என்று சொல்வது வேடிக்கையாகவும், வேதனையாகவும் இருக்கிறது.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இதேபோன்று நம் தானைத் தலைவர், எதிர்க் கட்சித் தலைவர் என்கின்ற முறையிலே அவருக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக செக்யூரிடி என்று சொல்லி, இன்றைக்கு ஒரு போலீசை அனுப்பியிருக்கிறது. தி.மு.க. சார்பிலே இந்தப் பாதுகாப்பு தேவையில்லை என்று சொல்லி, இந்த சர்க்காரை திருப்பி எடுத்துக் கொள்ளும்படி சொல்லியிருக்கிறது. எங்கள் தானைத் தலைவரைக் காப்பாற்றுவதற்கு இந்த நாட்டிலே லட்சோப லட்சம் இளைஞர்கள் இருக்கிறார்கள், இந்த சர்க்காரின் போலீஸ் பாதுகாப்பு தேவையில்லை என்று சொல்லிக் கொள்வதோடு, எங்கள் தானைத் தலைவரின் மேல் ஒரு சிறு துரும்பு விழுந்தாலும், பலபல தலைகள் அவரின் பாதத்திலே வந்து விழும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிப்ரவரி 9 ஆம் தேதி, இந்த மன்றத்தில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அருமை உறுப்பினர் மாண்புமிகு முத்தையா அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை, வழிமொழிகின்ற வகையிலே நான் சில கருத்துக்களை உங்கள் முன்னால் வைக்கிறேன்.

இன்றைய தினம் ஆளுநர் அவர்கள் உரையின்மீது பேசுகின்ற சூழ்நிலையில் நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் இந்த நாட்டிலே எந்த அளவிற்கு

[திரு. கே. சௌந்திரராசன்] [1979 பிப்ரவரி 12

சூழ்நிலை இருக்கிறது என்பதை எடுத்துச்சொல்லுகின்ற நேரத்தில் இந்த ஆளுநர் அவர்கள் உரையை படிக்கின்ற நேரத்தில் 'நான் ஒரு பைத்தியக்காரன் என்று' குறிப்பிட்டார்கள்,

[முற்பகல் 11.50]

உள்ளபடியே அவர் படிக்கின்றபோது பைத்தியக்காரராக இருந்து படித்தாரா அல்லது உறுப்பினராக இருந்து படித்தாரா என்று சந்தேகப்படுகிற வகையில் இன்றைய தினம் அவருடைய பேச்சு இங்கே அமைந்திருக்கிறது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரை என்று கடந்த காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் அளிக்கிறபோது அந்த உரையிலே, இருக்கின்ற அரசினுடைய இலட்சியங்களும் கொள்கைகளுந்தான் இருக்குமே தவிர அதிலே புள்ளி விவரங்கள் இருக்கவேண்டும், ஒவ்வொன்றும் விரிவாக இருக்கவேண்டுமென்று யாராவது கருதினால் அதுசரியல்ல. இதற்கு முன்னால் நடை முறையில் எவ்வாறு இருந்தது என்று கேட்டுக் கொள்வது என்னுடைய தலையாய கடமை என்று கருதுகிறேன்.

அதைப் பற்றி பேசுகிற நேரத்தில் அது சர்வரோக சஞ்சீவினியா என்று மாண்புமிகு துரை முருகன் அவர்கள் கேட்டார்கள். இன்றைய தினம் சர்வரோக சஞ்சீவினியாக ஆளுநர் உரை இருக்கவேண்டுமென்று அவர் கருதியிருந்தால் கடந்த காலத்தில் இருந்த உரைகளைத் தயவுசெய்து அவர்கள் மீண்டும் எடுத்துப் பார்ப்பார்களேயானால் அவை சர்வரோக சஞ்சீவினியாக இருந்திருக்கின்றனவா என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்த நாட்டில் இன்று எந்த அளவுக்கு வறுமையும் இல்லாமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் இருக்கின்றன என்பது தெரியும், அந்த ஏழை எளியவர்களுக்கு நல்வாழ்வு வழங்கப்பட்டிருக்குமானால் இன்று இந்த நிலை இருக்காது. இவர்கள் அன்று அளித்த சர்வரோக சஞ்சீவினி அந்த ஏழை எளியவர்களுக்குக் கிடைக்கவில்லையோ என்னவோ தெரியவில்லை என்ற உணர்வு இங்கே இருக்கின்ற அத்தனை பேருக்கும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இப்போது ஆளுநர் உரையிலே என்ன இருக்கவேண்டுமோ தெளிவாக இருக்கிறது. ஏழை எளியவர்கள் வாழ்வு வளமாக்கப்பட வேண்டும் என்பதற்கான லட்சியக் கோடுகள் அதிலே தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. கடந்த காலத்தில் 1967-ல் இருந்து கவர்னர் பெருமானுடைய உரைகளைத் திரும்பத் திரும்பப் பார்க்கிறபோது அந்தப் பக்கங்களில் பெரும் பகுதியான பக்கங்கள் நாட்டில் உணவு நிலைமைகளைச் சீர்திருத்தவும், விவசாயத்தைப் பெருக்கவும் என்ன திட்டங்கள் என்பதைத்தான் கொண்டிருக்குமே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1979 பிப்ரவரி 12] [திரு. கே. சௌந்திரராசன்]

இன்றைய தினம் இருக்கிற இந்த அரசு அமைந்தபின்னால் தான் உணவு நிலைமை நாட்டில் மிக நல்ல வகையில் அமைந்திருக்கிறது. இயற்கைச் சூழ்நிலை ஒத்துழைத்தும், அரசினுடைய திட்டங்களும், கள்ள வாணிகம் பெருக முடியாத சூழ்நிலைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் காரணத்தாலும் உணவு நிலைமை தெளிவாக இருக்கும் காரணத்தால் இந்த உரையிலே சுருக்கமாக அதைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு பல்வேறு மற்றத் திட்டங்களைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அந்த உரையிலே கூட, இங்கே இருக்கும் விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு உற்பத்திச் செலவு அதிகமாகிறது என்பதை மத்திய சர்க்காருக்குச் சுட்டிக் காட்டி அவர்களுடைய உற்பத்திப் பொருளுக்கு நிர்ணயித்திருக்கிற விலை போதாது என்ற முறையில் எந்த அளவுக்கு மத்திய சர்க்காரைக் கண்டித்திருக்கிறோம் என்பதைத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். ஒரு மாநில சர்க்கார் எந்த அளவுக்கு மாநில சர்க்காரின் கொள்கைகளையும், லட்சியங்களையும் மாநிலத்தின் வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் நடைமுறைப் படுத்த முடியாமல் இருக்கிறது, மத்திய சர்க்கார் எப்படி தடையாக இருக்கிறது என்பதை உள்ளபடியே இந்தச் சர்க்கார் எந்த அளவுக்கு தைரியத்தோடு திறமையாக மத்திய சர்க்காருக்கு எடுத்துக் கூறியிருக்கிறது என்பதை இங்கே இருக்கிற உறுப்பினர்கள் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன்.

ஆனால் இதற்கு மாறாக தாங்கள் எதைச் சொல்ல வேண்டுமென்று கருதினார்களோ அதைச் சொல்வதற்காக லட்சியங்களையும், கொள்கைகளையும் தூக்கி எறிந்து விட்டு குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கிறார்கள். ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிற பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசாமல், உற்பத்திப் பெருக்கத்திற்காக மின்சாரத் துறையில் ஆற்ற இருக்கும் திட்டங்கள், எதிர்காலத்தில் ஏற்றுக் கொள்ள இருக்கும் திட்டங்கள் இவைகளைப் பற்றியெல்லாம் குறிப்பிடாமல் பொதுவான முறையில் பேசியது வருந்தத்தக்கது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, திராவிட சமுதாயத்திற்காக தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் கடந்த 60 ஆண்டுக் காலத்தில் பாடுபட்டு வாங்கித் தந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கூட இந்தச் சர்க்கார் புறக்கணித்து விட்டது என்பது போன்ற ஒரு மாயையை உருவாக்கி உறுப்பினர் துரை முருகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் மெத்த வருத்தப்படுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியிலும், மதிப்பிற்குரிய தந்தை பெரியார் அவர்கள் வழியிலும் இன்றைய தினம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் இந்த ஆட்சியை நடத்தி வருகிறார்கள் என்பதில் எங்களைப் போன்ற உறுப்பினர்களுக்கு திராவிடப் பாரம்பரியத்தில் வந்தவர்களுக்கு சந்தேகம் கிடையாது என்று தெளிவாகச் சொல்லிக் கொள்

கிறேன். எந்த இடத்தில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் பறக்கவிக்கப்பட்டிருக்கிறது என்று தெளிவாகக் குறிப்பிட்டுச் சொல்வார்களானால் நிச்சயம் அதற்கான பரிகாரத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் புரட்சித் தலைவர் எடுப்பதற்கு எந்த நேரத்திலும் தயங்கமாட்டார்கள் என்பதையும் நான் தெளிவாகச் சொல்லிக் கொண்டு ஏதோ திராவிடப் பாரம்பரியத்திற்கு தாங்கள் தான் சொந்தக்காரர்கள், இந்த நாட்டில் தங்களை விட்டால் யாரும் இல்லை என்ற மாயையை உருவாக்க வேண்டாம் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் துரை முருகன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் அந்த வாதத்தைக் கடுமையாக மறுக்கக் கடமைபட்டு இருக்கிறேன். 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடைகளை சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டிலிருந்து அதன் மூலமாக திறந்திருக்கிற நேரத்திலே துரை முருகன் அவர்கள் சுமைதாங்கி என்ற ஊரிலே அந்தக் கடையிலே சோப்பு, சீப்பு, கண்ணாடி தான் இருந்ததாகக் குறிப்பிட்டார்கள். நான் உண்மையிலேயே அவர்களைப் பார்த்து வேதனைப் படுகிறேன். ஒரு வேளை கடையிலிருந்த குமாஸ்தா அவருக்கு அதுதான் தேவை என்று கருதினாரோ என்று தான் நான் நினைக்கிறேன்.

<u>திரு. மா. மணிமாறன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பேசியபோது, திரு. துரை முருகனைப் பார்த்தவுடன் சோப்பு, சீப்பு, கண்ணாடி கொடுத்திருப்பார்கள் என்று சொன்னார்கள். அப்படியானால் மாண்புமிகு உறுப்பினர் சோப்பு, சீப்பு, கண்ணாடியைப் பயன்படுத்தாமல் பரட்டைத் தலையோடு இருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

<u>திரு. கே. சௌந்திரராசன் :</u> திரு துரை முருகன் அவர்கள் பேசும் போது காமராஜர் காலத்திலிருந்து கலைஞர் காலம் வரையிலே உள்ள கவர்னர் உரைகளிலிருந்து கிழித்து இதிலே கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

நான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்ட மாதிரி, கவர்னர் உரை என்பது ஒரு அரசாங்கத்தினுடைய லட்சியங்களையும், கொள்கைகளையும் எடுத்துக் கூறுவதுதான். கடந்த காலத்திலே நல்ல திட்டங்கள் இருந்தாலும், நல்ல செயல்கள் இருந்தாலும், அவைகளை எல்லாம் தூக்கியெறிய வேண்டுமென்று எதிர்க்கட்சி உறுப்பினர் கருதுகிறாரா என்று தெரியவில்லை. அவைகள் எல்லாம் ஏட்டளவிற்கு இல்லாமல் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தால் அது தவறு என்று அந்த உறுப்பினர் கருதுகிறாரா என்ற கேள்வியை நான் வைக்க விரும்புகிறேன். பினாமி நிலங்களை எடுத்துக் கொள்வதைப் பற்றி அவர்கள் வேதனைப் பட்டுச் சொன்னார்கள். கடந்த ஆட்சித் காலத்திலே அப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் செயல்பட்டிருக்கிறார்கள் என்று பார்க்கிற போது வேதனையாக



இருக்கிறது. இந்த சர்க்கார் வந்ததற்குப் பிறகு கடந்த காலத்திலே யார் யார் பினாமி சொத்துக்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தீவிரமாகக் கவனித்து வருகிறது. ஒரு ஏக்கர் நிலத்திற்கு 15 ஆயிரம் ரூபாய் விலை கொடுத்த நிலைமையை மாற்றி ஒரு ஏக்கருக்கு 3,500 ரூபாய் மட்டும் தரக்கூடிய அளவிற்கு சட்டத்தை மாற்றியமைக்கவும், அதன் மூலமாக அந்தச் சட்டத்திற்கு வலிவு கொடுக்கக் கூடிய நிலையை ஏற்படுத்துவது இந்த சர்க்கார்தான் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். தலைமையில் அமைந்துள்ள இந்த சர்க்கார் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மன்றத்திலே பல கதைகளைப் பேசி தன்னை லயித்துக் கொண்டு விடுவதன் மூலமாக இந்த உரையிலே பல்வேறு விஷயங்களை விட்டு விடுவது தங்களைத் தவறான திசைக்கு அழைத்துச் செல்கிறார்களோ என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது.

இந்த உரையில் உள்ள யதார்த்தமான நிலைமைகளை, ஏழை எளிய மக்களின் வாழ்விற்காக அளிக்கப்பட்டுள்ள திட்டங்களை எல்லாம் எண்ணிப் பார்ப்பதற்கு அவர்களால் இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது என்று சொல்வார்களே அதைப் போன்று வீர வணக்க நாளைப் பற்றிச் சொன்னார்கள். இந்தி எதிர்ப்பு நாள் பற்றி நினைக்கும் போது வீர வணக்க நாளைப் பற்றி நினைக்காமல் இருக்க முடியாது. இந்தி எதிர்ப்பிலே ஈடுபட்ட இளைஞர்கள் தங்களை எத்தனை எத்தனை இன்னல்களுக்கு ஆளாக்கி கொண்டிருக்கிறார்கள்; தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் வீர வணக்க நாள் என்றதுமே நம் கண் முன்னே வந்து நிற்கிறார்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா இவர்களைவிட வேறு யார் இந்தியின் கொடுமை பற்றிச் சொல்லி இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தி எதிர்ப்புக்குப் பின்னால் எத்தனை பெரிய வரலாறுகள் தியாகங்கள் இருக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு அமைந்ததற்குப் பின்னாலே எம்ப்ளாய்மெண்ட் கியாரண்டி ஸ்கீம் என்ற திட்டம் கொண்டுவரப்படுகிறது.

[நண்பகல் 12.00]

இந்தத் திட்டம் ஏழை எளியவர்களுக்கும், கிராமப்பகுதி மக்களுக்கும் வேலைவாய்ப்பு தருவதற்காக, வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளிப்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியும்பொழுது உள்ளபடியே நான் இந்த அரசைப் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் குறிப்பிட்டார்கள், கலைஞர் அவர்கள்மீது எங்கோ கொலை முயற்சி நடைபெற்றதாக அருமை உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால்

[திரு. கே. சௌந்திரராசன்] [1979 பிப்ரவரி 12

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி மன்றத்திலே இருந்த நேரத்தில் இந்த நாட்டிலே என்னென்ன கொலைகள் நடைபெற்றிருக்கின்றன என்ற பட்டியலைப் பார்த்தால் இந்த மாமன்றம் ஒரு ஆண்டுக்காலம் நடைபெற்றாலும்கூட அத்தனை விஷயங்களையும் எடுத்துச் சொல்வதற்கு நேரம் கிடைக்காது. அந்த அளவிற்கு நடைபெற்று இருக்கிறது அதற்காக இது முறை என்று சொல்லவில்லை. எந்த இடத்தில் எந்தத் தவறு நடந்தாலும் அவைகளைக் கண்டிக்கவும், தடுத்து நிறுத்தவும் இந்த மாமன்றம் தயாராக இருக்கிறது. என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கடந்த காலத்தில் ஆவடியில் புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் செல்லும் நேரத்தில் எந்த அளவிற்கு அவரது உயிருக்குச் சேதம் விளைவிக்க முயற்சி நடந்திருக்கிறது என்று எண்ணிப்பார்க்க வேண்டும் அதற்காகக் கொலை முயற்சிக்குக் கொலை முயற்சி பரிகாரம் என்று சொல்ல வரவில்லை. அத்தகைய முயற்சிகள் இந்த நாட்டில் கிள்ளியெறியப்படுவதற்கு அனைவரும் ஒருமுகமாகப் பாடுபட வேண்டுமென்று கூறி, இந்த அரசு தயாரித்துத் தந்திருக்கின்ற ஆளுநர் உரையை முழுமனதுடன் வரவேற்று, அருமை நண்பர் திரு. முத்தையா அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆளுநர் உரையில், தமிழகத்தைப் பொறுத்த வரையில் இன்றையதினம் விவசாயிகள் மிகப் பெரிய கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள், அதுபற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. தமிழக விவசாயிகள் அத்தனைபேரும் தமிழகத்தின் வரலாறுகாணாத அளவிற்கு இன்று எங்குபார்த்தாலும் பெரிய கிளர்ச்சியில் ஈடுபட்டு வரிகொடா இயக்கம் என்ற உச்சக்கட்டத்திற்குப் போகும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றம் நன்கு அறியும். ஆனால், அதைப்பற்றி ஒரு வரிகூட ஆளுநர் உரையில் இல்லாததுகண்டு மிகுந்த வருத்தப்படுகிறேன். கடந்த காலத்தில் என்றுமில்லாத அளவிற்கு இந்த விவசாயிகள் மத்தியிலே கிளர்ச்சி ஏற்பட்டு புதுக்கோட்டை, தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வரிகொடா இயக்கத்தில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு இருக்கிறார்கள். பத்திரிகைகளிலும் தெளிவாக வந்திருக்கிறது. அதிகாரிகள் வசூலுக்காகவும், கூட்டுறவுக் கடன் வசூலுக்காகவும் கிராமங்களில் நுழைவதற்குப் பயப்படுகிறார்கள் என்ற செய்தியை இந்த நேரத்தில் நான் தெரிவித்து வித்துக் கொள்கிறேன். அவ்வளவுதூரம் விவசாயிகள் இருக்கும் வேகத்தைப்பற்றி ஒரு வரிகூட ஆளுநர் உரையில் கூறப்படவில்லை. அதற்கான வழிமுறைகளும் சுட்டிக்காட்டப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1979 பிப்ரவரி 12] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

விவசாயிகளுடைய கடன் சுமை என்பது என்ன என்று பார்க்க வேண்டும். சுதந்திரம் இந்த நாட்டிற்கு வந்த நேரத்தில் இந்த நாட்டில் சர்க்கரை கிடையாது, துணி கிடையாது அதற்கான பருத்தி உற்பத்தி கிடையாது, சாப்பிடக்கூட அரிசி கிடையாது, என்ற சூழ்நிலை இருந்தது, நம்முடைய ஒப்பற்றத் தலைவர் ஜவஹர்லால் நேரு அவர்களின் ஆட்சிக்காலத்தில் பல கூட்டுறவுத் திட்டங்களை நிறைவேற்றி அதன்மூலம்வெளி நாடுகளிலிருந்து ஏராளமான பண உதவி பெற்று விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து உற்பத்தியைப் பெருக்கினார்கள். அவ்வாறு உற்பத்தி செய்ததை வைத்துக்கொண்டு தேசத்தின் வருமானத்தைப் பெருக்கினார்களே தவிர விவசாயிகளுக்கு அவர்களது விளைபொருட்களுக்கு முறையான விலை கிடைக்காததால் அவர்கள் இன்று வறுமையில் தவிக்கிறார்கள், கடன்பட்டு உழல்கிறார்கள். இவ்வளவு அருமையாக உற்பத்தி செய்து தேசத்தின் விளைச்சலைப் பெருக்கி இருக்கின்ற விவசாயிகளுக்கு அரசாங்கம் செய்யப்போவது என்ன என்பதை இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன். விவசாயிகள் 400 கோடி ரூபாய் கடன் சுமையில் வாடுகிறார்கள் என்று எனக்குச் செய்திகள் தரப்பட்டிருக்கின்றன. அது உண்மையாக இருக்குமேயானால் அதில் பாதியையாவது குறைந்தபட்சம் தள்ளுபடி செய்து அவர்களுக்கு விடுதலை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக நம்முடைய அரசு புதிய வரியைக்கூட, தாங்குபவர்கள்மீது போட்டாவது விவசாயிகளை கடன் சுமையிலிருந்து விடுவிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் இந்த நாட்டில் நம்முடைய அரசுக்கு நம்பிக்கையாக விவசாயிகள் இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள் இன்றையதினம் பெரிய அதிர்ச்சியில் இருக்கிறார்கள். வருங்காலத்தில் அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்ற சூழ்நிலை இந்த அரசுக்குத் தெரியாமல் இருக்குமா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

கடந்த எட்டாம் தேதியன்று சிவகங்கையில் நடைபெற்ற சர்வகட்சி விவசாயிகள் மாநாட்டிற்கு நானும் சென்றேன். விவசாயிகள் அவர்களாகவே ஒன்று திரண்டு மாட்டு வண்டிகளை வைத்துக் கொண்டு சிவகங்கை நகரத்தில் விவசாயிகள் கூட்டமாக, வண்டிகளில் கூட்டமாக அங்கே நிகழ்ந்ததைப் பார்த்தேன். இதுபோன்றே புதுக்கோட்டையிலும், திருச்சியிலும், இப்படி எல்லா ஊர்களிலும் விவசாயிகள் கிளர்ந்தெழுந்திருக்கிறார்கள் என்பதை கவனத்திற்கொள்ள வேண்டும்.

ஆனால் அதேநேரத்தில் நம்முடைய முதலமைச்சரவர்கள் விவசாயிகளுடைய பிரச்னைகளை உணர்ந்திருக்கிறார்களா என்று சொல்வதற்கு முன்னால் ஒன்றைச் சொல்கிறேன், மகாராஷ்டிர முதலமைச்சர் ஷரத் பவார் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

இந்த நாட்டில் இருக்கிற விவசாயிகளுக்கு மட்டும் 13 சதவிகிதம், 15 சதவிகிதம் வட்டிக்கு ரிசர்வ் வங்கி கடன் கொடுகிறது. அதே நேரத்தில்கிராமப்புறத்தில் தொழில் தொடங்குகின்ற தொழில் அதிபர்களுக்கு 6½ சதவிகிதம்தான் வட்டி வசூலிக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள் ஜனதா அரசை நம்பியிருக்கிற ஷரத் பாவர் மத்திய அரசை இந்த அளவு சாடுகிற நேரத்தில், நம்முடைய முதலமைச்சர் மிகக் கடுமையான வார்த்தைகளைப் போட்டு மத்திய அரசைச் சாடியிருக்க வேண்டுமென்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் நம்முடைய முதலமைச்சர் வேண்டுகோள் கொடுக்கிறார். நம்முடைய பஞ்சாயத்து போர்டில் தீர்மானம்போட்டு அரசுக்கு அனுப்புவது போல் விவசாயிகளுக்கு, கூடுதலான நியாய விலை கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்களே தவிர, கூடுதலான நியாய விலையைப் போட்டுக் கொடுத்து, அதை மத்திய அரசு மறுத்தால், ஒரு போராட்டத்தைத் தொடங்கியிருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில்நான்தெரிவித்துக்கொள்கிறேன்

நியாய விலைக் கடைகளைப் பற்றிச் சொன்னார்கள். ஆளுநர் உரையில் தமிழிலே நல்ல வரியைப் போட்டிருக்கிறார்கள். இத்திட்டத்தின் கீழ் சுமார் 13,400 கிராமங்கள் பயன்பெற்று விட்டன என்று சொல்லியிருக்கிறார்கள். பயன் கொஞ்ச நாள் பெற்று இப்பொழுது விட்டு விட்டார்கள். அதுதான் இப்பொழுது நியாய விலை கடைகளிலே இருக்கிற சூழ்நிலை. தமிழகத்திலே இருக்கிற 13,400கடைகளில் பொதுவாக, பெரும்பான்மையானவை நாள்தோறும் மூடியே கிடக்கின்றன. காரணம் கேட்டால் பொருள்கள் சரியாக வந்து சேரவில்லையென்று சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு, பொதுமக்களுக்கு இந்த நியாய விலை கடைகளில் கிடைக்கிற பொருள்கள்மீது நல்ல நம்பிக்கையிருக்கிறது. அதை முறைப்படுத்தி எல்லா அத்தியாவசியப் பொருள்களையும் இங்கே வழஙக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மண்ணெண்ணெய் அங்கே வழங்குவதில்லை. அம்மாதிரி அத்தியாவசியப் பொருள்களை நியாய விலை கடைகள் மூலம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். கிராமங்களில் இன்று சிறுசிறு வியாபாரிகள் பொது மக்களைக் கொள்ளை அடிப்பதை மாற்ற இது நல்ல திட்டம். இதை வெற்றிகரமாக ஆக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு, நிலமற்ற ஏழைகளுக்கு விட்டுமனைப் பட்டா வழங்குவதைப் பற்றி இங்கே சொன்னார்கள். பினாமி நிலம், உபரி நிலம் என்பதெல்லாம் ஊருக்குப் பக்கத்திலே இருக்காது அது ரொம்பத் தள்ளி இருக்கும். அதைப் போய், விவசாயிகளுக்கு வீட்டு மனைப் பட்டாவாக வழங்குவது என்பது நடைபெறாத காரியம். ஆகவே, உருப்படியாக பொது மக்கள் பயன்படுகிற அளவுக்கு கிராமத்தின் பக்கத்திலேயிருக்கிற நிலங்களை, உபரி நிலமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் உடனடியாக எடுத்து, அரிசனங்களுக்குக் கொடுப்பது போன்று ஏழை எளிய மக்களுக்கு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.





நம்முடைய ஆளுநர் உரையில் பகுதி 7, 8, 9, 10, 16 போன்ற பகுதிகளில் மிகப் பெரிய விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த விஷயங்களையெல்லாம் நிறைவேற்றி விட்டால், இந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக அரசை அசைப்பதற்கு ஆண்டவனால் கூட முடியாது. அப்படிப்பட்ட அரிய பொருள்கள். ஆனால், இவர்களால் நிறைவேற்ற முடியுமா என்பதுதான் எனக்குச் சந்தேகம். ஏற்கனவே, பல சொன்னார்கள், ஒன்று கூட நிறைவேற்றப்படவில்லை. 'லான்ட் ஆர்மி' என்று சொன்னார்கள். நான் பெருமிதமாக வரவேற்றேன். இதுவரை, லான்ட் ஆர்மி என்ன ஆயிற்று என்று ஒரு வார்த்தை கூடத் தெரியவில்லை.

அதுபோன்று, வீட்டு வசதியை ஏற்படுத்துவதற்கு கிராமங்கள் தோறும் ஒவ்வொரு டிவிஷனுக்கு குடியிருப்புகள்—வீடுகள். ரூ. 5,000-ல் கொடுப்பதற்காக திட்டம் போட்டார்கள், எந்தக்கிராமத்திலும் இதுவரை அத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை. நம்முடைய ஏழை எளிய மக்கள் மனைகளைப்பெற்றுவிட்டு, வீடு கட்ட அலையாக அலைந்துகொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற ஏராளமான திட்டங்களை நம்முடைய அரசு அறிவித்திருக்கிறதே தவிர, செயல் படுத்துவதே இல்லை. பேப்பரிலே சர்க்கரை என்று எழுதி, இனிக்கிறதா பாருங்கள் என்று சொல்வது மாதிரி இருக்கிறது. நோக்கம் நல்ல நோக்கமாக இருக்கிறது. ஆனால், செயல்படுத்துவதில்லை.

கரும்புச் சக்கையிலேயிருந்து காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்காக சிபாரிசு செய்ய இருப்பதாக ஆளுநர் உரையிலே பார்த்தேன். பின்தங்கிய இராமநாதபுரம் பகுதியில் காட்டுக் கருவேல் ஏராளமாக இருக்கிறது. அதைப் பயன்படுத்தி, ஒரு காகிதத் தொழிற்சாலை அமைத்து, ஏழை எளியவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க ஒரு திட்டம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு அரிசன வீட்டு வசதி வாரியத்தை விழுப்புரம் மாற்றியிருப்பதாகச் சொல்கிறார்கள். விழுப்புரம் என்று சொன்னாலே அச்சமாக இருக்கிறது; பஸ் ஸ்டாண்டுக்கு போனால் பையைப் பிடுங்கிக் கொண்டு போவார்கள் என்ற அச்சம் இருக்கிறது. ஆகவே, அதை திருச்சியில் நிறுவவேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1979 பிப்ரவரி 12

[பிற்பகல் 12·10]

பிறகு எல்லா மாவட்டங்களிலும் அரசு அலுவலகங்களை பரவலாக வைக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை. பரமக் குடியிலே மாவட்ட மின் வாரிய அலுவலகம் பல ஆண்டுகளாக இருக்கின்றது. அதை இப்போது மதுரைக்கு மாற்றுவதற்கு முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. அந்த மின்வாரிய அலுவல கத்தை பரமக்குடியிலே வைத்திருப்பதற்கு உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோயம்புத்தூரைப் பிரிப்பதாகப் போட்டிருக்கிறார்கள். இதுபோன்று நம்முடைய இராமநாதபுரம் மாவட்டத்தையும் பிரிக்கவேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கைகள் விடப்பட்டிருக்கின்றன. இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப் படவேண்டும். கோவையைப் பிரிக்க வேண்டும் என்று எந்த விதமான கோரிக்கைகளும் வரவில்லை. ஆனால் இராமநாத புரம் மாவட்டத்தைப் பிரிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அதை நிறைவேற்ற வேண்டும்.

அடுத்து சிவகாசியிலே நடந்த நிகழ்ச்சியைப் பற்றி தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். வேதனைக்குரிய செய்தி. அதற்கும் தீப்பெட்டி தொழிற்சாலைக்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் சம்பந்தம் கிடையாது. அது டிரைவருடைய குறைபாடு, முழுக்க முழுக்க. வெள்ளம் அதிகமாக ஆற்றிலே போகிறது என்று அத்தனை பேர்களும் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் டிரைவர் கண்மூடித்தனமாக பஸ்ஸை விட்டு பெரிய ஆபத்தை உண்டாக்கி இருக்கிறார். இதிலே இருந்து என்ன தெரிகிறது என்றால் இந்த நாட்டிலே டிரைவர்களுக்குக் கொடுக்கப்படுகிற லைசன்சு ஒழுங்காகக் கொடுக்கப்படுவதில்லை முறையாகப் பயிற்சி பெற்றவர்களுக்குத்தான் லைசன்சு கொடுக்கப்பட வேண்டும் என்று முறைப்படுத்துவதன் மூலம் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிறகு சாராய சட்டம் நல்ல சட்டம்தான். அதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். இந்த நாட்டில் சாராயம் பெருக்கெடுத்து ஓடாமல் ஒரு நல்ல சூழ்நிலை உருவாக்க வேண் டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்காக எவ்வளவு பெரிய தண்டனை, கடுமையான தண்டனை கொடுக்காமல் கூட நான் வரவேற்கிறேன். குடிக்கிறவர்களுக்கு மாத்திரம் தண்டனை கொடுத்துவிட்டு, கள்ளச் சாராயம் காய்ச்சுகிற வர்களுக்கு சரியான தண்டனைக் கொடுப்பதில்லை என்று பெரிய குற்றச்சாட்டு நிலவுகிறது. அவர்களை ஜெயிலிலே போட்டால் மட்டும் போதாது. அத்தோடு மட்டும் பிரச்சினை தீர்த்துவிடாது. அவர்களுக்காக புதிய தொழிலை உருவாக்கி, அதிலே இவர்களுக்கு பயிற்சி கொடுத்து அவர்களுக்கு புதிய வாழ்க்கையை அமைத்துத் தரவேண்டும்.



1979 பிப்ரவரி 12] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

அடுத்து, எழுத்துச் சீர்திருத்தத்தை வரவேற்கிறேன். பெரி யார் பெயரில் உள்ள ஈ. வே. ரா. என்பதில் அந்த 'ஈ' என்ற எழுத்தில் உள்ள புள்ளியை எடுத்துவிட்டு ஒரு சுழியைப் போட்டால் நன்றாக இருக்கும். இன்னும் ஒரு எழுத்துக் குறையும்.

இந்தியைப் பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். என்னு டைய அச்சம் என்னவென்றால், திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் இவைகள் எல்லாம் நாட்டுப் பிரிவினையைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இப்போது நம்முடைய பாரதப் பிரதமர் அவர்களே இந்த நாட்டைப் பிரித்துவிடுவார்களோ என்ற அச்சம் ஏற்படுகிறது. அவர்கள் சொல்லுகிறார்கள், இந்தி படிக்காதவர்கள் எல்லாம் நாட்டுப் பற்று இல்லாதவர்கள் என்று. அவர் சொல்வதைப் பார்த்தால், வங்காளத்தையும் அஸ்ஸாம் மாநிலத்தில் உளள ஏழு இடங்களையும், தென்னாட்டில் கன்னட மும் களி தெலுங்கும், கவின்மலையாளமும் பேசுகின்றவர்கள் எல் லாம் தேச பக்தி இல்லாதவர்கள் என்று சொல்லுகிறார்களா? அவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, இந்தி பேசுகின்ற மக்களுடைய ஆட்சியிலே இருந்து பிரிந்து கொள்ளலாம் என்கின்ற ஒரு சூழ்நிலை உருவாகிவிடும் போல் இருக்கிறது. நம்முடைய அரசும், இந்தி பேசாத மாநில மக்களும் ஒன்று சேர்த்து பெரிய போரைத் தொடங்கி டெல்லியை கைப்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன. நாம் இந்தியாவை விட்டுப் போக விரும்ப வில்லை என்ற அளவிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் இந்தி நாடு என்று உருவாக்க பெரிய சதித் திட்டம் தீட்டுகிறார்கள் என்று இந்த நேரத்திலே நான் குற்றம் சாட்டு கிறேன்.

நம்முடைய அருமைத் தலைவர் முருகையன் கொலை வழக்கைப் பற்றி பரவலாகப் பேசப்பட்டது. தற்போதுள்ள சூழ் நிலையில் அரசியல்வாதிகளுக்கு பல்வேறு வகைகளில் ஆபத்து இருக்கிறது. ஆகவே, இந்த மன்றத்தில் சபாநாயகர் மூலமாகக் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், எங்களைப்போன்றவர்களுக்கு —சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஒரு உதவியாளரைக் கொடுங் கள். உதவியாளர் இல்லாமல் தனியாக முருகையன் சென்றதால் தான் கொலை செய்யப்பட்டார். ஆகவே, ஒரு உதவியாளர் களுடன் எந்நேரமும் இருந்தால், எந்தவிதமான ஆபத்தில் இருந்து எங்களை நாங்கள் காத்துக்கொள்ள முடியும் என்று நான் தெரி வித்துக் கொள்கிறேன்.

16-வது பத்தியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் உள்ள சலுகைகள் குறையாமல், வறுமையிலும் கல்லாமையிலும் கஷ்டப்பட்டு இருக்கும் சமூகத்தினருக்கு சலுகைகள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களிலே, மிக தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். ஒரு வசதியும் இல்லாமல் அவர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட குடும்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களுக்கு

அரசு சலுகைகள் அளிக்கப்படவேண்டும். அதேபோன்று பின்தங்கிய மக்களிலும் மிகவும் பின்தங்கிய மக்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் அரசு அறிவித்த திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும். ஆகவே, இப்படிப்பட்ட மக்கள் எங்கெங்கோ சலுகைகள் பெறாமல் இருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து பரிந்துரை செய்ய அரசாங்கம் ஒரு குழு போட வேண்டும் என்று கேட்டு, மொத்தத்தில் இந்த ஆளுநர் உரை வெறும் பிரச்சார உரையாக இருக்கிறதே தவிர நாட்டு மக்களுக்குப் பயன் தரக்கூடிய நல்லுரையாக இல்லை என்பதைத் தெரிவித்து முடிக்கிறேன்.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது பேசுகின்ற நல்வாய்ப்பினை நல்கியதற்காக நான் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்து மக்கள் தங்கள் நல்வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு, தங்களுடைய நல்வாழ்வுக்கு அடித்தளமாக அமைகிற அளவிலே தங்களுடைய உண்மையான ஜனநாயக உணர்வுகளை வெளிப்படுத்துகிற வகையில் செய்யப்படுகிற பணிகள் சிறக்க வேண்டும் என்ற அடிப்படையில் மேதகு ஆளுநர் உரையில் குறிப்பிட்டு இருப்பது நான் தான் முழுத் தமிழன் என்று கூறிக் கொள்பவர்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்பும் என்று கருதுகிறேன். தமிழினத்தின் காவலன் என்று தன்னைப்பற்றி தம்பட்டம் அடித்துக் கொள்பவர்கள் மேதகு ஆளுநர் அவர்கள் உரையாற்றுகையில் இந்த சபையில் இல்லை என்றாலும்கூட இந்த உரையைப் படித்துப் பார்த்து இருப்பார்கள் என்று கருதுகிறேன்.

கவர்னர் பெருமான் உரையிலே விவசாயிகளைக் குறித்தும், அவர்கள் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு நல்ல விலை நிர்ணயம் செய்து, அந்த விலை அவர்கள் பெறவேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் மத்திய அரசுக்கு அடிக்கடி எழுதி வலியுறுத்தி, கோதுமைக்கு எந்த அளவுக்கு சலுகைகள் கொடுத்து அந்த விலை நிர்ணயம் செய்து இருக்கிறார்களோ அந்த அளவிற்கு நெல்லும் விலை நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறது என்பதை மேதகு ஆளுநர் உரையில் குறிப்பிட்டு இருப்பது விவசாயப் பெருமக்கள் அனைவரும் பாராட்டிப் பெருமையோடு வரவேற்கும் ஒன்றாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், ஏற்கெனவே அறிவித்தபடி நியாய விலைக் கடைகள் ஏறத்தாழ 13,400 திறக்கப்பட்டு இருக்கின்றன. எஞ்சியுள்ளவையும் விரைவில் திறக்கப்படும் என்று குறிப்பிட்டு இருப்பதும், கிராமப் புறங்களிலே நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கும் திட்டம், கல்வி வாசனை அறியாத சிறார்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம்,





கிராமப் புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு லட்ச வீடுகள் அமைத்து தந்து அவர்களுடைய வாழ்வு ஒளிமயமாக அமையும் அளவில் திட்டங்கள் போட்டு ்ப்பதும் பாராட்டுக்குரிய ஒன்றாகும் என்று கருதுகிறேன். அதே நேரத்தில் கிராமப் புறத்தில் ஏழை எளிய மக்களுக்கு நல்வாழ்வினை இந்த அரசு நல்கும் வகையில் பல்வேறு திட்டங்களை இந்த ஆளுநர் உரையில் பல இடங்களில் குறிப்பிட்டு இருப்பது பாராட்டக்கூடிய ஒன்றாகும். என்று கருதுகிறேன்.

மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் முருகையன் அவர்களுடைய படுகொலையைப் பற்றி குறிப்பிட்டு, ஆளுநர் உரையில் கூட அதற்காக அனுதாபம் தெரிவித்து இருப்பது ஆகியவற்றை சுட்டிக்காட்டி அதை சாக்காகக் கொண்டு பல்வேறு நிலையிலே அரசியலே சட்டம் ஒழுங்கு குலைந்துவிட்டது என்று மாற்றுக் கட்சியினர் குறப்பிட்டார்கள்.

[பிற்பகல் 12-20]

கடந்த கால வரலாற்றை எண்ணிப் பார்க்கும் போது, இந்த சட்டம் ஒழுங்கு எங்கே இருந்தது என்பதை சந்து பொந்துகளிலே தான் தேட வேண்டியிருந்தது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிற எங்கள் இதயத்தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆவடிக்கு சென்றிருந்தபோது அவர்களுடைய உயிருக்கு குறிவைக்கப்பட்டது. அப்போது இந்த சட்டம், அமைதி எங்கே போயிற்று? இன்றைக்கு நிதி அமைச்சராக இருக்கிற எங்களுடைய மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய நாஞ்சிலார் அவர்களுடைய உயிரை வயான நிலையத்திலே குடிக்க முயற்சி செய்யப்பட்டதே, அப்போது இந்த சட்டம், ஒழுங்கு எங்கே போயிற்று என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

வெறும் அலங்கார வார்த்தைகளை அள்ளி வீசி, குற்றம் சாட்டுவதை அவர்களுடைய குலத் தொழிலாகக் கொண்டுள்ள சிலர் இங்கே காட்சி தோரணையோடு நடித்துக் காண்பித்தார்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். சட்டம் ஒழுங்கு என்று சொல்லும்பொது பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்ட ஒரு சிறு கதை எனக்கு நினைவுக்கு வருகிறது. 'ஒரு நரி ஆற்றிலே அடித்துச் செல்லப்பட்டது. ஆற்றிலே செல்லப்படும்போது' உலகம் போயிற்று, உலகம் போயிற்று' என்று நரி சொல்லிக் கொண்டே இருந்தது. அதைக் கேட்டுக் கொண்டிருந்த கரையிலே நின்ற ஒருவன், 'என்னவோ உலகம் போயிற்று, உலகம் போயிற்று' என்று சொல்லுகிறதே, அது என்ன என்பதை அறிந்து கொள்ளும் நோக்கத்தில், அந்த நரியை கரைக்குக் கொண்டுவந்து, 'ஏன் அப்படிச் சொல்லிக் கொண்டே போனாய், அதன் அர்த்தம்

என்ன' என்று கேட்டால், அப்போது நரி சொன்னது, நான் போய்விட்டன என்றால் என்னுடைய உலகம் போய்விட்டது: அதனால் உலகம் போயிற்று என்று சொன்னேன்' அதைப்போல தான்சட்டம், ஒழுங்கு சீரழிந்துவிட்டது என்று சொல்கிறவர்கள் நிலையும் இருக்கிறது.

சட்டம், ஒழுங்கைப்பற்றி அவர்கள் கூறும்போது, ஆப்ரகாம் லிங்கன் அவர்கள் குறிப்பிட்ட ஒரு சிறு கதையையும் இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். ஒருவரை குற்றவாளி என்று நீதி மன்றத்திற்கு அழைத்து வந்தார்கள். அந்தக் குற்றவாளி,'நான் தாய் தந்தை இல்லாத ஒரு அனாதை, என்னை விட்டு விடுங்கள்' என்று நீதி மன்றத்தில் சொன்னான். நீதிபதியும் மனம் இரங்கி, அவனை விட்டு விடலாம் என்ற எண்ணத்தில் இது உண்மையா என்று விசாரித்தார். அப்போது அவர்கள், 'தந்தை தாய் இல்லை என்று அவன் சொல்கிறான், ஆனால் அவனுடைய தாய் தந்தையரை கொன்றவனே அவன்தான்' என்று சொன்னார்கள். அதைப்போல சட்டம், ஒழுங்கைப்பற்றி இங்கே பேசியவர்கள்தான் அந்த சட்டம் ஒழுங்கு கெடுவதற்குக் காரணமாக இருக்கிறார்கள். உண்மையில் சட்டம் ஒழுங்கு குலைக்கப்படவில்லை, அதை குலைப்பதற்கு அவர்கள்தான் காரணகர்த்தாவாக இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதிப்பிற்குரிய நண்பர் துரை முருகன் அவர்கள் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அமைப்புச் செயலாளராக டாக்டர் ஹாண்டே அவர்கள் இருக்கிறார்கள் என்றும், முதலமைச்சரிடம் மணியன் அவர்கள் இருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். அதே நேரத்தில் சாவி என்பவர் எங்கேயிருந்து குதித்தார் என்று அவர்கள் சிந்திக்க வேண்டும். அதைப்போன்று ஜாதிப் பாகுபாடுகளையும், ஜாதி மனமாச்சரியங்களையும் இங்கே தூண்டிவிடுகின்றவர்கள், குழப்பத்திற்கு வித்திடுகிறவர்கள் இருக்கிறார்கள் என்பது மிகவும் வருந்தத்தக்க ஒன்று.

கடந்தகால அரசியலிலே நிர்வாகம் எப்படி இருந்தது என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்போது அவர்களுக்கு காரியதரிசிகளாகப் பணியாற்றியவர்கள் பட்டியலைப் பார்த்தால் தெரியும். இங்கே திராவிட பரம்பரை, திராவிட பாரம்பரியம் என்று வாய் கிழிய பேசினார்களே, அவர்கள் எல்லாம் அன்றைக்கு எங்கே போனார்கள் ?

நண்பர் துரை முருகன் அவர்கள் குறிப்பிட்டார்கள், அவர்களுடைய தலைவர், டாக்டர் கலைஞர் தமிழவேள் உயிருக்கு குந்தகம் ஏற்படுமானால் அப்படி, இப்படி என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் அவர்களைக் கேட்க ஆசைப்படுகிறேன். புதுவை மாநிலத்திலே நடந்த நிகழ்ச்சியின்போது நண்பர் துரை முருகன் பிறந்திருக்க மாட்டார். கோட்டூர்புரத்திலே நடந்த



நிகழ்ச்சியின்போது அரும்புமீசை கூட முளைத்திருக்காது. அதைப் போல பேராவூரணி நிகழ்ச்சியின்போது அவருடைய வீரத்தை அடகு வைத்து விட்டாரோ என்னவோ புரியவில்லே.

இங்கே சட்டம், ஒழுங்கைப்பற்றிச் சொன்னார்கள். வேறு பல பிரச்சனைகளைச் சொன்னார்கள். ஜெயலலிதா விவகாரத்தை வைத்துக் குறிப்பிட்டார்கள். நான் கேள்விபட்டவரையில் டாக்டர் கலைஞர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தான் அந்த நிலை உருவாயிற்று. ஏனென்றால் கர்நாடக மாநிலத்தில் அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படுவதற்கு காரணமாக இருந்த ஒரே மனிதர் டாக்டர் கலைஞர் கருணாநிதி தான் என்பதை இந்த மன்றம் உணர வேண்டும் என்பதற்காக சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கின்ற இன்றைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இங்கே ஒப்பற்ற தலைவராக மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்ற தத்துவத்தின் அடிப்படையிலே கட்சி மாச்சர்யங்கள் இன்றி வேறுபாடுகள் இன்றி எதிரியையும் அரவணைத்துக் கொண்டு செல்கின்றார்கள். மக்களின் துயர் கண்டு மனம் கலங்கும் நிலை உடையவராக திகழ்கின்றார். அப்படிப்பட்ட புரட்சித் தலைவரவர்கள் நிச்சயமாக மக்கள் மனத்திலே இடம் பெற்றிருக்கிறார்கள். புரட்சித் தலைவரவர்கள் மக்களுடைய இதயத்திலே ஒரு இதய தெய்வமாக, இன்றைக்கு ஏழைப் பங்காளனாக மக்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே புழுதியை வாரிதூற்றுகின்ற நேரத்திலும், மனம் புண்படுகின்ற வகையிலே அவரைப்பற்றிக் பேசிய நேரத்திலும் அவற்றை எல்லாம் பொருட்படுத்தாது தமிழ் மக்களுடைய நலன் ஒன்றே தன்னுடைய நலன் என்று கருதி இன்றைக்கு செயல்படுகின்றார். இன்றைக்கு மற்றோர் வியக்கின்ற வண்ணம், இயற்கையினுடைய சுழலால் அதிகமாக பாதிக்கப்பட்ட வேளையிலே கூட அவருடைய ராட்சஸ சுற்றுப் பயணத்தின் மூலமும் அவருடைய சூறாவளிச் சுற்றுப் பயணத்தின் மூலமும், போர்க்கால நடவடிக்கைகள் போன்று தக்க காரியங்களைச் செய்து தமிழ் மக்களின் துயரினைத் தீர்க்கின்ற அளவில் இயங்கி வருகிறார் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள். ஆகவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு ஆற்றி வரும் பணியும், புரட்சித் தலைவர் பொன்யவச் செம்மல் ஆற்றி வரும் பணியும் நிச்சயமாக தமிழ் மக்களுடைய மனதிலே நீங்காத நினைவும், சரித்திரத்திலே சாகாத வரமும் பெறும் என்று கூறிக் கொண்டு முடிக்கிறேன்.

[1979 பிப்ரவரி 12

***திரு. கு. ரமணி:** தலைவரவர்களே, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது சில முக்கியமான கருத்துக்களை நான் இந்த மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) தலைமை.]

வேலையின்மை, விலையேற்றம், விவசாயிகள் உற்பத்தி செய்த பண்டங்களுக்கு நியாயமான விலை கிடைக்காத நிலை ஆகியவற்றிற்கு துரிதமான தீர்வு காணுகின்ற வகையில் கொள்கைகளோ திட்டங்களோ ஆளுநருடைய உரையில் குறிப்பிடப்படவில்லை என்பதை மிக்கவருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே போன்று தொழிலாளி வர்க்கம் அதாவது உற்பத்தியிலே பிராதானமான பங்காளிகளாக இருக்கும் அவர்கள் தான் இன்றைக்குக் கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தொழிலாளி வர்க்கத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூட இந்த கவர்னருடைய உரையிலே தப்பித் தவறிக் கூட வரவில்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு மேலாக அண்மை காலத்தில் தொழிலாளி வர்க்கத்தின்மீது நடைபெற்று வரக்கூடிய தாக்குதல்கள் பயங்கரமான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. ஏற்கனவே அது குறித்து இந்த அரசுக்கு தொடர்ச்சியாக இந்தச் சட்டமன்றத்திலே நாம் பல சந்தர்ப்பங்களிலே எடுத்துக் காட்டியுள்ளோம். குண்டர்களை உபயோகப்படுத்தி தொழிற்சங்க இயக்கங்களைப் பிளவுபடுத்தியிருக்கிறார்கள். தொழிலாளர்கள் பல விஷயங்களிலே போராடிக் கொண்டிருக்கும்போது அதைத் திசை திருப்புகின்ற வகையில் தொழிற்சங்கங்களைப் பிளவுபடுத்துகின்ற முறையில் தொழிலாளர் நலச் சட்டங்களை அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையும் இருந்து கொண்டிருக்கிறது. பட்டினியோடு தொழிலாளி போராடிக் கொண்டிருக்கும்போது அப்படிப்பட்ட சூழ்நிலையைப் பயன்படுத்தி தொழிற்சங்கங்களைப் பிளவுபடுத்தி மாற்றுச் சங்கங்களைத் தோற்றுவித்து தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயல்படாமல் தடுக்கிறார்கள். தொழிலாளர் நலச் சட்டங்களைத் தொழிலாளிக்குச் சாதகமான முறையில் அமல்படுத்த வேண்டுமென்று இதே மன்றத்தில் பல தடவைகள் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதற்கு மாறாக நடப்பதை மன்றத்தில் மட்டும் அல்லாது தொழிலாளர் நல அமைச்சரவர்களிடத்தில் கூட நான் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதெல்லாம் இன்றைக்கு தூள் தூளாகப் போய் விட்டது என்பதை மிக்க வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



1979 பிப்ரவரி 12] [திரு. கு. ரமணி]

[பிற்பகல் 12·30]

தொழிலாளர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள்பற்றி பூராவும் இங்கே எடுத்துச் சொல்ல எனக்கு அவகாசம் இல்லை. இருந்தாலும், ஒரு பருந்து பார்வைபோல் சிலவற்றை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். சேரன் போக்குவரத்துக் கழகம் அரசாங்கத்தின்கீழ் உள்ளது. அதில் 17 பேர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டு, 33 பேர்கள் மலைப் பிரதேசங்களுக்கு மாற்றப்பட்டு அந்தத் தொழிலாளர்கள் அத்தனை பேர்களுக்கும் நியாயம் கிடைக்காமல் அவர்கள் தவிக்கிறார்கள். அதுபற்றி எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அமைச்சர் முதற் கொண்டு காரியதரிசி முதற்கொண்டு, கீழ் உள்ள அதிகாரிகள்வரை சொல்லியும் பயன் இல்லை. அதேமாதிரி திருப்பூரில் பவர்லூம்ஸ் தொழிலாளர்கள் போராடியபோது தொழிலாளர்களின் 16 வீடுகளை இடித்துத் தள்ளி விட்டார்கள். அப்படி இடிபாடு நடத்தியவர்கள்மீது என்ன நடவடிக்கைகள் போலீஸ் எடுத்துள்ளார்கள்? அதுபற்றி நடவடிக்கைகள் எடுக்கக் காணோம். தாராபுரம் தாலுக்கா முழுவதிலும் வளர்ந்து வரும் பவர்லூம்ஸ் தொழிலாளர்களின் போராட்டத்தை உடைக்க முதலாளிகள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள், அந்தத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. கோவை நகரில் ஆட்டோ ரிக்ஷா தொழிலாளர்கள்மீது தடியடிப் பிரயோகம் செய்தது மட்டுமல்ல, அவர்கள்மீது பலவிதமான பொய் வழக்குகள் போடப்பட்டு பொய் வழக்குகள் ஜோடிக்கப்பட்டு இருக்கின்றன போலீஸாரால். அதேமாதிரி திருநெல்வேலியில் ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள இந்தியன் ஸ்டீல் மில்லை மூடிவிட்டு தொழிலாளர்களைப் பட்டினி போட்டு சிறிது காலத்திற்குப் பின்னர் திறந்து பலரைப் பழி வாங்கி தொழிற்சங்கத்தைப் பிளவு படுத்தியிருக்கிறார்கள். 'ஸிம்கோ' மீட்டர் போராட்டம் நீண்ட நாட்களாக நடந்து வருவதில் நல்லபடியாக இப்போதாவது— அரசாங்கம் தலையிட்டு முடிவிற்குக் கொண்டுவர முயற்சி எடுக்கிறார்கள், அதைப் பாராட்டுகிறோம், வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதற்காக தப்பைச் சொல்லாமல் இருக்க முடியாது. எல்.ஜி.பி. மோட்டார் கம்பெனியில் போராட்டம். அங்கு தடியடிப் பிரயோகம். அங்குள்ள ஸி.ஐ.டி.யூ. தலைவர் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகப்பட்டு அவரை பூட்ஸ் காலால் உதைத்து அவரது கால் விரலை நசுக்கி மிதித்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். சென்னையில் டி.வி.எஸ்.-ல் நடத்துகிற ரௌடிஸம் நிற்கவில்லை. அம்பத்தூரில் சைக்கிள் தொழிற்சாலையில் அக்கிரமம் நடந்தது, ஸதர்ண் ஸ்வெச்கியர்-ல் ஸி.ஐ.டி.யூ.வைச் சேர்ந்தவரை தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள் என்பதற்காக அந்தக் கம்பெனி நடத்தப் படாமல் மூடப்பட்டு, இப்போதுள்ள இந்த அரசின் கட்சிக்காரர்கள் உட்பட, அந்தத் தொழிலாளர்கள் முதல் அமைச்சர் அவர்களுக்கு ஆதரவு கொடுப்பதாக கையெழுத்து வாங்கிக் கொடுத்தால் திறந்து

நடத்தத் தயார் என்று பொதுக்கூட்டங்களில் பேசுகிறார்கள். கன்னியாகுமரியில் 75,000 முந்திரித் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். தொழிலாள மக்கள்படும் இந்தக் கஷ்டங்கள்பற்றி ஒருவார்த்தைகூட ஆளுநர் உரையில் இல்லாமலிருப்பது எப்படி சரியாக இருக்கும்? அது என்ன கொள்கை என்பதை ஆலோசிக்க வேண்டியுள்ளது. விலைவாசிபற்றி கூறுகிறார்கள். நெல் ஒரு க்வின்டாலுக்கு ரூ. 129 மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நல்லது. ரூ. 129 வாங்கிக் கொடுங்கள். ஆனால் இப்போதுள்ள நிலை விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை விற்பதற்கு முன்வரும்போது ரூ. 65, ரூ. 70 க்குக்கூட வாங்க ஆள் இல்லாமல் கஷ்டப்படுவதால் அவர்கள் கஷ்டத்தைப் போக்க அதை ரூ. 85க்கு அரசாங்கம் கொள்முதல் செய்ய வேண்டும் என்று கேட்கிறோம். அதுவே அவர்களுக்குச் செய்யக்கூடிய உதவியாகும். அந்த உதவியைச் செய்தாலே பெரும்பாலான ஏழை எளிய சிறுநில விவசாயிகள் சந்தோஷப்படுவார்கள். அதையே செய்ய முடியவில்லையே. அதிக விலை வேண்டுமென்று கேட்கிறோம், கேட்கிறோம் என்று சொன்னால் போதாது. யதார்த்த நிலைக்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, விலையேற்றப் பிரச்னை. தமிழ்நாட்டில் இரண்டு மூன்று ஆண்டுகள் பெய்த மழை காரணமாக உணவுப் பொருட்கள், அரிசி போன்றவை கொஞ்சம் விலை இறங்கிற்றே தவிர அண்மையில் 20, 30 பைசா கிலோவுக்கு ஏறிக் கொண்டிருக்கிறது. பொருள்களின் விலை ஏறியிருப்பது அரசுக்குத் தெரியும். 16,000 நியாய விலைக் கடைகள் திறக்கப் போகிறோம் என்று இந்த மன்றத்தில் சொன்னார்கள். இப்போது 13,400 கிராமங்கள் பயன்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். 13,400 கடைகள் திறக்கப்பட்டுள்ளனவா? 16,000 நியாய விலைக் கடைகள் ஏன் திறக்கப்பட முடியவில்லை? இதைச் சொன்ன காலத்தில் தமிழ்நாட்டில் ஏற்கனவே 7,000 கடைகள் உள்ளன, அதற்கு மேல் 9,000 திறக்க வேண்டும். ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு கடை என்றால் எவ்வளவு குடும்பங்களுக்கு சப்ளை செய்ய முடியும்? சப்ளை செய்ய சரக்கு இல்லை என்ற நிலை ஏற்பட்டால் அது எங்கே கொண்டு போய்விடும்? 16,000 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு, அதற்கு மேலும் சென்று 500 குடும்பங்களுக்கு ஒரு கடை என்று திறந்து தேவைப் பொருட்கள் விநியோகம் காரியங்கள் செய்யாமல் போனால் விலைவாசியைக் கட்டுப்படுத்த மத்திய சர்க்காராலும் முடியாது, மாநில சர்க்காராலும் முடியாது. அதே போல கிராமங்களில் வேலைவாய்ப்பு, இது முக்கியமான விஷயம். தமிழகத்திலுள்ள கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய நிலம் இல்லாத விவசாயக் கூலிகள் 45 லட்சத்திற்கு மேல் இருக்கிறார்கள், இது 1971-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்குப்படி. செப்டம்பர்,





அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் சுத்தமாக வேலை இல்லாமல் லட்சக்கணக்கான மக்கள் கிராமங்களில் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு வேளை உணவு கொடுக்க என்ன வழி? இந்த மன்றத்திலேயே முன்பு எடுத்துச் சொன்னேன். மேற்கு வங்காளத்தில் ஒரு அரசாங்கம் நடக்கிறது. அவர்கள் எல்லாவற்றையும் சாதித்துவிட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. நீங்களும் அவர்களைப் போல் அப்படியே நடக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஒரு விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். இந்திய மாநில அரசுகளில் எல்லாம், கடந்த முப்பது ஆண்டுகளாக இல்லாத ஒரு மாறுபட்ட சிந்தனை, மாறுபட்ட திட்டக் கண்ணோட்டம் உருவாகி வருகிறது. அந்த அடிப்படையில் (லீன் மன்த்ஸ்) வேலையில்லாத மூன்று நான்கு மாதங்களில் மட்டும், இந்த விவசாயக் கூலிகளுக்கு வேலைக்காக உணவு என்ற திட்டத்தின்படி தலைக்கு இரண்டு கிலோ கோதுமையும், ஒரு ரூபாயும் கொடுத்தார்கள். அந்த முறை வெற்றி பெற்றதின் காரணமாக மூன்று கிலோ கோதுமையும், இரண்டு ரூபாயும் இப்போது கொடுக்கிறார்கள். அதே போன்று தமிழ்நாட்டில் இரண்டு கிலோ அரிசியும் இரண்டு ரூபாயும் கொடுத்தால், லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளிகளுக்குப் பட்டினி ஏற்படாமல் உணவுக்கும் வழி கிடைக்கும், அதே நேரத்தில் ரோடு போடுவது, பள்ளிக்கூடங்கள் கட்டுவது, குளங்கள் தூர் எடுப்பது, ஏரிகள், குட்டைகள் இவைகளை ஆழப்படுத்துவது கிணறுகள் வெட்டுவது, போன்ற வேலைகள் பெரிய மூலதனம் முதலீடு இல்லாமல் நூற்றுக்கணக்கான பணிகள் செய்யப்படுகின்ற நிலைமையினால் சமுதாயத்திற்கு நன்மை கிடைக்கிறது. அதே நேரத்தில் வேலையற்று இருக்கும் தொழிலாளர்களுக்கு உணவு கிடைக்கிறது. இதற்காக இதன் அடிப்படையில் 375 கோடி ரூபாய் மத்திய அரசாங்கம் தங்கள் திட்டத்தில் ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது. இதைப் பயன்படுத்தி வேலையற்றோர்க்கு நிவாரணம் தர மகாராஷ்டிரா அரசு கொடுக்க முன் வந்திருக்கிறது. கேரள அரசாங்கம் ஒரு திட்டத்தை நடத்துகிறது, பஞ்சாப் அரசாங்கம் நடத்துகிறது. இவ்விதம் பல்வேறு அரசாங்கங்கள் இப்படிப்பட்ட புதிய சிந்தனையும், புதிய திட்டக் கண்ணோட்டமும் கொண்டிருக்கின்றன, கடந்த 30 ஆண்டுகளாக இல்லாத நிலைமை இப்போது உருவாகியிருக்கிறது.

அதே போன்று வேலையில்லாது நகரங்களில் இருப்பவர்கள், படித்தவர்களும் இருக்கிறார்கள். படிக்காதவர்களும் இருக்கிறார்கள். படித்தவர்களுடைய பெயர் பதிவு செய்யப்படுகிறது, படிக்காதவர்களுடைய நிலைமை என்ன? இதற்கு ஒரு புதிய திட்டத்தை மேற்கு வங்க அரசு அமைத்திருக்கிறார்கள். படித்தவர்கள் தங்கள் பெயர்களைப் பதிந்து கொள்கிறார்கள். தொழிலாளர்கள். படிக்காதவர்கள் பதிந்து கொள்ளமுடியவில்லை. இப்படிப் படித்து பதிந்து கொண்டிருப்பவர்களுக்கு மாதம் 50 ரூபாய் அவர்களுக்கு ரிலீப்பாக கொடுக்கிறார்கள்.

அதே நேரத்தில் ஒரு வாரத்திற்கு இரண்டு நாட்கள அவர்கள் சமுதாயப் பணி திட்டத்தில் வேலை செய்ய வேண்டும். சுகாதாரம், கல்வி போதனை போன்ற பல வேலைகள் சகல வேலைகளும் இவர்கள் மூலம் நடைபெறுகிறது. இப்படி மூன்று வருட காலத்திற்கும் தொடர்ந்து ரிலீப் அளிக்கப்படுகிறது. அதே நேரத்தில் வேலைதேடித்தரும் ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன. இந்த ஒரு பெரும் திட்டத்தை ஏன் தமிழ்நாட்டில் கொண்டுவரக் கூடாது? அந்த அரசுகள் எல்லாம் அரசியல் சட்டத்தின் அடிப்படையில்தான் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். பொருளாதார துறையில் நம்முடைய கஷ்டதசைப் போல், வசதி இல்லை என்ற நிலைமை அங்கும் இருந்து கொண்டுதான் இருககிறது. ஆனால் அவர்கள் இப்படிப்பட்ட திட்டத்தைச் செயல்படுத்துகிறார்கள். அதேபோல் இப்போது மகாராஷ்டிரா அரசு செய்கிறது, கேரள அரசு செய்கிறது. பஞ்சாப் அரசு செய்கிறது திரிபுரா அரசு செய்கிறது. நான் ஒரு குறிப்பிட்ட அரசை பூஸ்ட் பண்ணுவதற்காக இதை சொல்லவில்லை. இப்படிப்பட்ட ஒரு புதிய திட்டக் கண்ணோட்டம், புதிய மாறுதல் ஏற்பட்டு வருகிறது. அந்த முறையில் இதை செய்ய அரசு முன்வருமா? அதற்கான கொள்கை குறிப்பு எதுவும் இதில் இல்லை.

கிராம எம்ப்ளாய்மென்ட் கியாரண்டிக்கு இதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? முசுக்கட்டை 8,000 ஏக்கர் அதிகமாக பயிர் செய்யப்படும். இந்த நாட்டிலுள்ள 45 லட்சம் விவசாய தொழிலாளர்களுக்கு 12,000 ஏக்கரில் முசுக்கட்டை பயிரிட்டால் மட்டும் வேலை கிடைத்துவிடுமா அதன் மூலம் பட்டுப்பூச்சி வளர்ந்து, அதன் மூலம் எத்தனை கம்பெனிகள் வளரும், எப்போது வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப்படும். இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி சாதாரண மக்களுக்கு நம்பிக்கை வரும்.

இப்படிப்பட்ட திட்டங்களால் நிச்சயமாக வேலையிழந்திருக்கும் கிராமத்தில் உள்ள பெரும்பான்மையோருக்கு எந்தவித நன்மையும் காரியாம்சத்தில் கிடைக்காது. அதே நேரத்தில் கிராம முன்னேற்றத்தையும் தொடாது.

அதே போன்று தொழில் வளர்ச்சித் திட்டம். இதில் என்ன வந்திருக்கிறது? ஐப்பானிய ஏகபோக முதலாளிக் கம்பெனிகள் இந்த நாட்டில் தனது ஆதிக்கத்தை நிறுவி அதன் மூலம் இந்த நாட்டிலுள்ள வருமானத்தை எவ்வளவு சுரண்டிக் கொண்டு போக முடியுமோ அந்த அளவுக்குக் கொண்டுபோக வழி செய்து கொண்டிருக்கிறது. அந்த அளவுக்கு அந்நிய மூலதனத்தை வரவேற்கிற ஏற்பாடாக இப்போதுள்ள திட்டம் அமைந்திருக்கிறது. அது சரிதானா? இதனுடைய அடிப்படை கொள்கைகளுக்கு நான் போகவில்லை. உப்பை அடிப்படை பொருளாகக் கொண்டு 35 கோடி ரூபாய் செலவில் ஐப்பானிய உதவியுடன் தொழிற்சாலை





அமைக்கப் போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. இதில் எத்தனை பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்கின்ற விவரம் தெரியவில்லை. அதே போன்று கரும்பு சக்கையைப் பயன்படுத்தி காகித ஆலை துவக்குவதற்கு வாய்ப்பு இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. சர்க்கரை ஆலைகள் துவக்கப்பட்டு எத்தனையோ காலங்கள் ஆகின்றன. இருந்தும் கரும்புச் சக்கையிலிருந்து காகித ஆலை துவக்குவதற்கு மத்திய சர்க்காருக்கு இப்போது விண்ணப்பம் செய்திருக்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு எவ்வளவு பணம் ஒதுக்குவார்கள் என்பது தெரியவில்லை.

[பிற்பகல் 12·40]

ஆனால் இப்படி வாயால் சொல்லிக் கொண்டே போனால் இது எப்படி சரியாக இருக்கும் என்று யோசனை செய்து பாருங்கள். இப்படிச் சொன்னால் மட்டும் நன்மை ஏற்படுமா? மாற்றங்களை நடைமுறைக்குக் கொண்டுவந்தாக வேண்டும். வேலையற்ற மக்களை எப்படி நீங்கள் பாதுகாக்க முடியும் என்பதை சற்று யோசனை செய்து பாருங்கள்.

மேற்கு வங்காளத்தில் $1\frac{1}{2}$ லட்சம் படித்தவர்களுக்கு, நகரங்களிலே இருப்பவர்களுக்கு மட்டுமல்லாமல், வேலையற்ற படிக்காதவர்களுக்கெல்லாம் திட்டம் போட்டு 9 கோடி செலவழித்தார்கள். இந்த வருஷம் 15 கோடி ரூபாய் செலவழிக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள். வேலைக்காக உணவு என்ற திட்டத்திற்கு மத்திய சர்க்கார் உணவுப் பொருள் கொடுக்கிறார்கள். சென்ற ஆண்டு 3 கோடி ரூபாய் உணவுப் பொருள் கொடுத்தார்கள். இந்த வருஷம் 10 கோடி ரூபாய்க்கான உணவுப்பொருள் கொடுக்கும்படி பரிந்துரை செய்திருக்கிறார்கள். அப்படி நாமும் பெறுவதற்கு, நமக்கும் மத்திய சர்க்கார் அதிகம் கொடுக்கும் வகையிலே திட்டங்கள் போட்டு செயல்பட்டால், லட்சக்கணக்கான கிராம மக்களுக்கு வேலை கிடைக்கும்; படித்தவர்களுக்கும் வேலை கிடைக்கும். இப்படி சரியான ஒரு திட்டம் நம்முடைய கவர்னர் அவர்களுடைய உரையிலே வரவில்லை. இந்த முயற்சியைப்பற்றி அவசியம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுவரை இந்த அரசு இத்தகைய முயற்சி எடுக்கவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கெல்லாம் மேல், நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி சொன்னால், ஒருவருக்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவுக்கு மேல் நிலம் இருக்கக் கூடாது என்று தமிழகத்திலே சட்டம் இருக்கிறது. இதைப்பற்றி எங்கள் கட்சித் தலைவர் திரு. [illegible] அவர்கள் போன கூட்டத்திலேகூட சொன்னார்கள். புதிதாக ஏதற்காகச் சட்டம் கொண்டுவரத் தேவையில்லை. இந்தச் சட்டத்தை கறாராக நடைமுறைப்படுத்தினாலே இப்போதைக்கு

[திரு. கு. ரமணி] [1979 பிப்ரவரி 12

போதுமென்று சொன்னார்கள். பினாமி நிலங்களை அரசாங்கம் எடுத்துக் கொள்ளப் போவதாக வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதாகப் பத்திரிகையிலே பார்த்தேன்; சந்தோஷப்பட்டேன். இந்த நிலங்களைப் பற்றி எங்கள் கணக்குப்படி பார்த்தால், ஒரு 8 லட்சம் ஏக்கர் நிலங்கள் கிடைக்கும். அதே மாதிரி கோயில் நிலங்களை எடுத்துக் கொள்வதாக இருந்தால், அதிலே 6 லட்சம் நிலம் கிடைக்கும். இப்படி 13, 14 லட்சம் ஏக்கர் நிலங்கள் கிடைக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பினாமி நிலங்களைப் பற்றி இந்த அரசு நிர்வாகம் சும்மா இல்லை; எல்லா விதமான முயற்சிகளும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் இங்கே இதைச் சொல்வதற்குக் காரணம், இங்கே இருக்கின்ற எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும், இதிலே தீவிரம் காட்டுகின்ற எல்லா அரசியல் கட்சிகளும், அதனைச் சார்ந்த உறுப்பினர்களும் இதிலே துணை செய்தால், மிகவும் உதவிகரமாக இருக்கும். யார் யார் எங்கெங்கே பினாமி நிலங்கள் வைத்திருக்கிறார்கள் என்பதை சொல்வார்களேயானால், எழுதுவார்களேயானால், அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறது.

திரு. கு. ரமணி: ரொம்ப நன்றி. இம்மாதிரி ஒத்துழைப்புத் தருவதற்கு நாங்கள் மட்டுமல்ல, அனைவரும் தயாராக இருக்கிறோம். இதிலே பிரச்னை என்னவென்றால், நீங்கள் இந்த விஷயத்தை பிரகடனப்படுத்தியிருக்கிறீர்கள் நடைமுறையில் செய்வீர்களா? ஆனால், அதை நடைமுறைக்கு கொண்டு வருவதில் என்ன கஷ்டம்? ஏன் தாமதம்? எடுத்துக்காட்டாக, நான் சொல்வதென்னவென்றால், நிலச்சுவான்தார்கள், கோயில் மடாதிபதிகள், மற்றும் பல்வேறு பினாமி ஏற்பாடு செய்தவர்கள் ஆகிய இந்த வர்க்கங்களின் கடுமையான எதிர்ப்பு ஏற்படும். இந்த எதிர்ப்பைச் சமாளித்து தக்க நடவடிக்கை எடுத்தால் லட்சோப லட்சம் கிராம மக்கள், ஏழைக் கூலிக்காரர்கள் பயன் அடைவார்கள்; அவர்களுக்கு 'ரிலீப்' ஏற்படும். எனவே, இந்தப் பிரச்னையை எதிர்ப்பை சமாளித்து, இதன்மூலம் கிடைக்கும் நிலங்களை விநியோகம் செய்ய முன்வரவேண்டும், அதைச் செய்வீர்களா?

மேற்கு வங்காளத்தில் 9 லட்சம் ஏக்கர் நிலங்களை இப்படி எடுத்திருப்பதாக விநியோகித்திருப்பதாக கணக்கு சொல்கிறார்கள். அதே மாதிரி, அதற்கு மேலும் தமிழ்நாட்டில் செய்ய முடியும். இந்த எதிர்ப்பை சமாளித்து நிற்கும் கொள்கை வேண்டும். அது மட்டுமல்ல, நிலமில்லாத விவசாயக் கூலித் தொழிலாளர்கள், நிலம் இருப்பவர்களின் நிலத்தில் அல்லது தரிசு நிலத்தில் பயிர் செய்ய இறங்கினால், போலீஸ் துணை கொண்டு அப்புறப்படுத்தப்படுகிறார்கள். எனவே, அரசு இந்தச் சட்டத்



1979 பிப்ரவரி 12] [திரு. கு. ரமணி]

தைப் பிரயோகித்து கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உச்சவரம்புச் சட்டப்படி எடுக்கப்பட்ட நிலம் எவ்வளவு?

31—5—78 நிலவரப்படி, தமிழ்நாட்டில் 75,846 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதனால் பயனடைந்தவர்கள் 48,133 விவசாயிகள் தான். இதிலே சொல்லப்பட்டிருப்பதோ சுமார் 75 ஆயிரம் ஏக்கர் நிலம். ஆனால், நாம் எடுக்கவேண்டிய நிலமோ சுமார் 15 லட்சம் ஏக்கர்களுக்கு மேல். எனவே, இதிலே இன்னும் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆகவே, அரசாங்கத்திற்கு அடிப்படையான கொள்கை இருந்தால்தான், இந்தச் சமுதாயத்தை மாற்றி அமைப்பதற்கு, கிராமங்களிலே உள்ளவர்களை ஜனநாயக அடிப்படையிலே, இன்றைய நாகரிக வளர்ச்சிக்கு ஏற்றபடி மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க முடியும். அப்படி எடுக்கும் நடவடிக்கைகளிலே, கிராம ஏழை மக்கள் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்திருக்க வேண்டும். அப்படி செய்தால், எங்கள் ஒத்துழைப்பும் கிடைக்கும். இதற்கு யாதொரு மறுப்பும் கிடையாது. யாராவது இது தவறு என்று சொன்னாலும், அது நியாயமாக இருக்காது. அப்படிப்பட்ட ஒரு கொள்கை இந்த அரசுக்கு உண்டா? இல்லை என்பது என்னுடைய வாதம். இப்போது அமைச்சர் அவர்கள் இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். எந்த அளவுக்கு அது நடைமுறைக்கு வரும் என்று பார்க்கவேண்டும். இந்த அரசு வந்து ஒரு வருஷம் ஏழு மாதம் ஆகிறது. தங்கத்தின் மாற்று கல்லில் உரைத்துப் பார்த்தால்தான் தெரியும். அரசின் கொள்கை நடைமுறையில் வந்தால்தான் நம்பமுடியும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இந்த அரசுக்கு உரைகல் எது என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அதை நீங்கள் எல்லாம் வரவேற்பீர்கள் என்று எதிர்பார்த்தேன், வரவேற்கவில்லை. உச்ச வரம்புச் சட்டம் எந்த ஆண்டு வந்தது என்று உங்களுக்கெல்லாம் தெரியும். 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் 15 ஸ்டாண்டர் ஏக்கர் உச்ச வரம்பு என்றெல்லாம் வந்தது. ஆனால் எவ்வளவு அதிகப்படியான நிலத்தை எடுத்து மற்றவர்களுக்குக் கொடுத்தார்கள் என்பது தெரியும். நிலமற்றவர்களிடத்தில் பணத்தை வாங்கிக் கொண்டு யாரிடத்தில் கொடுத்தார்கள் என்பதெல்லாம் தெரியும். இதற்கு முன்பு எடுக்கப்பட்ட நிலத்திற்கு பத்தாயிரம், பதினைந்தாயிரம், இருபதாயிரம் என்று மார்க்கட் விலையை விட அதிகமாகக் கொடுத்தார்கள் என்பதெல்லாம் தெரியும். இந்த அரசு அவசரச் சட்டமாகப் பிறப்பித்து எப்பேர்ப்பட்ட நிலமாக இருந்தாலும் சரி, மூன்று போகம் விளைந்தாலும், இரண்டு போகம் விளைந்தாலும், கரும்பு விளைவித்தாலும், தேக்கு இருந்தாலும், சந்தன மரம் இருந்தாலும் ஏக்கருக்கு 3,000 ரூபாய்க்கு மேல் விலை இல்லை என்று சட்டம் கொண்டு வந்திருப்பதைப் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. கு. ரமணி: அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. இந்த மாதிரி எடுக்கிற நடவடிக்கைகளுக்குப் பரிபூரணமான ஆதரவு இருக்கிறது என்று சொன்னேன். நாங்களும் பல விவரங்களைச் சொல்லவேண்டியிருக்கிறது. நிலத்தைக் கொடுக்கும்போது விலை வாங்காமல் ஏழை மக்களுக்கு கொடுக்கவேண்டும். ஏழை எளிய கூலிக்காரன், ஒரு காசுக்கு வழி இல்லாதவன், ஏழை விவசாயி பயிரிட்டுக் கொண்டிருப்பவன் ஏற்கனவே கடன் வாங்கியிருப்பான். அந்தக் கடனை ரத்து செய்ய வேண்டும். நிலம் பங்கிட்டு கொடுக்கும்போது நீங்களும் விலை கேட்கக்கூடாது. யார் முன்பு விலை கேட்டிருந்தாலும் அது சரியல்ல.

இன்னொன்று. ஆறு லட்சம் ஏக்கர் கோயில் நிலங்கள் இருக்கின்றன. கோயில்களில் இருக்கக்கூடிய 25,000 ஊழியர்கள் முக்கியமானவர்கள். நிலத்தில் உழைப்பவர்களுக்கு நிலத்தைக் கொடுக்கக்கூடாது என்று திரும்பத் திரும்ப அரசில் இருக்கக்கூடிய அமைச்சர்களும் சொல்கிறார்கள். இது நியாயமா? எந்தச் சாமி அந்த நிலத்திலிருந்து அரிசி வந்து சாப்பிடுகிறார்? அந்தக் கோயில்களைப் பாதுகாக்கக்கூடிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அந்த நிலங்களை எடுக்கக்கூடிய நடவடிக்கையை அரசு எடுக்கவேண்டும். அந்த மாதிரி புதிய கண்ணோட்டத்துடன் புதிய கொள்கைகள் கவர்னர் உரையில் இல்லை என்று வருத்தத்தோடு எடுத்துக் காட்டி இந்த அரசு இந்த நிலையில் இருந்து மாறி மேற்கூறிய மாதிரித் திட்டங்களை நிறைவேற்றினால் தான் மக்கள் நம்புவார்கள், அதைச் செய்ய முன்வரவேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. த. இராமசாமி: சட்டப் பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகிற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தமைக்காக எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவருடைய தலைமையில் இருக்கிற இந்த அரசு ஏழை எளிய மக்களுடைய நலனுக்கும் கிராமப்புறங்களில் வாழ்ந்து வருகிற மக்களுக்கும், விவசாயப் பெருமக்களுக்கும், தொழிலாள நண்பர்களுக்கும், நாட்டிலே அமைதியை ஏற்படுத்துவதற்கும் எந்த அளவுக்கு வலிவாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைக் கவர்னருடைய உரையின் வாயிலாக இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பிறகு இயற்கையினுடைய கோரச் சம்பவங்கள் நமக்குத் தெரியும். புயல், வெள்ளம், நிலச்சரிவு போன்றவைகள் ஏற்பட்டன. எங்களுடைய பகுதியான இராமநாதபுரம் மாவட்டத்தில் குறிப்பாக, இராமேஸ்வரம் கடலோரப் பகுதிகளில் சரியான இரவு நேரத்தில் புயல் வீசத் தொடங்கியது. மீனவர்கள் மேலும் பாதிக்கப்பட்டார்கள். நாட்டுப் படகுக் காரர்களும், விசைப் படகுக்காரர்களும் தங்களுடைய சொத்தான படகுகளை இழந்தார்கள்.



[பிற்பகல் 12-50]

பல்வேறு குடிசைகளில் வாழ்கின்ற ஏழை மக்கள் வீடுகளை இழக்கக்கூடிய கோரச் சம்பவங்கள் அங்கே நடைபெற்றன. புரட்சித் தலைவர் அவர்கள் வெளிநாட்டிலே இருந்த நேரம். அந்த நேரத்திலே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், சமூகநலத் துறை அமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அந்தப் பகுதிகளிலே சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்த்து உடனடியாக அரசு அதிகாரிகளைத் தங்களுடைய பணிகளைச் செய்வதற்கான காரியங்களிலே ஈடுபடுத்தினார்கள். அரசு அதிகாரிகள் முன்னெச்சரிக்கையோடு நடவடிக்கைளை மேற்கொண்டதன் காரணமாக ஏராளமான உயிர்கள் எங்கள் பகுதியில் பாதுகாக்கப்பட்டன. 1964ஆம் ஆண்டிலே இராமநாதபுரம் மாவட்டத்தின் கடைசிப் பகுதியான தனுஷ்கோடியிலே புயல் வீசியது, அந்த நேரத்திலே ஒரு ரயிலே அதிலே பயணம் செய்த நூற்றுக்கணக்கான பயணிகளோடு கடலுக்குள் இழுத்துச் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டது. புயல் என்று வானிலை அறிவிப்பு வந்த உடனே மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அவர்கள் செல்ல வேண்டும் என்று அதிகாரிகள் சொன்னபோதும்கூட அவர்களில் சிலர் மறுத்தபோது போலீசார் மீட்புப் பணியிலே ஈடுபட்டு அவர்களைப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டுசென்றார்கள். இப்படிக் கடுமையான புயல் வீசியபோதும்கூட ஒரு உயிர்கூட சேதம் இல்லாமல் அதிகாரிகள் சிறப்பாக நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. அப்போது புரட்சித் தலைவர் அவர்கள் வெளிநாட்டிலே இருந்தபோதும்கூட இந்த அரசு என்ன நினைக்கிறது என்பதை உணர்ந்த அதிகாரிகள், கடமையை உணர்ந்த அதிகாரிகள் அந்தப் பகுதிகளிலே தீவிரமாகச் செயல்பட்டார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக புரட்சித் தலைவர் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டு திரும்பிய உடனே நிலச்சரிவு ஏற்பட்டு பாதிக்கப்பட்ட ஊட்டிப் பகுதி, நீலகிரிப் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்ட பிறகு உடனே இராமநாதபுரம் மாவட்டத்திலே உள்ள கடலோரப் பகுதிகளுக்கு வந்து பாதிக்கப்பட்ட மக்களை, நாட்டுப் படகுக்காரர்களையும், விசைப் படகுக்காரர்களையும் பார்த்தபோது, அந்த மக்கள், ஒரு உத்தமத் தலைவரை நாடு பெற்றிருக்கிறது என்று நிம்மதி அடைந்தார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நிவாரணப் பணிகளுக்காக பல லட்ச ரூபாய்கள் ஒதுக்கப்பட்டு, நாட்டுப் படகுக்காரர்களுக்கு பண உதவி செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் ஏராளமான காரியங்கள் நிவாரணப் பணிகள் மூலமாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்றைய தினம் தமிழகத்தினுடைய அரசியலிலே அமைதியில்லை. பாதுகாப்பு இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு நாட்டிலே மாற்றுக் கட்சி நண்பர்கள் ஓங்காரமிட்டு வருகிறார்கள். கடந்த கவர்னர் உரையின்மீது நடந்த விவாதத்திலே பேசும்போது கூட நான்

குறிப்பிட்டேன். இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு எந்தக் கட்சியாக இருந்தாலும், எந்தக் கட்சி சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் அனைத்துக் கட்சியினருக்கும் பாதுகாப்புத் தருகின்ற ஒரு உத்தமத் தலைவரை இந்த நாடு முதல்வராகப் பெற்றிருக்கிறது. எங்களுடைய நாஞ்சிலாரை விமான நிலையத்திலே தாக்கப்பட்டது, அது மட்டுமல்லாமல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களின் கால்கள் வெட்டப்பட்டன, கொலை செய்யப்பட்ட கொடுமைகள் இப்படிப்பட்ட சம்பவங்களையெல்லாம் இந்த மன்றத்திலே சொன்னால் ரத்தக் கண்ணீர் வடிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இருந்தாலும் அமைதி காக்கவேண்டுமென்று தொண்டர்களுக்கு புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்ட காரணத்தினாலேயும் சட்டம் ஒழுங்கு அமைதி காக்கப்படவேண்டும், கட்சியினராக இருந்தாலும் அமைதி காக்கப்படவேண்டுமென்றும் இந்த ஆட்சிக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர்களும் செயல்பட்டு வருகிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர் முருகையன் கொலை செய்யப்பட்ட காட்சி, ஒவ்வொருவரின் வீட்டிலேயும் ஒரு சகோதரரை இழந்ததுபோல் வருந்தத் தக்க செயல் என்பதை யாரும் மறந்துவிடமுடியாது. புரட்சித் தலைவர் அவர்கள் தனது பயணத்தை ஒத்திவைத்துவிட்டு உடனடியாக முருகையன் இல்லத்திற்குச் சென்று வருத்தம் தெரிவித்துவிட்டுத்தான் தன்னுடைய சுற்றுப்பயணத்தைத் தொடர்ந்தார்கள். சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க உத்திரவிடப்பட்டது. மிகவும் மோசமான, காட்டுமிராண்டித்தனமான, மனித சமுதாயம் ஒத்துக் கொள்ளாத செயல் என்றும், கருத்து வேறுபாடுகள் இருக்கலாம் சொந்தப் பிரச்சினைகள் இருக்கலாம், இந்த சம்பவம் கண்டிக்கத் தக்கது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சம்பந்தப்பட்டவர்கள் நிச்சயமாக சட்டத்திலேயிருந்து தப்ப முடியாது என்று தெரிவித்திருக்கிறார்கள். இப்படியிருந்தும்கூட புரட்சித் தலைவரின் ஆட்சியில் நியாயம் இல்லை, அமைதி இல்லை, ஒழுங்கு இல்லை என்ற கூக்குரல் போடுவது என்றால் அது அரசியல் கருத்து மாற்றத்தின் அடிப்படையில், தங்கள் கட்சியின் வளர்ச்சி அடிப்படையில் கூறுகிறார்களே தவிர உண்மையில் அப்படி அல்ல என்று நாட்டுமக்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இந்த உரையில் ஏழை எளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, உழைக்கின்ற மக்களுக்கு, விவசாயப் பெருமக்களுக்கு மற்றும் அனைத்துப் பேர்களுக்கும் அவர்களை வாழச் செய்யும் அளவிற்கு உள்ள இந்த உரையை நான் பாராட்டி என்றுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து உரையை முடிக்கிறேன், வணக்கம்.





*திரு. அ. சுவாமிதாஸ் : மாண்புமிகு சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே கவர்னர் உரையின்மீது நடக்கின்ற விவாதத்தில் ஒரு சில கருத்துக்களை நானும் கூற விழைகிறேன். இப்போதைய முதல்வர், முன்னாள் எதிர்க்கட்சி வரிசையிலிருந்தபொழுது சட்டமன்றம் செத்துவிட்டது என்று சொல்லி மன்றத்திற்கே வராதிருந்தார்கள். சென்ற ஆண்டு ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் இந்தச் சட்டமன்றம் இரண்டு தடவை கூட்டப்பட்டிருக்கிறது. மக்களெல்லாரும், ''நீங்கள் சட்டமன்றத்திற்குப் போகவில்லையா'' என்ற கேள்வியை என்னிடத்தில் அடிக்கடி கேட்பதுண்டு. நான் எண்ணிப்பார்த்ததில் மாண்புமிகு முதல்வரவர்கள் கூறியதைப்போல செத்துவிட்டது என்று சொல்லாமல் இருந்தாலும்கூட, ''இது நோய்வாய்ப்பட்டு நலிந்து கொண்டிருக்கின்றது'' என்பதால் ஒருவேளை கூட்டப்படாமல் இருக்கலாமோ என்ற ஐயம் எனக்குள் எழுந்தது உண்டு. இந்தச் சட்டமன்றத்தை அடிக்கடி கூட்டி இதை நடத்தியிருக்க வேண்டும். பிறப்பிக்கப்பட்டிருக்கின்ற சட்டங்களையெல்லாம் கவர்னர் மூலமாக அவசரச்சட்டமாகப் பிறப்பித்திருக்கிறார்கள். அந்த நிலைக்குக் கொண்டுபோகாமல் அடிக்கடி சட்டமன்றத்தைக் கூட்டி வைத்து மக்களின் சார்பிலே வந்திருக்கின்ற உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்டு, சட்டங்களைப் பிறப்பித்திருந்தால் மிகவும் நலமாக இருக்கும்.

எடுத்துக்காட்டாக, மதுவிலக்கு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்திருக்கிறார்கள். அதைப் பிறப்பிக்கும்பொழுது அதனால் ஏற்படும் விளைவுகளைச் சற்றுக் கவனத்திற்குக்கொண்டு பிறப்பித்திருக்க வேண்டும். சட்டங்களை பிறப்பிக்கும் பொழுது ஒரு மையக் கருத்தை வைத்துக்கொண்டு பிறப்பிக்க வேண்டும். பல குற்றங்களைச் செய்தவன் வேண்டுமானாலும்கூட வழக்கு மன்றத்திலே விடுதலை பெறலாம், குற்றம் செய்தவர்கள் விடுதலை பெற்றாலும், பரவாயில்லை, ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது என்பது அதன் கருத்து. ஆனால், தற்போது அரசு பிறப்பித்திருக்கின்ற மதுவிலக்குச் சட்டத்தினால் பல நிரபராதிகள் பாதிக்கும் அளவில் இருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியில் தவறு செய்யாத பலபேர் இந்த மதுவிலக்கு அவசரச் சட்டத்தின் காரணமாக கைது செய்யப்பட்டு வழக்கு மன்றத்திற்குச் செல்கிறார்கள். சட்ட அமைப்பு அப்படியிருக்கிறது. அதனால் அவர்கள் வழக்குமன்றத்திற்குச் செல்லும் நிலை இருக்கிறது. இந்தச் சட்டத்தை மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கவர்னர் உரையில் இருக்கிறது. அப்பொழுது இந்தக் குறிக்கோள் பின்பற்றப்பட வேண்டும், அதாவது நிரபராதிகள் எந்தக் காலத்திலும் தண்டிக்கப்படக்கூடாது என்பதை மையமாக வைத்து அந்தச் சட்டத்தைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. சுவாமிதாஸ்] [1979 பிப்ரவரி 12

அடுத்து, சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது, சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கத் தவறி விட்டது என்பதற்கு ஆதாரபூர்வமாகப் பல கருத்துக்களை நாம் சொல்ல முடியும். எல்லாக் கட்சியினரும் இதைச் சொல்கிறார்கள். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே, நடந்து கொண்டிருக்கும் நிலையைப்பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த நிகழ்ச்சிகளைப் பார்த்தால் இங்கே போலீஸ் இலாக்காவே இல்லாததைப்போலவும், அதிகாரிகளே இல்லாததைப்போலவும், ஒரு அரசாங்கமே இல்லாததைப்போலவும் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. டிசம்பர் மாதம் 18, 19 தேதிகளிலே என் தொகுதியில் பல வன்முறைச் செயல்கள் நடந்தன. தக்கலையில் இருக்கும் போஸ்ட்டாபீஸ் கொளுத்தப்பட்டது.

[பிற்பகல் 1-00]

அங்கே பணியாற்றுகிறவர்கள் புகார் கொடுத்தார்கள். அங்கேயிருக்கிற டி.எஸ்.பி-யும், சர்க்கிள் இன்ஸ்பெக்டரும் நடவடிக்கை எடுக்கவில்லை. அமைதியாக இருந்தார்கள். கம்யூனிஸ்ட் கட்சிக்குச் சொந்தமான பந்தல் கொளுத்தப்பட்டது. அவர்களும் புகார் கொடுக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அரசு மருத்துவமனை முன்னாலே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அரசுப் பேருந்துக்கு தீ வைக்க முயற்சி நடந்தது. கண்டக்டரும் டிரைவரும் புகார் கொடுக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கவில்லை. இரண்டு நாட்களாக அத்தகைய செயல்கள் நடந்தன. உடனுக்குடன் புகார்கள் கொடுக்கப்பட்டன. ஆனால், அந்தப் புகார்கள் மீது போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்காத கார'ணத்தால், டிசம்பர் 20-ந் தேதியன்று அங்கே நரபலிகள் கொடுக்கப்பட்டன. இந்திய தாய்க்கே நரபலிகள்கொடுக்கக்கூடிய வகையிலே சொல்லிக்கொண்டே செய்தார்கள், வேதனையோடு சொல்கிறேன். இந்திரா அம்மையாருக்கு ஏதாவது நடந்தால் இரத்தஆறு ஓடும் என்று பல தலைவர்கள் பேசினார்கள், எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த பல தலைவர்கள்கூடப் பேசினார்கள். அப்படி தலைவர்கள் பேசிய காரணத்தாலே, அப்படிப்பட்ட, இரத்த ஆறை ஓடவைத்து இந்திய தாய்க்கே நரபலி கொடுத்திருக்கிறார்கள் ''இந்தியா இஸ் இந்திரா, இந்திரா இஸ் இந்தியா'' என்று நினைத்துக்கொண்டுதான் இப்படிச் செய்து காட்டினார்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய உறுப்பினர் சுவாமிதாஸ் அவர்கள் ஏதோ இரத்த ஆறு ஓடும், எங்கு பார்த்தாலும் கொலை நடக்கும் என்ற மாதிரி காங்கிரஸ் தலைவர்கள் பேசியதாகக் குறிப்பிட்டார். இது ரொம்பத் தவறு. காங்கிரஸ் கட்சி பலாத்காரத்திலே நம்பிக்கையில்லாத கட்சி. இரத்த ஆறு ஓடும் என்று எந்தத் தலைவரும் பேசியிருக்க முடியாது. பேசாத ஒன்றை கற்பனையாக நினைத்துக்கொண்டு ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது.



1979 பிப்ரவரி 12] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

திரு. அ. சுவாமிதாஸ் : நான் கற்பனையாகப் பேசவில்லை. எல்லா பத்திரிகைகளிலும் வந்த செய்திகளைப் படித்துவிட்டுத்தான் பேசுகிறேன். ஆதாரங்கள் இருக்கின்றன. நல்ல உணர்வோடுதான் பேசுகிறேன். இப்படிப் பலர் பேசினார்கள்......

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இரத்த ஆறு ஓடும் என்று யாரும் சொல்லி இருக்கவே முடியாது; பேராட்டம் நடக்கும், சிறைகள் நிரம்பும் என்று பேசியிருப்பார்கள். இரத்த ஆறு ஓடும் என்று யாரும் பேசியிருக்க முடியாது. இதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : இப்படி பேசியிருக்கிற காரணத்தால், இம்மாதிரி நடைபெற்றிருக்கிறது. போராட்டம் நடக்கும் போது சாதாரணமாக, பயணிகளையெல்லாம் கீழே இறக்கிவிட்டு, ஏதோ ஆத்திரத்திலே செய்தார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். இங்கே அப்படி நடக்கவில்லை. பஸ்ஸிலே பயணிகளை அப்படியே உட்கார வைத்து தீ வைத்து கொளுத்தி விட்டனர். எந்தப் பொருளை வைத்துக் கொளுத்தினார்கள் என்று தெரியாது. ஏனென்றால், பொருளை வீசியவர்கள் படித்தவர்கள் என்று சொல்கிறார்கள். உயிர் பிழைத்தவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், பெட்ரோலாக இருந்திருந்தால் நிச்சயமாக அதனுடைய மணம் வீசியிருக்கும். ஆனால் பெட்ரோல் வீசவில்லை. ஏதோ ஒரு பொருளை வீசினார்கள். ஒரே கரும்புகையாக இருந்ததால் தப்ப முடியாமல் போய்விட்டது. ஆகவேதான் 10 பேர் அந்த இடத்திலேயே உயிரிழக்க நேரிட்டது. அச்சம்பவம் குறித்து கவர்னர் கூட தன் உரையிலே சொல்லியிருக்கலாம். ஆனால் சம்பந்தப்பட்டவர்களைப் பார்க்கும்பொழுது அரசியல் கட்சிகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. காங்கிரஸ் கட்சிக்காரர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஆளுங்கட்சியினருக்குக்கூட அதிலே தொடர்பிருப்பதாகப் பலர் சொல்கிறார்கள். ஏனென்றால் கைது செய்ய பட்டவர்களில் ஒருவர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்லிக்கொள்கிறார்கள். ஆகவே, இதிலே போலீசார் 18-19 தேதிகளில் சரியான நடவடிக்கை எடுக்காத காரணத்தால், தீவிரமாகச் செயல்படாத காரணத்தால், இந்த அளவு நரபலி செய்ய வேண்டிய அளவு, கொலை பாதகத்தைச் செய்ய அந்த அரசியல்கட்சி முன்னுக்கு வந்தது. இந்தக் குற்றச்சாட்டின் முழுபொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அரசியல் கட்சி அதைச் செய்தது என்று கூறுகிறார்கள். மதிப்பிற்குரிய உறுப்பினர் காங்கிரஸ் கட்சியை நினைத்துக்கொண்டுதான் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். இன்றைக்கு இந்த கேஸ் கோர்ட்டிலே இருக்கிறது காங்கிரஸ்காரர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று சொல்கிறார். ஜனதா கட்சியிலே உள்ளவர் கூட சம்பந்தப்பட்டிருப்பதாக அங்கு பலர் சொல்கிறார்கள். ஆகவே, இது கோர்ட்டில்தான் முடிவு தெரிய வேண்டும். காங்கிரஸ் கட்சிக்காரர் என்று சொன்னதை நான் ஆட்சேபிக்கிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : காங்கிரஸ் கட்சிக்காரர் என்பதால் தான் அவரை கட்சியிலிருந்து சஸ்பெண்ட் செய்து வைத்திருக்கி கிறார்கள்....................

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : இந்தப் பிரச்சனைமீது பேசக் கூடாது.

திரு. அ. சுவாமிதாஸ் : உண்மையை பேசக் கூடாதா ?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : நீதிமன்றத்திலே இருக்கிறது, ஆகவே பேசாதீர்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நீதிமன்றம்தான் யார் குற்றவாளி என்ற முடிவைச் சொல்ல வேண்டுமே தவிர..........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : நீதிமன்றத்திலே அந்த வழக்கைப் பற்றிய விவரங்கள் வரும். ஆகவே, இப்பொழுது அதுபற்றிப்பேச வேண்டாம்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் இருக்கிறது, நீதிமன்றத்தில் இருக்கிறது என்றால் our right of speech is unfettered இந்த அவுசுக்குள்ளே இது நீதிமன்றம். இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது, இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது என்றால் It is a serious mat'er. இன்வெஸ்டிகேஷனில் இருப்பதைப் பேசக்கூடாது என்று சொன்னால், எந்த ஒரு இன்சிடென்சும் நடந்தால் உடனே இன்வெஸ்டிகேஷன் ஆரம்பிக்கும் எதையுமே பேச முடியாது. அவர் பேசும்பொழுது ஒரு பார்ட்டியை ரெபர் பண்ணினார். அதற்குப் பதில் பேசும்பொழுது அது நாங்கள் இல்லை என்று சொல்லிவிட்டால் சரியாகிறது. குறிப்பிட்ட அக்யூஸ் பண்ணின ஒருவரை, உதாரணத்திற்காக பார்லிமெண்ட்டில் நேவல் ஆபீசர் குழந்தைகளை கொலை செய்ததைப் பற்றி மிகத் தெளிவாக, விவரமாகப் பேசியிருக்கிறார்கள்.





லோக் சபாவில் நடந்திருக்கிறது, ராஜ்யசபாவில் நடந்திருக்கிறது. அப்படி இருக்கும்போது இங்கு மட்டும் மெம்பர்களுடைய ரைட்டை ஏன் ஷட்டவுன் பண்ணவேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : நீதி மன்றத்திலே ஒரு வழக்கு இருக்கும்போது அவர்கள் தீர்ப்பு கொடுப்பதற்கு முன்னால் இங்கே ஒரு தீர்ப்பு வழங்குகிற மாதிரி வந்துவிடும்.

திரு. ரா. உமாநாத் : அக்யூசுடு பற்றிச் சொன்னால்: A case was registered and the accused were arrested. There was a big furore and debate in Parliament.

மா புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்: கோர்ட்டில் இருக்கும் வழக்கைப் பற்றிப் பேசினால் சப்ஜுடிஸ் ஆகிவிடும். வெளியே பேசினால் பிரிஜுடிஸ் ஆகும். ஜுடிசியல் சப்ஜுடிஸ்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; பொதுவாக வெளியே ஒரு சம்பவம் நடக்கிறபோது அது பற்றிய உண்மை. The facts can be reported. Only when the Hon'ble Members dicuss about any such incident, care must be taken to confine to the facts. Only when they stretch to the limit of giving opinion or inference, that becomes sub-judice. I think that will clear the position.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய சுவாமிதாஸ் அவர்கள் கடைசியில் பேசுகிறபோது, எங்கள் கட்சியிலே உள்ள சம்பந்தப்பட்ட ஒருவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். எனவே நாங்கள்தான் செய்தோம் என்று ஒத்துக் கொண்டோம் என்பதைப்போல சொன்னார்கள். அது தப்பு. குற்றம் சாட்டப்பட்டிருக்கிறவரை கட்சியில் வைத்திருக்கிறீர்களே என்று பொது மக்கள் கேட்கக் கூடாது என்பதற்காகத்தான் டிஸ்மிசல் இல்லை, சஸ்பெண்ட் செய்திருக்கிறோம்.

திரு. அ. சுவாமிதாஸ் : ஒரு கட்சியைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினாலேதான் கட்சியை விட்டு நீக்கப்படுகிறார். அவர் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காகத்தான் சொன்னேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. அ. சுவாமிதாஸ் : கீழ்வெண்மணிக்கு அடுத்தபடியாக நடந்திருக்கக்கூடிய சம்பவம் இது. இப்படிப்பட்ட சம்பவம் இனிமேல் நாட்டிலே நடக்கக் கூடாது. அப்படிப்பட்ட சம்பவத்தைப் பற்றிச் சொல்ல வந்தால் மணி அடிக்கிறீர்களே.

அடுத்தபடியாக, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான காரியங்கள் செய்யப்படவில்லை. இங்கே சென்னையில் செய்திருப்பதுபோல அங்கேயும் செய்திருந்தால் இதைச் சுட்டிக்காட்டி இருக்கவே மாட்டேன். இன்னும் குளங்கள் உடைந்து, நிலங்கள் மண்மேடிட்டுத்தான் இருக்கின்றன. அவைகள் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. அது மட்டுமல்ல, ஒரு ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் விவசாயம் செய்ய முடியவில்லை. அங்கே வீடிழந்து பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு 7 கிலோ அரிசி கொடுக்கப்பட்டது. ஆனால் சென்னைப்பட்டிணத்தில் 50 கிலோஅரிசி கொடுக்கப்பட்டிருக்கிறது. மக்கள் அது குறித்து கேட்டதற்கு நான் சொன்னேன், அங்கே தேர்தல் வரும்போல இருக்கிறது. இங்கேயும் தேர்தல் வந்தால் அப்படிப்பட்ட அரிசி கொடுப்பார்கள் என்று சொன்னேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u> : தலைவர் அவர்களே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எல்லாம் தமிழ்நாடு பூராவும் ஒரே விதமாகத்தான் நிவாரணம் அளிக்கப்பட்டு வருகிறது. முதலிலே ஒரு சட்டம் இருந்தது. அந்தச் சட்டத்தின்படி முதலிலே கொடுத்திருப்பார்கள். முதலிலே 60 ரூபாய் கொடுத்தார்கள். பின்னர் 100 ரூபாய் கொடுத்தார்கள். முதலிலே 7 கிலோ அரிசி கொடுத்தார்கள். பிறகு 50 கிலோ உயர்த்திக் கொடுத்தார்கள். எல்லா இடங்களுக்கும் இந்த ஜி.ஓ. தான்—எல்லா ஆட்சி மன்றத் தலைவர்களுக்கும், அனுப்பப்பட்டிருக்கிறது. முன்பு 5 கிலோ கொடுத்திருந்தால் மீண்டும் 45 கிலோ கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1·10]

<u>திரு. அ. சுவாமிதாஸ் :</u> தலைவரவர்களே, வாங்கியவர்களுக்குத் தெரியும். 7 கிலோ அரிசிக்குமேல் கொடுக்கப்படவில்லை. அங்கே அரிசி கொடுக்கிறபோது, கலெக்டர், நாங்கள் எல்லோரும் இருந்தோம். அவர்கள் 7 கிலோ அரிசி வாங்கிக்கொண்டு போகும்போது சந்தோஷமாகத்தான் போனார்கள். பத்திரிகையில் செய்தி போட்டதால்தான் அவர்கள் எங்களிடத்தில் வந்து கேட்க ஆரம்பித்தார்கள். பத்திரிகைக்காரர்கள் இதையெல்லாம் உடனே எழுதிவிடுகிறார்கள். (மணியடிக்கப்பட்டது.)

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்):</u> உங்கள் நேரம் முடிந்து விட்டது. அடுத்து திரு. மு. அம்பிகாபதி பேசுவார்.





<u>திரு. அ. சுவாமிதாஸ் :</u> சட்டமன்றம் கூட்டுவதே இல்லை. கூட்டுகிறபோதும் நாங்கள் பேசக்கூடாது என்றால் எப்படி? சீக்கிரம் முடித்து விடுகிறேன்.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்):</u> ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. சீக்கிரம் முடியுங்கள்.

<u>திரு. அ. சுவாமிதாஸ் :</u> கட்ட பொம்மன் போக்குவரத்து கழகத்திற்கு தலைமை அலுவலகம் நாகர்கோவிலில் இருக்கிறது. தமிழ்நாடு அரசுக்கு அந்தக் கழகம் சொந்தமானது முதல் அந்த அலுவலகம் நாகர்கோவிலில்தான் இருந்து, சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. அதை மாற்றுவதற்கு அங்கே இருக்கும் சிலர் முயற்சிக்கிறார்கள். அதை மாற்றக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) இந்த ஒன்று மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். நலிந்து போன கலைஞர்களுக்கு மானியம் கொடுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. வைஜயந்திமாலா போன்ற பணக்கார கலைஞர்களுக்குக் கொடுப்பது சரியல்ல, முதியோர் பென்ஷன் ரூ. 20 தற்போது சிலருக்குத்தான் கொடுக்கிறோம். பலர் அப்ளிகேஷன் போட்டும் அவர்களுக்குக் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, வைஜயந்திமாலா போன்ற கலைஞர்களுக்குக் கொடுக்கப்படும் பணத்தை 50 முதியோர்களுக்கு பென்ஷனாகக் கொடுக்கலாம் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

*<u>திரு. மு. அம்பிகாபதி :</u> மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது நடக்கும் விவாதத்தில் பங்கு கொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான விஷயங்களைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆளுகிற கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய முதலமைச்சர் தயாரித்து இருக்கும் உரையைப் பாராட்டி விரிவாகப் பேசியிருக்கிறார்கள். சட்டமன்றத்தை இருமுறை கூட்டி பல்வேறு விஷயங்களை விவாதித்து இருக்க வேண்டிய நாம் நீண்ட நாட்களுக்குப் பின்னர் இன்று கூடியிருக்கிறோம். இந்த இடைக்காலத்தில் பல பிரச்னைகள் நடந்து இருக்கின்றன. குறிப்பாக இன்றைக்குத் தமிழகத்தில் தொழிலாளர் வர்க்கம் கொதித்து எழுந்து நேற்றைய தினம் அம்பத்தூரில் கூடி மார்ச்சு மாதம் கோட்டையை நோக்கிப் பேரணி வரப் போகிறோம் என்று அறிவித்து இருக்கிறார்கள். தமிழகம் எங்கும் விவசாயிகள் புயல்-மழை-வறட்சி-வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். வெள்ளத்தால் விளைச்சல் விளையவில்லை. விளைச்சல் இன்மை மட்டுமல்ல, விலையும் இல்லை என்ற நிலைமைக்குத் தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஆளாக்கப்பட்டு, அவர்கள் எல்லாம் ஒன்று கூடி நாங்கள் உட

[திரு. மு. அம்பிகாபதி] [1979 பிப்ரவரி 12

கொடுக்கமாட்டோம் என்று அறிவித்து இருக்கிறார்கள். வேலை அற்ற மாணவர்கள் கேரளத்தைப் போல், மேற்கு வங்காளத்தில் அளிக்கப்படுவதைப் போல், எங்களுக்கு உதவித் தொகை கொடு, அல்லது வேலை கொடு என்று கோரி மார்ச்சு 23-ம் தேதி பகவத்சிங் பிறந்த நாள் அன்று கோட்டையை நோக்கி மாபெரும் பேரணி நடத்த இருக்கிறார்கள். தொழிலாளர்களும், 'மாண வர்களும் பேரணி நடத்துவதற்கு அனுமதிப்பீர்களோ மாட்டீர் களோ தெரியவில்லை. டெல்லியில் நாங்கள் கடந்த நவம்பர் 20-ம் தேதி ஒரு பேரணி நடத்தினோம். கூட்டம் நடந்தது. இந்திரஜித் குப்தா பேசினார். கலைந்து சென்றோம். ஆனால் இங்கே மிகவும் கச்சிதமாக 144 தடை உத்தரவு பிறப் பித்து, தடுத்து விடுகிறார்கள். கோட்டையை நோக்கி வந்த பிறகு அனுமதிக்கமாட்டார்கள்.

தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக ஒரு கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தொழிற்சங்கங்களில் அரசியல்வாதி களின் தலையீடு இருக்கக் கூடாது, அரசியல்வாதிகள் தலைவர் களாக இருக்கக்கூடாது என்று கூறுகிறார்கள், முதலமைச்சர் அவர்களும் தொழிலாளர் நல அமைச்சரவர்களும் கூறுகிறார் கள். மாபெரும் தலைவர் பண்டித ஜவகர்லால் நேரு, சுபாஷ் சந்திர போஸ், கப்பல் ஒட்டிய தமிழன் வ.உ.சி., வாடியா, சர்க்கரை செட்டியார், திரு.வி.க. போன்றவர்கள் அந்தக் காலத்திலேயிருந்து தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் விவரம் கெட்டவர்கள், நீங்கள் மட்டும்தான் விவரம் கெடாதவர்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.]

இன்றைக்குத் தொழிற்சங்கத் தலைவர்களாக இருக்கிற வி. பி. சிந்தன், கே. ரமணி, கோபு, கே.டி.கே. தங்கமணி, எம். கல்யாணசுந்தரம், கே.டி. ராஜு இதில் சிலர் இரயில்வேயில் பணியாற்றியவர்கள். இங்கு இருக்கக்கூடிய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள்கூட இரயில்வேயில் பணியாற்றியுள் ளார்கள் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

முதலமைச்சர் அவர்களும், தொழிலாளர் நல அமைச்சரவர் களும் தொழிற்சங்கத்தில் அந்நியர் தலையீடு இருக்கக்கூடாது என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். நகரசுத்தி தொழி லாளர்கள், கைத்தறி நெசவாளர்கள், இந்த நாட்டிலே எழுதப் படிக்கத் தெரியாமல் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிற இலட்சக் கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் இவர்கள் அனைவரை யும் ஒடுக்க, சட்ட ஞானம் இல்லாதவர்களைக் கசக்கிப் பிழிய இந்தச் சர்க்கார் செய்கிற ஒரு சூழ்ச்சி அது என்று நான் குற்றஞ் சாட்டுகிறேன்.



1979 பிப்ரவரி 12] [திரு. மு. அம்பிகாபதி.[

தொழிற்சங்கம் நடத்த முதலாவதாக ஆங்கில அறிவு கொஞ்சமாவது வேண்டும். இரண்டாவதாக சட்ட ஞானம் வேண்டும். இந்த இரண்டும் படித்த தொழிலாளர்கள் இந்த நாட்டில் பெரும்பகுதியாக இல்லை. எனவே, அவர்களுக்கு கேடயமாக இருந்து, அவர்களை எழுந்து நிற்கச் செய்கின்ற வர்கள் அந்நியர்களா? அது கூடாது என்று நீங்கள் சொல் கிறீர்கள். ஆக, இதில் உங்களுடைய திட்டவட்டமான கருத்து என்ன என்பதைப்பற்றி இந்த ஆளுநர் அறிக்கையிலே ஒரு வரி கூட இல்லை.

வேலை நிறுத்தம் செய்தால் முதலாளிக்கு லாபம் குறைந்து விடும்; லாபம் குறைந்தால் போனஸ் கிடைக்காது; அதனால் வேலை நிறுத்தம் செய்யாதே என்று இந்த அரசின் சார்பில் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? வேலை நிறுத்தத்தி னால்தான் லாபம் முடக்கப்படுகிறது என்பதுபற்றி எந்தவித மான அறிவிப்பும் இந்த அறிக்கையில் இல்லை என்பதை வருத்தத் தோடு குறிப்பிட விரும்புகிறேன்.

அருமை தோழர் ரமணி அவர்கள் சொன்னதைப்போல தொழிலாளர்கள் உற்பத்தி செய்து குவிப்பவர்கள். அவர்கள் பஞ்சை நூலாக்குகிறார்கள்; நூலில் வண்ணம் ஏற்றுகிறார் கள்; அதை சேலையாக மாற்றுகிறார்கள். அவர்கள் ஆணா கட்டும் அல்லது பெண்ணாகட்டும். அந்தத் தொழிலாளர் வர்க்கத்தைப் பற்றி 'அற்புதத்தைப் படைக்கின்ற பிரம்மா' என்று பாரதி சொன்னானே! அவர்களைப்பற்றி ஒரு வரி கூறி யிருக்கிறீர்களா?

இன்றைக்குத் தமிழகத்தில் தொழிலாளர்கள் கொதித் தெழுந்துகொண்டிருக்கிறார்கள். கோவை லட்சுமி ஓர்க்ஸ், பி. டி. சி. தொழிலாளர்கள், என். ஜி. ஓ. போராட்டங்களில் தாக்குதல், ஆசிரியர்கள் போராட்டத்தில் தாக்குதல் நடை பெற்றிருக்கிறது. ஆனல் டி. வி. எஸ். நிறுவனத்திற்கு நிரந் தரமாக போலீஸ் பாதுகாப்பு. அங்கே போலீஸ் கொட்டகையே இருக்கிறது. தொழிலாளர்கள் தாக்கப்படுகிறார்கள் என்றால் பாதுகாப்பில்லை. டி. வி. எஸ்.' நிறுவனத்திற்கு நிரந்தர போலீஸ் கொட்டகை மத்திய போலீஸ். பாராளுமன்ற உறுப்பினர் தன்னைக் கொலை செய்வதாக மிரட்டுகிறார்கள் என்று கம்பிளைன்ட் கொடுத்திருக்கிறார். அதை விசாரிக்க போலீசுக்குத் தெரியவில்லை. ஆனல் டி. வி. எஸ். நிறுவனத்திற்கு நிரந்தர பாதுகாப்பு.

எங்களால் போடப்பட்ட வழக்குகள் எல்லாம் வாபஸ் வாங்கப்படும் என்று முதலமைச்சர் சுதந்திரதின விழாவில். கூறினாரே, இன்னும் ஏன் வாபஸ் வாங்கவில்லை. கடந்த உரையிலே கேட்டோம். சேலம் இனால் பாக்டரி

அதைப்போல சதர்ன் சுச் கியர், சக்தி பைப்ஸ், இரண்டு சக்கரை ஆலைகள் மூடிக் கிடக்கின்றன. சேலம் மாக்னசைட் நிறுவனத்தை எடுத்து நடத்துவதாக சொன்னார்கள். அது ஜாயின்ட் செக்டாரா அல்லது பப்ளிக் செக்டாரா என்று அறிவிக்காமல் இருக்கிறார்கள். 20, 30 ஆண்டு காலம் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து எடுத்துக்கொள்வோம் என்றீர்களே என்ன நியாயம். ஆனால் அங்கே 'நோ சர்வீஸ் கன்டினியூட்டி'. ஒரு நிர்வாகம் மாறலாம். அதற்காக தொழில் உறவு கொள்கை மாறலாமா ?

இந்த அரசின் போக்கின் காரணமாக குரோம்பேட்டை லெதர் கம்பெயினில் ஒரு வேடிக்கை நடக்கிறது. சாதாரண மாக தொழிலாளிதான் கோரிக்கை வைப்பான். அங்கே முதலாளி கோரிக்கை வைக்கிறார். கடந்த எட்டு மாதங்களாக அந்த லெதர் கம்பெனி மூடியிருக்கிறதா அல்லது திறந்திருக் கிறதா என்று தெரியவில்லை. அங்கே வேலை நடப்பதாகத் தெரியவில்லை; நிர்வாகத்தினர் மூடுவதற்கு இந்த அரசுக்கு கோரிக்கை வைத்திருப்பதாகத் தெரிகிறது. அதைப்போல டி. ஐ. சைக்கிள்ஸ். ஊதியத்தைக் குறைப்போம் என்று கோரிக்கை வைக்கிறார்கள். இப்படி முதலாளிகள் கோரிக்கை வைக்கின்ற அற்புதம், தொழிலாளர் போராடினால் தாக்கப்படுகின்ற அநியாயம் இந்த அரசில்தான் நடக்கிறது; போலீஸ் பாதுகாப்பு இல்லை என்பதை சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

[பிற்பகல் 1·20]

அடுத்து சாராயத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது பற்றி முன்பே ஒரு கருத்து கொடுத்திருக்கிறேன். பின்னாலே விவரமும் தருகிறேன்.

தொழிலாளியைப் பாதுகாக்க முடியாத சர்க்கார் அதே நேரத்தில் சாராயம் காய்ச்சியை பிடிக்க ஓடும் சர்க்கார் ஏழு இலட்சம் வாக்காளர்களைக் கொண்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் காவல் நிலையத்தில் கம்பிளையின்ட் கொடுத்திருந்தும் எந்தவித நடவடிக்கையும் இல்லை. தோழர் S. G. முருகையன் 6-1-79 அன்று இரவு முன்புறம் 25, பின்புறம் 8 ஆக மொத்தம் 33 குத்துகள் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மீது விழுந்து அவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அது எந்த வகையிலே நடை பெறுகிறது ! என்பது பற்றிக் கூட கவலை இல்லை. என்ன நடைபெறுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். குற்றவாளி [illegible] செய்வோம் என்று ஆளுநர் உரையிலே





இருக்கிறது. யார் அந்தக் குற்றவாளிகள்? போலீஸ் அதிகாரி, ஒருவர்தான் என்கிறார். ஒருவர்தானா? ஒருவர் இவ்வளவு குத்துக் களையும் குத்த முடியுமா? ஒரு சுடக்கிடும் நேரத்தில் என்பதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வண்டும் என்று தான் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு பல நிகழ்ச்சிகள் தமிழகத்திலே நடைபெறுகிறது. விவசாயிகள் போராட்டம் என்றால் தாக்கு தல் நடைபெறுகிறது. தொழிலாளி போராட்டம் என்றால் தாக்குதல் நடைபெறுகிறது. என். ஜி. ஓ., ஆசிரியர்கள், தொழி லாளர்கள் போராட்டங்களில் குண்டர்கள் தாக்குகிறார்கள். பி. டி. சி. போக்குவரத்துக் கழகத்தில் பந்த் நடந்த நேரத்தில் சிலர் மக்களுடைய பாதுகாப்பாளர்கள் என்று கூறி, பணி யாளர்கள் என்று கூறி அபாயத்தை அளிப்பதாகச் சொல்லப் படுகிறது. இன்றைக்குத் தமிழகத்தில் தொழிலாளி மீது எழுந்திருக்கக்கூடிய கடுமையான நிலையை பற்றி இந்த ஆளுநருடைய அறிக்கையில் குறிப்பிடப்படாதது வருந்தத் தக்கது என்பது மட்டுமல்ல, இன்றைக்குப் பல தொழிலாளிகள் சங்கம் அமைக்கின்ற உரிமையைக் கூட அடைய முடியவில்லை. பல தொழிலாளர்கள் கோரிக்கையை வைக்க முடியவில்லை. தொழிலாளர்கள் தங்களது உரிமையைப் பெறுவதற்குப் போராடினால் தாக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட கடும் நிலையைப் போக்குவதற்கான நடவடிக்கைகள் ஏதும் இந்த அறிக்கையிலே இல்லை. தமிழகத் திலே புயல் அடித்ததும் ஒரு சாலை கூட ஒழுங்காக இல்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் சென்னையிலிருந்து தயவு செய்து திண்டிவனம் வரையில் சென்று பாருங்கள். அவைகள் சாலைகளா? தஞ்சை மாவட்டத்தில் கடுமையான புயல் வீசியது. பல சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. காரைக் குடி கூட சென்றிருந்தேன். அங்கும் சாலைகள் பாதிக்கப் பட்டிருக்கின்றன. மன்னார்குடியிலும் இதே நிலைமைதான். தமிழகத்தில் பெரும்பாலான சாலைகள் பாதிக்கப்பட்டிருக் கின்றன. இந்த நிலைமைகளை மாற்றுவதற்கான எந்தவித மான திட்டமும் கிடையாது. தேவையான திட்டம் இல்லை. குடியிருக்க மனை, அதாவது சுதந்திரம் பெற்று 32 வருடத்திற் குப்பின்னால் மனை கொடுப்போம், மளிகைக் கடை திறப்போம் என்று கூறுகிறீர்கள். இராமலிங்க அடிகளார் கடை விரித்தோம், கொள்வாரில்லை, என்று சொன்னதைப்போல் சொல்லிவிட்டால் மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? புகை வண்டி ஓட்டிய வெள்ளையனையே வெளியேற்றினார்கள், கப்பலை ஓடவிட்ட வெள்ளையனையே மக்கள் வெளியேற்றி னார்கள். ஆகவே மளிகைக் கடை திறந்தோம் என்று கூறிப் பார்க்கலாம் என்று நினைக்காதீர்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சரவர்கள் குடியிருக்க 10 சென்ட், 20 சென்ட் நிலம் என்பதோடு தொழிலாளர் விஷயங்களில் நல்ல நிலைமைகளை ஏற்படச் செய்ய வழியில்லை.

[திரு. மு. அம்பிகாபதி] [1979 பிப்ரவரி 12

மன்னார்குடியில் எஸ். டி. எம். கோர்ட் இருக்கிறது. இது சம்மந்தமாக மாண்புமிகு சட்ட அமைச்சவரர்களிடம் 4 முறை கூறியிருக்கிறேன். முதலமைச்சரவர்களிடமும் கூறி இருக்கிறேன். இரண்டரை லட்சம், மூன்றரை லட்சம் மதிப்பு டைய கட்டிடம் இருக்கிறது. அதை மாற்றுவதற்கு முயற்சி நடைபெறுவதாகத் தெரிகிறது. சட்ட அமைச்சரே சொன் னாலும் கூட ஹைக்கோர்ட் நீதிபதி மாட்டோம், முடியாது என்று சொல்வதாகத் தெரிகிறது. இது சம்பந் தமாக நடவடிக்கை வேண்டும். ஆளுநர் அவர்களது உரையில் எந்தவிதமான திட்டத்துக்கும் உரிய அறிகுறியே இல்லை என்று கூறிக்கொண்டு இந்தஆளுநர் உரையை நாங்கள் வரவேற்க வில்லை என்று கூறி முடிக்கிறேன்.

*திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, ஆளுநருடைய உரையின் மீது என்னுடைய கருத்துக் களைக் கூற விரும்புகிறேன். இங்கே முன் மொழிந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் கள் பேசினார்கள். அப்போது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனைகளையும் பற்றிப் பேசினார்கள். தயவு செய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது பல்வேறு இலாக்காக்களிலே என்னென்ன சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள், எப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம் கொண்டு வந்தார்கள். அப்படிப்பட்ட திட்டங்கள் ஏதாவது இந்த ஆளுநர் உரையில் அமைந்திருக்கிறதா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் குறை கூறினார்கள் ஆளும்கட்சிக்காரர்கள் என்ற அடிப்படையில் அப்படிக் கூறியிருப் பார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் நாங்கள் சாதித்த சாதனைகளை நீங்கள் நிச்சயமாக மறந்துவிட முடியாது. டாக்டர் கலைஞர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது அறிவிக்கப்பட்ட திட்டம்தான் அரசு ஊழியர்கள் இறந்தால் ரூ. 10,000 அளிக்கப்படும் என்பது. தாழ்த்தப்பட்டவர்கள் அத்தனைபேர்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், இலவச கான்கிரீட் வீடுகள் போன்ற பல்வேறு திட்டங்களை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அன்றையதினம் அறிவித்தது. ஆளும்கட்சிக்காரர்கள் சொல்லியிருக் கிறார்கள், இன்றையதினம் [illegible] நியாயவிலைக் கடைகள் திறந்திருக்கிறோம் என்று. [illegible] திறந்திருக்கிற கடைகளையெல்லாம் இன்றையதினம் நாட்டில் [illegible] மாவட்டத்தை எடுத்துக்கொண்டால். [illegible] தேர்தலை முன்னிட்டு நியாயவிலைக் கடை [illegible] திறந்திருக்கிறார்களே தவிர அவை பொது மக்களுக்குத்



1979 பிப்ரவரி 12] [திரு. செ. இராமலிங்கம்]

தேவையான அளவிற்கு, அவர்களுக்குப் பயன்படக்கூடிய அள விற்கு அந்த நியாயவிலைக் கடைகள் இன்றையதினம் பணி புரிகின்றனவா என்றால் நிச்சயமாகக் கிடையாது. ஆக, இவர் கள் நோக்கமெல்லாம் தங்கள் கட்சி விளம்பரத்திற்காகவும் தேர்தலுக்காகவும் நியாயவிலைக் கடைகளை தோற்றுவித்திருக் கிறார்களே தவிர உள்ளபடியே நாட்டு மக்களுக்குத் தேவையான வகையில் இந்த நியாயவிலைக் கடைகள் திறக்கப்படவில்லை. இந்த நியாயவிலைக் கடைகளில் கிடைக்கிற பொருள்களின் விலை வெளிக் கடைகளில், தனியார் கடைகளில் இருக்கிற விலையை விட கூடுதலாக இருக்கிறது என்பதை ஆதாரத்தோடு எங்களால் நிரூபிக்க முடியும். எனவே அந்த நியாயவிலைக் கடைகள் இன் றையதினம் அநியாயவிலைக் கடைகளாக அங்கு தோன்றுகிறதே தவிர நியாயவிலைக் கடைகளாக இல்லையென்று குறிப்பிட விரும்புகிறேன். ஆளுநர் அவர்கள் உரையைப் படித்துப் பார்த் தோம். அதில் தொழில் வளர்ச்சி பற்றி ஏதாவது தெரிவித்திருக் கிறார்களா என்று பார்த்தோம். கல்வி இலாகா பொறுத்த மட்டில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் பற்றி சொல்லியிருக் கிறார்களா என்று பார்த்தோம். பொதுச் சுகாதாரம் பற்றி ஏதாவது சொல்லியிருக்கிறார்களா என்று பார்த்தோம். எந்த விதமான திட்டம்பற்றியும் அந்த உரையில் காண முடியவில்லை. எனவே எந்த அளவில் இந்த உரையை நாங்கள் ஆதரிக்கமுடியும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆளுநர் அவர் கள் உரையில் மதுவிலக்குக் கொள்கையை அப்படியே அமுல்படுத் தப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்று நாடு பூராவும் நடைபெறுவது ஆளும்கட்சிக்காரர்கள் தலையீடு. மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்தமுடியாத அளவிற்கு ஆளும்கட்சிக் காரர்கள் காவல் துறையில் தலையீடு என்று பத்திரிகை வாயிலாகப் பார்க்கிறோம். அதோடு மட்டுமல்ல நண்பர்களே, இன்று நாட்டில் விவசாயிகளின் நிலை எந்தளவிற்கு சீர்கேடு அடைந்திருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. அந்த விவசாயிகள்பற்றி இந்த உரையில் ஏதாவது குறிப்பிட்டிருக் கிறார்களா என்றால் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. ஆங்காங்கு மாவட்டந்தோறும் வரி கொடா இயக்கம் ஆரம்பித்து விவசாயிகள் சங்கம் அறிவித்திருக்கிறது. அவற்றின் நியாயமான கோரிக்கைகளைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றையதினம் விவசாயிகளுக்கு தங்கள் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. நெல்லுக்கு க்விண்டாலுக்கு ரூ. 140 கேட்கிறார்கள். கரும்புக்கு ரூ. 170 டன்னுக்கு கேட்கிறார்கள். பணிலாப் பயிருக்கு க்விண்டாலுக்கு ரூ. 400 கேட்கிறார்கள். பருத்தி போன்ற வணிகப்பயிர்களுக்கு ரூ. 600 முதல் ரூ. 800 வரை கேட்கிறார்கள். நியாயமான விலை. ஆனால் இன்றிருக்கிற மாநில அரசு மத்திய அரசைச் சுட்டிக் காட்டுகிறது. மத்திய அரசு எங்களுக்கு அனுமதி தரவில்லை என்று சொல்கிறார்கள். நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், நெல்லுக்கு

[திரு. செ. இராமலிங்கம்] [1979 பிப்ரவரி 12

போனஸ் கொடுத்தது அந்த ஆட்சி. ஆனால் இன்றையதினம் இவர்கள் மத்திய அரசைச் சுட்டிக்காட்டுகிறார்கள். அண்டை மாநிலமான கேரளாவில் இன்றையதினம் நெல்லுக்கு க்விண்டாலுக்கு ரூ. 120 கொடுக்கிறார்கள். அங்கிருக்கிறவர்கள் மத்திய அரசு அனுமதி தரவில்லையென்று சொல்லியது கிடையாது. மைசூர் மாநிலத்தில் கூட க்விண்டாலுக்கு ரூ. 98 கொடுக்கிறார்கள் என்று அறிகிறோம். இங்கிருக்கிற மாநில அரசுதான் மத்திய அரசைக் காட்டி நெல்லுக்கு நியாயவிலை கொடுக்க மறுக்கிறது என்று இந்த நேரத்தில் குற்றஞ்சாட்டிக் கூற ஆசைப்படுகிறேன். அதேபோல் கரும்பு பயிரிடுவோர் இன்று அவலநிலையில் இருக்கிறார்கள். உரம், பூச்சிமருந்து போன்றவற்றின் விலைகள் எல்லாம் ஏறியிருக்கும்போது கரும்பு பயிரிடுவோர் இன்று நஷ்டத்தில் அதைச் சாகுபடி செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரண உதவி வழங்கவேண்டும் என்றும் விலை கூட்டித் தரவேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு சொன்னார்கள், நாங்கள் 'ஸ்பெஷல் செஸ்' போட மாட்டோம் என்று. ஆனால் இந்த ஆண்டு ஒவ்வொரு விவசாயிடமும் சென்று சென்ற ஆண்டு கிஸ்தி, இந்த ஆண்டு கிஸ்தி, அதோடு இந்தச் சிறப்புத் தீர்வையையும் சேர்த்து வசூலிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். கடந்த இரண்டாண்டுகளாக தமிழ்நாட்டில் விவசாயிகள் எந்தளவிற்கு வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, மற்ற வரிகளோடு இந்த சிறப்புத் தீர்வையையும் இந்த ஆண்டு வசூலிக்கக் கூடாது என்பதை அரசின் கவனத்திற்கு இந்த நேரத்தில் கொண்டுவர விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-30]

எனவே சரியான முறையில் நிவாரண உதவிகள் வழங்காவிட்டால், விவசாயிகளுடைய கோரிக்கைகள்-நியாயமான கோரிக்கைகள் ஏற்கப்படாவிட்டால் அவர்கள் சொல்லுகின்ற வரிகொடா இயக்கம் துவங்க வேண்டும் என்று சொல்வது மிகவும் நியாயம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விவசாயிகள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் ஆயில் என்சின்களுக்கு ரூபாய் ஆயிரம் மான்யமாக பெற்றார்கள். அப்படி எந்தத திட்டமும் இதில் இல்லை.

தொழிலாளர்கள் நலத்தைப் பொறுத்தவரையில், ஒரே தொழிலில் ஒரு தொழிற்சங்கம்தான் இருக்கவேண்டும், அதிலும் தொழிற்சங்கத்தில், அந்தத் தொழிலில் பணிபுரிகின்றவர்களே சங்கத்தில் பொறுப்பில் இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால் தொழிலாளர் நல இலாகாவை வைத்திருக்கின்ற தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தஞ்சையில் இருக்கின்ற கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பதிவு பெற்ற தொழிற்சங்கம் இருக்கும் போது, அங்கு ஒரு புதிய தொழிற்சங்கத்தை ஆரம்பித்து இருக்கிறார். இதைப் பார்க்கும்போது இவர் போடுவது இரட்டை வேடமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.



[1979 பிப்ரவரி 12 [திரு. செ. இராமலிங்கம்]

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பார்த்தால் அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜி. முருகையன் கொலையுண்டதைப் பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடுகின்ற பொழுது, முருகையன் கொலை நிகழ்ச்சிக்குக் காரணமானவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்று கூறியிருக்கிறார்கள்.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் அனுமதியோடு, அவையின் நேரத்தை மாண்புமிகு உறுப்பினர் பேசி முடிக்கும் வரை நீட்டிக்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : கொலைக்குக் காரணமானவர்கள் என்று சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால் நிச்சயமாக ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் என்று தெரிகிறது. ஆனல் இன்றைய தினம் போலை மட்டும்தான் கைது செய்திருக்கிறார்கள். இங்கு சொல்லப்படுவதைப் பார்த்தால் போலைத் தவிர இன்னும் சிலரும் இருக்கிறார்கள் என்பதை இந்த அரசு வைத்துக் கொண்டிருப்பதாக தெரிகிறது. அப்படியானால் சம்பந்தப்பட்டவர்கள் மீது இன்னும் கடுமையான நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வரவில்லை.

ஆகவே இனிமேலாவது உங்களை திருத்திக்கொண்டு, கொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர், அப்படிப்பட்ட ஒருவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இப்படிப்பட்ட படுகொலைகள் இனி மேல் வராமல் இருப்பதற்கு எதிர்காலத்தில் அரசியல்வாதிகளுக்குப் பாதுகாப்பு இருக்கின்ற வகையில் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தீண்டாமை குற்றங்கள் பெருகி வருகின்றன. விழுப்புரம் சம்பவங்கள் பத்திரிகை வாயிலாக வெளிவந்தது. இது போன்ற பல்வேறு சம்பவங்கள். நூற்றுக்கணக்கான சம்பவங்கள், தீண்டாமைக் குற்றங்கள் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு நடந்திருக்கிறது இதன் பேரில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எழுத்துச் சீர்திருத்தத்தைப் பொறுத்தளவில், ஐகாரத்தையும், ஔகாரத்தையும் எடுத்துவிடுவதுபற்றியும், மற்றுமுள்ள சீர்திருத்தம் பற்றியும், எங்களுடைய தானைத்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூறியிருப்பது போல் இதன் மீது மொழி வல்லுநர்களின் (லிங்க்வஸ்டிக் எக்ஸ்பர்ட்ஸ்) கருத்துக்களை அறிந்து, அதன் பின்னால் எழுத்துக்களைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. செ. இராமலிங்கம்] [1979 பிப்ரவரி 12

நிர்வாகத்தில் தலையீடு இல்லை என்று ஆளும்கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். பல்வேறு இடங்களில் ஆளும்கட்சிக்காரர்களின் தலையீடு இருப்பதை என்னால் ஆதாரத்தோடு சுட்டிக் காட்ட முடியும். பல்வேறு இடங்களிலும் ஆளும்கட்சிக்காரர்கள் குறுக்கிட்டு, தங்களுடைய கட்சிக்காரர்களுக்காக சாதனைகளை செய்துகொண்டு போகிறார்கள். இப்படிப்பட்ட நிர்வாகத் தலையீடுகளை நிச்சயமாக மாற்றவேண்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

கலைஞர் ஆட்சி காலத்தில் ஆளுநர் அவர்களுடைய உரையை எடுத்துப் பார்த்தால், அவற்றில் எல்லாம் அரிசனங்கள் ஆலயங்களில் அர்ச்சகர்களாக ஆகவேண்டும் என்றும் தாழ்த்தப்பட்ட கிருஸ்துவர்களுக்கும் எல்லா சலுகைகளும் வழங்கப்படும் என்றும், கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்படும் என்றும், பிற்பட்டோர் நலங்களைப் பார்ப்பதற்கு என்று தனியாக ஒரு துறை என்றெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போது ஆளுநர் உரையில் அப்படிப்பட்ட ஏதாவது திட்டங்களை சொல்லியிருக்கிறார்களா என்று பார்த்தால் அப்படிப்பட்ட எந்தவிதமான திட்டங்களும் இந்த அறிக்கையில் இல்லை என்கின்ற காரணத்தால், இந்த ஆளுநர் உரையைக் கண்டிக்கிறோம் என்று கூறி முடிக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-35 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

*1. தென் ஆற்காடு மாவட்டத்தில் ஆரியக் கவுண்டன், ஜடயக்கவுண்டன், கும்பக்கவுண்டன் ஜாஹிர் இனாம் எஸ்டேட்டுகளில் உள்ள எல்லா நிலங்களுக்கும் செலுத்தத்தக்க நிலவருவாயினை நிர்ணயிப்பது குறித்து, வணிகவரிகள் அறக்கட்டளைகள் துறையின் 3–8–1978 ஆம் தேதியிடப்பெற்ற 1013-ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1963-ம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு, இரயத்துவாரியாக, மாற்றுதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963) 73(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



1979 பிப்ரவரி 12]

*2. சிவகங்கை சார்நிலை நடுவருக்கு சிறப்பு இனாம் ஒழிப்பு நடுவர் மன்ற அதிகாரத்தைச் சேர்ந்து அளிப்பது குறித்து வணிகவரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 12–5–1978 ஆம் தேதியிடப்பெற்ற 606 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1963-ம் ஆண்டு இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு இரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1963) 73(5) பிரிவின் கீழும், தமிழ்நாடு 1963-ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (ஒழிப்பு, இரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1963) 48(5) பிரிவின் கீழும், தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு (துணை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1963) 13(4) பிரிவின் கீழும் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

*3. சென்னை மாநகர எல்லைக்குள் 1–6–1978 ஆம் தேதி முதற்கொண்டு சில பகுதிகளைச் சேர்ப்பது குறித்து ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 29–5–1978-ம் தேதியிடப்பெற்ற 790 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IV/1919) 348(d) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

*4. மதுரை மாநகராட்சி மன்றத்திற்கு 1978 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களின் பதவிக்காலத் தேதியினை நிர்ணயிப்பது குறித்து ஊரக வளர்ச்சி-உள்ளாட்சித் துறையின் 6–7–1978-ம் தேதியிடப் பெற்ற 1095-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

*5. மதுராந்தகம் நகராட்சியில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக இரு இடமும் பெண் உறுப்பினருக்காக ஒரு இடமும் ஒதுக்குவது குறித்தும், மதுராந்தகம் மாநகராட்சியை இருபது வார்டுகளாகப் பிரிப்பது குறித்தும் ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித்துறையின் 17–7–1978-ம் தேதியிடப்பெற்ற 1153 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (d) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

*6. சமூகநலத் துறையிலுள்ள தொண்டு இல்லத்தின் கண்காணிப்பாளர் பதவியினை அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகத்தின் வரம்பெல்லைக்குள் கொண்டு வருவது தொடர்பாகத் தமிழ்நாடு 1954-ம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகத்தின் ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத்துறையின் பணி

யாளரமைப்பு-M) 10–8–1978-ம் தேதியிடப் பெற்ற 922 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

27. It is the firm stand of this Government that Hindi should not be imposed on anybody and that the two language formula will be followed in our State. It is evident that all the political parties of Tamil Nadu are unanimously against imposition of any language. It is appropriate that the Government recently convened a conference of all parties to unify their views on this subject. I hope that all the Legislators, irrespective of party affiliations, will render assistance to the Government in initiating steps which will reflect the strong feelings of the people of Tamil Nadu on this issue.

28. It is but natural to have clash of ideas in any democratic set-up; to reach constructive decisions and progressive action, such debates are inevitable. No one can have any difference of opinion that individuals and political parties should follow the path set out by Gandhiji and Anna, while exchanging differing view points or in their efforts to propagate their ideas. We have to definitely put an end to the dangerous trend of seeking solutions to problems through acts of violence. My Government is deeply shocked by the few acts of violence that recently took place in our State which is not at all along for its tradition of liberality of thought, logical reasoning, cultured behaviour and peaceful approach. In particular the murder of Thiru Murugayyan, Member of Parliament gives us great sorrow. The Government condemns this barbaric murder and I can assure you that those who are responsible for this act will not escape from the arms of law and the punishment they deserve. Time has come when leaders of all political parties in Tamil Nadu sit together, deliberate dispassionately and create a situation wherein the atmosphere of peace in the State does not get vitiated by political predilictions or differences due to religion, caste or language. I earnestly request you, as representatives of the people, to create the proper climate.

29. Legislative measures to replace Ordinances and for other purposes will be brought for your consideration and approbation in this session. There will be ample opportunities for all of you to explain different view points and discuss various problems in a friendly atmosphere, true to the democratic principles.

30. I have no doubt in my mind that your efforts will make Tamil Nadu the true repository of democratic spirit and traditions; that your deliberations will have the aim of ensuring the well-being of the people and of enriching their lives, bringing happiness and prosperity to every family.

Vanakkam.



1979 பிப்ரவரி 12]

[318 ஆம் பக்கத்தைக் காண்க]

**மேன்மை தங்கிய சட்ட மன்ற உறுப்பினர்களே,**

சட்ட மன்றத்தின் இணைந்த கூட்டத்திற்கு வந்துள்ள உங்கள் அனைவரையும் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

2. தமிழ்நாட்டில் உணவு நிலைமை திருப்திகரமாக இருந்து வருகின்றது. நெல், அரிசி இவைகளுக்கு மாநிலத்திற்குள்ளே நடமாட்டத் தடையோ, கட்டுப்பாடோ ஏதும் கிடையாது. சம்பா பருவத்தில் இம்மாநிலத்தை விட்டு வெளியே வர்த்தகர்கள் கொண்டு செல்லும் நெல், அரிசி இவற்றில் 20 சதவீதம் அரசின் இருப்பிற்கு விற்க வேண்டும் என்ற கட்டுப்பாடு மட்டுமே தற்போது இருக்கிறது.

3. தமிழக அரசு, நெல்லுக்கு அதன் உற்பத்திக்கு ஆகும் செலவைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, நியாயமான அடிப்படை விலை நிர்ணயிக்க வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. இது பற்றி பிரதமருக்கும், மத்திய வேளாண் துறை அமைச்சருக்கும் முதலமைச்சர் கடிதம் எழுதி அரசின் கோரிக்கையை வற்புறுத்தினார். இதன் விளைவாக முன்பு கொடுத்து வந்த குவிண்டால் ஒன்றுக்கு 78 ரூபாயிலிருந்து 85 ரூபாயாக கட்டை ரக நெல்லுக்கு மத்திய அரசு அடிப்படை விலையை உயர்த்தியுள்ளது. இது விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்திக்குச் செலவிடும் தொகைக்குச் சமமாகக் கூட இல்லை. கோதுமையின் கொள்முதல் விலை சாகுபடி செலவை அனுசரித்து மத்திய அரசினரால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்தில், அதே அடிப்படையில் நெல்லின் கொள்முதல் விலையையும், நிர்ணயிக்க வேண்டும் என்ற தமிழக அரசின் நியாயமான கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படாதது வருந்தத்தக்கது. அரசு நியாயமான விலை தரவேண்டியதன் அவசியத்தை தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. உற்பத்தியாளருக்கு நியாயமான விலையை நிர்ணயிக்கும் போது, நுகர்வோர்க்கும் நியாயமான விலையில் அரிசி கிடைக்கச் செய்வதற்காக, கோதுமைக்கு இதுவரை தரப்பட்டு வந்த அளவில், அரிசிக்கும் மானியம் தர மத்திய அரசு முன்வர வேண்டுமென்ற கருத்தை தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

4. கிராமந்தோறும் ஒரு நியாய விலைக் கடை மூலம் அடிப்படைப் பொருட்களை விற்கும் அரசின் திட்டத்தின் கீழ் 31—1—1979 முடிய சுமார் 13,400 கிராமங்கள் பயன் பெற்று விட்டன. மீதமுள்ள கிராமங்களும் ஓரிரு மாதங்களுக்குள் பயனடையும். ஆண்டொன்றுக்கு சுமார் 3 கோடி ரூபாய் நிகரச் செலவில் செயல்படுத்தப்பட்டு, கிராம மக்களுக்கு பெரிய பலனைத் தரும் இத்திட்டத்திற்கு, மத்திய அரசு புதிதாக

திட்டியுள்ள தனது திட்டத்தின் கீழ் உதவ வேண்டும் என்பதே எனது கோரிக்கை. இதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கும் என நம்புகிறேன்.

5. மின்சாரத்தை வழங்குவதில் மட்டுமின்றி, மின் உற்பத்தியை அதிகரிப்பதிலும் அரசு மிகச் சிறப்பான கவனம் செலுத்தி வருகின்றது. 35 மெகாவாட் திறனுள்ள சுருளியாறு மின் நிலையமும், 110 மெகாவாட் திறனுள்ள குந்தா மின் திட்டத்தின் நான்காவது கட்ட நிலையமும் சென்ற ஆண்டு செயல்படத் தொடங்கியுள்ளன. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் 210 மெகாவாட் திறனுள்ள முதல் இயந்திரம் விரைவில் மின்சாரம் வழங்கத் துவங்கிவிடும். மேட்டூர் அணைக்குக் கீழே ஆற்றில் பாசனத்துக்கு செல்லும் நீரினைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்ய, நான்கு மின் நிலையங்கள் அமைப்பதற்காக அரசு தீட்டியுள்ள திட்டத்துக்கு மத்திய மின் ஆணைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தினால் மொத்தம் 120 மெகாவாட் திறனுள்ள இயந்திரங்களின் மூலம், ஆண்டொன்றுக்கு சராசரி 537 மில்லியன் யூனிட் மின் உற்பத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான பணி தொடங்கப்பட்டு விட்டது. காடம்பாறை நீரேற்றி மீண்டும் மின் உற்பத்தி செய்யும் நிலையம் அமைப்பதற்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

6. இயல்பான தென்மேற்குப் பருவமழையுடன் அமைந்தால், மின்சார வெட்டு ஏதுமின்றி, இந்த ஆண்டு மின்சக்தி வழங்க இயலும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், மின்வெட்டு எதிர்காலத்தில் ஏற்பட நேரிட்டால், வேளாண்மைக்கு முன்னுரிமை தந்து மின் விசையேற்றங்களுக்கு மின்வெட்டிலிருந்து விலக்கு அளித்து வருவதைப் போலவே, சிறு தொழில்களுக்கும் மின்வெட்டிலிருந்து விலக்களிக்க அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. பரவலாக வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் சிறு தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் தரும் இக்கொள்கை முடிவினை மன்ற உறுப்பினர் அனைவரும் வரவேற்பர் என நம்புகிறேன்.

7. கிராமப் பகுதிகளில் நிலமற்ற ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் வீடு கட்டுவதற்குத் தேவையான வீட்டு மனைகளை வழங்கும் புதிய பெரும் திட்டமொன்றை அரசு வகுத்துள்ளது. பினாமி நிலங்களையும் தேவைக்கதிகமான நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து உபரி நிலங்களையும் அரசு கைப்பற்றி, அந்த நிலங்களை இத்திட்டம் செயல்பட அரசு பயன்படுத்தும். இந்த நிலங்களைக் குடியிருப்புகளுக்குப் பயன்படுத்துவதற்காக தக்க வசதிகளுடன் கூடிய முறையான ஊரமைப்புத் திட்டங்கள் வகுக்கப்படும்.

8. மேலும், கிராமங்களில், அய்ந்தாண்டுகளில் மொத்தம் ஒரு இலட்சம் வீடுகள் கட்ட உதவும் திட்டமொன்றை வகுத்து, அரசு செயலாற்றத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், வருவாய்க் கோட்டம் (Revenue Division) ஒவ்வொன்றிலும் ஒரு வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் மூலம் கிராம மக்களுக்கு வீடு கட்ட கடனுதவி அளிக்கப்படும். தாழ்த்தப்பட்ட மக்களிடையே, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு (Economically weaker sections) அதாவது ஆண்டுவருமானம் 4,200 ரூபாய்க்கு மேற்படாமல் உள்ளவர்களுக்கு 600 ரூபாய்க்கு மேற்படாமல் மானியமும் வழங்கப்படும். பல்வேறு வகுப்பினரும் இணைந்து வாழ்வதற்கு ஊக்கமளிப்பதே அரசின் கொள்கையாகும். தாழ்த்தப்பட்டவர்கள் பெரும்பான்மையாக உள்ள இடங்களில் வீடு கட்டும்போது, மற்ற பிரிவினருக்கும், இதைப் போலவே மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் அவ்வப்பகுதிகளில் கிடைக்கும் கட்டிடப் பொருட்களைப் பயன்படுத்தி, குறைந்த விலையில் வீடுகள் கட்டப்படும். வீடு கட்ட கடன் பெறுவோர் பணமாகவோ, உழைப்பாகவோ வீட்டின் விலையில் 20 சதவீதம் தங்கள் பங்காகச் செலுத்துவார்கள்.



9. கிராமப் பகுதிகளிலும் புதிய கிராமங்களை உருவாக்கவும், தற்போதுள்ள கிராமங்கள் திட்டமிட்ட முறையில் விரிவாக்கப்படுவதற்கும் ஊரமைப்புத் திட்டங்கள் தீட்ட அரசு முடிவு செய்துள்ளது. நகரங்களும் நகரை அடுத்துள்ள புறநகர்ப் பகுதிகளும் மட்டுமே திட்டமிட்ட முறையில் வளர்வது என்பதோடு நில்லாமல், கிராமங்களில் முறையான வளர்ச்சி ஏற்படவும், அதனடிப்படையில் குடிநீர் வடிகால் வசதி, கல்வி வசதி, தெருவிளக்கு வசதி போன்ற தேவையான வசதிகளுடன் கிராமங்கள் மிளிரவும் அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும். வரும் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அய்ந்து ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். விரைவில் மாநிலம் முழுவதும் விரிவாக்கப்படும்.

10. கிராமப் புறங்களில், நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து, படித்த, படிக்காத இளைஞர்கள், சிறு விவசாயிகள், நிலமற்றோர் அனைவரும் தங்களது எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையைப் பெறுவதோடன்றி, நிகழ் காலத்தில் நிலவும் விரக்தி மனப்பான்மையை அறவே போக்கிட அரசு தீர்மானித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கைத் தொழில் ஏதும் தெரியாமல் வெறும் கூலி வேலையை மட்டும் செய்து வாழ்வோர், தொழில் கற்று, தம்மை நம்பி வாழ்ந்திடும் நிலை உருவாகிடல் வேண்டும். அரசு தீட்டுகின்ற திட்டங்களின் பலன்கள், நியாயமாகச் சென்று சேர வேண்டியவர்களுக்குச் சென்றிடல் வேண்டும். இலட்சக்கணக்கில் வேலை வாய்ப்பின்றி உழன்று கொண்டிருக்கும் வேதனையான சுழற்சியில் சிக்கித் தவிப்பவர்கள் பலனடையும் குறிக்கோளின் அடிப்படையில், ஊராட்சி ஒன்றிய அடிப்படையில், ''எல்லோருக்கும் வேலை வாய்ப்பு'' என்ற முறையில் வரும் ஆண்டிலிருந்து வேலை வாய்ப்பு உறுதி அளிக்கும் திட்டமொன்றை

(Employment Guarantee Scheme). செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. இதன் மூலம், கிராமப் பகுதிகள் பெறப்போகும் புதிய மறு மலர்ச்சி, மன்ற உறுப்பினர்களுக்கு மகிழ்வூட்டும் என நம்புகிறேன்.

11. கிராமப் புறங்களில் வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் பட்டுத் தொழில் வளர்ச்சி சிறப்புற நடைபெறுவதற்காக தனியாக பட்டுத் தொழில் இயக்குநரகம் ஒன்றை அரசு அமைக்க முடிவு செய்துள்ளது. இந்த ஆண்டு 4,000 ஏக்கர் பரப்பளவில் புதிதாக முசுக் கட்டை வளர்க்கப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டு கூடுதலாக 8,000 ஏக்கரில் முசுக் கட்டை பயிரிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாவட்டத்தொழில் மையங்கள், 8 மாவட்டங்களில் பணி ஆற்றத் துவங்கி 6 மாத காலத்திற்குள்ளாகவே 900-க்கு மேற்பட்ட சிறு தொழில்கள் உற்பத்தி துவங்குவதற்கு உதவி செய்துள்ளன. இவற்றின் மூலம் ஏறக் குறைய 11,000 பேர் புதிய வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். சிறிய அளவில் கடன் வாங்குவோருக்கு நிதி உதவி உடனடியாகத் தருவதற்கு உதவும் வகையில், தமிழ் நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் திருச்சிராப்பள்ளி, கடலூர், தருமபுரிஆகிய ஊர்களில் மூன்று புதிய கிளைகளைத் திறந்துள்ளது. மேலும் பல்வேறு கிராமத் தொழில்களை ஊக்குவிப்பதற்கும், இவற்றில் உற்பத்தியாகும் பொருள்களை விற்பனை செய்வதில் தனிக் கவனம் செலுத்தவும் கிராமத் தொழில் பிரிவு ஒன்று தனியாக இயங்கும்.

12. வேதாரண்யம் பகுதியில் 6,000 ஏக்கர் நிலப் பகுதியில் பெரியதொரு நவீன உப்புத் தொழிற்சாலையை உருவாக்கும் திட்டத்திற்கு அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. சுமார் மூன்று ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றி முடிக்கப் பெற இருக்கும் இத்திட்டம், நூற்றுக்கணக்கானோர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கும். கல்பாக்கம் அனல் மின் நிலையத்தின் குளிர்விப்பு நீரின் (Coolant water) அடிப்படையில், பக்கிங்காம் கால்வாயின் இரு மருங்கிலும் மேலும் உப்பளங்களை அமைப்பதற்கான வாய்ப்புகளையும் அரசு பரிசிலனை செய்து வருகின்றது.

13. கிராமச் சிறு கைத்தொழில்களை ஏற்படுத்த முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதே நேரத்தில், பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான பெரிய தொழில்களை ஊக்குவிக்கும் முயற்சிகளிலும் அரசு பின்தங்கிவிடவில்லை. தக்க பெரிய தொழில்கள் அமைப்பதற்கும் அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்துவரும். கனிப் பொருள் வளத்தை நன்கு பயன்படுத்துவதற்காக அண்மையில் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு கனிவள நிறுவனம் (Tamil Nadu Mineral Limited) பல இடங்களில் சுரங்க வேலைகளை ஆரம்பித்து, கருப்புக்கல் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ளது. நாட்டிலேயே அரிதாகக் கிடைக்கும் மாக்னஸைட் கனிப் பொருளை சீரிய முறையில் வெட்டியெடுப்பதற்காக தமிழ்நாடு மாக்னஸைட் நிறுவனம் அரசுத் துறையில் நிறுவப்பட்டு, அது தன் பணிகளை சில நாட்களுக்கு முன் தொடங்கியுள்ளது. வெட்டியெடுக்கப்படும் கனிப் பொருளை பயன்படுத்த கூட்டுத் துறை நிறுவனம் ஒன்றும் உருவாகி வருகின்றது. இந்திய நாட்டுக் கப்பல்களும், அயல் நாட்டுக் கப்பல்களும் பயன்படுத்தத் தக்க வகையில், கப்பல்களைப் பழுது பாதுகாப்பதற்கேற்ற உலர் கப்பற்கூடம் (Dry Dock ) ஒன்று தமிழ்நாட்டில் அமைப்பதற்கான செயற் குறிப்புகளை மத்திய அரசுடன் கலந்தாலோசித்து அரசு பரிசீலித்து வருகின்றது.



14. தூத்துக்குடியில் உப்பை மூலப்பொருள்களுள் ஒன்றாகக் கொண்டு, மொத்தம் 35 கோடி ரூபாய் செலவில் உருவாக இருக்கும் தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் நிறுவனம், மத்திய நிதி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கைகளை முனைப்பாக மேற்கொண்டு வருகின்றது. ஜப்பானிய நாட்டு, ஹிட்டாசி ஜோஷன் நிறுவனத்துடன் தொழில் நுட்ப ஒத்துழைப்புக்கான ஒப்பந்தங்களும் அண்மையில் முதலமைச்சர் முன்னிலையில் டோக்கியோவில் கையெழுத்திடப்பட்டன. நாட்டில் இன்று மிகவும் தேவைப்படும் சோடா ஆஷ், இரசாயன உரங்கள் இவற்றை சுமார் 16 கோடி ரூபாய் அளவுக்கு ஆண்டு ஒன்றில் இத் தொழிற்சாலை உற்பத்தி செய்யும்.

15. கரும்புச் சக்கையை வெறும் எரிபொருளாக மட்டும் பயன்படுத்தாமல் அரிய மூலப்பொருளாக பயன்படுத்தி செய்தித்தாள் காகிதம் உற்பத்தி செய்யும் அரசுத் திட்டம் பற்றி மன்ற உறுப்பினர்கள் முன்பே அறிவர். காட்டு வளம் குறைவாக உள்ள நம் நாட்டில், இவ்வாறு மாற்று மூலப் பொருளை பயன்படுத்துவதற்கு ஊக்கம் அளிப்பதன் உடனடி அவசியத்தை உணர்ந்த மத்திய அரசு, கரும்புச் சக்கையை மூலப் பொருட்களில் முக்கால் பங்கிற்கு மேல் பயன்படுத்தும் காகித ஆலைகளுக்குச் சிறப்பான பல சலுகைகள் அளிப்பதாக சில நாட்களுக்கு முன்பு அறிவித்துள்ளது. புதிய ஆலை நிறுவுவதற்கான முன் அனுமதிக் கடிதம் கோரி, மத்திய அரசுக்கு நமது அரசு விண்ணப்பித்துள்ளது.

16. வேலையற்றிருப்போர் எண்ணிக்கை மிகுதியாகவும் அரசினர் வேலை வாய்ப்புகள் குறைவாகவும் உள்ள நிலையில், ஏழை எளியவர்களின் மக்களுக்கு, அதிலும், அவர்களிடையே பள்ளிகளின் வாயிற்படிகளையே கண்டறியாத குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டுமென்று அரசு விரும்புகிறது. தாழ்த்தப்பட்டோர், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தோர் ஆகியோர்க்கான சிறப்புச் சலுகைகட்கு சரிவேற்படாமல், இதனை அரசு நடைமுறைப் படுத்தும். இதன்

மூலம் தலைமுறை தலைமுறையாக வாய்ப்புகளை இழந்து நிற்கும் மக்களின் புதிய தலைமுறையினர், புத்துணர்வும் புது வேகமும் பெறும் வாய்ப்பு கிடைக்க முடியும் என்று நான் கருதுகிறேன்.

17. அரசின் இயக்குநரகங்களும், அரசு நிறுவனங்களின் தலைமையிடங்களும் சென்னையிலேயே குவிந்து இருப்பதை விடுத்து, தக்க இடங்களில், மாநிலத்தில் பரவலாக அமைய வேண்டுமென்பது அரசின் கொள்கை. இந்த கொள்கையின் அடிப்படையில், அரிசன வீட்டுவசதி வளர்ச்சி நிறுவனம் விழுப்புரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகம் திருச்சிக்கு மாற்றப்பட்டுள்ளது. புதிதாக நியமிக்கப்படவிருக்கும் பட்டுத் தொழில் இயக்குநர் சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுவார். இக்கொள்கையின் அடிப்படையில் மேலும் அரசு தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கும்.

18. கோயம்புத்தூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து ஈரோட்டை தலைமையிடமாகக் கொண்டு புதியதொரு மாவட்ட அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற அரசின் முடிவு, பெரியாரது நூற்றாண்டு விழாவின்போது அறிவிக்கப்பட்டது. இதற்கான நடவடிக்கைகளை எடுக்க தனி அதிகாரி நியமிக்கப்பட்டு, விரைவில் இந்த மாவட்டம் செயல்படத் துவங்கும்.

19. இன்றைய வளர்ந்து வரும் பொருளாதார அமைப்பில் நிர்வாகப் பயிற்சி பெற்ற பலர், அரசுப் பணிகளுக்கும், அரசு நிறுவனங்களுக்கும், தனியார் அமைப்புகளுக்கும் தேவைபடுகின்றனர் பெருகிவரும் இந்தத் தேவையை ஈடுகட்டும் உதவும் வகையில், சென்னையில் நிர்வாகப் பயிற்சி நிலையம் ( Madras Institute cf Managem nt ) ஒன்றை, அரசு, அரசு நிறுவனங்கள், பொது மக்கள் ஆகியோரது கூட்டு முயற்சியில் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. பொது மக்களும், மத்திய அரசும் இதற்கு மனமுவந்து உதவி செய்து, இதன் வளர்ச்சியில் பங்கேற்பர் என நம்புகிறேன். முதற் கட்டமாக அரசு அலுவலர், அரசு நிறுவனங்களில் பணி புரிவோர் ஆகியோரைப் பயிற்றுவிக்கும் வகையில் இந்த கல்லூரி விரைவில் செயல்படத் துவங்கும்.

20. அயல்நாடு சென்று, பெருமையுடன் சிரிய பணியாற்றி வரும் தமிழ் நாட்டைச் சேர்ந்த பலர், தாயகத்தின் வளர்ச்சிக்கு தங்களாலான செயல்களைச் செய்ய எவ்வளவு ஆர்வமுடன் உள்ளனர் என்பது அண்மையில் முதல்வர் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணத்தின் போது தெளிவாகத் தெரிந்தது. வளர்ந்து வரும் அறிவியல் கருத்துக்களை நன்கு அறிந்த அத்தகையோரது ஆர்வமும் முயற்சிகளும் அவர்கள் இடை



பிடையே தாயகம் வந்து செல்லும் போது, தமிழ்நாட்டுக்குப் பயன்படும் வகையில் ஏற்ற செயல் திட்டங்களைத் தமிழக அரசு உருவாக்கி வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் கூற விரும்புகின்றேன்.

21. சென்னையிலும், நீலகிரி மாவட்டத்திலும், பாம்பனை ஒட்டிய கடற்கரைப் பகுதிகளிலும், குறுகிய காலத்தில் பெய்த பெருமழை காரணமாக, உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் ஏற்பட்ட சேதங்கள் மன்ற உறுப்பினர்கள் நெஞ்சங்களை விட்டு அகன்றிருக்காது. போர்க்கால நடவடிக்கைகளைப் போல, அரசு இயந்திரம் செயல்பட்டதையும், பொது நிறுவனங்களும், அனைத்துத் துறையினரும் விவேகத்தோடு, ஏற்கனவே பெற்ற அனுபவ அடிப்படையில் திறமையாகச் செயல்பட்டதையும் இங்கே நான் குறிப்பாகப் பாராட்ட விரும்புகிறேன். மைய அரசின் உதவி, ஏற்பட்ட சேதத்தின் மதிப்பீட்டளவிற்குக் கிடைக்காவிட்டாலும், மாநில அரசின் வேண்டுகோளை ஏற்று ஆய்வுக் குழு ஒன்றை உடனடி அனுப்பி வைத்து, 10 கோடி ரூபாய் வழங்கியதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

22. சென்ற பருவ மழையின்போது, சிவகாசிப் பகுதியில், ஏற்பட்ட விபத்தில் பல இளந்தளிர்களை இயற்கை காவு கொண்டது. நமது நெஞ்சங்களைப் பற்றியெரியச் செய்துவிட்ட பயங்கரமான இந்த நிகழ்ச்சியின் மூலம் தமிழ்ச் சமுதாயத்தின் இதயத்தில் ஏற்பட்டுவிட்ட காயம் அவ்வளவு விரைவில் ஆறக்கூடியதல்ல. சின்னஞ் சிறு பிள்ளைகளை வேலைகளில், குறிப்பாக வெடி மருந்துகளைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளில் ஈடுபடுத்தக் கூடாது என்ற சட்டத்தை சில தொழிலதிபர்கள் மீறி வருவதை எனது அரசு வன்மையாகக் கண்டிக்கிறது; தொடர்ந்து மீறுதல் சட்டத்தின் கவனத்தை ஈர்க்கும் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

23. அண்மையில் தமிழகத்தைத் தாக்கிய பெரும் புயல், மழை, அண்டை நாடான ஸ்ரீ லங்காவையும் வெறி கொண்டு தாக்கி நூற்றுக்கணக்கானோர் வாழ்விழக்கவும், பண்டங்களை, உடைமைகளைப் பறி கொடுக்கவுமான நிலை ஏற்பட்டதை நீங்கள் அறிவீர்கள். மனிதாபிமான அடிப்படையில், பிறருக்குத் துயரோ, இடரோ, இடுக்கண்ணோ ஏற்படும்போது தன்னை வருத்திக்கொண்டு, மற்றவர்களுக்கு உதவிடும் பண்பாடு பெற்ற தமிழகத்தின் சார்பாக, பத்து இலட்சம் ரூபாய் பெறுமான பல பொருட்களை, அரசு ஸ்ரீ லங்காவிற்கு அனுப்பி வைத்தது; அவர்களின் துயர் துடைக்கும் முயற்சியில் தனது எளிய பங்கினைச் செய்ததன் மூலம் அனைவரின் பாராட்டுதலையும் பெற்றது. தமிழக அரசு, தனது கடமையினைச் செய்வதற்கு உறுதுணையாகவிருந்த, இந்திய அரசிற்கும் இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

24. மதுவிலக்குக் கொள்கையில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ள இந்த அரசு, அக்கொள்கையை தீவிரமாகச் செயலாக்குவதற்காக அண்மையில் அவசரச் சட்டமொன்றை பிறப்பித்துள்ளது. வார்னீஷ் போன்ற பொருட்களை அரசைச் சார்ந்த நிறுவனங்கள் மட்டுமே தயாரிக்க வேண்டும் என்பதோடு, கள்ளச் சாராயத்தின் விளைவாக உயிரிழப்பு நேரிடின், அதற்குக் காரணமானவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கவும் இந்த அவசரச் சட்டம் வகை செய்கின்றது. பல்வேறு மதுவிலக்குக் குற்றங்களுக்கு குறைந்த பட்ச தண்டனைகள் கொடுக்க வேண்டிய நிலையையும் இச்சட்டம் ஏற்படுத்தியுள்ளது. மேலும் தொடர்ந்து கடுமையான குற்றங்களில் ஈடுபடுவோர்களை, அவர்கள் வழக்கமாக வசிக்கும் பகுதியிலிருந்து மாறி வேறிடத்தில் வாழ்ந்தாக வேண்டிய நிலைக்கும் இது வழி செய்கின்றது. எதிர்பார்த்த பலனையும் ஓரளவுக்கு இந்த அவசரச் சட்டம் அளித்துள்ளது. அடித்தளத்து மக்கள் வாழ்வு உயர உதவும் மதுவிலக்கைச் செம்மையாகச் செயல்படுத்த உதவும் இந்த அவசரச் சட்டத்தை, இடைக்காலத்தில் ஏற்பட்ட அனுபவத்தின் காரணமாகச் சில மாற்றங்களுடன், சட்டமாக்க அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. மன்ற உறுப்பினர்கள் இந்த உயரிய நோக்கம் நிறைவேற தங்களது மேலான கருத்துக்களைக் கூறி இதனை ஆதரிப்பார்கள் என நம்புகிறேன். மதுவிலக்குக் கொள்கையை நன்கு செயல்படுத்துவதற்காக காவல் துறையைச் சீரமைத்து, பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகின்றது.

25. நிர்வாகத்திலும், பிற துறைகளனைத்திலும் ஊழல் களையப்பட வேண்டுமென்பதில் அரசு திடமான நம்பிக்கை கொண்டுள்ளதை மன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளின் விளைவாகவும் மன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பின் காரணமாகவும் நல்ல பலன்கள் ஏற்பட்டு வருகின்றன.

26. தமிழ் மொழி, கலை, பண்பாடு இவற்றைப் பேணி வளர்த்திட அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். பெரியார் ஈ. வெ. ரா. அவர்களாலும், மற்ற பல தமிழறிஞர்களாலும் கூறப்பட்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அண்மையில் அரசு செயலுக்குக் கொண்டு வந்துள்ளது. அறிஞர்களின் கருத்துக்களை அறிந்து இதனைப் பரவலாக செயல்படுத்த அரசு முயற்சிகள் மேற்கொள்ளும். முதன் முறையாக தமிழ் மொழி சுருக்கெழுத்து அகர வரிசை ஒன்றை இன்னும் சில மாதங்களில் தமிழ் பாட நூல் நிறுவனம் வெளியிடும். திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள திராவிட மொழி ஆராய்ச்சி சங்கத்திற்கு (International Association of Dravidian Linguistics.)



கட்டிடம் கட்டுவதற்காகவும், பணிகளைத் தடங்கலின்றி நிறைவேற்றுவதற்காகவும், அரசு மானியம் வழங்கியுள்ளது. மதுரையில் வரும் ஆண்டில் நடைபெற இருக்கும் உலகத் தமிழ் மாநாட்டுக்கான ஆரம்ப வேலைகளை முனைப்பாக மேற்கொண்டு, முதற் கட்டமாக 50,000 ரூபாய் நிதி உதவியையும் அரசு அளித்துள்ளது. மேலும் அரசுக் கலைஞர்களாக எட்டு கலை விற்பன்னர்களை அரசு அண்மையில் பாராட்டி, பரிசுகளும், உதவித் தொகையும் வழங்கியுள்ளது அனைவரும் பாராட்டுதற்குரியதாகும்.

27. இந்தி மொழி எவர் மீதும் சுமத்தப்படலாகாது என்பதிலும், இரு மொழிக் கொள்கை தமிழ் நாட்டில் பின்பற்றப்பட வேண்டுமென்பதிலும், இந்த அரசு அசையாத நம்பிக்கை கொண்டுள்ளது. மொழித் திணிப்பு ஏற்றுக் கொள்ளப்படலாகாது என்பதில் தமிழ் நாட்டிலுள்ள எல்லா கட்சிகளும் ஒருமித்த எண்ணம் கொண்டுள்ளன என்பது வெளிப்படையாகும். இக் கருத்துக்களை ஒருமுகப்படுத்துவதற்கு அண்மையில் அரசு கூட்டிய அனைத்துக் கட்சிகள் மாநாடு ஏற்றதொரு செயலாகும். கட்சி வேறுபாடின்றி தமிழக மக்கள் அனைவரின் உள்ளக் கிடக்கையை பிரதிபலிக்கும் வகையில் ஏற்ற நடவடிக்கைகளை அரசு எடுப்பதற்கு சட்ட மன்றம் உறுதுணையாக செயல்படுமென நம்புகிறேன்.

28. ஜனநாயக அமைப்பு முறையில், கருத்துப் போராட்டங்கள் ஏற்படுவது இயற்கை; ஆக்க பூர்வமான முடிவிற்கும் செயலாற்றலுக்கும், அவை தவிர்க்க முடியாதவை. எண்ணங்களை பரிமாறிக் கொள்ளும்போதும் அவைகளை எடுத்து வைக்கும் முயற்சிகளின்போதும், நபருக்கு நபர், கட்சிக்குக் கட்சி, கடைப்பிடிக்க வேண்டிய நெறி, காந்தீய நெறி, அண்ணா வழி என்பதில் யாருக்கும் வேறுபட்ட கருத்திருக்க முடியாது; பிரச்சினைகளுக்குப் பரிகாரம் பழி வாங்கிடும் வன்முறை உணர்ச்சியின் மூலம்தான் முடியும் என்ற அபாயகரமான போக்கிற்கு நிச்சயமாக முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். அமைதிக்கும், ஆழ்ந்த சிந்தனைக்கும், நயத்தக்க நாகரீகத்திற்கும் நாடு போற்றிடும் நன்னோக்கிற்கும் தனிப் பாரம்பரியம் பெற்ற தமிழகத்தில் அண்மைக் காலமாக சில வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றிருப்பது எனது அரசிற்கு வேதனையைத் தருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். குறிப்பாக நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர், திரு. முருகையன் அவர்கள், படுகொலை செய்யப்பட்ட நிகழ்சசி மெத்த வேதனையைத் தருகிறது. கொலைக்குக் காரணமானவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்பதை உறுதியாகக் குறிப்பிட விரும்புகிறேன். காட்டுமிராண்டித்தனமான இந்தக் கொலை வெறியை வன்மையாகக் கண்டிக்கிறேன். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவோ மொழி, சாதி, மதம் காரணமாகவோ தமிழகம் அமைதி இழக்காத அளவிற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி,

மனம் திறந்து விவாதித்து, ஏற்புடைத்தான நல்ல சூழ் நிலையை உருவாக்க முயற்சிக்க வேண்டும் என மக்களின் பிரதிநிதிகளாகிய உங்களை விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

29. சட்டமன்றத்தின் இக்கூட்டுத் தொடரில் மிக முக்கியமான அவசரச் சட்டங்களும் மசோதாக்களும் மாண்புமிகு உறுப்பினர்களின் ஆய்விற்கும் அங்கீகாரத்திற்கும் கொண்டுவரப்பட இருக்கின்றன. தொடர்ந்து பிரச்சினைகள் பற்றி விளக்கம் அளிக்கும் வாய்ப்பும் தோழமை உணர்வோடு, ஜனநாயகப் பண்போடு கலந்துரையாடும் சந்தர்ப்பங்களும் ஏராளம் கிடைக்கவிருக்கின்றன.

30. தமிழக மக்களின் நல்வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு, அவர்கள்தம் வாழ்வு மேலும் சிறப்புடன் விளங்க, இல்லங்கள் தோறும் மகிழ்ச்சியும் மன நிறைவும் ஏற்பட, நிம்மதி எழுந்தோங்க, மாண்புமிகு உறுப்பினர்கள் செயல்பட்டு, உண்மையான ஜனநாயக உணர்வின் உறையுளாக தமிழகம் நடைபோட நிச்சயம் உங்கள் பணி அமையும் என மனதார நம்புகிறேன்.

வணக்கம்.

## இணைப்பு III.

[48-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 10-க்கான விடையைக் காண்க.]

(*a*) Yes.

(*b*) 8th December 1977.

(*c*) Total number of persons to be taken back as per the Memorandum of Agreement is 475. Though it was agreed that the workers would be taken back before October 1978, they have already been inducted into service in three phases, viz., 273 workers on 8th December 1977, 126 on 11th February 1978 and 76 on 10th April 1978.

(*d*) 1. The re-employed employees will be paid the same wages in the same scales of pay existing at the time of closure of the factory in 1974.

2. With a view to make this sick unit an economically viable one, the management and the workmen have agreed to change over from five working days in a week of nine working hours, to six working days in a week of eight working hours each day. The national and festival holidays will be observed in accordance with the Tamil Nadu Industrial Establishment (National and Festival Holidays) Act.



3. Employees will be eligible for 18 days earned leave and 12 days Casual leave in a year. Sunday will be the weekly holiday.

4. The age of superannuation for the purpose of retirement will be 58 years.

5. A canteen will be run through a contractor for supply of food and tea at subsidised rates.

6. A recoverable advance of Rs. 250 will be paid to each worker soon after he reports for duty, recoverable in 12 monthly instalments.

7. The re-employed persons will be paid an Adhoc wage increase of Rs. 63 per month.

8. The period of service prior to the closing of the factory in 1974 will be counted for all purposes.

9. The employees will be given credit of service for the period of unemployment from 13th September 1974 to the actual date of re-employment for the purpose of gratuity and retrenchment compensation provided they have not resigned from the service of the company.

10. The workmen and Unions have agreed not to make any demand with the present or the old management for the payment of lay-off compensation, increment or any other benefits for the period from 13th September 1974 to the date of re-employment. They have also agreed not to place any economic demands for a period of two years from the date of re-opening of the factory.

11. The above terms and conditions are incorporated in the memorandum of settlement arrived at by the management and the labour representatives before the Deputy Commissioner of Labour.

## இணைப்பு IV.

[48ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 11-க்கான விடையைக் காண்க].

அரசு தனது ஆணை (பல) 404, தொழிலாளர், நாள் 8-3-72ல் உடல் ஊனமுற்றோர்களுக்கென்று மாநில அளவில் ஒரு வாரியம் அமைத்து மேற்படி வாரியத்தின் உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று வருடம் என்று வரையறுக்கப்பட்டது.

மேற்படி வாரியத்தின் முக்கிய பணிகள் கீழே தரப்பட்டுள்ளன :—

(1) உடல் ஊனமுற்றவர்களின் மறுவாழ்வுக்கான திட்டங்களை ஆராய்வது ;

(2) அரசுடன் கலந்தாலோசித்து உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டங்களை வகுத்தல் ;

(3) உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரித்தல் ;

(4) உடல் ஊனமுற்றவர்களை ஆதரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள சமூக நல நிறுவனங்களுக்கும் தனிப்பட்ட நபர்களுக்கும் நிதி உதவியளித்தலைக் குறித்து ஆராய்தல் ;

(5) உடல் ஊனமுற்றவர்களுக்காக கல்வி, பயிற்சி, மறுவாழ்வு துறைகளில் மறுவாழ்வுக்காக செயல்படும் நிறுவனங்களை ஒன்று திரட்டுதல்.

2. மேற்படி வாரியம் 1976-ம் வருடம் கீழ்க்கண்ட தலைவரையும், உறுப்பினர்களையும் கொண்டு திருத்தி அமைக்கப்பட்டது.

சமூக நல அமைச்சர் .. தலைவர்.

செயலாளர், சமூக நலம் .. உப தலைவர்.

அலுவலக உறுப்பினர்கள்.

(அ) செயலகத் துறைகள் :

(1) அரசுச் செயலாளர், தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறை அல்லது அவரது பிரதிநிதி. உறுப்பினர்.

(2) அரசுச் செயலாளர், நிதித்துறை அல்லது அவரது பிரதிநிதி. உறுப்பினர்.

(3) அரசுச் செயலாளர், கல்வித்துறை அல்லது அவரது பிரதிநிதி. உறுப்பினர்.

(ஆ) தலைமைத் துறைகள் :

(1) சமூக நலத்துறை இயக்குநர் .. உறுப்பினர்.

(2) வேலைவாய்ப்பு—பயிற்சித் துறை இயக்குநர். உறுப்பினர்.



(3) மருத்துவப்பணி, குடும்ப நலத்திட்ட இயக்குநர். உறுப்பினர்.

(4) மருத்துவக் கல்வி இயக்குநர் .. உறுப்பினர்.

(5) கண்காணிப்பாளர், மறுவாழ்வு பயிற்சி நிலையம். உறுப்பினர்.

(6) மாநில சமூகநலக் குழுவின் தலைவர் உறுப்பினர்.

(இ) அரசு சார்பற்றவர்கள் :—

(1) திரு. என். இ. எஸ். ராகவாச்சாரி, ஐ. ஏ. எஸ். (ஓய்வு பெற்றவர்), தலைவர், உடல் ஊனமுற்றோருக்கான சங்கம். உறுப்பினர்.

(2) திரு. அந்தோணிசுவாமி, ஸ்வீடன் செஞ்சிலுவை மறுவாழ்வுத் தொழில், காட்பாடி, வட ஆற்காடு மாவட்டம். உறுப்பினர்.

தொண்டு நிறுவனங்கள் :—

(1) பொதுச் செயலாளர், இந்த் குஷ்ட நிவாரன் சங்கம் .. .. .. உறுப்பினர்

(2) கௌரவ செயலாளர், மனநில குறையுள்ளோருக்கான பால விஹார் பள்ளி .. உறுப்பினர்

(3) இயக்குனர், காது கேளாதவர் சங்கம், சென்னை .. .. .. .. உறுப்பினர்

கீழ்க்கண்டவற்றின் பிரதிநிதிகள் :—

(1) சென்னை வர்த்தக சபை .. .. உறுப்பினர்

(2) இந்துஸ்தான் வர்த்தகசபை .. .. உறுப்பினர்

(3) தென்னிந்திய வேலை கொடுப்பர் கூட்டமைப்பு .. .. .. .. உறுப்பினர்

[1979 பிப்ரவரி 12

மருத்துவ சிறப்பறிஞர் :—

| | |
|---|---|
| (1) டாக்டர் டி. கே. சண்முகசுந்தரம், முட நீக்கியல் தொடர்பான அறுவை மருத்துவர், அரசு பொது மருத்துவமனை, சென்னை .. .. .. .. | உறுப்பினர் |
| (2) டாக்டர் ஈ. டி. செல்வம், எம்.எஸ்.டி.ஓ. கண்காணிப்பாளர், அரசு கண் மருத்துவ மனை, எழும்பூர் .. .. .. | உறுப்பினர் |
| (3) டாக்டர் எஸ். காமேஸ்வரன், காது, மூக்கு, தொண்டை ஆகிய நோய்கள், மருத்துவ நிலைய இயக்குநர், அரசு பொது மருத்துவ மனை, சென்னை .. .. .. | உறுப்பினர் |
| (4) உதவி இயக்குநர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை. | செயலாளர் |

3. ஊனமுற்றோருக்கான மாநில வாரியம் 1971–77 முடிய புரிந்துள்ள சாதனைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :

| | |
|---|---|
| (அ) வாரியம் தொடங்கியதிலிருந்து வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாக வேலையில் அமர்த்தப்பட்டுள்ள உடல் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை .. | 2,271 |
| (ஆ) தமிழகத்திலுள்ள பற்பல தொழிற் பயிற்சிநிலையங்களில் சேர்க்கப்பட்டுள்ள உடல் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை | 324 |
| (இ) தொழில் நடத்த தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாக கடன் வசதி பெற்றுள்ள உடல் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை .. .. .. .. | 139 |
| (ஈ) இதுவரை வேலை பழகும் முயற்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள உடல் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை .. | 38 |
| (உ) மற்ற பயிற்சிகளில் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ள உடல் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை .. .. .. .. | 3 |



1979 பிப்ரவரி 12]

| | |
|---|---|
| (ஊ) செயற்கை அங்கங்கள் பொருத்திக் கொள்ள உதவி பெற்ற உடல் ஊன முற்றவர்களின் எண்ணிக்கை .. .. | 49 |
| (எ) புத்தகம் பைண்டிங் தொழிலில் பிரிவில் பயிற்சி பெற்ற உடல் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை .. .. .. .. | 143 |
| (ஏ) பைண்டிங்தொழிலில் பயிற்சி பெற்று வேலையில் அமர்த்தப்பட்ட உடல் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை .. | 18 |
| (ஐ) மத்திய அரசின் மற்றும் தமிழக அரசின் மான்யம் பெற தகுதி பெற்ற சமூக நிறுவனங்களின் எண்ணிக்கை .. .. | 6 |

மேற்கூறிய சாதனைகளைத் தவிர கீழ்க்கண்ட சாதனை களையும் உடல் ஊனமுற்றோர் மாநில வாரியம் புரிந்துள்ளது.

மேற்படி வாரியம் ஒரு சில கொடை வள்ளல்களிடமிருந்து " உலக உடல் ஊனமுற்றோர் தின விழாவில்" அன்பளிப்பாக பெறப்பட்ட தொகையிலிருந்து ரூ. 6,000 ஐ சென்னை மருத்துவக் கல்லூரிக்கு அறநிலைய சொற்பொழிவு செய்வதற்காக வழங்கியது. இச் சொற்பொழிவு ஒவ்வொரு வருடமும் நடைபெறும். இதற்கான செலவை மேற்படி ரூ. 6,000 லிருந்து பெறப்படும் வட்டி பணத்திலிருந்து ஈடு கட்டப்படும். சென்னை மருத்துவக் கல்லூரியின் கண்காட்சிக் குழுவிடமிருந்து ரூ. 30,000 உடல் ஊனமுற்றவர்களின் மறுவாழ்வுக்காக உடல் ஊனமுற்றோர் மாநில வாரியம் பெற்றுக் கொண்டது. மேற்படி தொகை நிரந்தர இருப்பில் மத்திய அரசின் மாநில வங்கியில் வைக்கப்பட்டுள்ளது. இதன் பேரில் பெறப்படும் வட்டிப்பணம் மாத வருமானம் ரூ. 200-க்கு மேற்படாமல் இருக்கும் உடல் ஊனமுற்றோர்களுக்கு செயற்கை உறுப்புக்கள் பொருத்த செலவு செய்யப்படும். இத்திட்டத்தின்கீழ் இதுவரை 49 பேர் பயன் அடைந்துள்ளனர்.

சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் உடல் ஊனமுற்றோர்களுக்கான மாநில வாரியத்தின் கூட்டம் 26-10-77 -ல் கூடியது. அந்தக் கூட்டத்தில் உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியத்தின் விதிகளையும் விதித் தொகுப்புகளையும் உறுப்பினர்களின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டது. உறுப்பினர் களின் ஒப்புதலுக்குப் பின் இதற்கான அரசாணை பிறப்பிக்கப் பட்டது.

[1979 பிப்ரவரி 12

மாநில உடல் ஊனமுற்றோருக்கான வாரியமானது சில குறிப்பிட்ட நபர்களை உடல் ஊனமுற்றோர் என அறிவித்து அவர்களுக்கு சலுகைகள் வழங்க அரசை தீவிரமாக கேட்டுக் கொண்டதின் பயனாக "குள்ளர்களை" (Dwarfs) உடல் ஊனமுற்றோர் பட்டியலில் சேர்த்து அரசு ஆணையிட்டுள்ளது. இதில் 2'7" மேலும் 2'6' உயரமுள்ள ஆண்களும், பெண் களும், முறையே குள்ளர்கள் என்று கருதப்படுவார்கள். மேலும் இவ்வாரியம் உடல் ஊனமுற்றோர்களை ஆதரிக்கும் சமூக நிறுவனங்களுக்கு ஆதரவு தரும்படி அரசை வற்புறுத்தியுள்ளது. உடல் ஊனமுற்றோர் வாரியத்தின் முயற்சியினால் கண்களை இழந்தவர்கள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினால் நகர் பகுதிக்குள் இலவசமாக பயணம் செய்ய அரசு சலுகை அளித்துள்ளது. ஆண்டு தோறும் ரூ. 6,000 மான்யமாக தேனாம்பேட்டையிலுள்ள செவிடர்கள் பள்ளிக்கு வேலை செய்யும் ஊனமுற்ற பெண்களுக்காக விடுதி நடத்த அரசு அளித்துள்ளது. மேலும் லிப்ட் ஆபரேடர் (Lift Operator) பதவிக்கு உடல் ஊனமுற்றோர்களை அரசு அலுவலகங்களில் நியமிக்க வேண்டும் என்ற உத்திரவையும் அரசு பிறப்பித்துள்ளது.

உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியத்திற்கு ரூ. 50,000-ஐ மானியமாக அரசு கொடுத்துள்ளது. மேற்கண்ட மானியம் உடல் ஊனமுற்றோர்களுக்கு பயிற்சி பெறுவதற்கும் சுயமாக வேலை வாய்ப்பு அமைத்துக் கொள்வதற்கும், உடல் ஊனமுற்றோரின் நலனுக்காக இயங்கிவரும் நிறுவனங்களுக்கு கடனாகவோ அல்லது மானியமாகவோ வழங்குவதற்கு பயன் படுத்தப்படும். மேற்படி வாரியத்தின் நிதியினை நிர்வகிக்கவும் கடன் மானிய உதவி கோரி பெறப்படும் விண்ணப்பங்களின்மேல் ஆணை பிறப்பிக்கவும் ஒரு துணை குழு தொழில் மற்றும் பயிற்சித் துறை இயக்குனரின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி குழு இதுவரை ஐந்து முறை கூடியுள்ளது. வாரியத்திற்கான நிதி திரட்டுவதற்குரிய வழிமுறைகளை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது. இவை அரசின் பரிசீலனையில் உள்ளது.

## இணைப்பு V.

**[106ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 126-க்கான விடையைக் காண்க.]**

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுக்காவில், "மண்வள ஆராய்ச்சி" ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா?

சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுக்காவில் 1966 ஆம் வருடம் ஜூலை முதல் செப்டம்பர் முடிய மண்வள ஆராய்ச்சி செய்யப் பட்டுள்ளது.

(ஆ) ஆம் எனில், எந்தெந்த யூனியன் பகுதிகளில் செய்யப் பட்டது?



1979 பிப்ரவரி 12]

தலைவாசல், கங்கவல்லி, பெத்தநாயகன்பாளையம் மேலும் ஆத்தூர் ஆகிய நான்கு பஞ்சாயத்து ஒன்றியங்களின் பகுதிகளைக் கொண்ட ஆத்தூர் தாலுக்கா முழுவதும் மண்வள ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது.

(இ) அதன் முடிவு என்ன?

ஆத்தூர் தாலுக்காவின் மொத்தப் பரப்பளவு (1,68,145 ஹெக்டேர்கள்) 1,680.90 சதுர கிலோ மீட்டர். இதில் 603.85 சதுர கிலோ மீட்டர்கள் வனங்களாலும் மலைகளாலும் கவரப்பட்டுள்ளது. மீதம் உள்ள 1,077.05 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ள நிலங்கள் நான்கு விதமாகப் பாகு பாடு செய்யப்பட்டுள்ளன. அவையாவன:

| | ச. கி. மீ. |
|---|---|
| 1. இருகூர் மண் வகை .. | 626.78 |
| 2. பெரியநாயக்கன்பாளையம் மண் வகை .. | 217.76 |
| 3. பீளமேடு மண் வகை | 81.29 |
| 4. துளுக்கனூர் மண் வகை | 151.22 |
| | 1,077.05 |

இருகூர் மண் வகை—

இவ்வகையைச் சேர்ந்த மேல் மண் அதி சிகப்பு கலந்த பழுப்பாயும் மணல் கலந்த வண்டலுடனும் இருக்கும். இது சுமார் 35 செ. மீ. ஆழமும் கார அமிலத் தன்மை எல்லாப் பயிர்களுக்கும் ஏற்ற நிலையில் மத்தியமாகவும் (P. H 7.7.) இருக்கும். சுமார் 13 செ.மீ.க்குக் கீழ் மண்ணின் தன்மை களிகலந்த வண்டலாகவும் இருக்கும்.

இருகூர் மண் வகை கடலைக்கு மிகவும் உகந்தது. சோளம், கம்பு போன்ற பயிர்கள் சுமாராக விளையும்.

இம் மண் வகையைக் கீழ்க்கண்ட ஊர்களில் காணலாம் என ஆராய்ச்சியின் முடிவில் அறியப்படுகிறது.

1. ஆத்துவலசு.
2. ஐயம்பட்டி.
3. **அக்ராகரகாத்தம்.**

4. அரசநத்தம்.
5. பொம்மநாய்க்கன்பாளையம்.
6. சின்னசமுத்திரம்.
7. ஏழுபள்ளி.
8. கோவிந்தம்பாளையம்.
9. கத்திரிபட்டி.
10. மேட்டுவலசு.
11. மஞ்சம்.
12. நார்த்துபுதூர்.
13. நவக்குறிச்சி.
14. நாவலூர்.
15. புத்தூர்.
16. பாப்பிநாய்க்கன்பட்டி.
17. பனைமடல்.
18. புளியங்குறிச்சி.
19. பகடப்பாடி.
20. பூனவாசல்.
21. புங்கவாடி.
22. பைத்தூர்.
23. புத்திரகவுண்டன்பாளையம்.
24. ராமலிஸ்வபுரம்.
25. சிறுவச்சூர்.
26. சாத்தபாடி.
27. சிலியம்பட்டி.
28. தும்பல்.
29. தலைவாசல்.
30. உலிபுரம்.
31. உனத்தூர்.
32. வெப்பநத்தம்.
33. வரகூர்.
34. வலையமாதேவி.
35. வீரகவுண்டனூர்.



(2) பெரியநாயக்கன்பாளையம் மண் வகை:—

இதனைச் சேர்ந்த மண் வகை மேலே கருப்பாகவும் கீழ் மண் சுண்ணும்பு கலந்த சிவப்பு மண்ணுகவும் இருக்கும். கருப்பு மண் தரை மட்டத்திலிருந்து சுமார் 25 செ. மீ. ஆழத்திற்கும் இதன் கீழ் சுமார் 62 செ. மீ. தடிமத்திற்கு அதிக பழுப்பு நிறமாகவும் களியாகவும் இதன் கீழ் உள்ள பழுப்பு 25 செ. மீ. மண் களி கலந்த வண்டலாகவும் இருக்கும். மேல் மண்ணின் கார அமிலத்தன்மையானது மத்திம நிலையிலும் ( P.H.7.2 ) கீழ் மண் மிகக் குறைந்த 'களர்' தன்மை உடையதாகவும் இருக்கும்.

இம்மண் வகை நெல், வாழை, குச்சிவள்ளிக் கிழங்கு போன்றவைகளுக்கு நீரின் வசதிக்கு ஏற்ப நல்லது. மானாவாரி நிலங்களில் பருத்தி, சோளம் போன்றவையும் கலப்புப் பயிர் பயிரிடுவதற்கும் ஏற்றது.

இந்த வகை மண் கீழ்க்காணும் ஊர்களில் காணலாம் என ஆராய்ச்சியின் முடிவில் அறியப்படுகிறது.—

1. அபிநவம்.
2. அரகலூர்.
3. அணைப்பட்டி.
4. குங்கவல்லி.
5. கரடிப்பட்டி.
6. கோட்டவாடி.
7. கல்பகலூர்.
8. கவரப்பானை.
9. கீழ்ப்புத்தூர்.
10. லத்திவாடி.
11. மாரப்பகாட்டுப்புதூர்.
12. மேட்டுப்பாளையம்.
13. நத்தக்காடு.
14. நல்லூர்.
15. ஓடர்நத்தம்.
16. படுகைக்காடு.
17. புதூர்.
18. பின்னலூர்.
19. ராமநாயக்கன்பாளையம்.
20. ராஜபாளையம்.

21. ராஜகோபாலபுரம்.
22. செக்காடிப்பட்டி.
23. சொக்கனூர்.
24. சொக்கனூர் அக்ராகரம்.
25. சானார்பாளையம்.
26. தியாகனூர்.
27. வெள்ளாளப்பட்டி.
28. வேதநாயக்கன்புதூர்.
29. விரகனூர்.

(3) துளுக்கனூர் மண்வகை :—

இவ்வகையைச் சேர்ந்த மண் சுண்ணாம்பு கலந்ததாயும் மத்திய ஆழம் உடையதாகவும் சிவப்பாகவும் இருக்கும். இது சுண்ணாம்புச் சத்து அதிகம் உள்ள மண், சுண்ணாம்புக் கற்கள் நிலத்தின் மேலேயே பரவியிருப்பதைக் காணலாம்.

மேலே மண், களி மண் கலந்த வண்டலாகவும், மத்திய 'களர்' தன்மையுடையதாகவும் இருக்கும். சுமார் 17 செ. மீட்டருக்கு கீழ் உள்ள மண் 45 செ. மீட்டர் வரையிலும், களி மண்ணாகவும் அதிக சுண்ணாம்புக் கற்கள் கொண்டதாகவும், மத்திம களர்த்தன்மை உடையதாகவும் இருக்கும். 45 செ. மீட்டருக்குக் கீழ் கடினமான பாறை போன்ற சுண்ணாம்பு படிமங்களைக் காணலாம்.

இவ்வகையைச் சேர்ந்த மண் பொதுவாக மானாவாரி நிலங்களாகக் காணப்படுகின்றன. சோளம், நிலக்கடலைப் பயிர் செய்வதுடன், நீர் வளம் மிகுந்த இடங்களில் இறவை நிலக்கடலை, நெல், வாழை, குச்சிவள்ளிக் கிழங்கு மேலும் வெற்றிலைக் கொடிகாலுக்கு ஏற்றது.

மண்ணை ஆராய்ந்ததில் நெல், கரும்பு போன்ற பயிர்களை விட கடலை, பருத்தி, சோளம் போன்ற சிறு தானியங்களுக்கு சுமாரானது.

இம் மண் வகை கீழ்க்காணும் ஊர்களில் பரவியிருப்பதாக ஆராய்ச்சியின் முடிவில் அறிய வருகிறது:—

1. அக்ரகாரநத்தம்.
2. அம்மாபாளையம்.
3. கோவிந்தபாளையம்.
4. இலுப்பைநத்தம்.



5. ஜங்கமசமுத்திரம்.
6. காட்டுக்கோட்டை.
7. கடம்பூர்.
8. கொண்டையம்பள்ளி.
9. கிரிசாப்பட்டி.
10. நடராஜ கோபாலபுரம்.
11. நாகையன்பட்டி.
12. ஒடையத்தூர்.
13. பழைந்தையூர்.
14. பட்டுத் துறை.
15. பைத்தூர்.
16. ராமநாயக்கன்பாளையம்.
17. ராமவிஸ்வபுரம்.
18. ராமசேகர்புரம்.
19. செக்காடிப்பட்டி.
20. செந்திரப்பள்ளி.
21. சிலியன்பட்டி.
22. துளுக்கனூர்.
23. தலைவாசல்.

(4) பீளமேடு மண்வகை :—

இவ்வகை மண் கருப்பு நிறம் உடையதாகவும், ''காக்கா பொன் கலந்த ஷிஸ்ட்'' எனப்படும் பாறையிலிருந்து தோன்றியதாக ஆராய்ச்சியின் முடிவில் அறியப்படுகிறது. இவ்வகையைச் சேர்ந்த மண் மிக ஆழமாயும், களிமண் தன்மையுடனும், 'களர்' நிலத்தின் தன்மையை உடையதாகவும் அறியப்படுகிறது.

தரைமட்டத்திலிருந்து 25 செ. மீ. ஆழம் வரை மண் களி கலந்த வண்டல் தன்மையுடனும், நீர் ஈர்ப்பு சக்தி மத்தியமாயும், களர் தன்மை (P.H.8.6) சற்று அதிகமாகவும் உள்ளது. 25 செ. மீ. முதல் சுமார் 81 செ. மீ. வரை மண் களிமண் தன்மையுடனும் நீர் ஈர்ப்பு சக்தி குறைவாகவும் களரின் (P.H. 9.0) தன்மை அதிகம் உள்ளதாயும் இருக்கிறது. 81 செ. மீ. க்குக் கீழ் சுண்ணாம்புப் படிமங்கள் காணப்படுகின்றன.

ஆராய்ச்சியின் முடிவில் இம் மண் வகை கரும்பு, கடலைக்கு முற்றிலும் உகந்ததல்ல என்றும் நெல்லுக்கு உகந்ததல்ல என்றும் சோளம் போன்ற சிறு தானியங்களுக்கு சுமாராக உகந்தது என்றும், பருத்திக்கு மிகவும் சிறந்தது என்றும் அறியப்படுகிறது.

மண் வள ஆராய்ச்சியின் முடிவைத் தெளிவாக தக்க வரை படத்துடன் ''ஆத்தூர் தாலுகா மண்வள ஆராய்ச்சி (Soil survey of Author Taluk) என்னும் அறிக்கையின் மூலம் இதன் நகல் வெளியிடப்பட்டுள்ளது. ஆத்தூர் தாலுக்காவில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிக்கை மிகவும் தெளிவாக எல்லா விவரங்களையும் எடுத்துக் காட்டும்.

இது தவிர, கல்ராயன் மலைப் பகுதியில் உள்ள சின்னக்கல்ராயன் ஜடயகவுண்டர் ஜாகிர்ஸில் ஒரு பகுதியையும் ஆராய்ந்ததற்கான முடிவுகளை கல்ராயன் மலைப்பகுதி மண் ஆராய்ச்சி அறிக்கையின்மூலம் வெளியிடப்பட்டுள்ளது. மலை மேம்பாட்டுத் திட்டத்தின்படி இம்மலையின் மண்வளத்தை எவ்விதம் சிறந்த முறையில் பயனுள்ளதாக்கலாம் என்பதைத் தெளிவுடன் வரை படத்துடன் சிறப்பு அறிக்கையின்மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

(ஈ) மேலும் எந்தெந்த பகுதிகளில் '' மண்வள ஆராய்ச்சி '' செய்யும் உத்தேசம் உள்ளது ?

ஏற்கனவே விரிவான மண்வள ஆய்வு செய்யப்பட்டு விட்டதால் ஆத்தூர் தாலுகாவில் மேலும் மண்வள ஆய்வு மேற்கொள்ளும் உத்தேசம் தற்சமயம் இல்லை.

## இணைப்பு VI

[151ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 216-க்கான விடையைக் காண்க].

யுனெஸ்கோ நிறுவனம் (இதுவரை 40,350 டாலர் அதாவது ரூ. 3,22,800-ம்) உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்திற்கு நிதி உதவி செய்துள்ளது அவை வருமாறு:—

இந்நிறுவனத்தின் ஆளுகைக் குழுவின் உறுப்பினர்-செயலர் திரு. ஏ. சுப்பையா அவர்கள் 1969-ம் ஆண்டு ஆசியா, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிலுள்ள 14 நாடுகளிலுள்ள 50-க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி நிறுவனங்களைப் பார்வையிட யுனெஸ்கோ நிறுவனம் உதவியது.

(2) இந்நிறுவனத்தின் மூத்த ஆராய்ச்சியாளராகிய திரு. வி. சுப்பிரமணியன் அவர்களுக்கு 1969–70-ம் ஆண்டின் பங்கு பெறும் திட்டத்தின்கீழ் (Participation programme) பொருளுதவி செய்து (fellow-ship) அவர் மொழி கற்பிக்கும் முறைகளை (Methods of Language Teaching ) ஐக்கிய அமெரிக்க நாடுகளின் பல்கலைக் கழகங்களிலிருந்து தெரிந்துவர அனுப்பியது. மேலும் 1972-ம் ஆண்டு இந்நிறுவனத்தைச் சார்ந்த டாக்டர் எஸ். பாலச்சந்திரன், டாக்டர்





பி. கோதண்டராமன் ஆகிய இருவரையும் இலக்கியத் திறனாய்வு (Literary criticism) பயிற்சி பெற அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்றுவர பொருளுதவி செய்தது.

(3) மின்சாதன படியெடுப்பு கருவி ஒன்றை பரிசாக அளித்துள்ளது.

(4) மொழி ஆராய்ச்சிக் கூடம் ஒன்றை நிறுவுவதற்கு உதவி செய்துள்ளது.

(5) இந்நிறுவன வெளியீடுகளான தமிழியல் (Journal of Tamil Studies) மற்றும் ''நவீன தமிழில் ஒரு பாடம் (A Course in Modern Standard Tamil) ஆகியவற்றின் முழுச் செலவையும் ஏற்றுக் கொள்கிறது.

இந்நிறுவனம் தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்து இவ்வரசு அந்நிறுவனத்தின் தொடர் மற்றும் தொடராச் செலவுகளை மானியமாக அளித்து வந்துள்ளது. இவ்வகையில் ஆண்டு தோறும் ரூ. 3·00 இலட்சம் இந்நிறுவனத்திற்கு அரசு மானியம் வழங்கி வருகிறது.

## இணைப்பு VII

[155-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 226-க்கான விடையைக் காண்க.]

### விடை.

ஆம். தற்போது பல இடங்களில், வருடாந்திர நில நீர் நிரப்பைக்காட்டிலும், நிலநீர் இறவை அதிமாக உள்ளது. பொதுவாக, மண்வளப் பாதுகாப்பு திட்டப் பணிகள் மூலம், நிலத்தடி நீர் அபிவிருத்தி அடைய உதவுகிறது. ஒரு மில்லியன் கன அடி கொள்ளளவுள்ள கசிவுநீர் குட்டை கட்டப்படுகிறது என்றால் அக்குட்டையைச் சுற்றி சுமார் 3,000 அடி ஆரத்திற்குள் அடங்கும். கிணறுகளில் நீர்மட்டம் கணிசமாக, உயர்வடைகிறது என்று உணரப்பட்டுள்ளது.

2. மண்வளப் பாதுகாப்பு வேலைகள் இவ்வாண்டில் 56,820 ஹெக்டேர் நிலங்களுக்குச் செய்யப்படுகிறது. அதில் சுமார் 46,000 ஹெக்டேர் நிலங்களில் சம உயர வரப்புகள் கட்டப்படுகின்றன. கசிவு நீர்க் குட்டைகள் வறட்சி மீட்பு திட்டத்தின் கீழ் கட்டப்படுகிறது. மற்றும் விவசாய பெருங்குடியின் விண்ணப்பங்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு கசிவுநீர் குட்டைகள் அவ்வப்போது அரசு ஆணை பெற்று கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை இம்மாநிலத்தில் செய்யப்பட்ட மண்வளப் பாதுகாப்பு வேலையின் விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

[1979 பிப்ரவரி 12

மண்வளப் பாதுகாப்புத் திட்டம் தொடங்கிய நாள் முதல் 1977–78-ம் ஆண்டு முடிய செய்யப்பட்ட பணியின் விபரம்.

| எண் | மாவட்டம். | மண்வளப் பாதுகாப்பு வேலைகள் செய்யப் பட்ட நிலத்தின் பரப்பு. | கசிவுநீர் குட்டை கள் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ஹெக்டேர். | |
| 1 | செங்கற்பட்டு .. .. .. | 33,008 | .. |
| 2 | வடஆற்காடு .. .. .. | 69,784 | 31 |
| 3 | தென்னாற்காடு .. .. | 91,775 | 13 |
| 4 | சேலம் .. .. .. | 19,171 | 26 |
| 5 | தர்மபுரி .. .. .. | 56,739 | 109 |
| | | | 122 (பாலக்கோடு) |
| 6 | கோயம்புத்தூர் .. .. | 1,15,113 | 40 |
| 7 | நீலகிரி .. .. .. | 9,715 | .. |
| 8 | திருச்சி (புதுக்கோட்டையும் சேர்ந்தது) .. .. .. | 74,120 | 12 |
| 9 | தஞ்சாவூர் (புதுக்கோட்டையும் சேர்ந்தது). | 26,706 | .. |
| 10 | மதுரை .. .. .. | 1,03,021 | 53 |
| 11 | இராமநாதபுரம் .. .. | 53,577 | 624 |
| 12 | திருநெல்வேலி .. .. | 34,514 | 107 |
| 13 | கன்னியாகுமரி .. .. | 6,191 | .. |
| | மொத்தம் .. | 7,23,434 | 1,135 |



1979 பிப்ரவரி 12]

## இணைப்பு VIII

[181ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 277-க்கான விடையைக் காண்க.]

| வரிசை எண்ணும் போக்குவரத்துக் கழகத்தின் பெயர். | குடியிருப்புகளின் எண்ணிக்கை | குடியிருக்கின்ற பணியாளர்களின் எண்ணிக்கை. | குடியிருப்புகள் போக்குவரத்துக்கழகத்தால், கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளதா ; (அல்லது) குடியிருப்புகள் கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தால் கட்டப்பட்டு அவை பணியாளர்களுக்கு சொந்தமாக்கப்பட்டதா. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (3) |
| 1 பல்லவன் போக்குவரத்துக் கழகம் (பெருநகர்). | குரோம்பேட்டையில் 36 குடியிருப்புகள் உள்ளன. | 36 பணியாளர்கள் குடியிருக்கின்றனர். | போக்குவரத்துக் கழகத்தால் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. |
| | போக்குவரத்து இல்லத்தில் 8 குடியிருப்புகள் உள்ளன. | 8 ஊழியர்கள் குடியிருக்கின்றனர். | .... |
| 2 பல்லவன் போக்குவரத்துக்கழகம் (விரைவு). | கோவையில் 36 குடியிருப்புகள் உள்ளன. | 36 தொழிலாளர்கள் குடியிருக்கின்றனர் | போக்குவரத்துக் கழகத்தால் (விரைவு) கட்டப்பட்டு, வாடகைக்கு விடப்பட்டுள்ளது. |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 3 சேரன் போக்கு வரத்துக்கழகம். | கோவையில் 142 குடியிருப்புகள் உள்ளன. | 142 தொழிலாளர்கள் குடியிருக்கின்றனர். | சேரன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களால் ஏற்படுத்தப்பட்ட கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் மூலமாக வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. |
| | பொள்ளாச்சியில் 162 குடியிருப்புகள் உள்ளன. | 162 தொழிலாளர்கள் குடியிருக்கின்றனர். | .... |
| 4 கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம். | நாகர்கோவிலில் 36 குடியிருப்புகள் உள்ளன. | 36 தொழிலாளர்கள் குடியிருக்கின்றனர். | தமிழக அரசு போக்குவரத்துத் துறையிடமிருந்து கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு 36 வீடுகள் 1—1—1974-ல் மாற்றப்பட்டு, அவை கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. |

(போக்குவரத்துத்துறை)



## இணைப்பு IX

[208—ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 327-க்கான விடையைக் காண்க.]

கடந்த 5 ஆண்டுகளில் மத்திய கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்ட குறுகியகால, நடுத்தரகாலக் கடன்களும், தொடக்க நிலவள வங்கிகளால் வழங்கப்பட்ட நீண்டகாலக் கடன்களும், கடன் வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கையும், பின்வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு. | குறுகிய காலக் கடன். | நபர்களின் எண்ணிக்கை. | நடுத்தர கால கடன். | நபர்களின் எண்ணிக்கை. | நீண்டகாலக் கடன். | நபர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1973–74 .. | 75,20·12 | 7,18,198 | 2,21·90 | 15,294 | 20,54·85 | 29,053 |
| 1974–75 .. | 85,02·49 | 8,24,112 | 2,65·97 | 21,959 | 15,43·51 | 31,599 |
| 1975–76 .. | 1,00,19·89 | 8,54,121 | 2,64·74 | 23,826 | 19,05·11 | 15,247 |
| 1976–77 .. | 1,19,33·16 | 10,48,411 | 5,79·14 | 39,854 | 19,13·01 | 21,514 |
| 1977–78 .. | 1,20,68·59 | 8,92,662 | 6,43·96 | 43,815 | 12,28·27 | 15,638 |
| மொத்தம் .. | 5,00,44·25 | 43,37,504 | 19,75·71 | 1,44,748 | 86,44·75 | 1,13,051 |

## இணைப்பு X.

[1209-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 329-க்கான விடையைக் காண்க.]

### விடை.

ருவாரூர் வேளாண்மைக் கருவிகள் தொழிற்கூட ஆராய்ச்சிப் பிரிவில் உருவாக்கம் செய்யப்பட்ட விவசாயிகளுக்கு பயன்படத்தக்க கருவிகளின் விவரங்கள்.

| ரிசை எண்ணும் ருவியின் பெயரும். (1) | விபரம். (2) | உபயோகத்தில் உள்ள இடங்கள். (3) | கிடைக்கும் இடம். (4) |
|---|---|---|---|
| கேஜ் வீல் .. | நன்செய் உழவிற்கு டிராக்டருடன் இணைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. ஒரு நாளைக்கு 8 மணி நேரம், 8 முதல் 12 ஏக்கர் வரை நன்செய் உழவு செய்யலாம். குறைந்த அளவு 35 குதிரைத் திறன் கொண்ட டிராக்டர் தேவை. சாதாரண கலப்பையைப் பயன் படுத்தி உழவு செய்வதைப் போல் 24 முதல் 36 மடங்கு வரை உள்ள உழவினை அதே நேரத்தில் செய்யலாம். பசுந்தாள் உரமிட்ட வயல்களில் சாதாரணக் கலப்பையை விட கேஜ் வீல் உழவில் பசுந்தாள் நன்கு மண்ணுடன் கலக்கப்படுகிறது. விலை ரூபாய் 1,300 முதல் ரூபாய் 1,600 வரை (டிராக்டரின் அமைப்புக்குத் தக்கவாறு). | தஞ்சை மாவட்டம் முழுவதும். | வேளாண்மைக் கருவிகள் தொழிலகம், திருவாரூர். |
| 2 நான்கு சட்டிக் கலப்பை. | நன்செய் உழவிற்கு ஏற்றது. ஒரு நாளைக்கு (8 மணி நேரத்தில்) 1 ஏக்கர் முதல் 1.2 ஏக்கர் வரை நன்செய் உழவு செய்யலாம். ஓரிணை மாடுகளும், ஒரு ஆளும் இதனை இயக்கத் தேவை. இச்சட்டி கலப்பையை பயன்படுத்தும்போது, ஏறத்தாழ மூன்று முதல் நான்கு மடங்கு வேலை செய்ய ஏதுவாகிறது. இதன் விலை ரூ. 1,200. | தஞ்சை மாவட்டத்தில் மணற்பாங்கான நன்செய் நிலங்களில். | வேளாண்மைக் கருவிகள் தொழிலகம், திருவாரூர். |
| 3 சமன்படுத்தி (நன்செய்). | நன்செய் நிலத்தில் உழவிற்குப் பின் மேடு பள்ளங்களை மட்டப்படுத்தி சமன்படுத்த இக்கருவி பயன்படுகிறது. டிராக்டரில் இணைத்து இக் | தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளால் வாங்கிப் பயன்படுத்தப் படுகிறது. | வேளாண்மைக் கருவிகள் தொழிலகம், திருவாரூர். |

| வரிசை எண்ணும் கருவியின் பெயரும். | விபரம்- | உபயோகத்தில் உள்ள இடங்கள். | கிடைக்கும் இடம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | கருவி இயக்கப்படுவதால் ஒரு நாளைக்கு 8 முதல் 10 ஏக்கர் வரை சமன்படுத்தலாம். சேற்றினை மேடான பகுதியிலிருந்து பள்ளமான பகுதிக்குத் தள்ளிச் செல்வதும் சுலபம். இதன் விலை ரூபாய் 550. | | |
| 4 கதிரடிக்கும் கருவி. | குட்டைரக, நெல் பயிர்களான அய். ஆர். 8, ஆ. ஆர். 20, பத்மா, கரிகாலன், கண்ணகி ஆகிய பயிர் வகைகளில் நெல் மணிகளைப் பிரித்தெடுத்து சுத்தப்படுத்த இக்கருவி பயன்படுத்தப்படும். ஒரு மணி நேரத்தில் சுமார் 1 டன் நெல் வரை பிரித்தெடுத்து சுத்தப்படுத்தித் தரும் அல்லது ஒரு ஏக்கர் நெற் பயிரிலிருந்து நெல்லைப் பிரித்தெடுத்து சுத்தப்படுத்த ஏறத்தாழ 1½ மணி நேரமாகும். 5 எச். பி.-யின் மோட்டார் அல்லது 5 எச். பி. ஆயில் என்ஜின் அல்லது டிராக்டர் பி.டி.ஓ. புல்லியுடன் இணைத்து இயக்கலாம். விலை ரூபாய் 8,000 (கருவியின் விலை மட்டும்) (இயக்குவதற்கு மோட்டார் இல்லாமல்) இக்கருவி குறித்த ஆராய்ச்சிப் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. | .. | .. |
| 5 இடைநிலை உழவுக் கருவி. | நெல் பத்தி நடவில் இடைநிலை உழவு பயன்படும். ஒரு நாளைக்கு 0.3 ஏக்கர் வரை ஒரு நாளில் ஓர் ஆள் இடைநிலை உழவு செய்யலாம். இதனை இயக்க ஓர் ஆள் தேவை. ஜப்பானிய முறை இடைநிலை உழவுக் கருவி செயல்படும் விதத்திலேயே இதுவும் செயல்படுகிறது. இதன் விலை ரூபாய் 30. | தஞ்சை மாவட்டம் | வேளாண்மைக் கருவிகள் தொழிலகம், திருவாரூர். |

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருக்கும் வேளாண்மைப் பொறியியல் பிரிவினால் உருவாக்கம் செய்யப்பட்ட விவசாயிகளுக்கு பயன்படத்தக்க கருவிகளின் விவரங்கள்.

| வரிசை எண்ணும் கருவியின் பெயரும். | விபரம். | உபயோகத்தில் உள்ள இடங்கள். | கிடைக்கும் இடம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 பவர் டில்லருடன் இணைத்து வரப்பு போடும் கருவி. | 16 செ.மீ. உயரமும், 40 முதல் 45 செ.மீ. வரை அகலமும் உடைய வரப்புகளை இக் கருவியின் மூலம் அமைக்கலாம். வரப்பில் இடைவெளி ஒரு மீட்டராய் இருக்கும்போது ஒரே நாளில் 1.6 ஹெக்டேர் வரை வரப்பு அமைக்க முடியும். இதன் விலை ரூபாய் 275. | .. | முன்மாதிரி இயந்திரத் திட்டம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம். |
| 2 புஅசெய் நிலங்களையெடுக்கும் கருவி. | புன்செய் நிலங்களில் வரிசைப் பயிர்களின் இடையில் உழுதுகளை எடுக்கவும், பூமியின் அடி ஈரம் வெளியில் செல்லாமல் பாதுகாக்கவும் இக் கருவி பயன்படுகிறது. ஒரு ஜதை எருதுகளைக் கொண்டு இக்கருவியில் ஒரு நாளில் 1.8 ஏக்கர் உழ முடியும். இதன் விலை ரூபாய் 400. | கோயம்புத்தூர், கோவில்பட்டி. | ஷை |
| 3 குழியோடை அமைக்கும் கருவி. | பவர் டில்லருடன் இணைத்து இயங்கக் கூடிய இக்கருவியைக் கொண்டு முந்திரி மரம், தென்னை மரங்களைச் சுற்றி உரமிடுவதற்கேற்ற குழியோடைகள் $\frac{(53+17)X24}{2}$ செ.மீ. அமைக்கலாம். ஒரு நாளில் 200 குழியோடைகள் அமைக்கலாம். இதன் விலை ரூபாய் 1,000. | .. | முன்மாதிரி இயந்திரத் திட்டம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம். |
| 4 களையெடுக்கும் கருவிகள். | புன்செய் நிலங்களில் பயிர்களின் வரிசைக்கு வரிசை இடையிலுள்ள களைகளை வெட்டியெடுக்க ஆட்களைக் கொண்டு இயக்கக் கூடிய நட்சத்திர வடிவம் அல்லது முளைப் பற்கள் கொண்ட ஒவ்வொரு கருவியின் விலை ரூபாய் 100 மட்டுமே. இக் கருவியைக் கொண்டு ஒரு நாளில் 0.20 ஹெக்டர் வரை களை எடுக்க முடியும். | கோயம்புத்தூர், திண்டிவனம், அந்தியூர், கொடைக்கானல், ராணிப்பேட்டை. | ஷை |

| வரிசை எண்ணும், கருவியின் பெயரும். | விபரம். | உபயோகத்தில் உள்ள இடங்கள். | கிடைக்கும் இடம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 5 நீண்ட கைப்பிடி. சிறு கருவிகள். | ஆட்களைக் கொண்டு களை எடுக்கும் திறனை அதிகரிக்கவும் அதே சமயத்தில் சுலபமாக கஷ்டமில்லாமல் நின்று கொண்டு களையெடுப்பதற்கு ஏற்றவாறு நீண்ட கைப்பிடிகளுடன் கூடிய பதினோறு வகையான களைக் கொத்திகள் உள்ளன. இக் கருவிகளின் உதவியால் களையெடுக்கவும் வரிசைப் பயிர்களுக்கு மண் அணைக்கவும் சால் அமைக்கவும் முடியும். இக் களைக் கொத்துக்கள் ஒவ்வொன்றின் விலை ரூபாய் 15 முதல் ரூபாய் 40 வரையாகும். | இந்தியாவிலுள்ள அனைத்து வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் மற்றும் ஈரோடு கொடைக்கானல், ஊட்டி. | ஷை |
| 6 விதை விதைக்கும் கருவி, | கடலை, சோளம், கம்பு, முசிறு நீக்கிய பருத்தி விதை மற்றும் பயறு வகைகளை. இக் கருவியைக் கொண்டு ஒரே சமயத்தில் அய்ந்து வரிசை வரை விதைக்கலாம். வரிசைக்கு வரிசை மற்றும் செடிக்குச் செடி உள்ள இடைவெளி தூரத்தை மாற்றியமைத்துக் கொள்ள வசதியுண்டு. ஒரு நாளில் இக்கருவியின் மூலம் 1.5 முதல் 2 ஏக்கர் வரை விதைக்க முடியும். ஒரு ஜதை எருதுகளைக் கொண்டு இயக்கக் கூடிய கருவியின் விலை ரூபாய் 1,500. | கோவை, செங்கல் பட்டு, திண்டிவனம். | முன்மாதிரி இயந்திரத் திட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், |
| 7 வேர்க் கடலை மற்றும் உருளைக் கிழங்கு தோண்டும் கருவி. | இக்கருவியின் மத்தியிலுள்ள இரும்புக் கம்பியின் முனையில் நிலக்கடலை அறுவடை செய்யும் பாகத்தையோ அல்லது உருளைக் கிழங்கு அறுவடை செய்யும் பாகத்தையோ தேவைக்கேற்ப பொருத்திக்கொள்ள வசதியுள்ளது. தோண்டும் ஆழத்தைக் கூட்டவும் குறைக்கவும் முடியும். ஒரு ஜதை எருதுகளைக் கொண்டு இயக்கக் கூடிய இக்கருவியைக் கொண்டு ஒரு நாளில் 0.75 ஏக்கர் வரை அறுவடை செய்ய முடியும், இக்கருவியின் விலை ரூபாய் 750. | நாகர்கோவில், கோவை. மற்றும் பல. | |

| வரிசை எண்ணும் கருவியின் பெயரும். | விபரம். | உபயோகத்தில் உள்ள இடங்கள். | கிடைக்கும் இடம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 8 வேர்க்கடலை பிரிக்கும் கருவி. | வேர்க்கடலையைச் செடியிலிருந்து பிரித்தெடுப்பதற்கேற்ற சீப்பு முறை, உருளை முறை, ஆகிய இரு அமைப்புக்களைக் கொண்ட இரண்டு கருவிகள் உள்ளன. இக்கருவிகளின் உதவியால் இலகுவாக நிலக்கடலையைச் செடியிலிருந்து பிரித்தெடுக்கலாம். இக்கருவிகளின் விலை முறையே ரூ. 125 ரூ. 225 ஆகும் | கோவை, ராணிப்பேட்டை, திண்டிவனம் முதலியன. | டி |
| 9 வேர்க்கடலை தரம் பிரிக்கும் கருவி, | இவ்வியந்திரம் நிலக்கடலையைத் தரம் வாரியாக பிரித்தெடுக்க உதவுகிறது; இவ்வியந்திரத்தால் நிலக்கடலையை உடைப்பதற்கு முன் நிலக்கடலையைத் தரம் பிரிப்பது அவசியமாகும். இம்முறை பருப்பு உடையும் அளவைக் குறைப்பதற்கான முன்னோடியாகும். இக்கருவியின் உதவியால் 600 கிலோ நிலக்கடலையை ஒரு மணி நேரத்தில் மூன்று தரங்களாகப் பிரிக்க முடியும். இக்கருவி விலை ரூ. 2,800 (மின்சார மோட்டாருடன்), 100 கிலோ நிலக்கடலையைத் தரம் பிரிக்க ஆகும் செலவு 27 பைசா மட்டுமே, | கோவை | டி |
| 10 நிலக்கடலை உடைத்தெடுக்கும் கருவி. | ஒரு மணி நேரத்தில் 400 கிலோ நிலக்கடலையை உடைத்துப் போட்டு நீக்கி விதைப்பருப்பை தனியே பிரித்தெடுக்கும் இவ்வியந்திரத்தின் விலை ரூ. 2,500 (மின்சார மோட்டாருடன்) 100 கிலோ நிலக்கடலையை உடைக்க ஆகும் செலவு ரூ. 1.35 மட்டுமே. | கோவை, ஈரோடு மற்றும் பல. | முன்மாதிரி இயந்திரத் திட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம். |
| 11 சேறு கலக்கி (பவர்-டிரில்லருடன் இணைக்கக்கூடியது). | இவை நன்செய் நிலத்தில் நாற்று நடவு செய்வதற்கு முன் பவர் டிரில்லருடன் இணைந்து இயங்கக் கூடியது. பவர் டிரில்லருடன் ரோட்ட வேட்டரின் உதவியால் சேறு கலக்கும்போது இலகுவாக பவர் டிரில்லரை மிதக்கும் நிலையில் இழுத்துச் செல்ல முடிகிறது. இதன் விலை (ஒரு ஜதை) | .. | |

| வரிசை எண்ணும் கருவியின் பெயரும். | விவரம். | உபயோகத்தில் உள்ள இடங்கள் | கிடைக்கும் இடம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. 500. இதைக் கொண்டு ஒரு நாளில் சுமார் 0.22 ஏக்கர் வரை நன்றாக சேறு கலக்க முடியும். | | |
| 12 நெல் அறுவடை செய்யும் கருவி (பவர் டிரில்லருடன் இணைக்கக் கூடியது) (Paddy Harvester). | பவர் டிரில்லருடன் இணைத்து, இயக்கக்கூடிய இக்கருவியை கொண்டு ஒரு நாளில் 0.7 ஹெக்டேர் வரை அறுவடை செய்ய முடியும். இக்கருவியின் விலை ரூ. 3,500 (பவர் டிரில்லர் இல்லாமல்.) ஒரு ஹெக்டேர் அறுவடை செய்ய ஆகும் செலவு ரூ.110 மட்டுமே ஆட்களை வைத்து நெல் அறுவடை ஒரு ஹெக்டேருக்கு ரூ. 140 ஆகும். | கோவை .. ... ... | முன்மாதிரி இயந்திரங்கள் திட்டம், மண்டல ஆராய்ச்சி நிலையம், கோவை. |
| 13 நெல் கதிரடிக்கும் கருவி. | இவ்வியந்திரம் நெல் மணிகளைக் கதிரிலிருந்து பிரித்தெடுக்க உதவுகிறது. நெல்மணிகளைக் கதிரிலிருந்து பிரித்தெடுத்து பதர் நீக்கி சுத்தம் செய்கிறது. ஒரு மணி நேரத்தில் 750 கிலோ நெல்மணிகளைப் பிரித்தெடுக்கும் இவ்வியந்திரத்தின் விலை ரூ. 5,000 (மின்சார மோட்டாருடன்). ஒரு டன் நெல் மணிகளைக் கதிரடிக்க ஆகும் செலவு ரூ. 12·50. | கோவை, வேடப்பட்டி, திண்டிவனம், பவானி சாகர், திருச்சி முதலியன. | ௸ |
| 14 நெல் தூற்றும் கருவி (Paddy Wennower). | நெல் மணியில் கலந்துள்ள பதர், தூசு முதலியவைகளை நீக்கிச் சுத்தம் செய்ய இவ்வியந்திரம் ஏற்றது. இக்கருவியின் உதவியால் ஒரு மணி நேரத்தில் 550 கிலோ நெல்லை சுத்தப்படுத்த முடியும். இதன் விலை ரூ. 2,200 (ஒரு எச். பி., மின்சார மோட்டாருடன்). ஒரு டன் நெல்லை சுத்தப்படுத்த ஆகும் செலவு ரூ 10. | கோவை, திண்டிவனம், பவானி, சாகர், திருச்சி முதலியன. | முன்மாதிரி இயந்திரங்கள் திட்டம், மண்டல ஆராய்ச்சி நிலையம், கோவை |
| 15 மக்காச்சோள உதிர்த்தி (Maize sheller). | மக்காச்சோளக் கதிரிலிருந்து மணிகளைப் பிரித்தெடுக்க இக்கருவி உதவுகிறது. இக்கருவியினுள் கதிரை ஊட்டுவதற்கு முன் சோகையை நீக்க வேண்டும். இக்கருவியின் விலை ரூ. 2,200 (மின்சார மோட்டாருடன்). ஒரு மணி நேரத்தில் 300 கிலோ மணிகளை உதிர்த்தெடுக்க முடியும். 100 கிலோ கதிர்களிலிருந்து மணிகளைப் பிரித்தெடுக்க ஆகும் செலவு ரூ. 1.00 ஆகும். | கோவை, பொள்ளாச்சி முதலியன. | ௸ |

| வரிசை எண்ணும், கருவியின் பெயரும். | விபரம். | உபயோகத்தில் உள்ள இடங்கள். | கிடைக்கும் இடம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 16 மக்காச் சோள சோகை நீக்கி கதிரடிக்கும் கருவி (Husker Sheller for maize). | சோகையை நீக்காமலேயே மக்காச் சோளக் கதிரை இவ்வியந்திரத்தின் மூலம் மணிகளைப் பிரித்தெடுக்கலாம். இவ்வியந்திரத்தின் மூலம் ஒரு மணி நேரத்தில் 650 கிலோ மணிகளைப் பிரித்தெடுக்க முடியும். இதன் விலை ரூ. 7,500 (7·5 எச்.பி. மின்சார மோட்டாருடன்). 100 கிலோ மக்காச் சோளக் கதிரை சோக உதிர்த்து மணிகளைப் பிரிக்க ஆகும் செலவு ரூ. 1·60 ஆகும். | கோவை, பொள்ளாச்சி முதலியன. | முன்மாதிரி இயந்திரங்கள் திட்டம், மண்டல ஆராய்ச்சி நிலையம் கோவை. |
| 17 சூரியகாந்தி விதை உடைக்கும் இயந்திரம் (Sunflower Seed Sheller). | சூரியகாந்தி விதையை உடைத்துத் தோல் நீக்கி எண்ணெய் எடுப்பதன் மூலம் தரமுள்ள எண்ணெய் கிடைப்பதுடன் அதிக இலாபமும் கிடைக்கிறது. இவ் விதை உடைக்கும் இயந்திரத்தின் விலை ரூ. 6,000 (மூன்று எச். பி. மின்சார மோட்டாருடன்). ஒரு மணி நேரத்தில் 150 கிலோ விதையை உதிர்த்தெடுக்க முடியும். 100 கிலோ விதையை உதிர்த்தெடுக்க ஆகும் செலவு ரூ. 6·15. | .. | ஷை |
| 18 தட்டு வெட்டும் இயந்திரம் (Chaff Cutter Blower). | பச்சையான அல்லது உலர்ந்த தட்டுகளை சிறு சிறு துண்டுகளாக வெட்டுவதற்கு இக் கருவி ஏற்றது. இவ்வாறு வெட்டி மாட்டுத் தீவனமாக உபயோகப்படுத்துவதால் சேதாரம் தடுக்கப்படுகிறது. இதன் விலை ரூ.3,500 (மின்சார மோட்டாருடன்). ஒரு மணி நேரத்தில் 750 கிலோ உலர்ந்த தட்டு அல்லது 250 கிலோ பச்சைத் தட்டை வெட்ட ஆகும் செலவு ரூ. 9 ஆகும். | கோவை, ஈரோடு, முதலியன. | ஷை |
| 19 ஆழக் கலப்பை (Chisel Plough). | இக் கலப்பையை உபயோகித்து இருகிய மண்ணை உடைத்து மழை நீர் நன்றாக மண்ணில் இறங்கும்படி செய்யலாம். இக்கலப்பையின் உதவியால் ஒரு நாளைக்கு 1·4 ஹெக்டேர் நிலப்பரப்பை (90 செ.மீ. இடைவெளியில் உழமுடியும்). இதன் விலை ரூ. 250. இதைக் கொண்டு ஒரு ஹெக்டேரை உழ ஆகும் செலவு ரூ. 80. | .. | ஷை |

| வரிசை எண்ணும் கருவியின் பெயரும். | விபரம். | உபயோகத்தில் உள்ள இடங்கள். | கிடைக்கும் இடங்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 20 சாண எரிவாயு சாதனம் (Gobar Gas Plant). | முழுவதும் உருக்குத் தகடுகளால் ஆன பூமிக்கு மேல் அமைந்துள்ள இடத்திற்கு இடம் நகரக் கூடிய, இதன் கொள்ளளவு 2·12 கன மீட்டர். இதில் நிலையான கொள்ளளவும் நிலையில்லாத அழுத்தமும் உண்டு. கொல்லர் வேலை இதில் இல்லை. சிமெண்டு, செங்கல், கொத்தனார் வேலை அவசியமில்லை. இதிலிருந்து கிடைக்கும் எரிவாயுவை விளக்கு எரிக்கவும், சமைக்கவும், இயந்திரங்களை இயக்கவும் பயன்படுத்தமுடியும். இதிலிருந்து மணிக்கு சுமார் 0·47 கன மீட்டர் வாயு கிடைக்கும். இதன் விலை சுமார் ரூ.2,750. | கோவை, சேலம், மாவட்டங்கள். | (1) மண்டல ஆராய்ச்சி நிலையம், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை. (2) துடியலூர் கூட்டுறவு வேளாண்மைச் சங்கம், கோவை. (3) அக்ரோ இண்டஸ்டிரியல் இன்ஜினியரிங் கம்பைன், உடுமலை. |
| 21 பருத்தியிலிருந்து பிசிரெடுக்கும் கருவி. (Cotton Delinting Machine) | பருத்தி விதையினைச் சுற்றியுள்ள பிசிரானது (அ) ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்ளும் தன்மையால் தனித் தனியாக பிரித்து விதைக்கப் பயன்படுத்த முடிவதில்லை. (ஆ) தன்னகத்தே சில வேண்டாத பூச்சிகளைத் தங்க வைப்பதால் தாவரத்திற்குத் தீங்கு விளைவிக்கிறது. பருத்தியிலிருந்து பிசிரெடுப்பதற்கான கருவி 5 கிலோ மற்றும் 20 கிலோ கொள்ளளவுகளில் உள்ளது. 10 கிலோ பருத்தி விதைக்கு 1 லிட்டர் வியாபார அடர் கந்தக அமிலம் தேவைப்படுகிறது. 5 கிலோ கொள்ளளவு கருவியின் விலை ரூ. 4,500, 1 மணிக்கு 30 கிலோ பருத்தியிலிருந்து பிசிரெடுக்க இயலும். 1 கிலோ பருத்தி பிசிரெடுக்க சுமார் ரூ 1·20 செலவாகிறது. | ஷை. | மண்டல ஆராய்ச்சி நிலையம், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை. |
| 22 சூரிய வெப்ப தண்ணீர் சூடேற்றி (Solar Plate Collector). | சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தி 180 லிட்டர் தண்ணீரை சுமார் 63°C வரை வெப்பப் படுத்தவல்ல இக் கருவி 305X305X12 செ.மீ. அளவுள்ள பெட்டி போன்ற | வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர். | பண்ணை இயந்திரத் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர். |

| வரிசை எண்ணும் கருவியின் பெயரும். | விபரம். | உபயோகத்தில் உள்ள இடங்கள். | கிடைக்கும் இடங்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | அமைப்புள்ளது. இதில் வெந்நீரை சேகரித்து வைத்து மறுதினம் உபயோகப்படுத்த வல்ல அமைப்பும் உள்ளது. இதன் விலை சுமார் ரூ. 4,000. | | |
| 23 மல்லிகை எண்ணெய் பிரித்தெடுக்கும் கருவி (Jasmine Oil Extraction Plant.) | வாசனைத் திரவியங்களில் பயன்படுத்தப்படும் மல்லிகை எண்ணெயைப் பிரித்தெடுப்பதற்கான இக் கருவி 1,000 கிலோ மல்லிகையிலிருந்து (Jasminum Grandiflorum) 3 கிலோ எண்ணெய் பிரித்தெடுக்கவல்லது. ஒரு முறைக்கு 3 கிலோ மலர்களைக் கையாளவல்ல இக் கருவியின் விலை சுமார் ரூ. 7,500. | சேலம், வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர். | மண்டல ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர். |
| 24 நெல் சுத்தம் செய்யும் சாதனம் (Paddy Precleaner.) | நெல் அடித்த பின்பு, அதனைச் சுத்தப்படுத்துவதற்கு இக் கருவி மிகவும் உபயோகமானதாகும். நெல்லில் உள்ள களிமண், கல், பதர் முதலியவைகளைப் பிரித்து நெல்லைச் சுத்தம் செய்யும் இக் கருவியின் விலை சுமார் ரூ. 5,000 ஆகும். மணிக்கு சுமார் 150 கிலோ நெல்லை சுத்தப்படுத்த இயலும். நெல்லை 95 சத வீதம் சுத்தப்படுத்தும் திறன் கொண்ட இக் கருவியின் மூலம் ஒரு குவிண்டால் நெல் சுத்தப்படுத்துவதற்கு ஆகும் செலவு ரூ. 2 ஆகும். | கோயம்புத்தூர் மாவட்டம். | வேளாண்மைப் பதனஞ் செய் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கோயம்புத்தூர்-3. |
| | மேற்குறிப்பிட்ட கருவியை விட அதிகச் செயல் திறன் (97 சத வீதம்) கொண்ட மற்றொரு கருவியும் இத்துறையில் உருவாக்கப்பட்டுள்ளது. (Modified Paddy Precleaner). இதன் விலை ரூ. 5,500 ஆகும். மணிக்கு சுமார் 200 கிலோ நெல்லை சுத்தப்படுத்துகிறது. இதற்கு ஆகும் செலவு குவிண்டாலுக்கு ரூ. 1·75. | | |
| 25 தானியம் சுத்தப்படுத்தி தரம் பிரிக்கும் கருவி கிரிப்பன் மாடல் (Seed cleaner-cum grader-Crippan Model) | இக்கருவி தானியங்களை சுத்தப்படுத்துவதோடு அல்லாமல் தரம் பிரிக்கவும் உதவுகிறது. சுத்தமான நல்ல விதைகளைப் பொறுக்கி எடுத்து விதைப்பதன் மூலம் அதிக அளவில், விதைகள் முளைத்து அதன்மூலம் அதிக மகசூல் | துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம், துடியலூர், கோயம்புத்தூர் மாவட்டம். | வேளாண்மைப் பதனஞ் செய்துறை. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3. |

| வரிசை எண்ணும் கருவியின் பெயரும். | விபரம். | உபயோகத்தில் உள்ள இடங்கள். | கிடைக்கும் இடம். |
|---|---|---|---|
| | கிடைக்க ஏதுவாகிறது. இக் கருவியின் விலை ரூ. 19,000 ஆகும். | | |

| தானியம். | ஒரு மணி நேரத்தில் சுத்தப் படுத்தும் அளவு. | குவிண்டாலுக்கு ஆகும் செலவு. | வேளாண்மைப் பல்கலைக் கழகப் பண்ணை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | கிலோ. | ரூ. | |
| நெல் .. .. | 200 | 5 | .. |
| கம்பு .. | 200 | 5 | .. |
| சோளம் .. .. | 250 | 4 | .. |
| மக்காச்சோளம் .. | 400 | 2·50 | .. |

| வரிசை எண்ணும் கருவியின் பெயரும். | விபரம். | உபயோகத்தில் உள்ள இடங்கள். | கிடைக்கும் இடம். |
|---|---|---|---|
| தானியம் சுத்தப் படுத்தி தரம் பிரிக்கும் கருவி (பெட்காஸ் மாடல்). (Seed cleaner-cum grader petkus model) | மேலே குறிப்பிட்ட கருவியைப் போலவே இக்கருவியும் தானியங்களைப் சுத்தப் படுத்தித் தரம் பிரிக்க உதவுகிறது. இதன் விலை ரூபாய். 12,000. மணிக்கு சுமார் 200 கிலோ தானியத்தை, சுத்தப்படுத்தி தரம் பிரிக்கிறது. ஒரு குவிண்டால் தானியத்தை பதனம் செய்ய ரூ. 2·75 செலவாகிறது. | டி | வேளாண்மைப் பதனஞ் செய்துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3. |
| 27 வெப்பக் காற்று உலர்த்தி Hot air generator | நெல், வேர்க்கடலை, மற்றும் சிறு தானியங்களை குறிப்பிட்ட வெப்ப நிலையில் உலர்த்துவதற்கு இக்கருவி பயன்படுகிறது. இதனை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எளிதாக எடுத்துச் செல்லும் வகையில் சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இக்கருவியின் மூலம் (அ) காற்றோட்ட வசதியுள்ள அறைகளில் தானியங்களைக் குவியல் குவியலாக வைத்தோ அல்லது சேமிப்பு இடங்களில் வைத்தோ உலர்த்தலாம். (ஆ) சாக்குகளில் நிரப்பி கட்டிடங்களுக்கு உள்ளே அல்லது வெளியே வைத்து உலர்த்தலாம். (இ) தானியங்களை அப்படியே கொட்டியோ அல்லது மூடி வைத்தோ உலர்த்தலாம். | துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம், துடியலூர். வேட்டைக்காரன் புதூர், கோபிச் செட்டிப் பாளையம், தஞ்சாவூர். | |

| வரிசை எண்ணும் கருவியின் பெயரும். (1) | விவரம். (2) | உபயோகத்தில் உள்ள இடங்கள். (3) | கிடைக்கும் இடம். (4) |
|---|---|---|---|
| | (ஈ) கதிர்பிடிக்காத நெல்லையும் உலர்த்தலாம். | | |
| | இந்த சாதனத்தின் விலை ரூ. 19,000. ஒரே சமயத்தில் 3 முதல் 4 டன்கள் வரை நெல்லை உலர்த்த இயலும். ஒரு டன் நெல்லை 22 சதவீதத்திலிருந்து 12 சதவீத ஈரத்தன்மைக்கு உலர்த்த 8 மணி நேரம் பிடிக்கிறது. இதற்கு ஆகும் செலவு ரூ. 40. | | |
| 28. செவ்வக வடிவ தானிய உலர்த்தி (Rectangular Metal Bin Drier,) | இந்தச் சாதனத்தின் மூலம் நெல், மிளகாய், வேர்க் கடலை முதலியன உலர்த்தலாம். இதன் விலை ரூ. 5,500 (அச்சுவழி காற்றாடி பொருத்தப்பட்டது.) மற்றொரு வகை ரூ. 8,300 (விளிம்பு வழி காற்றாடி பொருத்தப்பட்டது). இதன் கொள்ளளவு 1,000 கிலோ நெல் அல்லது 500 | தஞ்சாவூர், கோவை திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்கள். | வேளாண்மைப் பதனஞ் செய் துறை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3. |



| வரிசை எண்ணும் கருவியின் பெயரும். (1) | விவரம். (2) | உபயோகத்தில் உள்ள இடங்கள். (3) | கிடைக்கும் இடம். (4) |
|---|---|---|---|
| | கிலோ வேர்க்கடலை அல்லது 125 கிலோ மிளகாய் ஆகும். உலர்த்தும் செலவு குவிண்டாலுக்கு முறையே ரூ. 4·50, ரூ. 12, ரூ. 150 ஆகிறது. உலர்த்த ஆகும் நேரம்— | | |
| | (அ) நெல்லை 22 சதவீதத்திலிருந்து 12 சதவீத ஈரத்தன்மை நிலைக்கு உலர்த்த 8 மணி நேரம். | | |
| | (ஆ) மிளகாயை 66 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு உலர்த்த 10 மணி நேரம். | | |
| | (இ) வேர்க்கடலையை 27 சதவீதத்திலிருந்து 8 சதவீதத்திற்கு உலர்த்த 9 மணி நேரம். | | |
| 29 எல். எஸ். யூ. தானிய உலர்த்தி (L.S.U. Drier). | இந்தச் சாதனம் நெல்லை சீராகவும், அதிக அளவிலும் உலர்த்த உதவுகிறது. இக் கருவி 8 மணி நேரத்தில் சுமார் 2·7 டன் நெல்லை 22 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு ஈரத்தன்மை நிலைக்கு உலர்த்துகிறது. இதன் விலை ரூ. 20,000 | தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக் கழகம். | வேளாண்மைப் பதனஞ்செய்துறை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3. |

| வரிசை எண்ணும், கருவியின் பெயரும். | விவரம். | உபயோகத்தில் உள்ள இடங்கள். | கிடைக்கும் இடம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ஆகும். ஒரு டன் நெல்லை உலர்த்துவதற்கு ஆகும் செலவு ரூ. 50 ஆகும். | | |
| 30 வட்டவடிவதானிய உலர்த்தி (Circular Bin Batch Drier). | இந்த உலர்த்தி, மின்சார வெப்ப சாதனங்களின் மூலம் தானியத்தை உலர்த்துகிறது. இதன் கொள்ளளவு ஒரு டன் ஆகும். இதன் விலை சுமார் ரூ. 10,000 ஒரு டன் நெல்லை உலர்த்துவதற்கு ஆகும் செலவு ரூ. 36 ஆகும். | மதுரை, கோவை மாவட்டங்கள். | ஷை |
| 31 மீன் உணவை குறுணைகளாக்கும் கருவி. (Pelletiser for fish meal). | மீன் உணவை குறுணைகளாக்கித் தருவதால் மீன்கள் அதிக அளவில் உணவை உட்கொள்ளுகின்றன. இதனுல் உணவு களில் உள்ள சத்து ஒரே சீராக மீன்களுக்கு கிடைக்கிறது. மேலும் உணவு சேதமாவதும் பெருமளவில் தவிர்க்கப்படுகிறது. எனவே, மீன் உணவை குறுணை களாக்கும் கருவி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இது ஒரு மணி நேரத்தில் சுமார் 10 கிலோ மீன் உணவை 3×10 மில்லி மீட்டர் அள | மீன்வளத்துறை தூத்துக்குடி, மீன்வளத்துறை கொச்சி. | ஷை |



| வரிசை எண்ணும், கருவியின் பெயரும். | விவரம். | உபயோகத்தில் உள்ள இடங்கள். | கிடைக்கும் இடம். |
|---|---|---|---|
| | வுள்ள குறுணைகளாக்கவல்லது. இக்கருவியின் விலை ரூ. 1,300. இக்கருவியில் ஒரு கிலோ மீன் உணவை குறுணைகளாக்க 10 பைசா மட்டுமே செலவாகிறது. | | |
| 32 விலங்கு துரத்தும் கருவி. (Animal Scarrer). | மலையடிவாரங்களில் விளைவிக்கப்படும் பயிர்களை நாசம் செய்யும் விலங்குகளை பயமுறுத்தி துரத்துவதற்கு ஒரு கருவி உருவாக்கப்பட்டிருக்கிறது. இது இரவு நேரங்களில், ஆட்களின் உதவின்றி தேவையான இடைவெளிகளில் கால்சியம் கார்பைடின் உதவியால் மிகுந்த சப்தத்துடன் வெடித்து, விலங்குகளை பயமுறுத்தி துரத்த உதவுகிறது. இக்கருவி 150 மீட்டர் தூரத்திற்கு சத்தம் உண்டாக்கும் சக்தி உடையது. இதன் விலை ரூ. 300. இதைப் பயன்படுத்த ஒரு இரவுக்கு ரூ. 7.50 செலவாகும். | வாளையார் மலைப் பகுதி, கோவை மாவட்டம். | வேளாண்மை பதனச் செய்துறை, தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3. |
| 33 நார் உரிக்கும் கருவி. (Fiber extractor). | புளிமஞ்சி, சணப்பு, சணல் ஆகிய செடிகளில் இருந்து நாரைப் பிரித்தெடுக்க நார் உரிக்கும் கருவி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. | வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர். | ஷை |

| வரிசை எண்ணும் கருவியின் பெயரும். | விபரம். | உபயோகத்தில் உள்ள இடங்கள். | கிடைக்கும் இடம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | சாதாரணமாக, இச்செடிகளை, பூக்கும் பருவத்தில் வெட்டி நீரில் சில நாட்கள் ஊற வைத்து அதன்பின் ஒவ்வொரு செடியிலிருந்தும் நாரைத் தனித்தனியாகப் பிரித்தெடுக்கிறார்கள். ஆனால் நார் உரிக்கும் கருவியை பயன்படுத்தி அறுவடையான செடிகளை அதிக நாள் நீரில் ஊற வைக்காமலேயே மொத்தமாக நாரை பிரித்தெடுக்க முடியும். இக்கருவியைப் பயன்படுத்தாமல் ஒரு குவிண்டால் நார் உரிக்க ரூ. 56 செலவாகிறது. ஆனால், இக்கருவியை பயன்படுத்தி ஒரு குவிண்டால் நார் உரிக்க ரூ. 38 தான் செலவாகிறது. மேலும், செடியை நீரில் ஊற வைக்க வேண்டிய காலம் 18 நாட்களில் இருந்து 8 நாட்களாகச் குறைக்கப்படுகிறது. இக்கருவியின் விலை (2 மின்சார மோட்டாருடன்) ரூ. 2,500 ஆகிறது. | | |



## இணைப்பு XI

[213-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 335-க்கான விடையைக் காண்க].

### ANSWER.

(*a*) Yes.

(*b*) The Agriculture Department has formulated micronutrient mixtures for different crops.

To find out the response of micronutrient mixtures on crop yields, a number of field experiments have been conducted both in the Experimental Stations and ryots' holdings, and based on the above results, micronutrient mixtures have been prepared for Groundnut, Cotton, Millets and Potato.

During 1976-77, 180 M. T. of Micronutrient mixtures were prepared and distributed for groundnut crops.

During 1977-78, 300 M. Ts. of Micronutrient mixtures were prepared and distributed for groundnut crop. 60 M. Ts. for Cotton and 3 M. Ts. for Potato.

During the current year (1978-79) it is proposed to manufacture and distribute micronutrient mixtures as follows :

| Crop. | Quantity. |
|---|---|
| Groundnut .. .. .. | 800 tonnes. |
| Cotton .. .. .. .. | 300 tonnes. |
| Others .. .. .. .. | 100 tonnes. |
| | 1,200 tonnes. |

The dosage of application of micronutrient mixture varies from 4 to 6 kg. per acre depending on the crop and the cost varies from Rs. 15 to Rs. 20 per acre.

A separate Unit has been set up for the manufacture of micronutrient mixtures at Kudumiamalai in Pudukkottai district with effect from March 1978. At present, it has a capacity to manufacture about 1,000 tonnes with scope for increasing the output gradually.

(The above answer has been approved by the Minister for Agriculture and Irrigation.)

## இணைப்பு XII

[....233-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 3694க்கான விடையைக் காண்க.]

விடை.

தற்பொழுது 1,20,72,000 பனை மரங்கள் தமிழ் நாட்டில் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. புள்ளி விவரப்படி நம் மாநிலத்தில் பனை மர சாகுபடி பரப்பு பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| வருடம் | | | ஹெக்டேர். |
|---|---|---|---|
| 1970–71 | .. | .. | 19,342 |
| 1971–72 | .. | .. | 21,057 |
| 1972–73 | .. | .. | 20,912 |
| 1973–74 | .. | .. | 23,217 |
| 1974–75 | .. | .. | 22,803 |
| 1975–76 | .. | .. | 24,029 |
| 1976–77 | .. | .. | 24,144 |

எப்பொழுதாவது பனை மர சாகுபடி பரப்பின் அளவு குறைவாகிறது என்றால், அது வறட்சியின் காரணமாகவோ, கடும் புயலினாலோ அல்லது வீடு கட்டும் பணிக்காக வெட்டப்பட்டோ தான் இருக்க முடியும். மேலும் நெடுஞ்சாலைகளில் 1977–78-ல் நடப்பட்ட 19,30,587 பனங் கன்றுகளில் 10,03,243 பனங் கன்றுகள் பிழைத்து வளர்ந்து வருகின்றன. நடப்பு ஆண்டில் (1978–79) இதுவரை 17,97,221 பனங் கன்றுகள் நடப்பட்டுள்ளன. இது தவிர மரநடு விழாவின்பொழுது பஞ்சாயத்து ஒன்றியங்கள் மூலமாக பனங் கொட்டைகளை நடுவது மூலமாகவும், விவசாயிகள் தானாகவே முன்வந்து அவர்களுடைய சொந்த நிலங்களில் பனை மரங்கள் வளர்த்து வருவதின் காரணமாகவும் மற்றும் இயற்கையாகவும் அவ்வப்பொழுது பனை மர எண்ணிக்கையில் ஏற்படும் இழப்பு ஈடு செய்யப்படுகிறது. இதிலிருந்து பனை மரங்களின் எண்ணிக்கை தமிழ் நாட்டில் குறையவில்லை என்பது தெரிகிறது.



## இணைப்பு XIII

...244-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 32க்கான விடையைக் காண்க.]

பதில்.

மத்திய சிறைகளிலுள்ள காவலர்களின் எண்ணிக்கை.

| த்திய சிறையின் பெயர். | முதல் நிலைக் காவலர்கள். | | இரண்டாம் நிலைக் காவலர்கள். | | |
|---|---|---|---|---|---|
| | ஆண்கள். | பெண்கள். | ஆண்கள். | பெண்கள். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. சென்னை மத்திய சிறை .. .. | 15 | .. | 126 | 6 | 147 |
| 2. கோவை மத்திய சிறை .. .. | 12 | .. | 125 | 5 | 142 |
| 3. திருச்சி மத்திய சிறை .. .. | 12 | .. | 120 | .. | 132 |
| 4. வேலூர் மத்திய சிறை .. .. | 11 | .. | 126 | .. | 137 |
| 5. சேலம் மத்திய சிறை .. .. | 25 | .. | 202 | .. | 227 |
| 6. மதுரை மத்திய சிறை .. .. | 7 | .. | 85 | 6 | 98 |
| 7. கடலூர் மத்திய சிறை .. .. | 8 | .. | 75 | .. | 83 |
| 8. பாளையங்கோட்டை மத்திய சிறை .. | 9 | .. | 71 | .. | 80 |
| 9. சிறுவர் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை .. | 4 | .. | 33 | .. | 37 |
| 10. மாநில மகளிர் சிறை, வேலூர் .. | 2 | 3 | 10 | 27 | 42 |

[1979 பிப்ரவரி 12

## இணைப்பு XIV.

[..........249-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 390-க்கான விடையைக் காண்க].

விடை : (அ) ஆம்.

(ஆ) இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும், தமிழ் நாடு அரசும் கூட்டாக வழங்கிய நிதியுதவியுடன் 1961-ஆம் ஆண்டு கொடைக்கானலில் ஆப்பிள் பழ மேம்பாட்டுக்காக ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது. திட்டக் காலம் ஏற்கனவே முடிந்துவிட்டது. எனினும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிதி உதவியால் பல்கலைக் கழகத்தின் கீழ் ஆப்பிள் பழ மேம்பாடு பற்றிய ஆராய்ச்சிப் பணி தொடர்ந்து நடை பெற்று வருகிறது.

பல்வேறு நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட 120 வகை ஆப்பிள் பழங்கள் கொடைக்கானல் பகுதியில் ஆராய்ச்சி செய்யப்பட்டன. விரைவில் பலனுக்கு வரக்கூடிய இரண்டு இரகங்களான கேரிங்டன், ஐரிஷ்பீச் ஆகியவையும் மூன்று நடுத்தர கால இரகங்களான கொடைக்கானல் 1, விண்டர் பனானா, பார்லின்ஸ் பியூடி ஆகிய வையும் நீண்டகால இரகமான ட்ரோபிகல் பியூட்டியும் கொடைக் கானல் சூழ்நிலையில் நன்கு பலனளித்தன.

நவம்பர், டிசம்பர் மாதங்களில் சரிவு மற்றும் குழி ஒட்டு முறை மூலம் நூற்றுக்கு நூறு சதவீதம் வரை ஆப்பிள் மரங்கள் நன்கு வளர்க்கப்பட்டன.

எம். 779 மற்றும் எம்.எம். 110 ஆகியவற்றின் வேர்த் தண்டுகள் ஆப்பிள் மரங்களை வளர்ப்பதற்கு மிகவும் சிறந்து விளங்கின. ஸான்டோவின் 'எ' என்னும் மருந்தை 0·5 சத விகிதம் வீரிய அளவில் ஆலர் 3,000 பி.பி.எம். மருந்துடன் ஆப்பிள் மரங்களில் மொட்டு அரும்புவதற்கு 15 நாட்களுக்கு முன் தெளிப்பதால் மலர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. பழப்பிடிப்பு ஏற்பட்ட 40-வது நாளில் ஜி.ஏ. 500 பி.பி.எம். என்ற மருந்தோடு ஆலர் 2,000 பி.பி.எம். மருந்து தெளிப்பதால் பார்லின்ஸ் பியூடி இரகத்தில் பழ மகசூல் அதிகரித்தது.

ரோம் பியூடி வகை ஆப்பிள் பழங்களை மூங்கில் கூடையில் மரத்தூளுடன் வைத்துக் கட்டி வெளியூர்களுக்கு அனுப்புவதால் மற்ற முறைகளைவிடக் குறைவான அளவிலேயே சேதம் ஏற் படுகிறது என்பது ஆய்வின் மூலம் அறியப்பட்டுள்ளது. இதே போல் பார்லின்ஸ் பியூடி பழங்களைக் கூடையில் காகிதங்களுடன் வைத்துக் கட்டி அனுப்புவதால் குறைந்த அளவிலேயே சேதங்கள் ஏற்படுகின்றன என்பதும் அறியப்பட்டுள்ளது.



1979 பிப்ரவரி 12]

தமிழ்நாட்டில் தற்பொழுது கொடைக்கானலில் வாணிக நோக் கத்துடன் ஆப்பிள் பழ மரங்கள் வளர்க்கப்படுகின்றன. தற்போது அப்பகுதியில் ஆப்பிள் மரங்கள் வீட்டுத் தோட்டங்களிலும் சிறு நிலப் பகுதிகளிலும் வளர்க்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் சுமார் 10 ஹெக்டேர் அளவுள்ள நிலப்பரப்பில் ஆப்பிள் சாகுபடி செய்யப்படுகிறது.

கொடைக்கானல் பகுதியில் பார்லின்ஸ் பியூடி என்னும் இரகம் முக்கிய இரகமாகும். நீலகிரியில் ரோம் பியூடி என்னும் இரகம் தான் அதிக அளவில் வளர்க்கப்படுகிறது. மற்ற இரகங்களான கேரிங்டன், ஐரிஷ் பீச், கொடைக்கானல் 1 போன்றவைகளும் சிறிய அளவில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

## இணைப்பு XV

[........288-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 459-க்கான விடையைக் காண்க].

விடை :—ஆம்.

தமிழ் நாட்டில் தரம்மிகுந்த பழச் செடிகளை உற்பத்தி செய்து, பயிரிடுவோர்க்கு தக்க காலத்தில் வழங்கும் நோக்குடன் 10 அரசு பழப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. இப்பழப் பண்ணைகளில் மாங்கன்றுகள் ஒட்டு முறையில் தயார் செய்யப் பட்டு வழங்கப்படுகின்றன. நடப்பு 1978–79-ம் ஆண்டில் 1,82,000 மாஞ்செடிகளை உற்பத்தி செய்து பயிரிடுவோர்க்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2. இவை தவிர புதுக்கோட்டை மாவட்டத்தில் வெம்பன் என்ற இடத்தில் ஏறத்தாழ 1,000 ஏக்கர் பரப்பளவில் பெரிய அளவில் பழப்பண்ணை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இப்பண்ணை யின் பெரும் பகுதியில் 'மா' சாகுபடி செய்ய திட்டமிடப்பட் டுள்ளது. இதுவரை 43,000 மாங்கன்றுகள் நடப்பட்டுள்ளன. நீலம், பங்களூரா, பங்கனப்பள்ளி, செந்தூரா, பீத்தர், போன்ற உயர் ரகங்கள் ஒட்டுமுறையில் பயிரிடப்பட்டுள்ளன. இதே மாவட்டத்தில் குடுமியான் மலையில் ஒரு பழ ஆராய்ச்சிப் பண்ணை நிறுவப்பட்டு வெப்ப பகுதி பழ வகைகள், குறிப்பாக மாம்பழம் பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

3. கன்னியாகுமரி மாவட்டத்தில் கார் கால (off season Mango) மா உற்பத்தி பற்றி ஆராய்ச்சி செய்யும் நோக்கத்துடன் பழ ஆராய்ச்சிப் பண்ணை இயங்கி வருகிறது. இங்கு மாம்பழம் ஆண்டு முழுவதும் கிடைக்க வழி வகை செய்வது பற்றி ஆராயப் படுகிறது.

4. பழ வளர்ச்சித் திட்டங்களின் மூலம் 1,500 ஏக்கர் பரப்பளவில் புதிய பழப் பண்ணைகள் நிறுவவும், ஏற்கெனவே உள்ள 4,500 ஏக்கர் பரப்பளவில் உள்ள பழப் பண்ணைகளை தக்க முறையில் வளப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறையினால் தொழில் நுணுக்கங்கள் பயிரிடுவோர்க்கு செய்து காண்பிக்கப்படுகிறது.

5. மேற் குறிப்பிட்ட திட்டங்களைத் தவிர, கீழே குறிப்பிட்டுள்ள திட்டங்கள் வாயிலாக பல்வேறு பழச் செடிகள், குறிப்பாக மாஞ்செடிகள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன :

(1) மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம் (நீலகிரி மலையினைத் தவிர).

(2) அரிசன நலத் திட்டம்.

(3) மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்.

(4) கல்ராயன் மலைப்பகுதி நிர்வாகத்திட்டம்.

(5) 1976–77-ம் ஆண்டு தமிழ் நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மா சாகுபடி செய்யப்பட்டுள்ள பரப்பளவு, உற்பத்தி, ஆகிய விபரங்கள் பின்வருமாறு :—

| வரிசை எண்ணும் மாவட்டமும். | பரப்பு (ஹெக்டேரில்) | உற்பத்தி (டன்னில்) |
|---|---|---|
| (1) .. | (2) | (3) |
| 1 செங்கற்பட்டு .. | 1,796 | 13,650 |
| 2 தென் ஆற்காடு .. .. .. | 1,336 | 15,360 |
| 3 வட ஆற்காடு .. .. .. | 3,430 | 61,740 |
| 4 சேலம் .. .. .. .. | 340 | 5,660 |
| 5 தர்மபுரி .. .. .. | 9,998 | 167,970 |
| 6 கோயம்புத்தூர் .. .. .. | 228 | 2,170 |
| 7 திருச்சிராப்பள்ளி .. .. | 1,456 | 17,470 |
| 8 புதுக்கோட்டை .. .. | 396 | 4,750 |
| 9 தஞ்சாவூர் .. .. .. | 1,939 | 22,570 |
| 10 மதுரை .. .. .. | 8,544 | 1,46,000 |
| 11 இராமநாதபுரம் .. .. | 895 | 8,590 |
| 12 திருநெல்வேலி .. .. .. | 1,900 | 27,080 |
| 13 நீலகிரி .. .. .. .. | 8 | 80 |
| 14 கன்னியாகுமரி .. .. .. | 1,652 | 28,080 |
| மொத்தம் .. | 33,918 | 5,21,270 |





## இணைப்பு XVI

[......289—ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 461-க்கான விடையைக் காண்க]

1977–78-ம் ஆண்டில் விவசாய நாணயச் சங்கங்களால் மாவட்ட வாரியாக வழங்கப்பட்ட குறுகிய காலக் கடன்களின் விவரம் :—

| தொடர் எண்ணும் மத்திய கூட்டுறவு வங்கியின் பெயரும் | கடன் வழங்கப் பட்ட உறுப்பினர் களின் எண்ணிக்கை. | வழங்கப் பட்ட தொகை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1 சேலம் .. .. .. | 99,277 | 1,426·86 |
| 2 புதுக்கோட்டை .. .. | 23,062 | 345·69 |
| 3 காஞ்சிபுரம் .. .. | 32,945 | 657·35 |
| 4 மதுரை .. .. .. | 97,599 | 1,324·16 |

[1979 பிப்ரவரி 12

| தொடர் எண்ணும் மத்திய கூட்டுறவு வங்கியின் பெயரும். | கடன் வழங்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் லட்சத்தில்) |
| 5 கும்கோணம் .. .. | 1,04,169 | 1,497·48 |
| 6 திருச்சிராப்பள்ளி .. | 92,211 | 1,146·81 |
| 7 தென்னாற்காடு .. .. | 60,358 | 856·67 |
| 8 திருநெல்வேலி .. .. | 40,265 | 365·24 |
| 9 தஞ்சாவூர் .. .. | 69,875 | 821·13 |
| 10 கன்னியாகுமரி .. .. | 40,542 | 247·11 |
| 11 கோயம்புத்தூர் .. .. | 61,158 | 1,262·60 |
| 12 நீலகிரி .. .. .. | 13,236 | 227·71 |
| 13 தருமபுரி .. .. | 15,246 | 225·16 |
| 14 இராமநாதபுரம் .. | 81,800 | 809·01 |
| 15 வட ஆற்காடு .. .. | 60,919 | 855·71 |
| மொத்தம் .. | 8,92,662 | 12,068·59 |



1979 பிப்ரவரி 12]

[....307-ம் பக்கத்திலுள்ள உடுகுறியிடாத எண் 495-க்கான விடையைக் காண்க]

| வரிசை எண்ணும் கல்வியாண்டும். | மொத்தம் வரப்பெற்ற விண்ணப்பம். | பிரிவு வாரியான விவரங்கள். | |
|---|---|---|---|
| | | ஒதுக்கப்பட்ட இடங்கள். | வரப்பெற்ற விண்ணப்பங்கள். |
| (1) | (2) | (3) | (4) |
| (1) 1976-77 | 400 | | |
| | (1) ஒளிப்பதிவு .. | 5 | 82 |
| | (2) ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல். | 5 | 57 |
| | (3) படச் சுருள் கழுவுதல். | 5 | 9 |
| | (4) இயக்குதல் மற்றும் கதை வசனம் எழுதுதல். | 5 | 52 |
| | (5) படத் தொகுப்பு | 5 | 58 |
| | (6) நடிப்பு ஆண் .. | 5 | |
| | பெண் .. | 5 | 142 |
| | | | 400 |
| (2) 1977-78— | 526 | | |
| | (1) ஒளிப்பதிவு .. | 5 | 126 |
| | (2) ஒலிப்பதிவு மற்றும் ஒலிப் பொறியியல். | 5 | 95 |
| | (3) படச் சுருள் கழுவுதல். | 5 | 18 |

| வரிசை எண்ணும் கல்வியாண்டும். | மொத்தம் வரப்பெற்ற விண்ணப்பம். | பிரிவுவாரியான விவரங்கள். ஒதுக்கப்பட்ட இடங்கள். | வரப்பெற்ற விண்ணப்பங்கள். |
| --- | --- | --- | --- |
| (1) | (2) | (3) | (4) |
| (4) இயக்குதல் மற்றும் கதை வசனம் எழுதுதல். | | 5 | 75 |
| (5) படத் தொகுப்பு | | 5 | 55 |
| (6) நடிப்பு ஆண் .. பெண் .. | | 5 } 5 } | 157 |
| | | | 526 |
| (3) 1978-79—784 | | | 784 |
| (1) ஒளிப்பதிவு .. | | 5 | 101 |
| (2) ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல். | | 5 | 67 |
| (3) படச்சுருள் கழுவுதல் | | 5 | 11 |
| (4) இயக்குதல் மற்றும் கதைவசனம் எழுதுதல். | | 5 | 66 |
| (5) படத் தொகுப்பு | | 5 | 44 |
| (6) நடிப்பு ஆண் .. பெண் .. | | 10 } 10 } | 495 |
| | | | 784 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1979 பிப்ரவரி 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பரளியாறு நீர் மின் திட்டம்.

*வினா எண். 21—திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பரளியாறு நீர் மின் திட்டம் அமைக்கும் வேலைக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத் திட்டம் எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, மீண்டும் மத்திய அரசுடன் அந்தப் பரளியாறு நீர் மின்திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பதற்கு இந்த அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இத்திட்டம் சிக்கனமற்றது என்பது மத்திய அரசின் அறிவிப்பு. இதைவிட இன்னும் சிறப்பான திட்டங்கள் வற்புறுத்தப்பட வேண்டியிருப்பதனால், தற்போது அத்தகைய உத்தேசம் இல்லை.

[1979 பிப்ரவரி 13

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் புதிதாக எத்தனை அனல் மின் திட்டங்களுக்கு, இந்த பரளியாற்றைத் தவிர, மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு அண்மையில் கீழ் மேட்டூர் அனல் மின் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்திருக்கிறது. அது துவங்கப்பட இருக்கிறது. பல மின் திட்டங்கள் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ள திட்டங்களின் பட்டியலை வெளியிட இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் வெளியிட இயலும். இருப்பினும், மேட்டூர் அனல் மின்திட்டம் விரைவில் முடிக்க வேண்டுமென்பதுதான் நமது கோரிக்கையாகும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இப்போது ஏற்பட்டுள்ள மின்சாரப் பற்றாக்குறை காரணமாகவும், பரளியாறு நீர் மின் திட்டமானது ஒரு எகனாமிகல் ப்ராஜெக்ட் என்று கருதப்படுவதாலும், இந்தக் காரணங்களை மேற்கொண்டு பரளியாறு நீர் மின் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு ஜேம்ஜ் அவர்கள் எப்படி கருதுகிறார்களோ எகனாமிகல் ப்ராஜெக்ட் என்று, அப்படி மத்திய சர்க்கார் கருதவில்லையே என்பதுதான் நமது குறை.

மின்துறை அமைச்சர்கள் மாநாடு.

*வினா எண். 22—திரு. கு. ரமணி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலங்களின் மின்துறை அமைச்சர்கள் மாநாடு டில்லியில் நடைபெற்றதில் ஏற்பட்டுள்ள முக்கியமான முடிவுகள் என்ன ?

(ஆ) மின்வாரியங்களின் தலைவர்களை நிர்ணயிப்பதற்கு விசேஷ அமைப்பு ஒன்றை நிறுவ மாநிலங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனவா ?

(இ) ஆம் எனில், தமிழ்நாட்டுக்கு அவ்வித அமைப்பு எப்போது நிறுவப்படும் ?



1979 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைமுன் ஒரு விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மின்சார வாரியத் தலைவர் திறமை, அனுபவம், அவருடைய ஆர்வம் ஆகிய இவைகளை கணக்கில் கொண்டு நியமிக்கப்படுவதாகக் கூறுகின்றார்கள். இவைகளை கணக்கில் எடுக்க என்ன க்ரைடீரியன் அதாவது அளவுகோலை இந்த அரசு நிர்ணயித்துள்ளது ? இப்படிப்பட்ட முறை நிர்ணயிக்கப்படும்போது, மின்சார வாரியத் தலைவராக மின்சாரத்தைப் பற்றிய அனுபவமோ, அதுசம்பந்தமான டெக்னிகல் திறமையோ உள்ள, அந்தத் துறையில் அனுபவமுள்ளவரை நியமிக்க இந்த அரசு ஏற்பாடு செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின்சார வாரியம் போன்ற பொது நிறுவனத்தை நடத்துவதற்கு பல திறமைகள் தேவைப்படுகின்றன. இவற்றையெல்லாம் ஒப்பு நோக்கி மின்வாரியத் தலைவர்களை அவ்வப்போது மாநில அரசு நியமித்து வருகின்றது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, மின்சார அமைச்சர்களுடைய மாநாட்டிலே இந்த ஸ்டேட் மின்சார போர்டுக்கு போடப்பட்ட வரி, அதுபோல் நிலக்கரிக்காக போடப்பட்ட வரி பற்றி ஏதாவது விவாதிக்கப்பட்டதா? இதுசம்பந்தமாக நம்முடைய மாநில அமைச்சர் ஏதாவது கருத்து சொன்னார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் பேறு எனக்குக் கிடைக்காமல் போய்விட்டது.

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே பதிலளித்தபோது குறிப்பிட்டார்கள், தகுதியின் அடிப்படையிலே வாரியத் தலைவர் நியமிக்கப்படுகிறார் என்று, மின்சார வாரியம் போன்ற வாரியங்களில் பொறியியலில் சிறந்த, தகுதி பெற்றவர், நிபுணர் போன்றவர்களை வாரியத்தின் தலைவராக நியமிப்பதற்கு இந்த அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தில் பொறியியல் நிபுணர்களும் தலைவர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் ஐ.ஏ.எஸ். அதிகாரி

*598-ஆம் பக்கத்தில் இணைப்பு I-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

களும் தலைவர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நிர்வாகத்தை நடத்துவதற்கு யார் ஏற்றவர்கள் என்று அரசு கருதுகிறதோ, அவர்கள் அவ்வப்போது நியமிக்கப்படுகிறார்கள். பொறியாளர்களை நியமிக்கக் கூடாது என்பது இந்த அரசாங்கத்தின் கருத்தல்ல.

திரு. கு. ரமணி : நான் அமைச்சர் அவர்களிடம் கேட்ட கேள்விக்கு அவர் பதில் சொல்லவில்லை. தலைவர்களை நியமிப்பதில் என்ன 'கிரைடீரியா' என்பதை அரசு தெரியப்படுத்த வேண்டும். அடுத்து, நடைமுறையில் கட்டண விதங்களை ஒழுங்குபடுத்தி தேவையான பரிந்துரைகளை செய்து—அகில இந்திய மின்சார அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின் ஓர் அம்சமான கட்டணங்களை ஒழுங்குபடுத்த ஏன் நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்பதாகும். பெரும் தொழிற்சாலை முதலாளிகள், கொடுக்கக் கூடிய சக்தி படைத்தவர்கள் குறைந்த அளவு மின் கட்டணம் செலுத்துகிறார்கள். சாதாரண வீடுகளுக்கு யூனிட்டுக்கு 35 பைசாவும், சிறுகடைக்காரர்களுக்கு 75 பைசாவும் வசூலிக்கப்படுவதைக் குறைத்து பெரிய தொழில்களுக்கு கட்டணத்தை அதிகப்படுத்த ஏதாவது திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: வீடு அல்லது கடைகள் போன்றவைகளுக்கு விதிக்கப்படுகின்ற கட்டணத்தைக் குறைக்க வாய்ப்பு இல்லாவிட்டாலும் சில தொழில் நிறுவனங்களுக்குக் கட்டணத்தை அதிகப்படுத்த வாய்ப்பு இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். மின்வாரியத் தலைவர் நியமனத்தைப்பற்றி என்ன கிரைடீரியன் என்று கேட்டார்கள். எனக்குத் தெரிந்த கிரைடீரியன், 'லாயல்டி அண்டு எபிஷியன்சி'.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : இப்போது கிராமங்களில் மின்சார விளக்குகள் எரிவதில்லை. பஞ்சாயத்தில் ஒப்படைக்கப்பட்ட காரணத்தால் அவற்றின் நிதிநிலை சரியாக இல்லாத நிலையில் அந்தமாதிரி நிலை இருக்கிறது. அந்தப் பொறுப்பை அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோரிக்கை கொடுத்திருக்கிறோம். இந்த மாநாட்டில் அதைப் பற்றி முடிவு செய்யப்பட்டதா ? அதுபற்றிய முடிவு என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தப் பிரச்சினை அகில இந்திய மாநாடு அளவுக்குச் செல்லவில்லை, செல்ல வேண்டிய அவசியமும் இல்லை. நடைபெறுகிற இந்தக் கூட்டத் தொடரில் மின்வாரிய அறிக்கையைப் பற்றி விவாதிக்கிறபோது இதுபற்றி நல்ல முடிவை எடுக்கலாம்.

திரு. க. சுப்பு : பொதுத்துறை நிறுவனங்களில் தொழிற் சங்கங்களை நடத்துகிற தலைவர்களை நிர்வாகத்தில் தலைவர்களாக நியமிக்கும் நிலை இருக்கிறது. ரீகாக் கோல் இண்டஸ்ட்ரீஸ் போன்றவற்றில் அந்த நிலை இருக்கிறது. இதற்காக





ஒரு தேர்வுக் குழுவை அமைத்து நியமனங்களைச் செய்ய வாய்ப்பு இருக்கிறது. குழுவை நிராகரித்து விட்டு அரசாங்கமே நியமித்துக் கொள்வது என்ற முடிவு எடுக்க வேண்டிய அவசியம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அந்தக் குழுவும் மாநில அரசாங்கத்தால்தான் நியமிக்கப்படுகிறது. மாநில அரசாங்கம் குழுவை நியமித்து அதிலே வேண்டியவர்களைப் போட்டு தேர்ந்தெடுப்பதைவிட மாநில அரசாங்கமே நேரடியாக தலைவரை நியமித்துவிடலாம் என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது. அனுபவமிக்க தொழிற்சங்கத் தலைவர் சுப்பு அவர்களைப் போன்றவர்கள் வருவார்களானால் பரிசீலிக்கலாம்.

திரு. செ. சிவசாமி : அரசாங்கக் கொள்கையாக பெரிய டவுன்களில் அதிகமான ஆபீஸ்கள் இருப்பதைப் பரவலாக்கும் முறையில் பல திட்டங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில் பரமக்குடியில் இருக்கக்கூடிய முக்கியமான மின்வாரிய அலுவலகங்கள் அத்தனையையும் மதுரைக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. அதைத் தடை செய்து திரும்ப பரமக்குடியிலேயே அந்த அலுவலகங்கள் இயங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போடவும்

திரு ஜே. ஜேம்ஸ் : டில்லியில் நடைபெற்ற மின்சார அமைச்சர்கள் மாநாட்டில் ஹொகனேகல் மின்சாரத் திட்டத்திற்கு அனுமதியளிக்க மத்திய அரசு தயாராக இருக்கிறது என்றும் தமிழ்நாடு அரசும், கர்நாடக அரசும் ஒப்புதல் அளிக்கவில்லை என்றும் கூறுவது உண்மையா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொதுவாக நீர் மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும், அனல் மின் திட்டங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று பேசி அகில இந்திய மின்சாரத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டது. ஹொகனேகல் போன்ற நீர் மின் திட்டங்கள் கர்நாடகம், தமிழகம் ஆகிய இரு மாநிலங்களும் சேர்ந்து நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள். ஆகவே, அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி உடன்பாட்டுக்கு வந்துதான் அந்தகைய காரியங்களை மேற்கொள்ள முடியும்.

[முற்பகல் 9.10.]

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மின்வாரியங்களின் தலைவர்களை நிர்ணயிப்பதற்கு விசேஷ அமைப்பு ஒன்றை நிறுவ மாநிலங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன என்பது உண்மை என்று அமைச்சர் அவர்கள் பதிலில் தெரிவித்து இருக்

கிறார்கள் தமிழ்நாட்டிற்கு அது தேவையில்லை. தேவையான அனுபவம், திறமை, ஆர்வம் உள்ளவர்களைத்தான் நாம் நியமனம் செய்து இருக்கிறோம் என்று சொல்லுகிறீர்கள். அப்படியிருக்கிற போது அப்படிப்பட்ட குழு அமைக்கவேண்டுமென்று ஏன் அவர்கள் உங்களை கேட்டுக் கொண்டார்கள்? மற்ற மாநிலங்களிலே உள்ளவர்களின் திறமை முதலியவைகளை... எல்லாம் பார்த்து இப்படிப்பட்ட முறையிலே கேட்டுக்கொண்டார்களா அல்லது மொட்டையாக இப்படிச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்களா அல்லது வேறு எந்த கிரவுண்டிலே அப்படிச் செய்தார்கள்? இப்படிப்பட்ட முறை வேண்டுமென்று அவர்கள் டிசைட் பண்ணுவதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மத்திய அரசு இத்தகைய தலைவர்களை நியமிப்பதில் தங்களுடைய ஆலோசனைகளையும் வழங்க வேண்டும் என்ற போக்கிலே தான் கருத்துக்களை வெளியிட்டார்கள். ஆனால் மாநில அரசினுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட அமைப்பு மின்சார வாரியம். ஆகவே, இப்படிப்பட்ட குழு அமைக்கலாம் என்று வருகிறபோது மத்திய அரசு அதிலே தலையிடுவதற்கும் அவர்களும் தங்களுடைய ஆலோசனை என்ற பெயரிலே சொல்வதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, பொதுவாக மாநில அரசு அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

## கோவையிலுள்ள சிந்தாமணி சிறப்பங்காடி.

* வினா எண் 23—திரு. ஆ. நடராசன், திரு. கு. ரமணி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டத்திலுள்ள கூட்டுறவு நிறுவனமான சிந்தாமணியை அவசரகால நிலை அமுலில் இருந்தபோது அரசு மேற்கொண்டதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரி நியமன) சட்டம், 1976 அமுலுக்கு வந்தபோது அனைத்து மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கங்களுக்குத் தனி அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டனர். கோவை சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி கோவை மாவட்ட விநியோக விற்பனைச் சங்கத்தின் ஒரு அங்கமாகும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டதால் சகல ஸ்தாபனங்களிலேயும் தனி அதிகாரிகள் நியமனம் செய்யப்பட வேண்டுமென்ற நிர்பந்தத்தால் மட்டும் தான் அப்படிப்பட்ட நியமனங்கள் செய்யப்பட்டதா அல்லது



கோவை சிந்தாமணி கூட்டுறவு நிறுவனத்திலே ஊழல்கள் ஏராளமாக நடந்து, அதனுடைய அங்கத்தினர்களுடைய புகார்களின் காரணமாக அதன் அடிப்படையிலே மாற்றப்பட்... யமனம் செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: கோவை சிந்தாமணி கூட்டுறவு அங்காடியிலே மட்டும தனி அலுவலர் நியமிக்கப்படவில்லை. 1976-ம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் தேதி அவசர நிலை அமலில் இருந்தபோது 422 நிறுவனங்களுக்கு மொத்தமாக தனி அலுவலர்கள் உருவாக்கப்பட்டு அந்த வகையிலேதான் இதுவும் ஒன்றாக இருக்கிறது, அந்த முறையிலே தான் கோவை சிந்தாமணி கூட்டுறவு அங்காடியிலேயும் தனி அதிகாரி நியமிக்கப்பட்டார்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, கூட்டுறவு நிறுவனங்களில் தனி அதிகாரிகள் மட்டும் செயல்படுவதன் காரணமாக கூட்டுறவு அபிவிருத்திக்குக் குந்தகமாக இருக்கிறது, பல விதமான சீர்கேடுகளுக்கும் அது காரணமாக இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆகவே உடனடியாக ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக அமைப்பை ஏற்படுத்த அரசாங்கம் எப்போது முயற்சி எடுக்கும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: திரு அழகர்சாமி அவர்கள் சொன்னதுபோல் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தைப் பரவலாகத் திருத்தி அந்த முறையிலே விரைவிலே மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் நல்ல முயற்சியை எடுத்து வருகிறது.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு சம்பந்தப்பட்ட முறையிலே அடிக்கடி உத்திரவுகள் எல்லாம் வருகின்றன. கூட்டுறவு மூலமாகக் கொடுக்கப்படுகிற கடன்களை வசூல் செய்யக்கூடாது என்று அரசாங்க அறிக்கைகள் இருக்கும்போது கூட்டுறவு சம்பந்தப்பட்டவர்கள் ஜப்தி முதலிய நடவடிக்கைகளில் தொடர்ந்து இறங்கி சேல்ஸ் முதலியவைகளைச் செய்து கொண்டிருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அரசாங்கம் ஒரு உத்திரவைப் போடுகிறது, ஆனால் அதிகாரிகள் உத்திரவை மீறி அவர்கள் இஷ்டம்போல் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்ற நிலைமை பரவலாக இருக்கிறது தமிழ்நாட்டிலே. அரசாங்கம் போடுகிற உத்திரவை அதிகாரிகள் கேட்கமாட்டேன் என்று சொல்லக்கூடிய நிலைமை, அரசாங்கத்திற்கு அதிகாரிகள் கட்டுப்பட்டவர்களாக இல்லை என்ற நிலைமை பரவலாக இருக்கிறது, அப்படிப்பட்ட எண்ணம் மக்களிடத்திலே இருக்கிறது. அப்படிப்பட்ட எண்ணத்தைப் போக்குவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது?

[1979 பிப்ரவரி 13

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மூலக் கேள்வி தனி அதிகாரிகள் நியமனம் பற்றியது. எனவே மாண்புமிகு உறுப்பினர் தனிக்கேள்வி போட்டால் அதற்கான விவரங்களை அரசு அறிவிக்க இயலும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனி அதிகாரிகள் என்றாலே சர்வாதிகாரிகள் என்ற எண்ணம் வெளியிலே பரவியிருக்கிறது. காரணம், கோவை சிந்தாமணி மட்டுமல்ல, பாமினி உர ஆலையில்கூட அதிகாரிகளாலேயே வேலை நிறுத்தம் வரும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. அரசாங்கம் இதைக் கவனத்திற்கொண்டு தேர்தல்கள் எப்பொழுது நடத்தப்படும் என்று துல்லியமாகச் சொல்ல முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, துல்லியமாகச் சொல்ல முடியாது, ஆனால் விரைந்து, போர்க்காலப் பதைபதைப்போடு இந்தக் காரியத்தை இந்த அரசு செய்யும் என்று உறுதி சொல்கிறேன்.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, முன்பெல்லாம் கூட்டுறவுத் துறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களும் மற்றவர்களும் இருக்கும்பொழுது, காரைப் பயன்படுத்தினார்களா, டெலிபோனிலே பேசினார்களா என்பதைக் கண்டுபிடிக்க பாரதி கமிஷன் போடப்பட்டது. இப்பொழுது அதிகாரிகள் வந்திருக்கிறார்கள். இவர்கள் காரிலே போய் இருக்கிறார்களா, டெலிபோனிலே பேசியிருக்கிறார்களா என்பதைக் கண்டறிய வேறொரு சாரதி கமிஷன் போடப்படுமா? தேர்தல் முடிந்த பிறகாவது போடுவார்களா, இப்பொழுதே போடுவார்களா என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் வழக்கம்போல தனிக்கேள்வி போட்டால் இதற்கான முழு விவரத்தையும் இந்த அரசு நிச்சயம் அளிக்கும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் தலைவரவர்களே, சில சாமானகள் கூட்டுறவு அங்காடிகளில் விற்கும் விலையைக் காட்டிலும் குறைவாக தனியார் கடைகளில் கிடைக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய யோசனையைப் பரிசீலனை செய்து பார்க்கிறோம்.



1979 பிப்ரவரி 13]

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், அவசரகாலத்திலே எடுத்துக்கொண்ட இந்தக் கூட்டுறவு அங்காடியிலேயிருந்து எந்தக் காரணத்தினாலோ பழிவாங்கும் முறையிலே சிலர் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்கள், சிலர் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்கள் என்பது கனம் அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? அப்படியிருந்தால் அதை உடனடியாகக் கவனித்து ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் உரிய தகவல்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

கூட்டுறவு அமைச்சர்கள் மாநாடு.

* வினா எண். 24—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடந்த ஆண்டு (1977) டிசம்பர் மாதம் 17-ம் தேதியில் நடைபெற்ற மத்திய அரசு, மாநில அரசு கூட்டுறவு அமைச்சர்கள் மாநாட்டில் விதிகளையும், சட்டங்களையும் திருத்த ஆலோசனைகள் கூறப்பட்டனவா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இல்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இல்லை என்று சொன்னார்கள். 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி டெல்லியில் ஒரு கூட்டுறவு மாநாடு நடைபெற்றது. அதிலே என்ன தகவல்கள் சொல்லப்பட்டன? காலஞ்சென்ற பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், கூட்டுறவுச் சட்டத்தைக் கொளுத்திவிட்டுப் புதிதாகச் சட்டத்தை உருவாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள், அதை அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் நாள் டெல்லியில் நடைபெற்ற மத்திய மாநிலக் கூட்டுறவு அமைச்சர்களின் மாநாட்டில் கீழ்க்கண்ட நான்கு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன:

(1) 1975 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நடைபெற்ற மாநாட்டின் பரிந்துரைகள் மீது நடவடிக்கைகளைக் குறித்து ஆய்வு;

(2) கூட்டுறவுக் கொள்கைச் சட்டம் மற்றும் மேலாண்மை;

(3) 1978–79 ஆம் ஆண்டிலிருந்து 1982–83 ஆம் ஆண்டுக் கான கூட்டுறவுத் திட்டத்தின் அணுகுமுறை ;

(4) கூட்டுறவுச் சங்கப் பதிவாளர்களின் மாநாட்டின் பரிந்துரைகள்.

இந்த நான்கு பிரச்னைகள் அந்த மாநாட்டில் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு பரிசிலிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தேசியக் கூட்டுறவுக் கொள்கை தீர்மானத்தை ஏகமனதாக ஏற்படுத்தி இருக்கிறது அந்த மாநாடு. நேஷனல் கோவாப்பரேட்டிவ் பாலிசி என்ற முறையில் தேசிய அளவில் உருவாக்க வேண்டிய திட்டத்தை உருவாக்கி சமுதாய பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் கருவியாகக் கூட்டுறவு இயக்கத்தைப் பயன்படுத்த வேண்டும்.

வகுப்புவாதத்திற்கும், கட்சிக் கண்ணோட்டத்திற்கும் அப்பாற்பட்டு தேசிய நடவடிக்கையாகக் கூட்டுறவு இயக்கத்தை அந்த மாநாடு கருதி முடிவெடுத்திருக்கிறது.

மேற்கண்டவாறு 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி நடைபெற்ற அந்தக் கூட்டுறவு அமைச்சர்களின் மாநாட்டிலே முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

பண்ருட்டி வட்டத்திலுள்ள கோயில்கள்.

* வினா எண் 25— திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், பண்ருட்டி வட்டத்திலுள்ள ஆலயங்களில் அறநிலையத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆலயங்கள் யாவை ?

(ஆ) அதே வட்டத்தைச் சேர்ந்த எய்தனூரில் உள்ள சிவன் கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் எத்தனை ஏக்கர்கள் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) பட்டியல்* அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) எய்தனூர் அருள்மிகு ஆதிபுரீஸ்வரர் ஆலயத்துக்கு 14·75 ஏக்கர் நஞ்சை நிலங்களும் 4·41 ஏக்கர் புஞ்சை நிலங்களும் உள்ளன.

---

*599ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



[முற்பகல் 9.20].

(திரு. துரை முத்துசாமி நின்று கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். என கவனத்திற்கு வந்தால்தான் அழைக்க முடியும். அதற்காக இப்படி கேட்காதீர்கள்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான ரொம்ப நேரமாக கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். என்னை வற்புறுத்தி வாங்குகிற நிலை இருக்கக் கூடாது. பேரவைத் தலைவர் என்ன சொல்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். தயவு செய்து உறுப்பினர் என்னைக் கட்டாயப் படுத்தி................

திரு. துரை முத்துசாமி : கட்டாயப்படுத்தி இல்லை. ஒரே ஒரு கேள்விதான...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்விக்குப் போயாகிவிட்டது. ஆகவே, தயவுசெய்து அமருங்கள். அடுத்து, திரு. சி. கோவிந்தராசன்.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எய்தனூரில் இருக்கக்கூடிய அருள்மிகு ஆதிபுரீசுவரர் ஆலயத்துக்குச் சொந்தமாக சுமார் 20 ஏக்கர் நிலம் இருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். 30 ஆண்டுகளுக்கு மேலாக, இந்த ஆலயத்திற்குத் திருப்பணி செய்வதாக ஒருவர் கூறிக் கொண்டு அந்த ஆலயத்தில் எந்தப் பணியும் செய்யாமல் கோயிலைப் பாழாக்கியிருக்கிற நிலையில் அந்தப் பகுதி மக்கள் 'போட்டோ' கூட எடுத்து அரசுக்கு அனுப்பினார்கள். அதற்குப் பிறகு பரிசீலனை செய்தபொழுது ஆண்டுதோறும் கிட்டதட்ட ரூ. 12,000 வருமானம் வரக்கூடிய அந்த ஆலயத்தில் ரூ. 5,408 தான் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதை அதிகாரிகள் ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறார்கள். இதை மறுபடியும் விசாரித்து, வர வேண்டிய தொகையைத் திரும்பப் பெற ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இந்தத் திருக்கோயிலுக்குத் தக்காராக நியமிக்கப்பட்டவர் அதற்கு முன்பிருந்த அறங்காவலரிடத்திலிருந்து சரியான கணக்குகளைப் பெறவில்லையென்ற குற்றச்சாட்டின்படி நிர்வாக அதிகாரியின் வசம் அந்தக் கோவிலின் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள், தவறுகள் நடந்திருந்தால், அந்தத் தவறுகளுக்குரிய சான்றுகளை அரசுக்கு அளிப்பார்களானால், தீவிர விசாரணை

நடத்தி, குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவும், தண்டிக்கப்படவும், மேலும் கோயில் நிதிகள் பாதுகாக்கப்படவும் அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவரவர்களே, தென் ஆற்காடு மாவட்டத்திலே மட்டும் அல்லாமல், தமிழகத்திலே எல்லா மாவட்டங்களிலும் அறநிலையத் துறையின்கீழ் கொண்டு வரப்படாத பல கோயில்கள் ஊழலுக்கு, முறைகேடுகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்ற நிலை இருந்து வருகிறது. இந்தக் கோவில்கள் மட்டுமல்ல, மடங்கள், ஆதீனங்களுக்குச் சொந்தமான கோவில்கள் கூட அறநிலையத் துறையின் நேரடியான நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்படாத காரணத்தினால் அங்கே ஊழல்கள் நடைபெறுவதாக நம்பப்படுகிற காரணத்தினால் அத்தகைய மடங்கள், கோவில்கள், அதைப் போலவே தனியார்வசம் உள்ள கோவில்கள் அத்தனையையும் அறநிலையத் துறையின் சார்பாக எடுத்துக்கொள்ள தனித் திட்டம் ஒன்றை வகுக்க அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மூலக் கேள்விக்குத் தொடர்பான கேள்வி இது இல்லையென்றாலும் இன்றைக்கு அரசுப் பொறுப்பிலே எடுத்துக்கொள்ளாத ஆயிரக்கணக்கான கோவில்கள், சுமார் 25,000 கோவில்களுக்கு மேல் தமிழ்நாட்டில் இருப்பதாக அறிய வருகிறது. அத்தகைய அறநிலையங்களை எல்லாம் அரசு எடுத்துக்கொள்ள முயற்சி செய்கிறபொழுது சட்டச் சிக்கல்கள், சட்டக் குறுக்கீடுகள், சட்டத் தடைகள் ஏற்படுகின்றன. அவைகளையெல்லாம் பரிசீலித்துத்தான் அப்படிப்பட்ட முடிவை அரசு மேற்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை ரக்கசாமி : தென் ஆற்காடு மாவட்டத்திற்கு அறநிலையத் துறை ஆலோசனைக் குழு அறிவிக்கப்பட்டதா ? அந்தப் பட்டியல் அறிவிக்கப்பட்டதா ? ஆமென்றால், எந்த அடிப்படையிலே அறிவிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆலோசனைக் குழு அநேகமாக மாநிலத்தில் எல்லா அசிஸ்டெண்ட் கமிஷனர்களுக்கும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றிய விவரங்கள் தேவையானால் தனிக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்துத் தர இயலும்.

திரு. சி. கோவிந்தராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட ஆலயத்திற்குச் சொந்தமான அந்த 20 ஏக்கர் நிலங்களை நிர்வாக அதிகாரி வந்தபிறகு, குத்தகைக்கு விடுவதற்கு முன்பணம் கோரியதும், குத்தகைக்கு முன்கூட்டியே பணம் வாங்குகின்ற நிலை இருந்ததையும் அமைச்சருடைய கவனத்திற்குக்



கொண்டு வந்தேன். அது சரியல்ல என்றும் சுட்டிக்காட்டினேன். அதைக் கைவிட, வேண்டிய உத்தரவிட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோள் மீது அப்போதே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஏழை விவசாயிகளிடம், இயலாதவர்களிடம் முன்பணம் பெறாமல் கொடுக்கப்படலாமா என்பதைப் பரிசீலிக்கும்படி ஆணையிடப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் ஒரு விளக்கத்தையும் தரவேண்டும். முன் பணம் பெற்றுக் கொண்ட பிறகும் பாக்கியைத் தர மறுக்கிறார்கள். முன்பணம் பெறாமல் கொடுத்தால் ஆலயத்திற்கு வரவேண்டிய பணம் எப்படி வரும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள்தான் பொறுப்பேற்கவேண்டி இருக்கும்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல கோயில் நிலங்கள் பல விவசாயிகளுக்குக் குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. எந்த அடிப்படையில் விடப்பட்டிருக்கிறது. இதற்கு காலவரம்பு ஏதாவது இருக்கிறதா ? பெரிய நிலச்சுவான்தாரர்கள் கோவில் நிலங்களை அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். குத்தகையும் சரிவர கொடுப்பதில்லை? 'Cultivating Tenants Protection Act.' என்ற சட்டத்தில் ஒளிந்து கொண்டு இருக்கிறார்கள். சட்டங்களை திருத்தி அந்த நிலங்களை ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியும் மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லை என்றாலும், அப்படிப்பட்ட ஆலய நிலங்களை ஏழை விவசாயிகள் பயன் பெறுகிற அளவுக்கு மிகப் புதுமையான சிறந்த திட்டங்களை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய நிதி நிலை அறிக்கையிலே அறிவிக்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, சில அறநிலையங்களிலே அறங்காவலர்களுக்கு இடையில் அல்லது அறங்காவலர்கள் பூசாரிகளுக்கிடையில் தகராறு ஏற்பட்டு கோர்ட்டு வரை சென்று அங்கே நடைபெறவேண்டிய பூசைகள் சரிவர நடைபெறாத காரணத்தினால், அந்த ஊர்களுக்கு மிக ஆபத்து ஏற்படுகிறது என்ற புகார் இருக்கிறது என்பதையும், அதை நீக்க அரசாங்கம் முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன். சில கிராமங்களிலே சொல்லுகிறார்கள் இதன் மூலம் பேய், பிசாசுகளினால் ஊருக்கு ஆபத்து என்று சொல்லுகிறார்கள். அதை நீக்க அரசு நடவடிக்கை எடுக்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, பொதுவாக அறநிலையம் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினையையும் வழக்கு மன்றங்களுக்கு எடுத்துச் செல்லாமல், பேசித் தீர்ப்பதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று அறநிலையத் துறைக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சாதிக்பாட்சா அவர்கள் குறிப்பிடுவது போல, குறிப்பாக எந்த ஆலயம் என்று சொன்னால், அந்த ஆலயத்தைப் பற்றிய விவகாரங்களைப்பற்றி உடனடியாகப் பேசித் தீர்ப்பதற்கு அறநிலையத் துறை அதிகாரிகளுக்கு உத்தரவுகள் வழங்கப்படும்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இந்தக் கோவில்களுக்கு ஆனறையதத்தினம் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களை குடும்பங்களுக்கு உச்சவரம்பு கேட்டிருப்பதைப்போல, கோவிலுக்கும் உச்சவரம்பு கேட்டுவிட்டு, மீதி நிலங்களை ஏழைகளுக்கும், அரிசனங்களுக்கும் சாகுபடி பட்டா வழங்க அரசு ஏதேனும் உத்தேசித்துள்ளதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே' இதைத்தான நான முன்னாலேயே குறிப்பிட்டிருக்கிறேன். இது கொள்கைப் பிரச்சினை. அது பற்றிய முடிவுகள் அறிவிக்கப்பட வேண்டிய நேரத்தில் அறிவிக்கப்படும்.

## தேரழந்தூரில் கம்பர் நினைவாலயம்.

*வினா எண். 26—திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயவரம் வட்டம் தேரழந்தூரில் கவிச்சக்கரவர்த்தி கம்பர் வாழ்ந்த இடத்தில் நினைவாலயம் அமைக்க முன்னாள் ஆளுநர் மேதகு பிரகாசா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு இன்னும் அமைக்கப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்த இடத்தில் நினைவாலயம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—

(அ) ஆம்.

(ஆ) இது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. இரா. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கவிச்சக்கரவர்த்தி கம்பர் அவர்கள், குத்தாலம் தொகுதியில் உள்ள தேரழந்தூரில் வாழ்ந்தார்கள். எனவே அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்க தமிழக முன்னாள் கவர்னர் பிரகாசா அவர்கள் 1954ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதி



அடிக்கல் நாட்டி இருக்கிறார்கள். இந்தக் கல் இன்னும் அப்படியே இருக்கிறது. இந்த அரசு கம்பருக்கு நினைவுச் சின்னம் அமைக்க முயற்சி எடுப்பதாகத் தெரிகிறது. அந்த நினைவுச் சின்னத்தை தேரழந்தூரில் அமைக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, 1954ஆம் ஆண்டிலே நாட்டப்பட்ட கல், அரசின் சார்பிலே நாட்டப்படவில்லை. கம்பன் கழகம் என்ற ஒரு தனி அமைப்பின் மூலம் அந்த விழா நடைபெற்றிருக்கிறது. அதற்குப் பிறகு எந்த முயற்சியும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. பொருளாதாரக் கஷ்டத்தின் காரணமாகத்தான் நிறுத்தப்பட்டதாகத் தெரிகிறது. மீண்டும் இப்போது அவர்கள் நிதி வசூலில் ஈட்டுபட்டிருக்கிறார்கள் என்றும் தெரிய வருகிறது. கம்பன் கழகத்திடம் இருந்து அரசுக்கு எந்தவிதமான வேண்டுகோளும் வரவில்லை. அப்படி வேண்டுகோள் வந்தால் அரசு பரிசீலிக்கும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் வட்டத்தில் தேரழந்தூரில் கம்பர் பிறந்ததாக சொல்லப்படும் அந்தப் பகுதியை அரசாங்கமே மேற்கொண்டு ஒரு நினைவாலயம் அமைத்தால் சிறப்பாக இருக்கும் என்ற அடிப்படையில், அதை உருவாக்கும் பொழுது, அந்தத் திட்டத்தின் மதிப்பீடு, அதில் என்னென்ன அடங்கும் என்பதனையும் அதை எப்படி அரசு செயல்படுத்த முன்வருகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன். ஒருதனிப்பட்ட நிறுவனம் கம்பன் கழகம் என்ற அமைப்பின் மூலம் ஆண்டு தோறும் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அதை அரசாங்கமே ஏற்று, கம்பர் விழாவை ஆண்டு தோறும், கம்பன் பிறந்த ஊரான தேரழந்தூரில் சிறப்பாக நடத்த ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9—30]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கம்பன் மீது இவ்வளவு கருணையோடும், அக்கறையோடும், அனுதாபத்தோடும் விழாக்களை நடத்தவேண்டும் என்று தெரிவிக்கிறபோது அந்தப் பகுதியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் அதைப் பற்றிய கருத்துக்களை அரசுக்குத் தெரிவிப்பார்களானால், அரசு அதை நிச்சயம் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. பொ. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கம்பன் தேரெழுந்தூரில் பிறந்தார் என்றாலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நாட்டரசன்கோட்டையில் அவர் அடக்கம் செய்யப்பட்டு இருக்கிறார். ஆகவே, அங்கேயும் நினைவுச் சின்னம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

[1979 பிப்ரவரி 13

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, கம்பன் பிறந்ததாக சொல்லப்படுகிற தேரெழுந்தூர் பற்றிய கேள்வி இது. அடக்கம் செய்த இடத்தைப் பற்றிய கேள்வி அல்ல. அதற்கு தனிக்கேள்வி போட்டால், பிறந்த இடத்தில் நினைவாலயமா, அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நினைவாலயமா என்பதைப் பற்றி சொல்ல முடியும்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கம்பன் அவர்கள் மீது அமைச்சர் அவர்கள் தன் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட கம்பனைப் பற்றி குறிப்பிடுகிறபோது, அவர்களுடைய கவிதை நயம், அவர்களுடைய தமிழ்ப்பற்று ஆகியவற்றை மிகவும் பாராட்டி இருக்கிறார். என்னை விட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவற்றை நன்றாக அறிவார்கள். 'கம்ப ரசத்தை'க்கூட பேரறிஞர் அண்ணா அவர்கள் கம்ப ராமாயணத்தைப் படித்துவிட்டுத்தான் உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே, அண்ணா அவர்கள் கம்ப ரசத்தை எழுதுவதற்கு உறுதுணையாக இருந்த அந்த கம்பர் பிறந்த இடத்திலே நினைவாலயம் ஏற்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன : தலைவரவர்களே, கம்பருக்கு நினைவாலயம் என்ற பெயரிலே இல்லாமல், சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கம்பருக்கும், வள்ளலாருக்கும் நிலையம் அமைக்கலாம் என்று சொல்லியபோது, அதைப் பற்றி எதிர்க்கட்சிகளிடமிருந்து சில கருத்துக்கள் வந்தன. அந்தக் கருத்தை ஒட்டித்தான் இந்தக் கருத்தை தெரிவித்தேன். இப்போது அவர்கள் கருத்து மாறியிருக்கிறது என்றால் வரவேற்கக்கூடியது. நிச்சயம் இதை அரசு பரிசீலிக்கும்.

திரு. ஒ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, கம்பன் பிறந்ததாகச் சொல்லப்படுகிற இடம் என்று சந்தேகமாகச் சொன்னார்கள். கம்பருக்கு நிச்சயமாக சமாதி நாட்டரசன் கோட்டையில் இருக்கிறது. அதை தனியார் ஒருவர் நடத்திக் கொண்டு வருகிறார். அதை அரசாங்கமே எடுத்து நினைவாலயம் அமைத்து, ஆண்டுதோறும் விழா கொண்டாட முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே இதற்குத்தான நான் முன்னாலே பதில் சொல்லியிருக்கிறேன். மொத்தமாக தமிழ்நாட்டிற்கு பெருமைதேடித்தந்த கம்பர் போன்ற பெரும் கவிஞர்களுக்கு தமிழக அரசு எந்த வகையில் நினைவாலயங்களை ஏற்படுத்தி தமிழ் மக்களிடத்தில் தமிழ் உணர்வை பரப்ப முடியும் என்பதைப் பற்றி அரசு தீவிரமாகவும் உண்மையான உணர்வோடும் பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1979 பிப்ரவரி 13]

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, வான்மீகி இராமாயணத்தை மொழிபெயர்த்தபோது கம்பர் வடமொழி வார்த்தைகள் எங்குமே வராமல் தமிழ் வார்த்தைகளையே கையாண்டு இருக்கிறார். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், லட்சுமணன் என்பதை லக்குமணன் என்றும், ராமர் என்பதை ராமன் என்றும், சீதா என்பதை சீதை என்றும் தமிழில் குறிப்பிட்டு இருக்கிறார். அதைப்போலவே நம்முடைய அரசும் எல்லாத் துறைகளிலும் தூய தமிழ் சொற்களையே, வடமொழி கலப்பற்ற முறையில் பயன்படுத்த ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இக்கேள்வி மூலக் கேள்வியை ஒட்டியது இல்லை.

திரு. துரை முருகன் : பேரவைத் தலைவரவர்களே, கம்பர் தேரெழுந்தூரில் பிறந்தார் என்றும், திருவெண்ணைநல்லூரில் வளர்ந்தார், நாட்டரசன்கோட்டையில் இறந்தார் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். கம்பன் அழகான பெண்கள் உள்ள வடாற்காடு மாவட்டத்தில் பெண் எடுத்தார் என்றும் வரலாறு இருக்கிறது. ஆகவே, அவரது மாமியார் வீடாகிய வடாற்காடு மாவட்டத்தில் விழா நடத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கம்பனை கேலிக்குரிய ஒரு கேள்வியாக ஆக்காதீர்கள். அவருக்கு மரியாதை தரத்தக்க வகையில் கேள்விகள் கேட்பது நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த வினா எண். 27

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, இது ஒரு முக்கியமான கேள்வி. எனக்கு ஒரு துணைக் கேள்விக்கு வாய்ப்பு கொடுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, நான் நீண்ட நேரமாக ஒரு துணைக்கேள்வி கேட்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து இருவரும் உட்காருங்கள். நான் அடுத்த கேள்விக்குப் போய்விட்டேன். ஏற்கெனவே பல துணை வினாக்களை அந்தக் கேள்விக்கு அனுமதித்துவிட்டேன். அடுத்த கேள்வியில் நீங்கள் துணைக்கேள்வி கேட்கலாம்.

பட்டதாரி ஆசிரியர்கள்.

*வினா எண். 27—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் 10 (A) 1 விதியின்கீழ் பணியில் அமர்த்தப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(ஆ) ஐந்து லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு என்ற திட்டத்தின்கீழ் பணியில் சேர்க்கப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 576.

(ஆ) 900.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் 10 (எ) (1) விதியின் கீழ் பணியில் அமர்த்தப்பட்டவர்கள் 576 பேர்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதைப் போல 5 லட்சம் பேர்களுக்கு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் 900 பேர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இந்த 576 பேர்கள் தவிர மீதம் எத்தனை பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள்? 5 லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் திட்டத்தின்கீழ் அனைவருக்கும் எப்போது வேலை கொடுக்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்த கேள்வியே வேறு. அதற்கு நான்தான் அமைச்சர் என்றாலும் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, இந்த பட்டதாரி ஆசிரியர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக பணியில் அமர்த்த தொடர் நடவடிக்கை எடுக்கப்படுமா ? பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்தும் தேர்வில் அவர்கள் கலந்துகொள்ளலாம் என்று இருக்கிறது. அதில் பணியில் இருக்கும் ஆசிரியர்களை கட்டாயமாக பணியில் நியமிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அவர்களை பணியில் அமர்த்த வேண்டுமென்ற முறையில்தான் அரசுத் துறையில் பணியில் இருக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்கென்று தனியாகத் தேர்வாணைக் குழு மூலம் தேர்வு நடத்த அரசு ஏற்பாடு செய்துள்ளது.



திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறிய பதிலில் 576, 900 என்று குறிப்பிட்டார்கள். இப்போது பட்டதாரி ஆசிரியர்கள் பள்ளிகளில் தற்காலிகமாக நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் சீனியாரிட்டி அடிப்படையில் வருட வாரியாக அதாவது 1970-ல் பதிவு செய்தவர்களுக்கு முதலிலும் 1971-ல் பதிவு செய்தவர்களுக்கு அதற்குப் பிறகும் என்ற முறையில் எடுக்கப்படுகிறார்களா ? அல்லது இடையில், இருந்து எடுக்கப்படுகிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசாங்கம் அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிப்பதற்கு தேர்வாணைக் கழகம் மூலம்தான் எடுக்க வேண்டுமென்பது இப்போது இருக்கிற நடைமுறை.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, 10 (எ) (1) விதியின்கீழ் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை ஆண்டுக்காலம் தற்காலிகமாக இருக்கிறார்கள் ? இந்த அவல நிலையைப் போக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, 11—9—1973 முதல் 5 இலட்சம் பேர்களுக்கு வேலை அளிக்கும் திட்டத்தின் கீழ் பல்வேறு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் 10 (எ) (1) முறையின்படி நியமிக்கப்பட்டு, அவர்களை திரும்பவும் நீக்கம் செய்து, இப்போது வேலை இல்லாமல் பல ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள ஜி. ஓ. 2683, தேதி 30—12—1977 வகை செய்கிறது என்று கருதுகிறேன். அந்த அடிப்படையில் அவர்களுக்குத் தனியாக பப்ளிக் சர்வீஸ் கமிஷன் டெஸ்ட் நடத்தி, அவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ? அந்த டெஸ்ட் எப்போது நடத்தப்படும் ? எப்போது வேலை கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே 31—3—1977 அன்று ஓராண்டு தற்காலிகமாகத் தொடர்ந்து அல்லது விட்டுவிட்டு பணி செய்திருந்து முடித்திருந்தவர்களும் அதற்கு முன்னால் ஓராண்டு காலம் பணி செய்து முடித்திருந்து 1—4—74குப் பின்னால் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களும் தனியாக நடத்தப்படும் தேர்வில் கலந்து கொள்ளலாம். அவர்கள் தேர்வாணைக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு, வயது வரம்பு தளர்த்தப்பட வேண்டியிருந்தால் அதை தளர்த்திக் கொடுக்கவும் அரசு தயாராக இருக்கிறது. இந்தத் தனித் தேர்வு நடத்துவது

[1979 பிப்ரவரி 13

பற்றி தேர்வாணைக் கழகம் சில தெளிவுரைகளைக் கேட்டிருக்கிறது. அந்தத் தெளிவுரைகளை அரசு விரைவில் அனுப்ப இருக்கிறது. தேர்வும் விரைவில் நடைபெற இருக்கிறது.

[முற்பகல் 9-40].

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, படித்து வேலையில்லாமல் இருக்கின்ற பட்டதாரிகள் பற்றித் தெரிந்து கொள்ளத் தனிக் கேள்வி போட வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். படித்துவிட்டு, 6, 7 ஆண்டுகளுக்கு மேலாக பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதற்கிடையே 10 (ஏ) (1) என்ற நிலையில் வேலை பார்ப்பவர்களுக்கும் வேலையினை இழந்து விடுகின்ற ஆபத்து இருக்கின்றது. ஆகவே இதற்குத் தனியாக சர்வீஸ் கமிஷன் மூலம் எடுப்பதற்கு பதிலாக சீனியாரிட்டி அடிப்படையிலே தேர்வு நடத்தி அந்த அடிப்படையிலே அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இப்போது 10 (ஏ) (1) விதியின் கீழ் வேலை செய்பவர்களுக்கு என்று ஒரு சிறப்பு தேர்வினை நடத்த வேண்டுமென்ற முயற்சியைப்பற்றி எடுத்துக் கூறி இருக்கிறேன். ஆனாலும் 10 (எ) (1) ஆசிரியர்களையும் நியமனம் செய்ய வேண்டிய நிலை நிர்வாகத்தினருக்கு இருக்கத்தான் செய்கிறது. சில வேளைகளில் இந்த மாதிரி தற்காலிக ஆசிரியர்களையும் நியமனம் செய்துதான் ஆக வேண்டி இருக்கிறது.

திரு. கே. பண்ணை சேதுராம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த 10 (எ) (1) என்ற நிலையில் பள்ளிகளில் ஆசிரியர்களை அமர்த்தும்போது சில தவறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தத் தவறுகளை நீக்குகின்ற வகையில் அரசே நியமனம் செய்வதற்கான உரிமையை எடுத்துக்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அப்படி நியமனத்திலே தவறு நேர்ந்திருக்கிறது என்று சுட்டிக்காட்டப்படுமேயானால் அவைகளை நீக்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்கள்.

*வினா எண். 28—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா: பள்ளிகளில் புதிய கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுவதன் விளைவாகக் கல்லூரி ஆசிரியர்கள் வேலை இழக்கும் நிலைமை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுவது உண்மையா?



1979 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உண்மை அல்ல.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, பள்ளிகளில் இப்போது உருவாக்கப்பட்டிருக்கின்ற புதிய திட்டத்தின் அடிப்படையில் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற பேராசிரியர்கள் ஓரளவு வேலை இழப்பார்கள் என்ற அச்ச உணர்வு இருக்கின்ற காரணத்தால் அதைப் போக்குவதற்கு அரசு ஏதேனும் திட்டம் வகுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அப்படி ஒரு அச்சம் இருந்தது உண்மைதான். அதைப் போக்குகின்ற வகையிலேதான் சென்ற ஆண்டு இரண்டு தடவை சட்டசபையிலே அறிக்கைகள் சமர்ப்பித்து அரசு உறுதிமொழியை அவர்களுக்குத் தந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, திருச்சி ஹோலி க்ராஸ் காலேஜிலே சர்ப்ளஸ் ஆசிரியர்கள் என்ற நிலை வரக்கூடும் என்று எதிர்பார்த்து முன்கூட்டியே பல ஆசிரியர்களையும், ஆசிரியைகளையும் பல காரணங்கள் கூறி வேலையிலிருந்து நிறுத்தி இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட கேசிலே டிப்பார்ட்மென்ட் தலையிட்டு என்கொயரி பண்ணி திரு. வாசன் என்பவரை நிறுத்தியது தவறு என்று சொல்லி அவரை ரீஇன்ஸ்டேட் பண்ண வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டும் அந்த ஹோலி க்ராஸ் காலேஜ் நிர்வாகம் ரீஇன்ஸ்டேட் பண்ணுவதற்கு மறுத்து விட்டதாகத் தெரிகிறது. இந்த நடவடிக்கை பற்றி அரசாங்கத்தினுடைய கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே இந்த உத்தரவினை அமல்படுத்துகின்ற வகையில் அந்தப் பள்ளிக்கு அளிக்கப்படுகின்ற கிராண்டை நிறுத்துவதற்கோ அல்லது வேறு ஏதாவது வகையிலோ நடவடிக்கை எடுத்து ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அரசு போட்ட அந்த உத்தரவை அமல் நடத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: தலைவரவர்களே, இப்படிக் கல்லூரி ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்படுவதைத் தவிர்க்க மாணவர்கள், ஆசிரியர்கள் விகிதத்தை மாற்றுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அவர்களுக்கு பணி நீக்கம் தந்து விட்டதற்குப் பிறகு அவர்களுடைய பணியை எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

என்கிற வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்ற யோசனைகள் பல அரசினுடைய ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, புகுமுக வகுப்பு நீக்கப்படுகின்ற போது கிட்டத்தட்ட 70 சதவீதம் மாணவர்கள் கல்லூரிக்கு போக முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படி இருக்கும் போது கல்லூரி ஆசிரியர்களுக்கு வேலை போகக் கூடிய நிலை ஏற்படாது என்று அமைச்சரவர்கள் கூறுவது சந்தேகத்திற் குரியதாகத்தான் இருக்கிறது. அதோடு வருகின்ற 19-ஆம் தேதி கல்லூரி ஆசிரியர்கள் தேர்வினைப் புறக்கணிக்கக் கூடிய அளவுக்கு ஏதோ சில இயக்கங்கள் நடத்தப் போவதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் தயவு செய்து கேள்வியைச் சுருக்கமாகப் போட வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே இந்த நிலையைப் போக்குகின்ற வகையில் ஜூனியர் காலேஜ் என்று ஆக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : புகுமுக வகுப்பை எடுப்பதால் ஆசிரியர்கள் வேலை இழப்பார்கள் என்ற அந்தக் கருத்து எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆகவே, வேலையை இழப்பார்கள் என்ற நிலையையொட்டித்தான் அந்த உறுதிமொழியை நாங்கள் தந்திருக்கிறோம். ஆகவே அமைச்சரைப்பற்றியோ அல்லது யாரைப் பற்றியுமோ சந்தேகப்பட இந்த இடத்தில் காரணம் இல்லை. ஜூனியர் காலேஜ் என்பது நாம் இப்போது எடுத்துக்கொண்டிருக்கிற ஒரு மிகப் பெரிய மாறுதலுக்கு முரணானது என்பதை மட்டும் உறுப்பினர் அவர்கட்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாம் இப்போது கொண்டு வந்திருக்கிற இந்தத் திட்டம், அகில இந்திய முழுவதிலும் இருக்கிற எல்லா மாநிலங்களிலும் கொண்டு வர வேண்டும் என்ற கருத்தினை இன்றைக்கு எல்லோரும் பேசிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், நாம் நம்முடைய முயற்சிகளையெல்லாம் ஒருமுகப்படுத்தி இந்தத் திட்டம் வெற்றி பெறச் செய்யவேண்டுமே தவிர இதிலிருந்து பின்வாங்கி, கல்வித் துறையில் உள்ள பல்வேறு நிபுணர்கள், குழுவினர் யோசனையிலிருந்து மாறுபட்டு புதியதொரு ஏற்பாட்டை ஏற்படுத்துவது என்பது கல்விக்கு, கல்வித் துறைக்கு ஆபத்தை விளைவிக்கும்.





திருச்சியில் உள்ள தேவர் ஹாலைப் புதுப்பித்தல்.

*வினா எண். 29—திரு சி. மாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சியில் உள்ள தேவர் ஹாலைப் புதுப்பிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : இதுபற்றிய திட்டம் ஒன்று திருச்சி நகராட்சியின் பரிசீலனையில் இருக்கிறது. இது இன்னும் அரசுக்கு வரவில்லை.

மதுரையில் பாதாளப்பாதை அமைப்பு.

*வினா எண் 30—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை பேருந்து நிலையம் அருகே பாதாளப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டம் ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்தி திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்போகும் ஒன்றாகும்.

திரு. என். கிட்டப்பா: இந்தத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? இதைப்போல் மதுரை நகராட்சி மதுரை மாநகராட்சியாக்கப்பட்ட பிறகு அங்கு ஏற்பட்டிருக்கும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக இன்னும் எவ்வளவு இடங்களில் நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பெடுத்து இம்மாதிரியான பாலங்களை அமைக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இந்தத் திட்டமே கூட ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வருகிறது. மதிப்பீட்டுத் தொகை ரூ. 42 லட்சம். மற்றவை பற்றி தனியாகப் பரிசீலிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா: மதுரைப் பெருநகர் திட்டத்திற்கு உலக வங்கியில் உதவி கிடைப்பதாகத் தெரிகிறது. ஆமெனில் அந்தத் தொகை எவ்வளவு? இந்தப் பாலத்திற்கு அந்தத் தொகை பயன்படுத்தப்பட்டதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மொத்தம் இதையொட்டி ரூ. 144 லட்சம் செலவிடப்பட்டிருக்கிறது, உலக வங்கியின் உதவியோடு. மற்றவை பற்றிய விவரங்கள் இல்லை.

## பரப்பலாறு அணைத் திட்டம்.

*வினா எண் 31—திரு. அ. ப. பழனியப்பன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டம், பழனி தாலுகாவில் பரப்பலாறு அணைத் திட்டப்பணிகளுக்கான செலவு எவ்வளவு?

(ஆ) அதன் மூலம் இப்பொழுது எத்தனை ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி அளிக்கப்படுகிறது?

(இ) அந்தத் திட்டத்தைப் புதுப்பிக்க அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) பரப்பலாறு அணைத் திட்டப்பணிகளுக்கு இதுவரை ரூ. 1,01,00,137·44 செலவிடப்பட்டுள்ளது.

(ஆ) இத்திட்டத்தினால் மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்ட பழைய ஆயக்கட்டு 1,323 ஏக்கர் நிலமும், புதிய ஆயக்கட்டு 1,000 ஏக்கர் நிலமும், ஆக மொத்தம் 2,323 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளன.

(இ) இல்லை.

## சித்தப்பட்டினம் கால்வாய் திட்டம்.

*வினா எண் 32—திரு. கோ. ரகோத்தமன்: மாண்புமிகு வேளாண்மைபாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசையூர் தொகுதியில் சித்தப்பட்டினம் கால்வாய்த் திட்டம் எப்போது நிறைவேறும்?

(ஆ) அதன் மூலம் எத்தனை ஏரிகளுக்கு நீர்ப்பாசனம் அளிக்கப்படும்?

(இ) இதனால் எத்தனை ஏக்கர் பயன் அடையும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) திட்டம் மேற்பார்வைப் பொறியாளரின் ஆய்விலுள்ளது. இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்படுமா என்பதனை தற்சமயம் கூற இயலாது.

(ஆ) & (இ): இத்திட்டத்தின் மூலம் 12 ஏரிகளுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கப்படும் எனவும் 871 ஏக்கர் நிலங்கள் பயனடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.





திரு. கோ. ரகோத்தமன்: இத்திட்டத்தின் மூலம் இவ்வளவு ஏக்கர் பயன்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுமாதிரி எப்போது எடுத்து நடத்திக்கொடுப்பார்கள்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: கூடிய விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்.

## EXPORT OF BRICKS, ETC.

*Q. No. 33 THIRU S. M. VASAN: Will the Hon. the Minister for Rural Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to export bricks, tiles and potteries manufactured at Government owned brick factories; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) அரசின் பரிசீலனையில் இவ்வித செயற்குறிப்பு எதுவும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சோ. அழகர்சாமி: இப்போது இந்தச் செங்கல் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகிற செங்கல் விலை ஆயிரம் செங்கலுக்கு ரூ. 100, ரூ. 150 என்று விலை அதிகரித்திருப்பது அரசுக்கு தெரியுமா? தனிப்பட்ட தொழிற்சாலைகளில் உற்பத்தியாகிற செங்கல்லானாலும் சரி அல்லது அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளில் உற்பத்தியாகக்கூடியதானாலும் சரி விலை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக வீடுகள் கட்டக்கூடிய மத்தியதர வர்க்கத்தினர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே இதை ஒழுங்குப்படுத்தி செங்கலின் விலையைக் கட்டுப்படுத்த அரசு ஏதாவது முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை அரசு பரிசீலிக்கும்.

[முற்பகல் 9-50].

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்: செங்கலின் விலை அளவுக்கு மீறிப்போய்க் கொண்டிருப்பதால், செங்கல் உற்பத்தி செய்பவர்களைப் போய் அணுகிக் கேட்கும்போது, தங்களுக்கு போதிய அளவு கரி கிடைக்கவில்லை. முறையான வகையில் தங்களுக்கு கரி கிடைப்பதற்கு அரசாங்கம் வழி செய்து கொடுத்தால் விலையைக் குறைக்கலாம், என்று கூறுகிறார்கள். அரசாங்கம் இதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா? பேரூராட்சிகளில்

செங்கல் உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையிலும், கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு குறைவான விலையில் செங்கற்கள் கிடைப்பதற்கும் அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, செங்கற்களை தயாரிப்பதற்குத் தேவைப்படும் கரியை அதிக விலை கொடுத்து வாங்குவதாக குறிப்பிடுகிறார்கள். விலை மட்டும் முக்கியமில்லை. பற்றாக்குறை தான் முக்கியமாக இருக்கிறது. அதைப் பெற்றுத் தருவதற்கு எந்த எந்த வகையில் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமோ அந்த முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சென்னை நகரத்தைப் பொறுத்த அளவில் செங்கல் 1,500 கற்களுக்கு 450 ரூபாய், 430 ரூபாய் என்று விற்றுக்கொண்டு இருக்கிறது. ஏற்கனவே இங்கு கேள்விகளுக்கு பதில்களை அச்சிடப்பட்டு தரப்பட்டிருக்கின்ற புத்தகத்தில் அரசின் சார்பில் தயாரிக்கப்படும் செங்கலுக்கு 150 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை விலை இருந்து வருவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அரசினுடைய நிறுவனங்களினுடைய சார்பில் கேட்கப்படுகின்ற ஆர்டர்களுக்கு 100 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை என்ற விலையில் சப்ளை செய்ய அரசு முன் வருமா? அதே நேரத்தில் தனியாரிடத்தில் உள்ள செங்கல்களுக்கு விலையை கட்டுப்படுத்துகின்ற சந்தர்ப்பத்தை இந்த அரசு உருவாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது ; தலைவர் அவர்களே, திருமழிசையிலுள்ள இயந்திர செங்கற் தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு 35 ஆயிரம் செங்கற்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. முக்கியமாக வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் போன்றவைகள் வாங்குகின்றன. இது தவிர பொதுமக்களுக்கும் அவர்கள் வழங்குகிறார்கள். நம்முடைய தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுகின்ற செங்கற்களை விற்பனை செய்கின்ற போது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்ற விலையில் விற்று வருகிறோம். தனிப்பட்டவர்கள் என்னென்ன விலையில் விற்று வருகிறார்கள் என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இப்பொழுது தங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இவற்றையும் பரிசீலித்து நியாயமான விலையில் பொது மக்களுக்கு செங்கற்கள் கிடைக்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : அரசாங்கத்திற்கு சொந்தமான செங்கற் தொழிற் சாலைகள் எத்தனை இருக்கின்றன? அவை எங்கெங்கு உள்ளன? அவைகள் எல்லாம் லாபத்தில் நடைபெறுகின்றனவா அல்லது நஷ்டத்தில் நடைபெறுகின்றனவா? மாவட்ட அளவிலும் இப்படிப்பட்ட தொழிற் சாலைகளை அமைக்கும் திட்டத்தை விஸ்தரிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?



மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, திருமழிசையில் உள்ள இயந்திர செங்கல் தொழிற்சாலை ஒன்றும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பில் பொன்னேரி சமீபம் ஸதர்ன் பிரிக்ஸ் வொர்க்ஸ் என்ற செங்கற் தொழிற்சாலை நிறுவனமும் உள்ளது. திருமழிசையிலுள்ள செங்கற் தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு 35 ஆயிரம் கற்கள் தான் உற்பத்தியாகின்றன. ஸதர்ன் பிரிக்ஸ் வொர்க்ஸில் நாள் ஒன்றுக்கு 80 ஆயிரம் செங்கற்களும், 15 ஆயிரம் ஓடுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. மாவட்ட அளவில் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இப்போது இயங்கி வருகின்ற தொழிற்சாலைகளில் திருமழிசையில் உள்ள தொழிற்சாலை நஷ்டத்தில் தான் இயங்கி வருகிறது. அங்கே நாள் ஒன்றுக்கு 75 ஆயிரம் உற்பத்தி செய்தால் தான் ப்ரேக்கிங் ஈவன் பாயிண்ட்—என்று சொல்வார்களே, அதாவது நட்டத்தைத் தவிர்க்கும் இலக்கை அடைய முடியும். இதை இன்னும் வெற்றிகரமாக இயங்கச் செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது வெற்றிகரமாக நடைபெற்ற பின்னால் மற்ற பகுதிகளுக்கும் விஸ்தரிக்கும் திட்டத்தைப பற்றி ஆலோசனை செய்யலாம். இது தவிர தனிப்பட்ட நபர்கள் யாராவது மற்ற இடங்களில் நடத்துவதற்கு கடன் உதவி கோரினால், அதைப் பெற்று தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பட்டு வளர்ப்பு அபிவிருத்தி கழகம்.

* வினா எண். 34 திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அரூர் வட்டத்தில் பட்டு வளர்ப்பு அபிவிருத்திக் கழகம் அமைக்கும் செயற் குறிப்பு அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : அரூர் வட்டத்தில் பட்டு வளர்ப்பு அபிவிருத்திக் கழகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

திரு. எம். அண்ணாமலை ; தலைவர் அவர்களே, அரூர் ஊத்தங்கரைப் பகுதியில் தரமான பட்டு உற்பத்தி செயயப் பட்டு வருகிறது. இதை பயன்படுத்தி அரூர் பகுதியில் பட்டு அபிவிருத்தி கழகம் ஒன்று அமைக்க வேண்டும். மேலும் இதற்

கான மார்க்கட் விலையோ பெங்களூர், ராம்நகர், மார்க்
கட்டில் சேலம் தர்மபுரி பட்டு தரம் மிக சிறந்தது
என்று அங்கு 28 ரூபாய், 35 ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது.
ஆனால், ஓசூர் கிருஷ்ணகிரி பகுதியில் 18 ரூபாய் முதல் 25
ரூபாய் வரைதான கொடுக்கப்படுகிறது. ஆகவே தரமான
வகையில் உற்பத்தி செய்யப்படுகின்ற பட்டுக்கு சரியான விலை
கிடைக்கவில்லை என்ற அதிருப்தி அங்குள்ள விவசாயிகள்
மத்தியில் இருக்கிறது. ஆகவே இதை போக்க சீரான விலை
கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** தலைவர்
அவர்களே, அரூர் வட்டம் தருமபுரி மாவட்டத்திற்குள்
உள்ளது. தருமபுரி மாவட்ட அபிவிருத்திக் குழு பல்வேறு
திட்டங்களுக்கு பட்டு வளர்ச்சிக்காக உதவி செய்து வருகின்றது.
பட்டு வளர்ச்சி அபிவிருத்தி தமிழகத்திலே வேகமாக
வளர்ந்து வருகின்ற ஒன்றாக இருக்கிறது. எனவே, ஒவ்வொரு
வட்டத்திற்கும் அபிவிருத்திக் கழகம் இருப்பது அவசியமில்லை.
நான் ஏற்கனவே இதற்கு விடை அளித்திருக்கிறேன. மற்றொன்று.
விலைப் பிரச்சனையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்போது
புதிதாக மாநில அளவில் கூட்டுறவு பட்டு சந்தை (state level
co-operative marketing federation) ஒன்று ஏற்படுத்தப்பட்டு இருக்
கிறோம் அதன் மூலமாக நம்முடைய மாநிலத்தில் தயாரிக்கப்
படுகின்ற இந்தப் பட்டுகளுக்கு நியாயமான, நல்ல விலை
கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது என்பதை
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுககு தெரிவித்துக் கொள்கிறேன.

## ரிசர்வ் டூட்டி டாக்டர்கள்.

* வினா என் 35—**திரு. வி. சே. கோதண்டராமன** —
மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) ஆஸ்பத்திரிகளில் ரிசர்வ் டூட்டி என்ற பெயராலே
எத்தனை டாக்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் மாவட்ட
வாரியாக ?

(ஆ) எத்தனை வருடம் சர்வீஸ்காரர்களை அப்படிப்
போடப்படுகிறது ?

**மாண்புமிகு திருச்சி ஆர். சௌந்திரராஜன் ;** இக்கேள்வி
சம்பந்தயான விவரங்கள் அடங்கிய அறிக்கை *ஒன்று அவையின்
முன் வைக்கப்பட்டுள்ளது.

---

*[605ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பெற்
றுள்ளது.]



**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஐயா, இந்த அறிக்கை
யிலே ரிசர்வ் டியூடி டாக்டர்களாக குறைந்த காலத்தில் பணி
யாற்றியவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று போடப்
பட்டிருக்கிறது. ஆனால், சில சமயங்களிலே பழிவாங்க வேண்டு
மென்பதற்காக, மாவட்டங்களிலே இருக்கக்கூடிய டீ. எம்.
ஓக்கள் 10 வருடங்கள், 12 வருடங்கள் பணியாற்றியிருக்கக்கூடிய
டாக்டர்கள்களைக்கூட இத்தகைய பணிகளுக்கு நியமிக்
கின்றார்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரி
யுமா ? அப்படியானால், இந்த விஷயத்திலே குறிப்பாக எத்
தனை வருடங்கள் பணியாற்றியவர்களை அதற்குப் போட
வேண்டும் என்பதை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அறிக்கை
அனுப்பப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன :**
பேரவைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப் பணியிடங்களு
பணியாற்றுவதற்கு ஒதுக்கப்படும் மருத்துவர்கள் எவ்வளவு
காலம் அதிலே தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்ற வரை
யறை எதுவும் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
சுட்டிக் காட்டுவதுபோல், . தவறுகள் எங்கே நடைபெறு
கின்றதோ அதைச் சுட்டிக் காட்டினால், தகுந்த நடவடிக்கை
எடுக்கப்படும்.

**திரு. ப. சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே,
இப்போது தமிழகத்திலே குடும்பநலத் திட்டம் தீவிரமாக
செயல்பட்டுக்கொண்டு வருகின்ற நேரம். இந்த நேரத்திலே
அரசு அலுவலர்கள்கூட பயன்படுத்தப்படுகின்றார்கள். அவர்
கள் மிகுந்த சிரமப்பட்டு, ஆட்களை அழைத்துக் கொண்டு
வருகின்ற நேரத்திலே போதிய மருத்துவர்கள் இல்லாத
காரணத்தினாலும், அப்படி வருகின்றவர்களுக்கு போதிய வசதி
களை ஏற்படுத்தித் தராத காரணத்தினாலும், அப்படி அழைத்து
வரப்படுகின்றவர்கள் திரும்பிச் செல்லவேண்டிய பல குறைகள்
ஏற்படுகின்றன. அந்தக் குறைகளைப் போக்க அதிகமான மருத்து
வர்களை அமைக்கும் திட்டம் இந்த அரசுக்கு உண்டா என்று
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** தலைவர்
அவர்களே, மூலக் கேள்வி ஒதுக்குப் பணியிடங்களுக்கு மருத்து
வர்கள் நியமிக்கப்படுவது பற்றியது ஆகும். மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் குடும்ப நலத்திட்டத்தைப் பற்றிக் கேட்டுக்
கொண்டிருக்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால், விளக்கமாக
பதில் சொல்ல இயலும்.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, இந்த ஒதுக்குப்
பணியிடங்களிலே உள்ள மருத்துவர்கள் சரியாக இயங்காத
காரணத்தாலும், மேற்பார்வை பார்ப்பவர்கள் அடிக்கடி
செல்லாத காரணத்தாலும் அடிக்கடி நமது அமைச்சர் அவர்

களே நேரில் சென்று, சில இடங்களில் கருவிகளை எடுத்துச் சென்றிருப்பதையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். அப்படியானால், மேற்பார்வை பார்ப்பவர்கள், அந்த அதிகாரிகள், சரியாக இல்லை என்று அர்த்தமா, அல்லது அமைச்சர் அவர்கள் இந்தப் பணியிலேயே நேரத்தைக் கடத்த நினைக்கின்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, சில இடங்களில் பணியாற்றுகின்றவர்கள் இருக்க வேண்டிய நேரத்தில் இல்லாமல் போய்விடுகின்றார்கள் என்ற குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் எழுதுவதால், இந்தக் குற்றச்சாட்டை வைத்துத்தான் நான் செல்கிறேனே தவிர, நானாக செல்வதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரங்களிலே இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகள் 10,12 வருஷங்களுக்கு முன்பு எப்படி இருந்ததோ அதே நிலையில்தான இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கின்றன. இன்றைய நிலையில் மிகமிக அதிகமாக அபிவிருத்தி செய்ய வேண்டி உள்ளது. நான் கடந்த வாரம் மதுரை, பெரிய ஆஸ்பத்திரியில் ஒரு வாரம் தங்க வேண்டியிருந்தது. அங்கே குளிப்பதற்குக்கூட தண்ணீர் கிடையாது. கக்கூசிலே வரக்கூடிய தண்ணீரை எடுத்துக் குளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இப்படிப்பட்ட நிலைமை அந்த மதுரை ஆஸ்பத்திரியிலே இருக்கிறது. அதை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10·00.]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. என்றாலும் இதைப் பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு அது பற்றி அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : டாக்டர்கள் பற்றாக்குறை காரணமாக—குறிப்பாக பெண் டாக்டர்கள்—நிறைய இடங்கள் காலியாக உள்ளனவா ? அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தனியாகக் கேள்விப் போட்டால் விவரமாகப் பதில் அளிக்க இயலும்.

திரு. மா. மணிமாறன் : ஒதுக்கப் பணியிடங்கள் பற்றிச் சொல்லுகிறபோது தஞ்சையில் 10 இடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஏற்கனவே தஞ்சை மாவட்



டத்தில் 16 மருத்துவமனைகளில் டாக்டர்கள் இல்லாமல் காலியாக இருக்கின்றன. ஒரிஜினலாக வேலை செய்யக் கூடிய இடத்திலேயே டாக்டர்கள் இல்லாத நிலையில் வெள்ள காலங்களில் கேஸ்களைப் பார்க்க மருத்துவர்கள் இல்லாத நிலை நாகை மருத்துவமனையில் இருந்தது..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து பொது விவாதத்தில் எல்லாவற்றையும் சொல்லுங்கள். கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. மா. மணிமாறன் : தஞ்சை மாவட்டத்தில் ஒதுக்கீட்டுப் பணிக்காக 10 இடங்கள் ஒதுக்கப்பட்டிருப்பது ஏற்கனவே 16 இடங்கள் காலியாக இருப்பது ஆக மொத்தம் 26 மருத்துவர்கள் தஞ்சைக்குத் தேவைப்படுகிறது. இந்த 26 மருத்துவர்களை உடனடியாக தஞ்சை மாவட்டத்தில் போட ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : எந்தெந்த இடங்களில் மருத்துவர்கள் இல்லை என்பதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : மருத்துவமனைகளில் சீர்கேடுகள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அது பல்வேறு துறைகளில் இன்று பிரதிபலிக்கிறது. மதுரை மாநகரத்தில் பெரிய மருத்துவமனையில் கடந்த டிசம்பர் மாதத்தில் பென்சிலின இன்ஜக்ஷன போடப்பட்டு பெரும் அதிகாரி ஒருவரே மரணம் அடைந்தார். இப்பேர்ப்பட்ட சீர்கேடுகளைப் போக்க சீரான சில திட்டங்களை அரசு உருவாக்குமா ? அப்படி இல்லாமல் அமைச்சர் மாறுவேடத்தில் மருத்துவ மனைகளைப் பார்ப்பதிலேயே காரியம் முடிந்து விடாது. ஆலோசனைக் குழுக்களை.....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையெல்லாம் பொது விவாதத்திலே வைத்துக் கொள்ளலாம். கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. என். வரதராஜன் : நர்சுகள் ஒரு பக்கம் இன்ஜக்ஷன் போட மாட்டோம் என்று வேலை நிறுத்தம் செய்கிறார்கள். இந்தச் சீர்கேடுகளை எல்லாம் துரிதமாகப் போக்க திட்டத்தை அரசு வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தற்போது எந்தவிதமான வேலை நிறுத்தங்களும் மருத்துவமனைகளைப் பொறுத்தவரை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பென்சிலின போட்டதால் இறந்தது நிர்வாகக் சீர்கேடு என்று

குறிப்பிட்டார்கள். அது நிர்வாகச் சீர்கேடு அல்ல. அது 'ரியாக்ஷன் ஆப் தி மெடிசின்'—அதைப் போக்குவதற்கான நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது.

வட்ட மருத்துவமனைகளில் பல் சிகிச்சைப் பிரிவுகள்.

*வினா எண். 36—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட்ட அளவில் இயங்கும் மருத்துவமனைகளில் பல் நோய்ப் பிரிவுகள் துவக்கும் செயற் குறிப்புகள் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தற்போது உள்ள 108 வட்ட மருத்துவமனைகளில், 66 வட்ட மருத்துவ மனைகளில் பல் நோய் மருத்துவப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

திரு. யா. சை. மு. யூசுப் : பல் நோய் வேறு பல நோய்களுக்குக் காரணமாக இருப்பதால் பல் மருத்துவ பிரிவு இல்லாத இடங்களில் அந்தப் பிரிவைத் தொடங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தற்போது மருத்துவச் சிறப்புப் பணிகள் பெரும்பாலும் நகரங்களில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் மட்டுந்தான் இருக்கின்றன. இந்தச் சிறப்புப் பணிகளைக் கிராமங்களுக்கும் அளிக்க வேண்டும்; மாவட்ட, வட்ட மருத்துவமனைகளில் பல் மருத்துவம் போன்ற சிறப்புப் பிரிவுகளைத் தொடங்க அரசு திட்டமிட்டிருக்கிறது; அப்படிப்பட்ட திட்டத்தின் அடிப்படையில்தான் 108 வட்ட மருத்துவமனைகளில் இன்றைக்கு 66 வட்ட மருத்துவமனைகளில் பல் நோய் பிரிவு துவங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 66 வட்ட மருத்துவமனைகளில் பல்நோய்க்கான பிரிவு உருவாக்கப்பட்டிருக்கிறது என்று மகிழ்ச்சியோடு அறிவித்தார்கள். அந்த 66ல் மாயூரமும் ஒன்று. ஆனால், அதற்குத் தேவையான இன்ஸ்ட்ருமென்ட்ஸ்—கருவிகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? பல் நோய் சிகிச்சைக்குத் தேவையான இன்ஸ்ட்ருமென்ட்சை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த வட்ட மருத்துவமனைகளில் அந்தந்தப் பிரிவுகள் துவங்கப்படுகிற நேரத்தில் அதற்குத் தேவையான கருவிகள் வாங்கித் தரப்படுகின்றன. அவைகளை வாங்கித் தந்த பிறகு தான் அந்தப் பிரிவுகள் துவங்கப்படுகின்றன.



ஆனால் மாயூரத்திலே அத்தகைய கருவிகள் இல்லை என்ற பிரச்சினையை இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதைப்பற்றி எந்தவித அறிவிப்பும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. முறையாக அதுபற்றித் தெரிவித்தால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : ஏற்கனவே அமைச்சர் அவர்கள் அறிவிக்கும்பொழுது 66 வட்டங்களிலே ஆரம்பித்திருப்பதாகச் சொன்னார்கள். இன்னும் ஆரம்பிக்கப் படாமல் பல இடங்கள் இருக்கின்றன. அவைகளில் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

கால்நடைத் தீவனங்களில் கலப்படத் தடுப்பு.

*வினா எண். 37—திரு. ரெ. வி. சவுந்திரராசன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் தீவனங்களில் கலப்படம் செய்யப்படுவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

(ஆ) இது குறித்து கடந்த ஆண்டில் நடவடிக்கைகளுக்கு உள்ளானவர்கள் எத்தனை பேர்கள்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : (அ) கால்நடைத் தீவனம் மற்றும் கோழித் தீவனங்களில் கலப்படம் செய்யப்படுவதைத் தடுக்க சட்டம் ஒன்று இயற்றும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ரெ. வி. சவுந்திரராஜன் : தலைவர் அவர்களே, மனிதர்கள் சாப்பிடும் உணவிலே கலப்படம் செய்தால் அவைகளைக் கண்டு பிடிப்பதற்கு அடல்ட்ரேஷன் அனலிடிகல் செண்டர்கள் இருக்கின்றன. இந்த கால்நடைகளுக்கான உணவிலும், பண்ணாக்கிலும் கலப்படம் நடக்கிறது, எப்படி எப்படி தீவனங்களில் கலப்படம் செய்கிறார்கள் என்பது கால்நடைகளை வளர்ப்பவர்களுக்குத்தான் தெரியும். ஆகவே, தீவனங்களிலே கலப்படம் செய்வதைக் கண்டு பிடித்து நடவடிக்கை எடுக்கக் கூடிய முறையிலே மாவட்டத்திற்கு ஒரு பரிசோதனை சென்டர் ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : நான் அதைத் தான் குறிப்பிட்டேன். அதற்காக சட்டம் இயற்றுகின்ற செயற்குறிப்பு தான் இருக்கிறது, கால்நடை இலாகாவிலே அது குறித்து எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தாயகம் திரும்புவோருக்கு வேலை வாய்ப்பு, கடன் வசதிகள்.

*வினா எண். 38— திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாயகம் திரும்பிய அகதிகளுக்கு அவர்கள் விரும்பும் இடத்தில் வேலை வாய்ப்பு, கடன் வசதி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழர்கட்கு, அவர்களது குடும்ப அட்டையில், கண்டி உதவி உயர்மட்ட ஆணையாளரால் எந்த உதவிக்கு, குறிப்பிட்டு அனுப்பப்படுகிறார்களோ அந்த உதவி, தாயகம் திரும்பி வந்தவுடன் அளிக்கப்படுகிறது. இதேபோலத்தான் பர்மாவிலிருந்தும், வியட்நாமிலிருந்தும் தாயகம் திரும்பி வருபவர்கட்கும் அவரவர்கள் விருப்பப்படி குறிப்பிட்ட உதவி வழங்கப்படுகிறது. தாயகம் திரும்பி வந்தபின், இவர்கள் மாற்று உதவிக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் விண்ணப்பித்துக் கொண்டால் அவர்களது வேண்டுகோளும், பரிசீலனை செய்யப்பட்டு மாற்று உதவிகள் மாநில மறுவாழ்வுத்துறை இயக்குநராலும், சென்னையிலுள்ள மத்திய மறுவாழ்வுத்துறை இயக்குநராலும் வழங்கப்படுகின்றன. ஆகவே, தற்போது தாயகம் திரும்பி வருபவர்கட்கு, மறுவாழ்வு திட்டத்தின்கீழ் கடன் வசதி, வேலை வாய்ப்பு முதலிய உதவிகள் அவரவர்களது விருப்பத்திற்கிணங்கத்தான் வழங்கப்படுகிறது.

திரு. க. அரங்கசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப அவர்களுக்கு வேலைவாய்ப்பும் கடன் வசதிகளும் செய்து தரப்படுகின்றன என்று சொன்னார்கள். ஆனால் நீலகிரி மாவட்டத்திலே இருக்கிற தாயகம் திரும்பிய அகதிகள் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்க்கிறபோது எல்லாம் அதிகாரிகள் அவர்கள் விருப்பத்திற்கு தக்கபடி— என்ன தான் குடும்பக் கார்டுகளைக் கொடுத்து வேலைவாய்ப்பும் கடனும் கேட்டால்கூட—நடக்காமல் அதிகாரிகள் தங்களுடைய விருப்பப்படி நடக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, இதுபோன்ற குறைபாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் சொல்லியும் இதுநாள் வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதுபற்றி அறிவிக்க இயலுமா ?





மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தமிழர்கள் தாயகம் திரும்புகிறபோது குறிப்பாக ஸ்ரீலங்காவிலிருந்து வருகிறவர்கள் கண்டியிலே இருக்கிறவர்களைக் கேட்டு, அவர்களுடைய விருப்பத்தின் அடிப்படையிலே தான் இங்கே அனுப்பப்படுகிறார்கள். இங்கே வந்தபிறகு அவர்களுக்கு எத்தகைய உதவிகள் வேண்டுமென்றாலும் அவைகள் பரிசீலிக்கப்பட்டு கூடியவரையில் அப்படிப்பட்ட உதவிகள் அளிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்திப் : இதுவரையில் தாயகம் திரும்பிய அகதிகளில் எத்தனை பேர்களுக்கு இத்தகைய வேலை வாய்ப்பும் கடன்களும் அளிக்கப்பட்டு இருக்கின்றன ? அதிலே மத்திய அரசு எவ்வளவு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

(முற்பகல் 10—10)

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : முழுக்க முழுக்க மத்திய அரசின் உதவியினால் தான் கடன் வசதிகள் அளிக்கப்படுகின்றன என்பதைக். குறிப்பிட விரும்புகிறேன். ஸ்ரீலங்கா அகதிகளைப் பொறுத்தவரையில் இதுவரையில் 74,832 குடும்பங்கள் தாயகம் திரும்பி வந்திருக்கிறார்கள். அவர்களில் 49,562 குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டிருக்கிறது. தேயிலைத் தோட்டத்தின் மூலமாக 1,696 குடும்பங்களும், சின்கோனா தோட்டத்தின் மூலமாக 125 குடும்பங்களும், இரப்பர் தோட்டத்தின் மூலமாக 223 குடும்பங்களும், நூற்பு ஆலைகள் மூலமாக 1,735 குடும்பங்களும், நிலக்குடியிருப்புத் திட்டமும் விவசாயத் திட்டமும் என்ற திட்டத்தின் மூலமாக 2,161 குடும்பங்களும், அகதிகள் வங்கியில் தொழிற் திட்டத்தின் மூலமாக 2,388 குடும்பங்களும் வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலமாக 2,920 குடும்பங்களும், வியாபாரக் கடன் மூலமாக 34,816 குடும்பங்களும், மாநிலப் பண்ணைகள் கழகத்தின் மூலமாக 879 குடும்பங்களும், இதர மாநிலங்களில் குடியமர்த்தப்பட்டவர்களாக 2,619 குடும்பங்களும், ஆக மொத்தம் 49,562 குடும்பங்கள் மறுவாழ்வு பெற்றிருக்கின்றன. இலங்கைத் தமிழர்கள் வியாபாரக் கடனுக்காக 773·67 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது.

பர்மாவிலிருந்து இதுவரை 1,44,183. நபர்கள் தமிழ் நாட்டிற்கு வந்துள்ளார்கள். இவர்களில் 45,999 குடும்பங்களுக்கு மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்டபடி மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. வியாபாரக் கடன் மூலமாக 41,864 குடும்பங்களும், நிலக்குடியிருப்புத் திட்டமும், விவசாயத் திட்டமும் என்ற திட்டத்தின் மூலம் 375 குடும்பங்களும், நூற்பாலைகள் மூலமாக 108 குடும்பங்களும், வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக 3,652 குடும்பங்களும், ஆக மொத்தம் 45,999 குடும்பங்கள் மறுவாழ்வு பெற்றிருக்கின்றன. பர்மா தமிழர்களுக்காக வியாபாரக் கடனுக்காகச் செலவு செய்யப்பட்ட தொகை 547·52 இலட்சம் ரூபாய் ஆகும்.

இதுவரை வியட்நாம் அகதிகள் 426 குடும்பங்கள் தமிழ் நாட்டிற்கு வந்துள்ளனர். இவர்களில் அநேக நபர்கள் வியாபார வர்க்கத்தினர்களாக உள்ளதால், 248 குடும்பங்களுக்கு 5·75 இலட்சம் ரூபாய் வியாபாரக்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள் விளக்கமாகவும், விரிவாகவும் பதில் தந்திருக்கிறார்கள், ஆகவே அடுத்த கேள்வியை எடுத்துக் கொள்ளலாம். வினா எண். 39.

## நெசவாளர் சேமிப்புத் திட்டம்.

*வினா எண் 39—திரு. சு. பழனிசாமி: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் கூட்டுறவு சங்கங்களிலுள்ள நெசவாளர்கள் எத்தனை பேர் இதுவரை பயன் பெற்றுள்ளார்கள்.

(ஆ) இதற்கு மாற்றுத் திட்டம் ஏதும் உண்டா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன் : (அ) நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் 614 கூட்டுறவு சங்கங்களில் 59,000 நெசவாளர்கள் சேர்ந்து பயன் பெற்று வருகின்றனர்.

(இ) இத்திட்டத்தை நெசவாளர்களுக்கு மேலும் அதிக பயனளிக்கும் வகையில் மாற்றங்கள் செய்வது பற்றி பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. பழனிசாமி : தலைவரவர்களே, மாற்றுத் திட்டம் உண்டு என்று அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தில் நெசவாளர்கள் மாதம் ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் செலுத்தினால் அவர்கள் இறக்கும் தறுவாயில் 5,000 ரூபாய் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன் : தலைவரவர்களே, அரசு உதவித் தொகையாக ஒரு ரூபாய்க்கு 3 பைசா வீதம் அளித்தால் ஆண்டு ஒன்றுக்கு இப்பொழுது 30 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் மாற்றுத் திட்டத்தின் அடிப்படையில், மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் செலுத்தும் நெசவாளர்கள் இறந்துவிட நேரிட்டால், அவரது நியமனதாரருக்கோ அல்லது சட்டப்படியான வழிமுறையினருக்கோ ரூபாய் 3000 கொடுக்கலாம் என்ற ஒரு திட்டத்தை இப்பொழுது அரசு பரிசீலனை செய்து வருகிறது.





## கைத்தறித் துறையில் பணியாற்றும் முதுநிலை ஆய்வாளர்கள்.

* வினா எண் 40—திரு. துரை முருகன் : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறித் துறையில் பணியாற்றிவரும் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த முதுநிலை ஆய்வாளர்களை கைத்தறித் துறையிலே நிரந்தரமாக எடுத்துக் கொள்ளும்படியும், அவர்களுக்கான சீனியாரிட்டியை வழங்கும்படியும் சென்னை உயர் நீதி மன்றம் 1976 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30 ஆம் நாள் தீர்ப்பு ஒன்று வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன் : (அ) ஆம்.

(ஆ) உயர் நீதி மன்ற தீர்ப்பிற்கிணங்க கூட்டுறவுத் துறையைச் சார்ந்த முதுநிலை ஆய்வாளர்களை அவர்களுக்கு விருப்பமிருப்பின் கைத்தறித்துறையிலே, நிரந்தரமாக எடுத்துக்கொள்ளும்படியும் அவர்களது பணிமுதுநிலையை அமுலில் உள்ள விதிகளின் அடிப்படையில் நியமிக்கும்படியும் கைத்தறி பஞ்சாலை இயக்குநருக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, இதுவரையில் அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் எவ்வளவு பேர்களை அரசு எடுத்திருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன் : தலைவரவர்களே, உயர்நீதி மன்றத் தீர்ப்பை அமல்படுத்துமாறு அரசு ஆணை நிலை எண் 1361, தொழில், நாள் 1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25-ஆம் நாளில் கைத்தறி பஞ்சாலை இயக்குநருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கைத்தறி பஞ்சாலை துறையில் வேலை செய்துகொண்டிருக்கின்ற விருப்பம் தெரிவிக்காத, விருப்பம் தெரிவிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படாத கைத்தறி ஆய்வாளர்களிடம் விருப்பம் கேட்கப்படும். அவர்கள் விருப்பம் தெரிவித்தபின் எத்தனைபேர்கள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்று முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (அ) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம் ஆகியவை குறித்து :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 55, உள் விதி (1)-ன் கீழ், கீழ்க்கண்ட தீர்மானங்கள் வரப்பெற்றுள்ளன :—

(1) திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : "திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையிலான அமைச்சரவையின்மீது இந்த அவை நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கிறது."

(2) திரு. ஆர். உமாநாத், திரு. கு. ரமணி, திரு. சி. கோவிந்தராசன் மற்றும் திரு. மு. அம்பிகாபதி : "மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட மந்திரி சபையின் தொழிலாளர் பற்றிய கொள்கையை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிராகரிக்கிறது."

3. Thiru J. JAMES :

"This House expresses its disapproval of the law and order policy of the Ministry headed by Hon. Chief Minister, Thiru M. G. Ramachandran."

4. Thiru M. A. LATHEEF :

"That this House expresses its disapproval of the policy of the Ministry headed by the Hon. Thiru M. G. Ramachandran towards the minority communities."

இத்தகைய தீர்மானங்கள் கொடுக்கப்படுவது அரசின் சில கொள்கைகளை, சில செயல்களைக் கண்டிப்பதற்கும், முடிந்தால் அதன் மூலம் அமைச்சரவையைப் பதவி இழக்கச் செய்வதற்கும் தான். இப்போது நாம் கூடியிருப்பது ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கும், தொடர்ந்து நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அதன் மீது விவாதம் நடத்துவதற்கும் ஆகும்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறுகையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அரசின் எந்தச் செயலையும் அல்லது கொள்கையையும் கண்டித்துப் பேசப் பரவலான வாய்ப்பு உள்ளது. ஆளுநர் உரையில் கூறியுள்ள விவரங்கள் மட்டுமின்றி, பேரவையின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, மற்ற விவரங்களையும் பற்றிக் கூட, திருத்தங்கள் கொடுப்பதன்மூலம், விவாதிக்க மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வாய்ப்பு உள்ளது.



ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைதான் ஆயினும், அது அரசின் கொள்கைகள், திட்டங்கள் பற்றிய உரையே ஆகும். எனவே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிப்பதன் மூலமோ, அல்லது அத்தீர்மானத்திற்குத் திருத்தம் கொண்டு வந்து, அத்திருத்தத்தை ஆதரித்து வாக்களிப்பதன் மூலமோ, அரசின் கொள்கையைக் கண்டித்து வாக்களிப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

இக்காரணங்களினால், பேரவையின் விதி 68, உள்விதி (3) (viii)-ன் கீழ் இத் தீர்மானங்களுக்கு இசைவு தர மறுக்கலாம்.

ஆயினும் பெரும்பான்மை எதிர்க்கட்சித் தலைவர்கள் இத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி இருப்பதாலும், இதுவரை பின்பற்றி வந்த மரபுக்கு முரணாக இருந்தாலும் இத்தீர்மானங்களை முன்மொழிய என் இசைவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலில், திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்களின் தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி அளிக்கலாம் என்று கருதும் மாண்புமிகு உறுப்பினர்களை அவர்கள் இடத்தில் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் 24 பேர்களுக்குமேல் எழுந்து நின்றார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 24-க்கும் அதிகமான மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவாக இருப்பதால், தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி அளிக்கப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து திரு. ஆர். உமாநாத், திரு. கு. ரமணி, திரு. சி. கோவிந்தராசன், மற்றும் திரு. மு. அம்பிகாபதி ஆகியோர் ஒரே ஒரு பொருள் குறித்த தீர்மானம் கொடுத்திருப்பதால், முதலில் கொடுக்கப்பட்ட திரு. உமாநாத் அவர்கள் தீர்மானத்தை மட்டும் எடுத்துக்கொள்கிறேன். மற்றதைத் தள்ளிவிடுகிறேன்.

திரு. உமாநாத் அவர்கள் தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி அளிக்க ஆதரவாக உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் தம் இருக்கையில் எழுந்து நிற்கக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் 24 பேர்களுக்கு மேல் எழுந்து நின்றார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 24-க்கும் அதிகமான மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவாக இருப்பதால், தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி அளிக்கப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களின் தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி அளிக்க ஆதரவாக இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் தம் இருக்கையில் எழுந்து நிற்கக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் 24 பேர்களுக்கு மேல் எழுந்து நின்றார்கள்.)

மாண்பமிகு பேரவைத் தலைவர் : 24-க்கும் அதிகமான மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவாக இருப்பதால், தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. லத்தீப் அவர்களின் தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி அளிக்க ஆதரவாக இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் தம் இருக்கையில் எழுந்து நிற்கக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் 24 பேர்களுக்கு மேல் எழுந்து நின்றார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 24-க்கும் அதிகமான மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரவாக இருப்பதால், தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதி அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-20].

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 55-வது விதி, உள் விதி (2)-ன் படி, அனுமதி அளிக்கப்பட்ட நாளில் இருந்து 10 நாட்களுக்குள் ஒரு நாளை இத் தீர்மானங்களின் மீதான விவாதத்திற்கு ஒதுக்கவேண்டும். ஆளுநர் உரைக்கு நன்றி தெவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியபின் எடுத்துக் கொள்வதா, அல்லது இடையில் எடுத்துக் கொள்வதா என்பதை இன்று கூடும் அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அவை உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை திரு. சுப்பு அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். நேற்று நான் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு, ''உங்களுக்கு ஆளுநர் உரையின்மீது பேச வாய்ப்பிருப்பதால், இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது'' என்று நோட்டீஸ் விட்டிருக்கிறீர்கள். ஆனால் மேலவையில் இது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து மேலவையில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டி என்னுடைய தீர்ப்புக்குக் களங்கம் கற்பிக்கக்கூடாது.





திரு. அ. ரகுமான்கான் : உங்களிடம் இருந்து விளக்கம் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு இதிலே ஏதாவது விளக்கம் வேண்டுமானால், என்னுடைய கவனத்தை ஈர்க்கவேண்டுமானால் மறுபரிசிலனை செய்யவேண்டும் என்று நோட்டீஸ் கொடுக்கலாமே தவிர, அவையிலே எழுப்ப உங்களுக்கு உரிமை கிடையாது.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அதை மட்டும் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## 3. உரிமைப் பிரச்சினை

## முதலமைச்சர் மீது.

Thiru K. SUPPU : Under Rule 184 of the Assembly Rules, I wish to raise the following matter of privilege against the Hon'ble Chief Minister, viz.

On 9-2-79 when the Chief Minister commented about the reported walk out by six opposition parties in the Assembly during the Governor's Address he has stated certain things which are completely contrary to the facts and misleading the public. The statement has been widely published by the news papers. "The Mail" in its evening edition on 9-2-79 has published the statement in front page which reads as follows :—

"Speaking to newsmen in his chamber, at the conclusion of the Governor's Address to the members of the two Houses of Legislature, the Chief Minister pointed out that his party, while in opposition had also staged such walk outs. But there was a difference in the present walk out by some opposition parties and the walk out staged by the AIADMK when it was in the opposition.

The members of the ruling party then jeered at the AIADMK members, hurled uncomplimentary epithets at them and even chappals were thrown at the AIADMK benches by the then ruling party.

In contrast to what had become normal practice when the D. M. K. was in power, the AIADMK had strictly abided by the democratic norms and the end result was the incident passed off peacefully.."

The Chief Minister has undoubtedly tarnished the image of the D. M. K. by this deliberately false and misleading statement.

[திரு. க. சுப்பு] [1979 பிப்ரவரி 13

The statement that the present ruling party staged a walk out when it was in the opposition boycotting the Governor's address was far from the truth. Never did it stage such a walk out in the Assembly. To make things worst the Chief Minister has also stated that chappals were thrown at AIADMK benches when they walked out by the then ruling party. This is nothing but a calculated slander campaign let loose against the members of the responsible opposition, in the Assembly.

The statement of the Chief Minister is a deliberate attempt to mislead the public and tarnish the image of the D. M. K. by knowingly false, frivolous and baseless allegations. Therefore, this matter may be referred to the Committee of Privileges for necessary action.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, மிக அமைதியாகவும் பொறுமையாகவும் உரிமைக் குழுவிற்கு விடவேண்டும் என்ற தீர்மானத்தை திரு. சுப்பு அவர்கள் படித்தபோது அவை எந்த அளவிற்கு அமைதியாக இருந்ததோ அதைபோல் நான் தருகிற விளக்கத்தைக் கேட்பதிலும் அமைதியைக் கடைபிடிக்கும் என்று நான் மனதார நம்புகிறேன்.

திரு. சுப்பு அவர்கள் ஆளுநர் உரைக்கு முன்பு 6 எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் தங்களது கருத்தைத் தெரிவித்து விட்டு வெளிநடப்புச் செய்தார்கள் என்றும், அதை ஒட்டி முதலமைச்சர் அவர்கள் பத்திரிகை நிருபர்களிடத்தில் பேசும்போது, குறிப்பாக 'மெயில்' பத்திரிகை நிருபர் அந்தச் செய்தியை வெளியிடும்போது உண்மைக்கு மாறாகவும், நடக்காத ஒன்றைப் பேசி இருப்பதாகவும் முதலமைச்சர் அவர்கள் மேல் குற்றம்சாட்டி, அதை உரிமைக் குழுவிற்கு விடவேண்டும் என்று கேட்டு இருக்கிறார்.

இந்தச் சபைக்கு ஒரு மரபு உண்டு. இந்தச் சபை தனக்கென்று ஒரு சில விதிகளை வைத்துக்கொண்டு இருக்கிறது. இந்தச் சபை அந்த விதிகளை மட்டும் பயன்படுத்தாமல், தேவைப்படுகிற போது இந்திய துணைக் கண்டத்தின் அரசியல் சட்டத்தின் ஷரத்துகளையும் பயன்படுத்திக்கொண்டு இருக்கின்றது. அந்த அடிப்படையில் எனக்கு முன்னாலே இருக்கின்ற அந்த ஷரத்துக்களை நான் படித்துக்காட்ட விரும்புகிறேன். அதைக் கொஞ்சம் விளக்குவதற்காக படிக்கிறேனே தவிர வேறு எதற்கும் இல்லை என்பதையும் நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

Rule 12 :— When the Houses of the Legislature are assembled together under Article 175 or 176 or when the members of the Assembly alone have assembled under Article 175 of the Constitution no member shall obstruct or interrupt the Address either before or after



1979 பிப்ரவரி 13] [திரு. கி. மனோகரன்]

the Address or during its duration with any speech or point of order or in any other manner; and such obstruction or interruption shall be regarded as a gross breach of order of the House and shall be dealt with by the Speaker as such at the next sitting of the Assembly.'

அந்த அடிப்படையிலேதான் 1973-ம் ஆண்டு ஆளுநர் உரையை அடிப்படையாகக் கொண்டு, அந்த ஆளுநர் உரையின் போது அப்போது எதிர்க்கட்சி வரிசையில் இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெளிநடப்பு செய்தது என்பதை நான் திரு. சுப்பு அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், அவருடைய குறிப்பிலே அவர் தெரிவித்து இருப்பது உண்மைக்கு மாறானது என்று நான் சொல்ல விரும்புகிறேன். பொய் என்று சொல்ல விரும்பவில்லை. உண்மைக்கு மாறானது terminological inexactitude என்பதை தெரிவித்து, அவருடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். திரு. சுப்பு சொல்கிறார் :

''The statement that the present ruling party staged a walk out when it was in the opposition boycotting the Governor's address was far from the truth. Never did it stage such a walk out in the Assembly''.
இது உண்மைக்குப் புறம்பானது என்று இங்கே எனக்கு முன்னாலே உட்கார்ந்து இருக்கிற மதிப்பிற்குரிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கும் தெரியும் என்று நான் கருதுகின்றேன். விஷயத்தைப் புரிந்து கொள்வதற்காக நான் இதை இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன். 2-2-1973-ம் நாள் ஆளுநர் அவர்கள் பேருரையை நிகழ்த்தும் முன் சில உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தது குறித்து.

The Hon, Deputy Speaker: The Hon'ble members are aware that on2-2-73 when the Governor rose to address the Hon'ble members of both the Houses assembled together under Article 176 of the constitution, Hon. members Thiru K. T. K. Thangamani, Thiru M. G. Ramachandran, Thiru A. R. Marimuthu made certain statements and accompanied by the members of their parties staged a walk out.

அதை ஒட்டி, அதை உரிமைக் குழுவிற்கு விடவேண்டும் என்று இங்கே விவாதிக்கப்பட்டு, அது உரிமைக் குழுவிற்கு விடப்பட்டு, உரிமைக் குழு அது பற்றி தனது கருத்தைத் தெரிவித்தது, ஆனால் அவை எந்த நடவடிக்கையும் எடுக்காமல் விட்டது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அன்றைய தினம் நடந்தை சம்பவம் குறித்து உரிமைக் குழுவிற்கு விட வேண்டும் என்ற தீர்மானத்தை நானே கூட இங்கே முன் மொழிந்து இருக்கலாம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் அப்படிச் செய்யாமல் இருந்ததற்கு அடிப்படைக் காரணம் ஒரு தவறு இன்னொரு தவறுக்கு காரணமாகக் கூடாது என்ற நிலைமை தெரிந்திருந்தாலும், அந்தப் பிரச்சினையை அவ்வளவு

பெரிதுபடுத்த வேண்டியது இல்லை என்பதாலும், ஒரு அமைதியான சூழ்நிலை நிலவட்டும் என்பதற்கு அந்தப் பிரச்னை கிளப்பப்படவில்லை என்பதை நான் இந்த அவைக்கு கண்ணியத்தோடு தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

[முற்பகல் 10-30.]

எனது அருமை நண்பர், மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் மெயில் பத்திரிகையில் இருந்து சில செய்திகளை இங்கே எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். நான் சுப்பு அவர்களுக்கு இந்த மெயில் பத்திரிகைப் பற்றிப் படித்துக்காட்டுவதற்கு முன்பு அல்லது அவரே தெரிந்திருக்கிற உண்மையை நினைவு படுத்துவதற்கு முன்பு, அவருடைய மேலான கவனத்திற்கும் மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலம் அவையின் கவனத்திற்கும் தினமணி செய்தித்தாளில் பெப்ரவரி 10-ந் தேதி வெளியான அந்தப் பேட்டியைப் பற்றி வந்திருக்கிற குறிப்பைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"அவர்கள் உரிமை என்கிறார் எம். ஜி. ஆர்." என்ற சிறு தலைப்பில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. கவர்னர் உரையின்போது இடைமறித்துக் கண்டன அறிக்கை படித்து விட்டு எதிர்க்கட்சியினர் வெளியேறியது பற்றி முதல்வரைச் சந்தித்த நிருபர்கள் கருத்துக் கேட்டபோது, "அப்படிச் செய்வது அவர்களுடைய உரிமை" என்று முதலமைச்சர் சொன்னார். அ.இ.அ.தி.மு.க. இருந்தபோது வெளி நடப்புச் எதிர்க் கட்சியாக செய்ய நேரிட்ட ஒரு சமயத்தில் அப்போது நாங்கள் சபையை விட்டு வெளியே போகும்போது எங்கள் மீது செருப்பு விசப்பட்டது. இன்று அப்படிப்பட்ட நிகழ்ச்சி எதுவும் நடைபெற வில்லை. இதை அனைவருமே நேரில் கண்டீர்கள். இதிலே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புவது, வெளி நடப்புச் செய்ய நேரிட்ட ஒரு சமயத்தில் நாங்கள் சபையை விட்டு வெளியே போகும்போது எங்கள்மீது செருப்பு விசப்பட்டது. என்பதுதான்.

அதையொட்டி இங்கே என் முன்னால் இருக்கிற இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்துள்ள செய்தியையும் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"He pointed out that an opposition walk out before the Governor's address to a Joint Session was not without precedent in Tamil Nadu. As an opposition party the A. I. A. D. M. K. itself had done so in 1972. The only difference was that when the A. I. A. D. M. K. walked out the then ruling party, D. M. K., members ridiculed them and also hurled chappals at them."

மெயில் பத்திரிகையில் வந்திருக்கிற செய்தியில்

"Chappals were thrown at the benches"





என்பதை நண்பர் சுப்பு அவர்கள் குறிப்பிட்டு, அப்படி ஒரு சம்பவம் நடைபெறவில்லை; இந்தச் சம்பவத்தை முதலமைச்சர் எப்படி சொல்லலாம் என்று கேட்டிருக்கிறார். நான் முதலமைச்சர் சார்பாக இந்த அவையில் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். செருப்புகள் சபையில் உறுப்பினர்களை நோக்கி விசப்பட்டன என்று அவர் பேசவில்லை என்பதை மனதார நம்புங்கள் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மெயில் பத்திரிகையில் வந்த செய்தி வேண்டுமானால் தவறாக வந்திருக்கலாம். எந்தக் காரணத்தைக் கொண்டும் முதலமைச்சர் அவ்வாறு பேசவில்லை. பேசி களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற நோக்கம் இல்லை. அப்படி களங்கம் கற்பிக்க இயலாத இப்படிப்பட்டப் பிரச்சனைகளைச் சொல்லி எந்தக் கட்சியையும் களங்கப்படுத்த முடியாது, ஆக, அந்த நோக்கம் துளிக் கூட இல்லை. இப்படிப்பட்ட ஒரு குழப்பத்தில் யாரும் ஈடுபட வேண்டாம் என்று எனது அருமை நண்பர், மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மெயில் பத்திரிகையில் வந்த இந்த செய்தி "மெலீஷியஸ் இன்டென்ஷன்"-ல் வந்திருக்கும் என்று நான் கருதவில்லை. செருப்பு வீசப்பட்டது என்ற செய்தியைச் சொல்லும்போது, அவர் அந்தச் செய்தியை எடுத்த நேரத்தில் வேகத்தில் அந்தச் செய்தியை அப்படி எடுத்துப் போட்டிருப்பார்கள் அல்லது போட்டிருக்கக்கூடும் என்று நான் தோன்றுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. மற்ற பத்திரிகைகளில் வராத செய்தி மெயில் பத்திரிகையில் மட்டும் வந்திருக்கிறது. அதை மட்டும் வேத புத்தகமாக எடுத்துக் கொண்டு, நண்பர் சுப்பு அவர்கள் வாதிட மாட்டார்கள் என்றும் முதலமைச்சர் பேசாத ஒன்றை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று அவர்கள் கொண்டு வந்து இருக்கிற அந்தத் தீர்மானத்தை வாபஸ் பெற்று, ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்குவார்கள் என்றும் நான் மனதார நம்புகிறேன்.

இவ்வளவு தெளிவான விளக்கம் நான் சொன்னதற்குப் பிறகும் இதைவிட தெளிவான விளக்கம் தேவையானால் எதிர்க்கட்சித் தலைவர் முன்னாலேயே உட்கார்ந்து கொண்டுதான் இருக்கிறார் என்று மட்டுமே சொல்வதைத் தவிர வேறு எதுவும் சொல்வதற்கு இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்பதை நான் வற்புறுத்தி அமைகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இது குறித்து என்னுடைய தீர்ப்பை பின்னர் அறிவிக்கிறேன். *

---

* 1979 பிப்ரவரி 14-ம் தேதி தீர்ப்பளிக்கப்பெற்றது.

[1979 பிப்ரவரி 13

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, முன்னர் சொன்னதற்குப் பிறகு நான் ஒன்றிரண்டு விஷயங்களைப் பற்றி...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் அளிக்கப்பட்டுவிட்டது. மறுபடியும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதில்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : இப்போது இந்த ஒழுங்குப் பிரச்சினை என்பதற்குப் பதிலளிக்கின்ற வகையில் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். நிர்வாகம் சம்பந்தமான ஏதாவது விஷயம் என்றால்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒழுங்குப் பிரச்சினை அல்ல. பிரிவிலேஜ் மோஷன்.

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்ன சில கருத்துக்கள் பற்றி இதனை உரிமைப் பிரச்சினையாக மாண்புமிகு சுப்பு அவர்கள் எழுப்பி இருக்கிறார்கள். அதற்கு அவை முன்னவர் அவர்களும் விளக்கம் தந்திருக்கிறார்கள். ஆனால் நிர்வாக சம்பந்தமான விஷயங்கள் இருந்தால் அமைச்சரவை கூட்டுப் பொறுப்பு என்கின்ற வகையில் எந்த அமைச்சரும் விளக்கம் தரலாம். ஆனால் இது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேசிய பேட்டி ஒன்று பற்றியதாகும். ஆகவே...................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் லத்தீப் அவர்கள், எந்த விதியின் கீழ் இதற்கான பதிலை முதலமைச்சரே வந்து சொல்ல வேண்டும் என்று எழுதித் தந்தார்களானால் அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

THIRU. M. A. LATHEEF : This is a matter of propriety. The Chief Minister must himself give an answer because the motion is against the Chief Minister.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் லத்திப் அவர்கள் எழுத்து மூலமாக இப்படி விதி இருக்கிறது என்று எழுதித் தரலாம். பரிசீலிக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்திப் அவர்கள், நிர்வாக விஷயம் பற்றிப் பேசுகிறபோது வேண்டுமானால் அமைச்சர்களின் கூட்டுப் பொறுப்பு என்ற அடிப்படையில் எந்த அமைச்சரும் பேசலாம் என்று கூறி இப்படிப்பட்ட விஷயங்களில் முதலமைச்சரே தான் இதற்கு விளக்கம் தரவேண்டும் என்று குறிப்பிட்டுப் பேசி இருக்கிறார்கள். பாராளுமன்ற முறை தெரிந்த எனது அருமை மாண்புமிகு உறுப்பினர் படித்த, விவரம் தெரிந்த,



1979 பிப்ரவரி 13] [திரு. கி. மனோகரன்]

நல்ல உணர்ச்சித் துடிப்புள்ள நண்பர், ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். லீடர் ஆப் தி ஹவுஸ் என்ற முறையில் எனக்கு உரிமை இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி அருள் கூர்ந்து இந்த மன்றத் தலைவரவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF : The Leader of the House can represent the entire House on matters pertaining to administrative work only. But at the same time since this issue is against the Chief Minister himself, he alone should offer his reply.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து விதிகள் ஏதாவது இருந்தால் குறிப்புத் தாருங்கள்; நான் அதைப் பரிசீலிக்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது இதிலே கிடையாது.

திரு. எம். ஏ. லத்தீப் : பாயின்ட் ஆப் ஆர்டர்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது இதிலே கிடையவே கிடையாது. ஒரு குறிப்பிட்ட பிரச்சினை மீது அவர்கள் பேசுகிறபோது மற்றவர்கள் இதிலே நுழைந்து பேசுவதற்கு உரிமை கிடையாது. நீங்கள் உட்காருங்கள். தயவுசெய்து நீங்கள் பேசுவது முறை கிடையாது என்கிறேன், அமருங்கள்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, * *

* * * * *

* * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முருகன் அவர்கள் பேசியது அத்தனையும் நீக்குங்கள் என்று உத்தரவிடுகிறேன். வேறு பிரச்சினை என்று சொல்லிவிட்டு அதே பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறீர்களே.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1979 பிப்ரவரி 13

[முற்பகல் 10–40]

* திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரு. துரை முருகன் அவர்கள் கேட்பது, மெயில் பத்திரிகை ஒரு தவறான செய்தியை, முதல் அமைச்சர் அவர்கள் சொல்லாததை வெளியிட்டு விட்டதாக நிதி அமைச்சரான அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள், அப்படியானால் அவை முன்னவர் அவர்கள் அந்தப் பத்திரிகை மீது ஒரு உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டுவருவார்களா என்பதுதான் அவர்கள் கேள்வி.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் பேசியதை முழுமையாக எதிர்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்களும் கேட்டுக்கொண்டு தான் இருந்தார்கள். அவையும் கேட்டுக்கொண்டுதான் இருந்தது. தவறாக செய்தி வெளியாகி இருக்கிறது என்று மட்டும் சொல்லாமல், எந்தவிதமான 'மலீஷியஸ் இன்டன்ஷன்'-ம் இல்லாமல் அந்தச் செய்தி அந்தப் பத்திரிகையில் வந்திருக்கிறது என்று நான் குறிப்பிட்டதையும் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

"I have explained my position fully"

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அது திருப்தி அளிக்க வில்லை என்றால் அவர் வேண்டுமானால் கொண்டுவரலாமே தவிர எனக்கு தலையெழுத்தில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : ஒரு பத்திரிகை ஒரு முதல் அமைச்சரின் பேச்சைத் தவறாக வெளியிட்டிருக்கும்போது அந்தப் பத்திரிகைக்காரர்களைக் கேட்டு அவர்கள் நாங்கள் உள்நோக்கத் தோடு வெளியிடவில்லை என்று அவை முன்னவர் அவர்களுக்கு பதில் அளித்து அல்லது தங்களுக்கு பதில் அளித்து அதற்குப் பிறகு இதைச் செய்திருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். அவர்களாகவே மெயில் பத்திரிகை உள் நோக்கத்தோடு வெளியிடவில்லை என்பதை ஊகித்துக் கொண்டு சொல்வது என்பது எங்களுக்கு அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : 'மலீஷியஸ் இன்டென்ஷன்' அந்தப் பத்திரிகைக்கு இல்லை என்று சொன்னேன், அதைத் திருப்பியும் வலியுறுத்த விரும்புகிறேன். மற்றப் பத்திரிகைகளிலும் அந்தச் செய்திகள் வந்திருக்கின்றன. இதில் மட்டும் தவறாக வந்திருக்கிறது என்று சொன்னேன். நான் எதிர்கட்சித் தலைவர் அவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ள விரும்புவது, எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கு மெயில் பத்திரிகை பற்றி ஏதாவது சந்தேகம் இருக்கிறதா? அந்தப் பத்திரிகை தவறான நோக்கத்தோடு திசை திருப்பி செய்தியைப் போட்டது





என்று அவர்கள் நினைக்கிறாரா? அப்படி அவர்கள் கருதுகிறார்கள் என்றால்—நான் எனது நிலையைத்தான் விளக்கி, அல்லது நிரூபித்து அல்லது வெளியே எடுத்துச் சொல்லி அல்லது சொல்லிக் காட்ட முடியும் அல்லது வற்புறுத்திச் சொல்ல முடியும். ஆக நான் எனது கருத்தைச் சொல்லிவிட்டேன். எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். அப்படி ஏதாவது உள்நோக்கம் இருக்கிறது என்று' எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எண்ணுகிறாரா? ஆகவேதான் அவர்கள் நான் எப்படி இப்படிப் பேசலாம் என்று கேட்கிறார்களா என்று எனக்குப் புரியவில்லை. ஆக, நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, அப்படி ஏதாவது தவறுதலாக அவர்கள் எண்ணுகிறாரா?

மெயில் பத்திரிகை உள்நோக்கத்தோடு செய்தி போட்டிருக்கிறது என்று எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கருதுவார்களேயானால் ஜனநாயக மரபுப்படி அவர்களே ஒரு 'ப்ரிவிலேஜ் மோஷன்' மெயில் பத்திரிகை மீது கொண்டுவருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

(சில உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையில் நடைபெறுகிற நிகழ்ச்சிகளை அல்லது நடந்துவிட்ட நிகழ்ச்சிகளை பத்திரிகைகள் திசை திருப்பி அல்லது வேறுவிதமாக போடுமானால் அந்தப் பத்திரிகைமீது அவை உரிமை மீறல் பிரச்னையை எழுப்பலாம். ஆனால் இது, வெளியே சொல்லப்பட்டதை, அவையினுடைய நிலையை எடுத்துச் சொல்கிற பிரச்னையாக இருந்ததால் கொண்டுவந்தார்கள். இதை பரிசீலனை செய்து, நன்கு ஆய்வு செய்து தீர்ப்பு பின்னர் அறிவிக்கப்படும்.

திரு. க. சுப்பு : மெயில் பத்திரிகை மீது இப்போதே உரிமைப் பிரச்னை கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோட்டீஸ் கொடுங்கள்.

திரு. துரைமுருகன் : அவருக்கு தலையெழுத்து இல்லை என்கிறார்கள், ஆனால் எங்களுக்கு தலையெழுத்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு முடிவிற்கு வந்தாலொழிய நான் ஒன்றுமே பேசப்போவதில்லை. உறுப்பினர்கள் எழுந்து எழுந்து பேசுவது நல்லதொரு மரபா? எதிர்கட்சித் தலைவர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். உங்கள் உறுப்பினர்கள் பேசுவதை ரசிப்பதா, அல்லது எப்படி வேண்டுமானாலும் பேசுங்கள் என்று சொல்கிற நிலையா? அலுவல் ஆய்வுக் குழுவில் தாங்கள் கொடுத்த வாக்குறுதியை நினைவுபடுத்துகிறேனே தவிர வேறு ஒன்றும் அல்ல.

[1979 பிப்ரவரி 13

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் அவர்கள் மெயில் பத்திரிக்கைமீது ப்ரிவிலேஜ் மோஷன் கொண்டு வருகிறேன் என்று சொன்னார்கள்.

The Hon. Member wants to bring a Privilege Issue against Mail in the course of the proceedings of the Assembly.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சாதிக் பாட்சா அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன். திரு. சுப்பு அவர்கள் கொண்டு வந்துள்ள உரிமைப் பிரச்னைமீது முடிவு எடுக்கவில்லை. நான் கேட்பது, உறுப்பினர்கள் என் அனுமதி யின்றி எழுந்து எழுந்து பேசுவது பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ? தயவுசெய்து அதைச் சொல்லவேண்டும்.

திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: இடையிடையே எழுந்திருப்பது சபைக்கு உதவியாக இருந்தால் எழுந்திருக்கலாம், அதில் தவறில்லை. சபைக்கு குந்தகமில்லாமல் இருக்கவேண்டும், அவ்வளவு தான். இப்படி எழுந்திருப்பதை இங்கு அடிக்கடி அனுமதிப்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. ஆகவே அப்படி நீக்குப் போக்காக இருக்கவேண்டியது தான். (சிரிப்பு).

(இந்த நேரத்தில் திரு. துரை முருகன் எழுந்திருந்தார்....)

மாண்புமிகு பேரவைத் தலைவர் :..பார்த்தீர்களா, இவர் எழுந்திருப்பதை.......... இதற்கு என்ன சொல்லுகிறீர்கள். இப்போது திடீரென்று எழுந்திருக்கிறார்..........அடுத்து திரு. சுப்பு அவர்கள்.

திரு. க. சுப்பு : நான் கொடுத்த உரிமைப் பிரச்னைமீது தாங்கள் நாளைய தினம் தீர்ப்புக் கூறுவதாகக் கூறியிருக்கிறீர்கள் நான் அதன் உள்ளே நுழைய விரும்பவில்லை. ஆனால் ஒரு உண்மையை மட்டும் தெரிந்து கொள்ள முடிந்தது. மற்ற எந்தப் பத்திரிக்கையும் வெளியிடாத இந்தச் செய்தியை மெயில் பத்திரிகை மட்டும் வரிந்து கட்டிக்கொண்டு எழுதியிருக்கிறது..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது முடிந்து விட்டது, இப்போது என்ன பிரச்னை, அதை மட்டும் சொல்லுங்கள். இப்போது நீங்கள் எழுப்பும் உரிமைப் பிரச்னை எந்த விதியின் அடிப்படையில்? அதைச் சொல்லுங்கள்.

திரு. க. சுப்பு : நான் சபை விதியின் கீழ்தான் இதை எழுப்புகிறேன். அதைப் படித்துக் காட்டுகிறேன்............ரூல் 184-ல் சொல்லப்பட்டிருக்கிறது, அதை வாசிக்கிறேன்......

A member wishing to raise a matter of privilege shall befor the commencement of the sitting of the day on which he proposes to raise the point, leave with the Speaker a written notice of the matter proposed to be raised.



1979 பிப்ரவரி 13] [திரு. க. சுப்பு]

Provided that in respect of a matter of privilege arising during the sitting of the House, the Speaker may waive such notice.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள்.......... நீங்கள் வாசித்த விதி எந்த அடிப்படையில் விளக்கம் தருகிறது என்பதைச் சொல்லுகிறேன். தயவு செய்து உட்காருங்கள்........

Rule 184 : A member wishing to raise a matter of privilege shall before the commencement of the sitting of the day on which he proposes to raise the point, leave with the Speaker a written notice of the matter proposed to be raised :

provided that in respect of a matter of privilege arising during the sitting of the House, the Speaker may waive such notice.

எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் இதைச் சொல்லுகிறேன். நான் சொல்வது தவறாக இருந்தால் திருத்துங்கள், ஏற்றுக்கொள்கிறேன். இந்த அவை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, ஏதாவது உரிமை மீறல் பிரச்னை ஏற்பட்டால் அப்போது உரிமைப் பிரச்னை எழுப்பலாம் என்றுதான் இருக்கிறது. (திரு. க. சுப்பு எழுந்திருந்தார்).
நான் சொல்லிவிட்டேன். இனிமேல் விளக்கம் வேண்டாம். தயவு செய்து உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பு அவர்கள் கொடுத்துள்ள உரிமை மீறல் பிரச்னைக்கு விளக்கம் தந்து, அதற்கான விளக்கத்தை தாங்கள் சொல்லிய பிறகு, நானும் அதற்கான விளக்கத்தைச் சொல்லிய பிறகு, இதன் மீதுள்ள தீர்ப்பை நாளைக்குச் சொல்லுவதாக தாங்கள் தெரிவித்த பிறகு, இதைப்பற்றி பேசிக்கொண்டிருப்பதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை, இப்போது மீண்டும் அதைப்பற்றி பேசிக்கொண்டிருப்பது, *சபையில் மரபை மீறியதாக தான் அமையும். ஆகவே அருள் கூர்ந்து திரு. சுப்பு அவர்கள் அமைதியாக *அவரது ஆசனத்தில் அமர்ந்து சபை நடவடிக்கைகளுக்கு உதவி செய்யுமாறு வேண்டுகிறேன்.

(திருவாளர்கள் க. சுப்பு, மு. அம்பிகாபதி ஆகியோர் எழுந்திருந்தனர்).

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) அறிவிக்கை கொடுக்கப்பெற்றுள்ள ஒத்திவைப்புத் தீர்மானங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். இப்போது வேண்டாம். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. எதிர்க்கட்சியிலுள்ள சில தலைவர்களும், எதிர்க்கட்சியிலுள்ள சில உறுப்பினர்களும் பல ஒத்தி வைப்புத் தீர்மானங்களைத் தந்து இருக்கிறார்கள். அதை எடுத்துக்கொள்வதா என்பது பற்றிய ஆய்வு என்னிடத்தில் இருக்கிறது. இதற்கிடையில் இன்று காலையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வேறு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் ஒத்திவைப்புத் தீர்மானங்களை எப்படி எடுத்துக்கொள்வது என்பது பற்றி முன்னால் இருந்த பேரவைத் தலைவர்கள் கொடுத்தத் தீர்ப்பை நான் தெரிவிக்கிறேன்....

"ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பல பொருள்பற்றி கொடுக்கிறார்கள். இருந்தாலும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தினால் அவற்றிற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் கூட எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த எந்த உறுப்பினர்கள் எதை எதைப் பற்றி பேச வேண்டும் என்று நினைக்கிறார்களோ, அவற்றைப் பற்றியெல்லாம் பேச இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் வாய்ப்பு இருக்கிறது......"

என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற ஒத்தி வைப்புத் தீர்மானங்களை எல்லாம் எடுத்துக் கொள்ள இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: பாயின்ட் ஆப் ஆர்டர். தாங்கள் தந்திருக்கின்ற தீர்ப்பில், ஒத்திவைப்புத் தீர்மானங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்ற விஷயங்களைப்பற்றி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் பேசிக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆகவே ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ள இயலாது என்று தெரிவித்து இருக்கிறீர்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது, அவ்வளவு தான், இனிமேல் அலுவல் ஆய்வுக் குழுவிற்கு சென்று இதைப்பற்றி விவாதிப்பதற்கு நாள் குறிக்கப்படும். அதன் முன்னால் இன்றையதினம் முக்கியமான பல பிரச்சினைகள் ஒத்திவைப்புத் தீர்மானங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே தங்களுடைய தீர்ப்பு இதை கட்டுப்படுத்தாது, ஆகவே ஒத்தி வைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ள இயலாது என்று தாங்கள் சொன்னது சரியாக வராது.

[முற்பகல் 10-50]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்பிக்கை இல்லாத் தீர்மானம் அவையினால் அனுமதி அளிக்கப்பட்ட பிறகு, 10 நாட்களுக்குள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற ஒரு நிலை



இருக்கிறது. அதற்குள்ளாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற ஒரு நிலை உருவானால், அதற்குப் பேரவைத் தலைவர் குறுக்கே நிற்கவில்லை. அலுவல் ஆய்வுக் குழு என்றைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முடிவெடுக்கிறதோ, அதை யொட்டியே ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்வது பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்த காரணத்தினால், ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது என்று தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் எந்தப் பொருளை பற்றி நம்பிக்கையில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதோ, அதைப் பற்றி பேச வேண்டியிருக்கும். ஒரு சில உறுப்பினர்கள்தான் பேச முடியும். அத்தனை உறுப்பினர்களும் பேச முடியாது. ஆகவே, ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க இயலாது என்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது சரியல்ல. நம்பிக்கை இல்லாத் தீர்மானம் என்பது எல்லாப் பிரச்சினைகளையும் உள்ளடக்கியதாகும். திரு. சங்கரய்யா, திரு. உமாநாத், திரு. ரமணி ஆகியோர்கள் கொடுத்திருப்பது, "Disapproval of the Labour Policy, Law and Order and Minority Community" போன்ற குறிப்பிட்ட பிரச்சினைகள். ஆனால், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சார்பில் திரு. சாதிக் பாட்சா அவர்கள் இந்த அரசின் மீதே நம்பிக்கை இல்லை என்று கொடுத்துள்ளதன் பேரில் எல்லாப் பிரச்சினைகளைப் பற்றியும் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இல்லையென்று சொல்ல முடியாது. எதையும் வாதாடலாம், அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில முக்கியமான தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன். சிறைச்சாலைகளிலே உள்ள நக்சலைட்டுகள் விடுதலைபோன்றது. மிகவும் அவசரமான பிரச்சினை........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் பேச்சை ஏற்றுக் கொள்ள முடியாது. மீறிப் பேசினால், நீக்க வேண்டிய நிலை வரும். அந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பாதீர்கள். அறையிலே வந்து கேளுங்கள்.

## (4) அரசினர் சட்ட முன் வடிவு.

### தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன். "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோரப்படுகிறது".

திரு. க. சுப்பு: பேரவை தலைவர் அவர்களே ஏற்கனவே இந்த பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களையெல்லாம் ரீ-கான்ஸ்டிடியூட் செய்வது சம்பந்தமாக இங்கே மசோதா வந்தபோது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விரைவில் தேர்தல் நடத்தப்படும். ஆறு மாதங்கள் காத்திருங்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அந்த விதிப்படி தேர்தல் நடத்தப்படவில்லை. இப்போது இருக்கக்கூடிய நிலைமையில், ஒன்றியங்களிலே உள்ள உறுப்பினர்களே நேரடியாக அந்த கவுன்சிலின் தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம். காத்திருக்க வேண்டியதில்லை. இந்த அரசாங்கம் பஞ்சாயத்து யூனியன்களிலும், பஞ்சாயத்து ஊராட்சி மன்றங்களிலும் ஆலோசனைக் குழு அமைத்ததிலே பல தகராறுகள் எல்லாம் ஏற்பட்டது. எனவே, இந்தத் தொல்லைகளை யெல்லாம் தீர்க்க அவைகளை ரீ-கான்ஸ்ட்டிடியூட் செய்வதுதான் சரியாகும். இப்படி ஆறு மாத கால அவகாசம் கொடுக்கப்பட்டு, 15 பஞ்சாயத்து யூனியன்களும், 359 மன்றங்களும் கலைக்கப்பட்டன. ஆனுல், ஆறு மாத காலம் ஆகிவிட்டது; இன்னும் தேர்தல் நடைபெறவில்லை.

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவராக இருந்த திரு. வி. வி. கிரி அவர்களும், திரு. பக்தவச்சலம் அவர்களும் சென்னை நகரம் இப்போது "City of harbages" ஆகிவிட்டதென்றும், அழகிய நகரமானது, அழுகிய நகரமாகி விட்டது என்றும் சொல்கிருர்கள். இப்போது எங்கு பார்த்தாலும் சரிவர லைட், ரோடு வசதிகள் போன்றவைகள் கிடையாது. எனவே, நான் கேட்பது இந்தப் பஞ்சாயத்துக்களை விரைவில் ரீ-கான்ஸ்டிடியூட் செய்ய வேண்டுமென்பதாகும். இதுதான் அடிப்படை உரிமை, தத்துவம் ஆகும். அந்தத் தத்துவத்திற்கு மதிப்புக்கொடுத்து, விரைவில் தேர்தலை நடத்தவேண்டும். அதை விட்டு விட்டு, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இப்படி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவது அடிப்படை உரிமையையே பறிப்பதாகும்.

இரண்டிலும் எதை வேண்டுமானாலும் செய்யலாம். மீண்டும் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதில் அர்த்தம் இல்லை. உடனடியாக தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறி இந்தத் திருத்த மசோதாவை எதிர்க்கிறேன்.



திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்த இருக்கின்ற இந்த மசோதாவை என் கட்சியின் சார்பில் எதிர்க்கிறேன். பஞ்சாயத்துக்களை வயபிள் யூனிட்டாக மாற்றியமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தபோதெல்லாம் அரசுத் தரப்பிலிருந்து சொன்ன பதில் "தேர்தலை நடத்த வேண்டியிருக்கும் காரணத்தால் பஞ்சாயத்துக்களை மாற்றியமைக்கும் பிரச்சினையை எடுத்துக் கொள்ள முடியாது" என்பதாகும். ஆனுல் பஞ்சாயத்துத் தேர்தலும் நடைபெறுவதாக இல்லை, தள்ளிப் போடப்பட்டுக் கொண்டே வருகிறது. உடனடியாக பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தவில்லை என்ருல் பஞ்சாயத்துக்களை வயபிள் யூனிட்டாக உடனடியாக மாற்றியமைக்க முன் வரவேண்டும். அசோக்மேத்தா கமிட்டி அறிக்கை வந்திருக்கிறது. மத்திய அரசு உடனடியாக அதை அமல்படுத்த வேண்டும். இப்போதுள்ள நிலைமையில் தேர்தலை உடனடியாக நடத்துவார்களா என்பது ஐயப்பாடாகவே இருக்கிறது. தற்போதுள்ள நிலையில் பஞ்சாயத்துக்களில் எந்தவிதமான வேலைகளும் ஒழுங்காக நடைபெறுவதில்லை. பல பஞ்சாயத்துக்களில் விளக்குகள் எரிவதில்லை. பஞ்சாயத்துக்களை மாற்றியமைக்க உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த மசோதாவை நான் வன்மையாக எதிர்க்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள ஏற்கனவே சீக்கிரமாகத் தேர்தல்கள் முடியுமென்று வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். ஆகவே, மீண்டும் தனி அதிகாரிகளுடைய காலத்தை நீட்டிப்பது என்பதற்காக அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து தற்போது அதை நிறைவேற்றுவது என்பது ஜனநாயக நடைமுறைகளுக்குப் பொருத்தமாக இல்லையென்ற என்னுடைய ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, முன்னால் பேசிய உறுப்பினர்கள் கருத்தை ஒட்டி எங்கள் கட்சியின் கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தல்கள் என்பது உடனடியாக நடத்தப்பட வேண்டிய ஒன்று. பஞ்சாயத்து யூனியன்கள், முனிசிபாலிடிகள் ஆகியவைகள் எல்லாம் ஸ்பெஷல் ஆபீசர்கள் கீழே நடப்பதால் பல்வேறு ஊழல்கள் நடைபெறுகின்றன. செய்யவேண்டிய காரியங்கள் செய்யப்படாமல் இருப்பதன் காரணமாக பல வேலைகள் தடைபட்டு சரியான நிர்வாகம் நடைபெற முடியாத நிலைமை இருக்கிறது. ரோடுகள் மோசமாக் இருக்கின்றன. ஆகவே, தேர்தல்கள் நடந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வந்தால் வேகமாகக் காரியங்கள் நடைபெற உதவும். இது பொதுமக்கள் கருத்து. ஆகவே, உடனடியாகத் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, பல தடவைகள் இந்தத்தேர்தல்கள் நடைபெறும் என்ற அறிவிப்புகள் வந்தன. பிப்ரவரியில் தேர்தல், ஆகஸ்டில் தேர்தல் என்று போன ஆண்டு பல தடவை அறிவிப்பு வந்திருக்கிறது. இருந்தாலும் இப்போது மீண்டும் தேர்தலை ஒத்திப்போடுவது சரியல்ல. எல்லா இடங்களிலும் ஏற்பட்டிருக்கக்கூடிய உணர்வு நியாயமானது. அது மாத்திரமல்ல. இப்போது ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்றும் நடப்பதில்லை, சர்வாதிகாரம் நடக்கிறது. அங்கு அமைக்கப்பட்டிருக்கும் கூட்டுக் கமிட்டிகளில் கூட பிரதிநிதித்துவம் இல்லை. இப்படிப்பட்ட முறை நீடிப்பதை எங்கள் கட்சியின் சார்பாக நாங்கள் விரும்பவில்லை. இந்த மாதிரி ஊராட்சி தேர்தல்கள், நகராட்சித் தேர்தல்களைத் தள்ளிப் போடுவது சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-00].

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துத் தேர்தல்களை காலவரம்பின்றி இப்படித் தள்ளிக்கொண்டே போவது மிகவும் வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது ஜனநாயக விரோதமானது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். பஞ்சாயத்துத் தேர்தல்களை தள்ளிவைப்பதற்குச் சொல்லப்படுகிற காரணங்கள் பஞ்சாயத்து அமைப்புகளை மாற்றியமைப்பதற்குக் காலம் தேவை, வோட்டர் லிஸ்டுகளை தயார் செய்வதற்குக் காலம் தேவை என்று காரணங்கள் திரும்ப திரும்பச் சொல்லப்படுவது தேவையற்றது மட்டுமன்றி முறையுமற்றது. வோட்டர் லிஸ்ட் தயாரிப்பது என்பது ''It is a continuous process.'' சமுதாயம் உருவாகிக்கொண்டே தான் இருக்கும். அவர்களை எல்லாம் வோட்டர் லிஸ்ட்டிலே சேர்க்க வேண்டிதான் இருக்கும், அந்தக் காரணத்தை வைத்துத் தேர்தலை தள்ளிக்கொண்டே போவது சரியல்ல. இன்றைக்கு உள்ள நிலைமையைப் பார்த்தால் விளக்குகள் எரியவில்லை, தெருக்கள் கூட்டப்படுவதில்லை, சிவிக் அமெனிட்டிஸ் என்று சொல்லப்படுகிறவைகள் எதுவும் இல்லை, அந்தக் காரணத்தினாலே இன்றைக்கு சில ஊர்களிலே வரிகொடா இயக்கங்கள் நடத்துவதற்கான யோசனைகள் இருக்கின்றன. இன்றைக்கு ஆலோசனைக் குழுக்கள் போட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கூடுவதே இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த அரசுக்கு மக்களைச் சந்திப்பதற்கு தைரியம் இருக்கவேண்டும், பஞ்சாயத்து அளவிலே மக்களைச் சந்திப்பதற்கு பயம் இருக்கிறது, தைரியம் இருக்க வேண்டும். பொதுமக்களைச் சந்திப்பதற்கு இந்த அரசுக்கு தைரியமில்லை என்பது தான் காரணம். மாநகராட்சி அளவிலேயிருந்து பஞ்சாயத்துக்கள் வரையில் தேர்தல்களை நடத்தியாகவேண்டும். அதற்குத் தடங்கலாக ஒரு சட்டம் கொண்டுவந்தால் அது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது, ஆகவே இந்தச் சட்டத்தை நான் வன்மையாக எதிர்க்கிறேன்.

திரு. துரைமுருகன்: ஒரு கருத்தை மட்டும் சொல்லி விடுகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கட்சிக்கு ஒருவர் தான், அமருங்கள்.

திரு துரை முருகன்: எந்த விதியிலே அப்படியிருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படித்தான் மரபு இருக்கிறது, அமருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :—பேரவை முன்னுள்ள கேள்வி :—

''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன் வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோரப்படுகிறது'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நான் இந்தச் சட்டமுன் வடிவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

## (5) ஆளுநர் உரைக்கு நன்றிகூறும் தீர்மானம் — விவாதம் தொடர்ச்சி.

திரு. ரா. பெரியசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின்மீது இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேச வாய்ப்பு அளித்தமைக்காக நான் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சர்க்கார் விவசாயிகளுக்கு எந்தவிதமான நன்மையும் செய்யவில்லை. இந்த கவர்னர் உரையில் அதுபற்றி எதுவும் சொல்லப்படவில்லை. விவசாயிகளைப் பொறுத்துத்தான் இந்த மாமன்றத்திலே 100க்கு 75 பேர்கள் வந்திருக்கிறார்கள். [மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை] எல்லோருமே விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான். இதற்கு முன்னாலே இருந்த சர்க்காரானாலும், சரி, இப்போது இருக்கிற சர்க்காரானாலும் சரி விவசாயிகளுக்கு எதுவுமே செய்யவில்லை. தற்போது வெங்காயம், என்ன விலை விற்கிறது. ஒரு ஏக்கர் வெங்காயத்திற்கு எவ்வளவு பணம் செலவிட வேண்டியிருக்கிறது. மருந்து அடிப்பதற்கும் மற்ற செலவுகளுக்கும் எவ்வளவு செலவாகிறது. இந்த நிலையில் எந்த விதமான சலுகையும் விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. அடுத்து கரும்பு விவசாயம் பண்ணினாலும் சரி நெல் விவசாயத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, கடலை எடுத்துக் கொண்டாலும் சரி இதுவரையில் யாருமே பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை. எந்த அரசாங்கமும் அதற்கு

[திரு. ரா. பெரியசாமி] [1979 பிப்ரவரி 13

ஒரு நடவடிக்கையை எடுக்கவில்லை. விவசாயிகளைத் தான் இந்த நாடே நம்பியிருக்கிறது. கிராமங்களிலே பொதுக் கூட்டங்களிலே பேசுகிறபோது விவசாயிகள் தான் இந்த நாட்டின் முதுகெலும்பு என்று பேசுகிறார்கள். எல்லாக் கட்சி காரர்களாக இருந்தாலும் அப்படித்தான் பேசுகிறார்கள். ஆனால் அவர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படவே இல்லை. மோட்டார், பம்புசெட், உரம் இப்படி எதை எடுத்துக் கொண்டாலும் செலவினங்கள் தான் அதிகமாகின்றன. நெல் 60 ரூபாய் தான் விற்கிறது. ஆனால் உரம் ஒரு மூட்டை 95 ரூபாய் விற்கிறது. இரண்டு மூட்டை நெல் விற்றால் தான் ஒரு மூட்டை உரம் வாங்கமுடியும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே எந்தச் சர்க்கார் ஆண்டாலும் விவசாயிகளுடைய பிரச்சினை தீர்க்கப்படவேயில்லை. தற்போது விவசாயிகளின் சங்கங்கள் சார்பாக பல ஊர்களிலே வரிகொடா இயக்கங்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மற்ற அதிகாரிகளை எடுத்துக் கொண்டாலும் மற்ற நிறுவனங்களை எடுத்துக் கொண்டாலும் ஒவ்வொருவரும் அவர்களுக்கென்று சங்கத்தை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆண்டுதோறும் தங்களுக்கு சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று கோஷமிடுகிறார்கள், போராடுகிறார்கள் அதனால் 10, 15 ரூபாய் அவர்களுக்கு ஏற்றிக் கொண்டே போகப்படுகிறது. அவர்களுக்குக் கொடுக்கக் கூடியதை கொடுக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஏனென்றால் அண்டை மாநிலங்களில் நெல்லுக்கு மூட்டை ஒன்றுக்கு 130 ரூபாய் 125 ரூபாய் என்று விலை நிர்ணயித்திருக்கிறார்கள். அதே மாதிரி தமிழ் நாட்டு விவசாயிகளுக்கு விலை கிடைக்க வழிசெய்ய வேண்டும். ஏனென்றால் புரட்சித் தலைவர் ஆட்சி நடக்கிறது. புரட்சித் தலைவரே சொல்லியிருக்கிறார் "காடு விளைஞ்சென்ன மச்சான் நமக்கு கையும் காலும்தானே மிச்சம்" என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த விவசாயிகளைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஓட்டு வாங்கச் செல்லும் பொழுது மட்டும் விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்புகள் என்று சொல்கிறார்கள். அவர்களும் ஏமாந்து ஓட்டைப் போட்டு விடுகிறார்கள். இப்பொழுது அவர்கள் புரட்சி செய்யும் நிலைமை உருவாகியிருக்கிறது. கிராமந்தோறும் எல்லா விவசாயிகளும் ஒன்று திரண்டு கொண்டிருக்கும் நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது. அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் விவசாயிப் பிரச்சினை பற்றி புரட்சி வரும். அதற்குப் பிறகு அரசு நடவடிக்கை எடுப்பதைவிட முன்கூட்டியே தலையிட்டு அவர்களுக்கு என்னென்ன வேண்டுமோ அவைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் என்று கார்டுகள் கொடுக்கிறார்கள். ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டால் 5,000, 10,000 சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களில் பத்து அல்லது நூறு பேர்களுக்குக் கூட



1979 பிப்ரவரி 13] [திரு. ரா. பெரியசாமி]

இந்தக் கார்டுகள் கிடைக்கவில்லை. ஏனென்றால் சிறு விவசாயிகள் குறு விவசாயிகள் என்று எடுத்துக் கொண்டால் யார் இந்தப் பலனை அனுபவிக்கிறார்கள் என்றால் ஒரு தகப்பனாருக்கு 10 ஏக்கர் நிலம் இருந்தால் அவருக்கே நான்கைந்து பிள்ளைகள் இருக்கும். எனவே அதை நான்கைந்து பாகமாகப் பிரித்து அவர்களுக்குக் கொடுத்து அவர்களை சிறு விவசாயிகள் என்றும் குறு விவசாயிகள் என்றும் சொல்லி அந்தச் சலுகைகள் அவர்களுக்குப் போய்விடுகிறது. இதனால் உண்மையான சிறு விவசாயிகள் குறு விவசாயிகளுக்கு அந்தக் கார்டுகள் கிடைக்கவில்லை. 20 ஏக்கர் 30 ஏக்கர் உள்ளவர்கள் சொந்த பந்தம் என்று பிரித்து வைத்துக்கொண்டு இரண்டு மூன்று ஏக்கர் என்று பிரித்து வைத்துக்கொண்டு இந்தக் கார்டுகளை வாங்கி விடுகிறார்கள். இதனால் குறிப்பாக உண்மையான சிறு விவசாயிகள் பம்பு செட் வாங்க நினைத்தால் வாங்க முடிவதில்லை. பம்பு செட்டுகளை எங்கு வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் விவசாயிகள் வைத்துக் கொள்ளலாம் என்று அரசு உத்திரவிட்டும்கூட சிறு விவசாயிகள் கடனுக்காக பேங்குகளை அணுகும்பொழுது முதலில் இருந்தமாதிரி 5,000 அடிக்கு இடையிலே இருந்தால் கொடுக்க முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். இந்தச் சட்டத்தைப் பற்றி கலெக்டரின் மூலம் தெளிவுப்படுத்தவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இதைப்பற்றிக் கேட்டால் செய்யலாம் என்று சொல்கிறாரே தவிர இதுவரையில் உப்புலியாபுரம் தொகுதி முசிறி தொகுதி, பெரம்பலூர் தொகுதி ஆகிய இடங்களில் 5,000 பம்பு செட்டுகளுக்கு சிறு விவசாயிகளுக்கு லோன் கிடைக்கவில்லை. பேங்குகள் மூலம் கடன் கிடைக்கவில்லை. தற்பொழுது வசதியுள்ளவர்கள் தனிப்பட்ட முறையிலே மோட்டார் பம்பு செட்டு வைத்திருக்கிறார்கள். வசதியில்லாதவர்களுக்குப் பம்பு செட்டு கிடைக்கவில்லை. எனவே அவர்களுக்கும் உடனடியாகக் கிடைக்கும் வழியில் பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கிராம உத்தியோகஸ்தர்களைப் பற்றி எடுத்துக் கொண்டால் தோட்டி முதல் தொண்டமான் வரையில் பென்ஷன் கொடுக்கிறார்கள். இறந்தால் 10,000 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் கிராம அதிகாரிகளை 60 வயது ஆகிவிட்டால் வீட்டிற்கு அனுப்புகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் கொடுக்கப்படவில்லை. அவர்களுடைய பிள்ளைகளுக்கு கிராம உத்தியோகஸ்தர் வேலைக்கு முதல் சலுகை கொடுக்க வேண்டும். கிராமக் கணக்குப் பிள்ளைகள், வெட்டியான், தலையாரி ஆகியவர்களின் நிலைமைபற்றி வருவாய்த்துறை அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே இவர்களுக்கு முதல் சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராம உத்தியோகஸ்தர்களுக்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து அவர்களுடைய குறைகளைத் தீர்த்து வைக்க வேண்டும். சமீப காலத்தில் கூட கிராம உத்தி

யோகஸ்தர்கள் சங்கம் என்று போட்டு நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும் இல்லை யென்றால் அவர்களுக்குப் பென்ஷன் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் அவர்கள் இறந்துவிட்டால் அவர்களது குடும்பத்திற்கு அரசு ஊழியர்கள் இறந்தால் கொடுப்பது மாதிரி பத்தாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். எந்தச் சர்க்கார் வந்தாலும் அரசு ஊழியர்களுக்கு 10 ரூபாய் 15 ரூபாய் உயர்த்திக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் விவசாயிகளுக்கு எந்தச் சர்க்கார் வந்தாலும் எந்தவிதமான நன்மையும் செய்யவில்லை.

அடுத்தபடியாக பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் எந்த ஊராட்சி மன்றத்திலும் விளக்குகள் சரிவர எரிவதில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் முன்பெல்லாம் ஒரு பஞ்சாயத்துப் போர்டு தலைவர் அவருக்கு இஷ்டப்பட்ட கடைக்குச் சென்று நல்ல சாமான்களை வாங்கிக் கொண்டு வந்து போடுவார்கள். ஆனால் தற்பொழுது இரண்டு வருஷ காலமாக வேறொரு மாநிலத்தைச் சார்ந்த யாரோ குறிப்பிட்ட ஒருவரிடம் வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒவ்வொரு யூனியனிலும் பல்புகளைத் திருடிக் கொண்டு செல்கிறார்கள். அதைத் தடுப்பதற்காக பஞ்சாயத்து லைட் என்று பெயர் எழுதி அதைத்தான் போட வேண்டுமென்று சொல்கிறார்கள்.

[முற்பகல் 11–10]

எந்த ஊருக்குப் போனாலும் பஞ்சாயத்து லைட் எரியவில்லையென்று எல்லா இடங்களிலும் சொல்கிறார்கள்; எங்கு போனாலும் என்ன சட்டசபை உறுப்பினராக இருக்கிறீர்கள்? பல மாதங்களாக லைட் எரியவில்லை கவனிக்க மாட்டேனென்கிறீர்களே, என்கிறார்கள். பல்புக்காக 10, 15 ரூபாய் வாங்கிக் கொள்கிறார்கள். வெளியிலே, கடையிலே வாங்கிப் போட்டால் 6, மாதம் 8 மாதம் காரண்டியாக எரிகிறது. ஆனால், பஞ்சாயத்திலே வாங்கிப் போடுகின்ற பல்புகள் 8 நாள், 10 நாள் கூட எரியவில்லை. பொங்கலுக்கு போட்ட லைட்டுகளில் பாதி ஃப்யூஸ் ஆகிவிட்டது. அந்த லைட்டுகளை உடனடியாக வாங்கிப் போட்டு, முன்பு மாதிரி எரிய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்ற வருஷம் எங்கள் தொகுதியில் பல பகுதிகள் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டன. திருச்சி ஜில்லாவிலே புளியஞ்சோலை, கூடனார் பகுதிகளிலே புயல் காரணமாக, பெரும் பாராங்கற்களாலும் மணலாலும் விவசாய நிலங்கள் மூடப்பட்டிருக்கின்றன. அவற்றை அப்புறப்படுத்த இந்தச் சர்க்கார் உதவிப் பணம் கொடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் போய் அணுகினால் ஒரு ஏக்கருக்கு ரூ. 15,000 தேவைப்படும், ஆகவே சர்க்கார் செலவு செய்யாது என்று சொல்கிறார்கள். நான் ஒரு ஏக்கருக்கு ரூ. 3,000 கடன் கொடுத்தால் போதும். அதைச் சரி செய்து, அந்தக் கடனைத் திருப்பி விவசாயிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று விவசாயத் துறை அமைச்சரை பலமுறை அணுகிக் கடிதம் மூலமாகத் தெரிவித்தோம். ஆனால், இதுவரை ஒன்றும் செய்யவில்லை. ஆகவே, சென்ற வருஷம் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ. 3,000 கடனாவது கொடுத்து உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக், கொள்கிறேன்.





வெள்ளத்தாலும் புயலாலும் சென்ற வருடம் பாதிக்கப்பட்ட ரோடு, பாலம், இவற்றைச் சரி செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இரண்டு வருஷம் ஆயிற்று. என்னுடைய தொகுதியில் ஒரு வேலையும் செய்யவில்லை.

புளியஞ்சோலை மட்டுமல்ல மேட்டுருக்கு இடையிலே விசும்பால் சமுத்திரம் பகுதியும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கும் ஒன்றும் செய்யவில்லை. இப்பொழுது வந்தாலும் அதைப் பார்க்கலாம்.

செம்புளிச்சாம்பட்டி, வெண்ணாடுகோம்பை இந்த இரண்டு பஞ்சாயத்துக்களிலே 25 ஊர்கள் இருக்கின்றன. ஆனால். அங்கு லைட் வசதியும் இல்லை, ரோடு வசதியும் இல்லை. நாம் எல்லா, கிராமங்களிலும் மின் விளக்கு எரிய விட வேண்டுமென்று திட்டம் போட்டிருக்கிறோம். ஆனால், குறிப்பிட்ட இந்த 2 பஞ்சாயத்துக்களிலும் மின் வசதியும் இல்லை. ரோடு வசதியும் இல்லை. பலமுறை நான் அமைச்சரை அணுகி இது பற்றிக் கூறியுள்ளேன். ஒன்றும் செய்யவில்லை. ஆகவே, அதையும் கவனிக்கவேண்டும்.

நரசிங்கபுரம்—ஒட்டம்பட்டி சாலை, நாக நல்லூர்—குக்கிராம்பட்டி கோப்பை சாலை, பி. மேட்டூர் —கள்ளாத்துக் கோம்பை சாலை ஆகியவை எல்லாம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு சேதம் அடைந்த ரோடுகள். இதுவரை அதே நிலையில் தான் அவை இருக்கின்றன. போக்குவரத்துத்துறை அமைச்சரிடம் பலமுறை சொல்லியும், இதுவரை ஒன்றுமே செய்யவில்லை.

அடுத்து, உப்புலியாபுரம் தொகுதிலே உள்ள துறையூரிலே பெரிய நகராட்சி—முனிசிபாலிட்டி இருக்கிறது. அந்த முனிசிபாலிட்டியிலே எந்த வேலையும் நடைபெறவில்லை. அந்த முனிசிபாலிடி ஏரியாவில் லைட் வசதியும் இல்லை. ரோடு வசதியும் இல்லை. முன்னாலிருந்த சர்க்கார் காலத்தில் முனிசிபாலிட்டியிலே டாங்க் கட்டினார்கள். துறையூர் மக்களுக்கு தண்ணீர் கொடுக்கிறேன் என்று டாங்க் கட்டினார்கள். ஆனால், இதுவரை வேறு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. நானும் அமைச்சரை அணுகி பலமுறை கோரிக்கை கொடுத்துள்ளேன். குடிநீர் வாரியத் தலைவரிடமும் பலமுறை நேரிடையாகவும் எழுத்து மூலமாகவும் தெரிவித்

துள்ளேன். ஆனால், இதுவரை எந்த வேலையும் செய்ய
வில்லை அந்தத் திட்டத்தில் மொத்த எஸ்டிமேட் ரூ. 66
இலட்சம். அதில் எல். ஐ. சி. மூலமாக வாங்கிய கடன் ரூ. 35
இலட்சம், அந்த ரூ. 35 இலட்சத்தில் குடிநீர் வடிகால் வாரி
யம் செலவு செய்தது ரூ. 11 இலட்சம்தான். ஆனால்,
முனிசிபாலிட்டியின் மொத்த வருமானமான ரூ. 8 இலட்சத்தில்
ரூ. 3 இலட்சம் வட்டியாகக் கட்ட வேண்டியிருக்கிறது.
அதாவது, ரூ. 35 இலட்சத்துக்கும் வட்டி செலுத்துகிறது முனிசி
பாலிட்டி. அதோடு, மெய்ன்டெனன்ஸ் செலவு ரூ. 5 இலட்சம்
வருகிறது. ஆகவே, தனது மொத்த வருமானமான ரூ. 8
இலட்சத்தில் எந்த வேலையையும் முனிசிபாலிட்டியால் செய்ய
முடியவில்லை. இந்த அளவில் அந்தக் குடிநீர்த் திட்டம் இருக்
கிறது.

ஒன்று புளியந்தல் ஆற்றிலே தண்ணீர் எடுக்க வேண்டும்
அதற்கும் மேலாக காவிரி ஆற்றிலே நிரந்தரமாகத் தண்ணீர்
இருக்கிறது. டாங்க் கட்டி தண்ணீர் கொடுத்தால், மடக்குளம்
தாத்தையங்கார் பேட்டை, இருகாடு, முருகூர் போன்ற ஊர்
களுக்குப் பயன்படும். (மணி அடிக்கப்பட்டது). நாங்கள்
சொல்வதை ஆளுங்கட்சி ஒன்றும் செய்வதில்லை. எங்
களுக்குப் பேசுவதற்காவது வாய்ப்புக் கொடுங்கள். நான் இது
பற்றி நேரில் விவசாய அமைச்சரிடத்திலும், பி.டபிள்யூ.டி.
அமைச்சர் இடத்திலும் சொன்னேன் ஏரிகள் நிறையஇருக்கின்றன
மங்கப்பட்டி, முருங்கப்பட்டி, நட்டவலம்பட்டி, ஓ கிருஷ்ணை
புரம், சோடனபுரம் போன்ற பல ஏரிகள் இருக்கின்றன இருபதுக்
கும் மேற்பட்ட ஏரிகள் இருக்கின்றன. விவசாயிகளுக்குச் சலுகை
செய்ய வேண்டுமானால், தற்போது அமலில் உள்ள 10, 12
திட்டத்தில் ஒரு 2 திட்டத்தையாவது சீக்கிரம் முடித்துத் தர
வேண்டும். அதுவும் உடனடியாகச் செய்ய வேண்டும். (மணி
அடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம்
முடித்துக் கொள்ளுங்கள். ஒரே நாளில் அத்தனையும் சொன்
னால் மறந்து விடுவார்கள்.

திரு. ரா. பெரியசாமி : அடுத்து மதுவிலக்கு பற்றிச் சொன்
னார்கள். மதுவிலக்குத் திட்டம் நல்லதுதான். ஆனால் அது
அமுலில் இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. காய்ச்சு
கிறவர்கள் இருக்கிறார்கள். விடிய விடிய போலீசார் சுற்றி
இரவோடு இரவாக யாரையாவது பிடித்துத் போகிறார்கள்.
அவர்களை அடியோதண்டமாக அடித்து நொறுக்குகிறார்கள்.
சென்னையிலே இருப்பவர்கள் பக்கத்தில் உள்ள திருப்பதியிலே
சென்று குடிக்கிறார்கள் கோவையிலே உள்ளவர்கள்
கேரளாவில் சென்று குடிக்கிறார்கள் நாகர்கோவி
லிலே உள்ளவர்கள் கேரளாவிற்குச் சென்று குடிக்கிறார்கள்.
அடுத்து தஞ்சாவூரிலே உள்ளவர்கள் பாண்டிச்சேரி, காரைக்கால்





போன்ற இடங்களுக்குச் சென்று குடிக்கிறார்கள் அப்படி இருக்
கும்போது நடுப்பகுதியிலே உள்ளவர்கள் மட்டும் என்ன பாவம்
செய்தார்கள்? நீங்கள் செய்வது துரோகம். யார் குடிக்கா
மல் இருக்கிறார்கள்? சாராயத்தின் விலை இப்போது ஏறி
விட்டது. ரூ. 2, ரூ. 4-க்கு விற்ற சாராயம் இப்போது ரூ. 10,
ரூ. 12 என்று விலை ஏறிவிட்டது. ஒன்று மதுவிலக்கை தீவிர
மாக அமுல்படுத்துங்கள் அல்லது எடுத்து விடுங்கள். இது
என்னுடைய கட்சியின் கருத்தல்ல. என்னுடைய சொந்தக்
கருத்து.

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்
கள் மதுவிலக்கை எடுத்துவிடவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.
அது அவருடைய கருத்தா அல்லது அவர் சார்ந்திருக்கிற காங்கிரஸ்
கட்சியின் கருத்தா?

திரு. ரா. பெரியசாமி : என்னுடைய கருத்துத்தான். கட்சி
யின் கருத்து அல்ல. இதற்கெல்லாம் நல்ல தீர்வு காண வேண்
டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய சிறிய உரையை முடித்
துக் கொள்கிறேன்.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரி
வித்து இங்கே முன்மொழியப்பட்ட தீர்மானத்தின் மீது பேச
வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த
உரை துவக்கிய நேரத்தில் இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு
எதிர்கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் எல்லாம் வெளிநடப்
புச் செய்த நேரத்தில் அவர்கள் பேசிய உரைகளிலே இருந்து
இந்த அரசு தொழிலாளர் கொள்கையை பிற்பட்ட முறையில்
கடைப்பிடிக்கிறது என்றும் வன்முறையைத் தூண்டிவிடுகிறது
என்றும், இந்த அரசு சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கத் தவறி
விட்டது என்றும் சொல்லி வெளியே சென்றதைப் பார்த்தோம்.
அதே நேரத்தில் எந்த அரசும் சந்திக்காத வகையில் மாண்புமிகு
புரட்சித் தலைவரின் அரசு பல போராட்டங்களையும் வன்முறைச்
சம்பவங்களையும், எதிர்பாராதவகையில், இயற்கையின் சீற்றத்
தையும் சந்தித்து எதிர்நீச்சல் போட்டு, எதிர்கட்சிகளின் பற்பல
சோதனைகளை முறியடித்த காரணத்தினால், இப்போது எதிர்க்
கட்சிகள் செய்கின்ற விமர்சனத்தை விட வேறு விதமாக எதிர்
பார்ப்பது தவறு என்று நான் கருதுகிறேன்.

[முற்பகல் 11-20]

அதே நேரத்தில் கடந்த காலத்தில் மைக்கின் செயினைல்
தொழிலாளர் பிரச்னைகளைச் சந்தித்தவர்களும், அந்த மைக்கின்
செயினுக்கு அடிபணிய மறுத்து தங்களுடைய பிரச்சனைகளுக்குத்
தீர்வு காண முன்வந்தவர்களும், இன்றைய நிலையில் ஒன்றாக
இணைந்து; ஒருங்கிணைந்து இந்த அரசைக் கவிழ்ப்பதற்காக இந்த

மன்றத்தில் கூடியிருக்கும் காட்சியைத் தமிழகத்தின் அத்தனை மக்களும் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். தமிழ்நாட்டு மக்கள் பல்வேறு நேரத்தில் தங்களுடைய கருத்தை இந்த அரசுக்கு ஆதரவாகத் தெரிவித்து இருக்கிறார்கள். கடந்த காலத்தில் நடைபெற்ற பல்வேறு தேர்தல்களில் தெரிவித்து இருக்கிறார்கள். அப்படித் தேர்தல் வருகிற நேரத்தில் எல்லாம் நம்முடைய ஆதரவையும் நம்முடைய வாக்குகளையும் கோரிவரும் காம்ரேடுகள் இப்போது தங்களுடைய பணிமுடிந்து விட்டது என்ற காரணத்தாலோ என்னவோ தெரியவில்லை இப்போது தங்களுடைய போக்கை மாற்றிக் கொண்டு இந்த மன்றத்தில் அமர்ந்து இருக்கும் காட்சியைப் பார்க்கிறோம்.

அவர்கள், இந்த அரசு பினாமி நிலங்களைக் கைப்பற்றுவதையும், இந்த அரசு ஏற்றுக் கொண்டு இருக்கிற நிலங்களை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கும், ஏழை மக்களுக்கும் வழங்குவதற்காக நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறதே அதனை வெகுவாகப் பாராட்டுவார்கள் என்று எதிர்பார்த்தேன். வேலை அற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு தங்களுடைய அரசைத் தவிர வேறு யாருக்கும் பாத்தியதை இல்லை என்று எண்ணிக்கொண்டு இருந்த கம்யூனிஸ்ட் கட்சிகள், புரட்சித் தலைவர் தலைமையில் இயங்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி வேலை அற்றவர்களுக்கு உத்தரவாதம் வழங்கும் வகையில் ஒரு புதிய திட்டத்தை ஆளுநர் உரையில் அறிவித்து இருப்பதைப் பார்த்து விட்டு உண்மையிலே அச்சப்படுகிறது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சிறு தொழில்கள் அபிவிருத்தி பற்றியும், மற்றும் பல தொழில்கள் பற்றியும் அடுக்கடுக்காக நாம் சொல்கிறோம். அப்படிச் சொல்கிற நேரத்தில் சிறு தொழிலில் துவங்குகிற காரணத்தால் தொழிலாளர்கள் தங்கள் கையை விட்டு விட்டுப் போய்விடுவார்களோ என்று அவர்களுக்கு அச்சம் இருக்கக்கூடும். அந்த அச்சத்தைப் போக்கும் விதத்தில்தான், வேதாரண்யத்தில் உப்பு உற்பத்தித் தொழிற்சாலையையும், தூத்துக்குடி ஆல்காலின் தொழிற்சாலையையும் உருவாக்கி, முடிந்தால், உங்களுடைய தொழிற்சங்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள் என்ற சவாலை புரட்சித் தலைவர் அவர்கள் விட்டு இருக்கிறார் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து மிகவும் முக்கியமாக பேசப்பட்டது வன்முறைச் சம்பவங்கள் பற்றியதாகும். நாட்டிலே ஏதோ நடக்கக்கூடாத சம்பவங்கள் நடந்து இருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்கிறோம். முக்கியமாகச் சொல்லப்போனால் மதிப்பிற்குரிய பாராளுமன்ற உறுப்பினர் முருகையன் அவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து இந்த நாடு மிகவும் துக்கத்துடன் பார்த்துக் கொண்டு இருக்கிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அந்தத் துக்கத்தில் பங்குகொள்ள எந்த





விதமான கருத்து வேறுபாடும் கொள்ளவில்லை. அப்படி இருக்கிற நேரத்தில் இங்கேயுள்ள எதிர்க்கட்சிகள் எல்லாம், இந்தக் கழக ஆட்சியில் மட்டும் தான இது போன்ற மோசமான நிலைமைகள் இருக்கின்றன என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். சொல்லப்போனால், இந்த நாட்டிலே இதற்கு முன்பு அரசியலில் ஈடுபட்டிருந்த பல தலைவர்கள் இது போன்ற சம்பவங்களைச் சந்திக்கவில்லையா என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. உபாத்தியாயா-ஜனசங்கத் தலைவர் ரயிலில் வருகிற போது கொல்லப்பட்டார். சமஸ்திப்பூரில் மதிப்பிற்குரிய ரயில்வே அமைச்சராக இருந்த எல். என். மிஸ்ரா கொல்லப்பட்டு இருக்கிறார். தமிழகத்தில் எடுத்துக் கொண்டால், திராவிட முன்னேற்றக்கழக ஆட்சிக்காலத்தில் அடுக்கடுக்காகக் கொலைகள் நடைபெற்று இருக்கின்றன. அவற்றையெல்லாம் சொல்லிக் கொண்டே போகலாம்; பூலாவரி சுகுமாரன், வத்தலக்குண்டு ஆறுமுகம், சிதம்பரம் பாலசுப்பிரமணியம், இப்படியெல்லாம் கொலைகள் நடந்து இருக்கின்றன. அந்தக் காலத்தில் அவற்றைக் கண்டிக்க, வகையற்ற, வக்கற்ற, நாதியற்ற கட்சிகள் ஏதோ இடையென்று நடந்து விட்ட சம்பவத்திற்கு, அதற்காக நாங்கள் வருத்தம் தெரிவித்து இருக்கிறபோது நாங்கள் சதி செய்து அவர் கொலை செய்யப்பட்டது போல் ஒரு மாயையை உருவாக்கும் காட்சியை நாம் மெத்த வருத்தத்தோடு பார்க்கும் சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் நடைபெற்ற சம்பவம்—தொடர்ச்சியாக ஒரு சில விஷயங்களைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நான் அதைப்பற்றிச் சொல்லும்போது சில அருமை நண்பர்களுக்கு அது ஆத்திரத்தைக் கிளப்பக்கூடும். நடைபெற்ற சம்பவங்களை இந்த மன்ற உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். ராதாபுரம் தொகுதியில் நடைபெற்றது வன்முறை என்று அவர்களால் சொல்லப்பட்டு, எங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று.

கடந்த மாதம் 31-ந் தேதி கலைஞர் கருணாநிதி அவர்கள் ராதாபுரத்திற்கு வந்தபோது செபஸ்டியான் என்ற ஒரு இளைஞன் கருணாநிதி சென்ற காரின்மீது உளியை வீசியதாகச் சொல்லப்படுகிறது. எங்களுக்கு அதைப்பற்றித் தெரியாது. அதற்குப் பிறகு காவல் துறையினரால் அந்த இளைஞன் பிடிக்கப்பட்டு, காவலில் வைக்கப்பட்டான். அவன்மீது 307 பிரிவின்கீழ் வழக்கு தொடுத்திருக்கிறார்கள். அந்த நேரத்தில் காவல்துறை அதிகாரியாக இருந்தவர் கோதண்டராமன் என்பவர்; அவர் தஞ்சைமாவட்டத்தைச் சேர்ந்தவர்; இன்னும் சொல்லப்போனால் அவர் கலைஞருக்கு மிகவும் நெருக்கமானவர்; அவரோடு தொடர்பு உடையவர் என்று சொல்லப்படுகிறது. அப்பேர்பட்டவர் ஏற்பாடுகள் செய்த பாதுகாப்பில்தான் கலைஞர் இருந்தார். அந்த ஏற்பாட்டில் எந்த விதமான தவறோ அல்லது கோளாறோ இருக்காது என்று நான் கருதுகிறேன். அவர்களும் கருதுவார்களென நினைக்கின்றேன். ஆனால் எனக்கு இருக்கக்கூடிய மிகப் பெரிய அச்சம்

[திரு. யா. சை. மு. யூசுப்] [1979 பிப்ரவரி 13

எல்லாம் ஒரு உளி எவ்வாறு ஒரு பக்கத்துக் கண்ணாடியை உடைத்துக்கொண்டு, உள்ளே போய் அடுத்தக் கண்ணாடியையும் துளைத்துச் சென்று கீழே விழுந்திருக்கும் என்பதுதான். அப்படி யிருந்தால் அது சாதாரண உளியாக இருக்காது.

ஆகவே, அந்த உளியைப்பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும், ஆய்வு நடத்த வேண்டும். பரசுராமனின் உளிதான் அவ்வாறு செல்ல முடியும். ஒரு சாதாரண உளியால் அப்படித் துளைத்துச் செல்ல முடியாது. பரசுராமன் யார் என்பது புராணம் படித்தவர் களுக்குத் தெரியும்; இந்துக்களுக்குத் தெரியும். சாதாரண உளியாக இருந்தால் அடிபட்ட அந்த இடத்திலேயே கீழே விழுந்து விடும்.

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u> மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பிரச்சனையைக் கிளப்பி, குற்றஞ்சாட்டுவது போல் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் சம்பவத்தை நேரில் பார்த்தாரா அல்லது உளி பாய்ந்த காரைப் பார்த்தாரா அல்லது அந்த குற்றவாளிக்காக இங்கே வாதாடுகிறாரா ?

<u>திரு. யா. சை. மு. யூசுப் :</u> அண்ணன் சாதிக் பாட்சா அவர்கள் குறிப்பிடுவதைப்போல நான் குற்றவாளிக்காக வாதிடவில்லை; சம்பவத்தையும் நேரில் பார்க்கவில்லை. என்னுடைய தொகுதியில் நடைபெற்ற சம்பவம் என்பதால் இங்கே குறிப்பிடுகிறேன். ஏனென்றால் இது ஒரு முக்கியமான பிரச்சனையாகிவிட்டது; அந்த உளியில் தனித்தன்மை இருந்தால் அது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்துவிடும் என்றால் அதில் எனக்கு மகிழ்ச்சிதான். நான் சொல்வதெல்லாம் அந்த உளியானது பாய்ந்து சென்றதாக முரசொலி பத்திரிகையில் படம் போட்டிருக்கிறார்கள். அந்தப் படத்தை ஆதாரமாக வைத்துத்தான் நான் பேசுகிறேன். அது அல்லாமல் நிகழ்ச்சியை நான் நேரில் பார்க்கவில்லை. அந்த இடத்திற்கும் நான் செல்லவில்லை. ஒரு பக்கத்தில் பாய்ந்த உளி அடுத்தப் பக்கத்து கண்ணாடியையும் துளைத்துச் சென்றிருக்கிறது என்றால் அது சாதாரண உளியாக இருக்காது. ஆகையால் அந்த உளியைப்பற்றி மறுபடியும் ஆய்வு நடத்த வேண்டும்.

<u>திரு. துரை முருகன் :</u> அவர் என்ன சொல்கிறார் என்றே தெரியவில்லை. கொஞ்சம் தெளிவாகச் சொன்னால், புரிந்து கொள்ளும்படி ஷார்ட்டாகச் சொன்னால் நல்லது.

(திரு. து. புருஷோத்தமன் எழுந்தார்.)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> அவருக்குத் தெரிந்ததை அவர் சொல்கிறார். தயவுசெய்து உட்காருங்கள்.



1979 பிப்ரவரி 13]

<u>திரு. துரை முருகன் :</u> இது முக்கியமான பிரச்சனை. அவர் ஏதோ ஒரு உளியைப்பற்றிச் சொல்கிறார். அங்கே வீசிய உளி வேறு, அவர் சொல்கிற உளி வேறா ? எந்த உளியைப் பற்றிச் சொல்கிறார் ?

<u>திரு. யா.சை.மு. யூசுப் :</u> அங்கே வீசப்பட்டதாகச் சொல்லப் படுகிற உளியைப்பற்றித்தான் சொல்கிறேன். நான் நேரில் பார்க்கவில்லை. முரசொலி பத்திரிகையில் போடப்பட்டிருக்கிற படத்தைப் பார்த்து, அதை ஆதாரமாக வைத்துச் சொல் கிறேன். ஒரு பக்கத்தில் இருக்கிற கண்ணாடியைத் துளைத்து, உள்ளே சென்று மறுபக்கம் உள்ள கண்ணாடியையும் துளைத்துச் செல்லக்கூடிய உளி சாதாரணமானதாக இருக்காது. சாதாரண உளி என்றால் முதலில் பட்ட அந்த இடத்திலேயே கீழே விழுந்துவிடும். ஆபூர்வசிந்தாமணியில்தான் இம்மாதிரி உளி வருகிறது. பரசுராமன் வீசிய உளி இப்படிச் சென்றதாகச் சொல்லப்படுகிறது. ஆகையால் இது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு உளியாகத் தெரிகிறது, என்றுதான் சொன்னேன்.

<u>திரு. மு. அரங்கநாதன் :</u> துணைத் தலைவரவர்களே, அது சாதாரண உளி இல்லை என்று சொல்கிறார். அப்படியானால் எங்களுடைய தலைவர் கலைஞரைக் கொல்வதற்கு என்று இப்படிப்பட்ட ஒரு உளியைக் கொடுத்தனுப்பினார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>திரு. க. சுப்பு :</u> இந்தச் சம்பவத்தைப்பற்றி இங்கே விரிவாகப் பேச முடியாது. கேஸ் இருக்கிறது. இந்தச் சம்பவம் நடைபெற்றது கடந்தமாதம் 28-ந் தேதி. மறுநாளும், அதற்கு அடுத்த நாளும் ஆளும் கட்சிக்காரர்கள் அங்கே நடத்திய பொதுக்கூட்டங்களில் வன்முறையில் ஈடுபட்டிருக் கிறார்கள். கலைஞர் வரும்போது அடித்து விரட்டுங்கள் என்று பேசியிருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாட்டர் இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அப்படி இருக்கும்போது மறுபடியும் அதுபற்றி இங்கே பேசினால் என்ன அர்த்தம்? தயவுசெய்து உட்காருங்கள்.

<u>திரு. க. சுப்பு :</u> அவர் இங்கே பேசியதால்தான் நான் குறுக்கிட வேண்டியிருந்தது.

[முற் பகல் 11-30.]

*<u>திரு. துரை முருகன் :</u> தலைவரவர்களே, உளி எறியப்பட்ட அந்த வண்டி இன்னும் அப்படியேதான் இருக்கிறது. சர்வ கட்சித் தலைவர்களும் வந்து பார்த்திருக்கிறார்கள். மனிதாபி மானம் உள்ளவர்கள் வந்து பார்த்திருக்கிறார்கள். அந்த

உளி கண்ணாடியை உடைத்துக்கொண்டு உள்ளே சென்றிருக்கிறது. அது கலைஞருக்கு நேராகவே சென்றிருக்கிறது. அது கலைஞருடைய தலையில் பட்டிருக்க வேண்டும். அப்போது அவர் கீழே குனிந்து கொண்டுவிட்ட பிறகு தான் அது உராய்ந்து கொண்டு சென்று அடுத்த பக்கத்திலே உள்ள கண்ணாடியைத் துளைத்துக்கொண்டு சென்றிருக்கிறது. இதுதான் நடந்திருக்கிறது. நாங்களும் புகார் கொடுத்திருக்கிறோம். வழக்குப் போட்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு சட்டமன்ற உறுப்பினர் இது அபூர்வமான உளி மாதிரித்தெரிகிறது, அபூர்வ சிந்தாமணியில் வருகின்றதைப் போல இருக்கிறது என்றெல்லாம் கூறுகிறார்கள். இப்படிக் கூறுகிற காரணத்தாலும் அவர்கள்தான் அவர்கள் ஊரிலே நடந்த ஒரு கூட்டத்திலே வன்முறையைத் தூண்டுகிற அளவிலே அவர்கள் பேசி இருப்பதைப் பார்க்கிறபோதும் இவர்கள் தலைமை தாங்கி அந்தச் செயலுக்குக் காரணமாக இருந்தார்கள் என்று அய்யப்பட எங்களுக்கு உரிமை இல்லையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்தால் அத்தனையையும் நீக்க வேண்டி வரும். ஆகவே நீங்கள் இப்படி குறுக்கே பேசிக் கொண்டிருக்க வேண்டாம். திரு. யூசுப் அவர்களே தொடர்ந்து பேசுங்கள்.

திரு. யா.சை.மு. யூசுப்: தலைவரவர்களே, இராதாபுரம் தொகுதியிலே நடைபெற்ற இந்தச் சம்பவத்திற்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அதன் சட்ட மன்ற உறுப்பினராகிய எனக்கோ தொகுதி அமைப்பாளராகிய நீலகண்டனுக்கோ அல்லது அதைச் சார்ந்த குறிப்பிட்ட அமைப்புக்களுக்கோ எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று அறுதியிட்டு உறுதியாகக் கூற விரும்புகிறேன். அப்படி தொடர்புகள் ஏதேனும் உண்டு என்று நிரூபிக்கப்படுமேயானால் சட்டமன்ற உறுப்பினர் பதவியையே ராஜினாமா செய்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இங்கே அருமை அண்ணன் துரைமுருகன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே கழக ஆட்சி, சமுதாயத்திலே நலிந்தவர்களுக்கு அதிலும் குறிப்பாக பள்ளிக்கூடத்தின் படியைக் கூட ஏறாதவர்களுக்கு அரசு தந்துள்ள திட்டத்தில் என்ன தவறுகள் செய்கிறது என்று சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அண்ணன் திரு. துரை முருகன் அவர்கள் அதனை நன்கு படித்திருப்பார்கள் என்று நினைத்தேன். அதனைச் சரியாகப் படிக்கவில்லை என்றால் திரும்பவும் சென்று படிக்க வேண்டுகிறேன். அதனை ஒழுங்காகப் படிக்க வேண்டும் என்று வேண்டுகிறேன், தாழ்த்தப்பட்டோர் அல்லது பிற்படுத்தப்பட்டோருக்குத் தரக்கூடிய உரிமைக்கு எந்தவிதமான பாதகமோ களங்கமோ ஏற்படாத வகையிலே அதாவது கம்யூனல் ஜி. ஓ. வின் உரிமைக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாத வகையிலே ........





திரு. துரை முருகன்: தலைவரவர்களே, பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன், நான் தான் அதைச் சரியாகப் படிக்கவில்லை. நீங்களாவது அந்தப் பக்கத்தை மறுபடியும் படியுங்களேன். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தரப்பட்டிருக்கின்ற ஒரு சலுகைக்கு சரிவு ஏற்படா வண்ணம் என்று போடப்பட்டிருக்கிறதே தவிர வித்தவுட் டெட்ரிமெண்ட் என்று போட்டிருக்கிறதே தவிர ஜெனரல் பூல்-லே இருந்து அதிகமாக் கொடுப்போம் என்று சொல்லவில்லை.

திரு. யா.சை.மு. யூசுப்: தலைவரவர்களே, அண்ணன் திரு. துரைமுருகன் அவர்கள் இதனை ஒழுங்காகப் புரிந்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். மொத்தம் மூன்று மாநிலங்களில் முற்பட்டோர், பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் என்று இருக்கக்கூடிய அளவில் இந்த இரண்டு இனங்களையும் பிரித்துவிட்டு இந்த இரண்டு இனங்களுக்கும் சரிவு ஏற்படாமல் மீதி இருப்பதிலிருந்து மற்றவர்களில் ஏழ்மையானோர் போன்றவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று உள்ளது. மூன்றில் இரண்டு நீங்கலாக உள்ள முற்பட்டோர் என்பதுதான் அங்கிருப்பதன் பொருள் என்பதைத் தயவு செய்து அவர்கள் படித்துப் புரிந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தரப்பட்ட சலுகைகளுக்குச் சரிவு ஏற்படா வண்ணம் என்று வருகிறபோது பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுடைய சலுகைகளில் நீங்கள் கை வைக்கப் போகிறீர்கள் என்றுதான் பொருள்.

மாண்புமிகு திரு. செ அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வந்திருக்கிற இந்தத் திட்டம் யாருக்குப் பயன்படும் என்பதைக் கொஞ்சம் நாம் சிந்தித்துப் பார்ப்போமானால் அது முழுவதும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பு இளைஞர்களுக்குத்தான் என்பதைத் தெரிந்துகொள்ளமுடியும் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. துரை முருகன்: அமைச்சர் அவர்களைப் பொறுத்த வரையில் நான்-ப்ராமின் தீமில் நல்ல ஈடுபாடு உள்ளவர்கள் தான். இந்தச் சலுகை ஏழை எளிய, 'புவர் ஆண்ட் இல்லிட்ரேட்' பிள்ளைகளுக்கு அதாவது பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் பிள்ளைகளுக்குத் தருவோம் என்ற உறுதிமொழியை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: சமுதாயத்தின் உயர்வு தாழ்வு என்று ஜாதிகளைப் பிரித்து அதன் காரணமாக சமுதாயத்தில் கரண்டலுக்கு ஆளாக்கப்பட்டவர்கள்தான்

இன்றைக்கு சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்டவர்களாகவும், தாழ்த்தப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள் என்ற உண்மையை உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொள்வார்களேயானால் இது அவர்களுக்குத்தான் பயன்படும்.

திரு. யா.சை.மு. யூசுப்: திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த உத்திரவு அமல்படுத்தப்பட்டால் எங்கே உயர்குடியில் இருப்பவர்கள் பாதிக்கப்படுவார்களோ என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கலாம், அதற்கு யார் சாவி கொடுத்தார்கள் என்று தெரியாது. அடுத்து இன்னொரு முக்கியமான பிரச்னையைக் கிளப்பினார்கள். இப்போது நெல்லுக்கு இவ்வளவு விலை கொடுத்திருக்கிறீர்களே, எங்கள் ஆட்சிக் காலத்தில் கலைஞர் அவர்கள் நெல்லுக்கு போனஸ் கொடுத்தார்களே என்றெல்லாம் சொன்னார்கள். நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்வதற்கும், நெல்லுக்கு மத்திய அரசு தரக்கூடிய மானியத்தைப் பெறுவதற்கும் அதிகமான வேறுபாடு இருக்கிறது. விலை நிர்ணயம் செய்யும்போது இந்த அரசு ஒரு தொகையை நிர்ணயம் செய்யலாம். ஆனால் மானியம் பெறுகிறபோது நாம் அதுபற்றி உரிமையுடன் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறோம். வட நாட்டில் விளையக் கூடிய கோதுமைக்கு மத்திய அரசு கோடிக்கணக்கான ரூபாய் மானியம் தருகிறது. புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இயங்கக்கூடிய இந்த அரசு தமிழ்நாட்டில் குறிப்பாக தென் நாட்டில் விளையக் கூடிய நெல்லுக்கு வட நாட்டில் விளையக் கூடிய கோதுமைக்கு மானியம் தருவதைப்போல் இதற்கும் தரவேண்டும் என்று உரிமைக் குரல் எழுப்பியிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் குரல் ''நீதியின் குரல்''ஆக ஒலிக்கப் போகிறது.. அதே நேரத்தில் உங்களோடு உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்று சொல்லக் கூடிய கலைஞர் அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் 7 ஆண்டுகள் தமிழ்நாட்டிற்கு இது போன்ற மானியங்கள் கிடைக்கக் கூடியதைக் கோட்டை விட்டிருக்கிறார்கள். அவர்கள் கரத்தை மட்டுமே நீட்டினார்கள். கரத்தை நீட்டியது எதற்காகவோ, எனக்குத் தெரியாது. அடுத்து, இந்தியைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் இந்தித் திணிப்பு இருக்கக் கூடாது, மக்கள் மீது இந்தி திணிப்பு இருக்கக்கூடாது என்று சொல்வதில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எந்த இயக்கத்திற்கும் பிற்பட்டதல்ல.

அதில் தமிழ்நாட்டு மக்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஒருக்கால் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு வேண்டுமானால் அந்தச் சந்தேகம் இருக்கலாம். அதன் காரணமாகத்தான் கோவையில் நடைபெற்ற மாபெரும் மாநாட்டில் தமிழ்நாட்டு மக்கள் தங்களது எழுச்சிமிக்க தலைவரைப் பார்த்து இந்தித் திணிப்பை எதிர்க்கக்கூடிய வல்லமை, சக்தி படைத்த தலைவன் நீயே என்று தமிழ்நாடு சுட்டிக் காட்டியுள்ளது. இவ்வளவு



தூரம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை மதித்து தெள்வான திட்டங்களைக் கொடுத்து நாட்டுக்கு வரக் கூடிய ஒரு சிறு துரும்பைக் கூட, சிறு தொகையைக் கூட விட்டுக் கொடுக்காமல் மத்திய அரசினிடம் கோருகிறார்கள். கரும்புச் சர்க்கரையை வைத்து காகித ஆலை துவங்க மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பெரியதொரு நிகழ்ச்சியை ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்குக் கடிதம் எழுதுவதுபோல் மிகச் சிறியதொரு காரியமாக சிறியதொரு நிகழ்ச்சியாகப் பார்க்கிறார்கள் எதிர்க்கட்சிகள். தமிழ்நாட்டிலுள்ள அரசாக இருந்தாலும் சரி அல்லது எந்த அரசாக இருந்தாலும் சரி மத்திய அரசிடம் கோரி, கேட்டு உரிமைகளைப் பெறுவது என்பது சம்பிரதாயமாக, வழக்கமாக இருக்கிறது. இதை ஆளும் கட்சியில் எட்டு ஆண்டுகளாக இருந்து வந்த நண்பர்கள் தெரிந்து வைத்திருப்பார்கள் என்று நினைத்தேன். நான் நினைத்தது தவறாகி விட்டது. அவர்கள் எட்டாண்டுகள் ஆட்சியில் இருந்தும் அந்த * * * ஒழுங்காகப் படித்துவிட்டு இங்கே வர முயலுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். எனவே பூனையும், கலைஞரும் கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டு போகாது என அவர்கள் உணரவேண்டும்.

[முற்பகல் 11–40]

திரு. துரை முருகன்: நான்கு வருடங்களில் * * * வந்து இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்..(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் * என்று சொல்லவில்லை. * * * என்று சொன்னார் என்று நினைக்கின்றேன், வேறு ஒன்றும் இல்லை.

திரு. யா.சை.மு. யூசுப்: நான் ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், பூனை தன் கண்ணை மூடிக்கொண்டால், உலகமே இருண்டு விட்டது என்று நினைத்துக் கொண்டுவிடுமாம், அதுபோல் இவர்களும்........

(தி.மு.க. சார்பிலுள்ள சில உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்).

திரு. அ. நடராசன்: அவர் * * * என்று சொன்னதை திருத்தச் சொல்லுங்கள்....(குறுக்கீடு).

திரு. யா.சை.மு. யூசுப்: அரசியல் * * * என்று தான் நான் சொன்னேன், அதை நான் அப்போதே தெரிவித்து விட்டேன்...(குறுக்கீடு)

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ஆ. நடராசன் : ஒழுங்காக பேசச் சொல்லுங்கள். இப்படித்தான் பேசுவதா, * * * இது உங்களுக்கு சரியாக தோன்றுகிறதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் இப்போது பேசுவது மட்டும் ஒழுங்காக இருக்கிறதா? அவர் என்ன வார்த்தை உபயோகித்தார் என்பதை குறிப்பைப் பார்த்துவிட்டு பின்னால் தேவைப்பட்டால் நீக்குகிறேன்.

திரு. யா.சை.மு. யூசுப் : ஆகவே ஆளுநர் அவர்களின் உரை அருமையான உரையாக இருக்கிறது, நேரியான உரையாக இருக்கிறது, புரட்சித் தலைவர் என்ற அட்சய பாத்திரத்தில் அது இருக்கின்றது. எடுக்க எடுக்க வற்றாத ஒன்றாக விளங்குகிறது, வாழ்க புரட்சித் தலைவரின் சிறப்பு, வெல்க இந்த அரசு அண்ணா நாமம் வாழ்க என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. சென்னை மு. அரங்கநாதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த பெப்ரவரி 9 ஆம் தேதி ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய அரசினுடைய கொள்கை உரையை, ஆதரித்தும் எதிர்த்தும் நடைபெறுகின்ற கருத்துப் பரிமாற்றத்தில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்த என் தொகுதி மக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் கடந்த ஆண்டு ஆளுநர் உரையில் குறிப்பிட்டதைப்போல், "கிரைண்டிங் மெஷின்" என்ற அளவில் தான் இருக்கிறது. அதாவது மாவு அரைக்கிற இயந்திரம் போல் கடந்த ஆண்டு எதைப் போட்டு அரைத்துக்கொண்டு இருந்தார்களோ அதையேதான் மீண்டும் அரைத்துக்கொண்டிருக்கிறார்கள். இங்கே தரப்பட்டிருக்கின்ற குறிப்பைப் பார்த்தால் திருப்பித் திருப்பி அரைக்கின்ற கிரைண்டிங் மெஷினாகத்தான் இருக்கிறதே தவிர புதிய திட்டம், புரட்சியான திட்டம் என்பது எள்ளளவும் இதில் இல்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதாவது 2 ஆம் பக்கம், 4-வது தொடரில் கிராமம் தோறும் ஒரு நியாயவிலைக் கடை என்ற அடிப்படையில், திறக்கவேண்டும் என்று 77-வது ஆண்டு ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறது. கலைஞர் அவர்களது ஆட்சிக் காலத்திலேயே 9,300 கடைகள் திறக்கப்பட்டிருந்தன. 16,000 நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் அன்றைக்கு அறிவித்த நேரத்தில், அந்த உரையிலே இப்படி அறிவிப்பு செய்யப்பட்டிருப்பதைப் பார்த்த எங்களுடைய கட்சித் தலைவர் அன்றைக்கே இது எப்படி சாத்தியமாகும் என்று வினவிய நேரத்தில், நம்முடைய பெருமதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் அன்றைய தினம் இங்கே இதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் வகையில், இந்தத்



திட்டத்தை வகுப்பதற்கு முன்னால் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் கலந்து ஆலோசித்து, அதற்கான நிலைமைகளை உருவாக்கிய பின்னர், அதற்காக ஆகின்ற பொருளாதாரத்தையும் கணக்கிட்டுப் பார்த்து, அவர்கள் கருத்தோடு தங்கள் கட்சியின் கருத்தையும் இணைத்துத்தான், அதற்குப் பின்னர்தான் இதைச் சொல்கிறேன் என்றும் சொன்னார்கள்.

அப்படி திட்டவட்டமாகத் திறப்பதாகச் சொல்லியதற்குப் பின்னால், 1978 ஆம் ஆண்டு உரையிலே "9,300 நியாய விலைக் கடைகள் இருந்தன என்றும், அந்த வசதியை மேலும் விரிவாக்கி தமிழ் நாட்டின் 16,000 ரெவின்யூ கிராமங்கள் ஒவ்வொன்றிலும் நியாயவிலைக் கடைகள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்" என்றும் அறிவித்தீர்கள். இதையும், 1978 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே அறிவிப்பதற்கு முன்னால் ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டீர்கள்.

சென்ற உரையின்போது தமிழ்நாட்டிலே இப்போது ஏறக்குறைய 9,300 நியாயவிலைக் கடைகள் இருக்கின்றன என்றும், இந்த வசதிகளை மேலும் விருத்தி செய்ய தமிழ்நாட்டில் 16,000 ரெவின்யூ கிராமங்களில் ஒவ்வொரு கிராமங்களிலும் ஒரு கடை திறக்கப்படும் என்று அறிவித்தீர்கள். எனவே, ஏற்கெனவே, 9,300 கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்ளுகிறீர்கள். இந்த "ஒன்பது ஆயிரத்திற்கு மேற்பட்ட நியாய விலைக் கடைகளில் இதுவரை நான்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட கடைகள், பல பொருட்களையும் விற்கும் கடைகளாக இத்திட்டத்தின் அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளன" என்றும் அந்த உரையிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். எனவே, ஏற்கெனவே இருந்த 9,300 கடைகளில் 4,000 கடைகள் பலபொருள் கடைகளாக மாற்றப்பட்டன. அப்படி மாற்றப்பட்டது என்று குறிப்பிடுகின்றபோது, ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் 9,300 நியாயவிலைக் கடைகள் திறந்திருப்பதும், அதிலே இருந்த கடைகளை நீங்கள் பலபொருள் அங்காடிகளாக மாற்றியிருக்கிறீர்கள் என்ற பொருள் உள்ளிடப்பட்டிருக்கின்றது.

அதற்கும் மேலே அதிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். கடந்த ஆண்டு உரையில், "1,500 புதிய கடைகள் கூட்டுறவுகளின் மூலமும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமும் திறக்கப்படும் என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். மேலும், இந்த உரையிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். "கிராமந்தோறும் ஒரு நியாய விலைக் கடை மூலம் அடிப்படைப் பொருட்களை விற்கும் அரசின் திட்டத்தின் கீழ் 1979 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31 ஆம் நாள் முடிய சுமார் 13,400 கிராமங்கள் பயன் பெற்றுவிட்டன" என்று குறிப்பிட்டுள்ளார்கள். பயன்பெற்று உள்ளன என்று குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர தெளிவாகக் கடந்த முறை அதாவது 1978 ஆம் ஆண்டிலே ஆளுநர் அவர்கள் உரையிலே சொல்லியுள்ளபடி ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும்

ஒரு நியாய விலைக் கடை வீதம் 16,000 கிராமங்களிலே திறக்கப்படும் என்று சொல்லியபடி, எத்தனை ரெவின்யூ கிராமங்களில் புதிதாக இந்த 9,300 கடைகளைத் தவிர திறந்திருக்கிறார்கள் என்ற விபரம் இல்லை. இது ஏதோ சினிமா பார்த்துவிட்டு, வெளியே வருவதுபோல்தான் இருக்கிறது. எனவே, இப்படித் தெளிவில்லாத ஒரு உரை இங்கே நிகழ்த்தப்பட்டிருக்கிறது என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கவர்னர் அவர்கள் உரையிலே 3-வது பக்கம், 7-வது தொடரிலே, '' கிராமப் பகுதிகளில் நிலமற்ற ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் வீடுகட்டுவதற்கு தேவையானவீட்டுமனைகளை வழங்கும் புதிய பெரும் திட்டமொன்றை அரசு வகுத்துள்ளது. பினாமி நிலங்களையும், தேவைக்கதிகமான நிலங்களையும் அரசு கைப்பற்றும் '' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது எப்படி புதிதாகும். வேண்டுமானால் ஏழை எளிய மக்களை, பாமர மக்களை ஏமாற்றுவதற்கு இந்த உரை பயன்படுமே தவிர, இது எப்படிப் புதிதாகும். ஏற்கெனவே எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் காலத்தில், தஞ்சை விவசாயிகளுக்கு மனைப்பட்டா வழங்கப்பட்டது. ஏறக்குறைய 22 ஆண்டுக் காலம் காங்கிரஸ் கட்சி ஆட்சி நடந்தது, தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த அமைச்சர் அவர்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறார்கள். அந்த மாவட்டத்திலே கம்யூனிஸ்ட் கட்சியும், மற்ற கட்சிகளும் விவசாயிகளுக்கு குடியிருப்பு பட்டா வழங்கப்பட வேண்டுமென்று போராடின, ஆனால் மனைப்பட்டா பெற முடியவில்லை. அதையெல்லாம் மீறி பேரறிஞர் அண்ணா அவர்களின் தம்பியான கலைஞர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே ஏறத்தாழ 1 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை திருத்துறைப்பூண்டியிலே வழங்கியிருக்கிறார்கள்.

[முற்பகல் 11-50]

திரு. ர. ஜெபமணி : காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே யாருக்கும் பட்டாக் கொடுக்கவில்லை என்று சொல்லுவது இருக்கிறதே இது அப்பட்டமான உண்மைக்கு மாறான ஒன்றாகும். நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்க வேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்தவரே பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் என்பதைப் பணிவோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : நான் பேசிய வாசகத்தைத் திரு. ஜெபமணி அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று கருதுகிறேன். தஞ்சை மாவட்ட விவசாயிகள் தங்களுக்கு மனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று 22 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் போராடினார்கள். ஆனால், பெற முடியவில்லை. தி.மு.க. ஆட்சிக் காலத்திலேதான் அவர்கள் பெற்றார்கள்.





திரு. ர. ஜெபமணி : பாயின்ட் ஆப் ஆர்டர். அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதில் இருந்து அவர்களுக்கு வீட்டு மனை வழங்கியது எல்லாம் காமராஜ் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் நடந்திருக்கிறது......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது தமிழ்நாடு முழுவதும் பொருத்தது. பேசுகின்ற உறுப்பினர் ஒரு பகுதியைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறார்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : திரும்பவும் திரு. ஜெபமணி அவர்களுக்குச் சொல்வேன், தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் வீட்டு மனைப் பட்டாக்கள் தி.மு.க ஆட்சிக் காலத்தில் கொடுக்கப்பட்டன......

திரு. கோ. பாலகிருஷ்ணன் : சென்னையில் இருக்கும் அரங்கநாதன் அவர்களுக்குத் தஞ்சையைப் பற்றிச் சரியாகத் தெரிய முடியாது. அவர் தவறான செய்திகளைச் சொல்லுகிறார். தஞ்சையில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர் சொன்னால் ஒருவேளை ஏற்றுக்கொள்ளலாம். நண்பர் அரங்கநாதன் அவர்களுக்குத் தஞ்சையில் என்ன நடந்திருக்கிறது என்று தெரியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எந்தப் பகுதியில் இருப்பவர்களாக இருந்தாலும் எந்தத் தொகுதியைப் பற்றி வேண்டுமானாலும் பேசலாம்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : திருத்துறைப்பூண்டியில் ஒரு இலட்சம் வீட்டு மனைப் பட்டாக்கள் ஒரே நாளில் வழங்கப்பட்டிருக்கிறது. எந்தக் காலத்தில் என்று சொன்னால்—கலைஞர் ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ப. சோமசுந்தரம் : '' ஒரு இலட்சம் பட்டா, ஒரு இலட்சம் பட்டா '' என்று தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது நான் அதைக் கேட்டுக்கொண்டு அமைதியாக இருக்க முடியவில்லை. இப்படி ஒரு இலட்சம் பட்டாக்கள் வழங்கப்பட்டன என்ற கணக்குகள் எப்படி என்று பார்த்தால் முன்பெல்லாம் நடந்த முறை—இன்றைக்கு முதலமைச்சர் வருகிறார் என்று சொல்லி அனுப்புவார்கள். பத்தாயிரம் பட்டா, இருபதாயிரம் பட்டா கொடுக்க வேண்டுமென்று சொல்லுவார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் உடனே தாசில்தாருக்குச் சொல்வார் ; தாசில்தார் ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்குச் சொல்வார்.

அன்றைக்கு பத்தாயிரம், இருபதாயிரம் பேரைக் கொண்டு வந்து நிறுத்தி விடுவார்கள். அன்றைக்கு முதலமைச்சர் 100 அல்லது 200 பேருக்கு பட்டா கொடுப்பார். பாக்கிப் பேருக்கு கலெக்டர் ஆபீசில் கொடுப்பார்கள் என்று சொல்லி விடுவார்கள். அந்தப் பாக்கி பேர் நாலைந்து நாட்களுக்கு கலெக்டர் ஆபீசுக்கு அலைந்து கொண்டிருப்பார்கள். ஆனால், அவர்களுக்குப் பட்டா கிடைக்காது. ஒரு இலட்சம் பேர், ஒரு இலட்சம் பேர் என்று சொல்லுகிறார்கள். உண்மையாக எத்தனை பேருக்குப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கு என்னிடத்தில் இருக்கிறது. பத்தாயிரம் பேருக்குப் பட்டா கொடுப்பதாகச் சொல்லி 100 பேருக்குக் கொடுத்திருப்பார்கள். இந்த அரசு வந்த பிறகு, அந்தக் காலத்தில் யார் யாருக்கு பட்டா கொடுப்பதாகச் சொல்லி பட்டா கொடுக்கப்படவில்லை என்பது பற்றிய மனுக்கள் எல்லாம் வந்து அவை பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. ஆகவேதான் இந்த அரசு வந்த பிறகு, பத்தாயிரம் பட்டா, ஒரு இலட்சம் பட்டா என்றெல்லாம் சொல்லாமல், பத்து பட்டாக்கள் கொடுப்பதாக இருந்தாலும் பத்தும் ஒழுங்காக ஸ்கெச் போட்டு, வரைபடம் போட்டு, நெம்பர் போட்டு கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, ஒரு இலட்சம் பேருக்குப் பட்டா கொடுக்கப்பட்டது என்று சொல்வதெல்லாம் சரியல்ல. உங்களுக்கு வேண்டுமென்றால் நான் விவரங்களை, கணக்குகளைத் தருகிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்டதொரு விளக்கம் கொடுத்தார்கள், அதற்கு நன்றி. ......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை திரு. அரங்கநாதன் பேசட்டும், நீங்கள் அமருங்கள்.

திரு. கோ. இளங்கோவன் : தஞ்சை மாவட்டத்தைப் பற்றி தெரியாது என்று. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தஞ்சை மாவட்டத்தைப் பற்றித்தான், அதைப்பற்றி திரு. அரங்கநாதன், பேசட்டும், தாங்கள் பேச வேண்டாம்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள், பட்டா கொடுக்கும்பொழுது 1 லட்சம் என்று சொல்லிவிட்டு 2, 3 கொடுத்துவிட்டுப் போய் விடுவார்கள் என்று சொன்னார்கள். இன்றைக்கும் அதுதான் நடக்கிறது, என்றைக்கும் அதுதான் நடக்கும் (சிரிப்பு).



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இப்போது பட்டா கொடுக்கிறபோது எல்லாம் வெளிப்படையாகவே சொல்லி விடுகிறோம். செய்தித் தாளைப் பார்த்திருப்பீர்கள். இன்றைக்கு பட்டா கொடுக்கப்படுகிறது, நீங்கள் வாங்கிக் கொண்டு போகிறீர்கள், நாளைக்கு வருவாய் துறை அதிகாரி உங்களிடத்திலே வந்து நிலத்தைக் காண்பிக்க வேண்டும், அப்படி காண்பிக்காவிட்டால் எங்களிடத்திலே வந்து சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். வருவாய்த் துறை அதிகாரிகளிடத்திலே சொல்லி இருக்கிறோம். தஞ்சையிலே பாபநாசம் பகுதியிலே பட்டா வழங்கப்பட்டபோது அங்கே எல்லா கட்சிக்காரர்களும் இருந்தார்கள். நான் அங்கே பேசும்போது சொன்னேன், இன்றைக்கு உங்களுக்குப் பட்டா கொடுக்கப்படுகிறது, வரைபடம் கொடுக்கப்படுகிறது. நாளைக்கு வருவாய்த் துறை அதிகாரிகள் உங்களுக்கு வந்து காட்டுவார்கள், அப்படிக் காட்டாவிட்டால் எங்களிடம் சொல்லுங்கள் என்று சொன்னேன். அப்போது அந்த சட்டமன்ற உறுப்பினரும் அங்கே இருந்தார். அவர் இங்கே இருக்கிறார் என்றுதான் கருதுகிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : இந்த இரண்டாண்டு காலத்தில் பட்டா வழங்கியதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கணக்கு விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பின்னாலே கொடுத்தால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். இந்த அறிக்கையிலே 8-வது பத்தியிலே ஒரு லட்சம் வீடு கட்டும் திட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது கூட ஒரு புதிய திட்டம் என்பதைப் போன்று அறிவித்து இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தமிழகத்திலே டாக்டர் கலைஞர் அவர்கள்தான் அரிசன நல வீட்டு வசதி கழகம் என்ற புதிய அமைப்பை உருவாக்கினார்கள், அதன் அடிப்படையிலே பல வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. ஏறத்தாழ 5 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பல வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. வருவாய்க் கோட்டம் ஒவ்வொன்றிலும் ஒரு வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் மூலம் கிராம மக்களுக்கு வீடு கட்ட கடனுதவி அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏறத்தாழ 4,200 ரூபாய்க்கு மேற்படாமல் உள்ளவர்களுக்கு 600 ரூபாய்க்கு மேற்படாமல் மானியமும் வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அரசைப் பார்த்துக் கேட்கிறேன், ஏற்கெனவே உருவாக்கப்பட்ட அரிசன நல வீட்டு வசதி கழகத்தின் மூலம் 5 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள வீடுகள் இலவசமாக கட்டித் தரப்படுகின்ற திட்டம் என்ன ஆயிற்று? அந்தத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டதா ? இந்தக் கடன் உதவித் திட்டத்தை இன்றைக்கு வலியுறுத்துகிறார்களா? அல்லது அந்தத் திட்டத்தை மேற்கொள்ளப் போகிறார்களா என்பதைத் திட்டவட்டமாக தெரிவிக்க வேண்டும்.

இன்றைக்குச் சொல்கிறார்கள். ஏழை எளிய மக்கள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எல்லாம் உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

[திரு. சென்னை மு. அரங்கநாதன்] [1979 பிப்ரவரி 13

சென்னையிலே மட்டுமல்ல— மழையினால் பாதிக்கப்பட்டவர்கள்—தமிழகம் முழுவதும் பாதிக்கப்பட்டது—ஆனால், சென்னையிலே மட்டும் 50 கிலோ அரிசி என்று அறிவித்து இருக்கிறார்கள். அதனுடைய உள்நோக்கமென்ன ? அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்குக் கூட அறிவிக்காது அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு கட்சிக் கண்ணோட்டத்தோடு அரிசி வழங்கப்படுகிறது. அரிசி வழங்குவதிலே பெரிய ஊழல் நடந்திருக்கிறது நான் நிரூபிப்பதற்குத் தயாராக இருக்கிறேன், விசாரணைக் கமிஷன் வைத்தால். ஆளும் கட்சிககாரர் 5 கார்டுகளை வாங்கிக் கொண்டு அரிசி வாங்கியிருக்கிறார். திருவல்லிக்கேணியிலே 90-வது வட்டத்திலே ஆளும் கட்சித் தோழர்கள் கார்டு பரிமாற்றத்தின் விளைவாக ஒருவருக்கொருவர் அவர்களுக்குள்ளேயே அடித்துக் கொண்டு மண்டையை உடைத்துக் கொண்டு காவல் நிலையத்திற்கு ஓடி வந்தார்கள். ஐஸ்சவுஸ் டி. 3 காவல் நிலையத்திலே அதுபற்றி புகார் இருக்கிறது.

[நண்பகல் 12–00]

அதைப் போலவே 80-வது வட்டத்தில் இரண்டு அமைப்பாளர், ஒரு அமைப்பாளர் 10 கார்டுகளை வைத்திருக்கிறார். இன்னொரு அமைப்பாளருக்குப் பங்கு இல்லை என்ற காரணத்திற்காக நடு வீதியிலே அடித்துக் கொண்டார்கள். இப்படிப்பட்ட கேவலமான ஊழல்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு 100 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லி அந்தப் பாமர மக்களிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு, பணம் மோசடி செய்யப்பட்டிருக்கிறது. ஊழல் இருந்தால் சொல்லுங்கள் என்று சொல்கிறார்களே, தைரியம் இருந்தால் இந்த ஊழலைப் பற்றி விசாரிப்பதற்குத் தயாரா ? அப்படி ஒரு விசாரணைக் கமிஷனை வைத்தால் நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. அ. க. அரங்கநாதன் : துணைத் தலைவரவர்களே, சென்னை மாநகரில் அரிசி வழங்கப்பட்டதைப் பற்றியும், 100 ரூபாய் கொடுக்கப்பட்டதைப் பற்றியும் உறுப்பினர் பேசுகையில், அதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் சரியாக விநியோகம் செய்யவில்லை என்ற கருத்தை கூறினார்கள்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் சொல்லாததை நீங்கள் ஏன் சொல்கிறீர்கள் ? அதிகாரிகள் சரியாகச் செய்யவில்லை என்ற கருத்தில் அவர்கள் சொல்வதை கட்சி என்று நீங்கள் ஏன் எடுத்துக் கொண்டு சொல்கிறீர்கள் ?

திரு. துரை முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும் பொழுது பாராளுமன்றச் செயலாளர் முசிறிப்புத்தன் அவர்களும், அமைச்சரவர்களும் வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கிறார்கள், அவ்வாறு போடலாமா ?



1979 பிப்ரவரி 13]

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : நான் வெளியிலே போய் வெற்றிலை போட்டுவிட்டு வந்து உட்கார்ந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெற்றிலை போடுதல், புகை பிடித்தல் உள்ளே கூடாது, வெளியிலே செய்யலாம்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு வட்டத்திலும் பாதிக்கப்படாத பெரும்பாலான மக்களுக்கு கல் வீட்டிலே உள்ளவர்களுக்கு நிறைய அரிசி வழங்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்கள் இன்றைக்கும் ஆயிரக்கணக்கானவர்கள் தாசில்தார் அலுவலகத்திலே போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பொறுப்பேற்றிருக்கின்ற ரெவின்யூ அமைச்சரின் கவனத்திற்கு நான் இதைக் கொண்டு வருகிறேன். இன்றைக்கும் அந்தப் போராட்டம் இருக்கிறது, அதில் பெரிய ஊழல் நடந்திருக்கிறது.

அடுத்தபடியாக, மது விலக்கைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். புதிய மது விலக்குச் சட்டத்தைப் பற்றி எங்கள் தானைத் தலைவரே சொன்னார், இது அரசியலிலே உள்ள வேண்டாதவர்களைப் பழிவாங்கும் சட்டம் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் 88-வது வட்டச் செயலாளர் கிருஷ்ணன் என்பவரது வீட்டில் திடீரென்று காவல் துறையினர் நுழைந்து அந்த வீட்டிலே உள்ள வயது வந்த பெண்ணைக்கூட அடித்துத் தொல்லை கொடுத்திருக்கிறார்கள். திடீரென்று உள்ளே நுழைந்தீர்களே நீங்கள் யார் என்று கேட்ட பொழுது நாங்கள் காவல் துறையைச் சேர்ந்தவர்கள், உள்ளே சாராயம் இருக்கிறதா என்று பரிசீலிப்பதற்காக வந்திருக்கிறோம் என்று சொல்லி எந்தவிதமான உத்தரவையும் காட்டாமல் வீட்டிற்குள்ளே புகுந்து அக்கிரமம் செய்திருக்கிறார்கள். இது குறித்து காவல்துறை ஆணையாளரிடத்தில் புகார் கொடுத்து இருக்கிறேன். ஆனால் இன்று வரையில் அந்தப் புகார் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இப்படி வயது வந்த பெண்ணை உதைக்கின்ற அளவிற்குச் சாராய சட்டம் பயன்படுகிறது.

அதுமட்டுமல்லாமல், ஆளுங்கட்சியினரே சாராயம் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது அம்பாசிடர் கார்களை சீஸ் செய்த நேரத்தில் மறுநாளே அந்த அம்பாசிடர் கார் அதே இடத்திற்கு வருகிறது. இப்படி திருவல்லிக்கேணி தொகுதியில் மட்டுமல்ல, தமிழ்நாடெங்கும் ஆளுங் கட்சியினரின் தொல்லையால் சாராயம் ஆறு போல ஓடிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையிலே இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள் மது விலக்கைப்பற்றி. நான் தனித்தனியாக பெயர்ப் பட்டியல் வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன், நேரம் கொடுத்தால் (மணியடிக்கப்பட்டது).

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

<u>திரு. சென்னை மு. அரங்கநாதன் :</u> இந்த அளவிற்குச் சாராயத்தை வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதைக் கட்டுப்படுத்துகிறோம் என்று இங்கே சொல்கிறார்கள். எங்கே கட்டுப்படுத்தினார்கள் ?

அடுத்து, சட்டம் ஒழுங்கை எடுத்துக் கொண்டால் அது படாதபாடு படுகிறது. காவல்துறையில் இருக்கும் காவலர்களுக்குக்கூடப் பாதுகாப்பு இல்லை. காவலர்களையே உதைக்கும் நிலமை இன்றைக்கிருக்கிறது. அர்த்தால் நடந்தது. அந்த அர்த்தாலின்போது போலீஸ் நிலைய குறிப்பில் ரௌடிகளாகவும், கேடிகளாகவும் இருப்பவர்கள், போலீஸ் ரெக்கார்டிலே 'வாண்டட்' ஆக இருப்பவர்கள், பயணிகள் பாதுகாப்புச் சங்கம் என்று பேட்ஜ் வைத்துக் கொண்டு பயணிகள் பெயரால் பொது மக்களுக்குத் தொல்லை கொடுத்தார்கள். திருவல்லிக்கேணி தொகுதியில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றியே சொல்கிறேன், அந்த தொகுதியிலுள்ள ஒரு வட்டத்தில் பகுதிச் செயலாளர் மாணிக்கம் ரோடிலே சைக்கிளில் அவருடைய மகனை உட்கார வைத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தார். அப்போது அவரை மடக்கி அடித்து மண்டையை உடைத்து ரத்த காயத்துடன் சைக்கிள் ரிக்ஷாவில் தூக்கிப் போட்டு D-3 காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றான் யார் போலீசார் தேடிக் கொண்டிருந்த ஆள், போலீஸ்காரரையே அடித்து விட்டு ஓடிய ஆள், அவர் 'இ-3' போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று சப்- இன்ஸ்பெக்டரிடமும், இன்ஸ்பெக்டரிடமும் சொல்லி இவரை 151-ல் அரெஸ்ட் செய் என்று உத்தரவிடுகிறார்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> தயவு செய்து சீக்கிரம் முடியுங்கள். இல்லையென்றால் அடுத்த உறுப்பினரை அழைத்துவிடுவேன்.

<u>திரு. சென்னை மு. அரங்கநாதன் :</u> இதைமட்டும் கடைசியாகச் சொல்லி முடித்துவிடுகிறேன். இந்த அளவிற்குக் காவல் துறையினரின் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் காவல்துறை நிர்வாகத்தின் உள்ளே நுழைகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இன்றைக்கு இருக்கின்றன.

இந்த நிலைமைகளின் விளைவாகத் தான், இவர்கள் பேசுகின்ற பேச்சுக்களின் விளைவாகத்தான், இன்றைக்குப் பல தலைவர்களைக் கொலை செய்கின்ற அளவுக்கு வந்திருக்கிறது. நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கத்தியைத் தீட்டச் சொல்கிறீர்கள். (மணியடிக்கப் பெற்றது). த்தியைத் திட்டாதே, புத்தியைத் தீட்டு என்று பேரறிஞர்



அண்ணு அவர்கள் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு நீங்கள் கத்தியைத் திட்டச் சொல்கிறீர்கள். கத்தியைத் தீட்டியவன், கத்தியிலே மடிவான் என்று சொல்வார்கள். இதை எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ளுங்கள். எங்கள் தலைவர்மீது உளி விசப்பட்டதற்கு ஒரு அனுதாபம் கூட வேண்டாம். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன். அந்த வன்முறைச் செயலைக் கண்டிக்கின்ற புத்தி கூட ஆளுங்கட்சிக்கு இல்லையென்று சொன்னால், அது மிகவும் வேதனைப்பட வேண்டிய ஒன்றாகும். இந்த நிலை எதிர்காலத்தில் எப்படி மாறும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு கட்சியினுடைய தலைவரைக் கொலை செய்கின்ற அளவுக்கு என்றால், நாங்களெல்லாம் உயிரைப் பணயம் வைத்துத்தான் இந்த இயக்கத்திலே ஈடுபட்டு வந்திருக்கிறோம். அரசியலிலே ஈடுபட்டு கட்சிக்கு வந்தவர்கள் அல்ல நாங்கள். பெரியார் தொண்டனாக உயிரைப் பணயம் வைத்துத்தான் இந்த கட்சியில் இருக்கிறோம். எவனாவது எங்கள் தலைவர்மீது (மணியடிக்கப்பெற்றது).........

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> ஒரு நிமிடத்திற்கு 60 வினாடிகள்தான். முடியுங்கள். இல்லாவிட்டால் நான் வேறு பெயரை அழைக்க வேண்டிவரும்.

<u>திரு. சென்னை மு. அரங்கநாதன் :</u> எவனாவது எங்கள் தலைவர் மீது கை வைத்தால், நாங்களே தற்கொலைப் படையாக மாறினல் பிறகு நாட்டு நிலை எப்படி மாறும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த நிலை வரக் கூடாது என்று எச்சரித்து முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

<u>டாக்டர் கே. சமரசம் :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 9 ஆம் தேதியன்று இங்கே நடைபெற்ற கூட்டுக் கூட்டத்தில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெவிக்கின்ற தீர்மானத்தை மாண்புமிகு திரு. முத்தையா அவர்கள் முன்மொழிந்ததை வழிமொழிகின்ற வகையில் எனது கருத்தை இங்கே சொல்ல விழைகிறேன்.

ஆளுநர் இங்கே கருத்தினைத் தெரிவிக்கின்ற நேரத்தில் வெளியே செல்கின்ற வாய்ப்பினைப் பெற்றிருந்தாலும் இந்த நேரத்திலே வந்து, அதைப் பற்றி அவரவருக்கேற்ற வகையிலே விமர்சிப்பது நல்லது, அதை நான் வரவேற்கிறேன். கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள், உழும்போது ஊர்மேலே சென்றவர்கள் அறுக்கும்போது அரிவாளை எடுத்துக் கொண்டு வந்தார்கள் என்று சொல்வார்கள். அந்த நிலை இருந்தாலும்கூட, அவர்கள் இங்கு விமர்சிப்பதைக் கண்டு வரவேற்கிறேன்.

[டாக்டர் கே. சமரசம்] [1979 பிப்ரவரி 13

இந்த நேரத்திலே மேதகு ஆளுநர் அவர்களுடைய மொத்தக் கருத்தும் வள்ளுவன் சொன்ன வழியிலே அமைந்திருக்கின்றது என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

'' உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்''
சேரா தியல்வது நாடு ''

என்று சொன்ன வள்ளுவன்வழியில் இந்த நாடு நடந்து கொண்டிருக்கிறது. இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது, என்பதற்கொப்ப மேதகு ஆளுநர்உரை இருக்கிறது என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

உற்பத்தி பெருகினால் விலையும் பெருகும் என்ற கருணாயிசப் போக்கு மாறி, உற்பத்தி பெருகினால் விலை குறையும் என்ற அண்ணாயிசக் கொள்கையை உள்ளடக்கியுள்ளது நமது அரசு.

அது மட்டுமல்லாமல், நெல்விலை குவிண்டால் ரூ. 78-லிருந்து ரூ. 84 ஆக கட்டைரக நெல்லுக்கு மத்திய அரசிடம் வாதாடிப் பெற்றுள்ளது. மேலும், கோதுமைக் கொள்கையின் அடிப்படையிலே நெல்லின் விலையை மேலும் உயர்த்த அரசு போராடிக் கொண்டிருக்கிறது என்பதனை நினைக்கின்றபொழுது உண்மையிலே தமிழக அரசு ஒரு விவசாயி அரசு என நாட்டுக்கு எடுத்துக் காட்டக்கூடிய வகையிலே மேதகு ஆளுநர் உரை இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கொள்ளை இலாபக்காரர்களின் கொட்டம் அடங்கும் வகையில் சுமார் 13,400 கிராமங்கள் பயன்பெறத்தக்க நியாயவிலைக் கடைகளை இங்கே நாம் ஏற்பாடு செய்திருப்பது உண்மையிலே வரவேற்கக்கூடிய நிகழ்ச்சியாகும். உலகம் சமநிலை பெற வேண்டும். உயர்வு தாழ்விலா நிலை வேண்டும் எனும் அண்ணாயிச கொள்கைக்கு இந்த நியாய விலைக் கடைகள் ஓர் எடுத்துக்காட்டாகும் என்பதை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

உலக அரங்கிலே தமிழகம் பல்வகையிலும் உயர்ந்து நிற்கவேண்டும் எனும் உன்னத அடிப்படையில் சுருளியாறு திட்டம், குந்தா திட்டம், தூத்துக்குடி அனல் மின் திட்டம், மேட்டூர் அணைக்குக் கீழ் ''பாசன நீரைப் பயன்படுத்தி மின்பெருக்குத் திட்டம்'', காடம்பாறை நீரேற்றி மின் உற்பத்தி திட்டம் ஆகிய அத்தனை திட்டங்களையும் பார்க்கிறபொழுது பாரதி பாடல் நினைவுக்கு வருகிறது.

ஒளியிழந்த கண்ணிளுய் போபோ என்று ஏற்கனவேயிருந்த அரசு சில திட்டங்களை விட்டு விட்டது என்றாலும், சிலவற்றைக் கைவிட்டு விட்டது என்றாலும் இந்த அரசு புதுப்புது



1979 பிப்ரவரி 13] [டாக்டர் கே. சமரசம்]

திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, ஒளிபடைத்த கண்ணினாய் வாவா, உறுதி கொண்ட நெஞ்சினாய் வாவா என்ற பாரதியின் பாடல் நினைவிற்கு வருகிறது.

[பிற்பகல் 12-10]

அதுமட்டுமல்லாமல், சிறு தொழில்களுக்கு முன்னுரிமை கொடுத்து மின்சப்ளை வழங்க எடுத்துள்ள முயற்சி, குப்பனும் சுப்பனும் நாட்டின் வளம் பெருக்கும் அப்பன்கள் என்பதை மக்கள் திலகத்தின் அரசு நிரூபித்து உள்ளது என்பதை ஆளுநர் உரை எடுத்துக் காட்டுகின்றது.

பினாமி நிலங்களைக் கைப்பற்றி தேவைக்கதிகமாக வைத்துள்ள நிலங்களைக் கையகப்படுத்தி ஏழை எளியவர்கள் உயர வீட்டுமனைத் திட்டம் முறையான ஊரமைப்புத் திட்டம், காந்தி கண்ட இராமராஜ்ஜியத்தை அமைப்பதில் நம் நாடு, தமிழ் நாடு முன்னணியில் நிற்கிறது என்பதற்கு ஆளுநர் உரை ஒரு எடுத்துக்காட்டு என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்லி கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து 5 ஆண்டுகளில் ஒரு லட்சம் வீடு கட்டும் திட்டத்தின் அடிப்படையில், ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திலும் ஒரு வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த விரும்பியிருப்பதும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு வருமானம் ரூ. 4,200-க்கு மேற்படாமல் இருப்பவர்களுக்கு ரூ. 600 மானியம் வழங்குவது மட்டுமல்ல, எல்லோரும் ஓர் குலம், ஓர் இனம் என்பதை நிரூபிக்க ''இணைந்து வாழும் திட்டத்தால்'' சாதிமதபேதமற்ற சமுதாயத்தின் தள நாயகன் புரட்சித் தலைவர் என்பதனை நிரூபிக்கின்ற வகையில் இந்த ஆளுநர் உரை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டி இருக்கிறது என்பதனை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசுகின்றபோது நண்பர் துரைமுருகன் அவர்கள் மிகத் தெளிவாக நுணுக்கமாக ஆராய்ந்து, மேலும் பூசுப் அவர்களும், மற்றவர்களும் பேசுகின்றபோது குறுக்கிட்டு குறுக்கிட்டுப் பேசி தனது கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.

அந்த வாசகத்திலே குறிப்பிட்டுள்ள, மிகத் தெளிவாக வந்திருக்கின்ற நிலை, பிற்பட்ட மக்களுக்கு எத்தனை சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளதோ, அந்த விகிதாச்சாரத்திற்கு சரிவேற்படாத வகையில் அவர்களுக்கு முன்னுரிமை தரப்படும் என்ற திட்டம் இருக்கிறது. கம்யூனல் ஜி.ஓ. பாதிக்காத அளவுக்கு ஆளுநர் உரை தெளிவாக கோடிட்டுக் காட்டியிருப்பதை நண்பர் துரைமுருகன் உணர்ந்து கொள்வார் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 5 ஊராட்சி ஒன்றியங்களில் கிராமம், நகரம் என்னும் பாகுபாடு நீங்க, சிறு நகரம், பெரு நகரம் என்னும் நிலை உண்டாகக்கூடிய வகையில், ஊராட்சி ஒன்றிய அடிப்படையில் வேலை வாய்ப்புத் திட்டம் உருவாக்கியிருப்பது தமிழ் மக்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதமாகும்.

தனியாகப் பட்டுத் தொழில் இயக்குநரகமும் மாவட்டங்களில் தனியாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் அமைப்பு ஆகியவை அமைக்கவிருப்பது பரவலாக தமிழகம் வளர வறட்சி வளர்ச்சி எனும் பாகுபாடு நீங்க உதவும் உயரிய கொள்கை என்பதனை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, 6,000 ஏக்கர் நிலப்பகுதியில் வேதாரண்யத்தில் உப்புத் தொழிற்சாலைத் திட்டமும், தமிழ்நாடு கனிவள நிறுவனம் மூலம் வெளிநாடுகளுக்குக் கருப்புக் கல் ஏற்றுமதியும் நல்ல பலனைக் கொடுக்கும். சமதர்ம சமுதாயத்திற்கு அடிகோலும்.

அது மட்டுமல்ல, டோக்கியோவில் முதலமைச்சர் முன்னிலையில் ஜப்பானிய நாட்டு, இட்டாச்சி நிறுவனத்துடன் கையெழுத்தான திட்டம் உலக அரங்கில் தமிழகத்தின் பொருளாதாரம் சிறக்க, வர்த்தக மேம்பாடு பெருக உருவான செயற்கரிய திட்டங்களாகும் என்பதனை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி காகிதம் உற்பத்தி செய்யக்கூடிய திட்டம் விவேகமானது. கரும்பு சக்கையைப் பயன்படுத்தி மிக நல்லமுறையில் தமிழகத்தின் வருவாயைப் பெருக்கும் வகையிலும், தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருப்பது உண்மையிலேயே வரவேற்க வேண்டியதொன்றாகும். இப்படிப் பட்ட இந்தத் திட்டம்-ஆம்பூர், திருப்பத்தூர், மோகனூர், பாலக் கோடு ஆகிய ஆலைகளின் நடுநாயகமாகவும், வறட்சிப் பகுதி யாகவும், காட்டுவளம் நிறைந்த பகுதியாகவும் உள்ள தருமபுரி மாவட்டத்தில் அந்த ஆலையை நிறுவ வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய கோரிக்கையாக இந்த அரசின் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், பலர் இங்கே வேலை அற்று வாழ வகையின்றி அரசு ஊழியர்களாக வரக்கூடிய வாய்ப்பு கூட இல்லாமல் இருக்கிற நிலையை மாற்ற, டாக்டர் மகன் டாக்டர், ஐ.ஏ.எஸ். மகன் ஐ.ஏ.எஸ்., வக்கில் மகன் வக்கீல் என்ற நிலை மாற, கம்யூனல் ஜி.ஓ. மாறாமல், தலைமுறை தலைமுறையாக இருந்து வரும் கொடுமை நீங்க, அப்படிப்பட்ட சூழ்நிலைகள் மாற, வேலைவாய்ப்புத் திட்டம் தமிழகத்தில் இருக்கும் எல்லோருக்கும் போய்ச் சேர வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் புரட்சித்





தலைவர் அவர்கள் ஒரு திட்டத்தை ஆளுநர் உரையில் தெரிவித்து இருப்பது உண்மையிலேயே வரவேற்கத் தக்கதாகும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதிகாரக் குவியல்களைப் பரவலாக்க தலைநகரில் அனைத்து அலுவலகங்களும் இருப்பதை மாற்றி மாவட்டந்தோறும் ஓர் தலைமை அலுவலகம் ஏற்படுத்துவது, கிராமம், நகரம் என்னும் நிலைமைமாற சிறுநகரம், பெருநகரம் என்னும் நிலை உருவாக வறட்சிப்பகுதி, வளர்ச்சிப் பகுதி என்ற வேறுபாடுகளை நீக்க எத்தனைஅடுக்கு மாளிகைகள் கட்டினாலும், குடிசைகள் வளர்ந்து கொண்டேபோகும் கொடுமை நீங்க, ‘நதி எங்கே போகிறது கடலைத் தேடி, நாம் எங்கே போகின்றோம் உடலைத்தேடி’ என்று நாட்டு மக்கள் ஒரு காலத்தில் நம்மையெல்லாம் தேடி சென்னைக்கு ஓடிவராமல் தடுக்க, சட்டத்தின் சந்து பொந்துகளிலே நுழைந்து கொண்டு, சென்னையை விட்டுப்போக மாட்டேன் என சண்டமாருதம் செய்வோரும், தானே தருமபுரி போகிறேன், சேலம் போகிறேன், கன்னியாகுமரி போகிறேன், மதுரை போகிறேன் என வேண்டிக்கேட்கும் திட்டம், சமதர்ம சோசலிச சம்பிரதாயங்களை நடைமுறைப்படுத்தும் திட்டம் என்ற முறையில் அமைந்து இருக்கிறது என்பதை மிகத் தெளிவாக இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழைய அகத்தியப் பெருமானைப் பற்றி ஒரு கதை சொல்வார்கள். பார்வதிக்கும் பரமேஸ்வரனுக்கும் திருமணம் நடந்ததாம். அதற்காக கிங்கரர், கிம்புருடர், அட்டதிக்குபாலகர்கள், அத்தனைபேரும் தங்களுடைய இடத்தை விட்டு வந்து விட்டார்களாம். அதன் காரணமாக ஒரு பக்கம் தாழ்ந்தும் மறு பக்கம் உயர்ந்தும் போய்விட்டதாம். ஆகவே, சமநிலை உருவாக்கும் வகையில் தென்பகுதிக்கு போய் நாட்டை சமமாக்கும் வகையில் அகத்தியரை அனுப்பி வைத்தார்களாம். ஆகவே, அப்படிப்பட்டதொரு சமநிலை உருவாக்க 20-ம் நூற்றாண்டின் இணையற்ற அகத்தியராக புரட்சித் தலைவர் விளங்குகிறார் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, தம்மை ஆளாக்கிய தந்தை பெரியார், அண்ணா வழியில் ஆட்சி நடத்துகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த ஆளுநர் உரை அமைந்து இருக்கிறது. அண்ணா சொன்னார் இந்த ஆட்சியையே பெரியாருக்கு காணிக்கையாக்குகிறேன் என்று. அதனை அமுலாக்கும் வகையில் திராவிடத்தின் தளபதி புரட்சித் தலைவர் இன்றைக்கு அதனைச் செயல்படுத்தி வருகிறார். இயற்கையும், செயற்கையும் இழைத்திட்ட கொடுமைகளை எதிர்த்து, தமிழக அரசு எடுத்த போர்க்கால நடவடிக்கைகள் பொன்னான எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவைகளாகும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்கிறேன். மதுவிலக்கு என்று சொல்கிறபோது, வார்னிஷ் சாவுகளே இல்லாத வரலாற்று சாதனையுள்ள ஆண்டாக இந்த

ஆண்டு அமைந்து இருக்கிறது. அதற்காக பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டம் நல்ல பலனை அளித்து இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், பெரியார் வழியில் தமிழகப் பேரரசு நடைபெறுகிறது என்பதற்கு எடுத்துக் காட்டு, அதுமட்டுமல்ல, வீரம் விலை போகாது; விவேகம் துணைக்கு வராவிட்டால் என்பதற்கு ஏற்றவகையில், தென்னக முதல்வர்கள் மாநாட்டில், நதிநீர் பங்கீடு, கங்கை காவிரி இணைப்பு, மத்திய மாநில உறவு, இந்திய ஒருமைப்பாடு, ஹந்தியா, இந்தியாவா என்ற பிரச்னைகளுக்கு வழிகாணும் வகையில் ஒரு ஆரோக்கிய அரசியலுக்கு அடிகோலும் வகையில் அந்த தென்னிந்திய முதல்வர்கள் மாநாடு நடைபெற்றது உண்மையிலேயே வரவேற்கக்கூடிய ஒரு செயலாகும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

ஆக மொத்தமாகப் பார்க்கும்போது இந்தத் திட்டம் ஜனநாயகம், சமத்துவம், சகோதரத்துவம் கலந்து, கம்யூனிசம், சோஷலிசம், கேப்டலிசம் ஆகியவை தேவைக்கேற்ப இணைந்த அண்ணாயிச தத்துவத்தை உள்ளடக்கிய ஒரு ஆளுநர் உரை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

என்னுடைய கடைசி வார்த்தையாக நான் குறிப்பிட விரும்புவது, இந்த கவர்னர் உரையைப்பற்றி நண்பர்கள் பேசும் பேச்சைப் பார்க்கிறபோது, இரட்டைப் புலவர் பாடல் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

'' மூடர்முன்னே பாடல்பொழிந்தால் அறிவரோ
ஆடெடுத்த தென்புலியூர் அம்பலவா—ஆடகப்பொற்
செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகனு னல் ''

என்பதைச் சொல்லி இந்த ஆளுநர் உரையை வரவேற்று முடிக்கிறேன்.

திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா : டாக்டர் சமரசம் அவர்கள் இங்கே ஒரு கவிதையைப் படித்தார்கள். அந்த கவிதைக்கு விளக்கம் சொன்னால்தான் எங்களால் புரிந்துகொள்ள முடியும். விளக்கத்தைச் சொல்வாரா ?

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்களுக்கு என்னைப்பற்றி நன்கு தெரியும். இருந்தாலும் இந்த அவையில் நான் விளக்கம் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறார்கள்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களைப்பற்றி நன்றாகத் தெரியும். உங்களுடைய கவிதைக்கு விளக்கந்தான் வேண்டுமென்று கேட்கிறார்.

டாக்டர் கே. சமரசம் : மூடர்முன்னே பாடல் பொழிந்தால் அறிவரோ—ஒன்றும் தெரியாத மூடர்களிடம் போய் பாட்டுப் பாடினால் அவர்களுக்கு புரியாது. அணங்கைச் சிங்காரித் தென்னபயன் அந்தகனே நாயகனு னல்—குருட்டுக் கணவன் முன்னால் பெண்ணை சிவிசிங்காரித்து ஆபரணங்களை அணிவித்து அலங்காரம் செய்து என்ன பலன், ஒன்றுமில்லை என்பதுதான் பாடலின் பொருள். அதைப்போல எத்தனைத் திட்டங்களைப் போட்டாலும் நன்மைகளைச் செய்தாலும் அவைகளை எல்லாம் காணமுடியாத குருடர்களாக எதிர்க்கட்சிக்காரர்கள் இருந்தால் எந்தவிதமான பயனும் இல்லை.

திரு. துரை முருகன் : துணைத் தலைவரவர்களே, அவர் தவறான விளக்கத்தைச் சொல்கிறார். பாட்டின் பொருளை மாற்றிச் சொல்கிறார். அந்தகனே நாயகனு னல்—அதாவது அவருடைய விளக்கப்படி கண்கள் குருடானால்—முதலமைச்சர் குருடனாக இருந்தால் ; பெண்ணை அலங்கரித்து என்ன பயன்—அதிகாரிகள் எல்லாம் நாட்டின் முன்னேற்றத்திற்காக எத்தனைத் திட்டங்களைத் தீட்டிக்கொடுத்தாலும் என்ன பயன். எப்படிப் பட்டத் திட்டங்களை அதிகாரிகள் தீட்டிக்கொடுத்தாலும் அவை ஒன்றையுமே பார்க்காத குருடனாக முதலமைச்சர் இருந்தால் திட்டங்களினால் எந்த பயனும் இல்லை. இதுதான் பாட்டின் பொருள்.

டாக்டர் கே. சமரசம் : கவிதைக்கு விளக்கம் கேட்டார்கள். விளக்கம் சொன்னேனே. தவறு இருந்தால் தாராளமாக எடுத்துச் சொல்லலாம். திருத்திக் கொள்கிறேன். உண்மையை எடுத்துச் சொல்லும்போது சிலருக்கு ஆத்திரம் வருகிறது. ஆளுநர் உரையைப் பற்றி ஏதாவது சந்தேகம் இருந்தால் எந்த இடத்தில் என்ன சந்தேகம் என்று சொன்னால் அதற்கு விளக்கம் சொல்ல ஆளும் கட்சிக்காரர்களாகிய நாங்கள் தயாராக இருக்கிறோம். இந்த அவையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அதற்குத் தயாராக இருக்கிறார்கள். எங்களுக்கு தயக்கமில்லை. எந்த சந்தேகத்திற்கும் பதில் சொல்ல நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை நண்பர் துரைமுருகன் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு மு. ஜான். வின்சென்ட் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கவர்னர் உரையின்மீது எனது கருத்துக்களைக்கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

[திரு. மு. ஜான் வின்சென்ட்] [1979 பிப்ரவரி 13

கவர்னர் உரையில் பக்கம் 14—எண். 27-ல் குறிப்பிடப்பட்டுள்ள 'இந்தி மொழி எவர் மீதும் சுமத்தப்படலாகாது' என்பதை வரவேற்கின்றேன். ஆனால் பாராளுமன்றத்தில் எங்கள் கட்சித் தலைவர் குமரி அனந்தன் அவர்கள் நான் தமிழிலேயே பேசுவேன் என்று ஆணித்தரமாக கூறினார்கள். அது இங்கே இருக்கின்ற அத்தனை பேர்களுக்கும் தெரியும்.

இங்கே இருக்கின்றவர்கள் சட்ட மன்றத்திலே நாங்கள் இந்தி மொழியை எதிர்க்கிறோம் என்று சொல்கிறார்கள்; வெளியிலேயும் சொல்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனாலும் கூட பாராளுமன்றத்திலே ஆளும் கட்சியைச் சேர்ந்த அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் தமிழ் மக்கள் நலனை எண்ணி, நாங்கள் தமிழை காப்போம் என்று சட்டமன்றத்திலேயும் மேடைகளிலேயும் சொல்வதோடு பாராளுமன்றத்திலேயும் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும் நாங்களும் தமிழிலேதான் பேசுவோம் என்ற முடிவை எடுத்தால் தமிழ்நாட்டு மக்கள் அதை வரவேற்பார்கள். ஆனால் அதை விட்டுவிட்டு மேடைதோறும் முழங்குகிறார்கள். நாங்கள் தமிழுக்காக உயிரைக் கொடுப்போம் என்று கூறுகின்றீர்கள். தமிழுக்காக யாரும் உயிரைக் கொடுக்க வேண்டாம், வருகின்ற பாராளுமன்ற கூட்டத்திலிருந்து தமிழ்நாட்டைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமிழில்தான் பேச வேண்டுமென்ற முடிவை எடுத்தாலே போதும். பாராளுமன்றத்தில் தமிழில்தான் பேசுவேன் என்று எங்கள் கட்சித் தலைவர் குமரி அனந்தன் எடுத்த முடிவை ஆதரித்து சி.பி.ஐ., சி.பி.எம். கட்சித் தலைவர்கள் எங்கள் தலைவருக்கு கடிதம் எழுதி இருக்கிறார்கள் அதைப் போல உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும் முடிவு செய்தால் தமிழக மக்கள் மகிழ்ச்சியுடன் அதை வரவேற்பார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா) தலைமை

அடுத்து, பக்கம் 12, எண் 24-ல் மதுவிலக்கில் அசையாத நம்பிக்கை உண்டு என்று கூறியிருப்பதை வரவேற்கிறேன். ஆனால் இன்று தமிழ்நாட்டில் நெல்லை, குமரி மாவட்டங்களில் பார்த்தால், முன்னால் கிராமங்களில் சாராயம் விற்பனை இருந்தது. இப்போது டவுன், ஜங்ஷன் பகுதிகளிலேயும் பகிரங்கமாக சாராயம் விற்கப்படுகிறது. இதைப் பார்க்கும்போது அரசின் கொள்கையை, அறிவிப்பை போலீஸ் அதிகாரிகள் செயல்படுத்த வேண்டாமென்று ஆளும் கட்சியினர் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்களா அல்லது அரசு அதிகாரிகள், அமைச்சர்கள் போடுகின்ற உத்தரவின்மீது அங்கே இருக்கின்ற போலீஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் புறக்கணிக்கிறார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஆகையால் மதுவிலக்கு விஷயத்தில் தீவிர நடவடிக்கை எடுத்து, பெண்களுக்கு பாதுகாப்பு கொடுக்கக்கூடிய வகையில் நல்லமுறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1979 பிப்ரவரி 13] [திரு. மு. ஜான் வின்சென்ட்]

அடுத்து சமீபத்திலே சேலம் 3-ல் ஒரு வீட்டிலே 61 பவுன் தங்கமும் ரொக்க பணமும் களவு போய் இருக்கிறது. களவு கொடுத்தவர் போலீஸ் நிலையத்திற்குச் சென்று புகார் கூறியும், அதன் பின்பு போலீஸ் நாய் ஒன்று ஒருவரைக் கவ்விப் பிடித்த பிறகும் போலீஸ் இன்ஸ்பெக்டர் அந்தக் கேஸை சரியாக நல்ல முறையிலே நடத்தாத காரணத்தால் களவு கொடுத்தவர்கள் வேதனைக்குள்ளாகி மருத்துவ மனைகளிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே எல்லாம் போலீஸ் துறையினர் நல்லமுறையிலே செயல்படுவதற்கு இந்த அரசு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 1975-76 மற்றும் 1976-77 ஆண்டுகளில் கிராமங்கள் தோறும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் அரிசி விநியோகம் செய்தார்கள். அப்படி விநியோகிக்கப்பட்ட அந்த அரிசிக்குரிய பணம் பல ஆயிரக்கணக்கான பணத்தை இன்னும் அவர்கள் அரசுக்குச் செலுத்தவில்லை. ஆனாலும் கூட அரசு அவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது குறித்து வளர்ச்சி மன்றத்திலே பேசியும் கூட எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. ஆகவே விரைவில் அரிசி விநியோகம் செய்ததற்கான பணத்தை கட்டத்தவறிய ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மீது அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி ஒன்றியங்களிலே ஊராட்சி ஒன்றியப் பகுதிகளைச் சேர்ந்த ரோடுகள் மிக மிக மோசமான நிலையிலே இருக்கின்றன. அங்கே பஸ் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் ரோடுகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்ற காரணத்தால் பஸ்கள் அடிக்கடி நிறுத்தப்படுகிறது. மேலும் அந்த ரோடுகளைச் சரி பார்ப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்களிடத்திலே பணம் இல்லை. உதாரணமாக நாங்குநேரி ஊராட்சி ஒன்றியத்திலே பணம் இல்லை. ஆகவே சோமநாதமேடு-சாத்தான்குளம் ரோடு, விஜய அச்சம்பாடு—சாத்தான் குளம் ரோடு மற்றும் காரியாண்டி-சாத்தான் குளம் ரோடு ஆகிய சாலைகளை ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து அரசு ஹைவேஸ் டிப்பார்ட்மெண்ட் மூலம் எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் கிராமங்களில் ஒரு மைலுக்கு மேலாக நடந்து செல்வதாக இருந்தால் அங்கே எல்லாம் பஸ்கள் விடுவோம் என்று சொன்னார்கள். ஆனால் இங்கே நான் கேட்கின்றபோது டவுன் பஸ் விடுவதாக இருந்தால் கிலோ மீட்டர் அதிகமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் வேறு சில இடங்களிலே கி.மீட்டர் அதிகம் இருந்தும் டவுன் பஸ்கள் விடப்படுகின்றன. அந்த இடங்களைச் குறிப்பிட்டுச்சொல்ல நான் விரும்பவில்லை. நாங்கள் எதிர்க்கட்சி உறுப்பினர் என்கின்ற காரணத்தால்தானோ என்னவோ நாங்கள் கேட்கின்ற இடத்திற்கு டவுன் பஸ் விட மறுக்கப்படுகிறது

என்று நினைக்கிறேன். திருநெல்வேலி, முனைஞ்சிப்பட்டி பகுதியில் டவுன் பஸ் விடுவதாக ஆர். டி. ஓ. அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் இதுவரை அதுபற்றி எதுவும் சொல்லவில்லை. விவரம் கேட்டால் பதில் கூறுவதில்லை. ஆகவே டவுன் பஸ் விடவேண்டும் என்று கேட்கின்ற பகுதி எந்தப் பகுதியாக இருந்தாலும் சரி அல்லது யாருடைய தொகுதியாக இருந்தாலும் சரி நல்லவிதமாக டவுன்பஸ் போக்குவரத்து அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சமீபத்திலே நெல்லையிலே நடைபெற்ற ஈ.வெ.ரா. பெரியார் நூற்றாண்டு விழா அரசு விழாவாக அறிவிக்கப்பட்டு நடந்தது. அப்போது அங்கேஇருக்கின்ற கடைக்காரர்கள், சினிமாத் தியேட்டர் அதிபர்கள் ஆகியோரிடம் கட்டாய கெடுபிடி வசூல் செய்யப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற வியாபாரப் பெருங்குடி மக்களிடமிருந்து 500 ரூபாய் 600 ரூபாய் என்ற அளவில் கட்டாய வசூல் செய்திருக்கிறார்கள். ஆகவே அரசு இப்படிப் பட்ட காரியங்களிலே தயவு செய்து கட்டாயக் கெடுபிடி வசூல் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 4 மாதங்களுக்கு முன்பு கூறி இருந்தார்கள். அதாவது 1978 ஆகஸ்ட் மாதத்திற்குள்ளாக எங்களது அரசு 4020 கிராமங்களுக்கு குடிநீர் வழங்கிவிடும் என்றார்கள். ஆனால் இன்று பார்க்கின்றபோது அந்த ஆகஸ்ட் வரைக்கும் நடைபெறவில்லை. அதற்குப் பிறகும் நடைபெறுகிறதா என்று பார்த்தால் அதற்குரிய சூழ்நிலையே தெரியவில்லை. ஏராளமான கிராமங்களில் குடிநீர் வசதி நல்ல முறையிலே இல்லை. ஆகவே இப்படிப்பட்ட நிலையினைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு இடத்திலேயும் உடனடியாக போர்வெல் போட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் மக்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30.)

அடுத்து, நெல்லையில் கொடுமுடியாறு திட்டம் குறித்து பல முறை இந்த மன்றத்தில் நான் கூறியிருக்கிறேன். மாற்றுக் கட்சி உறுப்பினர்களும் கூறி இருக்கிறார்கள். அமைச்சர் அவர்களும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் இன்று நெல்லையில் சர்வ கட்சியினர் போராட்டம் நடத்தியும் எந்தவிதமான பதிலும் இல்லை. அங்குள்ள தளவாட சாமான்கள், மெஷின்கள் எல்லாம் மதுரைக்குக் கொண்டு செல்லப்பட்டது என்பதை நினைக்கும் போது அங்குள்ள மக்கள் வேதனைப்படுகிறார்கள். அடுத்து, பச்சையாறு திட்டம் என்ற நல்லதொரு திட்டத்தை அமைத்து விவசாயிகளுக்கு நாங்கள் பாதுகாப்பு கொடுப்போம் என்று கூறுகிறார்கள்.





வரவேற்கிறோம். ஆனால் அவை, சொல்லளவிலும் எழுத்தளவிலும் இருக்கிறதே தவிர பச்சையாறு திட்டம் நடைபெறுவதாக தெரியவில்லை. காரணம் கேட்கிறபோது வன இலாகா இடையூறாக இருப்பதாகச் சொல்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) நெல்லையில் ஒரு மருத்துவமனை இருக்கிறது. அங்கு அட்மிட் ஆகிற நோயாளிகளுக்கு நல்ல பாதுகாப்பு இல்லை. நல்ல மருந்துகள் கிடைப்பதில்லை. அங்கு கக்கூஸ், யூரினல் போன்ற சுகாதார வசதிகள் இல்லை. அது பற்றி சூப்பிரண்டென்டிடம் கேட்டால் நான் என்ன செய்வேன் என்று கூறுகிறார்கள். அமைச்சர் அவர்கள் சமீபத்தில் நெல்லைக்கு வந்திருந்தார்கள். ஆனால் இது பற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, பொது மக்கள் நலன் கருதி உடனடியாக அந்த மருத்துவமனைக்கு வேண்டிய மருந்துகளை கொடுக்கவும், கக்கூஸ் போன்ற அடிப்படை சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக ஒன்றை மட்டும் கூறி முடித்துக் கொள்கிறேன். சில மாவட்டங்களில் கிருஸ்தவர்களை பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்த்திருக்கிறார்கள். ஆனால் நெல்லை மாவட்டத்தில் இருக்கிற கிருத்துவர்களை பிற்படுத்தப் பட்ட வகுப்பில் சேர்க்காத காரணத்தால் அவர்களின் கல்வியின் தரம் குறைகிறது. அவர்களுக்கு போதுமான அட்மிஷன்கள் கிடைப்பதில்லை. ஆகவே நெல்லை மாவட்டத்தில் இருக்கக் கூடிய கிருத்தவர்களை பிற்படுத்தப்பட்டவர்கள் வகுப்பில் சேர்த்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு திட்டத்திலும், கல்வித் திட்டத்திலும் நல்லபடியாக இடம் அளித்து அவர்கள் வாழ்வு நல்லதொரு வாழ்வாக அமையக் கூடிய வகையில் அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டு இந்த நல்ல வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

<u>திரு. வ. மு. சுப்பிரமணியன்</u> : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையை வரவேற்று பேச வாய்ப்பளித்தமைக்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உரையில் உணவு நிலை சீராக இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது உண்மையும் கூட. உணவுப் பிரச்னையை சீரமைப்பது என்பது கடுமையான காரியம். கடந்த கால அரசில் அரிசி, அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் விஷம் போல் ஏறியிருந்தது எல்லோருக்கும் தெரியும். அந்நிலை மாறி இந்தக் காலத்தில் அறுவடை காலமானாலும் சரி, அறுவடை இல்லாத காலமானாலும் சரி ஒரே நிலையில், சீரான நிலையில் உணவு நிலை இருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். இதற்குக் காரணம் ஒரு அரசின் முற்போக்குக் கொள்கையும், விலைகளைக் கட்டுப் படுத்தக்கூடிய திறமையும் இருப்பது தான். விலைவாசி ஏறுவதும் இறங்குவதும் வியாபாரிகள் கையில் இதற்கு முன்னால் இருந்த நிலை மாறி இன்று அது அரசின் கையில் இருப்பது குறித்து நாம் மகிழ்ச்சி கொள்ளாமல்

இருக்க முடியாது. அதற்கு உறுதுணையாக வியாபாரிகள் வியாபாரம் நடத்துவதற்கு போட்டியாக பல நியாய விலைக் கடைகளை அரசு திறந்து அரசின் ஆணைக்கு மீறி விலைகளை ஏற்றும்போது நியாய விலைக்கடைகள் மூலம் விலையைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு வாய்ப்பாக இவை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். அதற்கு நல்ல முற்போக்குக் கொள்கை உள்ள திட்டம் இருந்தால்தான் வெற்றி கொள்ள முடியும். காகிதத்தில் எழுதி விட்டால் மட்டும் போதாது. ஆக, கடந்த காலத்தில் இருந்த நிலைக்கும், இப்போது எங்கள் தூய அரசு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில் இருக்கக்கூடிய நிலைக்கும் இடையே பல மாறுபாடுகளைக் காண முடிகிறது. அடுத்து, மின்சாரம் பற்றி அழுத்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மின்சாரம் எந்த வகையில் தயாரிக்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசு அக்கறை கொண்டிருப்பது ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்கு மின்சாரம் எவ்வளவு தேவை என்பதை உறுப்பினர்கள் அறிவர். அமெரிக்காவின் முன்னேற்றத்திற்கு காரணமே அங்கு பல மின்சார நிலையங்கள் இருந்தது தான் என்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம். அங்கு மின்சார நிலையங்கள் அதிகமாக இருந்ததன் காரணமாகதொழில் வளர்ச்சி பெருகி, உலகத்தின் பல பகுதிகளுக்கும் இன்றைக்கு கடன் கொடுக்கக்கூடிய நிலையில் இருக்கிறது என்பதை அவையிலுள்ள உறுப்பினர்கள் யாரும் மறந்திருக்க முடியாது. அந்த வகையில் புரட்சித் தலைவரின் அரசு மின்சாரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து மின்சார உற்பத்தி அதிக அளவில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, பல குறிப்புகள் இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், பல தொழிற்சாலைகளைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதோடு, தொழிற்சாலைகளுக்கு அத்தியாவசியமாக தேவைப்படுவது மின்சாரம் என்பதை எல்லோரும் அறிவோம். தொழிற்சாலைகள் ஆரம்பித்தால் மட்டும் போதாது தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மின்சாரத்தையும் பெருக்க வேண்டும். அந்த முறையில் பல திட்டங்களையும் இந்த அறிக்கையில் காண்கிறோம். முன்னால் மின்சார வெட்டு இருந்தது. அதன் காரணமாக பல தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு இல்லாமல் அரை சம்பளம் வாங்கிக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை இருந்தது. இப்போது நல்ல நிலைமையை நம்மால் பார்க்க முடிகிறது. மின்சார வெட்டு இல்லாத நிலைமையை ஏற்படுத்தியதற்காக மின்சார துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட சீரிய முயற்சிக்காக அவர்களை பாராட்டாமல் இருக்கமுடியாது.

அத்துடன் வீடு கட்டும் திட்டத்தைப்பற்றி குறிப்பிட்டிருப்பது வரவேற்கக் கூடியது. இங்கே பேசிய சில மன்ற உறுப்பினர்கள் வீடு கட்டும் திட்டம் முன்பே இருந்ததாகச் சொன்னார்கள். வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டது எனக்குத் தெரியும்,



ஆனால் இப்படி ஒரு திட்டம் இருந்ததா என்பது எனக்குத் தெரியாது. நடைமுறையில் இப்படிப்பட்ட திட்டம் இருக்கவில்லை. அரிசன மக்களுக்கு விட்டு மனைகளை ஒதுக்கிக் கொடுத்திருந்தார்கள். ஒரு சிலருக்கு மட்டும், சில இடங்களில் அத்துமீறி என்க்ரோச்மெண்ட் செய்திருந்தால் அந்த வீட்டு மனைகளை ஒதுக்கிக் கொடுத்திருப்பார்கள். ஆனால் திட்டமாக எதையும் செயல்படுத்தவில்லை. இந்த அரசுதான் வீடுகள் கட்டிக் கொடுக்கும் இந்த நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். வீடுகள் கட்டிக் கொள்வதற்காக 5,000 ரூபாய் வரை கடன் கொடுக்கும் திட்டத்தையும் கொண்டு வந்திருப்பது பாராட்டக் கூடிய திட்டமாக விளங்குகிறது. இப்படிப்பட்ட திட்டம் ஏற்கனவே இருந்த திட்டம் என்று சில உறுப்பினர்கள் சொன்னார்கள். ஆனால் நான் இப்போதுதான் இந்தத் திட்டத்தைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். மக்களும் இப்போதுதான் உணர்ந்து இருக்கிறார்கள். விடுகள் கட்டும் சங்கத்தை அணுகி கடன்கள் தரவேண்டும் என்று மனுக்களை கொடுத்து, கடன்க்ளைப் பெற்று, விடுகளை கட்டி முடித்து விட்டார்கள். ஏற்கனவே வீடு கட்டும் சங்கத்தின் மூலமாகக் கொடுக்கப்படும் கடனுக்கான வட்டிக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. முன்னால் இருந்த சப்ஸ்கிருப்ஷன் பீஸ் முதலியவை குறைக்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இப்போது மானியம் அளிப்பதாகக் கூறியிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

எல்லோருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும் நல்ல திட்டத்தை இந்த உரையில் காண்கிறோம். இந்தமாதிரி திட்டத்தை கொண்டுவருவதற்கு எந்த ஒரு அரசும் தயக்கம் காட்டும். இந்த முற்போக்கான அரசு, படித்தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும்—இவர்களை இணைத்து வேலைவாய்ப்பு கிடைக்க திட்டமிட்டிருப்பது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். திட்டம் செயல்படுகின்ற முறை நன்றாக இருந்தால், இந்தத்தமிழக அரசைப் போல் உலகத்தில் இதுபோன்று எந்த அரசையும் பார்க்க முடியாது என்பதை என்னால் சொல்ல முடியும்.

அதுபோன்று, பல மாவட்டங்களில் தொழில் மையங்கள் ஏற்படுத்தப்படும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்து இதுவரை எட்டு தொழில் மையங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ராமநாதபுரம் மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது, இதை முன்னேற்ற வேண்டும் என்று கருதி அங்கே ஒரு டிஸ்ட்ரிக்ட் இண்டஸ்ட்ரியல் செண்டர் நிறுவி, சிறு தொழில்களுக்கு ஆக்கம் அளிக்கின்ற வகையில் பல இடங்களில் உள்ள தொழில்களுக்கு ஊக்கம் கொடுத்து வருகிறார்கள். இது பயன்படுகின்ற முறையில் எனது மானாமதுரை தொகுதியில் பல சிறு தொழிற்கூடங்களைக் கட்டுவதற்கு அரசு முன்வந்திருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அதற்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. வ.மு. சுப்பிரமணியன்] [1979 பிப்ரவரி 13

மேலும், திராவிட பரம்பரையை எடுத்துக் கொண்டால், பேரறிஞர் அண்ணா அவர்களையும், அய்யா பெரியாரையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அவர்களுடைய கொள்கைகளை இந்த அரசு கடைப் பிடித்து வருகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஈரோட்டை தலைநகராகக் கொண்டு பெரியார் மாவட்டமாக அமைக்கப் போகிறது இந்த அரசு. அமெரிக்காவில் வாஷிங்டன் பெயரை வைத்து நினைவு கூறுவதைப்போல், ரஷியாவில் லெனின்கிராட் என்று பெயர் வைத்து நினைவு கூறுவதைப்போல், சமுதாயப் புரட்சி செய்த அய்யா அவர்களுடைய பெயரை நினைவு கூறுகிற முறையில், ஈரோட்டு மாவட்டம் என்று பெயர் வைத்ததை நல்ல உள்ளம் படைத்தவர்கள் யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

[பிற்பகல் 12.40]

அதேபோல்தான் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைப் பற்றி சந்தேகம் கொண்ட—இதற்குமுன் இருந்த அரசு ஒரு திராவிட பாரம்பரியத்திலே இருந்து வந்திருந்தாலும், அதை அமுல்படுத்துவதிலே தயக்கம் காட்டினார்கள். ஆனால், இதிலே தயக்கம் காட்டாமல் முற்போக்குக் கொள்கையாக எடுத்துக்கொண்டு, அதை தந்தை பெரியார் அவர்களுக்கு ஒரு காணிக்கையாக ஆக்கி, இந்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே, இதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே, மொத்தத்தில் இந்த உரையானது ஒரு நல்ல உரை, நல்ல திட்டங்களைக் கொண்ட, ஏழை எளிய மக்கள் பயனடையக் கூடிய திட்டங்களை வகுத்து, அதே சமயத்தில் தொழிற்சாலைகளைப் பெருக்குவதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டு உள்ளதை நான் பெரிதும் வரவேற்று, இங்கே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நான் மீண்டும் நன்றி தெரிவித்துக்கொண்டு அமருகிறேன்.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் உரைமீது மார்க்சிஸ்ட் கட்சியினுடைய நிலையை விளக்குவதற்கு நான் நிற்கிறேன். முதலாவதாக, கைத்தறியைப் பற்றி எங்கள் கட்சியின் நிலையை தெளிவுபடுத்துவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுடைய நிலையைப்பற்றி பரிசீலிப்பதற்காக ராஜா சுப்பிரமணியம் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு, அந்தக் கமிட்டி தனது அறிக்கையை சமர்ப்பித்து 3 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. இதுவரை அந்தக் கமிட்டியின் சிபாரிசு என்ன என்பதுபற்றிகூட அரசு வெளியிடவில்லை. அதை அமுல்படுத்துவதற்கும் கூட இதுவரை இந்த அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை மிகவும் வேதனையோடு தெரிவித்துக் கொள்ளகடமைப் பட்டிருக்கிறேன்.



1979 பிப்ரவரி 13] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்

இந்தக் கமிட்டியினுடைய சிபாரிசு ஏதோ சிதம்பர ரகசியமாக மறைக்கப்பட்டிருக்கிறது. சென்ற சட்டமன்றக் கூட்டத்திலேகூட இதைப்பற்றி இந்த அரசின் கவனத்திற்கு நண்பர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அம்பாசமுத்திரத்தில் நடைபெற்ற மாநில கைத்தறி நெசவாளர்கள் மாநாட்டிலே கலந்துகொண்ட மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களிடம் இந்த ராஜா சுப்பிரமணியம் கமிட்டியின் சிபார்சை உடனடியாக வெளியிடுவதற்கு இந்த அரசாங்கம் ஏன் தயக்கம் காட்டுகிறது என்று நான் கேள்வி கேட்டபோது, அவர்கள் மகாநாட்டிலே ஒரு வாக்குறுதி கொடுத்தார்கள். இந்த கமிட்டியின் சிபார்சு ஆங்கிலத்திலே இருக்கிறது, அதைத் தமிழ்ப்படுத்தி கொடுப்பதிலே காலதாமதமாகிவிட்டது, ஆகவே அடுத்து வரக்கூடிய சட்டமன்றக் கூட்டத்திலே வெளியிடப்படும் என்று மாநாட்டிலே வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதி கவர்னர் அவர்கள் உரையிலே வருமென்று என்னைப் போன்றவர்கள் எதிர்பார்த்தோம். ஆனால், கவர்னர் அவர்கள் உரையிலே அதைப்பற்றி ஒரு வரிகூட இல்லை என்று சொல்லும்போது, வழக்கம்போல் இதிலேயும் நழுவுகிறார்களோ என்ற அய்யப்பாடு ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மாத்திரமல்ல. இந்த சிபார்சிலே சொல்லக்கூடியவற்றை வெளியே சொல்வதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டுவது சரியல்ல என்பதை மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பிலே வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சிபார்சை வெளியிட வேண்டுமென்றும், தங்களுடைய நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் போராடுவதற்காக இந்த மாநிலம் பூராவும் கைத்தறி நெசவாளர்கள் போராடக்கூடிய ஒரு இக்கட்டான நிலைமை, இந்த அரசின் மெத்தனமான போக்கால் அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதைத் தவிர்க்க வேண்டுமானால் உடனடியாக இந்தக் கமிட்டியின் சிபார்சை இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே வெளியிடவேண்டும். அதிலே எது எது சாத்தியமோ அவைகளை இப்போதே செய்தும், எதை எதை பின்னாலே செய்யலாம் என்பதையும் அறிவித்தால், இந்தப் போராட்ட நிலைமையைத் தவிர்க்கலாம். எனவே அதற்கு முன்வர வேண்டுமென்பதையும் நான் இந்த நேரத்திலே மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பிலே வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பவர்லூமைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பவர்லூம் பற்றிச் சொல்லும்போது பல இடங்களில் லைசன்சு வாங்கி அமைத்திருக்கிறார்கள். பல இடங்களில் லைசன்சு இல்லாமலேயே பாக்டரிகள் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, இவைகளை எல்லாம் அரசாங்கம் மீண்டும் கணக்கெடுத்து, அத்தனைக்கும் லைசன்சு கொடுப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதே சமயத்தில், பினாமியாகவும்

இந்த பவர்லூம்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்பதையும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சில பாக்டரிகளில் அதிகமாக பவர்லூம் இருந்தால் வேறு பல சலுகைகள் தொழிலாளர்களுக்கு இந்தச் சட்டத்தின்கீழ் வரும் என்ற காரணத்தால் பாக்டரி ஓனர்கள் பல பகுதிகளாகப் பிரித்து வைத்துக் கொண்டு பல பினாமி பேர்களிலே வைத்திருக்கிறார்கள். இந்தமாதிரி பினாமி முறைகள் மாற்றப்பட்டு நல்லமுறையில் நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம், வேலை பாதுகாப்புக்கு உத்தரவாதம் பற்றியெல்லாம் கவர்னர் உரையில் சொல்லப்படவில்லை என்றாலும் அரசாங்கத்தின் சார்பில் கடைசியில் பதில் சொல்லும்போதாவது அதைப்பற்றியெல்லாம் சொல்ல முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சில விஷயங்களைச் சொல்வதற்கு முன்னால் ஒரு பீடிகை போட வேண்டிய நிலையில் இருக்கிறேன். நான் பின்னால் சொல்லக் கூடிய விவரங்களை எல்லாம் சில ஆதாரங்களோடுதான் சொல்லுகிறேன். சம்பந்தப்பட்ட நபர்கள் குறுக்கிடாமல் கடைசியில் கேட்டால் ஆதாரத்தைக் காட்டத் தயாராக இருக்கிறேன்.

நிர்வாகத்தில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஊழியர்கள், எம்.எல்.ஏ.க்கள், மந்திரிகள் ஆகியோரின் குறுக்கீடுகள் அதிகமாக இருக்கின்றன. நிறையச் சொல்ல நேரமில்லை என்ற காரணத்தால் ஒன்றிரண்டைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இது அரசாங்கத்தின் மீது உள் நோக்கம் கற்பிப்பதற்காக அல்ல. இப்படிப்பட்ட தவறுகள் தவிர்க்கப்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு சொல்லுகிறேன். குறிப்பிட்ட பிரச்சினைகளில் ரெப்ரசன்டேஷன்கள் செய்வதைப் பற்றி நான் சொல்லவில்லை. ஆனால், இப்படித்தான் செய்யவேண்டுமென்று பயமுறுத்துவதுதான் தவறு என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சொல்லுகிறது.

ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களைப் பற்றிய விவாதம் வந்தபோது சிக்கிரமாக தேர்தலை நடத்த வேண்டுமென்று வற்புறுத்தி திருத்த மசோதா கொண்டு வருவதையே ஆட்சேபித்து எதிர்க்கட்சியினர் அனைவரும் குரல் கொடுத்தார்கள். இன்று பஞ்சாயத்து யூனியன்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. அதற்குப் பதிலாக இடைக்காலத்தில் மக்கள் குழுக்கள் போடப்பட்டன. இப்போது போகிற போக்கைப் பார்த்தால் இது எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்று சொல்ல



முடியாத அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மக்கள் குழு அமைக்கப்படும்போது எல்லாக் கட்சியினருக்கும் பிரதிநிதித்துவம் கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. நடைமுறையில் என்ன நிலை? அதிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஊழியர்களைத்தான் போடவேண்டுமென்று மந்திரிகளால் நிர்ப்பந்தம் செய்யப்படுகிறது, அப்படியே போடப்பட்டிருக்கிறது என்பதை மிகவும் வேதனையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சில ஆதாரங்கள் இருக்கின்றன.

என்னுடைய தொகுதியில், அம்பாசமுத்திரம் பஞ்சாயத்து யூனியனில் 5 நபர்கள் வெளியார்கள் போடப்பட்டிருக்கிறார்கள். மற்றும் எம்.எல்.ஏ.க்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், மற்ற அதிகாரிகளைப் போட்டிருக்கிறார்கள். அந்த ஐந்து நபர்களும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஊழியர்களைத் தவிர வேறல்ல. அந்தப் பகுதியில் உள்ள மூன்று பஞ்சாயத்துத் தலைவர்கள், வலது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள். ஒருவர் கூட போடப்படவில்லை. வலது கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. அந்த மக்கள் குழுக் கூட்டத்திலேயே வலது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானம் போட்டிருந்தும், அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியிருந்தும் கடைசியில் அவரை நியமிப்பதற்குப் பதிலாக வேறொரு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பரைப் புதிதாக நியமிக்கக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன்.

அதைப் போல் கடையம் பஞ்சாயத்து யூனியனிலும் வலது கம்யூனிஸ்ட் கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பிரதிநிதித்துவம் இல்லை. இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகளை மக்கள் குழுவில் இணைத்துக் கொள்ள வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானம் போட்டிருந்தும் கூட அவ்வாறு போடாமல் கடையம் நகர அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளரை மக்கள் குழுவில் போட்டிருக்கிறார்கள். மந்திரி தலையீடு என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஆதாரபூர்வமான ரெக்கார்டுகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட முறைகள் நீடிப்பது சரியல்ல என்று வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன்.

மந்திரிகள் வருகிறார்கள். சில சமயம் அவர்களுக்கு விருந்துகள் கொடுக்கிறார்கள். அதற்கு ஆட்சேபனை இல்லை. குறிப்பிட்ட ஒரு மந்திரிக்கு உணவு தாசில்தாரால் ஏற்பாடு செய்யப்படவில்லை என்பதற்காக தூத்துக்குடியில் ஒரு சம்பவம் நடந்தது. மந்திரி முன்னாலேயே சம்பந்தப்பட்ட தாசில்தாரும் ரெவின்யூ இன்ஸ்பெக்டரும் கடுமையாகக் கண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1979 பிப்ரவரி 13

(பிற்பகல் 12-50;

அப்போது உண்மையிலேயே அந்த மந்திரி என்ன செய்திருக்க வேண்டும். ஏற்பாடு செய்யாவிட்டால் பரவாயில்லை. நாங்கள் ஓட்டலில் சாப்பிட்டுக் கொள்கிறோம் என்று சொல்லியிருக்க வேண்டும். அப்படிச் சொல்லாமல் அங்கே ரசாபாசம் ஏற்பட்டு கடைசியிலே தாலூகா ஆபீசிலே சிப்பந்திகள் அனைவரும் கூடி கண்டனம் தெரிவிக்கக்கூடிய நிலைமையும் ஏற்பட்டு இந்த அரசுக்கு அதனால் கெட்ட பெயர் ஏற்படக்கூடிய நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது என்பதை வேதனையோடுதான் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்காசியினுடைய தாசில்தார் எம்.எல்.ஏ.யால் வற்புறுத்தப்பட்டிருக்கிறார். குறிப்பாக தலையாரியாகப் போடவேண்டுமென்று தேர்வு நடைபெறுகிறது. யார் சூட்டபிளாக இருக்கிறார்களோ அவரைத்தான் போடுவது சரியாக இருக்கமுடியும். ஆனால் இன்னாரைப் போடவேண்டுமென்று ஆளுங்கட்சிக்காரர் எம்.எல்.ஏ. வற்புறுத்தி அதன் காரணமாக அந்த தாலூகா ஆபீசிலேயே ரகளை நடந்து அவர்களும் ஒன்றுகூடி ஒரு கண்டனத் தீர்மானம் போட்டு இந்த அரசுக்கும் முதலமைச்சருக்கும் அனுப்பக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் போக்கு தவிர்க்கப்பட வேண்டுமென்பதை நான் வினையத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்றே விளாத்திகுளத்திலே தாசில்தார் மீது தாக்குதல் நடைபெற்றது. அந்த விவரங்களுக்குள்ளே எல்லாம் போய் நான் நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. பிற்பட்டவர் பட்டியலில் இருக்கிற ஜாதிகளில் வருகிற ஒருவரைத்தான் பிற்பட்டோர் என்று சொல்லமுடியும். குறிப்பிட்ட ஒருவருடைய ஜாதி அந்த பட்டியலில் இல்லை, அரசாங்க ஆணையில் இல்லை, ஆகவே சேர்க்கமுடியாது என்று அரசாங்கத்தின் ஆணையை நியாயமாக நிலைநாட்டவேண்டுமென்று சொன்னபோது அந்த தாசில்தார் ஆபீஸில் வைத்து ரகளை நடந்து அதன் காரணமாக என்.ஜி.ஓ. சங்கத்தினர் அதுபற்றி விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்படி நியாயமாக சர்க்கார் ஆணையை நிறைவேற்றக்கூடியவர்களை உடனடியாக அம்பாசமுத்திரத்திற்கு மாற்றும் நிலைமை நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. அதைப்போன்று தான் பரமக்குடியிலும் நடைபெற்றது. நான் அதைப்பற்றி பேசி நேரத்தை எடுத்துக்கொள்ளவில்லை.

மணிமுத்தாறு டவுன்ஷிப் கமிட்டி நியமனத்திலே ஒரு வேடிக்கை நடந்திருக்கிறது. மணிமுத்தாறு டவுன்ஷிப் கமிட்டியிலே அந்த அம்பாசமுத்திரம் தொகுதியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.ஐ தான் போடுவது இதுவரையில் நடந்து வருகிறது. ஆனால் இப்போது சேர்மாதேவியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.வை போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள் து தேவை



1979 பிப்ரவரி 13] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்[

யில்லை என்று நான் சொல்லவில்லை. அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்தவரைத்தான் போடவேண்டும் என்று சொன்னதற்காக அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக மாற்றப்பட்டிருக்கிறார். இப்படிப்பட்ட குறுக்கீடுகள் வராமல் இருக்க வேண்டுமென்றும், அரசாங்கம் இதிலே விழிப்புடன் இருக்கவேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தத்தைப்பற்றி 1946 ஆம் ஆண்டிலிருந்து பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் இதுவரைக்கும் எந்தவிதமான நிலச் சீர்திருத்தமும் நடைபெறவில்லை. அதைப்பற்றி அப்புறம் வைத்துக்கொள்வோம் என்றாலும் கூட குறைந்தபட்சம் இடைக்காலத்திலே 75, 25 வார முறையையாவது இந்த அரசாங்கம் கொண்டுவந்திருக்க வேண்டும். அப்படிச் செய்வதற்கு அதிகாரம் இந்த அரசுக்கு இருக்கிறது, எப்படி 60, 40 என்று கொண்டுவரப்பட்டதோ—அது கொண்டுவரப்பட்டு ஏறத்தாழ கால் நூற்றாண்டுக்கு மேல் ஆகிவிட்டது—ஆகவே அதை 75, 25 வாரமாக மாற்றி சட்டம் கொண்டுவர அரசை எங்கள் விவசாய சங்கம் கோரியுள்ளது.. இந்த ஆளுநர் உரையிலே கொண்டு வந்திருப்பார்கள் என்று நினைத்தேன். ஆனால் கொண்டுவரவில்லை. அதேபோன்று விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்ய வேண்டுமென்று எங்கள் விவசாயத் தொழிலாளர்கள் ஸ்தாபனங்கள் கேட்டுக்கொண்டும் கூட என்னவோ தெரியவில்லை இன்னமும் காலதாமதம் ஆகிறது. கமிட்டி போடுகிறோம். ஆனால் அது ராஜா சுப்பிரமணியம் கமிட்டி மாதிரி ஆகிவிடக் கூடாது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். குறைந்தபட்சக் கூலியை உடனடியாக இந்த கூட்டத் தொடரிலேயே அறிவிக்கவேண்டும், இதற்கு பதில் சொல்லும்போது அறிவிப்பார்கள் என்று நினைக்கிறேன். மேற்கு வங்கத்திலே 8 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அந்தமாதிரி இந்த விவாதத்திற்கு பதில் அளிக்கின்றபோது அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

'சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம்' என்ற பெயரில் மத்திய அரசாங்கத்தின் நிதி உதவியோடு 15 கோடி ரூபாய் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் இந்த ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிவடைகிறது என்று கருதுகிறேன். அந்தத் திட்டம் எவ்வளவோ முயற்சித்நாலும்கூட எருமை வேகத்திலும், ஆமை வேகத்திலும் போய் ஆறு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகவில்லை. மீதி 9 கோடி ரூபாய் அப்படியே இருக்கிறது. அதை எப்படியாவது செலவு செய்வதற்கு அரசுத் தரப்பிலே முயற்சிக்கிறார்கள். அதற்காக பல கட்டுரைகள் எழுதப்படுகின்றன. உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள்கூட நவம்பர் மாதத்தில் 'தமிழரசு' பத்திரிகையில் கட்டுரை எழுதியிருப்பதாகக் கருதுகிறேன். ஆனால் இதுவரையில் அந்தத் துறையில் துரிதம் போதாது என்றே சொல்வேன். இந்த மார்ச் மாதம் முடிவ

தற்குள் பணம் காலியாக்கப்படவில்லை என்றால், மத்திய அரசாங்கத்தின் நிதி உதவியை வாங்கினாலும்கூட அந்தப் பணம் விவசாயிகளின் நன்மைக்காகச் செலவு செய்யப்படவில்லை, அதனால் சரண்டர் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு தமிழக அரசு காலத்தில் இதைச் செய்யாததால் இந்தப் பணத்தைத் திரும்பச் செலுத்த வேண்டி வந்துவிட்டது என்ற அவப்பெயர் அரசுக்கு வராமல் இருக்க வேண்டுமானால் அந்த வேலையைத் துரிதப்படுத்திச் செய்ய வேண்டும். இல்லையென்றால் மேலும் ஒரு ஆண்டு நீடித்தாவது அந்தப் பணத்தை வேளாண்மைக்குப் பயன்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் அந்தப் பணம் மக்களுக்குக் கிடைக்கும், அதனால் அவர்கள் வேலையில் உற்சாகத்துடன் ஈடுபடுவார்கள். அத்துடன் அந்த வேலையில் ஈடுபட்டிருக்கும் 600-லிருந்து 1,000 ஊழியர்கள் வரை அவர்களுக்கு வேலைப் பாதுகாப்பும் கிடைக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக காவல்துறை அமைச்சுப் பணியாளர்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 1960 ஆம் ஆண்டில் போலீஸ்காரர்கள் 29,000 பேர்கள் இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு இந்த எண்ணிக்கை இரண்டு மடங்காக ஆகியிருக்கிறது. ஆனால் அதன் அமைச்சுப் பணியாளர்கள் அதாவது கிளார்க்குகள், செக்ஷன் ஆபீஸ்களில் அப்படியே இருக்கிறது. இதை ஒரு பிரச்னையாக அரசாங்கம் கவனத்திற்கொண்டு, பழனிவேல் அவர்களால் சிபாரிசு செய்யப்பட்டு, போலீஸ் கமிஷன் 71 சிபாரிசின்படி விகிதாச்சார அடிப்படையில் பணியாளர்களை உயர்த்திப் போடவேண்டுமென்றும் உட்பட 133 சிபாரிசுகளை கமிஷன் சொல்லியிருக்கிறார்கள். 132 கமிஷன் சிபாரிசு நிறைவேற்றப்பட்டுவிட்டது. ஆனால் இந்த அரசுப் பணியாளர்களின் வேலைப் பணிகளை, அதிக ஆட்கள் போட வேண்டுமென்ற சிபாரிசு மட்டும் அமலாக்கப்படவில்லை. அந்த ஊழியர்கள் வருத்தப்பட்டு மனுக்கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றிக் கவனர் உரையில் இல்லை. இதை உடனடியாகச் செய்ய முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

கடைசியாக ஒரேயொரு விஷயத்தைச் சொல்லிவிட்டு முடித்து விடுகிறேன். பழைய பிரதமர் அவர்கள் பராளுமன்றத்தின் முடிவின் அடிப்படையிலே கைது செய்யப்பட்டார்கள். அதை ஆட்சேபித்து எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வன்முறை நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. அதுபற்றி மற்ற பல தோழர்கள் பேசுவார்கள், எனவே நான் அதைப் பற்றிப் பேசப்போவதில்லை. ஆனால் ஒரேயோரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். கைது செய்ததை ஆட்சேபிக்க உரிமையிருக்கிறது. அதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் அது அமைதியாக நடக்க வேண்டும். அதற்குப்பதிலாக அமைதியாக இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டே அதற்கு மாறாக வன்முறையில் நடந்திருக்கிறார்கள். பஸ் புறப்பட்டு



வரும்பொழுது சாதாரணமாகப் படுத்து மறிக்கட்டும், அதில் கைது செய்தால் கைதாகட்டும்; அதில் ஆட்சேபணையில்லை. ஆனால் கல்லைக்கொண்டு எறிவதும், அதை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நகர அமைப்பாளரே முன்னின்று செய்வதும் வேதனைக்குரிய விஷயம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக அம்பாசமுத்திரம் நகர அமைப்பாளரே கடையை அடைக்கிறீர்களா, இல்லையென்றால் கலகம் செய்வோம் என்று பேசும் நிலையை நான் நேரில் பார்த்தேன்.

தூத்துக்குடியிலே நகர அமைப்பாளர் தலைமையில் சென்ற கோஷ்டி ஜனதாக் கட்சித் தலைவரைத் தாக்கி இரத்தக் காயம் ஏற்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லி, இதை நீக்குவதற்கு அரசு முயற்சிக்கவேண்டும் என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் முதலமைச்சர் மீது உரிமைப் பிரச்னை கொண்டு வந்தபொழுது, மாண்புமிகு அவை முன்னவரவர்கள், **உட்காருங்கள் என்று சொன்னது பத்திரிகையிலே வேறுவிதமாக வருமேயானால் அது மாண்புமிகு உறுப்பினருடைய நடவடிக்கைக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் அமையும் என்ற உணர்வு இருப்பதால் அந்த வார்த்தையைப் பத்திரிகைக் குறிப்பிலிருந்தும், சபைக் குறிப்பிலிருந்தும் நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1.00]

*திரு. ர. ஜெபமணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் அறிக்கையிலே ஜனதா கட்சி சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல அனுமதி தந்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே இந்த அறிக்கையைப்பற்றிப் பேசும்பொழுது ஆளுங்கட்சியினர் மிக வேகமாகப் பாராட்டினார்கள். எதிரிலே இருக்கும் நாங்கள் அதை எதிர்க்க வேண்டுமென்றமுகத்தான் எதிர்க்கவில்லை. ஆனால், அதிலே என்ன இருக்கிறது என்று துருவித் துருவிப் படித்தால் எப்படியாவது ஒரு அறிக்கையை அன்றைக்கு வாசிக்க வேண்டுமென்று எழுதப்பட்டிருக்கிறதே தவிர, இந்த நாட்டு மக்களுக்கு நாம் என்ன செய்யப் போகிறோம், இதிலே ஏதாவது பெரிய புரட்சிகரமான திட்டங்கள் இருக்கிறதா என்பதை நாம் ஆராய்ந்து பார்த்தால் ஒன்றுமில்லை. அதற்கு ஒருவேளை அதிகமாக அறிவு தேவைப்படுமோ என்ற ஐயப்பாடு எனக்கு ஏற்படுகிறது. காரணம் என்னவென்றால், புதிதாக ஏதாவது ஒன்று நடந்துவிடும், நாம் அதைப் பார்க்கலாம், தொகுதி மக்களுக்குப்

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

போய்ச் சொல்லலாம், அவர்களுக்கு ஏதாவது செய்யலாம் என்று பார்த்தால், அப்படி இதிலே புதுமை ஒன்றும் இல்லை. இவர்கள் மேல் குற்றம் இல்லை. இரண்டு மூன்று தடவை கூட்டவேண்டிய சட்டசபையை ஒரு தடவை கூட்டி முடித்துவிடலாம் என்று நினைத்து விடுகிறார்கள். அதுவும் காலப் போக்கில் கூட்ட வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தில் ஏதோ ஒரு அறிக்கை வாசிக்க வேண்டுமென்று பழைய அறிக்கைகளைச் சேர்த்துவைத்து, எப்படியோ தயார் செய்து, அதைப் படித்துவிட்ட பெருமையோடு இருந்து விடுகிறார்கள். காரணம், தங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது என்ற காரணத்தாலே, எதைப் படித்தாலும், இதோ புதுமை என்று சொன்னால் புதுமையென்று எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்ற எண்ணத்தில் பேசிவிடுகிறார்கள். அறைத்த மாவையே அறைத்து வருகிறார்கள் என்று சொல்வார்களே அது நடந்திருக்கிறது.

நான் அடுத்து வருகிறேன், சட்டம் ஒழுங்கைப் பற்றி இந்த நாட்டு மக்கள் மிகப் பயப்பட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர் நண்பர் முருகையன் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்பதைப் பற்றி மட்டுமல்ல, அல்லது எதிர்க்கட்சித் தலைவர் தாக்கப்பட்டார் என்பதைப் பற்றி மட்டுமல்ல, இந்த நாட்டு மக்கள் எல்லோருடைய உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து வருமோ என்ற பயமும் பீதியும் இருந்து வருகிறது. இந்த நாட்டிலே போராட்டம் நடப்பதுதான் ஜனநாயகம். தன்னுடை உரிமையைப் பற்றிப் பேசுவதற்கு உரிமை வேண்டும்.

அச்சமும் பேடிமையும்
அடிமைச் சிறுமதியும்
உச்சத்திற் கொண்டாரடீ!—கிளியே!
ஊமைச் சனங்களடீ!

என்பதுபோல் ஊமையாக இருப்பதில்லை சுதந்தரம். தன்னுடைய எண்ணங்களை, தன்னுடைய சிந்தனையில் உதிக்கும் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்பதுதான் சுதந்திரத்தின் இலட்சியம். ஆனால், அந்தச் சுதந்திரம் எப்படி இருக்க வேண்டும்? தான் சுதந்திரமாக இருந்து மற்றவர்களைச் சுதந்திரமாக வாழ விடவேண்டும். அதை விட்டுவிட்டு தன்னுடைய சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு மற்றவர்களுடைய சுதந்திரத்தைப் பறிக்க நினைப்பது சுதந்திரமல்ல. நான் ஒரு உதாரணம் சொல்கிறேன், அக்டோபர் 23-ம் தேதி தொழிலாளர் பிரச்னையை வைத்துக்கொண்டு குறிப்பிட்ட சில எதிர்க்கட்சிக்காரர்கள் ஒரு பெரிய கடை அடைப்பை நடத்தினார்கள். அப்பொழுது நமது முதலமைச்சரவர்கள் ரேடியோவிலே உரை நிகழ்த்தினார்கள். வன்செயல் நடக்குமானால் அதைக் கண்டிப்பாக அடக்குவேன் என்று பேசினார்கள். நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.



வன்செயல் எங்கே நடந்தாலும் அது எந்த முறையில் நடந்தாலும் அதை அடக்க வேண்டிய பொறுப்பு இந்த நாட்டு மக்களுடைய உயிரைத் தன் பொறுப்பில் வைத்திருக்கும் முதலமைச்சருக்கு உண்டு. ஆனால், அதே முதலமைச்சர் இந்திரா காந்தி கைது செய்யப்பட்டவுடனே மீண்டும் வானொலியில் அதே உரையை நிகழ்த்தியிருந்தால், நான் உளமார, மனமாரப் பாராட்டி இருப்பேன் இங்கே சட்டம் இல்லை, ஒழுங்கு இல்லை. எங்கள்கட்சியை சேர்ந்த எல்லோரும் இரவிலே கைது செய்யப்பட்டோம்—சர்வாதிகார ஆட்சியிலே. நாங்கள் ஏன் கைது செய்யப்பட்டோம் என்று இன்னமும் எங்களுக்குத் தெரியவில்லை. சட்டம் அப்படி இருந்தது. ஆனால், இந்திரா காந்தி கைது செய்யப்பட்டவுடன், வீட்டிலே தூங்கிக் கொண்டிருந்தவர்களையெல்லாம் சென்னையிலே கைது செய்தார்கள். அப்படிக் கைது செய்யப்பட்டவுடன் நான் முதலமைச்சரோடு தொலைபேசியில் தொடர்புகொண்டு, அவர்கள் எல்லாம் கவுரவமானவர்களாயிற்றே அவர்கள் ஏன் கைது செய்யப்பட்டார்கள். எனக்குக் காரணம் தெரிய வேண்டுமென்று கேட்டேன். முதலமைச்சர், ரவுடி லிஸ்டில் இருப்பவர்களை மட்டும்தான் பிடிக்க வேண்டுமென்று நான் சொன்னேன் என்று சொன்னார். நான் சொன்னேன், கைது செய்யப்பட்டவர்கள் என்றும் சிறைச் சாலை போனவர்கள் அல்ல, என்று. அப்படியானால் நான் அதை விசாரித்துச் சொல்கிறேன் என்றார் முதலமைச்சர். ஆனால், நாங்கள் அவர்களை ஹைகோர்ட்டில்தான் ஜாமீனில் எடுத்தோம். ஆனால் கடைகளைத் திறக்காவிட்டால் சூறையாடுவோம் என்று மைக்கை வைத்து சிவகாசியிலே சொல்லிக் கொண்டு போனார்கள். அதற்குப் போலீஸ் துணை போனது. வீட்டிலே தூங்கிக் கொண்டு இருந்தவர்களையெல்லாம் கைது செய்திருக்கிறார்கள்.

எதற்கும் பங்கம் ஏற்படலாம். ஆனால் நீதிக்கு மட்டும் பங்கம் ஏற்படக்கூடாது. அப்படி நீதிக்குப் பங்கம் ஏற்பட்டால் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு இருக்காது. எந்தச் சர்க்காராக இருந்தாலும் சரி அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். தமிழகத்திலே என்ன நடந்தது? வைகை எக்ஸ்பிரஸ் வழக்கமாக 100 கிலோ வேகத்தில் போகும். அது கவிழ்ந்திருந்தால் நமக்கு அதைப்பற்றிக் கவலை இல்லைபோல் தெரிகிறது. பஸ் கொளுத்தப்படுகிறது. எப்படிக் கொளுத்தப்படுகிறது? அங்கே துடித்துத் துடித்துச் சாகிறார்கள். நம் வீட்டிலே உள்ளவர்கள் சாகவில்லை. நம் வீட்டிலே குழந்தைகள் படம் விழுந்தால் நாம் துடித்து விடுகிறோம். ஆனால் அவர்களைப்பற்றி ஒன்றுமே இல்லை. உங்களுக்கு ஒரு கட்சியின் மேல் அனுதாபம் இருப்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் சட்டம் ஒரு கட்சியைச் சேர்ந்ததாகி விடக் கூடாது. நீங்கள் துலாக் கோல் போல் இருக்க வேண்டும். உங்களுக்கு ஆயிரம் துன்பங்கள் வந்தாலும் நீங்கள் தாங்கிக் கொள்ள வேண்டும். மற்றவர்களைக் கொடுமைப்படுத்துவீர்களேயானால் அது திருப்பி உங்களுக்கு செய்யும். இந்த நாட்டிலே என்ன நடக்கவில்லை?

எழும்பூர் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் என்ன நடந்தது? ஜாமீனில் எடுப்பதற்காக 5 பேர்களை அனுப்பியிருந்தோம். அப்போது இரண்டு லாரிகளில் வந்து கைது செய்யப்பட்டவர்கள் இறங்கினார்கள். போலீசாரும் பாதுகாப்புக்காக வந்திருந்தார்கள். வரும்போது அங்கே ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். லாரியில் இருந்தவர்கள் இறங்கி வந்து அவர்களை அடித்தார்கள். அவர்கள் 5 பேர்களும் ஓடிப்போய் ஒளிந்து கொண்டார்கள், வழக்கறிஞர்கள் இருக்கக்கூடிய லாபியிலே, அங்கேயும் போய் உதைக்கிறார்கள். வழக்கறிஞர்கள் அவர்களை அடிக்காதீர்கள் என்று தடுக்கிறார்கள். அவர்களுக்கும் உதை விழுகிறது. சட்டம் என்ன செய்யும்? நீங்களும் வாங்கிக் கொள்ளுங்கள் என்று வழக்கறிஞர்களைச் செம்மையாக உதைக்கிறார்கள். ஏன் என்றால் நீங்கள் இருட்டறையிலே விளக்குப் பிடிப்பவர்கள் என்று செம்மையாக உதைத்தார்கள். வழக்கறிஞர் அசோசியேஷன் தீர்மானம் போட்டது. ஏதாவது ஒரு நடவடிக்கை உண்டா ?

நீங்கள் ஆட்சியிலே இருக்கும்போது தவறு பண்ணினால், திருப்பி உங்களை ஒரு காலத்தில் அது தாக்கும். நீங்களே இருப்பீர்கள் என்று எண்ணாதீர்கள். நாங்களும் 20 வருஷம் ஆட்சி நடத்தவில்லையா ? இப்போது எங்கே இருக்கிறோம்? இந்த நிலைமை உங்களுக்கு வராது என்று என்ன நிச்சயம்? நிச்சயம் வரும். அந்தச் சூழ்நிலை உங்களுக்கு வரக் கூடாது. நீங்களே ஆளுங்கள். கவலையில்லை. மற்றவர்களை மதிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். மற்றவர்களை மிதித்து விடாதீர்கள்.

நான் பாராளுமன்ற உறுப்பினர் முருகையன் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவர் கொல்லப்பட்ட இடத்தில் நின்று அழுதேன். வீட்டுப் பக்கத்திலேயே அவர் கொலை செய்யப்படுகிறார். அவர் குரல் கேட்கிறது. அவர் மனைவி மக்கள் வெளியே வரலாம் என்றால் வெளியே தாள் போடப்பட்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட கொடுமை நடந்திருக்கிறது. இன்று வரையில் போலீஸ் அதிகாரிகள் அந்தக் குடும்பத்தில் சென்று விசாரிக்கவில்லை. ஏன் விசாரிக்கவில்லை? ஒரே ஒருவர்தான் 33 குத்துக்கள் குத்தியதாகச் சொல்கிறார்கள். ஒருவன் ஒரு குத்து அல்லது 3 குத்து குத்துவான். செத்த பிறகு நமக்கு என்ன ஆகுமோ என்று ஓடுவான். அவன் என்ன கசாப்புக் கடையா வைத்திருக்கிறான்? கொலைக்குத் துணையாக இருந்தோம் என்று பெயர் வந்துவிடக் கூடாது. அது எப்படியும் நம்மை வந்து தாக்கிவிடும்.

மனுநீதிச் சோழனைப் பற்றித்தான் நாம் படிக்கிறோமே தவிர, அவன் மாமன் மச்சானைப் பற்றிப் படிப்பதில்லை. ஏன் அவர்கள் தங்கள் மகனைக் கொல்லவில்லை. தவறு எங்கே நடந்தாலும் நீதியிலே நாம் தலையிடக் கூடாது. பணிவோடும் அன்போடும் கேட்டுக் கொள்கிறேன். பாதுகாப்புத் தாருங்கள். பாதுகாப்பு என்றால் ஜெபமணிக்கு ஒரு போலீஸ் கூடவே வரும்,





அப்படிப்பாதுகாப்புக்கு வரும் போலீஸ் அதிரிகாரியே மாறினால், கட்டுச் சோற்றுக்குள்ளே பூனையை வைத்துக் கட்டியதைப் போலத்தான் இருக்கும். போலீஸ் அதிகாரிகளைத் தன்னிச்சையாகச் செயல்பட விட்டு விடுங்கள். எந்தக் கட்சிக்காரர்கள் வந்தாலும் சட்டத்திற்குப் புறம்பாகக்காரியங்களைச்செய்ய அனுமதிக்கக் கூடாது. அப்படி இருந்தால் மதுவிலக்கை நன்றாக அமல் நடத்த முடியும். போலீஸ் அதிரிகாரிகளோடு எந்தக் கட்சிக்காரர்களும் மதுவிலக்குப் பற்றி பேசக்கூடாது என்று ஒரு உத்தரவு போடுங்கள்.

[பிற்பகல் 1-10.]

ஒரு ஹெட்கான்ஸ்டேபிள் போதும். அவனுக்குத் தெரியும், காய்ச்சுபவன் யார், விற்பவன் யார், குடிப்பவன் யார் என்று. ஆனால் இப்போது நிலமை என்ன ? அவன் பயப்படுகிறான், இவன் எம்.எல்.ஏ.க்கு சொந்தக்காரனோ, மந்திரிக்கு மருமகனோ, கூட்டத்திற்கு மந்திரியை அழைத்துவந்து மாலை போட்டவனோ என்று பயப்படுகிறான். நான் ஒரு போலீஸ் அதிகாரியைக் கேட்டேன். ஏன் ஐயா, காய்ச்சுபவனைப் பிடிக்கவில்லை, குடிப்பவனைப் பிடிக்கவில்லை என்று. அவர் சொல்கிறார், என்னய்யா, உங்கள் ஆட்சி என்று நினைத்தீர்களா, நீங்கள் சிபார்சுக்கு வந்தால், என்னய்யா, கதர் சட்டையைப் போட்டுக் கொண்டு வந்து இருக்கிறீர்களே, வெட்கம் இல்லையா என்று கேட்போம், நீங்களும் போய்விடுவீர்கள், ஆனால், இப்போது நிலைமை என்னவென்றால், வருகிறபோதே, யார் ஐயா இங்கே எஸ். ஐ.? கேட்கிற கேள்வியே அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது, அவன் உடனே பயந்து ஐயா, நான் தான், இந்த ஸ்டேஷனுக்கு வந்து எவ்வளவு நாள் ஆச்சு, 3 மாதம் ஆச்சு சார், அவர் யார் தெரியுமா, தெரியும் சார், சாராயம் விற்றவன், அது தான் தெரியுமா, ஆமாம், 3 நாளைக்கு முன்னால் இங்கே அமைச்சரை அழைத்து வந்தது யார் தெரியுமா, அவர் தான் இவர், உடனே எஸ். ஐ. என்ன சொல்கிறார், ஐயா, நீங்கள் போங்கள். அவருக்குத் தெரியும், பிடித்தாலும் சம்பளம் பிடிக்காவிட்டாலும் சம்பளம், இவரைப் பிடித்து உள்ளே போட்டதால் மறுபடியும் டிரான்ஸ்பர் ஆகலாம், எதற்கு வம்பு என்று விட்டு விடுகிறார். சாராயம் தண்ணியாகப் போய்க் கொண்டு இருக்கிறது, ஏழை குடித்து விட்டு, குடும்பம் நடத்தக் காசு இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார். அதற்குக் காரணம் என்ன என்றெல்லாம் நான் உள்ளே போக விரும்பவில்லை, நான் அதைப் பற்றிச் சொல்லா விட்டாலும், நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது, போலீஸ்காரர்கள் யாருடைய தலையீடும் இல்லாமல் பணியாற்றுவதற்கு விடுங்கள் என்பதுதான். போலீஸ்காரர்கள் எல்லோருக்கும் பாதுகாப்பு தரவேண்டியவர்கள். ஜனாதிபதி வீட்டில் களவு போனாலும், முதலமைச்சர் வீட்டில் களவு போனாலும், அவர்கள் புகார் கொடுக்க வேண்டியது போலீஸ் நிலையம்தான். ஆகவே, போலீஸ்காரர்கள் தன்னிச்சையாகச்செயல்பட, சட்டம், ஒழுங்கு பாதுகாப்பு அனை

வருக்கும் கிடைத்திட, அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும். இந்திரா காந்தி வந்த போது சட்டம் ஒழுங்கு பிரச்னை கையாளப் பட்டது தமிழகத்திற்குக் களங்கம் வந்து விட்டது. நாங்களும் தான் போராடியிருக்கிறோம். 40,000 பேர்கள் ஜெயிலுக்குப் போய் இருக்கிறோம். ஒரு சோடா பாட்டில் உடையவில்லை. எந்த ஒரு போலீஸ் லாரியும் கொளுத்தப்படவில்லை........

திரு. ந. தனசேகரன் : தலைவரவர்களே, பெரியவர் ஜெபமணி பேசும்போது ஒரு போலீஸ் ஸ்டேஷனில் நடந்ததாக ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார். அது எந்த காவல் நிலையத்தில், எந்த காவல் அதிகாரியை, யார் மிரட்டினார் என்று சொன்னால், அது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் தயாராக இருக்கிறார். ஆகவே, அவர் விவரம் தெரிவித்தால் அது முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க உறுதுணை செய்ததாக இருக்கும்.

திரு. ர. ஜெபமணி : எங்கள் ஜில்லாவைச் சேர்ந்தவர் என் மீது கொண்டுள்ள இரக்கத்தின்பால் சொல்லியிருக்கிறார். நான் பொய் பித்தலாட்டம் சொல்வது இல்லை. நான் முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒரு போலீஸ் அதிகாரியைப் பற்றிப் புகார் சொல்லி, அவரும் நான் அதைச் சொன்ன உடனே அதே போனில் அரை மணி நேரம் இருங்கள், நான் பதில் சொல்கிறேன் என்று சொன்னார், நான் அரை மணி நேரம் இல்லை, அரை நாள் இருந்தேன் எந்தவிதமான பதிலும் வரவில்லை. ஆகவே, நான் இங்கே உங்களுக்கு அவர் யார் என்று சொல்லி விட்டால், உத்யோகம் போய்விட்டது என்று சொல்லி அந்த காவல் துறை அதிகாரி தற்கொலை செய்து கொண்டுவிட்டால். அவர் குடும்பத்தைக் காப்பாற்ற நான் என்ன டாட்டாவா, பிர்லாவா அவர்களுக்குச் சாப்பாடு போட? ஆகவே நான் சொல்ல விரும்புவது, இப்படி நடக்கிறது, அதைத் தடுக்க நீங்கள் நடவடிக்கை எடுங்கள். இனிமேல் நடக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்பதற்காகத்தான். நீங்கள் தலையிடுகிறீர்கள் என்று நான் சொல்லவில்லை. நீங்கள் தலையிட மாட்டீர்கள் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே உறுப்பினர் பேசும்போது............(மணியடிக்கப்பட்டது.)

திரு. ர. ஜெபமணி : நம்முடைய நிர்வாகத்தில் எப்படி நடக்கிறது என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. நீதி மன்றத்திலே சொல்கிறார்கள் ; வக்கீல் பெருமக்கள் வெளிப்படையாகவே சொல்கிறார்கள். சட்டம் ஒரு மாதிரி போகிறதே என்று எங்கும் சொல்கிறார்கள். சிறைச்சாலைகளிலே என்ன



செய்கிறார்கள் என்றால், காலையிலே பிடித்துக்கொண்டு போட்டவர்களைச் சாயுங்காலம்தான் கணக்கு எடுக்கிறார்கள். வீட்டிலே படுத்துக்கிடப்பவனைப் போலீஸ்காரர்கள் தட்டியெழுப்பி அழைத்துச் செல்கிறார்கள். திருடனை விட்டுவிட்டுத் தூங்குகிறவனைத் தட்டி எழுப்புகிறார்கள். இந்த நிலை வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டம், ஒழுங்கு நிலை இப்படி இருக்கிறது; அதோடு இருக்கட்டும். மதுவிலக்குக் கொள்கையை நீங்கள் அமல்படுத்த மாட்டீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். காரணம் என்னவென்றால் உங்களுக்கு அதிலே நம்பிக்கை இல்லை. விளம்பரத்திற்காக மதுவிலக்கு, மதுவிலக்கு என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள், ஆனால் அதில் நம்பிக்கை இல்லை. நம்பிக்கை இருந்திருந்தால் அதில் துரித நடவடிக்கை எடுத்திருப்பீர்கள். உங்களுடைய நடவடிக்கை எல்லாம் எப்படி இருக்கிறது என்றால் வீட்டுக்குள்ளே படுத்துத் தூங்குகிறவனைக் கதவைத் தட்டி எழுப்பி, குடித்திருக்கிறாய் என்று சொல்லி அழைத்துச் செல்வதுதான்.

நிர்வாணமாக வெளியே செல்வது சட்ட விரோதமானது. ஆனால் 'பாத் ரூமிலே' இருப்பவனை நிர்வாணம் என்று சொல்லி கைது செய்தால் அதற்கு என்ன அர்த்தம் ; அதை எப்படி வர்ணிப்பது ? இப்படிப்பட்ட கேவலமான ஒரு நிலைமை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. எதையும் செய்யும்போது கொஞ்சம் ஜாக்கிரதையாகச் செய்ய வேண்டும்.

அடுத்து இங்கே ஒரு பெரிய பிரச்சினை இருக்கிறது. மொழி, மொழி, மொழி. இதற்கு தீர்வே இல்லையா? ஜாதி வெறி, மத வெறி, பிரதேச வெறி, மொழி வெறி—இது ஒரு நாட்டின் சுகாதாரத்தையே கெடுத்துவிடும். பண்டித ஜவகர்லால் நேருவிலிருந்து, திருமதி இந்திரா காந்தியிலிருந்து மொரார்ஜி தேசாய் வரை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திணிக்கப் படாது, திணிக்கப்படாது, திணிக்கப்படாது என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். அதை அவர்கள் சொல்லக்கூட தேவையில்லை. ஜனநாயகத்தில் எதையும் யார்மீதும் திணிக்க முடியாது.

திணிக்கிறார்கள், திணிக்கிறார்கள் என்று சொல்வதால் தாய்மார்கள் எல்லாம் பயப்படுகிறார்கள். ஏதோ மற்ற மொழிகளையெல்லாம் கற்றுத்தான் கொடுக்கிறார்கள், இந்தியை மட்டும் திணிக்கிறார்கள் போலும், அப்படியானால் நம் பிள்ளை தாங்கமாட்டான் என்று தாய் நினைக்கிறாள். திணிக்கிறார்கள், திணிக்கிறார்கள் என்றால் கோணியில் பருத்தியைத் திணிப்பதைப்போலவா திணிக்கிறார்கள் ? அப்படித் திணிக்க மாட்டார்கள். திணிக்க முடியாது.

[திரு. ர. ஜெபமணி] [1979 பிப்ரவரி 13

முதலிலே இந்தி பற்றிய அடிப்படையைத் தெரிந்துகொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் வரவேண்டும். காந்தியடிகள்தான் முதன் முதலில் இந்திப் பிரச்சாரத்தை ஆரம்பித்தார்கள். அவர்களுடைய மகன் தேவதாஸ் காந்திதான் ஆசிரியராக வந்தார். அவர் இந்திக்காரர் அல்ல, அவர் ஒரு குஜராத்தி. சர்தார் வல்லபாய் பட்டேல் வந்தார், அவர் இந்திக்காரர் அல்ல, அவர் ஒரு குஜராத்தி. ஜவகர்லால் நேரு வந்தார், அவர் இந்திக்காரர் அல்ல, ஒரு காஷ்மீர் பிராமின். நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் வந்தார், அவர் ஒரு வங்காளி—இந்திக்காரர் அல்ல. அடுத்தபடியாக திலகர் வந்தார், அவர் ஒரு மராட்டியர்—இந்திக்காரர் அல்ல. மொரார்ஜி தேசாய் கூட ஒரு குஜராத்திதான். நிலைமை இப்படி இருக்க அவர் திணிக்கிறார், இவர் திணிக்கிறார் என்று சொல்வதில் அர்த்தமில்லை. தாய்மொழியிலே கல்வி கற்கவேண்டும், தாய் மொழியிலே பேசுங்கள், எழுதுங்கள், படியுங்கள் என்று காந்தியடிகள் சொன்னார்கள். அதற்கு அச்சாரம் கொடுத்தவரே காந்தியடிகள்தான்.

இந்த நாட்டில் நீதிக்கட்சி ஒன்று இருந்தது. ஆங்கிலத்தைத் தவிர வேறு ஒன்றிலும் அவர்கள் பேசமாட்டார்கள். பெயர் தமிழ்வேள் என்று இருக்கும்; தமிழிலே பேசமாட்டார்கள். காந்தியடிகள் வந்த பிறகுதான் தாய்மொழியிலே பேசவும் எழுதவும் ஆரம்பித்தார்கள். அந்த ஆர்வத்தை ஏற்படுத்தினார்கள். கதர் அபிவிருத்தியும், கைத்தொழில் வளர்ச்சியும், மத ஒற்றுமையும், மாதர் முன்னேற்றமும், மதியினை மயக்கும் மதுவினை ஒழித்தலும், நம் தாய் மொழியும், இந்திமொழியும் உடல் சுகாதாரமும், ஊர் சுகாதாரமும் ஆதியோர்குழைத்தலும், அரிஜன சேவையும், ஆய இப்பணிகளால் நாட்டிற்கு சேவை செய்ய வருவீரே என்று சொல்லி என்னைப்போன்ற தொண்டர்களை அழைத்தார்கள் காந்தியடிகள். பிராந்திய மொழியை வளர்க்க வித்திட்டவர் காந்தியடிகள். ஆகவேதான் தமிழ்நாடு காங்கிரஸ், கேரளா காங்கிரஸ், ஆந்திரா காங்கிரஸ் என்று மொழிவாரியாக காங்கிரஸ் அமைப்பை ஏற்படுத்தினார்கள். அப்போதுதான் தமிழ்நாட்டிலே தமிழிலே பேசினார்கள். தமிழ்நாடு காங்கிரசில் தந்தை பெரியாரும் ஒருவர். அப்போது அவர் எங்கள் கட்சி. நீங்கள் அதை மறந்துவிடக்கூடாது. அப்போது இந்தியை அவர் எதிர்க்கவில்லை. அவர் தமிழிலே பேசினார், திரு. வி. க. பேசினார், பாரதி பாடினார், சுப்பிரமணிய சிவா பேசினார், தமிழ் வளர்ந்தது.

திரு. எஸ். ஜே. இராமசாமி: சார், பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். தாங்கள் அகில இந்திய காங்கிரஸ் அமைப்பில் போனாலும் சரி, அல்லது ஜனதா கட்சியில் போனாலும் சரி தாங்கள் எந்த மொழியில் பேசுகிறீர்கள்?



1979 பிப்ரவரி 13]

திரு. ர. ஜெபமணி: நல்ல அருமையான கேள்வி ஒன்றைக் கேட்டிருக்கிறார்கள். அவர் ஒரு குழந்தை. அதனால்தான் நான் எந்த மொழியில் பேசுகிறேன் என்று தெரியாமல் கேட்கிறார். இங்கே எதில் பேசுகிறேனோ அதில்தான் எல்லா இடத்திலும் பேசுகிறேன். தலைவர் காமராஜ் அவர்கள் அகில இந்தியத் தலைவராக இருந்தபோதிலும் தமிழில்தான் பேசினார்கள். பாராளுமன்றத்தில் இப்போது யாரோ போய் தமிழில் பேசினார்கள் என்று சொன்னார்கள். பாராளுமன்றத்தில் இப்போது மட்டுமல்ல, எப்போதும் பேசலாம். தி.மு.க. உறுப்பினர் நிறையபேர் அங்கே தமிழில் பேசியிருக்கிறார்கள். இங்கே இருக்கிற கம்யூனிஸ்ட் நண்பர் ரமணி அவர்கள் தமிழில் பேசியிருக்கிறார்கள். இப்போது விளம்பரத்திற்காகத் தமிழில் பேசினார் எங்கள் கட்சித் தலைவர் என்று சொல்லிக் கொள்கிறார்களே தவிர வேறல்ல. என்னைக் கேட்டால் இது ஒரு விளம்பரத்திற்காகத்தான். உங்களுக்கு ஒன்று சொல்வேன், உண்மையான சரக்குக்கு விளம்பரம் தேவையில்லை.

[பிற்பகல் 1.20]

உண்மையான டாக்டர்கள் விளம்பரமா செய்கிறார்கள். விளம்பரம் கொடுக்கக்கூடிய டாக்டர்கள் இக்கிறார்சள். இவர்களுக்கு என்ன வந்தது? இரவிலே தூக்கம் இல்லையா? வாலிபத்திலே கிழத்தனம் வந்துவிட்டதா? என்னை வந்து பாருங்கள் என்று டாக்டர்கள்தான் விளம்பரம் கொடுப்பார்கள். ஆகவே, இது விளம்பரத்திற்காகச் செய்யப்படும் காரியமே தவிர, நாட்டு மக்களைத் திசை திருப்புகின்ற காரியமே தவிர வேறு எதுவும் இல்லை. எதற்காக மொழிப் பிரச்சினை. இந்த நாட்டிலே இந்தித் திணிப்பு என்கிறோம். திணிப்பு என்பது கிடையாது. பிரதமர் அவர்கள் திணிப்பு கிடையாது என்று சொன்னதற்காகப் பாராட்டி முதலமைச்சரவர்கள் ஒரு தந்தி கொடுத்திருக்கிறார்கள். இப்படி இருக்கும் போது மீண்டும் மாநாடு எதற்கு? ஏனென்றால் உங்களிடத்தில் வேறு ஆயுதம் இல்லை. முழுமையான, அடிப்படையான வேறு நல்ல ஆயுதங்கள் இல்லை. இனிமேல் உங்களால் எதையுமே சொல்ல முடியாது. விலைவாசி ஏறிவிட்டது என்று சண்டை போட முடியாது.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, ஒரு பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். நமது மதிப்பிற்குரிய உறுப்பினர் பெரியவர் அவர்களிடம் ஒரு விளக்கம் மொழிப் பிரச்சினை குறித்துத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன. இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக இந்தி இருக்க வேண்டும் என்று சொல்கிறாரா அல்லது காந்தியார் வலியுறுத்திய இந்துஸ்தான் இருக்க வேண்டும் என்று சொல்கிறாரா, அல்லது அவர் பேசுகிற அன்னைத் தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று சொல்கிறாரா, ஆட்சி மொழி குறித்து அவருடைய கட்சியின் நிலை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ர. ஜெபமணி] [1979 பிப்ரவரி 13

*திரு. ர. ஜெபமணி : தலைவர் அவர்களே, நான் சென்னையின் ராஜதானியாக இருந்தபோது திரு. ரகுமான்கான் அவர்கள் சின்னக் குழந்தை. ஏன், நானும் குழந்தைதான். இந்தத் தமிழ்நாடு தனியாக வந்தபோது தமிழே ஆட்சி மொழி ஆக்கின ஒரே தானைத் தலைவன் காமராஜர் என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலே தமிழ் மட்டும்தான் இருக்கிறது. என்று நினைத்தால் நீங்கள் ஏமாந்து போவீர்கள். இங்கே தெலுங்கு பேசக்கூடியவர்கள் 70 லட்சம் பேர் இருக்கிறார்கள். கொங்கனி பேசக்கூடியவர்கள் இருக்கிறார்கள். சபாநாயகர் அவர்கள் கூடத் தெலுங்கு பேசக்கூடியவர்தான். அப்படியானால் நாங்கள் அவருக்கு வாயிலே தமிழைத் திணித்தோமா ? பல மொழிகள் பேசக்கூடியவர்கள் இருக்கிறார்கள். மலையாளம் பேசக்கூடியவர்கள் இருக்கிறார்கள், கன்னடம் பேசக்கூடியவர்கள் இருக்கிறார்கள், உருது பேசக்கூடியவர்கள் இருக்கிறார்கள், இவர்கள் எல்லோரும் இரண்டாம் தரத்து மக்கள், நீங்கள் மட்டும்தான் முதல்தரத்து மக்களா ? இன்னும் சொல்லப் போனால் இங்கே முதலமைச்சராக இருப்பவரே......

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நெல்லை ஜெபமணி அவர்கள் பேசிக்கொண்டே வரும்போது எங்கெங்கேயோ போய் மொழிப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டு தமிழ் பற்றியும் குறிப்பிட்டார்கள். அந்தக் காலத்தில் தமிழுக்கு ஊக்கம் தந்தது குறித்து மகிழ்ச்சிதான். ஆனால் அவர் சொல்லிக் கொண்டே வந்தபோது தமிழ்நாடு என்று பெயர் வைத்ததேகூட தாங்கள்தான் என்று கூறிவிடுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். அப்போது செய்யப்பட்டது விளம்பரத்திற்கு அல்ல. நமக்கு உயிரைக் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது என்பதை மறந்துவிடுவதற்கு இல்லை. ஆனால் அவர் பேசுகிற போது முதலமைச்சரும் என்று சொல்லிக் கொண்டே வந்து திடீரென நிறுத்தினார்கள்....

திரு. ர. ஜெபமணி : தலைவரவர்களே காக்கை குருவி எங்கள் ஜாதி, நீர் கடல் மலையும் எங்கள் கூட்டம், என்று பாரதியார் பாடினார்.......................

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அப்படியானால், இந்தியாவிற்கு எல்லைகளே தேவையில்லையா எல்லைகளைக் காக்கப் படையும் தேவையில்லையா ?

திரு. ர. ஜெபமணி : உலகமே ஒரே ஜாதி என்று ஏற்பட்டுவிட்டால் எல்லை தேவையில்லைதான். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று உலகினுக்கே என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர தமிழ் நாட்டிற்கே என்று குறிப்பிடப்படவில்லை.



1977 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு' என்று சொல்லப்பட்டிருப்பதையும் கவனிக்க வேண்டுகிறேன். ஆகவே, அது இந்த உலகத்தைப் பற்றிச் சொல்லப்படவில்லை.

திரு. ர. ஜெபமணி : தலைவரவர்களே, '' உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் '' என்று சிவபெருமான் சேக்கிழாருக்கு அடி எடுத்து கொடுத்திருக்கிறான். உங்களுக்குத்தான் அந்த நம்பிக்கையே கிடையாதே. என்னைப் பொறுத்தமட்டில் தான் புரிந்து கொண்டது அவ்வளவுதான்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதே சங்கீதத்தில் என்னால் பாட முடியாது என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

திரு. ர. ஜெபமணி: மொழிப் பிரச்சினை என்பது ஜாக்கிரதையாக அணுகவேண்டிய பிரச்சினை. தமிழ் நாட்டில் எவ்வளவோ வீடுகளுக்குப் போனால் அங்கு தெலுங்கில் பேசுகிறார்கள். சபாநாயகர் அவர்களது ரூமிற்குப் போனால் யார் வந்தாலும், 'ரண்டி கூச்சண்டி' என்கிறார்கள். அதற்காகத் தமிழ் நாட்டில் பிறந்துவிட்டு நீங்கள் 'ஐயோ' என்று சொல்லலாமா ? அப்படிச் சொல்லக் கூடாதே. அவர்கள் யார் ? நம்மோடு உள்ளவர்கள்தான் அவர்களும். மொழிப் பிரச்சினை என்பது அதுதான். அப்போது நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதி என்ன ? இந்தியோடு ஆங்கிலம் இணை மொழியாக இந்தி பேசாத மக்கள் விரும்புகிறவரையில் இருக்கும் என்பதாகும், அதுதானே. அது இல்லை என்று யார் சொன்னார்கள் ? நீங்கள இந்த நாட்டிலுள்ள இளைஞர்கள் இந்தி படிக்கக்கூடாது என்று சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது ? கேரளக்காரர்கள் படித்துவிடுகிறார்கள். அவர்கள் நாடு பூராவிலும் சென்று வாழ்கிறார்கள். குவைத் அரபு நாடுகளுக்குச் சென்று பணத்தைக் கொள்ளை கொள்ளையாகக் கொண்டு வருகிறார்கள். கேரளாக்காரன் மட்டுமா படிக்கிறான் ? ஆந்திரக்காரன் படிக்கிறான், அதே மாதிரி கர்நாடகக்காரன் படிக்கிறான். நீங்கள் உங்கள் பிள்ளைகளை மட்டும் இந்தி படிக்கக்கூடாது என்று சட்டம் போடலாமா ?

'' எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு ''

காரணம் என்னவென்றால் அவன் உலகைக் கண்டான், தமிழ், எழுத்து என்று சொல்லவில்லை. அவன் உலகைக் கண்டான், நாம் இங்கே நம் வீட்டைப் பார்க்கிறோம். பிள்ளைகள் இஷ்டப்பட்டால் படிக்கட்டும். உருது வேண்டுமானால் படி, மராத்தி வேண்டுமானால் படி, குஜராத்தி வேண்டுமானால் படி, இஷ்டப்படி படிக்கட்டும், தாய் போல், தந்தையைப் போல் அரசு இருக்கிறது என்று உங்கள் அகலக் கையை விரி

யுங்களேன். பிள்ளைகள் இஷ்டப்பட்டால் படிக்கட்டும், படிக்கக்கூடாது என்று தடை போடுவது இந்த நாட்டுக்கு எவ்வளவு பெரிய பாதகத்தை உண்டு பண்ணும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். 60 கோடி மக்கள் ஒரு தாய் பிள்ளைகள் அல்லவா ? திரு. மொரார்ஜி தேசாய் அவர்களின் தாய்மொழி குஜராத்தி, அவர்கள் குஜராத்திதான் இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. காந்தியடிகளும் குஜராத்தைச் சேர்ந்தவர்கள்தான், குஜராத்தியில் எழுதுகிறார், அவர்கள் குஜராத்திதான் இருக்கவேண்டும் என்று சொன்னார்களா ? அதற்காக அவர்களுக்கு நமது தாய் மொழிமீது பற்று இல்லை என்று அர்த்தமா ? தாய் தமிழாக இருக்க வேண்டும், மனைவி இந்தியாக இருக்க வேண்டும், வேலைக்காரி ஆங்கிலமாக இருக்க வேண்டும் என்று சொல்வதில் என்ன தவறு ? எல்லாம் தாயோடு முடிந்து விடுகிறதா ? இதை எப்படி மறுக்கமுடியும் ?

திரு. அ. ரகுமான்கான் : பெரியவர் அவர்கள் இன்னும் என் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. காரணம் அவர்கள் பிரச்சனையைத் திசை திருப்புகிறார். நான் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புவது என்னவெனில், அவர்களது கட்சி சார்பாக இந்திதான் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று சொல்கிறார்களா அல்லது அவர்கள் வணங்குகிற காந்தியாரின் கொள்கைப்படி இந்துஸ்தானி இருக்க வேண்டும் என்று சொல்கிறார்களா ? இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ள 14 மொழிகளில் தமிழும் இருக்கிறது, இந்தியும் இருக்கிறது. அப்படியிருக்க இந்தி மட்டும்தான் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும், அதைக் கற்க வேண்டும், ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகிறார்களா ?

திரு. ர. ஜெபமணி : காந்தியடிகள் இந்துஸ்தானி என்று சொன்னது இந்துயையும உருதுவையும் சேர்த்து. இப்போது அது இந்தியாக இருக்கிறது. அவர்கள் இறந்தது 1948-ல். அப்போதே இந்தியை ஏற்றுக்கொண்டு விட்டார்கள். இந்தி மத்திய அரசில் உடனடியாக அமலுக்கு வரவேண்டும் என்று நான் சொல்லவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : அரசியல் நிர்ணய சபையில் விவாதம் நடக்கிறகாலத்துல் காந்தியாரின் நிலை இந்துஸ்தானி ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்பதுதான். அதைக் கொண்டு வந்தவர் அபுல்கலாம் ஆஸாத் அவர்கள். இந்தி ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்று நேரு அவர்கள் வாதித்திருக்கிறார்கள்.

திரு. ர. ஜெபமணி : திரு. ரகுமான்கான் இப்போதாவது இந்துஸ்தானியை ஏற்றுக்கொண்டார்களே.





திரு. அ. ரகுமான்கான் : தமிழ்தான் மத்திய அரசின் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்பது எங்கள் கட்சியின் கருத்து.

திரு. ர. ஜெபமணி : காந்தியடிகள் சொன்னதை ஒப்புகொள்கிறேன் என்று திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்றார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : நான் அப்படிச் சொல்லவில்லை.

திரு. ர. ஜெபமணி : நீங்கள் சிறு பிள்ளைகள். அதிலேயே ஊறிவிட்டீர்கள். காரணம், குதிரைக்கு கடிவாளம் போட்ட மாதிரி. ஆனால் நீங்கள் நாளடைவில் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. நீங்கள் சொல்வதை உருப்படியாக கடைசிவரை வைத்துக்கொண்டதில்லை. திராவிட நாடு என்று இருபது ஆண்டுகளாக சொன்னீர்கள். காமராஜ் பெரியாரிடம் கேட்டார், திராவிட நாடு எங்கே இருக்கிறது, சொல்லுங்கள், வாங்கித் தருகிறேன் என்று. அப்படி இருந்தால் நான் ஏன் கேட்கிறேன் என்றார் அவர். காங்கிரசுக்கும் எனக்கும் சண்டை வந்து விட்டது, காங்கிரஸை எதிர்த்து எதிர்க்கடை போடுவதுதான் என் கொள்கை என்றார்கள். திராவிட நாடா வெங்காய நாடு என்று சொல்லவில்லையா ?

[பிற்பகல் 1–30.]

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து அமருங்கள், திரு. ஜெபமணி அவர்கள், நீங்களும் அமருங்கள். உங்களுக்கு அனுமதித்த நேரம் முடிந்து விட்டது. 20 நிமிடம் கொடுக்கப்பட்டது. 30 நிமிடத்துக்கு மேலாகிவிட்டது. எல்லோரும் சிரித்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருந்தார்கள், போதும், இத்துடன் முடித்துவிடுங்கள். பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

## 2. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

### (இ) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—திருத்தங்கள்

ஆளுநர் அவர்களின் பேருரைக்கான நன்றி அறிவிப்புத் திர்மானத்திற்குத் திருத்தங்களை, 14—2—1979 ஆம் தேதி புதன் கிழமை, காலை 11 மணி வரை கொடுப்பதற்கு கால அளவு நீட்டிக்கப் பெற்றுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் மேலும் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு திருத்தங்கள் கொடுத்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றை 15—2—1979 ஆம் தேதியன்று முன் மொழிய வேண்டும்.

[1979 பிப்ரவரி 13

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9—00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## (6) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

85. விற்பனைக் குழுவின் பணிகளைச் செய்தல், மற்றும் அதிகாரத்தைச் செலுத்துவதற்காகத் தனி அதிகாரிகளை நியமிப்பது குறித்து 2—9—1978 ஆம் தேதியிடப்பெற்ற வேளாண்மைத் துறையின் அரசாணை எண். 1478-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

86. ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அலுவலர்கள், பணியாளர்களின் நடத்தை குறித்த விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 17—4—1978 ஆம் தேதியிடப்பெற்ற ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 581 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

87. மாற்றியமைக்கப் பெற்ற தமிழ்நாடு தொழிலாளர் நலக் குழுவில் திரு. பி. ஜி. கிட்டு, எம். எல். ஏ. அவர்களை ஒரு உறுப்பினராக நியமிப்பது குறித்து 2—12—1978 ஆம் தேதியிடப்பெற்ற தொழிலாளர்-வேலைவாய்ப்புத் துறையின் அரசாணை எண். 1513-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நலநிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1972) 41 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

88. கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் எல்லா வடிவிலுமுள்ள கச்சா இரப்பரை வேளாண்மை விளைபொருளாக அறிவிப்பது குறித்தும், அம்மாவட்டத்தில் விற்கப்பெறும் எல்லா வகையான கச்சா இரப்பரை விற்பதன் மேல் கட்டுப்பாட்டினைச் செலுத்துவது குறித்தும் 21—11—1978 ஆம் தேதியிடப்பெற்ற வேளாண்மைத் துறையின் 1850 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் விற்பனைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]



1979 பிப்ரவரி 13]

89. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள புதூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலிருந்து சில கிராமங்களை நீக்குவது குறித்து 20—11—1978 ஆம் தேதியிடப்பெற்ற வேளாண்மைத் துறையின் 1838 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

90. பண்யாற்றம் அடிப்படையில் இணைப் போக்குவரத்து ஆணையாளரை நியமிக்கும் பட்சத்தில் அப்பதவியினை அரசு வேளாண்மைக் கழக வரம்பெல்லையிலிருந்து நீக்கும் பொருட்டு தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசு தேர்வாணைக் கழக ஒழுங்கு விதிமுறைகளின் திருத்தமொன்று செய்வது குறித்து 18—11—78 ஆம் தேதியிடப்பெற்ற பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளரமைப்பு-M) அரசாணை எண் 1287-ல் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

91. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தில் 1978 ஆம் ஆண்டிற்கான பிராந்தியக் குழுவிற்கான விதிகளை வகுப்பது குறித்து 2—12—1978 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 1495 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

*92. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நிதி நிலை அறிக்கையின் விவர அட்டவணை; மற்றும் 1977-78 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் விவர அட்டவணை [தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு மின்சாரம் (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948/61(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய நாள்கள்.

*24. உடுக்குறியிடாத வினா பட்டியல் (1 முதல் 500 வரை).

## இணைப்பு I.

[485 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 22-க்கான விடையைக் காண்க.]

விடை—(அ) கீழ்க்கண்ட முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன—

(1) நிறுவிய உற்பத்தி திறனில் முன்னேற்றம் காண, கால வரையறைக்குட்பட்ட திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும். 1978–79 ஆம் வருடத்திற்கான இத்திட்டத்தை மத்திய மின் அமைப்பின் கீழ் மாநில பிரதிநிதிகள் அடங்கிய செயற்குழு ஒன்று பிப்ரவரிக்குள் வகுக்கும். இவ்வாறு வகுக்கப்படும் திட்டம் பெரும்பாலும் அவ்வருடத்தில் பெய்யும் மழை மற்றும் இதர காரணங்களை பொறுத்து இருக்குமாதலால், இத்திட்டம் ஒவ்வொரு வருடமும் வகுக்கப்பட வேண்டும்.

(2) தற்பொழுதுள்ள பொருளாதார செயல் முறைகளை ஆய்வு செய்து மின் வாரியங்களின் ஒட்டு மொத்தம் செயல் முறைகளில் மேம்பாடு காணவும் மின் கட்டண விதங்களை ஒழுங்கு படுத்துவதற்காகவும் தேவையான நடைமுறையில் சாத்தியமாகும் பரிந்துரைகளை கூறுவதற்காக, மாநில மின் வாரியங்களின் செயல் முறைகளில் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்று அகில இந்திய அளவில் அமைக்கப்படலாம்.

(3) மின் திட்டங்களை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக, மாநிலத்தில் மேல்மட்ட அளவில் அவ்வப்போது நடைபெறும் திட்டப் பணிகளை ஆய்வு செய்து ஊக்குவிப்பதற்கான ஏற்பாடுகளை ஏற்கனவே செய்யாமல் இருந்தால், இரண்டு மாத காலத்திற்குள் செய்யப்பட வேண்டும்.

(4) மின்வாரியப் பணிகளை செவ்வனே நிறைவேற்றக் கூடிய திறமை மிக்க வாரிய தலைவர்களையும் மற்றும் வாரிய உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்க குழு ஒன்றை மாநில அரசு அமைக்க வேண்டும். தேவைப்பட்டால் இதற்கு மத்திய அரசின் உதவியை பெறலாம்.

(ஆ) மின் வாரியங்களின் தலைவர்களை நிர்ணயிப்பதற்கு விசேஷ அமைப்பு ஒன்றை நிறுவ மாநிலங்களை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனவா ?

விடை—(ஆ) ஆம்.

(இ) ஆம் எனில் தமிழ்நாட்டுக்கு அவ்வித அமைப்பு எப்போது நிறுவப்படும் ?

விடை—(இ) மின் வாரியத் தலைவருக்குத் தேவையான அனுபவம், திறமை அனுபவம், ஆர்வம் இவைகளை கருத்திற் கொண்டு மின் வாரியத் தலைவரை இவ்வரசு தேர்ந்தெடுக்கிறது. ஆகையால், மின் வாரியத் தலைவரை தேர்ந்தெடுக்க தேர்வுக் குழு ஒன்று அமைப்பது தேவையில்லாத ஒன்றாகும்.



## இணைப்பு II.

[492-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்டு வினா எண் 25-க்கான விடையைக் காண்க.]

### தமிழ்நாடு சட்டப்பேரவை.

திரு. சி. கோவிந்தராஜன், எம். எல். ஏ.,-யின் வினா எண். 3 (உடுக்குறியிட்டது) தொடர்பாக.

தென்னாற்காடு மாவட்டம் பண்ருட்டி வட்டத்திலுள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் உள்ள ஆலயங்களின் பட்டியல்.

1 அருள்மிகு கைலாச நாதர் ஆலயம், நடுவீரப்பட்டு.

2 அருள்மிகு பூலோகநாதர் ஆலயம், நெல்லிக்குப்பம்.

3 அருள்மிகு சுப்ரமணியர் ஆலயம், காராமணிக்குப்பம்.

4 அருள்மிகு நடனபாதீஸ்வரர் ஆலயம், திருக்கண்டீஸ்வரம்

5 அருள்மிகு வரதராஜபெருமாள் ஆலயம், பண்ருட்டி.

6 அருள்மிகு சிஷ்ட குருநாதர் ஆலயம், திருத்துறையூர்.

7 அருள்மிகு விரட்டீஸ்வரர் ஆலயம், திருவதிகை.

8 அருள்மிகு காசிவிஸ்வநாதசாமி ஆலயம், புதுப்பேட்டை.

9 அருள்மிகு சிவ சுப்பிரமணியசாமி ஆலயம், மேல்பட்டாம் பாக்கம்.

10 அருள்மிகு சஞ்சீவிராயர் ஆலயம், பாஹுர்.

11 அருள்மிகு வீரபத்ரர் அண்டு விநாயகர் ஆலயம், வரக்கால் பட்டு.

12 அருள்மிகு திரௌபதியம்மன், செல்லியம்மன் ஆலயம், நத்தம்.

13 அருள்மிகு அஷ்டமூர்த்திஸ்வரர் அண்டு கோதண்டராமன் ஆலயம், அவியனூர்.

14 அருள்மிகு சீனிவாச பெருமாள் ஆலயம், சிறுவத்தூர்.

15 அருள்மிகு வெங்கடேச பெருமாள் ஆலயம், நத்தம்.

16 அருள்மிகு பூமுடி ஐயனார் வகையறா ஆலயம், பூங்குளம்.

17 அருள்மிகு திருக்காமேஸ்வரர் ஆலயம், பனப்பாக்கம்.

18 அருள்மிகு சீனிவாச பெருமாள் ஆலயம், புலவனூர்.

19 அருள்மிகு நாகநாதீஸ்வரர் ஆலயம், சிறுவத்தூர்.

20 அருள்மிகு கோதண்டராமர் ஆலயம், கண்டரக்கோட்டை.

21 அருள்மிகு சிதம்பரஸ்வரர் வகையறா ஆலயம், கோட்லாம்பாக்கம்.

22 அருள்மிகு திருமூல நாதீஸ்வரர் ஆலயம், சேமக்கோட்டை.

23 அருள்மிகு சீனிவாச பெருமாள் ஆலயம், மேல் குமாரமங்கலம்.

24 அருள்மிகு வலம்புரி விநாயகர், அதிகவல்லி தற்காத்தம்மன் ஆலயம், திருவதிகை.

25 அருள்மிகு சரநாராயணப் பெருமாள் ஆலயம், திருவதிகை.

26 அருள்மிகு படவேட்டம்மன் ஆலயம், வைத்திரெட்டிபாளையம்.

27 அருள்மிகு தர்மேஸ்வரர் ஆலயம், பூங்குளம்.

28 அருள்மிகு அமிர்த விநாயகர் ஆலயம், விழமங்களம்.

29 அருள்மிகு பசுபதீஸ்வரர் ஆலயம், திருவாமூர்.

30 அருள்மிகு கத்தரிக்காய் சின்ன பிள்ளையார் ஆலயம், பண்ருட்டி.

31 அருள்மிகு முத்தாலம்மன் ஆலயம், வீரர் குடியிருப்பு.

32 அருள்மிகு திருமூலநாததீஸ்வரர் ஆலயம், புலியூர்.

33 அருள்மிகு லட்சுமி நாராயணப் பெருமாள் ஆலயம், சிறுகிராமம்.

34 அருள்மிகு சோமநாதசாமி ஆலயம், சிறுகிராமம்.

35 அருள்மிகு வேணுகோபாலசாமி ஆலயம், சோழவல்லி.

36 அருள்மிகு திரௌபதியம்மன் ஆலயம், விஸ்வநாதபுரம்.

37 அருள்மிகு லட்சுமி நாராயணப் பெருமாள் ஆலயம், வாள்பாக்கம்.

38 அருள்மிகு மன்னார்சாமி பச்சை வாழியம்மன் ஆலயம், எழுமேடு.

39 அருள்மிகு சீனிவாச பெருமாள் ஆலயம், மாளிகைமேடு.

40 அருள்மிகு சஞ்சீவிராயர் கோயில் மற்றும் பஜனைமடம், மேலப்பாளையம்.





41 அருள்மிகு ஆதிபுரீஸ்வரர் ஆலயம், நெசனூர் (என்னும்) எய்தனூர்.

42 அருள்மிகு சிங்காரநாத சாமி ஆலயம், கொங்கராயனூர்.

43 அருள்மிகு கைலாசநாதர் ஆலயம், சோழவல்லி.

44 அருள்மிகு காசி விஸ்வநாதசாமி ஆலயம், செம்மேடு.

45 அருள்மிகு வரதராஜப் பெருமாள் ஆலயம், வரதராகூன்பேட்டை.

46 அருள்மிகு தர்மராஜர் வகையறா ஆலயம், சோழவல்லி.

47 அருள்மிகு கன்னிகா பரமேஸ்வரி ஆலயம், பண்ருட்டி.

48 அருள்மிகு அனந்தீஸ்வரர் ஆலயம், பேர் பெரியாங்குப்பம்.

49 அருள்மிகு ரங்கநாதசாமி ஆலயம், திருவதிகை.

50 அருள்மிகு வேட்டை வெங்கட்ராயர் ஆலயம், மேல்பட்டாம்பாக்கம்.

51 அருள்மிகு செட்டி பிள்ளையார் ஆலயம், நடுவீரப்பட்டு.

52 அருள்மிகு லட்சகதீஸ்வரர் ஆலயம், மேல் குமாரமங்கலம்.

53 அருள்மிகு வலம்புரி விநாயகர் ஆலயம், சன்னியாசிபேட்டை.

54 அருள்மிகு விரட்டீஸ்வரர் ஆலயம், வேகாக்கொல்லை.

55 அருள்மிகு ஐயனார் ஆலயம், கொஞ்சிக் குப்பம்.

56 அருள்மிகு ராமர் விநாயகர் ஆலயம், நெல்லிக்குப்பம்.

57 அருள்மிகு தர்மராஜர் மற்றும் திரௌபதியம்மன் ஆலயம், நெல்லிக்குப்பம்.

58 அருள்மிகு கண்ணன் ஆலயம், பஜனைமடம், பண்ருட்டி.

59 அருள்மிகு சிவலோகநாதசாமி ஆலயம், மேல்பட்டாம்பாக்கம்.

60 அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோயில், பைதாம்பாடி.

61 அருள்மிகு மாரியம்மன் கோயில், உளுந்தம்பட்டு.

62 அருள்மிகு கைலாசநாதர் கோயில், அவியனூர்.

63 அருள்மிகு மாரியம்மன் கோயில், கரும்பூர்.

[1979 பிப்ரவரி 1

64 அருள்மிகு சன்னாசி வரதராஜசாமி கோயில், கரும்பூர்

65 அருள்மிகு சன்னவிரதராஜர் கோயில், கரும்பூர்.

66 அருள்மிகு செல்வ விநாயகர் மற்றும் திரௌபதியம்மன் கோயில், கரும்பூர்.

67 அருள்மிகு சஞ்சீவிராயர் கோயில், எனவிரிமங்கலம்.

68 அருள்மிகு மாரியம்மன் கோயில், கொரத்தி.

69 அருள்மிகு வரதராஜ பெருமாள் கோயில், அக்கடவல்லி.

70 அருள்மிகு அய்யனார் கோயில், சுயப்பாக்கம்.

71 அருள்மிகு மாரியம்மன் கோயில், திருத்துறையூர்.

72 அருள்மிகு பிடாரி கோயில், கண்டரக்கோட்டை.

73 அருள்மிகு திரௌபதியம்மன் கோயில், புலவனூர்.

74 அருள்மிகு செய்யாலீசுவரர் கோயில், ஒரையூர்.

75 அருள்மிகு வீரராகவப் பெருமாள் கோயில், வீரப்பெருமாநல்லூர்.

76 அருள்மிகு சிவபுரிஸ்வரர் கோயில், வீரப்பெருமாநல்லூர்.

77 அருள்மிகு சுப்ரமணியசுவாமி கோயில், குடுமியாங்குப்பம்.

78 அருள்மிகு சஞ்சீவிராயர் கோயில், திருவாமூர்.

79 அருள்மிகு பிடாரியம்மன் கோயில், திருவாமூர்.

80 அருள்மிகு வைகுண்டவாச பெருமாள் கோயில், மேல் அருங்குணம்.

81 அருள்மிகு வீரபத்திரசாமி கோயில், பண்டரக்கோட்டை.

82 அருள்மிகு விநாயகர் கோயில், பண்டரக்கோட்டை.

83 அருள்மிகு செல்வ விநாயகர் கோயில், பண்டரக்கோட்டை

84 அருள்மிகு காளியம்மன் கோயில், பண்டரக்கோட்டை.

85 அருள்மிகு குமரன் என்கிற சுப்ரமண்யசாமி கோயில், தொரப்பாடி.

86 அருள்மிகு செல்வவிநாயகர் கோயில், தொரப்பாடி.

87 அருள்மிகு அவுரிக்கொல்லை அம்மன் கோயில், தொரப்பாடி.



1979 பிப்ரவரி 13]

88 அருள்மிகு மாரியம்மன் கோயில், கோட்லாம்பாக்கம்.

89 அருள்மிகு பெருமாள் அண்டு ஈசுவரர் கோயில், கோட்லாம்பாக்கம்.

90 அருள்மிகு திரௌபதியம்மன் கோயில், கோட்லாம்பாக்கம்.

91 அருள்மிகு வெண்ணியம்மன் கோயில், அங்குசெட்டிபாளையம்.

92 அருள்மிகு தர்மராஜர் கோயில், அங்குசெட்டி பாளையம்.

93 அருள்மிகு சுப்பிரமணியசாமி கோயில் ஏரிப்பாளையம்.

94 அருள்மிகு குரும்பையனார் கோயில், கருக்கை.

95 அருள்மிகு மாரியம்மன் கோயில், கருக்கை.

96 அருள்மிகு பாலவிநாயகர் கோயில், கருக்கை.

97 அருள்மிகு பிடாரி கோயில் (பேர் பெரியாங்குப்பம்), விரசிங்களகுப்பம்.

98 அருள்மிகு பிள்ளையார் கோயில், பேர் பெரியாங்குப்பம்.

99 அருள்மிகு பிடாரி கோயில், பேர்பெரியாங்குப்பம்.

100 அருள்மிகு அய்யனார் கோயில், பேர்பெரியாங்குப்பம்.

101 அருள்மிகு சித்தி விநாயகர் கோயில், கருங்குழி.

102 அருள்மிகு செல்லியம்மன் கோயில், சேராக்குப்பம்.

103 அருள்மிகு திரௌபதியம்மன் கோயில், கருங்குழி.

104 அருள்மிகு மாரியம்மன் கோயில், கருங்குழி.

105 அருள்மிகு உத்திராபதீஸ்வரர் கோயில், கொளக்குடி.

106 அருள்மிகு மாரியம்மன் கோயில், கொளக்குடி.

107 அருள்மிகு விக்னேஸ்வரர் கோயில், கொளக்குடி.

108 அருள்மிகு செல்வ விநாயகர் கோயில், கொளக்குடி.

109 அருள்மிகு சஞ்சீவிராயர் கோயில், வடகைலாசம்.

110 அருள்மிகு குருலட்சுமி பஜனைமடம், வடகைலாசம்.

111 அருள்மிகு வேணுகோபாலசாமி கோயில், ஆண்டிக்குப்பம்.

112 அருள்மிகு சித்தி விநாயகர் கோயில், ஆண்டிக்குப்பம்.

113 அருள்மிகு செல்வ விநாயகர் கோயில், ஆண்டிக்குப்பம்.

[1979 பிப்ரவரி 13

114 அருள்மிகு மாரியம்மன் கோயில், ஆண்டிக்குப்பம்.

115 அருள்மிகு ஆண்டிக்குப்பம் செல்வ விநாயகர் கோயில், கணிசப்பாக்கம்.

116 அருள்மிகு மாணிக்க விநாயகர் கோயில், லட்சுமி நாராயணபுரம்.

117 அருள்மிகு திரௌபதியம்மன் கோயில், லட்சுமிநாராயண புரம்.

118 அருள்மிகு லட்சுமி நாராயணசாமி மற்றும் தர்மராஜர் கோயில், லட்சுமிநாராயணபுரம்.

119 அருள்மிகு தர்மமேஸ்வரசாமி கோயில், லட்சுமி நாரா யணபுரம்.

120 அருள்மிகு செங்கேணி பிள்ளையார் கோயில், மாளிகை மேடு.

121 அருள்மிகு தர்மராஜர் கோயில், மாளிகைமேடு.

122 அருள்மிகு குமரேஸ்வரன் கோயில், மேல்மாம்பட்டு.

123 அருள்மிகு தர்மராஜர் கோயில், வெங்கடராம்பேட்டை.

124 அருள்மிகு அய்யனார் கோயில், வெங்கடராம்பேட்டை.

125 அருள்மிகு திரௌபதியம்மன் கோயில், வெங்கடராம் பேட்டை.

126 அருள்மிகு பிள்ளையார் கோயில், அன்னதானம்பேட்டை

127 அருள்மிகு மாரியம்மன் கோயில், விருபாட்சி.

128 அருள்மிகு காலனி மாரியம்மன் கோயில், விருபாட்சி.

129 அருள்மிகு சித்தி விநாயகர் கோயில் (புதுக்குப்பம்), விருபாட்சி.

130 அருள்மிகு அரிஜன் காலனி மாரியம்மன் கோயில், விருபாட்சி.

131 அருள்மிகு பிடாரியம்மன் கோயில், விருபாட்சி.

132 அருள்மிகு மாரியம்மன் கோயில், மேல்புதுப்பேட்டை.

133 அருள்மிகு சித்திவிநாயகர் கோயில், மேல்புதுப்பேட்டை.

134 அருள்மிகு மாரியம்மன் கோயில், ஆடூர்குப்பம்.

135 அருள்மிகு காலனி மாரியம்மன் கோயில், பைதாம் பூண்டி.



1979 பிப்ரவரி 13]

136 அருள்மிகு அங்காளம்மன் கோயில், சேமக்கோட்டை.

137 அருள்மிகு தர்மராஜர் கோயில், சேமக்கோட்டை.

138 அருள்மிகு அய்யனாரப்பன் கோயில், சேமக்கோட்டை

139 அருள்மிகு மாரியம்மன் கோயில், ராயப்பாளையம்.

140 அருள்மிகு அன்னசத்திரம், பண்டரக்கோட்டை.

141 அருள்மிகு தர்மராஜர் கோயில், பண்டரக்கோட்டை.

142 அருள்மிகு வீரசிங்கலகுப்பம் பிள்ளையார் கோயில், வீர சிங்கலகுப்பம்.

143 அருள்மிகு பிள்ளையார் கோயில், சொரத்தூர்.

144 அருள்மிகு அய்யனார் கோயில், சொரத்தூர்.

145 அருள்மிகு பிடாரி கோயில், சொரத்தூர்.

146 அருள்மிகு முத்தாலம்மன் கோயில், குறிஞ்சிப்பாடி.

147 அருள்மிகு முருகன் பிள்ளையார் கோயில், குறிஞ்சிப் பாடி.

148 அருள்மிகு பிள்ளையார் கோயில், எல்லப்பன் பேட்டை.

149 அருள்மிகு விநாயகர் கோயில், திருவதிகை.

150 அருள்மிகு மாரியம்மன் கோயில், லட்சுமி நாராயண புரம்.

## இணைப்பு III.

[510-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 35-க்கான விடையைக் காண்க].

உதவி அறுவை மருத்துவர்கள் விடுப்பில் செல்வதால் ஏற்படக் கூடிய காலியிடங்களை நிரப்புவதற்காக பொதுப்பிரிவில் 101-ம், மருத்துவக் கல்விப் பிரிவில் 69-மாக மொத்தம் 170 ஒதுக்குப் பணியிடங்களும், பட்டமேற்படிப்பு படிக்கும் மாணவர்களுக்காக

[1979 பிப்ரவரி 13

மருத்துவக் கல்விப் பிரிவில் 174 ஒதுக்குப் பணியிடங்களும் உள்ளன. பொதுப் பிரிவில் உள்ள ஒதுக்குப் பணியிடங்களின் மாவட்ட வாரியான விவரம் கீழ் வருமாறு :—

| மாவட்டம். (1) | இடங்களின் எண்ணிக்கை (2) |
|---|---|
| 1 வட ஆற்காடு .. .. .. .. | 11 |
| 2 தென் ஆற்காடு .. .. .. | 7 |
| 3 செங்கற்பட்டு .. .. .. .. | 10 |
| 4 கோயம்புத்தூர் .. .. | 10 |
| 5 தருமபுரி .. .. .. .. | 5 |
| 6 மதுரை .. .. .. .. | 10 |
| 7 புதுக்கோட்டை .. .. .. | 1 |
| 8 இராமநாதபுரம் .. .. .. | 10 |
| 9 கன்னியாகுமரி .. .. .. .. | 4 |
| 10 சேலம் .. .. .. .. .. | 9 |
| 11 தஞ்சாவூர் .. .. .. .. | 10 |
| 12 திருச்சிராப்பள்ளி .. .. .. | 10 |
| 13 திருநெல்வேலி .. .. .. | 4 |
| .. .. | 101 |

பொதுப்பிரிவில், ஒதுக்கப் பணியில் பணியாற்றுவதற்கு இத்தனை வருடங்கள் பணியில் இருந்திருக்க வேண்டும் என்ற வரையரை ஏதும் இல்லை. பொதுவாக ஒரு மருத்துவ நிலையத்தில் பணியாற்றும் எம்.பி.பி.எஸ்., பட்டம் மட்டுமே பெற்றுள்ள உதவி அறுவை மருத்துவர்களுக்குள் குறைந்த காலம் பணியாற்றியவரே (Junior Most) அந்த நிலையத்திற்கான ஒதுக்குப் பணியிடத்தில் நியமிக்கப்படுகிறார். பட்ட மேற்படிப்புக்கான ஒதுக்குப் பணியிடங்கள், ஒவ்வொரு மருத்துவக்கல்லூரியில் பயிலும் பட்ட மேற்படிப்புக்காக மாணவர் எண்ணிக்கை, படிப்பதற்காக எடுத்துக் கொண்ட சிறப்புப் பிரிவு ஆகியவற்றை அனுசரித்து மருத்துவக் கல்வி இயக்குநரால் ஒவ்வொரு மருத்துவக் கல்லூரிக்கும் பிரித்தளிக்கப்படுகிறது.

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

—————

புதன்கிழமை, 1979 பிப்ரவரி 14.

—————

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனுஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்— விடைகள்.

உடுக்குறியிட்ட வினுக்கள்.

திரு. துரை முத்துசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு சட்டமன்ற விடுதியிலே கொடுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில் 15 ஆம் தேதிக்கான கேள்விகளையே கொடுத்திருக்கிறுர்கள். இங்கே வந்த பிறகுதான் 14ஆம் தேதிக்கான கேள்விகளைப் பார்க்க நேர்ந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைக்கே நான் இதற்குப் பதில் சொன்னேன், இரண்டு நாட்களுக்கும் சேர்த்து அனுப்பியிருக்கிறுர்கள். அதிலே 14 ஆம் தேதியையும் சேர்த்து அனுப்பியிருக்கிறுர்கள்,

திரு. துரை முத்துசாமி : எனக்கு அதிலே 14ஆம் தேதி கேள்விகள் வரவில்லே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டையும் சேர்த்து கொடுத்திருக்கிறுர்கள், ஆனுல் அதைத் தாங்கள் பார்க்கவில்லே.

கோடைக்கானல் மலைப்பகுதி மேம்பாடு

*வினா எண். 41—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டம் கோடைக்கானல் மலைப்பகுதியை மேம்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் என்றால் அதன் விவரம் என்ன?

(இ) இதில் மண்வள அரிப்புத் தடுப்புத் திட்டம் இணைக்கப்பட்டிருக்கிறதா?

[1979 பிப்ரவரி 14

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :—

(அ) கோடைக்கானல் மேற்கு மலைத் தொடர்ப் பகுதியின் கீழ் வருவதாகும்; அங்கு இந்திய அரசின் உதவியுடன் ''மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டம்'' செயற்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கோடைக்கானலில் கீழ்க்காணும் திட்டங்கள் செயற்படுத்தப் பட்டு வருகின்றன :—

(1) பாலாடைக்கட்டி (CHEESE) வெண்ணெய் தொழிற்சாலை. இது கோடைக்கானல் கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியத்தால் ரூ. 11.90 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு வருகிறது.

(2) தாள் தயாரிப்பதற்கான அரக்கூழ் (PULP WOOD) தயாரிக்கப் பயன்படும் மரங்களை வளர்க்கும் மலைத் தோட்டம்: இது ரூபாய் 24.31 இலட்சம் செலவில் 1,500 ஹெக்டர் பரப்பில் அமையும்.

(3) தொலை நோக்காடி நிலையங்கள் இரண்டு கட்டுதல்—ஒன்று குறிஞ்சி ஆண்டவர் கோயில் அருகிலும் பிறிதொன்று. ''கோக்கர்ஸ் பாதை'' (COKERS WALK) அருகிலும் அமைக்கப்பெறும்: இவை சுற்றுலாவை வளர்க்க உதவும்: இவற்றிற்கு ரூ. 1.74 இலட்சம் செலவிடப்படும்.

4. ''பஞ்சி டாப்'' (BUNCHY TOP) (இலைகள், கொழுந்துகள் கொத்தாகப் பின்னிக் கொள்ளுகின்ற நோய்) என்னும் ஒரு வகை நோயை ஒழிப்பது; இத் திட்டத்திற்கு ரூ. 32.17 இலட்சம் செலவிடப்படும்: இதனால் 14,400 ஹெக்டேர்கள் பயன்பெறும்.

(5) மான்டரின் ஆரஞ்சு நடுதல்; இத் திட்டம் 250 ஹெக்டேர் பரப்பில் செயல்படுத்தப்படும்: இதற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 4.32 இலட்சம் செலவிடப்படும்.

(இ) இல்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு சிறுசிறு அணைக்கட்டுகளைக் கட்டுவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) பேரவைத் தலைவர் அவர்களே, மூல கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.



979 பிப்ரவரி 14]

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, மண் அரிப்புத் தடுப்புச் திட்டம் என்ற பெயரால் நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலைத் தோட்டங்களில் கல் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. அதிலே, அளவெடுப்பதிலே பல தவறுகள் நடைபெறுகின்றன. அதனால் ஏராளமான பணம் விரயமாவது அரசுக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்தால், அதன்மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்:) பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு மலைத் தொடர்ச்சி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டம் வருகின்றது. இதில் கூடலூர், கூனூர் ஆகிய இரண்டிலும் இந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த வட்டாரங்களில் பொருளாதார வளர்ச்சியைக் கருதி வேளாண்மை, கால்நடை வளர்ச்சி பாற்பண்ணை வளர்ச்சி, காடுகள், போக்குவரத்து, சுற்றுலா ஆகிய துறைகளில் பல வளர்ச்சிப் பணிகள் செயல் பட்டு வருகின்றன.

திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு ஒவ்வொரு மாநிலத்திற்கும் நிதி உதவி அளித்து வருகின்றது. இதிலே அஸ்ஸாமுக்கும், கேரளாவிற்கும் பெரிய அளவிலே நிதி உதவி அளிக்கப்படுகின்றது. தமிழகத்திற்கு அப்படி அளிக்கா விட்டால், மத்திய அரசு வடக்கு தெற்கு என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால், அதைப் பெறுவதற்கு தமிழகம் முயற்சிக்குமா? தவிர, நீலகிரி மாவட்டத்திற்கு செலவழிப்பதுபோல், கோடைக் கானலுக்கு அப்படிச் செலவழிப்பதில்லை. அதையும் இந்த அரசு கட்டாயம் செலவழிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தின் கீழ் கேரளம், தமிழ்நாடு, கர்நாடகா, மகாராஷ்டிரம், கோவா போன்ற மாநிலங்கள் வருகின்றன. தமிழகத்திற்கு 1975-76 ஆம் ஆண்டு 26 லட்சம் ரூபாயும், 1976-77 ஆம் ஆண்டு 80 லட்சம் ரூபாயும், 1977-78 ஆம் ஆண்டு 107 லட்சம் ரூபாயும், 1978-79 ஆம் ஆண்டு 142 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே நீலகிரி உதகமண்டலத்தை மேம்படுத்த தனித் திட்டம் அமைக்கப் பட்டதாகத் தெரிய வருகிறது. அதைப் போலவே கோடைக் கானலையும் மேம்படுத்துவதற்காக தனித் திட்டம் உருவாக்கி அதைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திட்டம் அமுலாக்கப்படுகிறது. இதில் ஐந்து திட்டங்களை நான் ஏற்கனவே சொன்னேன். கோடைக் கானலில் குறைந்த செலவு தங்குமிடம் கட்டித் தருவதற்கு 7½ லட்சம் ரூபாயும், கோடைக்கானலில் இருந்து வெள்ளக்கவி வரை ஜீப் செல்வதற்கான சாலை அமைப்பதற்கு 6 3/4 லட்சம் ரூபாயும் செலவு செய்யும் பணித் திட்டங்களுக்கு அனுமதி வழங்கி ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : வெஸ்டர்ன் காட்ஸ் டெவலப்மென்ட் ஸ்கீமின் கீழ் கோடைக் கானலில் இருந்து சிறு சிறு கிராமங்களுக்கு ரோடு வசதிகள் செய்து கொடுப்பது என்று முடிவு செய்திருக்கிறார்கள். கோடைக் கானலில் இருந்து வெள்ளக்கவி வரை ஆறே முக்கால் லட்சம் ரூபாய் செலவில் ரோடு வசதி செய்ய சாங்ஷன் செய்திருப்பதாக அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் சொன்னார்கள். பெரியகுளத்திலிருந்து வெள்ளக்கவிக்குப் போடக்கூடிய ரோடும் இதிலே சேர்த்துக் கொள்ளப்படுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): கோடைக்கானல் வெள்ளக்கவி சாலைக்கான திட்டம் அனுமதி வழங்கும் தருவாயில் இருக்கிறது. விரைவில் உத்தரவு பிறப்பிக்கப் பெறும். உறுப்பினர் கேள்வியும் பரிசீலிக்கப்படும்.

திரு. என். வரதராஜன் : சுவை மிகுந்த சிறுமலைப் பழங்களும், கோடைக்கானல் மலைப் பகுதியில் பயிராகின்ற பலவேறான காய்கறிகளும் மிகப் பெரிய அளவுக்கு நாசமாகிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அழிந்து வருகிற சிறுமலைப் பழங்களைப் பாதுகாக்கும் திட்டத்தைச் சேர்த்துக் கொள்ள இயலுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): 'பஞ்சி டாப்' இலைகள், கொழுந்துகள் கொத்தாகப் பின்னிக் கொள்ளுகின்ற ஒரு வகை நோயை ஒழிப்பதற்கு ரூ. 32.17 லட்சம் செலவிடப்படும். இதனால் 14,400 ஹெக்டேர்கள் பயன் பெறும்.

திரு. இரா. தாமரைக்கனி : மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கோடைக்கானல் தவிர வத்திராயிருப்பு போன்ற பகுதிகள் எல்லாம் வெஸ்டர்ன் காட் இம்ப்ருமென்ட் ஸ்கீமின் கீழ் எடுத்துக்கொள்ளப்படுமா?



திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்:) 21 வட்டங்கள் 'மேற்கு மலைத் தொடர் பகுதி' எனக் குறிப்பிடப்படுகின்றன. அவை — நீலகிரி மாவட்டத்தில் கூடலூர்' கூனூர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் அவிநாசி, பொள்ளாச்சி, தாராபுரம், உடுமலைப்பேட்டை, மதுரை மாவட்டத்தில் பழனி, கோடைக்கானல், திண்டுக்கல், பெரியகுளம், உசிலம்பட்டி, உத்தமபாளையம், திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரநயினார் கோவில், தென்காசி, செங்கோட்டை, அம்பாசமுத்திரம், நாங்குனேரி, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர், கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை, பூதப் பாண்டி ஆகியவை அடங்கும். மேற்கு மலைத் தொடர் வளர்ச்சிப் பணித் திட்டங்கள் இங்கெல்லாம் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## மத்திய கூட்டுறவு வங்கிப் பணியாளர்கள்

* வினா எண் 42—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிக்கும் மற்ற மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் இடையில் COMMON CADRE POSTS உண்டாக்க ஏதேனும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அந்தத் தகுதிக்கு நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவார்களா? அல்லது தற்சமயம் வங்கிகளில் பணிபுரிபவர்களுக்குக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) ஆம், அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இதை அரசு ஆய்ந்து வருகிறது.

திரு. செ. இராமலிங்கம் : வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிற இந்த நேரத்தில் அந்த 'காமன் கேடர் போஸ்ட்' களை உடனடியாக நிரப்ப அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : விரைவில் அது விரைவுபடுத்தப்படும்.

[1979 பிப்ரவரி 14

## பிரதம நிலவள வங்கிக் காரியதரிசிகள்

* வினா எண். 43– திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிரதம நிலவள வங்கிகளில் பணியாற்றும் காரியதரிசிகளை மாநில நிலவள வங்கியின் பணியாளர்களாக எடுத்துக் கொள்வதுகுறித்து செயற்குறிப்பு ஏதாவது ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முதல் எவ்வளவு பேர்களை எடுத்துக்கொள்ள உத்தேசம் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) பிரதம நிலவள வங்கிகளில் உள்ள செயலர்களுக்கு மட்டும் பொதுப் பணி அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இப்பணியமைப்புக்கு மாநில நிலவள வங்கியின் நிர்வாக இயக்குநர் பணியமைப்பு அதிகாரியாக இருப்பார்.

(ஆ) மாநிலத்திலுள்ள பிரதம நிலவள வங்கிகளிலுள்ள எல்லாச் செயலர்களும் இப்பணியமைப்பின் கீழ் வருவர். இத்திட்டத்தை உடனே அமுல் நடத்த கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

[முற்பகல் 9.10]

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, பிரதம நிலவள வங்கிகளில் பணியாற்றும் காரியதரிசிகளை மாநில நிலவள வங்கியின் பணியாளர்களாக எடுத்துக்கொள்ள அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பிரதம நிலவள வங்கிகளில் பணியாற்றுகிறவர்களை மாநில நிலவள வங்கியின் பணியாளர்களாகச் சேர்த்தால் அவர்களுடைய பதவி உயர்வு பாதிக்கப்படும் என்ற காரணத்தால் அப்படிச் சேர்க்கப்படவில்லை.

திரு. செ. சிவசாமி : பிரதம நிலவள வங்கிகளிலே வேலை செய்யும் ஊழியர்களுக்கு கடந்த 8, 10 ஆண்டுகளாக எந்த நிலையிலே ஸ்கேல் இருந்ததோ அதே நிலையிலே தான் இன்னும் இருக்கிறது. அதை மாற்றியமைத்து அபிவிருத்தி செய்யக்கூடிய வகையிலே இன்றைக்கு ஸ்பெஷல் ஆபீஸர்கள் ரெக்கமன்ட் செய்தும் கூட டி. ஆர். கள் அதை நிறுத்திவிட்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு புதிய ஸ்கேலில் சம்பளம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?



1979 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் அதுபற்றி பதில் சேகரித்துத் தரப்படும்.

திரு. க. சுப்பு : மாநில நிலவள வங்கிகளில், பிரதம நிலவள வங்கிகளில் பணியாற்றியவர்களை நியமிப்பதால் அவர்களுக்கு புரமோஷன் பாதிக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால் கல்வித் துறையில் ஏ விங், பி விங் என்று இரண்டு விங்குகள் இருந்ததை ஒன்றாக ஆக்கி இருக்கிறார்கள். அப்போதும் அவர்களுக்கு புரமோஷனல் ஆப்பர்சூனிட்டி பாதிக்கப்படும் என்று சொல்லியும்கூட அரசாங்கம் அவைகளை இணைத்து இருக்கிறார்கள். கல்வித் துறையிலே அப்படி இணைப்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கும்போது இதிலே மாத்திரம் ஏன் கொள்கை மாறுபட்டு இருக்கிறது என்பதை விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினருடைய மேலான யோசனை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : நிலவள வங்கிகளினுடைய செயலாளர்களாக சி. எஸ். ஆர்.-கள் தான் இருக்கிறார்கள், அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இந்தச் சங்கங்களில் உள்ள செயலாளர்களை மாநில வங்கிகளில் அவர்கள் பணியாற்றச் செய்வதற்கு இல்லை என்று சொன்னார்கள். அவர்களை மாநில நிலவள வங்கி ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்று கோரிக்கையை நீண்ட நாட்களாக வைத்திருக்கிறார்கள். ஆகவே அவர்களை மாநில நிலவள வங்கிகளின் ஊழியர்களாக ஏற்றுக் கொண்டு பதவி உயர்வு போன்ற வாய்ப்புகளை அவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லாத காரணத்தால் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிகளில் தொழில் நுட்பப் பதவிகளில் இருப்பவர்கள் அவர்களுடைய பதவி மூப்புக் காலம் பார்க்கப்படாமலேயே வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தனிக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்துத் தரலாம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, பிரதம நிலவள வங்கிகளின் கிளைகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக தனித்தனி யூனிட்டுகளாக இருக்கின்றன. அவை அத்தனையையும் ஒன்றாக சேர்த்து மாநில நிலவள வங்கியின் கிளையாக ஆக்கிவிட்டால் இப்போது சில வங்கிகளில் கடன் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. அந்த நிலைமையும் மாறிவிடும், அது மட்டுமல்ல இப்போது ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மாதிரியாக ஊதியங்கள் இருக்கின்றன அவைகள் மாற்றப்பட்டு ஒரே விதமான ஊதியம் கிடைப்பதற்கும் அது வகைசெய்வதாக இருக்கும்—ஆகவே அந்தக் கிளைகளையெல்லாம் இணைக்கின்ற உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை ஏற்றால் அவைகளின் தனித்தன்மை போய்விடும். என்றாலும்கூட அந்த யோசனை அனுதாபத்தோடு பரிசீலிக்கப்படும்.

## சென்னை பராங்குசதாசர் கோவில்

* வினா எண். 44 திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை திருவல்லிக்கேணி பராங்குசதாசர் கோவிலில் இராமானுஜர் சிலை திருட்டு நடந்திருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதைக் கண்டுபிடிக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருடப்பட்ட இராமனுஜர் சிலை காவல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எழும்பூர் சீப் மெட்ரோபாலிட்டன் நீதிபதியால் விசாரணை செய்யப்பட்டு குற்றவாளிக்கு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தமிழகத்திலே கோயில் சிலைகள் அடிக்கடி களவாடப் படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது முக்கியமான சிலைகள் தமிழகத்திலே முக்கியமான பகுதிகள் இரண்டில் சேர்த்து அங்கேயே பாதுகாப்பாக வைக்கப்படுவதுபற்றி ஒரு முடிவு மேற்கொள்ளப்பட்டு இருந்தது.





அது தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறதா? அதைப்போல கோயில்களில் சிலை திருட்டுகளைத் தடுக்க, பாதுகாக்க தனிப் போலீஸ் படை நிறுவப்பட்டதாகத் தெரிகிறது. அது இன்னும் இருக்கிறதா அல்லது அது கலைக்கப்பட்டு விட்டதா? அது இருக்கிறது என்றால், அந்தப் படையை எந்தந்த வகையில் தமிழக அரசு பயன்படுத்தி இந்தச் சிலைத் திருட்டுகளைத் தடுக்க ஆலோசனை வழங்கியிருக்கிறது என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, சிலைத் திருட்டுகளைக் கண்டுபிடிக்க தனிப் போலீஸ் படை அமைத்திருப்பதாக எனக்குத் தகவல் இல்லை. ஆனால் அப்படிப்பட்ட திருட்டுகளைத் தவிர்க்கும் பொருட்டு 1972 மத்திய சட்டம் 52/72-இன் பிரிவு 14 (2)-இன்படி திருக்கோயில்களிலிருந்து சிலைகளை உலோகச் சிலைகள், கற்சிலைகள், மற்றும் பண்டைக்கால நாகரீகத்தைக் குறிக்கும் பல பொருட்களைச் சேகரித்துக் கணக்கெடுத்து அவைகளை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற விதியின்கீழ் கணக்கெடுக்கப்பட்டு வருகின்றன. அந்த முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, சிலைத் திருட்டு என்ற பிரச்னை மறைந்த பெரியாரின் கருத்தோடு ரொம்ப சம்பந்தப்பட்ட பிரச்னை. உலகையே படைக்கவும் அழிக்கவும் ஆற்றல் படைத்தவர் என்று பக்தர்கள் நம்பக்கூடிய கடவுளை மனிதன் எப்படிக் கடத்த முடியும்? முடியாது. ஆகவே, சுவாமி தானாகவே ஓடுகிறாரா அல்லது திருவிளையாடல் நடத்துகிறாரா அல்லது லீலா விநோதங்கள் நடத்த எங்கேயாவது போய்விட்டு வருகிறாரா? என்ற முறையில் இன்வெஸ்டிகேஷன் நடத்தி அந்த விஷயத்தை அம்பலப்படுத்துவதன் மூலம் பெரியார் சென்டினரியின் போது அவரது கருத்தை வலியுறுத்தும் வகையில் ஏதாவது செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பக்தர்களின் மனத்தைப் புண்படுத்துவதாகக் கேள்வி அமையக் கூடாது.

திரு. ரா. உமாநாத் : பெரியாரின் கருத்தையொட்டிச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, திரு. உமாநாத் அவர்கள் ஆண்டவனுடைய திருவிளையாடல்களைப்பற்றி ஆராய்ச்சி நடத்த வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். புலனாய்வு நடத்த வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அது மனிதர்களாலே முடியாத காரியம். ஒருவேளை 'அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்' என்ற பழமொழி தமிழ்நாட்டிலே இருக்கின்ற

காரணத்தினாலே தெய்வம் பின்னாலே நின்று கொல்லலாம் இப்படிப்பட்ட தவறு செய்பவர்களை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, தமிழ் நாட்டில் ஏற்கனவே முந்தைய ஆட்சியில் நடைபெற்ற சிலைத் திருட்டுகளைவிட இப்பொழுது சிலைத் திருட்டுகள் குறைந்திருக்கிறதா என்ற கணக்கை அறிய விரும்புகிறேன். கொடைக்கானலை அடுத்த கூம்பாறையில் அருள்முருகன் திருக்கோயிலில் சிலை திருட்டுப் போயிருந்தது. அந்தச் சிலையைத் * * * (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு அமைச்சரிடம் பதில் இருக்காது. திருவல்லிக்கேணியில் உள்ள கோயில் சிலைத் திருட்டைப்பற்றிய கேள்வி இது.

திரு. கே. பண்ணை சேதுராம்: * * * சிலையைத் திருடியதாக * * * வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வழக்கில் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இதற்கான தகவல் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால், இதுபோன்ற பல திருட்டுகள் நடைபெற்றிருக்கின்றன. வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. புலனாய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவைகளையெல்லாம் விவரமாக மன்றததிற்குத் தர இயலும்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த நாட்டில் மதச்சார்பற்ற அரசு நடைபெறுவதாக ஒப்புக்கொண்டிருந்தாலும்கூட பொறுப்புள்ள சட்டமன்றத்திலும், மகாசபைகளிலேயும் மதங்களை நம்புகின்றவர்களின் மனம் புண்படும் அளவிற்கு மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் போன்றவர்கள் பேசக்கூடிய துர்ப்பாக்கியமான நிலைமை இருந்தாலும் அதையும் சகிக்கக்கூடிய நிலையில் அரசு அத்தனை மக்களையும் கட்டிக் காக்கும் பொறுப்பை உடையது. மதத்தையும், தெய்வத்தையும், மண்ணோ பொன்னோ எதுவாக இருந்தாலும் தெய்வசக்தி இருக்கிறது என்று நம்பும் மக்களின் மனம் புண்படாத அளவிற்கு இந்த அரசு, சிலை திருடுபவர்களுக்குச் சாதாரண நபர்களுக்குத் தண்டனை விதிப்பதைப்போல திருட்டு என்ற முறையில் ஆர்டினரி அஃபென்ஸ் போல அல்லாமல் புனிதமான தெய்வ அஃபென்ஸ்,

'It is an offence against religion'

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





தெய்வத்திற்கு விரோதமாகச் செய்கிற குற்றம். ஆகவே, இதைக் கடும் குற்றம் என்று கருதி தண்டனையை அதிகமாக விதித்து, இப்படிப்பட்ட தவறுகளைக் குறைக்கும் அளவிற்கு அரசு பாதுகாப்பு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.20]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் விரும்பியதைப் போலவே அரசு இதுபோன்ற குற்றங்களை மிகக் கடுமையான குற்றமாகக் கருதி நடவடிக்கை எடுத்து வருகிறது. இது சம்பந்தமான குற்றவாளின்மீது எந்தவிதமான கருணையோ அல்லது சட்டத்தின் சந்துபொந்துகளிலே இருக்கிற சாதகங்களைப் பயன்படுத்தி விடுதலை பெற்றுவிடக்கூடாது என்பதில் அரசு கவனமாக இருக்கிறது. நான் குறிப்பிட்ட விடையில் இருந்த திருவல்லிக்கேணி கோவில் திருட்டு குற்றவாளிகளுக்குக் கூட இரண்டு வருஷ தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக காவல் துறைக்கு, இதுபோன்ற குற்றவாளிகளை மிகக் கடுமையாகக் கருதி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெய்வம் நின்று கொல்லும், அரசு அன்று கொல்லும் என்று சொல்லப்படுகிறது. சிவபுரம் நடராஜர் சிலை அமெரிக்காவில் இருக்கிறது. திருவல்லிக்கேணி இராமானுஜர் சப் ஜெயிலில் இருக்கிறார்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது திருவல்லிக்கேணி கோவில் சிலை திருட்டுப் போனது பற்றியது........

திரு. மு. அம்பிகாபதி: உதாரணத்திற்காக சொல்கிறேன். எனவே, தெய்வமே கவனித்துக்கொள்ளும் என்று எண்ணும் போது, போலீஸ் பிடிப்பானேன், தண்டனை கொடுப்பானேன். ஆண்டவனுக்கு சக்தி இருக்குமானால் கோவில்களைத் திறந்து வையுங்கள் போலீஸ் பாதுகாப்புப் போடாதீர்கள். ஆண்டவனே தன்னைக் காப்பாற்றிக் கொள்ளட்டும். ஆகவே, ஆண்டவனுக்குச் சக்தி இருக்கிறது என்று சொல்லும்போது, போலீஸ் பாதுகாப்பு, தண்டனை இதெல்லாம் தேவைதானா என்பதைப் பரிசீலிக்க ஒரு கமிட்டி அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிலையினுடைய சக்திக்காக அல்ல, சிலையினுடைய மதிப்பு எவ்வளவு என்பதைப் பார்த்து அதற்கேற்ப பாதுகாப்பு கொடுக்கிறார்கள்.

காரணத்தினாலே தெய்வம் பின்னாலே நின்று கொல்லலாம் இப்படிப்பட்ட தவறு செய்பவர்களை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, தமிழ் நாட்டில் ஏற்கனவே முந்தைய ஆட்சியில் நடைபெற்ற சிலைத் திருட்டுகளைவிட இப்பொழுது சிலைத் திருட்டுகள் குறைந் திருக்கிறதா என்ற கணக்கை அறிய விரும்புகிறேன். கொடைக் கானலை அடுத்த கூம்பாறையில் அருள்முருகன் திருக்கோயிலில் சிலை திருட்டுப் போயிருந்தது. அந்தச் சிலையைத் * * * (மணி யடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு அமைச்சரிடம் பதில் இருக்காது. திருவல்லிக்கேணியில் உள்ள கோயில் சிலைத் திருட்டைப்பற்றிய கேள்வி இது.

திரு. கே. பண்ணை சேதுராம்: * * * சிலையைத் திருடிய தாக * * * வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வழக்கில் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இதற்கான தகவல் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால், இதுபோன்ற பல திருட்டுகள் நடைபெற்றிருக் கின்றன. வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. புலனாய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அவைகளையெல் லாம் விவரமாக மன்றத்திற்குத் தர இயலும்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த நாட்டில் மதச்சார்பற்ற அரசு நடைபெறுவதாக ஒப்புக்கொண் டிருந்தாலும்கூட பொறுப்புள்ள சட்டமன்றத்திலும், மகாசபை களிலேயும் மதங்களை நம்புகின்றவர்களின் மனம் புண்படும் அளவிற்கு மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் போன்றவர்கள் பேசக்கூடிய' துர்ப்பாக்கியமான நிலைமை இருந்தாலும் அதையும் சகிக்கக்கூடிய நிலையில் அரசு அத்தனை மக்களையும் கட்டிக் காக்கும் பொறுப்பை உடையது. மதத்தையும், தெய்வத்தையும், மண்ணோ பொன்னோ எதுவாக இருந்தாலும் தெய்வசக்தி இருக்கிறது என்று நம்பும் மக்களின் மனம் புண்படாத அளவிற்கு இந்த அரசு, சிலை திருடுபவர்களுக்குச் சாதாரண நபர்களுக்குத் தண்டனை விதிப்பதைப்போல திருட்டு என்ற முறையில் ஆர்டினரி அஃபென்ஸ் போல அல்லாமல் புனிதமான தெய்வ அஃபென்ஸ்,

'It is an offence against religion'

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தெய்வத்திற்கு விரோதமாகச் செய்கிற குற்றம். ஆகவே, இதைக் கடும் குற்றம் என்று கருதி தண்டனையை அதிகமாக விதித்து, இப்படிப்பட்ட தவறுகளைக் குறைக்கும் அளவிற்கு அரசு பாதுகாப்பு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

[முற்பகல் 9.20]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் விரும்பியதைப் போலவே அரசு இதுபோன்ற குற்றங்களை மிகக் கடுமையான குற்றமாகக் கருதி நடவடிக்கை எடுத்து வருகிறது. இது சம்பந்த மான குற்றவாளின்மீது எந்தவிதமான கருணையோ அல்லது சட்டத்தின் சந்துபொந்துகளிலே இருக்கிற சாதகங்களைப் பயன் படுத்தி விடுதலை பெற்றுவிடக்கூடாது என்பதில் அரசு கவன மாக இருக்கிறது. நான் குறிப்பிட்ட விடையில் இருந்த திருவல்லிக்கேணி கோவில் திருட்டு குற்றவாளிகளுக்குக் கூட இரண்டு வருஷ தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக காவல் துறைக்கு, இதுபோன்ற குற்றவாளிகளை மிகக் கடுமை யாகக் கருதி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெய்வம் நின்று கொல்லும், அரசு அன்று கொல்லும் என்று சொல்லப்படுகிறது. சிவபுரம் நடராஜர் சிலை அமெரிக்காவில் இருக்கிறது. திருவல்லிக்கேணி இராமானுஜர் சப் ஜெயிலில் இருக்கிறார்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது திருவல்லிக்கேணி கோவில் சிலை திருட்டுப் போனது பற்றியது........

திரு. மு. அம்பிகாபதி: உதாரணத்திற்காக சொல்கிறேன். எனவே, தெய்வமே கவனித்துக்கொள்ளும் என்று எண்ணும் போது, போலீஸ் பிடிப்பானேன், தண்டனை கொடுப்பானேன். ஆண்டவனுக்கு சக்தி இருக்குமானால் கோவில்களைத் திறந்து வையுங்கள். போலீஸ் பாதுகாப்புப் போடாதீர்கள். ஆண்டவனே தன்னைக் காப்பாற்றிக் கொள்ளட்டும். ஆகவே, ஆண்டவனுக்குச் சக்தி இருக்கிறது என்று சொல்லும்போது, போலீஸ் பாதுகாப்பு, தண்டனை இதெல்லாம் தேவைதானா என்பதைப் பரிசீலிக்க ஒரு கமிட்டி அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிலையினுடைய சக்திக் காக அல்ல, சிலையினுடைய மதிப்பு எவ்வளவு என்பதைப் பார்த்து அதற்கேற்ப பாதுகாப்பு கொடுக்கிறார்கள்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துரை முருகன் கேள்வி அத்தனையையும் நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. துரை முருகன் : பண்ணை சேதுராம் * * * அதை நீக்குங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் * * * என்று சொன்னதை உடனே நிறுத்தி மணி அடித்தேன்.

திரு. துரை முருகன் : நீக்கவில்லையே.

திரு. து. புருஷோத்தமன் : குறிப்பேட்டிலே அது ஏறி விட்டதே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * *என்று இருக்கிறதனால் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். குறிப்பேட்டைப் பார்க்கிறேன். திரு பண்ணைசேதுராம் * * *என்று சொன்னபொழுது மணி அடித்தேன். அதை முதலிலே உணரவேண்டும். (குறுக்கீடு,) இப்படியெல்லாம் கேட்கக் கூடாது. அது பதிவேட்டிலேயிருந்தால்......

திரு. துரை முருகன் : சபாநாயகர், எனக்குத் தெரியும் என்று சொல்வார் என்பதால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் . தங்கள் கடமை என்ன? அவர் அப்படிச் சொன்னது தவறு என்று சுட்டிக் காட்டியிருக்க வேண்டும். அதைத்தான் தாங்கள் செய்திருக்கவேண்டும். அதை விட்டுவிட்டு மறுபடியும் நான் அதே தவறைச் செய்கிறேன் என்று செய்தால் எப்படி?

திரு. மு. அரங்கநாதன்(உட்கார்ந்து கொண்டே): இப்பொழுது நீங்கள் நீக்கு என்று சொன்ன மாதிரி அப்பொழுதே நீக்கி இருந்தால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காந்துகொண்டே பேசலாமா?

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு ஆளுங்கட்சி உறுப்பினர் பண்ணை சேதுராம் அவர்கள்* * *உள்ளவர்கள் அதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்னதை எங்களைப் போலவே நிச்சயமாக நீங்கள் எங்களை விட

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அதிகமாக அறிந்திருக்கிறீர்கள். அதைப் போலவே எதிர்க்கட்சி உறுப்பினராகிய துரை முருகன் * * *ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நீக்க வேண்டுமென்று சொன்ன நீங்கள் தயவுசெய்து அதைப்போலவே சொல்லப்பட்ட *** இப்படி செய்திருக்கிறார்கள் என்று சொன்னதை நீக்குவது.... (மணியடிக்கப்பட்டது). மன்னிக்க வேண்டும். தாங்கள் நீக்கவில்லை, அதைச் செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய நினைவிலே இல்லாமல் கூட இருக்கலாம். உங்கள் கடமை என்ன தெரியுமா? அப்பொழுதே எழுந்து சொல்லியிருக்க வேண்டும்.

THIRU G. ELANGOVAN : We want justice.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளங்கோவன், மரபு இந்த அவைக்குத் தேவை.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, தலைவர் அவர்களே,....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி இல்லாமல் எழுந்து பேசுவதால், நான் எப்படி பதில் சொல்ல முடியும். ஏற்கெனவே திரு. துரை முருகன் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும். திரு. கிட்டப்பா கேள்விக்கு பதில் சொல்லவேண்டும்.

திரு. என். கிட்டப்பா : எனவே, திராவிட முன்னேற்றக் கழக சார்பில் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள், இரண்டையும் நீக்கிவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, இரண்டையும் நீக்கவேண்டாம் என்பது என்னுடைய கருத்து. ஏன் என்றால் இந்த மாதிரி கட்சிக்காரர்கள் சொல்வதால் நீக்குவது சரியல்ல. இதற்கு பதில் சொல்லட்டும். ஆகவே, இரண்டுமே இருக்கட்டும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்கள் சொல்வதைப் போல இரண்டுமே இருப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் இரண்டு கட்சிக்காரர்களும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்..

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ உங்கள் கருத்தை நான் கேட்டுக் கொண்டேன். திரு. பண்ணை சேதுராம் பேசும்போது* என்று சொல்லி இருந்தால் அதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன், திரு. துரைமுருகன் சொன்னதையும் நீக்கும்படி உத்தர விடுகிறேன்,

__மாண்புமிகு திரு. ஆர். எம்: வீரப்பன் :__ தலைவர் அவர்களே, திரு. துரைமுருகன் கேள்வியில், [*] என்ற வார்த்தை நீக்கப்பட்டு விட்டதா? கேள்வி உயிருடன் இருக்கிறதா? நான் பதில் சொல்லட்டுமா?

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ கேள்வியே நீக்கப்பட்டு விட்டது.

__திரு. துரை முருகன் :__ தலைவர் அவர்களே, திரு. பண்ணை சேதுராம் கேட்ட கேள்வியையும் நீக்கவேண்டும், அதற்கு அமைச்சர் பதிலையும் நீக்கவேண்டும்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ எனக்குள்ள நிலைமை, நான் கேள்வி கேட்பதையும நிறுத்த முடியும், கேள்விக்கு பதில் சொல்வதையும் நிறுத்த முடியும். இரண்டு கட்சியைச் சேர்ந்த வர்களுக்கும் களங்கம் ஏற்படாமல் இருப்பதற்காக நீக்கி யிருக்கிறேன்.

__திரு. வி. கே. கோதண்டராமன் :__ தலைவர் அவர்களே, ஈ. வே. ரா. பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாடக்கூடிய இந்த சமயத்தில் அவர் சொன்ன பொன் மொழிகளும், பல கருத்துக்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்று, கடவுள் உண்டு என்று சொல்கிறவன் நினைப்பவன் முட்டாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அரசன் அன்று கொல்வான். . . .

(திரு. துரை முத்துசாமி, திரு. கே. கந்தசாமி எழுந்து நின்றார்கள்)

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ திரு. கோதண்டராமன் தயவு செய்து முட்டாள் என்ற வார்த்தையைப் பயன்படுத்தாமல் இருந்தால் நல்லது.

__திரு. ரா. உமாநாத் :__ பெரியார் சொன்னதைத்தான் அவர் கோட் பண்ணுகிறார்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ திரு. கோதண்டராமன், இந்தக் கேள்வி சிலைகள் பற்றியது. பெரியார் கொள்கையைப் பற்றியது அல்ல. சிலை திருட்டைப் பற்றிக் கேட்க வேண்டும். அதைவிட்டு பெரியார் அதைச் சொன்னார். திரு. சங்கராச்சாரி யார் என்ன சொன்னார் என்று சொல்வது இந்த அவைக்கு அழகல்ல.

[முற்பகல் 9.30]

__திரு. வி. கே. கோதண்டராமன்:__ ஐயா, சிலை திருட்டுப் போன தைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலை ஒட்டித் தான் என்னுடைய கேள்வி. ஆகவே தான் நான் கேட்கின்றேன், பெரியார் அவர்களுடைய பொன் மொழியில் ஒன்று, கடவுள் உண்டு என்று நினைக்கிறவன் அல்லது வணக்கம் செலுத்துபவன் முட்டாள் என்று சொல்லியிருக்கிறார். கனம் அமைச்சர் அவர்கள் பதிலில் அரசன். அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்று சொன்னார். அப்படியானால் அந்த தெய்வத்தை ஏற்றுக்கொள்கிறாரா? உண்மையிலேயே இந்த ஆட்சிக்கு பெரியாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில் அவரது பொன் மொழியில் நம்பிக்கை இருந்தால், அதை எற்றுக்கொள்வதாக இருந்தால், அந்த பெரியார் சொல்லியிருக்கிற அந்த விளக்கத்தை ஏற்றுக்கொள் கிறாரா என்பதற்கு நான் பதில் கேட்கிறேன்.

__திரு. கே. கந்தசாமி :__ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், . . . .

__திரு. துரை முத்துசாமி :__ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். . . .

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ இது கேள்வி நேரம். பாயின்ட் ஆப் ஆர்டர் அனுமதிக்க முடியாது.

__திரு. துரை முத்துசாமி :__ பேச அனுமதி இல்லை என்று சொல்வது ஒரு நீதியா?

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ உட்காருங்கள்.

__திரு. துரை முத்துசாமி :__ உட்கார முடியாது.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ அப்படியானால் நின்று கொண்டே இருங்கள். நானும் நின்று கொண்டே இருக்கிறேன்.

__திரு. துரை முத்துசாமி :__ சார், பாயின்ட் ஆப் ஆர்டர் . .

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ நீங்கள் உட்கார முடியாது என்று பேரவைத் தலைவர் அவர்களைப் பார்த்துச் சொல்வது தங்களுக்கு உள்ள நல்ல மரபு போலும். அனுமதிக்க முடியாது, உட்காருங்கள்,

[1979 பிப்ரவரி 14

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் கேட்ட துணை வினாவிற்கு பதில் அளிக்க வேண்டுமா? அது பதிவேட்டில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது மூலக்கேள்வியை ஒட்டியது அல்ல. பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடிவு சொல்லி விட்டேன். உட்காருங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நான் கேட்ட துணை வினா அமைச்சர் அளித்த பதிலை ஒட்டி இருப்பதால் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சபாநாயகர் பதில் சொல்லக்கூடாது என்று சொல்வது சரியல்ல. அமைச்சர் அவர்களே பதில் சொல்லத் தயாராக இருக்கிறபோது நீங்கள் இப்படித் தீர்ப்புச் சொல்வது நீதியா? தயவு செய்து பதில் சொல்லச் சொல்லுங்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொன்னது சொன்னது தான். உட்காருங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நீங்கள் உட்காருங்கள் என்று சொன்னவுடன் நான் உட்கார்ந்து விடவேண்டுமா? நீங்கள் ஹெட்மாஸ்டர் போலவும் நான் மாணவன் போலவும் இருக்கவேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குருவுக்கு மிஞ்சிய சிஷ்யனாக இருந்தால் என்ன செய்வது! தயவு செய்து உட்காருங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தயவு செய்து சபாநாயகர் நீதி வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் தீர்ப்பு சொல்லி விட்டால் அதை எற்றுக்கொண்டு அமருவது தான் நல்ல மரபு, அதை உறுப்பினர் அவர்கள் கடைபிடித்து அமரவேண்டும். வினா எண் :45.

(திரு. டி. இராமசாமி எழுந்தார்) ஏற்கனவே ஒருவர் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பினார். நீங்களும் எழுந்திருக்க வேண்டுமா? தயவு செய்து உட்காருங்கள்.



1979 பிப்ரவரி 14]

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், நான் கேட்ட துணை வினாவிற்கு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதிக்க முடியாது என்று சொல்லியாகிவிட்டது. மூலக்கேள்விக்கு ஒட்டியோ, அல்லது சம்பந்தம் இல்லாமலோ உள்ள துணைவினாவிற்கு அமைச்சர் பதில் சொல்ல வேண்டியது இல்லை. இதற்கு மேலே நீங்கள் விளக்கம் கேட்கக்கூடாது. பேரவைத் தலைவரின் தீர்ப்பின் மீதும் உறுப்பினர்கள் விளக்கம் கேட்கக் கூடாது. திரு. இராமசாமி....

திரு. டி. இராமசாமி : பேரவைத் தலைவரவர்களே, சட்ட மன்றம் ஆரம்பித்த காலத்தில் இருந்து இதுவரை சட்டசபை நிகழ்ச்சிகளிலே ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் எவ்வளவு நேரத்தை வீணடித்து இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் உங்களிடததில் இருக்கும் என்று நம்புகிறேன். அப்படி இருந்தால் அதை சபைக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்திய தேசிய காங்கிரஸைப் பொறுத்த வரையில் அம்மாதிரியான நேரத்தை வீணடிக்கிற காரியத்தில் இறங்காமல் கட்டுப்பாடாக, மரபு தவறாமல் நடந்துகொண்டு வருகிறது. அப்படியிருந்தும், எங்களுடைய கட்சி உறுப்பினர் பேச அனுமதி கேட்டபோது அனுமதிக்காமல் பாரபட்சமாக நடந்துகொண்டு இருக்கிறீர்கள் என்கிற வருத்தத்தை நான் தெரிவித்து வருகிற காலத்திலாவது எங்களுடைய உரிமையைப் பறிக்காமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் ஒரு குறிப்பிட்ட கட்சியைப் பற்றிச் சொல்லவில்லை. பொதுவாகத்தான் சொன்னார்.

திரு. துரைமுருகன் : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களைக் கட்டுப்படுத்த உங்கள் தலைவர் கூட இங்கே இல்லை. நான் யாரிடம் போய் சொல்வது? உங்கள் தலைவர் இருந்தால் அவரிடம் சொல்லலாம். அவரும் இல்லை. தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள். நீங்கள் பேசியது அனைத்தும் நீக்கப்பட்டுவிடும்.

திரு. துரைமுருகன் : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரைமுருகன் அவர்கள் இதுவரை பேசியவை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1979 பிப்ரவரி 14

## சின்கோனா தொழிலாளர்களுக்கு போனஸ்.

*வினா எண் 45—திரு. கு. ரமணி : மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் அரசு சின்கோனா துறையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு போனஸ் சட்டப்படி குறைந்த பட்ச போனஸ் கொடுக்கப்படுகிறதா?

(ஆ) இல்லையெனில், அதன் காரணமென்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) அரசு சின்கோனா தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கப்படுவதில்லை.

(ஆ) 1965ஆம் ஆண்டின் போனஸ் சட்டப்படி அரசின் நிர்வாகத்தின் கீழ் வரும் சின்கோனாத் தோட்டத் தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுக்க வேண்டியது இல்லை.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அரசு சின்கோனாத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்க வேண்டியதில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதேமாதிரியாக மிகக் குறைந்த கூலி வாங்கிக் கொண்டிருக்கும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு போனஸ் கிடைக்கும்போது அதைவிடக் குறைந்தபட்சக் கூலி கிடைக்கிற அவர்களுக்கு 'எக்ஸ்கிரேஷியா போனஸ்' அரசு கொடுக்கலாமா, இல்லையா? சட்டம் இல்லாவிட்டாலும் அரசு பார்த்து கொடுக்கலாமா இல்லையா? வேறு சில மாநிலங்களில் போலீஸ்காரர்களுக்குக்கூட எக்ஸ்கிரேஷியா போனஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல நம்முடைய மாநிலத்தில் அரசு சின்கோனா தோட்டத் தொழிலாளர்களுக்காவது கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, கடந்த சில மாதங்களுக்கு முன்பு $5\frac{1}{4}$ ரூபாய் என்று இருந்த கூலியை இந்த அரசு $6\frac{1}{2}$ ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறது. சட்டப்பிரகாரம் போனஸ் கொடுக்க முடியாது என்ற நிலையில் வேறு வகைகளிலே, அதாவது வீட்டு வசதி, போக்குவரத்து வசதி, வைத்திய வசதி, மருந்து வசதி, பள்ளி வசதி போன்ற அதிகப்படியான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அந்தந்த நிர்வாகத் துறைத் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. எனவே தொழிலாளர்களுக்கு போனஸ் என்று கிடைக்காவிட்டாலும் அதை ஈடு செய்கின்ற வகையில் வேறு பல வகைகளிலே அரசு சலுகைகளை வழங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,



1979 பிப்ரவரி 14]

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்ன அத்தனை சலுகைகளும் மற்ற எல்லாத் தொழிலாளர்களுக்கும் இந்திய நாட்டில் கொடுக்கப்படுகிறது. அதற்குமேல் போனஸ் கொடுக்கப்படுகிறது என்பது அவர்களுடைய வாழ்க்கைச் செலவுக்கு போதாத, அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில், கொடுக்கிற சம்பளம் போதாததால் அவர்களை கடன் தொல்லைகளிலிருந்து காப்பாற்ற கொடுக்கப்படுகிற ஒன்று. அந்த வகையில் 'போனஸ் என்று கொடுக்க முடியாவிட்டாலும் எக்ஸ்கிரேஷியா போனஸ் கொடுக்கப்படுவதுதான் நியாயம். அதற்கு எந்த சட்டமும் தேவையில்லை. அரசு முடிவு செய்தால் போதும். வேறு பல மாநிலங்களில் அப்படி செய்திருக்கிறார்கள். வங்காள அரசு போலீஸ்காரர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் போனஸ் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போல இங்கும் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : வேறு மாநிலங்களில் என்னென்ன நடைபெறுகிறது என்பதை நாம் பார்க்கும்போது, அங்கே எந்த அளவுக்கு சம்பளம் கொடுக்கப்படுகிறது. அங்கே வாழ்க்கை செலவு என்ன, பிற வசதிகள் என்னென்ன வழங்கப்படுகின்றன என்பதை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். நான் அந்த விவகாரத்திற்குள்ளே போக விரும்பவில்லை என்றாலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு குறிப்பாக மலைப்பகுதிகளிலே பாடுபடுகின்ற தொழிலாளர்களுக்கு பணமாகவும், பொருளாகவும் பிற வசதிகள் மூலமும் வசதிகளை செய்து கொடுப்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறையுடன் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டம் ஒன்று இருக்கிறபோது அந்த சட்டத்திற்குட்பட்ட ஒரு நிர்வாகம் தனியாகக் காரியங்களைச் செய்துவிட முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, போனஸ் சட்டம் இப்போது இருக்கிற முறையில் இருந்தாலும் தமிழ்நாடு அரசு நடத்துகின்ற போக்குவரத்துத் துறையில்கூட தொழிலாளர்களுக்கு எக்ஸ்கிரேஷியா என்ற அடிப்படையில் பல்லாண்டுகளாக போனஸ் கொடுக்கப்பட்டு வருகிறது. அதைப்போல அதிக லாபம் வருகின்ற மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கும் சிங்கோனா, இரப்பர் தோட்டங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கும் எக்ஸ்கிரேஷியா அடிப்படையில் போனஸ் கொடுக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9·40]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவரத்துத் துறைபற்றிச் சொன்னார்கள். அது கார்ப்பரேஷன் என்ற அடிப்படையில்

வேறு விதிகளின் கீழே இயங்கி வருகிறது. இன்னொரு விளக்கத்தையும் அளிக்க விரும்புகிறேன். லாபம் என்பதற்கும், அரசு நடத்துகின்ற இப்படிப்பட்ட துறைகளில் மூலம் கிடைக்கின்ற வருவாய் என்பதற்கும் வேறுபாடு இருக்கின்றது. லாபம் என்பது தனியார் அவர்களுடைய சொந்தத்திற்கு எடுத்துக்கொள்வது. ஆனால் அரசு திரட்டுகின்றவைகளில் இந்த வருவாய் நாட்டு மக்களுக்கு பயன்படுகிற வகையில் செலவு செய்யப்படுகிற ஒன்று என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே லாபம் வந்தால் அது தொழிலாளர்களின் மற்ற குடும்பங்களுக்கு வேறு வகையிலே போய் அது செலவழிக்கப்படுகிறது என்பதை கடந்த மாதம் கூட தோட்டத் தொழிலாளர்களிடம் விளக்கி இருக்கிறேன், அவர்களுடைய உறவினர்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு கல்வி வசதி, மருத்துவ வசதி ஏற்பாடுகள் மற்றும் போக்குவரத்து வசதி போன்றவற்றைச் செய்து கொடுக்க இந்த லாபம் பயன்படுகிறது. ஆகவே அரசு ஈட்டுகின்ற இந்த வருவாய் லாபம் என்ற அந்த அடிப்படைக்குள்ளே, அந்த நியதிக்குள்ளே வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவரவர்களே, இந்த ஒரு துறையிலே மாத்திரம் இதை செய்வது என்பது சரியாகாது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மீதியுள்ள பல இடங்களிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு இந்தச் சலுகை அளிக்கப்படுகிறபோது, அதற்கு அனுமதி அளிக்கப்படுகிறபோது இதற்கும் அனுமதித்தால் என்ன என்பதைப்பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதாவது மாதவரம் பால்பண்ணையிலே பணியாற்றக்கூடியவர்களுக்கு இது அளிக்கப்படுகிறதா, அதன் விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்; அதுபோன்று அளிக்க இயலுமா என்பது தான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. அது வேறு துறையிலே வரக்கூடிய ஒன்று. என்னுடைய பொறுப்பிலே உள்ள அரசுத் துறையைத்தான் நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே வேறு துறைகளில் அப்படி ஏதாவது நடந்து அதற்கு அனுமதி அளிக்கப்படுமேயானால், நிதித் துறையாலும் ஏற்றுக்கொள்ளப்படுமேயானால் தொழிலாளர்களுக்கான நலன்களைச் செய்வதில் இந்த அரசு பின் தங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி ஏதாவது இருந்தால், செய்ய முடிந்தால் அதை நிச்சயமாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





## சென்னை நகரில் குப்பைகளை அகற்ற புதிய யந்திர சாதனங்கள்

* வினா எண் 46—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் குப்பைக் கூளங்களையும், கழிவுகளையும் அப்புறப்படுத்துவதற்கென மாநகராட்சி புதிய முறை இயந்திர சாதனங்கள் வாங்க நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) என்ன விலையில் வாங்கப்பட உள்ளது?

(இ) தற்போது இந்த வேலைக்கென எத்தனை லாரிகள் இயங்கி வருகின்றன?

(ஈ) பழுதுபட்டு உள்ளவை, உபயோகிக்க முடியாதவை முறையே எத்தனை?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) சோதனைக்காக ஒரு டிராக்டர் ட்ரெய்லர் மட்டும் ரூ, 25,390-24 விலையில் வாங்கப்பட்டு உள்ளது. மற்ற சாதனங்கள் வாங்குவது குறித்து முடிவு எடுக்கப்படவில்லை.

(இ) 129,

(ஈ) பழுதுபட்டு உள்ளவை 33. உபயோகிக்க முடியாதவை ஒன்றுமில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, சென்னை நகரில் அதிகமாக குப்பைக் கூளங்கள் சேர்கிறது. ஆகவே அவைகளைச் சேகரித்து அள்ளிச் செல்வதற்கு எங்கே வாங்கப்பட்டது அந்தச் சாதனம் என்பதை அமைச்சரவர்கள் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குப்பிறகு அவைகளை எங்கே ரிப்பேர் செய்கிறார்கள், ரிப்பேர் செய்வதற்கான இடங்கள் எவ்வளவு இருக்கின்றன என்பதை அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, வாங்கப்பட்ட சாதனம் எங்கே ரிப்பேர் செய்யப்படுகிறது என்கின்ற தகவல் இல்லை. ஆனால் அவை தமிழ்நாடு அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக வாங்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, புதைசாக்கடை இல்லாத நகரப்பகுதிகளிலே வேலை செய்கின்ற நகரசுத்தித் தொழிலாளர்கள் மலத்தை தலையிலே தூக்கிக்கொண்டு போகின்ற அவல நிலை இருக்கிறதே. அப்படிப்பட்ட நிலையை மாற்ற நவீன வசதிகள் அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இது மூலக்கேள்விக்குத் தொடர்புடைய கேள்வி அல்ல. ஆகவே தனிக்கேள்வி போட்டு அதற்கான விவரம் பெற வேண்டுகிறேன்.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, சென்னை நகரில் ஓடத் தகுதி இல்லாத லாரிகள் ஏராளமாக ஓடிக் கொண்டிருப்பதனால் நகரசபைக்கு இது அதிகமாக செலவை ஏற்படுத்துகிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அதே நேரத்தில் 1972-லேயிருந்து 1978-க்குள் எவ்வளவு புதிய லாரிகள் வாங்கப் பட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா, காளிமுத்து : தலைவரவர்களே, ஓடத் தகுதி இல்லாத எதுவும் ஓடுவதாகத் தெரியவில்லை. தகுதி உள்ளவைத்தான் ஓடமுடியும். புதிதாக வாங்கப்பட்டது ஒன்றே ஒன்றுதான். அதுவும் சோதனைக்காக வாங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## சென்னை நகரில் உள்ள சினிமா ஸ்டுடியோக்கள்

* வினா எண் 47—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் தற்போது எத்தனை சினிமா ஸ்டுடியோக்கள் இயங்குகின்றன?

(ஆ) அவற்றிற்கு எந்த அடிப்படையில் மாநகராட்சி லைசென்சுக் கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) பன்னிரெண்டு.

(ஆ) உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் எல்லா ஸ்டுடியோக்களுக்கும் ஒரே அளவில்தான் உரிமைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே .. .. ..

(திரு. மு. அரங்கநாதன் எழுந்து நின்றார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். நான் சொல்வது எனக்காக அல்ல. இந்த அவையின் மரபைக் காப்பாற்றுங்கள். உட்காருங்கள். எழுந்து நிற்கக்கூடாது.

திரு. மு. அரங்கநாதன் : எழுந்து நிற்கக்கூடாது என்று சர்வாதிகாரிமாதிரி உத்தரவுப் போடக்கூடாது. உங்களுக்கு அந்த உரிமை கிடையாது. எழுந்து நிற்கக்கூடாது என்று நீங்கள் சொல்லமுடியாது. தவறு செய்தால் திருத்த வேண்டும், அதுதான் சபாநாயகர் வேலை.



மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. அரங்கநாதன் அவர்கள் பேசும்போது உங்களைப் பார்த்து * * என்று பயன்படுத்திய வார்த்தைகளை .. .. ..

திரு. மு. அரங்கநாதன் : உங்களுக்கு என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : * என்று சொன்னதாக என் காதால் கேட்டேன். பக்கத்திலுள்ள திரு. கிட்டப்பாவும் கேட்டார், துணைக்கு இருக்கிற துரைமுருகனும் கேட்டார். சபையும் கேட்டது. இப்போது இல்லை என்று பகிரங்கமாக மறுக்கிறார்கள். திருத்தியவரை நன்றி.

(திரு. மு. அரங்கநாதன் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் சொல்ல நான் அனுமதிக்கவில்லை.

திரு. என். கிட்டப்பா : சினிமா ஸ்டுடியோக்கள் நகருக்கு வெளியேதான் நிறுவவேண்டுமென்று விதி ஏதாவது வகுக்கப் பட்டிருக்கிறதா? இப்போது அதற்கான உரிமம் பெறக்கூடிய கட்டணம் ரூ. 500 என்று தெரிகிறது. அந்நிலையில் சென்னையிலுள்ள பெரும்பாலான ஸ்டுடியோக்கள் சென்னை சுற்று வட்டாரத்தில் நகர எல்லைக்கு அப்பால் இருப்பதால் அதன் மூலம் சென்னை மாநகராட்சிக்கு வரக்கூடிய வருமானம் கிடைக்காமல் வேறு சில மாவட்டங்களுக்குக் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதை மாற்றியமைத்து மாநகராட்சிக்கு பெருவாரியாக செலவிடப்பட வேண்டிய மாநகராட்சிக்கு அந்த வருமானம் கிடைக்கத்தக்க அளவிற்கு அரசு திட்டம் ஏதாவது உருவாக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தற்போது சென்னை நகரத்தோடு இணைக்கப்பட்ட ஊராட்சிகளுக்குத்தான் பல ஸ்டுடியோக்கள் இப்போது இணைந்திருக்கின்றன. 12 ஸ்டுடியோக்கள் மாநகராட்சி எல்லைக்குள் வந்துவிட்டன. உரிமம் கட்டணம் ரூ.750 இப்போது வசூலிக்கப்படுகிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : எல்லா ஸ்டுடியோக்களுக்கும் ஒரேமாதிரியான வரி வசூலிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த ஸ்டியோக்களுக்கு எவ்வளவு வரி?

---

* உறுப்பினர் திருத்திக் கொண்டபடி மாண்புமிகு பேரவை தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[1979 பிப்ரவரி 14

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ரூ.750.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதாரமுறையில் மாநகராட்சிதான் அதிகப் பொறுப்பெடுத்து உரிமம் வழங்குகிறது. ஆனால் அங்கிருக்கிற கழிவுப்பொருட்களுக்கு அதற்குரிய சரியான கட்டணத்தைக் கட்டாமல் அங்குள்ள கழிவுப்பொருள்களை நடைபாதையில் அந்தந்த ஸ்டுடியோ வாசல்களில் போட்டுவிடுகிறார்கள், அதற்காக கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. மாநகராட்சி நன்மையைக் கருதி அதை வசூலிக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அப்படி எதுவும் புகார் வரவில்லை. புகார் வந்தால் கவனிக்கப்படும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : அரசு உதவி பெற்று ஏதாவது ஸ்டுடியோக்கள் சென்னையில் நடக்கிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதற்கும் நான் சொல்கிற பதிலுக்கும் தொடர்பு இல்லை.

திரு. துரை முத்துசாமி : அரசு ஸ்டுடியோ கட்ட ஏதாவது உத்தேசமுண்டா? மற்ற மாவட்டங்களில் அப்படி ஏதாவது ஸ்டுடியோக்கள் கட்டுகிறவர்களுக்கு உதவும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது செய்தி விளம்பரத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க வேண்டிய கேள்வி.

## கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மூலம் கடன் வசதி

* வினா எண் 48—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78-ம் ஆண்டுக்கு கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களுக்கு தமிழக அரசு ஆயுள் இன்ஸ்யூரன்ஸ் கார்ப்பொரேஷனிடமிருந்து ரூ. 4 கோடி கடனுதவி பெற்றுத்தந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் ஆயுள் காப்பீட்டு கழகத்திடமிருந்து தமிழ்நாடு அரசு உத்தரவாதத்தின் பேரில் 16-11-77-ல் கடனாக ரூ.4.00 கோடியும், 10-3-78-ல் கடனாக ரூ.2.00 கோடியும், மேலும் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ள வீடுகளைப் புதுப்பிக்க, வழங்குவதற்கென தனிக் கடனாக 27-3-78-ல் ரூ.1.00 கோடி தொகையும் பெற்றுள்ளது.



1979 பிப்ரவரி 14]

திரு. என். கிட்டப்பா : கூட்டுறவு மூலம் வீடுகள் கட்டும் திட்டத்தை ஊக்குவிக்கும் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்வதில் தற்போது ஏற்பட்டு வரும் தாமதத்தைத் தவிர்க்கவும் அதன் விதிமுறைகளை ஓரளவு தளர்த்தவும் அரசு ஆவன செய்யுமா ?

[முற்பகல் 9·50]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலுள்ள கஷ்டங்களை எந்த விதமாக மாற்றலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்கு எழுதி அனுப்பினால் அதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் கூறும்போது வருடம் ஒன்றுக்கு 4 கோடி, 2 கோடி என்றெல்லாம் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், நடைமுறையில் பல சங்கங்களிலிருந்தும் கடன்கள் பெறுவதற்கான மனுக்கள் வந்தும் கடன்கள் பட்டுவாடா செய்யாமல் அந்தச் சங்கங்கள் எல்லாம் கஷ்டப் பட்டுக் கொண்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதோடு வீடுகள் கட்டும் சங்கம் டிவிஷன் ஒன்றுக்கு ஒன்று என்று இருப்பதற்குப் பதிலாக தாலுகா ஒவ்வொன்றுக்கும் ஒன்று என்று இருந்தால் தான் சரியாகக் காரியங்கள் நடைபெறும். ஆகவே இதைச் சீர்திருத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வருடம் என்று சொல்லும்போது, காலன்டர் இயர், அபிஷியல் இயர், அக்கௌன்ட் இயர், கோப்ரட்டீவ் இயர், என்றெல்லாம் இருக்கிறது. இதில் கோப்ரட்டீவ் இயர் என்று சொல்லுவது, ஜூலை 1-ம் தேதி முதல் ஜூன் 30-ம் தேதி வரை. ஓராண்டில் கூடுமான வரையில் கிடைக்கின்ற அளவு கடனை கொடுத்து வருகிறோம். தாமதப்பட்டு விட்டால், கேரீ ஓவர் செய்து அடுத்த ஆண்டு கொடுக்கப்படும். அந்த முறையில் 30-6-79-க்குள் வாங்கப்பட்ட எல்லா மனுக்களுக்கும் கடன் கொடுப்பதற்கு முயற்சிகள் செய்யப்படும். இந்த பத்து வட்டார வீட்டு வசதி சங்கங்கள் நீங்கலாக 50 கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களும் தொடங்கப்படுகின்றன. ஆகவே ஐம்பதும், பத்தும், அறுபது கிராம வீட்டுவசதி சங்கங்கள் தமிழ்நாட்டில் செயல்படும், தமிழ்நாட்டிலுள்ள எல்லா கிராமங்களும் பயன்பெற வேண்டும் என்பது தான் நோக்கம். அப்படியே ஒருசில கிராமங்களுக்கு இந்த உதவி கிடைக்கவில்லை என்றால் பக்கத்திலுள்ள கிராமத்திலுள்ள சங்கத்தோடு தங்கள் கிராமத்தையும் இணைத்துக் கொள்ளலாம் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இதில் சிரமங்கள் ஏதாவது இருக்குமென்றால் அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் நிச்சயம் அரசு அதை பரிசீலிக்கும்,

[1979 பிப்ரவரி 14

திரு. கு. வடிவேலு ; பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கப் படுகின்ற கடன்களை எத்தனை ஆண்டுகளில் திருப்பிக் கட்ட வேண்டும்? இதற்கு எவ்வளவு வட்டி வசூலிக்கிறார்கள்? கடனைப் பெறுவதற்கு சென்றால், கிராமங்களில் என்ன கேட்கிறார்கள் என்றால், டாக்மென்டுகள் கேட்கிறார்கள். பத்திரம் வேண்டும் என்கிறார்கள், பட்டா வேண்டும் என்கிறார்கள், ஸ்கெட்ச் வேண்டும் என்கிறார்கள், இதற்கெல்லாமே 300 ரூபாயிலிருந்து 500 ரூபாய்வரை செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன, இவற்றை போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு சொல்லிய கஷ்டங்களை எல்லாம் தொகுத்து என்னிடத்தில் மனு கொடுத்தால் அதை இந்த அரசு பரிசிலிக்கும் என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, தற்போது, கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் கொடுப்பதில் 600 ரூபாய் மானியமாக வழங்குகிறது. இதை 1,500 ரூபாயாக ஆக்க உத்தேசம் உண்டா ? முதலில் இந்தக் கடன் சென்னையில் சாங்ஷன் செய்யப்படுகிறது. இரண்டாவது கடன் பெற வேண்டுமானாலும் சென்னைக்கு வரவேண்டிய தொல்லைகள் இருக்கின்றன. இந்த முறையை மாற்றி முதல் முறை மட்டும் சென்னை வந்து கடனை சாங்ஷன் செய்து வாங்கிவிட்டு, பின்னால் உள்ள கடன் தொகையை ஆங்காங்கே சாங்ஷன் செய்து வாங்கிக் கொள்வதற்கு தகுந்தபடி உத்தரவு இடப் படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற தகவல் சரியாக இருக்கும் என்று தெரியவில்லை. கிராம வீட்டு கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக ஐயாயிரம் ரூபாய் வழங்கப் படுகிறது. அரிசன மக்களுக்கு வட்டியில்லாமல் கொடுக்கப்படுகிறது. அவர்களுக் குரிய வட்டியை இந்த அரசே ஏற்றுக் கொள்கிறது மற்றவர் களுக்கு குறைந்த வட்டியில் கொடுக்கப்படுகிறது. உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல் 600 ரூபாய் மானியம் வழங்கப் படவில்லை, அப்படிப்பட்ட தகவலும் சரியில்லை என்று கருதுகிறேன்,

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டத்தில் கடன் பெற வேண்டுமானால் கண்டிப்பாக சொத்து உள்ளவர்களுக்குத்தான் கிடைக்கிறது, ஆனால், அதே சமயத்தில் சொத்து இல்லாதவர்கள் இதற்காக விண்ணப்பித்து, பல நாட்கள் அலையோ அலை என்று அலைந்து இறுதியாக,



979 பிப்ரவரி 14]

சொத்து இல்லை என்ற காரணத்தால் திருப்பி அனுப்பப் படுகிறார்கள். அதோடு கொஞ்சம் நஞ்சம் சொத்து உள்ளவர் களுக்கு இந்தக் கடன் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருந்தாலும் கூட திரு. வடிவேலு அவர்கள் குறிப்பிட்டது போல், 600 ரூபாய் வரை செலவு செய்து தான் இதைப் பெற வேண்டி யிருக்கிறது. பின்னால் இவர்களது மனு நீக்கி வைக்கப்படுகிறது. ஆகவே விரைவில் தகவல் அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா ? உண்மையிலேயே இந்தத்திட்டம் பலன் அளிக்கிறதா? இதுவரை எத்தனை நபர்கள் வீடுகள் கட்டுவதற்குக் கடன் வேண்டும் என்று கேட்டுள்ளார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுக் கடன் கொடுப்பது, வீட்டு வசதி கூட்டுறவு சங்கம் அபெக்ஸ் பாடிக்கு கொடுக்கப்பட்டு, அவர்கள் பிரைமரி சங்கத்திற்கு கொடுத்து, அதன் மூலமாக பரவலாகக் கொடுக்கப்படுவதுதான் முறை என்பதை நீங்கள் அறிவீர்கள். மாண்புமிகு உறுப்பினர் கேட்கும் புள்ளி விவரங்களையெல்லாம் கொடுப்பதானால், நிரம்ப இருக்கின்றது. அவைகளையெல்லாம் படிப்பதானால் 10,15 நிமிடங்கள் ஆகும். அதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். என்னென்ன சிரமங்கள் இருக்கின்றன என்று சொல்வீர்களானால், அதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும். எல்லாத் தகவல்களும் என்னிடத்திலே இருக்கின்றன. 7 கோடி ரூபாய் எப்படி 'டிஸ்பர்ஸ்' செய்யப் பட்டது? 4, 2, 1 என்பது யார் யாருக்கு எப்படி எப்படி கொடுக்கப் பட்டது, எவ்வளவு வசூலிக்கப் பட்டிருக்கிறது போன்ற தகவல்கள் எல்லாம் என்னிடத்திலே நிரம்ப இருக் கின்றன. உங்களுக்குச் சிரமங்கள் ஏதாவது இருந்தால் ஒன்று இரண்டு தான் இருக்கும். அவைகளை எழுதி அனுப்புங்கள். இன்று நண்பகலேகூட நீங்கள் அவைகளை எழுதியனுப்பலாம். அவைகளைப் பரிசீலித்து, இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

பெரியசோலையில் குடிநீர் வழங்கல்

* வினா எண். 49—திரு. கே. உச்சி : மாண்புமிகு தொழி லாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதி பெரியசோலை யில் ரூ. 10,000 செலவில் குடிநீர் வசதி செய்து கொடுத்தும் அது உபயோகிக்க முடியாத நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இது பழுது பார்க்கப்பட்டு குடிநீர் வழங்கும் திட்டம் ஏதாகிலும் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) இது பரிசீலனையில் உள்ளது.

[1979 பிப்ரவரி 14

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, பெரியசோலை பகுதிகள் தொகுதியின் கடைகோடியில் இருப்பதால், இங்குள்ள பிரச்னைகளைப் பற்றி அதிகாரிகள் போய் கவனிப்பதில்லை. இதைப்பற்றி நான் நீண்ட காலமாகச் சொல்லிக் கொண்டு வருகிறேன். நான் இந்தக் கேள்வியைப் போட்டு, கிட்டத்தட்ட 6 மாதங்கள் ஆகின்றன. அந்தப் பகுதி மக்கள் குடிநீர் வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறுர்கள். எனவே இதை உடனடியாக பரிசிலிக்க முன்வர வேண்டுமென்றும், அப்படி பரிசீலிக்க இந்த அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : என்னுடைய பதிலிலேயே இது பரிசீலனையில் உள்ளது என்று கூறியிருக்கிறேன்.

## புது ஆயக்குடி-வரதாப்பட்டினம் சாலை

*வினா எண். 50 — திரு. என். பழனிவேல் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழனி வட்டம், புது ஆயக்குடியிலிருந்து வரதாப் பட்டினம் செல்லும் சாலை கடந்த 15 ஆண்டு காலமாக எவ்வித மராமத்தும் இல்லாமல் போக்குவரத்துக்கு லாயக்கற்று கிடப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைச் செப்பனிட அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) இப்பணியை பின்வரும் ஆண்டுகளில் இதர சாலைகள் திட்டத்தின் கீழ் நிதி நிலைமை மற்றும் பணியின் முதன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு எடுத்துக் கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புது ஆயக்குடி வரதாப்பட்டினம் சாலை என்பது மிகவும் முக்கியமான சாலை. இந்தச் சாலைக்கு ஜில்லா போர்டு காலத்தில் மெட்டல் போடப்பட்டது. அதற்குப் பின்னர் வந்த எந்த அரசும் இந்தச் சாலையைப் பற்றி கவனிக்கவே இல்லை. ஆனுல், இது போக்குவரத்துக்கு மிகமிக முக்கியமான சாலையாக இருக்கிறது. ஆகவே, இந்தச் சாலைய்ய தற்போது கொடைக்கானலிலிருந்து, பழனிக்கு வரும் வரதாமுத்து அணை வழியாக பழனிக்குக் கொண்டு வந்தால் வசதியாக இருக்கும். அதோடு, கொடைக்கானலிலிருந்து பழனிக்கு வரும் தற்போதைய சாலை தண்டாயுதபாணி சுவாமி கோவிலுக்கு வரும் தெரு வீதியைத் தொடுவதால், அங்கு வரக்கூடிய பக்தர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அதற்குப் பதிலாக வரதாமுத்து



1979 பிப்ரவரி 14]

அணையிலிருந்து நேராக 6 கிலோ மீட்டர் தொலைவுக்கு பழனி பஸ் நிலையத்திற்கு கொண்டு வந்தால் மிகவும் வசதியாக இருக்கும். ஏற்கனவே, பொறியாளர்கள் இதைப் பார்த்துச் சென்றிருக்கிறுர்கள். அந்த அடிப்படையிலே இதை நிறைவேற்றிக் கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை, ஆய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## திட்டையில் உள்ள இரயில்வே பாலம்

*வினா எண். 51—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சையிலிருந்து திட்டை ஆலூர் வழியாக கும்பகோணம் செல்லும் சாலையில் திட்டையில் உள்ள இரயில்வே லோயர் பாலத்தில் தண்ணீர் தேங்கி வருவதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்ற திட்டை புகை வண்டி நிலையத்திற்கு அருகிலுள்ள சுரங்கப்பாதையில் மழை காலங்களில் தேங்கும் நீர் காங்குகளைப் பயன்படுத்தி வெளியேற்றப்படுகிறது. இப்படித் தண்ணீர் தேங்குவதை நிரந்தரமாகத் தடுக்க ஒரு மேம்பாலம் அவ்விடத்தில் கட்டப்பட வேண்டும். இதற்கு சுமார் ரூ. 30 இலட்சம் தேவைப்படும். இதை உடனடியாக மேற்கொள்வது இயலாத காரியம். நிதி நிலைமையைப் பொறுத்து எதிர்காலத்தில் செயல்படுத்துவது பரிசீலிக்கப்படும்.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. அ. செல்லப்பா : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது மழைக் காலத்தில் மட்டுந்தான் தண்ணீர் தேங்குகிறது என்று சொன்னார்கள். போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களே சென்ற ஆண்டு அந்தப் பகுதிக்கு வருகிற நேரத்தில் தண்ணீர் இருந்த காரணத்தால் காரை நிறுத்தி விட்டு தண்ணீரை இறைத்த பிறகுதான் கார் போகக் கூடிய நிலைமை ஏற்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அந்தத் தண்ணீரை அப்புறப்படுத்த வேறு ஏதேனும் வழிவகை செய்வார்களா ?

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, பெரியசோலை பகுதிகள் தொகுதியின் கடைகோடியில் இருப்பதால், இங்குள்ள பிரச்னைகளைப் பற்றி அதிகாரிகள் போய் கவனிப்பதில்லை. இதைப்பற்றி நான் நீண்ட காலமாகச் சொல்லிக் கொண்டு வருகிறேன். நான் இந்தக் கேள்வியைப் போட்டு, கிட்டத்தட்ட 6 மாதங்கள் ஆகின்றன. அந்தப் பகுதி மக்கள் குடிநீர் வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே இதை உடனடியாக பரிசிலிக்க முன்வர வேண்டுமென்றும், அப்படி பரிசீலிக்க இந்த அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : என்னுடைய பதிலிலேயே இது பரிசீலனையில் உள்ளது என்று கூறியிருக்கிறேன்.

## புது ஆயக்குடி-வரதாப்பட்டினம் சாலை

*வினா எண். 50—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழனி வட்டம், புது ஆயக்குடியிலிருந்து வரதாப் பட்டினம் செல்லும் சாலை கடந்த 15 ஆண்டு காலமாக எவ்வித மராமத்தும் இல்லாமல் போக்குவரத்துக்கு லாயக்கற்று கிடப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைச் செப்பனிட அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) இப்பணியை பின்வரும் ஆண்டுகளில் இதர சாலைகள் திட்டத்தின் கீழ் நிதி நிலைமை மற்றும் பணியின் முதன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு எடுத்துக் கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புது ஆயக்குடி வரதாப்பட்டினம் சாலை என்பது மிகவும் முக்கியமான சாலை. இந்தச் சாலைக்கு ஜில்லா போர்டு காலத்தில் மெட்டல் போடப்பட்டது. அதற்குப் பின்னர் வந்த எந்த அரசும் இந்தச் சாலையைப் பற்றி கவனிக்கவே இல்லை. ஆனால், இது போக்குவரத்துக்கு மிகமிக முக்கியமான சாலையாக இருக்கிறது. ஆகவே, இந்தச் சாலையை தற்போது கொடைக்கானலிலிருந்து, பழனிக்கு வரும் வரதாமுத்து அணை வழியாக பழனிக்குக் கொண்டு வந்தால் வசதியாக இருக்கும். அதோடு, கொடைக்கானலிலிருந்து பழனிக்கு வரும் தற்போதைய சாலை தண்டாயுதபாணி சுவாமி கோவிலுக்கு வரும் தெரு வீதியைத் தொடுவதால், அங்கு வரக்கூடிய பக்தர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அதற்குப் பதிலாக வரதாமுத்து



அணையிலிருந்து நேராக 6 கிலோ மீட்டர் தொலைவுக்கு பழனி பஸ் நிலையத்திற்கு கொண்டு வந்தால் மிகவும் வசதியாக இருக்கும். ஏற்கனவே, பொறியாளர்கள் இதைப் பார்த்துச் சென்றிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இதை நிறைவேற்றிக் கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை, ஆய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## திட்டையில் உள்ள இரயில்வே பாலம்

*வினா எண். 51—திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சையிலிருந்து திட்டை ஆலூர் வழியாக கும்பகோணம் செல்லும் சாலையில் திட்டையில் உள்ள இரயில்வே லோயர் பாலத்தில் தண்ணீர் தேங்கி வருவதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்ற திட்டை புகை வண்டி நிலையத்திற்கு அருகிலுள்ள சுரங்கப்பாதையில் மழை காலங்களில் தேங்கும் நீர் காங்குகளைப் பயன்படுத்தி வெளியேற்றப்படுகிறது. இப்படித் தண்ணீர் தேங்குவதை நிரந்தரமாகத் தடுக்க ஒரு மேம்பாலம் அவ்விடத்தில் கட்டப்பட வேண்டும். இதற்கு சுமார் ரூ. 30 இலட்சம் தேவைப்படும். இதை உடனடியாக மேற்கொள்வது இயலாத காரியம். நிதி நிலைமையைப் பொறுத்து எதிர்காலத்தில் செயல்படுத்துவது பரிசீலிக்கப்படும்.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. அ. செல்லப்பா : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது மழைக் காலத்தில் மட்டுந்தான் தண்ணீர் தேங்குகிறது என்று சொன்னார்கள். போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களே சென்ற ஆண்டு அந்தப் பகுதிக்கு வருகிற நேரத்தில் தண்ணீர் இருந்த காரணத்தால் காரை நிறுத்தி விட்டு தண்ணீரை இறைத்த பிறகுதான் கார் போகக் கூடிய நிலைமை ஏற்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அந்தத் தண்ணீரை அப்புறப்படுத்த வேறு ஏதேனும் வழிவகை செய்வார்களா ?

[1979 பிப்ரவரி 14

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அந்தப் பகுதி மிகவும் பள்ளமான பகுதியில் இருக்கும் காரணத்தாலும், கழனிகள் மேட்டுப் பகுதியில் இருக்கும் காரணத்தாலும் நீர் கசிந்து வருவதாகக் குறிப்பு இருக்கிறது. அதற்கு நிரந்தரமான பரிகாரம் தேட வேண்டுமானால் மேம்பாலம் கட்டுவது ஒன்றுதான் வழி யாகும். அதற்கு மத்திய அரசு 50 சதவிகிதம் நிதியை மேற் கொள்ள வேண்டும், மத்திய அரசுக்கு அதுபற்றிப் பரிந்துரை செய்து மாநில அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

## கூத்தாநல்லூர் அதிவீரராமனார் பாலம்.

* வினா எண். 52—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், கூத்தாநல்லூர் பேரூராட்சியில் வெண்ணாறு அதிவீரராமனார் பாலம் கட்டப்படுவதற்கென பொதுமக்களும், பஞ்சாயத்தும் கட்டிய ரூ. 25,000-த்தை திருப்பிக் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கூத்தாநல்லூர் பேரு ராட்சியில் வெண்ணாறு அதிவீரராமனார் பாலம் கட்டப்படுவதற் கென பொதுமக்களும், பஞ்சாயத்தும் கட்டிய ரூ. 22,500-ஐ திருப்பிக் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்த காலத்தில் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு அந்தப் பாலத் திறப்பு விழா நிகழ்ச்சியின்போது இந்தப் பணம் திருப்பி அளிக்கப்படும் என்ற உறுதியை அளித்திருக்கி றார்கள். காலம் கடந்திருக்கிறது. ஒரு முதலமைச்சர் கொடுத்த உறுதிமொழி என்ற அடிப்படையில் அதை மறு பரிசீலனை செய்து அந்தத் தொகையைத் திருப்பி அளிக்க இந்த அரசு நட வடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 6–6–1975 ஆம் தேதி யன்று இந்தப் பாலம் முன்னாள் முதலமைச்சரான இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது. அந்த நேரத்தில் 22,500 ரூபாயைத் திருப்பிக் கொடுப்பதாக அவர் வாக்குறுதி அளித்ததாக அந்தப் பேரூராட்சி மன்றத் தலைவர் அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். ஆனால், இது சம்பந்தப்பட்ட கோப்புகளில் அப்படி அறிவித்தது பற்றியோ, ஆணையிட்டது பற்றியோ எந்தவிதமான குறிப்புகளும் இல்லை. ஆகவே, அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை.



1979 பிப்ரவரி 14]

## நேப்பியர் பாலத்தின் அருகில் பூங்கா.

*வினா எண். 53—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூவம் படகு குழாமிலிருந்து (நேப்பியர் பாலம்) சட்டமன்ற உறுப்பினர் விடுதிவரை உள்ள கூவம் ஆற்றின் இரு மருங்கிலும் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : கூவம் ஆற்றங்கரை ஓரங்களில் பூங்கா அமைக்கும் யோசனை இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பூங்கா அமைக்காவிட்டாலும், அந்த முகத்துவாரத்தில் இருக்கின்ற தூர்வாரி சரிவர வேலை செய்யாத காரணத்தால் கூவம் அதிகமாக மணக்கத் தலைப்பட்டி ருக்கிறது. எல்லோரையும் விட பேரவைத் தலைவர் அவர்களே கூவம் ஹவுசில் இருந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். பேரவை உறுப்பினர்கள் விடுதியில் கும்பகோணம் கொசுவைவிட— திரு. ராதா அவர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது—கூவம் கொசு தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதைத் தடுப்பதற்காகவாவது அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கனவே இருந்த அரசு கூவம் மணக்கும் என்றெல்லாம் திட்டத்தைப் போட் டார்கள். கூவம் மணந்ததா இல்லையா என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். (குறுக்கீடு) கேள்விக்குப் பதிலைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆகவே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கக் கூடிய கேள்விக்குத் தகுந்த பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னால் இப்போது அரசினுடைய ஆய்வில் எந்தவிதமான திட்டமும் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : பேரறிஞர் அண்ணா அவர்கள் கூவம் மணக்கும் என்று குறிப்பிட்டார்கள். கூவம் அதிகமாக மணக்க வில்லை. இப்போது கூவம் மணக்கக்கூடிய அளவுக்கு எப்போதும் மணக்கவில்லை என்பதை இந்த அவைக்குத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். எல்லோரையும்விட பேரவைத் தலைவர் அவர்கள் அந்த மணத்தை நன்கு அனுபவித்துக்

கொண்டிருக்கிறார்கள். கடந்த இரண்டு மூன்று ஆண்டு காலமாக தூர்வாரி இயந்திரம் சரியாக இயங்கவில்லை. ஆகவே, அரசு ஆராய்ந்து இதுபற்றி ஆணை பிறப்பிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய நல்ல யோசனையைப் பரிசீலிப்பதற்கு முன்னாலே நான் குறிப்பிட விரும்புவது, கூவம் மணக்கும் என்ற திட்டத்தை தி. மு. க. அரசு பொறுப்பிலே இருக்கிற நேரத்திலே குறிப்பாக 1970-71 ஆண்டுகளிலே, அதற்குரிய திட்டங்கள் செயல் படுத்தப்பட்டன. கூவம் மணப்பதற்கு அவர்கள் அப்போது என்ன என்ன திட்டங்களை வகுத்தார்கள் என்பது எல்லாம் என்னை விட திரு. கிட்டப்பா அவர்களுக்குத் தான் நன்றாகத் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இது ஒரு சீரியஸான பிரச்சினை. அதற்கு நேராக மந்திரி பதில் சொல்லவில்லை. கூவத்திற்கு பூங்கா என்பது விளக்குமாற்றுக்கு பட்டுக் குஞ்சம் கட்டுவது மாதிரிப் பிரச்சினை, ஆகவே பூங்கா பிரச்சினை இல்லாவிட்டாலும் இது ஒரு முக்கியமான பிரச்சினை லட்சக் கணக்கான மக்களின் வாழ்க்கை கெடுகிறது, அந்த அளவிற்கு மக்கள் நடமாட்டம் செய்யமுடியாத அளவிற்கு நிலமை இருக்கிறது. அது மட்டுமல்ல, ஹாஸ்டலிலே உறுப்பினர்கள் உட்கார்ந்து சாப்பிடக்கூட முடியாத நிலைமை இருக்கிறது, அந்தப் பக்கமே போக முடியவில்லை. இது ஒரு சீரியஸான பிராப்ளம். அதற்குப் பதில் சொல்லாமல் தி. மு. க. திட்டம் போட்டது என்று சொல்வது சரியல்ல. This is not a counter. This is no substitute to the answer. The real issue is, people are affected. கூவத்தை அகற்றப் போகிறீர்களா அல்லது நாற்றத்தை அகற்றுவதற்கு திட்டம் இருக்கிறதா ? திட்டம் இல்லை, அப்படிப் பட்ட யோசனை இல்லை என்று சொல்கிறார்கள். இப்படிப் பட்ட சீரியஸான பிரச்சினையில் தி. மு. க. திட்டம் போட்டது பற்றிச் சொல்ல வேண்டாம். உங்களிடம் திட்டம் ஏன் இல்லை என்று கேட்க விரும்புகிறேன். I want an answer.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பொதுப்பணித் துறையின் மூலம் கொசு ஒழிக்கும் திட்டம் இல்லை. அதனால் தான் இல்லை என்ற பதிலை நான் சொன்னேன். கொசு ஒழிப்பது என்பது பொதுப் பிரச்சினை. சென்னை மாநகராட்சி சம்பந்தப்பட்ட விஷயம், உள்ளாட்சித் துறையினர் இவைகளை எல்லாம் கவனித்துக் கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. கூத்தகுடி ச. சண்முகம் ; தலைவர் அவர்களே, கூவம் மணந்து கொண்டு தான் இருக்கிறது. தி. மு. க. திட்டம் போட்டிருக்கலாம். அண்ணா அவர்கள் கூவம் மணக்கும் என்று சொல்லியிருக்கலாம். ஆனால் இப்போது துர்மணம் இருக்கிறது. துர்நாற்றம் இருக்கிறது, தாங்கமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே இதற்காக ஒரு திட்டம் வகுத்து வெகு சிக்கிரம், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சுகாதாரக் கேடுகள் இல்லாமலிருக்க அவர்கள் இங்கே வந்து உட்கார்ந்து காரியங்களை ஆற்றக் கூடிய வகையில் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் சொல்லி விட்டேன். ஆனாலும் மீண்டும் மீண்டும் உறுப்பினர்கள் அதையே வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருப்பதால் அதுபற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சராக இருக்கிறார்கள். அவர்கள் குறைந்த பட்சம் தூர்வாரியைச் சரிசெய்து இப்போதுள்ள அந்த மணத்தை அகற்றுவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏற்கெனவே பக்கிங்காம் கால்வாயைச் சீரமைக்கும் திட்டம் ஆய்விலிருந்து, மாஸ்டர் பிளானிலே சேர்த்து, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. ரூபாய் 566 இலட்சம் செலவில் திட்டமிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசிடத்திலே நாம் அதைப்பற்றி வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அதுவும் கூடிய சிக்கிரம் கிடைத்தால் கூவத்திலே உண்மையிலேயே மணத்தை ஏற்படுத்துவதற்கும் அந்தக் கால்வாயிலே படகுகளை விடுவதற்கும் இந்த அரசு ஏற்பாடுகளைச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கூவம் நதியில் சென்னை கார்ப்பரேஷனிலே உள்ள கழிவுநீர் 104 இடங்களில் விடப்படுகிறது. புரட்சித் தலைவர் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு அந்தத் தகவல் அவர்களுக்குக் கிடைத்தவுடன் அவற்றை அங்கு விடாமல் அவை எல்லாவற்றையும் ஒரே குழாயில் கொண்டு வந்து மெயின் குழாயில் கொண்டு போய் வேறு ஒரு இடத்திலே விட்டு அங்கே புல்லை வளர்ப்பதற்கான ஒரு திட்டத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அது அரசின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. க. அன்பழகன் : இந்த அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் சொன்ன காரணத்தினாலே உள்ளாட்சித் துறை அமைச்சர் இடத்திலே உள்ள அந்த இலாகா இது குறித்து என்ன செய்கிறது என்பதை அந்த அமைச்சர் சொல்வாரா ?

[1979 பிப்ரவரி 14

[முற்பகல் 10·10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, Madras Metropolitan Water Supply and Sewerage Board அதாவது, சென்னை குடிநீர் வழங்குதல் கழிவுநீர் அகற்றுதல் என்ற இலாக்கா என்னிடத்தில் கொடுக்கப்பட்டிருப்பதால் நான் அதைச் சொன்னேன்.

## பழத் தோட்டங்கள்

*வினா எண். 54—திரு. துரை முருகன்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Hill Development திட்டத்தில், பழ அபிவிருத்திக்கென தனியாக தொகை ஏதேனும் அரசு ஒதுக்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவை அந்தக் காரியத்திற்கே செலவிடப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? அந்தத் தொகையிலே இதுவரையிலே செலவிடப்பட்டது எவ்வளவு? இந்தத் திட்டத்தை எந்தெந்த இடங்களில் அமல்படுத்தியிருக்கிறார்கள் என்ற விவரங்களை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, 1977-78-இல் 51 ஹெக்டேரில் இத்திட்டம் செயல் படுத்தப் பட்டது, 1978-79-இல் 75 ஹெக்டேரில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1977-78-இல் 0.84 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, 0·87 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1978-79-இல் 0.96 இலட்சம் ரூபாய் இத்திட்ட வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டு அந்தக் காரியத்திற்காகத் தொகை செலவிடப்பட்டு வருகிறது.

## கிராமப்பகுதிகளில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள்.

*வினா எண். 55—திரு. ஆர். மணிமாறன்: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப் பகுதிகளில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அமைத்திடும் திட்டம் கிராம வாரியத்திடம் இருக்கிறதா ?



1979 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: ஆம். ஈரோடு பகுதியில் நூறு தொழிலாளர்களுக்கு தோல்களைப் பதனிட்டு அவற்றை நல்ல விலைக்கு விற்பனை செய்ய உதவும் வகையில் தோல் பதனிடுவதற்குப் பொது வசதிகளை நிறுவ முன்னோடித் திட்டம் ஒன்றை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தயாரித்துள்ளது. இத்திட்டம் வெற்றி பெற்றால், தோல் பதனிடும் தொழிலாளர்கள் நிரம்பியுள்ள பிற பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்படும்.

திரு. பொ. சிகாமணி: பேரவைத் தலைவரவர்களே, இது போன்ற தோல் பதனிடும் தொழிற்சாலைகளை அனுமதிக்கும் பொழுது சுற்றுப்புற சுகாதாரம், குடிநீர் பாதுகாப்பு ஆகியவை பாதிக்கப்படுவதாகப் புகார் கூறப்படுகிறது. இதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, குரோமியம் டேனரி என்று சொல்லப்படுகிற இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கும் இடத்தில் சுற்றுப்புறப் பாதுகாப்பு பாதிக்கப்படுவதாகப் புகார் வந்ததையொட்டி அரசு பலவேறு முன்யோசனைகளைத் தோல் பதனிடுபவர்களுக்கு வழங்கி இருக்கிறது. அதன்படி தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் 'அப்ளூஅன்ட் ட்ரீட்மெண்ட்' என்ற வகையில், கழிவுநீரை ஒரேயிடத்தில் தேக்கி பரவலாக ஆக்காமல், பக்கத்திலே உள்ள மக்களுக்குக் குடிநீருக்குப் பாதிப்பு ஏற்படாமல் செய்ய அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. சொ. ந. பழனிச்சாமி: பேரவைத் தலைவரவர்களே, தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு அரசாங்கத்திலிருந்து ஏதாவது மானியம் அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, தோல் பதனிடும் தொழிலில் ஈடுபடும் முயற்சியிலே உள்ளவர்களுக்கு மானியமாக 750 ரூபாயும், மூலதனக் கடனாக 750 ரூபாயும், நடைமுறை மூலதனமாக 3,000 ரூபாயும் ஆக மொத்தம் 4,500 ரூபாய் வரை நாம் வாரியத்தின் மூலம் வழங்குகிறோம். இப்படி 150 தோல் பதனிடுபவர்களுக்குத் தனித் தனியாக இந்தக் கடன தொகைகளை நாம் வழங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் சுற்றுப் புறங்களிலே உள்ள கிராமத்தில் இருக்கின்ற குடிநீரைப் பாழாக்கு

கிறது, ஏரியில் கலந்து பயிர் விளையாவண்ணம் செயல்படுகிறது. இவற்றையெல்லாம் தடுக்க சுகாதார முறையிலே ஒரேயிடத்தில் தேக்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி அரசு ஆணையிட்டு டிசம்பர் 31-ஆம் தேதிக்குள் ஒரேயிடத்தில் டேங்க் கட்டி தேக்காவிட்டால் அனுமதி மறுக்கப்படும் என்று தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் குறிப்பாக, இராணிப்பேட்டையைப் பொறுத்த வரையில் 48 பேக்டரிகள் இருக்கின்றன, 2 பேக்டரிகளைத் தவிர பாக்கியுள்ள எல்லா பேக்டரிகளிலும் அது போன்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் சுற்றுப்புற கிராமங்களில் பயிர் செய்ய முடியவில்லை. துர்நாற்றம் தாங்க முடியாமல் இருக்கிறது, குடிநீர் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே அரசு இந்தப் பிரச்னையைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது</u> : தலைவர் அவர்களே, சுற்றுப்புறம் இந்த வகையிலே பாதிக்கப்படுகிறது என்பதை உணர்ந்து Affluent treatment plant வைக்க வேண்டுமென்று அரசு சொல்லியிருக்கிறது. ஆனால், இதிலே உள்ள நடைமுறை பிரச்னை ஒன்றை நாம் கவனிக்கவேண்டும், கிட்டதட்ட ரூ. 2 இலட்சத்துக்கு மேல் செலவு செய்ய வேண்டியிருக்கிறது ஒரு Affluent Treatment plant நிறுவுவதற்கு. எனவேதான் அரசு மாற்று யோசனையாக 'டானரீஸ்' வைத்திருப்பவர்கள் 10, 15 பேர் பெரிய அளவிலே இந்த மாதிரியான நீரை சுத்தப்படுத்துகின்ற அமைப்பை ஏற்படுத்தலாம் என்று சொல்லியிருக்கிறது. அதுவரை அவர்களுக்கு அவ்வப்போது காலக்கெடு நீட்டிக்கப்பட்டிக்கிறது. இப்பொழுது இறுதியாக இந்த ஆண்டுக்குள் அவர்கள் செய்யவில்லையென்றால் அவர்களுக்கு வழங்கப்படுகிற உரிமம் திரும்பவும் வழங்கப்படாத சூழ்நிலை வரும் என்று அத்தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அரசினுடைய அறிவுரையை ஏற்று அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> : தலைவரவர்களே, இப்படி கிராமப்புறங்களிலே தொழிலாளர்களுக்கு, ஏழைகளுக்குத் தோல் பதனிடும் தொழிற்சாலை ஏற்படுத்தும் அடிப்படையில் இது வரையில் எவ்வளவு கிராமங்களில் இந்தத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன? ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட தொழிற்சாலைகள் பல இடங்களிலே வேலை நிறுத்தி விட்ட நிலையில் அக்கட்டிடங்களிலே கூட மனிதர்கள் இல்லை. இப்பொழுது மிருகங்கள் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே சில பகுதிகளிலே, குறிப்பாக வளையாம்பட்டியிலே இப்படி தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட தொழிற்சாலையிலே கழுதைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அப்பேர்ப்பட்ட தொழிற்சாலைகளையெல்லாம் மீண்டும் நடைமுறைப்படுத்த அரசாங்கம் முன் வருமா? ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டவைகளில் எவ்வளவு தொழிற்சாலைகள் நடைபெறாமல் இருக்கின்றன? எவ்வளவு புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள்? புதிதாக எவ்வளவு தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதாக உத்தேசம்?



<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது</u> : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் சில இடங்களில் தோல் பதனிடும் தொழிற்சாலை செயல்படாமல் இருப்பதாகவும் அதிலே ஒரு குறிப்பிட்ட இடத்தில் கழுதைகள் வந்து இருப்பதாகவும் சொன்னார்கள். ஒருவேளை கழுதைத் தோலுக்கு கிராக்கி இருக்கிறது என்று யாராவது கொண்டு வந்திருக்கலாம். ஆனால், பொதுவாக 1974-75-ல் 17 கிராம மாதிரி தொழில் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதிலே 13 இலாபகரமாக இயங்கவில்லை. காரணம், தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் சரியல்ல. இரண்டாவது, இப்பொழுது நாம் விவசாயத்திற்காக இறைவை இயந்திரங்களைப் பயன்படுத்துவதாலே கவலை மாடுகள் பூட்டி நீர் இறைக்கும் தோலைத்தான் அவர்கள் பதனிட்டு வந்திருக்கிறார்கள். அது தவிர, வேறுவித பயிற்சி அவர்களுக்கு இல்லை. இந்தக் காரணத்தினால் 13 இடங்களில் அத்தொழிற்சாலைகள் செயல்படாமல் போய்விட்டன. மீதி இருக்கும் 4-ம் சமயபுரம், ஆதிரெட்டிபாளையம், நல்லூர், கொங்கம்பாளையம் ஆகிய இடங்களில் இருக்கின்றன. அவற்றை அடிப்படையாக வைத்து பழைய அனுபவங்களையும் நாம் எடுத்துக் கொண்டு புதிதாக எங்கெங்கே தோல் பதனிடும் தொழிற்சாலைகளை நிறுவினால் பலனளிக்கும் என்பதைப் பார்த்து, எங்கே எளிய முறையில் நமக்கு 'ராஸ்கின்' கிடைக்கும் என்பதைப் பார்த்து புதிதாக இடங்களைத் தேர்ந்தெடுக்கிறோம். அதிலே இன்னொன்று, 'கோவாப்பரேடிவ் சர்வீஸ் சொஸைடீஸ்' என்ற பெயரில் 'செமி ஃபினிஷ்ட் லெதராக' இல்லாமல், 'ஃபினிஷ்ட் லெதராக' தயார் செய்ய வசதி செய்கிற கூட்டுறவாக இது அமைந்திருக்கிற காரணத்தினால், அதையும் கவனத்திலே கொண்டு குறிப்பிட்ட இடங்களில். முக்கியமாக ஈரோடு, நாமக்கல், திண்டுக்கல் ஆகிய பகுதிகளில் அமைக்க இருக்கிறோம். வாணியம்பாடியைக் கூட கவனத்தில் எடுத்துக்கொள்ளலாம், உறுப்பினரவர்கள் சொல்கின்ற காரணத்தாலே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1979 பிப்ரவரி 14

## தேனி வளர்ப்புத் திட்டம்

* வினா எண்.—56 திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தேனி வளர்ப்புத் திட்டம், தற்போது எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது?

(ஆ) தேனி வளர்ப்பு பணியாளர்கள் வேறு பணிகளுக்கு பயன்படுத்தித் கொள்ளப்படுகிறார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) தற்போது தேனீ வளர்ப்புத் திட்டம், தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தால், நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இவ் வாரியம் இதுவரை சுமார் 1,71,000 தேனீப் பெட்டிகளையும், சிறப்புத் திட்டங்களான மலைப்பகுதி மற்றும் மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டங்களின் கீழ் சுமார் 8,000 தேனீப் பெட்டிகளையும் வழங்கியுள்ளது. தேனீக் குடும்பங்களை நல்ல முறையில் பேணி வரவும், விஞ்ஞான முறையில் தேன் எடுப்பதற்கும் தேவையான தொழில் நுட்ப உதவியை இவ்வாரியமும் அளித்து வருகிறது. தேனீ வளர்ப்போர் உற்பத்தி செய்யும் தேனை இவ்வாரியம் தேனீ வளர்ப்பு நிலையங்கள் மூலமும், மூலதனத் தொகை கொடுக்கப்பட்டு இதற்கென பதிவு செய்யப்பட்ட தேனீ வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் மூலமும் கொள்முதல் செய்து உதவி வருகிறது.

(ஆ) தேனீ வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இவ்வாரியத்தில் பணியில் அமர்த்தப்பட்டுள்ள தேனீ களப்பணியாளர்கள் வேறு எந்த மாற்றுப் பணியிலும் ஈடுபடுத்தப்படுவதில்லை. தீபாவளி பண்டிகை கதர் விற்பனையின்போது மட்டும் அவர்களது சேவை கதர் விற்பனைக்காக சிறிய அளவில் பயன்படுத்தப்படுகிறது.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, தேனீ வளர்ப்புப் பணியாளர்கள் உள்ளாட்சித் துறை கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிற காரணத்தாலே ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலே புது திட்டங்கள் வந்தால் அவற்றிற்காக அவர்களைப் பயன்படுத்துகிற நிலையிருக்கிறதே தவிர, தேனீ வளர்க்க ஊக்குவிக்கும் திட்டத்திற்காக அவர்கள் பயன்படுத்தப் படவில்லை. மீன் வளர்ப்பு புதிதாக வந்தால் மீன் வளர்ப்புக்கு அவர்களைப் பயன்படுத்துகிறார்கள். அதே போல், புதிய திட்டங்களுக்குப் பயன்படுத்துகிறார்களே தவிர, தேனீ வளர்ப்புக்கு, அதனை ஊக்குவிக்க பயன்படுத்தப்படவில்லையென்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்களா? ஆகவே, அந்த நிலையை மாற்றி, உண்மையாக தேனீ வளர்ப்புக்கு அவர்களை ஊக்குவிப்பார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.



1979 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, தேனீ வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 89 பேர் வாரியத்தால் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 1977-78 ஆம் ஆண்டு முடிய கிட்டத்தட்ட ரூ. 1,03,000 மதிப்புள்ள தேனை உற்பத்தி செய்கின்ற பணியிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே, நிச்சயமாக உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் பல்வேறு பணிகளிலே இயற்கையாக அவர்களை ஈடுபடுத்த முடியாது. ஆனால், கதர் விற்பனையின் பொழுது அவர்களது பணி சிறிதளவு பயன்படுத்தப்படுகிறது என்பது தான் உண்மை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஒட்டன்சத்திரத்தில் மருத்துவமனைக் கட்டிடம்.

* வினா எண். 57—திரு. அ. ப. பழனியப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம், பழனி தாலுகாவில் உள்ள ஒட்டன்சத்திரத்தில் ஒரு பொது ஆஸ்பத்திரி (General Hospital) கட்ட 1970-ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், ஆஸ்பத்திரி கட்ட நடப்பு ஆண்டில் நடவடிக்கை எடுக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

## மருத்துவக் கல்லூரிகள்.

*வினா எண். 58—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் தனியார் நடத்தும் மருத்துவக் கல்லூரிகள், அரசு நடத்தும் மருத்துவக் கல்லூரிகள் முறையே எத்தனை?

(ஆ) அரசு கல்லூரிகளில் மாணவர்கள் தேர்ந்தெடுப்பதைப் போலவே தனியார் கல்லூரிகளில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா?

(இ) இல்லை என்றால் அதற்கான காரணம் யாது?

(ஈ) தனியார் கல்லூரிகளுக்கு மானியம் ஏதேனும் கொடுக்கப்படுகிறதா? எவ்வளவு?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். செளந்திரராஜன் :

(அ) தனியார் நடத்தும் மருத்துவக் கல்லூரி— ஒன்று
அரசு நடத்தும் மருத்துவக் கல்லூரிகள்— எட்டு.

(ஆ) இல்லை.

(இ) அரசுக் கல்லூரிகளைப்போல தனியார் கல்லூரியிலும் தேர்வை கடைப்பிடிக்க வேண்டுமென அவசியமில்லை.

(ஈ) தனியார் நடத்தும் ஒரே மருத்துவக் கல்லூரியான வேலூரிலுள்ள சி.எம்.சி. மருத்துவக் கல்லூரிக்கு இவ்வரசு மான்யம் ஏதும் வழங்குவதில்லை.

[முற்பகல் 10·20]

திரு. வி.கே. கோதண்டராமன் : சார், அரசினர் மருத்துவக் கல்லூரிகளில் எப்படி மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்களோ அது போன்று தனியார் கல்லூரிகளில் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்போது எதற்காக தனியாரிடத்திலே அந்தக் கல்லூரி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பிரியம் போல, சாதி அடிப்படையில், மத அடிப்படையில் சொந்தக்காரர்களைத் தேர்ந்தெடுத்து, குறிப்பிட்ட மதம் மட்டுமே முன்னேறவேண்டும் என்ற நோக்கத்திற்காகவா மத்திய சர்க்கார் அங்கீகாரம் கொடுத்துள்ளது. அதைப் பின்பற்றி நமது அரசும் அதை ஆதரிக்கிறதா. அந்த அடிப்படையிலே இனிமேலாவது அரசு கல்லூரிகளிலே தேர்ந்தெடுப்பதைப்போன்று, தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தலைவர் அவர்களே, தனியார் நடத்தும் ஒரே கல்லூரியான சி.எம்.சி. மருத்துவக் கல்லூரியில் நேர்முகத் தேர்வினைக் கடைபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதைப்பற்றி வலியுறுத்தவும் முடியாது. இந்தக் கல்லூரிக்கு அரசு எந்தவிதமான மானியமும் வழங்குவதில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, டிரீட்மெண்ட், இப்போது ( * ) ஆஸ்பத்திரியாக இருக்கிறது......

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேள்வி நேரத்தின்போது, கேள்வி வடிவில் அந்த நிறுவனத்தைக் குறித்து உண்மைக்கு மாறான பல கருத்துக்களை இங்கே நீங்கள் அனுமதிப்பது முறைதானா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோதண்டராமன் தங்களுடைய வேகத்தை சொற்களிலே அடக்கமாகச் சொல்லுங்கள். அவர்கள் சொன்ன * என்ற வார்த்தைகளை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அங்கே எல்லோரும் போகிறோம் அதற்காகத்தான் உண்மையைச் சொன்னேன், அதை நிரூபிக்கத் தயார். மிஸ்டர் ஜேம்ஸ் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தால். ஆகவே இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் அரசின் மருத்துவக் கல்லூரிகளிலே கம்யூனிடி அடிப்படையிலே அரிசனங்களுக்கு இத்தனை சதவிகிதம் பின்தங்கிய மக்களுக்கு இத்தனை சதவிகிதம், மற்றவர்களுக்கு இத்தனை சதவிகிதம் என்று தேர்ந்தெடுக்கப்படுகின்ற அந்த அடிப்படையிலே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வற்புறுத்துவதற்கு இந்த அரசு ஏன் தயங்க வேண்டும்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : தலைவர் அவர்களே, அரசின் சார்பில் எந்தவிதமான மானியமும் வழங்கப்படாத காரணத்தால், சிறுபான்மை சமுதாயத்தினரால் நடத்தப்படுகின்ற கல்லூரி என்ற காரணத்தினாலும் வற்புறுத்துவதற்கு வழியில்லை.

போளூர் வட்டத்தில் கால்நடை மருத்துவமனைகள்.

*வினா எண். 59—திரு. கே. ஜே. சுப்பிரமணியம்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் வட்டத்தில் கால்நடை மருத்துவமனைகள் எத்தனை உள்ளன?

(ஆ) மேலும் எத்தனை மருத்துவமனைகள் அமைக்கும் செயற்குறிப்பு ஆய்விலுள்ளது?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : (அ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் வட்டத்தில் ஆறு கால்நடை மருந்தகங்கள் கீழே குறிப்பிட்டுள்ள இடங்களில் செயல்படுகின்றன :—

| | |
|---|---|
| (1) கலசப்பாக்கம் | கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம். |
| (2) ஆதமங்கலம் | |
| (3) போளூர் | போளூர் ஊராட்சி ஒன்றியம். |
| (4) கேளூர் | |
| (5) களம்பூர் | |
| (6) சேத்துப்பட்டு | சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம். |

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(ஆ) மொடையூரில் கால்நடை மருந்தகம் திறப்பதற்கான செயற்குறிப்பு கால்நடை பராமரிப்பு இயக்குநரின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கே. ஜே. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, கால்நடை மருந்தகங்கள் திறப்பதற்கான நிபந்தனைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, கால்நடை மருந்தகங்கள் அமைப்பதற்கு கீழ்க்காணும் நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டும்:—

(1) கால்நடை நிலையங்கள் கால்நடை எண்ணிக்கையைக் கருதியும், ஏற்கனவே உள்ள கால்நடை நிலையத்தில் அருகாமையைக் கருதியும், எவ்விடத்தில் மிக அவசியமாகத் தேவைப்படுகிறதோ அங்கே அமைக்கப்படுகின்றன.

(2) பஞ்சாயத்து ஒன்றியங்கள் எவ்விடத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கவேண்டுமென்று குறிப்பிட்டு தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றவேண்டும்.

(3) நிரந்தரக் கட்டிடம் கட்டும் வரையில் கால்நடை மருந்தகம் உடனே செயல்படுவதற்காக வாடகை இல்லாமல் கட்டிடம் பஞ்சாயத்து ஒன்றியம் ஏற்பாடு செய்யவேண்டும்.

(4) பஞ்சாயத்து ஒன்றியம் ஒரு ஏக்கர் நிலத்திற்குக் குறைவில்லாமல் தரவேண்டும்.

(5) கால்நடை மருந்தகத்திற்குத் தேவையான கட்டிடம் கட்டுவதற்காக கீழே குறிப்பிட்டுள்ளவாறு பஞ்சாயத்து ஒன்றியம் செலவிற்காகத் தனது பங்கினை மேற்கொள்ளவேண்டும்:—

| | பஞ்சாயத்து ஒன்றியம். | அரசு. |
|---|---|---|
| முதல் கால்நடை மருந்தகம் அமைக்க | 25% | 75% |
| இரண்டாவது கால்நடை மருந்தகம் அமைக்க .. .. .. .. | 50% | 50% |
| மூன்றாவது கால்நடை மருந்தகம் அமைக்க | 75% | 25% |
| நான்காவது கால்நடை மருந்தகம் அமைக்க | 100% | .. |

கால்நடை மருந்தகங்கள் திறப்பதற்காக மேற்கண்ட நிபந்தனைகளை ஏற்று, பல பஞ்சாயத்து ஒன்றியங்கள் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினாலும், அரசு நிதி நிலைமையைப் பொறுத்தும், கால்நடை மருந்தகங்கள் திறப்பதற்காக இடங்களில் ஒப்புநோக்குத் தேவையைப் பொறுத்தும், ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு மருந்தகங்கள் திறக்கவேண்டும் என்பதனை முடிவு செய்கிறது.



திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, போளூர் வட்டத்தில் ஜவ்வாது மலைப்பகுதியில் உள்ள ஜம்னாமத்தூர் என்ற இடத்தில் ஒரு கால்நடை மருந்தகம் திறப்பதற்கு சாத்தியக்கூறு இருக்கிறது என்று அங்கு வந்த அரிசன நலத் துறை அமைச்சர் அறிவித்தார்கள். அது பற்றிய தகவல் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, தனிக்கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துக் தரமுடியும்.

சின்னசேலம் ஆட்டுப்பண்ணை.

*வினா எண். 60—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சின்ன சேலத்தில் உள்ள ஆட்டுப்பண்ணையை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : இல்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, சின்னசேலம் ஆட்டுப்பண்ணை மிகப்பெரிய பண்ணை. கிட்டதட்ட 2000 ஏக்கர் நிலப்பரப்பில் அது அமைக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்த ஆட்டுப்பண்ணையை அபிவிருத்தி செய்ய உலக வங்கியிடமிருந்து உதவி பெற்றாவது செய்ய அரசு முன்வருமா? 1967-ம் ஆண்டில் அமைக்கப்பட்ட அந்த பண்ணை, தென்னாற்காடு மாவட்டத்தில் மிகப்பெரிய பண்ணையாக விரிவுபடுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, உலக வங்கியின் நிதியுதவி பெற்று திட்டங்களைச் செயல்படுத்த, பெரும் திட்டங்களை அனுப்புமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க கால்நடை பராமரிப்பினைப் பொறுத்தவரையில் ரூ. 47 கோடி மொத்தச் செலவில் ஆடு வளர்ப்பிற்காக திட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இவ்வாடு வளர்ப்புத் திட்டத்திற்குத் தேவைப்படும் 33,000 ஆடுகளைப் பெறும் பொருட்டு கலப்பின ஆட்டுப்பண்ணை ஒன்றை சின்னசேலத்திலுள்ள ஆட்டுப்பண்ணையில் நிறுவ திட்ட அறிக்கையில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நிறுவப்பட்டால் சின்னசேலம் ஆட்டுப்பண்ணையில் தற்போதுள்ள வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு பண்ணை விரிவாக்கப்படும்,

[1979 பிப்ரவரி 14

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சின்னசேலம் ஆட்டுப்பண்ணையின் மொத்த பரப்பளவு எவ்வளவு? அங்கே உள்ள ஆடுகளின் மொத்த எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, சின்னசேலம் ஆட்டுப்பண்ணையின் மொத்த பரப்பளவு 1,866.50 ஏக்கர். அந்தப் பண்ணையில் மேச்சேரி செம்மறி ஆடுகள் 1,673-ம், ஜம்னாபாரி வெள்ளாடுகள் 19-ம் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அது அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. ஒழுங்குப் பிரச்னைகள்.

### (அ) முதலமைச்சர் துறைகள் குறித்த வினாக்கள் எடுத்துக் கொள்ளப் பெறுதல்.

* திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஏறத்தாழ இரண்டாண்டு காலமாகவே ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் தங்களுடைய முக்கியமான கவனத்திற்கு ஒரு பிரச்னையை நான் கொண்டு வருகிறேன். தாங்களும் அதை கவனிப்பதாகக் கூறுகிறீர்கள். ஆனால் என்ன காரணமோ, தாங்கள் கவனிக்கிறேன் என்று சொல்லியும் கூட அது இந்த அவையை அலட்சியப்படுத்துகிற அளவிற்கு நடந்து கொண்டு இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று இருக்கும் துறைகள் : பொது நிர்வாகத்துறை, ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள், காவல்துறை, பாஸ்போர்ட், மதுவிலக்கு, லஞ்ச ஒழிப்பு, பெருந்தொழில்கள் உள்ளிட்ட தொழில்துறை, சுரங்கங்கள், கனிவளம்—இவ்வளவு துறைகள் வைத்துக்கொண்டிருக்கும் முதலமைச்சர் அவர்களுக்கு பல கேள்விகளை சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பியிருக்கின்றனர். அதற்கு அவர்கள் பதில் அளிக்கவேண்டும். ஆனால் அவர் இந்த இரண்டு ஆண்டு காலத்தில் ஓரிரு கேள்விகளுக்குத் தான் இதுவரையில் பதில் அளித்து இருக்கிறார். வேறு எந்தக் கேள்விக்கும் பதில் அளிக்கவில்லை. என்ன காரணம், இந்த அவையை ஏன் இப்படி அலட்சியப்படுத்த வேண்டும் என்று நான் அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10.30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய உணர்வுகளை நான் அறிகிறேன். முதலமைச்சர் சம்பந்தப்பட்ட கேள்விகள் வருகின்றன. அதற்கான பதில்களும் வந்துகொண்





டிருக்கின்றன. நீங்கள் கேட்பதற்கு முன்னாலேயே நான் மாண்புமிகு முதலமைச்சரிடம் கேட்டேன். எனக்கும் இதில் அதிக அக்கறை இருக்கிறது. தான் டில்லிக்குப் போய் வந்த பிறகு ஒவ்வொரு நாளும் 5, 6 கேள்விகள் வீதம் போட்டு, முடித்து விடுகிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தினந்தோறும் 5, 6 கேள்விகள் போடுங்கள். எல்லாக் கேள்விகளையும் முடித்துவிடுகிறேன் என்ற வாக்குறுதியைத் தந்திருக்கிறார்கள்.

### (ஆ) திரு. முருகையன் கொலை பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்பெறுதது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜி. முருகையன் அவர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். மேலவையில் அந்தச் சம்பவத்தைப்பற்றி விவாதித்திருக்கிறார்கள். இங்கே அதுபற்றி எழுத்து மூலமாகத் தீர்மானம் தந்தும் அதை அனுமதிக்காததற்கான இரகசியம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலவையில் அனுமதித்தால் இங்கும் அனுமதிக்க வேண்டுமென்ற விதி ஏதாவது இருந்தால் அதைச் சுட்டிக் காட்டுங்கள். இந்த அவையைப் பொறுத்தவரையில் எது முக்கியம், எது அவசியம் என்று நான் கருதுகிறேனோ அதை எடுத்துக் கொள்வதும் மற்றதைத் தள்ளி விடுவதும் மரபாக இருக்கிறது. உறுப்பினர் முக்கியமான பிரச்சனை என்று கருதக்கூடிய ஒன்று எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றால் என்னுடைய அறையில் வந்து அதன் முக்கியத்துவத்தை எடுத்துச்சொல்லி, என்னுடைய பதிலைத் தெரிந்துகொள்ள வேண்டுமே அல்லாமல் அதுபற்றி இந்த அவையிலே கேட்கக்கூடாது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, நேற்றே நான் கேட்டேன். கேட்காமலில்லை. மேலவை என்பது தமிழ்நாட்டுக்குள்ளேதான் இருக்கிறது. முதலமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார் ஒரே சுவருக்குள்ளே.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, நேற்றையதினம் சென்னையில் இருக்கிற பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அந்தப் பிரச்சனைக்கு வருகிறேன். அதற்குள் நீங்கள் அவசரப்பட வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் மேலவையில் பதில் சொன்னதைப்பற்றிச் சொன்னார்கள், மேலவையில் ஒரு தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் மேலவைத்

தலைவரின் விருப்பத்தைப் பொறுத்தது. அது அவருடைய உரிமை. அதில் நான் தலையிட முடியாது. இங்கே பல வாய்ப்புகள் இருக்கின்றன. இது சம்பந்தப்பட்ட பிரச்சனைகளையும் அதில் பேச வாய்ப்பு இருக்கிறது. ஆனால் மேலவையில் இங்கே இருக்கின்ற பல வாய்ப்புகள் இல்லை. ஆகவே உங்களுடைய சந்தேகத்தை என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள், உங்கள் பிரச்சனையை கொஞ்சம் பொறுத்திருந்து கேளுங்கள்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மேலவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொண்ட தீர்மானத்தை இங்கேயும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு வரவேண்டிய அவசியம் இல்லை என்று தாங்கள் சொன்னாலும் கூட, நேற்றைய தினம் இந்த அவையிலே சொல்லும்போது பிரச்சனையின் முக்கியத்துவத்தைக் கருதி, நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்திற்கு வர நாளாகும் என்ற நிலை இருக்குமானால் பிரச்சனையின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் பரிசிலிக்கப்படும் என்று தெரிவித்தீர்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார் என்ற பிரச்சனை ஒரு சாதாரணமான பிரச்சனை அல்ல. இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டிய முக்கியமான பிரச்சனை அது. அதை இங்கே எடுத்துக்கொள்வதில் காலம் தாழ்த்தப்படுமானால், அது உரிய கவனத்தைப் பெற முடியாமல் போய்விடுமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஆகவேதான் சந்தேகத்திற்கு இடமில்லாமல் அந்தப் பிரச்சனையைத் தெளிவுபடுத்தவேண்டும் என்பதற்காக ஒரு தீர்மானத்தைத் தந்திருக்கிறப்போது. அந்த நோக்கம் ஈடேறும் வகையில் சந்தேகத்திற்கு இடமில்லாமல், அந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று என்னுடைய தீர்ப்பைச் சொல்வதற்கு முன்னால் அவை முன்னவரவர்கள் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். ஆளுநர் உரையிலே அந்தப் பிரச்சனைக்கு முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது. அதில் பொதுவிவாதம் நடந்துகொண்டிருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர் முருகையன் படுகொலை செய்யப்பட்டதை ஆளுநர் உரையிலே முக்கியத்துவம் தந்து, தன்னுடைய வருத்தத்தையும் ஆளுநர் தெரிவித்திருக்கிறார். அதையொட்டி பல உறுப்பினர்கள் பேச வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அவை முன்னவர் அளித்த விளக்கத்திற்குப் பிறகு அதை ஏற்றுக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளவில்லையே தவிர, இதில் சந்தேகப்படுவதற்கு இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தாங்கள் சொல்கின்ற பதிலை ஒரு விதத்தில் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் இந்தப் பிரச்சினையினுடைய முக்கியத்துவத்தைத் தாங்கள் தனியாகக் கருத வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி நீங்கள் அதைத் தனியாக கவனிக்கின்ற வகையில் முக்கியத்துவம் தர முடியாத நிலைமை தங்களுக்கு இருக்குமேயானால் நாட்டு மக்கள் இதனை வேறுவிதமாக சந்தேகமாகக் கருதக்கூடிய நிலை இருக்கிறது. இந்த வழக்கு பற்றியும் மக்கள் வேறுவிதமாகக் கருதக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, இதனைப்பற்றி முழுமையாக அறிந்துக் கொள்ள வாய்ப்பில்லாமல் போய்விடும். ஆகவே, அந்த வாய்ப்பினைத் தருவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த விஷயம் சம்பந்தமாக ஆளுநர் உரையிலே வருவதால் அதிலே பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்கிறீர்கள். இது பேசுவதற்கு வாய்ப்பு கேட்பது என்கின்ற பிரச்சினை அல்ல. இது ரொம்ப சென்சிட்டிவ் ப்ராப்ளம். மாண்புமிகு எதிர்கட்சித் துணைத் தலைவரவர்கள்கூட இது ரொம்ப முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் என்றார்கள். இது சென்சிட்டிவ் ப்ராப்ளம். ஒரு பார்ட்டி லீடர், ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கொலையுண்டது பற்றிய விவகாரம். குறிப்பாக எல்லையர் ஹரிஜன் கம்யூனிட்டி பற்றிய விவகாரம். அப்படிப்பட்ட ஒரு இஷ்யூ இது. ஆகவே காம்பென் சேஷனாக ஆளுநர் உரையிலே பேசிக்கொள்ளலாம் என்று சொல்வது நல்லதல்ல. ஒரு அச்சம் இருக்கிறது. அதாவது இந்த வழக்கு திசை திரும்பி போய்விடுமோ என்கிற அச்சம் சபையிலே வந்திருக்கிறது. ஆகவே இது இம்மீடியட் இன்டர்வென்ஷன் பண்ணிச் செய்ய வேண்டிய காரியம்.

ஆளுநர் உரையிலே பேசுவதற்கு வாய்ப்பு தந்து அதன் பிறகு அதற்கு பதில் சொல்லி முடிப்பதற்குரிய காலம் கடந்து நின்ற பிரச்னை அல்ல, லோக் சபையிலே ப்ரெசிடென்ட் உரை இருக்கின்றபோதும் நோ கான்பிடன்ஸ் மோஷன் எடுத்துக் கொள்ளப்பட்டு விவாதம் நடந்து கொண்டிருக்கிறபோதும் இந்த மாதிரி விஷயத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பிரச்சினை அங்கே நிச்சயமாக வரப்போகிறது. ஏனென்றால் அவர் பாராளுமன்ற உறுப்பினர். அங்கே நிச்சயமாக பிரச்சினை வரும். இது சப்-ஜுடிஸ் விஷயம் அல்ல. இம்மீடியட் இன்டர்வென்ஷன், தேவையான ஒன்று.

ஆளுநர் உரை மீது விவாதம் என்பதோ 9-ம் தேதி அன்று தொடங்கி 21 வரை கூட நடக்கலாம். ஆனால் அதற்குள் வழக்கு மன்றத்திலே நிலைமை வேறு விதமாகப் போய்விடக் கூடும். லாஸ்ட் டைம் கூட இது போன்ற ஒரு விஷயத்தில் கேஸையே வித்ட்ரா பண்ணி விட்டார்கள். ஆகவேதான் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து தனியாக ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[1979 பிப்ரவரி 14

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் தங்கள் எண்ணங்களையும், அவர்களுடைய பிரதிபலிப்பையும் இங்கே சொல்ல முடியும். ஆனால் அங்கே வழக்கு மன்றத்திலே திசை திரும்பி வேறு பக்கத்திலே போய் விடும் என்று சொல்லப்படுவது பற்றி நான் எதுவும் சொல்ல முடியாது. ஏனென்றால் அது என்னுடைய தலைமையிலே இயங்குவதல்ல. நான் சொல்வது என்னவென்றால் இதற்கு ஆளுநர் உரையிலே தனி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிக்கின்ற காரணத்தால் அதுபற்றி உறுப்பினர்கள் பேசுகின்ற ஒரு வாய்ப்பினைப் பெற்றிருக்கின்ற காரணத்தால் தனியாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையா என்று கருதுகிறேன். அப்படித் தனியாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருவதால் அதற்கு தனிச் சிறப்பு இருக்கும் என்று நான் கருதாத காரணத்தால் இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டு விடுகிறேன். முக்கியத்துவம் இல்லை என்று நான் சொல்லவில்லை. நான் இந்தப் பிரச்சினையை ஆளுநர் உரையிலே சொல்லி இருப்பதாகச் சொல்லி இருக்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இதனுடைய முக்கியத்துவத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். ஆளுநர் உரையிலே இது சம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே பொது விவாதம் இருக்கிறது என்பதெல்லாம் வேறு விஷயம். ஆனால் இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில் எந்தெந்த வகையில் குற்றவாளிகள் மறைக்கப்படுகிறார்கள் என்றெல்லாம் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்படி பல விஷயங்கள் இருக்கின்றன. ஆகவே, இதுபற்றி ஆளுநர் உரையிலே பேசிக் கொள்ளலாம் என்று கருதுவது சரியல்ல. ஆகவே, தலைவருடைய தீர்ப்பை மாற்றி உடனடியாக அந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதே சரியாக இருக்கும் என்று எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இது எல்லோருக்கும் மிக முக்கியமான காரியமாக இருப்பதால் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் ஏற்கெனவே ஒரு முடிவு எடுத்திருந்தாலும் அதனை மறுபரிசீலனை செய்து ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டு விவாதிப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10.40]

திரு. து. இராமசாமி ; தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி சார்பில் உங்களது தீர்ப்பை மறுபரிசிலனை செய்து இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



[1979 பிப்ரவரி 14]

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை உடனடியாக எடுத்துக் கொண்டு விவாதிக்கவேண்டுமா இல்லையா என்பது பிரச்சினை அல்ல. இது ஏற்கெனவே கவர்னர் அவர்கள் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. விவாதிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அமைச்சர் அவர்கள் பதில் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்ற நிலை இருந்தாலும் முக்கியமாக நாட்டில் நடந்துவிட்ட ஒரு கோரமான பிரச்சினைபற்றி இந்த அவை உடனடியாகக் கவனம் செலுத்துகிறதா இல்லையா என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நாட்டு மக்கள் எதிர்பார்க்கிற ஒரு பிரச்சினைபற்றி—இந்தப் பேரவை உறுப்பினர்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற நிலை நமக்கு வரவேண்டாம் ஆகவேதான் இதை வலியுறுத்துகிற வகையில் தீர்மான கொடுத்திருக்கிறோம் என்பதை நான் சொல்லிக் கொண்டு ஆகவே இதைத் தலைவர் அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிற அதே நேரத்தில் இன்னொன்று, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள், இந்த அவையைப் பொறுத்த வரையில்— தினந்தோறும் பத்திரிகைகளில் பார்க்கிறோம்,—முதல் அமைச்சர் அவர்கள் மேலவையில் பேசுகிறார்கள் என்று பத்திரிகைகளில் வருகிறது.........................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினைபற்றிப் பேசுங்கள், அடுத்தது வேண்டாம்.

திரு. கே. கந்தசாமி : தலைவர் அவர்களே, பார்வேர்ட் பிளாக் கட்சி சார்பாக, அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் வேண்டு கோள்படி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முருகையன் அவர்கள் கொலை சம்பந்தமாக, அது மிகவும் அவசரமும் பொது முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கிற காரணத்தால் அவை அறிய விடுவது என்று மட்டுமல்லாமல் நாட்டு மக்களுக்கும் அதன் முக்கியத்துவத்தை உணர்த்தவேண்டுமென்ற வகையில் அதை எடுத்து அதற்கு முக்கியத்துவம் கொடுத்து உத்தரவு போடுமாறு அதனை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. எம். ஏ. லத்தீப் எழுந்தார்.)

THE HON. THIRU K. MONOHARAN: I am on my legs please. I am not yielding. My dear Bhai, please sit down.

அவைத் தலைவர் அவர்களே, அண்மையில் படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முருகையன் அவர்களின் பயங்கரமான அந்த நிகழ்ச்சி பற்றி இந்த அவையில் விவாதிக்கவேண்டும் என்றும் அதனுடைய முக்கியத்துவத்தை இந்த அவை உணர்ந்திருக்கிறது என்பதை ஊர் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்கும் மேலவையில் இதுகுறித்து விவாதம் நடந்துவிட்ட பிறகு இந்த அவையில் அந்த விவாதத்தைத்

தொடங்குவதற்கு என்ன தயக்கம் என்றும் அப்படி ஒரு விவாதம் நடைபெறாமல் போனால் வழக்கை திசை திருப்புவதற்கேற்ற வழிவகை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தைத் தெரிவிக்கிற வகையிலும் இங்கு கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. என்னைப் பொறுத்தவரையில் மேலவையில் நமது முதல் அமைச்சர் அவர்கள் அழுந்தந் திருத்தமாகவும் திட்டவட்டமாகவும் தெரிவித்ததைப் போலவும் இந்த அவையின் அனுமதியோடு நான் ஆளுநர் அவர்களுடைய உரையின் ஒரு பகுதியை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்:—

'குறிப்பாக, நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முருகையன் அவர்கள், படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி மெத்த வேதனையைத் தருகிறது. கொலைக்குக் காரணமானவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்பதை உறுதியாகக் குறிப்பிட விரும்புகிறேன். காட்டுமிராண்டித்தனமான இந்தக் கொலை வெறியை வன்மையாகக் கண்டிக்கிறேன். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவோ, மொழி, சாதி, மதம் காரணமாகவோ தமிழகம் அமைதி இழக்காத அளவிற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி, மனம் திறந்து விவாதித்து, ஏற்புடைத்தான நல்ல சூழ்நிலையை உருவாக்க முயற்சிக்க வேண்டும் என மக்களின் பிரதிநிதிகளாகிய உங்களை விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.'' என்று ஆளுநர் அவர்கள் உறுதி தெரிவித்திருக்கிறார்கள். நேற்று இந்தப் பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்கள் எழுப்பியபோது நான் சொன்ன பதிலும் அதுதான். மேலும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். எந்த அளவிற்கு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களுக்கும் இதிலே அதிகமான அக்கறை இருக்கிறதோ அந்த அளவிற்கு அக்கறை குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டனை வழங்குவதில் இந்த அரசுக்கும் இருக்கிறது என்பதை நான் வலியுறுத்தி இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆகையால் நான் விரும்பிக் கேட்டுக்கொள்வது— இங்கே விவாதிப்பதற்கு ஏற்ற வாய்ப்புகள் பல இருக்கிறபோது இப்படி ஒரு விவாதம் இங்கே நடைபெறுவதற்கு வாய்ப்பு தரப்படாத காரணத்தாலே இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்ற தவறான கருத்தை தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது உள்ளத்தில் தேக்கிக்கொள்ள வேண்டாமென்று பணிவன்போடு இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உணர்வுகளை நான் மதிக்கிறேன். நடைபெற்ற கொலை தமிழகத்தில் மட்டுமல்ல, எங்குமே நடைபெறக் கூடாத ஒன்று. பொறுப்புள்ள நாடாளுமன்ற உறுப்பினருக்கு இப்படிப்பட்ட முறையில் ஒரு பாதுகாப்பில்லை என்கின்ற சூழ்நிலை எங்கும் இருக்கக்கூடாது என்பதில் அனைவருக்கும் அக்கறை உண்டு. அந்த அக்கறையில் தான் உங்கள் மத்தியில் பேசிக்கொண்டு இருக்கிறேன். ஆகவே நான் அருள்கூர்ந்து எதிர்க்கட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சர்க்காருக்கு உறுதுணையாக இருங்கள். உங்களுக்கு



அரசு உறுதுணையாக இருக்கட்டும். இரண்டு பேருமாக சேர்ந்து குற்றவாளிகளை கண்டுபிடிப்போம். அவர்களை வழக்கு மன்றத்தின் மூலமாக தண்டனைக்கு அனுப்பி வைப்போம். ஆகவே இதை தனியாக இந்தப் பிரச்சினையை வலியுறுத்தவேண்டாமென்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: அவை முன்னவர் அவர்கள் அளித்திருக்கின்ற விளக்கத்தின் வாசகங்கள் அவையில் நிலைநாட்டப்படுமானால் நாங்கள் வருத்தப்படமாட்டோம், முதல்வர் அவர்களுடைய வாசகங்கள் மூன்று இடங்களில் உள்ளதை குறிப்பிட விரும்புகிறேன். மூன்று இடங்களிலுள்ள வார்த்தைகளுக்கு மாறாக விசாரணை நடைபெறாது என்று பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். முன்னவர் ஆளுநர் அவர்கள் உரையில் இருப்பதை எடுத்துக் காட்டினார்கள். இந்தக் கொலைக்கு காரணமானவர்களை இந்த அரசு விட்டுவைக்காது என்று கூறியிருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் பேசும்போது, குற்றவாளிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். மறுபடியும் இந்தக் குற்றத்திற்குக் காரணமானவர்களை விட்டு வைக்க மாட்டோம் என்று பேசிய பேச்சுக்களை குறித்து தொகுத்துப் பார்த்தால் மூன்று இடங்களில் இருந்தும் காரணமானவர்கள், குற்றவாளிகள், இந்தக் குற்றத்திற்கு உடந்தையாக இருந்தவர்கள் யாரையும் விட்டு வைக்க மாட்டோம் என்று கூறியிருக்கிறார்கள், ஆனால் இன்றைக்கு இந்தக் கொலை சம்பந்தமாக ஒரே ஒருவரை மட்டும் கைது செய்து விட்டு மற்றவர்கள் பாதுகாக்கப்பட்டு வருகிறார்கள் என்கின்ற குற்றச்சாட்டு மக்களால் பேசப்பட்டு வருகிறது. இதில் சம்பந்தப்பட்டவர்கள் ஒருவர் அல்ல பலர் என்கின்ற உண்மையை முன்னவர் அவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். முன்னவர் அவர்கள் ஆளுநர் உரையிலுள்ள வார்த்தைகளைக் காப்பாற்றுகின்ற விதத்தில் பலர் [illegible] என்பதை வலியுறுத்தி சொல்வார்களேயானால், இந்தப் பிரச்சினையில் மற்றவர்களுக்கு இவ்வளவு ஆத்திரம் வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்த கருத்துக்களை மீண்டும் வலியுறுத்துகிறேன். குற்றவாளி ஒருவரா பலரா என்பது விசாரணையில் இருக்கிறது. துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் என்று தெரிய வந்தால், அவர்களையும் இந்த அரசு விட்டு வைக்காது என்பதை மீண்டும் வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தவறு செய்கின்றவர்களை, அல்லது இதற்குக் காரணமாக இருந்தவர்களை இந்த அரசு தப்பிக்க வைக்கின்ற முயற்சியில் ஈடுபடாது என்கின்ற உறுதியை துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் இந்த அரசின் சார்பாகவும், முதலமைச்சர் அவர்களின் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன். தயவு செய்து இதை நம்ப வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : நன்றி நிதி அமைச்சர் அவர்களுக்கு நம்பர் ஒன்று, உள்ளூர் பஞ்சாயத்தார்கள், அதாவது முத்துப் பேட்டை பஞ்சாயத்தார்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினைக்குள் நுழையக் கூடாது........

திரு. மு. அம்பிகாபதி : அந்த விஷயத்தில்தான் விவாதம் தேவை. நீங்கள் சொல்வதை எப்படி நம்ப முடியும்? (குறுக்கீடு)

(திருவாளர்கள் சோ. அழகர்சாமி, கூத்தக்குடி ச. சண்முகம் ஆகியோர் எழுந்திருந்தார்கள்)

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இந்த நிகழ்ச்சியைப் பற்றி இவ்வளவு விளக்கமாகச் சொன்னதற்குப் பிறகு, என்னை நம்புங்கள் என்று சொன்னதற்குப் பிறகும், உங்களை நம்பத் தயாராக இல்லை என்று அம்பிகாபதி அவர்கள் பிடிவாதமாக இருப்பார்களேயானால் அதற்கு நான் குறுக்கே நிற்கத் தயாராக இல்லை, ஆனால் நம்பங்கள் என்று கேட்டுக் கொள்ளும் உரிமையை மட்டும் தயவுசெய்து நீங்கள் பறித்துவிடக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன், இன்னும் சொல்லுகிறேன். என்னை நம்புங்கள், இந்த அரசை நம்புங்கள், யார் தவறு செய்தாலும், தவறு செய் செய்கின்றவர்களை இந்த அரசு விட்டு வைக்காது என்பதை திருப்பித்திருப்பி அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்கிறேன். உங்களுக்கு இருக்கின்ற உணர்ச்சி எனக்கும் இருக்கிறது. ஏனென்றால் 15 ஆண்டு காலமாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கின்ற நான், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு இவ்வித பயங்கர விபத்து ஏற்பட்டிருக்கிறது என்று கருதுகிற நேரத்தில், இயற்கையாகவே அந்த உணர்ச்சி அடிஷனலாக வரும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அம்பிகாபதி அவசரப் பட்டு ஒரு முடிவுக்கு வரவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அதையேதான் திரு. அழகர்சாமி அவர்களுக்கும், திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.50]

நீங்கள் மூவரும்தான் திருப்பித் திருப்பி அதைப்பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே தவிர, மற்றவர்கள் அத்தனை பேரும் என்னுடைய விளக்கத்திலே தங்களுடைய உள்ளத்தை, மன்னிக்க வேண்டும், என்னுடைய இந்த விளக்கத்தைப் பெருமனது கொண்டு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, தயவுசெய்து இதை மேலும் வலியுறுத்தாமல், நாம் எல்லோரும் இந்தப் பிரச்னையில் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றுவோம் என்று மீண்டும் ஒரு முறை கூறிக் கொண்டு அமைகின்றேன்.



## 3. உரிமைப் பிரச்சினைகள்.

### (அ) முதலமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய தினம் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள்.....

(குறுக்கீடு — சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)

நான் வாசிக்க ஆரம்பித்து விட்டேன். அனுமதிக்க முடியாது உட்காருங்கள்.

நேற்றைய தினம் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை எழுப்பினார். ஆளுநர் உரை அன்று சில எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தது குறித்துப் பத்திரிகை நிருபர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த பேட்டியில் குறிப்பிட்ட சில கருத்துக்களைப் பற்றியது இந்த உரிமை மீறல் பிரச்சினை. இப் பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் அவையில் எழுப்பியபோது, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், திரு. சுப்பு அவர்கள் குறிப்பிட்டதுபோல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கவில்லை என்று விளக்கமாகக் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இப்பிரச்சினையில் அவை உரிமை மீறிய செயல் எதுவும் இல்லை என்று தீர்ப்பு அளிக்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தாங்கள் தந்த தீர்ப்புக்கு மறுப்பு அல்ல, தாங்கள் தந்த தீர்ப்பில், 'திரு. சுப்பு அவர்கள் சொன்னதுபோல் முதல் அமைச்சர் பேசவில்லை, கருத்து தெரிவிக்கவில்லை' என்பதுபோல் வாசகம் எழுதியிருக்கிறீர்கள். அது திரு. சுப்பு அவர்கள் கருத்தல்ல. 'மெயில்' பத்திரிகையிலே வந்ததைத் திரு. சுப்பு அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, 'மெயில் பத்திரிகையிலே வந்ததைப்போல்' என்றிருக்க வேண்டும். எனவே, 'திரு. சுப்பு அவர்கள் சொன்னதுபோல்' என்றிருப்பது முறையல்ல.

திரு. க. சுப்பு : நான் 'மெயில்' பத்திரிகையைத் தங்களிடம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'மெயில்' பத்திரிகையை என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். அதைத்தான் நானும் சொல்கிறேன்..........

திரு. மு. கருணாநிதி : தங்கள் தீர்ப்பிலேதான் சந்தேகம் எழுகிறது. எனவே மீண்டும் ஒருமுறை படித்தால் நலமாக இருக்கும்,

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: நேற்றைய தினம் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை எழுப்பினார். ஆளுநர் உரை அன்று சில எதிர்க் கட்சிகள் வெளிநடப்புச் செய்தது குறித்துப் பத்திரிகை நிருபர் களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த பேட்டியில் குறிப்பிட்ட சில கருத்துக்களைப் பற்றியது இந்த உரிமை மீறல் பிரச்சினை. இப்பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் அவையில் எழுப்பியபோது மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், திரு. சுப்பு அவர்கள் குறிப்பிட்டதுபோல மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கவில்லை என்று விளக்கமாகக் குறிப்பிட்டார்கள்.

<u>திரு. மு. கருணாநிதி</u>: தலைவர் அவர்களே, இப்போது நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எழுப்பிய சந்தேகம் வலுவடை கிறது. திரு. சுப்பு அவர்கள் மெயில் பத்திரிகையிலே வந்த கருத் தைத் தெரிவித்திருக்கிறார்கள். அது சுப்பு கருத்தல்ல. மெயில் பத்திரிகையிலே வந்ததைப்போல்' என்றிருக்க வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: திரு. க. சுப்பு சொல்கிறார்: 'The s tement that the present rulin party staged a w lk out when it was in the opposition b ycotting the Governor's Add- ress was far fr m the truth. Never did it stage such a walk out in the Assembly. To make things worse the Chief Minister has also stat d tha ch ppals were thr wn at AIADMK benches when they walked out by the then ruling party.' என்றுதான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நான் படித்தேன்,

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்</u>: பேரவைத் தலைவர் அவர்களே, இது பெரிய விவாதத்திற்குரிய பிரச்சனை அல்ல. கொஞ்சம் தெளிவு ஏற்படுத்துவதற்காக ஒரு சொற்றொடரை அதிலே இணைத்துக் கொள்ளலாம். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னது போல் மாற்றிவிட்டால் பிரச்சினை முடிந்துவிடும். நீங்கள் படிக்க, அவர்கள் விளக்கம் சொல்ல, அதற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்ல, பிறகு நான் எழுந்து பதில் சொல்ல என்ற நிலை வேண் டாம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: சுப்பு அவர்கள் மெயில் பத்திரிகையில்......

<u>திரு. மு. கருணாநிதி</u>: "மெயில் பத்திரிகையில் வந்திருப் பதாக சுப்பு அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள இந்த வாசகங்களை" என்று இருந்தால் சரியாக இருக்கும்.





<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: சுப்பு அவர்கள் சுட்டிக் காட்டிய மெயில் பத்திரிகையில் பிரசுரித்துள்ள வாசகங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கவில்லை.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு இப்பிரச்சினையில் அவை உரிமைமீறிய செயல் எதுவும் இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

## (ஆ) மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மீது

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: திரு. சுப்பு அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமைப் பிரச்சினை ஒன்றைக் கொண்டு வர அனுமதி கேட்டுள்ளார்கள். அப்பிரச்சினை குறித்து அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.

Thiru K. SUPPU: Mr. Speaker, Sir, under rule 184 of the Assembly Rules, I am giving Notice to raise the following matter of privilege against the Hon. Minister for Health, viz.

"On 12-9-1978 the Hon. Minister for Health gave reply to Question No. 173 on the floor of the Assembly. In this reply, the Hon Minister has specifically admitted the fact to the effect that one Dr. Udhayashankar has cheated the Director of Medical Education and also the Government of Tamil Nadu by suppressing certain material particulars for seeking admission to M.D. (Preventive Medicine). He has managed to get appointment as Health officer in Madras Medical college during the period of his studies. He has been drawing a monthly salary and allowances to the tune of Rs. 1,200/- for the said post without attending to the work. The candidate is none-else than the son of an Assistant Director of public Health. When the quession was raised through a starred question, the Hon. Minister admitted the facts and assured the House that action was being taken against the concerned persons. But the fact remains otherwise. The Hon. Minister has led the House to believe that appropriate action would be taken against the persons concerned whereas no such action was taken against them. This will amount to misleading the House and shielding the culprits. Therefore, the matter may be referred to the Committee of Privileges."

<u>மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்</u>: குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விசாரணையில் இருந்து கொண்டிருக்கிறது என்று இப்போதும் இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>; இப்பிரச்சினை குறித்து என்னுடைய தீர்ப்பைப் பின்னால் அறிவிக்கிறேன்.

[1979 பிப்ரவரி 14

திரு. க. சுப்பு : சொல்லி ஆறு மாதம் ஆகிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் பிறகு தீர்ப்பளிக்கிறேன் என்று சொன்ன பிறகு இதுகுறித்து பேசுவது கூடாது.

திரு. ரா. உமாநாத் : தற்போது இரண்டு பிரிவிலேஜ் மோஷன்கள் வந்திருக்கின்றன. நாம் ஒரு பிரிவிலேஜ் மோஷன் கொடுத்திருந்தேன். இன்னும் அது வரக் காணோம். அது காற்றிலே இருக்கிறதா, ஆகாயத்திலே இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது ஆய்வில் இருக்கிறது.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) நக்சல்பாரி கைதிகளை சிறைச் சாலைகளில் இருந்து விடுவிப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 42–வது விதியின் கீழ் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

> ''தமிழகத்தில் சிறைச்சாலைகளில் உள்ள நக்சல்பாரி கைதிகள் அனைவரையும் விடுவிக்கக் கோரி தற்போது கோயம்புத்தூர் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருப்பதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து''

விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று திருவாளர்கள் க. சுப்பு, ரா. உமாநாத், மு. அம்பிகாபதி, ஆர். கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், கு. ரமணி, ரா. மார்க்கபந்து, ப. சந்திரன், ஜே. ஜேம்ஸ், பொ. விஜயராகவன், ஒ, சோ.வேலுச்சாமி ஆகியோர் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.00]

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, நக்சல்பாரி போன்ற அரசியல் கைதிகளை விடுதலை செய்வது பற்றிய பிரச்சினை இது. ஏற்கென்வே இந்த பேரவையிலே 3 முறைகள் இது பற்றி எழுப்பப்பட்டு இருக்கிறது. கடந்த முறைக்கு முந்தைய கூட்டத்திலே கூட எழுப்பப்பட்டபோது 5.1.78 அன்று நம்முடைய ஜெயில் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பதில் கொடுத்திருக்கிறார்கள்.



1979 பிப்ரவரி 14] [திரு க. சுப்பு]

The matter put forth by him will be considered by the Government

என்று சொல்லியிருக்கிறார்கள். கன்ஸிடர் பண்ணுவதற்கு ஒரு ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. ஆனால் அதற்குள் இப்போது நிலைமை மிகவும் மோசமாகி விட்டது.

மற்ற எல்லா மாநிலங்களிலேயும் இப்படிப்பட்ட கைதிகள் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். மேற்கு வங்கத்திலே சிறைத் துறை அமைச்சர் மண்டல் அவர்கள் நேரடியாக அந்தச் சிறைக்குச் சென்று அவர்களோடு பேசி இரண்டு பேர்களை விடுதலை செய்திருக்கிறார்கள், ஆனால் நம்முடைய மாநிலத்திலே அவர்கள் இன்னும் விடுதலை செய்யப்படாமல் இருக்கிறார்கள். நம்முடைய அரசு மக்கள் உரிமைக் கழகத்திற்கு எழுதிய பதிலிலே கூட விடுதலை செய்ய வேண்டிய நேரத்திலே சில பேர்கள் சிறையிலிருந்து தப்ப முயற்சித்தார்கள் அந்தக் காரணத்தால் நிலைமை மேலும் மோசமாகி விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு சிலர் தப்ப முயன்ற காரணத்தால் மற்றவர்களையும் விடுதலை செய்யாமல் வைத்திருப்பது சரியல்ல. அங்கே 61 வயதான அம்மையார் காங்கிரஸ்காரரின் மனைவி ஒருவர் வைக்கப்பட்டிருக்கிறார். வள்ளுவர், நம்பியார், இராசமாணிக்கம், ஆறுமுகம் இப்படி 33 பேர்களை சிறையிலே வைத்து இருக்கிறார்கள். லட்சியத்திற்காக சிறையிலே இருந்து தப்பித்தவர்கள் தான் நேதாஜி அவர்களும் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களும் ஏ. கே. கோபாலன் அவர்களும் நம்முடைய உமாநாத் அவர்கள் கூட சிறையிலே இருந்து தப்பியவர்தான். லட்சியத்திற்காக சிறையை உடைத்துக் கொண்டு வெளியே வந்தவர்கள் தான் அவர்கள் எல்லாம். ஆகவே அவர்களோடு அவர்களுடைய கருத்தோடு கருத்தை மோத விடுவதற்குப் பதில் அவர்களைச் சிறையிலே அடைத்து வைத்துக் கொண்டிருப்பது சரியாகத் தெரியவில்லை. கலியபெருமாள் போன்றவர்கள் ஏற்கெனவே பரோலில் வெளியே வந்தவர்கள் மீண்டும் சிறைக்குள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். சிறையிலே அடைத்து வைக்கப்பட்டிருக்கிறவர்களையெல்லாம் விடுதலை செய்யவேண்டுமென்ற முறையிலே அவர்கள் சிறையிலே உண்ணாவிரதம் இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்கள் சிறையிலே அரசியல் கைதிகளாகவும் நடத்தப்படவில்லை. சாதாரணக் கைதிகளாகவும் நடத்தப்படவில்லை, இரண்டும் கெட்டான் நிலையிலே இவர்கள் இருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது.

அது மட்டுமல்ல, கொள்ளையர்களையேகூட விடுதலை செய்ய வேண்டுமென்று மொரார்ஜி தேசாய் அவர்கள் சொல்லி உத்தரவு போட்டிருக்கிறார்கள். இப்படி அரசியல் கைதிகளாக இருப்பவர்களை விடுதலை செய்யாமல் இருப்பது சரியல்ல, விலைமதிப்பற்ற அந்த உயிர்கள் காக்கப்பட

வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மேலும் அதுபற்றிய தகவல்களைப் பெறுவதற்காக இந்த அவையை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அதே கோரிக்கையைத்தான் நானும் வைக்க விரும்புகிறேன். திரு. ரங்கசாமி அலையஸ் லெனின் என்பவரும் தியாகராசன் என்பவரும் நக்ஸலைட்டுகளாக இருந்தார்கள். அவர்கள் பிறகு சி.பி.எம். ஆக மாறிவிட்டார்கள். அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. அவர்கள் இதற்காக ஒரு ரவுண்ட் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். இப்போது நக்ஸலைட்டாக இருக்கிறவர்களும் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களை விடுதலை செய்யாததற்குக் காரணம் என்று வருகிறபோது அந்தக் காரணங்கள் குறுக்கே நிற்க முடியாது, எஸ்கேப் என்பது திரு. சுப்பு அவர்கள் சொன்னது மாதிரி—அது காரணமாக இருக்க முடியாது. நானும் எஸ்கேப் ஆனவன்தான், 1947 ஆம் ஆண்டிலே கோயம்புத்தூர் ஜெயிலில் இருந்து எஸ்கேப் ஆனேன் : வயலனஸ் சார்ஜஸ் என்மேல் போட்டார்கள், நான் ரயில் பாலத்திற்கு டைனமைட் வைத்ததாகவும் கோல்டன்ராக் போலீஸ் ஸ்டேஷனுக்கு வெடி வைத்ததாகவும், போட்டார்கள். ஆனால் 1952 ஆம் ஆண்டிலே ராஜாஜி அவர்கள் என்னையெல்லாம் விடுதலை செய்தார். (குறுக்கீடு) எப்படி எஸ்கேப் ஆனேன் என்று கேட்கிறார், அதற்கு தலைவர் நேரம் கொடுத்தால் விளக்கத் தயாராக இருக்கிறேன்-நான் இந்த காஸை சாம்பியனைஸ் பண்ணுவதற்கு ஒரு முக்கியமான காரணம் 200 பேர்களை எங்களுடைய தோழர்களை அவர்கள் கொலை செய்திருக்கிறார்கள். ஆகவே எங்களுக்குத்தான் பர்ஸ்ட் கிரிவன்ஸ் இருக்க முடியும், எங்களுடைய பிரஷியஸ் காம்ரேட்ஸை இழந்திருக்கிறோம் என்று சொன்னால் நான் அதிகமாக அதைப்பற்றிச் சொல்ல முடியும். அங்கே மேற்கு வங்காளத்திலே எலக்ஷன் நடந்ததற்குப் பிறகு ஜோதி பாசு அவர்கள் லைப் சென்டன்ஸ் கொடுக்கப் பட்டவர்களையும் சேர்த்துக்கூட விடுதலை கம்பிளிட்டாகச் செய்திருக்கிறார்கள். கருத்தைக் கருத்தோடு விட்டு பேசுவோம். அவர்கள் அபன்ஸ் செய்துவிடாமல் விஜிலண்ட்டாக் இருப்போம். அந்த முறையிலே அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டும். மீண்டும் ஜெயிலுக்குள்ளே பதட்ட நிலை வரக்கூடிய விஷயம் இது. ஆகவே இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' சிறைச்சாலைகளிலே ஏழெட்டு நாட்களாக உண்ணாவிரதம் நடக்கிறது. உண்ணாவிரதம் இருப்பவர்கள், முன்னாலே தாக்கப்பட்டு காயம் அடைந்திருக்கிறார்கள். இதை மனிதாபிமானத்தோடு பரிசீலித்து அவர்களை விடுதலை செய்ய வேண்டும். அவர்களுடைய உண்ணாவிரதத்தை நிறுத்தச் சொல்லி பொறுப்பான அமைச்சர் சிறைச்சாலைக்குச் சென்று கோரிக்கை



விடுத்து, விடுதலை செய்கிறோம் என்று சொல்லியாவது உண்ணாவிரதத்தை நிறுத்தச் சொல்ல வேண்டும். முக்கியமாக இதுவொரு மனிதாபிமானப் பிரச்னை. அவர்கள் நக்சலைட்டுகளாக இருக்கலாம். சி.பி.எம். ஆக இருக்கலாம். சி.பி.ஐ. ஆக இருக்கலாம். அதைப்பற்றிக் கவலையில்லை. பல மாநிலங்களிலேயும் இப்படிப்பட்ட அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த முன் உதாரணத்தை இந்த அரசாங்கம் பின்பற்றிச் சிறைக்குள்ளே உண்ணாவிரதம் இருந்தே சாகக்கூடிய நிலைக்குச் சென்று கொண்டிருப்பவர்களைக் காப்பாற்றும் முறையில் அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்போம் என்று அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கும் வகையில் விவாதத்தை நடத்த இந்த அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

திரு.ப. சந்திரன்: தலைவரவர்களே, சிறைச்சாலையில் நக்சல்பாரிகள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இதே மாமன்றத்தில் பலமுறை ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டு வந்து அவர்களுடைய பிரச்னைகளைச் சொல்லியிருக்கிறோம். நேற்று கூட நம்பியார் என்ற நக்சல்பாரி கைதி பரோலில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார். அவரை நேற்று சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர் தன் தாயாரோடு வந்திருந்தார். அவர்களைப் பார்க்கும் நேரத்தில் இளைஞராக இருக்கிறார். நல்ல அமைதியான நிலையிலே இருக்கிறார். தம் பெற்றோர்கள் செய்த தவறுக்காக அவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலே உள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்வதுபோன்று நமது மாநிலத்திலும் அவர்களுக்கு மன்னிப்பு அளித்து விடுதலை செய்ய வேண்டுமென்று விவாதிப்பதற்காக இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு.ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அரசியல் கைதிகளை நீண்ட காலமாக சிறையில் வைத்திருப்பது உண்மையிலேயே பாராட்டுவதற்குரியதாக இருக்காது. ஜனதா அரசு பொறுப்பேற்றவுடன் இம்மாதிரி அரசியல் கைதிகளை—அன்றையதினம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்று அனைத்து மாநிலங்களுக்கும் ஒரு சர்க்குலர் அனுப்பியிருந்தார்கள். அதன் அடிப்படையில் பல்லாயிரக் கணக்கான அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள். இப்பொழுது இங்கே அடைக்கப்பட்டிருக்கின்ற கைதிகள் நக்சலைட்டுகள் என்ற காரணத்தினால் அவர்கள் வன்முறையில் நம்பிக்கை வைத்திருக்கின்ற காரணத்தினால் அவர்களைத் தொடர்ந்து சிறையில் வைத்திருக்கிறோம் என்ற காரணத்தை அரசாங்கம் கூறக்கூடும். நக்சலைட்டுகள் என்று சொல்லும் பொழுது சிறையில் இருப்பவர்கள் மட்டுமல்ல நக்சலைட்டுகள், பல்வேறு அரசியல் கட்சிகளிலேயும் நக்சலைட்டுகள் இப்பொழுது இருக்கிறார்கள். வன்முறையில் ஈடுபடுபவர்கள் நக்சலைட்டுகள்

மட்டுமல்ல, பல்வேறு அரசியல் கட்சிகளிலேயும் இருப்பவர்கள் இப்போழுது வன்முறையில் ஈடுபடுகிறார்கள் என்பது இந்த அரசாங்கத்திற்கு நன்கு தெரியும். கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களைப் பற்றியெல்லாம் நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். பஸ்ஸையே தீ வைத்துக் கொளுத்தி 10 பேர் சாகடிக்கப்பட்ட நிகழ்ச்சியை. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நக்சல்பாரி கைதிகளைப் பற்றிப் பேசுங்கள், வெளியிலே இருப்பவர்களைப் பற்றி ஏன் பேசுகிறீர்கள்?

திரு. ஜே. ஜேம்ஸ்: பஸ்ஸையே கொளுத்துகின்ற காரியங்களை நிச்சயமாக இன்றைக்கு சிறையிலே உள்ள நக்சல்பாரிகள் செய்திருக்க மாட்டார்கள். ஆகவே, இந்தப் பிரச்னையை அரசாங்கம் மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டும். இப்பொழுது அவர்கள் ஒரு வார காலமாக சிறையில் உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நிலைமை மோசமாக ஆவதற்கு அனுமதிக்காமல் அரசு மறுபரிசீலனை செய்து அவர்களை உடனடியாக விடுதலை செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, அதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். அவர்கள் நக்சல்பாரி கைதிகளைப்பற்றிப் பேசும்பொழுது, 'மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது' என்பதைப் போல டிசம்பர் மாத நிகழ்ச்சிகளைப்பற்றிக் கூறினார்கள். அதைச் சபைக் குறிப்பிலிருந்து தாங்கள் நீக்கிவிட்டீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறிப்பிட்டு எந்தக்கட்சியை பற்றியும் அவர்கள் பேசாததால் இது பிரதான முக்கியம் அல்ல.

திரு. ஒ. சோ. வேலுச்சாமி: பேரவைத் தலைவரவர்களே, இன்று தண்டனை பெற்று பல்வேறு சிறைச்சாலைகளிலே இருக்கும் நக்சல்பாரிகள் அந்தக் குற்றத்தைக் செய்ததாகச் சொல்லப்படுவது தங்களுடைய சொந்த நலன்களுக்காக அல்ல. ஆனால் அந்தக் குற்றங்கள் குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் வந்தாலும், பலாத்காரத்தின்மூலம் சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையிலே் அந்தக் குற்றங்கள் நடைபெற்றிருக்கலாம் என்றாலும்கூட இன்றையதினம் பூட்டோ அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று சொல்லி உலக நாடுகளிலிருக்கும் அத்தனை தலைவர்களும் சொல்கிறார்கள்.



[முற்பகல் 11.10]

இப்படிச் சொல்லும் நேரத்திலே, ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சிக் ாலத்திலே இராஜாஜி அவர்களும் பெருந் தலைவர் காமராஜ் வர்களும் அரசியல் குற்றவாளிகளை அணுகுகின்றபொழுது தை வேறு கண்ணோட்டத்திலே பார்க்க வேண்டுமென்ற டிப்படையிலே நக்சலைட்டுகளை விடுதலை செய்வதற்காக, துபற்றி விவாதிக்க, இந்த அவையின் இதர அலுவல்களை த்தி வைக்கும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Mr. peaker Sir, the following Naxalite prisoners have resorted to hunger rike demanding release, kittan alias Krishnaswamy, convict No.6492, nder section 302 read with 34, 449 and 120 (B) I.P.C. Central prison, oimbatore, Kandaswamy Convict No.88264 Panchalingam alias anjan Convict No. 88265, Tamilarasan alias Ramaswami Convict o. 37011 under section 307 and 224, I.P.C., Vathiar alias aliaperumal, Convict No. 5150 under section 302, I.P.C. Central rison, Vellore. Thimmakali alias Murugan, Convict No. 59507, urai alias Muniraj R.P. No. 9385 under sections 224, 225, 332, 42, 353, 324 and 307 I.P.C. read with 120(B) I.P.C. Central prison iruchi and Radhakrishaan Convict No 60151, under section 302, .P.C. All these prisoners except Remand Prisoner Durai alias Iuniraj were convicted for specific offences under the I.P.C. and hey are serving the sentences. Remand prisoner Durai alias Iuniraj is concerned in Crime No. 866-78 under sections 224, 225, 32, 342, 353, 324 and 307, I.P.C. read with 120(B) I.P.C. They are looked after carefully and the condition of health is eported to be satisfactory. No serious situation prevails because of their hunger strike.

The demands of the Naxalites received earlier were considered by the Government. The most important point whether the Naxalites should be treated as political prisoners has been referred to the Tamil Nadu Prisons Reform Commission and its recommendations are awaited. There is therefore, no need to adjourn this House to discuss this incident.

The present demand is to release them unconditionally as they state that they are detained in the prison unlawfully. They are undergoing imprisonment with reference to the sentences awarded to them by the Court according to law.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] 1979 பிப்ரவரி 14]

(ஆ) பச்சையப்பன் கல்லூரியில் நடந்த வன்முறைச் சம்பவங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: '13-2-1979 அன்று பச்சையப்பன் கல்லூரியில் நடந்த வன்முறைச் சம்பவங்கள் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று, கோரி திரு. துரைமுருகன், திரு. துரை முத்துசாமி, திரு. ஓ. சுப்பிரமணியம், திரு. ப. சந்திரன், திரு. மு. அம்பிகாபதி, திரு. எஸ். இராமலிங்கம், திரு. எம். ஆறுமுகம், திரு. ரா. உமாநாத், திரு. ரா. கிருஷ்ணன், திரு. கு. ரமணி, திரு. என். வரதராசன், திரு. சி. கோவிந்தராசன், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்சுற சொர்ணம் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். முதலில் திரு. துரைமுருகன்.

திரு. எம். ஏ. லத்தீப்: நானும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது காலங்கடந்து வந்தது.

திரு. எம். ஏ. லத்தீப்: இதற்கு முன்னால் அனுமதித்து இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உறுப்பினர் லத்தீப் அவர்களைப்புறக்கணிக்கவேண்டும் என்பதல்ல; அச்சடித்து விட்ட பிறகு சேர்ப்பது சரியில்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: ஏற்கனவே பல தடவை இப்படி நடந்திருக்கிறது. தாங்களும் அனுமதி கொடுத்து அது ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படிக் கொடுத்ததினால் தான் இந்தப் பிரச்சினை. இப்படி இடையிலே இடையிலே கேட்கிற பழக்கத்தை ஏற்படுத்தக் கூடாது என்ற காரணத்தினால் இன்றையிலிருந்து குறிப்பிட்ட நேரத்திலே கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறேன், (குறுக்கீடு) எதிர்கட்சித் தலைவர் சொல்வதைப்போல கடைசி எச்சரிக்கையாக உங்கள் பெயரையும் சேர்த்துக் கொள்கிறேன்.

*திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, நேற்றையதினம் பச்சையப்பன் கல்லூரிக்குள் போலீசாரும் ரௌடிகளும், கள்ளச்சாராயப் பேர்வழிகளும் நுழைந்து காலை 10.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை அந்த இடத்திலே வன்முறையை நடத்தியிருக்கிறார்கள். கண்ணீர் புகை வீசியிருக்கிறார்கள், துப்பாக்கிகளாலே அடித்து இருக்கிறார்கள். அதன் விளைவாக சற்றொப்ப 100 மாணவர்களுக்கு மேல், மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டு, இன்றைக்கு எம்.எம்.சி.யிலும் கே.எம்.சி.யிலும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மேத்ஸ் புரபசர் வீரராகவன் அவர்களும், முனிகிருஷ்ணன், புருஷோத்தமன் என்னும் காமர்ஸ் டிபார்ட்மெண்டு புரபசர்களும், ஹிஸ்டிரி டிபார்ட்மென்டை சேர்ந்த போஜப்பன் என்பவரும், ராஜகோபால், செல்வதுரை என்னும் நான்-டீச்சிங் ஸ்டாப்களும் பலமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள்;



[1979 பிப்ரவரி 14

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகனுக்கு நான் ஏற்கனவே சொன்னேன். இது அனுமதித்த பிறகு சொல்லப்பட வேண்டிய விஷயங்கள், நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதித்த பிறகு என்னென்ன சொல்ல வேண்டுமோ அதை எல்லாம் சொல்கிறீர்கள். அது தேவை இல்லை. இந்தப் பெயர்கள் எல்லாம் தேவையில்லை. நான் அலுவல் நடத்த வேண்டும். நீங்கள் குறிப்பிட்ட பெயர்கள் எல்லாம் சொல்வது சரியில்லை.

திரு. துரை முருகன்: ஆகவே அங்கே இரண்டு கார்கள், 50 சைக்கிள்கள் எரிக்கப்பட்டு அவைகளை எல்லாம் ரோட்டிலே போட்டு கொளுத்தியிருக்கிறார்கள். ஹாஸ்டல் மெஸ்ஸிலே புகுந்து டம்ளர்கள், பிளேட்டுகள் இவைகளை எல்லாம் எடுத்துப் போயிருக்கிறார்கள். பிரின்சிபால் அறைக்குள் சென்று கண்ணாடிகளை உடைத்திருக்கிறார்கள். கெமிஸ்டிரி லாப், பாட்டனி லாப் இவைகள் எல்லாம் தரைமட்டமாக ஆக்கப்பட்டிருக்கின்றன. அந்த இடம் மயான பூமியாக ஆக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு நிலைக்குக் காரணம், இந்த சர்க்கார் மாணவர்கள் நிலைமையிலே மிகவும் மோசமாக இருப்பதுதான். இப்போது இந்தக் கல்லூரியிலும் தியாகராயகல்லூரி, சட்டக்கல்லூரிகளில், இப்பொழுது இந்தக் கல்லூரியிலும் இந்த ரௌடிகளையும் கள்ளச் சாராயம் விற்பவர்களையும் ஆளும் கட்சிக்காரர்கள் துணை கொண்டு இருக்கிறார்கள் என்பதற்குநிறைய ஆதாரம் இருக்கிறது. தேவையான போட்டோக்களும் இருக்கின்றன, அதை நம்முடைய சபாநாயகர் அவர்களுக்குக் காட்டத் தயாராக இருக்கிறேன். இந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவம் குறித்து சபையினுடைய மற்ற அலுவல்களை ஒத்திவைத்து, இது பற்றி பல்வேறு விஷயங்களைப் பேசுவதற்கு அனுமதியளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: தலைவர் அவர்களே, நேற்றையதினம் பச்சையப்பன் கல்லூரியிலே ரௌடிகளும், கேடிகளும் கல்லூரிக்குள் புகுந்து மாணவர்களைத் தாக்கியிருக்கிறார்கள். மாணவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலையினை அறிகின்ற போது சென்னை நகரில் மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை கல்லூரிகளிலும் பதட்டநிலை இருக்கிற காரணத்தினால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் கல்லூரியிலே நேற்றையதினம் நடந்த சம்பவம் மிகவும் வருத்தப்படவேண்டிய சம்பவம். போலீசாரும் தாக்கி இருக்கிறார்கள். குண்டர்களும் தாக்கியிருக்கிறார்கள். யார் அந்தக் குண்டர்கள்? எங்கிருந்து வந்தார்கள்?

இன்றைக்கு மாணவர்கள் கடுமையான முறையில் அடிக்கப்பட்டு, காயம்பட்ட நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள், எம்.சி. இராஜா ஹாஸ்டல், தியாகராயர் கல்லூரி, சட்டக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி என்று தொடர்கிறது. இப்படி மாணவர்களுக்கு எதிராக யுத்த பிரகடனம் செய்வது யார் என்பதைப் பற்றி விவாதிக்க, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு.ப. சந்திரன்: தலைவர் அவர்களே, நேற்றையதினம் பச்சையப்பன் கல்லூரிக்கும் மற்றொரு கல்லூரிக்கும் மாணவர்களிடையே ஏற்பட்ட தகராறில், பச்சையப்பன் கல்லூரியில் பொது மக்கள் நுழைந்து, போலீசாரும் கண்ணீர் புகையைப்பயன்படுத்திய காரணத்தினால் ஏற்பட்ட பதட்டநிலை, மற்ற கல்லூரிகளுக்கும் பரவுகின்ற நிலைமை இருக்கிற காரணத்தினால், அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.20]

திரு. ரா. உமாநாத்: அவைத் தலைவரவர்களே, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டிய அளவிற்கு அவ்வளவு சீரியசான ப்ராப்ளம் இது. அவசரமான பிராப்ளம். நான் சம்பவத்தின் உள்ளே செல்ல விரும்பவில்லை. ஒத்திவைக்க வேண்டிய அளவிற்கு அவசியம் என்ன என்பதற்கு இரண்டு மூன்று ரீசன்ஸ் சொல்ல விரும்புகிறேன். இரண்டு கல்லூரி மாணவர்களிடையே சண்டை, போலீஸ் இன்டர்வீன் செய்தது தட் ஈஸ் டைவர்ஷன், நாட் எ பாக்ட். அதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

போன வருஷம் பஸ் எரித்ததற்காக மாணவர்கள் கைது செய்யப்பட்டு, விடுதலை செய்யப்பட்டு, அவர்கள் மீது ஆக்ஷன் எடுக்க மாட்டேன் என்று சொல்லி விட்டுவிட்டார்கள். இப்போது அவர்கள் மாஜி ஸ்டுடென்ட். முன்பு செய்த குற்றத்திற்காக இப்போது அவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். தட் ஈஸ் தி ஹோல் டிரபிள். முந்தின நாள் அவர்கள் கைது செய்யப் பட்டு இருக்கிறார்கள். அதற்கு மறுநாள் ப்ரொடஸ்ட்.

இரண்டாவதாக, போலீஸ் இன்டர்வென்ஷன். அவர்கள் வெளியே வருகிறார்கள். அந்த நிலைமையில் அந்தப் பகுதியில் 144 தடை இல்லை, போலீஸ் ஆக்ட்படி தடை இல்லை. அன்டர் வாட் அத்தாரிட்டி இதை செய்தார்கள். இது அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டிய முக்கியமான விஷயம். இதை டிஸ்கஸ் செய்ய வேண்டும். கீழ்ப்பாக்கம் போலீஸ் ஸ்டேஷனுக்கு பின்னாலே ஒரு ஹட்மென்ட் இருக்கிறது. அங்கே எப்பொழுதும் சண்டை இருந்து கொண்டு இருக்கும். ஆகவே இப்படிப்பட்ட





சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் சேர்ந்து கொண்டார்கள் என்று சொல்லி போலீஸ் அவர்களை இணைத்துவிடுவது சகஜம், திஸ் ஈஸ் எ டேஞ்சரஸ் திங். டெஸ்டிரக்ஷன் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். 8 மாணவர்கள் சொத்து சேதமாகியிருக்கிறது, 8 ஸ்கூட்டர்கள், ஒரு கார் டெஸ்டிராய் செய்யப்பட்டு இருக்கிறது, மாணவர்களே தங்கள் சொத்தை டெஸ்டிராய் செய்ய மாட்டார்கள். இன்னொரு மோசமான சம்பவம். ஒரு போஸ்ட் கிராஜுவேட் கேர்ல். ஹர் ப்ளோஸ் வாஸ் டார்ன் ஷீ வாஸ் கிவன் ரௌடி எலமென்ட்ஸ். இந்தமாதிரி நடந்து இருக்கிறது. அப்போது மிஸ்டர் பரமகுரு வாஸ் பிரசன்ட் ஆன் தி ஸ்பாட். அவர் அங்கே இருந்தார். அவர் முன்னாலே இந்த சம்பவம் நடந்து இருக்கிறது ஆகவே, இது இத்தகைய சீரியசான விஷயமாக இருப்பதால் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதை இந்த அவையில் விவாதிக்க வேண்டியது அவசியம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு.எம்.ஏ.லத்தீப்: பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் பச்சையப்பன் கல்லூரியில் நடந்த சம்பவங்கள் கவலைப் படக்கூடியதொன்றாகும். கண்டிக்கத் தகுந்த ஒன்றாகும். இந்த அவை உடனடியாக இந்தப் பிரச்னையை விவாதித்து சரியான முடிவு எடுக்கவேண்டிய ஒரு சம்பவம் ஆகும். மாணவர்கள் தாக்கப்படுகிறார்கள். மாணவர்கள் மற்றவர்களை தாக்குகிறார்கள் என்ற பிரச்னை ஒருபுறம் இருந்தாலும் கல்லூரிகளிலே வந்து படிக்கிற மாணவர்களின் படிப்பு இந்த வகையில் பாதிக்கப் படுகிறதே என்கிற கவலை நமக்கு ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது, அடுத்த பிரச்னை, பிரின்சிபால் அனுமதியில்லாமல், போலீஸ்காரர்கள் கல்லூரியில் நுழைந்தார்கள் என்று சொல்லப் படுவது உண்மையா? அப்படி உண்மையாக இருந்தால் அதுவும் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். அரசு முனைந்து செயல்பட்டு இருந்தால் இந்த நிலைமையைத் தவிர்த்து இருக்கலாம். ஒரு கல்லூரி முதல்வரின் அனுமதி இல்லாமல் கல்லூரியில் நுழையும் அளவுக்கு நிலைமைகள் இருக்குமானால் அது வருங்காலத்தில் கல்லூரிகளை மிகவும் பாதிக்கும், இதை அரசு கவனத்தில் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள் போலீஸ்காரர்கள் அதைத் தடுத்தார்கள் என்பது சரியானது அல்ல. மாணவர்கள் என்று சொல்லக்கூடியவர்களும், பொது மக்கள் என்று சொல்லக்கூடியவர்களும் கல்லூரிக்குள் நுழைந்து மாணவர்களின் ஸ்கூட்டர்கள், சைக்கிள்கள் ஆகியவற்றை நொறுக்கியதோடு அல்லாமல், வகுப்பறைகளில் நுழைந்து ஆசிரியர்களையும் தாக்கியிருக்கிறார்கள் என்பது மிகவும் பயங்கரமானதொன்றாகும். வகுப்பறையில் நுழைந்து ஆசிரியர்களைத் தாக்குகிற அளவிற்கு போலீஸ்காரர்கள் செல்வார்களா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. ஆகவே, நான் போலீஸ்

காரர்களைத் தாக்கிப் பேச விரும்பவில்லை. ஆனால் வெளியே இருப்பவர்கள் வகுப்பறைகளுக்குச் சென்று தாக்கியிருக்கிறார்கள் என்றால் யார் அந்த வெளியே இருப்பவர்கள், அவர்களைக் கண்டுபிடிக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டது என்ற பிரச்னையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். கல்விக்காக ஒவ்வொரு ஆண்டும் 200 கோடி ரூபாய் செலவழிக்கிறோம். ஆனால் இப்படி கல்லூரிகள் போலீஸ்காரர்களால் ஆடுவெட்டும் இடமாக மாறுவது, அல்லது குண்டர்களால் வன்முறைச் ஆட்டத்திற்கு பயன்படுத்திக்கொள்ளும் இடமாக மாறுவது, சமயம் பார்த்து கொள்ளை அடிப்பவர்களின் கூடாரமாக மாறுவது, அல்லது பல்வேறு அரசியல் காரணங்களுக்காக கல்லூரிகள் பயன்படுத்தப்படுவது ஆகிய விவகாரங்கள் விவாதிக்கப்பட வேண்டியவைகளாகும். (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லத்தீப், நானும் பொறுத்துப் பொறுத்து பார்த்தேன், நீங்கள் பேசிக்கொண்டே இருந்தால் எப்படி? சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: இதோ முடித்துவிடுகிறேன். தலைவரவர்களே, இது மிகவும் அவசரமும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சனையாக இருக்கிறது. ஆகவே, இதில் மிகப்பெரிய அளவுக்கு இல்லாவிட்டாலும் குறைந்தபட்ச விளக்கங்களையாவது பெற வேண்டும் என்பதற்காக இந்த சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இந்தப் பிரச்சனை பற்றி விவாதிக்க வேண்டும் என்று—சம்பிரதாயத்திற்காக அல்லாமல் உண்மையாகவே அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, 12.2.79 அன்று முற்பகல் சி. கந்தசாமி நாயுடு கல்லூரியின் பி. யு. சி. மாணவர்களான முரளீதரன் மற்றும் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் இடையில் ஏற்பட்ட ஒரு சிறு சண்டையைத் தொடர்ந்து முரளீதரன் பச்சையப்பன் கல்லூரியிலுள்ள சில மாணவர்களின் ஆதரவை வேண்டினார். அவர்களில் சிலரும் கோபாலகிருஷ்ணனை தாக்கும் நோக்கோடு கந்தசாமி நாயுடு கல்லூரிக்கு வந்தனர். கந்தசாமி நாயுடு கல்லூரியில் மாணவர்கள் செயலாளரான திரு. அனந்தகுமார் தலையிட்டு, சமரசத்தை ஏற்படுத்தினார். இருப்பினும், பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த சுமார் 35 மாணவர்கள் அன்றையதினமே சுமார் 15.30 மணிக்கு கந்தசாமி நாயுடு கல்லூரிக்கு சென்றனர், அங்குள்ள போதனா ஊழியர்களை மிகவும் மட்டரகமான வார்த்தைகளால் திட்டுவதில் ஈடுபட்டனர். பின்னர் அவர்கள் அந்த கல்லூரிக்குள் நுழைந்து சோடா பாட்டில்கள், இரும்பு தடிகள், செயின்கள் போன்றவற்றைக் கொண்டு தாக்கி சுமார் ரூ. 1,500 மதிப்பிற்கான சொத்துக்களுக்கு



சேதம் விளைவித்தனர். ஸ்தல காவல்துறையினரும், கண்ட்ரோல் ரூம் பார்டியும் அவ்விடத்திற்கு விரைந்து சென்று, அமைதியை நிலைநாட்டினர். இ.பி.கோ. 147, 148, 448, 337, 427 மற்றும் 324 பிரிவுகளின்கீழ் வழக்கு ஒன்று அண்ணாநகர் காவல் நிலைய குற்ற எண் 124/79-ல் பதிவு செய்யப்பட்டது. பச்சையப்பன் கல்லூரி மாணவர்களான நரசிம்மன், மோகன்குமார், எஸ். மோகன் ராஜ் மற்றும் ராஜுஸ்ரீனிவாஸ் என்ற நால்வரும் கைது செய்யப்பட்டு, பின்னர் 'பெயிலில்' விடப்பட்டனர். மேற்குறிப்பிடப்பட்ட கலவரத்தில் காயமடைந்த கந்தசாமி நாயுடு கல்லூரியின் துப்புரவாளர் கண்ணன் என்பவர் கே.எம்.சி. மருத்துவ மனையில் புறநோயாளியாக சிகிச்சை பெற்றார்.

13-2-79 அன்று, பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் (500) பச்சையப்பன் கல்லூரி மாணவர்களுக்கு எதிராக கந்தசாமி நாயுடு கல்லூரி முதல்வர் எடுத்துள்ள நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகத்தான்-கந்தசாமி நாயுடு கல்லூரிக்கு ஊர்வலமாகச் செல்ல திட்டமிட்டிருந்தனர். பச்சையப்பன் கல்லூரி மாணவர்களால் கலவரம் ஏற்படும் என்று எதிர்பார்த்து 2 செக்ஷன் டி.எஸ்.பி., அரை செக்ஷன் கேஸ் படையோடு பச்சையப்பன் கல்லூரிக்கு எதிரில் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் எவ்வித அசம்பாவிதமும் நடைபெறாமல் தடுக்கும் பொருட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள். சுமார் 11.00 மணியளவில் பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் கல்லூரி காம்பவுண்டை விட்டு வெளியே வந்து, போலீஸ் படையின் மீதும், பொதுமக்களின் மீதும் மற்றும் அவ்வழியாகச் சென்ற வாகனங்களின் மீதும் கற்களையும், சோடா பாட்டில்களையும் மற்றும் சிலவற்றையும்- அவர்கள் அப்படிச் செய்வதற்கான எவ்வித சம்பவமும் நடக்காமலேயே-வீசி எறிந்தனர். இச்செய்தி கிடைத்தவுடன், புளியந்தோப்பு ரேஞ்ச் பொறுப்பிலிருக்கிற செம்பியம் ரேஞ்ச் காவல் துறை உதவி ஆணையாளர் அவர்கள், தன்னுடைய ஆய்வாளர்களோடும், மற்ற போலீஸ் படையோடும் அவ்விடத்திற்கு விரைந்து வந்தார்.

அங்கே பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் சோடாவாட்டர் பாட்டில்களையும் கற்கள் போன்றவற்றையும் கல்லூரியின் மேற்கு பக்கத்தில் ஹாரிங்டன்சாலை-பூந்தமல்லி சாலை சந்திப்பில் கூடியிருந்த மக்களின் மேலும், போலீஸ் படையின் மேலும் மற்றும் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த வாகனங்களின் மீதும் எறிந்து கொண்டு இருந்ததை அவர் கண்டார். அங்கு கூடியிருந்த பொதுமக்களும் பதிலுக்கு கற்களையும் மற்றும் செங்கல்களையும் அந்த மாணவர்கள் கூட்டத்தின் மீது எறிந்தார்கள், காவல்துறை உதவி ஆணையாளர் அவர்கள், சாலையில் போக்குவரத்தினை மாற்றி விட்ட பிறகு, சண்டையில் ஈடுபட்டிருந்த பொதுமக்களையும், மாணவர்களையும் கலைந்து செல்லும்படி எச்சரித்தார். ஆனால் அவர்கள் அவருடைய

[திரு. கி. மனோகரன்] [1979 பிப்ரவரி 14

எச்சரிக்கைக்கு பணிந்து போகாதோடு, தொடர்ந்து கற்களையும் செங்கல்களையும் எறிநதனர். ஆகவே, கூட்டத்தைகலைப்பதற்காக தகுந்த எச்சரிக்கை விடுத்தபிறகு கண்ணீர் புகை குண்டுகளை வெடிக்கும்படி அவர் உத்தரவிட்டார்.

ஆனாலும், அந்த கும்பல் பின் வாங்குகிற அறிகுறிகள் காணப்படவில்லை எனவே-ஸ்தலத்திற்கு மற்றொரு போலீஸ் படையொடு வந்திருந்த வடசென்னை சட்டம்-ஒழுங்கு காவல் துறை துணை ஆணையாளர் அவர்கள் அக்கும்பலை கலைப்பதற்கு -உரிய எச்சரிக்கை விடுத்த பின்னர் மறுபடியும் கண்ணீர்புகை குண்டுகளை வெடிக்கும்படி உத்தரவிட்டார். மொத்தத்தில் 25 கண்ணீர்புகை குண்டுகள் உபயோகிக்கப்பட்டன. பிறகு, மாணவர்கள் கல்லூரி காம்பஸிற்குள் பின்வாங்கிச் சென்றனர்; அப்படி போகும்போதுஅவர்கள் அப்பாவு என்ற ஒரு காவலரையும் (1144) காம்பஸிற்குள் இழுத்துச்சென்று, அவரைதாக்கி அவருக்கு இடது கையில் ரத்தக் காயத்தையும் ஏற்படுத்தினர் அந்த

[முற்பகல் 11·30]

காவலரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டதால், செம்பியம் பகுதி காவல்துறை உதவி ஆணையாளர் அவர்களின் பொறுப்பிலிருந்த காவல் படை, அந்தக் காவலரை காப்பாற்றும் பொருட்டு, கல்லூரி காம்பஸிற்குள் விரைந்து சென்றனர். அதே நேரத்தில், கல்லூரிக்கு வெளியே கூடியிருந்த பொதுமக்கள் கல்லூரியின் சுற்றுச் சுவரைத் தாண்டி குதித்து கல்லூரி காம்பவுண்டிற்குள் நுழைந்து மாணவர்களை கற்களாலும், மற்ற பொருட்களாலும் தாக்கியதோடு, கல்லூரி கட்டிடத்தையும் அங்கிருந்த சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், கார்களையும் தாக்கினர், காவல் படை அந்த ஆபத்திலிருந்த காவலரை காப்பாற்றியதோடு, பொதுமககளையும் கல்லூரியின் காம்பஸிலிருந்து வெளியே துரத்தினர். செம்பியம் பகுதி காவல்துறை உதவி ஆணையாளர் அவர்கள், கல்லூரி காம்பஸிற்குள் கடும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த 41 மாணவர்களையும் 6 விடுதி பணியாளர்களையும் மற்றும் 9 பொதுமக்களையும் 12.30 மணிக்குக் கைது செய்தார்.

கல்லெறி காரணமாக 38 மாணவர்களும், 6 விடுதி பணியாளர்களும், 9 பொதுமக்களும் (எல்லோரும் குற்றவாளிகள்) மற்றும் 14 காவல்துறையினரும (தென்சென்னை சட்டம்-ஒழுங்கு காவல்துறை துணை ஆணையாளர், வடசென்னை சட்டம்-ஒழுங்கு காவல்துறை துணை ஆணையாளர் மற்றும் பெரியமெட் காவல்துறை ஆய்வாளர் உட்பட) காயமடைந்தனர், அவர்கள் அனைவரும் கே.எம்.சி. மருந்துவமனைக்கும் அரசினர் பொது மருத்துவமனைக்கும் சிகிச்சை பெறுவதற்காக அனுப்பப்பட்டனர்.

செம்பியம் பகுதி காவல்துறை உதவி ஆணையாளர் அவர்கள் இ.பி.கோ. 147, 148, 427, 332, 337, 341, 323 மற்றும் 324 ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்கு ஒன்றினை கீழ்ப்பாக்கம் காவல் நிலைய குற்ற எண்.253/79-ல் பதிவு செய்து, அவ்வழக்கினை-



1979 பிப்ரவரி 14] [திரு. கி. மனோகரன்]

புலன் விசாரணைக்காக நகர குற்றப் பிரிவிற்கு மாற்றினார், கைது செய்யப்பட்ட அனைவரும் பின்னர் பெயிலில் விடப்பட்டனர்.

இக்கலவரத்தில், கல்லூரி மரச்சாமான்கள் (ஃபர்னிச்சர்ஸ்), ஜன்னல் கண்ணாடிகள், சைக்கிள்கள் 3 ஸ்கூட்டர்கள் மற்றும் ஒரு கார் ஆகியவை சேதமடைந்தன. மாணவர்களின் கல்விச்சால் பி.டி.சி. மற்றும் காவல்துறை வாகனங்கள் சுமார் 15, சேதமடைந்தன.

நிலைமையை சமாளிப்பதற்காக 15 செக்ஷன் டி.எஸ்.பி-யும் 5 செக்ஷன் ஏ.ஆர்-ம், 4 அரை செக்ஷன்கள், ஒரு முழு செக்ஷன் கேஸும் உபயோகப்படுத்தப்பட்டன. வட, தென் சென்னை சட்டம்-ஒழுங்கு மற்றும் போக்குவரத்துப் பிரிவு காவல்துறை துணை ஆணையாளர்களும், 3 காவல் துறை உதவி ஆணையாளர்களும் 5 ஆய்வாளர்களும் மற்றும் அப்பகுதியின் சட்டம்-ஒழுங்கு காவல்துறையினரும் ஒழுங்கை ஏற்படுத்த உபயோகப்படுத்தப்பட்டனர். சென்னை நகர காவல் துறை ஆணையாளர் அவர்கள் 13.00 மணிக்கு ஸ்தலத்திற்கு வந்து பார்வையிட்டார். 14.30 மணி வரையில் அவ்விடத்திலிருந்து, அங்கு கடமையாற்றிக் கொண்டிருந்த காவல் துறை துணை ஆணையாளர்களுக்கு உத்தரவுகள் பிறப்பித்தார். முழுமையாக சகஜநிலை நிலை நாட்டப்பட்டது.

இச்சம்பவத்தை தொடர்ந்து, பச்சையப்பன் கல்லூரியின் துணை முதல்வர் கல்லூரியை காலவரையின்றி மூடி கல்லூரியின் விடுதியிலிருந்தவர்களை அன்று (13-2-79) 6 மணிக்குள்ளாக காலி செய்யும்படி கூறினார்.

மேற்கொண்டு எவ்வித அசம்பாவித சம்பவங்களும் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு போதிய போலீஸ் பாதுகாப்பு கல்லூரி காம்பஸைச் சுற்றி போடப்பட்டிருக்கிறது.

ஆகவே எழுப்பப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஒட்டிப் பேசும்போது சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு உரிய விளக்கம் வழங்கியதற்குப் பிறகு அவர்கள் அந்தத் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக்கொள்வார்கள் என்று நம்பி அமைகிறேன்.

திரு. துரைமுருகன் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரைமுருகன் பேசிய அத்தனையையும் நீக்குமாறு உத்தரவிடுகிறேன். அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதரஅலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்ற காரணத்தால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) ஊராட்சிகள் (பதவிக்காலத்தை நீட்டித்தல்). திருத்த சட்ட முன்வடிவு. 1979

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை நீட்டித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

(திரு. க. சுப்பு எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றே பேசியாகி விட்டது, உட்காருங்கள். தயவுசெய்து ஒத்துழைக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : ஒத்துழைக்கிறோம், அவர்கள் இந்த பில்லை வாபஸ் வாங்கிக்கொள்ளட்டும். 'பில்'லின் மீது பேசக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் எல்லாம் பேசத் தெரிந்தவர்கள், ஒத்துழைக்க வேண்டும் என்றுதான் கேட்டுக்கொண்டேன். பேசவேண்டும் என்றால் பேசுங்கள்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, பலமுறை ஊராட்சிகளின் ஆயுட்காலம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. குடியரசுத் தலைவர் அவர்கள் ஆட்சியிலிருந்து தொடங்கி இன்னும் அதை விடுவதாகத் தெரியவில்லை. அப்போது சொன்ன காரணம், வாக்காளர்கள் பட்டியல் தயாராக வில்லை என்பதாகும். இப்போது வாக்காளர்கள் பட்டியல் தயாராகிவிட்டது, ஆனால் மழைக்காலம் வந்துவிட்டது என்று சொல்கிறார்கள். இப்போது மழைக் காலம் வரும், பின்னால் வெயில் காலம் வரும், பின்னால் பனிக்காலம் வரும். இப்படி மாறி மாறி வந்து கொண்டிருக்கும். மழைக்காலம் வரும் என்று அன்றைக்கே தெரியாதா? ஏற்கனவே கால நீட்டிப்பு கேட்கும் போது மழைக்காலம் வரும் என்று தெரியாதா? உண்மை அது வல்ல. இப்படி பதவிக் காலத்தினை நீட்டித்துக்கொண்டு போனால் எப்படி ஊராட்சிகள் நல்லமுறையில் இயங்கமுடியும்? இப்படி நீட்டித்துக் கொண்டு போவது நம் ஆயுளுக்கு குறைவு. ஆகவே இந்த மசோதாவை இங்கே கொண்டுவருவதை நான் கடுமையாக எதிர்க்கிறேன்.





திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்த மசோதாவைக் ண்டுவருவதற்கு அமைச்சர் அவர்கள் கூறியுள்ள ணம், மழைக்காலம் வருகிறது, வாகனங்களைப் பயன்படுத்த யில்லாமல் இருக்கிறது; வாக்காளர்கள் மழைக்காலத்தில் ாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் தேர்தல்கள் ்த வாய்ப்பில்லாமல் இருக்கிறது என்ற காரணங்களைச் க்காட்டியிருப்பதைப் பார்க்கும்போது வியப்பாகயிருக்கிறது. தல்கள் நடத்துவதற்கு இப்படிப்பட்ட காரணங்களைக் டுவது முறைதானா? நிச்சயமாக, வேறு அரசியல் காரணங் இருந்தால் அவற்றை மறைத்துவிட்டு காரணம் இல்லாம ய தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டு ாதாவைக் கொண்டு வந்தால் உங்களுக்கு மெஜாரிட்டி ்கிறது, நீங்கள் செய்யலாம். ஆகவே, இதைக் கொண்டு பதற்கான காரணங்களாக, மழைக்காலம் வந்துவிட்டது, ளுக்கு வேளாண்மைத் தொழில் செய்யவேண்டியிருக்கிறது, னங்கள் செல்ல வசதியில்லை என்றெல்லாம் கூறுவது யமாக பொருத்தமாகயில்லை. ஆகவே இந்த மசோதாவை ா எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: மிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக் காலத்தை டித்தல்) திருத்த சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் ்த அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இச்சட்ட முன்வடிவை வைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறி ப்படுத்தப்பெற்றிருக்கிறது.

### (ஆ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை மித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ்நாடு 1979-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் ி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவை வைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இந்த மசோதாவை யும் முன்பு சொன்ன அடிப்படையில் எதிர்க்கிறேன். றியக் குழுக்களில் தனி அதிகாரிகளை நியமித்திருப்பதால் ்நாட்டில் எல்லாயிடங்களிலும் டி.டி.ஒ., பி.டி.ஒ., யூனியன் ஜினியர் என்று மூன்று பேர்கள்தான் நிர்வாகத்தை நடத்து ார்கள்—நிர்வாகத்தில் ஊழல், லஞ்சம் பெருகிவிட்டது.

குற்றச்சாட்டுக்காக நான் இதைச் சொல்லவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் ஸ்டேட் க்ரைம் ப்ராஞ்சை வைத்து ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள நியமனங்கள், நடைபெற்றிருக்கக்கூடிய வேலைகளில் லஞ்சம் ஊழல் பெருகியிருப்பதைக் காண முடியும். அதிகாரிகள் தவறாக நடந்திருக்கிறார்களா என்பதுபற்றி விசாரிக்கட்டும், மனச்சாட்சியோடு நடந்தால் போதும்.

[முற்பகல் 11.40]

எந்த அளவுக்கு அரசியல்வாதிகள் ஒருவருக்கொருவர் பழியை தூற்றிக் கொண்டிருந்தார்களோ, அதைவிட பல மடங்கு இன்றைக்கு அதிகாரிகளிடத்தில் ஊழலும், லஞ்சமும் இருந்து கொண்டிருக்கிறது. ஊழலும் லஞ்சமும் இல்லாத இடமே இல்லே. அந்த அளவுக்கு நிர்வாகமே சீரழிந்து விட்டது. இதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் அளவில், இனி மேலும் தனி அதிகாரிகளுடைய ஆயுள் காலத்தை குறைக்க வேண்டுமே தவிர நீட்டிக்கக் கூடாது என்பதைச் கூறி அமர்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி—

''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :</u> இச் ட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

## 6. ஆளுநர் உரைக்கு நன்றிகூறும் தீர்மானம்-விவாதம்-தொடர்ச்சி.

<u>திரு. எஸ். நடராசன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரை மீது பேசுகின்ற வாய்ப்பினை பயன்படுத்தி சில கருத்துக்களைக் கூறலாம் என்று கருதுகிறேன். சென்ற முறை ஆளுநர் உரையில் காவிரி நதி நீர் பற்றி குறிப்பிட்டு, அண்டை மாநிலங்களுடன் சுமுகமாக பேச்சு வார்த்தை நடத்தி நல்ல தீர்வு காண்போம் என்ற அறிவிப்பு இருந்தது. ஆனால் இந்த முறை அந்த அறிவிப்பைக் காணோம். காவிரியின் கதி என்னவாயிற்று? ஒப்பந்தம் பின்பற்றப்படுமா இல்லையா என்கின்ற கவலையுடன் தஞ்சை மாவட்டத்து மக்கள் மிகுந்த



பரபரப்பான சூழ்நிலையில் இருந்து வருகிறார்கள். தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த ஒரு அமைச்சர் பதவியேற்ற பிறகும் காவிரி நீர் பற்றிய ஒரு கொள்கை குறிப்பு ஆளுநர் உரையில் இல்லாதது வருந்தத் தக்கச் செயலாகும்.

இன்னொன்று, தஞ்சை மாவட்டத்து பெருங்குடி மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை வைத்து இன்று தஞ்சை மாவட்டத்திலுள்ள மக்கள், எல்லா வட்ட தலைநகரங்களிலும் தங்களுடைய கோரிக்கைகளைத் தெரிவிக்கும் வகையில், ஊர்வலங்களையும் மாநாடுகளையும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஆளுநர் உரையில் நெல்லுக்கு நியாயமான விலை கொடுப்பதற்கு தொடர்ந்து முயற்சிகள் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. சென்ற முறை இதே அறிவிப்பு தான் இருந்தது. இப்படி எவ்வளவு காலத்திற்கு தொடர்ந்து முயற்சிகள் செய்து கொண்டிருக்கப் போகிறார்கள் என்பதைப்பற்றி திட்டவட்டமான எந்த முடிவும் இல்லை. இன்று தஞ்சை மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து, அரசு அதிகாரிகள் எந்த விதமான புள்ளிவிவரம் கொடுத்தாலும், விளைச்சல் மிகவும் மோசமாகி பாதகமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. 1976-77 ஆம் ஆண்டில் தண்ணீர் இல்லே, 1977-78 ஆம் ஆண்டில் இயற்கை ஒத்துழைத்தும், காவிரி கரைபுரண்டு ஓடியதின் காரணமாக கிளிக்கூட்டில் உடைப்பு எடுத்து, அதை அடைக்க 40 நாட்கள் எடுத்துக்கொண்டதின் காரணமாக தண்ணீர் வராததின் காரணமாக சரியான பருவ காலத்தில் பால் கட்டுகின்ற காலத்தில் பால் கட்டாமல், நெல் எல்லாம் பதராக விளைச்சலைத் தந்தது. பெருந் தலைவர் காமராஜ் காலத்தில் இதே காவிரியில் உடைப்பு ஏற்பட்டது. பெரும் தலைவர் காமராஜ் அவர்கள், கல்லணையில் முகாமிட்டு, ஒரு வார காலத்திற்குள் அந்த பெரிய உடைப்பை அடைத்து, தஞ்சை மாவட்டத்து மக்களுக்கு நல்வாழ்வு கொடுத்தார். ஆனால் இப்போது உடைப்பை அடைப்பதற்கு 42 நாட்கள் எடுத்துக்கொண்டதால் குறிப்பிட்ட நேரத்தில் தண்ணீர் கிடைக்காமல் சென்ற ஆண்டும் விளைச்சல் இல்லே. இந்த ஆண்டு பருவ மழை பெய்யாத காரணத்தினால் கதிர் வருகின்ற நேரத்தில் பூக்களாகி நெல் எல்லாம் சாவியாகி விட்டது, பொலி அடித்துப் போடுகின்ற இடத்தில் கருக்கல் போட்டிருக்கின்ற இடத்தில் நெல்லைவிட பதர்தான் அதிகமாக இருக்கிறது.

இந்த ஆண்டு ராஜராஜன் என்ற நெல்லை அறிமுகப்படுத்தினார்கள். இதன் மூலம் ஏறக்குறைய 35 முதல் 45 மூட்டைகள் வரை எடுக்கலாம் என்று சொல்லப்பட்டது. அதே நேரத்தில் செலவும் அதிகமாக ஆகியது. மூன்று முறை உரமிட்டு, மூன்று முறை பூச்சி மருந்துகள் அடித்தும், கையில் இருந்த காசை எல்லாம் செலவு செய்தார்கள், கையில் காசு இல்லாதவர்கள், தங்களிடத்திலுள்ள நகைகளை விற்றோ அல்லது அடகு

வைத்தோ விவசாயிகள் செலவு செய்தார்கள், இருந்தும் 1 மூட்டைக்கு மேல் அறுக்க முடியவில்லை. அந்த அளவுக் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கின்றபொழுது தஞ்சை மாவட்ட மக்கள் வரி கொடுக்க வழியில்லை, வக்கில்லை தங்களுடைய தங்க செயின் இருந்த இடத்தில் மஞ்சள் கயிறும் தாலியும்தான் இருக்கிறது. அதுவும் சில இடங்களில் தாலியும் இல்லை. வெறும் மஞ்சள் கயிற்றில் வெறும் மஞ்சள் தான் இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு கேவலமான நிலை விவசாய மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டி காட்ட விரும்புகிறேன். இப்போது எங்களுடைய மாவட்டத் அமைச்சர் இருக்கிறார், அவர் மிகவும் நல்லவர் என்று பெய எடுத்தவர், எங்களுக்கெல்லாம் மிகவும் வேண்டியவர், இ மேலாவது இந்த நிலைமைகளை எல்லாம் போக்குவதற் அமைச்சர் அவர்கள் அக்கறை செலுத்த வேண்டும் என் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சட்டம், அமைதி, ஒழுங்கு என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், நான் வேறு எங்கும் செல்லாமல், தஞ்சை நகரத்திலே நடக்கின்ற நிகழ்ச்சியை மட்டும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குச் சுட்டிக்காட்டினால், மிகவும் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். இந்த மாதம் 5 ஆம் தேதி பர்மா காலனியிலே, திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த 36-வது வட்ட அவைத் தலைவர் சுந்தரம் என்பவர் வீட்டு மனை விற்கும் ஏஜெண்டு ஒருவர் இருக்கிறார். அவரிடம் வீட்டு காலி மனை வேண்டுமென்று சிலர் கேட்டார்கள், வேண்டுமென்றால் அந்த இடத்தைப் பார்க்கலாம் என்கிறார். அவரை ஒரு காரிலே வீட்டு மனையைப் பார்ப்பதற்காக என்று அழைத்துச் சென்றவர்கள், வல்லத்திலே அண்ணன் இருக்கிறார் அவரிடம் சென்று பணம் வாங்கித் தருவதாக அழைத்துச் செல்கிறார்கள். அப்படி அழைத்துச் சென்றவர்கள், வல்லத்தைத் தாண்டி ஒரு காட்டுப் பகுதிக்கு அழைத்துச் செல்கிறார்கள். அங்கே காரை நிறுத்தி, அவர் முகத்திலே குளோரொபாம் என்னும் மயக்க மருந்தை செலுத்த முயற்சித்திருக்கிறார்கள். அவர் அதைத் தட்டி விட்டு, தப்பிக்க முயற்சித்தபோது அவர் கழுத்தில் நைலான் கயிற்றால் சுருக்குப் போட்டிருக்கிறார்கள். அவர் அதையும் சமாளித்துக்கொண்டு காரைவிட்டு கீழே இறங்க முயற்சித்தபோது, அவர் கையையும் காலையும் கட்டி, நீ என்ன பெரிய தலைவனா, பெரிய லீடரா என்றெல்லாம் சொல்லி, அவர் முகத்திலே திராவகத்தை ஊற்றியிருக்கிறார்கள். அப்படி திராவகத்தை ஊற்றியதோடு மட்டுமல்லாமல், காரின் டிக்கியை திறந்து, அதிலே உள்ள பெட்ரோலை ஊற்றச் சொல்லியிருக்கிறார்கள். அந்த சமயமும் சுந்தரம், அவர்களிடமிருந்து தப்ப முயற்சித்திருக்கிறார். அவர்கள் காரை நிறுத்திய இடம் ஒரு ஏரிக்கரை. எனவே, எப்படியாவது தப்பிக்க வேண்டுமென்பதற்காக அப்படியே உருண்டு விழுந்து, ஒரு புதரிலே போய் மறைந்



திருக்கிறார். அந்த நேரத்திலேகூட, சுந்தரம், என்னை விட்டு விடுங்கள், உங்களுக்கு பணம் வேண்டுமானாலும் தந்துவிடுகிறேன். பாங்கியில் 12,000 ரூபாய் இருக்கின்றது என்றும் சொல்லியிருக்கிறார். ஆனால், அவர்கள் எங்களுக்குப் பணம் தேவையில்லை, உன் உயிர்தான் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அவர் கீழே விழுந்து புரண்டு ஓடி மறைந்து விட்டார். இதுகுறித்து வழக்குப் பதிவு செய்தும், இதுவரை அவரை விசாரிக்கவில்லை. அவர் அடிபட்ட, இரத்தக் கறைப்பட்ட சட்டையை வைத்திருக்கிறார். அதையும் வாங்கிச் செல்லவில்லை. நான் எப்போதாவது போய்ப் பார்க்கின்ற நேரத்தில் எல்லாம், என்னிடம் வெள்ளை உடுப்பு போட்டுக்கொண்டு போலீசார் வருகின்றார்களே தவிர, எந்தவிதமான விசாரணையும், வாக்கு மூலமும் வாங்கிச் செல்லவில்லை என்று சொல்கிறார்.

அடுத்து, தஞ்சையிலே கீழவாசல் என்ற ஒரு பகுதி இருக்கிறது அந்தப் பகுதியிலே உள்ள பெண்களை கேலி செய்வதாகவும், கிண்டல் செய்வதாகவும் காவல்துறைக்கு புகார் மனு வருகிறது. அதையடுத்து, காவல்துறையைச் சேர்ந்தவர்கள் ஒரு வேனை எடுத்துக்கொண்டு அங்கே வருகிறார்கள். சிலரைக் கைது செய்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டுபோய் விசாரிக்கிறார்கள். அந்த நேரத்திலே அவர்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். இதைப்பற்றி உள்ளூர் பிரமுகர்களிடம் கையிலே பச்சைக் குத்திக்கொள்வது எதற்காக என்று கேட்கிறார்கள். அவர்கள், அதைப் போய்க் காட்டு, இல்லாவிட்டால் உங்கள் கைவரிசையைக் காட்டுங்கள் என்று சொல்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்கு நேராகச் சென்று அங்குள்ள ரெக்கார்டுகள் எல்லாம் கிழித்தெறியப்படுகின்றன, அவைகளைக் கொண்டுபோய் கிணற்றிலே போடக்கூடிய ஒரு நிலைமை இருக்கின்றது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அது மாத்திரமல்ல. இப்படியெல்லாம் செய்தால் காவல் துறையினர் சும்மா இருப்பார்களா? அவர்கள் ஆத்திரத்தை வேறு எங்காவது காட்ட வேண்டும் அல்லவா? மாஜிஸ்திரேட் கோர்ட்டிலே தேடப்பட்டு வந்த ஒருவர் அவராகவே அங்கு வந்து சேருகிறார். அவரை போலீசார் கோர்ட்டுக்குள்ளேயே அடிக்கின்றார்கள். இப்படியெல்லாம் நிலைமை இருக்கின்றது. ஆனால் சட்டம், அமைதி ஒழுங்கை நிலைநாட்டுவதாகச் சொல்கிறார்கள்.

இன்னொன்று, தஞ்சை மகாராஜா சரபோஜி கல்லூரி மாணவர்கள் தேர்தல் நடக்கிறது. அந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், தோல்வியுற்ற மாணவர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டு, கத்திக் குத்து சம்பவம் நடக்கிறது. அந்தச் சம்பவத்தையொட்டி, கல்லூரி முதல்வர் ஏறத்தாழ 20 பேர்களை சஸ்பெண்ட் செய்கிறார். அவர்களுடைய பெற்றோர்கள் இப்படிச் செய்தால், அவர்கள் வாழ்க்கை பாழாகி

விடுமே என்றும், எனவே மன்னித்து விடுங்கள் என்றும் கேட்கிறார்கள். எனவே, அதன்மேல் கல்லூரி முதல்வர் அபராதம் விதித்து, அவர்களை மீண்டும் கல்லூரியில் சேர உத்தரவிடுகிறார்.

[முற்பகல் 11.50]

அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த எனக்குமா அபராதம் என்று அந்த மாணவர் தலைவர் கல்லூரி முதல்வர் அறைக்குச் சென்று நாற்காலிகளை, கண்ணாடிகளை, ஜன்னல்களை உடைத்து கல்லூரி முதல்வரையும் தாக்க முயற்சித்தபோது அங்கு இருந்தவர்களால் அந்த முதல்வர் காப்பாற்றப்பட்டிருக்கிறார். அதற்குப் பிறகும் அந்த மாணவரைக் கல்லூரியில் சேர்க்க வேண்டுமென்று வாதிடுகிறார்கள். இங்கிருந்து தொலைபேசி மூலமெல்லாம் சொல்லப்படுகிறது. இதற்கெல்லாம் ஆதாரம் எங்கே என்று கேட்டால் தொலைபேசி மூலம் சொன்னதற்கு ஆதாரம் எப்படிச் சொல்ல முடியும்? அந்தக் கல்லூரி முதல்வர் கட்டாய விடுப்பு எடுத்துக் கொண்டு போகும்படி உத்தரவிடப்படுகிறார்.

நகராட்சித் தேர்தல்கள் நடைபெறும் அறிகுறி இல்லை. நான் சென்ற முறை ஆளுநர் உரையின் போதே குறிப்பிட்டேன்—மதுரை மக்கள் மட்டும் என்ன கொடுத்து வைத்தவர்கள், மற்றவர்கள் என்ன பாவம் செய்தார்கள் என்று சொன்னேன். ஏன் இதுவரை நகராட்சித் தேர்தல்களை நடத்தவில்லை? விரைவில் என்பதற்கு உங்களுடைய அகராதியில் என்ன கால அவகாசம் என்று கேட்டேன்.

இவ்வளவு அக்கிரமங்கள் எங்கே நடக்கிறது? தஞ்சையில் நடக்கிறது. இன்னும் சில மாதங்களில் தஞ்சை மக்களைப் பார்த்து வாக்குக் கேட்கிற நிலையில் ஆட்சியாளர்கள் இருக்கக் கூடிய நிலையில் அங்கேயே இப்படிப்பட்ட சில காரியங்கள் நடைபெறுகின்றன என்று சொன்னால் மற்ற இடங்களில் எப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறும் என்று நம்மால் ஊகிக்க முடிகிறது.

உளி சம்பவம் பற்றிச் சொன்னார்கள். நான் நேரில் கண்ணாடியைப் பார்த்தேன். இந்திய அரசின் சார்பில் அனுப்பி ஒலிம்பிக்கில் தங்க மெடல் வாங்கவேண்டுமென்று சொன்னால் இந்த ஆளிடம் துப்பாக்கியைக் கொடுத்து அனுப்பினால் நிச்சயமாக தங்க மெடல் கிடைக்கும். அந்த அளவுக்கு குறிபார்த்து தலைவர் தலைக்கு நேராக உளியை வீசியிருக்கிறான். அவனைப் போய் பைத்தியக்காரன் என்று பரிசோதித்துச் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட ஆட்சி நடக்கிறது. எங்கு பார்த்தாலும் சண்டை, எங்கு பார்த்தாலும் ஊழல், நிர்வாகத்தில் தலையீடு. இம் மாதிரி ஆட்சி நடைபெறுவது இந்த நாட்டுக்கு நல்லதல்ல என்று கூறி பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.





<u>திரு. அ. க. அரங்கநாதன் :</u> துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகிற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்டு 20 மாதங்கள் ஆகின்றன. இந்த 20 மாதங்களிலே உணவுத் துறையில் பல்வேறு திட்டங்களை புரட்சித் தலைவர் அரசு கொண்டு வந்திருக்கிறது. குறிப்பாக, விவசாயிகளுக்கு நெல் விலை குவிண்டாலுக்கு 78 ரூபாய் என்று கொடுத்து வந்ததை, அவர்களுக்கு உற்பத்திச் செலவு அதிகமாகிற காரணத்தால் மேலும் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு 85 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இருந்தாலும் அது உற்பத்திச் செலவினங்களுக்கு ஏற்ற வகையில் இல்லையென்ற காரணத்தால் மீண்டும் மத்திய அரசோடு போராடி விவசாயப் பெருமக்களுக்கு மேலும் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து இன்றைக்கு புரட்சித் தலைவர் அரசு மத்திய அரசோடு போராடிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு உணவுத் துறையில் கட்டுப்பாடு இல்லை, தட்டுப்பாடு இல்லை, தடை இல்லை. எங்கு வேண்டுமானாலும் அரிசி நெல் எடுத்துச் செல்லுகிற அளவுக்கு இன்றைக்கு உற்பத்தி பெருகியிருக்கிறது. ஏழை எளிய மக்கள் வாங்கும் சக்திக்கேற்ப ஒரு கிலோ அரிசி ரூ. 1.60-க்கு கிடைக்கிறது, ரூ. 1.70க்கு கிடைக்கிறது. மிஞ்சினால் ரூ. 1.80க்கு கிடைக்கிறது. அந்த அளவுக்கு மக்கள் வாங்கக்கூடிய அளவுக்கு அரிசி விலை இருக்கிறது. அரிசி விலையாக இருந்தாலும், பருப்பின் விலையாக இருந்தாலும், மிளகாய் விலையாக இருந்தாலும், தனியா விலையாக இருந்தாலும், எண்ணெய் விலையாக இருந்தாலும் இந்த 20 மாத காலத்தில் நிலையான கட்டுப்பாட்டுக்குள் வைத்து புரட்சித் தலைவர் ஆட்சி செயல்பட்டு வருகிறது. ஒருமுறை எண்ணெய் விலை ஏறியது. புரட்சித் தலைவர் அவர்கள் தலையில் தட்டி விலையைக் குறைத்தார்கள். புளி விலை கிலோ 16 ரூபாய்க்கு விற்றது. உடனடியாக இந்த அரசு நடவடிக்கை எடுத்து புளி விலையைக் குறைத்தது.

இதற்கெல்லாம் என்ன காரணம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இடைத்தரகர்கள், வர்த்தக சூதாடிகள், பதுக்கல் பேர்வழிகள், கள்ளப் பணம் வைத்திருப்பவர்கள் ஆகியவர்களை புரட்சித் தலைவர் அரசு கோட்டைக்குள்ளே நுழைய விடாததன் காரணமாக கடந்த 20 மாதங்களில் விலையேற்றம் இல்லாமல் உணவுப் பொருள்கள் ஒரு கட்டுப்பட்ட நிலையில் நிறுத்தப்பட்டிருக்கிறது.

1975 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஒரு கொடுமையான சம்பவம் நடைபெற்றது. அன்றைக்குத் தஞ்சை மாவட்டத்தில் நெல்லை எல்லாம் பெர்மிட்கள் மூலமாக

அண்டை மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ததன் விளைவாக ஒரு கிலோ அரிசி 3.50 அல்லது 4 ரூபாய் அளவிற்கு விற்றது. ஆனால் இன்றைக்கு அரிசி 1.60 காசுக்கு விற்கிறது. இன்றைக்குப் பதுக்கல்காரர்கள், இடைத்தரகர்கள், வர்த்தக சூதாடிகள் ஆகியவர்களை அனுமதிக்காத காரணத்தால் இன்றைய தினம் தமிழக மக்கள் விலையேற்றம் இல்லாது வாழக்கூடிய முறையில் நடவடிக்கை எடுத்து நம்முடைய புரட்சித் தலைவர் அரசு செயல்பட்டுக்கொண்டு வருகிறது. இந்தப் புரட்சித் தலைவருடைய ஆட்சியிலேதான் மின்சார துறையிலே பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. அண்மையில் சுருளியாறு மின்திட்டம் 35 மெகோவாட் உற்பத்தி செய்யக்கூடிய திட்டத்தை செயல்படுத்தியது இந்த அரசுதான். குந்தா மின் திட்டம் 110 மெகோவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய திட்டத்தை கொண்டுவருவது இந்த ஆட்சிதான். மேலும் இந்த ஆண்டு தூத்துக்குடி அனல் மின்திட்டம் ஏறத்தாழ 210 மெகோவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய திட்டத்தைக் கொண்டு வருவது புரட்சித் தலைவரின் ஆட்சி தான். இப்படி மின்சாரத் துறையிலே தன்னிறைவு பெறுவதற்காகவும் மின்சார வெட்டை தவிர்ப்பதற்காகவும் நடவடிக்கை எடுத்துவருவது புரட்சித் தலைவரின் ஆட்சிதான். கடந்த 20 மாத கால ஆட்சியில் மின்சார வெட்டையே சந்திக்காத அரசு புரட்சித் தலைவரின் அரசுதான். ஒவ்வொரு ஆண்டும் எப்போது மின்சார வெட்டு வருமோ என்று விவசாயிகளும் தொழிற்சாலைக்காரர்களும் பயந்துகொண்டிருந்த காலம் இருந்தது, ஆனால் இன்றைக்கு மின்சார வெட்டே இல்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அதைப்போன்றே சிறிய விவசாயிகளுக்கு 16 காசுகள் யூனிட்டுக்கு என்று இருந்த மின்சாரக் கட்டணத்தில் 4 பைசாக் குறைத்தது இந்த புரட்சித் தலைவரின் ஆட்சிதான். அதுபோன்று மற்ற விவசாயிகளுக்கு 2 பைசாக் குறைத்து 14 பைசா ஆக்கியதும் புரட்சித் தலைவரின் ஆட்சிதான். இப்படிப் புரட்சித்தலைவரின் ஆட்சியிலேதான் மின்சாரக் கட்டணத்தைக் குறைத்த வரலாறே இருக்கிறது. இதற்கு முன்னாலே இரண்டு பைசாவை உயர்த்துவதற்காக இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியாளர்கள் எப்படிப்பட்ட போராட்டங்களையெல்லாம் சந்தித்தார்கள் என்பது நமக்கெல்லாம் தெரியும். மின்சார வெட்டு கிடையாது. குறைந்த கட்டணத்தில் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது அதமட்டுமல்ல' இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே, 20 மாத கால் ஆட்சிக்கு முன்னாலே விவசாயிகளுக்கு யூரியா போன்ற உரங்கள் எல்லாம் நியாய விலைக்குக் கிடைக்காத நிலைமையும், பிளாக்மார்க்கட்டிலே அவைகள் விற்கப்பட்டன என்பதையும் மக்கள் அறிவார்கள். பினாமி நிலத்திற்கான பட்டா நம்பர்களை வைத்துக்கொண்டு அதைக் காட்டி உரம் வாங்கி அதை தங்களுடைய நண்பர்களுக்குப்





பிளாக்மார்க்கட்டிலே கொடுத்த நிலைமைகளையெல்லாம் நாம் பார்த்தோம். அது மட்டுமல்ல, பூச்சிகொல்லி மருந்துகளும் நியாயமாக விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை, பிளாக்மார்க்கட்டிலே அவை விற்கப்பட்ட நிலைமை இருந்தது. ஆனால் இந்த 20 மாத ஆட்சிக் காலத்திலே அவைகள் எல்லாம் தாராளமாக நியாயமான விலைக்கு கிடைக்கின்றன. விவசாயிகளுக்கு ஒரு நல்ல நிலைமையை ஏற்படுத்திக் கொடுத்தது இந்த புரட்சித் தலைவரின் ஆட்சிதான். குறுகிய காலக் கடனை நீண்டகாலக் கடனாக மாற்றியதும், கடனுக்கு வட்டியை ஏறத்தாழ பத்து கோடி ரூபாய் அளவிற்குத் தள்ளுபடி செய்த ஆட்சியும் புரட்சித் தலைவரின் ஆட்சிதான். இப்படி விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பல்வேறு நல்ல முன்னேற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மின்வெட்டு, விவசாயத்திற்கு மட்டுமல்ல, தொழிற்சாலைகளுக்கும், சிறிய தொழிற்சாலைகளுக்கும், வெல்டிங் செட்டுக்கும், லேத் பட்டறைக்கும், கடைசல் பட்டறைக்கும் கூட வெட்டு கிடையாது என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டது புரட்சித் தலைவரின் ஆட்சியிலேதான்.

அடுத்து, கிராமப்புறங்களிலே வேலைவாய்ப்பு கொண்டு வருவதற்கு பல்வேறு திட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. படித்த, படிக்காத இளைஞர்கள், சிறு விவசாயிகள், நிலமற்ற சாதாரண மக்கள், கைத்தொழில் எதுவும் தெரியாத சாதாரண மக்கள்கூட மகிழ்ச்சியடையக்கூடிய விதத்திலே ஒன்றிய முறையிலே வேலைவாய்ப்புத் திட்டம் கொண்டுவரப்பட இருக்கிறது. ஒன்றிய அளவிலே என்கிறபோது குறுகிய எல்லைக்குள் இருக்கிற காரணத்தாலே ஒன்றியத்திற்குள் எத்தனை பேர்களுக்கு வேலைகள் கிடைத்திருக்கின்றன, எத்தனை வேலைகள் இருக்கின்றன என்பதையெல்லாம் கண்டுபிடித்து அந்த மக்களுக்கு ஒன்றியத்திற்குள்ளேயே எல்லோருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய திட்டத்தை புரட்சித் தலைவரின் ஆட்சிதான் கொண்டு வர இருக்கிறது வெகு விரைவிலே. மக்கள் அதன் பலனை சீக்கிரத்திலே அடைய இருக்கிறார்கள்.

அடுத்து, 4 ஆயிரம் ஏக்கராவிலே மொசுக்கொட்டை பயிரிடுகின்ற திட்டம் கொண்டுவரப்பட்டிருப்பது இந்த புரட்சித் தலைவரின் ஆட்சியிலேதான். அடுத்து 8 ஆயிரம் ஏக்கராவிலே கொண்டுவந்து பல ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை-சாதாரண குடிசைத் தொழிலாக இருந்தாலும்-வேலைவாய்ப்பு தேடிக் கொடுக்க திட்டமிட்டு வருவது புரட்சித் தலைவரின் ஆட்சிதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[நண்பகல் 12.00]

எட்டு மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்களை உருவாக்கி ஆறு மாத காலத்திற்குள்ளாக 900-க்கு மேற்பட்ட சிறு தொழில்கள் உற்பத்தி துவங்குவதற்கு பண உதவி வழங்கப்

[திரு. அ. க. அரங்கநாதன்] [1979 பிப்ரவரி 14

பட்டிருக்கிறது. இவற்றின் மூலம் ஏறக்குறைய 11,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்தாகி விட்டது இந்தப் புரட்சித் தலைவர் ஆட்சியிலே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேதாரண்யம் பகுதியில் 6,000 ஏக்கர் நிலப்பகுதியில் பெரிய நவீன உப்புத் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதன்மூலம் நூற்றுக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவிருக்கிறது.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி காகிதம் செய்யும் தொழிற்சாலையைப் பற்றி ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. வடார்க்காடு மாவட்டத்திலே மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அதிலே கிடைக்கின்ற சக்கையைக் கொண்டு காகிதம் செய்யும் தொழிற்சாலையை வடார்க்காடு மாவட்டத்தில் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் வடார்க்காடு மாவட்டம் தொழில்துறையில் பின்தங்கியிருக்கிறது. மத்திய அரசால், வடார்க்காடு மாவட்டம் பின் தங்கியிருக்கிற மாவட்டம் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்ற மாவட்டமாகும். தமிழ்நாட்டிலே பெரிய மாவட்டம் அது, அங்கே வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை அதிகம். ஆகவே, காகிதத் தொழிற்சாலையை வடார்க்காடு மாவட்டத்தில் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டோர், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தோர் ஆகியோர்களுக்கான சிறப்புச் சலுகைகட்குச் சரிவு ஏற்படாமல் அரசு நடைமுறைப்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. யாருக்கு? கல்விக்கூடம் போகாமல், பள்ளிக்கூடங்களைப் பார்த்தேயிராத மக்களுக்கு அவர்கள் யார்? பிற்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பொருளாதாரத்திலே பின்தங்கியிருக்கும் மக்கள், அவர்கள்தான் பள்ளிகளுக்குச் செல்ல முடியவில்லை, அவர்கள்தான் தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்க முடியவில்லை. ஆனால் பெரிய பணக்காரர்கள், பெரிய சாதிக்காரர்கள் இருக்கிறார்களே, அவர்கள் வம்சம்தான் படித்துக் கொண்டிருக்கிறது, ஆனால் இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள், பொருளாதாரத்திலே பின்தங்கியுள்ள மக்கள் இருக்கிறார்களே. அவர்களுக்குப் படிப்பதற்கு பள்ளிக்கூட வசதி இருக்கிறது. அப்படிப்பட்ட பின்தங்கிய தாழ்த்தப்பட்டோருடைய நிலையிலே சரிவேற்படாமல் நடைமுறைப்படுத்துகின்ற அருமையான திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழக அரசின் முதல்வர் புரட்சித் தலைவர் கொண்டு வந்திருப்பது, இந்த கவர்னர் உரையிலே இருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

அதைப்போல, ''தமிழகத்தில் அண்மைக் காலமாக சில வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றிருப்பது எனது அரசிற்கு வேதனையைத் தருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர்



1979 பிப்ரவரி 14] [திரு. அ. க. அரங்கநாதன்]

திரு முருகையன் அவர்கள், படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி மெத்த வேதனையைத் தருகிறது. கொலைக்குக் காரணமானவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்பதை உறுதியாகக் குறிப்பிட விரும்புகிறேன்'' என்று ஆளுநர் அவர்கள் தன் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்திய சரித்திர வரலாற்றிலேயே ஒரு மோசமான படுகொலையைப்பற்றி பயங்கரமான படுகொலையைப்பற்றி கவர்னர் உரையிலேயே குறிப்பிட்டுக் காட்டியிருக்கின்ற தைரியம் தமிழக முதல்வர் புரட்சித், தலைவருக்கு இருக்கிறது. நீதி இருக்கிறது, நியாயம் இருக்கிறது, குற்றவாளிகள் தப்பிக்க முடியாது என்ற உறுதியைக் கவர்னர் உரையிலேயே சேர்த்திருப்பது புரட்சித் தலைவரவர்கள் எவ்வளவு உறுதியாக, எவ்வளவு தைரியமாக, நாணயத்திற்கு உட்பட்டிருக்கிறார்கள் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. இந்த உறுதியைக் கவர்னர் உரையில் சேர்த்திருப்பது பாராட்டுதற்குரிய விஷயமாகும். இந்திய சரித்திர வரலாற்றிலேயே ஒரு படுகொலையைப்பற்றிக் கவர்னர் உரையிலே சேர்த்து, நாட்டுமக்களுக்கு உறுதியளித்திருக்கின்ற அரசு புரட்சித் தலைவரின் அரசு ஒன்றுதான். வட்டமிடும் பருந்து மாமிசத் துண்டுக்கு அலைவதைப்போல போராட்டம் வராதா, துப்பாக்கிச் சப்தம் கேட்காதா, பிணம் விழாதா, யார் வீட்டிலே பிணம் விழும், ஒப்பாரி வைக்கலாம் என்று வட்டமிடும் கூட்டத்திற்கு, இந்த படுகொலையைப்பற்றிக் கவர்னர் உரையிலே சேர்த்திருப்பது சாவு மணி போன்று இருக்கிறது. ஆகவே, இந்தக் கவர்னர் உரையிலே மிகப்பெரிய நல்ல வரலாற்றைப் புரட்சித் தலைவரின் அரசு செய்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, விவசாயிகள் துன்பங்களைத் துடைக்கவும், தொழிலாளர்களின் குறைகளைப் போக்கவும், மாணவர்களின் வருங்கால முன்னேற்றத்தைச் செயல்படுத்தவும், கவர்னர் உரை சிறப்பாக அமைந்திருக்கிறது. மாணவர்களையும், விவசாயிகளையும், தொழிலாளர்களையும் தூண்டிவிட்டு எப்படியாவது இந்த அரசுக்குப் பங்கம் ஏற்பட வேண்டுமென்று செய்வதாக ஏறகனவே பேசிய பல நண்பர்கள் சுட்டிக்காட்டிவார்கள். ஆனால் ஒன்றை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இனி யாராலும் விவசாயிகளை ஏமாற்ற முடியாது, இனி யாராலும் மாணவர்களை ஏமாற்ற முடியாது, இனி யாராலும் தொழிலாளர்களை ஏமாற்ற முடியாது. எனவே, இனி அவர்களை ஏமாற்ற முடியாது என்று தெரிந்து கொண்ட காரணத்தினால் இன்றைக்கு ஆளுங்கட்சிக்கு எதிராக இப்படிப்பட்ட தூண்டுதல் செய்து கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவரின் ஆட்சியை மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள், ஊழல் அற்ற ஆட்சி, கட்சிக்காரர்கள் தலையிடாத ஆட்சி என்று இன்றைக்கு வெளியிலே பாராட்டுகிறார்கள். ஆனால் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவோ அல்லது வேறு நோக்கத்திற்காகவோ, பத்திரிகைகளிலே செய்தி வர வேண்டுமென்ற நோக்கத்திற்காகவோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்

கழகத் தோழர்கள் நிர்வாகத்திலே தலையிடுகிறார்கள், போலீஸ் ஸ்டேஷனிலே தலையிடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, வடார்க்காடு மாவட்டம் குடியாத்தத்திலும், ஆம்பூரிலும் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் மீதே பொய்வழக்கு போட்டிருந்தும்கூட, எங்கள் முதலமைச்சர் சுட்டிக்காட்டியும்கூட, அந்த வழக்கு நீதி மன்றத்திற்குப் போக வேண்டுமென்று சொன்ன ஒரே உத்தமன் இன்றைக்குப் புரட்சித் தலைவராகும். இன்றைக்கு எங்களுடைய கட்சி ஆட்சியிலே இருந்தாலும், குற்றவாளி என்று போலிசிலே சொல்லப்பட்டதால் ஹைகோர்ட்டிலே வாதாடிக் கொண்டிருக்கிறோம். அப்பேர்ப்பட்ட பொன்னான புனிதமான ஆட்சியிலே தான் எங்களுடைய கட்சிக்காரர் நிர்வாகத்திலே தலையிடுகிறார்கள் என்று பொய்யான செய்தியை சொல்லி நாட்டு மக்களை ஏமாற்றுகிற ஒரு வாதமாக அதனை வைக்கலாமே தவிர, உண்மை நிலையை, அரசின் அணுகுமுறையை நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள்.

குடிநீர் வடிகால் வாரியத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு, பெரியசாமி ஒரு குறை சொன்னார். தலைவரைப் பார்த்தேன், பலமுறை பார்த்தேன், வாரியத்திலே செயல்படவில்லை, நடவடிக்கை எடுக்கவில்லையென்று சொன்னார்கள். அவர் குறிப்பிட்ட துறையூர் குடிநீர் திட்டத்திலே பலவேறு சிக்கல்கள் இருக்கின்றன. கொல்லிமலையிலேயிருந்து ஆண்டு முழுவதும் தண்ணீர் கிடைக்காது, கோடைக் காலங்களில் தண்ணீர் கிடைக்காது. ஆகவே தான் ஏற்கனவே இருந்த எஸ்டிமேட்டைப் பார்த்தபொழுது, கொல்லிமலையிலேயிருந்து தண்ணீர் கொண்டுவர ரூ. 50 இலட்சம் செலவாகும். இருந்தாலும், ஆண்டு முழுவதும் தண்ணீர் கிடைக்காது என்பதால் வீண் விரயமாகும் என்ற காரணத்தாலே, வேறு எங்கு நல்ல தண்ணீர் கிடைக்கும் என்பது பற்றி மறு ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. அவர் சொன்ன பிறகும்கூட ஜியாலஜிஸ்டுகளை அனுப்பி பரிசோதனைகள் செய்யப்பட்டிருக்கின்றன, பிறகு தலைமைப் பொறியாளரை அனுப்பி, சர்வகட்சியினரோடு பேசச் சொல்லியிருக்கிறோம், அத்தொகுதியின் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர், முன்னாள் கொறடா திரு, அழகமுத்து ஆகும், அவரிடமும் சொன்னோம், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதாலே ரூ, 50 இலட்சம் வீணாகும், ஆகவே, அதனை மறு பரிசீலனை செய்யவேண்டும், கொல்லிமலையிலேயிருந்து தண்ணீர் எடுக்கும்போது விவசாயிகள் ஆட்சேபணை செய்கிறார்கள். அதோடு, அங்கிருந்து ஆண்டு முழுவதும் தண்ணீர் கிடைக்காது. அதைப் பரிசீலனை செய்து வேறு வழியில் தண்ணீர் தருகிறோம் என்று சொல்லப்படுகிறது. ஆனால், தலைவரைப் பார்த்தேன் ஒன்றும் செய்யவில்லையென்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். பழைய கோப்புகளிலிருந்து சில உண்மைகள் வர வேண்டியிருக்கிறது, அதற்காக காத்துக் கொண்டிருக்கிறோம்.





ஆகவே, அவர்களுக்குச் சொல்கிறேன், துறையூர் பகுதிக்கு விரைவாக தண்ணீர் கொடுத்தே தீருவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்காலத்திலே, ஏழை, எளிய மக்கள், சாதாரண மக்கள், போடுகிற திட்டங்கள் நல்லவையாக இருக்கின்றன என்று சொல்லும்போது இதே எதிர்க்கட்சித் தலைவர்கள் பாராட்டுகின்ற காலம் வரும் என்று சொல்லி, இந்த வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

*திரு. சி. பழனிமுத்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே காங்கிரஸ் கட்சியின் சார்பாக பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றியைக் கூறிக்கொண்டு துவங்குகிறேன். கிராமங்களையும் கிராம வாழ்க்கையையும் பற்றி பேசுவதே இப்பொழுது எல்லோருக்கும் வழக்கமாகிவிட்டது. கடந்த 10 ஆண்டுகளிலே கிராமங்கள் மிகவும் சீரழிந்து கொண்டு வருகின்றன. கிராமக் குடிசைத் தொழில்கள் சீரழிந்து வருகின்றன. விவசாயம் மட்டுமே விவசாயிகளுக்குத் தொழிலாக இருந்து வருகிறது. ஆதலால் இப்பொழுது விவசாயம் நஷ்டத்தில் செயல்பட்டு வருகிறது. காரணம் என்ன? விவசாயம் செய்கின்றவர்களுக்கு வாங்கும் சக்தி அதிகமாகவில்லை. அவர்களது உற்பத்தி பொருள்களுக்கு நியாய விலை நிர்ணயம் செய்தால்தான் விவசாயிகளுடைய வாழ்வு மலரும், அவர்களுடைய தொழிலும் வளர முடியும். ஆகவே, நெல் விலையைக் கூட்டிக் கொடுக்கிறோம் என்று கூறுகிற அரசு, நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம் என்று சொல்வதை விட்டுவிட்டு, அரசுக்கு நல்லமுறையிலே மானியம் கிடைக்கிற வகையிலே வழிவகை செய்யவேண்டும்.

விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்ய வேண்டும். சேலம் மாவட்டத்திலே மழை பெய்யாத காரணத்தினாலே, வறட்சி ஏற்பட்டுள்ளதால் அவர்களால் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. ஆகவே, கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களை, சிறு விவசாயிகள் பெரு விவசாயிகள் என்று பாகுபடுத்தி, சிறு விவசாயிகளுக்கு விதித்துள்ள தண்டத் தீர்வையும், முழுத் தொகையையும் ரத்து செய்ய வேண்டும். அது மட்டுமின்றி உற்பத்திப் பொருள்களுக்கு நல்லமுறையிலே விலை கிடைத்தால்தான் விவசாயிகள் முன்னேறுவார்கள். ஆகவே, விவசாயப் பொருள்களை நல்லமுறையில் விற்பனை செய்யவும் இந்த அரசு முயற்சிக்க வேண்டும்.

பேரூராட்சிகள், ஊராட்சிகள் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. அதனால், அங்கு எந்தவிதமான செயல்களும் நடைபெறவில்லை. ஊராட்சி ஒன்றியங்களிலே லோக்கல் செஸ் என்று போடுகிற வரியை இப்பொழுது 2 ரூபாயிலிருந்து 2.50 ரூபாயாக உயர்த்தியுள்ளார்கள்.

[திரு. சி. பழனிமுத்து] [1979 பிப்ரவரி 14

[பிற்பகல் 12·10]

இது நியாயம்தானா? இந்த அரசு ஜனநாயக முறையில் அக்கறை கொண்டிருந்தால் இந்த வரியை உடனடியாக ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே அங்கம் இல்லாத காரணத்தினால் தனி அதிகாரிகளும், ஆணையர்களும் வரியை அதிகமாக உயர்த்திக்கொண்டு ஏழை எளிய மக்கள் கஷ்டப்படுகின்ற நிலைமையை உருவாக்குகிறார்கள். பேரூராட்சிகளிலே 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரியை உயர்த்த வேண்டும் என்றிருந்தாலும். இப்போது உயர்த்தியிருக்கிற வரியை உயர்த்தவேண்டாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சொல்லியும், இப்போது உயர்த்தி இருக்கிறார்கள். ஜனநாயக நாட்டிலே, இதுபோன்று அதிகரித்து உள்ள வரியை, 1–4–1978 முதல் உயர்த்தி உள்ள வரியை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிராம மக்களுக்கு அதிகமாக நன்மை செய்கிறோம் என்று வாயளவில் சொல்லுகிறீர்களே தவிர, செயலளவில் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலவரி ஒன்று உண்டு. கூடுதல் தீர்வை ஒரு ஏக்கருக்கு இத்தனை கரும்பு, மஞ்சள் என்று தீர்மானித்து, ஒரு ஏக்கருக்கு 15 ரூபாய் என்று வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அதனால் ஏழை எளிய விவசாய மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். விவசாய வருமான வரி என்று கொண்டு வந்திருக்கிறார்கள். விவசாயிகளுக்குப் பலதரப்பட்ட வரிகளைக் கொண்டுவந்திருக்கிறார்கள், ஆகவே வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு இழைக்கின்ற அநீதிகளை நல்ல முறையிலே கவனித்து பரிசிலனை செய்ய வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் ஆத்தூரில் தண்ணீர் பாயக்கூடிய இடங்களில் ஏக்கருக்கு ரூ. 8 என்றும் ரூ. 12 என்றும் அதிகமாக வரி வசூலிக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். அதை உடனடியாக நிறுத்தவேண்டும். ஊராட்சி ஒன்றியங்களிலே, பேரூராட்சிகளிலே தெருவிளக்குகள், சாலைகள் போன்றவைகளுக்கு மானியத் தொகை கொடுக்கிறார்கள். எல்லா நகராட்சிகளுக்கும் பாதிமானியமாகவும் பாதிகடனாகவும் கொடுப்பதைப்போல, இப்பேரூராட்சிகளுக்கு கடன் கொடுக்க இந்த அரசு முயற்சிக்கவேண்டும்.

ஆத்தூரிலே குடித்தண்ணீர் திட்டம் உள்ளது. ஆத்தூர் தொகுதியிலே கடந்த 10 ஆண்டுகளாக பார்த்தால் புயல் அடித்தால்தான் எங்கள் பகுதிக்கு மழை வரும் என்ற நிலை இருக்கிறது. அப்படித்தான் 1977--78ஆம் ஆண்டில் இப்படிப்பட்ட நிலை வந்தது. இந்த நிலையைப் போக்க, எங்களுக்கு மழை இல்லாத காரணத்தினாலே பயிர் செய்ய முடியவில்லை. குடிநீரும் பற்றவில்லை. ஆகையினாலே, மேட்டூரிலே இருந்து



1979 பிப்ரவரி 14] [திரு. சி. பழனிமுத்து]

குடிநீர் திட்டத்தை வருகின்ற பட்ஜெட் கூட்டத்திலாவது குடிநீர் வாரியத் தலைவர் அவர்களும், அமைச்சர் அவர்களும் அமல் படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலத்திலே கண்ணாடித் தொழிற்சாலை கடந்த பல ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கிறது. தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டே அந்தத் தொழிற்சாலையை திறந்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டு வந்தார். ஆனால் இதுவரையில் திறந்து வைக்கவில்லை. அதை உடனடியாக திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஊரில் உள்ள மருத்துவமனையை 1974-லேயே அரசு மருத்துவமனையாக அறிவித்தது. ஆனால் இதுவரையில் மருத்துவ கட்டடம் கட்டவில்லை, அதற்காக வாங்கப்பட்ட படுக்கைகள் எல்லாம் கரையான் அறித்து அரிந்து போய்விட்டன. மாவட்ட நல அதிகாரி அவர்களும், மருத்துவவிடுதி கட்டவேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறார். அதை கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆத்தூர் தாலுக்காவில் உற்பத்தி செய்யப்படும் கரும்பை மோகனூர் சர்க்கரை ஆலைக்கு அனுப்புகிறார்கள். பெரம்பலூர் தாலுக்காவில் இறையூர் என்ற இடத்தில் ஜவஹர்லால் நேரு கூட்டுறவு சர்க்கரை ஆலை இருக்கிறது. ஆகவே, அந்த சர்க்கரை ஆலைக்கு அந்தக் கரும்பை அனுப்ப அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்,

ஆத்தூர் நகரில் ஒரு முன்சீப் கோர்ட் வேண்டும் என்று நீண்ட நெடுங்காலமாக அங்குள்ள மக்கள் கோரிக்கைகளை, விண்ணப்பங்களை கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆத்தூருக்கும் சேலத்திற்கும் 35 மைல் உள்ளது. சேலத்திற்கும் ராசிபுரத்திற்கும் 15 மைல் உள்ளது. ராசிபுரத்திற்கும் நாமக்கல்லுக்கும் 15 மைல் உள்ளது. ராசிபுரத்தில் ஏற்கெனவே கோர்ட் இருக்கிறது. ஆகவே, ஆத்தூரில் ஒரு முன்சிப் கோர்ட் ஏற்படுத்தி, விவசாயப் பெருமக்களுக்கும் மற்றவர்களுக்கும் வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள கடன்களை ஒத்திவைக்க வேண்டும். சிறு விவசாயிகள் பெரு விவசாயிகள் என்று தற்போதுள்ள வேறுபாடு ரத்து செய்யப்படவேண்டும்.

சேலத்தில் உள்ள மாக்னசைட் தொழிற்சாலையை அரசாங்கம் எடுத்துக்கொண்டுள்ளதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று கள்ளக்குறிச்சி பகுதியில் உள்ள மாமண்டூரில் உள்ள செம்பு, துத்தநாகட் தயாரிக்கும் தொழிற்சாலையும் மூடிக்கிடக்கிறது. அதையும் அரசு ஏற்று நடத்தி அங்கேயுள்ள தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. பழனிமுத்து] [1979 பிப்ரவரி 14

சேலம் மாவட்டத்தில் உள்ள திருச்செங்கோடு, சங்ககிரி ஆகிய வட்டங்களை ஈரோடு மாவட்டத்தோடு இணைப்பதற்காக முயற்சிகள் நடப்பதாகத் தெரிகிறது. அதை இந்த அரசு கைவிடவேண்டும். ஏற்கெனவே சேலம் மாவட்டத்தை தருமபுரி, சேலம் என்று இரண்டு மாவட்டமாக பிரித்து விட்டார்கள். இப்போதும் சேலம் ஜில்லாவில் இருந்து இரண்டு தாலுக்காக்களை எடுத்து ஈரோடு மாவட்டத்திற்குக் கொடுப்பது சரியல்ல. அதை அந்த மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை, அவர்கள் விரும்பவும் இல்லை, ஆகவே, இதை என்னுடைய கோரிக்கையாக இந்த அரசின் முன் வைத்து, என் உரையை முடிக்கிறேன்.

<u>திரு. மா. மணிமாறன் :</u> பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை காலரியில் வெளி மாநிலத்தில் இருந்து வந்துள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் வீற்று இருக்கிறார்கள். அப்படி வெளிமாநிலத்தில் இருந்து வருபவர்களை வரவேற்பது என்பது சட்டமன்றத்தின் மரபாக இருந்து வந்து இருக்கிறது. ஆகவே அதுபோன்றதொரு வரவேற்பை தற்போது தாங்கள் அளிக்க முன்வருவீர்களா?

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> வெளி மாநிலத்தில் இருந்து வரும் சட்டமன்ற உறுப்பினர்களை வரவேற்பது என்பது நம்முடைய மரபு இல்லை. அப்படிச் சொல்வது தவறு. நாம் அவர்களை இந்த நடவடிக்கைகளைக் காண அனுமதித்து இருப்பதே, நாம் வரவேற்று அவர்கள் வந்து இருக்கிறார்கள் என்றுதான் பொருள். இருப்பினும் உங்கள் சார்பிலும், மற்றவர்கள் சார்பிலும் நான் அவர்களை வரவேற்கிறேன்.

(பார்வையாளர் மாடத்தில் இருந்து துண்டறிக்கை வீசப்பெற்றது)

<u>திரு. எஸ். வி. இராமசாமி :</u> சட்டமன்றப் பேரவை துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பு நல்கியமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். நன்றி செலுத்துகிறேன். எதிர்க் கட்சி உறுப்பினர் அருமை நண்பர் திரு. துரைமுருகன் கூறினார் ''இந்த உரையானது சந்தைக் கடையில் இருக்கின்ற வைத்தியக்காரன் விற்கும் சர்வரோக சஞ்சீவி பொட்டலத்தைப்போல் இருக்கிறது'', என்று குறிப்பிட்டார். சோசியோ எகனாமிக் சையின்டிஸ்ட் என்று சொல்கிற தேசப்பிதா காந்தி அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவுகள் ஆகியவற்றை நிலைநாட்டுவதற்காக வேண்டி அத்தனை தத்துவங்களை எல்லாம் கண்டறிந்து ஆய்ந்து அவைகளையெல்லாம் ஒன்றடக்கிய ஒரு தத்துவ பெட்டகமாக இது அமைந்து இருக்கிறது என்று நான் மகிழ்ச்சி அடைகிறேன்.



1979 பிப்ரவரி 14] [திரு. எஸ். வி. இராமசாமி]

[பிற்பகல் 12.20]

அருமை நண்பர் தந்தை நடராசன் அவர்கள் தன்னுடைய உரையிலே எப்போதும் கூறுகின்ற அரசியல் வார்த்தைகளைப் போல இப்போதும் சட்டம் அமைதி கெட்டுவிட்டது என்று மட்டும் பேசினார்கள். அந்த முனை மழுங்கிய ஆயுதத்தை இங்கே வைத்தார்கள். அந்த நண்பர்களுக்கும் மற்றுமுள்ள எதிர்க் கட்சி நண்பர்களுக்கும் நான் மகிழ்ச்சியுடன் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலேயே அமைதி நிலவுகின்ற மாநிலம் தமிழ்நாடுதான் என்று மத்தியிலே இருப்பவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதேநேரத்தில் அருமை நண்பர் தந்தை நடராசன் அவர்களுக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன், உங்களுடைய ஆட்சியிலேதான் [illegible], அரியப்பட்டு உருவம் தெரிந்து, பல்கலைக்கழக மாணவன் இராஜேந்திரன் படுகொலை செய்யப் பட்டான். இன்னார்தான் கொலை செய்தார்கள் என்று குறிப்பிட்டுக் காட்டிய பிறகும் உடனடியாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் பலநாட்களுக்குப் பின்னாலேதான் ஏதோ நடவடிக்கை எடுத்தீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல பூலாவரி சுந்தரம் கொல்லப் பட்டான், எந்த இடத்தில் யாரால் சுடப்பட்டான், கொல்லப்பட்டான் என்று சுட்டிக் காட்டியும் உங்கள் ஆட்சியிலே நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தது. இன்றைக்கு எங்களுடைய ஆட்சியிலேதான் அந்த கொலையாளி [illegible] நீதி மன்றத்திலே கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கிறான் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். [illegible] இன்றைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் [illegible] அவர்கள் கொலை செய்யப்பட்டார் என்று தெரிந்தவுடனே [illegible] தலைவர், எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, 24 மணி நேரத்திற்குள்ளாக கொலையாளி என்று சொல்லப்படுகின்ற [illegible] கைது செய்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நீங்கள் எல்லாம் நெஞ்சிலே கைவைத்து, இந்த நல்ல நடவடிக்கையை உணர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அருமை நண்பர் துரைமுருகன் அவர்கள் இங்கே சொன்னார்கள் இராஜாக்கள் காலத்தில் 'மாதம் மும்மாரி பொழிகிறதா' என்று மந்திரிகளைக் கேட்டு தெரிந்து கொண்டார்கள் என்றும் அதைப்போலத்தான் இந்த ஆட்சியிலும் நடக்கிறது என்றும் சொன்னார்கள். அவர்கள் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்தியதற்குப் பின்னாலேதான் இந்த ஆட்சிக்கு வெட்கம் வந்த மாதிரி காட்டுகிறார்கள் என்றும் சொன்னார். நீங்கள் மாநாடு நடத்துவதற்கு முன்னாலேயே பேரறிஞர் அண்ணா அவர்கள்

வழியில் அயராது பாடுபட்டு, அவருடைய பாதையிலே சென்று கொண்டிருக்கும் எங்கள் புரட்சித் தலைவர் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அவர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன். அதை நான் சொல்லவில்லை. எங்கள் தானைத் தலைவர் உங்களுக்கு முன்னாலே போர் தொடுத்தார் என்று ஸ்டேட்ஸ்மென் பத்திரிகை—அது ஒரு பாரம்பரியம் மிக்க பத்திரிகை, பாரபட்சம் இல்லாமல் கூறியிருக்கிறது.

The Chief Minister's convening the conference with five Chief Ministers is a shrewd act என்று கூறுகின்ற அளவுக்கு எங்கள் தானைத் தலைவர் இந்தித் திணிப்பை எதிர்த்து, தமிழைக் காப்பாற்ற கூட்டம் கூட்டிய அந்தக் காட்சியை அனைவரும் அறிவார்கள். அது உங்களுடைய மாநாட்டுக்கு முன்னாலே நடைபெற்ற கூட்டம். அப்போதே புரட்சித் தலைவரவர்கள் போர்க்குரல் எழுப்பிவிட்டார்கள். அதை நீங்கள் மறந்துவிட்டீர்கள்.

அதுமட்டுமல்ல, அண்மையிலே மதுவிலக்கு அவசரச்சட்டத்தை எங்கள் தானைத் தலைவரவர்கள் பிறப்பித்தார்கள். அது பேரறிஞர் அண்ணா அவர்களின் மேலான உயிரான கொள்கை என்பதை இந்த நாட்டு மக்கள் எல்லாம் நன்கறிவார்கள், அவசரச் சட்டம் வந்தவுடன் இந்த நாட்டு மக்கள் எல்லாம் மகிழ்ச்சி தெரிவித்தார்கள். இன்றைக்கு அதிலே நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு கள்ளச்சாராயம் காய்ச்சுவதும் விற்பதும் பெருமளவுக்கு குறைந்து விட்டது என்பதை புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்வேன்.

இப்போது இந்த அவசரச் சட்டத்திலே, நடைமுறையிலே ஒரு சிக்கல் இருக்கிறது. அதாவது 4 (எ) என்றும் 4 (1) (ஜே) என்றும் இரண்டு விதிகளிலே இருக்கின்ற சிக்கல்கள் களையப் பட வேண்டியது இந்த அரசினுடைய தலையாயக் கடமையாகும். நான் ஒரு வழக்கறிஞர் என்ற காரணத்தால் நீதிமன்றத்திலே இந்த சிக்கல்களால் ஏற்படுகின்ற சங்கடங்களைக் காண்கின்றேன். நீதிபதிகளும், மற்ற வழக்கறிஞர்களும் சட்டமன்றத்திலே இதை எடுத்துச் சொல்லி, ஏற்ற பரிகாரம் காண வேண்டுமென்று என்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். 4 (எ) என்பது குடித்துவிட்டு தள்ளாடிக்கொண்டே வாய்க் குழறிக் கொண்டிருப்பது. அதற்கு 60 ரூபாய் 'ஃபைன்' மட்டும்தான். 4 (1) (ஜே) என்பது ஒருவர் குடித்திருக்கிறார் என்று டாக்டர் சர்டிபிகேட் கொடுப்பது. அப்படி சர்டிபிகேட் கொடுத்துவிட்டால் அவருக்கு 3 மாதம் ஜெயில், 1,000 ரூபாய் ஃபைன். ஆகவே, இது உண்மையிலேயே ஒரு சிக்கலான பிரச்சனை தான். இது சீர் செய்யப்பட வேண்டும், மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து இன்னொரு விஷயம். முதலாவது வகுப்பு நீதிமன்றத்திலே தான் பெருத்த கூட்டம் இருக்கின்றது. அங்குதான் வழக்குகளும் அதிகமாக இருக்கின்றன. இரண்டாவது வகுப்பு நீதிமன்றத்திலே அத்தகைய கூட்டம் இல்லை. வழக்குகளும் அதிகமாக இல்லை, வேலையும் மிகவும் குறைவாக இருக்கின்றது. இன்டெக்ரேஷன் ஆப் ஜூடிஷியல் மாஜிஸ்ட்ரேட் என்ற திட்டத்தினை உடனடியாக நிறைவேற்றிவிட்டால் இந்த வேலைப்பளு குறையும் என்பதை நான் இந்த அரசினுடைய மேலான கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன். ஆகவே முதல் வகுப்பு நீதிபதியையும், இரண்டாவது வகுப்பு நீதிபதியையும் ஒன்றாக்கி நீதிபதிகளுக்கு, அந்த உரிமைகள் கிடைக்கின்ற வகையிலே சட்டத்தை ஆய்வு செய்ய வேண்டும் என்று பணிவுடனும் கனிவுடனும் என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

இந்த ஆளுநருடைய உரையிலே நல்ல பல காரியங்கள் ஏழை எளியோருக்கென்று இருக்கின்றன. புதியதோர் உலகு செய்வோம் என்று பாரதிதாசன் பாடினாரே அது போன்று திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கிறது கண்டு மகிழ்கிறேன். சிலப்பதிகாரத்திலே இளங்கோவடிகள் மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும் என்று பாடியிருப்பதுபோல் அந்த அளவுக்கு புரட்சித் தலைவருடைய ஆட்சி மழையாகப் பொழிகிறது. ஆகவே ஆளுநர் உரையிலே நல்ல பல திட்டங்களைக் காணுகின்றபோது உண்மையிலேயே நல்ல செழிப்பை உண்டாக்கக்கூடிய மாமழையாக புரட்சித் தலைவருடைய ஆட்சி இருக்கிறது என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாநிலத்திலுள்ள மக்களுக்கு, உழைப்பவர்களுக்கு, உழுகின்றவர்களுக்கு நன்மையும் ஊக்கமும் தருகின்ற வகையிலே நெல்லின் கொள்முதல் விலையினை உயர்த்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பது குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அடுத்து சொல்லப்பட்டிருப்பது ஊரமைப்புத் திட்டம். இந்த திட்டத்தினால் பின்தங்கிய மக்களுக்கு அதாவது குறிப்பாக என்னுடைய பெரம்பலூர் தொகுதியிலே உள்ள மக்களுக்கு நன்மை ஏற்படும் என்ற வகையில் இதனைச் செயல்படுத்தவேண்டும் என்ற எனது வேண்டுகோளை வைக்கிறேன். என்னுடைய பகுதியிலுள்ள ஊர்களாகிய அம்மாபாளையம், கால்பாடி, அரும்பாவூர், களசம்பட்டி, பூலாம்பாடி, பெரம்பலூர், துரைமங்கலம், சிறுவாச்சூர், மற்றும் இது போன்ற ஊர்களிலே காலனியே இல்லை என்ற பிரச்சினை இருந்து வருகிறது. இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டத்தின் மூலம் இந்தப் பிரச்சினை தீரும் என்ற நம்பிக்கையில் என்னுடைய தொகுதியிலே உள்ள இந்த ஊர்களையும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கரும்பு ஆலைகள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய பகுதியிலே ஆலைகளே கிடையாது, தொழிற்சாலைகளே கிடையாது. ஆகவே அங்கே கரும்புத் தொழிற்சாலையை உருவாக்க வேண்டியது மிகவும் தேவையான ஒன்று என்பதை நான் இந்த மன்றத்திலே வைக்க விரும்புகிறேன்.

அடுத்து பள்ளிக்கூடக் கட்டிடங்கள் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. பல பள்ளிக்கூடங்களுக்கு கட்டிடங்களே இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே இந்த ஊரமைப்புத் திட்டத்தின் மூலம் கட்டிடங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எங்கள் பெரம்பலூர் பகுதியிலே படிக்கின்ற பள்ளி மாணவர்கள் நெடும் தொலைவிலே இருந்து வரவேண்டி இருக்கிறது. அவர்களுக்கு அங்கே விடுதி வசதிகள் இல்லை. ஆகவே அவர்களுக்கு தங்கிப் படிப்பதற்கு விடுதிகளைக் கட்டித் தருமாறு வேண்டுகிறேன்.

அடுத்து அன்னமங்கலம் அணை தேவை என்று அமைச்சரவர்களே கூட சொல்லியிருக்கிறார்கள். அந்த அன்னமங்கலம் அணையினை அமைத்துக் கொடுத்தால் கிட்டத்தட்ட 5 ஆயிரம் விவசாயிகள் பாசன வசதி பெற்றுப் பயன் அடைவார்கள். ஆகவே அந்த அணையினைக் கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குடிதண்ணீர் வசதியைப் பொறுத்தமட்டில் அங்குள்ள மக்கள் தண்ணீர் இல்லையென்று கண்ணீர் வடிக்கிறார்கள், ஆகவே இந்த அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய ஊரமைப்புத் திட்டத்தின் மூலம் அந்தப் பகுதியிலே குடிதண்ணீர் வசதியைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

[பிற்பகல் 12·30]

அடுத்து, வேப்பந்தட்டை— வாலிகண்டபுரத்திற்கு சாலை அமைக்கப்படவேண்டும் என்று பலமுறை எடுத்துச் சொல்லப் பட்டிருக்கிறது. அங்குள்ள மக்களுக்கு அந்தச் சாலை போக்குவரத்திற்கு, மிகவும் அத்தியாவசியமானதாகும். பொருளாதார ரீதியில் பார்த்தாலும்கூட அது அமைக்கப்பட வேண்டியதுதான். ஆகவே அங்குள்ள மக்களின் தேவையை முன்னிட்டு அந்த சாலையை அமைத்துத்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பெரம்பலூர், குரும்பலூர், அய்யலூர், குடிகாடு போன்ற யிடங்களுக்கு குடிநீர் திட்டம் அவசியம் தேவை. அதையும் நிறைவேற்றித் தரவேண்டும்.

அடுத்து, டீ-சென்ட்ரலைசேஷன் என்பது நாடு ஏற்றுக் கொண்ட கருத்தாகும். அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். திரு. துரை முருகன் கூட குற்றம் கூறினார்கள். அலுவலகங்கள் காட்பாடிக்கும் வரும். ஆக, ஆளுநர் அவர்களது உரையில் கூறப்பட்டுள்ள உயர்ந்த கருத்துக்களைப் போற்றி மகிழ்ந்து அவ்வுரையினை களிப்புடன் ஏற்று அமர்கிறேன். வணக்கம்.





* திரு. கெ. சொக்கலிங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஆளுநர் அவர்கள் உரைமீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, என் தொகுதி மக்களின் சார்பாக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன், இன்று தமிழ்நாட்டில் உணவு நிலை பற்றி ஆளுநர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள், ஆனால் உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறதா என்றால், உள்ளபடியே வேதனைப் படுகிறோம். உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறதா இல்லையா என்பது அது வேறு விஷயம். ஆனால் விவசாயிகள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள்கூட சொன்னார்கள். இந்தியாவில் எந்த மாநிலத்திலுமே கிடைக்காத விலையை இந்த தமிழக சர்க்கார் கொடுக்கிறது என்று. ஆனால் தமிழக அரசு க்விண்டாலுக்கு ரூ. 75ல் இருந்து ரூ. 80 வரைதான் கொடுக்கிறார்கள். கேரளா மாநிலத்தை எடுத்துக்கொண்டால் அங்கே க்விண்டாலுக்கு ரூ.115 கொடுக்கிறார்கள். அதை அவர்கள் கவனிக்கவில்லையா, அதை அவர்கள் கவனிக்காமல் எந்த மாநிலத்திலும் கொடுக்காத விதத்தில் ஒரு புரட்சித் திட்டத்தை புரட்சித் தலைவர் செய்திருக்கிறார் என்று சொல்கிறார்கள். அதுகுறித்து உள்ளபடியே நான் வேதனைப்படுகிறேன். விவசாயிகளுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறதா என்றால்— எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் நண்பர்கள் கூடச் சொன்னார்கள்— உரம் கிடைப்பதில் இந்த அரசு தாராளமாக இருக்கிறது என்று சொன்னார்கள். முன்பும் உரம் கிடைக்காமலா போய்விட்டது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: கேரளாவில் ரூ.115 கொடுப்பதாகச் சொன்னார்கள். இதுபற்றி விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்னிடம் வந்து கேட்டார்கள். மற்ற மாநிலங்களில் அதிகமாகக் கொடுக்கிறார்களே உங்கள் மாநிலத்தில் குறைவாகக் கொடுக்கிறீர்களே என்று. ஆனால் உணவுப் பிரச்னை பொறுத்த வரையில், மத்திய பேரரசு கொடுக்கிற விலையைத் தான் இன்று எந்த மாநிலமும் கொடுக்கக் கூடிய கட்டாயம் இருக்கிறது. கூடுதல் கொடுக்கக்கூடாது என்று சொல்லிவிட்டது. கேரளா பற்றி விசாரித்தபோது, கொடுக்கவேண்டும் என்று செய்தித்தாள்களில் சொல்லியிருக்கிறார்கள். நேரடியாக இங்கு இருக்கிற அதிகாரிகளைக் கொண்டு அங்கிருக்கிற அதிகாரிகளைக் கேட்டபோது அங்கேயும் கொடுக்கவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. அந்தத் தகவலையும் என்னைப் பார்க்க வந்தவர்களிடம் சொன்னேன்.

திரு. கெ. சொக்கலிங்கம்: செய்தித்தாள்களில் வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அப்படி கூறியிருப்பாரானால் ஒரு மறுப்பு அறிக்கையைவிட்டிருந்தால்......

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: கேரளாவில் அதிகமாகக் கொடுத்துவிட்டதாக செய்தித்தாள்களை வைத்துக் கொண்டு பேசினார்கள். இங்கு இருக்கிற அரசு அதிகாரிகளைக்

கொண்டு கேரளாவில் இருக்கிற அரசு அதிகாரிகளைக் கேட்கிற போது அங்கே அதிகமாகக் கொடுக்கவில்லை என்ற செய்தி வந்திருக்கிறது. அதையும் சொல்லியிருக்கிறோம்.

திரு. கெ. சொக்கலிங்கம் : அடுத்து, கரும்பு உற்பத்தி, புரட்சித் தலைவர் அவர்கள், விவசாயிகள் எல்லாம் அமோகமாக வாழ்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் இன்று விவசாயிகள் போராட்டம் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 75 தான் கொடுக்கப்படுகிறது போக்குவரத்துச் செலவிற்குக் கூட அது கட்டுபடியாகவில்லை. கரும்பு விவசாயிகள் வீடுகளைக் கூட அடகு வைக்கிற நிலையில் கஷ்டப்படுகிறார்கள். அது குறித்து இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்று தெரியவில்லை. அரைத்த மாவையே அரைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கரும்புக்கு டன் ஒன்றுக்கு 75 ரூபாய் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். எந்த ஆலையில் இப்படி 75 ரூபாய் கொடுக்கிறார்கள் என்பதனை கோடிட்டு சொல்ல வேண்டும். ஏனென்று சொன்னால், மைய அரசு ஒரு டன்னுக்கு குறைந்த பட்சவிலை நிர்ணயித்து சர்க்கரை திறனுக்குத் தகுந்தபடி ஒவ்வொரு ஆலையிலும் விலை நிர்ணயித்திருக்கிறது. 75 ரூபாய் கொடுக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது சொல்லுகிறார்கள், எந்த ஆலையில் இப்படி கொடுக்கிறார்கள் என்பதை சொன்னால், உடனடியாக அதற்குண்டான பதிலை சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. செ இராமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாய அமைச்சர் அவர்களிடமிருந்து மேற்கொண்டு ஒரு விவரம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். கரும்பு சாகுபடியாளருக்கு டன் ஒன்றுக்கு 105 ரூபாய், 110 ரூபாய் என்று கொடுத்தாலும், போக்குவரத்து கட்டணம், வெட்டுக் கூலி இவை போன்ற செலவுகள் போக மீதம் கிடைப்பது 75 ரூபாய்க்கும் குறைவு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம் : அமைச்சர் அவர்கள் 75, 85 ரூபாய் கொடுப்பதாக சொல்லுகிறார்கள்....

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நான் 85 ரூபாய் கொடுப்பதாக சொல்லவில்லை, 75 ரூபாய் எந்த ஆலையில் கொடுகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன், அது தெரிந்தால் உடனடியாக நான் எந்தெந்த ஆலைகளில் எவ்வளவு பணம் கொடுக்கிறார்கள் என்பதை சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்,



திரு, கெ. சொக்கலிங்கம் : அது மட்டுமல்ல, நியாய விலைக்கடைகளைப் பற்றி சொல்லப்போனால், என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 10 நியாயவிலைக் கடைகளை திறந்திருக்கிறார்கள்,. இந்த பத்து நியாயவிலைக் கடைகளிலும் உப்பு இல்லை, மிளகாய் இல்லை, பருப்பு இல்லை. வெறும் சோப்பும் சீப்பும் தான் இருக்கிறது. மேலும் வைக்கப் பட்டிருக்கின்ற பொருட்கள் ஒரு கிலோ, இரண்டு கிலோ என்ற கணக்கில்தான் வைக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களில் 10 பைசா, 20 பைசா என்று இருந்தால்தான் வாங்கக்கூடிய அளவுக்கு கிராம மக்கள் இருக்கிறார்கள். ஒரு கிலோ இரண்டு கிலோ என்ற அளவுக்கு வாங்கக்கூடிய வசதி இல்லை. இந்த நிலையில் சிறு விவசாயிகளுக்கு இந்த நியாயவிலைக் கடைகள் வந்து உள்ளபடியே எந்தவித நன்மையும் இல்லை. குறிப்பாக கூடுவாஞ்சேரியில் நியாயவிலைக்கடை திறந்து மூன்று நாட்கள் தான் நடந்தது. மூன்று நாட்களில் மூடுவிழா செய்து விட்டார்கள். அது மட்டுமல்ல, ஒரு தொழிலாளிமட்டும் தான் அங்கு வேலை செய்து கொண்டிருந்தான். இதைப்பற்றி அமைச்சரின் பார்லிமெண்டரி செயலாளரிடத்தில் சொல்லியிருக்கிறேன். ஒரே ஒரு ஆளை அப்பாயிண்ட் செய்து விட்டு உடனடியாக நிறுத்திவிடுகிறார்கள். இப்படிப்பட்ட காரியங்களை இந்த சர்க்கார் செய்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையைமாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நேற்றைய முன்தினம் திரு. முத்தையா அவர்கள் மதுவிலக்கு கொள்கை திவிரமாக நடைபெற்று வருகிறது என்று சொன்னார். எங்கு தீவிரமாக இருக்கிறது என்று தெரியவில்லை. என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால், எங்கும் கள்ளச்சாராயம் காய்ச்சுகிறார்கள். இதைப்பற்றி அங்குள்ள சப்-இன்ஸ்பெக்டருக்கும் தெரிவித்திருக்கிறோம் ஆனால் எஸ். ஐ-யும் இதில் பார்ட்னர். என்று சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் சொன்னேன். அங்குள்ள எஸ். ஐ. நெடுஞ்செழியன் பாராளுமன்ற உறுப்பினருக்கு பாதுகாப்பு கொடுத்தார் என்பதற்காக என் அண்ணனுடைய மகன் பேரில் பொய் வழக்கு போட்டிருக்கிறார். சபை முன்னவர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் திருப்போரூர் காவல் நிலையத்தில் எஸ். ஐ. யாக இருக்கக்கூடிய நெடுஞ்செழியன் என்கிறவர். பாராளுமன்ற உறுப்பினருக்கு பாதுகாப்பு கொடுத்தார் என்ற காரணத்திற்காக என் அண்ணன் மகன் பேரில், எம். எல். ஏ. தூண்டுதலின் பேரில் வெட்டி வா என்று சொன்னதாக அந்த எஸ். ஐ. வழக்கு போட்டிருக்கிறார், இதற்கு ஆதாரம் காட்ட தயாராக இருக்கிறேன். இதே எஸ். ஐ. என்ன செய்கிறார். ஒவ்வொரு கடைக்கும் நூறு ரூபாய் வசூல் செய்து கொண்டிருக்கிறார். எங்கு பார்த்தாலும் சாராயம் ஆறாக ஓடுகிறது-சட்டம், ஒழுங்கு சரியாகநடைபெறுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்கே சட்டம் ஒழுங்கு நடைபெறுகிறது. நாங்கள்

செய்தோம் என்று சொல்லுகிறீர்கள். நீங்களாவது இப்போது நாங்கள் செய்த தவறை திருத்திக்கொள்ள வேண்டாமா? நீங்களும் அதையே தான் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில்—இப்போது ஜனநாயக அரசு என்று சொல்லுகிறார்கள்——புரட்சித் தலைவர் செய்வதைப்போல் இந்தியாவில் யாரும் செய்ய முடியாது என்று சொல்லுகிறார்கள். ஆனால் என்ன நடக்கிறது. காட்டாங்குளத்தூர் அருகே மறைமலை நகரில் ஒரு விழா நடந்தது.

[பிற்பகல் 12·40]

மறைமலை நகரிலே 18-1—79-லே இருந்து 22—1—79 வரை 5 நாட்களுக்கு சாரணர் விழா நடைபெற்றது. அந்த விழாவிலே பிரதமர் அவர்களும் கலந்து கொண்டார்கள். நமது முதல்வர் அவர்களும் கலந்து கொண்டார்கள். நான் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர். அதிலே அரசு வாகனங்களும் பயன்படுத்தப்பட்டன. அது ஒரு தனியார் விழா அல்ல. அதற்காக அரசாங்கமே அழைப்பு போட்டிருந்தது. ஆனால், அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எனக்கு அழைப்பில்லை. அதிலும் நான் ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகன். அப்படிப்பட்ட ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகனுக்கு, அதுவும் சட்ட மன்ற உறுப்பினருக்கு அழைப்பு அனுப்பவில்லை. அப்படி அனுப்பாதது மட்டுமல்ல.......

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த விழாவிற்கு அரசு பணம் தந்திருந்தாலும், அதை நடத்தியவர்கள் டெல்லியிலே இருந்து வந்த சாரணர் இயக்கத்தை சார்ந்த நேஷனல் கமிஷனர் ஆவார்கள். அவர்கள் சொன்னபடியே தான் அந்த விழா நடத்தப்பட்டது என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம் : சரி, எனக்கு அழைப்பு அனுப்பவில்லை. பரவாயில்லை. ஆனால், அந்தப் பகுதியிலே உள்ள பஞ்சாயத்து தலைவருக்கும் அழைப்பு அனுப்பவில்லை......

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அவர்கள் எந்த முறையிலே காரியங்கள் நடந்தப்பட வேண்டுமென்று விரும்பினார்களோ, அந்த முறையில் காரியங்கள் நடைபெற்றன. அழைப்பிதழ் அனுப்பவில்லை என்று சொன்னால் அதிலே பொருள் இருக்கிறது. அதைவிட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். 1974-லிருந்து 76 வரைக்கும், இரண்டு ஆண்டுகளுக்கு நான் இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். ஒரு விழாவிற்குக் கூட திராவிட முன்னேற்றக் கழக அரசு என்னைக் கூப்பிடவில்லை.



திரு. கெ. சொக்கலிங்கம் : அப்படி நாங்கள் தவறு செய்தோம் என்று சொன்னால், நீங்கள் செய்ததும் தவறு என்று ஒப்புக்கொள்கிறீர்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த தவறு செய்தோம் என்பதிலே ஏகபோகம் கொண்டாட வேண்டாம்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, இந்த அவையிலே நான் பலமுறை சொல்லி, ஒரு விழாவிற்கு என்னை அழைத்தார்கள். எதற்காக அழைத்தார்கள் என்று நான் போய்ப் பார்த்தேன். அந்த விழாவின் அழைப்பிதழிலே என் பெயர் இருந்ததே தவிர, அங்கு போடப்பட்டிருந்த கல்லிலே என் பெயரைக் காணவில்லை. பரவாயில்லை. போகட்டும். இன்னொரு விழாவிற்கு அமைச்சர் இராகாவானந்தம் அவர்கள் வந்தார்கள், அதிலே இன்விடேஷனிலும் என் பெயரில்லை, கல்லிலேயும் என் பெயரில்லை. அதைப்பற்றி அங்குள்ள அதிகாரியிடம் கேட்டபோது, அமைச்சர் அவர்கள்தான் போட வேண்டாம் என்று சொன்னார்கள். எப்படியாவது நீங்கள் பிழைத்துப் போங்கள். அப்போது நான் ராணிபேட்டையில்தான் இருந்தேன், எங்களை கூப்பிடுவதிலே உங்களுக்கு ஒரு பயம் இருக்கிறதே, அதுவே எங்களுக்குப் போதும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, திரு. துரை முருகன் அவர்கள் மாணவராக இருந்த காலத்திலிருந்து எனக்கு மிகவும் பழக்கமானவர். அவர் பெயரை வேண்டாம் என்று நான் சொல்லவில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படி அந்த அதிகாரி சொல்லியிருந்தால், அது முழுக்க முழுக்க தவறானது. பொய்யானது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் ; தலைவர் அவர்களே, அதிகாரி பேரில் ஒரு குற்றச்சாட்டை திரு. துரைமுருகன் அவர்கள் சுமத்தியிருக்கிறார்கள் என்று நான் கருதிக் கொள்ளவா அல்லது அப்படி அவர் சொல்வதன் மூலம் தன்னுடைய எண்ணத்தை எடுத்துச் சொல்வதற்கு இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்கிறார்களா? அதிகாரிதான் இதைச் சொன்னார் என்றால், அந்த அதிகாரியின் பெயரை தயவுசெய்து சொல்ல முடிந்தால் சொல்லுங்கள், இல்லாவிட்டால் என்னிடத்தில் தனியாக வந்து சொன்னால். அதன் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. துரை முருகன் அவர்கள் சொன்னதை அவ்வளவு அலட்சியப் படுத்தக் கூடாது என்பதிலே எனக்கு அக்கறை உண்டு.

திரு. கெ. சொக்கலிங்கம் : அழைப்பு வராவிட்டால் பரவாயில்லை. ஆனால், இது ஒரு ஜனநாயக அரசு, கட்சி சார்பற்ற அடிப்படையிலே நடக்கின்றது என்று சொல்லும் போது, இது ஜனநாயக முறைப்படி செயல்படாத காரியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, வெள்ள நிவாரணப் பணி. என்னுடைய தொகுதியிலே............

திரு. என். பழனிவேல் ; தற்போது நமது நிதி அமைச்சர்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது, திடீரென்று எழுந்து பேசக்கூடாது. தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. கெ. சொக்கலிங்கம் : என்னுடைய தொகுதியிலே ஒரு வெள்ள நிவாரணப் பணியைப் பற்றிச் சொல்லி மூன்று மாதங்கள் ஆகின்றது. என்னுடைய தொகுதியிலே கல்வாய் என்ற கிராமத்தில் ஒரு ஏரி உடைந்து, அருகிலுள்ள ரோடும் உடைந்து போயிற்று. இதை உடனடியாக கவனிக்க வேண்டும். இந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று அங்குள்ள எக்சிகியூடிவ் என்ஜினியர், மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே எடுத்துச் சொன்னேன்,

சொல்லியும் செய்யவில்லை. அதிகமான மழை பெய்து ஏரி உடைந்து, ரோடு உடைந்து இதுவரை செப்பனிப்படவில்லை. அரசு மெத்தனமாக இருக்கிறது. வெள்ள நிவாரணப் பணியில் ஒதுக்கீடு இல்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சொல்லியும் ஒன்றும் நடைபெறவில்லை எந்த அதிகாரிகளைக் கேட்டாலும் பணம் ஒதுக்கப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். மந்திரிகள் இந்த ஆட்சியில் பாலாறு, தேனாறு ஓடுகிறது, எல்லாரும் சுபிட்சமாக இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நடைமுறையில் அப்படி இல்லை. அரசு உடனடியாக அதைச் செப்பனிடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்பாக்கத்தில் என்னுடைய பகுதியான கோவளத்தில் டேபிள் சால்ட் தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டும். எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதிக்குச் செய்கிற நல்ல காரியமாக இருக்குமென்று அவை முன்னவர் அவர்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அரங்கநாதன் அவர்கள் பேசும்போது இந்தியாவிலேயே நாங்கள்தான் கவர்னர் உரையிலேயே முருகையன் கொலையைப் பற்றிப் பகிரங்கமாகக்கண்டித்திருக்கிறோம் என்று சொன்னாகள். இந்தியாவில் செய்யாத காரியத்தைச் செய்ததாகச் சொல்லக் கூடியவர்கள் இளஞ்செழியன் கொலையைப்பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. முருகையன் கொலையைப் பொறுத்த விசயம் பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டி விடுவது மாதிரி இருக்கிறது. இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று எதற்கும் அடிக்கடி சொல்லுகிறார்களே தவிர கொலைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. இந்த அரசு கொலைக்குக் குறி பார்க்கிற அரசாக இருக்கிறது, அதிலும் தாழ்த்தப்பட்டவர்களையே கொலை செய்கிற இந்த அரசு தாழ்த்தப்பட்டவர்களுக்கு நன்மை செய்வதாகக் கூறிக் கொண்டிருக்கிறது என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.





* திரு. மு. சுந்தரராஜன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே கவர்னர் ஆற்றிய உரையின்மீது நன்றி தெரிவிக்கும் வகையில் ஆளும் கட்சியின் சார்பாகப் பேசுகிற வாய்ப்பு பெற்றதற்காக முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே வரவேற்கத்தக்க பல அம்சங்கள் இருக்கின்றன. முதலாவதாக, மின் உற்பத்தியைப் பற்றிச் சொல்லுகிறபோது மின் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பல புதிய திட்டங்களை உருவாக்கி இருப்பதோடு, இந்த அரசு விவசாயிகள் மீதும், அதே நேரத்தில் சிறு தொழில்கள் செய்கிறவர்கள் மீதும் நம்பிக்கை வைத்திருக்கிறது என்று கூறும் அளவில் மின்வெட்டு வருமானால் விவசாயிகளும், சிறு தொழில்களும் பாதிக்காத வகையில் மின்சார சப்ளை இருக்குமென்று சொல்லியிருப்பதைப் பார்க்கிறபோது அது அவர்களுக்குக் கொடுக்கின்ற மாபெரும் சலுகை ஆகும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்,

இரண்டாவதாக, கிராமப் பகுதிகள் முன்னேற்றத்திற்காக பல திட்டங்களைத் தீட்டப் போகிறோம் என்று கவர்னர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் பலரும் கிண்டலும் கேலியுமாகப் பேசினார்கள். கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் காமராஜர் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு விட்டன என்றார்கள். வடிகால் வாரியங்கள் அந்தக் கிராமங்களுக்கு எதற்கு என்று கேட்கிற அளவில் இங்கே பேசப்பட்டது. அவர்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன்—பள்ளிக்கூடங்கள் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது, ஆனால் கட்டடங்கள் இருக்கின்றனவா என்பதை அந்தந்த தொகுதியில் இருக்கிற எம். எல். ஏ. க்களைக் கேட்டால் சொல்வார்கள் என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நிறைய ஊர்களில், கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டாலும் அவை கூரைகளிலும், மரங்களின் இடையிலும் நடந்து கொண்டிருக்கும் காட்சியைத்தான் இன்றைக்கும் காண்கிறோம். அப்படிப்பட்ட கிராமங்களில் கட்டட வசதி இன்னும் பல வசதிகளைச் செய்து தருகிற இந்தப் புதிய திட்டத்தை உண்மையிலேயே அத்தனை பேரும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பல உறுப்பினர்கள் விவசாயிகளுக்கு இந்த அரசு ஒன்றுமே செய்யவில்லை, அவர்களுக்கு உதவும் திட்டத்தை அறிவிக்கவில்லை என்று சொன்னார்கள். இந்தச் சர்க்கார் விவசாயிகள் மேல் கொண்டிருக்கிற அக்கறையை எடுத்துக்கூற விரும்புகிறேன். எங்களுடைய பிற்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தை போன்ற இடங்களில் பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் விவசாயிகளும் கிராமங்களும் பயன் அடைகிற வகையில் ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் 5 லட்சம் ரூபாய் மானியமாகக் கொடுக்கிற திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். பால் மாடுகள் வாங்கவும், உழவு மாடுகள் வாங்கவும், வண்டிகள் வாங்கிக் கொடுக்கவும் 20 லட்சம் ரூபாய் மானியமாக ஒதுக்கியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12·50]

அங்கே ஆட்டுப் பண்ணைகள் அமைப்பதற்காக சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் தள்ளுபடியாயும் விவசாயக் கூலிகள் என்றால் அவர்களுக்கு 33.3 என்ற அளவிலே தள்ளுபடி கொடுத்தும் கடன்கள் வழங்குகின்ற திட்டத்தை தமிழக அரசு செய்து கொண்டிருக்கிறது. அதேபோல் தமிழகத்திலே இதுவரை ஆண்டு கொண்டிருந்த எந்த அரசாங்கமும் அறிவிக்காத புதிய திட்டத்தை சமீபத்திலே நம்முடைய அரசு அறிவித்தது. புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வாழை மரங்கள், மற்றப் பயிர்கள் பாதிக்கப்பட்ட நேரத்திலே—வேறு எந்த சர்க்காரும் கடன்கள் தான் வழங்கிக்கொண்டு வந்திருக்கிறார்கள்—புரட்சித் தலைவரின் அரசுதான் வாழை மரங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 500 ரூபாயும் வெற்றிலைக் கொடிக்கால் பழுதுபட்டிருந்தால் 100 ரூபாயும் மானியமாகக் கொடுக்கின்ற புதிய திட்டத்தை விவசாயிகளுக்கு வழங்கியது.

இங்கே பேசியவர்கள் சொன்னார்கள், எதிர்க்கட்சித் தலைவருக்கு மரியாதை இல்லை, பாதுகாப்பு இல்லை என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கெல்லாம் சொல்லிக்கொள்வேன். புரட்சித் தலைவரின் ஆட்சியிலேதான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும் அவருக்கும் மரியாதை கிடைக்கும் என்பதைச்சொல்லியிருக்கிறேன். மறைந்த காமராஜர் அவர்களுக்கு இந்த அரசு வந்த பிறகுதான் அவருடைய வீட்டை வாங்கி அவருக்கு நினைவாலயம் ஏற்படுத்தியிருக்கிறது. அது மட்டுமல்ல, மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு காமராஜ் பெயரையும் சேர்த்து அந்தத் தலைவருக்கு மரியாதை கொடுத்தது இந்த அரசு தான். அவருடைய குடும்பம் வறுமையால் வாடிக்கொண்டிருந்தபோது அவருடைய தமக்கையாருக்கு மாதம் 500 ரூபாய் கொடுத்துக் கொண்டிருப்பதும் இந்த அரசு தான். இன்றைக்கு திரு. கக்கனுக்கு மாதம் 500 ரூபாய் கொடுக்கின்ற திட்டத்தை புரட்சித் தலைவர் தான் அறிவித்திருக்கிறார். ஆகவே இந்த அரசு தான் எதிர்க்கட்சித் தலைவர்களை மதிக்கிறது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.



அதே நேரத்திலே காமராஜ், ராஜாஜி, பெரியார் போன்ற தலைவர்களின் பிறந்தநாள் விழாவை அரசே ஏற்று நடத்துகின்ற திட்டமும் புரட்சித்தலைவரின் ஆட்சியிலே தான் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல, இன்னொரு பொய்யை இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஏதோ எம். எல். ஏ. க்கள் தலையிடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள், எந்த ஒரு ஆட்சியை எடுத்துக் கொண்டாலும் ஆளுங்கட்சியைச் சேர்ந்த எம். எல். ஏ. க்கள் மீதே போலீசார் வழக்கு தொடருகின்ற நிலைமை இந்த ஆட்சியிலே இருக்கிறது. நிச்சயமாக நீதியின் வழியிலே ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவரின் ஆட்சியிலே தான் சட்டமன்ற உறுப்பினர்களையே வழக்குகளில் சேர்த்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே சிவகாசிக்குப் பக்கத்திலே எம். புதுப் பட்டியிலே ஒரு கோர சம்பவம் நடைபெற்றது. அதைப் பற்றி ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த சம்பவம் நடந்தவுடனே நடந்த இடத்திற்கு ஒரு அமைச்சரை அனுப்பியதோடு மட்டுமல்லாமல் முதலமைச்சர் அவர்களே நேரடியாக அங்கே வந்து 2$\frac{1}{2}$ மணி நேரத்திற்கு மேல் அமர்ந்து அந்தச் சம்பவத்தைப்பற்றிக் கேட்டு, அதிகாரிகளோடு பேசி இறந்துவிட்ட குழந்தைகளின் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் அரசின் சார்பிலும் அந்த முதலாளிகளின் சார்பிலே 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தது புரட்சித் தலைவரின் அரசைத் தவிர வேறு யாரும் இருக்கமுடியாது. ஆனால் அந்தப் பணம் கொடுப்பதிலே அந்த முதலாளிகள் தில்லுமுல்லுகளைச் செய்து வருகிறார்கள், அவைகளை இந்த அரசாங்கம் நிவர்த்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், அரசாங்கம் கலெக்டர் மூலமாக குழந்தைகளுக்கு அந்தத் தொகையைக் கொடுத்தாக வேண்டுமென்று சொல்லியும் கூட அந்த முதலாளிகள் இன்றைக்கு அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் ஏற்படுத்துவதற்காக டெபுடி லேபர் கமிஷனரிடம் பணத்தைக்கொடுத்து 4 மாதம் கழித்து அவர் வாய்தா என்கிற முறையிலே அவர்களை அலைய வைப்பது அல்லாமல்தான்

கொடுக்கமுடியும் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்தக் குழந்தைகளைப் பறிகொடுத்தவர்களுக்கு அந்த உதவி கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளை அரசாங்கம் விரைவிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

## 7. அரசினர் தீர்மானம்.

### பார்வையாளர் மாடத்திலிருந்து துண்டு அறிக்கை வீசியது குறித்து நடவடிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

''இன்று (14–2–1979) பகல் சுமார் 12·10 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில துண்டு அறிக்கைகளை பேரவைக்குள்ளே வீசி எறிந்து, உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள, சென்னை, 36/4, இந்திரா நகர் வீட்டு வசதி வாரியம் குடியிருப்பில் இருக்கும் திரு. ஆர். குப்புசாமி என்பவர் மகன், திரு. கே. சாரங்கபாணி என்று கூறிக் கொள்ளும் நபர், பெரும் குற்றம் புரிந்துள்ளார். அவருடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர் மூன்று நாட்கள் வெறுங்காவல் (Simple Imprisonment) தண்டனை அளிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பெற்றது.

## 6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

திரு. சு. முத்துசாமி கரையாளர்: தற்காலிகத் தலைவர் அவர்களே, கவர்னர் அறிக்கையிலே சில வார்த்தைகள் பேசலாம் என்று எண்ணுகிறேன். கவர்னர் அறிக்கையைப் பார்த்தால் அதில் விவசாயிகளைப் பற்றி ஏதேனும் ஒன்று சொல்லியிருக்கிறார்களா என்றால் ஒன்றுமே இல்லை என்றே கூறலாம். விவசாய விளைபொருட்களைப்பற்றி எடுத்துக்கொண்டால் நெல்லைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்களே தவிர வேறெதைப் பற்றியும் சொல்லவில்லை. விவசாயி என்றால் நெல்லை மட்டும் தான் விளைவிக்கிறானா? பருத்தியை விளைவிக்கிறான். அதன் விலை எவ்வாறு இருக்கிறது என்று இந்த அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? பருத்தி விலை குறைந்துகொண்டே





போகிறது. ஆனால் துணியின் விலை ஜாஸ்தியாகிக் கொண்டே போகிறது. அதற்குக் காரணம் என்னவென்று உங்களால் கண்டு பிடிக்க முடியாவிட்டாலும் மத்திய அரசிடம் ஆலோசித்தாவது முடிவெடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் இங்குள்ள விவசாயிகளுக்கு இலாபம் கிடைக்கும். அதைப்போல மல்லி, வெங்காயம் எல்லாம் இருக்கின்றன.

வெங்காயத்தை எப்படிப் பயிரிட வேண்டும், என்ன உரம் போட வேண்டுமென்றெல்லாம் சொல்கிறோம். இப்பொழுது வெங்காயத்தின் விலை எப்படியிருக்கிறது? வெங்காயம் பயிர் செய்பவர்களுக்குக் கட்டுப்படியாகவில்லை. அதற்கு உரம் போடும் செலவெல்லாம் இருக்கிறது. அவர்கள் தங்களுக்குக் கட்டுப்படியாகவில்லை என்று சொல்கிறார்கள். இந்த நிலைமை மாற வேண்டுமென்றால் வெங்காயத்தின் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டிலே மழை பெய்யாவிட்டால் பயிர் வீணாகி விடுகிறது. மழை ஜாஸ்தியாக இருந்தாலும் வெள்ளம் வந்து அடித்துக் கொண்டு போய் பயிர் போய்விடுகிறது. அப்பொழுது விவசாயிக்குப் பாதுகாப்பு வேண்டாயா? பயிர்ப் பாதுகாப்புக்கு இன்ஷ்யூரன்ஸ் திட்டம் கொண்டு வர வேண்டுமென்று எத்தனையோ வருடங்களாக இந்தச் சட்டசபையிலே அரசாங்கம் சொல்லியிருக்கிறது. அதற்காக ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா? அதையெல்லாம் எடுத்தால்தான் விவசாயிகள் நம் பக்கம் வருவார்கள். விவசாயிகளுக்கு ஏதேனும் நன்மைகள் செய்து அரசாங்கம் நமக்கு நன்மை செய்கிறது என்ற உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்,

அடுத்தாற்போல், 13,400 நியாய விலைக் கடைகள் திறந்து விட்டோம் என்று சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே 30 கடைகள் இருக்கின்றன. ஒரு நாள் எல்லாக் கடைகளுக்கும் போய்ப் பார்த்தேன். ஒரு கடையிலாவது 100 ரூபாய்க்கு மேல் உள்ள சாமான்கள் இல்லை. ''ஏன் ஐயா, கடையைத் திறந்து வைத்திருக்கிறீர்கள், வியாபாரத்திற்கு உணவுப் பொருட்களை வைக்க வேண்டாமா'' என்று கேட்டால், ''எல்லாம் எழுதியிருக்கிறோம். வந்து விடும்; வந்து விடும்'' என்று சொல்கிறார்கள். ஏன் வரவில்லை என்ற பிரச்னையை நீங்கள் ஆலோசிக்க வேண்டுமென்று தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

நிலமற்ற ஏழைகளுக்கெல்லாம் வீடுகட்ட மனை கொடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டோம். எல்லா அரசாங்கங்களுமே இதற்கு முன்னால் கொடுத்திருக்கின்றன. சிலபேருக்குப் பட்டா கூட நாம் கொடுத்திருக்கிறோம். இப்பொழுதுள்ள அரசாங்கத்திலே, என்னுடைய தொகுதியிலே முதல்வர் வந்திருக்கும்பொழுது தென்காசி தொகுதியிலே 110 பேருக்குப் பட்டா கொடுத்ததாகச் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு, அந்த ஃபங்க்ஷன் நடை

[திரு. சு. முத்துசாமி கரையாளர்] [1979 பிப்ரவரி 14

[பிற்பகல் 1·00]

பெறவில்லை. யாருக்கெல்லாம் பட்டா கொடுக்கவேண்டுமோ அவர்களையெல்லாம் திருநெல்வேலியிலிருந்து அழைத்துக் கொண்டு போனார்கள். 1½ வருஷமாயிற்று. இன்னமும் அவர்களுக்கு பட்டா கிடைக்கவில்லையென்பதை மந்திரி அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். அவர்கள் அதற்கு உடனடியாக வேண்டியதைச் செய்வார்களென்று நம்புகிறேன்.

இலட்சம் வீடு கட்டக்கூடிய திட்டத்தை நான் மிகவும் வரவேற்கிறேன். கேரளத்திலே 4 வருஷங்களுக்கு முன்னாலே அதைச் செய்து விட்டார்கள். இங்கு வீடுகளைக் கட்டும்போது இதற்கு முன்னால் பட்டா கொடுத்திருக்கிறார்களா இல்லையா என்று பார்த்து, அவர்களெல்லாம் வீடு கட்டாமலிருப்பார்கள். அம்மாதிரி நிறையபேர் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் முதலிடம் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களுக்கெல்லாம் வடிகால் அமைக்கவேண்டும், குடிநீர் வழங்கவேண்டும், பள்ளிக்கூடம் கட்டவேண்டுமென்று சொல்கிறார்கள். அது நல்ல திட்டம்தான். ஆனால், இதற்கு முன்னாலே ஒரு ஊரிலே தாய்க் கிராமம் இருந்திருக்கும். அதனுடைய பக்கத்திலே இன்னொரு காலனி கட்டிக் கொடுத்திருக்கிறோம். அந்த இடத்திலே தாய்க் கிராமத்திற்கு தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. அந்தக் காலனிக்குத் தண்ணீர் இருக்கிறது. இரண்டும் 200 அடிக்குள்ளேதானிருக்கிறது. அதனாலே முதலாவதாக தாய்க் கிராமத்திற்கு முதலிடம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது எல்லா இடத்திலும் பள்ளிக்கூடம் கட்ட வேண்டியதுதான். என்னுடைய தொகுதியிலே செங்கோட்டையிலே. முன்னால் கேரளாவோடு இருந்தபோது, அந்த பள்ளிகள் பூராவும் அரசாங்கப் பள்ளிகளாகத்தானிருந்தன. அவற்றை ரிப்பேர் செய்து 10 வருஷம் ஆயிற்று. இப்பொழுது புதிதாக பள்ளிகட்டியிருக்கிறார்கள், 1974-லே. 1974-லே கட்டியதற்குப் பிறகு வெள்ளையே அடிக்கவில்லை. பள்ளிக்கூடம் தான் இப்படி இருக்கிறது என்று பார்த்தால், ஆஸ்பத்திரியிலே நோயாளியைப் போய் பார்த்தால் நமக்கே நோய் வந்துவிடும் போலிருக்கிறது. அவ்வளவு மோசமான நிலைமையிலேயிருக்கிறது. மந்திரி அவர்கள் அதற்கு உடனே தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

கரும்பு சக்கையை வைத்து காகிதம் தயாரிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நல்ல திட்டம்தான். முன்னால் புகளூரிலே அது மாதிரி ஒரு திட்டம் போடப்பட்டு, அது ரெமுனரேட்டிவ் ஆக இல்லையென்று சொல்லிவிட்டார்கள். ஆகவே ஆரம்பிப்பதற்கு முன்னால் ரெமுனரேட்டிவ் ஆக



1979 பிப்ரவரி 14] [திரு. சு. முத்துசாமி கரையாளர்]

இருக்கிறதா என்று பார்த்தால் நல்லது. அப்படி ஆரம்பித்தால், திருநெல்வேலியிலே சங்கரி பக்கத்திலே ஆரம்பித்தால் நன்றாக இருக்கும். இந்த ஆளுநர் உரைமீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கோ. தனுஷ்கோடி: தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை வழிமொழிந்து பேச வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மனித வாழ்விற்கு மிகத் தேவையான காரியங்களை செய்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் 'ஆட்சியிற் இன்று உணவும் உடையும் உறைவிடமும் கொடுக்கின்ற உறுதி மொழியை ஆளுநர் அவர்கள் தந்திருக்கிறார்கள். மக்களுக்குத் தேவையான காரியங்களை இந்த இரண்டு ஆண்டு காலமும் நாம் முன்நின்று நடத்திவருகிறோம்,

இன்று ஊராட்சி மன்றங்களிலும் சரி, அதைச் சுற்றியிருக்கிற கிராமங்களிலும் வாழ்கின்ற படிப்பற்ற ஒவ்வொரு மனிதனுக்கும் வேலை உத்தரவாதம் தருகிற அந்த உயர்வான கொள்கையை தமிழக அரசு அறிவித்திருக்கிறது. அதன்மூலமாக மக்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்படுகிற காலகட்டம் வந்தாகிவிட்டது. அந்தக் கொள்கையைச் சொன்ன புரட்சித் தலைவருக்கு நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

கோதுமைக்காக கொடுக்கிற மானியத்தைப் போல் தமிழகத்தில் நாம் சாப்பிடுகிற அரிசிக்கும் கொடுத்தாக வேண்டும், என்று மத்திய அரசிடம் கேட்கப்பட்டிருக்கிறது, அரிசி சாப்பிடுகிற பொது மக்களுக்கு அது பயன்பட வேண்டுமென்ற வகையில், மைய அரசை வேண்டுகிற இந்தத் தமிழக அரசை நான் பாராட்டுகிறேன்.

நலிந்து கிடக்கிற மில்களையெல்லாம் திறந்து இன்று மாநிலத்திலே தொழில் அமைதி எற்படுத்துகிற அளவில் தமிழக அரசு நடைபோட்டு வருவதை நான் பாராட்டுகிறேன். அந்த அளவில் அனைத்து மில்களையும் திறந்திருக்கிறது.

பருத்தி நூலை உற்பத்தி செய்கின்ற முதலாளிகளுக்கு உறுதுணையாக இருக்கும் தொழிலாளிகளுக்கும் தொழில் பாதுகாப்புக் கொடுத்து அவர்கள் வாழ வகை செய்கின்ற வகையில் தமிழக அரசு திட்டம் இட்டிருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வீடுகள் கட்டித் தருகின்ற திட்டத்தில் இந்த ஆண்டு ஒரு லட்சம் வீடுகளை கட்டித் தரவேண்டும் என்று சொல்லுகின்ற கருத்துக்களைப் படிக்கும்போது எங்களைப் போன்ற ஏழை எளியவர்களுக்குப் பெருமிதமாக இருக்கின்றன; கட்டப்பட்ட, கட்டப்பட வேண்டிய வீடுகளை கட்டி முடிப்பது பற்றி கவர்னர் உரையிலே இருப்பதை நாங்கள் பாராட்டாமல் இருக்க முடியாது.

[திரு. கோ. தனுஷ்கோடி] [1979 பிப்ரவரி 14

மாவட்டம்தோறும் தொழில் மையங்கள் திறந்து அதன் மூலமாக, படித்த, படிக்காதவர்களுக்கு வேலை வாய்ப்பினை தருகின்ற திட்டத்தின் மூலமாக, இன்று ராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு இரண்டு இடங்கள் திறக்கப்பட்டு, 'சிப்காட்' 600 ஏக்கர் நிலத்தில், வறட்சியான இந்த ராமநாதபுர மாவட்ட மக்களுக்கு அளிக்க முன்வந்திருப்பதற்கு பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதன்படி ராஜபாளையம் பகுதியில் தமிழக அரசு 300 ஏக்கர் நிலத்தைக் கொடுத்து தொழில் மையம் அளித்தால், என் தொகுதியைச் சுற்றியுள்ள அத்தனை ஏழை எளிய மக்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்க ஏதுவாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து விருதுநகர் பகுதியிலே எண்ணை உற்பத்தி செய்கின்ற சிறு வியாபாரிகள் பானி என்கின்ற பொருளை உபயோகிக்கிறார்கள். அதை மாட்டுத் தீவனம் உண்டாக்கிக் கொடுக்கின்ற பெரியமுதலாளிகள் இந்த பானி என்ற பொருளை ஒரு டிரம் 60 ரூபாய்க்கு வாங்கிச் சென்று பக்குவப்படுத்தி அதை மீண்டும் 700, அல்லது 800 ரூபாய்க்கு விற்றுவிடுகிறார்கள். எண்ணை உற்பத்தி செய்கின்ற சிறு உற்பத்தியாளர்களைக் கருதி, அவர்களுடைய தொழிலுக்கு ஏற்றாற்போல் பானியைக் கொடுத்து உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எக்ஸ்பெல்லர்க்கு இந்த பானி தேவைப்படாது. ரோட்டரி மில் நடத்துகிற சிறு உற்பத்தியாளர்களுக்கு கட்டாயம் பானி தேவைப்படுகிறது. எனவே அவர்களுக்கு அந்தப் பானியைக் கொடுத்து உற்பத்தித் திறனை பெருக்குவதற்கு தமிழக அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காந்தி சொன்ன கிராம வளர்ச்சித் திட்டத்தை, புரட்சித் தலைவர் ஒருங்கிணைந்த கிராமப்புற திட்டமாக அறிவித்து இருக்கிறார்கள். இன்று ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்கப்படுகிற அத்தனை காரியங்களையும் தமிழக அரசு செய்து கொண்டு இருக்கிறது. இன்று ஏழை எளிய மக்களுக்கு வேண்டிய அத்தனை காரியங்களும் அவர்கள் வீடு தேடி சென்று கிடைக்கக் கூடிய அளவுக்கு சூழ்நிலை இருக்கிறது. அதைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் கிடைக்கின்ற அத்தனை கனி வளங்களையும் தேடிப்பிடித்து, அதற்குத் தேவையான தொழிலையும், தொழில் மையங்களையும் அமைத்திருப்பதைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்,

சென்னை மாநகரத்திலேயே எல்லா அரசு அலுவலகங்களும் குவிந்துள்ள நிலையில். மாநிலத்தின் பிற பகுதிகளுக்கு எடுத்துச் சென்று அதிகாரிகளும் மக்களும் ஒன்றிணைந்து மக்களுடைய மன நிலையை பகிர்ந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்து கொடுத்த தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1979 பிப்ரவரி 14] [திரு. கோ. தனுஷ்கோடி.]

அயல்நாடுகளுடன் தொடர்பு கொண்டு அவர்களுடைய விஞ்ஞான நுட்ப அறிவைக் கொண்டு தமிழகத்திலே இரசாயன உர உற்பத்தித் தொழிற்சாலையை துவங்க. மாண்புமிகு புரட்சித் தலைவர் எடுத்துக் கொண்ட முயற்சியைப் பாராட்டி, நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 1.10]

* திரு. தே. ஞானசிகாமணி: பேரவை மாற்றுத் தலைவரவர்களே. ஆளுநர் உரையின் மீது பேசுகிற இந்த நேரத்தில், எங்கள் மாவட்டத்தில் உள்ள ஒரு சில பிரச்னைகளைப் பேச விரும்புகிறேன். அண்மையில் ஏற்பட்ட பெரும் மழை, வெள்ளத்தின் காரணமாக அந்த மாவட்டத்தில் சுமார் 4 பேர் உயிர் இழந்தார்கள், சுமார் 4,000-க்கும் அதிகமான வீடுகள் ரூ. 10,000 மதிப்புள்ள வீடுகள் முதல் சிறிய குடிசைகள் வரை நாசமாகிப் போய்விட்டன. ஏராளமான வெத்திலைக் கொடிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அழிந்து விட்டன. குளங்கள். வாய்க்கால்கள், உடைப்பெடுத்து ஏராளமான நெல் பயிர்கள் சேதம் ஆகிவிட்டது, அதேபோன்று சிறு தொழில்கள் செங்கல், கயிறு போன்ற தொழில்கள் நாசமாக்கப்பட்டு இருக்கின்றன. இப்படி கொடுமையான நிகழ்ச்சிகள் நடந்து இருக்கிறது. அதனால் 15,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த கவர்னர் உரையில் மற்ற பிரதேசங்களில் நடைபெற்றுள்ள சேதத்தைப்பற்றிக்குறிப்பிட்டு இருக்கிறபோது, எங்கள் பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளச் சேதத்தைப் பற்றி மட்டும் குறிப்பிடவில்லை. மாறாக மறைக்கப் பட்டும் இருக்கிறது, என்பதை மிகவும் வேதனையோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிக்கையிலே வெள்ளச்சேதப் பகுதிகளில் சில உதவிகள் செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. வீடுகளை இழந்தவர்களுக்கு ரூ. 100-ம், ஒரு சென்ட் வெத்திலைக் கொடி சேதம் அடைந்தவர்களுக்கு ரூபாய் 5-ம் கொடுக்கப்பட்டது. ஒரு சில விவசாயிகளுக்கு விதை கொடுக்கப்பட்டது, மணல் மேடிட்டுவிட்ட பகுதிகளில் ஏக்கருக்கு ரூ. 1,000 கொடுக்கலாம் என்று சொன்னார்கள், ஆனால் கொடுக்கப்படவில்லை. வீடு இழந்துபோனவர்களுக்கு வேண்டிய வசதிகள் கொடுக்கப்படவில்லை. அதே நேரத்தில் கேரளமாநிலத்தில் திருவனந்தபுரத்திற்கு அருகாமையில் ஏற்பட்ட சேதத்தில் ஒரு வீட்டிற்கு ரூ. 600-ம், 2 மாதத்திற்கு ரேஷனும் கொடுத்தார்கள். அது மாதிரி நம்முடைய அரசு செய்யவில்லை, ஆகவே, எங்கள் பகுதியில் விளைந்த சேதம் மறைக்கப்பட்டு இருக்கிறது என்று மீண்டும் சொல்கிறேன்.

இரண்டாவதாக, தேவகிரி தேயிலைத் தோட்டம் இருக்கிறது. அந்தத் தோட்டத்தில் தொழிற்சங்கம் வைக்கும் உரிமை மறுக்கப் பட்டு இருக்கிறது. அங்கே தொழிற்சங்கத்தை ஆரம்பித்தவர்கள்

வேலையில் இருந்து நீக்கப்பட்டு இருக்கிறார்கள். மேலும்' அங்கேயுள்ள தொழிலாளர்கள் மீது 8-10 கேஸ்கள் போலீசாரால் ஜோடிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அதை எதிர்த்து 500 தொழிலாளர்கள் ஊர்வலம் நடத்தினார்கள். அவர்களை போலீசார் பயமுறுத்திக்கொண்டு இருக்கிறார்கள். கடந்த 23-ம் தேதி நடந்த பந்தில் குலசேகரம் வட்டத்தில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை போலீஸ் தடியடி நடத்தி அந்த தொழிலாளர்கள்மேல், திரிகிறவர்கள் என்று கேஸ் போட்டு 100 பேர் காயம் பட்டுஅவர்கள் பாளையம்கோட்டை சிறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து சிலர் பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்டார்கள். ஆஸ்பிட்டலுக்கு பலர் மருத்துவ மனையை விட்டுவந்தபின்பும் இன்றும் வேலைக்குப் போக முடியாத நிலையில் இருக்கிறார்கள். இந்த ஆளுநர் உரையில் நலிந்துபோன தொழில்களைப் பற்றியும். அந்த தொழில்கள் எப்படி பாதுகாப்பு அளிக்கப்படுகிறது, என்பதைப் பற்றியும் சொல்லப்படவில்லை.

உதாரணமாக எங்கள் மாவட்டத்தில் 75,000 முந்திரி தொழிலாளர்கள் பல மாதங்களாக வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமாக வேலை அளிக்கப்பட வேண்டும் என்று இதற்கு முன்னாலேயே இங்கே நான் குறிப்பிட்டு இருக்கிறேன். நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் அந்தத் தொழிலை அங்கே நடத்த வேண்டுமானால், கேரள முதாலளிகள் நினைத்தால்தான் முடியும் என்று சொன்னார்கள், நான் தெரிவிக்க விரும்புவது, கேரள மாநில முதலாளிகளை நம்பிக்கொண்டு இருக்காமல், மத்திய அரசாங்கத்திடம் வாதாடி கச்சா முந்திரி வாங்கி, அந்த 75,000 தொழிலாளர்களுக்கும் நிரந்தரமாக வேலை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்தது, தமிழ்நாட்டிலே இருக்கின்ற முந்திரி தொழிலாளர்களுக்கு கச்சா முந்திரி கிடைக்காத காரணத்தால் பெருத்த இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தக் கூட்டத் தொடரிலேயே நமக்குத் தேவையான கச்சா முந்திரி கிடைக்க மத்திய அரசு உதவி செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நமது பேரவையில் நிறைவேற்றி, அதை மத்திய அரசுக்கு அனுப்பி வைப்பது பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:</u> தலைவரவர்களே, கேரளாவை நம்பித்தான் தொழிலாளர் நல அமைச்சர் இருப்பதாகச் சொன்னார்கள். எந்த ஆதாரத்தின் அடிப்படையில் அதைச் சொல்கிறார்கள் என்பது புரியவில்லை. இங்கே அத் தொழிலுக்குத் தேவையான 'ரா மெட்டீரியல்ஸ்,' இல்லாததால் சில தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. அதனால் 'காஸ்யூ





ரோ கார்ப்பரேஷன்' மூலம் உதவி பெற்று நம்முடைய நாட்டிலே ந்திரி உற்பத்தியைப் பெருக்கி, பெருமளவில் சாகுபடி செய் தற்கான முயற்சி செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் காள்கிறேன்.

<u>திரு. தே. ஞானசிகாமணி:</u> தமிழ்நாட்டிலே அப்படி முயற்சி ருந்தாலும், சமீபத்தில் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. னிமம் வேஜஸ் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை கரள முதலாளிகள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று.

<u>மாண்புமிகு திரு, எஸ். இராகவானந்தம்:</u> தலைவரவர்களே, ந்திரித் தொழிலாளர்களுக்கு கேரளத்தில் இருப்பதைப்போல றைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று கருத்து சால்லப்பட்டது. நாம் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்கு ன்னால் அந்தத் தொழில் சிறப்பாக நடக்கிறதா என்று பார்க்க வண்டும். 150 தொழிற்சாலைகள் இருந்ததற்குப் பதிலாக ன்றைக்கு 40 தான் இருக்கிறது. அந்த அளவுக்கு குறைந்து ட்டது. அடுத்தபடியாக, ஊதிய உயர்வு செய்வதற்கு 1948 ம் ஆண்டு குறைந்த பட்ச ஊதிய சட்டத்தின்படி நடவடிக்கை டுக்க வேண்டுமென்பது இல்லை. அந்தந்த தொழிலாளர்கள் ந்தந்த முதலாலிகளிடம் ஊதிய உயர்வு கேட்கலாம். இல்லை யன்றால் அரசிடம் வரலாம். அரசின் சமரச முயற்சியைப் பறலாம். இல்லையென்றால் தொழில் நீதி மன்றத்திலே வழக்கு பாடலாம் அதன் மூலம் ஊதிய உயர்வை பெறலாம். எனவே றைந்தபட்ச ஊதிய சட்டம் கொண்டுவந்தால்தான் கிடைக்கும் ன்ற கருத்து தவறானது. தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு காடுக்க நிறைய வசதிகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. தே. ஞானசிகாமணி:</u> தமிழ்நாட்டில் முந்திரித் தொழிலைப் பொருத்தமட்டில் குறைந்தபட்ச ஊதியம் கிடைக்க அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் கிட்டதட்ட 5,000 பனைமரத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் பனைமரத் தொழிலாளர்களுக்கு மதுவிலக்கு ஏற்பட்ட காலம் முதல் சில மானியங்கள் இருந்தன. ஆனால் எங்கள் மாவட்டத்தில் அந்த மானியம் கிடைக்கவில்லை; கடனும் கிடைக்கவில்லை. காதி போர்டிலிருந்து கிட்டத்தட்ட 110 லட்சம் ரூபாய் வரையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பனைமரத் தொழிலாளர்களுக்கு கொடுக்க அனுமதிக்கப்பட்டிருந்தும் கூட எங்கள் மாவட்டத்திற்கு ஒரு சிறு தொகைதான் கொடுக்கப்பட்டது. அங்குதான் இத் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். 300 ரூபாய் விதம் 00 தொழிலாளர்களுக்கு மட்டும்தான் கொடுக்க ஆர்டர் ந்திருக்கிறது. இப்போது அதுவும் கிடைக்க வழியில்லாமல்

இருக்கிறது, அதற்குக் காரணம் கூட்டுறவுச் சங்க நடைமுறைகள் ஒரு காரணம் என்று சொல்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் தவறு செய்தால் அதற்கு அந்தத் தொழிலாளர்கள் பொறுப்பு அல்ல. சம்பந்தப்பட்ட சங்கங்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசோடு தொழிலாளர்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே கூட்டுறவுச் சங்கங்களில் மோசடி இருந்தால் தொழிலாளர்கள் உதவியுடன் அதை சரிபடுத்தி, அவர்களுக்கு மீண்டும் மானியமும் கடனும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

கழிந்த ஆண்டு அந்தத் தொழிலாளர்களுக்கு விபத்து ஏற்பட்டால் 5,000 ரூபாய் கொடுப்பதற்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது; அது சட்டமாக்கப்பட்டது. ஆனால் எங்கள் மாவட்டத்தில் அந்தச் சட்டம் செயல்படவில்லை. பழைய பாக்கி என்ற முறையில் 1972 ஆம் ஆண்டு முதல் கொடுக்கப்பட்டு வந்த 1,000 ரூபாய் மட்டும் கொடுக்கப்பட்டது, 5,000 ரூபாய் கொடுக்கப்படவில்லை. பல முயற்சி செய்தும் முடியவில்லை. கருப்புக்கட்டிக்கு விலையும் மிகக் குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு குறைந்த கூலிதான்—ஒரு நாளைக்கு 1 அல்லது 2 ரூபாய்தான் கிடைக்கிறது. அந்த நிலையில் அவர்களுக்கு உடனடியாக கடனும் மானியமும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நலிந்துபோன தொழில்களில் கன்னியாகுமரி ஜில்லாவில் கயர் தொழில் முக்கியமானது. திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தேங்காய் மட்டை கொண்டு செல்லக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஜில்லாவுக்கு ஜில்லா-ஒரே யாநிலத்திற்குள் -தடை விதிக்கப்பட்டிருப்பது சரியல்ல. கேரளத்திலிருந்தும் கொண்டு வரக்கூடாது. திருநெல்வேலியிலிருந்தும் வரக்கூடாது என்றால் அந்தத் தொழில் அறவே நலிந்துபோய் விடும். ஆகவே, திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து தேங்காய் மட்டை கொண்டு செல்லக்கூடாது என்ற தடையை உடனடியாக நீக்க வேண்டும். அதோடு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அந்தத் தொழிலுக்கு உதவி செய்து, கயர் தொழிலை பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1.20]

அடுத்து கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அண்மையில் திருமதி இந்திரா காந்தியைக் கைது செய்த சமயத்திலே எங்களது மாவட்டத்திலே பயங்கரமான பல நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அந்தச் சம்பவத்திலே பத்து பேர் இறந்து போயிருக்கிறார்கள். அவர்கள் உயிரோடு பஸ்ஸோடு எரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கு முன்னாலும் ஒரு சில சம்பவங்கள் அங்கே நடந்தன. போஸ்டாபீஸ் தீ வைக்கப்



பட்டது. சி. ஐ. டி. யூ. தொழிலாளர்கள் ஆர். டி. ஓ. ஆபீஸ் முன்னாலே சத்தியாகிரகம் நடத்திக்கொண்டிருந்த பந்தல் தீ வைத்து எரிக்கப்பட்டது. ஆனால் அப்போதெல்லாம் போலீஸ் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை; அதற்கெல்லாம் ஒழுங்காக நடவடிக்கை எடுத்திருந்தால் மேலும் பல உயிரோடு எரிக்கப்பட்ட கொடூரமான சம்பவம் நடந்திருக்காது. இதனை சி. பி. ஐ. மூலம் விசாரிக்க வேண்டும் என்று பல அறிக்கைகள் விடுத்தோம். அவை செவிசாய்க்கப்படவில்லை ஆனால் இப்போது அந்தக் கேஸ் சரியான முறையிலே ஜோடிக்கப்படாமல் சூழ்ச்சிகள் நடந்திருக்கின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, எனக்கு நேற்றும் பேசுவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இப்போது கிடைத்திருக்கிற நேரமும் மிகவும் குறைவாகக் கிடைத்திருக்கிறது. ஆகவே வேண்டுமானால் நான் நாளை பேசிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் எவ்வளவு நேரம் பேசுவதற்கு வேண்டும் என்கிறீர்கள்.

திரு. பொ. உத்திராபதி: எல்லோருக்கும் 20 நிமிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்கும் 20 நிமிடம் வேண்டும் என்று கேட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 20 நிமிடம் கொடுக்கப்படவில்லை. 10 நிமிடம்தான் கொடுத்திருக்கிறேன். வேண்டுமானால் 5 நிமிடம் அதிகமாக எடுத்துக் கொள்ளுங்கள். 1.35 மணிக்கு முடித்துவிடலாம்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த 1979 ஆம் ஆண்டில் ஆளுநர் உரை வாசிக்கப்பட்டிருக்கிறது. அதிலே முதல் பக்கத்திலே விவசாயிகள் சம்பந்தப்பட்ட வகையில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் விவசாயிகள் என்கின்றபோது நமது அரசாங்கம் மத்திய சர்க்கார் பக்கம் கண்ணைக் காண்பிக்கிறார்களே தவிர இந்தச் சர்க்காருக்கு விவசாயிகளைப் பொறுத்தவரையில் எந்தக் கொள்கையும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த அரசாங்கத்திற்கு என்ன கொள்கை இருக்கிறது? அந்தக் கொள்கையை அறிவிக்காமல் மத்திய சர்க்காரையே கையைக் காட்டிக்கொண்டிருந்தால் தமிழக விவசாயிகளை மத்திய சர்க்காரைக் காண்பித்து ஏமாற்றிக்கொண்டிருக்கக்கூடிய நிலையில்தான் இந்த அறிக்கை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடிப்படையான கொள்கை இந்த அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1385-ம் பசலி வறட்சி, 1386-ம் பசலி பெரும் வெள்ளம், 1385-ம் பசலி புயல் வெள்ளம், 1388-ம் பசலியிலோ தமிழகம் முழுவதும் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியிருக்கக்கூடிய நிலை, இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே நமது அரசு மத்திய சர்க்காரைக் காண்பித்துக் கொண்டிருக்காமல் காரியம் ஆற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது தமிழக விவசாயிகளின் போராட்டம் உச்ச கட்டத்தை அடைந்து கொண்டிருக்கிறது. ஒரு காலத்திலே சேலத்திலும் கோயம்புத்தூரிலும்தான் விவசாயிகள் போராடினார்கள். ஆனால் இப்போது தமிழகம் பூராவும் விவசாயிகளும் ஒன்றுபட்டு போராடுவதற்கு ஆயத்தமாகி விட்டார்கள். இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னால் 1977-ம் ஆண்டிலேயிருந்து இதுவரை 8 விவசாயிகள் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கிறார்கள். இன்னும் எத்தனை விவசாயிகளைச் சுட்டு வீழ்த்தப்போகிறார்கள் என்று தெரியவில்லை. ஆகவே அந்தப் போராட்டத்தைச் சந்திப்பதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரைக் காண்பிக்காமல் இந்த விவசாயிகள் பெற்றிருக்கக்கூடிய கடன்கள் அத்தனையையும் ரத்து செய்யவேண்டும். கேரளத்திலே கொடுப்பதைப்போல ஒரு குவிண்டால் ஒன்றுக்கு 140 ரூபாய் என்ற அளவில் விவசாயிகளுக்குக் கொடுப்பதாக மத்திய சர்க்காரை எதிர்த்து அறிவிக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல் குத்தகை விவசாயிகளுக்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. குத்தகை விவசாயிகள் பெற்றிருக்கக் கூடிய கடன்கள் ரத்து செய்யப்படவேண்டும். குத்தகை விவசாயிகளின் குத்தகை பாக்கிகள் அனைத்தும் ரத்து செய்யப் படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் பெரியார் நூற்றாண்டு விழா நடத்திக் கொண்டிருக்கிறீர்கள். பெரியாருக்கு உண்மையிலேயே நீங்கள் நூற்றாண்டு விழா நடத்துவதாக இருந்தால் இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய கோயில்கள், மடங்கள் இவற்றின்பேரால் சட்டத்தையும் தமிழ் நாட்டு மக்களையும் ஏமாற்றி வைத்திருக்கக்கூடிய லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களை அரசு எடுக்கவேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல் ஆளுநர் அவர்களது உரையைப் பார்க்கும் போது விவசாயத் தொழிலாளர்களுக்கு இதில் எந்தவிதமான முக்கியத்துவம் இல்லை. விவசாயத் தொழிலாளர்கள், குறிப்பாக ஹரிஜன மக்கள்தான் பெரும்பகுதியினராக விவசாயத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அது கீழத் தஞ்சை, மேலத் தஞ்சை என்று பாராமல் தமிழகத்தில் இருக்கக்கூடிய லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரே நிலையில் கூலி நிர்ணயச் சட்டம் கொண்டுவந்து அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும்



விதத்தில் சட்டம் கொண்டு வரவேண்டும் அதேபோல் குடியிருப்பு தமிழ்நாட்டில் 1975-ல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்விடங்களில், இதுவரை பட்டா கொடுக்கப்படவில்லை, அதற்கு ஆதாரம் இருக்கிறது. இன்றைக்கு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் எங்கள் ஆட்சியில் மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். அதற்கான ஆள்களைப் போட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். என் தொகுதியில் ஒரு இடத்தில் ஒரு சென்ட் கூட இந்த ஆட்சியில் கொடுக்கப்படவில்லை. அதற்கான ஆதாரம் வேண்டுமென்றால் அமைச்சர் அவர்களிடம் தனியாகச் சொல்வதற்குத் தயாராகயிருக்கிறேன். விவசாயத் தொழிலாளர்கள்பால் இந்த அரசின் கொள்கை என்ன? எவ்வளவு சென்ட்ஸ் கொடுக்கப் போகிறார்கள்? எவ்வளவு பேர்களுக்குக் கொடுக்கப்போகிறார்கள்? எவ்வளவு பேர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள் என்ற விவரங்களை புள்ளிவிவரங்களோடு ஆதாரத்தோடு ஆட்சியாளர் சொல்ல வேண்டும். நாங்கள் கொடுக்கப்போகிறோம் என்று சொல்லாமல் கொடுக்கவேண்டும்.

அடுத்து, வேலை வாய்ப்பு, எல்லோருக்கும் வேலை எங்கே கொடுத்திருக்கிறீர்கள்? 1978-ம் ஆண்டு ஒன்றல்ல இரண்டல்ல, 9½ லட்சம் பேர்கள் வேலைத்தேடிதரும் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அதேபோல் இளைஞர் அணி. ஐயாயிரம் பேர்கள் 76-ம் ஆண்டு ஆரம்பமுதல் வேலை செய்தவர்கள், சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதியும் ஐயாயிரம் பேர்களுக்கு இன்றுவரை வேலைவாய்ப்பு அளிக்கப்படவில்லை. ஆக, இதை ஒரு விளம்பரமாக்காமல் உண்மையில் எவ்வளவு லட்சம் பேர்களுக்கு வேலை கொடுக்கமுடியுமோ அந்த அளவிற்கு வேலைவாய்ப்பு, கொடுக்க வேண்டும், கடைசியாக, ஹரிஜனங்களுக்கு இழைக்கப்படும் கொடுமை, ஹரிஜனங்கள் பற்றி பேசுகிறார்கள். விழுப்புரத்தில் 12 ஹரிஜனங்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். நியாயம் கிடைக்கவில்லை. சேலம் மாவட்டத்தில் நடுபட்டியில் ஹரிஜனங்களுக்கு சுடுகாட்டுப்பாதை மறுக்கப்பட்டிருக்கிறது. பொதுக்குளத்திலிருந்து தண்ணீர் எடுக்க பெரிய மனிதர்களால் ஹரிஜனங்களுக்கு மறுக்கப்படுகிறது. 31 ஆண்கள் 9 பெண்கள் ஆளுநர் கட்டடத்திற்கு முன் உண்ணாவிரதம் இருக்கிறார்கள், நன்னிலம் தாலூகா திருப்பாம்புரம் 28 ஹரிஜன மக்கள் தாக்கப்பட்டது மட்டுமல்லாமல் ஒரு ஹரிஜனப் பெண்ணின் சேலை உரியப்பட்டு நிர்வாணமாக தூத்தி அடிக்கப்பட்டிருக்கிறார். மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் வீரையன் அறிக்கை விட்டிருக்கிறார்.

அடுத்து, தர்மபுரி மாவட்ட எங்கள் கட்சி மாவட்ட செயலாளர் திரு. முத்து அவர்களை போலீஸ் ஸ்டேஷனில் வைத்து அடித்திருக்கிறார்கள். இன்னும் நியாயம் கிடைக்கவில்லை. தஞ்சை மாவட்டத்தில் களப்பாலில் குஞ்சி, சேரன் குளத்தில் அய்யாசாமி படுகொலை செய்யப்பட்டு நியாயம் கிடைக்கவில்லை. வழக்கு மன்றம் நிராகரிக்கிறது.

[பிற்பகல் 1.30]

கடைசியாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜி. முருகையன் தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் பிறந்தவர், ஐந்து வருடங்கள் ஊராட்சி மன்றத்தில் இருந்தவர், 10 வருடங்கள் ஊராட்சி ஒன்றியத்தில் பெருந்தலைவராக இருந்தவர், 20 மாதகாலம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். தாழ்த்தப்பட்ட சமூகத்தில் ஈன்றெடுத்த குடிமகன், எஸ். எஸ். எல். ஸி. வரை படித்த இளைஞன், தனது உழைப்பால், தனது சேவையால், உயர்ந்து, நாடாளுமன்ற உறுப்பினராக வந்த ஒருவருக்கு பாதுகாப்பில்லை என்று குற்றஞ்சாட்டுகிறேன், ஆளுநர் உரையில், குற்றவாளிகளை தண்டிக்கப்போவதாக சொல்லியிருக்கிறார்கள்...................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் அவையின் நேரத்தை இன்னும் ஐந்து நிமிட நேரம் நீட்டிக்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாநில முதலமைச்சர், ரெவின்யூ அமைச்சர், தொழிலாளர் நல அமைச்சர், சமூக நல அமைச்சர் இவர்கள் எல்லாம் அந்த இடங்களுக்கு வந்து பார்த்தார்கள், முதலமைச்சர் இரங்கல் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அதை வரவேற்கிறேன், அதே நேரத்தில் முதலமைச்சர், இரங்கல் கூட்டத்தில் பேசியது நியாயம் தானா? என்று கேட்க விரும்புகிறேன். மாநில முதலமைச்சர் கலந்து கொள்கிறார், நாடாளுமன்ற உறுப்பினர் முருகையனுடைய எட்டு குழந்தைகளும் தவித்துக் கொண்டிருக்கிறது, மனைவி கதறி கதறி அழுகிறாள், லட்சக்கணக்கான மக்கள் இரங்கல் கூட்டத்தில் கதறி அழுகிறார்கள். மாநில முதலமைச்சர் இரங்கல் கூட்டத்தில் சொல்லுகிறார், 'ஏசுவை சிலுவையில் அறைய வைக்கவில்லையா, காந்தியடிகளை சுடவில்லையா, சுகுமாரனை கொலை செய்யவில்லையா' என்னையும் சுட்டுக் கொல்ல முயற்சிக்கவில்லையா, இப்படி எத்தனையோ கொலைகள் நடந்திருக்கின்றன. அதே போல் இதுவும் ஒரு கொலை நடந்திருக்கிறது, என்று நினைக்கின்றார்களா. லட்சக்கணக்கான மக்கள் கூடியிருக்கின்ற கூட்டத்தில் மாநில முதலமைச்சர் இப்படி பேசுகிறார், அங்கே தோழர் கல்யாணசுந்தரம் அ. தி. மு. க. காரர்கள் தான் கொலை செய்தார்கள் என்று சொல்லாமல் இங்கே வந்து அ. தி. மு. க. காரர்கள்தான் என்று சொல்கிறார், இது என்ன நியாயம் என்று கேட்கிறார்கள். மதிப்பிற்குரிய எங்கள் தலைவர் கல்யாணசுந்தரம் அந்த இடத்தில் இதற்கு காரணம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தான் என்று சொல்லியிருந்தால், என்ன நிலை ஏற்பட்டிருக்கும்? அதை நாம் உணர வேண்டும். இந்த ஆட்சியில், இந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் எத்தனை அரிசன ஊழியர்கள் படுகொலை செய்யப் பட்டிருக்கிறார்கள். எத்தனை அரிசன பெண்கள் கற்பழிக்கப் பட்டிருக்கிறார்கள், இப்போது கடைசியாக நாடாளுமன்ற





உறுப்பினர் ஒரு அரிசன், அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார், தஞ்சை மாவட்டத்து மக்கள் கோழைகள் அல்ல, இதற்கு நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டார்கள். இதற்குரிய தண்டனை குற்றவாளிக்குக் கிடைக்கும் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். எந்த நிலையிலும் ஜாதி கலவரம் ஏற்பட்டு விடக்கூடாது என்று எங்கள் கட்சி கட்டளையிட்டுள்ளது. ஆகவே எங்கள் தலைவர் கல்யாணசுந்தரம் பொறுப்போடுதான் நடந்து கொண்டார்கள்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த யூசப் அவர்கள் பேசும்போது, எதிர்கட்சித் தலைவர் மீது உள்ளியைவீசியவன் அண்ணா தி. மு. க. காரன் என்று நிரூபித்தால் தான் ராஜினாமா செய்ய தயார் என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், எஸ். ஜீ. முருகையனை கொலை செய்தவர்கள் யார் என்று கண்டு பிடிக்க முடியாதா? போலீஸ் அதிகாரி டீ. ஐ. ஜி. தேவாரம் சொல்லுகிறார், இதற்கு காரணம் ஒருவர்தான், அவர் அ. தி. மு. க. காரர் அல்ல என்று சொல்லுகிறார். ஆளுநர் அவர்கள் உரையில், இதில் பலர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்ற அளவில் சொல்லப்பட்டிருக்கிறது. கவர்னர் உரையில் பல பேர் என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பெரிய போலீஸ் அதிகாரி சொல்லுகிறார், ஒரே ஒரு நபரை ஆர். எஸ். போலை என்பவரை பிடித்திருக்கிறோம், அவர் அ. தி. மு, க, இல்லை என்று சொல்லுகிறார். நான் சொல்லுகிறேன், இந்தக் கொலைக்கு சம்பந்தப்பட்டவர்கள் அ. தி. மு. க, காரர்கள் என்று நிரூபித்துவிட்டால், இந்த அமைச்சர்கள் ராஜினாமா செய்வதற்குத் தயார்தானா, என்னிடம் ஆதாரம் இருக்கிறது. இல்லை என்று சொல்ல முடியுமா? அதற்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தால் அனுமதி மறுக்கப்படுகிறது. ஒரு கல்லூரி சம்பவம், அதைப்பற்றி விவாதம் நடந்தது. ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் படுகொலை செய்யப்பட்டது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தால், அதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. அதிலேதான் உள்ளடக்கம் அடங்கியிருக்கிறது. இல்லையென்று சொல்ல முடியுமா? ஏதோ நான் உணர்ச்சிவசப் பட்டு பேசுகிறேன் என்று சொல்ல வேண்டாம்...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒன்றை மட்டும் நான் சொல்லிவிடுகிறேன், குற்றச்சாட்டுகளைச் சொல்வதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது என்று கூறி, மன்றத் தலைவருடைய தீர்ப்புக்கு உள் நோக்கம் கற்பிக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: கடைசியாகச் சொல்கிறேன். இந்த வழக்கில் 7 ஆம் தேதி இரவிலிருந்து, 8 ஆம் தேதி இரவுவரை எந்தவிதமான தகவலும் கொடுக்கப்படவில்லை. அந்தக் [illegible] வது அவருடைய மனைவி முதலில் அந்த

இடத்திற்கு சென்று வந்திருக்கிறார். முதலில் அவர்
சென்றபோது $1\frac{1}{4}$ மணி, ஆனால் ஒன்றேமுக்கால்
மணிக்கு அவருடைய தமையன் வேதையன் உடனே முத்துப்
பேட்டை போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் பண்ணுகிறார்.
அங்கிருந்த ரைட்டர் என்ன சொல்கிறார்? இது எங்களுக்கு
சம்பந்தப்பட்ட ஸ்டேஷன் அல்ல, பெருவளந்தான் ஸ்டேஷனில்
தான் சொல்லவேண்டும் என்கிறார். 4 மணி வரைக்கும் அந்த
மாவட்ட எஸ். பி. க்கு தகவல் கொடுக்கப்படவில்லை, மாவட்ட
கட்சி காரியாலயத்திலிருந்து எஸ். பி.-க்கு தகவல் கொடுக்கப்
பட்டது. அதுவரைக்கும் அவருக்கு எந்தவித தகவலும் கொடுக்
கப்படவில்லை; நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்தத்
தாயும் விசாரிக்கப்படவில்லை. கொலை நடந்த இடத்திற்கும்,
பஸ் ஸ்டாண்டிற்கும் 91 அடிதான். சம்பவம் நடந்த இடத்
திற்கும், அவருடைய வீட்டிற்கும் 176 அடிதான். அதற்குள்
ஒரு ஆள் மார்பில் 25 குத்தும், பின்பக்கத்தில் 8 குத்தும் குத்த
முடியுமா? முடியாது. ஆனால் குத்தப்பட்டிருக்கிறது. நான்கு
விதமான கத்திகள் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதாக டாக்டர்
சொல்லியிருக்கிறார்கள். நான்கு வகையான கத்திகள் என்று
சொல்லும்போது, ஒரு நபரால் குத்த முடியுமா? அது போகட்டும்.
அந்த முத்துப்பேட்டை சர்க்கிள் இன்ஸ்பெக்டர், டி.எஸ்.பி, . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மீண்டும் நான்
சொல்கிறேன், இந்த வழக்கு விசாரணையில் இருக்கும்போது,
குத்தப்பட்டது குறித்தும், தாக்குதல் நடத்தப்பட்டது குறித்தும்
பற்றிய விவரங்களுக்குள்ளே போகவேண்டாம் என்று வேண்டிக்
கொள்கிறேன். பொதுவாக, அந்த விஷயத்தைப் பற்றி மட்டும்
பேசுங்கள்.

திரு, பொ. உத்திராபதி: இதுவரைக்கும் யாரும் விசாரிக்கப்
படவில்லை என்று சொல்கிறபோது, 7 ஆம் தேதி 4
மணியிலிருந்து 8 மணி வரைக்கும், 8 ஆம் தேதி இரவு 8 மணி
யிலிருந்து $12\frac{1}{2}$ மணி வரையிலும் முத்துப்பேட்டை சர்க்கிள்
இன்ஸ்பெக்டர், மேல் தஞ்சை டி. எஸ். பி. அம்பிகாபதியையும்,
என்னையும், கணேசனையும் அழைத்துக் கொண்டுவந்து, நிர்பந்தப்
படுத்தினார்கள். என்ன நிர்ப்பந்தம் என்றால், 5 பேர்கள்
பஞ்சாயத்தார்கள் ஒருவர்தான் என்று சொல்ல வேண்டும் என்று
எங்களை வற்புறுத்தினார்கள். அதோடு மட்டுமல்ல, ஜனவரி 20
ஆம் தேதி, 21 ஆம் தேதி 22 ஆம் தேதி, ஆகிய மூன்று தினங்
களும் எங்கள் வீட்டிற்குச் சென்று, எங்கள் தெருவிற்குச் சென்று,
எம். எல். ஏ., எங்கே போயிருக்கிறார், எப்போது
வருவார், எப்போது போவார், எங்கே படுத்துக் கொள்வார்
என்பதையெல்லாம் 6 ஆம் வகுப்பு, 7 ஆம் வகுப்புகளில்
படிக்கும் மாணவர்களிடம் கேட்டு மிரட்டியிருக்கிறார்கள். நான்
ஊருக்குச் சென்றபோது, ஊரிலுள்ளவர்களும், வீட்டிலுள்ள
மனைவியும் கதறினார்கள். எஸ். ஜி. முருகையன் அவர்களுக்கு



வந்த கதிதான் உங்களுக்கு வரும், பாதுகாப்பு இல்லாமல்
செல்ல வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால், போலீசாரால்
எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை. நாடாளுமன்ற உறுப்பினர்
5 ஆம் தேதி சரியாக ஒன்றே முக்கால் மணிக்கெல்லாம் மேல்
தஞ்சை எஸ். பி. யிடம் சொல்லியிருக்கிறார்கள். முத்துப்
பேட்டை சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் ஏற்கனவே சொல்லியிருக்
கிறேன், பெட்டிஷனும் கொடுத்துவிட்டேன், உங்களுக்கும் தகவல்
கொடுத்துவிட்டேன். கலைக்டருக்கும் சொல்லிவிட்டேன், நான்
செத்த பிறகு, பிரேத விசாரணை நடந்த பிறகு பாதுகாப்பு
கொடுக்கப் போகிறீர்களா என்று முறையிட்டிருக்கிறார்கள்.
5 ஆம் தேதி ஒன்றேமுக்கால் மணிக்கு எடுத்துச் சொல்லியும்
பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை. என் சம்பந்தப்பட்ட
பிரச்னையை மாவட்ட செயலாளர் ராமனிடம் சொன்னேன்.
பாதுகாப்பிற்கு கட்சித். தொண்டர்களை வைத்துக்கொண்டு
பாதுகாப்பாக போங்கள் என்று சொன்னார்கள் என்று.
நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜி. முருகையனுக்கான
இந்த இரங்கல் கூட்டம் கடைசியாக இருக்கட்டும். இந்த நிலை
தமிழகத்தில் இனிமேல் ஏற்படாமல் இருக்கவேண்டுமென்று நான்
உண்மையிலேயே ஆட்சியாளர்களிடத்திலே சொல்லிக்கொள்
கிறேன்.

அரிசனங்கள், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள்.
எதற்கும் எங்களுக்கு பயம் கிடையாது. இந்த தமிழகத்திலே
ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும். இந்த கொலை சம்பவத்தை
அக்கிரமத்தை யார் செய்தார்கள் என்பதை இந்தத் தமிழ்நாட்டி
லுள்ள 5 கோடி மக்களுக்கும் சொல்ல வேண்டுமென்ற
கண்ணோட்டத்தோடு, உள்ளடக்கத்தோடு, ஜனநாயக மரபுப்படி
நாங்கள் இருந்து கொண்டிருக்கிறோம், இனிமேல் இப்படிப்பட்ட
சம்பவம் இந்த தமிழகத்திலே நடந்தால், இந்த அரிசன மக்கள்
பார்த்துக் கொண்டிருக்க முடியாது, எங்களைப் பாதுகாத்துக்
கொள்வதற்கு நாங்கள் ஆயுதத்தை ஏந்தி போராட வேண்டிய
சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டாம், இந்த ஆட்சியாளர்கள்
அரசியல் உணர்வோடு, உண்மையிலேயே குற்றவாளிகளைக்
கண்டுபிடிக்க வேண்டும். அப்படி கண்டுபிடிக்கத் தவறினால்,
கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர்கள் தமிழ்நாட்டிலுள்ள 5 கோடி
மக்கள் முன்னால் குற்றவாளியைக் கண்டுபிடித்து கொண்டுவந்து
நிறுத்துவோம் என்பதைக் கூறிக்கொண்டு, இந்த வாய்ப்பு
அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

[பிற்பகல் 1.40]

## 8. அறிவிப்பு.

### பேரவை அலுவல் குறித்து:

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று (14-2-1979) நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானிக்கப்பட்டபடி பேரவையின் நிகழ்ச்சி நிரல்.

| | |
|---|---|
| 15-2-1979 (வியாழன்)<br>16-2-1979 (வெள்ளி) | ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்- தொடர்ச்சி— இந்த இரண்டு நாட்களிலும் அவை காலை 9 முதல் பிற்பகல் 1.30 வரையிலும், மாலை 4 முதல் 7 மணி வரையிலும் கூடும். இந்நாட்களில் கேள்வி நேரம் இருக்காது. |
| 17-2-1979 (சனிக்கிழமை) | 45-வது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்திற்கான தீர்மானம்— விவாதம். அவசரச் சட்டங்களுக்கான சட்டமுன் வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுதல். |
| 18-2-1979 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 19-2-1979 (திங்கட்கிழமை)<br>20-2-1979 (செவ்வாய்க்கிழமை<br>21-2-1979 (புதன்கிழமை) | அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்; மற்றும் அமைச்சரவையின் ஒரு கொள்கையை மறுக்கும் தீர்மானங்கள்— விவாதம். |
| 22-2-1979 (வியாழக்கிழமை)<br>23-2-1979 (வெள்ளிக்கிழமை)<br>24-2-1979 (சனிக்கிழமை) | சட்ட முன்வடிவுகள் - ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுதல். |

1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் முக்கிய அலுவல் காரணமாக டெல்லிக்குச் செல்ல வேண்டியிருப்பதாலும், அலுவல் ஆய்வுக் குழுவில் பல்வேறு கட்சித்தலைவர்கள், மேலும் பல உறுப்பினர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தியதின் காரணமாகவும், பேரவைத் தலைவர் 15-2-79, 16-2-79 ஆகிய இரண்டு நாட்களிலும் கேள்வி நேரத்தைத் தள்ளி வைக்க வேண்டுமென்று ஆலோசனை



கூறியதன் காரணமாகவும், அதை ஏற்று அந்த இரண்டு நாட்களிலும் கேள்வி நேரத்தைத்தள்ளி வைப்பதென்றும், மேலும் பேரவை இரண்டு நாட்களிலும் மாலையிலும் அவைக் கூட்டத்தை வைத்துக் கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டன.

24-2-1979 அன்று பேரவை ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும், 3-3-1979 அன்று காலை 10 மணிக்குக் கூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-43 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்— ஏதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

25. தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்ற அதிகாரிகள் (இரண்டாவது திருந்த) சட்டத்தின் 2, 4, 5, 9 ஆம் பிரிவுகள் செயலுக்கு வரும் தேதியினை நிர்ணயிப்பது குறித்து, 11-7-1978ஆம் தேதியிடப்பெற்ற ஊர்வளர்ச்சி— உள்ளாட்சித் துறையின் அரசாணை எண் 1126-ல் வெளியான அறிவிப்பு.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வியாழக்கிழமை, 1979 பிப்ரவரி 15

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. அரசினர் தீர்மானம்

### விதி 22ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ன் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

" சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் னாக்கள்—விடைகள்' என்றுள்ள சட்டமன்றப் பேரவை தி 22, 15–2–1979 மற்றும் 16–2–1979 ஆகிய தேதிகளில் ளர்த்தப் பெற வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமன க நிறைவேற்றப் பெற்றது.

### 2. அறிவிப்பு

### த்திவைக்கப்பெறும் வினாக்களை எடுத்துக் கொள்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே உறுப்பினர் ளுக்கு 15–2–1979 தேதியிட்டு வழங்கப்பட்டு இருக்கிற னாக்கள் 17–2–1979 அன்று எடுத்துக் கொள்ளப்படும் ன்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### றுப்பினர் திரு ரா. உமாநாத் அவர்களின் வீடு தாக்கப்பெற்றது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 42 இன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் பற்றிய ஒத்திவைப்புத் ர்மானத்தை திருவாளர்கள் ரா. உமாநாத், பி. ஈஸ்வரமூர்த்தி

என்கிற சொரணம், கு. ரமணி, ரா. கிருஷ்ணன், எம். அண்ணாமலை, மு. அம்பிகாபதி தே. ஞானசிகாமணி, என். வரதராஜன் ஆகியோர் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை சுருக்கமாக விளக்க வேண்டும்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நேற்று இரவு சுமார் 2½ மணிக்கு என் வீட்டின்மீது நடந்த தாக்குதல் பற்றி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருள் பற்றி நான் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். இதை டிஸ்கஸ் பண்ணி கிளிஞ்ச் பண்ணினால் ஏதாவது நடக்கும். நான் சீரியஸாகச் சொல்கிறேன். தி மேட்டர் இஸ் சீரியஸ். ஏற்கனவே முருகையன் கொலை செய்யப்பட்டார். அதற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவர் அவருடைய உயிருக்கு திரட்டனிங் ஏற்பட்டிருக்கிறது. மூன்றாவதாக நேற்று இரவு இரண்டரை மணிக்கு என்னுடைய வீடு தாக்கப்பட்டிருக்கிறது.

ஏதோ குண்டு வெடிக்கிற சத்தம் கேட்டவுடனே என்னுடைய மனைவி எழுந்து கதவைத் திறந்து பார்த்த போது என்னுடைய வெளிரூமுக்கு வந்து பார்த்தபோது அங்கே சோடாபாட்டில் வீசப்பட்டு அங்கே விழுந்து கிடக்கிறது. அந்தச் சத்தம்தான் அப்படிக் கேட்டிருக்கிறது. இன்னொரு (Unbroken) பாட்டில் உடையாமல் அப்படியே அங்கு விழுந்து கிடக்கிறது. அடித்தது யார் என்று தெரியவில்லை. அடித்துவிட்டு ஓடியிருப்பார்கள்.

இதற்குக் காரணம் 102 நாட்களாக சிம்கோ மீட்டர் தொழிலாளர்களின் ஸ்ட்ரைக் நடந்துகொண்டிருக்கிறது. இதுவரைக்கும் அரசாங்கம் தலையிடாமல் இருந்தது. ஆனால் இப்போது முதல்வர் அவர்கள் தலையிட்டு பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் ஏற்பாடு செய்து பேச்சுவார்த்தை நடந்திருக்கிறது. சிம்கோ மீட்டர் முதலாளி, விஸ்வநாதன், இந்த சர்க்கார் மாத்திரம் இதை தீர்க்க முடியுமா என்ற நினைப்பில், நான்தான் இதைப் பற்றி முதலமைச்சரிடத்திலே சொல்லியிருக்கிறேன் என்று நினைத்து அவர் தொடங்கியிருக்கிறார். என்னை ''டெர்ரரைஸ் பண்ணுவதற்காக செய்திருப்பார். காரணம் அவர்கள் சர்க்காரோடு பேச்சுவார்த்தைக்குநேருக்கு நேராக வரவில்லை. சி.பி.ஐ தலைவர் ரங்கராஜன் இன்றைக்கு அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். பெரிய கிரவுட் காத்திருக்கிறார்கள். என்னுடைய மனைவிதான் அதை நடத்திக் கொண்டிருக்கிறார். இந்த விஷயத்திலே அவர் தலையிடுவதால் வீட்டிலே சோடா பாட்டில் வீசப்பட்டிருக்கிறது. என்னையும் டெர்ரரைஸ் பண்ணியிருக்கிறார்கள். நான் சொல்லித்தான் முதலமைச்சர் தலையிட்டு பேச்சுவார்த்தை நடக்கிறது என்ற முறையிலே நினைத்துச் செய்கிறார்கள். அப்படிச் செய்தால் தொழிலாளர்களில் ஒரு



செக்ஷனாவது பயந்து வருவார்கள் என்று நினைக்கிறார்கள். அட்டாக் பண்ணிய இடத்தை போலீஸ் வந்து பார்த்துப் போயிருக்கிறார்கள். போலீஸ் பீட் போட்டிருக்கிறார்கள். பீட் எதற்கு? அதனால் என்ன நடக்கும்? பாம்பு புற்றிலேயே அடித்து ஸ்மாஷ் பண்ணினால்தான் இது நிற்கும். இந்த ஸ்ட்ரைக் ஆரம்பித்ததிலிருந்து அங்கே ரிடையர்டு டி. எஸ். பி. குப்புசாமி ஈரோடு பள்ளிப்பாளையத்திலே இருந்தவர் அவரை அட்மினிஸ்டிரேட்டிவ் ஆபீஸராக்கியிருக்கிறார்கள். ராஜூ என்ற காண்ட்ராக்டர், ஈரோட்டைச் சேர்ந்தவர், இவர்களுக்கு திருச்சியில் என்ன வேலை? இவர்கள் முகாம் போட்டு இருக்கிறார்கள். திருச்சியிலே. குரு ஹோட்டல் என்ற ஹோட்டலில் இருந்து கொண்டு செய்கிறார்கள். அரசாங்கம் இதனை முன்னாலேயே தவிர்க்க முடிந்திருக்கும். அதற்காகத்தான் இந்த டிஸ்கஷனுக்காக இது கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் அரசாங்கத்தின் ரோல் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். இரண்டு டாக்ஸிகளை MDU 7447; MDR 4690 டி. எஸ். பி. சீஸ் செய்துவிட்டார். உள்ளேயிருந்த சைக்கிள் செயின், லாட்டி போன்ற எல்லா ஆயுதங்களோடும் ரௌடிகளை டி. எஸ். பி. பாண்டியன் பிடித்துவிட்டார். அவர்களை அரஸ்ட் செய்து கேஸ் போட்டிருக்கிறார், ஒரு வாரத்திற்குள் அந்த டி. எஸ். பி. டிரான்ஸ்ஃபர் செய்யப்படுகிறார். கவர்ன்மெண்ட் எக்ஸ்பிளயின் செய்ய வேண்டும். அவர் முதலாளிகளின் ரௌடிகளைப் பிடித்தார், ஆகவே மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். அதனால் விளைவு வந்துவிட்டது. டி. எஸ். பி. யை மாற்றியதிலிருந்து, ரிசைன் செய்த குப்புசாமியும், ராஜுவும் சேர்ந்து கொண்டு, ஹோட்டலைப் பயன்படுத்திக் கொண்டு, ஸ்டிரைக்கர்களைத் தனித்தனியாகப் பிடித்து, குரு ஹோட்டலிலே அடைக்க வேண்டியது. ஆக்ஷன் எடுத்தால்அவர்களைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அல்லவா கொண்டு கொண்டு போகவேண்டும். operated an a hotel base அவர்களைக் கொண்டு போய் ஹோட்டலிலே அடைத்து, பிறகு அவர்கள் எங்களை அடிக்க வந்தார்கள் என்று போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைக்க வேண்டியது. ஒரு டி. எஸ். பி. டிரான்ஸ்பர் செய்யப்பட்டுவிட்டார் என்ற எண்ணம் போலீஸ் ஆஃபிஷியல்சுக்கு வந்துவிட்டது. அன்றைக்கே கறாராக நடவடிக்கை எடுத்து குப்புசாமியையும், ராஜுவையும் அரஸ்ட் செய்திருந்தால் இந்த டெவலப்மெண்ட் வந்திருக்காது.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

''Let him know clearly'

அவர் தேனீக் கூட்டிலே கைவைத்திருக்கிறார் என்பதை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் கட்சியைச் சேர்ந்த ஊழியர்கள் 'work hard for 8 hours for ordinary people' ஆர்டினரி பீப்பிள், வேலை செய்யக் கூடியவர்கள். ஏற்கனவே வெங்கடாசலம் மீது Murderars attack நடந்தது. நான் அரசாங்கத்திற்குச் சொல்ல விரும்புகிறேன், எங்களுக்குப் பாதுகாப்பு

வேண்டாம், நீங்கள் முதலாளிகளைப் பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள். சீரியசாகச் சொல்கிறேன், விஸ்வநாதனின் வீடு இங்கே இருப்பது எங்களுக்குத் தெரியும் என்ன நடக்கும் என்று சொல்லமுடியாது. எனவே பாதுகாப்பு எங்களுக்கு வேண்டாம் நாங்கள் இயக்கத்தில் இறங்கும்பொழுதே, கொலை செய்யப் படுவோம், போலீஸ் ஃபயரிங்கில் செத்துவிடுவோம் என்றுதான் இறங்கியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு உமாநாத் அவர்கள் உணர்ச்சிவயப்படவேண்டாம். சுருக்கமாகச் சொல்லலாம். அவரது வேதனையை நான் உணர்கிறேன். அவர்களுக்கு ஒன்று ஏற்படுமானால் அவர்களைப் பாதுகாக்க வேண்டிய கடைமை எனக்கு முதலில் உண்டு. அவரது பிரச்சினையைக் கேள்விப் பட்ட உடனேயே என்னை விட யாரும் வேதனைப்பட்டிருக்க முடியாது. இந்த அவையிலே உள்ள அவர்களைப் பாதுகாக்க வேண்டிய அளவில் இருப்பதால் அவர்கள் வேதனைகளையும் உணர்ச்சியையும் நான் உணர்ந்திருக்கிறேன். உறுப்பினர்களுக்கு நிச்சயமாகப் பாதுகாப்புத் தருவதற்கு முனைவேன் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே சுருக்கமாகச் சொல்ல வேண்டும், அரசு தரப்பிலிருந்து பதில் வரும்.

திரு. ரா. உமாநாத் : நான் சொல்ல விரும்புவது, எங்களைப் பொறுத்தவரையில் இந்த எண்ணத்தில்தான் நாங்கள் இறங்குகிறோம். என்னைப் பொறுத்த வரையில், எங்கள் காம்ரேடுகளைப் பொறுத்த வரையில், என்னுடைய பேமிலியிலே, என் மதர்-இன்-லா அவர்கள் 1948-ஆம் ஆண்டிலே அரெஸ்ட் செய்யப்பட்டார்கள். அவர் ஹங்கர்ஸ்ட்ரைக் இருந்து அந்தஹங்கர்ஸ்ரைக்கிலேயே செத்துவிட்டார்கள். "My mother-in-Law herself sacrifliced her life and died inside the jail" என்னுடைய மனைவியும் சாகவேண்டிய கட்டம். எங்கள் காம்ரேடுகளும் சாக வேண்டிய கட்டத்தில் இருந்தார்கள். பிறகு என்கொயரி போலீஸ் பேரில் நடந்ததால் எங்கள் உயிர் காப்பாற்றப்பட்டது. இல்லை என்றால் அன்றைக்கே சாக வேண்டியவர்கள். எனவே எங்களைப்பொறுத்த வரையில் கவலை வேண்டாம். All our com rades are sacrificing. செத்தாலும் கூட, We will take care of ourselves தொழிலாளர்கள், ஊழியர்கள் தெளிவாக இருப்போம். அந்த முதலாளிகளைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுங்கள். இது சீரியஸ் மேட்டர். எங்களைப் போல் இன்னொருவருக்கு வரக்கூடாது. பொதுப்பணியிலே இருப்பவர்களுக்கு வரக்கூடாது என்பதால் அதுபற்றி விவாதிக்க அவையை ஒத்தி வைப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



[முற்பகல் 9.10]

*திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினை. திருச்சியில் 102 நாட்களாக சிம்கோ தொழிலாளர்கள் போராடுகிறார்கள். போராடுகிற தொழிலாளர்களுக்காக ஒரு தொழிற்சங்கத் தலைவர், இந்த சட்டப் பேரவை உறுப்பினர் தோழர் உமாநாத் ஆதரவாக இருக்கிறார். அவருடைய மனைவி பாப்பா உமாநாத் அங்கே திருச்சியில் சங்க பணி செய்கிறார். கடந்த 6 நாட்களாக தோழர் ரங்கராஜன் உண்ணாவிரதம் இருக்கிறார். தோழர் உமாநாத் வீடு தாக்கப்படுகிறது. படுக்கை அறை தாக்கப்படுகிறது. உமாநாத்தையும் அவருடைய மனைவியையும் கொலை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு திட்டமிட்டு இந்த சதிச் செயல் நடந்திருக்கிறது. இப்படி காரியங்கள் நடைபெறுவதும் தாக்கப்படுவதும் டி. ஐ. சைக்கிளாக இருக்கட்டும், எஸ். ஜி. முருகையன் படுகொலையாக இருக்கட்டும், உமாநாத் வீட்டைத் தாக்குவதாக இருக்கட்டும், அம்மாதிரி செயல்களில் ஈடுபடுகின்ற தைரியம் இந்தத் தமிழ்நாட்டு முதலாளிகளுக்கு வந்திருக்கிறது. அதைச் சந்திப்பதற்கு நாங்களும் தயாராக இருக்கிறோம். எந்த விதத்திலே சந்திக்க வேண்டுமோ அந்த விதத்திலே சந்திக்கிறோம். ஆனால் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் தோழர் உமாநாத் இந்தச் சபையிலே இருக்கிறார். அவருடைய வீட்டைத் தாக்கி, நிர்மூலப்படுத்தி, பயங்கரப் படுத்தி, தங்களைப் பாதுகாத்துக் கொள்ள நிர்வாகம் விரும்பியிருக்கிறது. 102 நாட்களாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமலிருக்க காரணம் என்ன 6 நாட்களாக உண்ணாவிரதம் இருக்கிற ரங்கராஜன் உண்ணாவிரதத்தைத் தாக்க அரிபட் உண்ணாவிரதத்தைத் தாக்கினோம் அதுபோல் ரங்கராஜன் உண்ணாவிரதத்தைத் தாக்கலாம் என்று எண்ணியிருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருப்பவர்கள் என்ன அரிவாள் , கத்தி, ஈட்டியோடா இருக்க முடியும்? எனவே, தலைவரவர்களே, நான் சொல்ல விரும்புவது.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அம்பிகாபதி அவர்களுக்கு மற்ற பிரச்சினைகளை நம்பிக்கையில்லாத் திர்மானத்திலே பேச வாய்ப்புண்டு. இந்தப் பிரச்சினையிலே அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டிய அளவு எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி மட்டும் கூறுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : இந்தப் பிரச்சினையில் ஒரு முக்கியமான தொழிற்சங்கத் தலைவருடைய வீட்டைத் தாக்கி, அவரையும் அவருடைய மனைவியையும் படு கொலை செய்ய முயற்சி நடதிருக்கிறது. அந்தத் தைரியம் தமிழக முதலாளிகளுக்கு வந்திருக்கிறது. அது எப்படி உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி விரிவாக விவாதிக்க, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

<u>மாண்புமிகு திரு கி. மனோகரன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, திரு உமாநாத் அவர்களும், திரு அம்பிகாபதி அவர்களும் கொண்டு வந்திருக்கிற ஒத்தி வைப்புத் தீர்மானத்தை பற்றி தங்களது விளக்கங்களை அவர்கள் தந்திருக்கிறார்கள். நான் எனது விளக்கத்தைத் தருவதற்கு முன்பு ஏற்பட்டுவிட்ட இந்த நிலைமைகளை எண்ணி இதயப்பூர்வமாக வருந்துகிறேன் என்பதை திரு உமாநாத் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன் அதுவும் திரு உமாநாத் அவர்கள் திருச்சியில் இல்லை என்று தெரிந்ததற்குப் பிறகு, அவர் சட்டமன்ற நடவடிக்கைகளுக்காக சென்னையிலே இருக்கிறார் என்பதைத் தெரிந்ததற்குப் பிறகு பாதுகாப்பற்ற நிலையில் உமாநாத் அவர்களின் துணைவியர் மட்டும்தான் வீட்டில் இருக்கிறார்கள் என்று புரிந்து கொண்ட காலிகளிலே சிலர் இந்தக் காரியத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற செய்தி எந்த அளவிற்கு திரு. உமாநாத்திற்கு அதிர்ச்சியைத் தந்திருக்கிறதோ அதே அளவு அதிர்ச்சியை இந்த அவைக்கும் அது தந்திருககிறது என்பதையும் நான் முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பேசிய திரு உமாநாத் அவர்களும், திரு அம்பிகாபதி அவர்களும் உணர்ச்சிவயப்பட்டதற்கும் அல்லது படுவதற்கும் ஆவேசத்தோடு சில வார்த்தைகளைப் பேசுவதற்கும் காரணங்கள் இருந்திருக்கக் கூடும். அந்த அளவிற்கு அவர்கள் மனம் புண் அடைந்திருக்கக்கூடும். ஆவேசம் கொந்தளித்திருக்கக்கூடும். எங்களுக்குப் பாதுகாப்புத் தேவையில்லை யென்றும் ஆனால் அந்த முதலாளியைப் பாதுகாப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கட்டும் என்று உமாநாத் அவர்கள் கேட்டுக் கொண்டது வேதனையைத் தருகிறது என்பதை மட்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தச் சர்க்காரின் கடமை இந்த நாட்டுப் பிரஜை என்ற முறையில் அனைவருக்கும் பாதுகாப்பு தருவது என்பதை வலியுறுத்துவதோடு திரு உமாநாத்தைப் போன்ற தியாக பாரம்பரியத்தில் பிறந்து வளர்ந்தவர்களுக்குப் பாதுகாப்புத் தருவதிலேயிருந்து இந்த அரசு துளிகூட மாற முடியாது என்பதை நான் அவருக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பேச்சின் இடையில் உணர்ச்சி வயப்பட்ட முறையில் , சபாநாயகர் அவர்களே நீங்கள் கூட சுட்டிக் காட்டினீர்கள்.

உணர்ச்சி வயப்படும்போது அப்படிப்பட்ட வார்த்தைகள் வரக்கூடும். ஆனால் அனுபவம் மிக்க உமாநாத் போன்றவர்கள் அடக்க முயன்றிருக்கக்கூடும், இருந்தாலும் அந்த முயற்சியிலே அவர் தோற்றிருக்கக்கூடும். என்று நான் கருதுகிறேன். அந்த முதலாளி ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு அவர் சென்னையில் தான் தங்கியிருக்கிறார், அவர் எங்கு போவார் என்று எனக்குத் தெரியும். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்பதைப் போன்ற பேச்சு அவ்வளவாக பாராளுமன்ற முறைக்கு உகந்ததாக இருக்குமா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது என்பதை ....



<u>திரு. ரா. உமாநாத் :</u> நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று நான் சொல்லவில்லை. தமிழ்நாடு ஒர்க்கிங்கிளாசுக்குத் தெரியும் அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று நான் சொன்னேன்.

<u>மாண்புமிகு திரு கி. மனோகரன் :</u> திரு உமாநாத் இப்போது ஒரு விளக்கம் தருகிறார். தமிழ்நாடு தொழிலாளர் வர்க்கம் பார்த்துக் கொள்ளும் என்று கூறியிருக்கிறார்கள். தொழிலாளி வர்க்கத்திற்குப் பாதுகாப்புத் தருவதற்கும், மற்றவர்களுக்குப் பாதுகாப்புத் தருவதற்கும் அரசு இருக்கும் போது தொழிலாளி வர்க்கம் பார்த்துக் கொள்ளும் என்று சொல்லுவதும் அந்தத் தொழிலாளர்களை வழிநடத்திச் செல்கின்ற தலைவர்களே இந்தக் கருத்துக்களை வெளியிடுவதுதான் வேதனையாக இருக்கிறது என்பதை குறிப்பிட்டேனே தவிர, மற்றபடி அல்ல என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எப்படி சபாநாயகர் அவர்கள் தனது வேதனையை வெளிப்படுத்தினார்களோ, அந்த வேதனையை அரசின் தரப்பிலே நானும் வெளிப்படுத்தி எற்பட்டுவிட்ட நிலைமைகளுக்காக நான் வருந்துகிறேன் என்பதை, சகோதரி திருமதி பாப்பா அவர்களுக்குச் சொல்லி, எனக்குக் கிடைத்த தகவலை நான் இங்கே படித்து, இதற்குரிய நடவடிக்கையை எடுக்க அரசு தயாராக இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, எந்தக் காரணத்தைக் கொண்டும் தயக்கம் இராது என்று உறுதியைக் கூறி அந்த அடிப்படையில் எனது அறிக்கையைப் படித்ததற்குப் பிறகு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை வாபஸ் வாங்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

"இன்று அதாவது 15-ந் தேதி அதிகாலை 1 மணி அளவில் திருமதி உமாநாத் அவர்கள் தொலை பேசி மூலம் திருச்சி மாவட்ட காவல் துறை அதிகாரியிடம் பேசினார். திருச்சியில் உள்ள அவர்கள் வீட்டில், யாரோ சோடா பாட்டில்கள் எறிந்தார்கள் என்றும் பாதுகாப்புத் தேவை என்றும் கூறினார்கள். உடனே காவல் துறை அதிகாரி, ஒரு இன்ஸ்பெக்டர் தலைமையில் காவல் படையினை அனுப்பி வைத்தார். அங்கே போய் பார்த்ததில் ஜன்னல் கம்பிக்கு அருகில் வீட்டுக்கு உள்ளே சோடா பாட்டிலின் உடைந்த பாகங்கள் கிடைத்திருக்கின்றன. அது போக முழு சோடா பாட்டில் ஒன்று—உடைக்காதது வீட்டுக்கு வெளியே கிடந்ததும் கண்டு பிடிக்கப்பட்டது. இப்போது அங்கு பலத்த காவல் துறை பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது. ஒரு ஏ.எஸ்.ஐ., 2 கான்ஸ்டபிள்கள், மற்றபடி அமைதி நிலவுகிறது. செக்ஷன் 336, 426 ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை நடைபெறுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இதை ஒரு சாதாரண பிரச்சினையாக இந்த அரசு கருதாது என்ற உறுதியை நான் உமாநாத் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண் டிய அவசியம் இல்லை என்ற காரணத்தினால் அனுமதி மறுக்கப் படுகிறது.

## 4. அரசினர் சட்ட முன் வடிவுகள்

### (அ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்), திருத்த சட்ட முன் வடிவு, 1979

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதி காரிகளை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இதை நான் எதிர் கிறேன்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடி அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

### (ஆ) கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமன திருத்த சட்டமுன் வடிவு, 1979

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன் (தனி அலுவலர் நியமனம்) திருத்த சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இதை நான் எதிர் கிறேன்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறை வேற்றப் பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.





மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

### (இ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, இதை நான் எதிர்க்கிறேன்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இச்சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

(முற்பகல் 9.20)

## 5. ஒழுங்குப் பிரச்சினை

### மேலவையில் முதலமைச்சர் குறிப்பிட்ட தகவல் குறித்து

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார். உங்கள் அனுமதியோடு ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மேலவையில் முதல் அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது வன்முறை சம்பவங்கள் எதிர்க் கட்சித் தலைவர் மீது நடைபெற்ற போது அவரோடு தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேசிய தாகக் குறிப்பிட்டார்கள். சம்பந்தப்பட்ட எதிர்க் கட்சித் தலைவர் அப்படிப் பேசவில்லை என்று மறுப்புத் தெரிவித்து இருக்கிறார். ஆகவே, இது முக்கியமான பிரச்னை. எதிர்க் கட்சித் தலைவரின் பாதுகாப்பு பற்றிய. பிரச்னை. ஆகவே, இதில் உண்மை என்ன என்பது குறித்து அரசு அறிக்கை அளிக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் பேசியது, அதற்கு எதிர்க் கட்சித் தலைவர் மறுப்புத் தெரிவித்தது ஆகி யவை விவாதத்தின் போது சொல்லலாமே தவிர, ஒழுங்குப் பிரச்னை என்ற முறையில் இங்கே கொண்டு வருவது சரியல்ல.

திரு. அ. ரகுமான்கான்: உண்மை நிலைமை என்ன என்பது குறித்து விவாதம் செய்வது தனியாக இருந்தாலும், அரசு இது கு குறித்து ஒரு அறிக்கை அளித்தால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் எண்ணத்தைப் புரிந்து கொண்டேன். இன்றும், நாளையும் ஆளுநர் உரை மீது விவாதம் நடக்கிறது. அதில் கலந்து கொண்டு எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதற்கு முதலமைச்சரோ அல்லது அவை முன்னவரோ பதில் அளிக்க வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, வெளியே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி குறித்து அவையில் அறிக்கை வைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, நீங்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்னைக்கு அவசியம் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறேன். இங்கே விவாதம் நடைபெற வாய்ப்பிருந்தாலும் அதற்காக தனியே நேரம் ஒதுக்க முடியாது. ஆகவே, அறிக்கை அளித்தால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள்.

## 6. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்—(தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, ஆளுநர் பேருரைக்கு திரு. இரா. முத்தையா முன்மொழிந்துள்ள நன்றி அறிவிப்புத் தீர்மானத்திற்கு வரப்பெற்றுள்ள திருத்தங்கள் முன்மொழியப் பெற்று வழிமொழியப் பெற வேண்டும்.

திரு. எஸ். சிவசாமி : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும் :—

(1) மாநிலத்தில் லஞ்ச ஊழல் வளர்ந்து கொண்டு போவதைத் தடுத்து நிறுத்துவது பற்றியும் ;

(2) ஆளும் கட்சிக்காரர்கள் நிர்வாகத்தில் தலையிடுவது பற்றியும் ;

(3) மாநிலத்தில் பல கொலைகள் நடந்து கொண்டிருந்தும், டுத்து நிறுத்த முயற்சிக்காதது பற்றியும் ;





(4) திரு. முருகையன், எம்.பி. அவர்களைக் கொலை செய்த எதிரிகளைக் கண்டு பிடித்து சரியான நடவடிக்கை எடுக்காதது பற்றியும் ;

(5) முகவை மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம் கண்மாய், மாநிலத்தில் பெரியதாகவும், 7000 ஏக்கருக்குப் பாசன வசதியுடையதாகவும் இருந்தும், சரியானபடி பராமரிக்காதது பற்றியும் ;

(6) கடந்த இரண்டு முறை ஏற்பட்ட புயலாலும், மழையாலும் பாதிக்கப் பெற்ற ரோடுகள் இன்னும் செப்பனிடப் படாமல் இருப்பது பற்றியும் ;

(7) முகவை மாவட்டத்தில் 3000 ஏக்கருக்கு மேல் பாசன வசதியுடைய நெட்டூர் கண்மாய், எமனேஸ்புரம் கண்மாய். போன்ற பெரிய கண்மாய்களின் கரையைப் பலப்படுத்திச் சரியானபடி பராமரிக்காதது பற்றியும் ;

(8) சேது சமுத்திர திட்டத்தைப் பற்றியும் ;

(9) பாம்பன் பாலம் அருகிலுள்ள குருசடைத் தீவிலிருக்கும் கடல் ஆராய்ச்சி நிலையத்தை அபிவிருத்தி செய்யாததுபற்றியும் ;

(10) மதுரை மாவட்டத்தில், கேரள மாநில எல்லைக்கருகில் இருக்கும் கண்ணகி கோவிலை (மங்களதேவி) பராமரிக்காதது பற்றியும் ;

(11) பரமக்குடியிலும் மற்றப் பகுதியிலுமுள்ள கைத்தறி நெசவாளர்களின் மேம்பாட்டிற்குத் திட்டங்கள் தீட்டப்படாதது பற்றியும் ;

(12) பரமக்குடியின் கீழ்பகுதியிலுள்ள எமனேஸ்புரத்தையும், பரமக்குடியையும் இணைக்க புதிய கல்பாலம் (காஸ்வே) அமைக்கப்படாதது பற்றியும் ;

(13) இளையான்குடி, நயினார் கோவில் போன்ற இடங்களில் போலீஸ் பொய் கேஸ் போடுவது பற்றியும் :

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திருத்தம் வழிமொழியப்பெற்றது.

திரு. பி. எஸ். திருவேங்கடம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

[திரு. பி. எஸ். திருவேங்கடம்] [1979 பிப்ரவரி 15

இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும் :—

ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி இவைகளின் தேர்தல் நீண்டகாலமாக நடைபெறாமல் இருப்பதை ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திருத்தம் வழிமொழியப்பெற்றது.

திரு. ஆ. நடராசன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும் :—

தமிழ்நாட்டில் அரசு போக்குவரத்தில் கவனக் குறைவால் ஏராளமான விபத்துக்கள் ஏற்பட்டு பலர் உயிரிழந்ததை ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திருத்தம் வழிமொழியப்பெற்றது.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன் :

இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும்:—

நீலகிரியில் மலைச்சரிவால் பல கட்டிடங்கள் இடிந்து பலர் உயிரிழந்ததைப் பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திருத்தம் வழிமொழியப் பெற்றது.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும்: —

மதுவிலக்குபற்றி புதிய சட்டத்தால் ஏற்பட்ட பலன் குறித்த புள்ளி விவரம் பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திருத்தம் வழி மொழியப் பெற்றது.

திரு. கூ.ச. முருகேசன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.



1979 பிப்ரவரி 15] [திரு. கூ. ச. முருகேசன்]

இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும் :—

சென்னையில் நடைபாதையில் வாழும் கூடைமுடையும் மக்களுக்கு வீடு கட்டித்தருவது பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திருத்தம் வழிமொழியப் பெற்றது.

திரு. என் கிட்டப்பா : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும்.—

(1) சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் வீட்டைத் தாக்கியது பற்றியும், அவரை ஆயுதம் வீசிக் கொல்ல முயற்சி செய்தது பற்றியும்.

(2) நகர சுத்தி தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவது பற்றியும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திருத்தம் வழிமொழியப் பெற்றது.

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன்.

இறுதியில் கீழ்க்காணும் திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ளவும் :—

வெள்ளம், வரட்சி ஆகியவைகளால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வரும் விவசாயிகளுக்கு, கடன் நிவாரணமோ, வரி நீக்கமோ பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திருத்தம் வழிமொழியப் பெற்றது.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும் :—

(1) வியாசர்பாடியில் வாழும் பர்மா அகதிகளுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தைப்பற்றி விளக்கமாகக் குறிப்பிடாதது பற்றியும் ;

(2) சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சரியான முறையில் வெள்ள நிவாரணம் அளிக்காதது பற்றியும் ;ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திருத்தம் வழிமொழியப் பெற்றது.

[1979 பிப்ரவரி 15

திரு. ஏ.ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, நான் கீழ்க் கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :

இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும் :—

(1) குத்தகை சாகுபடிதாரர்களுக்கு, அவர்கள் சாகுபடி செய்யும் நிலங்களைச் சொந்தமாக்கும் திட்டம் பற்றியும் ;

(2) கூட்டுறவு, அரசு, தனியார் கடன் சுமைகளினால் நசுங்கிக்கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு கடன் வசூலை ஒத்தி வைப்பது பற்றியும் ;

(3) விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்யப்படாதது பற்றியும் ;

(4) தஞ்சை மாவட்டத்தில் பருவநிலைக் கோளாராலும், பூச்சித் தொந்தரவாலும் விளைச்சல் பாதிக்கப்பட்டு சங்கடத்திற்குள்ளாகியிருக்கும் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பது பற்றியும் ; ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திருத்தம் வழிமொழியப் பெற்றது.

திரு. கரு. ராம.கரியமாணிக்கம் அம்பலம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :

இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும் :—

1. நிலவரி ரத்து செய்வது பற்றியும் ;

2. நெல்விலையை அதிகப்படுத்தாதது பற்றியும் ;

3. கிராமங்களில் மின் விளக்குகள் எரியாதது பற்றியும் ;

4. கிராமங்களில் மின் விளக்குகளை அரசாங்கமே பராமரிப்பது பற்றியும்;

5. கிராம வீடுகட்டும் திட்டத்தைப் பரவலாக்காதது பற்றியும் ;

6. இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, தலைமை இடத்தை அறிவிக்காதது பற்றியும் ;

7. வெள்ளம் மற்றும் புயல் இவற்றால் பாதிக்கப்பட்ட இடங்களில் இனிமேல் சேதம் ஏற்படாமல் தடுக்க செய்ய வேண்டிய முன்னேற்பாடுகள் பற்றியும் ;

8. மதுவிலக்கு திட்டம் துரிதமாக அமுல்படுத்த ஒத்துழைக்காத காவல்துறையினர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுப்பது பற்றியும் ; ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திருத்தம் வழிமொழியப் பெற்றது.



1979 பிப்ரவரி 15]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, நான் கீழ்க் கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களை சேர்த்துக் கொள்ளவும்—

1. வாசுதேவநல்லூர் உள்ளார் அணைத் திட்டம் கட்ட முடிவு செய்யப்படுவதைப் பற்றியும் ;

2. உணவுப் பொருளில் அய்ந்தில் ஒரு பகுதியை சேதப் படுத்தும் எலியை ஒழிக்கும் திட்டத்தைப் பற்றியும் ;

3. வாசுதேவநல்லூர் தொகுதி விஸ்வநாதபேரியிலிருந்து இராயகிரி வழியாக வாசுதேவநல்லூர் போகும் சாலைகளைச் செப்பனிடப் பெருவழித்துறையில் எடுக்கப் படவேண்டிய நடவடிக்கை பற்றியும் ;

4. வேலையில்லா பட்டதாரிகளுக்கு நிவாரணமும், வேலைதரும் திட்டமும் அமுல்படுத்துவது பற்றியும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திருத்தம் வழிமொழியப்பெற்றது.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, நான் கீழ்க் கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும்—

1. நில உச்சவரம்பு சட்டத்திற்குப் புறம்பாக மறைத்து வைத்துள்ள பினாமி நிலங்களைக் கைப்பற்றுவது பற்றியும் ;

2. உச்சவரம்பு சட்டத்திலுள்ள விதிவிலக்குகளை ரத்து செய்வது பற்றியும் ;

3. கல்வி, தர்மம், கோவில், வேதபாடசாலை, கால் நடைப் பண்ணை என்ற எண்ணற்ற பெயரால் உருவாக்கப் பட்டுள்ள டிரஸ்ட்டுகள் அனைத்தும் ரத்து செய்யப்படவேண்டியது பற்றியும் ;

4. விவசாயத்தில் ஈடுபட்டுள்ள 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு 15 ஏக்கர் என்று உச்சவரம்பு நிர்ணயிக்கவேண்டியது பற்றியும் ;

5. திருத்தச் சட்டத்தின் மூலம் கிடைக்கப்பெறும் உபரி நிலத்தை விவசாயத் தொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டியது பற்றியும் ;

[திரு என். வரதராஜன்] [1979 பிப்ரவரி 15

6. விவசாயத் தொழிலாளர்களுக்கு தினக்கூலி குறைந்த பட்சம் ரூ. 8 என்று நிர்ணயிக்கவேண்டியது பற்றியும் ;

7. குத்தகை விவசாயிகள் நிலத்தைவிட்டு வெளியேறாமல் பாதுகாக்க சட்டத்திருத்தம் கொண்டுவர வேண்டியது பற்றியும் ;

8. குத்தகை விவசாயிக்கு 75 சதவிகிதம்; நிலச்சுவானுக்கு 25 சதவிகிதம் என்று நிர்ணயிக்க வேண்டியது பற்றியும் ;

9. விவசாயத்தில் ஆண்டுக்கு நிகரவருமானம் ரூ. 3,600 வரை அல்லது 5 ஏக்கர் நிலம் வைத்துள்ள விவசாயிகள் பட்டுள்ள (கூட்டுறவு, அரசு, தனியார்) கடன்கள் முழுவதையும் ரத்து செய்யவேண்டியது பற்றியும் ;

10. ஆண்டுக்கு நிகர வருவாய் ரூ. 7,200 வரை அல்லது 10 ஏக்கர் நிலம் வைத்துள்ள விவசாயிகள் பெற்றுள்ள கூட்டுறவு, அரசு தனியார் கடன்களுக்கான வட்டி முழுவதையும் ரத்து செய்யவேண்டியது பற்றியும் ; அவர்கள் பட்டுள்ள கடன்களை நீண்டகாலத் தவணைகளில் கட்ட உதவிட வேண்டியது பற்றியும் ; விவசாய விளை பொருட்களுக்கு நியாய விலை கிடைக்க அரசு தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டியது பற்றியும் ; அறுவடைக் காலத்தில் நெல் கொள்முதலை அரசு நடத்திட வேண்டியது பற்றியும் ; குவிண்டால் நெல்லுக்கு ரூ. 100 கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டியது பற்றியும் ;

11. தமிழ்நாட்டில் சில முதலாளிகள் தொழிற்தகராறுகளை முறையாகத் தீர்க்க முன்வராமல், தாக்குதலிலிருந்து தொழிலாளர்களைப் பாதுகாக்க முன்வராமல் காவல் துறையினர் முதலாளிகளுக்கு ஆதரவாகச் செயல்படும் போக்கை மாற்றுவது பற்றியும் ;

12. அரசு தொழிற்தகராறுகளை தொழிலாளர்துறை மூலம் பேசித் தீர்க்கமுடியாதபடி செய்துவிட்டு, காவல்துறை மூலம் தொழிலாளர் இயக்கங்களையும், வேலை நிறுத்தங்களையும் ஒடுக்கும் நடவடிக்கையைக் கைவிடவேண்டியது பற்றியும் ;

13. பெரிய தொழில்களை தமிழ்நாட்டில் ஏற்படுத்தும் குறிப்பு இல்லாதது பற்றியும் ;

14. படித்தவர்களுக்கு வேலை உத்தரவாதம் அல்லது அவர்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றியும், கிராமப்புற விவசாயத் தொழிலாளர்களுக்கும், ஏழை விவசாயிகளுக்கும் வேலையில்லாக் காலங்களில் 'வேலைக்கு உணவுத் திட்டம்' செயல்படுத்துவது பற்றியும் ;

15. கல்லூரி ஆசிரியர்களுக்குப் பணிப்பாதுகாப்பு உத்தரவாதமும், நேரடி சம்பளமும் வழங்க ஏற்பாடு செய்வது பற்றியும் ;



1979 பிப்ரவரி 15] [திரு. என். வரதராஜன்]

16. கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கு வேலைப் பாதுகாப்பும், குறைந்த பட்ச சம்பளமும் கிடைக்க ஏற்பாடு செய்வதுபற்றியும் ;

17. விலைவாசியைக் கட்டுப்படுத்த 500 பேருக்கு ஒன்று வீதம் ஏற்படுத்தப்படும் மலிவு விலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பண்டங்களைப் பொதுமக்களுக்கு வின்யோகிப்பது பற்றியும் ;

18. மதுவிலக்கை தீவிரமாக அமுல்படுத்துகிறோம் என்ற பெயரால் போலீசுக்கு மதமிஞ்சிய அதிகாரங்களைக் கொடுத்து, தமிழ் நாட்டுச் சிறைகள் நிரம்பிவழியும்படியாக, பத்தாயிரக் கணக்கான ஏழைகளைச் சிறைப்படுத்தியிருக்கும் கொள்கையை மாற்றுவதுபற்றியும் ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திருத்தம் வழிமொழியப் பெற்றது.

திருவாளர்கள் அ. செல்லப்பா, கே. சொக்கலிங்கம், ப. பொன்னுரங்கம், எஸ். நடராசன், த. ஆறுமுகம், க. அரங்கசாமி, இரெ. இராசமாணிக்கம், வி. ரகுராமன், கா. சுப்ரவேலு, சேலம் மு. ஆறுமுகம், ஜே. ஜேம்ஸ் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்கள் பெயரில் உள்ள திருத்தங்கள் திரும்பப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

*புலவர் கா. கோவிந்தன் : பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் இந்த மன்றத்தில் நிகழ்த்திய உரையின்மீது என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் நம் நாட்டு விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு நியாயவிலை கிடைக்கவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்து இருக்கிறார்கள். தெரிவித்திருக்கிற அதேநேரத்தில் வட மாநிலத்திலே விளையக்கூடிய கோதுமைக்கு அளிக்கின்ற அந்த முறை தமிழ்நாட்டில் விளைகின்ற நெல்லுக்கு அளிக்கப்படவில்லை என்பதை மிக வருத்தத்தோடு தெரிவித்திருக்கிறார்கள். வருத்தத்தோடு தெரிவித்திருக்கிற அந்த அளவோடு இந்த அரசு தன்னுடைய கடமை நிறைவேற்றப்பட்டுவிட்டது என்று நினைத்துவிட்டார்களா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

நடைபெற்றது நியாயம் இல்லை என்று உணர்ந்த பிறகு, அதைச் சுட்டிக்காட்டுகின்ற வகையில் இந்த அவையிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர இந்த அரசு முன்வருமா என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

(புலவர் கா. கோவிந்தன்] [1979 பிப்ரவரி 15

தமிழ்நாட்டு விவசாயப் பெருமக்கள் பெரிய தொல்லைகளுக்கு உள்ளாகி இருக்கின்ற இந்த நிலையினை வடக்கே இருக்கிற அரசுக்கு எடுத்து வலியுறுத்துகின்ற வகையில் தமிழ்நாட்டில் ஒரு பேரணியை நடத்த முடியுமா என்று இந்த அரசைக் கேட்க விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பீடத்தில் இருந்த போது வடக்கே இருக்கிற அரசு நெல்லுக்கு 74 ரூபாய் தான் கொடுக்க முடியும் என்று சொல்லியிருந்த போதிலும் 10 ரூபாய் போனஸ், 5 ரூபாய் வண்டிச்சத்தம் என்ற முறையில் கொடுத்து, 85 ரூபாய் கொடுத்ததைப்போல இந்த அரசு 90 கொடுக்கின்ற நேரத்தில் முன்பு கொடுத்ததைப்போல இன்னும் 15 ரூபாய் அதோடு சேர்த்து 105 ஆகக் கொடுக்கலாம் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே 16,000 நியாயவிலைக் கடைகளைப் பற்றிப் பேசினார்கள். அதிலே 9,300 கடைகள் இந்த அரசு வருவதற்கு முன்பு நடைபெற்று வந்திருக்கின்றன என்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆக, பாதிக்கும் குறைந்த அளவான கடைகளே புதியனவாகத் திறக்கப்படுகின்றன. அதிலும் அரசுக்கு எந்தவிதமான பொறுப்பு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறேன். ஏற்கெனவே தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் கிரடிட் சொசைட்டி, அக்ரிகல்சுரல் பாங்க் என்ற நிறுவனங்கள் இருக்கின்றன. அந்த நிறுவனங்கள்தாம் தங்களுடைய எல்லைக்குட்பட்ட கிராமங்களில் இப்படிப்பட்ட கடைகளை நடத்துகின்றன. இதில் வருகின்ற ஆக்கமும் அழிவும் அந்தந்த நிறுவனங்களையே சேர்ந்ததே தவிர, அதிலே அரசுக்கு எந்தவிதமான பொறுப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீட்டுமனைகள் வழங்குதல் என்ற புதிய திட்டத்தை ஆளுநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இது ஒன்றும் புதுமையல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போது 1967 முதல் 1975 வரையில் 6 இலட்சத்திற்கு மேற்பட்ட வீட்டுமனைகளை வழங்கியிருக்கின்றது. முன்னாள் முதலமைச்சர் காமராஜ் அவர்கள் ஒருமுறை புகைவண்டியில் பிரயாணம் செய்தபோது, ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் அவருடன் பிரயாணம் செய்தார். காங்கிரஸ் ஆட்சிப் பீடத்தில் இருந்தபோது நீங்கள் இப்போது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு பட்டா வழங்குவதில் படாதபாடு படுகின்றதைப் போல பத்தில் ஒரு பங்கு பாடுபட்டிருப்பீர்களா என்று அந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்கின்ற அளவுக்கு பட்டா வழங்குவதில் சாதனை செய்து காட்டியிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழக அரசு.



1979 பிப்ரவரி 15] [புலவர் கா. கோவிந்தன்]

அதுமட்டுமல்ல. இங்கே கொடுத்திருக்கிற முறை என்ன? எந்த நிலத்தைக் கொடுக்கப் போகிறார்கள் என்று எண்ணிப் பார்க்கும்போது இருக்கின்ற பினாமி நிலங்கள், கையகப்படுத்தப் படும்—உபரி நிலங்கள் இவைகளைக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது எந்த அளவுக்கு நிறைவேறும்?

1971-ல் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டத்தைக் கொண்டு வந்து தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 1,75,000 பேர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதில் ஒரு இலட்சம் பேர் அரிசனங்கள். அந்த நிலங்கள் எல்லாம் அரசுக்குச் சொந்தமான நிலங்களோ அல்லது பஞ்சாயத்துப் புறம்போக்கு நிலங்களோ அல்ல. அத்தனையும் பட்டா நிலங்கள். பட்டா நிலங்களில் குடியிருந்தவர்களுக்கு அவர்கள் குடியிருந்த இடத்தையே உரிமையாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அரசு பெரும் தொகை செலவிட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 30 இலட்சம் ரூபாய் செலவு செய்து, நிலத்தை ஆர்ஜிதம் செய்து குடியிருந்தவர்களுக்கு பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். அந்த மாதிரி இந்த அரசும் செய்ய வேண்டும்.

10 ஆண்டுகளுக்கு முன்பு வீட்டுமனை கொடுப்பதுபற்றி மத்திய அரசு ஒரு புள்ளி விவரத்தை, கிராமப்புறங்களில் வீட்டு மனை கொடுக்கப்பட வேண்டியவர்களின் புள்ளி விவரத்தைத தயாரித்தது.

[முற்பகல் 9-30.]

அந்த ஒரு மாத காலத்திற்கு வட்டார அலுவலகங்களிலே யாருமே கிடையாது. எல்லோரும் கிராமங்களுக்குப் போய் விட்டார்கள். கிட்டத்தட்ட ஒரு மாத காலம் அங்கிருந்து புள்ளிவிவரங்களை எடுத்திருக்கிறார்கள். ஆனால் மனைப் பட்டா கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து வீடு கட்டுவதற்குத் திட்டம் போட்டிருக்கிறார்கள். இது எப்படிப்பட்ட திட்டம் போல் இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக ஐந்தாண்டுத் திட்டம், 10 ஆண்டுத் திட்டம் என்றுதான் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் போட்டிருக்கிற திட்டமோ நூறாண்டுத் திட்டமாக இருக்கிறதே என்று எண்ண வேண்டி இருக்கிறது. காரணம் என்னவென்றால் இந்தத் திட்டத்தின்படி 5 ஆண்டுகளுக்கு ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்கிறார்கள். சர்க்கார் கணக்குப்படிப் பார்த்தால்,

16 ஆயிரம் ரெவின்யூ கிராமங்கள் இருக்கின்றன, ஒவ்வொரு கிராமத்திலேயும் 100 வீடுகள் இருக்கும். வருஷத்திற்கு 20 ஆயிரம் வீடுகள் கட்டுவது என்றால் கிட்டத்தட்டஒரு நூறு ஆண்டுகள் ஆனால் கூட இந்தத் திட்டம் முடியுமா என்று எண்ணவேண்டி இருக்கிறது. இதை எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த ஆளுநர் உரையிலே அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றி எந்தவிதமான குறிப்புகளும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த போது ஆண்டுக்கு 1 இலட்சம் வீடுகள் கட்டுவது என்ற அடிப்படையில் 5 ஆண்டுகளில் 5 இலட்சம் வீடுகள் என்ற திட்டத்தின்படி மூன்று, நான்கு மாதத்திற்குள்ளாக கிட்டத்தட்ட 34 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுத்தது. அப்போது என்ன சொன்னார்கள்? அந்த வீடுகள் கோழிக்கூடு போல் இருக்கிறது என்றும், எங்கே கட்டுகிறார்கள், ஊரின் நடுவேயா கட்டுகிறார்கள், ஒதுக்குப் புறமாக அல்லவா கட்டி இருக்கிறார்கள் என்று எதிர்த் தரப்பிலே இருந்தவர்கள் சொன்னார்கள். அப்போது நாங்கள், இவர்கள் ஆட்சிக்கு வந்தால் அரிசனங்களுக்கு மாடி வீடுகள் கட்டிக் கொடுப்பார்கள் என்றும், அக்ரகாரத்திலேயே கட்டிக் கொடுப்பார்கள் என்றும் எதிர்பார்த்தோம். ஆனால் அது என்ன ஆகி இருக்கிறது? முதல் நிதி நிலை அறிக்கையில் 2 கோடி ஒதுக்கப்பட்டது. இரண்டாவது நிதிநிலை அறிக்கையில் 3 கோடி ஒதுக்கப்பட்டது, முதல் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கிய 2 கோடி இரண்டாவது நிதிநிலை அறிக்கை அளிக்கும் வரை அந்தத் துறைக்கே போய்ச் சேரவில்லை. அவர்களது திட்டப்படி இதுவரை கிட்டத்தட்ட 5 ஆயிரம் வீடுகள்தான் கட்டி இருக்கிறார்கள். மூன்று மாத காலத்திற்குள் 34 ஆயிரம் வீடுகள் கட்டிய திட்டத்திற்கும், இப்போது இரண்டாண்டு காலத்தில் 5 ஆயிரம் வீடுகள் கட்டுகின்ற திட்டத்திற்கும் வேறுபாடு இல்லையா? இதை எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே இன்னொன்றும் சொன்னார்கள். வீடு கட்டுகின்ற நேரத்திலே அந்த இடத்திலேயே மேல் ஜாதிக்காரர்களுக்கும் வீடுகள் கட்டுவோம் என்றார்கள். அரிசன மக்களுக்கு இருக்கின்ற நிலை மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சரவர்களுக்கே தெரியும். மனைப் பட்டா கொடுக்கப்படுகின்ற நேரத்திலே அதிலே 10 சதவீதம் உயர் ஜாதிக்காரர்களுக்கு கொடுக்கப்படுகின்ற திட்டம் என்பது ஏற்கனவே இருந்து வருகின்ற ஒன்றாகும். இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய புரட்சித்தலைவர் ஆட்சிக்கு வந்தால் அரிசன மக்களாகிய நமது நிலையினை உயர்த்துவார் என்றெண்ணி தங்களது வாக்குகளை அவர்கள் அளித்திருக்கிறார்கள். ஆனால்



உண்மையில் என்ன நடைபெற்றிருக்கிறது? அரிசனங்களுக்கு கிணறு வெட்டுவதற்கு 2,500 ரூபாய் மானியமாக திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியின்போது கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்போது அப்படிக் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லக்கூடிய நிலை உருவாகி இருக்கிறது. 2,500 ரூபாயில் கிணறு வெட்ட முடியாது என்பதால் ஒரு உத்தரவு போட்டு இருக்கிறார்கள். அரிசனங்களுக்கு 7,500 ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் தரவேண்டும் என்பது அந்த ஆணை. மகிழ்ச்சியான திட்டம். ஆனால் அந்தத் திட்டம் என்ன நிலையிலே இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். நாங்கள் மூன்றிலே ஒரு பங்கை மானியமாகத் தருகிறோம், மீதியை நிலவள வங்கியிலே போய்க் கடனாக வாங்கிக் கொள்ளுங்கள் என்று அறிவிக்கிறார்கள். நிலவள வங்கியின் நிலை எப்படி இருக்கிறது? அதனை இந்த மன்றத்திலே வீற்றிருப்பவர்கள் நன்கு அறிவார்கள். அவர்களுக்கு உலக வங்கியிலே இருந்தும், ரிசர்வ் வங்கியிலே இருந்தும் கடன் வாங்கிப் பணம் கொடுத்து வந்தார்கள். ஆனால் நிலவள வங்கியினர் வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்தாத காரணத்தால் இப்போது உலக வங்கியும் ரிசர்வ் வங்கியும் பணம் கொடுப்பதில்லை. ஆகவே நிலவள வங்கியிலே இருந்து கடன் கொடுக்கின்ற நிலை தற்போது இல்லை. ஆகவே அவர்களுக்குப் பணம் கொடுப்பது மறைமுகமாகவே மறுக்கப்பட்டுள்ளது. சோசியல் வெல்பேர் டிப்பார்ட்மெண்டிலேயிருந்து ஜி.ஓ.எம்.எஸ். நம்பர் 91, தேதி 9—2—1978 என்ற ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி நம்முடைய அமைச்சரவர்களுக்குக் கூட ஒரு கடிதம் எழுதி இருந்தேன். முன்பாவது உங்களுடைய கடிதம் பரிசீலனையில் இருக்கிறது என்றாவது பதில் வரும். அந்தப் பதில் கூட இப்போது வருவது இல்லை.

எல்லோருக்கும் வேலை என்று சொன்னார்கள். எல்லோரும் எதிர்பார்த்தோம். இப்போது தமிழ்நாட்டில் படித்துவிட்டு வேலை இல்லாமல் பதிவு செய்திருக்கிற அத்தனை பேர்களுக்கும் வேலை வந்துவிடுமா என்று எண்ணிப்பார்த்தோம். எந்த அளவிற்கு அது நிறைவேறும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தப் பொங்கலில் அல்ல, இதற்கு முந்திய பொங்கல் விழாவில் நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். அது, படித்துவிட்டு வேலையில்லாது இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு தருவதற்காக மலிவு விலை காய்கறித் திட்டம். அதற்காக வண்டிகள் கொடுத்தார்கள். எவ்வளவு பேர்களுக்குக் கொடுத்தார்கள்? 20 பேர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் கொடுத்தார்கள். அந்த விழாவில் அவர்கள் பேசியது மிக அருமையான பேச்சு. அண்ணா இதழ், 15—1—1978-ம் ஆண்டு அன்று வெளிவந்துள்ளது.

'' வீடு தேடிவரும் மலிவு விலை காய்கறித் திட்டம்.
பல்லாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு.
புரட்சித் தலைவர் தொடங்கி வைத்தார்.

[புலவர் கா. கோவிந்தன்] [1979 பிப்ரவரி 15

மலிவு விலையில் வீடு தேடிவரும் காய்கறித் திட்டத்தை சென்னை நகர மக்களுக்கு பொங்கல் பரிசாக முதல்வர் புரட்சித் தலைவர் தொடங்கி வைத்தார்.

வீடு வீடாகச் சென்று காய்கறிகளை விற்பனை செய்ய 3 சக்கர சைக்கிளை 20 இளைஞர்களுக்கு புரட்சித் தலைவர் வழங்கினார்.

விழாவில் புரட்சித் தலைவர் பேசியதாவது:

வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்கள் ஓரளவு படித்தவர்கள் தொழில் செய்து சம்பாதிக்கக்கூடிய வாய்ப்பும் ஏற்படுகிறது.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் இது பயன்படுகிறது. இந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் இந்தத் திட்டம் உருவெடுத்துள்ளது.

சென்னை நகரில் 35 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். வந்து போகிறவர்கள் 5 இலட்சம் என்று கணக்கிட்டால்கூட மீதி 30 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள்.

ஒரு குடும்பத்திற்கு நாலைந்து பேர்கள் என்று கணக்கிட்டால் ஆறு இலட்சம் குடும்பங்கள் இருக்கின்றன.

இப்போது சென்னை நகரில் 120 வட்டங்கள் இருக்கின்றன. விரைவில் 150 வட்டங்களாக ஆக இருக்கின்றது.

ஒரு வட்டத்துக்கு 5 பேர் விற்பனையாளர் போதாது. இதை அதிகப்படுத்த வேண்டும்.

இதன் மூலம் சென்னை நகரில் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும்.

சென்னை நகரத்தோடு இந்தத் திட்டம் நிற்காமல் மற்ற நகரங்களுக்கும் விஸ்தரிக்கப்படும்போது ஆயிரக்கணக்கான மூன்று சக்கர வண்டிகள் தேவைப்படும்.

இப்படிப்பட்ட வண்டிகளை உற்பத்தி செய்ய ஒரு தொழிற்சாலை துவக்கலாம். இதனால் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை கிடைக்கும்.

இப்படிப்பட்ட புதிய தொழிற்சாலைகளை கிராமங்களிலும் நகரங்களிலும் அமைக்க முடியும். இதன் மூலம் வேலை இல்லாத் திண்டாட்டம் ஓரளவு நீங்கும்.

காய்கறிகளை நகருக்கு எடுத்துவர லாரிகள் தேவைப்படும். அதற்கும் ஏற்பாடு செய்யலாம்.''



1979 பிப்ரவரி 15] [புலவர் கா. கோவிந்தன்]

இருபது பேர்களுக்கு வண்டிகள் கொடுத்துவிட்டு இருபதாயிரம் பேர்களுக்கு இதன்மூலம் வேலை கிடைக்கும் என்ற நல்லதொரு கனவைக் கண்டிருக்கிறார்கள் நமது முதல் அமைச்சர் அவர்கள். இந்தப் பொங்கலின் போதல்ல, சென்ற பொங்கலின் போது உருவாக்கப்பட்ட திட்டம் அது. ஆனால் இப்போது அந்த வண்டிகள் இருக்கின்றதா, திட்டம் இருக்கின்றதா என்றால் இல்லை. அதே போல் எல்லோருக்கும் வேலை கொடுக்கும் திட்டமும் ஆகி விடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பள்ளி போகாதிருப்பவர்களுக்கு வேலை கொடுக்கும் திட்டம். வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைக் கெடுக்கிற வகையில் இந்தத் திட்டம் அமைந்து விடுமோ என்று திரு. துரைமுருகன் அவர்கள் அச்சம் தெரிவித்ததைப் போல் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைக் கெடுக்கிற வகையில் நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வெண்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் அண்மையில் ஆசிரியர்கள் தேர்வு நடைபெற்றது. பத்து இடங்களுக்கு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அதற்காக வேலைவாய்ப்பு அலுவலகத்தைக் கேட்டபோது பின்தங்கிய வகுப்பினருக்கு ஒரு தனிப் பட்டியல், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒரு தனிப்பட்டியல், பொதுவான ஒரு பட்டியல் என்று அனுப்பியிருக்கிறார்கள். அரிஜன மக்களிடையே இரண்டு பேர்கள், பின் தங்கிய வகுப்பினரிடையே இருந்து மூன்று பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார்கள். ஆகவே, பொதுவாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களிடையே பிற்பட்ட வகுப்பினரும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் சேர்க்கப்படவில்லை. ஆகவே முற்போக்கு வகுப்பினரைச் சேர்ந்தவர்கள் ஐந்துபேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் அரிஜனங்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள், இவர்கள் அல்லாதோர் எவ்வளவு பேர்கள் இருப்பார்கள் என்று எண்ணிப் பார்க்கிற நேரத்தில் இவர்களுக்கும் ஐந்து, அவர்களுக்கும் ஐந்து என்று சொல்கிற நிலை ஏற்பட்டிருப்பது வேதனைக்குரிய நிகழ்ச்சியாகும். அப்படிப்பட்டதொரு நிகழ்ச்சியை உருவாக்க இப்போது வெளியிட்டிருக்கிற திட்டம் பயன்படக்கூடாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வடக்கே இருக்கிறவர்களுக்கு இருக்கிற அந்த உணர்வுகூட இந்த அரசுக்கு இல்லையோ என்று எண்ணவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. மெயிலில் 12—2—1979 அன்று பீகார் முதல் அமைச்சர் அவர்கள் சொன்ன ஒரு கருத்தை இங்கே எடுத்து வைப்பது முறையாக இருக்கும் என்று கருதி அதைப் படிக்கிறேன்.

*Mail, dated 12th February 1979.*

"I am only a Sudra executing Brahmins' directives"—Karpuri Thakur.

There is no going back on the policy of reservations for Bac ward Classes even if 'Bihar is to burn' Bihar Chief Minister Karpoo Thakur asserted here yesterday.

The provision of reservations for backward classes were enshrin in the Constitution by a generous Kashmiri Brahmin—Mr. Nehr while another, Brahmin, a Gujarati (Mr. Morarji Desai) included the Janata Party manifesto, and the Janatha Chief—a Kshatriya (Cha dra Shekhar) issued the directions for implementation. He defend his Government's action in a chat with newsman.

'Is it my crime that I happen to be a Sudra who is entruste with the task of implementation' he asked.

Mr. Thakur explained that the reservationists were limited t 20 per cent of the total among the 128 backward classes.

(முற்பகல் 9-40)

என்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த உணர்வுகள் நீண்ட நாட்களுக்கு முன்னால் தமிழகத்தில் இருந்து வந்திருக்கிறது. சட்டத்தில் இடமில்லாத காரணத்தால், 49 இடத்தை ஒதுக்க வேண்டும் என்றமுறையில் தாழ்த்தப்பட்டவர் களுக்கு 18-ம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 31-ம் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் ஒதுக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இன்னும் சொல்லப் போனால் 75 சத வீதம் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் இவர் களுக்கும், 25 சதவீதம் மற்றவர்களுக்கும் என்று மாற்ற வேண்டுமே ஒழிய இதில் எந்தவிதமான மாற்றமும் வராத வகையில் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்கு, மதுவிலக்கைப்பற்றி நமது முதலமைச்சர் அவர்கள் தீவிரமாக இருப்பதாகக்கருத்துக்கள் சொல்லப்பட்டன. ஆனால் நாட்டில் என்ன நடைபெறுகிறது? ஆளுநர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நாட்டில் கள்ளச்சாராயம் விற்கப் படுகிறது. காவல்காரர்களும் அறியாதது போல் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையில் ஆளுநர் உரை நிகழ்த்திய அன்றே எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் ஒரு செய்தி வருகிறது. திருவள்ளூர் அருகில் ரெட்ஹில்ஸ் பகுதியில் 4,600 லிட்டர் சாராயம், 123 காலன் களில், ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சாராயம் பிடிக்கப் பட்டிருப்பதாகச் செய்தி வருகிறது. முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களின் பட்டியல் என்னிடத்தில் இருக்கிறது என்று சொன்னார்கள், பட்டியல்





இருந்தால் வெளியிடவேண்டும், அதில் ஏன் தயக்கம்? ஒரு காலத்தில் இந்தியப் பிரதமராக இருந்த ஒருவர் சொன்னார், கள்ளமார்க்கட்காரர்கள், கள்ளப்பணம் வைத்திருப்பவர்களைத் தூக்கில் போடுவேன் என்று அறிவித்தார்கள். அதை நாடும் எதிர்பார்த்தது. யாரையும் தூக்கில் போடவில்லை. பின்னால் என்ன நடந்தது, அவர்கள் காலில் விழுந்து, கறுப்புப் பணத்தைத் தொழில் முதலீடு செய்யுங்கள், ஏது பணம் என்று கேட்க வில்லை என்று அவர்களிடம் சொல்லக்கூடிய நிலைமை ஏற் பட்டது. இந்த நிலையில், நமது முதலமைச்சர் அவர்களுக்கு— அன்று அவர்கள் சொல்வது போல் —சூழ்நிலைக் கைதியாக—அந்த நிலையில் பட்டியலை வெளியிட முடியாத நிலையில், பட்டியலை வெளியிட்டால் கட்சியை நடத்த முடியாத நிலை ஏற்பட்டி ருக்கும் என்று நினைக்கிறேன். என்னவாகியிருக்கிறது. கீழ்மட்டத்திலுள்ள அதிகாரிகள், மேல்மட்டத்திலுள்ள அதி காரிகள் இவர்களுக்கெல்லாம் மாமூல் கொடுக்கவேண்டிய நிலைமை இருந்ததுபோல், ஆளும் கட்சிக்காரர்களுக்கும் மாமூல் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. மதுவிலக்கைத் தீவிரமாக நடத்த வேண்டும் என்று எண்ணம் இருந்தால், யார் இதை மீறுகிறார்கள் என்பது முதலமைச்சர் அவர்களுக்கு நன் றாகத் தெரியும், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்குக் கொஞ்சமும் தயங்கக்கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

ஊழல், இதைச் சொல்லிக்கொண்டே ஆட்சி புரிந்துவிடலாம் என்று அண்ணா தி.மு.க. நினைத்துக்கொண்டிருக்கிறது. ஊழல் எங்கு இல்லை? ஒரு உதாரணம் சொல்கிறேன். வெம் பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் டி.டி.ஓ.மூலமாகக்கிட்டத்தட்ட 16 ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு 66 ஆயிரம் ரூபாய் வசூலிக்கப்பட்டுவிட்டது. நான் அறுவை சிகிச்சை செய்து கொண்டு மருத்துவ மனையில் இருக்கிறேன். என்னிடம் பட்டியல் போட்டுக் காண்பிக்கிறார்கள். அதன் அடிப்படையில் நான் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதி, இதில் உண்மை இருக்கிறது, ஆகவே இதன் மீது நடவடிக்கை எடுங்கள் என்று கடிதம் எழுதுகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் டி.டி.ஓ. வின் பட்டியலைப்பற்றி விசாரிக்கிறார். விசாரித்த பின்னால் அவர் போட்ட நியமனஉத்தரவை நிறுத்தி வைக்கிறார். பின்னால் அங்குள்ள அண்ணா தி.மு.க.வின் அமைப்புச் செய லாளர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சென்று "டி.டி.ஓ-வின் பட்டியலைத் திருத்தம் செய்யாதீர்கள், அப்படியே இருக்கட்டும்" என்று சொல்லியிருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கு இணங்கவில்லை. பின்னால் சென்னைக்கு வருகிறார்கள். கோட்டையில் இருக்கின்ற அண்ணா தி.மு.க. பிரமுகரிடம் நேராக வந்து சொல்லுகிறார்கள், அவர் இங்கிருந்து தொலை பேசியில் பேசுகிறார் (குறுக்கீடு) பெயரை வேண்டு மானால் சொல்லுகிறேன், கோட்டையிலுள்ள அந்த அ.தி.மு.க. பிரமுகர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அப்படியே இருக் கட்டும் என்று சொல்லுகிறார்........

திரு. அ. க. அரங்கநாதன்: வெம்பாக்கத்தில் இருக்கிற அ.தி.மு.க. அமைப்புச் செயலாளர் இதில் ஈடுபட்டார் என்று சொல்லுகிறார்கள், அவருடைய பெயரைக் குறிப்பிட்டால் நல்லது.

புலவர் கா. கோவிந்தன்: வெம்பாக்கம் அமைப்புச் செயலாளருடைய பெயரைச் சொல்வது மட்டும் அல்ல, கோட்டையிலுள்ள அ.தி.மு.க. பிரமுகரின் பெயரைச் சொல்வதற்கும் நான் தயாராக இருக்கிறேன். இப்படி நடந்திருக்கிறது. இந்த நிகழ்ச்சி பற்றி கோட்டையிலுள்ள அ.தி.மு.க. பிரமுகரிடம் இப்படிச் செய்யலாமா என்று கேட்டபோது, அவரும் ஏதோ வந்தார்கள், சொல்லி விட்டேன் என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு 66 ஆயிரம் ரூபாய் வசூல் செய்யப்படுகிறது. இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரித்து நிறுத்தி வைத்திருக்கிறார் என்றால் அவரை நாம் பாராட்டக் கடமைப்பட்டவர்கள், அதை விட்டு விட்டு, தங்கள் கட்சிக்காரர்கள் செய்கிற தவறுக்குத் துணை போகக் கூடிய அளவுக்கு நிகழ்ச்சி நடந்திருக்கிறது.

என்னுடைய வட்டத்தில் எச்சூர் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே ஒருவர் தொழில் செய்வதற்காக இந்தியன் வங்கியிலே கடன் வாங்கி, 32 ஆடுகளை வாங்கி வளர்த்துக் கொண்டு வந்தார். ஒருநாள் அந்த ஆடுகளைப் பட்டியில் அடைத்து விட்டு வீட்டிற்கு வந்தார். மறுநாள் போய்ப் பார்த்த போது அங்கே ஆடுகளைக் காணோம். உடனே காவல்துறையிலே போய் முறையிடுகின்றார். காவல் துறையினர் தேடிப் பார்த்ததில், அந்த ஆடுகள் வந்தவாசியிலே கிடைக்கின்றன. பாதி ஆடுகள் வெட்டப்பட்டு விட்டன. மற்றும் பாதி ஆடுகள் கத்தாமல் இருப்பதற்காக வாயிலே கம்பிகளால் அடைக்கப்பட்டிருக்கின்றன. கிடைத்த ஆடுகளை காவல்துறையினர் லாரியிலே ஏற்றிக்கொண்டு வந்தவாசியிலே இருந்து செய்யாறுக்கு வருகிறார்கள். வந்தவாசியிலுள்ள ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர் செய்யாறு காவல் நிலையத்திற்கு வந்து, இந்தக் கேசை விட்டு விடுங்கள் என்று கேட்கிறார்கள். காவல்துறையினர் பாதி ஆடுகள் இருக்கின்றன, போன ஆடுகள் வரட்டும் என்று சொல்கிறார்கள். சந்தையிலே இருந்து மிச்ச ஆடுகளை வாங்கிக் கொண்டுவந்து கொடுக்கிறார்கள். அப்போது காவல் துறையினர் ஏற்கெனவே வழக்கு பதிவு செய்துவிட்டதால், ஒன்றும் செய்வதற்கில்லை என்று நிராகரித்து விடுகின்றார்கள். இந்த நேரத்தில் எனக்குச் செய்தி வந்தது. நான் அந்தக் காவல் துறையினரை தொலைபேசி மூலம் கேட்கிறேன். ஆடுகள் வரும்வரையில் காத்துக் கொண்டிருக்கிறோம், கேசை நடத்தப் போகிறோம், தவறு நடந்திருக்கிறது, ஆடுகளைத் திருடியிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. காவல்துறையினர் கண்டு பிடித்துக் கொண்டுவந்த ஆடுகளை சட்டமன்ற உறுப்பினர்





நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று சொல்வது எந்த வகையில் நியாயம்? அது தவறு. நான் அங்கே ஒரு காவல்காரன்போல், காவல் நாய்போல் காத்துக் கொண்டிருந்த காரணத்தால் . . . .

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு புலவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லிக்கொண்டு வருவது உண்மையிலேயே அரசுக்கு உதவியாக இருக்கும் என்ற வகையில் நாங்கள் கூர்ந்து கவனித்துக்கொண்டு வருகிறோம், வேறல்ல. நான் குறுக்கிடுவதாக அவர்கள் கருதத் தேவையில்லை. ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய கடந்த கால அனுபவத்திலேகூட, அதிகாரிகள் என்ன செய்வார்கள் என்றால், சில நேரங்களில் லஞ்சம் வாங்கிக் கொண்டு, நீங்கள் மந்திரி இடத்திலே போய் அல்லது புலவர் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்களிடத்திலே போய் ஒரு போன் செய்யுங்கள் என்று நம்மை ஏமாற்றுவதும் உண்டு. ஆகவே, இதையும் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

புலவர் கா. கோவிந்தன்: நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய கட்சி உறுப்பினருக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற முறையில் அதிகாரிகளைக் காட்டிக்கொடுக்கின்ற நிலைமைக்கு வர வேண்டாம். . . . . . . . . . .

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் சொல்வது தவறு செய்கிறவர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். நான் சொல்வது ஒருவரைக் காட்டிக்கொடுக்கவோ அல்லது காப்பாற்றுவதற்கோ அல்ல. சமுதாயத்திலே சில நேரங்களில் அதிகாரிகள் சில இடங்களில் அப்படிச் செய்வதும் உண்டு; அப்படி நடந்தும் இருக்கின்றது. ஆனால் மேல் மட்டத்திலே இருக்கின்றவர்கள் ஒழுங்காக இருந்தால், தவறைக் குறைப்பதற்கோ அல்லது ஒழிப்பதற்கோ உதவியாக இருக்கும். அது இல்லாததால்தான் இவர்கள் கஷ்டப்படுகிறார்கள்.

திரு. பொ. முனுசாமி: பாயிண்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, முன்னாள் சபாநாயகர் அவர்கள் வந்தவாசி சட்ட மன்ற உறுப்பினர் மீது குற்றஞ்சாட்டிப் பேசுகிறார். அந்த மாதிரி நிகழ்ச்சி எந்த நேரத்திலே நடந்திருந்தாலும், நான் தலையிட்டு சொன்னதாகச் சொல்லுகிறார்கள். நான் தலையிடவில்லை. அந்தப்போலீஸ் அதிகாரிகள் மூலமாக வேண்டுமானாலும் கேளுங்கள். நான் போய் காவல்துறை அதிகாரிகளிடம் சொல்லவில்லை என்பதை சபாநாயகர் மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்குச் சொல்லுகிறேன். அங்கே அதிகாரிகள் நல்ல முறையிலே

நடந்து கொண்டார்கள் என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் அங்கே நாங்கள் விழிப்போடு இருந்து கொண்டிருக்கிறோம். இல்லையென்றால், மாவட்ட ஆட்சியாளர் தவறியிருக்கக் கூடும்; காவல்துறை அதிகாரிகளும் தவறியிருக்கக் கூடும். நாங்கள் விழிப்புடன் இருந்த காரணத்தால் அந்தத் தவறு நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக், கொள்கிறேன். அடுத்து மொழிப் பிரச்னை...........

திரு. பொ. முனுசாமி: தலைவர் அவர்களே, ஆதாரம் வைத்துக் கொண்டு பேசுவதானால் பரவாயில்லை. அவர் பேசுவது ஒரு சட்டமன்ற உறுப்பினரை அவமானப்படுத்துவது போல் இருக்கிறது. எந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு பேசுகிறார்கள். மேடையிலே பேசுவதுபோல், சட்ட மன்றத்திலே பேசுவது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்னாள் பேரவைத் தலைவர் அவர்களுக்கு நான் சொல்லவேண்டிய தேவையில்லை. அவர் சொல்லுகிறபோது ஆதாரங்களை வைத்துக்கொண்டு, இந்தப் பிரச்சினையைப் பற்றி பேசவேண்டும். அப்படிப் பேசுகின்றபோது, அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டுப் பேசியிருந்தால் இந்தச் சிக்கல் ஏற்பட்டு இருக்காது. உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தோடு நிரூபிக்கத் தயார் என்று சொல்வதானால், நான் ஏற்றுக்கொண்டு அனுமதிக்க முடியும். இல்லாவிட்டால், இந்தப் பிரச்னை ஏற்றுக்கொள்ளப்படாது. தள்ளிவிட வேண்டி வரும்.

(முற்பகல் 9-50)

புலவர் கா. கோவிந்தன்: இரண்டு குறிப்புகளைச் சொன்னேன்—ஒன்று, ஆசிரியர் நியமனத்தில் ஆளும் கட்சி அமைப்பாளர் மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்த்தது; சென்னை கோட்டையில் இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பிரமுகரைப் பார்த்தது உண்மை என்று சொல்கிறேன். இல்லை என்று சொன்னால் நான் சொன்னதற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன். முழுக்க முழுக்க உண்மைதான். அவருடன் நேரிலேயே பேசியிருக்கிறேன்.

இரண்டாவது ஆடு திருடு நிகழ்ச்சிப் பற்றிச் சொன்னேன்: இப்படி நடைபெற்றது உண்மை. ஆளும் கட்சி உறுப்பினர் வந்தவாசியிலிருந்து செய்யாறுக்கு இரண்டு முறை வந்தது உண்மை. காவல்துறை அதிகாரிகளிடத்தில் கேட்டது, வந்தது, வழக்கு பதிவு செய்து கொடுத்தது உண்மைதான். இதிலே நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.



திரு கே. பண்ணை சேதுராம்: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வந்தவாசி சட்டமன்ற உறுப்பினரைக் குற்றம் சாட்டிப் பேசினார்கள். அவர் இல்லையென்று சொல்லுகிறார். இவ்வாறு பேசுவது உரிமைப் பிரச்சினை..................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது வந்தவாசி சட்ட மன்ற உறுப்பினர் சம்பந்தப்பட்ட பிரச்சினை. அவருக்குத் தெரிந்த அளவுக்கு பண்ணை சேதுராம் அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. பேசிய உறுப்பினர் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்.

புலவர் கா. கோவிந்தன்: இந்தி மொழிப் பிரச்சினையைப் பற்றி ஒரு கருத்துக் கூற விரும்புகிறேன். நம்முடைய ஆளுநர் அவர்கள் சென்ற முறை நிகழ்த்திய உரையில் கண்டிருக்கிற கண்டிப்பான வார்த்தை கூட இந்த முறை அளித்த அறிக்கையில் இல்லை.

''தமிழகத்தின் மீது மொழித் திணிப்பு எந்த வகையில், உருவில், வழியில் வந்தாலும் சரி, அதனை இந்த அரசு ஏற்றுக் கொள்ளாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அது விபரீத விளைவுகளை ஏற்படுத்துமென்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிரதமரின் வாக்குறுதிகளை மறுதலிக்கும் வகையில், மைய அரசின் சில அமைச்சரகங்கள் தொடர்ந்து இந்தியைத் திணிக்கும் முயற்சிகள் மேற்கொள்வது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது.''

என்ற இந்த அளவுக்குக் கூட, இந்த முறையில் ஆளுநர் உரையில் அளிக்க முடியாத சூழ்நிலை ஏன் உருவாயிற்று என்று சிந்தித்துப் பார்த்துப் புரிந்து கொள்ள முடியவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்ன என்று இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைமையைத் திருச்சி மாநாட்டுத் தீர்மானம் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறது. அண்ணா அவர்கள் கொள்கையிலேதான் நாங்கள் செல்லுகிறோமே தவிர வேறல்ல.

அண்ணா அவர்கள் 1963 ஏப்ரல் 13-ல் ஆட்சி மொழிச் சட்டத்தை எதிர்த்து மாநிலங்களவையில் போர்க்குரல் எழுப்பினார்கள். அதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன் —

''இந்தியாவில் வழங்கப்பட்டு வருகின்ற மொழிகளில் ஏதாவது ஒரு மொழி இந்தியாவின் பொதுமொழியாக இருக்க வேண்டும் என்ற கருத்துக்கு நான் உடன்படவில்லை. இந்தியா

ஒரே நாடு என்ற நிலையில் இருப்பதல்ல; அது ஒரு ஐக்கிய நாடு என்ற அமைப்புடன் விளங்கி வருவதாகும்; இதுவுமின்றி, இந்திய சமூகம் பல்வேறு இனங்களைக் கொண்டிருக்கும் ஒன்றாகும். நமது அரசியல் அமைப்பு பலவற்றை இணைந்திருக்கக்கூடிய இணைப்பு முறையாகும். பல இன மக்களைக் கொண்ட சமூக அமைப்பிலும், இணைப்பு முறை அரசியல் அமைப்பிலும், ஒரே ஒரு பொதுமொழி தேவை என வாதாடுவது நமது சமூகத்தில் சில பகுதி மக்களுக்கு எதிர்பாராத அநீதியையும், இக்கட்டுகளையும் ஏற்படுத்திவிடும்'' என்பது 1963 ஏப்ரல் 13-ம் நாள் மாநிலங்கள் அவையில் அண்ணா அவர்கள் ஆற்றிய உரை.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1968 ஜனவரி 23ம்தேதி நிறைவேற்றப்பட்ட தீர்மானம்—

''பல்வேறு மொழி-பண்பாடு-நாகரிகங்களைக் கொண்ட இந்தியாவில் ஒரு வட்டார மொழியை மட்டும் ஆட்சி மொழியாக்குவது இந்திய ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் குலைத்து, ஒரு மொழிப் பகுதி மற்ற மொழிப் பகுதிகளை அடிமை கொள்ள செய்திடும் என்று உணரப்படுவதால், தமிழும், மற்ற தேசிய மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். அதுவரையில் ஆங்கிலமே ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வர வேண்டும். அதற்கு ஏற்றபடி இந்திய அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவு திருத்தப்படவேண்டும் என்று இந்த மன்றம் வற்புறுத்துகிறது.''

என்று இந்தச் சட்டமன்றத்தில் அண்ணா அவர்கள் மொழிக் கொள்கை பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றுகிறபோது கருத்தறிவித்திருக்கிறார்கள்.

இதிலிருந்து நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது தமிழ் இந்தியாவின் ஆட்சி மொழியாகும் வரை இந்தி ஆட்சிமொழியாவதை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளாது என்பதாகும்.

1968-ல் மொழித் தீர்மானத்தை நிறைவேற்றியபோது அண்ணா அவர்கள் கழகத்தின் தீர்மானம் என்று குறிப்பிட்டு ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள்.—

''எங்கள் கழகத்தின் தீர்மானம்—அப்போது தேசீய மொழிகள் 14-ஆக இருந்தன—இந்தியாவின் தேசிய மொழிகள் அத்தனையும் ஆட்சி மொழிகளாக ஆக்கப்பட வேண்டும். அப்படி ஆக்கப்படுகிற காலம் வரையில் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக நீடிக்கவேண்டும் என்பது எங்கள் கழகத்தின் திட்டம்.





அது நிறைவேறுகிற வரையில் நாங்கள் முழுத் திருப்தி அடைவோம் என்று சொல்வதற்கில்லை. ஆனால் இப்போது வந்திருக்கிற சட்டம் இருக்கிறதே அது உங்களுக்கு எப்படிப் படுகிறது என்று கேட்டார்கள். அது எனக்கு எப்படிப் படுகிறதென்றால் மழை பெய்கிறபோது குடை கிடைக்காவிட்டாலும் மேல் துணியை வைத்துக் கொண்டு பிடித்துக் கொள்வதுபோல் உடனடியாக இந்தி வந்து விடாமல் ஆங்கிலத்தை வைத்துத் தடுக்கிறோம்'' என்று சொல்லியிருக்கிறார்கள்.

'இதிலேயே, திருப்தியடைந்து விடுவோமா என்றால் மாட்டோம், நம்முடைய கம்யூனிஸ்ட் நண்பருக்குத் தெரியும். தொழிற் சங்கத்தைச் சார்ந்தவர்களுக்கும் தெரியும். முதலாளிகளிடம் கோரிக்கைகளை வைக்கும்பொழுது 25 கோரிக்கைகளை வைப்பார்கள். ஆனால் அவர்களுக்குள் பேசிக் கொள்ளும்பொழுது முதலாளி 7, 9, 11 டிமாண்டுகளை ஏற்றுக் கொண்டால் போதும் என்று சொல்வார்கள். 7, 9, 11ஐ மட்டும் வைத்தால் முதலாளி 9-வது டிமாண்டை மட்டும் ஏற்றுக் கொண்டு 7-வது டிமாண்டையும் 11-வது டிமாண்டையும் தள்ளிவிடுவாரே என்பதற்காக கோரிக்கைகளை வைக்கும்பொழுது நிறைய கோரிக்கைகளை வைத்துவிடுவார்கள். அதுபோல் நம்முடைய கோரிக்கைகளை வைக்கும்பொழுது, நிறைய கோரிக்கைகளை வைத்து, அவைகளில் எதில் எதிலே வெற்றி கிடைக்கும் என்று பார்த்து, பிறகு மற்றவற்றுக்கு வரவேண்டும்' என்று கூறியிருக்கிறார்கள். தமிழ் மட்டும் நம்முடைய ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். மத்திய ஆட்சியிலே இந்தி தேவையில்லை என்ற வகையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே முன்னுக்குப் பின் முரண் என்பது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இங்கே பேசியவர்கள் கேட்டார்கள், தொடர்ந்து வற்புறுத்தினார்களா என்று, தமிழ்நாடு சட்டமன்றத்தில், 1974 ஏப்ரல் 16 ஆம் நாள் முன் மொழியப்பட்டு விவாதிக்கப்பட்ட மாநில சுயாட்சித் தீர்மானத்தை ஒட்டி அளிக்கப்பட்ட, தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துரைகளில், மொழிபற்றிய தலைப்பில் கூறியிருப்பது, 'மைய அரசின் ஆட்சி மொழி, அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது விவரப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள அனைத்து மொழிகளாகவும் இருக்க வேண்டும். இந் நிலையினை எய்தும்வரை மைய அரசு தலைமைச் செயலகம் உட்பட மைய அரசுத் துறைகளனைத்திலும் மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே தொடர்பு கொள்ளவும் ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சி மொழியாக இருக்கவேண்டும்: உச்ச நீதி மன்றத்தில் ஆங்கிலமே தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும். உயர் நீதி மன்றம் உட்பட நீதி மன்றங்கள் அனைத்திலும் பயன்படுத்தப்படும் ஆட்சி மொழியை அந்தந்த மாநில அரசுகளே முடிவு செய்ய

வேண்டும். மாநிலத்தில் உள்ள மைய அரசின் அலுவலகங்கள் பொதுமக்களுடன் அலுவல் தொடர்பு கொள்வதற்கு ஆங்கிலத்துடன் அந்தந்த மாநிலத்தின் ஆட்சி மொழியையும் பயன்படுத்த வேண்டும். மாநிலத்தில் அமைந்துள்ள மைய அரசின் அலுவலகங்களால் மாநில அரசோடும் அதன் அலுவலகங்களோடும் மேற் கொள்ளப்படும் தகவல் தொடர்புகள் அந்த மாநிலத்தின் ஆட்சி மொழி வாயிலாகவே நடைபெறல் வேண்டும். மாநிலத்தில் பணிபுரியும் மைய அரசுப் பணியாளர்கள் அந்த மாநிலத்தின் ஆட்சி மொழியை நன்கு அறிந்திருத்தல் வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, இப்படி திராவிட முன்னேற்றக் கழகம் தங்கள் கொள்கையை தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு வருகிறது. ஆனால் யாருக்குத் தடுமாற்றம் இருக்கிறது என்றால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தான் தடுமாற்றம் இருக்கிறது.

வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் செய்த முதலமைச்சர் அவர்கள் 8—12—1978-ல் சிங்கப்பூரில் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார். ‘ மறைமுகமாக, இந்தி பேசாத மக்கள் மீது இந்தி திணிக்கப்படுவதற்கு ஒட்டு மொத்தமாக முடிவு கண்டாக வேண்டும். இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று ஒருபுறம் பிரதமர் உறுதி கூறிவந்தாலும், பல்வேறு வகைகளில் இந்தி பேசாத மக்கள் மீது புறக்கடை வழியாக இந்தி திணிக்கப்படுகிறது.’ என்று பேசியிருக்கிறார், தென்னகம் பத்திரிகையிலே வந்திருக்கிறது.

அடுத்து திருச்சியில் நடைபெற்ற தி. மு. க. இந்தி எதிர்ப்பு மாநாட்டை முதலமைச்சர் வரவேற்றார். அதற்குப் பிறகு 16—1—1979 அன்று வள்ளுவர் கோட்டம், திருவள்ளுவர் விழாவில் பேசியபோது முதலமைச்சர் ‘ நாம் ஏமாந்துவிட்டால், சற்று அயர்ந்துவிட்டால்’ சோர்வாக இருந்துவிட்டால் தமிழுக்கே ஆபத்து வரக்கூடிய நிலைமை நம்மைச் சூழ்ந்துக் கொண்டிருக்கிறது என்பதை மனதிலே பதிய வைத்துக் கொண்டு, எச்சரிக்கையோடு செயல்பட வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம் ’ என்று பேசியிருக்கிறார். இதுவும் தென்னகம் பத்திரிகையிலே வந்திருக்கிறது.

அடுத்து, 18—1—1979-ல் தமிழகம் வந்த பாரதப் பிரதமர் தேசாயைத் தனிமையில் சந்தித்துப் பேசினார் முதலமைச்சர். அதற்குப் பிறகு 21—1—1979-இல் நெல்லையில் நடைபெற்ற கூட்டத்தில் முதலமைச்சர் பேசுகின்ற நேரத்திலே ‘ சட்டத்தின் மூலம் இந்தி திணிக்கப்படமாட்டாது என்று பிரதமர் மொரார்ஜி தேசாய் கூறியிருக்கிறார் ; இப்படியாக பண்டித நேரு அளித்த உறுதிமொழியை மீண்டும் உறுதி செய்துள்ளார்.



ஆகவே திணிப்பு இல்லாதபோது இந்தியை ஏன் எதிர்க்க வேண்டும் ? இந்தித் திணிப்பு எங்கே இருக்கிறது ?’ என்று கேட்டிருக்கிறார். ஆகவே தடுமாற்றம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தானே தவிர திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இல்லை. நம்முடைய புரட்சித் தலைவர் நிறுவனராக இருக்கிற அண்ணா பத்திரிகையிலே 13—2—1979 அன்று எழுதப்பட்டுள்ள கட்டுரையிலே சொல்லப்பட்டிருப்பது, ‘ இந்திப் பிரச்சினையில் கருணாநிதி திடீர் பல்டி. இந்திப் பிரச்சினையில் தி. மு. க. வின் கொள்கை கருணாநிதி அடித்த அந்த பல்டி காரணமாக மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்து விட்டது.

இதுநாள்வரையில் இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு என்று சொல்லி வந்தனர், அது முற்றிலும் சரி, ஆனால், இந்தக் கொள்கை அரசியல் ரீதியில் அவருக்கு ஆதரவு போதியதாக இல்லை என்று கருதியோ என்னவோ கருணாநிதி திடீரென்று இந்தி என்ற மொழியையே எதிர்ப்பதாக அறிவித்துவிட்டார்.

மேலும், இந்தி மொழியை படிக்க ஏற்கனவே உள்ள வாய்ப்புகளையும் தமிழ்நாடு அரசு எதிர்க்கவில்லை என்பதும் தெரிந்தது தான் ’ என்று எழுதியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொஞ்சம் கூர்ந்து கவனிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 35 நிமிடங்கள் எடுத்துக் கொண்டுள்ளார்கள்.

புலவர் கா. கோவிந்தன் : வருஷத்திற்கு ஒரு முறைதான் நான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் ஒருமுறை பேசலாம், ஆனால், அவர்களது கட்சிக்காரர்கள் பேசுகிறார்களே.

புலவர் கா. கோவிந்தன்.—அந்தப் பத்திரிகையில் மேலும் வருகிறது, “ மேலும் இந்தி மொழியை படிக்க ஏற்கனவே உள்ள வாய்ப்புகளையும் தமிழ்நாடு அரசு எதிர்க்கவில்லை என்பதும் தெரிந்ததுதான்.

இந்தி தேசிய மொழிகளில் ஒன்று என்பதும் மேலும் இந்தியப் பேரரசின் நிர்வாகமொழி என்பதும் அனைவரும் அறிந்ததே.

தமிழ்நாடு அரசு இருமொழிக் கொள்கையை கொண்டிருப்பதால் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலமும் தமிழும் கற்றுத்தரப்

படுகின்றன. கோரிக்கைகள் வருமேயானால் பள்ளிக் கூட வேலை நேரம் முடிந்தபின் மற்ற மொழிகள் கற்றுத் தர வசதிகள் செய்து தரப்பட வேண்டும். அப்படிப்பட்ட வசதிகள் உள்ளன.

உண்மையைச் சொல்லப் போனால் இந்தியைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் முன்னைவிட அதிகமாக தமிழ்நாட்டு மக்களிடம் தோன்றியுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் இந்தி மொழிக்கே எதிர்ப்பு என்று குரல் கொடுக்கும் கருணாநிதியின் கோரிக்கை முட்டாள் தனமாகவும் சிறுபிள்ளைத் தனமாகவும் உள்ளது.

இந்தியாவின் 14 மொழிகளில் தனித்தனியாக பார்த்தோமேயானால் இந்திமொழிதான் அதிகம் பேசுகிறவர்கள் என்ற தகுதியைப் பெறுகிறது.

இந்தி மொழிக்கே எதிர்ப்பு என்ற திரிப்பு வேலை இப்போது அல்ல என்றைக்குமே வெற்றி பெறாது.''

இது அண்ணா நாளேட்டிலே வந்திருக்கும் செய்தி. ஆனால் கெட்டிக்காரத் தனமாகக் கடைசியாக, '' இது முழுக்க முழுக்க மெயில் ஏட்டின் தனிப்பட்ட கருத்து என்பது குறிப்பிடத்தக்கது'' என்று போட்டிருக்கிறார்கள். ஒரு பத்திரிகையிலே வரும் செய்திகளை இன்னொரு பத்திரிகையிலே போடுகின்ற நேரத்தில் அந்தக் கருத்து இந்த ஏட்டுக்கு உடன்பாடாக இருந்தால் போடுவார்களே தவிர, உடன்பாடு இல்லாத நிலையிலே போடமாட்டார்கள்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி எதிர்ப்பு மாநாடு நடத்துகிறது என்றால் அதற்குக் காரணம் தமிழ்நாட்டிலுள்ள அரசியல் சூழ்நிலைதான். இந்தியை எதிர்க்கிறோம் என்று சொல்லாமல் தமிழ்நாட்டில் யாரும் அரசியல் நடத்த முடியாது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் அவர்கள் இவ்வாறு செய்கிறார்கள். இது அவர்கள் உள்ளத்திலேயிருந்து வரவில்லை. எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால், திரு. எஸ். ஆர். இராதா அவர்களைத் தலைவராகக் கொண்ட சுற்றுலா வாரியம் பொருட்காட்சி நடத்திக் கொண்டிருக்கிறது. அந்தப் பொருட் காட்சிக்கு நமக்கு அழைப்பு அனுப்பியிருக்கிறார்கள். இதை முன்னவர் அவர்கள் கூர்ந்து கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இதை நடத்துகிறது, தமிழ்நாட்டிலே நடத்துகிறது, அதற்கு அழைப்பு அனுப்பியிருக்கிறார்கள்.

All India Tourist Trade Fair 1979, Madras என்று. Invitation என்றும் ஆங்கிலத்திலே முதலில் போட்டுவிட்ட பிறகு 'அகில இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி '1979' என்றும் 'அழைப்பிதழ்' என்றும் போட்டிருக்கிறார்கள். ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் போடுகிறோம். அப்பொழுது தமிழுக்கு முதலிடமும், ஆங்கிலத்திற்கு இரண்டாவது இடமும் கொடுத்திருந்தால் முறையாக இருந்திருக்கும். ஆனால் ஆங்கிலத்திற்கு முதலிடம் கொடுத்துவிட்டு தமிழுக்கு இரண்டாவது இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.





அடுத்து, இன்னொரு அழைப்பிதழ், அதில்,

The Tamil Nadu Dairy Development Corporation Limited, Madras–31. என்று போடப்பட்டிருக்கிறது. நவீன உறைவிந்து திட்டம் துவக்க விழா கிருஷ்ணகிரியிலும் இன்னொரு இடத்திலும் நடக்கிறது, அதற்கும் முதல் பக்கத்திலே ஆங்கிலத்தில் அழைப்பு இருக்கிறது. தமிழுக்கு இரண்டாவது இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதற்குக் காரணம் தமிழ் உணர்வு இருந்திருந்தால் தமிழுக்கு முதலிடமும், ஆங்கிலத்திற்கு இரண்டாவது இடமும் கொடுத்திருப்பார்கள். ஆனால் உண்மையில் தமிழ் உணர்வு இல்லை. சூழ் நிலையின் காரணத்தினால் சொல்கிறார்களே தவிர, உள்ளத்திலேயிருந்து அந்தக் கருத்து வரவில்லை.

நம்முடைய முதலமைச்சரவர்கள் கோவை மாநாட்டிலே....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : 40 நிமிடங்கள் ஆகிவிட்டன. மணி அடிக்கவும் மனம் வரவில்லை. அவர்களாகவே முடித்துக் கொண்டால் நல்லது.

<u>புலவர் கா. கோவிந்தன்</u> : பொதுஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். இதுபற்றி அண்ணா அவர்களின் கொள்கை என்ன என்பதைப் பார்ப்போம். 1968ஆம் ஆண்டு மொழிப் பிரச்னையின் மீதான விவாதத்தில் அண்ணா அவர்கள் சொல்கிறார்கள். '' நண்பர் திரு. கருத்திருமன் சொல்லிக் கொண்டதெல்லாம், அவர் சொன்ன வாசகத்தையே எழுதி வைத்துக் கொண்டிருக்கிறேன். '' ஏன் சட்டப் பேரவையை மிக அவசரமாகக் கூட்டினீர்கள்? கற்றவர்களும் பொதுமக்களும் என்ன கருதுகிறார்கள் என்று அறிவோம் '' என்றார். நீங்கள் எல்லாம் பொதுமக்களுடைய பிரதிநிதிகள்— மக்களின் கருத்தை எடுத்துத் தெரிவிப்பீர்கள் என்று அழைத்திருக்கிருக்கிறேன். நண்பர் திரு. கருத்திருமன் அவர்களிடத்தில் நான் கேட்டுவிட்டு, '' உங்கள் கருத்து இருக்கட்டும்; கற்றவர்களிடம் கொஞ்சம் கேட்டு வருகிறேன் ''. என்றால் அது அவருக்கே இழிவைத் தரும். நீங்கள் எல்லாம் கற்றவர்கள் இல்லையா? தனியாக பொதுமக்களுடைய அபிப்பிராயத்திற்கு அனுப்ப வேண்டுமென்று நிலைமை இதில் ஒன்றும் இல்லை.

மொழிப் பிரச்னை 1937-லிருந்து, 1967-ஆம் ஆண்டு வரையில் ஒவ்வொரு வடிவிலேயேயும், ஒவ்வொரு கோணத்திலேயும் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. இதைப்பற்றிய எல்லா முனைகளும் எல்லோருக்கும் தெரியும். எல்லா நிலைமைகளையும் எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். புதிதாக யாரும் புதிய நிலைமைகளைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அந்த அளவுக்கு இந்தப் பிரச்சினை புரிந்து இருக்கிறது. ஆகையால் பொது மக்களுடைய அபிப்ராயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இந்தத் தீர்மானத்தை விட வேண்டும் என்ற கருத்துக்கு இணங்கமுடியாத நிலைமையில் நான் இருப்பதற்கு வருந்துகிறேன்.''

பிறகு, '' திரு. பி. ஜி. கருத்திருமன்: எங்களுடைய அப்பிராயம் என்ன என்று கேட்டதற்குத்தான் நான் விளக்கம் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தை பொதுமக்களுடைய அபிப்ராயத்திற்கு விட வேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கை. அரசினர் இதைப் பொதுமக்களுடைய அபிப்பிராயத்திற்கு விடவேண்டுமென்று நினைக்கிறார்களா?'' என்று கேட்டார்.

அதற்கு அண்ணா அவர்கள், '' இந்த மன்றமே பொது மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட, பொதுமக்களாலே தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டவர்களைக் கொண்ட மன்றமாக இருப்பதால் இங்கு நிறைவேற்றப்பட்ட பிறகு மறுபடியும் இந்தப் பிரச்சினையிலே பொதுமக்களுடைய அபிப்பிராயத்தைப் பெறத் தேவையில்லை என்று கருதுகிறேன்.'' என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, பொதுமக்களுடைய கருத்தறிவது என்பதை, பொதுஜன வாக்கெடுப்பு என்பதை அண்ணா அவர்கள் 1968லேயே மறுத்து விட்டார்கள். அண்ணாவினுடைய பெயரை வைத்துக் கொண்டிருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொது மக்களுடைய வாக்கெடுப்பிற்கு விட வேண்டுமென்று கூறுவது அண்ணாவினுடைய கூற்றையே மறுப்பதாகும். ஆகவே, மொழிப் பிரச்னையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நிலையான கொள்கை இல்லையென்பதைக் கூறி விடை பெற்றுக் கொள்கிறேன்.

<u>திரு. என். கிட்டப்பா</u> : வேறொன்றும் இல்லை. மாண்புமிகு புலவர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அழைப்பிதழைப் பற்றி குறிப்பிட்டார்கள். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. எஸ். ஆர். இராதா உறுப்பினர்களுக்கு ஒரு அழைப்பிதழ் அனுப்பியுள்ளார். அதில் '' ............சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்களின் வருகையையொட்டி பொருட்காட்சித் திடலிலுள்ள சிறிய கலை அரங்கில் மாலை 5·00 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேநீர் விருந்தில் தாங்கள் கலந்து



கொள்ள வேண்டுகிறேன்........''. என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இன்று மாலை 4 மணி முதல் 7 மணி வரை மன்றம் கூடும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) கூட்டத்தைத் தள்ளி வைக்கச் சொல்லவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் அதை நினைவுபடுத்தியதற்கு நன்றி. எதிர்க்கட்சித் தலைவர் வரிசையிலே உள்ளவர்களும் அவை முன்னவர் அவர்களும் முடிவு எடுத்தால், எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. அவர்கள் கூட்டத்தைத் தள்ளி வைக்கச் சொல்கிறார்களா? அல்லது 5 மணிவரை நடத்த வேண்டுமென்று சொல்கிறார்களா?

<u>திரு. என். கிட்டப்பா</u> : 1967-லிருந்து நான் சட்டமன்றப் பேரவை உறுப்பினராக இருக்கிறேன். எந்தத் தேனீர் விருந்திற்கும் நான் செல்வதில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : தங்களுடைய கருத்து என்ன? கூட்டத்தைத் தள்ளி வைக்க வேண்டுமென்று சொல்கிறார்களா ? அல்லது 5 மணி வரை மட்டும் கூட்டம் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்களா ?

<u>திரு. என். கிட்டப்பா</u> : தேனீர் விருந்தை மாற்றி இரவு 9 மணிக்கு முழு விருந்தாகக் கொடுக்கலாம்.

<u>திரு. கு. வடிவேல்</u> : பேரவைத் தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9 ஆம் தேதி நம்முடைய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை வழிமொழிந்து பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய தமிழகத்தில் நெல் விலையைப் பற்றி சொல்கின்ற நேரத்தில் எங்களுடைய மனமெல்லாம் புண்படுகின்ற அளவுக்கிருக்கிறது. காரணம், வடநாட்டிலே கோதுமைக்கான விலை சாகுபடியை அனுசரித்து நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதே போல், நெல்லுக்கும் சாகுபடியை அனுசரித்து விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். மத்திய சர்க்கார், இங்கே, தமிழ் நாட்டிலே விளையக் கூடிய நெல்லுக்கும் நியாயமான, நேர்மையான, சாகுபடி செலவை அனுசரித்து, கொள்முதல் விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய ஆளுநருடைய உரையைப் பார்க்கின்ற நேரத்தில், சென்ற ஆண்டு 16,000 நியாய விலைக் கடைகளைத் திறக்கப் போகிறோம் என்று சொன்னதிலே இன்றைய தினம் 13,400 நியாய விலைக் கடைகளைத் திறந்ததை உண்மையிலேயே பாராட்டுகிறோம்.

[திரு. கு. வடிவேல்] [1979 பிப்ரவரி 15

மின் வெட்டுகள் வருகின்ற நேரத்தில், மின்சாரத் தட்டுப்பாடு வருகின்ற நேரத்தில் சிறுதொழிலுக்கும் விவசாயிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும் என்று கவர்னர் உரையிலே கூறப்படுவது உண்மையிலே பாராட்ட வேண்டிய, வரவேற்க வேண்டிய ஒன்று என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

பினாமி நிலங்களையும் தேவைக்கதிகமான நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து உபரி நிலங்களையும் அரசு கைப்பற்றி அந் நிலங்களை கிராமப் பகுதிகளில் நிலமற்ற ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் வீடு கட்டத் தேவையான வீட்டு மனைகளாக வழங்க இருப்பதாக ஆளுநர் உரையிலே இருப்பதை உண்மையிலே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்— தலைமை.)

அதற்காக எங்களுடைய தானைத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்களை உண்மையிலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, 1 இலட்சம் வீடுகள் கட்டித் தர முன் வந்திருப்பதை இந்த நேரத்தில் பாராட்டாமல், வரவேற்காமல் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதனையடுத்து, கிராமங்களிலே இருக்கக் கூடிய அத்தனை ஏழை எளிய மக்களுக்கும் எம்ப்ளாய்மெண்ட் காரன்டி ஸ்கீம் என்ற திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பட்டுத் தொழிலை வளர்க்கவும் அதன்மூலம் மேலும் 13,000 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வழி ஏற்படுத்தியுள்ளதையும் பாராட்டுகிறோம்.

உப்புத் தொழிற்சாலையை வேதாரண்யத்திலே ஆரம்பித்து அங்கேயும் வேலை வாய்ப்பு உருவாக்கக் கூடிய நிலையை உண்மையிலே பாராட்டாமல் இருக்க முடியாது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதனையடுத்து, கரும்பு சக்கையை வைத்து காகிதத் தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தை வரவேற்காமலிருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையிலே அது நல்ல திட்டம் என்று சொல்வதோடு மட்டுமல்லாமல், தமிழகத்தில் ஏறத்தாழ 10 சர்க்கரை ஆலைகளுக்கு மேலிருக்கிறது. அத்தனை சர்க்கரை ஆலைகளிலும் கிடைக்கும் கரும்புச் சக்கையைக் கொண்டு காகிதம் தயாரிக்க முயற்சி எடுத்திருப்பது நல்ல திட்டம் என்று இந்த நேரத்தில் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன்.



1979 பிப்ரவரி 15] [திரு. கு. வடிவேல்]

[முற்பகல் 10-10]

என்னுடைய தொகுதிக்கு அருகில் 3 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. புகலூர் சர்க்கரை ஆலை, மோகனூர் சர்க்கரை ஆலை, பேட்டைவாய்த்தலை சர்க்கரை ஆலை ஆகியவைகள் இருக்கின்றன. அதிலிருந்து கிடைக்கும் கரும்பு சக்கைகளை வைத்து புகலூரில் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, இன்னும் ஒரு நல்ல திட்டத்தையும் செய்திருக்கிறார்கள். சென்னையிலே உள்ள தலைமை அலுவலகங்களை பல பகுதிகளுக்கும் மாற்றி செய்திருப்பது ஒரு நல்ல திட்டமாகும். தமிழகம் கன்னியாகுமரியில் இருந்து பரந்திருக்கிறது. கோவையில் இருந்து சென்னைக்கு வரவேண்டுமானால் 400 மைல்களுக்குமேல் வரவேண்டியிருக்கிறது. எனவே திருச்சியிலே, சேலத்திலே, மதுரையிலே இந்த அலுவலகங்கள் இருந்தால் தமிழக மக்களுக்கு போக்குவரத்து செலவும் குறையும், அவர்களுடைய பிரச்னைகளையும் அங்கேயே சந்தித்து கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு நல்ல சந்தர்ப்பமாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நம்முடைய கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து தந்தை பெரியார் அவர்களின் பெயரால் ஈரோடு மாவட்டம் என்று அமைக்கவிருப்பது வரவேற்கத் தக்கதாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் என்னுடைய கரூர் வட்டத்தையும், அந்த தந்தை பெரியார் மாவட்டத்தோடு சேர்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இது என்னுடைய தொகுதி மக்களுடைய கருத்து என்பதையும் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, மதுவிலக்கைப் பற்றி நான் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியிலே இருந்த வரையில் மதுவிலக்கைத் தீவிரமாகக் கடைபிடித்து வந்தார். ஆனால், எதிர்கால சந்ததியினரையும், இளைஞர்களையும் பாழ் படுத்துகின்ற வகையில் மதிப்பிற்குரிய எதிர்கட்சித் தலைவர் கருணாநிதி ஆட்சிக்கு வந்த பிறகு மதுவிலக்கை எடுத்துவிட்டார் என்று குற்றம் சாட்டவிரும்புகிறேன். அவர் சாராயக் கள்ளுக் கடைகளை திறந்து விடாமல் இருந்திருந்தால், இன்றைய தினம் நாம் அதை ஒழித்திருக்க முடியும். அவர் என்ன லாபம் கருதி அதைத் திறந்தாரோ தெரியவில்லை. அதைத் திறந்ததோடு மட்டுமல்ல, நமது தானைத் தலைவர் ஒரு சட்டம் கொண்டு வந்தால் அதைக் கருப்புச் சட்டம் என்று சொல்லி கூக்குரல் இடுகிறார்கள். இதைச் சொல்லும்போது எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. ஆப்ரகாம் லிங்கன் ஆட்சிக்காலத்தில் நடந்ததாகக் கூறுவார்கள். கொலைக் குற்றம் சாட்டப்பட்டு குற்றவாளிக்கூண்டிலே நின்றிருந்த ஒருவன், அவனை விசாரிக்கின்ற நேரத்தில் அவன் 'எனக்குத் தாய் தந்தையர் இல்லை, என்னை

விட்டுவிடவேண்டும்' என்று கேட்டானாம். நீதிபதி காவல் துறையினரைப் பார்த்து என்ன என்று கேட்டபோது, அவன் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு நின்றிருப்பதே அவனுடைய தாய் தந்தையரைக் கொன்ற தால்தான் என்று சொன்னார்களாம். அதைப்போலத்தான் நான் ஆதாரத்தோடு குற்றம் சாட்டுகிறேன், அவர் கள்ளுக்கடைகளைத் திறக்காமல் இருந்திருந்தால் இன்றைக்கு இந்தப் பிரச்சினை வந்திருக்காது. எதிர் கட்சிகளை ஒடுக்க, அடக்கத்தான் இந்தச் சட்டம் என்று சொல்லுகிறார்கள். ஏன் நீங்கள் பயப்படவேண்டும். நான் இந்த நேரத்திலே ஒன்றை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் சாராயம் காய்ச்சாமல் இருங்கள், குடிக்காமல் இருங்கள். அப்படி இருந்தால் அந்தக் கள்ளச்சாராயச் சட்டம் உங்களுக்கு இல்லை என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர் துரைமுருகன் அவர்கள் பேசும்போது, சொன்னார்கள். ஹாண்டே அவர்களையும், ஆனந்த விகடன் மணியன் அவர்களையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன். நீங்கள் மட்டும் குங்குமம் ஆசிரியர் சாவி அவர்களை வைத்திருக்கவில்லையா, உங்கள் தலைவர் வெளிநாடு போகும்போது யாரை அழைத்துச் சென்றார், நிதிச் செயலாளர் வெங்கட்டரமணனை அழைத்துச் செல்லவில்லையா, என்று கேட்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று சொன்னார்கள். தமிழ்நாட்டிலே சட்டம் ஒழுங்கு சீர்குலைவு என்றையதினம் வந்தது தெரியுமா ? 1972 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ந்தேதி தான் வந்தது. அன்றைதினம் தான் நீங்கள் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களை திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்து தூக்கி எறிந்தீர்கள். அன்றைய தினம் குழப்பம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு வரிசையாக சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது.

விவசாயிகள் போராட்டத்தில் 14 பேர்களை சுட்டுக் கொன்றார்கள். வத்தலக் குண்டு ஆறுமுகம் திண்டுக்கல்லிலே படுகொலை செய்யப்பட்டான். உதயகுமார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கொலை செய்யப்பட்டான். வாடிப்பட்டி அமுதன் கொலை செய்யப்பட்டான். கண்ணமங்கலத்திலே பச்சிளம் பாலகன் சுட்டுக் கொல்லப்பட்டான். பூலாவரி சுகுமாரன் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டான். அப்போது எங்கே போயிருந்தது உங்கள் சட்டமும் ஒழுங்கும். பாளையங்கோட்டை ஊர்துநாதன், அன்றையதினம் கொலை செய்யப்பட்டான். மாணவ மணிகள் இராசேந்திரனும், பாலசுந்தரமும் கொலை செய்யப்பட்டார்கள். கிளைவ் ஆஸ்டலில் மாணவ மணிகள் அடிக்கப்பட்டார்கள். அப்போது எங்கே போயிற்று உங்கள் சட்டமும் ஒழுங்கும்?



திரு. துரை முருகன்: துணைத் தலைவரவர்களே, இந்த நாட்டிலே நடைபெற்றுவிட்ட சில சம்பவங்களை இங்கே பட்டியல் போட்டுக் காட்டிக் கொண்டு இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக்கழகம் ஆளும் கட்சியாக இருந்தபோது நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கெல்லாம் விசாரணைக் கமிஷன் போட்டு, அதன்கள் வழங்கப்பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்று மீது தீர்ப்பு இருக்கின்றன. பாலசுந்தரம் கொலை செய்யப்பட்டார் என்ற வழக்கில் அதில் சம்பந்தப்பட்டவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பாளர் மாசிலாமணி என்று தெரிந்து இருந்தும் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர் தற்போது ஆயுள் கைதியாக இருந்து கொண்டு இருக்கிறார். ஆனால், இன்றைக்கு நடைபெறுகின்ற ஆட்சியில் வில்லிபுத்தூரில் இளஞ்செழியனைக் கல்லால் அடித்துக் கொன்று இருக்கிறார்கள். அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது எல்லாம் கிளாரிபிகேஷன் கிடையாது. நீங்கள் பேசும்போது பதில் சொல்லுங்கள், அல்லது உங்கள் தலைவர்கள் பேசும்போது பதில் சொல்வார்கள். உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : அவர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குறிப்பிட்டதால் சொன்னேன். நான் கேட்டதற்குப பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள். நீங்கள் என்ன லீடர் ஆப் தி அப்போசிஷனா ? உங்கள் தலைவர்கள் பேசும்போது அதற்குப பதில் சொல்வார்கள்.

திரு. துரை முருகன் : நான் பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் கேட்கிறேன். எனக்கு உரிமை இருக்கிறது. என்னைப் பார்த்து லீடர் ஆப் தி அப்போசிஷனா என்று கேட்டால் என்ன அர்த்தம் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் பேசிக் கொண்டு இருக்கிறபோது தவறாகச்சொன்னால், அதைத் திருத்தலாம். அவர் பேசுகிற பேச்சுக்கு நீங்கள் எப்படி பதில் சொல்ல முடியும்.

திரு. துரை முருகன் : எங்கள் கட்சி நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்கிறார். நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நடக்கும் ஆட்சியில்தான் புட்லூர் தண்டபாணி கொலை செய்யப்பட்டார். இறந்தவரின் மனைவியே தன் கண

வன் இறந்ததற்குக் காரணம் அந்தத்தொகுதி எம்.எல்.ஏ. என்று புகார் கொடுத்து இருக்கிறார். என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள் ?

திரு. ரா. உமாநாத் : பேசுகிறபோது சார்ஜஸ், கவுன்டர் சார்ஜஸ், பர்சனல் எக்ஸ்பிளனேஷன் இருக்கத்தான் வேண்டும். நான் திரு. துரை முருகன் அவர்களுக்குச் சொல்ல விரும்புவது When we attack, We must be prepared to take back also. Let us take it sportingly.

பர்சனல் எக்ஸ்பிளனேஷன் என்று இன்டர்வீன் செய்து அவர் பேசுகிற பேச்சுக்குப் பதில் சொல்வது சரியல்ல. லட் அஸ் பி ஸ்போர்டிவ்.

திரு. துரை முருகன் : திரு. உமாநாத் அவர்கள் சொல்கிற நல்ல பாராளுமன்ற மரபை நான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன். நான் சொல்ல விரும்பியது, இழைக்கப்பட்ட அநீதிக்கு அன்று இருந்த ஆட்சி நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர் சொல்வதற்கு மறுப்புதான். எங்கள் சர்க்கார் அன்றைக்கே அவற்றிற்குப் பரிகாரம் கண்டு இருக்கிறது என்பதை தெளிவு படுத்துவதற்குத்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. துரை முருகன், தயவு செய்து உட்காருங்கள். திரு. உமாநாத் அவர்கள் சொன்னதைத்தான் நான் முன்பே சொன்னேன். அவர் பேசியதில் தவறு இருந்தால் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பி அதைத் திருத்தலாம் அவர் பேசுவதற்குப் பதில் சொல்லும் முறையில் எழுந்து பேசுவது சரியல்ல. அது சரியான மரபாகாது. பேச்சில் தவறு இருந்தால் சுட்டிக்காட்டலாம், திருத்தலாம். அவர் பேச்சுக்கு பதில் சொல்ல ஆரம்பிப்பது சரியானதல்ல.

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவரவர்களே, இந்த சட்டமன்றத்தில் எடுத்து வைக்கப்பட்டு இருக்கிற உண்மைகளை ஏற்றுக்கொண்டு, அவற்றின் அடிப்படையில் விவாதம் இருக்க வேண்டும். அவையில் ஏற்றுக்கொள்ளப் பெற்று இருக்கிற உண்மைகளுக்கு மாறாக பேசுவதும் சட்டமன்ற மரபுக்கு உகந்தது அல்ல. சட்டமன்றத்தில் எடுத்து வைக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப் பெற்று இருக்கிற அளவுக்காவது விளக்கங்களை ஏற்றுக்கொண்டு உறுப்பினர்கள் பேசுவார்களானால், இந்தப் பிரச்னை கிளம்பியிருக்காது. இந்த அவையில் அந்த நிலைமை களையப்பட்டால் இந்த நிலைமை ஏற்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. எம். ஏ. லத்தீப் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேசுகிற போது கருத்துத் தெரிவிக்கலாம். இப்போ உட்காருங்கள்.





(முற்பகல் 10—20).

திரு. எம். ஏ. லத்தீப் : Mr. Deputy Speaker, Sir, I am on a point of order. If the intervention is in order, then every hon. Member has got every right to intervene when he considers necessary The Chair cannot restrict that right of the hon, Members.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள். அவர் பேசியது ஆர்டர் இல்லை என்ற காரணத்தால் நான் ' ரெஃபியூஸ் ' செய்தேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : That right is available to every hon. Member......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; அது எனக்குத் தெரியும். அவர் சொன்னது சரியல்ல என்பதால் அதை நான் அனுமதிக்கவில்லை. இப்போது நீங்களும் முறையில்லாமல் பேசுகிறீர்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. கு. வடிவேல் : துணைத் தலைவரவர்களே, முன்னால் இருந்த ஆட்சியிலே நலிந்துபோனவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. ஆனால் இன்றையத் தினம் பல்லாண்டு காலமாக அமைச்சராக இருந்து, மக்களுக்குத் தொண்டாற்றி, வாழ்க்கையிலே நலிந்து மெலிந்துபோன முன்னால் அமைச்சர் கக்கன் அவர்களுக்கு எங்களுடையத் தானைத் தலைவர் ஆட்சியிலேதான் மனம் உவந்து உதவி அளிக்கப்பட்டு இருக்கிறது. இதை எண்ணிப் பார்க்கும்போது இந்த ஆட்சியிலே எங்கள் தானைத் தலைவர் இருக்கும் வரையில் இந்த ஆட்சியை யாராலும் அசைக்க முடியாது. கலைக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கலைத் துறையிலே பணியாற்றி, நலிந்து போனவர்களுக்கு நல்ல முறையிலே உதவி செய்துவரும் எங்கள் தானைத் தலைவரை போற்றி பாராட்டாமல் இருக்க முடியாது.

தமிழ் மொழியைப் பொறுத்த மட்டில் எங்களுடைய தானைத் தலைவர் ஆட்சியில் அரசின் இரு மொழிக் கொள்கையைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். எங்கள் தானைத் தலைவர் ஆட்சியில் இருக்கும் வரையில் இந்தித் திணிப்பை ஏற்கமாட்டோம். எங்களை நோக்கி இந்தி வருமானால் அதை முதலிலே எதிர்த்து நின்று போராட நாங்கள் தயாராக இருக்கிறோம். போராடுவது மட்டுமல்ல ; தமிழை காக்க உங்களுக்கு இருக்கின்ற அக்கரையைவிட அதிகம் எங்களுக்கு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மதிப்பிற்குரிய வலது கம்யூனிஸ்ட் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு. முருகையன் அவர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு முக்கியத்துவம் கொடுத்து ஆளுநர் அவர்கள் உரையாற்றியிருக்கிறார்கள். அந்தவகையிலே எங்கள் தானைத் தலைவர் கடமையைச் செய்வதில் பின்வாங்க மாட்டார் என்பதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம்.

அடுத்தபடியாக, எங்கள் தானைத் தலைவர் அவர்கள் ஒரு அருமையான சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பள்ளிக்கூட வாசனையையே கண்டறியாத நலிவுற்ற குடும்பங்களுக்கு தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு சரிவு ஏற்படாமல் பொருளாதார அடிப்படையில் சலுகை அளிப்போம் என்பது அனைவராலும் பாராட்டக்கூடிய ஒன்று. பள்ளிக்குச் செல்ல முடியாமல், வேலைவாய்ப்பு இல்லாமல் கஷ்டப்படும் மக்களுக்கு, யார் யார் பொருளாதாரத்தில் பின்தங்கி இருக்கிறார்களோ அவர்களுக்கு பொருளாதார அடிப்படையில் சலுகை அளிப்பதை நாங்கள் மனதார வரவேற்கிறோம்.

தாழ்த்தப்பட்ட மக்களைப்பற்றி அதிக அக்கரை காட்டும் அருமை நண்பர் துரைமுருகன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சத்தியவாணிமுத்து அவர்கள் உங்களுடைய அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்டாரே அப்போது எங்கே போயிற்று உங்களுடைய உணர்வுகள்? (மணியடிக்கப்பட்டது) இன்னும் ஒன்றை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

எங்களுடைய தானைத் தலைவர் ஆட்சியிலே ஆற்றப்பட்ட ஆளுநர் உரையில் நாட்டுமக்கள் எல்லாம் ஆதரிக்கக்கூடிய நல்ல பல கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. அந்த வகையில் மிகச் சிறப்பாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்று சொல்லி, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை வரவேற்று, எனக்கு பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. து. இராமசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த ஆளுநர் உரையிலே இந்த நாட்டின் முதுகெலும்பாக விளங்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் பற்றி, இங்கே வீற்றிருக்கின்ற அமைச்சர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் உணவளிக்கின்ற விவசாயப் பெருமக்களைப்பற்றி எதுவும் அறிவிக்கப் படாதது மிகவும் வருந்தத்தக்க ஒன்று என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல நெசவாளர்கள் பற்றியும் எந்த விதமான அறிவிப்பும் இல்லாமல் இருக்கிறது. ஜனத் தொகையில் 74 சதவிகிதம் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களின் பிரச்சனை



நாள் தோறும் பெருகிக் கொண்டே போகிறது; அவர்கள் நாள் தோறும் நலிந்துகொண்டே போகின்ற அவல நிலையைத்தான் நாம் கண்டுகொண்டிருக்கிறோம். இருப்பினும் இதுவரையில் நல்லதொரு முடிவினை இந்த அரசு எடுக்காமல், பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் பதிலாக பிரச்சனையை அணுகுவதற்கே பயந்து, ஒதுங்கி ஒதுங்கி சென்று கொண்டிருப்பதைக் காணும்போது மிகுந்த வேதனையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர் மட்ட கமிட்டி என்று ஒரு கமிட்டியை நியமித்து கிட்டத்தட்ட 15 மாதங்கள் ஆகியும்கூட அந்தக் கமிட்டி நல்லதொரு முடிவுக்கு இன்னும் வரவில்லை. அதை ஒத்திப் போட்டுக் கொண்டே போவதால், விவசாயிகளுடைய பிரச்சனைகள் தீர்க்கப்படாத காரணத்தால் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வேடசந்தூரிலே விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அதற்குப் பிறகும் தொடர்ந்து போராட்டம் நடைபெறுகிறது. அந்தப் பிரச்சனைக்கும் தீர்வு காண்பதற்கு, விவசாயப் பிரதிநிதிகளை அழைத்து, அவர்களுடைய குறைகளைக் கேட்டறிந்து நல்லதொரு முடிவினை விரைவிலே எடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

இன்றையத் தினம் விவசாயிகளுக்கு விவசாயம் கட்டுப்படியாகாத நிலை இருந்து கொண்டிருக்கின்றது. கடந்த காலத்திலே அதாவது 1960-61-லே உற்பத்திச் செலவு ஹெக்டேருக்கு 650 ரூபாய் என்ற அளவில் இருந்தது. ஆனால் இன்றைய கணக்குப்படி பார்த்தால் ஹெக்டேருக்கு 2,250 ரூபாய் செலவு செய்ய வேண்டி இருக்கிறது. உற்பத்திச் செலவிலே கிட்டத்தட்ட மூன்றரை மடங்கு இப்போது உயர்ந்திருக்கின்றது. ஆனால், விற்பனை விலையை உற்பத்திச் செலவிலே இருந்து கணக்கெடுத்துப் பார்த்தால் 52 சதவீதத்திலே இருந்து இப்பொழுது 93 சதவீதம்தான் அதாவது ஒரு மடங்குதான் உயர்ந்து இருக்கிறது என்பதைப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இவ்வளவு மோசமான நிலையிலே விவசாயிகள் விவசாயம் செய்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். விவசாயிகள் வாங்குகின்ற பொருளினுடைய விலை எல்லாம் விஷம் போல் ஏறி இருக்கின்ற இந்த நேரத்திலே உற்பத்தி செய்யப்பட்ட பொருளினுடைய விலை தலை கீழான நிலையிலே சென்று கொண்டிருப்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையிலே மத்திய அரசாக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி சட்டங்கள் மூலம் இதனைத் தடுத்து நிறுத்தி விலைகளை இறக்குவதற்கு எவ்வளவு முயற்சிகள் செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்து கொண்டிருக்கின்ற அரசு அதிலே அக்கரை அதிகம் காட்டிக் கொண்டு வருகிற அரசு விவசாயிகளுக்கு உதவுகின்ற வகையில் ஆக்க பூர்வமான காரியங்கள் ஆற்றுவதற்கு தயக்கம் காட்டுவது ஏன் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள

விரும்புகிறேன். குறிப்பாக மத்திய அரசினுடைய பிற்போக்குக் கொள்கையும், அவர்களுடைய தவறான ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையும் இன்று விவசாயிகளை மிகவும் பாதிப்புக்குள்ளாக்கி இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

1967 ஆம் ஆண்டு கோதுமையின் விலை 90 ரூபாயாக இருந்தது. அப்போது அரிசியின் விலை 140 ரூபாயாக இருந்தது. ஆனால் இன்று கணக்கெடுத்துப் பார்த்தால் கோதுமையின் விலை 128 ரூபாயாக உயர்ந்திருக்கின்ற நேரத்திலே நெல்லினுடைய விலை 85 ரூபாயாகக் குறைந்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிட முடியாது. கோதுமைக்கு மட்டும் அதிகத் தொகை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நெல்லுக்குப் போதிய தொகை கொடுக்காமல் மறுப்பது, இன்றைய ஜனதா அரசு தென் மாநிலங்களைப் புறக்கணிக்கின்ற வேலையாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் இந்த அவையின் முன் வைக்க விரும்புகிறேன்.

அதே போன்று தவறான ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையினால் மஞ்சளுக்கு ரூபாய் இரண்டாயிரம் மத்திய அரசு வரி விதித்திருக்கிறது. அன்று, 1,500 ரூபாய்க்கு விற்றுக் கொண்டு இருந்த மஞ்சள் இன்றையத் தினம் 500 ரூபாய் ரோட்டிலே பல இடங்களிலே குவித்து வைக்கப்பட்டிருக்கின்ற நிலையை அமைச்சரவர்கள் கூட அறிவார்கள். அதே போன்று பருத்தியை ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள். 2 கோடி ரூபாய் அளவுக்கு நாம் ஏற்றுமதி செய்திருக்கிறோம். ஆனால் இன்று ஜனதர் அரசு ரூபாய் 3 கோடி என்ற அளவில் பஞ்சை இறக்குமதி செய்துக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட தவறான கொள்கையினை மத்திய அரசு கொண்டிருப்பதன் காரணத்தால் பஞ்சினுடைய விலை குறைந்து இன்றைய தினம் விவசாயிகள் மிக அதிக அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் ஜனதா அரசினுடைய கொள்கையால் ஆண்ட அரசர்கள் மேற்கொண்டும் கோடிக்கணக்கான அளவிலே சம்பாதிட் பதற்கு வழிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் கூற விரும்புகிறேன். பஞ்சினுடைய விலை குறைக்கின்ற அதே நேரத்தில் நூலினுடைய விலை விஷம் போல் ஏறி இருக்கிறது. அதனால் நூலை வாங்கி நெசவு செய்ய வேண்டிய நெசவாளர்கள் தொல்லைக்கு ஆளாகிக் கொண்டிருக்கக் கூடிய நிலையினைக் காண முடிகிறது.

1 66 அடுத்து உலகச் சந்தையிலே கடலையைப் பொறுத்தவரையில் லட்சம் டன்தான் அங்கிருக்கிறது.

[முற்பகல் 10–30]

ஆனால் இந்தியாவிலே கடலை எண்ணெய் 50 லட்சம் டன் உற்பத்தியாகிறது. அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில் 11,10,000 டன் உற்பத்தி செய்கிறார்கள். அந்தளவிற்கு



உற்பத்தி அதிகமாக இருந்தும்கூட கடலை எண்ணெயின் விலை விஷம்போல் ஏறுகிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் அரசின் தவறான கொள்கையாகும். பதுக்கல் பேர்வழிகளையும் கள்ளமார்கட்காரர்களையும் வெளியே விட்டு புனிதத் தண்ணீர் தெளித்ததன் காரணமாக, எண்ணெய் அளவிற்கு மீறி பதுக்கப்பட்டு வைப்பதால் விலையேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதை வெளியேகொண்டு வர வக்கில்லாத மத்திய அரசு சோயாபீன்ஸ் எண்ணெயை அளவிற்கு மீறி இறக்குமதி செய்தும் கடலை எண்ணெயின் விலை குறையக் காணவில்லை. ஆக, எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும் இன்று அரசின் தவறான கொள்கை காரணமாக விவசாயிகள் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பிரச்னைகள் வருகிற நேரத்தில் அந்தப் பிரச்னைகளை அணுகி அவைகளுக்கு தீர்வு காண வேண்டிய அரசு பிரச்னைகள் வந்தவுடன் அதை விட்டுவிட்டு தூர விலகிச்செல்வது உண்மையில் வருந்துதற்குரியதாகும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் சர்க்கரை ஏற்றுமதி கொள்கையில் தவறு ஏற்பட்டிருப்பதன் காரணமாக இன்று சர்க்கரை ஆலைகள் எல்லாம் கோடிக்கணக்கில் நஷ்டத்தில் போய்க் கொண்டிருக்கின்றன. சர்க்கரை ஆலைகள் விவசாயிகள் உற்பத்தி செய்கிற கரும்பை எடுக்க மறுக்கிறது. அப்படி எடுத்தாலும் விலையைக் குறைத்துக் கொடுக்கத்தான் தயாராக இருக்கிறார்களே தவிர நியாயமான விலையைக் கொடுக்க அவர்கள் மறுக்கிறார்கள். கரும்பு சர்க்கரை ஏற்றுமதி தடை காரணமாக இன்று கரும்பின் விலை வீழ்ச்சியடைந்து கரும்பு உற்பத்தி குறைந்திருக்கிறது. ஆக எந்தவொரு விவசாயப் பொருளை உற்பத்தி செய்வது என்று விவசாயிகள் புரியாமல் இன்று அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே நான் கேட்டுக்கொள்வது, விவசாயிகள் பிரச்னைகளை அணுகப் பயந்து தமிழ்நாடு அரசு ஒதுங்கிச் செல்லக்கூடாது. அவர்களுக்கு நல்ல முறையில் ஒரு தீர்வு கண்டு, உடனடியாக நல்லதொரு முடிவினை அறிவிக்க, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவதற்கு முன்னரேயே நல்லமுறையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக்கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகள், ஒருபுறம் விவசாயம் கட்டுபடியாகாத நிலையிலும், மற்றொருபுறம் வாங்கிய கடன்களை திருப்பிக் கொடுக்க இயலாத நிலையிலும் இருக்கிறார்கள். முதலில் வரட்சி, பிறகு புயல், பிறகு விவசாய விலை கட்டுபடியாகாத நிலை என்ற இந்த மூன்று காரணங்களால் விவசாயிகள் தாங்கள் வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்தமுடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அண்டையில் உள்ள கர்நாடகாவில் உள்ள காங்கிரஸ் அரசு விவசாயிகளுடைய கடன்களை எல்லாம் ரத்து செய்திருப்பதைப்போல் தமிழக அரசும் விவசாயிகளின் கடன்களை ரத்து செய்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்லதொரு வாழ்வு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. து. இராமசாமி] [1979 பிப்ரவரி 1

அடுத்து, குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் கொண்
வந்திருக்கிறோம். ஆனால் அது போதாது. குத்தகை சாகுப
செய்கிறவர்களுக்கு அந்தப் பூமிகளை பட்டா செய்து கொடுக்
வேண்டுமென்று காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நான் வ
யுறுத்திக் கூறிக்கொள்ளவிரும்புகிறேன். அடுத்தபடியாக, கை
தறித் தொழிலை எடுத்துக் கொண்டால் இன்று விவசாயத்திற்
அடுத்தபடியாக கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கிற லட்சோ
லட்சம் ஏழைக் கைத்தறித் தொழிலாளர்களுக்கு எந்தவிதமா
ஊக்கமும் அல்லது ஊக்குவிப்பு அரசு கொடுக்காமல் இருக்கி
நிலையைக் காண முடிகிறது. மற்றத் தொழில்களில் ஈடுபட்
டிருக்கிற தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வேலை
பாதுகாப்பு, நியாயமான ஊதியம், மருத்துவ வசதி மற்றுமுள்
சகல பாதுகாப்பும் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு
அரசு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே
போன்று நூல், சாயப் பொருட்கள் இவை நியாயமான விலை
யில் போதுமான அளவிற்குக் கிடைக்கச் செய்ய சட்டபூர்வமா
பாதுகாப்பு இந்தத் தொடர் கூட்டம் முடிவதற்குள்ளேயே கிடைக்
கச் செய்யத் தக்க வகையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்
என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஆலைத் துணிகளை
யும், விசைத்தறித் துணிகளையும் கைத்தறித் துணி என்று உள்
நாட்டிலும் வெளிநாடுகளிலும் விற்பனை செய்கிற துரோகச்
செயலைத் தடை செய்ய தக்க நடவடிக்கைகள் எடுத்து, அப்படி
தவறான நடவடிக்கைகளில் இறங்குகிறவர்கள்மீது கடுமையான
நடவடிக்கைகள் எடுத்து கைத்தறித் தொழிலைக் காக்க வேண்
டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கைத்தறி கூட்டுறவுச் சங்
கங்கள் நல்லமுறையில் இயங்கக்கூடிய வகையில் திட்டங்களை
இந்த அரசு கொண்டுவரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கி
றேன்.

இந்த கைத்தறித் தொழில் வலுப்பெறும்வரை குறைந்த
பட்சம் 20 சதவிகிதம் ரிபேட்டாவது கைத்தறிக்குக் கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில்
திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஆட்சிக் காலத்தில் திரு
ராஜா சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட
குழுவின் அறிக்கை இன்று தூசு படிந்து தூங்குவதை கொஞ்சம்
தட்டியெழுப்பி அப்பரிந்துரைகளைப் பரிசீலித்து இத் தொடர்
கூட்டத்திலேயே சட்டமாக இயற்ற நடவடிக்கைகள் எடுத்து
கைத்தறி நெசவாளர்கள் சமுதாயத்திற்கு வாழ்வளிக்க வேண்
டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற தொழிலாளர்களுக்கு
இருப்பதுபோன்ற சகல பாதுகாப்புகளும் கைத்தறி நெசவாளர்
களுக்கும் நல்கிடவேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.
ஆளுநர் உரையில் கிராமங்களில் வேலையில்லாதவர்களுக்கு
வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்
கள். ஆனால் கிராமங்களிலுள்ள விவசாயிகள் விவசாயம் கட்டுப்
படியாகாமல், விவசாயத்தை விட்டுவிட்டு கிராமங்களை விட்டு



1979 பிப்ரவரி 15] [திரு து. இராமசாமி]

வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் இதை தடுத்து நிறுத்தி, விவசாயிகளுக்கு நல்வாழ்வு கொடுக்க இந்த அரசு முன் வராமல், ஏதோ வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்புத்தரும் திட்டத்தை கொண்டு வர முன் வருகிறார்கள். இந்த நிலையில் இது எந்த அளவுக்கு பாதுகாப்பு கொடுக்கும் என்ற அய்யம் எல்லோருடைய மனதிலும் ஏற்பட்டிருக்கிறது.

அதே போல் கரும்புச் சக்கைக்கு ஒரு திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயி கரும் பினுடைய விலை கட்டுப்படியாகவில்லை என்ற காரணத்தால் கரும்பு விவசாயத்தையே கைவிட்டிருக்கின்ற நிலையில் கரும்புச் சக்கைக்காக ஒரு திட்டத்தை இந்த ஆளுநர் உரையில் சொல்லி யிருப்பது, வெறும் சக்கையாகத் தான் இருக்கிறது. இதில் உப்போ சப்போ இல்லை என்பதை எடுத்துக்காட்டி குறிப்பிட விரும்புகிறேன். விவசாயிகள் கிராமத்தையே விட்டு ஓடுகின்ற நேரத்தில் கிராம ஊர் அமைப்பு திட்டத்தை கொண்டு வந்தி ருக்கிறார்கள். மக்கள் இல்லாத கிராமத்தில் ஊரமைப்பு திட் டத்தை எப்படி ஏற்படுத்தப் போகிறார் என்று தெரியவில்லை?

குவியல் அதிகாரத்தை பரவலாக்க வேண்டும் என்பதற்காக தலைமைச் செயலகத்திலுள்ள பல பிரிவுகளை பல மாவட்டங் களுக்கும் மாற்றுவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். இது மற்ற வர்களை ஏமாற்றும் வித்தையாகத்தான் இருக்கிறது. குவியல் முறையை பரவலாக ஆக்கவேண்டும் என்றால் இங்குள்ள அதி காரங்களை மாவட்டங்களிலுள்ள அதிகாரிகளுக்கு மாற்றிக் கொடுக்கவேண்டுமே தவிர, தலைமை அலுவலகங்களை திருச்சிக் கும், கோவைக்கும், மதுரைக்கும் மாற்றிக்கொண்டிருந்தால் எந்த வித நன்மையும் கிடையாது. ஒரு காரியத்தை பார்க்க வேண்டுமென்றால்; ஒரே இடத்தில் வந்து காரியங்களைப் பார்த்து முடிப்பதற்குப் பதிலாக ஒவ்வொரு ஊராகப் போய் படையெடுக்க வேண்டிய நிலைமை தான் உருவாகும். ஆகவே, இப்போ துள்ள மாற்றம் எந்தவிதத்திலும் யாருக்கும் நன்மை கிடை யாது, நாட்டுக்கும் நன்மை கிடையாது. ஆகவே, இதை மறு பரிசீலனை செய்து தலைமை அலுவலகங்களை மற்ற மாவட்டங் களுக்கு மாற்றுவதற்குப் பதிலாக தலைமை அலுவலகங்களிலுள்ள அதிகாரங்களை மாவட்டங்களிலுள்ள அதிகாரிகளுக்கு பிரித் துக்கொடுக்கும் முயற்சியில் இறங்க வேண்டும் என்று இந்த அரசை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பட்டா வழங்குவதைப்பற்றியும், புதிதாக வீட்டு மனைப்பட்டா கொடுப்பது பற்றியும் அறிவித்திருக்கிறார் கள். கடந்த தொடர் கூட்டத்தில் இதைப்பற்றி குறிப்பிட்டி ருக்கிறேன். பட்டா கொடுப்பதில் அளவுக்கு அதிகமாக கால தாமதமாகிறது. இதை தவிர்க்கும் முறையில் சட்டத்தை மாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்தேன், அதை அமைச்சர்

அவர்கள் ஏற்று திருத்தம் செய்து சுலபமாக பட்டா வழங்கு கின்ற முறை உருவாக்கியிருந்தாலும் கூட, அதிகாரி களுடைய மெத்தன போக்கால்—இதை நான் மிக வன்மையாக கூற விரும்புகிறேன்.—அழுத்தம் திருத்தமாக கூற விரும்புகிறேன்— அரிசன நல அமைச்சர் அவர் கள், தயவு செய்து இதை கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். இன்றைக்கு ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டு, தாசில்தார் அலுவலகங்களில் தூங்கிக் கொண்டி ருக்கின்ற அவல நிலை தான் இருந்து கொண்டிருக்கிறது. ஏதோ சட்டசபையில் பேசுகிறோம், இங்கு பல திட்டங்களை கொடுத்துவிடலாம் அதைப்பற்றி பேசி விடலாம் அதெல்லாம் பத்திரிகையில் வந்துவிடலாம், ஆனால் நிர்வாகத்தில் இருக் கின்ற அதிகாரிகள் எவ்வளவோ தவறுகளை செய்கிறார்கள், அவ்வளவு ஊழல்களும் நடைபெறுகிறது.

மனைப்பட்டா கேட்டுப் போகின்றவர்களிடம் பணம் கேட்கக் கூடிய நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. அந்த அள வுக்கு அதிகாரிகளுக்கு தைரியம் வந்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு அரிசன் சென்று தன்னுடைய விண்ணப்பத்தை பரிசீலனை செய்யுங்கள் என்று கேட்டால், 'நீ டாக்ஸி எடுத்துக்கொண்டு வா, போய் பார்ப்போம்' என்று கூறுகின்ற நிலைமையை தாசில்தார் அலுவலகத்தில் காண முடி கிறது. இந்த தவறுகளை எல்லாம் எடுத்துக் கூறுவதால் இந்த அரசை குறை கூறுகிறேன் என்று எடுத்துக்கொள்ள வேண்டாம்.

நல்லதிட்டங்களை செயல்படுத்துகின்ற போது, அதிகாரிகள் தவறு செய்தார்களேயானால் அவர்கள் மீது உடனடியாக நட வடிக்கை எடுக்க வேண்டும், அப்படி முன் வருகிறபோதுதான், இந்த ஆட்சி ஊழலை ஒழிக்க முடியும். அதல்லாமல் ஊழலை ஒழித்து விட்டோம் என்று பேசுவதில் எந்தவித நியாயமும் இருப் பதாக தெரியவில்லை. இதுவரை ஊழலை ஒழிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதுவரை ஊழலை ஒழிக்க எத்தனை அதிகாரிகள் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஊழல் எப்போதோ ஆரம்பித்தது, இப்போதும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இதை இன்னும் திருத்த முடிய வில்லை என்பதை தெளிவாக கூற விரும்புகிறேன்.

பட்டா வழங்குகின்ற விஷயத்தில் ஒவ்வொரு தாசில்தாருக்கும் இத்தனை பட்டாக்கள் வழங்க வேண்டும் என்று டார்ஜெட் பிக்ஸ் பண்ணி கொடுக்கவேண்டும். குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தில் பி.டி.ஓ.க்கள், ஆசிரியர்கள், இவர்களுக்கு மாதம் 500 பேர்கள் கொண்டு வரவேண்டும் என்று பிக்ஸ் பண்ணுகிறார்கள், சிறு சேமிப்புத் திட்டத்திற்கு ஊராட்சி மன்றத்தில் கமிஷனர் போன்ற வர்கள் இத்தனை ரூபாய் வசூல் செய்ய வேண்டும் என்று டார் ஜெட் பிக்ஸ் பண்ணுகிறார்கள்.



[முற்பகல் 10.40]

ஆனால் இம்மாதிரியான நல்ல காரியங்களுக்கு, அந்த மாதிரியான நிலை இல்லாமல் இருப்பது வருந்தத்தக்கது. ஆகவே இதிலே இன்னும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தி மொழிப் பிரச்சினையைப் பற்றி நமது ஆசியாவின் ஜோதி, இந்த பாரதத்தின் முன்னாள் பிரதமர், சோசியலிச சிற்பி, நேரு அவர்கள் வாக்குறுதியைக் கடைப்பிடிக்கின்ற முறை யில், நிறைவேற்றுகின்ற முறையில் இப்போதுள்ள ஜனதா அரசு உடனடியாக, திட்டவட்டமாக ஒரு அறிவிப்பை அறிவித்தாக வேண்டும். அப்படித் தவறினால், இன்று இந்த இந்தி மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ அல்லது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ இருக்கின்ற வேகத்தை விட, காங்கிரஸ் கட்சிக்கு இந்த வேகம் குறையவில்லை. இதிலே புரட்சித் தலைவர் அவர்கள் போர்க் கொடி தூக்கினால், எதிர்க் கட்சிகளும் உறுதியான மத்திய அரசோடு போராடு வதற்குத் தயங்காது. ஆனால், இதற்கு முதல் அமைச்சர் அவர்கள் தயாராக இருக்கின்றாரா என்பதை இந்த நேரத்தில் தெளிவுபடுத்தக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாண்டிச்சேரி மாநிலத்தைப் பொறுத்த வரையில் அங்குள்ள மக்களின் உணர்வுக்கு மதிப்புக் கொடுத்து, அவர்கள் எண்ணத்தைஏற்றுக்கொள்ளுகின்ற முறையிலே நிலைமை கள் இருக்கவேண்டுமே ஒழிய, திருவாசக மாநாட்டிற்கு வந்த பாரதப் பிரதமர் திருவாய் மலர்ந்தருள, அதனால் பல பேர்கள் உயிர் குடிக்கப்பட்டு, பல கோடி ரூபாய் சொத்துக்கள் சேத மடைந்த நிலமைகளைப் பார்த்த பிறகு, இது என்னுடைய தனிக் கருத்து என்று கூறுவது வேதனைக்குரியது, வருந்தத் தக்கதாக இருக்கிறது. எனவே, இந்த நிலைமை வருங்காலத்தில் ஏற்படாமல் இருக்க..........

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: பாண்டிச்சேரி யைப் பற்றி கவர்னர் உரையோடு இணைத்துப் பேசுவது எப்படி ரிலவன்சாக' இருக்கும் என்பது தெரியவில்லை.

<u>திரு. து. இராமசாமி:</u> பாண்டிச்சேரி நம் தமிழ் நாட்டிற்கு மிக அருகாமையில் இருக்கின்றது என்ற முறையிலும், அதைத் தமிழ்நாட்டோடு இணைப்பது பற்றி பேசப்படுவதாலும், இதைப் பற்றி இங்கே பேசுவதற்கு உரிமை உண்டு என்று கருதுகின்றேன். ஆகவே, துணைச் சபாநாயகர் அவர்கள் இதை அனுமதிக்க வேண்டுமென்று கூறுகிறேன். எனவே, இந்தப் பாண்டிச்சேரி

மக்களுடைய உணர்வுகளை மதிக்கின்ற வகையிலே, இந்தத்
தொடர் கூட்டத்திலேயே நம்முடைய சட்ட சபையில் உறுதி
யான திர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி
வைக்க வேண்டுமென்று பாண்டிச்சேரி மக்களின் சார்பிலும்,
எங்கள் காங்கிரஸ் இயக்கத்தின் சார்பிலும் கேட்டுக்கொண்டு,
இங்கே பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்தமைக்கு நன்றி தெரி
வித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

*திருசெ.மெ.ராஜு: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே,
மேதகு ஆளுநர் அவர்கள் கடந்த 9–2–1979ஆம் தேதியன்று
ஆற்றிய பேருரைக்கு ஆளுங் கட்சியின் சார்பிலே நன்றி தெரி
வித்துக் கொண்டு, சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்ற 20 மாதங்களில் பல ஏழை
எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பல்வேறு நன்மைகளைச்
செய்து வந்திருக்கின்றது என்பதை நாம் அறிவோம். கிராமந்
தோறும் நியாய விலைக் கடைகள் திறப்பது என்ற அடிப்படையில்
கிட்டத்தட்ட, 13,400 கிராமங்களிலே நியாயவிலைக் கடைகள்
திறந்து, ஒவ்வொரு கிராமத்திலும் இப்படி திறந்ததன் காரண
மாக, 13,400 பேர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கியிருப்பதற்காக
நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். விவசாயிகளுக்கு விரை
வில் மின்சார இணைப்பு கொடுப்பதற்காக, மின்சார வாரியத்தின்
மூலமாக மேலும் வேகமாக செயல்படுவதைப் பாராட்டுகிறேன்.
நிலமற்ற ஏழைகளுக்கும், நிலமற்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கும்
வீட்டுமனைப் பட்டாக்களையும், வீடுகள் கட்டிக் கொடுக்கும்
திட்டத்தையும் இந்த அரசு உருவாக்கி மிக வேகமாக செயல்
பட்டு வருவதையும் நான் பாராட்டுகிறேன். தொழிற் துறை
யில் மிக வேகமாக இந்த அரசு செயல்பட்டு வருகின்றது.
சேலம் மாக்னசைட் தொழிற்சாலையை இந்த அரசே ஏற்று,
அங்குள்ள தொழிலாளர்கள் அதை நம்முடைய தொழிற்சாலை
என்ற உணர்வுடன் இன்று அங்கே கிட்டத்தட்ட 3,000 தொழி
லாளர்கள் அதிலே ஈடுபட்டு வருவதை நான் பாராட்டுகிறேன்
அது மட்டுமல்ல. சேலம் மாவட்டத்தில் செரிகல்சர் அதாவது
பட்டுத் தொழிற்சாலையை வளர்க்க 4,000 ஏக்கரில் முசுக்
கட்டை பயிரிட்டு வருகிறார்கள். அதை மேலும் 8,000 ஏக்க
ருக்கு பயிர்செய்து, அந்தத் தொழிலுக்கு மேலும் ஊக்கமும்
கொடுத்து வருவதற்கு நான் இந்த அரசை மேலும் பாராட்டு
கிறேன்.

மாவட்ட நிர்வாகத்தை எளிமைப்படுத்தவும், மக்கள் எளிதில்
தங்கள் குறைகளைப் போக்கிக் கொள்ளவும் ஈரோட்டைத்
தலைநகராகக் கொண்டு கோவை மாவட்டத்தை இரண்டாகப்
பிரிக்க இருப்பதை நான் பாராட்டுகிறேன்.



சென்ற மழை, புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு
இந்த அரசு 50 கிலோ அரிசி, வேட்டி, துணி முதலிய எல்லாப்
பொருள்களையும் கொடுத்து விரைவாக, தீவிரமாக பணிகளைச்
செம்மைப்படுத்திய புரட்சித் தலைவர் தலைமையில் உள்ள
அரசை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

மதுவிலக்கைப் பொறுத்தவரை இந்த அரசு தீவிரமாகச்
செயல்பட்டு வருகிறது. மதுவிலக்கைத் தீவிரப்படுத்த வேண்டு
மானால் தற்போது இருக்கிற காவல் துறை அதிகாரிகளும்,
வாகனங்களும் போதாது. அதை அதிகப்படுத்தி மதுவிலக்குத்
திட்டத்தை மேலும் தீவிரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒருங்கிணைந்த
ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பல நிலமற்ற ஏழை விவசாயி
களுக்கும், நிலம் இல்லாத மற்ற ஏழைகளுக்கும் மானியமாகவும்
கடனாகவும் வழங்கப்பட்டு வருகிறது. ஆடுமாடுகள்
போன்றவை தேசிய வங்கிகள் மூலமாக வழங்கப்பட்டு வருவது
இந்த அரசின் முயற்சியாகும். இதைப் பாராட்டுகிறேன்.

சேலம் மாவட்டம் மலைகள் நிறைந்த மாவட்டம். அங்கு
சந்தன மரங்கள் அதிகமாக விளைகிறது. அது அரசுக்குப் பல
கோடி ரூபாய் லாபம் கொடுக்கிறது. ஆகவே, நிர்வாகச் சீர்த்
திருத்தம் செய்து சேலம் மாவட்டத்தில் இரண்டு மாவட்ட
வன அதிகாரிகளை நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கிராமந்தோறும் கிராம மக்களுக்கு இதுகாறும் வைத்திய
வசதி இல்லாமல் இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்ற நாளில்
இருந்து நடமாடும் மருத்துவ மனைகளை ஏற்படுத்தி, கிராம
மக்கள் வீடுதோறும் சென்று வைத்திய வசதி செய்து கொடுத்து
வருவதைப் பாராட்டுகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை பிற்பட்ட
தொகுதியாகும். அங்கு காலனி இல்லாத ஊர்களுக்கு விரைவில்
காலனி அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக்
கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்தில் எங்கும் புயல், மழை பெய்தும் கூட, அவ்வாறு
மழை பெய்த காலத்தில் கூட, அந்தப் பகுதியில் மழை இல்லை.
அங்குள்ள விவசாயிகள் தாங்கள் பெற்ற கடனைத் திருப்பிச்
செலுத்த மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய
கடனைத் தள்ளி வைப்பதற்குப் பதிலாக சிறு விவசாயிகள்
பெற்ற கடனைத் தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக் கொள்
கிறேன்.

[திரு. செ. ம. ராஜு] [1979 பிப்ரவரி 15

மேலும் எனது தொகுதியில் புகையிலை மிக அதிகமாக விளைகிறது. அந்த மூலப் பொருளைக் கொண்டு சிகரெட்டு, அல்லது சுருட்டு தொழிற்சாலை ஒன்றை அங்கு அமைத்தால் பல்லாயிரம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

ஆத்தூர் வட்டாரத்தில் குச்சிக்கிழங்கு அதிகமாகப் பயிராகிறது. தமிழ்நாட்டிலே 'சேகோ பாக்டரி'கள் அதிகமாக ஆத்தூரில்தான் இருக்கின்றன. அந்த மூலப் பொருளைப் பயன்படுத்தி குளுகோஸ் தொழிற்சாலை நிறுவினால் பல்லாயிரம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அதனை அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரை நமது பிணி தீர்க்கும் மா மருந்தாக அமைந்துள்ளது என்று கூறி வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

<u>திரு. என். வரதராஜன் :</u> சட்டப் பேரவை உதவி சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எனது கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுகிற கட்சி தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியில் இருந்து மிகப் பெரிய அளவு பின்னுக்குச் சென்று கொண்டிருக்கிறது என்ற குற்றச் சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் நம்முடைய நாட்டில் கடுமையான பொருளாதார நெருக்கடி நாட்டைச் சூழ்ந்திருக்கிறது. நம்முடைய நாட்டின் ஜனாதிபதி அவர்களே 20,000 கோடி ரூபாய் கள்ளப்பணம் ஆதிக்கம் செலுத்துகிறது என்று சொல்லுகிறார். இந்த நேரத்தில் நமது நாட்டில் தொழில் நெருக்கடி முற்றி, விவசாய நெருக்கடி முற்றி விளை பொருள்களின் விலையேறி நாட்டு மக்கள் மகத்தான கஷ்டத்திற்குள்ளாகி தங்கள் தங்கள் உரிமைகளை, வாழ்க்கை வசதிகளைக் கோரி போராட்டத்தில் இறங்குகிறார்கள். அரசினுடைய கொள்கை என்ன? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்ன? தொழிலாளர்கள் போராடுவது எல்லாம், மக்கள் போராடுவது எல்லாம் தங்கள் ஆட்சியைக் கவிழ்க்கத்தான் என்ற உணர்வை ஏற்றுக் கொண்டு அதிலிருந்து ஏற்படும் நிலையைச் சமாளிக்க வேண்டுமென்ற தந்திரங்களினால் 20 மாத காலத்தில் மிகப் பெரிய அளவுக்கு பின்னுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். போலீசாரைக் கொண்டு சமாளிக்க வேண்டுமென்ற நிலை இந்தக் காலத்தில் ஏற்பட்டால் என்ன நிலை உருவாகும்? பழனியிலும், சென்னையிலும், மதுரை சென்னிமலையிலும் தமிழ்நாட்டில் 12 இடங்களில் போலீஸ் நிலையங்களிலேயே மனிதர்கள் உயிரோடு கொளுத்தப்பட்டார்கள் என்று கதை சொல்லும், சட்ட



1979 பிப்ரவரி 15] [திரு. என். வரதராஜன்]

(முற்பகல் 10.50)

மன்றத்திலும் பேசியிருக்கிறோம். லாக்கப் மரணங்களைப் பற்றி நாம் பேசியிருக்கிறோம். இந்தப் போலீசாரரை நம்பித்தான் அடக்குமுறை ஆட்சி நடத்துவோம் என்று நீங்கள் சொன்னால் நான் கடந்த அக்டோபர் 23ஆம் தேதிய பந்திலே நடந்ததைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள திண்டுக்கல்லிலே நான் இருக்கிறேன், அங்கே கடைகளை அடைக்கச் சொல்லி மக்கள் கேட்கிறார்கள். ஆனால் இன்னொரு கூட்டத்தினர் போலீசாரைத் துணைக்கு வைத்துக் கொண்டு சாராயத்தைக் குடித்து விட்டு சைக்கிள் செயினை வைத்துக் கொண்டு கலாட்டா செய்கிறார்கள். போலீஸாரும் துணையாக நிற்கிறார்கள் என்றால் நீங்கள் எப்படி சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் தேதியிலே மதுரை மாவட்டத்திலே உள்ள கம்பம் நகரத்திலே நான் இருந்தேன். இந்திரா காந்தி கைது செய்யப்பட்டதை யொட்டி நடந்த பந்தின் போதும் பார்த்தேன், சிலர் கலாட்டா செய்து கொண்டிருந்தார்கள், போலீஸார் பின்னாலே நின்று கொண்டு பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள், என்ன சட்ட ஒழுங்கு பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது ? கடந்த மாதம் 22ஆம் தேதியன்று முதலமைச்சர் ரேடியோவிலே பேசினார், அது ஒரு பெரிய போர்ப் பிரகடனம் மாதிரியே இருந்தது. உழைக்கும் மக்கள் தங்களுடைய உரிமைகளை எடுத்துச் சொல்லி வந்திருக்கின்றார்கள், அந்த நிலையிலே ஏதோ இந்த அரசைக் கவிழ்க்க அவர்கள் முயற்சிக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டு அராஜகத்தை நடத்தினால் என்ன நிலைமை ஏற்படும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

உழைக்கும் மக்கள் கேட்டாலும் சரி, ஆசிரியர்கள் கேட்டாலும் சரி, அல்லது என்.ஜி.ஓ.க்கள் கேட்டாலும் சரி, கிராமப்புறங்களைப் பாருங்கள் என்று கையைநீட்டுகிறீர்கள். கிராமங்களிலே உள்ளவர்கள் துன்பப்படுகிறார்கள், துயருறுகிறார்கள், அல்லல் படுகிறார்கள் பாருங்கள் என்று சொல்கிறீர்கள். ஆனால் அப்படியாவது கிராமப்புறங்களிலே என்ன முன்னேற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறீர்கள்? கிராமப்புறங்கள் எல்லாம் இன்றைக்கு ஒரு கொந்தளிப்பான நிலையிலே இருக்கின்றன. பர்தோலி சத்தியாகிரகத்தின்போது நடத்தினார்களே வரிகொடா இயக்கம், அப்போது இருந்த உணர்வுகள் இன்றைக்குத் தமிழகத்திலே அப்படிப்பட்ட கொதிப்பான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஏன் அப்படி ஏற்பட்டது ? கடந்த காலத்திலே இருந்த உணர்வுகள் எல்லாம் வளர்ந்து வளர்ந்து இன்றைக்கு உச்ச கட்டத்தில் உயர்ந்து நிற்கிறது. ஆளுங் கட்சி அதையெல்லாம் நினைத்துப் பார்த்து இவன் கேட்டால் அவனைக் காட்டுவது, அவன் கேட்டால் இவனைக் காட்டுவது என்ற நிலைமையை ஏற்படுத்தித் தப்பித்துக் கொள்ளும் போக்கை மாற்ற வேண்டும்.

விவசாயிகளின் கஷ்டம் என்று சொல்கிறபோது சிலர் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி முயற்சி செய்வார்கள். தமிழ் நாட்டிலே நிலச் சீர்திருத்தம் இன்றைக்கு அமலில் இல்லை. ஏறத்தாழ ஒன்றரைக் கோடி ஏக்கர் நிலம் விவசாயத்திற்கு லாயக்குள்ள நிலம் இருக்கிறது. உச்சவரம்பு என்று சொல்லி எவ்வளவு எடுத்திருக்கிறோம், எத்தனை பேர்களுக்குக் கொடுத்திருக்கிறோம்? பாக்கி நிலங்கள் எங்கே இருக்கின்றன? பினாமி நிலங்கள் இருப்பதாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், டிரஸ்டுகள் என்ற பெயரால், கோவில்கள் என்ற பெயரால், பள்ளிக் கூடங்கள் என்ற பெயரால், தர்மம் என்ற பெயாரால், வேத பாடசாலை என்ற பெயரால், பால் பண்ணை, கால்நடைப் பண்ணை என்ற பெயரால் விதிவிலக்குகளின் பெயரால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பல பட்டாக்கள் இன்றைக்கு ஒரே பெட்டிக்குள் பூட்டி வைக்கப்பட்டுள்ளன. இந்த அரசாங்கம் என்னுடைய கட்சிக்கு விளக்கம் சொல்லித்தான் ஆக வேண்டும். கிராமப்புறங்களிலே சிறு தொழில் வளர்ச்சி என்று செய்யப்படுகிறதா என்றால் அதுவும் இல்லை, ஒரு அங்குலம் கூட அங்கே காலடி எடுத்து வைக்க முடியாது. இதற்கு முடிவு கட்டியாக வேண்டும். பினாமி நிலங்கள் இருக்கின்றன என்று வருவாய்த் துறை அமைச்சர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் கூட கடந்த கூட்டத் தொடரிலே இருக்கின்றன, ஆனால் ரகசியம், ரகசியம் என்று சொன்னார்கள், ஆனால் எவ்வளவு நிலம் இதுவரையில் எடுக்கப்பட்டிருக்கிறது ? மேற்கு வங்கத்தில் புரட்சித் திட்டம் கூட அல்ல இது, நம்மோடு வந்தவர்கள்தான் அங்கே ஏறத்தாழ 10 இலட்சம் ஏக்கர் நிலங்கள் தலைக்கு ஒரு ஏக்கர் வீதம் அளிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மத்திய சர்க்காரின் திட்டம், திட்டக் கமிஷனின் வழி முறை, இந்த நேரத்திலே நாம் போய்த் தீரரேண்டிய வழியில் உள்ள திட்டம். அது நிறைவேற்றப்பட வேண்டும்.

அடுத்து விவசாய விளை பொருட்களுக்கு நியாய விலை என்ற கொள்கை சொல்லப்படுகிறதே தவிர ஒவ்வொரு காலத்திலேயேயும் அதை தெளிவுபடுத்த வேண்டும். வெங்காயம் இன்றைக்கு ஒரு மணு 10 ரூபாய்க்குத்தான் விற்கப்படுகிறது. இன்றைக்கு அதைப் பயிரிட்டவர்கள் வெட்டி எடுக்க முடியாது, நிலத்தோடு போகட்டும் என்று சொல்கிற நிலைமைதான் இருக்கிறது, வெட்டியெடுக்க கூலியே கொடுக்க முடியாத அளவிற்கு உற்பத்தி செலவு கூட திரும்பி வராத அளவிற்கு நிலைமை இருக்கிறபோது எல்லாம் நாசமடைந்து அவர்கள் கண்ணீர் விடுகிற நேரத்திலே நெல் விலை 139 கொடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள் அதற்குக்குறுக்கே நிற்கவில்லை. ஆனால் மத்திய அரசைக் காட்டிவிட்டுத் திசை திருப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். நேற்றைக்குக் குறுவை 50 கிலோ கொண்ட மூட்டை 40 ரூபாய்க்கு போயிற்று. விவசாயிக்கு 85 ரூபாய் கிடைக்கவில்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சொல்



1979 பிப்ரவரி 15] [திரு. என். வரதராஜன்]

கிறோம், 100 ரூபாய் ஒரு குவின்டாலுக்குக் கொடுக்க வேண்டும். அறுவடைச் சமயத்தில். நீங்கள் கொள்முதல் செய்தால் கொடுக்க வேண்டும். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனைப் பயன்படுத்தி 100 ரூபாய் கொடுங்கள். சர்ச்சை நடக்கிறது அது பற்றி. 140 ரூபாய் கொடுப்பதா, 130 ரூபாய் கொடுப்பதா என்பதைப் பற்றிய சர்ச்சை நடந்து கொண்டேயிருக்கட்டும், அதற்கிடையில் இன்றைக்கு குறைந்தபட்சம் 100 ரூபாய் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

நியாய விலைக் கடைகளைபற்றிச் சொல்கிறோம். அதுபற்றியும் இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் சர்ச்சை நடக்கிறது. தமிழகத்தில் ஏற்கனவே 40 இலட்சம் கடைகள் இருக்கின்றன. நீங்கள் 13,000 கடைகள் திறந்திருப்பதால் இந்தக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் நியாய விலையில் விற்கப்படுகிறதா என்று பாருங்கள். புளி, பருப்பு, எண்ணெய் போன்றவைகள் இந்தக் கடையில் என்ன விலை, அந்தக் கடையில் என்ன விலை என்று பாருங்கள். அதில் ஒரு வார்த்தை போட்டிருக்கிறார்கள், 'மீதமுள்ள கிராமங்களும் ஓரிரு மாதங்களுக்குள் பயனடையும்' என்று. இப்படி வார்த்தைகளில் விளையாட வேண்டாமென்று அழுத்தமாகச் சொல்லவிரும்புகிறேன். 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தால் எப்படி நியாய விலைக் கடைகளில் பொருட்களைக் கொடுக்கமுடியும்? விவசாயிகள் இப்பொழுது இருக்கும் நிலையில் கண்ணீர் விடுகிறார்கள், அதன் காரணமாக கிராமங்களில் எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. பயிருக்காக 260 கோடி ரூபாய் கடன்கொடுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எச். பாண்டியன்) தலைமை.]

அந்தக் கடனுக்கான வட்டி வளர்ந்து வளர்ந்து இன்றைக்கு கட்ட முடியாமல் விவசாயி இருக்கிறான். விவசாயம் கெட்டுப் போனதால் அதை தவணை கடந்த கடனாகக் கருதியும், குறுகிய காலக் கடனை நீண்ட காலக் கடனாகவும் நீட்டியிருக்கிறார்கள். மீண்டும் விவசாயிகள் நெருக்கடியில் இருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்கள் பொருட்களை ஜப்தி செய்தால் கலகம்தான் விளையும். இதற்கு முன்னால் பல பெரியவர்கள் சேர்ந்து கொள்கிறார்கள், கடனை எங்களுக்கும் ஒத்தி வை என்று.

நான் கேட்டுக்கொள்வது, 5 ஏக்கர் உள்ளவருக்கு இருக்கின்ற கூட்டுறவுக் கடன், அரசுக் கடன், தனியார் கடன் எதுவாக இருந்தாலும் அதை ரத்து செய்து விடுங்கள். 10 ஏக்கர் உள்ளவர்களுக்கு கடனுக்குள்ள வட்டியை ரத்து செய்து விட்டு அதை பத்தாண்டுக் காலத்தில் தவணை யில் கட்ட வேண்டுமென்று செய்து அந்த நடுத்தர விவசாயிகளுக்கும் நிவாரணம் அளியுங்கள். இவ்வாறு செய்து கிராமப்புற மக்களைத் தங்கள் பக்கம் வைக்—

...க்கொள்கின்ற தந்திரமான செய்கையை விட்டுவிட்டுத் தவிக்கும் நிலையிலே இருக்கிறது. நான் அதைத்தான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

மத்திய அரசிலே என்ன சொல்கிறார்கள்? சாதாரண விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடன்களுக்கு வட்டி வேண்டாம் அல்லது 4 சதவீத வட்டி வாங்கலாம் என்று மொரார்ஜி தேசாய் சொல்கிறார். விளம்பரத்திற்காக சொல்லியிருந்தாலும் பரவாயில்லை. எங்களைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு 4 சதவீதம்கூட வேண்டியதில்லை என்று சொல்வோம். நம்முடைய வருவாய்த்துறை அமைச்சரவர்கள்கூட சொன்னார்கள், ஏற்கனவே இருந்த சட்டப்படி 11,000 ரூபாய் உபரி நிலத்திற்குக் கொடுக்க வேண்டியிருந்ததை நாங்கள் 3,000 ரூபாயாகக் குறைத்துவிட்டோம் என்று. அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இன்றைக்கும் கிராமத்திலே உள்ளவர்கள் 3,000 ரூபாய் கொடுக்கும்படியான நிலையிலா இருக்கிறார்கள்? எனவே, 3,000 ரூபாய் என்று இல்லாமல் இனாமாகக் கொடுக்கவேண்டும். இன்றைககு பல இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழிக்கும் இந்த அரசு இப்படிப்பட்ட கிராமப்புற விவசாயிகளிடம் 3,000 ரூபாய் வாங்க வேண்டியதில்லை என்று சொல்கிறேன். அப்பொழுதுதான் அவர்களுக்கு நாம் ஏதாவது செய்தவர்களாவோம். நீங்கள் சொல்வதுபோல் பள்ளிக்கே செல்லாமல் இருக்கின்ற குடும்பங்கள், அவர்களை அரசு ஊழியத்திற்கு இழுத்து வரப்போகிறோம் என்று சொல்கிறீர்களே, அவர்கள் 3,000 ரூபாய் கொடுத்து வாங்க முடியுமா ? 11,000 ரூபாயா அல்லது 3,000 ரூபாயா என்பது அல்ல பிரச்னை. நிலமற்ற பாட்டாளி மககளுக்குப் பயனளிக்கும் விதத்தில் நீங்கள் சலுகைகள் அளித்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குத்தகை விவசாயிகள் பிரச்னை ஒரு முக்கியமான பிரச்னை. ஏற்கனவே 75, 25 என்று சொல்லியிருக்கிறது. நாம் என்ன சட்டம் போட முடியாதா ? மேற்கு வங்கத்திலே உள்ள சட்டம் சொல்கிறது, குத்தகை விவசாயி அல்ல என்று நிரூபிக்க வேண்டியது நிலச்சுவான்தாரின் பொறுப்பே தவிர குத்தகைதாரரின் பொறுப்பு அல்ல, என்று. கிட்டத்தட்ட ... இலட்சம் குத்தகை விவசாயிகள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். ஆனால் பதிவேட்டில் இருப்பது இரண்டு இலட்சம் பேர்கள்தான். பாக்கியுள்ள 4 இலட்சம் பேர்கள் வெளியிலே இருக்கிறார்கள். அவர்கள் வெளியேற்றப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை குத்தகைதாரர்கள் என்று ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் திருத்தச் சட்டத்தை நாம் கொண்டுவர வேண்டும்.

அடுத்து, விவசாயத் தொழிலாளர் கூலிப் பிரச்னை. தமிழ்நாட்டிலே இரண்டு ரூபாய், இரண்டரை ரூபாய்க்குமேல் பெண்களுக்குக் கிடைக்கவில்லை; 3 ரூபாய், 3½ ரூபாய்க்கு மேல்





ஆண்களுக்குக் கிடைக்கவில்லை. சட்டம் சொல்கிறது 5 ரூபாய் என்று; அதை அமல் நடத்தக்கூடிய அமைப்பு என்ன இருக்கிறது? அந்தக் கூலியை 8 ரூபாய் என்று நாம் நிர்ணயிக்க வேண்டும். அந்தக் கூலியை அமல் நடத்துவதற்கு அமைப்பு வேண்டும். கிணறு வெட்டும்பொழுது மண் விழுந்து சாகிறான், மருந்து அடிக்கும்பொழுதுசாகிறான். (மணியடிக்கப்பட்டது.)

(முற்பகல் 11–00;)

நாங்கள் 12 பேர் இருக்கிறோம். நான் ஒருவன்தான் பேசுகிறேன். ஆகவே, 5 நிமிஷம் கொடுங்கள்.

விவசாயத் தொழிலாளர்களுக்குள்ள முக்கியமான பிரச்னை, அவன் கஷ்டப்படுகிறான். கிணறு வெட்டும்போது உயிர் போகிறது. அம்மாதிரி சந்தர்ப்பங்களில் அவன் குடும்பத்திற்கு நஷ்டயீடு கொடுக்க வேண்டும். கஷ்டப்படும்போதே நஷ்டப்படுகிறான்.

கோவில் நிலங்கள் என்பதிலே சர்க்காருக்கு இன்னும் தகராறு இருக்கிறது. ஆஸ்திக, நாத்திகப் பிரச்னையாக அது இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் நம்பியிருக்கும் நிலங்களை, உழைத்துப் பாடுபட்ட நிலையிலிருக்கும் அவர்களுக்கே கொடுக்க வேண்டுமென்ற பிரச்னை நீண்ட நாட்களாக இருக்கிறது. இதுபற்றி முன்னால், காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்களே சொல்லி இருக்கிறார்கள். அவர் நாஸ்திகரா ? கேரள மாநிலத்திலே இந்தச் சட்டத்தை அமுல்படுத்துகிறார்கள். கோவிலுக்குப் போகிறவன் ஏராளமாகப் பணம் கொடுக்கிறான். அரசாங்கம், ஏதாவது மானியம் கொடுக்கலாம். ஆனால், கோவில் நிலத்தை உழுபவனுக்கே கொடுக்க வேண்டாமா ? பெரியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டு, நீங்கள் கோவில் நிலத்தை பாதுகாத்துக் கொண்டு போனால் என்ன பொருள் ? சர்க்காருடைய கொள்கை சிக்கலானது.

நேற்று ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கவே அறநிலையத் துறை அமைச்சர் ரொம்பத் திண்டாடினார். 'திருக்கோவில்' என்ற பத்திரிக்கை கொடுக்கிறார்கள். அதைப் படித்துப் பார்த்தால் திருக்கோவிலாகத்தானிருக்கிறது. உங்களுடைய கொள்கை என்ன என்று சொல்ல முடியவில்லை. ஆகவே, குத்தகை விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்று இந்நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்கைப் பற்றி எடுத்துக் கொண்டால், 15,000 கைதிகள் நாடு பூராவும் நிரம்பி வழிகிறார்கள். எப்படித்தான் தமிழ் நாட்டிலே மதுவிலக்கை அமுல்படுத்துகிறோம்

என்று நம்புவது? மதுவிலக்குச் சட்டமே தேவையில்லையென்று மார்க்சிஸ்ட் கட்சி சொல்லியிருக்கிறது. இந்தியாவிலே உள்ள 22, 23 மாநிலங்களிலே, 2 மாநிலங்களிலேதான் மதுவிலக்கு இருக்கிறது. இந்த மதுவிலக்கை அமுல்படுத்தும் அதிகாரத்தை போலிசாரிடம் கொடுத்தால், பல்லாயிரக்கணக்கான மக்களை கைது செய்யவும், வேண்டியவர்களை விடவும், வேண்டாதவர்களை பிடிக்கவும், இலஞ்சம் பெருகவும், கட்சி பேராலே மாறுதல்கள் செய்யவும் இது உபயோகப்படுகிறதே தவர வேறு ஒன்றுக்கும் இது உபயோகப்படவில்லை. இது எங்களது அனுபவம். எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர், மதுரை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே [illegible] சொன்னார். மதுவிலக்கை விட மாட்டேன், விட மாட்டேன் என்று சொன்னால் பிரயோஜனம் இல்லை. மதுவை விட முடியாது, குற்றவாளிகளைப் பிடிக்க முடியாது, மதுவை ஒழிக்க முடியாது, நம்மிடமுள்ள காவல் துறையினரால். இது மக்களைப் பிடிக்கவும் தாகவும்தான் பயன்படுகிறது.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, கிராமப்புற அபிவிருத்தி என்ற பெயரால், சினிமா காட்சி வரியை நாம் குறைத்திருக்கிறோம். ஏற்கனவே, பஞ்சாயத்து வரி, ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்பட்ட வரி குறைந்திருக்கிறது. ஊராட்சி எப்படி ரோடு போடும்? லைட் எரியவில்லையென்றால் எப்படி எரியும்? ஏற்கனவே கொடுத்த வரித் தொகையை நீங்கள் பிடுங்கிக்கொண்டு, காட்சி வரியை நீங்கள் பிடுங்கிக் கொண்டு குறைந்த தமாஷா வரியை நீங்கள் கொடுத்திருப்பதனால் என்ன நடைபெறுகிறது? ஊராட்சியை வீட்டு வரியை உயர்த்து தண்ணீர் வரியை உயர்த்து என்று அரசு சொல்வதனால், மதுரை மாவட்டத்திலே உத்தமபாளையத்திலே கிளர்ச்சி நடக்கிறது. இதன்மூலம், உங்களுக்குக் கொள்கையில்லையென்பதை நாங்கள் வற்புறுத்துகிறோம். கிராமத்தைப் பாதுகாக்கும் திட்டம் ஒன்றும் உங்களிடம் இல்லையென்று நான் சொல்ல விரும்புகிறேன்.

வீடு கட்டும் திட்டம் பற்றி எடுத்துக்கொண்டால் சேலத்திலே நடைபெற்ற சம்பவம் பற்றி தஞ்சை மாவட்ட உறுப்பினர், திரு. உத்திராபதி அவர்கள் நேற்று பேசினார்கள். அவர் குறிப்பிட்டது போல், மேட்டுப்பாங்கான இடத்திலே, புயலால் பாதிக்கப்பட்டவன், புறம்போக்கு நிலத்திலே வீடு கட்டியிருக்கிறான். அவனை அடித்து நொறுக்கி, பெண்ணை மானபங்கப் படுத்தி, அவர்கள் மீது போலீஸ் 4 வழக்குகளைப் போட்டிருக்கிறது.



வீடு கட்ட இலட்சமா, 5 இலட்சமா என்று சர்ச்சை பண்ணுகிறோம். சேலம் நல்லிபாளையத்திலே ஒரு மிராசுதார் பண்ணையிலே குடி தண்ணீர் எடுத்ததற்காக இராஜாத்தி என்ற அரிசனப் பெண்ணை டிசம்பர் மாதம் 10-ம் தேதி அடித்துக் கொன்றிருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது). இந்த நிலைமைகளையெல்லாம் மாற்றினால்தான், கிராமப்புற தன்மைகளை மாற்றினால்தான் கிராமங்களை முன்னேற்ற முடியும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. கு. அ. செங்கோட்டையன்</u>: தற்காலிகத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற வாய்ப்பினைத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள் முன்னேற்றத்திற்காக இந்த அரசு நல்ல பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது. விவசாயிகள் மேம்பாட்டிற்காக விவசாயிகளுடைய நெல்லுக்கு குவிண்டாலுக்கு 70 ரூபாயிலிருந்து 85 ரூபாயாகக் கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசை நமது அரசு கேட்டுள்ளதற்காக நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, விவசாயிகளுக்கு 16 பைசாவாக இருந்த மின் கட்டணத்தை, பெரிய விவசாயிகளுக்கு 14 பைசாவாகவும், சிறு விவசாயிகளுக்கு 12 பைசாவாகவும் குறைத்திருக்கிறார்கள். அதேபோல 12.6 பைசாவாக இருந்ததை இன்றையதினம் 10.5 பைசாவாக குறைத்திருக்கிறார்கள். எனவே நம்முடைய அரசு நிதிநிலைக்குட்பட்டு விவசாயிகளுக்கு நல்ல திட்டங்களை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசியவர்கள் நம்முடைய அரசு இந்த விலையை வலியுறுத்தவில்லை என்று சொன்னார்கள். கோதுமைக்குத் தரப்படுவதைப்போல, வடநாட்டிலே தரப்படுவதைப்போல உயர்த்தித் தரவேண்டும் என்பதை நம்முடைய கவர்னர் உரையிலே வைத்து இருக்கிறார்கள்.

அடுத்து, பினாமி நிலங்களை நமது அரசு எடுத்துக்கொண்டு வீடற்றவர்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்கான திட்டங்களை கவர்னர் உரையிலே வைத்திருக்கிறார்கள்.

அதேபோல கிராமங்கள் முன்னேறுவதற்கும், புதிய கிராமங்கள் அமைப்பதற்கும் நல்ல திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய எதிர்க்கட்சி நண்பர்கள் இங்கே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ன திட்டங்களை கிராமத்திற்காகச் செய்திருக்கிறது என்றும், நாங்கள் செய்யவில்லையா என்றும் சொல்லுகிறார்கள்.

[திரு. கு. அ. செங்கோட்டையன்] [1979 பிப்ரவரி 15

1971-லே தாளவாடியிலே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த நேரத்தில் இந்த ஆட்சியிலே எங்களுக்கு ஒன்றும் செய்யவில்லை. எனவே எங்கள் பகுதியை கர்நாடகத்துடன் சேர்த்துவிடுங்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைமை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இருந்தது. ஆனால் இன்றையதினம் நம்முடைய ஆட்சி அமைந்ததற்குப் பின்னால் தாளவாடிப் பகுதியிலே, நம்முடைய தானைத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள், தாளவாடியிலே இருக்கிற மக்களுக்கு நல்லபல திட்டங்களை நிறைவேற்றியதற்காக மக்கள் அவர்கலளப் புகழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

1973-லே சிக்கரசம்பாளையத்தில் இன்றைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு பாலம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள். அந்தப் பாலத்தை கட்டவே இல்லை. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நாட்டப்பட்ட அடிக்கல் இன்னும் அப்படியே இருக்கிறது. அந்த அடிக்கல்நாட்டு விழாவிற்கு மாத்திரம் ஏறத்தாழ 5,000 ரூபாய்கள் செலவிடப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னும் பாலம் வந்ததாகத் தெரியவில்லை.

1972 ஆம் ஆண்டு கடம்பூர் பகுதியில் ஒரு ரோடு கடுமையான மழையினால் பாதிக்கப்பட்டு துண்டிக்கப்பட்டது. அப்படி துண்டிக்கப்பட்ட நேரத்தில், அப்போதிருந்த ஆட்சியினர், தாங்கள் ஏழை எளியமக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் திட்டங்களை நிறைவேற்றினோம் என்று சொன்னார்கள். ஆனால் 1½ ஆண்டு காலமாக துண்டிக்கப்பட்டுக் கிடந்த அந்தப் பாதையை சரி செய்யவில்லை. அதாவது 1972 லேயிருந்து 1973 வரையில் மழையினால் பாதிக்கப்பட்டு துண்டிக்கப்பட்ட அந்த பாதையில் 25,000 மக்கள் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அந்தப் பாதை செப்பனிடப்படாமல் இருந்தது. பின்னர் அந்த ஆட்சி ஒன்றும் செய்யாது என்று தெரிந்ததற்குப் பின்னாலே ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து அந்தப் பாதையை செப்பனிட்ட காட்சியைக் கண்டோம்.

அடுத்து, வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு துரித நடவடிக்கையை நமது அரசு எடுத்துள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இறந்தவர்கள் குடும்பத்திற்கு உடனடியாக 1,000



[1979 பிப்ரவரி 15] [திரு. கு. அ. செங்கோட்டையன்]

ரூபாய், கொடுத்து மிகவும் துரிதமாக நடவடிக்கை எடுத்தது. 1972 ஆம் ஆண்டு கடம்பூர் பாதையை செப்பனிடாததைப் போல அல்லாமல் இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளது.

[முற்பகல் 11-10]

கிராமங்களில் இருக்கிற ஏழை மக்களுக்கு, அதாவது ரூ. 4,200-க்கும் குறைவாக வருமானம் உள்ளவர்களுக்கு ரூ. 600 மானியம் கொடுத்து வீடு கட்டிக்கொடுக்கும் நல்ல திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அதோடு, கிராமப்புறங்களில் இருக்கும் ஏழை மக்களுக்கு 1 லட்சம் வீடுகள் கட்டித் தரும் திட்டத்தையும் இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறது. அதற்காக என் பாராட்டுதல்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோபி ஊராட்சி ஒன்றியத்தில் 1972—73-ம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் தலைவராக இருந்தார். 2 ஊராட்சித் தலைவர்களை வைத்துக்கொண்டு அவர் அதை நடத்தி வந்தார். 18 எதிர்க் கட்சி ஊராட்சித் தலைவர்கள் ஒன்றியக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட எல்லாத் தீர்மானங்களையும் தோற்கடித்தார்கள். அப்படியிருந்தும் அந்த ஒன்றியம் கலைக்கப்படவில்லை. ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளும் திராவிட முன்னேற்றக் கழகம் ஏன் அப்போது அந்த ஒன்றியத்தைக் கலைக்கவில்லை என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன். அந்த வகையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்து கொண்டிருக்கவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பட்டுத் தொழிலை வளர்க்க திட்டம் தயாரித்து இருக்கிறது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. ,000 ஏக்கர் நிலத்தில் மொசுக்கட்டை செடி வளர்ப்பதற்காக திட்டம் தீட்டியிருக்கிறது. தாளவாடியில் 8,000 ஏக்கரில் பண்ணை அமைக்கவும் திட்டம் தீட்டியிருக்கிறது. இதனால் ஏறத்தாழ 11,000 தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பும் இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே சிலர் மதுவிலக்குக் கொள்கை அமல்படுத்துவது பற்றிப் பேசினார்கள். மதுவிலக்குக் கொள்கையை நல்ல வகையில் அமல்படுத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நல்ல திட்டங்களைத் தீட்டியிருக்கிறது.

எதிர்க் கட்சியாக உள்ள திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது மதுவிலக்கை எடுத்த காரணத்தால்தான் எங்களுக்கு இன்றைக்கு பல சிக்கல்கள் இருக்கின்றன என்று மக்கள் சொல்கிறார்கள்.

எதிர்க் கட்சி வரிசையில் இருக்கும் தாத்தா அவர்கள் மொழிக் கொள்கை பற்றிப் பேசும்போது, தமிழ் எனக்குத் தாய், இந்தி என் மனைவி, வேலைக்காரி ஆங்கிலம் என்று சொன்னார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், ஒரு கிராமத்தில் ஒரு மணியக்காரர் இருந்தார். அவர் செல்கிற இடத்திற்கு எல்லாம் தன் மகனையும் கூட அழைத்துக்கொண்டு செல்வார். ஒரு இடத்தில் ஒருவருடைய தாயார் இறந்து விட்டார்கள். அப்போது அவர், தாயாரை இழந்து நிற்பவரிடம், அப்பா, அழாதே, அவர்கள் உனக்கு மட்டுமா தாய், ஊருக்கே அல்லவா தாய்போல் இருந்து வந்தார்கள் என்று ஆறுதல் கூறினார். பின்னர் சிறிது காலம் சென்ற பிறகு மணியக்காரர் இறந்துவிட்டார். மணியக்காரர் மகன் தானும் தன் தகப்பனைப்போல் எல்லோரிடமும் நடந்து கொள்ளவேண்டும் என்று எண்ணி, அந்த ஊரில் மனைவி இறந்து விட்டதால் துக்கத்தில் இருக்கும் ஒருவனுக்கு ஆறுதல் கூறச்சென்றார். அப்படி ஆறுதல் கூறுகிறபோது, ஐயா, வருத்தப்படாதீர்கள், அவள் உங்களுக்கு மட்டுமா மனைவி. ஊருக்கெல்லாம் அல்லவா மனைவியாக இருந்தார் என்று சொன்னார். உடனே அங்கேயுள்ள மக்கள் அவரை அடித்து நொறுக்கிவிட்டனர். அதேபோல் தமிழ் மக்களிடத்தில், தமிழ் சமுதாயத்தினிடத்தில் தமிழ் வெறியோடு, தமிழ் பற்றோடு இருக்கும் சமுதாயத்தினிடத்தில் ஏன் இந்தியைத் திணிக்கிறீர்கள் என்று கேட்கிறபோது, இப்படிப் பேசுவது மிகவும் வேதனையாக இருக்கிறது என்று சொல்லி, வாய்ப்பினை நல்கிய தலைவரவர்களுக்கு நன்றி சொல்லி, முடிக்கிறேன்.

* திரு. து. புருஷோத்தமன்: மதிப்பிற்குரிய பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே ஆளுநர் உரையிலே பேசிய எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இந்த நாட்டிலே சட்டம், ஒழுங்கு எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். சமீபத்திலே அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து இந்த நாட்டில் சர்வாதிகாரம் அதிகமாகிவிட்டது, சட்டம் ஒழுங்கு சரியில்லை என்பதற்காக அனைத்துக் கட்சிகளும் "அர்த்தால்" செய்ய வேண்டுமென்று முடிவெடுத்து அண்மையிலே அர்த்தால் நடைபெற்றது. அப்போது எந்த அளவுக்கு ஆளும் கட்சியினர் தங்களோடு சாராயம் காய்ச்சுபவர்களையும், ரவுடிகளையும், சமூக விரோதிகளையும் வைத்துக்கொண்டு, அதுவும் குறிப்பாக சென்னையிலே கையிலே கத்தியும் அரிவாளும் சைக்கிள் செயினும் வைத்துக்கொண்டு திரிந்ததை நாம் பார்த்திருக்கிறோம்.



சர்வ கட்சியினரும் வந்துதான் கடைகளை மூடவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் சென்னை நகரிலே எதிர்க் கட்சியினர் யாரும் அங்கே இல்லை; ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் அவர்களோடு இருந்த குண்டர்களும் வந்து, மூடிய கடைகளை அடித்து நொறுக்கினார்கள். கடைகளை அடித்து நொறுக்கி, அங்கே இருந்த பொருட்களை எல்லாம் சூறையாடினார்கள். அந்த அளவுக்கு பல்வேறு இடங்களில் வன்முறைகள் நடைபெற்றிருக்கின்றன. மூடிய கடைகளை பலாத்கார முறையில் திறக்கச் சொல்லியிருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியாகிய சைதாப்பேட்டையில் நிலைமை எப்படி இருந்தது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அர்த்தால் நடைபெற்ற அன்று நிலைமை எப்படி இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக நான் தன்னந்தனியாக சென்றுகொண்டிருந்த போது, என்னைப் பார்த்தவுடனே காவலாளிகள்—போலீஸ் துறையைச் சேர்ந்தவர்கள்—கைது செய்தார்கள். என்னை கைது செய்து அழைத்துச் செல்லும்போது அவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்த குண்டர்கள் கும்பலாக இருக்கிற பக்கமாக அழைத்துச் சென்றார்கள். அப்போது அந்தக் குண்டர்கள் என்னைத் தாக்கினார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு இப்படிப்பட்ட ஒரு நிலையை ஏற்படுத்தினார்கள்.

அதைப்போல பூந்தமல்லியிலே எதிர்க் கட்சி உறுப்பினர் பெரியவர் இராஜரத்தினம் அவர்கள் வீடு புகுந்து தாக்கப்பட்டார்கள். தாக்கியதோடு மட்டுமல்லாமல் அவர்கள் மேலேயே பல்வேறு வழக்குகளையும் ஜோடித்திருக்கிறார்கள்.

அதைவிட ஒரு பெரிய அநியாயம் இன்றைக்கு நடைபெற்றிருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர் முருகையன் அவர்கள் படுபயங்கரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தன்னுடைய உயிருக்கு ஆபத்து என்று காவல் துறைக்கு தகவல் தெரிவித்தும் கூட, அவருக்கு பாதுகாப்பு அளிக்கப்படாமல், அவருடைய உயிர் பறிக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல. இந்த நாட்டிலே 7 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்தவர் எங்கள் தானைத் தலைவர் அவர்கள்: இன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறார்கள். அவர்கள் 20 ஆண்டு காலத்திற்கு அதிகமாக சட்டமன்றத்தில் பணியாற்றி வருகிறார்கள். அப்பேர்ப்பட்டவரை ஆளும் கட்சியைச் சேர்ந்த * * * * ஒருவன் உளி வீசி தாக்க முயற்சி செய்திருக்கிறான். குறிப்பார்த்து உளி வீசித் தாக்கக் கூடியவன் அவன் ஒருவன் மட்டுமல்ல என்பதை நான் இங்கே

*** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவுக்கு இன்றைக்கு நாட்டிலே சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் பெரிய அரசியல் தலைவர்கள் தங்களுடைய வேலைகளை சரியாகக் கவனிக்க முடியாத ஒரு பயங்கரமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இதை அன்றாடம் நாம் பார்க்கின்றோம். இதை ஊக்குவிக்கக் கூடாது என்று சொல்லும்போது இந்த நிகழ்ச்சிக்கு வருத்தம்கூட முதலமைச்சர் தெரிவிக்கவில்லை. பாதுகாப்பு அளிக்கின்ற பொறுப்பு முதலமைச்சர் கையிலே இருக்கிறது என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது. வருத்தம் தெரிவிக்காவிட்டாலும் இப்படிப்பட்ட செயல்கள் எங்கே போய் முடியும் என்பதை எண்ணிப் பார்த்தாரா என்பதுகூட தெரிய வில்லை.

அண்மையில் பத்திரிகையிலே பார்த்தோம். உத்தரப்பிரதேச முதல் அமைச்சர் கத்தியால் குத்தப்பட்டிருக்கிறார். இப்படிப் பட்ட சம்பவம் தமிழ்நாட்டில் தொடரக் கூடாது என்பதற்காக முதலமைச்சரின் காவல்துறை செயல்பட வேண்டும், வன்முறைகள் தடுக்கப்பட வேண்டும், இந்த முயற்சிகள் நிறுத்தப் பட வேண்டும், இத்தகைய நிகழ்ச்சிகள் மேலும் நடைபெற முதலமைச்சர் இடம் தரக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல......

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்):</u> ஆளும் கட்சியைச் சேர்ந்த *** என்று சொன்னது சரியல்ல. அதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள். அவைக் குறிப்பி லிருந்தும் அதை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

<u>திரு. து. புருஷோத்தமன் :</u> அந்த வார்த்தையைப் பயன் படுத்துவதில் தவறு இல்லை. கொலைக் குற்றம் செய்பவனை நல்லவன் என்றா சொல்ல வேண்டும்? அதை வேண்டுமென்றால் மாற்றிக் கொள்கிறேன். ஆளும் கட்சியைச் சேர்ந்த அராஜகவாதி என்று சொல்கிறேன்.

அதைப்போல இன்றைய தினம் மற்றொரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. எங்கள் தலைவருடைய பெயரில் இருக் கிற கணக்குப் புத்தகம், அவர்களுடைய குடும்பக் கணக்குகள் எழுதிவைக்கப்பட்ட புத்தகத்தை ஆடிட்டர் வீட்டிலிருந்து திருடிச் சென்றிருக்கிறார்கள்.

---

*** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



[முற்பகல் 11-20]

ஒரு எதிர்க்கட்சித் தலைவருக்கு எந்த அளவுக்குப் பாதுகாப்பு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எல்லா வகையிலேயும் தொல்லை தர வேண்டும் என்று இந்தச் சர்க்கார் எண்ணி உள்ளதா என்று கேட்க விரும்புகிறேன்.

அதைப்போல இன்றைய தினம் மற்றொரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. வடார்க்காடு மாவட்டத்திலே ஒரு டி.பி.யிலே ஒருவர் செத்துக் கிடக்கிறார். அவரை மற்றொருவர் தன்னந்தனியாக சேலம்வரை எடுத்துச் சென்றிருக்கிறார். அங்கே இருக்கின்ற காவல் நிலையத்திற்கும் தெரிவிக்காமல் அந்தப் பிணத்தை அவராகவே எடுத்துச் சென்று சங்ககிரியிலே வைத்து உறவினர்களுக்குக் கூடச் சொல்லாமல் அவரின் மனைவியை மட்டும் காவல் நிலையத்திற்கு அழைத்து வரச் செய்து இரவோடு இரவாக அந்தப் பிணத்தைப் புதைத்திருக்கி றார்கள். இது நியாயமான காரியமா? இந்தக் காரியத்தைச் செய்தவர் யார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பொறுப் பான பதவியை அவர் வகித்து வருகிறார். அவர் மத்திய சர்க்காருக்கும் நமது சர்க்காருக்கும் இடையிலே தூதராக இருப்பவர். சட்டம் ஒழுங்கை அறிந்த அவர் போலீஸுக்கும் தெரியாமல் வடார்க்காடு மாவட்டத்திலேயிருந்து ஒரு பிணத்தை சேலம்வரை எடுத்துச் சென்று இருக்கிறார்கள். ஒரு மாவட்டத்தை விட்டு மாவட்டம், ஒரு ஊரை விட்டு ஒரு பிணம் எடுத்துச் செல்லப்படுகிறது என்றால், அதுவும் காவல்துறையி னுடைய அனுமதி பெறாமல் எடுத்துச் செல்லப்படுகிறது என்றால் அது கொலையா என்று சந்தேகப்படக் கூடிய நிலை நாட்டிலே இன்று இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த அளவுக்கு சட்டம், ஒழுங்கு நாட்டிலே கெட்டுக் கிடக்கிறது.

30 மாதங்களுக்கு மேலாகிறது நமது முதலமைச்சரவர்கள் காவல்துறை பொறுப்பை ஏற்றுக் கொண்டு. அவர் ஏற்றுக் கொண்ட காலம் முதல் எந்தப் போராட்டம் நடந்தாலும் அங்கெல்லாம் பொதுமக்கள் என்ற பெயராலே குண்டர்கள் வந்து தாக்குகிறார்கள். முதலமைச்சர் சொல்லுகின்ற பொது மக்கள், பொது மக்கள் என்ற வார்த்தை சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. அவரிடம் காவல்துறை மட்டுமல்ல, இப்படிப் பட்ட பொதுமக்கள் என்ற ஒரு குண்டர் படையையும் வைத்திருக்கிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. எப்படிப் பட்ட போராட்டம் என்றாலும் இந்தப் பொதுமக்கள் வந்து விடுகிறார்கள். நேற்று முன் தினம் கூட ஒரு சம்பவம் பச்சையப்பன் கல்லூரியிலே நடைபெற்றது. காவல் துறையினர் மாணவர்களைத் தாக்கிய போது குண்டர்களும் வந்து தாக்கி இருக்கிறார்கள், பொது மக்கள் என்ற பெயரால். ஆகவே 20 மாத காலமாக அந்தத் துறையை வகித்து வரும் முதலமைச்சர் அந்தத் துறை மேலும் மோசமடை யாமல் இருக்க காவல் துறையை விட்டு ராஜினாமா செய்ய வேண்டும் என்று மெத்தப் பணிவோடு நான் கேட்டுக்

கொள்ள விரும்புகிறேன். ஒட்டுமொத்தமாக இந்தச் சபையிலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறது. ஒட்டுமொத்தமாக இந்த அரசே ராஜினாமா செய்யக் கூடிய காரண காரியங்கள் எல்லாம் கூற இருக்கின்றார்கள் என்று சொன்னாலும் காவல்துறை பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற முதலமைச்சரவர்கள் அந்தத் துறையை விட்டு ராஜினாமா செய்ய வேண்டும்.

அடுத்து, இங்கே அண்மையிலே மழையும் வெள்ளமும் வந்து தமிழ்நாட்டிலே பல்வேறு மாவட்டங்களில் பெரும் சேதத்தை ஏற்படுத்திச் சென்றது. அங்கே பாதிக்கப்பட்ட பல்வேறு இடங்களிலே நிவாரண உதவிகள் அளிக்கப்படவேயில்லை. சென்னைக்கு மட்டும் 50 கிலோ அரிசி, துணி, பணம் எல்லாம் தருகிறோம் என்று சொல்கிறார்கள். ஏன் சென்னைக்கு மட்டும் கொடுக்க வேண்டும். சென்னையில் நடைபெறும் தேர்தலுக்காக வெளி இடங்களிலே பாதிக்கப்பட்ட மக்கள் உங்களுக்கு வாக்களித்தவர்கள்தானே, அவர்களுக்கு ஏன் கொடுக்கப்படவில்லை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதற்கு முன்பு ஏற்பட்ட வெள்ளத்தின்போது தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுப்பதற்கென்று மத்திய அரசால் கொடுக்கப்பட்ட அரிசியைத்தான் அப்போது சரியாக விநியோகிக்காமல் வைத்திருந்து இன்றைய தினம் சென்னை மக்களுக்கு விநியோகிக்கிறார்கள். அப்படி விநியோகிப்பதிலும் எவ்வளவு ஒழுங்கீனங்கள் நடைபெறுகின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட குறைபாடுகள் பற்றி நாங்கள் மட்டுமல்ல, உங்களை வலிய வந்து ஆதரிக்கின்ற, உங்களை காக்கா பிடிக்கின்ற மெயில் பத்திரிகையிலேகூட கண்டித்து எழுதி இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்....

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) :</u> சீக்கிரம் முடியுங்கள், நேரம் ஆகிவிட்டது.

<u>திரு. து. புருஷோத்தமன் :</u> அந்தப் பத்திரிகையில் 'ஸ்லம் லார்ட்ஸ்' என்று எழுதியிருக்கிறார்கள். குப்பத்து ராஜாக்கள் நிவாரணப்பணியினைத் தட்டிச் சென்றார்கள் என்று எழுதியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முறைகேடுகள், பகல் கொள்ளை நடந்திருக்கிறது. அதைத் தடுக்க பல்வேறு அமைச்சர்களிடம் தொடர்பு கொண்டிருக்கிறேன். பல ஊழல்கள் நடந்திருக்கின்றன என்று எடுத்துச் சொல்லியிருக்கிறேன். டோக்கன் ஒன்றுக்கு ரூ. 10 கேட்டிருக்கிறார்கள் ஆளும் கட்சியினர். ஒவ்வொரு அமைப்பாளரும், 20, 25 டோக்கன்களைப் பெற்றிருக்கிறார்கள். இன்றுகூட அமைப்பாளர்களின் வீடுகளில் பத்து பதினைந்து அரிசி மூட்டைகள் இருப்பதைக் காட்டுவேன். அந்தளவிற்கு அவ்வளவு ஊழல் நடந்திருக்கிறது. இதற்கான காரணம் என்ன ? இந்த நிவாரணப் பணியை எப்படிச் செய்யவேண்டும் என்று $1\frac{1}{2}$ மாதங்களாக சுற்றுலா மாளிகையில் அமைச்சர்கள் கூடுகிறார்கள். கலெக்டர் வருகிறார். தாசில்தார்கள் வருகிறார்கள். மற்றும்





வாரணப் பணிகள் செய்கிற அதிகாரிகள் வருகிறார்கள். எப்டி விநியோகத்தை முறைப்படுத்தவேண்டும் என்று அவர்கள் டிவு செய்யவேண்டும். ஆனால் சென்னையில் உள்ள அமைப்ாளர்களை வைத்துக்கொண்டு, அதிகாரிகளை பக்கத்தில் வைத்க் கொண்டு, இப்படிச் செய்யவேண்டும் இப்படிச் செய்யவேண்ம் என்று அமைப்பாளர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதைப் பான்று உத்தரவு இடும் மோசமான நிலை காரணமாகத்தான் பரும் ஊழல் நடந்திருக்கிறது நிவாரணப் பணியில். நிவாரண தவிகள் விநியோகிக்கும்போது அமைச்சர்கள் வந்து விழாாக நடத்தப்பட்டது. இது அரசு விழாவாகும். அந்த விழாக்களில் வர்கள் உதவிகளைக் கொடுப்பது நியாயம். என்னைப் போன்ற ட்டமன்ற அத்தொகுதி எம்.எல்.ஏ. வராவிட்டாலும் பலயிடங்ளில் அந்தந்தத் தொகுதி அமைப்பாளர்கள் பொதுமக்களுக்கு நியோகம் செய்யும் படுமோசமான முன்மாதிரி இந்த ஆட்சியில் டந்திருக்கிறது. தொகுதி அமைப்பாளர்கள் அரிசி தந்திருக்றார்கள், துணி தந்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது.) டித்துவிடுகிறேன். இந்தளவிற்கு கேவலமானதொரு முறையக் கடைப்பிடித்திருக்கிறார்கள். என் தொகுதியில் கோட்ர்புரத்தில் அரிசி கொடுத்தார்கள். புழுத்த அரிசி கொடுத்தார்ள். சபாநாயகரின் அனுமதி பெற்றிருக்கிறேன், இதை நான் ாட்டவேண்டும் என்று. சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்ளிடம் கூறியிருக்கிறேன். ஆகவே, தங்கள் அனுமதியையும் திர்பார்க்கிறேன். (ஒரு அரிசிப் பொட்டலத்தைக் காண்பித்தார்.) இந்த அளவு மோசமான அரிசியை சைதைத் தொகுதியில் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இதை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் புழு நெளிகிறது. அந்தளவிற்கு மோசமான அரிசியைத் தந்திருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) :</u> அனுமதி பெற்றிருக்கிறீர்களா ? எப்போது ?

<u>திரு. து. புருஷோத்தமன் :</u> இன்று, சபாநாயகர் அவர்களிடத்தில்.

<u>திரு. இ. தமிழரசன் :</u> பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் தற்போது காட்டுகிற இந்த அரிசி இப்போது எங்கேயிருந்தாவது வாங்கிவந்ததா அல்லது அரசால் விநியோகம் செய்யப்பட்டதா ? அப்படியென்றால் எப்போதோ இருந்த புழு இப்போது எப்படி உயிரோடிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

<u>திரு. து. புருஷோத்தமன் :</u> 1967-ல் சேமித்து வைக்கப்பட்ட அரிசியைத் தந்தார்கள். அப்போதிருந்த புழுக்கள் இந்த பத்து நாட்களில் செத்துவிடாது. நீங்கள் கொடுத்த அரிசிதான்,

(மணியடிக்கப்பட்டு திரு. அப்புனு கவுண்டர் பேச அழைக்கப்பட்டார்.)

[1979 பிப்ரவரி 15

[முற்பகல் 11-30]

திரு. கா. அப்புனு கவுண்டர் : மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்...............

திரு. து. புருஷோத்தமன் : பாயின்ட் ஆப் ஆர்டர்........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. பி. எச். பாண்டியன்): இப்போது அதற்கு நேரமில்லை. தயவு செய்து உட்காருங்கள், திரு. அப்புனு கவுண்டர்............

*திரு. கா. அப்புனு கவுண்டர் : கவர்னர் உரை எங்கள் கட்சி உறுப்பினர் தெரிவித்ததுபோல் அரைத்த மாவையே திருப்பியும் அரைப்பதுபோல் இருக்கிறது என்பதை நானும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். கவர்னர் உரையில் 5-வது பக்கத்தில் 10-வது பாராவில், கிராமப்புறத்தில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு தரும் திட்டம், எம்ப்ளாய்மென்ட் கியாரண்டி ஸ்கீம் ஒன்றை ஏற்படுத்தப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி சரியாக விளக்காமல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு வேலை கொடுக்கப்படும், எப்படி கொடுக்கப்படும், இப்போதுள்ள அவல நிலையை மாற்றுவதற்கு என்ன உத்தரவாதம் கொடுக்கப்படுகிறது என்கின்ற விவரங்களை சொல்லவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பட்டு உற்பத்திக்காக இப்போது 4,000 ஏக்கர் எடுத்துக் கொள்வதாகவும், அடுத்த ஆண்டு 8,000 ஏக்கர் எடுத்துக் கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. எங்கள் மாவட்டத்தில்தான் அதிகமான அளவுக்கு பட்டு வளர்ப்புக்கு வாய்ப்பு இருக்கிறது. அதோடு உற்பத்தி செய்கின்ற பட்டை நல்ல விலை கொடுத்து வாங்குவதற்கான மார்க்கட், சென்டர் வசதி இல்லாமல் இருக்கிறது. அரசு செய்யவேண்டியது, இங்கு உற்பத்தி செய்யக்கூடிய பட்டை தாங்களே வாங்கி நல்ல விலைக்கு விற்பனை செய்து உற்பத்தி செய்கின்றவர்களுக்கு தகுந்த விலை கிடைக்க ஏற்பாடு செய்தால் ஒழிய பட்டு உற்பத்தி நல்லமுறையில் வளராது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் மூலமாக மினரல் தொழில் நிறுவனம் ஏற்படுத்தியிருப்பதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில்தான் ' பிளாக் டைமண்ட் ஸ்டோன்ஸ் ' அதிகமாக கிடைக்கிறது. இரண்டு மாதங்களுக்கு முன்னால் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் தொகுதிக்கு வந்து, கறுப்புக்கல் சுரங்கத்தை துவக்கி வைத்தார்கள்.



1979 பிப்ரவரி 15] [திரு. கா. அப்புனு கவுண்டர்]

அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட அந்த விழாவில் நானும் கலந்துகொண்டேன். அப்போது சொன்னேன், இந்தப் பகுதி மக்களுக்கு இந்த சுரங்க வேலையில் வாய்ப்பு கொடுக்கவேண்டும், அப்போதுதான் இங்குள்ள மக்கள் பயன்பெறுவார்கள் என்றும் குறிப்பிட்டேன். ஆனால் இது ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் ஆகியும், சுரங்க வேலையில், பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்குத்தான் வேலை கொடுக்கப்படுகிறது என்கின்ற குற்றச்சாட்டுகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே எங்கள் பகுதி மக்களுக்கு இதில் வேலைவாய்ப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காகிதத் தொழிற்சாலைபற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் நிறைய மூங்கில் கிடைக்கிறது. பாலக்கோடு சர்க்கரை ஆலையிலிருந்து கரும்பை சாறு பிழிந்த பின்னால் ஏராளமான சக்கை கிடைக்கிறது. ஆகவே அங்கு ஒரு காகித ஆலை ஏற்படுத்தவேண்டும், அரசுத் துறை முன்வரவேண்டும் என்று நான் அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 10-வது பக்கத்தில் மேல்நாடு சென்று வரும் தமிழக அறிஞர்களைப் பயன்படுத்தி, அவர்களது அறிவை நல்ல முறையில் பயன்படுத்தி திட்டங்களைச் செயல்படுத்தப்போவதாக குறிப்பு காணப்படுகிறது. என்னென்ன துறைகளில் பயன்படுத்தப்படும் என்று குறிப்பிடாமல் பொதுவாக குறிப்பிட்டிருப்பது நல்லமுறையில் அமையாது என்பதைச் சுட்டிக்காட்டிக்கொள்கிறேன். என்னென்ன டெக்னிக்கல் முறைகளைக் கையாளும் என்கின்ற விவரங்களைச் சுட்டிக்காட்டியிருந்தால் இதிலுள்ள விவரங்களைப் புரிந்து கொள்ளமுடியும், பொதுப்படையாகச் சொல்லப்பட்டிருப்பதால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை.

வெள்ள நிவாரணத்தைப் பொறுத்தவரையில், ரூ. 10 கோடி கொடுத்திருப்பதற்காக மாநில அரசு மத்திய அரசுக்கு பாராட்டுதலை தெரிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

சிவகாசி சம்பவத்தைப் பொறுத்தவரையில், ஒரு பஸ்ஸில் தொழிற்சாலைக்குப் போன சிறுவர்கள் இறந்து போனதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் தகுந்த சட்டங்கள் இருந்தும் அவை அமல்படுத்தப்படவில்லை. சட்டத்தை மீறியிருக்கிறார்கள். இந்த உயிர்களின் பலிக்குக் காரணமாக இருந்தவர்கள்மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்கு. மதுவிலக்குக் கொள்கையை அமல் நடத்துவதைப்பற்றியும் காவல் துறையைப்பற்றியும் 12, 13-ம் பக்கங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

[திரு. கா. அப்புனு கவுண்டர்] [1979 பிப்ரவரி 15

மதுவிலக்கைப் பொறுத்தவரையில், கடுமையான சட்டத்தை அரசு போட்டிருந்தாலும்கூட, அந்தச் சட்டம் அமுல் படுத்தப்படவில்லை என்பதை அரசு கூர்ந்து கவனிக்க வேண்டும். முன்பு ஏதோ மக்கள் மத்தியிலே இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் ஒருவித பயம் இல்லாமல் இருந்தாலும்கூட, இப்போது இந்தச் சட்டம் வந்தவுடன் ஒருவித பயம் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மை. ஆனால், போலீஸ் துறையிலே லஞ்சம் அதிகமாகப் பெருகி வந்துக் கொண்டிருக்கின்றது என்பது உண்மை. ஏனென்றால் போலீசார் சும்மா மிரட்டுகின்றார்கள். எப்படியென்றால் சாராய கேசிலே கைது செய்யப்பட்டால், இப்போது நேரடி தண்டனையிலே இருந்து தப்பிக்க முடியாது. எனவே, லஞ்சம் கொடுத்தால் விட்டுவிடுகிறோம் என்று சொல்லி 200, 300 ரூபாயிலே இருந்து 500 ரூபாய் வரையிலும் லஞ்சம் கேட்கிறார்கள். அப்படித் தவறி பணம் கொடுக்க முடியாதவர்களைத் தான் அவர்கள் கோர்ட்டுக்கு அனுப்பிவைக்கிறார்கள். அந்த நிலை மாறவேண்டுமென்றால், நான் இந்த அரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்வது, மதுவிலக்கை அமுல்படுத்துவதற்கு தனித் துறை அமைக்கவேண்டும். போலீஸ் துறையிலேயிருந்து அதை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்தத் துறைக்கே கொடுத்தால், சரியல்ல. அவர்களால் மற்ற திருட்டுக் குற்றங்களை கண்டுபிடிக்க முடிவதில்லை. அதிலே அவர்களால் கவனம் செலுத்தவும் முடியவில்லை. சாராயம் காய்ச்சுபவர்களிடமிருந்து ஆயிரம் ஆயிரமாக மாதாமாதம் பணம் பெற்றுக் கொண்டு, பங்கு போட்டுக்கொண்டு, நிர்வாகம் நடந்து கொண்டிருக்கிறது. அவர்களால் இந்த மதுவிலக்குத் திட்டத்தை அமுல் நடத்த முடியவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த புதிய மதுவிலக்குச் சட்டத்திலே கோர்ட்டுக்கு அதிகார வரம்பு கொடுப்பதிலே மாற்றப்பட்டிருக்கிறது. முன்பு இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டு கோர்ட்டிலே இந்த வழக்குகள் எல்லாம் நடத்தப்பட்டன. இப்போது முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டு கோர்ட்டுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இதனால் ஒவ்வொரு மாவட்டத்திலும், குறிப்பாக என்னுடைய மாவட்டத்திலே ஒரே ஒரு முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு இருக்கிறது. அந்தக் கோர்ட்டுக்கே இந்த கேஸ்கள் பூராவும் செல்வதனால், அங்கே தேக்க நிலை ஏற்படுகிறது. கேஸ்களை உடனடியாக முடிக்க முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. இந்தச் சட்டத்தை இந்த அரசு நிறைவேற்றும்போது, ஒரு திருத்தம் கொடுத்து, இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டு கோர்ட்டுக்கே இந்த அதிகார வரம்பை கொடுப்பதற்கு சட்ட அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1979 பிப்ரவரி 15] [திரு. கா. அப்புனு கவுண்டர்]

இப்போது இருக்கும் நிலையில், ஒவ்வொரு கேசும் பைசல் ஆவதற்கு ஓராண்டு, இரண்டாண்டுகள் ஆகும். அதுவும் ஏழை மக்கள் இந்த விஷயம் புரியாதவர்கள் இந்தக் குற்றத்திலே ஈடுபட்டு கைது செய்யப்பட்டால் அவர்கள் வழக்கு மன்றத்திற்கும், இந்த கேசை வாதாடுவதற்கும் தங்கள் வாழ்நாளை செலுத்தி செத்துவிட வேண்டிய சூழ்நிலை உருவாகும். எனவே, இந்த மாற்றத்தைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY ; Mr. Speaker, Sir, So far as this suggestion from the Hon. Member is concerned the Government is giving its best attention to this most vital aspect of this matter.

திரு. கா. அப்புனு கவுண்டர் : அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றி. மேலும், 4 கேபிடல் ஏ என்று செக்ஷனிலே புதிதாக ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். குடி போதையிலே ஒருவன் இருந்தால், அதற்கு குறைந்த தண்டனையும் அல்லது அபராதமும் விதிக்கப்படுகிறது. குடித்தால் மூன்று மாத தண்டனையும் ரூ. 1,000 அபராதமும் என்று உள்ளது. ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் அப்படி இருப்பது நியாயமற்றது என்று சொன்னார்கள். 4 (1)ஜே-க்கு இருப்பதைப்போல் 4 கேபிடல் ஏ-க்கும் மூன்று மாதக டுங்காவல் சிறைத்தண்டனையும், அல்லது ஓராயிரம் ரூபாய் அபராதம் என்றும் அளிப்பதற்கு மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் இப்போது சிம்பிள் இம்பிரிசன்மெண்ட் என்றிருந்ததை, ரிகரஸ் இம்பிரிசன்மெண்ட் என்றுதான் மாற்றியிருக்கிறார்கள். எனவே, இதற்கும் ஒரு திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உண்மையிலேயே இந்த தண்டனையை முறைப்படி அமுல்படுத்த வேண்டுமென்றால் சட்டம் ஒழுங்கை நன்கு பராமரிக்க வேண்டும். அதற்குத் தகுந்த வகையிலே சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படவேண்டும்.

அடுத்து, கடைசியாக, சட்டம் ஒழுங்கு முறை என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. அக்டோபர் 23 ஆம் தேதி எதிர்க் கட்சிகள் ஒரு பந்த் செய்தது. அந்த நேரத்திலே, 22 ஆம் தேதி மாலை தர்மபுரி நகரத்திலே ஒரு சர்வகட்சி கூட்டம் நடந்தது. அதிலே எங்கள் கட்சி கலந்துக் கொள்ளவில்லை.

[முற்பகல் 11-40]

கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது போலீசார் இருக்கும் போதே திடீரென்று ஆளும் கட்சி நண்பர்கள் புகுந்து, பேசிக் கொண்டிருந்த எதிர்க்கட்சி நண்பர்களை அடித்து நொறுக்கி,

லைட்டுகளை எல்லாம் அடித்து நொறுக்கியதால் அது பொது மக்கள் மத்தியில் பீதியை உண்டாக்கிவிட்டது. போலீசார் அவர்கள் மீது சரிவர நடவடிக்கை எடுக்காமல் விட்டு விட்டார்கள். இந்தமாதிரி நிலைமைகளை இனியேனும் உருவாக்காமல் இருக்கவேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை.

பந்த் நடந்தபோது கூட அதே நிலைதான். கடைகள் வைத்திருக்கக் கூடியவர்கள் தங்கள் பொருள்களுக்குச் சேதம் ஏற்படும் என்று கருதி கடைகளை மூடியிருக்கலாம். பந்துக்கு ஆதரவாக மூடினார்கள் என்று சொல்ல முடியாது. நீங்கள் இன்று கடைகளைத் திறக்காவிட்டால் எப்போதும் உங்கள் கடைகளைத் திறக்க முடியாது என்று ஆளும் கட்சி நண்பர்கள் ஒவ்வொரு கடைக்காரரையும் பயமுறுத்தினார்கள். பூட்டிய கடைகளை உடைத்துக் கூட நொறுக்கினார்கள். இந்தமாதிரி சூழ்நிலைகளை உருவாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிக்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் வந்து அரசுத் துறையில் ஏற்படுத்தப்பட்ட சுரங்கத்தைத் திறந்து வைத்தார்கள். என்ன காரணத்தாலோ தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் பெயரை அழைப்பிதழில் போடவில்லை. நான் அதைப் பற்றிக் கவலைப்படாமல் விழாவில் கலந்துகொண்டு எங்கள் தொகுதிக்குச் செய்ய வேண்டிய நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

அதற்குப் பின்னால் 31—1—1979 ஆம் தேதியன்று நமது அமைச்சர் ராஜா முகமது அவர்கள் பால் நிறுவன விழாவில் கிருஷ்ணகிரியில் கலந்து கொண்டார்கள். எங்களுக்கெல்லாம் அழைப்பிதழ் வந்தது. என்ன காரணத்தாலோ அந்த அழைப்பிதழில் எங்கள் மாவட்டத்திலுள்ள 10 எம்.எல்.ஏ.-க்கள், 2 எம்.பி.க்களில் ஆளும் கட்சியைச் சேர்ந்த 5 எம்.எல்.ஏக்களின் பெயரும் ஒரு எம்.பி. பெயரும் மட்டும் அச்சடிக்கப்பட்டிருந்தது. எதிர்க்கட்சியைச் சேர்ந்த 5 எம்.எல்.ஏ. க்கள் பெயர்களும் ஒரு எம்.பி. பெயரும் விடப்பட்டிருந்தன. இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் துறையைச் சேர்ந்தவர்களைக் கண்டித்தாரா என்று தெரியவில்லை. எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அரசு விழாக்கள் அரசு விழாவாக அமையாமல் ஆளும் கட்சி விழாவாக அமைந்துவிடக்கூடாது. அமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு திருத்த வேண்டும். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர்களையும் போடுங்கள். இல்லாவிட்டால் யார் பெயரையும் போடாதீர்கள். ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் பெயரை மட்டும் போடுவது என்ன நியாயம்? இந்தமாதிரி நிலைமைகள் இனி உருவகக் கூடாது என்று கூறி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன்.





*திரு. அ. ப. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1—2—1979 ஆம் தேதியன்று நடைபெற்ற கூட்டுக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையைப் பற்றி நான் சார்ந்துள்ள இந்திய தேசீய காங்கிரஸ் கட்சி சார்பாக சில கருத்துக்களை இங்கு கூற முன்வருகிறேன்.

பொதுவாக, ஆளுநர் உரையிலே முதலில் இந்த மாநிலம் உணவுத் துறையில் தன்னிறைவு பெற்றிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது நாம் எல்லாரும் மகிழ்ச்சியடையக்கூடிய ஒன்றுதான். ஆனால் அதே சமயத்திலே அந்த தன்னிறைவைப் பெறக்கூடிய அளவுக்கு உற்பத்தியை அதிகப்படுத்திய விவசாயிகளின் நிலையைப் பற்றி எதுவும் சொல்லக் காணோம்.

நெல்லுக்கு விலையை 78 ரூபாயிலிருந்து 85 ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம் என்று சொல்லுகிறார்களே தவிர இன்றைக்கு ஒரு குவின்டாலுக்கு நெல் உற்பத்தி செய்ய அதற்கு மேலும் செலவாகிறது என்பதைப் புரிந்து கொண்டு சொல்லுகிறார்களா என்று தெரியவில்லை. நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 130 கொடுக்கவேண்டும்.

அதோடு மட்டுமல்ல. நெல் ஒன்றுக்கு மட்டும் விலை நிர்ணயம் செய்து விட்டால் போதாது. இன்னும் பல பொருள்களை விவசாயி உற்பத்தி செய்கிறான். நெல் ஒன்று மட்டும் இருந்தால் உலக வாழ்க்கை நடக்காது. சோளம், கம்பு, ராகி போன்ற தானியங்களுக்கும் ஒரு நியாயமான விலையை நிர்ணயம் செய்ய வேண்டியது மிக மிக அவசியம்.

பணப் பயிர்களான வெங்காயம், புகையிலை, பருத்தி இவைகளைப் பயிரிடுகிறோம். சென்ற ஆண்டு வெங்காயம் 10 மூடை உற்பத்தி செய்ய குறைந்தபட்சம் விவசாயிக்கு 200 ரூபாய்க்குக் குறையாமல் செலவாயிற்று. ஆனால் அந்த பத்து மூடை வெங்காயம் 80 ரூபாய்க்கும் 90 ரூபாய்க்கும் தான் விற்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்றால் அவர்களின் நிலைமை என்ன ஆகும்? அதேமாதிரி புகையிலை, ஒரு செடியை உற்பத்தி செய்வதற்கு குறைந்தபட்சம் 50 காசு ஆகிறது. ஆனால் ஒரு ரூபாய்க்கு 4 செடிகள் விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையிலேதான் விளைவிக்கக் கூடிய பொருட்களுக்கு விலை இல்லாமல் ஆனால் அதே நேரத்திலே தாங்கள் வாங்கி விளைவிற்குப் பயன்படுத்தக்கூடிய பொருட்களான உரம், பூச்சி மருந்து ஆகியவைகளை அதிகமான விலைக்கு வாங்கக் கூடிய நிலையிலே கட்டுபடியாகாத நிலைமை இருக்கிறது. ஏற்கெனவே 10 ஆண்டுக் காலம் பஞ்சம், போன ஆண்டு வெள்ளம், அதனால் சேதம். அதற்குப் பிறகு மழைபெய்து கிணற்றில்

தண்ணீர் இருந்தாலும் கூட நோய் முதலிய பல இன்னல்க
சரியான கண்டுமுதல் கிடைக்கவில்லை. வரக்கூடிய கண்டு
கிடைக்காத நிலையில் அவர்கள் நாசமடையக்கூடியநிலை
கிறது. அதுதான் இன்று கிராமப்புறங்களிலே உள்ள விவ
களின்—ஏழை எளிய விவசாயிகளின் நிலை. இந்த நிலைமை
காரணமாக எப்போதுமே ஊமையாக இருந்தவன் விவச
இன்றைக்கு அவனும் தனக்கு வேண்டியதைக் கேட்க அ
தாங்கமாட்டாது, தனக்கு என்று சங்கம் வைத்துக் கொ
அரசியல்வாதியைப் போல பேசிக்கொண்டு, கோஷம் போ
கூடிய நிலைமைக்கு இந்த அரசுதான் அவர்களைத் தள்ளி
இருக்கிறது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். ஊமை
இருந்த விவசாயக் குடும்பங்கள் இன்றைக்கு பலமுறைகள்
போராட்டங்களிலே ஈடுபட்டு ஜெயில் சென்று, அடிபட்டு, உ
பட்டு இருக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது இ
அரசு.

ஒரு துணி உற்பத்தி செய்யப்படுகிறது என்றால் ஒரு க
நூலுக்கு இன்ன விலை, உற்பத்தி செய்கிற சேலைக்கு இ
விலை என்றெல்லாம் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே நஷ்ட
அடைவதற்கு வழியில்லை. ஆனால் விவசாயத்தைப் பொறு
வரையில் உற்பத்தி செய்கிற பொருள் கடைசியில் கண்டுமுத
னால்தான் நிச்சயம். ஏதாவது பூச்சியோ, நோயோ, வெள்ள
வந்துவிட்டால் விவசாயம் சீரழிந்துவிடும், இப்படிப்பட்ட நி
மைகளை மனத்தில்கொண்டு அவர்கள் உற்பத்தி செய்
பொருட்களுக்கும் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அ
விலைக்கு மேலே விற்றால் அவன் மார்க்கட்டிலே விற்
கொள்ளலாம். இல்லையென்றால் நிர்ணயம் செய்யப்பட
விலைக்கு அரசாங்கமே தகுந்த இடத்திலே விற்பதற்கு ஏற்ப
செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் விவசாயிகளை
காப்பாற்ற முடியும், அவர்களுக்கு உண்மையிலே நன்மை செ
முடியும். வேறு எந்த விதத்திலும் செய்ய முடியாது. இ
றைக்கு விவசாயிகள் சங்கம் சேர்ந்துகொண்டு, வாங்கின கடன
கொடுக்காதே என்றும், மின் கட்டணத்தைக் கொடுக்கா
என்றும் வரிகொடா இயக்கம் செய்ய வேண்டுமென்றும் செ
கிறார்கள். தாங்க முடியாத நிலைமையில்தான் அப்ப
செய்கிறார்களே தவிர கடனைக் கொடுக்கக்கூடாது, வரிக
கட்டக்கூடாது என்பது அவர்களுடைய எண்ணமல்ல.
னுக்கு இருக்கிற இன்னல்கள் அவனுக்கு அந்த நிலைமை
உருவாக்குகிறது. மக்களுடைய மனோ நிலை, 1967
ஆண்டிலே தி.மு.க. ஆட்சிக்கு வந்தது, அவர்கள் சொன்னார்க
ரூபாய்க்கு 5 படி அரிசி போடுவோம், 3 படி அரிசி போடுவோ
பிறகு 1 படி அரிசி போடுவோம் என்று சொன்னார்கள்.
போது நாங்கள் சொன்னோம், அது சாத்தியமில்லாத ஒன்
ஏமாற வேண்டாம் என்று. யார் கேட்டார்கள்? ஆசை
பெரிது. செய்ய முடியுமா, செய்ய முடியாதா, நியாயம
நியாயமில்லையா என்பதையெல்லாம் பார்க்கிற நிலை இல்லா
வகையில் அவனுக்குச் சிரமங்கள் இருந்து கொண்டே இருக்கிற





[முற்பகல் 11-50]

அரிசி கிடைக்கவில்லை, நெல் கிடைக்கவில்லை, உணவு தானி
கள் கிடைக்கவில்லை என்ற நிலையில், நாங்கள் வந்தால் இவை
எல்லாம் கிடைக்கச் செய்வோம் என்று சொன்னதைப்பார்த்து
ர்கள் வந்தால் செய்வார்கள் என்று நினைத்து ஓட்டுப் போட்
ர்கள். அதே நிலைமை இன்றைக்கும் விவசாயிகள் மத்தி
ல உருவாகிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு எங்கோ நூறு
ல்களுக்கு அப்பால் விவசாயச் சங்கக் கூட்டம் நடக்கிறது
றால், விவசாயிகள் லாரி லாரியாகச் செல்கிறார்கள். தங்
டைய வேலைகளையெல்லாம் விட்டுவிட்டுச் செல்லக்கூடிய
த மாதிரியான உணர்வுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.
த அரசாங்கம் அவர்களுடைய கோரிக்கைகளைத் தக்க காலத்
ல பார்த்துச் செய்திருந்தால் இந்த நிலைமை நிச்சயமாக
வாகியிருக்காது. ஆனால் ஏனோதானோ என்று முடிவு
ப்பதில் காலம் தாழ்த்தியதால்தான், இந்த அரசாங்கத்தில்
க்கு நியாயம் கிடைக்காது. ஆகவே போராடித்தான் தீர
ண்டும் என்ற நிலைமைக்கு, கட்டாயத்திற்கு உருவாக்கப்படும்
லைமைகள் வந்திருக்கிறதே தவிர வேறல்ல. ஆகவே, இந்த
சு விவசாயிகளுக்கு நியாயமான வாழ்வளிக்கும் முறையிலே
ர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்குச் செலவாகிற உற்
தி செலவையும் சேர்த்து அதற்குக் கட்டுப்படியான விலை
ள எல்லா பண்டங்களுக்கும் நிர்ணயம் செய்ய வேண்டுமென்று
ா கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது கடன் வாங்கியிருக்கிறோம்.
தக் கடனிலே 5 ஏக்கர்களுக்குக் குறைந்தவர்களுக்குத்தான்
து, பத்து ஏக்கர்களுக்குக் குறைந்தவர்களுக்குத்தான் ரத்து
றெல்லாம் சொல்கிறார்கள். குறைந்தபட்சம் 20 அல்லது
ஏக்கர் வைத்திருக்கும் சம்சாரிகள்கூட கடனுக்காக நிலத்தை
டுவிட்டுச் செல்லும் நிலைமையிருக்கிறது. பெரிய விவ
யிகள் என்று கருதி அவர்களை விட்டுவிட்டால் அவர்கள்
ந்துபோய்ப் பிச்சை எடுக்கும் நிலைமை ஏற்பட்டுவிடும்.
ர்ட்டுக்கு 30 ஏக்கர் 40 ஏக்கர் வைத்துள்ள விவசாயி போக
யாத சூழ்நிலை வரும். அந்த நிலைமைகளைப் பரிசிலனை
ப்து நல்ல முறையிலே இதற்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று
ட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு விஷயம். இப்பொழுது சினிமாத் துறை
ல சினிமாத் தியேட்டர்களைப் பொறுத்தவரையில் கம்பவுண்
சிஸ்டம் கொண்டு வந்துள்ளார்கள். அதை நினைக்கும்
ாழுதுதான், "ஓஹோ, அவர்கள் சேர்ந்த துறையானதினாலே
யம் செய்திருக்கிறார்களோ" என்று விவசாயிகள் கூட
ணக்கும் நிலைமையை உருவாக்கியிருக்கிறது. பல சினிமாத்
யட்டர்களை மூடி விட வேண்டிய நிலையிலே இருந்தவர்கள்,
ர்களுக்குக் கம்பவுண்டிங் சிஸ்டம் கொண்டு வந்து வாழ்

வளிக்கும் வகையிலே சௌகரியம் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதில் எங்களுக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் இதே எண்ணம் விவசாயிகள் பிரச்னையிலும் வர வேண்டாமா என்று தான் கேட்கிறோம்.

இன்னொன்றும் செய்திருக்கிறார்கள், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களில் முன்பு 100 ரூபாய் என்டர்டெயின்மெண்ட் டாக்ஸ் என்றால் வசூல் செய்ததற்காக 10 ரூபாய் எடுத்துக் கொண்டு மீதி 90 ரூபாயைப் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுப்பார்கள். சர்சார்ஜ் என்று 100 ரூபாய் போட்டு அது பஞ்சாயத்து யூனியனுக்குச் சேர்ந்து விடும், அது அரசாங்கத்திற்கு வராது. அவர்கள் சுயமாக இயங்க வேண்டும் என்பதற்காக நம்முடைய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் ஸ்தல ஸ்தாபனங்கள் தன் கையாலேயே அவர்களுடைய செயல்களைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் அன்றைக்குத் தமாஷா வரியை ஏற்படுத்தி ஸ்தல ஸ்தானபங்களுக்கு ஒதுக்கியிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு இந்த கம்பவுண்டிங் முறையைக் கொண்டு வந்த பிறகு 40 சதவீதம் அரசாங்கத்திற்கும், 30 சதவீதம் நகரப் பஞ்சாயத்துக்களுக்கும், 30 சதவீதம் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் கொடுப்பது என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இது நியாயமற்ற ஒன்று. அதிலும் பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்தவரையில்கூட நான் சொல்ல முடியாது. ஆனால் நகரப் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில், சர்க்காரிலேயிருந்து எந்தவிதமான உதவிகளும் நகரப் பஞ்சாயத்துக்களுக்குக் கிடையாது. அது தன் வருமானத்தைக் கொண்டுதான் இயங்க வேண்டும். இந்த நிலைமையில் இருக்கும்பொழுது அந்தந்த வரும் வருமானத்தையும் குறைத்தால் எப்படிப் பஞ்சாயத்துக்கள் இயங்கும்?

அடுத்தாற்போல் இப்பொழுது ஒரு சட்டம் இருக்கிறது, தெரு விளக்குகள்பற்றி பஞ்சாயத்துக்கள் பராமரிப்புச் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அது சாத்தியம் அல்ல. சோக் (Choke) ஒரு பக்கமும், டியூப் லைட் ஒரு பக்கமும் வாங்கிப் போட்டால், இரண்டையும் தனித்தனியாகப் பார்த்தால் நன்றாக இருக்கும், அவைகளை ஒன்றாகச் சேர்க்கும்பொழுது லைட் எரிவதில்லை.

கடைசியாக ஒரேயொரு விஷயத்தைக் கூறி முடித்துவிடுகிறேன். எனக்கு முன் பேசிய ஜனதா கட்சி மாண்புமிகு உறுப்பினர் கூறினார், அமைச்சர்கள் வரும்பொழுது அந்தப் பகுதியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை என்று. அது நூற்றுக்கு நூறு உண்மை. என்னுடைய தொகுதியிலே இந்த நிலைமை நடந்திருக்கிறது. அதோடு நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சரவர்கள் எங்கள் பகுதிக்கு ஒரு சமயம் வந்திருந்தார்கள். அந்த நேரத்தில் நான் சென்னைக்கு சகோதரரின் உடல்நிலை சரியில்லை என்பதால், அமைச்சரைப் பார்ப்பதற்கில்லாமல் வந்து விட்டேன். அவர் பல கூட்டங்களில் சொல்லி இருக்கிறார், ''உங்கள் தொகுதி அங்கத்தினர் சட்டமன்றத்திற்கு வருவது இல்லை, அங்கே பேசுவது இல்லை, அவர்களிடம் பலமுறை என்ன வேண்டுமென்று கேட்டாலும்கூட என்ன என்று சொல்லவில்லை'' என்று சொல்லி இருக்கிறார். ஒரு சட்டமன்ற உறுப்பினரைப்பற்றி இவ்வாறு பொறுப்பு மிக்க அமைச்சர் சொல்வது சரியானதுதானா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரைப் பற்றி தவறாக அவருடைய தொகுதியிலே நான் பேசியதாக அவர் சொல்லியிருக்கிறார். அவருடைய மனம் புண்படுகின்ற அளவிலே நான் எந்த வார்த்தையும் உபயோகிக்கவில்லை. அப்படி உபயோகித்ததாக யாராவது சொல்லியிருந்தாலும் தயவு செய்து நம்ப வேண்டாமென்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. அ. ப. பழனிய்ப்பன் : மெத்த சந்தோஷம். நான் கேள்விப்பட்டதைச் சொன்னேன். (மணியடித்து அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்திலே குறிப்பாக விவசாயப் பிரச்னையானது மிகப் பெரும் போராட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் விவசாயப் பிரச்னையை இந்த ஆளுநர் உரையில் முன்னதாக வைத்து அதற்கு முக்கியத்துவம் தந்ததற்காக இந்த அரசைப் பாராட்டுகிறோம். அதே நேரத்திலே எங்களுடைய உணர்வுகளை இங்கே வைக்காமலிருக்க முடியவில்லை. காரணம் ரூபாய் 78-லிருந்து ரூபாய் 89 வரைதான் நெல்லுக்கு விலை நிர்ணயம் என்று குறிப்பிட்டிருப்பது மிகவும் வேதனைக்குரியதாகும். காரணம், முதலமைச்சரவர்கள் உணவு அமைச்சர்கள் மாநாட்டிலே கலந்து கொள்ளும் பொழுது தமிழகத்திலே நெல்லுக்கு ரூபாய் 120 நிர்ணயிக்க வேண்டுமென்று சொன்னார்கள். உழைப்பாளர் கட்சியின் சார்பிலே நாங்கள் கேட்டுக்கொள்வது, கோதுமை விலையைப் போல் நெல்லுக்கு ரூபாய் 120 நிர்ணயிக்க வேண்டும். இல்லாவிட்டால், மத்திய அமைச்சர் பர்னாலா அவர்கள் தமிழகத்திற்கு வருகை தரும்போது கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்துவோம் என்று சொன்னதை மீண்டும் இங்கே நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

நெல்லின் விலை குறைந்திருக்கிறது, கரும்பின் விலை குறைந்திருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பாக அமைச்சரவர்கள் விவசாயிகளைக் கூப்பிட்டு பேசியிருக்கிறார். ஆம்பூர், திருப்பத்தூர் சர்க்கரை ஆலைகளிலே கரும்புக்குக் கட்டுபடியாகக்கூடிய

[திரு. ரா. மார்க்கபந்து] [1979 பிப்ரவரி 15

விலை நிர்ணயிக்கப்படவில்லையென்ற விவசாயிகளின் மனக் கூற்றின் காரணமாக அந்த ஆலைகள் மூடப்பட்டிருப்பது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், அந்தப் பகுதி மக்களுக்கு கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய மக்களுக்கு கட்டுபடியாகக்கூடிய விலை கிடைக்கவில்லையென்பதை ஒட்டு மொத்தமாகக் காட்டுகிறது. ஆனால், விவசாயிகள்தான் இப்படி கஷ்டப்படுகிறார்களே தவிர, மற்ற துறையிலே உள்ளவர்கள் மிகவும் சந்தோஷமாக இருந்து அவர்கள் உற்பத்தி செய்கிற பொருளுக்கு விலை நிர்ணயிக்கிற உரிமையை அவர்களே வைத்திருக்கும்போது, விவசாய மக்களுக்கு மட்டும் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விலையை நிர்ணயம் செய்யும் உரிமை இல்லாமலிருப்பது ஏன் என்று கேட்கிறேன்.

குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்திலே பாலார் பேசின் ரூல்ஸ் என்ற ஒன்றை வைத்துக்கொண்டு, அதற்கு கிளியரன்ஸ் வேண்டுமென்று 7½ ஹார்ஸ் பவர் வேண்டுமென்று சொல்கிறார்கள். ஏற்கெனவே 5 ஹார்ஸ் பவர் வைத்துக்கொண்டு மேற்கொண்டு 3 ஹார்ஸ் பவர் வைக்க மனு செய்தால் லைசன்ஸ் பெற முடியாத நிலைமை இருக்கிறது.

அடுத்து, சர்வீஸ் கமிஷனிலே ஒரு தேர்வு நடத்தியிருக்கிறார்கள். 10(ஏ)(1) விதிப்படி நியமிக்கப்பட்டு 10 ஆண்டுகளாக வேலை செய்தவர்கள் கமிஷன் நடத்திய குவாலிபையிங் டெஸ்ட் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1, 1-1/2 ஆண்டுகளாகிவிட்டது. இன்று வரை அவர்களுக்கு வேலை உத்தரவாதம் கிடைக்கவில்லை யென்ற மனக் கொதிப்பு வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் மத்தியிலேயிருக்கிறது. அதையும் உடனடியாக இந்த அரசாங்கம் ஏற்று, இந்த அரசின் மேல் நம்பிக்கைவருகிற வகையிலே, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையாவது வேலையில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பி. டி. ஆசிரியர்களைப் பற்றி சொல்லும்போது, எல்லோருக்கும் வேலை வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லிக்கொண்டே சிலரை விட்டுவிடுகின்ற அச்சமும் இருக்கிறது. யாரையும் விடாமல், ஏற்கெனவே ஆசிரியர் பணியிலே வேலை செய்த எல்லோருக்கும் வேலை உத்தரவாதம்தரவேண்டும்.

யூனியன் இன்ஜினியர் என்று இருக்கிறார்களே, அவர்கள் ஆரம்பத்திலே ஒரு வேலை வாய்ப்பிலே நுழைந்தால், கடைசி வரைக்கும் அதே நிலையிலே ரிட்டையர் ஆகவேண்டும் என்ற நிலையிருக்கிறது. ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே பி. இ. படித்துவிட்டு வந்த இன்ஜினியர்களுக்கு வேலை வாய்ப்புகள் தரப்பட்டிருக்கின்றன. அதைக் கருத்திலேகொண்டு வேலை வாய்ப்பிலே வித்தியாசம் காட்ட வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



1979 பிப்ரவரி 15] [திரு. ரா. மார்க்கபந்து]

வேதனையான சம்பவம் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பலவிதமான கருத்துக்கள் கவர்னர் உரையிலே இருக்கின்றன. ஆனால், பின்தங்கிய மக்களுக்காக, எதுவும் குறிப்பில்லையென்ற குற்றச்சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன். பின் தங்கியோர் பட்டியல் இப்பொழுது பெரிதாக்கப்பட்டு, முற்போக்கு சமுதாயம் என்று சொல்பவர்கள் மைனாரிட்டியாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 51 சதவிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பின் தங்கிய சமுதாயத்தினருக்கு 31 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பின்தங்கிய சமுதாயத்திலே முன்னேறிய சமுதாயம் என்ற கிளாஸிஃபிகேஷன் செய்யாத வகையிலே, இருப்பதால் மிகவும் பின் தங்கியோர் பட்டியல் ஒன்றை அங்கீகரித்து அவர்களுக்கு 15 சதவீதம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[நண்பகல் 12—00]

தகுதி, திறமை என்ற அடிப்படையில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிற நிலைமை வரவேற்கக்கூடியதுதான். அதே நேரத்தில் பொருளாதாரத் துறையிலும், மற்றத் துறையிலும் பின்தங்கியவர்களுக்கு எந்த வகையிலே இந்த அரசு உத்திரவாதம் அளிக்கிறது என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் 100 மார்க்குகளை நிர்ணயம் செய்கிறீர்கள் என்று சொன்னால், கிராமப் பகுதியிலே இருந்து வருகின்றவர்களுக்கு 75 மார்க்குகள் நிர்ணயம் செய்யுங்கள். அதன் மூலமாக கிராமப்புற மாணவர்களுக்கு பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைக்க வாய்ப்பிருக்கும். அதைவிட்டு தகுதி, திறமை அடிப்படையில் தேர்ந்தெடுப்போம் என்று சொல்வது வேதனையாக இருக்கிறது. சென்ற ஆண்டு வடார்க்காடு மாவட்டத்தில் 7 அல்லது 13 பேர்களுக்குத்தான் கிடைத்தது. ஆனால் கோவை மாவட்டத்தில் 80, 90 பேர்களுக்கு கிடைத்தது. செங்கல்பட்டு மாவட்டத்திற்கு 3, 4, பேர்கள் என்று சொன்னால் இது எந்த விகிதத்திலே இருக்க முடியும். ஆகவே, மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, மாவட்ட வாரியாக, There cannot be any discrimination by alloting certain percentage of seats for each district என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஆண்டை பெரியார் நூற்றாண்டு விழாவாக கொண்டாடுகிறோம். அதே நேரத்தில் பெரியாரின் உயிர்மூச்சு கொள்கையாக இருக்கின்ற வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை பற்றி இதற்கு முன்னாலே அவையிலே உள்ளவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். எனவே, வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கையை நீங்கள் அமல் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பெரியாரின் உயிர் மூச்சாக இருக்கிற கம்யூனல் ஜி.ஓ.வை அமல் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ரா. மார்க்கபந்து] [1979 பிப்ரவரி 15

அடுத்து அரிசனங்களுக்குக் கடன் கொடுக்கிற நிலைமையைப் பற்றிச் சொன்னார்கள். கிராமப் பகுதியிலே இருக்கிற அரிசனங்கள் வீடு கட்டிக்கொண்டவர்கள் அடிமனை சொந்தமாக இல்லாத காரணத்தால், அதற்கான தஸ்தாவேஜிகள் இல்லாத காரணத்தால் பாங்குகளிலே கடன் கேட்டால், பாங்குகள் கடன் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. எனவே, அவர்களுக்கு உடனடியாக அந்த மனையை, அது கிராம நத்தமாக இருந்தாலும் அதை சொந்தமாக்கிக் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து டிஸ்டிரிக்டிலே அரிசன் வெல்பேர் தாசில்தார் இருக்கிறார். அவருக்கு நிரந்தரமாக பணியாளர்கள் கிடையாது. அதனாலே அரசாங்கத்திலே இருந்து ஒதுக்கப்படுகின்ற பணம் செலவிடப்படாமல் மீண்டும் திருப்பி கட்ட வேண்டிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. அரிசனங்களுக்கு என்னென்னமோ செய்கிறோம் என்று சொல்லிவிட்டு, அரிசன இலாகாவில் நிரந்தரமான பணியாளர்கள் இல்லை. அத்தகைய நிலைமையை இந்த அரசு தயவு செய்து கடைபிடிக்கக்கூடாது. என்று கேட்டுக் கொண்டு நிரந்தரமான பணியாளர்களைப் போடுவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மலை ஜாதி மக்கள் மேம்பாட்டுத் திட்டம். எங்கள் மாவட்டத்தில் ஜவ்வாது மலை, ஏலகிரி மலை இந்த இடங்களில் 60,000 மக்கள் வாழ்கிறார்கள். 15 எம். எல். ஏக்கள் இதில் வரும்படியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு எம்.எல்.ஏ. யும் இந்த மலை ஜாதியினரைப் போய்ப் பார்க்கவில்லை. நான் கூட டி லிமிடேஷன் கமிஷன் முன்னாலே சொன்னேன், சேந்தமங்கலம், ஏற்காடு போன்று இந்த 3 பகுதியையும் இணைத்து ஒரு தனி தொகுதி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

சென்ற கூட்டத்திலே சொன்னார்கள். சந்தனத் தொழிற்சாலை ஆரம்பிக்கப் போகிறோம் என்று. இப்போது அது பெரிய தொழிற்சாலை என்ற அளவிலே வருகின்றது. எனவே வடார்க்காடு மாவட்டத்திற்கு வரும் வாய்ப்பில்லை என்று கேள்விப் படுகிறேன். செண்பகத் தோப்பு பகுதியிலே காகித தொழிற்சாலை ஆரம்பிப்பதாகச் சொன்னார்கள். அதுவும் நடக்கவில்லை. நான் இந்த அரசை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய வடாற்காடு மாவட்டத்தை தயவு செய்து அனாதை மாவட்டமாக ஆக்கி விடாதீர்கள். ஏதாவது ஒன்றாவது எங்கள் மாவட்டத்திற்குச் செய்ய வேண்டும். நான்கு மாதத்திற்கு முன் அமைச்சர் குழந்தைவேலு அவர்களை எங்கள் மாவட்டத்தில் உள்ள அணைக்கட்டு என்ற இடத்திற்கு அழைத்துச் சென்று அந்தப் பகுதியில் போடப்பட்டுள்ள 2 கோடி ரூபாய் திட்டத்தின் மூலமாக 10,000 ஏக்கர் நிலங்கள் பயன்படக்கூடிய நிலையில் உள்ள திட்டத்தை அமல் படுத்த வேண்டும் என்று



1979 பிப்ரவரி 15] [திரு. ரா. மார்க்கபந்து]

கேட்டுக் கொண்டேன். அவரும் மனம் திறந்து அதை நிறைவேற்றித் தருவதாக வாக்களித்தார்கள். அவர் சொன்னபடி செய்து தருவார் என்ற நம்பிக்கையோடு அந்த பிரச்சினையை அவர்களிடத்தில் விட்டு விடுகிறேன்.

அடுத்தபடியாக மொழிப் பிரச்னை பற்றி குறிப்பிட விரும்புகிறேன். மொழிப் பிரச்னை வருகிறபோது நான் குறிப்பாகச் சொல்ல விரும்புவது, சில நாட்களுக்கு முன்பு அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த ஒரு கூட்டத்தில் இந்தித் திணிப்பை வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஜனதா கட்சியைச் சேர்ந்த திரு. ஜேம்ஸ் அவர்களும் தமிழகத்தைச் சேர்ந்த ஜனதா கட்சியைச் சேர்ந்த அமைச்சர் திரு. பா. ரா. அவர்கள் இந்தி தமிழகத்து மக்கள் மீது திணிக்கப்பட்டால் ராஜினாமா செய்வார்கள் என்று சொன்னார். ஆனால் நேற்றைக்கு இங்கே பேசிய ஜெபமணி அவர்கள் இந்தி படிப்பதில் தவறு இல்லை என்று இந்தி திணிப்பிற்கு ஆதரவு தருகிற அளவில் பேசியிருக்கிறார்கள்.

திரு. ர. ஜெபமணி : சபாநாயகர் அவர்களே, என் பேச்சை நண்பர் மார்க்கபந்து அவர்கள் சபையில் இருந்து கேட்கவில்லை. கேட்டு இருந்தால் திரு. ஜேம்ஸ் அவர்கள் சொல்லியதை இங்கே குறிப்பிட்டு இருக்கமாட்டார்கள். இந்தி திணிப்பு எந்த விதத்தில் வந்தாலும் அதை மார்க்கபந்து அவர்களை விட துணிச்சலாக நான் எதிர்ப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தி படிக்க வேண்டும் என்று சொல்வது திணிப்புக்கு ஆதரவு தருவது அல்ல. பள்ளிக்கூடத்தில் இந்தி சொல்லிக் கொடுக்கிறபோது படித்தால் என்ன என்று நான் சொன்னேன்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, அவர் பேசிய தொனி இந்தித் திணிப்பிற்கு நியாயம் கற்பிப்பதுபோல் இருந்தது. ஆகவே தான் திரு. ஜேம்ஸ் அவர்கள் சொல்லிய கருத்துக்கும். திரு. ஜெபமணி சொல்லிய கருத்துக்கும் வித்தியாசம் இருக்கிறது என்று மக்கள் தவறாகப் புரிந்து கொண்டு விடக்கூடாது என்கிற நல்லெண்ணத்தோடுதான் நான் அதைக் குறிப்பிட்டேன்.

திரு. ர. ஜெபமணி : இந்த குழப்பமான நிலைதான் உங்களை திசை திருப்பி விட்டு இருக்கிறது.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, கடைசியாக நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். யாரும் மனது புண்படும்படியாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று எச்சரிக்கையோடு சொல்லிக் கொள்கிறேன். வக்ப்போர்ட் இருக்கிறது. அதிலே குறிப்பாக 73 கேஸ்கள்—வக்ப் சம்பந்தப்பட்ட சொத்துக்களை மற்றவர்களுக்கு பட்டா வழங்கினார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் அதிகார துஷ்பிரயோகத்தின்

காரணமாக என்று இருக்கிறது. அந்தக் கேஸ்களில் ''ப்ராசிகியூஷன் இன் வேரியஸ் ஸ்டேஜஸ் ஆர் பெண்டிங் இந்தி கோர்ட்'' என்ற முறையில் இருக்கிறது. சர்வே எண்கள் 138/61-ல் 8 ஏக்கர் 57 செண்ட், 129/21-ல் 2.74 செண்ட் (கிராமத்தின் பெயரை பின்னர் தெரிவிக்கிறேன்). ஆகியவை இர்ரெகுலராக மாற்றப்பட்டு இருக்கிறது என்ற அளவில் நடவடிக்கைகள் பெண்டிங்காக இருக்கிறது. ஆகவே, அந்தக் கேஸ்களை கவனிக்க தனியாக ஒரு கோர்ட் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல இடங்களில் நல்ல வெல்த் உள்ளவர்கள் புறம்போக்கு நிலங்களை பட்டா போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். பலரிடம் உள்ள அதிகபட்ச நிலங்களை அரசு எடுத்துக் நிலம் இல்லாதவர்களுக்குத் தருவதுபோல், இந்த வெல்தி பட்டாதார்கள்-புறம்போக்கு நிலத்தை பட்டா செய்து கொண்டு இருப்பதையும் அரசே மேற்கொண்டு, அதனை கிராமத்தில் உள்ள நிலமல்லாத ஏழைகளுக்கு, நிலமற்ற விவசாயிகளுக்கு கொடுக்க இந்த அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-10].

போகின்ற கிராமங்களில் எல்லாம் சரியாக பாதை வசதி இல்லை என்று சொல்கிறார்கள். குறிப்பாக சுடுகாட்டுக்குச் செல்ல வசதியான பாதை இல்லை என்ற பிரச்சினை இப்போது பெரும் பிரச்சினையாக தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்து கொண்டிருக்கிறது; அது சில இடங்களில் கலவரமாகவும் மூண்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் 5, 6 கிராமங்களுக்குச் சுடுகாட்டுக்குச் செல்ல பாதை இல்லை என்ற காரணத்தால் அங்கு நிரந்தரமாக சண்டை இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால் அதை இந்த அரசு மனதிலே கொண்டு எந்த எந்த கிராமத்திற்கு சுடுகாட்டுப் பாதை இல்லையோ, அங்கெல்லாம் 'லான்ட் அக்விசிஷன் ஆக்ட்' படி கட்டாயம் நிலத்தை எடுத்துக் கொள்ளும் சட்டத்தின் மூலம் நிலத்தை எடுத்து, சுடுகாட்டுப்பாதை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பட்டாக்களை வழங்கும்போது 'அன் அப்ஜக்ஷனபிள் கிளாசிபிகேஷன்' என்று சொல்கிறார்கள். ஆனால் டெக்னிக்கல் அப்ஜெக்ஷன் இருப்பதால் கொடுக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். பல்லாண்டு காலமாக ஒரு நிலத்திலே இருந்தாலும் 'டெக்னிக்கல் அப்ஜக்ஷன்' வருகிற காரணத்தால் பட்டா வழங்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். அதை பரிசீலனை செய்து, எங்கே நிலமற்ற ஏழைகள் வறுமையினால் வடுக்கிறார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க இந்த தமிழக அரசு நல்ல முறையில் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்



இன்னொரு வேண்டுகோள். இன்றைக்கு வேலையற்றோர் எண்ணிக்கை தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கிறது. ஆகையால் இந்த வேலை வாய்ப்பளிக்கும் திட்டத்தை மூன்று கட்டமாகப் பிரித்து வழங்க இருக்கிறோம் என்று அமைச்சர் இராஜா முகமது அவர்கள் எங்கள் தொகுதிக்கு வந்திருந்தபோது சொன்னார்கள். அப்படி தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தும்போது செல்வாக்குப் பெற்ற எம்.எல்.ஏ.க்கள் தொகுதி என்ற முறையிலோ அல்லது அமைச்சர்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தியோ ஒரு சில இடங்களில் மட்டும் சிறு தொழில் அமைப்புகளை ஏற்படுத்திவிடாமல் தமிழ்நாடு பூராவும் பரவலாக ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு தொகுதிக்கும் இவ்வளவு என்று பிரித்துக் கொள்ள வேண்டும். 234 தொகுதிகள் இருக்கின்றன. எல்லா இடங்களிலும் வேலையற்றோர் எண்ணிக்கை ஏராளமாக இருக்கிறது. ஆகவே, இதிலே செல்வாக்கையோ அதிகாரத்தையோ பயன்படுத்தாமல் சமமான முறையில் எல்லா இடங்களிலும் பரவலாக தொழிற்கூடங்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது</u>: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள் சிட்கோ மூலம் அமைக்கப்பட இருக்கிற சிறு தொழில் கூடங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். இதில் தொகுதி அடிப்படையிலோ அல்லது பஞ்சாயத்து அடிப்படையிலோ இடங்களைத் தேர்ந்தெடுப்பதில்லை. ''ரிசோர்ஸ் பேஸ்ட் இன்டஸ்ட்ரீஸ்'' என்ற அடிப்படையில் ஆங்காங்கே கிடைக்கின்ற மூலப் பொருட்களை வைத்து, என்ன தொழிலை நடத்த வாய்ப்பு இருக்கிறதோ அதைத் தொடங்குவதற்குத்தான் முயற்சி செய்யப்படும். அது அல்லாமல் அமைச்சர்கள் அதிகாரமோ, சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வாக்கோ தலையிடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ரா. மார்க்கபந்து</u>: சிறு தொழில் கூடங்களை ஒரு குறிப்பிட்ட இடங்களில் மட்டும் அமைத்து விடாமல் பரவலாக அமைக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அந்தந்தப் பகுதிகளில் என்னென்ன மூலப் பொருட்கள் கிடைக்கின்றனவோ அதன் அடிப்படையிலே தொழில் கூடங்களை அமைக்க வேண்டும். அப்படி அமைக்கப்படுகின்ற தொழிற்கூடங்கள் நிரந்தரமானவையாக இருக்க வேண்டும். இந்தத் தொழிலை இந்த சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கொண்டு வந்தார் என்று நிரந்தரமாக மக்கள் சொல்லக் கூடிய அளவில் அமைக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது தமிழ் நாட்டிலே நியாயமான ஒரு அரசு நடக்கிறது என்ற நம்பிக்கை இந்த நாட்டு மக்களுக்கு ஏற்படும். அந்த வகையில் there may be uniform distribution of small-scale industries in all constituencies, என்று சொல்லி, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன்-வணக்கம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தில் என்னுடைய கருத்தையும் இணைத்துக்கொள்ள நான் எழுந்திருக்கிறேன்.

இங்கே பேசிய, காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசிய திரு. இராமசாமி அவர்கள் இந்த உரையில் ஒன்றும் இல்லை ; உப்பும் இல்லை, சப்பும் இல்லை, வெறும் சக்கைதான் இருக்கிறது எனறு சொன்னார்கள். நான் சொல்கிறேன், இதில் சக்கை கூட இல்லை, சக்கை இருந்தால் காகிதம், கார்டுபோர்டு செய்யலாம். ஆகவே, இதிலே சக்கை கூட இல்லை. ஆனால் பல்லவி, அனுபல்லவி இருக்கிறது ; முகாரி ராகம் இருக்கிறது;

கழிந்த இரண்டாண்டு காலமாக என்ன சொல்லிக்கொண்டிருக்கிறார்களோ அதையேதான் இதிலும் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆட்சியின் தொடக்கத்தில் சொன்னதைத்தான் இப்போதும், இரண்டு ஆண்டுகளாகியும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். புதிதாக எங்கள் கொள்கை எதுவும் இல்லை. நாங்கள் ஏற்கனவே சொன்னதைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதை இந்த அறிக்கையில் தெளிவுபடுத்தியதற்காக வேண்டுமானால் இந்த ஆட்சிக்கு நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு கவர்னர் அவர்களுடைய உரையிலே பல விஷயங்களைச் செய்யப் போகிறோம், செய்யப் போகிறோம் என்று திருப்பித் திருப்பிச் சொல்கிற அதே நேரத்தில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இது கவர்னருடைய உரையின் மீதான விவாதம் என்ற காரணத்தாலே நான் ஒரு விஷயத்தை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன.

1976–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30–ஆம் தேதி காலையிலே அப்போதைய கவர்னராக இருந்த மேதகு திரு. கே.கே. ஷா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, செம்மையாக நடைபெறுகிறது என்று 1976–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30 ஆம் தேதி காலையிலே சொல்கிறார். ஆனால் 31–ஆம் தேதி மாலையிலே மத்திய அரசினுடைய உள்துறை அமைச்சகம் திராவிட முன்னேற்றக் கழக அரசு விலக்கப்படுகிறது என்ற அறிவிப்பைத் தந்தது. அதோடு மட்டுமல்ல அதற்கான காரண காரியங்களைச் சொல்லும்போது அந்த ஆட்சியிலே லஞ்சம் மலிந்து விட்டது.

"The Constitutional machinery has completely broken down. There is corruption andGovernor has reported the same to the Central Government and as such the Central Government has no other



alternative except to dismiss the Ministry headed by Dr. Kalaignar Karunanidhi and to dissolve the Assembly of Tamil Nadu.

என்று சொல்கிறது. 30-ம் தேதி காலையிலே கவர்னர் அவர்கள் ஆட்சி செம்மையாக நடைபெறுகிறது என்று சொல்கிறார். மறுநாள் மாலையிலே இப்படிப்பட்ட அறிவிப்பு வருகிறது. அந்த அறிவிப்பிலே அமைச்சரவை விட்டுக்கு அனுப்பப்படுகிறது. ஆனால் இன்றையதினம் தமிழகத்தினுடைய கவர்னராக இருப்பவர் மேதகு ஆளுநர் பட்வாரி அவர்கள். அவர் இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு பொது நிகழ்ச்சியிலே பேசும்போது ஊழல் தாண்டவம் ஆடுகிறது, லஞ்சம் தாண்டவம் ஆடுகிறது என்று சொன்னார்கள். அதற்கு உடனடியாக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மறுப்பு தந்து ஒரு பதிலைத் தந்திருக்க வேண்டும். அப்படித் தரவில்லை. அதுமட்டுமல்ல, முதலமைச்சர் இல்லாத இடத்திலே தான் இப்படிப் பேசினார் எனறாலும் அண்மையிலே நடந்த கலெக்டர்கள் மாநாட்டிலேகூட முதலமைச்சரை வைத்துக்கொண்டு, மற்ற அமைச்சர்களை வைத்துக்கொண்டு, கலெக்டர்களை வைத்துக்கொண்டு, துறை அதிகாரிகளை வைத்துக்கொண்டு, நிர்வாகத்திலே லஞ்சம் தாண்டவம் ஆடுகிறது, நிர்வாகத்திலே தலையீடு இருக்கிறது. நிர்வாகச் சீர்கேடுகள் இருக்கின்றன என்று கவர்னர் பெருமகனார் அவர்கள் பேசி இருக்கிறார்கள். அந்தப் பேச்சிற்கு இந்த அரசாங்கத்தின் சார்பாக, முதலமைச்சரவர்களின் சார்பாக எந்த மறுப்பும் தரப்படவில்லை. அதே கவர்னர்தான இங்கே உரை நிகழ்த்தி இருக்கிறார்கள். அந்தக் கவர்னர் இந்த மாநிலத்தினுடைய

The constitutional head of Government has charged that there is corruption rampant throughout top to bottom and there has been mal-administration and if in spite of that, this Government subsists in office, it is quite contrary to the very essence of democracy

என்ற அளவிலே இன்றைக்கு நான் கேட்கிறேன். முதலமைச்சரவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள். நான் மிக வேதனையோடு சொல்கிறேன. இப்போது ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது விவாதம் நடந்துக் கொண்டிருக்கிறது. ஆனால் முதலமைச்சரோ அவைக்கு வருவது இல்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவையையே அவமதிக்கின்ற வகையில் முதலமைச்சரவர்கள் பேரவைக்கே வருவதில்லை. இந்தப் பேரவையில் விவாதங்கள் நடைபெறுகின்றன. குற்றச்சாட்டுகள் சொல்லப்படுகின்றன. ஆலோசனைகள் சொல்லப்படுகின்றன. இவைகளை எல்லாம் கேட்பதற்கு நான் வர மாட்டேன் என்று வேறு இடத்திலே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவர் தனது ஆபீஸிலே மாடியிலே உட்கார்ந்துகொண்டிருப்பது,

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 பிப்ரவரி 15

இந்த அவைக்கு வர மறுப்பது இந்த அவையையே அவமதிப்பதாக இருக்கிறது. அதுமட்டுமல்ல, மேதகு ஆளுநர் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டுகளுக்கு முறையான பதிலைச் சொல்லாத நிலையில் என்ன நடவ்டிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கையை எடுக்க வேண்டிய கடமை மேதகு ஆளுநருக்கும் மத்திய அரசிற்கும் உண்டு என்ற வகையிலே நான் அவர்களைக் கேட்டுக்கொள்வேன்.

If the Governor does not act promptly and according to necessity of time, then he will be committing a mistake of failing in his constitutional duty

என்று கவர்னர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12-20]

இல்லாவிட்டால் இன்றைக்கு நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, கிராம உத்தியோக உத்தரவாதத்திட்டம் என்ற ஒரு திட்டம். இத் திட்டம், கேட்பதற்கு நல்ல திட்டம்தான். கிராமங்களில் வேலை வாய்ப்பு இல்லை. படித்தவர்களுக்கு வேலை இல்லை. படிக்காதவர்களுக்கும் வேலை இல்லை. விவசாயிகளுக்கும் வேலை இல்லை. தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்கும் வேலையில்லை. யாருக்கும் எந்த வேலையும் இல்லை. ஆனால் அராஜகம் நடத்துகிறவர்களுக்கு மட்டும் இந்த அரசாங்கம் அதிகமாக வேலை கொடுத்துக் கொண்டிருக்கிறது. அது வேறு விஷயம், வனமுறையாளர்களுக்கு வேலை கொடுத்துக் கொண்டிருக்கிறது. அது வேறு விஷயம். நாட்டில் கொலை செய்யவேண்டும். நாட்டில் கொள்ளை அடிக்க வேண்டும். அதுவும் மக்களால் மதிக்கப்படுகிற ஏழு இலட்சம் மக்களின் பிரதிநிதியாக இருந்த எனது அருமை நண்பர் திரு. முருகையன் அவர்கள் கொலை செய்யப்படுவதற்கு இந்த நாட்டில் அராஜகவாதிகளுக்கு வேலை கொடுத்துக்கொண்டு, அராஜகவாதிகள் யார் என்று கண்டுபிடிக்க தெம்பில்லாமல், திராணியில்லாமல், மனம் இல்லாமல் இந்த அரசு இன்றைக்கும் கூட ஒரு மெத்தனத்தைக் காட்டக் கூடிய வகையில் அராஜகவாதிகளுக்கு வேலை கொடுத்துக்கொண்டிருக்கிற இந்த அரசு மற்றவர்களுக்கு வேலை கொடுக்கிறோம் என்று சொல்கிற திட்டம்—அவர்கள் எதற்காகச் சொன்னாலும் பரவாயில்லை—பற்றி இந்த உரையில் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

Employment guarantee scheme that has been propounded by this benign Government, which is closing its eyes for all problems of the people of the State, has come out with concrete proposal that will provide



1979 பிப்ரவர் 15] [திரு. எம். ஏ. லத்தீப்]

employment to all the rural folk under the Employment Guarantee Scheme. I do not know what you mean by this Employment Guarantee Scheme in rural areas, whether you have sources of employment, whether you have the economic wherewithall and economic growth to be in a position to say that you will give employment gurantee to the rural folk—I say by these utterances you are only trying to lull the House with the impression that this Government is going to act and to give more employment to the people ; it is only to confuse the people.

இதெல்லாம் தவிர வேறு என்ன இருக்கிறது என்று இந்த நேரத்தில் நான் கேட்க ஆசைப்படுகிறேன். அதைப் பற்றி நான் ஒரு குறிப்பு கூற விரும்புகிறேன். நான் சொல்லவில்லை. பொருளாதார வளர்ச்சிக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும்போது என்னென்ன திட்டங்களின் அடிப்படையில் வேலை வாய்ப்பு கொடுக்கப்போகிறீர்கள்? மரங்களிலிருந்து காய் பிய்த்திக் கொள்வது மாதிரியா இது. மரத்திலிருந்து இலையைப் பிடுங்கிக் கொள்வது போல் வேலைகளைப் பிடுங்கிக் கொள்ளப் போகிறீர்களா?

How many industries you are going to have in Tamil Nadu ? What are the sources of employment ?

அப்படிச் சொல்லியிருந்தால் நாங்கள் மகிழ்ச்சியடைந்திருப்போம். 'ஹிந்து' என்ன எழுதுகிறது.

There was an increase from 9·3 million to 10·9 million between the end of 1975 and end of 1977 in the number of jobless registered with the employment exchanges in the country but in Tamil Nadu the rise was larger than the all-India average rate and from 7,30,000 to 9,23,000 ; While the number of placement has notionally risen marginally in India, in Tamil Nadu there was a fall from 39,000 in 1975 to 29,000 to end of 1977. These figures did indicate a worsening of the employment situation in the State, which indicate the worsening of the employment situation.

When that is the prevailing employment position, what is the use of making promises which are beyond your capacity. It would be beyond your capacity socially and politically to make promises which would not be fulfilled. I therefore submit that this is beyond your capacity. It is only political adventurism to say in the House that you are going to have employment gurantee scheme in rural areas and to provide employment to all the rural folk. It is incorporated in the Governor's speech just to cheat and lull Hon. Members of this House and the people of Tamil Nadu who are already just killing themselves under the weight of unemployment. I charge this Government for making these promises, false promises. By this the Government has not done anything concretely to assuage the rigour of poverty, to assuage the appalling

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 பிப்ரவரி 15

penury, under which the people of this State are suffering. Therefore, Mr. Speaker, I submit that this Scheme is not at all practicable of implementation. It is only political adventurism. That is all.

Another charge of mine is that this Government has no moral or legal or constitutional authority to subsist in office because the Government has fallen down as soon as the Chief Minister left this country for his foreign tour.

இந்த அரசாங்கம் இனிமேல் சட்டப்படி பதவியில் இருப்பதற்கு தகுதியை இழந்து விட்டது. சட்டப்படி இந்த அரசாங்கம் பதவியில் இருப்பது செல்லாது என்பது தான் என்னுடைய வாதம்.

Under Article 163 of the Constitution, the Governer is to be advised by Council of Ministers. If the Governor is to be advised by Council of Ministers....

ஆளுநர் அவர்களுக்கு மந்திரிசபையின் சார்பில் ஆலோசனை சொல்வதற்கு ஒருவர் இருக்க வேண்டும். மந்திரிசபைக்கு தலைமை வகிக்கக்கூடிய ஒருவர் இருக்க வேண்டும். அதற்கு முதலமைச்சர் இல்லாவிட்டால் முதலமைச்சர் சார்பாக ஒருவரை நியமித்து விட்டு செல்ல வேண்டும். யார் என்பதை நியமித்துவிட்டு முதலமைச்சர் செல்ல வேண்டும். அப்போது தான் 'கௌன்சில் ஆப் மினிஸ்டர்ஸ்' என்பது இருக்க முடியும்.

Under Article 167 the Government has to communicate and it is the constitutional duty of the Chief Minister to have occasional communications with the Governor of the State.

சீப் மினிஸ்டருக்கு இந்த ட்யூட்டி இருக்கிறது. மந்திரி சபை என்று ஒன்றிருந்தால் அதற்கு தலைமை வகிக்க ஒருவர் இருக்க வேண்டும். முதலமைச்சர் இல்லாவிட்டால் கவர்னரோடு தொடர்பு கொள்வதற்கு, கவர்னரோடு சென்று பேசுவதற்கு ஒருவர் இருக்க வேண்டும். இதற்கு முன்னதியாக என்ன நடந்தது, எப்படி நடந்தது என்று கேட்கக் கூடும், அண்ணா அவர்கள் சென்றார்கள், கலைஞர் அவர்கள் சென்றார்கள். அப்போதெல்லாம் யார் என்று சொல்லிவிட்டு போனார்கள். இப்போது முக்கியமாக நிருபர்கள் கேட்டார்கள். நீங்கள் இல்லாத போது, யார் உங்கள் இடத்தில் இருப்பது என்று கேட்டார்கள். உங்கள் வேலையை யார் செய்வது என்றும் கேட்டார்கள், அதற்கு என்ன சொன்னார்கள். 'அவரவர்கள் வேலையை அவரவர்கள் பார்த்துக் கொள்வார்கள்' என்று சொன்னார்கள்.

There is no co-ordinating officer, no cohesive force, no co-ordinating head of the Ministry who will carry out the activities of the Council of Ministers



1979 பிப்ரவரி 15] [திரு. எம். ஏ. லத்தீப்]

அப்படி என்று சொன்னால், சீப்-மினிஸ்டர் வேலையை செய்வதற்கு இங்கு ஆள் இல்லை. அப்படி வரும்போது, சீப் மினிஸ்டர் இல்லாமல் 'கௌன்சில் ஆஃப் மினிஸ்டர்ஸ்' என்பது இருக்க முடியாது.

That means the Government automatically falls down. There is no means to communicate with the Governor.

ஆகவே இது ஒன்று, ஆனால் பிரைம் மினிஸ்டர் போகலாமா என்றால், போவதற்கு இடமிருக்கிறது....

The Prime Minister is a separate entity, even when he goes to foreign country he represents the Nation.

அவர் ஒரு நேஷனை ரெப்ரஸன்ட் பண்ணுகிறார். அதனால் அவர் போகலாம்........

The Prime Minister has a prestige and he represents the Nation and therefore he can have their constitutional identity even when he is in foreign country. Even When he is in foreign country, he represents the Nation and other Ministers, in consultation with Prime Minister can have contact.

என்ற முறையில் வரும். ஆனால் ஒரு சீப்-மினிஸ்டர் என்பவரோ அல்லது தனிப்பட்ட நபரோ போக முடியாது.

Other than the Prime Minister, other than the President who is duly authorised to represent the Union of India.

மற்றவர்கள் யாரும் போகமுடியாது. மற்றவர்கள் யார் போனாலும் அது செல்லாது....

in International law it is a civil death.

எழுதி வைத்துக் கொள்ளுங்கள், 'சீப்-மினிஸ்டர்' போனாலும் சரி, நான் போனாலும் சரி அது 'சிவில் டெத்' தாகத் தான் இருக்க முடியும். அப்படி வரும் வரும்போது, சீப்-மினிஸ்டர் இல்லாமல் எப்படி ஒரு அமைச்சரவை இருக்க முடியும்? தலைமை இல்லாத கவுன்சில் ஆப் மினிஸ்டர்ஸ் என்பது எப்படி இருக்க முடியும்? ஆகவே சீப்-மினிஸ்டர் என்றைக்கு இங்கிருந்து வெளிநாட்டுக்கு போனாரோ; அன்றைக்கு அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி இந்த அமைச்சரவை பதவியிலிருந்து வெளியேறிவிட்டது என்றுதான் பொருள். ஏனென்றால்....

[பிற்பகல் 12-30]

Constitutionally there was no Council of Ministers. There was none to preside over the Ministerial meetings or cabinet meetings. There was none to communicate to the Governor. And as such, automatically it is brought to the ground. This Government is illegal, unconstitutional and it has no right whatsoever.

[1979 பிப்ரவரி 15

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Speaker, Sir, I regret to state that the hon. Member has made a total distortion of the provisions of the Constitution. Either it betrays his total lack of knowledge of Constitutional Law or he is deliberately misleading this House by putting an interpretation which does not compare, constitutionally speaking, with right interpretation of the relevant Articles of the Constitution. I will read only four provisions which have been covered by the Hon. Member in his speech. This tantamount spractically to a very very serious indictment of the Government of Tamil Nadu headed by the Hon. Chief Minister Thiru M. G. Ramachandran.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. எஸ். ஜே. இராமசாமி தலைமை]

The Article that relates to the constitution of the Ministry, is Article 163.

I will read that first :

163 (1) :

"There shall be a Council of Ministers with the Chief Minister at the head to aid and advise the Governor in the exercise of his functions, except in so far as he is by or under this Constitution required to exercise his functions or any of them in this discretion.

(2) If any question arises whether any matter is or is not a matter as respects which the Governor is by or under this Constitution required to act in his discretion, the decision of the Governor in his discretion shall be final and the validity of anything done by the Governor shall not be called in question on the ground that he ought or ought not to have acted in his discretion."

The analogous provision in the Constitution of India in respect of the Prime Minister is this : In the Union Government,

Article 74 (1) :

"There shall be a Council of Ministers with the Prime Minister.........(here, the word is the Chief Minister)........ at the head to aid and advise the President in the exercise of his functions.'





The same thing here except to add that the Governor also can exercise some functions in his discretion.

"(2) The question whether any, and if so, what advice was tendered by Ministers to the President shall not be inquired into in any Court."

It is so in respect of the constitutional provisions relating to the State also.

My friend was making a comment on the absence of the Chief Minister and said that therefore, *ipso facto* the Tamil Nadu Government has fallen—to use his phrase—to the ground. Now, I will quote the provisions relating to conduct of Government business. Article 167—Duties of Chief Minister as respects the furnishing of information to Government, etc.—

"It shall be the duty of the Chief Minister of each State—

(*a*) to communicate to the Governor of the State—Please remember he need not go on every day and converse with the Governor—all decisions of the Council of Ministers — not merely to collaborate with the Governor—relating to the administration of the affairs of the State and proposals for legislation."

In respect of all these matters, he shall communicate to the Governor. The same thing also holds good so far as the Prime Ministers is concerned. Article 78 relates to duties of Prime Minister as respects furnishing of information to the President, etc.

Article 78 :

"It shall be the duty of the Prime Minister — Please remember it is the same thing. Only one word is altered, i.e., Chief Minister to Prime Minister—

(*a*) to communicate to the President all decisions of the Council of Ministers relating to the administration of the affairs of the Union and proposals for legislation ;

—The same thing—

(*b*) to furnish such information relating to the administration of the affairs of the Union and proposals for legislation as the President may call for.................."

If the Prime Minister goes abroad, he represents the Union Government. This is a Federal Government where every State is a legal and constitutional entity by itself. So also, the Federal Government is a legal

(The Hon. Thiru K. Narayanaswamy) [1979 பிப்ரவரி 15

entitly. They are two separate distinict legal entities 'one prevailing in the State and the other prevailing in the Centre. If the Prime Minister can leave this country and go abroad and represent this country elsewhere, so also the Chief Minister can legitimately and constitutionally leave this State and go abroad. And in his absence the Council of Minister, does not need any Head called the Chief Minister but it can still function without the Chief Minister for some time. The only thing is, communication with the Governor, is confined to two matters, in respect of (1) the administration of the affairs of the State and (2) proposals for legislation. When these things are decided by the decisions of the Council, they must be communicated. So, evidently the Council can meet, the Cabinet can meet and decide on certain matters and when once the decision is reached, it shall be the duty of the Chief Minister to convey it to the Governor. Beyond that, I see absolutely, not even a semblance of any basis for any Member to contend that because the Chief Minister is absent, the concerned State Government falls to the ground. As an argument, in the language of a lawyer, I would say that it lacks totally the basis, or if may characterise this, it is totally untenable. Thank you, Mr. Speaker, Sir.

திரு. து. புருஷோத்தமன்: பாயின்ட் ஆப் ஆர்டர் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கான்ஸ்டியுஷன் விதிகளைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கு நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். எங்களைப் போன்ற உறுப்பினர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அது குறித்து தாங்கள் விளக்க வேணடுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

HON. TEMPORARY CHAIRMAN (THIRU S. J. RAMASWAMY): No point of order. (திரு. லத்தீப் எழுந்தார்) உங்களுக்குக் கொடுக்கப் பட்ட நேரம் முடிந்து விட்டது.

THIRU M. A. LATHEEF : The clarification of the principles of Constitution depends upon the way in which every provision of the Constitution or for that matter, any provision of the law is being interpreted. It is common knowledge that no lawyer..........

HON. TEMTORARY CHAIRMAN (THIRU S. J. RAMASWAMY) Hon. Member please. உங்களுக்குப் கொடுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. அருள கூர்ந்து இன்னும் மூன்று நிமிடத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1979 பிப்ரவரி 15]

THIRU M. A. LATHEEF : I completely disagree with the interpretation submitted by the Hon. Law Minister. I do not find fault with the Law Minister because every lawyer would have his own opinion. It is common knowledge that every lawyer can have his own opinion and no lawyer can compel another lawyer to agree with his argument on any legal provision. But what I submit is, there are two questions. One is the Council of Ministers and the other one is the analogy of comparison of the Union Government with the State Government by the Law Minister. I think it is totally beyond the scope of the constitutional interpretation and beyond the pith and substance of the provisions of the Constitution referred to by the Law Minister. What I submit is this. That is why I hastened by way of abundant cation. I submitted that the Prime Minister does represent the nation. Even though it is a Federal State of constitutionally separate entity and the functioning of the Union Government is only within the four walls of the Federation as such, when the Chief Minister of a State goes out of the Federation. he is only a citizen of India and nobody can be called a citizen of Tamil Nadu. When the Chief Minister goes to America or for that matter any other country, he is only a citizen of India. The Prime Minister has his separate constitutional entity because he represents the Indian Nation, but not the Chief Minister. Therefore, it is but preper, it is the constitutional international convention, international legal provision that including the Chief Minister of any State, and the representatives of the for that matter anybody other than the Prime Minister Union Government is an Indian citizen, just called as a man— Civilly dead. Therefore, I disagree with the Hon. Law Minister who spoke for the Chief Minister. I also take great exception to the observations made by the Hon. Law Minister that I have no knowledge of the Constitutional law. I am equally competent to the Hon. Law Minister, even though I regard him as my senior. That is all I can say.

[பிற்பகல் 12.40]

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, I want make it very clear that I would never cast any aspersion on the knowiedge of my hon. Friend Mr. Latheef. I am grateful to him for his expresslon of treating me as his senior. I want to express once again my grateful thanks to him unreservedly in an unqualified manner.

I would like to recall that there have been two precedents which are illuminating. The great Amarar Anna went to Yale University and still the Council of Ministers functioned as well as it could function elsewhere in the entire country of India.

The next example right before our eyes and under our nose is this. Our former talented Chief Minher who went abroad would equally give an effective answer, if only were to sit on this side to Latheef'siex

arguments. It is another great example. When he went abroad, it did not result in any kind of deleterious effect either on the administration of the State or on the decisions of the Council of Ministers.

THIRU M. A. LATHEEF : I welcome it.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் ;</u> நம்முடைய லத்தீப் அவர்கள் பேசுகின்ற மாதிரி நான் ஆங்கிலத்திலே பேச அவ்வளவு பேச இயலாத காரணத்தால் நான் தமிழிலே பேசுகிறேன்:

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> தாங்கள் பொடி வைத்துப் பேசுகிறீர்கள்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> ஒரு விஷயத்தை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

ஒரு மாநிலத்திலே டூரிங் சீப் மினிஸ்டர் என்றும் ஸ்டேஷனரி சீப் மினிஸ்டர் என்றும் இரண்டு பேர்கள் இருக்க முடியாது என்று தெரிவித்துக் கொண்டு அவருக்கு இருக்கிற லோக்கல், நேஷனல், இண்டர்நேஷனல் சட்டத்தில் இருக்கிற அறிவை நான் மதிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> இது சம்பந்தமாக நான் விளக்கம் தர விரும்புகிறேன். இல்லாவிட்டால் வெளியே வேறு விளக்கம் வந்து விடும். அண்ணா அவர்களும், கலைஞர் அவர்களும் வெளிநாட்டிற்க்குச் சென்றபோது இங்கே அவரவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்ற முறையிலே சொல்லவில்லை.

'The implied implication is that the next man will preside.'

ஆனால் இங்கே அப்படியில்லை. அவரவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று சொல்லிவிட்டுப் போனார்.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி)</u> நேரமாகிவிட்டது. அடுத்து திரு. கே. கந்தசாமி.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> முடித்துவிடுகிறேன்.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜே. இராமசாமி):</u> தங்களுக்கு கொடுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது, தாங்கள் ஒத்துழைக்க வேண்டும்.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> நாங்கள் பாசிஸத்தைப்பற்றிப் படித்திருக்கிறோம். ஹிட்லரைப்பற்றி, முசோலினியைப் பற்றிப் படித்து அறிந்திருக்கிறோம். இன்றைக்கு பாசிஸ ஆட்சி இங்கே





ம்.ஜி.ஆர். தலைமையில்கீழ் நடந்துவருகிற ஆட்சியிலேதான் நடக்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆட்சி பாசிஸ ட்சி. காரணம் என்னவென்றால் கட்சிக்காரர்களுக்குத்தான் திப்புக் கொடுக்கப்பட வேண்டும், சட்டமன்ற உறுப்பினர்களுக் க் கொடுக்கப்படக்கூடாது என்ற நிலைமை இருக்கிறது. ங்கள் தொகுதியிலே அந்தக் கட்சி அமைப்பாளர் ஒருவர் இருக் றார். அவர் ஒரு பொதுக் கூட்டத்திலே பேசுகிறார். தலமைச்சர் சொல்லிவிட்டார், கட்சி உறுப்பினர் இல்லாத தாகுதியிலே அங்கே இருக்கிற அமைப்பாளர்கள்தான் ம்.எல்.ஏக்கள் என்று, ஆகவே அந்தத் தொகுதியிலே உள்ள மைப்பாளர்கள்தான் எம். எல். ஏ.க்கள் என்று பேசுகிறார். தன் காரணத்தினால் அங்கேயுள்ள அதிகாரிகளே இன்றைக்கு யப்படுகிறார்கள் அவர்களுக்குப் பயந்துதான் பணியாற்றக் டிய நிலைமை இருந்து வருகிறது.

மாண்புமிகு திரு. எஸ்.டி.எஸ். அவர்கள் என்னுடைய தொகு க்கு வருகிறார். அங்கே வெள்ளச் சேதம், பலர் அடித்துச் செல் ப்பட்ட கோரச் சம்பவம், உயிர் உடமைகள் அடித்துச் செல்லப் ட்டுள்ள நிலைமை, நான் அவரை அழைத்து வந்தேன். அவர் ன்னோடு வரக்கூடாது என்று தொகுதி அமைப்பாளர் அவரிடத் லே சொன்னார். ஆனால் அமைச்சர் அவர்கள் மிக நல்லவர் ள். ஆனால் அந்த அமைப்பாளர் அந்த நேரத்திலே என்ன ன்ன கெட்ட வார்த்தைகள் எல்லாம் பேசினார்கள் தெரியுமா...

<u>திரு அ. க. அரங்கநாதன்:</u> பாயின்ட் ஆப் ஆர்டர் சார். ம்முடைய ரெவன்யூ மினிஸ்டர் அவர்கள் வரும்பொழுது மாண்பு கு உறுப்பினர் லத்தீப் அவர்கள் வரக்கூடாது என்று தொகுது மைப்பாளர் சொல்ல வில்லை. அந்த இடத்திலே நான் இருந் தன் ஆனால் அன்றைக்கு, அமைச்சர் தன் வீட்டிற்குச் சாப் ட வர வேண்டுமென்றுதான் தொகுதி அமைப்பாளர் கேட்டாரே விர மாண்புமிகு உறுப்பினர் அமைச்சரோடு வர வேண்டாம் ன்று தடுக்க வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு எம்.ஏ.லத்தீப்:</u> நம்முடைய திரு அரங்கநாதன் அவர்கள் வறான தகவலைக் கொடுக்கக் கூடாது. அமைச்சரிடத்தில் சால்லி ஒத்துக்கொண்டு வந்த அமைச்சரைச் சாப்பிட விட ல்லை. அமைச்சரை நாடு கடத்துவது மாதிரி அழைத்துச் சென்று விட்டார்கள். இதை திரு. அரங்கநாதன் அவர்கள் அறிவார் ள். அமைச்சர் சாப்பிடாமல் சென்றார். சென்னைக்குச் சாப்பி ாமலே வந்து விட்டார். அடுத்து, திரு. எட்மண்ட் அவர்கள்..

<u>திரு அ. க. அரங்கநாதன்.</u> தலைவரவர்களே, அமைச்சரவர் ள் சாப்பிட்டு விட்டுத்தான் சென்னைக்கு வந்தார் என்பது வருக்குத் தெரியாது.

திரு எம். ஏ. லத்தீப். அரங்கநாதனுக்கு ரொம்ப நன்றி. என்னுடைய தொகுதிக்கு வந்துவிட்டு எனக்குத் தெரியாமல் சாப்பிட்டுவிட்டுப் போனார் என்று ஒத்துக் கொண்டார்கள். அதற்காக நன்றி. இதைத்தான் பாசிசம் என்று சொல்கிறேன். இதைத்தான் அப்புனுக் கவுண்டரும் எடுத்துச் சொன்னார். மற்ற உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். பாசிசம் என்பதற்குச் சரியான விளக்கத்தை அரங்கநாதன் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்னொன்றும் சொல்கிறேன். முதலமைச்சரவர்கள் தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் சட்டசபை உறுப்பினர்களாக இல்லாத இடங்களிலே தொகுதி அமைப்பாளர்கள்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் என்று சொல்லியிருப்பார்களேயானால் நான் சொல்கிறேன், ஹிட்லரின் கதியை நினைத்துப் பாருங்கள், இங்கேயிருக்கிற முசோலினியின் கதியை நினைத்துப் பாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் மக்கள் பிரதிநிதிகள். ஆனால் அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் சட்டசபை உறுப்பினர்களாக இல்லாத இடங்களில் தொகுதி அமைப்பாளர்களைப் பார்த்து அவர்களைத்தான் உறுப்பினர்களாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முதலமைச்சர் சொல்லியிருப்பார்களேயானல்—அவர்கள் சொல்லியிருப்பார்களோ என்னவோ எனக்குத் தெரியாது, நான் வேண்டுமென்று குற்றச் சாட்டைச் சுமத்த விரும்பவில்லை. அப்படிச் சொல்லியிருப்பார்களேயானால் — காலத்தின் கட்டளை, உங்களையெல்லாம் தண்டிக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டளை, ஆகவே அப்படிச் சொல்லியிருந்தால், அவர் சொன்னாரா இல்லையா என்பது எனக்குத் தெரியாது, அதை நான் கேட்கவில்லை, அப்படி நடந்திருந்தால் அது மிகவும் கண்டிக்கத் தக்கது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்குத் தொகுதி அமைப்பாளர்கள் என்ற முறையிலே நாடு முழுவதும் நடந்து கொண்டிருக்கிற நிலைமைகளை இந்த அரசு நினைத்துப் பார்க்க வேண்டும். ஜனநாயகத்தைக் காப்பாற்றுங்கள், நாங்கள் மக்களின் பிரதிநிதிகள். எங்களை ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நடத்தினால் நாங்களும் முதலமைச்சரை முதலமைச்சர் என்று மதிப்பு கொடுப்போம். நீங்கள் எதிர்க்கட்சிக்காரர்களை மதிக்க வில்லை என்றால், நீங்கள் முதலமைச்சர் என்பதை நாங்கள் மறுக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

We do not accept this Government as legally constituted. This Government has no authority to continue. This Government has no respect because it is not properly constituted because it has paved the way for violence in the country. (சிரிப்பு) சிரியுங்கள், சிரிக்கப் படுவீர்கள், நீங்கள் சிரிக்கப்படுகின்ற நேரம்.

திரு கு. வடிவேல். நாங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு வந்தவர்கள்தான்.



திரு. எம். ஏ. லத்தீப்: நீங்கள் மட்டும் தான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தீர்களா, நாங்கள் அப்படி வரவில்லையா? நாங்களும்தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ள வேண்டாம்.

திரு. எம். ஏ. லத்தீப்: இப்படிப்பட்ட பாசிச ஆட்சி, அராஜக ஆட்சி, வன்முறையைத் தூண்டும் ஆட்சி, அது மட்டுமல்ல என்னைப் பயமுறுத்திக் கடிதம் எழுதுகிறார்கள். நான் இன்றைக்குச் சட்டசபையிலே சொல்கிறேன், என் உயிருக்கு ஆபத்து இருக்கிறது, பெரிய கற்களைத் தூக்கி வீசுகிறார்கள், என்னுடைய தொகுதியிலே பேசிக்கொண்டு இருக்கிறேன், அப்பொழுது அடிக்க முயற்சித்தார்கள். இது உடலால் வாழும் உயிர் அல்ல, இது உணர்வால் வாழும் உயிர். நாலரை கோடி மக்களின் ஜனநாயக வாழ்க்கையில் ஒன்றி விட்ட உயிர். இதையும் அழிக்க முற்படுகிறார்கள். **
** என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கவர்னர் உரை மிகவும் கவைக்கு உதவாத உரையாக இருக்கிறது, நாட்டு மக்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லாத உரையாக இருக்கிறது என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ** என்ற அந்த வாக்கியத்தைச் சபைக் குறிப்பிலிருந்தும், பத்திரிகைகளிலும் நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: ** என்ற வார்த்தையை மட்டும் எடுத்துவிடலாம்.

திரு. துரை முருகன் * * *
** என்பதை வேண்டுமானால் எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவரவர்களும் அதைத்தான் சொல்கிறார்கள், ** என்றதைச் சபைக் குறிப்பிலிருந்தும், பத்திரிகைகளிலும் நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12.50]

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன் விவாதத்திற்காக வைத்திருக்கிற மேதகு கவர்னர் அவர்களின் மீது உரையின்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக எனது கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். சுருக்கமாக இதைக் குறிப்பதனால் It is a reflection of the good intention of the Government என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அரசினுடைய நல்லெண்ணத்தைப் பிரதிபலிக்கும் நல்ல குறிப்பாக இருக்கிறதுஎன்ற எண்ணத்தைக் கூறி அதே நேரத்தில் மக்கள் எதிர்பார்க்கிற எண்ணத்தைப் பிரதிபலிக்கிற அளவுக்கு. மக்களுக்கு இருக்கிற குறைகளை நீக்குகிற அளவுக்குத்திட்டங்கள் இருக்கின்றனவா என்பதைப் பார்த்தால் இல்லையென்பது என்னுடைய தாழ்மையான கருத்து என்பதையும் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணமாக, அரசினுடைய கொள்கையை, முயற்சியை, நல்லெண்ணத்தை பிரதிபலிக்கிற வகையில் விவசாயிகளுடைய பிரச்னையைப் பற்றி சொல்லியிருக்கிறார் மேதகு கவர்னர் அவர்கள். விவசாயிகள் இன்று மெஜாரிட்டியாக நாட்டில் உள்ளார்கள்என்ற பிரச்னை நாடெங்கிலும் அதே பேச்சாக இருந்தாலும் எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு, எங்கும் விவசாயிகள் என்பதேபேச்சு என்று ஆகிவிட்ட நேரத்தில் இந்த அரசு ஒரே பிரச்னையைப் பற்றி சொல்லி உள்ளது.

'There will be no let up in the State Government's efforts in emphasising the need for a fair price. Tamil Nadu will also stress the need for Government of India, to subsiside rice price to the extent of wheat subsidy in order to continue to make rice available to the consumers at reasonable prices, simultaneously ensuring fair price to the producer.'

என்ற அளவிற்குத் தமிழ் நாடு will also stress என்று சொல்கிறார்களே ஒழிய will also என்ற நிலையில்லாமல் it must be a must என்று நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டை போட்டவர்கள், படித்தவர்கள், உத்தியோகத்தில் இருப்பவர்கள், வியாபாரிகள் என்று தமிழகத்தில் எடுத்துக் கொண்டாலும் ஏக இந்தியாவில் எடுத்தாலும் 100-க்கு 20 பேர் தான் அவர்கள் இருக்கிறார்கள் என்பதை ஒத்துக் கொண்டிருக்கிறோம். 80 சத விகிதம் ஏழை விவசாயிகள், கிராமப் புறங்களிலே வசிக்கிற மக்கள், விவசாயம் செய்து வருகிறார்கள். உழைத்து, உழைத்து உருக்குலைந்து தொழிலாளிகள் வர்க்கம் என்று கம்யூனிஸ்ட் தோழர்கள் வர்ணிப்பதைப் போல், ஏழை விவசாயிகள், கிராமப் புறங்களிலே உழைத்து உழைத்து உருக்குலைந்திருப்பதை சபாநாயகர் அவர்கள் மூலமாக மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

Frustrated unemployed youth have become more and more in number. Let us not have another Bengal.



இதை முன்பு நடந்த ஆட்சியின்பொழுது, மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதல்வராக இருக்கும்போது நான் குறிப்பிட்டேன். இன்றைக்கு மகாராஷ்டிரத்திலே அல்லது வங்காளத்திலே கொடுப்பதைப் போல், இளைஞர்கள் உத்தியோகத்திற்கு வருகிற வரை, எம்ப்ளாய்மென்ட் ஆஃபீஸ்லே பதிந்து வைத்திருப்பவர்களுக்கு ரூ. 50, 'ஓல்ட் ஏஜ் பென்ஷன்' கொடுப்பதைப் போல் ரூ. 20, ரூ. 25 வயதானவர்களுக்குக் கொடுப்பதைப் போல், இளைஞர்களுக்குக் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால், விரக்தி அடைந்தவர்கள் வேறு வழியில் செல்வார்கள். அவர்களை எக்ஸ்ட்ரிமிஸ்ட்களாக மாற்றாமல் தடுப்பதற்கு மாத்திரமல்ல, அவர்களை எதிர்காலத்தில் உபயோகமுள்ள பிரஜைகளாக மாற்ற இது ஊன்றுகோலாக அமையும் என்பதை நான் ஆணித்தரமாகக்குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கே அதைச் செய்ய முடியும்.

நாட்டிலே பரந்து கிடக்கிற நம்மையெல்லாம் வாழவைக்கின்றவர்கள் விவசாயிகள்; நாட்டின் முதுகெலும்பு விவசாயிகள் என்று மேடை தவறாமல் பேசுகிறோம். தேர்தல் காலத்தில் மட்டுமல்ல. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர் என்று மேடைதோறும் பேசுவது மட்டுமல்லாமல், எழுதுகிறோம். ஏழை எளிய விவசாய மக்களே, உங்களுக்காகவே வாழ்கிறோம், பேசுகிறோம் என்று எழுதுகிறோம். ஆனால் அவர்களுக்காக வாழ்கிறோமா என்பதை மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரவர்களைக் கேட்கிறோம். வாழ்கிறோம் என்று பேசலாம், எழுதலாம், நல்ல எண்ணம் இருக்கலாம்.

All good intentions may not be fruitful and helpful unless they are translated into action.

நம்முடைய நல்ல எண்ணங்கள் செயல் வடிவம் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு குறிப்பிட்ட விரும்புகிறேன். விவசாயிகள் நியாயவிலைக்கு வேண்டும் என்று கேட்டால் அது தவறா? ஏக இந்தியாவைப்பற்றி பேசுகிறார். நம்முடைய ஜனதா கட்சித் தலைவர் ஜேம்ஸ் அவர்களைத் தனியாகக்கூட கேட்டேன். அவர் பேசுகின்றபோது தயவு செய்து சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவரும் வக்கீல் நானும் வக்கீல். இரண்டு பேர்களும் இதைவிட்டுவிட்டு வக்கீல் வேலையைப் பார்ப்போம். மத்திய அரசு கரும்புக்கு டன் ஒன்றுக்கு 150 ரூபாய் வட மாநிலத்தில் கொடுப்பதாக அறிகிறேன். நாங்கள் மாதவன் அமைச்சராக இருந்த போது பல முறைவிவாதித்து, 94 ரூபாயிலிருந்து 116 ரூபாய் வரை உயர்த்தினோம். இப்போது, ரூ. 100-க்கும் கீழே போய், தற்போது அலங்கநல்லூரிலே ஒரு டன்னுக்கு 78 ரூபாய் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். நான் எந்த விவசாய சங்கத்திலும் உறுப்பினராக இல்லை. நான் என்னுடைய மின்சார சப்ளையை கட்பண்ணி விடுவார்களே என்று பயந்து என்னுடைய பில் என்ன

ஆயிற்று என்று கேட்டேன். அவர்கள் டன் 78 ரூபாய் என்று தீர்மானித்து செக் அனுப்புகிறோம் என்று சொன்னார்கள். ஏன் அப்படி என்று கேட்டேன். நஷ்டத்திலே ஓடுகிறது என்று சொல்லுகிறார்கள். ஏன் நஷ்டம் என்று கேட்டால், ஊதிய உயர்வு கேட்கிறார்கள். ஊதிய உயர்வு கோருவது நியாயம் தான். உழைப்பிற்கேற்ற ஊதியம் கொடுக்கவேண்டும். அதிகமான ஊதியம் நீங்கள் தரவேண்டாம். உயிரை உடலோடு வைத்துக் கொள்ளும் அளவுக்காவது உத்திரவாதம் வேண்டாமா குழந்தைக்கு எங்கே பால் கிடைக்குமோ அங்கேதான் போகும். அதேபோல் தாய்வடிவத்தில் இருக்கிற அரசு விவசாயிகளுடைய பிரச்சினையை தங்களுடைய பிரச்சினையாகக் கருதி நிவாரணம் செய்து கொடுத்தால் விவசாயிகள் எந்த விவசாய சங்கத்திலும் சேரத் தயாராக இல்லை. ஆனால் உணவு கொடுக்காமல் அடித்து விரட்டுகிற பிள்ளை தெருவிலே அலைவதைப்போல, அல்லது மாற்றாந்தாய் எதைக் கொடுத்தாலும் அங்கே போய் அடைக்கலம் அடைவதைப்போல மிக துரதிருஷ்டவசமாக பல அரசியல் கட்சிகளின் வலையிலே சிக்கி விட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். யார் ஆண்டால் என்ன, ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன ? என்று சொல்லுகிறார்கள்.

இன்றைக்கு எங்கு பார்த்தாலும் மிகப் பயங்கரமான நோய் பரவிவருகிறது. ரசாயன உரங்கள், ரசாயன மருந்துகள் தருகிறார்கள். நானும் ஒரு மருந்திலே போட்டு, அது பாலிடாலோ என்னவோ, வரலட்சிமி பருத்திக்கு அடிப்பதற்காக வாங்கிவந்தேன். நான், டைலூட்டாக ஒரு மணி நேரம் வைத்திருந்து, பிறகு பார்த்தால் ஒரு புழு கூட சாகவில்லை. அதை இன்னும் டைலூட் பண்ணி 100 மடங்கு தண்ணீர் சேர்த்து பூச்சி சாகாது. இப்போது பருத்திக்குப் பதில், புழுக்களைத்தான் பறிக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஜெயராமனுக்குத் தெரியும். இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டும்.

நெல்லுக்கு திடீரென்று புகையான நோய் வருகின்றது. அறுவடை செய்யத் தயாராக இருக்கும் நெல்லை மூன்று நாட்கள் கழித்துப் பார்த்தால் பட்டுப் போயிருக்கின்றது. 100 மூட்டை 200 மூட்டை கிடைக்கின்ற நிலத்தில் 10 மூட்டை 20 மூட்டை கிடைக்கின்ற நிலைமை இருக்கிறது. எதிர்பார்த்த விளைச்சல் இல்லாமலும், எதிர்பார்த்த வருமானம் இன்மையாலும் மிகவும் கஷ்டப்படுகிற நிலைமை இருக்கிறது. "Why not we ask for reasonable price." அதை விவசாய சங்கம் கேட்டால் என்ன, கந்தசாமி கேட்டால் என்ன, ராமசாமி கேட்டால் என்ன. யார் கேட்டால் என்ன, நோய் தீரவேண்டும். குருடனுக்குப் பார்வை கிடைக்க வேண்டும். இரு உயிர்ப் பிரச்சினை, வாழ்க்கைப் பிரச்சினை. பல்லாயிரக்



கணக்கான விவசாயிகள் கடன் சுமையில் இருக்கிறார்கள். அவர்கள் நஷ்டத்திற்கு எல். டி. பேங்க் கூட கடன் கொடுக்க முடியவில்லை. 1 லட்சம் , 2 லட்சம் 10 லட்சம் ரூபாய் வைத்திருப்பவர்கள் கூட, வருடத்திற்கு பத்தாயிரம் ரூபாய் கூட மிச்சப்படுத்த முடியவில்லை.

[பிற்பகல் 1—00.]

இன்றைக்கு நான் வேண்டிக்கேட்டுக்கொள்வது, விவசாயிகளுக்கு வேண்டிய சலுகைகளை அரசு செய்து தரவேண்டும். எவ்வளவு தான் விவசாயி உழைத்தாலும் அவன் உழைப்புக்குத் தக்க அளவில் விலை கிடைக்கவில்லை என்றால் அவன் பெருமூச்சு விடுகிறான். அந்த பெருமூச்சின் விளைவு தான் பல்வேறு விவசாய சங்கங்கள் இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டு இருக்கின்றன. விவசாயிகளும், கட்சியைப் பார்ப்பது இல்லை, கொடியைப் பார்ப்பது இல்லை, யார் அவர்களுக்கு ஆதரவாகப் பேசுகிறார்களோ அவர்கள் பக்கம் சேர்ந்து விடுகிறார்கள். இந்தப் போக்கு காட்டுத்தீ போல் இன்றைக்கு நாட்டில் பரவி வருகிறது. நான் இதை மிகவும் எச்சரிக்கையோடு இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இந்த விவசாயப் பிரச்னையை உடனடியாக அரசு கவனிக்கவேண்டும். எந்தக் கட்சித் தலைவர் அது குறித்துக் கேட்கிறார் என்பதை விட அவர் கேட்பதில் இருக்கும் நியாயத்தைப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன், இந்தப் பிரச்னையில் தாங்கள் கவனமாக இருந்து கேட்டு, அந்த விவசாயிகளுக்கு வேண்டியவற்றைச் செய்து கொடுக்கவேண்டும். இப்போது நிலைமை எப்படி இருக்கிறது என்றால் ஆடி மாதத்தில் காற்று அடித்தால் எந்த மரமாக இருந்தாலும் பச்சை மரமாக இருந்தாலும் ஒரு இடத்தில் தீ வைத்தால் அது ஒரு காடு பூராவிலும் இருக்கும் மரத்தையும் பொசுக்கி விடுவதுபோல் இன்றைக்கு நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, அந்த விவசாயிகள் மனதில் இருக்கும் தீயை அணைக்கும் விதத்தில் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய சங்கங்கள் எங்கு பார்த்தாலும் இப்போது அமைந்து இருந்தாலும், தமிழகத்தில் குறிப்பாக, தென் மாவட்டங்களில், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் ஒரு மாநாடு நடத்த வேண்டும் என்று சொன்னால் ரூ. 100, ரூ. 500 கிடைக்காது. ஆனால் இப்போது நிலைமை என்னவென்றால் ஒரே வாரத்தில் ரூ. 13,000 சேர்ந்து விட்டது. ஒரு ஊர்வலத்திற்கு 50 மாட்டு வண்டிகள் கொண்டு வாருங்கள் என்று சொன்னால் அதுவே பெரிய காரியம். ஆனால் இப்போது எந்தவித முயற்சியும் இல்லாமல் ஊர்வலத்திற்கு 2,000-க்கும் மேற்பட்ட வண்டிகள் வருகின்றன. எங்கே பார்த்தாலும், கடனைத் திருப்பித் தராதே, மின்சார கட்டணம் கட்டாதே, நிலவரி கட்டாதே

என்று விவசாய சங்கம் அறிவித்து இருப்பதை ஒட்டி ஆங்காங்கு விவசாயிகள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். நான் கூட மின்சாரக் கட்டணம் கட்டவில்லை. விவசாய சங்கத்தின் ரசிதைக் காட்டிவிட்டு சும்மா இருந்து கொண்டு இருக்கிறேன்.. என்னைப்போன்று உள்ளவர்களே இந்த நிலையில் இருக்கிறோம் என்றால் மற்றவர்களைப் பற்றி நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

போன ஆண்டு ரூ. 100 கொடுத்தார்கள் கரும்புக்கு இப்போது ரூ. 78 தான் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு இந்தப் பணம் கட்டுப்படியாக இருக்கவில்லை. அதனால் அவர்கள் கிஸ்திப் பணம் கட்டவில்லை. நானும் உங்களிடத்தில் மனம் திறந்து சொல்கிறேன். நான் கூட கட்டவில்லை. நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள். வெட்கம் மானத்திற்கு அஞ்சி இது நாள் வரையில் நான் இருந்தேன். இப்போது நிலைமை மிகவும் மோசமாகப் போய்விட்டது. ஆகவே, அரசாங்கத்தை நான் தயவு செய்து கேட்டுக்கொள்கிறேன், சிந்தித்துப்பார்த்து நல்ல முடிவு எடுங்கள். போன வாரம் நாயுடு எங்கள் பகுதிக்கு வந்து இருந்தார். நாராயணசாமி நாயுடு வந்திருந்தார். அவர் சொன்னார், கிஸ்தி கட்டாதீர்கள், மின் கட்டணம் கட்டாதீர்கள், வரிகட்டாதீர்கள் சிறைக்குச் செல்லத் தயாராகுங்கள், கடன் எங்காவது வாங்க வேண்டுமா. கையெழுத்துப் போடுங்கள், திருப்பிக்கட்ட வேண்டாம் என்று சொன்னார்கள். அந்த நேரத்தில் சில பெரியவர்கள் வழக்கமாக பேசுபவர்கள் எழுந்தார்கள். ஊரில் உள்ள மக்கள் நீங்கள்என்ன பேசுவீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். உட்காருங்கள் என்று சொல்லிவிட்டார்கள். நாயுடு பேசட்டும் என்றார்கள். ஆகவே, நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன், மத்திய அரசு கோதுமைக்கு ரூ.27 காஸ்ட் ஆப் ப்ரொடக்ஷனுக்கு மேல் கொடுக்கிறார்கள், அதைப்போல் இங்கேயும் நெல்லுக்கும், கரும்புக்கும் மத்திய அரசு கொடுக்கவேண்டும். இது நியாயமான ஒரு வேண்டுகோளாகும். நாங்கள் எல்லாம் நாடு ஒன்றாக இருக்கவேண்டும் என்று எண்ணம் கொண்டவர்கள். கலைஞர் போன்றவர்கள் நாடு பிரிந்தாகவேண்டும் என்றும், அதிக அதிகாரங்கள் வேண்டும் என்றும் சொல்கிறபோது, இந்த நிலைமையைப் பார்க்கிறபோது நாமும் ஏன் அந்த நாடு பிரிவினை கேட்கக்கூடாது என்று எண்ணம் வருகிறது. ஆகவே, இன்றுள்ள தேச ஒற்றுமையைக் கருதி, மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் மத்திய அரசுக்கு இந்த நிலைமையை எடுத்துச்சொல்லி, அவரே விவசாயிகளின் சார்பாக, தமிழ் மக்களின் சார்பாக விசேஷ தூதுவராக டெல்லிக்குப் போய் திரு. மொரார்ஜி பாய் அவர்களைப் பார்த்து, தமிழ் நாட்டு விவசாயப்பெருங்குடி மக்களுக்கு நியாயம் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால் வேற்றுமை உணர்வு வளரவும், போராட்டம் வலுக்கவும் சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சீனி என்று எழுதிவிட்டால் இனிக்காது. கொஞ்





மாவது இருந்தால்தான் இனிக்கும். இல்லாவிட்டால் கசக்கும். சும்மா இந்தியா, ஏக இந்தியா என்று சொல்லிக்கொண்டிருந்தால் பிரயோசனம் இல்லை. ஏக இந்தியாவில் ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது. வடக்கே ஒன்றும், தெற்கே ஒன்றுமாக இருக்கக் கூடாது. நெல்லுக்கு ஒரு விலை, கோதுமைக்கு ஒரு விலை என்ற பாகுபாடு இருக்கக்கூடாது.

அடுத்தபடியாக, இந்தித் திணிப்பைப்பற்றிக் கூறுகிறார்கள். (குறுக்கீடு — ஜேம்ஸ் கருத்து என்ன என்பதைக் கேளுங்கள்) ஜேம்ஸ் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் பேசும்போது தெளிவுபடுத்துவார்கள். அதைச் செய்யவில்லை என்றால் போராட்டம் நடத்த வேண்டுமென்று சொன்னால் நான் தயார், உண்ணா விரதம் இருக்க வேண்டுமென்று சொல்கிறீர்களா, அதற்கும் நான் தயார்தான். மத்திய அரசை எதிர்த்துப் பேராட நான் தயார். கட்சியைப் பற்றி கவலை இல்லை. கட்சியா சோறு போடுகிறது? இல்லை. எந்தக் கட்சியாக இருந்தாலும் .சரி, அண்ணா தி.மு.க.வானாலும் சரி, ஜனதா கட்சியானாலும் சரி, மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும். அதுதான் எல்லாக் கட்சிகளின் எண்ணமும். அந்த எண்ணம் நிறைவேறாதபோது போராட வேண்டியதுதான். அதற்கு கட்சி வேறுபாடு கிடையாது. அதுபற்றி அனைத்துக் கட்சித் தலைவர்களும் முடிவுசெய்து, இந்த சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். ஏக இந்தியா என்று சொல்லும்போது எல்லோருக்கும் சமநீதி வழங்க வேண்டும். விவசாயிகள் பிரச்சனை தீர்க்கப்படவில்லை என்றால் பெரும் விளைவுகள் ஏற்படும் என்பதை மத்திய அரசுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். அதற்கு அரசு சார்பிலேயே ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும். மாண்புமிகு கலைஞரைப் போன்ற பொறுப்புள்ள தலைவர்கள் எல்லாம் அதற்குரிய வழிமுறைகளை வகுக்க வேண்டும்.

விவசாயிகள் இன்றைக்கு வரி கொடா போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். வரி கொடுக்காவிட்டால் ஒரு நாட்டின் நிர்வாகம் என்ன ஆகும்? இன்றைக்கு இருக்கிற முதலைச்சர் போய்விடலாம். நாளை கலைஞரோ அல்லது லத்திப் அவர்களோ முதலமைச்சராக வரலாம். யார் போய் உட்கார்ந்தாலும் வரி கொடுக்காவிட்டால் நிர்வாகத்தை எப்படி நடத்த முடியும். 'மினிஸ்டர் வித்தவுட் அதாரிட்டி' என்றுதான் இருக்க முடியும். (குறுக்கீடு) லத்தீப் அவர்கள் பெரும் தலைவராக வரலாம். லியாகத் அலிகான் மாதிரி ஏன். ஒரு மாபெரும் தலைவாக வரக் கூடாது? தாராளமாக வரலாம். பெரும் தலைவராகி, மக்கள் இதயத்தில் இடம்பெற்று, பிரபலமாக இருந்து தொண்டாற்றலாம். ஆகவே, இந்த விவசாயிகள் பிரச்சனையில் விரைவில் ஒரு தீர்வு காணவேண்டும். அது 'பிரதர்லி ட்ரீட்மென்டாக' இருக்க வேண்டும்.

__திரு. செ. சிவசாமி :__ தலைவரவர்களே, நண்பர் லத்தீப் அவர்கள் லியாகத் அலிகான் மாதிரி ஒரு மாபெரும் தலைவராக வரவேண்டுமென்று சொன்னார்கள். லியாகத் அலிகான் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த நிலைமை லத்தீப் அவர்களுக்கு வர வேண்டுமா?

__திரு. கே. கந்தசாமி :__ துரோகிகள் அவரை சுட்டுக்கொன்றார்கள். துரோகம் அங்கே வென்றது ; நீதி தோற்றது. அவர் ஒரு சிறந்த மக்கள் தலைவுர், மாபெரும் தியாகி, நல்ல அறிவாளி. அந்தத் தியாகத் தலைவர் மாதிரி லத்தீப் அவர்கள் வரவேண்டுமென்று சொன்னேனே தவிர வேறல்ல.

அடுத்தபடியாக, மதுவிலக்குத் திட்டம். இது ஒரு புனிதமான திட்டம். காந்தியடிகளின் உயரிய திட்டம். அந்த காந்தியடிகளின் சீடர்களால் முடியாததை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். உங்களுடைய உன்னதமான எண்ணத்தை நான் பாராட்டுகிறேன் ; வரவேற்கிறேன். ஆனால் அந்த எண்ணத்தின்படி உங்களுடைய அட்மினிஸ்ரேட்டிங் மெஷினரீஸ் வேலை செய்யவில்லையே. என்ஃபோர்ஸ்மென்ட் அத்தாரிட்டி சரியாகச் செயல்பட வில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு சொல்கிறேன்.

மதுரையில் ஒரு டி.ஐ.ஜி. இருக்கிறார். அவர் ரொம்ப நல்லவர் ; நல்லது எதைச் சொன்னாலும் உடனடியாக நடவடிக்கைக் எடுக்க கூடியவர். ஆனல் இதில் அவர் நடவடிக்கை எடுக்கத் தயக்கம் காட்டுகிறார், ஏன் என்று தெரியவில்லை. போலீஸ் துறையிலே ஊழல் மலிந்துவிட்டது. லெப்ட் ஹாண்டிலும், ரைட் ஹாண்டிலும் — இரண்டு கையாலும் கரப்ஷன் வாங்குகிறார்கள். அதில் கொஞ்சம் கூடத் தயக்கம் இல்லை. இந்த லஞ்சத்தை ஒழிக்க வேண்டும். முழுக்க முழுக்க ஒழிக்க முடியாவிட்டாலும் ஒரு கையால் லஞ்சம் வாங்கிகுறவனை விட்டுவிட்டு, இரண்டு கைகளிலும் வாங்குகிறவனையாவது பிடியுங்கள். எந்தத் துறையைப் பார்த்தாலும் இன்றைக்கு 'டோட்டலி கரப்ஷன்' என்று சொல்லக்கூடிய அளவுக்குத் தான் இருக்கிறது. கரப்ஷன் ஒழிப்பதில் 24 காரட் வேண்டுமென்று நான் கேட்கவில்லை. 18 கேரட்டாகவாவது இருக்க வேண்டுமென்றுதான் கேட்கிறேன்.

திருமங்கலத்தில் இன்ஸ்பெக்டர் பரூக் என்று ஒருவர் இருக்கிறார். அவர் பசு மாடே லஞ்சம் வாங்கியிருக்கிறார். அவர் வீட்டில் இப்போதும் அது இருக்கிறது. ஒருவன் அதை வாங்கிக் கொடுத்திருக்கிறான். கேஸ் இல்லாதவன் பேரில் கேஸ் போடுமறார்கள். கேஸ் உள்ளவர்களை விடுதலை செய்கிறார்கள். அன்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் நடவடிக்கை எடுக்கிறேன் என்கிறார்கள். இப்படி எத்தனை காரியங்களை அவருடைய கவனத்திற்குக்





கொண்டு போவது ஒன்றா அல்லது இரண்டா? எத்தனையோ இருக்கிறது. கொஞ்சம் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று டி.ஐ.ஜி., கலெக்டர் போன்றவர்களுக்கு உத்திரவிடுங்கள் என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

Society has become totally corrupt. It has become more or less a cottage industry. Distillation of illicit liqour has become a common practice amongst village folk. It has come only out of poverty. It has become an inevitable evil.

இதை மிக மிக வருத்தத்தோடு குறிப்பிடுகிறேன். இன்றைக்கு கூட எங்கள் கட்சித் தலைவர் மூக்கையாத்தேவர் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது அவர்கள் பேரறிஞர் அண்ணாவின் சிறந்த மனப்பான்மையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். மதுவிலக்குக் கொள்கையில் அவர்கள் கொண்டிருந்த உறுதியைப் பற்றிச் சொன்னார்கள். அவர் வழியைப் பின்பற்றக்கூடியவர்கள் நீங்கள். ஏழை எளிய · தாழ்த்தப்பட்ட மக்கள்மீது அண்ணா எப்படி அன்புகாட்டினார் என்பது உங்களுக்குத் தெரியும். இன்றைக்கு மது அருந்தக்கூடியவர்கள் பெரும்பாலும் வசதிப்படைத்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அதை உற்பத்திச் செய்பவர்கள், சாராயம் காய்ச்சுபவர்கள் ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள்தான். தாய்மை உள்ளம் கொண்ட பெரிய தலைவரின் பெயரால் நீங்கள் ஆட்சி நடத்துகிறீர்கள். ஆளும் கட்சி நண்பர்கள் சிலர் அப்படிக் குறிப்பிடுவதை நானும் கேட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1—10)

It has become an inevitable evil. ஆகவே இது பெரும் தவறு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிர்வாகம் நல்ல முறையிலே நடைபெறாவண்ணம் தடுக்கின்ற வகையிலே நிர்வாகத்திலே தலையிடுவது தவறு என்று உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இதுவரை தவறான தொழில்களைச் செய்து வந்த பாமர மக்கள் வேலையில்லாமல் தவிக்கின்ற நிலையை தவிர்க்கும் பொருட்டு அவர்களுக்கு ஆல்டர்நேட்டிவ் எம்ப்ளாய்மென்ட் கொடுக்கின்ற வகையில் ஒரு திட்டம் தீட்டப்பட்ட வேண்டும். வெளிநாடுகளிலே இருந்து அகதிகள் வரும்போது அவர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்காக சில புனரமைப்புத் திட்டங்கள் ஏற்படுத்தப்படுவது போன்று இவர்களுக்கும் வேலை வாய்ப்பளிக்கின்ற வகையில் ஒரு திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் இப்படிப்பட்ட ஒரே தொழிலைச் செய்து வந்தார்கள், அதையும் பறித்துவிட்டால் அவர்கள் என்ன செய்வார்கள்,

Government should give an alternate employment. Are they to starve and die? Some alternative has to be found out to protect their lives. It is an economic problem.

அடுத்து நம்முடைய அரசு சிறிய நீர்ப்பாசனத்திட்டங்களுக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றி எதுவுமே இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கே ஓடுகிற நதியினை கிழக்கே திருப்புவதற்கு பிரதமர் மொரார்ஜியுடன் நமது முதலமைச்சர் பேச்சு வார்த்தை எல்லாம் நடத்தினார்கள் என்று கேள்விப்பட்டோம். அது எந்த ஸ்டேஜ்-லே இருக்கிறது என்பதைச் சொன்னால் எங்களுக்குக் கொஞ்சம் உற்சாகமாக இருக்கும். அந்த நல்ல முயற்சிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் என்னுடைய ஆண்டிப்பட்டி தொகுதியிலே மழை வெள்ளம் வந்தால் ஆடு மாடுகளை எல்லாம் அடித்துக்கொண்டு போகிற மேட்டுப் டகுதிகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் கூட அந்தப் பகுதிக்கு வந்திருந்தார்கள். தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் கூட வந்திருந்து இரண்டு நாள் சுற்றிப் ,பார்த்தார்கள். இப்போது திருடுவதை எல்லாம் நிறுத்தி விட்டார்கள். தவறு செய்வதையே நிறுத்தி விட்டார்கள்.......

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது அமைச்சர் அவர்கள் வந்திருந்தார்கள். சுற்றிப் பார்த்தார்கள். திருடுவதை நிறுத்திவிட்டார்கள் என்று தெரிவித்திருக்கிறார். அப்படியானால் அவர் அமைச்சரவர்களையே அவ்வாறு சொல்கிறாரா என்று தெரியவில்லை. விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் அழகான விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சரவர்கள் திருடுவதை நிறுத்தினார்கள் என்று நான் சொல்லவில்லை. அவர்கள் சுற்றிப் பார்த்தார்கள். மக்கள் திருந்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்களும் நன்கு அறிந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, நமது உறுப்பினர் அவர்கள் பேசும் போது மாண்புமிகு அமைச்சரவர்கள் ஊரை எல்லாம் சுற்றிப்பார்த்தார்கள். திருட்டு நின்றுவிட்டது என்றும் திருட்டை நிறுத்திவிட்டார்கள் என்றும் சொன்னதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எடுத்துச் சுட்டிக்காட்டியபோது அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அழகான விளக்கம் தந்தார்கள் என்று சொல்லி அதனை உறுதிப் படுத்துகிறார்களா? விளக்கம் தேவை.





திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அவை முன்னவரவர்கள் குறிப்பிட்டது போல் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறிய கருத்தை வலியுறுத்தவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்கள் சுற்றிப் பார்த்தார்கள், திருட்டு நின்றுவிட்டது என்று நான் குறிப்பிட்டதை அமைச்சரவர்கள் நிறுத்திவிட்டது போல் தொனிக்கிறது என்று கூறினார்கள். விளக்கம் தேவை என்றும் கூறினார்கள்.

திருட்டெல்லாம் நின்று விட்டது என்று...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவை முன்னவர் அவர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் பதில் சொல்லவில்லை. எல்லோருக்கும் புரிவதுபோல் சொல்லிவிட்டால் பரவாயில்லை.

திரு. கே. கந்தசாமி: மக்கள் திருட்டு போன்ற தொழில்களை நிறுத்தி விட்டார்கள், அந்த நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டார்கள் என்றுதான் சொன்னேன். அது தெளிவாக வாக்கியத்தில் அமையவில்லையென்பதால் இந்தக் குழப்பம் ஏற்பட்டது. அதற்காக வருந்துகிறேன். அப்படி, மக்கள் திருந்திக்கொண்டு வருகிறார்கள். பொருளாதாரச் சூழலில் வெற்றி பெற மக்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்று அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் கிராம மக்கள் தான். கிராம மக்களின் புனருத்தாரணத்திற்காக பல திட்டங்களை உருவாக்கியிருக்கிறோம். It must be crystal clear. ஆக, கிராம மக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் உணர்வினைப் பாராட்டுகிறேன். அத்தகைய உள் உணர்வு நிச்சயமாக இருத்தல் வேண்டும். தீப்பெட்டித் தொழிற்சாலை மெழுகு வத்தி செய்யும் தொழிற்சாலைகள் போன்றவற்றை ஆரம்பிப்பதாக சோஷியல் வெல்பேர் மினிஸ்டர் அவர்கள் சொன்னார்கள். என் ஆண்டிப்பட்டியில் வருவதாகவும் சொன்னார்கள். ஆனால் அவ்விதம் வரவில்லை. தொழில் அமைச்சர் அவர்களுக்கு பக்கத்து ஊர்தான். வைகை டாமிற்காக அங்கிருந்தவர்கள் வெளி ஊர்களுக்குப் போகச் சொல்லி அவர்கள் குடிசைகள் போட நிலம் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. புறம்போக்கு நிலங்களைக் கூட வன இலாகா ஆக்கிரமித்துக்கொண்டு அங்கேயுள்ளவர்களை வெளியே போகச் சொல்லியிருக்கிறார்கள். வெளிநாடுகளிலிருந்து வந்துள்ள அகதிகளுக்கு நாம் முகாம்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறோம், அவர்களுக்கு மனைகள் கொடுத்திருக்கிறோம். அவர்களுக்கு தொழில் செய்ய கடன் உதவி கொடுத்திருக்கிறோம், அதையெல்லாம் நான் பாராட்டுகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் தொகுதியில் தீப்பெட்டித் தொழிற்சாலை வரவில்லை என்ற அர்த்தத்தில் குறிப்பிட்டார்கள். அவர்

களது தொகுதியில் 30 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அவரவர்கள் இல்லத்தில் தொடர்கின்ற அடிப்படையில் இப்போது பதிவு செய்யப்பட்டு செயல்முறையில் இருக்கிறது என்ற தகவல் தெரிந்தும் ஒருவேளை தெரியாமல் சொல்கிறார்களோ, தெரியாமல் இருந்தால் தகவலுக்காக இதைச் சொல்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : அமைச்சர் அவர்களின் நல்ல தகவலுக்கு நன்றி. அதைப்பற்றிச் சொன்னால் சரியாக இருக்காது என்று நினைத்தேன். ஆரம்பிக்கிறபோது தகவல் தெரியவில்லை. சிலர் கட்சிக்கண்ணோட்டத்தோடு செயல்படுகிறார்கள். அதை ப்ளெயினாகச் சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்களுக்கு நான் அங்கே செல்கிறபோது தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. அன்று நான் அவர்களிடம் கேட்டேன், ஒரு அலுவல் காரணமாக வர இயலாது என்று சொன்னார்கள். அதிகாரிகள் வருகிறார்கள், கலந்து பேசலாம் என்றேன். ஒரு வேலை இருக்கிறது வரமுடியவில்லையென்றார்கள். ஆகவே, என்மீது தயவுசெய்து குறை சொல்ல வேண்டாம்.

திரு. கே. கந்தசாமி : அமைச்சர் அவர்களை, நான் குறை கூறவில்லை. டிஸ்கஸனுக்காக கூப்பிட்டார்கள். எக்ஸிக்யூட் செய்ய அல்ல. அவர்கள் நல்லெண்ணத்தைப் பாராட்டுகிறேன். நல்லமுறையில் தொழில்களை ஊக்குவிக்க வேண்டும். அடுத்தபடியாக, இங்கே சட்டமன்றத்தில் மூதறிஞர் ராஜாஜி அவர்களின் படம், பேரறிஞர் அண்ணா அவர்களின் படம் போன்றவை இருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்களின் ஸேவியராக இருந்த புகழ்பெற்ற டாக்டர் அம்பேத்கார் அவர்களின் படமும் வர இருக்கிறது. இப்படிப்பட்ட பெரிய தலைவர்களின் படங்கள் இந்தச் சட்டமன்றத்தை அலங்கரிப்பதை நான் பாராட்டுகிறேன். அதேபோல் தேவர் திருமகானார் அவர்கள் நாட்டு விடுதலைக்காகப் போரார்டி, தன்னலமற்ற தியாகங்கள் புரிந்து, சிறை சென்று ஒப்புயர்வற்றதொரு நிலையை அந்தக் காலத்தில் பெற்றிருந்தார்கள் என்பதை, சுதந்திர வீரர்கள் தியாகங்கள் புரிந்து எட்டமுடியாததொரு நிலையை அவர்கள் அடைந்திருந்தார்கள் என்பதை இந்நாட்டின் வரலாறு தெரிந்தவர்கள் நன்கு நினைவில் வைத்திருப்பார்கள் என்று கருதுகிறேன். நாட்டின் விடுதலைக்காக தான் செய்த தியாகங்கள் காரணமாக ப்ரகாசம்காரு அவர்கள் ஆந்திர கேசரி (லயன் ஆப் ஆந்திரா) என்று சொல்கிறார்கள். அதேபோல் தேவர் திருமகனார் செய்த தியாகங்கள் காரணமாக ஜாதி சமய வேறுபாடுகளை



கடந்த. மொழி வேறுபாடுகளைக் கடந்த தன்னலமற்ற சேவை காரணமாக அவர்களை தென்னாட்டின் சிங்கம் தேவர் திருமகனார் என்று போற்றினார்கள் என்பதை இந்தமன்றத்தின் மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். சில அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பல்வேறுவிதமாக திசைதிருப்பி அவர்களது பெயருக்கு களங்கம் கற்பிக்க முயற்சிகள் ஒரு காலகட்டத்தில் நடந்தன. ஆனால் உண்மை இதுதான் என்பதை இம்மாமன்றத்திற்கு நான் பணிவன்போடு தன்னடக்கத்தோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1–20.)

அவர்கள் அவ்வாறு செய்தபோது, நான்கு மாநிலங்களும் ஒன்றாக இருந்தது. ஆந்திரா, கேரளா, கர்நாடகம், தமிழ்நாடு இவ்வாறு நான்கும் ஒன்றாக இணைந்திருந்த போது, தமிழ் நாடு என்றில்லாமல், ‘ தென்னாட்டு சிங்கம் ’—தேவர் திருமகன் என்று நாட்டுமக்களுடைய பாராட்டைப் பெற்றவர். அவர்களது தியாகத்தை மதிக்கிற அளவுக்கு அரசின் சார்பில் விழா நடத்தப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் பெருள்ளத்தோடு அறிவித்திருக்கிறார்கள், அதை பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாகவும், தேவர் திருமகனின் தொண்டர்களின் சார்பாகவும் வரவேற்றுக்கொள்கிறேன். அதே நேரத்தில் தேவர் திருமகனின் தியாகத்தை மதிக்கின்ற வகையில் அவருடைய படத்தையும் இங்கு வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவருடைய சேவையைப்பற்றி சொல்வதாக இருந்தால், ஜாதி மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு தியாகம் செய்தவர், 1937-ல் தமிழகத்தில் அன்றைய தென்னாட்டில் ராஜாஜி அவர்கள் மந்திரி சபை இருந்த போது, தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது, தென்னாட்டில் கொண்டு வருவதற்கு அச்சப்பட்டுக் கொண்டிருந்தார்கள். தென்னாட்டிலுள்ள இந்துக்கள் முரடர்களாக இருக்கிறார்கள். எனவே காங்கிரஸ் கட்சி கொண்டு வந்த தீர்மானத்தையே வாபஸ் பெறவேண்டியது தான் என்ற நிலை வந்தபோது, தேவர் திருமகன், ராஜாஜி அவர்களிடமும், பிரகாசம் அவர்களிடமும், இதை தென்னாட்டுக்கு கொண்டு வாருங்கள், அன்னை மீனாட்சி ஆலயத்திற்கு என் உடன்பிறவா சகோதரர்களை அழைத்துக்செல்லுகிறேன், என்ன வேண்டுமானாலும் வரட்டும், நான் பார்த்துக் கொள்கிறேன், என்று சொன்னதோடு, அரிசன் சகோதரர்களையும் அழைத்துச் சென்றார்கள். அரிசன் என்றால்—அரி என்றால், தெய்வம், ஜன்— என்றால் ஸன், குழந்தைகள்—ஆக அரிஜன் என்று சொன்னால் தெய்வத்தின் குழந்தைகள் என்று கூறியதோடு, நான் அழைத்துச் செல்லுகிறேன், ஏதாவது எதிர்ப்பு வருமானால் நான் பார்த்துக்கொள்கிறேன், என்று கூறி, முதலில் ஆலயப் பிரவேசம் செய்த திருமகன் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். அதே போல் தொழிலாளர் வர்க்கத்திற்காக போராடி, மறைந்த மேதை ப. ஜீவானந்தம், ராமமூர்த்தி

களது தொகுதியில் 30 தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அவரவர்கள் இல்லத்தில் தொடர்கின்ற அடிப்படையில் இப்போது பதிவு செய்யப்பட்டு செயல்முறையில் இருக்கிறது என்ற தகவல் தெரிந்தும் ஒருவேளை தெரியாமல் சொல்கிறார்களோ, தெரியாமல் இருந்தால் தகவலுக்காக இதைச் சொல்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : அமைச்சர் அவர்களின் நல்ல தகவலுக்கு நன்றி. அதைப்பற்றிச் சொன்னால் சரியாக இருக்காது என்று நினைத்தேன். ஆரம்பிக்கிறபோது தகவல் தெரியவில்லை. சிலர் கட்சிக்கண்ணோட்டத்தோடு செயல்படுகிறார்கள். அதை ப்ளெயினாகச் சொல்லவேண்டும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்களுக்கு நான் அங்கே செல்கிறபோது தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. அன்று நான் அவர்களிடம் கேட்டேன், ஒரு அலுவல் காரணமாக வர இயலாது என்று சொன்னார்கள். அதிகாரிகள் வருகிறார்கள், கலந்து பேசலாம் என்றேன். ஒரு வேலை இருக்கிறது வரமுடியவில்லையென்றார்கள். ஆகவே, என்மீது தயவுசெய்து குறை சொல்ல வேண்டாம்.

திரு. கே. கந்தசாமி : அமைச்சர் அவர்களை, நான் குறை கூறவில்லை. டிஸ்கஸனுக்காக கூப்பிட்டார்கள். எக்ஸிக்யூட் செய்ய அல்ல. அவர்கள் நல்லெண்ணத்தைப் பாராட்டுகிறேன். நல்லமுறையில் தொழில்களை ஊக்குவிக்க வேண்டும். அடுத்தபடியாக, இங்கே சட்டமன்றத்தில் மூதறிஞர் ராஜாஜி அவர்களின் படம், பேரறிஞர் அண்ணா அவர்களின் படம் போன்றவை இருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்களின் ஸேவியராக இருந்த புகழ்பெற்ற டாக்டர் அம்பேத்கார் அவர்களின் படமும் வர இருக்கிறது. இப்படிப்பட்ட பெரிய தலைவர்களின் படங்கள் இந்தச் சட்டமன்றத்தை அலங்கரிப்பதை நான் பாராட்டுகிறேன். அதேபோல் தேவர் திருமகானார் அவர்கள் நாட்டு விடுதலைக்காகப் போரா்டி, தன்னலமற்ற தியாகங்கள் புரிந்து, சிறை சென்று ஒப்புயர்வற்றதொரு நிலையை அந்தக் காலத்தில் பெற்றிருந்தார்கள் என்பதை, சுதந்திர வீரர்கள் தியாகங்கள் புரிந்து எட்டமுடியாததொரு நிலையை அவர்கள் அடைந்திருந்தார்கள் என்பதை இந்நாட்டின் வரலாறு தெரிந்தவர்கள் நன்கு நினைவில் வைத்திருப்பார்கள் என்று கருதுகிறேன். நாட்டின் விடுதலைக்காக தான் செய்த தியாகங்கள் காரணமாக ப்ரகாசம்காரு அவர்கள் ஆந்திர கேசரி (லயன் ஆப் ஆந்திரா) என்று சொல்கிறார்கள். அதேபோல் தேவர் திருமகனார் செய்த தியாகங்கள் காரணமாக ஜாதி சமய வேறுபாடுகளை





ந்த, மொழி வேறுபாடுகளைக் கடந்த தன்னலமற்ற சேவை ரணமாக அவர்களை தென்னாட்டின் சிங்கம் தேவர் திருகனார் என்று போற்றினார்கள் என்பதை இந்தமன்றத்தின் மலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். சில அரசியல் ம்ப்புணர்ச்சி காரணமாக பல்வேறுவிதமாக திசைதிருப்பி அவர து பெயருக்கு களங்கம் கற்பிக்க முயற்சிகள் ஒரு கால டத்தில் நடந்தன. ஆனால் உண்மை இதுதான் என்பதை ம்மாமன்றத்திற்கு நான் பணிவன்போடு தன்னடக்கத் தாடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1—20.)

வர்கள் அவ்வாறு செய்தபோது, நான்கு மாநிலங்களும் ஒன் ாக இருந்தது. ஆந்திரா, கேரளா, கர்நாடகம், தமிழ்நாடு ல்வாறு நான்கும் ஒன்றாக இணைந்திருந்த போது, தமிழ் நாடு ன்றில்லாமல், 'தென்னாட்டு சிங்கம்'—தேவர் திருமகன் ன்று நாட்டுமக்களுடைய பாராட்டைப் பெற்றவர். அவர து தியாகத்தை மதிக்கிற அளவுக்கு அரசின் சார்பில் விழா டத்தப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் பெருள்ளத்தோடு றிவித்திருக்கிறார்கள், அதை பார்வார்டு பிளாக் கட்சியின் ார்பாகவும், தேவர் திருமகனின் தொண்டர்களின் சார்பாகவும் ரவேற்றுக்கொள்கிறேன். அதே நேரத்தில் தேவர் திருமகனின் யாகத்தை மதிக்கின்ற வகையில் அவருடைய படத்தையும் இங்கு வக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவருடைய சவையைப்பற்றி சொல்வதாக இருந்தால், ஜாதி மத வேறு ாடுகளுக்கு அப்பாற்பட்டு தியாகம் செய்தவர், 1937-லி தமி கத்தில் அன்றைய தென்னாட்டில் ராஜாஜி அவர்கள் மந்திரி ைப இருந்த போது, தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு ந்தபோது, தென்னாட்டில் கொண்டு வருவதற்கு அச்சப்பட்டுக் காண்டிருந்தார்கள். தென்னாட்டிலுள்ள இந்துக்கள் முரடர் ளாக இருக்கிறார்கள். எனவே காங்கிரஸ் கட்சி கொண்டு வந்த ர்மானத்தையே வாபஸ் பெறவேண்டியது தான் என்ற நிலை ந்தபோது, தேவர் திருமகன், ராஜாஜி அவர்களிடமும், பிர ாசம் அவர்களிடமும், இதை தென்னாட்டுக்கு கொண்டு வாருங் ள், அன்னை மீனாட்சி ஆலயத்திற்கு என் உடன்பிறவா சகோ ரர்களை அழைத்துச்செல்லுகிறேன், என்ன வேண்டுமானாலும் ரட்டும், நான் பார்த்துக் கொள்கிறேன், என்று சொன்னதோடு, ரிசன் சகோதரர்களையும் அழைத்துச் சென்றார்கள். அரிசன் ன்றால்—அரி என்றால், தெய்வம், ஜன்—என்றால் ஜன், குழந்தை ள்—ஆக அரிஜன் என்று சொன்னால் தெய்வத்தின் குழந்தைகள் ன்று கூறியதோடு, நான் அழைத்துச் செல்லுகிறேன், ஏதாவது திர்ப்பு வருமானால் நான் பார்த்துக்கொள்கிறேன், என்று கூறி, தலில் ஆலயப் பிரவேசம் செய்த திருமகன் என்பதை நினை ட்ட விரும்புகிறேன். அதே போல் தொழிலாளர் வர்க்கத்திற் க போராடி, மறைந்த மேதை ப. ஜீவானந்தம், ராமமூர்த்தி

[திரு. கே. கந்தசாமி] [1979 பிப்ரவரி 1

இவர்களோடு சேர்ந்து போராட்டங்களுக்கு தலைமை தாங் போராட்டங்களை நடத்தி சிறை சென்றார்கள். இவ்வித எல்லாம் பாடுபட்டிருக்கிறார்கள்.

இந்தி திணிப்பை பொறுத்தவரை, திணிப்பை பார்வார் பிளாக் எதிர்க்கிறது. இந்தி மொழிப் பிரச்னை வந்தபோத 1939-ல் சொன்னார், கன்னித் தமிழ் இருக்க அந்நிய மொழிக் இங்கு என்ன வேலை என்று கேட்டு சட்டமன்றத்திலேயே பே யிருக்கிறார். இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் சொல் கின்ற தமிழ் உணர்வை அன்றைக்கே 1939-லேயே தமிழ் ம களுக்கு ஊட்டிய மாபெரும் தலைவர், அன்றைக்கே இந்தி எதிர்க்கிறார்கள். அப்படிப் பட்ட அந்த மாபெரும் தலைவருக் மரியாதை தருகின்ற முறையில் இந்தச் சட்டமன்றத்தில் தேவ திருமகனாருடைய படத்தை திறந்துவைக்கவேண்டும் என் கேட்டுக் கொண்டு நான் அமருகிறேன். வணக்கம்.

திரு. கே. ஜே. சுப்பிரமணியம்: சட்டமன்றப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது என் கரு துக்களைக் கூற வாய்ப்பளித்ததற்காக நன்றிகூறி, விவசாய திற்கு முன்னிடம் கொடுக்கும் நம் ஆட்சியில் விவசாயிகளி பலவிதமான குறைகள் கண்டிப்பாக களையப்படும் என்ப மேதகு ஆளுநர் உரையில் விவசாயிகளிடம் கொள்விலைப் பற் குறிப்பிடப்பட்டுள்ளதிலிருந்து நன்கு அறியலாம்.

நம் புரட்சித் தலைவர் அவர்களின் உள்ளக் கிடக்கை மேதகு ஆளுநர் அவர்களும் வெளிப்படுத்தி யுள்ளார்கள். கோத மைக்கு மத்திய அரசு அளித்து வரும் மானியம் அரிசிக்கு கொடுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்திக் கூறியுள்ள மேதகு ஆளுநர் அவர்கட்கு விவசாயிகளே அதிகம் உள்ள எங்கள் மாவட் டத்தின் சார்பில் நன்றி கூறிக் கொள்கிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவர் முன்பு அறிவித்த கிராமந் தோறும் நியாயவிலைக் கடைகள் என்ற திட்டத்தின் கீழ் இத வரை 13,500 கிராமங்கள் பயன்பெற்று விட்டன என்ற செய்தி நம்மை மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. விவசாயமே நம் முடைய முதல்வரின் மூச்சு என்பது சுருளியாறு மின் நிலையம் குந்தா மின் திட்டத்தின் 4-வது மின் நிலையம், தூத்துக்குடி மின் நிலையம் ஆகியவைகளை இயக்க ஆரம்பித்ததிலிருந்து நன்கு தெரிய வருகிறது. சிறு தொழில்களுக்கும் மின்வெட்டிலிருந்து விலக்கு அளித்தது நம் பாராட்டுதற்குரியது.

உள் அமைப்பு திட்டங்களின் கீழ் கிராமங்களில் ஏழை ய வர்கள் ஐந்தாண்டு காலத்தில் 1 லட்சம் வீடுகள் கட்ட திட் மிட்டிருப்பது நம் புரட்சித் தலைவரின் மிகச் சிறந்த சாதனை



1979 பிப்ரவரி 15] [திரு. கே. ஜே. சுப்பிரமணியம்]

யாகும். கிராமங்களுக்கும், குடிநீர் வடிகால் வசதி என்பது முன் ஆட்சி நினைத்திராத ஒன்றாகும். அதை முன்னின்று நடத்தும் நம் முதல்வருக்கு நாம் மிகவும் நன்றி கடன்பட்டிருக் கிறோம்.

விவசாய முன்னேற்றத்திற்கு அடுத்தாற்போல் மேதகு ஆளுநர் அவர்களின் உரை வேலையில்லாத் திண்டாட்டத்தில் தன் முழு கவனத்தை செலுத்தி உள்ளது என்பது நம்முடைய அரசு முற்போக்கு அரசு என்பதை பறைசாற்றுகிறது.

பட்டுத் தொழில் உற்பத்தியின்கீழ் 11 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு, வேதாரண்யம் பகுதியில் 6 ஆயிரம் ஏக்கர் அள வில் உப்பு தொழிற்சாலை திட்டம், தமிழ்நாடு கனிவள நிறுவனம் கிரானைட் வெட்டி எடுக்க ஆரம்பிக்கப்பட்டுள்ள பணி ஆகியவை எதிர்க் கட்சியினரும் தள்ளமுடியாத வேலைவாய்ப்புத் திட்டங்களாகும்.

நம்முடைய புரட்சித் தலைவர் அயல்நாட்டு சென்றதன் விளை வாக 'இட்டாசி ஜோசன்' நிறுவனத்துடன் ஆரம்பிக்கப்பட் டுள்ள தூத்துக்குடி உர உற்பத்திசாலை. கரும்பு சர்க்கரை யிலிருந்து காகிதம் தயாரிக்கும் ஆலை நாம் தொழில் மயமாகிக் கொண்டிருக்கிறோம் என்பதைப் பறை சாற்றுகிறது. இதற்காக மேதகு ஆளுநர் அவர்கட்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு முக்கிய அலுவலகங்கள் சென்னையிலேயே குவிந்து விடாமல் மாநிலம் முழுவதும் பரவலாக்கப்பட வேண்டுமென்ற புரட்சிகரமான திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வரும் நம் முடைய அரசு இதேவகையில் மேலும் பல அலுவலகங்களை மாநிலம் முழுவதும் மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாடிவிட்டு, அவருடைய கருத்துக்களை செயலாக்கிக் கொண்டு வரும் என் பதற்கு அடையாளம்தான் ஈரோடு தனி மாவட்டமாக்கப் படுகிறது என்பதும் 'அய்யா' அவர்களின் எழுத்து சீர்திருத்தங் களை நாம் அப்படியே படிப்படியாக மேற்கொண்டு வருகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

சென்னை வெள்ளம், நீலகிரி நிலச்சரிவு, சிவகாசி பயங்கரம் ஆகியவை நம் கண்களை குளமாக்கி நிற்கின்றன. அவைகளை கேட்டவுடன் நம்முடைய முதல்வர் அவர்கள் பறந்தோடிச் சென்று அவர்களுக்கு ஆற்றிய பேருதவிக்கு இந்த ஆட்சிக்கு நா கடப்பாடுடை யோம்.

ந

நம்முடைய அரசே ஏழை ஆயினும் வெள்ளத்தால் இலங்கை அரசு பாதிக்கப்பட்டபோது 10 இலட்சம் ரூபாய் பெறுமான பொருட்களை அவர்கட்கு அனுப்பி வைத்தது நம்முடைய உயர்ந்த எண்ணத்தை பிரதிபலிக்கிறது.

மதுவிலக்குக் கொள்கையில் இன்னும் தீவிரமான பல சட்டங்கள் ஏற்படுத்தி 'காந்தி', 'அண்ணா' ஆகியவர்களின் எண்ணங்களை நிறைவேற்ற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தி திணிப்பு நமக்கு பொது எதிரி என்பதை அனைத்து கட்சிகள் ஒன்று சேர்ந்து தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியது நாம் தமிழுக்கு ஓர் அரண் என்பதை புலப்படுத்துகிறது.

உடன்பிறவாத சகோதரன் முருகையன் அவர்களின் படுகொலைக்குக் காரணமானவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்று கூறியுள்ளது நமக்கு ஆறுதலளிக்கிறது. இதற்கும் நமது புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவரின் பெயருக்கு ஏற்ப புதுமையாக வேறு எங்கும் இல்லாத வகையில் ஹையர் செகண்டரி 10 பிளஸ் 2 என்பதனை உயர்நிலைப் பள்ளிகளிலேயே கொண்டு வந்தது பாராட்டப்பட வேண்டியதாகும். ஏழை மாணவ பெற்றோர்களின் நிதி நிலையை மனதில் கொண்டு வரப்பட்ட திட்டம் வெற்றி நடைபோடுவது போற்றவேண்டிய ஒன்றாகும். கல்விக்கு முன்னுரிமை அளித்து நூற்றுக்கணக்கான பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக்கூடங்கள் $1\frac{1}{2}$ லட்சம் செலவில் அனுமதித்தது. கல்வியின்பால் இந்த அரசு கொண்டுள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது.

மேலும் கட்டடங்கள் பற்றாக்குறையாக உள்ள இந்த நேரத்தில் உயர்நிலைப் பள்ளிகளை காலையிலும், ஹையர் செகண்டரி பாடபாடங்களை மாலையிலுமாக இரண்டு ஷிப்டுகளாக வேலை செய்தால் இட நெருக்கடி பிரச்சனையும், பள்ளிகளின் ஒழுக்கமும் காப்பாற்றப்படுமென்ற எனது கருத்தினை இந்த மன்றத்தில் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன். மேலும் 12 ஆண்டுகளாக தேங்கி உடைப்பில் கிடந்த 'ஏ' பிரிவு 'பி' பிரிவு இணைப்புப் பிரச்சனைகளை இந்த ஆண்டு முடித்துவைத்த புரட்சித் தலைவருக்கு நனறிகூறி, இதனை முறியடிக்க எடுக்கப்படும் எல்லா தீய சக்திகளையும் வெற்றிகொள்ள நம் அரசுக்கு எங்கள் முழு ஒத்துழைப்பைத் தர உறுதி கூறுகின்றோம்.

நடந்த பல நல்லவைகளுக்கு நன்றி கூறிவிட்டு, நடக்க வேண்டியவைகளை குறிப்பாக எங்கள் தொகுதிக்கு வேண்டிய சில தேவைகளை நிறைவேற்றித் தரும்படி அரசை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன.



காடு வளம் மிக்க எங்கள் தொகுதியில் சந்தனத் தொழிற்சாலையோ, அல்லது நீலகிரி தைலம் தொழிற்சாலையோ கண்டிப்பாக ஏற்படுத்தி, எங்கள் தொகுதியில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தக் கேட்டுக் கொள்கிறேன். கடந்த சில ஆண்டுகளாக வலியுறுத்தப்பட்டுள்ளதும், ஓராண்டு காலமாக நான் பலமுறை மன்றத்தில் கேட்டுக் கொண்டுள்ளதுமான செண்பகத் தோப்பு அணைத் திட்டத்தை உடனடியாகத் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1–30.]

இத்திட்டத்தினால் ஏற்படும் செலவும், அதற்குப் பிரதிபலனான வரவும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் இது எங்கள் தொகுதி விவசாயிகளின் உயிரினும் மேலான தேவை என்பதை உணர்ந்து எங்கள் உணர்வுகளை மதித்து இதை நிறைவேற்றித் தரும்படி மிகவும் வற்புறுத்திப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு வழக்குக்கும் எங்கள் தொகுதி மக்கள் வேலூர், செய்யாறு, ஆரணி சென்று வழக்காட வேண்டியுள்ளது. ஆகவே, போளூரில் ஒரு முன்சிப் கோர்ட் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கணியம்பாடியில் ஒரு காவல் நிலையம், போளூரில் ஒரு கல்லூரி, எங்கள் மாவட்டத்திற்கு ஒரு பொறி இயல் கல்லூரி ஆகியவை எங்கள் நீண்ட காலக் கோரிக்கை.

எங்கள் புரட்சித் தலைவரை வணங்கி மேற்கூறிய உடனடித் தேவைகளை நிறைவேற்றித் தரவேண்டி கேட்டுக் கொண்டு எனக்கு இவ்வளவு காலம் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் மாலை 4 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை 1–32 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

[மாலை நிகழ்ச்சிகள்]

மாலை 4–00 மணியளவில் <u>மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி</u> அவர்கள் தலைமையில் மீண்டும் பேரவை கூடியது.

<u>* திரு. செ. சிவசாமி :</u> மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு வந்த காலத்

திலே எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்று எந்த அளவிற்குத் தமிழ்நாட்டை முன்னுக்குக் கொண்டு வரமுடியுமோ அந்த அளவிற்கு முன்னுக்குக் கொண்டுவரமுடியும் என்ற நம்பிக்கை மக்களிடத்தில் இருந்தது. ஆனால் கடந்த 1½ ஆண்டு காலத்திற்குள்ளாக இந்த அளவிற்கு இந்த அரசு மோசமாகப் போகும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. தொழிலாளர்களுக்கு விரோதமான கொள்கை, விவசாயிகளுக்கு விரோதமான கொள்கை, 8 பேர்களைச் சுட்டு வீழ்த்தியது, மாணவர்களை அடித்து நொறுக்கியது. இப்படி தொழிலாளி வர்க்க, விவசாயி வர்க்க, மாணவர்கள் வர்க்க, எல்லா பகுதி மக்களுடைய விரோதத்தைச் சம்பாதித்துக்கொண்டிருக்கிற இந்த அரசு கடந்த ஒன்றரை ஆண்டு காலத்திற்குள்ளாகக் கொள்கை மாறியிருக்கிறது என்று கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. இன்றைக்கு 3-வது பட்ஜெட் வர இருக்கிறது. இன்னும் இரண்டு பட்ஜெட்கள்தான். இந்த அரசின் ஆயுட்காலம் அதுவரையில் தான் இருக்கிறது. அது முடியுமா அல்லது இடையிலேயே போய்விடுமா என்று நாங்கள் கருதுகிறோம். அந்த அளவிற்குச் சந்தேகமான அளவிலே அரசினுடைய கொள்கை பற்றி நாங்கள் வருத்தப்படுகிறோம்.

விவசாயிகள் பிரச்சினையைப் பொறுத்தவரையில் கிழக்கு முகவை மாவட்டத்திலே இன்றைக்கு கிட்டத்தட்ட இரண்டரை லட்சம் ரூபாய் அளவிற்கு கலெக்டர் ரெமிஷன் கேட்டு அரசுக்கு எழுதியிருக்கிறார். ஆனால் ஆளுநர் உரையிலே இரண்டாவது பக்கத்திலே பார்த்தால் அடுத்த மாநிலங்களுக்கு அரிசி ஏற்றுமதியாகக்கூடிய அளவிற்கு இப்போது தமிழ்நாட்டிலே உற்பத்தி பெருகியிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே இராமநாதபுர மாவட்ட கலெக்டர் இரண்டரை லட்சம் ரூபாய்க்கு ரெமிஷன் கேட்டு அரசுக்கு எழுதுகிறார் என்றால் ஏற்கெனவே பிற்பட்ட மாவட்டமாக இருந்த இராமநாதபுரம் மாவட்டம் இன்றுவரையிலும் பிற்பட்ட மாவட்டமாகத்தான் இருக்கிறது.

அந்த அளவிற்கு விவசாயிகள் மத்தியில் கடுமையான வசூல் செய்யப்படுகிறது. நெல்லுக்குச் சரியான விலை கொடுக்க வேண்மென்றால் கம்யூனிஸ்ட் கட்சி 140 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறது. அதேபோன்று கரும்பு 8·1 சத விகிதம் சுகர் இருக்கக்கூடிய அளவுக்கு உள்ள கரும்புக்கு 120 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். அதே நேரத்திலே தமிழ்நாட்டிலே உள்ள விவசாயிகளுக்கு முதலாளிகளிடமிருந்து 4½ கோடி ரூபாய் வரவேண்டியிருக்கிறது. ஆனால் இன்று வரைக்கும் 4½ கோடி ரூபாயை கரும்பு விவசாயிகளுக்கு வாங்கிக் கொடுப்பதற்கு



முடியாமல் அரசு முதலாளிகளுக்கு ஆதரவான கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறது. விவசாயிகளைப் பொறுத்தவரையில் உற்பத்தியாளர்கள் யார் என்றால் 4½ கோடி தமிழ் மக்களில் கிட்டதட்ட 80 சதவீதம் பேர்கள் விவசாயிகளாக இருக்கிறார்கள். அவர்களிடத்திலே ரூபாயைக் கொடுத்து உற்பத்தியைப் பெருக்குங்கள், உற்பத்தியைப் பெருக்குங்கள் என்று கடன் கொடுக்கிறோம். ஆனாலும் ரூபாயை வாங்கிக்கொண்டு அவர்கள் தவறுதலாக எதுவுமே செய்யவில்லை. காரணம், பூச்சிமருந்து, உரம், விதை, உழவுக்கு சிலவு செய்கிறார்கள். விலைகள் அதிகமாகி விட்டன. அது மட்டுமல்ல, இயற்கையின் சீற்றங்கள், வெள்ளச் சேதம் ஒருபக்கம், கிணற்றிலே தண்ணீர் இல்லாத காரணம், எதிர்பாராத நிலைமையில் கடல் கொந்தளிப்பு இவைகளின் காரணமாக கிழக்கு இராமநாதபுரத்தைப் பார்த்தால் தொடர்ச்சியாக பஞ்சம் இருந்து கொண்டிருக்கிறது. தொடர்ச்சியாக 1972-ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரையில் எந்தவிதமான வருமானமும் அற்ற முறையிலே விவசாயிகள் சன்னஞ்சன்னமாகக் கீழ் நோக்கித்தான் போய்க்கொண்டிருக்கிறார்களே தவிர எந்த அளவிலும் மேல்நோக்கி வரவில்லை. இப்படிப்பட்ட நிலையில் இந்தப் புதிய அரசு, ஏழை எளிய மக்களுக்காக வந்திருக்கிறோம் என்று சொல்லும் அரசு என்ன செய்திருக்க வேண்டுமென்றால் அவர்கள் கஷ்டங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு உற்பத்திக்காகக் கொடுக்கப்பட்ட ரூபாய் அத்தனையையும் கேன்சல் செய்திருக்க வேண்டும், தள்ளுபடி செய்திருக்க வேண்டும். அதற்குப் பதிலாக ஒவ்வொரு ஆண்டும் கணக்குப் போட்டு, உற்பத்திக்காகக் கொடுக்கப்பட்ட ரூபாய் அத்தனையையும் கூட்டி 16 சதவீதம் வட்டி போட்டு மொத்தமாக ஏற்றி வைத்து கொடுமையான முறையிலே வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்கிறார்கள்.

சிறு விவசாயி, பெரிய விவசாயி என்று பாகுபாடு செய்து, பெரிய விவசாயிகளிடத்தில் ஆரம்பக் கட்டத்திலே வசூல் செய்துவிட்டு மீண்டும் சிறு விவசாயிகளிடம் வசூல் செய்து கொள்ளலாம் என்ற முறையிலே பாகுபாடு செய்து வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, எத்தனை ஆயிரம் பேர்களுக்குச் சாதாரண சிறு விவசாயிகளுக்கு, அவர்கள் வாங்கிய கடன்களை இந்த அரசு தள்ளுபடி செய்திருக்கிறது என்று கேட்கிறேன். ஒட்டுமொத்தமாகக் கடன்பட்ட அத்தனை விவசாயிகளுக்கு ஆர்.ஆர்.சி. பைல் செய்து டிகிரி ஆக்கி எந்த நேரத்திலும் சொத்துக்களை ஜப்தி செய்கின்ற ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம் என்பதைத் தவிர, ஏழைகளுக்காக இருக்கிறோம் ஏழைகளுக்காக இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு தொடர்ச்சியாக அந்த மக்களை ஒடுக்குவதற்கு, நசுக்குவதற்கு, அவர்களை எந்த அளவிற்குக் கஷ்டப்படுத்த முடியுமோ அந்த அளவிற்குக் கஷ்டப்படுத்துகிறார்கள்.

நான் கேட்கிறேன், ஏன் இந்தக் கடன்கள் முழுவதையும் தள்ளுபடி செய்யக் கூடாது? ஏராளவிற்கு நல்ல முயற்சி செய்து விளைச்சலை உண்டாக்க நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால் அதில் பெயிலியர் ஆகிவிட்டது. எத்தனையோவித உற்பத்தி சம்பந்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, பண்ணை சம்பந்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, தோட்டம் சம்பந்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, அதில் போட்ட முதலுக்காக, சரியாகப் பலன் கிடைக்கவில்லை என்பதற்காக அதை ஆபீசர் தான் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறோமா?

நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். பாம்பனில் நீலகண்டன் பிரதர்ஸ் என்ற காண்ட்ராக்டர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். இயற்கையின் சீற்றத்தின் காரணமாக அவர் வாங்கி வைத்திருந்த 22 இலட்சம் ரூபாய் சாமான்கள் அத்தனையும் கடல் தண்ணீரில் போய் விட்டதாக அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் வந்திருக்கிறது. இந்த அரசு அந்தத் தொகையைக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதைக் கொடுப்பதாக அரசாங்கமும் ஒத்துக்கொண்டிருப்பதாக அறிகிறேன். இப்படி இவர்களுக்கு, ஒரேயொரு காண்ட்ராக்டருக்கு, கடலிலே சாமான்கள் போனதற்காக 22 இலட்சம் ரூபாயைக் கொடுக்கின்ற நேரத்தில் ஒரு விவசாயி 100 ரூபாய் 200 ரூபாய் 300 ரூபாய் வாங்கியுள்ள சாதரண விவசாயிகளுக்கு ஏன் தள்ளுபடி செய்யக்கூடாது என்று கேட்கிறேன். தொழிலாளர்களுக்காகவும், சாதாரண மக்களுக்காகவும் வந்திருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர நடைமுறையிலே எந்தவிதமான ஏற்பாடும் செய்யவில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சாலக்கிராமம் என்ற பகுதியிலே நானும் தொழிலாளர் நல மந்திரியும் சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது அங்குள்ள பஞ்ச நிலை முழுவதையும் எடுத்துச் சொல்லி வந்தேன். அந்த நேரத்திலே, அமைச்சரவர்கள் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருக்கும் அந்த நேரத்திலேயே, 11 இடங்களில் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு வீட்டிலே தண்ணீர் இருந்த பாத்திரத்தைக் கொட்டிவிட்டு அதை ஜப்தி செய்து இருக்கிறார்கள். இன்னொருவர் வீட்டிலே கேப்பைக்கூழ், சட்டியிலே மாவு கரைத்து வைத்திருந்தார்கள். அந்த மாவைக் கீழே கொட்டிவிட்டு அந்தப் பாத்திரத்தை எடுத்து வருகிறார்கள். அது மட்டுமல்ல, கிணற்றிலே தண்ணீர் இல்லை என்பதற்காகப் பம்பு செட்டைக் கழற்றி வீட்டிலே வைத்திருக்கிறார்கள். அதையும் ஜப்தி செய்கிறார்கள். இப்படியாக ஒரு நாளில் 11 இடங்களில் சாலக்கிராமம் என்ற பகுதியில் ஜப்தி செய்திருக்கிறார்கள். நான் இதைப்பற்றி அமைச்சரிடத்தில் சொன்னேன். அவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? ''நாங்கள் என்ன செய்வது? எங்களுக்கு விரோதமான முறையில் நடவடிக்கை எடுக்கும் வகை





யில் ஒருசில அதிகாரிகள் இருந்து கொண்டு இருக்கிறார்கள்' என்று சொல்கிறார்கள். எவ்வளவு பரிதாபகரமான விஷயம் பாருங்கள். ''எங்களுக்கு விரோதமாக நடைமுறையிலே எங்களுக்கு ஒத்துவராத, நாங்கள் ஆள்வதைச் சகிக்காத ஒரு சில அதிகாரிகள் இங்கே இருக்கிறார்கள், அவர்களின் நடவடிக்கைகள் காரணமாகத்தான் இந்த நடவடிக்கை நடந்து கொண்டிருக்கிறது'' என்று எனக்குப் பதில் சொல்கிறார்கள். இது சரியா? இப்படி ஒரு அரசு சொல்வது சரியா? என்று நான் அப்பொழுதே எடுத்துச்சொன்னேன்.

அது மட்டுமல்ல, பஞ்சனூரிலே மதிப்பிற்குரிய தொழிலாளர் நல மந்திரி அவர்களின் கூட்டம் நடக்கப்போகிறது. இன்றைக்கு அந்தக் கூட்டம் நடக்கப்போகிறது என்றால் நேற்று மாலை 5 இடங்களில் ஜப்தி செய்திருக்கிறார்கள். அதையும் நான் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இப்படிப்பட்ட கொடுமைகள் நடக்கின்றன என்று சொன்னேன். அதற்கு, என்ன செய்வது என்று சொல்லி அவரும் என்னுடன் சேர்ந்து அழுதார்கள். இப்படிப்பட்ட ஜப்திகள் எல்லாயிடங்களிலும் நடக்கிறது என்பதை எடுத்துச் சொன்னேன்.

[மாலை 4—10]

ஒரு லிஸ்டையே கொடுத்தேன். எவ்வளவு ஜப்தி செய்யப்பட்டிருக்கிறது? என்னென்ன சாமான்கள் ஜப்தி செய்யப்பட்டிருக்கின்றன? யார், யாரிடத்திலே ஜப்தி செய்யப்பட்டிருக்கின்றன என்ற விவரம் கொடுத்திருக்கிறேன். ஏழை விவசாயிகள், பணக்கார விவசாயிகள் என்ற பாகுபாடு கிடையாது. ஒட்டு மொத்தமாக எல்லா வர்க்கத்திற்குமே ஜப்தி செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டிருக்கிறது.

அதே நேரத்திலே நான் பத்திரிகையிலே பார்த்தேன். ஒரு அதிகாரியானவர் போன இடத்திலே கன்னா பின்னா என்று பேசுகிறார்கள். ஆகவே, எங்களுக்குப் பாதுகாப்பு தரவேண்டி நீங்கள் துப்பாக்கித் தர வேண்டுமென்று கேட்டிருப்பதாக, பத்திரிகை வாயிலாக செய்தி பார்த்தேன். அதிகாரி கேட்கிறார். வசூலுக்குப் போகக் கூடிய நேரத்திலே எந்த அரசு காலத்திலாவது அதிகாரிகள் கையிலே துப்பாக்கி வேண்டுமென்று கேட்ட காலம் உண்டா? அப்படிப்பட்ட நிலையிலே இன்றைக்கு அரசு, அந்த அளவு முடமாகப் போய்விட்டது. ஆனால் நான் சொல்கிறேன், * * * அந்த நிலைமை வேண்டாமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சென்ற ஆண்டு புயல், வெள்ளம் வந்தது. அந்த நேரத்திலே மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் அமெரிக்க நாட்டிலே இருந்தார்கள். ஒரு உதாரணம் சொல்வார்கள், ஆமை நுழைந்த வீடும், அமீனா நுழைந்த வீடும், அமெரிக்காவில் காலெடுத்து வைத்த அரசியல்வாதியும் என்றைக்குமே விளங்கியது கிடையாது என்று சொல்வார்கள். அதைப் போல்தான் இன்றைக்கு நாட்டு நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எந்த நேரத்திலே, எந்தச் சந்தர்ப்பத்திலே என்ன நிகழுமோ என்று எங்களுக்கெல்லாம் சந்தேகமாக இருந்து கொண்டிருக்கிறது.

கன்னியாகுமரிக்குச் சென்ற மாதம் சென்றிருந்தோம். அங்கு எங்குமே அண்ணா கொடியையே காணோம். ஆளும் கட்சி உறுப்பினர்களே அதைப் பார்த்தார்கள். நிலைமை எப்படி ஆகிவிட்டது பார்த்தீர்களா என்று ஆளுங் கட்சி நண்பர்களிடத்திலே சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்த அளவுக்கு இன்றைக்குத் தமிழ்நாடு மாறியிருக்கிறது. இதை கணக்கிலே எடுத்துக் கொள்ளுங்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையிலே நாங்கள் கேலிக்கும் கிண்டலுக்கும் பேசவில்லை. மிகவும் வருத்தத்தோடு சொல்கிறேன். இந்த அரசு 5 ஆண்டுகள் ஆள வேண்டுமென்பதிலே எங்களுக்கு அக்கறை இருக்கிறது. அதனாலே, இங்கே தீர்மானங்கள் வந்த நேரத்திலே அரசை ஆதரித்துப் பேசியிருக்கிறோம். ஆனால், நிலைமை இப்பொழுது மாறி இருக்கிறது. அந்த நிலைமை எங்களால் வந்தது அல்ல. 'உங்களால் வந்தது என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன்.

ஒரே ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய பகுதிக்கு முதல்வர் அவர்கள் வருவதற்கு முன்பு அமைச்சர் பி.டி. சரஸ்வதி வந்தார்கள்—புயல் பகுதிக்கு. ஆனால் அந்த இடத்திற்குக் கூட வராமல் 'ஸ்டேட்மெண்ட்' கொடுக்கிறார்கள். கிழக்குப் பகுதியிலே அமைச்சர் பி.டி. சரஸ்வதி அவர்கள் மண்டபத்திலே தங்கிவிட்டு போட்டிலே பாம்பன் போய்விட்டு, இராமேஸ்வரம் போகாமல் கோவிலுக்குள்ளே 10 அடி தண்ணீர் வந்திருக்கிறது என்று 'ஸ்டேட்மெண்ட்' விடுகிறார்கள். ஏன் இந்த நிலைமை? அந்த இடத்திற்குப் போனால் என்ன? இராமேஸ்வரம் பெரிய டவுன்ஷிப். ஆயிரக்கணக்கான மக்கள் வசிக்கிறார்கள். அங்கு 10 அடி தண்ணீர் வந்திருக்கிறது என்று ஸ்டேட்மெண்ட் விடுகிறார்கள். அங்கு போய் பார்த்தால் தண்ணீரே வரவில்லை.

அதுமட்டுமல்ல. கடந்த புயல் வெள்ளத்தின்போது, பரமக்குடியிலே பகல் 11 மணிக்கு இடி விழுந்து, கணேசன் என்ற ஏழைத் தொழிலாளி—குயவர்—அவருக்குச் சொந்தமான 1,500





ரூபாய் பெருமானமுள்ள இரண்டு மாடுகள் இடி விழுந்த காரணத்தினால் இறந்துவிட்டன. தாசில்தாருக்கு ரிப்போர்ட்டு அனுப்பப்பட்டது. அரசாங்கத்திற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. கலெக்டருக்குத் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று வரையிலும் அந்த ஏழைத் தொழிலாளிக்கு எந்தவிதமான வசதியும் செய்யப்படவில்லை. நாங்கள் அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்றெல்லாம் பத்திரிகையிலே பெரிய விளம்பரம் செய்கிறார்கள். எங்களைக் காட்டிலும் யாரும் செய்ய முடியாது என்றும் சொல்கிறார்கள். ஆனால் என்ன நிலைமை? சாதாரண தொழிலாளிக்கு காலை 11 மணிக்கு இடிவிழுந்ததனால் இறந்துவிட்ட மாடுகளை வாங்க ஈடு செய்யப்பட்டிருக்கிறதா என்றால் கிடையாது. கலெக்டர் அவர்கள் இடத்திலே கேட்டால் சட்டத்திலே இடம் இல்லை என்று சொல்கிறார். நான் காரியதரிசியிடம் நேரில் கேட்டேன். சட்டத்திலே இடம் இல்லை என்று சொல்லுகிறார். இது சரிதானா, இது நியாயந்தானா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அது மட்டுமல்ல. அந்தப் பகுதியிலே கிட்டத்தட்ட 2,000 ஏக்கருக்கு மேல் கடல் நீரில் மூழ்கிவிட்டது. அந்த விளை நிலம். அதில் உப்புத் தண்ணீர் நிரம்பி விட்டது. இன்றைக்கு நல்ல நிலங்கள் எல்லாம் கடல் உள்ளே, ஒரு கிலோ மீட்டர், 2 கிலோ மீட்டர் வந்ததன் காரணமாக நல்ல விளை நிலங்கள், நட்டது, நடப் போவதான அத்தனை நிலங்களும் போய்விட்டது. இதற்கு ஏதாவது ஏற்பாடு செய்து கொடுங்கள் என்று கேட்டார்கள். ஏதாவது ஏற்பாடு செய்தார்களா என்று பார்த்தால், ஒன்றும் கிடையாது. புயல் நிவாரணப் பணிகளை செய்கிறோம் செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இன்று வரையிலும் ஒன்றுமே கிடையாது.

முத்துசாமி என்ற ஒரு சாதாரணத் தொழிலாளி. அவர் போட்டுகள் செய்பவர். 40,000 ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் கடலில் போய்விட்டது. ரிப்போர்ட் செய்து கலெக்டர் நேரடியாகப் பார்த்து உண்மை என்று ரிப்போர்ட் ஆகியிருக்கிறது. ஆனால் இதுவரையில் அவருக்கு எந்தவிதமான உதவியும் கிடையாது. ஆனால் நீலகண்டன் பிரதர்ஸ்க்கு 20 லட்சம் ரூபாய் கொடுக்கிறீர்கள். இது சாதாரண தொழிலாளிகள் அரசா அல்லது முதலாளிகள் அரசா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

பரமக்குடியிலே எங்கு பார்த்தாலும் தலையீடு. எந்த மூலையில் பார்த்தாலும் தலையீடு. புயல் நடக்கக்கூடிய காலத்திலே அந்தப் பகுதியில் 3 பள்ளமான பகுதி குடியிருப்பு அங்குள்ள குடிமக்கள் அத்தனை பேர்களையும் தாசில்தார் அவர்கள், பந்தோபஸ்தான இடங்களுக்கு மாற்றி 3 நாட்களுக்குச் சாப்பாடு கொடுத்து வைத்திருந்தார். ஆனால் 4 ஆம் நாள் காலையிலே

ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் அதை அரசியல் ஆக்குகிறார்கள். அது வேறு ரூபத்திலே வருகிறது. 200 பேர்களுக்கும் 50 கிலோ அரிசி கொடுக்கக்கூடிய நிலையிலே இருந்தார்கள். அப்போது என்ன கேட்டாலும் கொடுக்கக்கூடிய நிலையிலே அரசு இருந்தது. இராமநாதபுரத்தைப் பொறுத்த வரையிலே திருப்பாலைக்குடியில் 360 மூட்டை அரிசி வாங்கிக் கொடுத்தோம். புயல் நிவாரணப் பணியில் கலெக்டர், ஆர்.டி.ஓ., பி.டி.ஓ. மற்றும் எல்லா அதிகாரிகளும் நல்ல முறையிலே பாடுபட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று பாடுபட்டார்கள். ஆனால் பரமக்குடியைப் பொறுத்தவரையில் இது வேறு ரூபம் எடுத்தது * * * * * * தாலூகா ஆபிசிலே தகாத முறையிலே நடந்து கொண்டதன் காரணமாக தகராறு ஏற்படுகிறது. முத்துசாமி என்கின்ற நிருபர் அங்கே தெருவிலே போகும்போது அவரை செருப்பால் அடிப்பேன் என்று சொல்லி அடிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அது போலிஸ் ஸ்டேஷனிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதன் பேரில் இன்று வரை எந்தவிதமான நடவடிக்கையும் கிடையாது. தாசில்தாரை தாக்கியது சம்பந்தமாக ரிப்போர்ட் செய்து இருக்கிறார். எந்தவிதமான நடவடிக்கையும் இது வரையில் எடுக்கப்படவில்லை. (மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

[மாலை 4—20]

திரு. த. இராமசாமி : சட்டப் பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசாமி அவர்கள் பேசுகிற போது * * * * *
என்று சொல்லியிருக்கிறார்கள். * * *
என்பதற்குச் சான்றிதழ் வைத்து இருக்கிறாரா, * *
என்று நிரூபிக்கத் தயாரா, என்று சபாநாயகர் அவர்களே, நான் உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : எந்த * * என்று நான் பெயர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

திரு. த. இராமசாமி : பெயர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றாலும் * என்று சொல்லி இருக்கிறார்.

*திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் பெருமான் அவர்களுடைய உரை மீது காங்கிரஸ் சார்பிலே ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அரசாங்கம்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.





நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்து அதைச் செயலாக்க வேண்டுமென்று இருக்கின்றது. ஆனால் அதே நேரத்திலே அந்தத் திட்டங்கள் எல்லாம் சரியான முறையிலே அமல் படுத்தாத நிலையிலே இருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏன் என்று பார்த்தால், நிர்வாகத்தில் பல சிக்கல்கள இருப்பதை நாம் பார்த்து வருகிறோம். நிர்வாகத்தைப் பார்க்கிற போது நிர்வாகத்திலே எல்லாம் ரெவின்யூ டிபார்ட்மெண்டின் ஒரு மானாபலி இருக்கிறது. நான் ரெவின்யூ டிபார்ட்மெண்ட்டைக் கோளாறு சொல்லவில்லை. நம்முடைய ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள் உயர்ந்த ரகத்தில், உயர் நிலையில் உள்ளவர்கள், நான் அவர்களைக் குறை கூற வரவில்லே. ஆனால், நாம் பழைய காலத்தில் இருந்து பின்பற்றி வரக்கூடிய ஒரு முறை ஒரு ரெவின்யூ அதிகாரி ஒரு இலாகாவில் சேர்ந்தாற்போல் இரண்டு வருஷத்திற்கு மேல் இருப்பது இல்லை. அந்த இலாகாவில் அவர் ஒரு திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று நினைக்கிறபோது அவர் இரண்டு வருஷத்திற்கு மேல் அங்கு இல்லாமல் மாற்றப்பட்டு வேறு இலாகாவிற்கு மாற்றப்படுகிறார். அவர் தனது கருத்துக்களை அரசாங்கத்திற்குச் சொல்வதற்கு முன்பே அவர் வேறு இலாகாவிற்கு போய்விடுகிறார். மற்றொரு ரெவின்யூ அதிகாரி வருகிறார். அவர் வந்ததும் முதலில் இருந்து திரும்பவும் ஆரம்பித்து காரியங்களைச் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இந்த மாதிரி நிர்வாகத்தில் ஒரு அமைப்பு இருக்கக்கூடிய காரணத்தால் நம்முடைய திட்டங்களை எல்லாம், நாம் கொண்டு வருகிற திட்டங்களை எல்லாம் சரியான முறையில், நேரத்திலே அமல் நடத்த முடியாமல் போய்விடுகிறது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்காக நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது தமிழ் நாட்டிற்கு மட்டும் அட்மினிஸ்டிரேடிவ் ரிபார்ம்ஸ் கமிட்டி நியமித்து அந்த நிர்வாகத்தை எப்படி சீரமைக்க வேண்டும் என்று பரிசீலித்து, அதைச் செய்தால் ஒழிய நம்முடைய திட்டங்களை நாம் வேகமாக அமல்படுத்த முடியாது என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், டெவலப்மெண்ட் ப்ராஜக்ட்ஸ் நடந்து கொண்டு வருகிறது. ஆனால் டெவலப்மெண்ட் ப்ராஜக்ட் என்று கொண்டுவருகிற நேரத்தில், அந்த டெவலப்மெண்ட் ப்ராஜக்ட் ...............(மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய கனம் உறுப்பினர் திரு. சிவசாமி பேசுகையில் * * * என்று பேசியது அவ்வளவு பொருத்தமாக இல்லை. * * அதே

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

[பேரவைத் துணைத் தலைவர்] [1979 பிப்ரவரி 15

போன்ற * * * என்ற வாதம் சரியல்ல. பெயர் சொல்லவில்லை என்றாலும் அது சரியல்ல. (திரு. செ. சிவசாமி எழுந்தார்) நீங்கள் பதில் வாதம் செய்ய இடம் இல்லை. என் னுடைய திர்ப்பை நான் சொல்கிறேன். *** என்று சொன்னதை யும், *** என்பது சரியல்ல. அந்த இரண்டையும், பத்திரிகை களிலும் போட வேண்டாம், பதிவேட்டில் இருந்தும் நீக்க வேண் டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : அவர் *** என்றுகூட சொல்ல வில்லை. குறிப்பேட்டைப் பார்த்தால் தெரியும். சொல்லாத ஒன்றை எதற்காக எடுக்க வேண்டும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்லியிருந்தால் அதை நீக்கிவிட வேண்டும்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : தலைவ ரவர்களே, இந்த டெவலப்மெண்ட் போர்ட்போலியோஸ் எல் லாம் "லா அன்ட் ஆர்டர்" இருக்கக்கூடிய அதிகாரிகள் கையில் இருக்கிறது. லா அன்ட் ஆர்டரைச் செயல்படுத்தும் அதிகாரிகளால் டெவலப்மென்ட் பிராஜக்ட்டைச் சரியான முறையில் அமல்படுத்த முடியவில்லை. ஏனென்றால் தங்கள் கையிலே சட்டத்தை, வைத்துக்கொண்டு எப்படி இன்னொருவரிடம் போய் பார்ப்பது என்ற அச்சம், நாணம் இருக்கிறது. அவர்களும் ஸ்பெஷல் நாலெட்ஜ் பெற்றவர்களாக இருக்க முடியாது. அதனால் இதற்குத் தனியாக ஒரு அதிகாரியைப் போட வேண்டும். சட்டம், ஒழுங்கு இவைகளைக் கையில் வைத்துக்கொண்டிருக்கிற அதிகாரிகள் இந் தப் பொறுப்பை வைத்துக்கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஸ்பெஷலைஸ்ட் இலாகாக்கள் இருக்கின் றன. அகிரிகல்சர், என்டோமென்ட் இந்த மாதிரியான இலா காக்கள் இருக்கின்றன. அதில் தேர்ச்சி பெற்ற அதிகாரிகளைப் போட வேண்டும். ஒரு அதிகாரியைப் போட்டு, ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் அவரை அங்கேயிருந்து மாற்றி விடுகி றார்கள். மாற்றிவிட்டு வேறொரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போடுகிறார்கள். அப்படி மாற்றிப் போட்டால் நிச்சயமாக அந்த இலாகா நல்ல முறையில் செயல்பட முடியாது, முன்னேற முடி யாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



1979 பிப்ரவரி 15]

[திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்]

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில்—புதுக்கோட்டை மாவட்டத்தில்-கந்தர்வக் கோட்டை தாலுக்காவிலே குடிதண்ணீ ருக்காக பைப் போடப்பட்டு வெகுநாட்களாகியும் அந்த பைப் பிலே தண்ணீர் வரவில்லை. மழை பெய்தால் பைப் தண்ணீருக் குள் மூழ்கி விடுகிறது. அந்தக் கிராமத்து ஜனங்கள் எல்லாம் தண்ணீர் எடுக்க வேண்டுமென்றால் இரண்டு மைல் தூரத்துக்கு மேல் போய்தான் தண்ணீர் கொண்டுவர வேண்டும். இதற்கு முன்னே கூட அதுபற்றி அரசுக்குச் சுட்டிக்காட்டியிருக்கி றேன். இருந்தபோதிலும் இன்னும் அந்த வேலை முடிவடைய வில்லை. எப்படியாவது கூடிய விரைவிலே அங்கு வேறு பைப் போட்டு குடி தண்ணீர் வசதி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமப்புறங்களிலே மருத்துவமனை இருப் பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. ஆனால் கந்தர்வக் கோட்டையில் ஒரு மருத்துவ மனை இருக்கிறது. மருத்துவ மனையைச் சுற்றி காம்பவுண்ட் கிடையாது. அதனால் அங்கே கழுதையும், குதிரையும் வந்து படுத்துக் கொள்கின்றன. சுகா தார நிலை மிகவும் மோசமான அளவுக்குக் கெட்டுப்போய் இருக் கிறது. கழுதையும், குதிரையும் அங்கு வராமல் இருக்க உடனடி யாக காம்பவுண்ட் கட்ட வேண்டும். அதோடு அங்கே இப்போது லேடி டாக்டர் கிடையாது; லேடி டாக்டரையும் நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புதுக்கோட்டை கல்லூரியில் ஒரு சம்பவம் நடந்தது. அதனால் மாணவர்களுக்கும், போலீசாருக்கும் கலகம் நடந்து. லத்தி சார்ஜ் கூட நடைபெற்றது. போலீசார் மாணவர்கள்மேல் கேஸ் போட்டிருக்கிறார்கள். இப்போது வழக்கு கோர்ட்டில் இருக்கிறது. மாணவர்களுக்கு பரீட்சை நடக்க இருக்கின்றது. இந்த நேரத்தில் அவர்கள் கோர்ட்டுக்குப் போய்வருவது அவர் களுடைய படிப்புக்கு கேடு விளைவிப்பதாக இருக்கிறது. ஆகை யால் நான் அரசுக்கு ஒரு வேண்டுகோள் விடுவிக்க விரும்புகிறேன். அதுபற்றி ஆர்கியூ செய்யவில்லை, ஒரு ரிக்குவஸ்ட்டுதான். கோர்ட்டில் இருக்கிற வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டால் அவர்களுடைய பரீட்சைக்கு இடையூறு இல்லாமல் இருக்கும். அதோடு, இனிமேல் இந்த மாதிரியான சம்பவங்கள் நடக்காமல் இருக்க நான் இந்த அரசுக்கு வாக்குறுதி அளிக்கக் கடமைப்பட் டிருக்கிறேன். ஆகையால் வழக்கை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 4-30]

புதுக்கோட்டை ஜில்லாவிலே கலெக்டர் ஆபீஸ் இருக்கிறது. அந்த ஆபீசை எடுத்த நேரத்திலே அந்த ஆபீஸ் கட்டடத்திலே மியூசியம் வைக்கப்போவதாகவும் சுற்றி இருக்கிற இடத்திலே கட்டிடங்களைக் கட்டி அரசு அலுவலகங்களை வைக்கப் போவ

தாகவும் சொல்லி இருக்கிறார்கள். நூறு ஏக்கர் நிலத்திலே அந்தக் கட்டிடம் இருக்கிறது. ஆனால் இப்போது அதன் முன் பகுதியிலே மட்டும் ஆபீஸை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மற்ற பகுதிகள் எல்லாம் காடாகவே இருக்கின்றன. அப்படி வீணாகக் கிடக்கின்ற அந்த நிலங்களை நாம் அப்படியே விடாமல் ஒன்று அலுவலகக் கட்டிடங்களைக் கட்ட வேண்டும் அல்லது அங்கிருக்கக்கூடிய வீடு இல்லாத மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். இல்லை என்றால் அங்கு ஒரு கல்லூரியையாவது அமைக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரசாங்கத்திலே ஏதோ 3 பாலிடெக்னிக் வைப்பதாகக் கூறியிருக்கிறார்கள். மூன்று பாலிடெக்னிக் தமிழ்நாட்டுக்கு வரப் போவதாக சொல்லிக் கொள்கிறார்கள். எங்களுடைய மாவட்டம் மிகவும் பின் தங்கிய மாவட்டமாக இருப்பதால் அந்த மூன்றிலே ஒரு பாலிடெக்னிக்கை எங்களது மாவட்டத்திலே ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கொடைக்கானல் டவுன்சிப். அதன் வருமானம் மிகவும் குறைந்த வருமானமாக இருக்கிறது. அங்கிருக்கக்கூடிய வர்களுக்கு அந்த வருமானம் போதுமானதாக இல்லை. நான் இது குறித்து அரசாங்கத்திற்கும் எழுதி இருக்கிறேன். அந்த வருமானத்தை உயர்த்த வேண்டும் என்றால் அந்தப் பகுதியிலே டோல்ஸ் கலெக்ட் பண்ணுவதற்கு அனுமதிக்க வேண்டும். ஏற்கெனவே ஆளுநர் ஆட்சியின்போது இவ்வாறு கலெக்ட் பண்ண வேண்டும் என்று சொன்னார்கள். அது போன்று இப்போதும் டோல்ஸ் கலெக்ட் பண்ணுவதற்கு அனுமதி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து டவுன்ஷிப் ஒரு பஸ் ரன் பண்ணுவதற்கு முடிவு செய்திருக்கிறது. அதற்கும் பெர்மிஷன் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு மினி லாட்டரி நடத்துவதற்கும் அனுமதி தரவேண்டும் என்று நான் அரசாங்கத்தைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பூந்தாளை கிராமம் கொடைக்கானலிலே இருக்கிறது. அங்கு குண்டம்பாச்சி அணை கட்டுவதற்கு அதாவது 5 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டுவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இதுவரை யில் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. இப்போது அது எந்த நிலையிலே இருக்கிறது என்பது எங்களுக்கு தெரிய வில்லை, அரசாங்கம் ஒரு அனவுன்ஸ்மென்ட் செய்யவேண்டும். அதைக் கட்டப் போகிறோம், அல்லது இன்னும்







'டிலே' ஆகும் என்று சொல்ல வேண்டும். அப்படிச் சொன்னால் அங்கே இருக்கக் கூடியவர்களுக்கு அரசாங்கத்தின் நிலை கொள்ளத் தெளிவாகத் தெரியும். ஆனால் இப்போது அவர்கள் ஒன்றும் புரியாத நிலையில் இருக்கிறார்கள்.

இந்தத் தமிழ்நாட்டிலே இப்போது பி. டி. ஆசிரியர்கள் இருக்கிறார்கள். 1977 ஆம் ஆண்டு முதல் அவர்களுடைய எஜுகேஷனல் ட்ரெயினிங் நிறுத்தப்பட்டிருக்கிறது. 1977 வரை படித்தவர்கள் 3,500 பேர் இருக்கிறார்கள். இப் போது காலம் கடந்து கொண்டே போகிறது. அவர்களுக்கு ஓவர் ஏஜ் ஆகிவிட்டால் அரசாங்கத்திலே வேலை கிடைக் காது. ஆகவே அந்த 3,500 பேர்களுக்கும் அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்பது தெரியவில்லை. வேலை கொடுக்கப் போகிறதா? அல்லது அவர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் ஏதாவது செய்யப்பட்டு இருக்கிறதா என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். இதற்கு இந்த அரசாங்கம் கூடிய சீக்கிரம் ஒரு நிவாரணம் செய்யும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

அடுத்து இராமநாதபுரம் ஜில்லாவை இரண்டாகப் பிரிக்கப் போவதாக இருந்தது. ஆனால் இப்போது கோயம் புத்தூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிறார்கள். இராமநாதபுரம் ஜில்லா ரொம்பப் பெரிய ஒன்று. அங்கே ஒரு பக்கத்திலே பார்த்தால் வறட்சி, இன்னொரு பக்கத்திலே பார்த்தால் நல்ல பிஸினஸ் சென்டராக இருக்கிறது. இந்த இரண்டினையும் பார்க்கும்போது ஏற்றத்தாழ்வு அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறது.

இதை மாற்றி, இதைத் திருத்தி வரட்சியான பகுதிகளை டெவலப் செய்யக்கூடிய அளவிற்கு அரசு செய்யவேண்டும் என்றும் இரண்டாகப் பிரித்தால்தான், சிறிய ஜில்லாவாக இருந்தால்தான் அட்மினிஸ்ட்ரேஷனுக்கு இலகுவாக இருக்கும். ஆகவே அதைக் கூடிய சீக்கிரம் பிரிக்கவேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்ள விழைகிறேன்.

அடுத்தபடியாக, ப்ரோஹிபிஷன் பாலிஸி மதுவிலக்குத் திட்டத் தை இந்த அரசு கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். காரணம், அது ஏழை மக்களுக்கு உதவி செய்யக்கூடிய திட்டம். அதே நேரத்தில் இப்போது சாராயம் காய்ச்சிக் கொண்டிருப்பவர்களைப் பிடித்து ஜெயிலில் போடுகிறார்கள். பிடித்துப்போட்டு ஆறு மாதங்கள் கழித்த பிற்பாடு அவர்கள் விடுதலையாகிறார்கள். விடுதலையான பிறகு அவர்கள் அதே தொழிலைச் செய்கிறார்கள். வேறு தொழில் அவர்களுக்குத் தெரியவில்லை. ஆகவே இவர் களுக்கு மாற்றுத் தொழில் அமைத்துக் கொடுக்க அரசு முன்வரவேண்டும். இல்லையென்றால், இந்தச் சாராயம்

காய்ச்சும் தொழில் நிற்கவே நிற்காது. இல்லையென்றால், ஆறு மாதங்கள் கழிந்த பிறகு அவர்கள் வெளியே வந்தால் மறுபடியும் அதே தொழிலைத்தான் செய்வார்கள். ஆகவே அரசாங்கம் ஒரு மாற்றுத்திட்டத்தைக் கொண்டு வந்து இந்தச் சாராயம் காய்ச்சுகிறவர்கள் வேறு தொழிலில் ஈடுபடுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது விவசாய மாநாடுகள் நடக்கின்றன. விவசாயிகள் போராட்டம் என்றெல்லாம் சொல்கிறார்கள். இதற்குத் தீர்வு காண வேண்டுமென்றால் நாம் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் சரி அல்லது ஒவ்வொரு இடத்திலும் மார்க்கெட்டிங் சொசைட்டி வைக்கவில்லை என்றால் விவசாயிகளின் பேரில் உள்ள கடன் பளு ஏறிக்கொண்டே போகும். இன்று வேண்டுமானால் கடன்களை வஜா செய்யலாம் அல்லது தள்ளுபடி செய்யலாம். ஆனால் அவர்கள் மேலும் மேலும் கடன்கள் வாங்க ஆரம்பித்தால் எப்படி தள்ளுபடி செய்யப் போகிறீர்கள்? ஆகவே விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு நியாய விலை கிடைக்கக் கூடிய அளவிற்கு மார்க்கெட்டிங் சொசைட்டீஸ் ஏற்படுத்திக் கொடுத்தால்தான் இந்த விவசாயிகளின் மேல் இருக்கக் கூடிய கடன் பளு குறையும் என்று கூறிக் கொண்டு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

*<u>திரு. பொ. விஜயராகவன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின்மீது நான் சார்ந்திருக்கிற ஜனதா கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்த உரையைப் பொறுத்தவரையில் என்னுடைய கணிப்பெல்லாம் இதில் திட்டவட்டமாக ஒன்றுமில்லை என்று நான் துணிவோடு சொல்லமுடியும். இங்கே பூசி மெழுகினாற்போல் ஒரு உரையைத் தயாரித்து அளித்திருக்கிறார்களே தவிர திட்டவட்டமான கருத்துக்களை இந்த உரை தாங்கி நிற்கும் என்று எதிர் பார்த்தால் ஒருவேளை நாங்கள் அப்படி எதிர்பார்த்தது எனவோ தவறுதான். ஆனால் இந்த அரசைப் பொறுத்த வரையில் சட்டம் ஒழுங்கு பிரச்னையைப் பொறுத்தவரையில் இந்த அரசு சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டை நான் சொல்ல விழைகிறேன். உதாரணத்திற்குப் பல சொல்ல முடியும். பல நிகழ்ச்சிகள் இந்த இரண்டாண்டுகளில் நடந்திருக்கின்றன. அண்மைக் காலத்தில் இரண்டுமூன்று மாத காலத்தில் நடைபெற்ற செயல்கள் இந்த நாட்டு மக்களின் நெஞ்சத்தினை விட்டு மாறாத செயல்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், கடந்த டிசம்பர் 20-ம் தேதி வெள்ளிக்கோடு என்ற பகுதியில் ஒரு பேருந்து திருமதி இந்திரா காந்தி அம்மையார் மீது பாராளுமன்ற நடவடிக்கை எடுத்ததை எதிர்த்து அவர்கள் கட்சியினரால்





நடத்தப்பட்ட போராட்டத்தில் அந்தப் பேருந்து தீக்கிரை யாக்கப்பட்டது என்பது மட்டுமல்ல பத்து பேர்கள் அங்கே உயிரோடு காளிக்கு பலி கொடுப்பார்கள் என்று முந்திய காலத்தில் சொல்வார்கள் அதேபோல் பலி கொடுக்கக் கூடிய அளவிற்கு பத்துபேர்கள் தீக்கிரையாக்கப் பட்ட சம்பவம் நாட்டு மக்கள் நெஞ்சத்தில் உள்ள துயர சம்பவம் என்பதை நான் எடுத்துச் சொல்லி தெரியவேண்டியதில்லை. அதை முன்னமேயே தடுத்திருக்கலாம், தவிர்த்திருக்கலாம், இதற்கு முன்னால் ஏற்பட்ட பந்த்கள் அல்லது போராட்டங்கள் இவற்றில் வன்முறை தலைதூக்காவண்ணம் அரசு எடுத்த தடுப்பு முறைகள், அடக்கு முறைகள் இதிலும் கடை பிடிக்கப்பட்டிருக்குமானால் இந்தச் செயல் தடுக்கப் பட்டிருக்கக்கூடும் என்பது என் கருத்து என்று சொல்லிக் கொள்ள விழைகிறேன்.

[மாலை 4-40]

அப்படி நிர்வாகம் தவறிய காரணத்தினால் இந்த மிகப் பெரிய சம்பவம் நடந்தது. நமது முதலமைச்சர் அவர்கள் நாகர்கோவிலுக்கு வந்த நேரத்தில் இந்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு 10 ஆயிரம் வழங்குவதாகச் சொன்னார்கள். எனக்குக் கிடைத்த தகவல், நான் இந்தச் சட்டமன்றத்திற்குப் புறப்பட்டு வருகின்ற வரையில் இந்த 10 ஆயிரம் ரூபாய் இன்னும் அளிக்கப்படவில்லை என்பதுதான். ஏன் இந்தக் கால தாமதம் என்பதை அரசிடம் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் இந்த விபத்தில் காயம் அடைந்தவர்களுக்கு . .

<u>திரு. எம். வின்சென்ட்:</u> (அமைச்சரின் பேரவை செயலர்) இந்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாயை 17-ஆம் தேதியன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளிக்கப்போகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. பொ. விஜயராகவன் :</u> அளிக்கப்போகிறார்கள் என்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை ஏன் அளிக்கவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. இன்னும் சொல்லப்போனால், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களுக்கு உதவி தருவதற்கு இந்த அரசு தயாராகவிடவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க காரியம் என்பதோடு இது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய காரியம் என்பதை நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் செயலுக்கு முழுக் காரணம் நான் சொல்ல வேண்டுமானால் திருமதி இந்திரா காந்தி கட்சியினர்தான் இந்தச் செயலுக்கு காரணம் என்பதை என்னால் எடுத்துச் சொல்ல முடியும்........

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து :</u> மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள், ஒரு குறிப்பிட்ட கட்சிதான் இதைச் செய்தது என்று திட்டவட்டமாக கூறுவது தவறு. இதில் பல கட்சிக்காரர்கள் சேர்ந்

திருக்கிறார்கள், எங்கள் கட்சியிலுள்ளவர்கள்தான் தூண்டிவிட்டார்கள் என்று குற்றச்சாட்டு சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, இவர்கள்தான் செய்தார்கள் என்று சொல்லப்படவில்லை. இவர்கள்தான் தூண்டினார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எப்படி இது நடந்தது என்று எங்களுக்கும் புரியவில்லை. இந்த நிலையில் எங்கள் கட்சிக்காரர்கள்தான் இதைச் செய்தார்கள் என்று திட்டவட்டமாகக் கூறுவதை நான் மறுக்கிறேன்.

<u>திரு. பொ. விஜயராகவன்</u> : நான் மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன். குற்றம் செய்வதைவிட குற்றம் செய்வதற்குத் தூண்டிவிடுவது மிகப்பெரிய குற்றம் என்று இந்தியன் பீனல் கோட் எடுத்துக் கூறுகிறது. குற்றம் செய்தவர்களுக்கும், குற்றம் செய்யத் தூண்டுபவர்களுக்கும் ஒரே தண்டனைதான் என்று இந்தியன் பீனல் கோட் சட்டம் கூறுகிறது.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து</u> : குற்றம் செய்தார்கள் என்று போலீஸ் குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறதே தவிர, குற்றவாளிகள் என்று இன்னும் யாரும் சொல்லவில்லை.

<u>திரு. பொ. விஜயராகவன்</u> : தங்கள் கட்சிக்காரர்கள் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறார்கள் என்று ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். நன்றி....

(திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் எழுந்திருந்தார்....)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : காங்கிரஸ் கட்சிக்காரர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது என்று நீங்கள் சொல்லுகிறீர்கள், அதை நீங்கள் ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்கிறார்கள். அவ்வளவுதான். வேறு ஒன்றும் இல்லை. திரு. விஜயராகவன், தொடர்ந்து பேசுங்கள்.

<u>திரு. பொ. விஜயராகவன்</u> : இன்றும், நாடாளுமன்ற உறுப்பினர் முருகையன் கொலை, இன்று காலையில் குறிப்பிடப்பட்டது. இங்கு நம்முடைய அவையில் உறுப்பினராக இருக்கின்ற தோழர் உமாநாத் அவர்களுடைய வீடு தாக்கப்பட்ட கொடுமை இப்படி பல்வேறு சம்பவங்கள் அடுக்கடுக்காக வந்து கொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம் அரசு பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும், இந்த வருடம் தமிழகத்திலுள்ள அணைகள் முழுவதிலும் நிறைய தண்ணீர் இருந்தது. இப்படி தண்ணீர் இருந்தும் எங்களுடைய மாவட்டத்தில் உள்ள அணைகளில் மறுகால் பாயக் கூடிய அளவுக்குத் தண்ணீர் இருந்தும், கரை ஓரங்களில் உள்ள நிலங்களுக்கு தண்ணீர் சரியாக விநியோகம் செய்யப்படாததினால



பல இடங்களில் பயிர்கள் காய்ந்தும், தீய்ந்தும் போயிருக்கின்றன. தண்ணீர் விநியோகம் சீராக இல்லாமல் இருந்ததற்குக் காரணம் இந்த அரசுதான் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஏறத்தாழ ஐந்தாறு ஆண்டுகளாக........

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u>: கடைமடைகளில் தண்ணீர் வருவதில்லை என்பது பொதுவான குற்றச்சாட்டு, எல்லா இடங்களிலும்—எங்கெங்கு பாசன வசதிகள் இருக்கின்றனவோ—அந்தப் பகுதிகளில் எல்லாம் டெயில் எண்ட்களில் சீராக தண்ணீர் விடுவதில்லை என்பது பொதுவான குற்றச்சாட்டு. இந்த அரசினால்தான் தண்ணீர் வரவில்லை என்று கூறுவது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுமென்றே இந்த அரசாங்கத்தின் மீது களங்கம் கற்பிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் சொல்லுகின்றார்கள். இந்த நிலைமை காங்கிரஸ் ஆட்சியிலும் இருந்தது; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் இருந்தது. ஆகவே இப்படிப்பட்ட பொதுவான ஒரு பிரச்சனைக்கு—இந்த அரசு மீது களங்கம் கற்பிக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. பொ. விஜயராகவன்</u> : துணைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம் இல்லை, இந்த வருடம் அது மிகவும் அதிகமாகி இருக்கிறது. (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : தயவு செய்து உட்காருங்கள். அவர் பேசும்போது குறுக்கிட வேண்டாம். முடிவிலே பதில் சொல்லும்போது பேசலாம்.

<u>திரு. பொ. விஜயராகவன்</u> : துணைத் தலைவர் அவர்களே இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதற்கொண்டு, எல்லா சட்டமன்றத் தொடரிலும் இதை நான் எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறேன். அவைகளைப் பழுது பார்ப்பதற்கு இந்த அரசு தயாராக இல்லை என்ற காரணத்தினால், இந்த நிலை ஏற்பட்டது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். முன் காலங்களில் அப்படி இருந்தது என்று சொல்கிறவர்கள், நாங்கள் முன்மாதிரியாக புரட்சிகரமாக நடத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறவர்கள் இதைத் தடுத்திருக்கலாம், நிவர்த்தி செய்திருக்கலாம்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : துணைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் சொல்கிறேன். முன்பிருந்த அரசு போல் அல்லாமல் இந்த அரசு பாசன வாய்க்கால்களைச் சீரமைக்க வேண்டுமென்ற அடிப்படையில் திட்டங்களைத் தீட்டி சீரமைத்

துக் கொண்டிருக்கிறோம். புதிதாக பல இடங்களில், எங்கெங்கு பாசன வசதிகள் அதிகமாகச் செய்ய வசதி இருக்கின்றதோ, அங்கேயெல்லாம் பாசன வசதித் திட்டத்தின் மூலம் சீரமைத்துக் கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த டிமாண்டு வருகின்ற நேரத்திலே எந்தெந்த இடங்கள் பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றனவோ, அவைகளைப்பற்றி கோடிட்டு, குறிப்பிட்டுக் காட்டினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து, உடனடியாக நிவர்த்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த நிலைமைகளையெல்லாம் அரசு நிவர்த்திப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அந்த நடவடிக்கைகள் வேகமாக, துரிதமாக எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் சித்தாறு பட்டினங்கால் கடையோரப் பகுதி நிலங்கள் பாதிக்கப்பட்டு, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கின்றது. மக்களுடைய தேவையை உணர்ந்து, உடனடியாக அங்கே நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

இன்னும் சொல்கிறேன். உலக வங்கியின் மூலம் கடன் வாங்கி மேலும் இந்தக் கால்வாய்களை யெல்லாம் சீர்படுத்தத் திட்டங்கள் போட்டு, செயல் படுத்தப் போவதாகக் கூறுகிறார்கள். அப்படி செயல்படுத்தப்படுகின்றபோது, எத்தகைய கட்சி மாச்சரியமும் இல்லாமல், பொதுவான முறையிலே விவசாயிகள் பயன் பெறக்கூடிய இடங்களிலே உள்ள இத்தகைய கால்வாய்களைச் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு வந்த நாள்முதல், இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட நாள் முதற் கொண்டு, குமரிமாவட்ட பஞ்சாயத்துக்கள், ஊராட்சி ஒன்றியங்கள் சீரமைக்கப்பட வேண்டுமென்று இந்த அவையிலே பலமுறை வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். அப்போதெல்லாம் சொல்வார்கள், 'தேர்தல் வரும் தேர்தல் வரும்' என்று. ஆனால் இதுவரை தேர்தல் வரக் காணோம். அதன் காரணமாக பஞ்சாயத்துக்களும், ஊராட்சிகளும் சீரமைக்கப்படவில்லை. அதனால் எந்த வேலைகளும் நடைபெற வில்லை. நிதி நிலை பற்றாக்குறையின் காரணத்தால், 2 அல்லது 3 மடங்கு என்று சொன்னாலும் பொறுத்துக் கொள்ளலாம், 6, 8, 10 மடங்கு அளவிற்கு வீட்டு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். பஞ்சாயத்துக்களில் தெரு விளக்குகள் எரிவதில்லை, எரியும் வாய்ப்பில்லை. எந்த வசதியும் இல்லை. நிதி நிலைமையின் காரணமாக அப்படிப்பட்ட ஒரு நிலைமை





ஆங்காங்கே இருக்கின்றது. இதை மாற்றியமைக்க வேண்டுமென்று கோரிக்கைகள் பலமுறை விடுத்தோம்; பலமுறை எடுத்துச் சொன்னோம்; பலமுறை எழுத்து மூலமாக இந்த அரசுக்கு எடுத்துச் சொன்னோம். ஆனால் இந்த அரசு கேட்டும் கேளாதது போல், இன்னும் சொல்லப் போனால், 'செவிடன் காதில் ஊதிய சங்குபோல்' இதைச் செயல்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மழையினால், கடந்த வருடம் தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் வெள்ளம் வந்தது போல், எங்கள் மாவட்டமும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. அதனால் பல இடங்களில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அப்படி பாதிப்பு ஏற்பட்டதால், பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் என்னுடைய தொகுதியில் கீழ்குளம் பேரூராட்சியில் பெருமளவு உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. அங்கு உடைப்பு ஏற்பட்டுள்ள குளங்கள் எல்லாம் இன்னும் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. உண்ணாமலை கடை என்னும் பேரூராட்சிப் பகுதியிலும் இதே நிலைமைதான். அதே போல் மங்காடு என்று சொல்லப்படுகின்ற ஊராட்சியிலும் இப்படிப்பட்ட உடைப்பு ஏற்பட்டு, இன்னும் சரி செய்யப்படாமல் இருக்கின்றது. இன்னும் பல்வேறு இடங்களில் இப்படி இருக்கின்றது. கள்ளகுறிச்சி என்னும் இடத்திலும் இப்படிப்பட்ட உடைப்பு ஏற்பட்டு இன்னும் அது சரி செய்யப்படவில்லை.

(மாலை 4—50)

இவ்வளவு காலதாமதமாக இந்த அரசு செயல்படுமானால் செய்கைக்கும் அதனால் ஏற்படும் பயனுக்கும் என்ன விளைவு ஏற்படும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

குடி தண்ணீர் வசதியைப் பொறுத்தவரை குடி தண்ணீர் இல்லாத கிராமமே இருக்காத அளவில் மாற்றப் போகிறோம் என்று, வருகிறபோதே சொல்லிக் கொண்டு வந்தார்கள். ஆங்காங்கு அவ்வப்போது அரசு அறிக்கைகள் வெளி வந்தன. ஆனால் இன்னும் தமிழ்நாட்டில் எவ்வளவோ கிராமங்கள் குடி தண்ணீர் வசதி இல்லாமல்தான் இருந்து கொண்டிருக்கின்றன. ஏற்கனவே அமைக்கப்பட்ட குடி தண்ணீர்த் திட்டங்கள் கூட செயல் பெறாமல் இருந்து கொண்டிருக்கின்றன. எங்கள் பகுதியில் பைங்குளம் பேரூராட்சியில் கைசூண்டி என்ற இடத்தில் குடி தண்ணீர்த் திட்டம் தொடங்கப்பட்டு அது இப்போது நடைபெறாமல் இருந்து கொண்டிருக்கிறது. அதையும் இந்த அரசு கவனிக்க வேண்டும். ஐரேன்புரம், உசரத்துவிளை, மங்காடு ஆகிய பகுதிகளிலும் குடி தண்ணீர்த் திட்டங்கள் இன்னும் செயல்படாமல் இருக்கிறது. புதுக்கடை பேரூராட்சிக்கும், கருங்கல் பேரூராட்சிக்கும் குடி தண்ணீர் வசதி வேண்டும் என்று இந்த அரசு வந்த

உடனே வேண்டுகோள் விடுத்தும் இன்னும் செயலாக்கப்படவில்லை. கிள்ளியூர் பேரூராட்சி, மாங்கரை பகுதிகளில் தண்ணீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. அதையும் இந்த அரசு தீர்த்து வைக்க வேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்த்து விடுவோம் என்று மொட்டையாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை எப்படி செயலாக்கப் போகிறார்கள் என்று இந்த அறிக்கையில் குறிப்பிடவில்லை. இன்னும் சொல்லப் போனால் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதி வெற்றி பெற்ற தற்காலிக ஜூனியர் உதவியாளர்கள், டைப்பிஸ்டுகள், இளைஞரணி தேர்வு பெற்றவர்கள் வேலை இல்லாமல் நடுத் தெருவில் நின்று கொண்டிருக்கிறார்கள். தாற்காலிக ஜூனியர் உதவியாளர் சங்கம் வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் அதற்காகப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்வு நடத்தப் பெற்று தேறிய பின்னரும் இன்னும் வேலை வாய்ப்பு வழங்கப்படாமல் காலதாமதம் ஆகிறது. பல மாதங்கள் ஆகியும் இன்னும் வேலை அளிக்கப்படவில்லை. இந்த மன்றத்தில் முன்பு 10,000 காவலர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்போம் என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் எங்கே போயிற்று? 3,000 தமிழாசிரியர்களுக்கு, கோவில்களில் வேலை தருவோம் என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் என்னவாயிற்று? காவல் துறையில் இருக்கும் அமைச்சுப் பணியாளர்கள் கூட வேலைப்பளு அதிகமாக இருக்கிறதென்று இன்றைக்குப் போராட்டத்தில் ஈடுபட்டு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கூட இந்த அரசு செவிமடுக்கவில்லை.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலிருந்து முதியோர் பென்ஷன் 20 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. இன்னும் அப்படியே அந்தத் தொகை உயர்த்தப்படாமலே இருக்கிறது. அதிகமான முதியோர்களுக்கும் இந்த அரசு பென்ஷன் அளிக்கவில்லை. அதே நேரத்தில் வைஜயந்திமாலாவுக்கு மாதம் ஆயிரம் ரூபாய், மதுரை சோமுவுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் என்று கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கண்ணுக்கு வெண்ணையும், ஒரு கண்ணுக்கு சுண்ணாம்பும் என்ற அளவுக்கு நிலைமை போய்க் கொண்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விழைகிறேன்.

இந்த ஆண்டு சர்வதேச குழந்தைகள் ஆண்டு. இந்த சர்வதேச குழந்தைகள் ஆண்டில் ஒரு வரி கூட குழந்தைகள் நல் வாழ்வுத் திட்டங்கள் பற்றி ஆளுநர் அறிக்கையில் சொல்லாதது வருந்தத் தக்கது. ஜுவைனல் டெலின்க்வசி— இளம் குற்றவாளிகள் பெருகிக் கொண்டே போகிறார்கள். அந்த எண்ணிக்கை





அதிகமாகிக் கொண்டே வருகிறது. இத்தகைய இளைஞர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பல திட்டங்கள் அறிக்கையில் இருக்குமென்று எதிர்பார்த்தேன், ஒன்றையும் காணவில்லை.

மதுவிலக்குக் கொள்கையைப் பற்றித் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள். பெரிய வார்த்தைகள் கூறப்பட்டிருக்கின்றன. மிகவும் வேதனையோடு ஒன்றைச் சொல்ல முடியும். மதுவிலக்குக் கொள்கையைப் பற்றித் தீவிரமாக இந்தச் சர்க்கார் சொல்லிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தெரிந்தோ, தெரியாமலோ சட்டமன்ற விடுதிக்குள் கூட மது பாட்டில்கள் நடந்து வருவதாகச் சொல்கிறார்கள். ஆங்காங்கு வந்து பார்ப்பார்களானால் 'எம்ப்டி பாட்டில்கள்' ஆங்காங்கு கிடைப்பதைக் காண முடியும். ஆங்காங்கே பாட்டில்கள் விழுகிற சத்தத்தைக் கூடக் கேட்க முடியும். வேறு பல வேதனையான சம்பவங்கள் நடைபெறுவதாகப் பல புகார்கள் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்குள்ளேயே இப்படி இருக்குமானால் இந்தத் திட்டம் எப்படி வெற்றிபெற முடியும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஹவுஸ் கமிட்டி சேர்மன் நான்தான். அப்படி எந்த ரூமிலே நடந்தது என்று சொன்னால் நான் விசாரித்து நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன்: உறுப்பினர்கள் சொல்கிறார்கள். ஹவுஸ் கமிட்டியே அதிகம் கூடவில்லையென்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஹவுஸ் கமிட்டி கூடுவதற்கும் பாட்டில் நடந்து வருவதாகச் சொல்வதற்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை.

திரு. பொ. விஜயராகவன்: சிவகாசி பகுதியில் தீப்பெட்டித் தொழிற்சாலையில் இளஞ்சிறுவர்களைச் சட்டத்திற்கு விரோதமாக வேலைக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இதிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அர்பான் சிங் என்பவரின் தலைமையில் ஒன் மேன் கமிஷன் நியமிக்கப்பட்டு அந்த கமிஷன் செய்துள்ள விதிமுறைகளின் அடிப்படையிலேதான் அந்த நிபந்தனைகளுக்குட்பட்டுத்தான், சட்டத்திற்குட்பட்டுத்தான் அங்கே அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். அப்படியிருக்கும்போது சட்டத்திற்கு விரோதமாக வேலைக்கு வைத்திருக்கிறார்கள் என்று தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. பொ. விஜயராகவன்] [1979 பிப்ரவரி 15

ஊழல் ஒழிப்பு என்று சொல்கிறார்கள். இந்த அரசால் நியமிக்கப்பட்ட வக்ப் போர்டும் இதற்கு முன்னால் இருந்த வக்ப் போர்டும் அவைகளை நிர்வகித்துக் கொண்டிருந்தவர்கள் தவறுகளைச் செய்திருக்கிறார்கள், ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் தவறுகள் நடந்திருக்கின்றன என்ற நிலைமையைச் சுட்டிக்காட்டி, அப்படித் தவறிழைத்தவர்களைக் கண்டுபிடிக்கவும் தண்டிக்கவும் ஒரு தனி கோர்ட் நியமிக்கப்பட வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். ஆனால் அப்படிப்பட்ட தனிக் கோர்ட் நியமிக்கும் உத்திரவை இந்த அரசு இதுவரையிலே பிறப்பிக்கவில்லை, மௌனம் சாதிக்கிறது.

அடுத்து மாவட்டத் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டு இருப்பதாகச் சொல்கிறார்கள். மாவட்டத் தொழில் மையங்கள் என்று பெயர் பலகைதான் மாற்றப்பட்டிருக்கிறது. எங்கள் பகுதியில் உள்ள அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அன்ட் காமர்ஸ் என்பது மாவட்ட தொழில் மையம் என்று, பெயர் தான் மாற்றப்பட்டிருக்கிறதே தவிர உருப்படியான வேலைகள் ஒன்றும் காணோம். மத்திய அரசினுடைய பணம் அங்கே சரியான முறையிலே பயன்படுத்தப்படவில்லை. தமிழ் நாடு பிஷரிஸ் கார்ப்பரேஷனுக்கு உலக வங்கி 120 லட்ச ரூபாய் கடனாக வழங்கியது. அந்தப் பணம் இன்றைக்கு எந்த விதமான ஆக்கப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படாமல் வங்கியில் பிக்ஸட் டெபாசிட்டாகப் போட்டு வைக்கப்பட்டிருக்கிறது என்பது வேதனையாக இருக்கிறது. கிடைக்கின்ற பணத்தைக் கூட ஆக்கப் பணிகளுக்கு செலவழிக்கத் திறனற்ற சர்க்கார் இந்தச் சர்க்கார் என்று சொல்லிக் கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின்மீது நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை எங்களது கட்சியைச் சேர்ந்த திரு. முத்தையா அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிந்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தினுடைய வளர்ச்சிக்காகவும் ஆக்கப் பணிகளுக்காகவும் சிறந்த திட்டங்களை அரசின் வாயிலாக ஆளுநர் உரையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு எவ்வளவு செயல்கள் செய்யப்படுகின்றன என்பதைக் கோடிட்டு காட்டுகின்ற வகையிலே ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. இந்த நாட்டின் இதயமாக அமைந்துள்ள கிராம மக்களின் முன்னேற்றத்திற்கு உறுதியளிக்கக்கூடிய வகையிலே உத்தமர் காந்தி அவர்கள் கண்ட கிராமராஜ்யத்தையும் பேரறிஞர் அண்ணா அவர்கள் காணவிரும்பிய கிராம முன்னேற்றத்தையும் ஏற்படுத்தக் கூடிய முறையிலே திட்டமிட்டு



1979 பிப்ரவரி 15] [திரு. தி. அன்பழகன்]

உத்திரவாதமளிக்கக்கூடிய வகையிலே கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் அவர்களுக்குத் தேவையான குடிநீர், தெருவிளக்கு வசதி, சாலை வசதி இவைகளுக்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அளித்து அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

[மாலை 5-00]

வேலை வாய்ப்பின்றி வேதனைப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு உறுதியளிக்கும் திட்டத்தை ஊராட்சி ஒன்றிய அடிப்படை மூலமாக அளிக்கும் திட்டமும் இருக்கிறது. கிராமப் பகுதிகளில் உள்ள நிலமற்ற ஏழை மக்களுக்கு வீட்டு மனை வழங்கச் செயல்படுத்துகின்ற திட்டமும், இன்னும் ஐந்தாண்டுக் காலத்திற்குள் ஒரு இலட்சம் வீடு கட்ட வழி செய்கின்ற திட்டமும் அரசு தொடங்கியுள்ள மிகச் சிறந்த புரட்சிகரமான செயலாகும்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்திலும், ஊக்கம் அளிக்கும் விதத்திலும் அரசு பாடுபடுகிறது. மத்திய அரசு கோதுமைக்கு விலை நிர்ணயம் செய்திருப்பதைப் போல நெல்லுக்கும் விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தி இந்த உரையிலே குறிப்பிட்டிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியதாகும். நேற்றைய தினம் பேசிய எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ஒருவர், இந்த அரசு கவர்னர் உரையின் மூலமாக மத்திய அரசை வலியுறுத்திக் கொண்டு இருக்கிறது என்று மட்டுமே சொன்னார்கள். சென்ற ஆண்டு வலியுறுத்திய காரணத்தினால்தான், குவிண்டால் ஒன்றுக்கு 78 ரூபாய் என்று இருந்த விலை இன்றைக்கு 85 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு இதை வற்புறுத்தியதன் வாயிலாக 129 ரூபாய் மத்திய அரசு தருமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு விவசாயிகளுக்கு நன்மை செய்யும் வகையில் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு இதை உதாரணமாகச் சொல்லலாம்.

மேலும் இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம், இந்த அரசு விவசாயிகளுக்கு எதுவும் செய்யவில்லை என்று சொன்னார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மின்சாரக் கட்டணத்தை 16 காசிலிருந்து 12 காசாகக் குறைத்து இருக்கிறது. இதன் வாயிலாக 6 கோடி ரூபாய் ஆண்டொன்றுக்கு நஷ்டம் ஏற்படுவதை அரசு பொருட்படுத்தாமல் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறது. மீட்டர் வாடகை 5 ரூபாய் என்றிருந்ததை 4 ரூபாயாகக் குறைத்து இருக்கிறது. இதனால் ஆண்டொன்றுக்கு ஒரு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுவதை அரசு பொருட்படுத்தவில்லை. ஏறக்குறைய இருபது கோடி ரூபாய்க்கு மேல் குறுகிய காலக் கடன்கள் நீண்ட காலக் கடன்களாக மாற்றப்பட்டிருக்கிறது. விவசாயிகள் வாங்கிய பயிர்க் கடனுக்கு

12.5 சதவீதம் என்றிருந்த வட்டியை 10.5 சதவீதம் என்று குறைத்திருக்கிறது. இவ்வளவு நன்மைகளை அரசு செய்திருந்தும்கூட இந்த அரசு விவசாயிகளுக்கு எந்தவிதமான நன்மையும் செய்யவில்லை என்று சொல்வது வியப்பாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல, விவசாயிகளுக்கு நன்மை செய்யும் விதத்தில் அவர்களது குறைகளைக் கண்டறிவதற்காக உயர் மட்டக் குழுவை அரசு அமைத்திருக்கிறது. அந்தக் குழுவிலேயிருந்து விலகிச் சென்றவர்கள் தமிழ் நாட்டிலே ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். ஆனால் அந்தப் போராட்டம் தோற்றுவிட்டதை இந்த நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை. ஆகவே, இந்த அரசு விவசாயிகளுடைய நன்மையைக் கருதி, இந்த உயர்மட்டக் குழு தன் கருத்துக்களை எப்பொழுது சொல்கிறதோ அப்பொழுது அவர்கள் விரும்பும் நல்ல திட்டங்களைச் செயல்படுத்தக் காத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மின்சாரத்தைப் பொறுத்தவரையில் அதன் உற்பத்தியை அதிகரிக்க அரசு சிறப்பான கவனம் செலுத்தி வருகிறது. தொழில் வளர்ச்சியைப் பெருக்கி அதன் வாயிலாக உற்பத்தித் திறனைப் பெருக்கி, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்குத் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. உப்பு, கனிவளம், கரும்புச் சக்கையிலிருந்து காகித உற்பத்தி போன்ற தொழிற்சாலைகளுக்காக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி இருப்பது பெருமைப்படத்தக்கதாகும்.

கனிப்பொருள் வளத்தைப் பெருக்குவதற்காக தமிழ்நாடு கனிவள நிறுவனம் வேலை தொடங்கியிருக்கும் நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் செவ்வாத்தூர் என்ற இடத்தில் வெர்னாகுலைட் என்ற கனிப் பொருள், 2.5 இலட்சம் டன் தாதுப் பொருள் கிடைக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். அந்த வெர்னாகுலைட்டைப் பதப்படுத்தும் தொழிற்சாலையை அங்கே துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புச் சக்கையைக் கொண்டு செய்தித் தாள் காகித தொழிற்சாலை அமைக்க அனுமதி கோரி மத்திய அரசைக் கேட்டிருக்கிறது. மத்திய அரசின் உத்தரவு கிடைத்தபிறகு அரசே இதைச் செயல்படுத்த இருக்கிறது. இந்த நேரத்தில் நான் விரும்பிக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், எங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் மூன்று சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. திருப்பத்தூர், ஆம்பூர், வேலூர் ஆகிய மூன்று இடங்களிலும் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகள் அந்த ஆலைகள் மூலமாகத் தங்களுடைய கரும்பை அனுப்பி சர்க்கரை உற்பத்தியையும், அத்துடன் எங்கள் மாவட்டத்தில்தான் கரும்பின் மூலம்



வெல்ல உற்பத்தி அதிகமாகவும் பெறப்படுகிறது. ஆகவே, அங்கு கிடைக்கும் கரும்புச் சக்கையைக் கொண்டு, குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில் நாட்ரம்பள்ளி பிற்பட்ட பகுதியாக இருக்கிறதால் என்னுடைய அந்தத் தொகுதியில் அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தின் மக்களுடைய வாழ்வைச் சீர்படுத்தும் அளவில், குறிப்பாகத் தாய்க் குலத்தின் கண்ணீரைத் துடைக்கும் வகையில் வருங்கால சமுதாயம் மதுவினால் மதியிழந்து சீர் குலையக்கூடாது என்ற தூய்மையான எண்ணத்தின் அடிப்படையில் மதுவிலக்கு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் சொல்கிறார்கள், எதிர்க் கட்சியை ஒடுக்கத்தான் இந்தச் சட்டம் என்று சொல்கிறார்கள். அவர்கள், வருங்காலத்தில் தவறு செய்யக்கூடிய குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிக்கும் சட்டங்கள் வந்தாலும் கூட எதிர்க்கட்சிகளை பழி வாங்கத்தான் இந்தச் சட்டங்கள் என்று சொல்வார்களோ என்ற ஐயம் ஏற்பட்டிருக்கிறது.

காலையிலே பேசிய எங்களது மதிப்பிற்குரிய பெரியவர், முன்னாள் சபாநாயகர் அவர்கள் ஒன்று சொன்னார்கள். இந்த அரசு மொழிப் பிரச்சினையிலே ஸ்திரமான தன்மையிலே இல்லை என்று சொன்னார்கள். நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புவது எல்லாம் சென்ற ஆண்டு கவர்னர் உரையின்பொழுது இந்தி திணிக்கப்படுமானால், அதனுடைய விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்று துணிந்து மைய அரசுக்கு, எச்சரிக்கை விட்டது தமிழக அரசு. அதே போல் இந்தித் திணிப்பு எங்களுக்குத்தான் என்று சொந்தம் கொண்டாடாமல், அதிலும் சுயநலம் பாராட்டாமல், தமிழக உணர்வுகளைப் புரிந்து கொண்டு, தமிழகத்து அனைத்துக் கட்சிகளும் இந்தி மொழித் திணிப்பை எதிர்க்க வேண்டுமென்ற ஒரே கொள்கையை இதிலே அறிவித்திருக்கிறது. நாங்கள் இந்தித் திணிப்பை அன்றும் எதிர்த்தோம், இன்றும் எதிர்க்கிறோம், என்றும் எதிர்ப்போம். ஆனால், அதற்கு மாறாக, அவர்கள்தான் அன்று இந்தித் திணிப்பை எதிர்த்தார்கள். ஆனால், இன்று இந்தியையே எதிர்க்கிறார்கள். ஆகவே, மாறுவது நாங்கள் அல்ல என்பதை சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டம்—ஒழுங்கு கெட்டுவிட்டது என்று குறை சொல்கின்ற எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் முதலில் தங்கள் பேச்சைப் பற்றி சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலைகள் உருளும், இரத்த ஆறு ஓடும் என்று பேசுகிறவர்கள் இந்த நாட்டில் சட்டம்—ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டுமென்று பேசுவது, கசாப்புக் கடைக்காரன் அகிம்சா வாதம் பேசுவது போல் இருக்கிறது.

திரு. ஆ. நடராசன் : உயர்மட்டக் குழுவிற்கு உயிர் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் நாடி பிடித்துச் சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே, போராட்டம் வேகமாக கொழுந்துவிட்டு எரிகிற சூழ்நிலையில் தயவுசெய்து, விவசாயிகள் பிரச்சினையை தீர்த்துவிட்டதாக சொல்லி, நாட்டு மக்களை ஏமாற்றிவிட முடியாது. அந்தப் பிரச்சினையில் இருக்கிற வேகங்களை நீங்கள் உணர்ந்து செயல்படவேண்டும். அப்படிச் செயல்படத் தவறினால் நாட்டிலே இருக்கிற அத்தனை எதிர்க்கட்சிகளும் சேர்ந்து விவசாயிகள் பிரச்சினையை ஆதரித்துப் போராட வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தில் இன்றைய தினம் கிராமப் புறங்களிலே இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களிலே 6 லட்சம் ரூபாய் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் மானியமாகத் தருவதாக அறிவித்து கடன் தருகிற காரியங்களிலே ஈடுபட்டிருக்கிறது. நான் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கடந்த 6 மாத காலமாக அரிசனங்களும் ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களிடமும் கிராம சேவக்குகளிடமும் நடந்து கொண்டிருக்கின்றனர். அவர்களிலே ஒருவருக்குக்கூட இன்னமும் கடன் தரப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் இதற்கு சொத்து ஜாமீன் தேவையில்லை என்று சொல்லுகிறார். ஆனால் கூட்டுறவு வங்கிகளிலே இருக்கிற நிர்வாக அதிகாரிகள் கூட்டுறவு வங்கியினுடைய சட்டத்தின்படிதான் தருவோம் என்று சொல்லுகிறார்கள். ஏழை எளிய விவசாயிகளுக்குக் கடன் தருகிறேன் என்று பத்திரிகையிலேயும் பொதுக்கூட்டங்களிலேயும் சொல்லிவிட்டு, அந்தத் தொழிலாளிகளைக் கூலி வேலைக்குக்கூட போகவிடாமல் நடக்கவைப்பது முறைதானா என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே தமிழ்நாட்டு மக்களுக்கு 4,200 ரூபாய்க்குள் வருமானம் வருகின்றவர்களுக்கு 600 ரூபாய் மானியம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்து வேதனைக்குரிய செய்தியாகும். எங்களுடைய தானைத் தலைவர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபொழுது ஆண்டுக்கு இலட்சம் வீடுகள் கட்டுவோம் என்று அறிவித்தார்கள். 7 ஆண்டுகளிலே அரிசன மக்களுக்கு வீடில்லாத நிலைமை இருக்கக்கூடாது என்ற நிலைமையை உருவாக்குவோம் என்று சொன்னார்கள். ஆனால் உங்கள் ஆட்சிக் காலத்தில் கோவை மாவட்டத்தில் கடந்த 1½ ஆண்டு காலத்தில் 400 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. நிலைமை என்னவென்றால் 41 ஊராட்சியத்திற்கு 400 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதாவது ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 10 வீடுகள்வீதம்தான் முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





அரிசனங்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா கொடுக்கவேண்டும் என்று அனுப்புகின்ற கடிதங்கள் சென்னையிலே உள்ள அலுவலகங்களில் தூங்கிக்கொண்டிருக்கின்றன. ஆனால் அந்தப் பகுதி மக்கள் யார் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக வருகிறார்களோ அவர்களிடம் வீட்டுமனை வாங்கித் தாருங்கள் என்று கேட்கின்ற நிலைமை இருக்கிறது. அதிலும் குறிப்பாக 1½ ஆண்டு காலமாக என்னுடைய பகுதியில் எந்த ஒரு கிராமத்திலும் வீட்டுமனை வாங்கித் தரபடவில்லை.

பல்வேறு இலாகாக்களின் தலைமை அலுவலகங்கள் பல ஊர்களுக்கு மாற்ற இருப்பதாக அறிவிப்பு தரப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டத்தை அமல் செய்தால் அது துக்ளக் தர்பார் மாதிரி ஆகிவிடும். ஒரு மனிதனுக்கு எப்படி இருதயம் முக்கியமானதோ அதைப்போல் ஒரு அரசாங்கத்தின் தலைமை அலுவலகங்கள் ஒரே இடத்தில்தான் இருக்கவேண்டும். இப்படி மாற்றி அமைப்பதால் எந்தவிதமான பிரச்சினைகளும் தீரப்போவது இல்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஊருக்கு போகவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் எல்லோருக்கும் வேலை தருவோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். சென்ற ஆண்டு 5 லட்சம் பேருக்கு வேலை தேடித்தருவோம் என்று அமைச்சர்கள் சொன்னார்கள். ஆனால் அது நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த அறிக்கையில் 11,000 பேருக்கு பட்டுப் பூச்சி வளர்க்க வேலை கொடுத்து இருப்பதாக ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. பட்டுப்பூச்சி வளர்ப்பது நாட்டில் அவசியம்தான் என்றாலும் அதனால் பல குடும்பங்களை வாழவைக்கமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சிகள், பேரூராட்சிகள், ஒன்றியங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றிற்கு தேர்தல்கள் நடத்தாமல் ஒத்திப் போட்டுக்கொண்டே இருக்கிறீர்கள். இதன் காரணமாக காலத்தில் நடக்கவேண்டிய பல வேலைகள் நடைபெறாமல், பாதைகள் செப்பனிடப்படாமல், குடிநீர் பிரச்சினை தீர்க்கப்படாமல், எந்தநேரத்தில் பதவி பறிபோகுமோ என்ற அச்சத்தில் ஊராட்சி மன்றத் தலைவர்கள் இருக்கிறார்கள். அரசாங்கம் சரியானபடி நிதி ஒதுக்காத காரணத்தால் எவ்வித வேலையும் செய்யாமல் அதிகாரிகள் இருக்கிறார்கள். இதன் காரணமாக உள்ளாட்சி அமைப்புகளில் வேலைகள் தேங்கிக் கிடக்கின்றன. எனது தொகுதியிலும் கோவை நகர மேற்குத் தொகுதியிலும், கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. அரங்கநாயகம் தொகுதி, செல்வபுரம் என்ற இடத்தில் சுகாதார அமைப்புகள் சரியல்ல. வீட்டுவசதி வாரிய வீடுகளில் இருந்து

வரும் கழிவு நீர், ப்ளஷ் அவுட்டில் இருந்து வரும் கழிவு நீர் ஆகியவை அங்கே தேங்கிக்கிடக்கின்றன. அவற்றை மாற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதற்கு எல்லாம் காரணம் நகராட்சி மன்றங்கள் மக்கள் தலைவர்களைக்கொண்டு இயங்காததுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த இடத்திற்கு வேளாண்மைத் துறை அமைச்சர் குழந்தைவேலு கூட வந்து பார்வையிட்டார்கள். ஆகவே, உடனடியாக தேர்தலை நடத்த அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார உற்பத்தியில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஏற்கனவே உள்ளாட்சி நிறுவனங்களால் நிர்வகிக்கப்பட்டு வரும் மின்சார விளக்கு பழுதுபார்க்கும் பணிகள் சரிவர நடைபெறவில்லை. பல கிராமங்களில் இருட்டு மண்டிக்கிடக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் போக்கப்படவேண்டும் என்றால் மின்சார இலாகா மீண்டும் அவற்றை ஏற்று நடத்த வேண்டும் என்று கோரிக்கை விட்டு இருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில்கூட சட்டமன்ற உறுப்பினர்களாலும் மற்றவர்களாலும் தீர்மானமாக நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இங்கே பேசிய சத்தியமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் தாளவாடி பகுதியை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கவனிக்கவில்லை என்று சொன்னார். நான் அவர்களுக்கு பணிவாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த நேரத்தில் அந்தப் பகுதியில் பள்ளி துவங்கவும், மருத்துவ மனை துவங்கவும், நிலவள வங்கி ஏற்படுத்தவும், விவசாயக் கடன் அளிக்கவும், போன்றவற்றைச் செய்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர் இழந்தவர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த பென்ஷன் குடியரசுத் தலைவர் ஆட்சியில் நிறுத்தப்பட்டுவிட்டது. இந்தி எதிர்ப்பு பற்றி வேகமாக ஆளும் கட்சியினரும் எதிர்கட்சியினரும் மற்ற கட்சியினரும் பேசிவரும் இந்த நேரத்தில் அந்த பென்ஷன் தொகையை அரசு மீண்டும் அளிக்க ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போலவே, முதியோருக்கு உதவித் தொகை வழங்குவதில் இந்த அரசாங்கம் காலம் தாழ்த்தி வருகிறது. 3–4 மாதங்கள் ஆகியும் அவர்களுக்கு அனுப்பப்படவேண்டிய தொகை அனுப்பப்படவில்லை. இவைகளை நாங்கள் சொன்னால், திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் ஊழல் என்று சொல்லி ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிப்பதற்கு பதிலாக 1½ ஆண்டு காலத்தில் செய்த சாதனைகள் பற்றி சொல்லாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் குறைசொல்கிறார்கள்.

நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், கோவையில் நடைபெற்ற வீர வணக்க மாநாடானாலும் இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடானாலும் அந்தப் பகுதியில் அமைச்சர்கள் வந்து உட்கார்ந்து கொண்டு லட்சக்கணக்கில் பணம் வசூல் செய்ததாகச் சொல்லப்படுகிறது, அது உண்மையா இல்லையா என்பதைச் சிந்தித்துப்பார்க்கவேண்டும். அங்கே இருக்கும் பொதுமக்களை மிரட்டி வசூல் செய்ததாகச் சொல்கிறார்கள். அரசாங்கத்துறையில் இருக்கும் ஜீப்களை குறிப்பாக சி.டி.சி. கார்களை உபயோகித்தார்கள்.

திரு. திருப்பூர் மா. மணிமாறன் : மிரட்டி வசூல் செய்ததாகச் சொன்னார்கள். பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள் என்று சொன்னார்கள். பொதுமக்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்களா அல்லது அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[மாலை 5–20]

திரு. ஆ. நடராசன். நானும் பொதுமக்களிலே ஒருவன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல சேரன் போக்குவரத்துக் கழகக் கார்களையும் அரசாங்க அலுவலகங்களிலுள்ள ஜீப்களையும் உங்கள் மாநாட்டுக்குப் பயன்படுத்தினீர்கள் என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக மாநாடு நடைபெற்றபோது அங்கே இருக்கிற சிதம்பரம்பிள்ளை பார்க்கில் இருக்கிற சுவரை இடித்து விட்டீர்கள் என்று அலறினீர்கள். ஆனால் உங்களுடைய மாநாடு நடைபெறும் போது என்ன நடைபெற்றது? சிதம்பரம்பிள்ளை பார்க் சுவரை இடித்தீர்கள். மதுக்கரையிலே சாதாரணமான ஒரு மளிகைக்கடை வைத்திருந்தவர் சிறுநீர் கழிப்பதற்கு நேஷனல் ஹைவேய்சில் ஒரு பந்தல் போட்டிருந்தார். அங்கே போய் அண்ணா தி. மு. க. போர்டை மாட்டி வைத்து, அதற்குப் பின்னால் ஏற்பட்ட சர்ச்சை காரணமாக அங்கே இருக்கிற கடைக்காரரின் வீட்டுக்குள்ளே ஆளும் கட்சியினர் புகுந்து தாக்கியிருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் அதற்கான

வழக்கு ஒன்றைப் பதிவு செய்தபோது, வழக்கைப்பதிவு செய்த சப்-இன்ஸ்பெக்டர் வீட்டிலே போய்த் தகராறு செய்து, அவரை மிரட்டியிருக்கிறார்கள். இதைப்போன்ற பல்வேறு தலையீடுகளும் ஊழல்களும் உங்கள் ஆட்சியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல மதுக்கரை ஒன்றியத்தில் மாரிசெட்டி என்ற குத்தகை விவசாயியை காலி செய்வதற்காக வெளியேதூக்கி எறிந்திருக்கிறார்கள். அதைச்செய்வதற்காக 7, 8 கார்களில் ஆளும் கட்சியினர் சென்றிருக்கிறார்கள். மாவட்டக் காவல் துறை அதிகாரியிடம் புகார் செய்தால் உங்கள் ஆட்சியிலே நீங்கள் இப்படிச் செய்யவில்லையா என்று கேட்கிறார். நீங்கள் இங்கே எப்படிச் சொல்கிறீர்களோ அதைப்போலவே நிர்வாகத்திலே இருக்கிற அதிகாரிகளும் ஒரு அரசியல்வாதியைப்போல் சொல்கிறார்கள். ஒரு மாவட்ட காவல் துறை அதிகாரி, தான் ஒரு அதிகாரி என்ற பொறுப்பு இல்லாமல் ஆளும் கட்சிக்காரர்களைப் போல் சொல்கிறார், அந்த முறையிலேதான் காரியங்களைச் செய்கிறார். எங்கள் ஆட்சியிலே தவறு நடந்தது என்றால் அதைச் சொல்லித்தான் நீங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். ஆகவே, அதைப் போன்ற காரியங்கள் நடக்கக்கூடாது ; ஏழை விவசாயிகளைக் காப்பாற்றுங்கள்; காப்பாற்ற முயற்சி செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவையில் சிங்காநல்லூரில் எம். எஸ். எக்ஸ். 781 ஆம் நம்பர் காரிலே சாராயம் கடத்தி வந்தபோது, அந்தக்கார் மோதி அந்த இடத்திலேயே கார் டிரைவர் மரணம் அடைந்துவிட்டார், ஆனால் போலிசார் அதைப் பத்திரிகைகளிலே போடக்கூடாது என்று சொல்லித் தடுத்துவிட்டார்கள். அதற்கு என்ன காரணம் ? அந்தக்கார் யாருடையது ? செய்தியைப் பத்திரிகையிலே போடாததற்கு என்ன காரணம் என்பதையும் அந்த வண்டி யாருடையது என்பதை அறிந்து கொள்வதற்கும் இந்த நாட்டு மக்கள் வெகு ஆவலாக இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. சிறுவாணித் திட்டத்தில் ஏராளமான மோசடி நடைபெற்றிருக்கிறது. சிறுவாணித் திட்டத்தை நிறைவேற்றி கோவைக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காக பைப் தயாரிக்கிற தொழிலுக்கு வாங்கிய சிமெண்டில் ஏறத்தாழ 10,000 மூட்டை சிமென்டை கேரளாவுக்குக் கடத்தியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 10,000 மூட்டை சிமெண்ட் கடத்தப்பட்டதைப்பற்றி அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்து, பிடித்ததை ஆளும்கட்சி எம். எல். ஏக்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல—வெளி மாவட்டத்திலே இருந்து வந்து அந்த வழக்கை அழிக்கப் பார்க்கிறார்கள். எப்படியாவது அழித்துவிட வேண்டுமென்று திட்டமிட்டுச் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகள் செய்கின்ற தவறை அரசாங்கம் கண்டிக்க வேண்டும் ; ஆளும் கட்சியினர் அதில் தலையிடக்கூடாது.





அதைப்போலவே தொழிலாளர்கள் பிரச்சனையில் இந்த அரசு மிகவும் மோசமாக, நடந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக கடந்த வருடம் 23-ந்தேதி பொது அர்தால் நடைபெற்றது. அந்த அர்தாலிலே ஈடுபட்ட தொழிலாளர்களைக் கலைப்பதற்கு பலாத்காரமும் அராஜகமும் ஆளும் கட்சிக்காரர்களால் நடத்தப்பட்டது. அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்கு பயனீர் மில்லிலே 40 நாட்களாக வேலைநிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கோவை சிந்தாமணி காம்பிளக்சில் 150 பேர் வேலைநிறுத்தம் செய்கிறார்கள். அதைப் போலவே மத்திய கூட்டுறவு வங்கியில் இன்றையதினம் ஏற்பட்டு வருகிற வேலை நிறுத்தம் காரணமாக அந்தப் பகுதி நெசவாளர்களும் விவசாயிகளும் கூட்டுறவுச் சங்கங்களும் மிகுந்த தொல்லைகளுக்கு ஆளாக்கப்பட்டிருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொல்லைகளை நீக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்கள் பிரச்சனைகளிலே இராஜா சுப்பிரமணியம் குழுவினர் அளித்த பரிந்துரைகளை உடனடியாக அமுல்படுத்த வேண்டும். தொழில் தகராறு சட்டத்தின்படி அவர்களும் தொழிலாளர்கள் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மதுவிலக்குச் சட்டத்தைப் பற்றிப் பலர் பேசினார்கள். கடினமான குற்றம் இழைத்தவர்களை வேறு இடங்களுக்கு மாற்றி வைப்பதை மதுவிலக்குச் சட்டத்திலுள்ள விதிமுறைகளில் சேர்த்திருக்கிறார்கள். இது நாடு கடத்துகிற சித்தாந்தமாகும். கடந்த காலத்திலே இருந்த இராஜா பரம்பரை அரசிலே இத்தகைய சட்டங்களைக் கொண்டுவரலாம். ஆனால் இந்த அரசு அதைப் போல செயல்படுவது அச்சம் அளிக்கின்ற ஒரு காரியமாக இருக்கிறது. மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மணியக்காரர், கணக்குப்பிள்ளை போன்ற கவுரவமிக்கப் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறவர்கள் சாராயம் காய்ச்சுகிற இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று சொல்வது அவர்களுடைய பணியைக் கேலிக்குரியதாக ஆக்கிவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவைக்கு அருகிலே உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திலே 50 மாணவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். உடனடியாக அரசாங்கம் தலையிட்டு அதை நீக்குவதற்கான காரியத்திலே ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பாராளுமன்ற உறுப்பினர் திரு. முருகையன் அவர்களுடைய கொலையைப் பற்றி எல்லோரும் பேசிவிட்டார்கள். பாராளுமன்ற உறுப்பினருக்கே இந்தக்கதி என்று சொன்னால்

சாதாரண குடிமக்களுக்கு இந்த அரசாங்கத்திலே என்ன பாதுகாப்பு இருக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எங்களுடைய கலைஞருக்கே குறி வைக்கப்பட்டது. அவர்களுடைய உயிருக்குக் குறி வைக்கின்ற காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதைப் பார்த்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஏசுநாதர், ஒரு கன்னத்திலே அடித்தால் மறு கன்னத்தைத் திருப்பிக் காட்டு என்று சொன்னார். ஒரு வேளை ஏசுநாதராக நடிப்பவர்கள் வேண்டுமானால் அந்தக் கருத்தைச் சொல்லி ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் அடிக்க மாட்டோம், அடித்தால் திருப்பித் தாக்குவதற்கு நாங்கள் தயாராவோம் என்று கூறி இந்த ஆளுநர் உரையிலே நன்றி தெரிவிக்கின்ற அளவில் எதுவும் இல்லாத காரணத்தால் வருத்தத்தோடு நான் எதிர்ப்பு தெரிவித்து அமருகிறேன்.

*திரு. கே. ஆர். சின்னராசு: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற வகையில் பேசுவதற்கு வாய்ப்புத் தந்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநருடைய உரையிலே என்ன திட்டங்கள் இருக்கின்றன என்று எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் கேலியும் கிண்டலுமாகப் பேசியதை நான் ஆளும் கட்சித் தரப்பிலேயிருந்து கேட்டுக் கொண்டுதானிருக்கிறேன். ஆனால் அவர்கள் சொல்வதைப் போல் அல்லாமல் நான் படித்து இருக்கின்ற வரையிலே நல்ல பல திட்டங்களை இந்த நாட்டுக்கு இந்த ஆளுநர் உரையிலே தந்திருக்கிறார்கள். ஏழை எளிய மக்களுடைய வாழ்வை முன்னேற்றுவதற்கு பல நல்ல திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு போட்டிருக்கிற பல திட்டங்களில் குறிப்பாக மின்சாரத்தை விவசாயிகளுக்குத் தருவதில் தீவிர முக்கியத்துவம் தந்து மின்சாரத்தைப் பெருக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது குறித்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலும் குறிப்பாக விவசாயிக்கு வழங்குவதிலே முக்கியத்துவம் தரப்பட்டிருப்பது குறித்து நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, மின்சாரத்தை விவசாயிகளுக்குத் தந்துவிடுவது மட்டுமன்றி மின்சாரத்தை எப்படிப் பெருக்குவது என்கின்ற அடிப்படையிலேயும் பல திட்டங்களைத் தீட்டி இருக்கின்றது. சுருளியாறு மின் நிலையத்திலே அந்த மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. தூத்துக்குடி அனல் மின்சார நிலையத்தில் அதிக மின்சக்தியை உற்பத்தி செய்வதற்கும் திட்டங்கள்





தீட்டப்பட்டிருக்கின்றன. அடுத்து மேட்டூர் அணையின் கீழே பாசனத்திற்கு என்று திறந்துவிடப்படும் நீரைப் பயன்படுத்தி மின்சாரத்தைக் கிட்டத்தட்ட 537 மில்லியன் யூனிட் என்ற அளவில் தயாரிக்கின்ற வகையிலேயும் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் உண்மையிலேயே பாராட்டத் தக்கவையாகும்.

அடுத்து கிராமப் பகுதியிலே இருக்கின்ற பினாமி நிலங்களை எடுத்து ஏழை மக்களுக்குத் தருகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். ஆக உண்மையிலேயே நல்ல பல திட்டங்கள் நாட்டு மக்களுக்கு மிக அவசியமான திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கிராமத்திலே இருக்கின்ற மக்களுக்கும், படித்தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும் வேலைவாய்ப்புத் தருகிறோம் என்கின்ற குறிப்பை இந்த நாட்டு மக்கள் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள். படித்தவர்களுக்கு மட்டும் வேலை வாய்ப்பு என்று இருக்கின்ற இன்றைய நிலைமையிலே படிக்காதவர்களுக்கும் வேலைவாய்ப்பு தருகிறோம் என்கின்ற இந்தத் திட்டம் நாட்டு மக்களுக்கு மிக்க நன்மை தரும் திட்டம் என்று நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து அரசு தீட்டுகின்ற திட்டங்களின் பயன்கள் போய்ச் சேர வேண்டியவர்களுக்குச் சேராத நிலையினைத்தான் நாம் முன்பெல்லாம் பார்த்தது உண்டு. அப்பொழுதெல்லாம் பத்திரிகையிலும் ஏடுகளிலும்தான் பார்க்க முடியும், பெரிய திட்டங்களைப்பற்றி. ஆனால் போடுகின்ற திட்டம் நாட்டு மக்களுக்குப் போய்ச் சேர்ந்ததில்லை என்பது நாடறிந்த உண்மையாகும். ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தீட்டுகின்ற திட்டம் உடனடியாக மக்களுக்குப் போய்ச் சேருகிறது என்ற அந்த அடிப்படையிலே மதிப்பிற்குரிய தொழிலாளர் நல அமைச்சரவர்கள் என்னுடைய தொகுதியைச் சுற்றிப் பார்க்கிற நேரத்திலேகூட, பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். ஆகவே நான்கைந்து மாதங்களுக்குள்ளாக உரிய அதிகாரிகள் நல்ல முறையிலே நடவடிக்கை எடுத்து அந்தத் திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள். இப்படி இந்த அரசு போடுகின்ற திட்டங்கள் உடனுக்குடனே நாட்டு மக்களுக்கு கிடைக்கின்ற வகையிலே போடுகிறது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுக்கு இந்த அரசு மின்சாரம் வழங்குவதிலே மிக முக்கியத்துவம் கொடுத்து அவர்களுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று ஆணையிட்டு அதன் விளைவாக

இன்றைக்கு தொழிற்சாலைகளிலே பம்ப்செட் மோட்டார் களை போதிய அளவில் தயாரித்துக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு விரைவாக விவசாயி களுக்கு இணைப்பு வழங்குவதிலே முக்கியத்துவம் கொடுக்க பட்டு வருகிறது.

(மாலை 5—30.)

கேட்கிறவர்களுக்கெல்லாம் மின் இணைப்பு கொடுத்து கொண்டிருக்கிற அரசு, இந்த அரசு என்று நான் சொல்லி கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, குறிப்பாக இந் ஆளுநர் அவர்கள் உரையைப் படித்துப் பார்க்கிறபோது திருப்பி திருப்பிப் பார்த்தாலும் அவர்கள் இல்லை என்று சொன்னதை நான் பார்க்கிறபோது குறிப்பாக கிராம வளர்ச்சிக்கு, கிராம மக்கள் வாழ்விற்காக, அவர்களின் பொருளாதார மேம்பாட்டு நிலை வளர நல்ல பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். இதைப் பார்க்கிறபோது எனக்கு ஒரு ஞாபகம் வருகிறது ஒரு காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது நினைவுக்கு வருகிறது. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பேன் என்று சொன்னார்கள். அந்தக் கருத்திற்கேற்ப புரட்சித் தலைவர் ஆட்சியில், பேரறிஞர் அண்ணா அவர்களின் தம்பியின் ஆட்சிக் காலத்தில் திட்டப்பட்டிருக்கிற திட்டங்கள் எல்லாம் ஏழை மக்களுக்காகத் தீட்டப்பட்டிருக்கிற திட்டங்கள் என்பதை நாட்டு மக்கள் ரவேற்காமல் இருக்க மாட்டார்கள். அடுத்து, இந்தி எதிர்ப்புபற்றிப் பேசினார்கள். இந்தித் திணிப்பை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முழுமையாக எதிர்க்கிறது. என்னைப் பொறுத்த வரையில், எங்கள் தானைத் தலைவரைப் பொறுத்தவரையில் இந்தி இந்த நாட்டில் எப்பகுதியிலும் வந்து நுழைந்துவிட முடியாது. அப்படி நுழைகிற தருணத்தில் நாங்கள் வகிக்கிற பொறுப்புகள்பற்றிக் கவலையில்லை. இந்தி வருவதைத் தடுக்க எங்கள் தலையைக் கொடுக்கவும் நாங்கள் தயாராக இருக்கி றோம். இந்தி எந்த வகையிலும் இங்கு வந்து நுழைந்துவிட முடியாது. அண்ணா அவர்கள் இருந்தபோது 1964 ஆம் ஆண்டு இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடி சிறை சென்ற வன் என்பதற்காகச் சொல்லவில்லை, இந்த நாட்டில் இந்தியை நுழையவிட மாட்டார் எங்கள் தானைத் தலைவர். அதே நேரத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்களுக் மானியம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள் என்று சொன்னார் கள். அதுகுறித்து வழக்கு போடப்பட்டு நிறுத்தப்பட்டிருக் கிறது. நான் நம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொளவ தெல்லாம், இந்தி எதிர்ப்பு போராட்ட வீரர்களுக்கு எந்த வகையிலாவது ஒரு மானியமாக அவர்கள் குடும்பம் வாழ



நல்ல பல திட்டங்களைத் தீட்டி அவர்களுக்கு ஒரு தொகை வழங்க வேண்டும் என்றும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் தி.மு.க.வைச் சார்ந்த திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகிற போது கலைஞர் அவர்களது உயிருக்கு ஏதோ ஆபத்து இருப்ப தாகச் சொன்னார்கள். அதை இந்த அரசு தடுக்கவில்லை, அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் சொன்னார்கள். உண்மையில் அப்படிப்பட்டதொரு நிலை ஏற்படாவண்ணம் இந்த அரசு அவர்களுக்கு நல்லமுறையில் பாதுகாப்புக் கொடுத்து அவர்களைக் காப்பாற்ற வேண்டிய கடமையிருக்கிறது. ஆனால் ஒன்று அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எங்கள் புரட்சித் தலைவர் அவர்களும் மதிப்பிற்குரிய திரு. கே.ஏ.கே. அவர்களும் ஆவடிக்கு ஒரு பொதுக்கூட்டத்திற்குச் சென்றபோது அவர்கள் ஆட்சிக் காலத்தில் இவர்கள் காரைத் தடுத்து நிறுத்தி இவர்களைக் கொல்ல வந்தார்கள். அவர்களுடைய காரை அடித்து நொறுக்கினார்கள். அந்த நேரத்தில் அவர்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்பதை ஒரு கணம் அவர்கள் நெஞ்சில் கைவைத்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு அந்த நிலையில் இல்லை. யாராகயிருந்தாலும் சரி, எப்பேர்ப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, சாதாரண மனிதனாக இருந்தாலும் சரி அவர்களது உயிருக்குப் பாதுகாப்பு தரவேண்டியது அவசியம் என்பதை இந்த அரசு உணருகிறது. அடுத்து எங்கள் மாவட்டத்தில் இருக்கிற கறுப்புக் கற்கள் எல்லாம் இந்த அரசால் தேசிய மயமாக்கப்பட்டு ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. என்ன வளம் இல்லை இந்தநாட்டில் ? ஏன் மற்றவர்களிடம் கையேந்த வேண்டும்? வெளிநாடுகளிடமிருந்து ஏன் கையேந்த வேண்டும் என்ற அடிப் படையில் நம் நாட்டு கனிவளங்களைப் பெருக்கி வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்து இந்த நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு இந்த அரசு தீட்டுகிற திட்டங்கள் மிக நல்ல திட்டங்களாகும். அதே நேரத்தில் என் தொகுதியில் வேப்பன பள்ளி ஒன்றியம் என்ற ஒரு ஒன்றியம் இருக்கிறது. அங்கே சிங்கருப்பல்லியில் ஒரு அணை கட்ட அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்த அணையைக் கட்டித் தர நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அந்த ஒன்றியம் வரட்சி கரமான பகுதியாக இருக்கிறது. அந்த ஒன்றியம் ஒருபக்கம் ஆந்திரா எல்லையையொட்டியிருக்கிறது. ஒரு பக்கம் கர்நாடகா எல்லையையொட்டியிருக்கிறது. அந்த ஒன்றியத்திற்கு ஆந்திரா மாநிலத்திலிருந்து வருகிற ஆற்றில் இரண்டு கோடி ரூபாய் செலவில் ஒரு அணை கட்ட மதிப்பீடு போட்டிருப்பதாக அறிகிறேன். அதை எப்படியும் நமது அரசுக் காலத்தில் கட்டித் தருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தி எட்டிக்கல் அகராம் என்ற ஊரில் ஒரு ஏரி ஏற்படுத்தப் போவதாக தெரிகிறது. குருதோட்டனூர் என்ற ஊரிலும் ஒரு ஏரி ஏற்படுத்தப் போவதாக தெரிகிறது. வெலக அள்ளியில் புதிய ஏரி ஏற்படுத்தப் போவதாக தெரிகிறது. கிருஷ்ணகிரியில், படேதல்லபு என்ற ஏரி இருக்கிறது. அதற்கு 2000 ஏக்கர் பாசனத்திற்கு உதவும்படியான அளவில் கால்வாய் சிரமைப்புத் திட்டத்திற்கு மதிப்பீடு போடப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. இந்தத் திட்டங்களை எல்லாம் செயல்படுத்த வேண்டும் என்று அமைச்சரவையை கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்புத் தந்தமைக்குத் தலைவருக்கு நன்றி தெரிவித்து அமருகிறேன்.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆளுநர் உரை ஆமை உரையாக இருக்கிறது. இன்று ஆளுநர் உரையில் விவசாயிகளுடைய வேதனைகளைத் துடைப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரை விவசாயிகள் பல அல்லல்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள், விவசாயிகளுக்கு உடனடியாக மின்சாரம் வழங்குவதற்கு இந்த அரசு தயங்கவில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் மின்சார இலாகாவைக் கேட்டால், கருவிகள் இல்லை, போல்கள் கிடைக்கவில்லை என்று அதிகாரிகள் சொல்லக்கூடிய அவல நிலை விவசாயிகளிடத்தில் இருக்கிறது. அது மட்டுமல்லாமல், விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களை நல்ல விலைக்கு விற்கக் கூடிய சூழ்நிலை இன்று தமிழகத்தில் இல்லை. வெல்லம் 76 கிலோ 30 ரூபாயிலிருந்து 50 ரூபாய் என்று விலை இருக்கிறது. நெல் 60 கிலோ 50 ரூபாய் விலையாக இருக்கிறது. மல்லி 400 ரூபாய் விற்றது, 68 ரூபாயாக விற்கிறது. இப்படி விவசாயிகளுடைய விளைபொருட்களின் விலை எல்லாம் தாழ்ந்து கொண்டே போகிறது.

அரியலூர் தொகுதியிலுள்ள கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்திற்கு 1979ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22ஆம் நாள் அன்று சென்று குறைகளைத் தெரிவிக்க விவசாயிகள் பேரணியாக புறப்பட்டார்கள். புள்ளம்பாடி வாய்க்காலில் உள்ளவர்களுக்கு மறைமுகமாக நெல்லுக்கு ஒரு ஏக்கருக்கு எட்டு ரூபாய் என்றும் கரும்புக்கு 12 ரூபாய் என்றும் புதிதாக வரி விதிக்கப்பட்டது. அண்மையில் ஏற்பட்ட புயலால் எங்களால் இந்த வரியைக் கட்டுவதற்கு வழியில்லை என்று சொல்வதற்காகப் பேரணியை நடத்தினார்கள். ஆளும் கட்சிக்காரர்கள் எதிலும் தலையிடுவதில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்தப் பேரணியை தடுக்க





ஆளும் கட்சிக்காரர்கள், புள்ளம்பாடி விவசாயிகள், திருமானூர் ஒன்றியத்திலுள்ள விவசாயிகள் இவர்கள் எல்லாம் பேரணியில் வந்து கொண்டிருந்தபோது, கீழப்பழலூர் என்ற கிராமத்தில் இவர்கள் வந்த பேருந்தை தடுத்து நிறுத்தினார்கள். அப்படியிருந்தும் பேரணியினர், கீழப்பழலூரிலிருந்து அரியலூரிலுள்ள கோட்டாட்சித் தலைவரிடம் சென்று மனுக்களை கொடுத்தார்கள். இந்த நிலையில் விவசாயிகளுக்கு இந்த அரசு என்ன நன்மை செய்தது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கிராமங்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்து தருவோம் என்று கூறியிருக்கிறார்கள். எனது தொகுதியிலுள்ள திருமானூர், அரியலூர் இந்த இடங்களில் 22 மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் நல்ல முறையில் இயங்காமல் இருக்கிறது. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் இதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். இதைப்பற்றி 1978ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் நாளில் பேசியநேரத்தில் தொழிலாளர் நலஅமைச்சர் அவர்கள் எனக்குத் தந்தி கொடுக்கிறார். உடனடியாக இந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் இயங்க வேலை செய்யப்படும் என்ற கருத்தை தந்தி மூலம் அனுப்புகிறார். ஆனால் இதுவரையிலும் அந்த நீர்த்தேக்கத் தொட்டிகள் செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தாழ்த்தப்பட்ட அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம் நடந்து வந்தது. இந்த அரசு எந்தவிதமான பாகுபாடும் இன்றி, அரசியல் காழ்ப்புணர்ச்சி இல்லாமல் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்று சொல்லக்கூடிய இந்த அரசு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 331 வீடுகள் கட்டுவதற்கு அனுமதி அளித்திருக்கிறது. இது புத்துப்பட்டியில் 50 வீடுகள், கம்பிளிப்பட்டியில் 50 வீடுகள், சக்கிலிப்பட்டியில் 50 வீடுகள், குளத்துப்பாளையத்தில் 50 வீடுகள், பொய்யூரில் 50 வீடுகள் என்று கட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறுத்திவிட்டார் என்று அங்குள்ள அரசு அதிகாரி கூறினார். இப்போது கட்டப்பட்டுள்ள வீடுகள் எல்லாம் மாண்புமிகு அமைச்சரின் தொகுதியிலுள்ள 10 மைல் சுற்றளவில் உள்ள இடங்களில் மட்டுமே கட்டப்பட்டிருக்கிறது.

[மாலை 5—40.]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு யாரோ ஒரு அதிகாரி தவறான தகவலைத் தந்திருக்கிறார். அமைச்சர் எந்த வீட்டையும் நீக்கவில்லை.

*திரு. த. ஆறுமுகம் : எப்படியோ என் தொகுதியிலே உள்ள பொய்யூர் வீடுகள் கட்டப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல், ஆளும் கட்சிக்காரர்களின் தலையீடு இல்லை என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு அரசுக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினால், 3, 4 மாதங்கள் கழித்துதான் பதில் வருகின்றது. என்னுடைய தொகுதியில் 1977–78 ஆம் ஆண்டில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெள்ள நிவாரண வேலையை எடுத்துச் செய்தார்கள். அவர்கள் அந்த வெள்ள நிவாரண வேலைகளை நல்லமுறையில் எடுத்துச் செய்யவில்லை என்று இந்த அரசுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதற்கு 9 மாதங்கள் கழித்து ஒரு அதிகாரி, யாரும் அப்படிச்செய்யவில்லை என்று கூறியிருக்கிறார். ஆனால் ஆளும் கட்சி அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினரான பொருளாளர் என்னுடைய தொகுதியிலே 10 இலட்சம் ரூபாய்க்கு செய்யப்பட்ட வேலைகளை ஒழுங்காகச் செய்யவில்லை,

அதற்கு அடுத்தாற்போல், அந்தப் பகுதியிலே உள்ள ஆளும் கட்சியைச்சேர்ந்தவரை அரியலூர் காவல்நிலையத்திற்கு 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25 ஆம் நாள் அன்று சாராயம் குடித்திருக்கிறார் என்று அழைத்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால், ஆளும்கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் உடனடியாக அந்த காவல் நிலையத்திற்குச் சென்று, அங்குள்ள டி.எஸ்.பி.யையும், சப்-இன்ஸ்பெக்டரையும் தரக்குறைவாகப் பேசி, காவல்நிலையத்தின் மீது கல்லெறிந்து சாராயம் குடித்திருந்தவனைத் திருப்பி அழைத்துக் கொண்டு வருகிறார்கள். அவர்கள்மீது வழக்குப் போடவில்லை. எனவே, ஆளும் கட்சியினருடைய தலையீடு நிர்வாகத்திலே இருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு நாட்டினுடைய நிலைமை வறுமையை நோக்கிப் போய்க்கொண்டிருகிறது. யார் யார் என்னென்ன வேலைகளைச் செய்தார்கள் என்ற பட்டியல் என்னிடம் இருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடத்திலும் தெரிவித்திருக்கிறேன்.

இந்த அரசு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 50 கிலோ அரிசியும், 100 ரூபாய் பணமும் கொடுத்ததாகக் கூறியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் வைப்பாறு என்னுமிடத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்டாட்சித் தலைவர் ஆகியவர்களிடம் சென்று கேட்டபோது, 5 கிலோஅரிசிதான் கொடுத்தார்கள். 50 கிலோ அரிசி கொடுக்கப்படவில்லை. அதேபோல், இன்னும் வீடு இழந்த தோழர்களுக்கு சரியான முறையில் உதவித் தொகை கொடுக்கப்பட வில்லை. ஆகவே, இந்த ஆளுநர் உரை மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் செய்யவில்லை, விவசாயிகளுக்கு எந்தவிதமான நன்மையும் செய்யவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





அதற்கடுத்தாற்போல், என்னுடைய தொகுதியில் வேட்டகுடி என்னும் கிராமத்தில் 17 மாடுகளுக்கு ஊசி போடப்பட்டு அதிலே 3 மாடுகள் இறந்துவிட்டன. அங்குள்ள விவசாயிகள் ஒரு ஜோடி மாடுகள் வாங்குவதற்கு ரூ. 3,000 அல்லது ரூ. 2,500 கொடுத்து வாங்கப்பட்டிருக்கிறன. இந்த விவசாயிகளுக்கு உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதினேன். இதுவரை எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. அதேபோல். . .

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய குறிப்பு அனுப்பப்பட்டு, கால்நடை பராமரிப்பு இயக்குநர் அவர்களால் விசாரணை நடத்தப்பட்டு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. த. ஆறுமுகம் : இதுவரையிலும் நடவடிக்கை எடுத்ததற்காக நன்றி. இந்த விவசாயிகளுக்கு உடனடியாக உதவித் தொகை கொடுக்கவேண்டும். அதற்குப் பிறகு, அரியலூர் கலைக் கல்லூரியில் 6 லட்சம் ரூபாய் செலவில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் உணவு விடுதி கட்டுவதற்கான ஒரு நிலைமை உண்டாக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்தத் தொகுதியிலே தி.மு.க. வெற்றி பெற்றுவிட்ட காரணத்தால், அந்த உணவு விடுதி அமைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை. இதிலே ஆளும் கட்சி அமைப்பாளர் தலையிட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இந்த உணவு நிலையத்தை கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்தாற்போல், கீழப்பழுவூரிலே ஒரு உயர்நிலைப் பள்ளியிலே உணவு விடுதி கட்டுவதற்கு சாங்ஷன் செய்யப்பட்டு, அது நிறுத்தப்பட்டிருகிறது, அதையும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. என். பழனிவேல் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே மிகப் பெரிய திட்டங்கள் எல்லாம் அறிவிக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் வழக்கமாக ஒவ்வொரு சட்ட மன்றக் கூட்டத் தொடரிலும் ஆளுநர் ஆற்றுகிற உரைக்கு என்ன அடைமொழிகள் கொடுக்கிறார்களோ அதுதான் வழக்கம்போல் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, புதிய புரட்சிகரமான திட்டங்களை அறிவித்து அதன்மூலம் இன்று

இருக்கக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திட்டம் இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லையென்றுதான் சொல்ல வேண்டும்.

உதாரணமாக, இன்றையதினம் தமிழகத்தில் இருக்கக்கூடிய 40 லட்சத்திற்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்களுடைய பிரச்சினை சம்பந்தமாக அவர்களுக்கு இந்த அரசு திட்டவட்டமாக என்ன வழி காட்டுகிறது என்று ஒன்றும் இதிலே இல்லையென்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு பொதுவாக படித்தவர்கள், படிக்காதவர்கள் என்று சொல்லி அதிலே முசுக்கொட்டை பயிரிடுவது, பட்டுப் பூச்சி வளர்ப்பது அதன் மூலம் வேலை வாய்ப்பு அளிப்பதாகச் சொல்லுகிறார்கள். இதிலே என்ன வேடிக்கை என்றால் 6 மாதத்திற்கு முன்னால் இந்தத் திட்டத்தின்கீழ் 11,000 பேருக்கு வேலை கொடுத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆறு மாதத்திற்கு 11,000 பேருக்கு வேலை என்று சொன்னால் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பெரிய பிரசினையை தீர்த்துவிடப் போவது கிடையாது. நமது மாநிலத்திலே இருக்கக்கூடிய 13,000-க்கு மேற்பட்ட ஊராட்சிகளிலே 20,000 பேருக்கு வேலை என்பது ஊருக்கு ஒருவர் இருவருக்குத்தான் கிடைக்குமே தவிர. நிரந்தரமான பரிகாரத்தை ஏற்படுத்தாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு லட்சம் வீடுகளை ஐந்தாண்டுகளில் கட்டித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஐந்தாண்டுகளுக்கு ஒரு லட்சம் வீடுகள் என்றால் ஆண்டுக்கு இருபதாயிரம் வீடுகள்—நாட்டில் இருக்கக்கூடிய இருபதாயிரத்துக்கு மேற்பட்ட கிராமங்களில் ஒரு கிராமத்திற்கு ஒரு வீடு என்ற அளவில்தான் வருகிறது. நாட்டில் இருக்கும் லட்சத்திற்கு மேற்பட்ட வீடு இல்லாத ஏழைகளுக்கு குறிப்பாக அரிசனங்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னால் இந்த வேகத்தில் சென்றால் 200 ஆண்டுகள் ஆனாலும் பிரச்சினை தீராது. நம்முடைய பிள்ளைகள் தலை முறை, அதற்குப் பின்னால் தலை முறை வந்தாலும் கூட இந்தப் பிரச்சினை தீராது.

இன்றையதினம் காவல் நிலையங்களை எடுத்து கொண்டால் அங்கு நடப்பது என்ன? அங்கே எந்த விதமான நியாயமும் கிடையாது. ஆளும் கட்சிக்காரர்கள் அதையும் மீறி எம்.எல்.ஏ-க்கள் சொன்னால் ஒன்றிரண்டு பிரச்சினைகளை அப்போதைக்கு செய்வது போல் காட்டுகிறார்களே தவிர, உருப்படியாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில்லை. ஒருவர் வீட்டில் 200 ரூபாய் பெறுமான பொருள் களவு போய்விட்டது என்றால் திருட்டுக் கொடுத்தவன் ரிப்போர்ட் கொடுக்க பயப்படுகிறான். போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று பெட்டிஷன் கொடுத்துவிட்டு வந்தால் ஒருவாரம்



வரை அதை விசாரிப்பதே இல்லை. அதற்குப் பிறகு அந்த விட்டுக்குப் போய் உங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருபவர்கள் யார் என்று கேட்கிறார்கள். அண்ணன், தம்பி, சொந்தக்காரர்கள் தான் வீட்டுக்கு வருவார்கள். நீங்கள் யார் மீது சந்தேகப்படுகிறீர்கள் என்று அடுத்த கேள்வி கேட்பார்கள். இவ்வாறு பெட்டிஷன் கொடுத்தவர்களையே பயமுறுத்தக்கூடிய அளவில் கேள்வி கேட்பதன் காரணமாக பெட்டிஷனையே வாபஸ் வாங்கிக் கொள்ளக்கூடிய அளவுக்கு விசாரணை இருக்கிறதே தவிர நிவாரணம் கொடுக்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை.

ஆசிரியர்கள் பற்றி இன்றையதினம் இந்த கவர்னர் உரையிலே ஒரு வரி கூட இல்லை. அவர்கள் பல்வேறு கோரிக்கைகளுக்காக நீண்ட நாட்களாக மாநாடுகள் கூட்டி போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினை இன்றைய தினம் தீர்க்கப்படவில்லை. அவர்கள் எல்லாம் இன்றைய தினம் ஆஸ்பத்திரிக்கு முன்னால் இருக்கிறார்கள். எங்கும் பள்ளிக் கூடத்தில் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதில்லை. எந்த இடத்தில் பார்த்தாலும் ஆசிரியர்கள் ஒவ்வொரு ஆஸ்பத்திரி முன்னாலும், 10, 20 பேர் இருக்கிறார்கள். நம்மைப் பார்த்தால் ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு நீங்கள் போங்கள் எங்கள் வேலையை நாங்கள் பார்க்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அதுதான் இவர்கள் வேலை.

ஆளுநர் அவர்கள் உரையில் பொதுச் சுகாதாரத்தைப்பற்றி ஒரு வரி கூட கிடையாது. ஆஸ்பத்திரிகளுக்கு சாதாரண நோய் நொடி என்று சென்றால் காலை 7 மணிக்குச் சென்றால் பிற்பகல் 1 மணிக்கு கிடைக்கக்கூடிய வைத்திய வசதி மிகவும் மோசமான வைத்திய வசதியாகும். 10 பைசா மாத்திரை, 20 பைசா தண்ணீர் மருந்து கொடுக்கிறார்கள். ஒரு நாள் முழுவதும் ஆஸ்பத்திரியில் காவல் காத்துக் கொண்டிருக்கும் நிலைமை இருக்கிறது. அதுபற்றி ஆளுநர் உரையில் ஒரு வார்த்தை கூடக் கிடையாது. இதை நீங்கள் உணரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஆளும் கட்சி அருமை நண்பர்கள் பெரிய திட்டத்தை வைத்திருக்கிறார்கள். ஆ—ஊ என்றெல்லாம் கூறுகிறார்கள். என்ன நடந்திருக்கிறது? மின்சாரக் கட்டணம் சிறு விவசாயிகளுக்கு 12 பைசா. பெரிய விவசாயிகளுக்கு 14 பைசா என்று போட்டார்கள்.

[மாலை 5-50]

அந்தச் சட்டம் இன்றைக்கு அமுலுக்கு வந்திருக்கிறதா? என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்த நேரத்திலே சொன்னாலும்கூட நான் தெளிவு படுத்திக் கொள்வேன்.

ஆனால் இவர்கள் எல்லாம் தெரிந்தோ தெரியாமலோ இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். 12 காசு என்று எந்த ஒரு இடத்திலேயும் வசூல் செய்யவில்லையென்பதை நான் ஆதாரப் பூர்வமாக கூறமுடியும்.

இந்த ஆண்டு குழந்தைகள் ஆண்டு. ஆனால் சமீபத்திலே சிவகாசியில் என்ன நடந்தது? உலகமே குழந்தைகளுக்கு இந்த ஆண்டு அனுதாபத்தைக் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இங்கே 10, 12 வயதுள்ள குழந்தைகள் வயிற்றை வளர்ப்பதற்காக அங்கே போய் இறந்திருக்கிறார்கள். அதற்கு இந்த அரசு அனுதாபம் தெரிவித்திருக்கிறது. அப்படி அனுதாபம் தெரிவிப்பதிலே ஒன்றும் குறைச்சல் கிடையாது. அனுதாபத்தால் மக்களுடைய பிரச்னைகள் தீராது. அவர்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உருப்படியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஆளுநர் உரையிலே சொல்கிறார்கள், நகரத்தையும் அதைச் சுற்றிலும் உள்ள இடங்களையும் நாம் அபிவிருத்தி செய்வதோடு நில்லாமல் கிராமங்களையும் அபிவிருத்தி செய்வோம் என்று. எந்த நகரம் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. திண்டுக்கல்லை எடுத்துக்கொள்ளுங்கள். அங்கே இன்னும் லாரியிலேதான் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. என்ன முன்னேற்றம்? என் தொகுதியிலே உள்ள 3 மேஜர் பஞ்சாயத்துக்களில் உருப்படியாக இன்னும் தண்ணீர் திட்டம் இல்லை. எத்தனையோ அரசாங்கம் வந்தது. அவர்களும் செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால், எதுவும் செய்யவில்லை, இவர்களும் வந்து 2 ஆண்டுக்காலமாகி விட்டது. ஒன்றும் செய்யவில்லை, நாங்களும் கேட்காத அதிகாரிகள் கிடையாது. என்ன என்னமோ கோரிக்கைகளைச் சொன்னார்கள், அவைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டாலும் கூட ஆயக்குடியிலே இன்னும் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. இப்படி இருக்கிறது குடிநீர்ப் பிரச்சினை.

அடுத்து, அரிசன மாணவர்களுக்கு 20 ஆண்டுகளுக்கு முன்னாலே காங்கிரஸ் ஆட்சியிலே என்ன உதவித் தொகை நிர்ணயம் செய்தார்களோ அதைத்தான் இப்போதும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதே அளவு உபகாரச் சம்பளத்தை வைத்துக் கொண்டு எப்படி பட்டணங்களிலேயும் நகரங்களிலேயும் அவர்கள் நிம்மதியாகப் படிக்க முடியும். எங்களிடத்திலே எத்தனையோ மாணவர்கள் எப்படி அந்தத் தொகையை வைத்துக் படிக்கமுடியும் என்று கண்ணீர் வடிக்கிறார்கள். அவர்கள் ஸ்காலர்ஷிப் தொகை போதாத அளவில் இருக்கிறது. அதை கூட சில கல்லூரிகளில்கொடுக்காத நிலைமை இருக்கிறது. இப்படியிருக்கும் போது அரிசன மாணவர்கள் படிப்பதற்கு என்ன உத்திரவாதம் இந்த அரசால் தரப்படுகிறது என்று தெரியவில்லை. அரிசனங்களின் அரசு என்று சொல்லிக்கொள்கிற அரசு சாதாரண மாணவர்களுடைய பிரச்சினைகளைக் கூட தீர்க்க முடியவில்லை.





அடுத்து அரிசன நலத் துறையிலே இருக்கின்ற மாவட்ட அளவிலே இருக்கின்ற அதிகாரிகளுக்குக்கூட ஜீப் வசதிகள் கிடையாது. நான் திண்டுக்கல்லிலுள்ள அரிசன நலத்துறை அலுவலகத்திற்கு சென்றிருந்தேன். அங்கே பார்த்தால் அது ஆபீஸாகத் தெரியவில்லை, கழுதைகள் அடையக்கூடிய இடமாகத்தான் இருக்கிறது. அமைச்சர்களில் யாராவது போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள். அந்த அலுவலகம் எப்படி இருக்கிறது என்று. அது என்ன அலுவலகமா என்று சொல்லக்கூடிய நிலைமையிலே தான் இருக்கிறது. அந்த அலுவலகத்திற்குப் போனாலே அரிசனங்களுக்கு சேவை செய்யக்கூடிய அலுவலகம் இப்படித்தான் இருக்குமோ என்று நினைக்கத் தோன்றுகிறது. அங்கே உள்ள அதிகாரிகளுக்கு வாகன வசதிகளே இல்லை. மாவட்ட அதிகாரிகளுக்கே வாகன வசதியில்லை என்றால் எப்படி வேலை நடக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இங்கே அழகாகப் பேசிவிட்டுப் போவதால் மட்டும் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். சலவைத் தொழிலாளர்கள் பல்லாயிரக் கணக்கில் இருக்கிறார்கள். அவர்கள் பயன்படுத்துகின்ற சாமான்களின் விலை 10 மடங்கு உயர்ந்துவிட்டது. அவர்களுக்குத் தேவைப்படுகின்ற சாமான்கள் கிடைக்காத நிலைமை இருக்கிறது. கிடைத்தாலும் 10 மடங்கு விலை உயர்வில்தான் கிடைக்கிறது. எந்த அதிகாரியிடம் கேட்டாலும் பரிகாரம் கிடைக்கவில்லை. இன்றைய தினம் அவர்கள் சங்கம் சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் மனுக்கள், கோரிக்கைகள் கொடுத்தால் உடனடியாக தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் கிராமங்களில் பலயிடங்களில் வாடகைக் கட்டிடங்களிலும், மடங்களிலும் ஆரம்பப் பள்ளிகள் நடக்கின்றன. அவைகளுக்குப் புதிய கட்டிடங்கள் கட்ட அரசு ஏதாவது உதவியோ, ஆலோசனைகளோ கொடுத்து உடனடியாக அவர்களுக்கு அந்தப் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி மன்றங்களுக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லை. அங்குள்ள வருமானம் இருக்கின்ற சிப்பந்திகளின் சம்பளத்திற்குத்தான் சரியாக இருக்கிறது. வேலை எதுவுமே நடக்க வில்லை. ஊரிலே உள்ள ஜனங்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் சிப்பந்திகள் மீது சீறிவிழுந்து, நீங்கள் சம்பளத்தை வாங்கி சாப்பிட்டுவிட்டுப் போகிறீர்களே தவிர மக்களுக்கு என்ன செய்கிறீர்கள்? லைட் எரியவில்லை, வீதிகள் சுத்தமாக இல்லை. சுகாதார வசதி மிகவும் மோசமாக இருக்கிறது. என்று சொல்

கிறார்கள். ஆகவே, ஊராட்சிகளுக்கு அதிக வருமானம் கிடைப் பதற்கு ஏதாவது வழிகள் ஆளுநர் உரையில் கூறப்பட்டிருந்தால் அதைப் புரட்சித் திட்டம் என்று நாம் ஏற்க முடியும். ஆகவே, இதில் புரட்சியும் இல்லை புதுமையும் இல்லை என்று எங்கள் கட்சியின் சார்பில் தெரிவித்துக்கொண்டு அடுத்து ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

ஒரு ஆட்டின் விலை 300 ரூபாய் விற்கிறது. ஒரு கிலோ கறி 20 ரூபாய் விற்கிறது. இந்த நிலையில் ஏழை எளியவர்கள் எப் படிக் கறி வாங்கிச் சாப்பிட முடியும்? அதைப்பற்றிச் சிந்தித்து அதற்கு நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சிறு விவசாயிகளுக்கான மின் கட்டணக் குறைப்பு அமலுக்கு வரவில்லை என்று சொன்னார் கள். ஏற்கெனவே அது அமலில் இருக்கிறது. அதனாலே சிறு விவசாயிகள் பலன் பெற்று வருகிறார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, சட்டம் நடைமுறையில் இருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை ஆனால் அது அமலுக்கு வந்திருக்கிறதா? எங்கேயாவது 12 காசு வசூல் செய்கிறார்களா? அப்படியிருந்தால் எந்த ஊரில் என்று சொன் னால் எங்கள் ஊர் அதிகாரிகளிடமும் சொல்லி அமல்படுத்த ஏற்பாடு செய்வேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்,— தலைவரவர்களே, நான் சுற்றுப் பயணம் செய்த நேரத்தில் என்னைச் சந்தித்த விவசாயிகள் தங்களுக்கு 12 காசுதான் வருகிறது என்று என்னிடத் திலேயே தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாகத் தென்னாற்காடு மாவட்டத்தில் அமலில் இருப்பதை நான் கண்டேன்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, நெல், அரிசி நடமாட்டத்துக்குத் தடை இல்லை என்றும், மத்திய சர்க்காரிடம் இவர்களுக்கு அப்பாற்பட்ட நெல்லுக்கு விலை உயர்வு கொடுக்க வேண்டும் என்று மத்திய சர்க்காரிடம் கோரிக்கை விடுத்ததை மட்டும் தான் ஆளுநர் உரையில் குறிப் பிட்டுள்ளார்கள்.

ஆனால், முக்கியமாக நெல்விலைக் குறைவாலும், இயற்கை யின் விளைவால் தொடர்ந்து பல ஆண்டுகள் வறட்சி, புயல், வெள்ளம், பூச்சி, நோய் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டு



வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் உள்ள விவசாயிகளின் பல்வேறு கஷ்டங்களுக்குத் திட்டமோ, அனு தாபமோ, ஆதரவோ குறிப்பிடாதது மெத்த வருந்தத் தக்கது.

கட்டுப்படியாகாத விலை, சாகுபடிக்கு அதிகமான செலவு இதையெல்லாம் பற்றி மற்றவர்கள் சொல்லிவிட்டனர். விவசாயி கள் பட்டிருக்கும் அரசாங்கக் கடன், கூட்டுறவுக் கடன், நில வள வங்கிக் கடன் நிலவரிப் பாக்கி ஆகியவற்றை வசூல் செய்யும் கொடுமையான முறை சகிக்க முடியவில்லை. இயற்கையின் சீற் றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்காமல் மேலும் துன்புறுத்துவது நியாயமாகாது. ஸ்பிக் போன்ற ஸ்தாபனங்களுக்குக் கோடிக்கணக்கில் தள்ளுபடி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நாங்கள் அறிகிறோம். ஆகவே, கோடிக்கணக்கான மக்களுக்கு பெரும்பாலான இந்த நாட்டு விவசாயிகள் கடன் பெற்றிருக்கும் நிலையில் நிவாரணம் கொடுப் பதில் நியாய உணர்வோடு இந்தச் சர்க்கார் நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்ந்து நிர்ப்பந்தம் செய்யப்படுவார்களேயானால் விவ சாயிகள் கொதித்தெழ நேரிடும். முன்னர் காந்தியடிகள் தலைமை யில் வட நாட்டில் நடந்த சௌரி சௌரா போராட்டமும், வல்லபாய் பட்டேல் தலைமையில் நடந்த பர்தோலி வரிகொடா இயக்கமும், உப்பு மீது வரியை நீக்க தண்டி யாத்திரையும்தான் இந்நாட்டு மக்கள் ஒன்று திரண்டு எழுந்து வெள்ளையரை வெளி யேற்ற முதற்படியாக அமைந்த சரித்திர உண்மை. அதை அரசு தரப்பில் மறக்கலாகாது. இவைகளெல்லாம் இந்த நாட்டிற்குச் சுதந்திரம் வருவதற்கு அடிப்படையாக இருந்த இயக்கங்கள். மக்களின் விழிப்பு உணர்ச்சியைத் தடுத்து நிறுத்த முடியாது என்பதற்குச் சான்றுகள் இவை. இதை யெல்லாம் கருத்திற்கொண்டு விவசாயப் பெருங்குடி மக்களின் உணர்ச்சியைப் புரிந்துகொண்டு அதற்கான நடவடிக்கைகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று மிகவும் வலியுறுத்தி நான் சொல்கிறேன்.

கடன் வசூல் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். ஆலைத் தொழிலாளர்கள் தங்கள் உரிமைக்காக ஒன்றுதிரண்டு அவர்கள் கோரிக்கையை வற்புறுத்தினால் அரசு அவற்குப் பணிகிறது. இதனால் ஆலைத் தொழிலாளர்களின் கோரிக்கை நியாயம் அல்ல என்று சொல்ல நான் முன்வரவில்லை. கட்டுப்பாடாக அவர்கள் இருந்து கேட்பதால் அவர்களுடைய கோரிக்கைக்கு அரசு இணங்குகிறது. அதைப்போல் என்.ஜி.ஓ. போன்ற அரசு அதிகாரிகள், இன்னும் ஹோட்டல் முதலாளிகள் போன்ற வர்கள் ஒன்று சேர்ந்தாலும்கூட அதற்கும் சில சமயங்களில்

விட்டுக் கொடுக்க இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. ஆனால் எந்த விதமான கட்டுப்பாடான அமைப்பும் இல்லாத விவசாயிகளின் கோரிக்கைகளை அரசாங்கத்திலே இருப்பவர்கள் செவி சாய்க்காமல் இருப்பது மிகவும் வருந்தத் தக்கது.

[மாலை 6-00]

ஆகவே, இந்த நிலையை மாற்றுவதற்காக உடனடியாக விவசாயிகளுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு ஆவன செய்யுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

நியாயவிலைக் கடைகள் 13,400 திறந்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். மீதியைத் திறப்போம் என்று சொல்கிறார்கள். அந்த நியாய விலைக் கடைகளில் நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை, கடைகளும் இருப்பதாகத் தெரியவில்லை. எந்தப் பொருளைக் கேட்டாலும் அங்கு இல்லை. கேட்டால் குறிப்பிட்ட தொகைக்குத்தான் சப்ளை செய்யப்படுகிறது. அங்கு சோப்பு, சீப்பு, கண்ணாடி முதலியவை வாங்கி வைக்க வேண்டியிருக்கிறது. மீதமுள்ள தொகைக்குத்தான் மற்ற பொருள்களை வாங்க முடிகிறது. ஆகவேதான் கேட்கின்ற பொருள்களை எங்களால் கொடுக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, எங்களுக்காகச் செய்யாமல், உண்மையிலே மக்களுக்கு சேவை செய்யக்கூடிய அளவிலே செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ப. சந்திரன் : ' இங்கே எதிர்க்கட்சி வரிசையிலே பேசுகின்ற பல நண்பர்கள் நியாய விலைக் கடைகளிலே சோப்பு, சீப்பு, கண்ணாடி விற்பதாக பலமுறை சொல்கிறார்கள். எனக்குத் தெரிந்து அந்தப் பொருள்கள் நியாய விலைக் கடைகளில் விற்பது கிடையாது. மளிகை, பலசரக்குத்தான் விற்கப்படுகிறது. ஆகவே, தவறான தகவலை அவைக்குத் தருகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : நண்பர் சொன்னது போல் இல்லை. நானே, இரண்டு மூன்று மளிகைக் கடைகளுக்குச் சென்றிருந்தேன். அங்கே சோப்பு, சீப்பு, கண்ணாடிகள் விற்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சோப்பு, சீப்பு, கண்ணாடியை அரசாங்கம் அனுப்புவதில்லை. அந்த வியாபாரி தன் சொந்த இலாபத்திற்காக வைத்திருக்கலாம். **நியாய விலைக் கடையில் சோப்பு, சீப்பு, கண்ணாடி........**





திரு. ஓ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்னது அவர்கள் மாவட்டத்தில் இருக்கலாம், எங்கள் மாவட்டத்தில் உள்ளவர்கள் விரும்பியோ, விரும்பாமலோ, சோப்பு, சீப்பு, கண்ணாடிகளைத் தான் பார்க்கிறார்கள். அத்தியாவசிய சாமான்கள் இருப்பதில்லை. நண்பர்கள் வந்தால் காட்டத் தயாராக இருக்கிறேன்.

கனிப் பொருள் வளத்தைப் பற்றி குறிப்பிடும்போது கிராஃபைட் தொழிற்சாலை சிவகங்கையில் ஆரம்பிக்க இருப்பதை குறிப்பிடாதது வருந்தத் தக்கது. கிராஃபைட் தொழிற்சாலையில் சிவகங்கையிலே அமைக்கத் தேவையான அளவில் கிராஃபைட் இந்தியாவிலேயே சிவகங்கையில்தான் கிடைக்கிறது. அத்திட்டம் இன்னமும் அமுலுக்கு வரவில்லை. அவ்வளவு பெரிய தொழிலைப் பற்றி குறிப்பிடவில்லை.

தமிழ் எழுத்துச் சீர்த்திருத்தம்கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால், அது மிக அவசரகோலமாகக் கொண்டு வரப்பட்டது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். மொழி சம்மந்தப்பட்டதை எடுத்தேன், முடித்தேன் என்று உடனடியாக அமுலுக்குக் கொண்டுவருவது அவ்வளவு விரும்பக்கூடியது அல்ல. நாட்டிலே புலவர்கள், பன்மொழிப் புலவர்கள், சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் பேரவைத் தலைவர், புலவர் போன்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் அழைத்துவைத்து, இதுபற்றி ஒரு முடிவுக்கு வந்து அமுலுக்குக் கொண்டுவந்தால் நலமாக இருககும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தி மொழித் திணிப்பை எதிர்ப்போம். ஆனால், அதை விரும்புகிறவர்களுக்கு அதைக் கற்றுக் கொடுக்க வசதி செய்து கொடுக்க வேண்டும். பல பன்மொழிப் புலவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, மொழியை விரும்புபவர்கள் கற்க தடை இருக்கக் கூடாது என்பது எங்களது கோரிக்கை.

சட்ட மன்றக் கூட்டம் நடைபெற இருக்கும் சமயத்திலே அவசரச் சட்டங்களை அதிகமாகப் பிரகடனம் செய்வது சரியல்ல. சமீபத்தில் கூட இருக்கிற சட்டமன்றத்தில் மசோதாவாகக் கொண்டு வந்து சட்டம் இயற்ற வசதி இருக்கிற நேரத்தில் அவசரச் சட்டத்தை அதிகமாகப் பிரயோகிப்பது சரியல்ல என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தியாகிகள் பலருக்கு நீண்ட விசாரணைக்குப் பிறகு பென்ஷன் வழங்கப்படுகிறது. ஆனால் சமீபத்தில், ஊரில் யாரோ வேண்டாதவர்கள், கிராம அதிகாரிகள் ரிப்போர்ட்டு செய்தார்களானால், அதை நம்பி உடனடியாக பென்ஷன்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1979 பிப்ரவரி 16.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் ரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு ரவைத் தலைவர் திரு. முனு. ஆதி அவர்கள் தலைமையில் ரவை கூடியது.

## (1) அறிவிப்புகள்.

### (அ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகப் பேரவைத் தேர்தல்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : தமிழ்நாடு சட்டமன்றப் ரவையில் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் ழகப் பேரவைக்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு சய்யுமாறு பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகம் கோரியுள்ளது.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 17-2-79 ளிக்கிழமை மாலை 3 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் சயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்களைச் சயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 19-2-79 திங்கட்கிழமை காலை 11 ணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள ரும்புகிற வேட்பாளர்கள் 20-2-79 செவ்வாய்க்கிழமை பகல் 1 ணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை வற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது ஓர் இடத்திற்கு மற்படுமாயின் 22-2-79 வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் கல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் ழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

றிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## <u>(2) ஒழுங்குப் பிரச்சினை.</u>

### மத்திய அரசு அனுப்பிய அறிக்கை தமிழில் இல்லாதது குறித்து.

<u>திரு. துரை முத்துசாமி</u> : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ர்டர். நேற்றையதினம் சட்டமன்றத் துறை மூலமாக Guidelines for signing verification certificates for Passports" ன்ற குறிப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. அது ஆங்கிலத்திலும்

[திரு. ஓ. சுப்பிரமனியன்] [1979 பிப்ரவரி 15

வழங்குவது நிறுத்தப்படுவதோடு ஏற்கெனவே பல ஆண்டுகள் கொடுக்கப்பட்ட பென்ஷனையும் திருப்பிப் பெறுவதற்கான நடவடிக்கைகள், சொத்துக்களை ஜப்தி, செய்கின்ற நடவடிக்கைகள் எல்லாம் இருந்து வருகின்றன. இது மிகக் கொடுமையானது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தியாகிகள் தங்கள் ஏழ்மை நிலையை உத்தேசித்து பென்ஷன் வாங்குகிறார்கள். அதை நிறுத்துவது சரியல்ல. எங்கள் ஊர் பக்கத்திலே ஒரு தியாகி, அவருக்கு தமிழக அரசு கொடுத்த. நிலத்தில் முந்திரி மரத்தைப் போட்டு பயிர் செய்திருக்கிறார்கள் 5 வருஷத்திற்குப் பிறகு அவருடைய வருமானம் அதிகப்படியாக கூடிவிட்டது என்று சொல்லி, அவருக்குப் பென்ஷன் உடனடியாக நிறுத்தப்பட்டதுடன் அவருக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்ட பல ஆயிரம் ரூபாய் பென்ஷனைத் திருப்பிக் கட்டவேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறது.

அவர்கள் மேலும் அரசாங்கத்திற்கு பல விண்ணப்பங்கள், மனுக்கள், மேல் முறையீடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் எந்தவிதமான முடிவும் செய்யப்படவில்லை. ஆகவே அனுதாப உணர்ச்சியோடு தியாகிகளுக்குத் தொடர்ந்து பென்சனை வழங்கவும், ஏற்கெனவே வசூல் செய்யவேண்டும் என்று போட்ட நடவடிக்கையை உடனடியாக நீக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக போலீசார் பற்றி பலர்பலவிதமாக பேசினார்கள். ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். பொது மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காக இருக்கின்ற போலீசார்கள். தற்போது நாட்டிலே நடக்கின்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது போலீசாருக்கே பாதுகாப்புக் கொடுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் கலெக்டர் கலந்து கொண்ட கூட்டத்தில் சச்சரவு ஏற்பட்ட நேரத்தில் அவருக்கே காயம் ஏற்பட்டது. சிவகங்கையிலே சினிமா கொட்டகையிலே ஏற்பட்ட தகராறின் காரணமாக டி.எஸ்.பி.க்கும் எஸ்.ஐ.க்கும் காயம் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்திருக்கின்றன. இதற்கெல்லாம் என்ன காரணம் என்று பார்த்து இவைகளை எப்படி நிவர்த்தி செய்யலாம் என்று ஊன்றி கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்கு என்ன ரூட் காஸ் என்று பார்த்து அடிப்படைக் காரணத்தைத்தெரிந்து அதைக் களைந்து நீக்கினால்தான் நல்லது.

நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் அமெரிக்கா சென்றபோது போலீஸ் நிர்வாகம் எப்படி நடைபெறுகின்றது என்று பார்க்கச் செல்கிறேன் என்று சொன்னார். அதைப் பற்றியும் தெரிந்து கொண்டு வந்திருப்பார் என்று நம்புகிறேன்.



[979 பிப்ரவரி 15] [திரு. ஓ. சுப்பிரமணியன்]

அந்தத் துறைக்கும் ஒரு சுமுகமான நிலை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த ஆளுநர் உரையில் நாங்கள் எதிர் பார்க்கிற அத்தனையும் இல்லை என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 6.7 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## (7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

எதுவுமில்லை

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*26. 1978-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30-ஆம் தேதி முதல் 1978-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29-ஆம் தேதி வரை, தமிழ்நாடு சட்டமன்ற மேலவை மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய தொகுப்புரை (ஆங்கிலம்).

* 13—2—1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப் பெற்றது.

இந்தியிலும் தான் இருக்கிறது. நான் அதை இங்கே கிழித்துக்கூட போடலாம். இருப்பினும் ஜனநாயக மரபு காரணமாக அப்படிச் செய்யவில்லை. நான் இந்த அரசாங்கத்தின் கொள்கை-ஆங்கிலம் இந்தி மட்டும்தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மத்திய அரசால் அனுப்பப் பட்டதை அப்படியே கொடுத்து இருக்கிறார்கள்.

திரு. துரை முத்துசாமி : இந்த அரசின் கொள்கையை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்திய அரசு என்னென்ன குறிப்புகளை இங்கே அனுப்புகிறார்களோ அதை அப்படியே சட்டமன்ற துறை உறுப்பினர்களுக்கு அளிக்கிறது. தமிழ் மொழி பெயர்ப்பு வேண்டும் என்று சொன்னால், அரசிடமிருந்து பதில் பெற்று தர முடியும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அரசின் கொள்கை இனிமேல் தெரிவித்து அறிந்து கொள்ள வேண்டும் என்ற நிலையில் மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் நிச்சயமாக இல்லை. இந்த அரசின் கொள்கை, தமிழும், ஆங்கிலமும் தான் என்பது தெளிவாக்கப்பட்டு இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : அரசின் கொள்கை ஆங்கிலமும்-தமிழும் தான் என்றாலும், எங்களுக்கு அளிக்கப்பட்டது ஆங்கிலத்திலும் இந்தியிலும் இருப்பதால், என்னைப் போன்றவர்கள் புரிந்துகொள்கிற வகையில் அதைத் தமிழிலே இனிமேலாவது அச்சிட்டுக்கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினரின் உணர்வுகளை நானும் உணர்கிறேன். மத்திய அரசு அனுப்பியதை அப்படியே கொடுக்கிறார்கள். உறுப்பினர்களுக்குத் தமிழில் வேண்டும் என்றால், மொழிபெயர்த்துக்கொடுக்க ஏற்பாடு செய்யத் தயாராக இருக்கிறேன்.

## (3) அரசினர் சட்டமுன்வடிவு.

தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்டமுன்வடிவை 'பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்".



திரு. க. சுப்பு : தலைவரவர்களே, இந்த மசோதா அறிமுகம் செய்வதை எதிர்ப்பதற்கு முக்கிய காரணம் கொள்கை அல்ல. கொள்கை அளவில் நாங்கள் இதை எதிர்க்கவில்லை. ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போது நிலச் சீர்திருத்த சட்டங்களை நிறைவேற்றி, அதை ஜுடிசியல் பர்வியூவில் இருந்து எடுத்துவிடுவதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் நிலச் சீர்திருத்த சட்டங்களை அரசியல் அமைப்புச் சட்டத்தின் 9-வது அட்டவணையில் சேர்க்கவேண்டும் என்று வற்புறுத்தி வந்தது. இப்போது மத்திய அரசாங்க காபினட் ஒன்று கூடி அந்தச் சட்டங்களை 9-வது அட்டவணையில் சேர்ப்பது என்பது முடிவு எடுத்து இருக்கிறது. ஆகவே, இந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வருகிற நேரம் நல்ல நேரமாக இருக்கிறது. துரிதமாக இப்படிப்பட்ட கேஸ்களைப் பரிசீலனை செய்து பைசல் செய்ய வேண்டும். நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்தால் மட்டும் போதாது, உபரியாக இருக்கும் நிலத்தை விநியோகிப்பதில் காலதாமதம் இருக்கிறது என்று மத்திய அரசாங்கம் சுட்டிக்காட்டியிருக்கிறது. நேஷனல் கைய்டு லைன்ஸ் எப்படி இருக்கிறதோ, அதில் நார்ம்ஸ் எப்படி இருக்கிறதோ அந்த வகையில் நிலங்கள் விநியோகிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசினுடைய மசோதாவிலே சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஒட்டி கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது. எந்த அடிப்படையில் உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு இருக்கிறது என்பது சொல்லப்படவில்லை. அந்தத் தீர்ப்பை இல்லாமல் செய்வதற்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறதா அல்லது அதிலே இருக்கிற நல்ல நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா என்றுகூடச் சொல்லப்படவில்லை. ஒரு மசோதாவைக் கொண்டுவரும்போது எந்த அடிப்படையில், எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவரப்படுகிறது என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்க வேண்டும்.

அது மட்டுமல்ல. இப்போது இந்த அவசரச் சட்டத்திற்கு என்ன அவசியம் ஏற்பட்டது? நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. எடுக்கப் படும் நிலத்திற்கு அதிகமாக காம்பன்சேஷன் கொடுக்கப்பட்டிருக் கிறது; மேலும் கொடுக்க வேண்டியிருக்கிறது; அதைக் குறைப் பதற்காகச் சட்டம் கொண்டுவந்திருக்கிறோம் என்று சொல் கிறார்கள். அதைப் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவாகச் சொல்ல வேண்டாமா? ஏற்கெனவே கொடுக்கப்பட்ட காம்பன் சேஷனைப்பற்றி ஒன்றும் இல்லை. கொடுத்தது கொடுத்ததுதான் அப்படியானால் இனிமேல் கொடுக்கக் கூடியவர்களுக்குத்தான்

இந்தச் சட்டம் பொருந்தும். அதனால் ஏற்கெனவே கொடுக்கப்பட்ட காம்பன்சேஷனால் அரசுக்கு இழப்பு எவ்வளவு? இந்த மசோதாவை நிறைவேற்றுவதினால் அரசுக்கு ஏற்படுகின்ற ஆதாயம் எவ்வளவு, முன்னால் கொடுக்கப்பட்ட ஈட்டுத் தொகைக்கும் இனிமேல் கொடுக்கப்படுகிற ஈட்டுத் தொகைக்கும் உள்ள வித்தியாசம் என்ன? என்பதை எல்லாம் சொல்லியிருக்க வேண்டும். அப்படிச் சொல்லாததற்கான காரணம் என்ன?

அடுத்ததாக, இந்த அவசரச் சட்டத்திற்கு இப்போது தேவையில்லை. ஏனென்றால் நிலச்சீர்திருத்தம் சம்பந்தமாக ஒரு விரிவான, தெளிவான காம்ப்ரிஹென்சிவ் ஆக்ட் கொண்டுவர வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதையெல்லாம் பரிசீலனை செய்து நல்லமுறையிலே கொண்டு வந்திருக்கலாம் என்பது என்னுடைய கருத்து.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> தலைவரவர்களே, அவசரச் சட்டம் ஏன் கொண்டுவரப்பட்டது என்பதைச் சொல்ல கடமைப்பட்டிருந்தாலும் சில காரணங்களால் அவசரச் சட்டத்தில் இருக்கிற உட்கருத்து மாறிவிடக் கூடாது, சட்டத்தில் உள்ள நோக்கங்களை எல்லாம் முன்கூட்டியே சொல்லிவிட்டால் உட்கருத்துக்கள் எங்கே வெளியே தெரிந்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. காரணம் அந்தச் சட்டத்தை இங்கே நிறைவேற்றிவிட்ட பின்னால் மத்திய அரசின் ஒப்புதலையும் பெறவேண்டும். மத்திய அரசின் ஒப்புதலுக்குப் போகும்போது, பல செயலாளர்கள் பார்த்து, அதற்குப் பின்னாலே அமைச்சர்களின் கையெழுத்தைப் பெற்று, அதன் பிறகு நமக்கு வரவேண்டும். அந்த நேரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் யாராவது சென்று தடை செய்து விடுவார்களோ என்ற அச்சத்தின் காரணத்தினால் தான் இப்படிப்பட்ட நேரங்களில் அவசரச் சட்டமாகக் கொண்டுவருகிறோம். அவசரச் சட்டமாகக் கொண்டுவரும்போது பாதிக்கப்படுவோருக்குச் சட்டத்தைப் பற்றி சட்டம் வருவதற்கு முன்னால் யாருக்கும் தெரியாது.

இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்னாலே கூட எத்தனை நாள் சிந்தனை செய்து, காலை முதல் மாலை வரை எத்தனை முறை எழுதி, எழுதி கையெழுத்திட்டு, கடைசியாக ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம் என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியாது. இந்தச் சட்டம் நாளையே எடுத்துக்கொள்ளப் படவில்லை ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நன்றாகப்படித்து, தங்களுடைய மேலான கருத்துக்களை எல்லாம் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டும்; அதற்குப் போதுமான நேரம் கொடுக்க வேண்டும் என்பதற்காக 22-ந்தேதிதான் இந்த மசோதா எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. இடையிலே 6 நாட்கள் இருக்கின்றன. ஆகவே, அன்றைக்குத் தங்களுடைய அரிய கருத்துக்களை எல்லாம் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள கேள்வி:—

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி வழங்கப்பெற்றது.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

## <u>(4) அரசினர் தீர்மானம்</u>

<u>வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.</u>

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> பேரவைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 18-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் 'வகை-2 பிற உறுப்பினர்கள்' என்ற தலைப்பின்கீழ் (எச்) பகுதிக்கிணங்க, மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் ஒரு நாளன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாக வாரியத்தின் பதவிக் காலம் முடிவடைந்ததன் காரணமாக, அதில் உறுப்பினராக இருந்த திரு. ஏ. எம். பரமசிவன் அவர்களின் பதவிக்காலம் முடிவடைவதால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஓர் உறுப்பினரை இப்பேரவை தேர்ந்தெடுக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

## <u>(1) அறிவிப்புகள்</u> (தொடர்ச்சி)

<u>(ஆ) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்குத் தேர்தல்.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு ஒரு உறுப்பினரைத்

தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத்தாள்களை 17-2-79 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனத்தாள்கள் 19-2-79 திங்கட்கிழமை காலை 11-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 20-2-79 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் 22-2-79 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கும் பிற்பகல் 1-00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(முற்பகல் 9-10)

## (5) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டு இன்றோடு ஒரு வருடம் 7 மாதம் 16 நாட்கள் ஆகிறது. இந்த நாடு சுதந்திரம் அடைந்து 31 ஆண்டு 6 மாதம் ஒரு நாள் ஆகிறது. இதை நான் ஏன் கூறுகிறேன் என்று சொல்வதற்குக் காரணம் இருக்கிறது. 5 ஆண்டுக் கால அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் மூன்றில் ஒரு பகுதி கழிந்து விட்டது, இதுவரை மூன்று முறை ஆளுநர் அவர்களின் உரையும் நடந்து விட்டது. இப்போது வரப்போகிற வரவு-செலவுத் திட்டத்தோடு அநேகமாக இரண்டரை ஆண்டு ஆட்சியில் அநேகமாக பாதி ஆண்டுகளுக்கான வரவு-செலவு திட்டமும் முடியப்போகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இந்த இரண்டரை ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே தமிழக மக்களுக்கு எத்தனை காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதைப் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இப்படிக் கூறுகிறபோது திடீரென்று ஏற்பட்ட விபத்துக்கு உதவியதைச் சாதனை என்று நீங்கள் கூறிவிடக் கூடாது. புயல், வெள்ளங்களால் ஏற்பட்ட சேதங்களைச் சர்வே செய்து சில உதவிகளைச் செய்திருக்கலாம். இதை எல்லாம் சாதனை என்று ஏற்றுக்கொள்ள முடியாது. திடீரென்று தீ பிடித்துவிடுகிறது ஒரு வீட்டில். தீயை அணைத்துவிட்டோம் என்று சொல்வதைப்போல் அல்ல சாதனை என்பது.



அவர் அறிவித்திருந்த கொள்கைக்கிணங்க தமிழகத்தில் இரண்டரை ஆண்டுச் சாதனை என்ன என்று பார்த்தால் அநேகமாக எதுவுமே இல்லை என்றுதான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதனை மிக வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆளுநர் உரை 16 பக்கங்களையும் 30 பாராக்களையும் கொண்டிருக்கிறது. இத்தனை பகுதிகளிலும் ஒன்றுமே இல்லை என்று தான் குறிப்பிட வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்கு என்னுடைய தொகுதியை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். இந்த ஒரு வருடம் 7 மாதம் 16 நாட்களிலே என்னுடைய தொகுதியிலே என்ன வேலைகள் நடந்திருக்கின்றன என்று பொதுமக்களுக்குச் சொல்கின்ற வகையில் கணக்குப் போட்டுப் பார்த்தால் அநேகமாக ஒரே ஒரு பள்ளிக்கூடம் புதிதாகத் திறந்ததைத் தவிர வேறு எந்த விதமான வேலைகளும் நடைபெறவில்லை என்றுதான் குறிப்பிட வேண்டியிருக்கிறது. தமிழ்நாட்டிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் யாராக இருந்தாலும் அவர்கள் தங்கள் தொகுதிக்குச் செல்கிற போது சாதனைகள் என்று மக்களிடத்திலே சொல்லக் கூடிய அளவில் என்ன இருக்கிறது என்ற கேள்வியை நான் இங்கே கேட்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இப்படியெல்லாம் கூறுகின்றபோது நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பல இடங்களிலும் விளக்குகள் இல்லாமல் இருக்கிறது என்றும் பழுதுபட்ட சாலைகள் ரிப்பேர் செய்யப் படாமல் கிடக்கின்றன என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே புதிதாக மின் இணைப்புகள் கொடுத்திருந்தாலும், பெரிய சாதனை என்று சொல்லக்கூடிய அளவிலே குறிப்பிடத்தக்க வகையிலே எதுவுமே இல்லை என்பதுதான் தமிழகத்திலே இன்று இருக்கக்கூடிய நிலை என்பதை இந்தச் சூழ்நிலையிலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சி செய்தபோது அவர்கள் செய்த காரியங்களை விமரிசித்து அந்த ஆட்சி மாறிய பிறகு இந்த ஆட்சி வந்தது. ஆகவே அப்படி ஆட்சி மாறி வந்து விட்ட பிறகு மக்களுக்கு வேண்டிய நல்ல காரியங்கள் பற்றிச் சிந்தித்துச் செய்ய வேண்டுமே தவிர மீண்டும் மீண்டும் பழைய கதையை, அதாவது முன்பிருந்தவர்களை விமர்சிப்பதிலேயே காலத்தைச் செலவழித்துக் கொண்டு அதையே பேசிக்கொண்டே இருப்பது நல்லதல்ல என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகள் பிரச்சினை பற்றி உயர்மட்டக்குழு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது என்று முதலமைச்சரவர்கள் அறிவிக்கிறார்கள்

முதல் அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள், ஜப்திகள் நடக்காது என்று சொல்லி. இப்படிச் சொல்வது நடக்கிறதா என்பதைப் பரிசிலனை செய்து பார்க்கவேண்டும். அறிவிப்புகள் வருகின்றன ஜப்திகள் நடக்காது என்று, அதைக்கண்டு மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் அதற்கு நேர்மாறாக ஜப்திகள் ஏராளமாக நடக்கின்றன. அப்படி ஜப்திகள் நடப்பது மட்டுமல்ல, ஜப்தி செய்யாதே என்று யார் சொன்னாலும் அவர்கள் மீது வழக்கு போடுகிறார்கள். ஆகவே சொல்லுக்கும் செயலுக்கும் இந்த ஆட்சியில் சம்பந்தமில்லை என்று நான் அழுத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உதாரணத்திற்காகச் சொல்கிறேன், பெரிய நிலக்கிழார் அல்ல, நான்கு ஏக்கருக்குக்கூடச் சொந்தக்காரர் அல்ல, சொரட்டு என்ற ஊரில் செல்லையா என்பவரிடம் ஜப்தி செய்யப்பட்டு அவர்மீது வழக்கு போட்டு வழக்கு நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கிறது. உயர்மட்டக் குழுவில் ஆய்வு நடக்கிறது, கடன் பற்றி பரிசிலனை செய்துகொண்டிருக்கிறார்கள், ஆகவே ஜப்தி நடவடிக்கை எடுக்ககூடாது என்று கூறி ஜப்திகள் நடக்கவில்லை என்று கூறுவது எந்த அளவிற்கு ஒரு அப்பட்டமான பொய் என்பதை நான் உங்கள் மத்தியில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஜப்தி செய்ய உத்தரவிட்டிருக்கிறார்கள் என்று சொல்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை, ஆனால் இல்லை என்று சொல்லி விட்டு நடப்பதில்தான் எனக்கு ஆட்சேபணை. நிலங்களை ஏலத்தில் விட ஏராளமான நோட்டீஸ்கள் அனுப்பப்படுகின்றன, ஒரு பக்கத்தில் அமைச்சர்கள் குறிப்பாக முதல் அமைச்சர் அவர்கள் இதுபற்றிப் பரிசிலனை நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள், அறிவித்துக்கொண்டும் இருக்கிறார்கள். ஆனால் விவசாயிகள் அத்தனை பேர்களுக்கும் நோட்டீஸ் வருகிறது நிலத்தை ஏலத்தில் விடப்போவதாக. நடக்குமா? தனிப்பட்ட ஒரு நபரின் வரப்பைத் தள்ளினாலே கொலை விழுகிறது, குத்திப் போட்டுவிடுகிறான். ஒரு காணி நிலம் இருந்து நான் நிலச்சொந்தக்காரன் என்று பெருமைப்படுகிறார்கள் விவசாயிகள். அப்படியிருக்க, நிலத்தை ஏலத்தில் கொண்டு போக, நிலத்தை எடுக்க ஆட்சி நடவடிக்கை எடுத்தாலும் அல்லது தனி நபர் நடவடிக்கை எடுத்தாலும் என்ன நடக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். கிராம மக்கள் மத்தியில் இந்த ஆட்சியின் மேல் உள்ள மதிப்பு குறைந்து வருகிறது, நம்பிக்கையின்மை அதிகரித்து வருகிறது. நாங்கள் தூய்மையான ஆட்சி நடத்துகிறோம் என்று சொன்னால் மட்டும் போதாது. சிலர் தூய்மையாக இருக்கலாம், நல்லவர்களாக இருக்கலாம். அதனால் அவர்கள் மட்டும் பெருமைப் பட்டுக்கொள்ளலாமே தவிர தமிழக மக்களுக்கு என்ன பலன் என்று சொல்வார்களேயானால், அந்தப் பலன்களை எடுத்துக் காட்டுவார்களேயானால் நிச்சயமாக அந்தத் தூய்மையைப் பாராட்ட முடியும். தனிப்பட்ட வாழ்க்கையில் தூய்மை



என்று சொன்னால் தனிப்பட்ட மனிதர்களில் தூய்மையானவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அரசாங்க அதிகாரிகள் மத்தியில் அவர்களது செயல்களில் திட்டங்களில் தூய்மை நிலவுகிறதா என்பதை நீங்கள் கணக்குப் போட்டுப்பாருங்கள். இல்லை என்றுதான் நான் சொல்வேன்.

உதாரணம் வேண்டுமா? நாங்கள் பந்த் நடத்தியபோது எங்களையெல்லாம் சிறைபிடித்தார்கள். மூன்றுக் கட்சிக்காரர்கள் சிறைபிடித்தவர்களை ஜாமீனில் விடுகிறார்கள் தீபாவளிக்காக. எந்தக் கட்சிக்காரர்கள் என். ஜி. ஓ.-க்களுக்காக போராடினார்களோ அவர்கள் தீபாவளிக்காக வெளியே ஜாமீனில் வர உத்தரவு தர ஒன்றியத்திலுள்ள தி. மு. க. தலைவரிடம் ரூ. 100 கொடுத்தால் சிக்கிரம் தருகிறேன் என்று சொல்கிறார்கள். யார் என். ஜி. ஓ.-க்களுக்காக போராடினார்களோ அந்தக் கட்சிக்காரர்கள் ஜாமீனில் வெளியே வர தீபாவளிக்கு வெளியே வர,—மூன்று கட்சிக்காரர்கள் ஜெயிலில் இருக்கிறார்கள்—அவர்களிடத்தில் ரூ. 100 தந்தால் ஜாமீன் உத்தரவு சிக்கிரம் தரமுடியும் என்று பேரம் பேசுகிற அளவிற்கு லஞ்சம் இருக்கத்தான் இருக்கிறது, லஞ்சத்தை ஒழித்து விட்டோம் என்று சொல்வது சரியல்ல. அப்படிச் சொல்கிறவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள். லஞ்சத்தை எப்படி ஒழிக்கமுடியும்? தமாஷுக்காக நான் சொல்லவில்லை. வாழ்க்கைப் பிரச்னைக்கு நிரந்தரத்தீர்வு காண்பதுவரை அது இருக்கத்தான் இருக்கும். போலீஸ்காரர்களை எடுத்துக் கொள்ளுங்கள். லீவ் நாட்களில் அவர்கள் வேலை பார்த்தாலும் அவர்களுக்கு தனியாகச் சம்பளம் கொடுப்பதில்லை. ஒரு உடுப்புக்கு மேல் வேறு உடுப்பு கிடையாது. ஆகவே 25 தேதிக்குப் பிறகு லைட் இல்லாமல் யார் யார் சைக்கிள்களில் வருகிறார்கள் என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, அவர்களின் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்யாமல், லஞ்சம் வாங்காதிருக்கக் கூடிய அளவிற்கு எதுவும் செய்யாமல், லஞ்சத்தை ஒழித்து விட்டோம் என்று சொல்வது கண்டு, இப்படிப் பேசுவதைப் பார்த்து தமிழ்நாடு மக்கள் சிரிக்கிறார்கள் என்று சொல்வதில் தவறில்லை. உங்கள் அனுபவத்தில் இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி சிந்தித்துப்பாருங்கள்.

அடுத்து, மதுவிலக்கு சம்பந்தமாக குடிக்காதவர்கள் இந்தச் சட்டம் வேண்டுமா என்று கேட்கிறார்கள், குடிக்கிறவர்கள் இது வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்போது தான் அவர்களுக்குப் பாதுகாப்பு என்று கருதுகிறார்களோ என்னவோ தெரியாது, மேல்சபையில் கூடப் பேசப்பட்டது. பத்திரிகைகளில் பார்த்தேன். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் பார்த்தால் கீழே பாட்டில்கள் கிடக்கின்றன. இன்று கூட பார்த்தால் 20 பாட்டில்கள் கிடக்கின்றதைப் பார்க்கலாம், ப்ராந்தி, விஸ்கி பாட்டில்கள், 4-வது 5-வது மாடியிலிருந்து கீழே எறியப்பட்டு

பாட்டில்கள் கிடக்கின்றன என்று கிழேயிருக்கிறவர்கள் என்னு
றார்களாம். இது எதைக்காட்டுகிறது என்றால் மதுவிலக்குச்
சட்டத்தை அமலாக்க முடியவில்லை என்பதைத்தான் காட்டு
கிறது.

(முற்பகல் 9.20)

சிலர் வேண்டுமானால் குடிக்காமல் இருக்கலாம். சிலர்
மாற்றிக்கொண்டிருக்கலாம் ஆனால் சட்டத்தின் மூலம் இதைத்
தடுக்க முடியவில்லை என்ற கருத்து இந்த நாட்டில் ஏற்பட்
டிருக்கிறது என்பதை நாம் பரிசீலித்தாக வேண்டும். நீதிமன்
றங்களில் என்ன நடக்கிறது? அதற்கு முன்பே ஸ்டேஷனில்
முடிந்து விடுகிறது. நீதி மன்றத்திற்குப் போனால் ஆயிரம்
அபராதமும் சிறைத் தண்டனையும் போடுவார்கள், ஆகவே,
இங்கேயே 250-ஐப் போடு இங்கே கொடுத்துவிடு என்று
போலீஸ் ஸ்டேஷனில் சொல்லிவிடுகிறார்கள். இப்போது போலீஸ்
ஸ்டேஷன்கள்எல்லாம் நீதிமன்றங்களாக மாறிக்கொண்டுவருகிறது
போகிறவர்களுக்கு நீதி மன்றத்திற்குப் போனால் ஆயிரம்
ரூபாய் அபராதம். சிறை தண்டனை இவைகள் எல்லாம்
இருக்கும், எதற்குஎன்று நினைத்து 250 கொடுத்து விடுகிறார்கள்
இதை வாங்கிக் கொண்டு சாராயம் காய்ச்ச அனுமதியும்
வழங்கிக் கொண்டிருக்கின்ற காரணத்தால் நீதிமன்றத்திற்கும்
போக முடியாத நிலைமை இப்போது இருந்து கொண்டிருக்கிறது.
இப்படி வாழ்க்கைக்கு ஒவ்வாத, நடைமுறைக்கு ஒவ்வாத நிலை
மைகள் இருப்பதை எல்லாம் பரிசீலித்து மாற்றாவிட்டால்,
நிச்சயமாக மக்கள் மத்தியில் அதிருப்தி வளரத்தான் செய்யும்.

எதற்கெடுத்தாலும் வன்முறை என்று சொல்லி வழக்கு
போடுவது. சௌரிசௌரா போராட்டம் காந்தியடிகள் காலத்தில்
நடக்கவில்லையா? சில உணர்ச்சிகளின் அடிப்படையில் போராட்
டங்கள் நடைபெறும்போது வன்முறை வரத்தான் செய்யும்,
இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தது. வன்முறை ஏற்பட்டது.
அவர்களுக்கெல்லாம் மன்னிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. வன்
முறை எப்படி வருகிறது? எதற்கெடுத்தாலும் வன்முறை என்று
எடுத்துக்கொள்ளக்கூடாது. பட்டமங்கலம் என்ற இடத்தில்
கடையடைப்பு மறியல் அமைதியாக நடைபெற்றது. அதையும்
வன்முறை என்று சொல்லி வழக்கு போடப்பட்டிருக்கிறது. இதை
யோசியுங்கள். கல் எறியவில்லை, பஸ்களின் முன்னால் தங்கள்
உணர்ச்சிகளை வெளிப் படுத்துவதற்கு, தார்மீக ரீதியாக
போராட்டம் நடத்தினால் அதற்கு வன்முறை என்று கூறி
வழக்குப் போடுகின்ற நிகழ்ச்சி இந்த ஆட்சியில் நடந்து கொண்
டிருக்கின்றது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். வன்முறை
யில்லை என்று சட்டமன்ற உறுப்பினர்கள் கூறினால் அதை
நம்புங்கள், உண்மையில் நாசம் விளைவிக்கக்கூடிய முறையில்
அதாவது வன்முறைகள் நடைபெற்றால் வழக்கு போடுங்கள்.
எனவே, வன்முறை இல்லாத காரியங்களுக்கும் வன்முறை என்று





வழக்கு தொடருவது சரியல்ல என்பதை எடுத்துக்காட்ட விரும்பு
கிறேன். எந்த நிகழ்ச்சியை எடுத்துக்கொண்டாலும் போராட்டம்
என்ற அளவில் நடைபெறும் போது, அதில் அரசியல் தலைவர்கள்
கலந்து கொள்ளும்போது, அதனால் கிளர்ச்சிகள் வரும்போது,
சில வன்முறைகள் ஏற்படத்தான் செய்யும் என்பதை வரலாறு
உலக வரலாறு சொல்லிக் கொண்டிருக்கிறது. ஈரானில் நடந்தது
என்ன? அப்படிப்பட்ட நிலை இங்கும் நடக்குமோ என்று
சொல்ல முடியாது என்பதை நினைவு படுத்த விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக, இந்த அரசியல் பெரிய மாற்றம் ஏற்பட்டு
விடும் என்று நம்புகிறவன் அல்ல நான். இந்தக் கட்டுக்கோப்பில்
வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக்கொண்டு தான் வருகிறது.
அமெரிக்க நாட்டில் கூட கார்ட்டர் என்ன சொல்லுகிறார்,
எவ்வளவோ வேலை வாய்ப்பு இருந்தும், 7 சதவிகிதம் விழுக்
காடு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகிக்கொண்டிருக்
கிறது அமெரிக்க நாட்டில் என்று. அப்படி இருக்கும்போது,
மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் தமிழ்நாட்டில்
வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை என்று சொல்வதை
நம்ப முடியாது, இதிலுள்ள அஸ்திவாரத்தை புரிந்து கொள்ளாத
அரசியல் வாதி தான் அப்படிச் சொல்ல முடியும். இந்த நிலையை
நீக்குவதற்கு என்ன அடிப்படையை உருவாக்கியிருக்கிறீர்கள்,
இந்த நிலைமைக்கு என்ன காரணம்? இதுவரைக்கும் இதில்
தோற்று வந்ததற்கு என்ன காரணம், ஏன் இந்த அதிருப்தி
ஏற்பட்டிருக்கிறது? இன்றைக்கு நாட்டிலுள்ள எதிர்க்கட்சிகள்
எல்லாம் ஒரே வரிசைக்கு வந்திருப்பதற்கு என்ன காரணம்
என்பதைச் சிறிது பரிசீலனை செய்து பார்க்கவேண்டும்.

தமிழ்நாட்டில் ஏன் இந்த நிலை உருவாகியிருக்கிறது என்று
யோசித்துப் பார்ப்போமானால் இன்னும் இருக்கக்கூடிய இரண்
டரை வருடத்திலாவது இதற்கு வேண்டிய வழிவகுப்பார்கள்
என்று நம்புகிறேன். சாதாரணமாக நாம் சொல்வதுண்டு.
தீயினால் சுட்ட புண் ஆறிவிடும், வாயினால் சுட்ட புண்
ஆறாது என்று குறள் சொல்கிறது. குறளைத்தான் இன்றைக்கு
நாம் எல்லோரும் வாழ்க்கைக்கு வழிமுறையாக வைத்துக்கொண்டி
ருக்கிறோம். இப்போது நிலைமை என்ன, வாயினால் சுடுவது
என்பது சிலருடைய பழக்கமாக இருக்கிறது, யாராக இருந்
தாலும் மரியாதையோடு பேசுபவன்தான் பெரியவன், மனிதன்,
அப்படியில்லாமல் வாயில் வந்தபடி சுட்டுக்கொண்டிருந்தால்,
தேவையில்லாமல் மாச்சரியங்கள் தான் வளர்ந்து கொண்டு
இருக்கும். இன்றைக்கும் டாக்டர் கலைஞர் அவர்களோடு
கருத்துவேற்றுமைகள் ஆயிரம் இருந்தாலும் 'நீ' என்று பேசி
அறியாதவன் நான். அப்படிப் பேசுகிற பழக்கம்
என்னிடத்தில் இல்லை. தனியாக தவறுகளைச் சுட்டிக்
காட்டி தாக்குகிற பொழுது, தனிப்பட்டவர்கள் எந்த அளவுக்கு
தாக்கிப் பேசப்படுகிறார்கள் என்பதை ஆளும்கட்சிக்காரர்கள்
பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். அப்படி வரும்போது,

எங்களுக்கும் உங்களுக்கும் என்ன வேறுபாடு ஏற்பட்டது. மதுரை மாநகராட்சி தேர்தலில் உங்களோடு ஒத்துழைத்தோம். உங்கள் வெற்றிக்கு கம்யூனிஸ்ட் கட்சியும் ஓரளவுக்குப் பாத்திரமாக இருந்தது. உங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டோம். நாடாளுமன்றத்தில் எங்களுக்கும் ஸ்தானங்கள் கிடைத்தது, உண்மை தான். ஆனால் உங்கள் கையில் அதிகாரம் கிடைத்தது. அந்த அதிகாரம் உங்கள் கையில் கிடைப்பதற்கு ஆரம்ப காலத்தில் தங்கள் வாழ்க்கையை இரண்டற இணைத்துவிட்ட கம்யூனிஸ்டு கட்சி, உங்களோடு சேர்ந்து ஆதரித்திருக்கிறது. ஆனால் இன்றைக்கு அந்த உணர்வோடு ஆளும்கட்சி நடந்து கொண்டிருக்கிறதா என்றால் இல்லை என்று நான் குற்றஞ் சாட்டுகிறேன்.

ஒன்று இரண்டல்ல. பல காரணங்கள் இருக்கலாம். நிர்ப்பந்தத்தின் காரணமாகவும் இருக்கலாம். ஆயிரக்கணக்கான தொண்டர்கள் மத்தியிலே எங்கள் கட்சி உங்கள் கட்சியோடு இணைந்து போராடியது மாத்திரமல்ல; தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. நிர்பந்தத்தின் காரணமாக, பதவிக்காக எங்கள் கட்சித் தொண்டர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். இத்தகைய மனப்போக்கு அண்ணா தி. மு. க. தலைவர்களிடத்திலும் வந்திருக்கிறது. தவறு என்று சொல்லவில்லை. யாராக இருந்தாலும் கொள்கை பேசலாம். என்றாலும், எங்கள் தலைவர் கே.டி.கே. தங்கமணி அடிக்கப்படுகிறார்: கோபு தாக்கப்படுகிறார் என்று சொல்லும்போது அதைப் பார்த்துக் கொண்டு சும்மாவா இருப்பார்கள். இவைகளையெல்லாம் யோசித்துப் பார்க்கவேண்டும்.

அதேமாதிரி முருகையன் படுகொலை. அதற்குள்ளே போக நான் விரும்பவில்லை. கொலைக் குற்றத்திற்குக் காரணமாக இருந்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று மதிப்பிற்குரிய சட்டமன்ற முன்னவர் அவர்கள் பேசியது தொடர்பான பேச்சாக இருக்கிறது. இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கிறபோது, அது எந்த அளவிற்குக் கொண்டுபோய் விடும் என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். மீண்டும் ஆதாரங்களுக்குள் போக நான் விரும்பவில்லை. யாராக இருந்தாலும், இப்படி ஒரு கொலை நடக்கும் போது அதிலேயிருந்து தப்ப முடியாது, தண்டிக்கப்படுவார்கள். அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற ஒரு நிலைமை உருவாகுமானால், அந்த அளவுக்கு அண்ணா தி. மு. க.-வும், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் சேர்ந்திருப்பார்கள் என்பதைப் புரிந்துகொண்டால் போதும்.

தனி நபர் கொள்கை எதுவாகவும் இருக்கலாம். ஆனால் அதுவே கட்சியின் கொள்கையாகக் கொண்டிருந்தால் அது எங்கே கொண்டுபோய் விடும் என்பதைக் கடந்த கால வரலாற்றைப் பார்த்தால், இன்னும் கொஞ்ச காலத்தில் அதை நீங்களும்தான் புரிந்துகொள்ளப் போகிறீர்கள். அது மாத்திரமல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தோடு உங்களுக்குக் கடுமையான அபிப்பிராயபேதம் இருக்கலாம். அந்தக் கட்சி ஆட்சிக்கு மீண்டும் வரக்கூடாது என்ற அபிப்பிராயமும் இருக்கலாம், நானும்



அப்படி அந்தக் கட்சி வரக்கூடாது என்ற அபிப்பிராயத்தைக் கொண்டவன். அவ்வாறு கருதுவனாக இருந்தாலும், அந்தக் கட்சியின் தலைவருக்கு ஒரு ஆபத்து உருவாகுமானால், நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட வேண்டும். நான் இவ்வாறு குறிப்பிடுவதற்குக் காரணம், நாளைக்கு எந்தக் கட்சித் தலைவருக்கும் ஆபத்து வரலாம். அப்படி வரும்போது, அனுதாபச் செய்தி அனுப்புவதோடு மாத்திரமல்ல: உடனடியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். பாதுகாப்பும் கொடுக்கப்பட வேண்டும். எதிர்க் கட்சித் தலைவருக்கு ஆபத்தில்லை என்ற நிலையை உருவாக்குவதற்கு இந்த அரசாங்கத்திற்கு பொறுப்பிருக்கிறது.

அண்ணா தி. மு. க. வுக்குத் தொடர்பான பிரச்சினையைப் பற்றிச் சொல்கிறேன். மாணவர்கள் பிரச்சினையிலே ஒரு தனியான 'கோட்' வகுங்கள். எல்லாக் கட்சிகளையும் சேர்ந்து வைத்துப் பேசுங்கள் என்று பல தடவை சொல்லியிருக்கிறேன். மாறாக நாங்கள் செய்வதுதான் சரி என்ற நிலை வருமானால், அது எங்கே போய் நிற்கக்கூடும் என்று தெரியாது. இப்படிச் சொல்வதால் உங்களுக்கு கோபம் வரலாம், எதிர்க் கட்சிகள் சொல்வதை நீங்கள் விரும்பாமல் இருக்கலாம். ஆனால் எல்லா எதிர்க் கட்சிகளும் ஒன்று சேர்ந்து, மக்களிடத்திலே ஒரு பொய்யை நிஜமென்று சொன்னால், நடைமுறையிலே அதை நம்புவார்கள். அப்படி நாங்கள் சொல்வோம் என்று எடுத்துக்கொள்ள வேண்டாம். அப்படிச் சொல்கின்றபோது, எல்லாக் கட்சிக்காரர்களும் ஒன்று சேர்ந்து சொல்லும் போது தமிழக மக்கள் நிச்சயமாக நம்பியே திருவார்கள். தமிழ்நாட்டின் கடந்தகால வரலாற்றைப் பார்த்தால் இதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

அடுத்து, கொள்கை வேறு, எதிர்க் கட்சிகளை நடத்துவது வேறு. மரியாதை, பண்பு என்று வருகின்றபோது, கட்சி வித்தியாசங்கள் இல்லாமல் காரியங்கள் நடத்தப்பட வேண்டும். நிர்வாகத்திலே தலையீடு இல்லையென்று சொல்லுகிறார்கள். தலையீடு இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்வேன். எருமைப்பட்டி என்ற கிராமத்திலே சொந்தமாக ஒருவர் புறம்போக்கு நிலத்திலே கட்டிடம் கட்டுகிறார். அவர் அண்ணா தி. மு. க. வைச் சார்ந்தவரும் அல்ல : கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவரும் அல்ல. ஆனால் அந்த ஊரிலே உள்ளவர்கள் அந்த புறம்போக்கு நிலம் பள்ளிக்கூடத்திற்கு வேண்டுமென்று கேட்கிறார்கள். மெஜாரிடி அவர்கள் பக்கம் இருப்பதாலே, அதிகாரிகள் காலி பண்ணவேண்டும் என்று உத்தரவிடுகிறார்கள். தாசில்தாரும் உத்தரவிடுகிறார். உடனே அவர் எதைச் செய்தால் காலி பண்ண மாட்டார்கள் என்று சிந்தித்து, 'அண்ணா படிப்பகம்' என்று அதற்குப் பெயர் சூட்டி விடுகிறார். இதிலே கட்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்களை நான் குறை கூற வில்லை. அவர் அதற்குப் பொறுப்பல்ல. நான் இதைச் சொல்லும் போது, அவர் என்னைப் பார்க்கிறார்' அவர் இப்படி அந்தக்

கட்டிடத்திற்கு 'அண்ணா படிப்பகம்' என்று பெயர் சூட்டி விட்டதால், அங்கேயுள்ள அண்ணா தி. மு. க. வினர் இதிலே தலையீடு செய்கிறார்கள். இந்த மாதிரி பொதுப் பிரச்னைகளிலே கிராமங்கள் தோறும் நடை பெறுமானால், அது எங்கே கொண்டுபோய் விடுமோ தெரியவில்லை.

(முற்பகல் 9-30)

என்ன விளைவுகள் ஏற்படும் என்று யோசித்துப் பார்க்கவேண்டும். இம்மாதிரி சம்பவங்களைக் கணக்கெடுத்துப் பார்த்தால் தமிழ் நாட்டில் நிலைமை என்ன?

இந்தி மொழிப் பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறோம். தமிழைப் பற்றி அதிகமாகப் பேசுகிறோம். பார்வையாளர்களுக்காகக் கொடுக்கப்படுகிற அனுமதிச் சீட்டு இன்னும் ஆங்கிலத்தில்தான் இருக்கிறது. இதையெல்லாம் சொல்வதால் கோபப்படக்கூடாது. 'யுவர்ஸ் ஃபெய்த்ஃபுல்லி' என்றுதான் இன்று காலையில் கையெழுத்து போட்டுவிட்டு வருகிறேன். தமிழ் மக்கள்தான் பார்வையாளர்களாக வருகிறார்கள். இந்தியில் மணியார்டர் பாரம் இருக்கக் கூடாது என்று சொல்லும்போது ஏற்படுகின்ற உணர்வு தமிழ் நாட்டில் தமிழிலேயே எல்லாம் இருக்க வேண்டுமென்பதிலே வரவில்லையே!

<u>திரு. இரா. மத்தையா:</u> நான் இப்போது கூட நுழைவுச் சீட்டில் கையெழுத்துப் போட்டுவிட்டு வந்திருக்கிறேன். இப்போது தான் முதல் முறையாக தமிழில் அச்சிட்டிருக்கிறார்கள்.

<u>திரு. கூத்தக்குடி ச. சண்முகம்:</u> இப்போதுதான் முதல் முறையாக என்று சொன்னார்கள். மகிழ்ச்சி. அது நீடிக்கட்டும்.

சிறு நாடுகளில் மலேஷியா நாட்டில் மலேஷிய மொழியில் புதிய எழுத்துக்களைக் கண்டுபிடித்து அதையே போதனா மொழியாக்கி வெறும் பள்ளிகளில் மாத்திரமல்லாது மருத்துவம் உட்பட, பொறி இயல் உட்பட அதுதான் போதனா மொழி என்று அறிவித்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சின்ன நாடுகளில் அந்த மாதிரி செய்து கொண்டு இருக்கிறார்கள் 31 ஆண்டுகள் தமிழன் ஆண்ட பிறகும் தமிழகத்தில் தமிழ்தான் ஆட்சிமொழி என்று வந்த பிறகும் மருத்துவத் துறையிலும், பொறியியல் துறையிலும் தமிழ் போதனா மொழியாக ஏன் இன்னும் கொண்டு வரப்படவில்லை? அதற்கான ஆலோசனைகள் இருக்கின்றனவா? சிறு நாடுகளில், நேற்று சுதந்திரம் அடைந்த நாடுகளில் அந்த நாட்டு மொழியிலேயே எல்லாத் துறைகளிலும் கற்றுக் கொடுக்கும் போது தமிழ்நாட்டிலே ஏன் கொண்டு வரப்படவில்லை? நான் மொழி வெறிக்காகச் சொல்லவில்லை. எந்த மொழியில் சிந்திக்க முடியுமோ அந்த மொழியில் போதனை இருந்தால்தான் புதிய கண்டுபிடிப்புகள் வர முடியும்.





இந்தி மொழி, ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழி என்ற நிலையிலிருந்து தமிழும் இந்தியாவின் 14 தேசிய மொழிகளும் இந்தியாவின் ஆட்சிமொழிகளாக ஆகவேண்டுமென்று சொல்லும் அளவுக்கு, தமிழும் இந்தியாவின் ஆட்சி மொழியாக வேண்டுமென்று சொல்லும் அளவிற்கு ஒரு புதிய திருப்பம் வந்திருப்பதற்காக மகிழ்ச்சி. அந்தத் திசையில் இந்த நாடு முன்னேற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அன்று ஆற்காடு இராமசாமி முதலியார், சி. பி. இராமசாமி அய்யர் ஆகியவர்கள் எல்லாம் இந்தி மொழியை எதிர்த்தது தமிழ் மேல் உள்ள பற்றுதலால் அல்ல; தமிழில் அவர்களுக்குச் சரியாக பேசவே வராது. நான் ஆங்கிலத்தை எதிர்க்கவில்லை. கட்டாயமாகப் படிக்க வையுங்கள். தமிழுக்கு உரிய இடம் தமிழ்நாட்டில் தரப்பட வேண்டுமென்பதுதான் என்னுடைய நோக்கம்.

இப்போது நாட்டில் நிலைமை முழுமையாக மாறியிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். தமிழ்நாட்டில் அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு வரும்போது மத்தியிலும் புதிய ஆட்சி வந்திருக்கிறது. இங்கும் புதிய ஆட்சி, மத்தியிலும் புதிய ஆட்சி. ஜனநாயகத்தில் தற்போது நாடு எங்கும் கிளர்ச்சிகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டிலே இந்த ஆட்சியை எதிர்த்து கிளர்ச்சிகள் அதிகமாக நடக்கிறது என்று எண்ணவேண்டாம். இந்திய நாடு பூராவும் கிளர்ச்சிகள் பெருகிக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணர்வார்கள். கிளர்ச்சிகள் நாடெங்கிலும் நடைபெறுவதாக இருக்கின்றனவே தவிர ஏதோ திட்டமிட்டு செய்வதாகக் கருத வேண்டாம். அரசியல் மாச்சரியங்கள் சில நேரங்களிலே வரலாம். ஆனால் அது பிரதானம் அல்ல. அது மூல காரணம் அல்ல. பிரச்சினைகள் கிளர்ச்சிகளை உருவாக்குகிறது. மக்களுடைய தேவைகள் கிளர்ச்சிகளை உருவாக்குகின்றன.

மத்திய ஆட்சி நிதி தரவில்லை என்றால் தைரியமாகப் போராடுங்கள். அப்படிப் போராடும்போது நாங்கள் இந்த ஆட்சிக்கு உறுதுணையாக இருப்போம். மத்திய அரசு நிதி தராததால் ரிசர்வ் பாங்கு கடன் கொடுக்க மறுத்து விட்டார்கள். அதனால் மாவட்டங்களில் உள்ள அத்தனை எல். டி. பாங்குகளும் கடன் கொடுக்கும் தகுதியை இழந்துவிட்டன. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு பாங்கு தவிர மற்ற அத்தனை பாங்குகளும் கடன் தர மறுத்துவிட்டார்கள். இதனால் ஏற்பட்டுள்ள நிலை என்ன? மத்திய அரசு உங்களுக்கு நிதி தரவில்லை? அதை நீங்கள் விவசாயிகள் மீது திருப்புகிறீர்கள். விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பித்தர வேண்டுமென்று வற்புறுத்துகிறீர்கள், ஜப்தி செய்கிறீர்கள். விவசாயிகளால் எப்படிக் கொடுக்க முடியும். இதுபற்றி நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தனிக்கட்சி ஆட்சி என்பது அவ்வளவு சுலபமாக நடக்குமா என்பது போன்ற நிலை இந்த நாடு பூராவிலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் இப்படிச் சொல்கிறபோது இந்த கட்சி கூடாது. இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு இங்கே கூட்டாட்சி தான் வர வேண்டுமென்று அந்த நோக்கத்தோடு சொல்வதாக யாரும் எண்ணவேண்டாம், தமிழக மக்களை முன்னுக்குக் கொண்டு வருகின்ற பாதையிலே கட்சி மாச்சரியங்களுக்கு அப்பால் நின்று செயல்படப்போகிறீர்களா இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி அப்படிச் செயல்படப் போவதில்லை என்றால் பிரச்சினைகள்தான் வளரும், நிகழ்ச்சிகள்தான் வளரும் மக்களுடைய பிரச்சனைகள் தீர்க்கப்படாது. தனி மனிதனுடைய மேதாவிலாசம் கூட்டுஞானத் தத்துவத்திற்கு முன்னாலே நிற்க முடியாது. தனி மனிதன் எவ்வளவுதான் நிபுணராக இருக்கலாம், விற்பன்னராக இருக்கலாம், ஆனால் கூட்டு ஞானத்திற்கு முன்னாலே அது நிற்க முடியாது. இது தான் எங்கள் கட்சியினுடைய தத்துவம். அது மட்டுமல்ல இந்த நாட்டிற்கும் அது தான் பொருந்தும், இந்த சட்டமன்றத்திற்கும் அதுதான் பொருந்தும், கட்சிக்கும் அதுதான் பொருந்தும்.

தமிழ்நாட்டிலே நல்ல முறையிலே ஆட்சி செய்யக்கூடிய முறையிலே புதிய சூழ்நிலை உருவாகவேண்டும் என்ற நம்பிக்கையோடு நான் பேசுகிறேன். கடைசியாக மக்கள் இந்த ஆட்சியைப்பற்றி என்ன கருதுகிறார்கள் என்பதைப்பற்றி சொல்லிவிட்டு என்னுடைய பேச்சை முடித்துவிடுகிறேன். ஒரே உதாரணத்தை மட்டும் சொல்கிறேன். தொழிலாளர்கள் மத்தியிலே இந்த ஆட்சியின்மீது அதிருப்தி வளர்ந்து இருக்கிறது. கிராமப் புறங்களிலே அதிருப்தி அவ்வளவு இல்லை, ஆனால் அவர்கள் கொஞ்சம் இப்போது சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தை நான் அவர்களுக்குத் தனியாகப் பேசும்போதுகூட எடுத்துச் சொன்னேன். கிராமப்புறங்களிலே அண்ணா தி.மு.க.வுக்கு வோட்டளித்தவர்கள் என்ன கருதிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லுகிறேன். நான் சொல்வது கொஞ்சம் கொச்சை யாகக் கூட இருக்கலாம். ஒரு பெரியவர் இருக்கிறார். அவர் தி.மு.க போகவேண்டுமென்று வரிந்து கட்டியவர். அண்ணா தி.மு.க. ஜெயித்தவுடனே மிட்டாய் கொடுத்தவர். அவரை நான் சமீபத்திலே பார்த்தபோது எப்படியிருக்கிறது இந்த ஆட்சி என்று கேட்டேன். அவர் சொன்னார், ''அவாளுக்கு இவாள் எழுந்திருந்து உண்பாள்'', என்று சொன்னார். அவர் பெரியவர். இந்த ஆட்சி வரவேண்டும் என்று விரும்பிய அந்த பெரியவரையே கேட்டேன், நான் இதை விளையாட்டுக்காகச் சொல்லவில்லை. ''அவாளுக்கு இவாள் எழுந்திருந்து உண்பாள்'' என்று சொன்னீர்களே அதற்கு என்ன அர்த்தம் என்று அவரையே கேட்டேன், அண்ணா தி.மு.க. ஜெயித்தவுடனே மிட்டாய் கொடுத்த அவர் சொன்னார். எங்கள் ஊரிலே ஒருவன் கல்யாணம் செய்து கொண்டான், பிறகு அவள் சரியில்லை என்று சொல்லி தீர்த்துவிட்டான். பிறகு புதிதாக அவன் கல்யாணம் பண்ணினான். புதிதாகக் கல்யாணம் பண்ணி



ஒன்றரை ஆண்டுக் காலம் கழித்து அவனைக் கேட்டபோது அவன் சொன்னான், அவாளுக்கு இவாள் எழுந்திருந்து உண்பாள் என்று. முதலிலே கல்யாணம் செய்தவள் நன்றாகச் சமைப்பாள், சாப்பிடும்போது ஊட்டிவிடச் சொல்லுவாள், அவள் படுத்துக் கொண்டே தான் சாப்பிடுவாள், இதனால் அவளை எட்டு மாதம் வைத்திருந்துவிட்டு தீர்த்துவிட்டேன். புதிதாகக் கல்யாணம் பண்ணி ஒன்றரை ஆண்டுக் காலமாகிறது, இவள் எப்படி என்றால் அன்பாகப் பேசுவாள், கோபப்படவே மாட்டாள். இருந்தாலும் என்னை சமைக்கச் சொல்லுகிறாள், இவள் படுத்துக்கொண்டு சாப்பிடுவதில்லை, எழுந்து உட்கார்ந்து சாப்பிடுகிறாள் என்று சொன்னான். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் பெரிய வித்யாசத்தை மக்கள் இந்த ஆட்சியிலே பார்க்கவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் சொல்கிறேன். என்றாலும் நீங்கள் அதைப் புரிந்துகொண்டு தைரியமாக கொள்கையிலே மாற்றம் கொண்டு வந்து செயலிலே மாற்றத்தைக் கொண்டுவந்து மக்களுக்கு நன்மைகளைச் செய்ய முன்வருவீர்களானால் நாங்கள் உங்களோடு இருந்து பாடுபட அதற்காக முடிவு எடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு சமீப காலத்திலே மக்கள் விரோதப் போக்கு கொண்டு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே நாங்கள் அதைக் கடுமையாக எதிர்க்கிறோம். அதை மாற்றிக் கொள்ளாவிட்டால் தமிழ்நாடே போராடும். அதை மாற்றிக் கொண்டு விட்டால் அது உங்களுக்கும் நல்லது, இந்த ஆட்சிக்கும் நல்லது என்பதைத் சொல்லிக்கொண்டு முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. ஆறுமுகம்,

திரு. மு. சேலம் ஆறுமுகம்: ஜேம்ஸ் பேசியபிறகு நான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசவேண்டும். அதுதான் முறை. தாங்கள் பேசிவிட்டுத்தான் திரு. ஜேம்ஸ் பேசவேண்டும். இல்லாவிட்டால் இப்போது பேசாமல் வேறு ஒரு வாய்ப்பில் பேசுங்கள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின் மீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய தினம் நாட்டிலே விவசாயிகள் மத்தியிலே ஒரு பெரிய அதிருப்தி நிலவிக்கொண்டிருக்கிறது. விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கும் மற்ற விளை பொருட்களுக்கும் ஏற்ப விலை மார்க்கெட்டிலே கிடைக்காத காரணத்தால் அவர்கள் அரசாங்கத்திடமிருந்து வாங்கிய குறுகிய காலக்கடன், நடுத்தர காலக்கடன் ஆகியவற்றைக் கட்டமுடியாத சூழ்நிலை இருக்கிறது. உண்மையிலேயே விவசாயிகள் கட்டக்கூடாது என்று நினைக்கவில்லை.

[திரு. சேலம் மு. ஆறுமுகம்] [1979 பிப்ரவரி 16

கட்டவேண்டுமென்ற எண்ணத்தோடுதான் கடனை வாங்கினார்கள். ஆனால் உற்பத்திச் செலவு என்று வரும்போது எரு, உரம், பூச்சி மருந்து, விதைகள் ஆகியவற்றின் விலைகள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே போகின்றன.

(முற்பகல் 9.40)

ஆனால் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு இன்றைக்குச் சரியான மார்க்கெட் இல்லாத காரணத்தினால் இன்றைக்குப் பலவிதமான கஷ்டங்களுக்கு விவாசயிகள் ஆளாகிறார்கள். இதே நிலைமை நீடித்தால் விவசாயத் தொழில் நாட்டிலே நலிந்து போகும் நிலைமை ஏற்பட்டு எதிர்காலத்தில் நெல்லுக்குக்கூட கஷ்டம் ஏற்பட்டு, மக்களின் உணவுக்குப் பெரிய கஷ்டத்தை எதிர் நோக்க வேண்டியதாயிருக்கும். ஆகவே, அரசாங்கம், உரம், பூச்சி மருந்து, விதைகள் முதலியவற்றை விவசாயிகளுக்குக் கொடுத்து, அவர்களுக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தையும், கஷ்டத்தையும் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையிலே, சென்ற வாரத்திலே, சேலம் மாவட்டத்தில் 'சேலம் மேக்னசைட் கார்ப்பரேஷன்' என்ற தனியார் நிறுவனத்திலிருந்து ஒரு சுரங்கத்தை அரசு மேற்கொண்டது. அந்த மேக்னசைட் கார்ப்பரேஷனில் 20, 25 ஆண்டுகளாகப் பணியாற்றிய 3,000 தொழிலாளர்களுடைய கடந்த கால சர்வீசைக் கணக்கில் எடுத்துக் கொண்டு கண்டினியூயிங் சர்வீஸ் என்ற முறையில் வேலை வாய்ப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

'தமிழ்நாடு மேக்னசைட் கார்ப்பரேஷன்' என்ற புதிய நிறுவனத்தை ஏற்படுத்தி இன்றைக்கு அந்த கார்ப்பரேஷனைத் திறந்தமைக்காக நான் பெரிதும் நன்றி செலுத்த விரும்புகிறேன். ஆனால் இதில் குறிப்பான விசேஷம் என்னவென்றால், பொதுவுடமைத் திட்டத்தின் கீழ் அரசால் மேற்கொள்ளப்பட்டு இயங்கக்கூடிய ஸ்தாபனங்கள் நஷ்டத்தில்தான் இயங்க முடியும் என்ற நிலைமை இருக்கிறது என்ற பொதுவான கருத்து இருக்கின்ற இந்த நேரத்தில், கடந்த நாற்பதாண்டுக் காலமாகத் தனியார் திறமையாகவும், இலாபகரமாகவும் நடத்தி வந்த 'சேலம் மேக்னசைட் கார்ப்பரேஷனை' ஒரு கூட்டு நிறுவனமாக ஏற்றுக்கொண்டது உண்மையிலேயே வரவேற்கத் தக்கதாகும். இந்த நிலைமையில், இனி வரக்கூடிய, நாட்டுடமையாக்கும் திட்டங்களிலேயும், தனியார் துறையையும் சேர்ப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் கடந்த 20, 25 ஆண்டுக் காலமாகத் தங்களுடைய இரத்தத்தை வியர்வையாகச் சிந்தி உழைத்து உருவாக்கிய அந்தத் தொழிலாளர்களின் கடந்த காலச் சேவைக்கு அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.



1979 பிப்ரவரி 16] [திரு. சேலம் மு. ஆறுமுகம்]

சேலம் மாவட்டத்தில் கடந்த ஏழாண்டுகளுக்கு முன்பு 'சேலம் மாவட்ட மத்திய நூலக ஆணைக்குழு'விற்கு ஒரு கட்டிடம் கட்டுவதற்காக ஐந்து இலட்சம் ரூபாய் அளவிற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அது அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டது. ஆனால் ஆறு ஏழாண்டுக் காலமாக அந்த மதிப்பீடு அனுமதிக்கப் படாத காரணத்தினால் இன்றைக்கு ஐந்து இலட்சம் என்ற நிலைமை மாறி எட்டு இலட்சம் ரூபாய் என்று உயரக்கூடிய நிலைமையிருக்கிறது. ஏற்கனவே ரெவின்யூ துறைக்குச் சம்பந்தப்பட்ட ஒரு ஏக்கர் நிலத்தை அரசாங்கம் அந்த மாவட்ட நூலக ஆணைக் குழுவுக்காக சேலத்தின் மையமான பகுதியில் ஒதுக்கி இருக்கிறது. இன்று சேலம் மாவட்ட நூலக ஆணைக்குழு ஒன்பது இலட்சம் ரூபாயை பிக்செட் டிபாசிட்டில், செலவு இல்லாமல் போட்டு வைத்திருக்கிறார்கள். கடந்த ஆறு ஏழு ஆண்டுக் காலமாக நல்ல நூலகம் இல்லாமலும், நூலகத்தை அபிவிருத்தி செய்ய கட்டிடம் இல்லாமலும் இருக்கின்ற நிலைமையில் அங்குள்ள நூல்கள் மழையாலும், இயற்கை உபாதைகளினாலும் பாதிக்கும் அளவிற்கு அங்குள்ள நூலகக் கட்டிடம் இருப்பதால் கல்வி அமைச்சரவர்கள் இதில் தலையிட்டு உடனடியாக ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்த மதிப்பீட்டைத் திருத்தப்பட்ட மதிப்பீடாக அனுமதித்து நூலக ஆணைக் குழுவிற்குக் கட்டிடம் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் 'தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்' புதிய குடியிருப்புக்காக மூன்று போகம் விளையக்கூடிய நஞ்சை நிலங்களை அங்குள்ள அதிகாரிகள் தேர்ந்தெடுத்து ஏழை விவசாயிகளுக்கு அதிகத் தொல்லைகள் கொடுத்து வருகிறார்கள். நகரம் அபிவிருத்தி அடைய வேண்டுமென்பதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஆனால் அப்படி நகரம் அபிவிருத்தி அடையும் நேரத்தில் நகரத்தின் நலாபுறமும் இருக்கின்ற மேட்டுப் பாங்கான பகுதியில் இருக்கின்ற புஞ்சை நிலங்களைத் தரிசு நிலங்களைப் பயன்படுத்திக் கொண்டு புதிய குடியிருப்புக் காலனிகளை ஏற்படுத்தினால் போக்குவரத்து வசதிக்கும், மற்றும் நகரத்தின் நலாபுறமும் விரிவடையவும் வசதியாக இருக்கும். எனவே, வருங்காலத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நகரத்தை ஒட்டியுள்ள நஞ்சை நிலங்களை எடுப்பதைத் தவிர்க்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் நகரத்தில் அரிசிப்பாளையத்திற்குப் பக்கத்தில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 2,000 உறுப்பினர்களைக் கொண்டு, கடந்த இருபது ஆண்டுகளாக நல்ல முறையில் இலாபகரமாகவும், திறமையாகவும் செயல்பட்டு வந்தது. இந்தக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அங்குள்ள நிர்வாகிகளின் ஊழலின் காரணமாக மூன்றரை இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு அரிசிப்பாளையம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூடப்பட்டது.

இதன் காரணமாக 2,000 பேர்கள் வேலையிழந்து விட்டார்கள். கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரசு கூட்டுறவுச் சங்கத்திற்குப் போதுமான நிதியுதவி அளித்து வேலையிழந்த இரண்டாயிரம் நெசவாளர்களுக்கும் மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் இல்லாமல், இந்த ஊழலில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் தயவு தாட்சண்யம் இன்றி கடுமையாக நடவடிக்கை எடுத்து எதிர் காலத்தில் இம்மாதிரியான ஊழல் ஏற்படாதவண்ணம் அரசு பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1948 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் காவல் துறையில் ஆங்காங்கே காவலர்களுடைய எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதே நேரத்தில், காவல் துறையிலுள்ள அமைச்சு அலுவலர்களது எண்ணிக்கை போதிய அளவு அதிகரிக்க வில்லை, நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வரும் ஜனத் தொகையின் அடிப்படையில் மக்களுக்கு ஏற்படக்கூடிய குறை களும் அதிகரித்துக்கொண்டு வருகிறது. இதனால், காவல் துறை அலுவலகங்களில் மனுக்கள் ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் குவிந்து கொண்டிருக்கின்றன. ஆனால், மாவட்டக் காவல்துறை அலுவலகங்களில் பணியாற்றுகிற சிப்பந்திகளுடைய எண்ணிக்கை கடந்த 10, 15 ஆண்டுகளாக அதிகரிக்கப்படாமலிருப்பதன் காரணமாக, உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்து தவிர்க்க வேண்டிய குறைகளைத் தவிர்க்கமுடியாத சூழ்நிலைக்கு ஆளாக்கப் படுகிறார்கள். வேலைப்பளு அதிகரித்திருப்பதன் காரணமாகவும், போதுமான அலுவலர்கள் காவல் துறை அமைச்சு அலுவலகங்களில் இல்லாததன் காரணமாகவும் பல ஆயிரக்கணக்கான மனுக்கள் இன்று பரிசீலிக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, காவல் துறையின் அலுவல்களுக்கு ஏற்ப, அலுவலர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் பிரிவில் துணை ஆய்வாளர் கள் 2,000-க்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு எதிர்காலத்தில் ஆய்வாளராகவும், துணை கண்காணிப்பாள ராகவும், கண்காணிப்பாளராகவும், டி.ஐ.ஜி.ஆகவும் போகக்கூடிய அளவு பதவி உயர்வுகள் இருக்கின்றன. ஆனால், அதே தகுதியுடைய ரிசர்வ் துணை ஆய்வாளர்கள் துணை கண்காணிப்பாளர் பதவி வரைதான் உயர முடியும். கண்காணிப்பாளராகவோ, டி.ஐ.ஜி. ஆகவோ பதவி உயர்வு பெற வாய்ப்பும் வசதியும் மறுக்கப் படுகிறது. ஒரே தகுதியுடைய பிரிவு துணை ஆய்வாளர்களில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பவர்களுக்கு ஒரு நீதியும், ரிசர்வ் துணை ஆய்வாளர்களுக்கு ஒரு நீதியும் வழங்கப்படுகிறது. இந்த முறையை மாற்றியமைத்து ரிசர்வ் துணை ஆய்வாளர்களாக இருப்பவர்களுக்கும் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு பயிற்சி அளித்து அவர்களையும் இந்த சர்வீசுக்கு மாற்ற வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.





கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சேலம் சவுத் இந்தியா கிளாஸ் பாக்டரி என்ற ஒரு நிறுவனம் சேலத்திலே இயங்கிக் கொண்டு வந்தது. 1976 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அந்தக் கண்ணாடித் தொழிற்சாலை மூடப்பட்டது. கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையின் பொழுது அக்கண்ணாடித் தொழிற்சாலையில் வேலையிழந்த 500 பிரதிநிதிகள் மனு கொடுக்க இங்கு வந்ததன் காரணமாக, ஆர்ப்பாட்டம் செய்ததாக கைது செய்யப்பட்டார் கள். ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர்கள் பட்டினி கிடக்கிற நிலைதானிருக்கிறது. அதனைத் தவிர்த்து அவர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு அளிக்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உரிய நேரத்தில் தமிழ்நாடு மாக்னசைட் கார்ப்பரேஷனை தன் வசம் எடுத்துக் கொண்டு 3,000 பேருக்கு வாழ்வளிக்க முன்வந்துள்ள இந்த அரசு 500 பேர்களுக்கு வாழ்வளிக்காமல் அவர்களைப் பட்டினிபோட்டு கொடுமைப்படுத்துவது சரியல்ல. அவர்களுக்கும் வாழ்வளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு, தமிழ்நாட்டில் நகராட்சிகளிலே தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு ஒரு சுற்றறிக்கை அனுப்பி இருக்கிறது. புதிய வீடுகளுக்குத்தான் வரி விதிக்க வேண்டும், பழைய குடியிருப்புகளுக்கு, சொந்த குடியிருப்பாக இருந்தாலும் வாடகை அடிப்படையில் இருந்தாலும், அவ்வீடு களுக்கு வரி விதிக்கக்கூடாது என்று அரசாங்கதிடமிருந்து சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால், அதை மீறி நகராட்சியிலே பணிபுரியக்கூடிய சிப்பந்திகள் வீட்டு வரியை அதிகமாக உயர்த்துவதாக மிரட்டி, ரூ. 1,000, ரூ. 500 என்று கையூட்டு பெற முயற்சி செய்கிறார்கள். பல நகராட்சி களில் இந்த மாதிரி போக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட சிப்பந்தி கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் தர்மபுரி மாவட்டங்களுக்குச் சேர்த்து, சேலத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று கடந்த 10 ஆண்டுகளாக கோரப்பட்டு வருகிறது. காங்கிரஸ் அரசாங்கம் நடந்த காலத்திலேயே, அப்போது அமைச்சராகவிருந்த திரு மாணிக்கவேலு மருத்துவக் கல்லூரி அமைக்க அடிக்கல் நாட்டினார் கள். ஆனால், ஆட்சி மாற்றத்தின் காரணமாக அந்தத் திட்டம் தள்ளிப் போடப்பட்டு இன்றைக்கு நடைபெறாத நிலைமை இருந்து வருகிறது. அத்திட்டத்தை நிறைவேற்ற நிதிநிலை குறுக்கீடாக இராது, ஏனெனில் ரெயில்வே செஸ் ரூ. 37 இலட்சம் சேலம் மாவட்ட வளர்ச்சிக் கழகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சேலம் மாவட்டத்தில் ரெயில்வே செஸ்ஸாக உள்ள அந்த ரூ. 37 இலட்சத்தைக் கொண்டு சேலம் தர்மபுரி மாவட்டங்களிலுள்ள மக்களுக்காக ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த இந்த அரசாங்கம் முயற்சி எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

சேலம் இரும்பாலைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யக்கூடிய நேரத்தில் ஸ்டீல் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு இரும்பாலையாக இருக்கும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு எவர்சில்வர் தகடுகள் மட்டும்தான் அங்கே உற்பத்தி செய்யப்படும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மத்திய அரசினை நமது மாநில அரசு வற்புறுத்தி எவர்சில்வர் தகடுகள் மட்டும் அல்லாமல் இரும்பையும், ஸ்டீலையும் உற்பத்தி செய்யக்கூடிய முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அதன்மூலம் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இந்த ஆலை அமையும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொண்டு எனக்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது ஜனதா கட்சியின் சார்பில் சில கருத்துக் களைக் கூற விரும்புகிறேன்.

கடந்த 20 மாத ஆட்சிக்குப் பின்னால் வருகின்ற 12 மாத ஆட்சிக்காக இந்த அரசின் கொள்கைகளை எடுத்துக் கூறுகின்ற வகையில் ஆளுநர் தனது அறிக்கையை இங்கே வைத்திருக் கிறார்கள். 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள், பொதுத் தேர்தல் நடைபெற்றபோது இந்த மாநிலத்து மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் மிகுந்த நம்பிக்கைக் கொண்டு பெரும் எதிர்பார்ப்போடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சி பீடத்தில் அமர்த்தினார் கள். அன்றைய தினம் இந்த கட்சி உருவாகி அதிக நாட்கள் கூட ஆகவில்லை என்று சொன்னாலும் மக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சருடைய அரசியல் கொள்கையில் அவரைப்பற்றி உள்ள நல்ல எண்ணங்கள் அனைத்தும், மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களை சினிமா உலகில் எந்த அளவுக்கு பொது மக்களை கவர்ந்திருந்ததோ அந்த அடிப்படையில்தான் இருந்தது. ஆனால் கடந்த 20 மாத காலத்தில் இந்த மாநிலத்து மக்கள், நமது முதலமைச்சருடைய அரசு ஆற்றிய நிர்வாக செயல்களை நன்றாக உணர்ந்து, இப்போது மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுடைய அரசு எந்த நிலையில் உள்ளது என்பதனை நன்றாகப் புரிந்திருக்கிறார்கள். ஆகவே தான் இன்றைய தினம் நமது மாநிலத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் என்ன என்பதனை நான் இங்கே குறிப்பிட விரும்பு கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் உரையாற்றுகிறபோது, இந்த மன்றத்தில் 6 எதிர்கட்சிகள் இல்லாமல் இருந்ததை நீங்கள் மறந்து இருக்கமாட்டீர்கள். அந்த 6 எதிர்கட்சிகளில் இரண்டு எதிர்கட்சிகளைத் தவிர, மற்ற அனைத்துக் கட்சிகளும் தேர்தல்



காலத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் சேர்ந்து கூட்டாக இருந்தது என்பதனை நாம் உணர்ந்திருக்கின்றோம். ஆனால் இப்போது இந்த மாற்றம் ஏன் ஏற்பட்டது என்பதனை எண்ணிப் பார்க்கின்றபோது உண்மையிலேயே இந்த மாநில மக்கள் இந்த அரசின் மீது நம்பிக்கை இழந்து இந்த அரசு மக்களுக்கு எதிரான அரசு என்ற முடிவிற்கு வந்துவிட்டார்கள். கடந்த கூட்டத் தொடரில் நமது காங்கிரஸ் கட்சித் தலைவர், எனது அருமை நண்பர் மாரிமுத்து அவர்கள், காங்கிரஸ் கட்சிக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உள்ள தொடர்பு முறிந்து விட்டது என்று பிரகடனம் செய்தார்கள். ஆனால் அதற்குப் பின்னால் எந்த அளவுக்கு உடன்பாடு வலுத்து வருகிறது என்பது பின்னால் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது நன்றாகத் தெரிகிறது.

ஆனால் இதில் ஒன்றும் ஆச்சர்யப்படுவதற்கு இல்லை. காரணம் ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாத இரண்டு கட்சிகள் தான் ஒன்றாக இருக்குமே தவிர முரண்பாடு உடைய கருத்துக்களைக் கொண்ட கட்சிகள் ஒன்றாக இருக்காது என்பதை நான் தெரி வித்துக்கொள்கிறேன்.

<u>திரு. துரை முத்துசாமி ;</u> பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவரவர்களே,

(திரு. ஜே. ஜேம்ஸ் நின்று கொண்டிருந்தார்)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஹி ஈஸ் நாட் யீல்டிங் பிளீஸ் சிட் டவுன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் ;</u> அதன் விளைவு என்ன என்பதை எனது அருமை நண்பரும், காங்கிரஸ் கட்சித் தலைவரும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவரும், 27 அங்கத்தினர்களின் தலைவ ராக இருக்கும் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் நன்றாக அறிவார்கள். அவர்கள் கட்சித் தலைவர் திரு. மூப்பனார் தலைமைப் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டு இருக்கிறார்கள் என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதைப் பற்றிய காரணம் நான் விளக்க விரும்பவில்லை. நண்பர் மாரிமுத்து அவர்கள் நன்றாக அறிவார்கள்.

(திரு. துரை முத்துசாமி எழுந்தார்)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் ;</u> உட்காருங்கள். உங்கள் கட்சித் தலைவர் பேச இருக்கிறார். அப்போது பேசுவார்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து :</u> நான் பேசும்போது பதில் சொல்லலாம் என்று தான் பார்த்தேன். ஒன்றைமட்டும் குறிப் பிட விரும்புகிறேன். திரு. மூப்பனார் யாராலும் தூக்கி எறியப் பட வில்லை, அவரேதான் பதவி வேண்டாம் என்று ராஜிநாமா செய்தார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்; ஏற்றுக்கொள்கிறேன். அது சம்பந்தமான விஷயங்கள் அத்தனையும் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் அறிவார்கள். தமிழக மக்கள் அறிவார்கள், நாட்டு மக்கள் அனைவரும் அறிவார்கள், ஆகவே, நான் அதில் விளக்கம் கொடுக்க விரும்பவில்லை.

நமது முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை, பாராளுமன்ற முறையில் இந்த அரசை நடத்தவேண்டும் என்ற எண்ணம் எள்ளளவும் இருப்பதாக எனக்கு நம்பிக்கை இல்லை என்பதை நான் கடந்த கால நிகழ்ச்சிகளை வைத்துத் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்.

திரு. சே. பண்ணை சேதுராம் ; பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் ! உறி ஈஸ் நாட் யீல்டிங். உட்காருங்கள்,

திரு. ஜே. ஜேம்ஸ் ; சென்ற அக்டோபர் மாதத்தில் கூட்ட வேண்டிய சட்டமன்றக் கூட்டம் கூட்டப்படவே இல்லை. இது அவருக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை என்பதைக் காட்டுகிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வெளிநாடு சுற்றுப் பயணம் செய்தார்கள். ஆனால் அப்போது நம்முடைய மாநிலத்தில் மக்களைப் பாதிக்கக்கூடிய பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. புயல் வெள்ளச் சேதத்தால் பலர் மாண்டார்கள். வெள்ள நிவாரணப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. ஆனால் இவ்வளவு கோர நிகழ்ச்சிகள் நடைபெற்று இருந்தும், முதலமைச்சர் அவர்களுக்கு சுற்றுப்பயணத்தை ரத்து செய்து உடனடியாக வரவேண்டும் என்கிற எண்ணம் ஏற்படவில்லை. இந்தச் சட்டமன்றத்தைக் கூட்டி, உடனடியாக நிவாரண பணிகள் செய்யவேண்டும் என்கிற எண்ணமும் ஏற்படவில்லை; அவர் வெளிநாடு சென்றபோது. அவர் பொறுப்பு வகிக்கின்ற முதலமைச்சர் பொறுப்பை இங்கே இருக்கின்ற 14-20 (சிரிப்பு) அமைச்சர்களிடத்தில் யாராவது ஒருவரிடத்தில் கொடுத்துவிட்டுச் சென்று இருக்கலாம், இங்கே இருப்பவர்கள் யாரையும் அவர் நம்பவில்லை என்பது தெரிகிறது. ஆகவே, அந்தச் சூழ்நிலையில் நான் ஆளுநர் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன், காரணம் என்னவென்றால் எங்கள் மாவட்டத்தில் வெள்ள நிவாரணப் பணிகள் ஒன்றும் நடைபெறவில்லை. மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். இங்கே முதலமைச்சரும் இல்லை, முதலமைச்சர் பொறுப்பு வகிக்கிற யாரும் இல்லை. ஆகவே தான் நான் ஆளுநருக்கு எழுதினேன். சட்டப் பேரவை முன்னவர் அவர்களுக்கும் எழுதினேன். சட்டமன்றத்தைக் கூட்டுங்கள் என்று கேட்டு எழுதியிருந்தேன், ஆனால் பதில் வரவில்லை.





அடுத்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இருக்கிறபோது சட்டமன்றத்திற்கு வருகிறாரா என்றால் அவர் வருவது கிடையாது. ஏராளமாக இலாகா பொறுப்புகளை அவர் வகிக்கிறார். அது குறித்துப் பிரச்னைகளை இங்கே அங்கத்தினர்கள் விவாதிக்கிறபோது அதில் கலந்துகொண்டு விளக்கங்கள் தருவதற்கு அவர் விருப்பம் கொண்டவராகத் தெரியவில்லை. இதைத் தெரிவிக்கிறபோது, முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தை அவமதிக்கிறார் என்பது தான் எனக்கு நிச்சயமாகத் தெரிகிறது என்பதை நான் கூறிக்கொள்கிறேன். அவையில் மக்கள் பிரதிநிதிகள் பிரச்னைகளை விவாதிக்கிறபோது முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக இந்த அவையில் இருக்கவேண்டும், அவற்றைத் தெரிந்து கொள்ளவேண்டும். அதை விடுத்து இந்த மாதிரியாக அவமானப்படுத்துகிற முறையில் நடந்து கொள்வது சரியாகாது, முறையாகாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

அடுத்ததாக, சென்ற ஆண்டு ஆளுநர் அறிக்கையைப்பற்றி சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த அறிக்கை இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டு அதிக நாள் ஆகவில்லை; அதனால் அதை யாரும் மறந்து இருக்க முடியாது. பல திட்டங்கள் அதில் சொல்லப்பட்டிருக்கின்றன. பல்வேறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக இந்த மாநிலத்தில் 16,000 நியாய விலைக் கடைகள் ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒன்று என்ற விதத்தில் திறக்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக ஒரு பெரிய விவாதம் கூட இன்று இருக்கிற பிரதான எதிர்க்கட்சித் தலைவருக்கும் முதலமைச்சருக்குமிடையே எழுந்ததை நிச்சயமாக எனது அருமை நண்பர்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஆனால் என்ன நடந்தது? 16,000 நியாய விலைக் கடைகளில் எத்தனை திறக்கப்பட்டிருக்கின்றன என்பதை கூட இந்த அரசு இந்த ஆண்டு ஆளுநர் அறிக்கையில் கூறவில்லை. என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் 13,000 கிராமங்கள் பயன்படக்கூடிய அளவுக்கு நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். இது வழக்கறிஞர் ஸ்டேட்மெண்ட் தயார் செய்யும்போது தந்திரமாக வார்த்தைகளைப் பயன்படுத்துவதைப்போல காணப்படுகிறது. 1000 நியாயவிலைக் கடைகள் என்றாலும் 13,000 கிராமங்கள் பயனடையலாம். ஆக, சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள், கொள்கைக் குறிப்புகள் பல நிறைவேற்றப்பட வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, சென்னையில் தண்ணீர் பிரச்னை தீருவதற்கு கிருஷ்ணா நதிநீர் கொண்டுவரப்படும், மேற்கு நோக்கி பாயும் நதிகளின் தண்ணீரைக் கொண்டுவர மற்ற மாநிலங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, நெல்லை, இராமநாதபுரம் மாவட்டங்கள் பயன்படச் செய்யப்படும். கிராமத் தொழில்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1979 பிப்ரவரி 16

உற்பத்தி மூலமாக 30,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படும் என்றெல்லாம் பல்வேறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. அவற்றில் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது, எத்தனை தொழில்கள் தொடங்கப்பட்டன என்று விவரங்கள் கூட இந்த ஆளுநர் உரையில் இடம் பெறவில்லை. ஆக, இந்த அறிக்கையைப் பார்க்கும்போது, இது ஒரு சரியான, தெளிவான அறிக்கையாக இல்லை;

It is only a bald statement

என்று நான் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு நம்மை பாதித்து இருக்கக்கூடிய பிரச்சனை வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும். சமுதாய பொருளாதார மறுமலர்ச்சிக்குத் தேவையான பல்வேறு திட்டங்களில் எதுவுமே இந்த அறிக்கையில் இல்லை. இதைப் பார்க்கும்போது 'சோஷியோ எக்னாமிக் டெவலப்மென்ட்' செய்வதில் இந்த அரசுக்கு எந்தவிதமான எண்ணமும் இல்லை. எந்தவிதமான ஆலோசனையும் இல்லை என்பது இந்த அறிக்கையைப் பார்க்கிறபோது தெரிகிறது. வேலை வாய்ப்புக்கு எந்தவிதமான திட்டமும் வைக்கப்படவில்லை. மத்திய அரசு பல்வேறு திட்டங்களை வைத்திருக்கிறது. அந்த மத்திய அரசு திட்டங்கள் மாநில அரசு பூராவுக்கும் பொருந்துகிற வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

குறிப்பாக எஸ்.எப்.டி.ஏ. திட்டத்தின் கீழ் மாநில அரசுகளுக்கு உதவும் வகையில் மத்திய அரசு பணம் ஒதுக்கியிருக்கிறது. ஆனால் நம்முடைய மாநிலத்தில் அந்த பணத்தை சரியாக செலவிடாமல், லாப்ஸாக போய்விட்டது என்று கூறும்போது நிச்சயமாக இது கையாலாகாத அரசு என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, முதியோர் கல்வித் திட்டத்திற்கு மத்திய அரசு 400 கோடி ரூபாய் செலவிட்டு வருகிறது. அதன் விகிதாச்சாரம் நம்முடைய மாநிலத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அரசு இதுவரையில் அந்தத திட்டத்தைப் பயன்படுத்தியதாக தெரியவில்லை.

அதுமட்டுமல்ல. 'ஃபுட் பார் ஒர்க்' என்ற ஒரு திட்டத்தை 75 கோடி ரூபாய் அளவில் மத்திய அரசு தொடங்கி இருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதில் விகிதாச்சாரம் கொடுக்கிறார்கள். அந்த திட்டத்தைப்பற்றி இந்த அரசு இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.



979 பிப்ரவரி 16] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அதுமட்டுமல்ல. அரிசன் டெவலப்மென்ட்டுக்கு மத்திய அரசு ஒரு கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. ஆனால் இதுவரை அந்தப் பணம் 'யுட்டிலைஸ்' செய்யப்படவில்லை. ஆக, மத்திய அரசுத் திட்டங்கள் மாநிலத்திலே அமுல்படுத்தப்படாததன் காரணமாக இங்கே வேலைவாய்ப்புக்கு இடமில்லாமல் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, இங்கே பல கருத்துக்களை இந்த அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். இவையெல்லாம் ஒரு மாய்மாலமாக, 'மாஜிக்' என்று சொல்வார்களே, அதைப்போலத்தான் இருக்கிறதே தவிர வேறொன்றுமில்லை.

குறிப்பாக கிராம மக்களுக்கு வீட்டுமனை வழங்கும் ஒரு திட்டம் இருக்கிறது. இது எப்போது வழங்கப்படும், எத்தனை பேர்களுக்கு வழங்கப்படும், எத்தனை கிராமங்களுக்கு வழங்கப்படும், எவ்வளவு ரூபாய்க்கு வீடுகள் கட்டப்படும் என்று குறிப்பிட்டுச் சொல்கின்ற அளவுக்கு இல்லை. ஒரு 'டைம் பவுண்ட் ஸ்கீம்' ஆக இல்லாமல் இப்படி ஒரு அறிக்கையை வைப்பது நிச்சயமாக மக்களை ஏமாற்றச் செய்கின்ற முயற்சியே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக புதிய கிராமங்களை உருவாக்கும் திட்டம் என்று ஒரு திட்டம் பற்றி இந்த ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருக்கின்ற சில கிராமங்களுக்கு தேவையான குடிநீர் வசதியும், மின்சார வசதியும், மருத்துவ வசதியும் செய்துகொடுத்துவிட்டு இனிமேல் புதிய திட்டத்தின்படி கிராமங்களை அமைக்கப் போகிறோம் என்று சொன்னால் நாட்டு மக்கள் நம்புவார்கள். ஆனால் இருக்கின்ற கிராமங்களுக்கே எந்தவிதமான வசதியும் செய்து கொடுக்கப்படாமல் மேலும் புதிய கிராமங்களை அமைக்கும் திட்டத்தை நாங்கள் நடத்த இருக்கிறோம் என்று சொன்னால், இனிமேலும் உங்களால் மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து எல்லோருக்கும் வேலை வாய்ப்பு அதாவது செல்ஃப் எம்ப்ளாய்மெண்ட் கேரண்டி ஸ்கீம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு வேளை வருகின்ற நிதிநிலை அறிக்கையில் முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று எதிர்பாக்கலாம். ஆனால் உண்மையிலேயே இந்த திட்டங்கள் அமல்படுத்தப்படுமா என்ற அய்யப்பாடு எங்களுக்கு இல்லாமல் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

அடுத்து கப்பல்களைப் பழுது பார்க்கின்ற ஒரு கூடம் அமைக்க இருப்பதாக இங்கே காணப்படுகிறது. முன்பு கப்பல் வாங்கிய போது அது சம்பந்தமாக ஏற்பட்ட ஊழல் பற்றி இந்தச் சட்டமன்றத்திலே குறிப்பிடப்பட்டு இங்கே விவாதமும் நடைபெற்றது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இருக்கின்ற இரண்டு கப்பல்களும் ஓட்டைக் கப்பல்கள். இந்த ஓட்டைக் கப்பல்களால் அரசுக்கு ரூபாய் 60 இலட்சம், ரூபாய் 70 இலட்சம் என்ற அளவில் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே இந்தக் கப்பல்களை விற்பதற்கான எண்ணம் அரசாங்கத்தில் இருக்கிறது என்று கூறப்பட்டது. ஆனால் இப்படி இருக்கின்ற நிலையினை எண்ணிப் பார்க்கின்றபோது நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஓட்டைக் கப்பல்களைப் பழுது பார்ப்பதற்காகவா இப்படி ஒரு கூடம் தேவை என்பதை அரசு நன்றாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த ஓட்டைக் கப்பல்களினால் மேலும் நஷ்டம்தான் ஏற்படும் என்பதை அரசுக்கு நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து வெள்ள நிவாரணம் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இராமேஸ்வரம், சென்னை, ஊட்டி போன்ற இடங்களிலே வெள்ளத்தினால் சேதம் அதிகமாக ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த அறிக்கையிலும் அது பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் நூற்றுக்கணக்கான ஏழை எளியோர் வீடிழந்தார்கள். பலர் தாங்கள் விவசாயம் செய்யும் நிலங்களை இழந்தார்கள். இந்த வெள்ளத்தினால் அது மண் மேடாக மாற்றப்பட்டு விட்டது. ஆகவே இந்த நஷ்டங்களை எல்லாம் சகித்துக்கொண்டிருக்கின்ற ஏழை விவசாயிகளுக்கும் ஏழை மக்களுக்கும் நிவாரணமாக எதுவும் கொடுக்கப்படவில்லை. ஆறுதலாகக் கூட இந்த அறிக்கையில் ஒரு வார்த்தை கூட காணப்படவில்லை என்று கூறி அந்த மாவட்டம் இந்த அரசால் புறக்கணிக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டை நான் கூற விரும்புகிறேன்.

வெள்ள நிவாரணத்திற்காக பணமும் மற்ற உதவிகளும் வேறு பல இடங்களிலே செய்யப்பட்டன. குறிப்பாக சென்னை நகரை எடுத்துக்கொண்டால் ஒரு நபருக்கு 50 கிலோ அரிசி கொடுக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் எவ்வளவு குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு ஏன் கொடுக்கப்படவில்லை. ஏன் இந்த வித்தியாசம்? இதனை உற்று நோக்கும் போது அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இந்த அரசு கன்னியாகுமரி மாவட்டத்தைப் புறக்கணிக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சிவகாசியில் ஒரு பஸ் விபத்து ஏற்பட்டது. அது குறித்து அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையிலேயே சிவகாசியில் ஏற்பட்ட இந்த விபத்திற்கும் தொழில் அதிபர்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. இப்படிப்பட்ட நிலை இருந்தாலும் அதில் உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அரசு தரப்பிலிருந்து இதுவரையிலும் அறிவிக்கப்பட்ட அந்த நிவாரணம் கொடுக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அறிவிக்கப்பட்ட அந்தப் பணம் வருகின்ற 17–ஆம் தேதி அன்று நாகர்கோவிலில் என்னால் வழங்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** துணைத் தலைவரவர்களே, நாகர் கோவிலுக்கு வழங்கப்படும் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். மிக்க நன்றி. ஆனால் அதேபோல் சிவகாசியிலேயும் அந்த ஏழைக் குழந்தைகளின் குடும்பத்தினருக்கும் உரிய உதவியை உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சிவகாசியிலே .......

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** துணைத்தலைவரவர்களே, சிவகாசியில் உயிர் இழந்தவர்களின் குடும்பத் தினருக்கு 5000 ரூபாய் கொடுக்க ஏற்பாடு செய்து பணமும் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதேபோல் அந்தத் தொழில் அதிபர்களிடத்திலே இருந்தும் எவ்வளவு பணம் கிடைக்குமோ அதையும் இந்த அரசு வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.10)

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மிக்க நன்றி. தொழில் அதிபர்கள் அந்தப்பணத்தை செக் மூலம் லேபர் கமிஷனருக்கு அனுப்பி விட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது. இந்தச் சந்தர்ப் பத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கே இருந்திருந்தால் நலமாகயிருந்திருக்கும். முதல் அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தபோது அந்தத் தொழில் அதிபர்களை அழைத்து அவர்கள் தகாத வார்த்தை களைப் பயன்படுத்தி அவர்களை ஏசியதாக அங்கே எனக்குக் கூறப்பட்டது. உண்மையில் அந்தச் சம்பவத்திற்கும் அந்தத் தொழில் அதிபர்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று சொன்னாலும் அவர்கள் பெருமனது வைத்து பாதிக்கப் பட்டவர்களுக்கு நிவாரணம் அளித்திருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் கூறியதை அவர்கள் சாதாரணமாக ஏற்றுக் கொண்டார்கள். இருந்தாலும் அந்தமாதிரி அங்கே நடந்தது என்று சொன்னால் அது ஒரு முதல் அமைச்சர் பதவி வகிக்கிறவர் பயன்படுத்தக்கூடிய வார்த்தைகள் அல்ல என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** அந்தத் தொழில் அதிபர்களிடம் முதல் அமைச்சர் அவர்கள் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி பேசியதாகக் கேள்விப்பட்டதாகச் சொல்லிவிட்டு அதற்குப் பிறகு இப்படிப்பட்டவர் அப்படிப் பேசலாமா என்று

உறுதிப்படுத்தி ஒரு குற்றச்சாட்டை வைப்பது முறையில்லை என்பதை நான் திரு. ஜேம்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். விஷயங்களைத் தெளிவாகத் தெரிந்துகொண்டு அவையில் பேசுவது நல்லது. முதலில் என்ன சொன்னார்கள்? அப்படிச் சொல்லப்படுகிறது என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு குற்றச்சாட்டு ஒன்றை வைக்கிறார்கள். அப்படிச் சொன்னார்கள் இது முதல் அமைச்சர் பதவிக்கு தகுதியா என்று கேட்கிறார்கள். இது முறை அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு தயவுசெய்து இந்த முறைகளை நீங்கள் மாற்றிக் கொள்ளவேண்டுமென்று சகோதரப்பாசத்தோடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜெ. ஜேம்ஸ்: நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஒன்று கூற விரும்புகிறேன். பேசுகிறபோது கூட இருந்து நான் கேட்கவில்லை. யாரிடம் பேசினார்களோ அவர்கள் சொல்லி நான் கேட்டேன். ஆகவே ஒரு வேளை அது hear-say evidence ஆக இருக்கமுடியாது. கேள்விப்பட்டேன் என்றுதான் சொல்ல முடியுமே தவிர நேரடியாக நான் கேட்டேன் என்று சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெளியே கேட்கப்பட்ட செய்திகளை இந்த மன்றத்தில் பேசுவது சட்ட மன்ற மரபுகளுக்கு உகந்ததல்ல.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Deputy Speaker, Sir, If Mr. A. tells Mr. James and Mr. James repeats it, unless A corroborates Mr. James, it is only hear-say evidence, and it is irrelevant and inadmissible in law.

திரு. துரை முத்துசாமி: பாயிண்ட் ஆப் ஆர்டர். துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஜனதாக் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தகாத வார்த்தைகளைக் குறிப்பிட்டார்கள் என்று சொன்னார்கள். அதற்கடுத்தாற்போல் தொழில் அதிபர்களுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொன்னார்கள். அவர்கள் தொழில் அதிபர்களுக்காக வக்காலத்து வாங்குகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ர. ஜெபமணி: பாயிண்ட் ஆப் ஆர்டர். உதவி சபாநாயகர் அவர்களே, தொழில் அதிபர்களுக்காக வக்காலத்து வாங்குவது திரு. ஜேம்ஸ் அல்ல. ஐந்தாண்டுகளில் டாட்டா பிர்லாக்களை மும்மடங்கு வளர்த்தவர்களின் கட்சியில் உள்ளவர்கள் இதைக் கேட்கிறார்கள் என்றால் தலை குனிய வேண்டும்.



திரு. ஜெ. ஜேம்ஸ்: அடுத்து, மதுவிலக்கு கொள்கைபற்றி ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். மதுவிலக்குக் கொள்கை இங்கு ஒரு கேலிக்கூத்தாக அமல்படுத்தப் படுகிறது என்பதை நான் வருத்தத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். அரிஷ்டம் தயாரிக்க லைசென்ஸ் கொடுக்கப் படுகிறது. அதற்காக, டெம்பரரி லைசென்ஸ் கொடுக்கப் படுவதற்கு ஆளும்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சிபாரிசு செய்தால்தான் அந்த லைசென்ஸ் கொடுக்கக்கூடியநிலை ஏற்பட்டிருக்கிறது. அது அவர்களுக்கு ஒரு தங்கச் சுரங்கமாக இருக்கிறது என்று பலர் கூறுகிறார்கள். ஆகவே, மதுவிலக்கை உண்மையில் அமல்படுத்த வேண்டும் என்று சொன்னால் இந்த அரிஷ்டம் நிச்சயமாக தடைப்படுத்தப்படவேண்டும். அதை இந்த அரசாங்கத்தின் கவனத்தில் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து ஊழலை நாம் அகற்றிவிட்டோம் என்று வார்த்தைகள் இருக்கின்றது. ஆனால் கலெக்டர் கான்பரன்ஸ் அதிகாரிகளில் இன்னும் ஊழல் இருக்கிறது என்று பல்வேறு பேசியதாக பத்திரிகையில் வந்ததை நான் பார்த்தேன். ஆனால் இந்த அறிக்கையில் நேர்மாறாக இருக்கிறது என்பதை கூறிக்கொள்கிறேன். ஊழல் அற்றுப்போய் விட்டது. ஊழலை அகற்ற முயற்சிக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் சர்க்காரியா கமிஷன் அறிக்கை என்ன ஆனது என்பதை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். சர்க்காரியா கமிஷனுக்கு ஆதாரமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பாராளுமன்ற உறுப்பினர் கல்யாணசுந்தரம் அவர்களும் மத்திய சர்க்காரிடம் கொடுத்த ஊழல் பட்டியல் சம்பந்தமாக சர்க்காரியா கமிஷன் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பித்தது. கடந்த ஓராண்டு ஆகியும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? அந்த அறிக்கையில் எத்தனை நபர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் தீர்ப்பு வழங்கப்பட்ட பலர் இன்றைக்கு எங்கே இருக்கிறார்கள், ஆளும் கட்சியில்தான் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஆளும் கட்சிக்கு மாறிவிட்டார்கள். இவர்கள் எல்லாம் ஆளும்கட்சிக்கு மாறிவிட்டார்கள் என்ற காரணத்தால் இப்போது ஊழல் அற்றுப்போய்விட்டது என்று சொல்லுகிறார்களா? இன்றைக்கு அவர்கள் எல்லாம் ஞானஸ்நானம் செய்யப்பட்டு புனித மனிதர்களாக ஆகிவிட்டார்கள். அப்படிப்பட்ட ஊழல் பெருச்சாளிகள் எல்லாம் இன்றைக்கு ஆளும் கட்சியில் இணைந்து விட்டதால் இன்றைக்கு ஊழல் அகற்றப்பட்டுவிட்டதா என்பதை இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு டிரான்ஸ்போர்ட் பெர்மிட் வழங்குவதில் பல ஊழல்கள் நடைபெறுவதாக வதந்திகள் இருப்பதாக கேள்விப் படுகிறேன். பான் புரோக்கர்ஸ் பில் வருகின்ற வேளையில் ஒரு கலெக்ஷன் நடத்தி, அது ஆளும் கட்சியிலுள்ள சில பெரியவர்

களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், அடுத்த இன்ஸ்டால்மெண்ட் பில் நிறைவேற்றிய பிறகு கொடுக்கப்படுவதாகவும் வதந்திகள் இருந்துகொண்டிருக்கின்றன என்பதை இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து, மதுரை சட்டக் கல்லூரியில் பி. ஜி. எல். அட்மிஷன் சம்பந்தமாக இரண்டு மாணவர்கள் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு, நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நாம் எல்லோரும் அறிவோம். சட்ட அமைச்சர் அவர்களும் அறிவார்கள். அதில் இந்த அரசாங்கத்தின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் என்ன கூறினார்? போடப்பட்டிருக்கின்ற மனுவை எதிர்த்து கூறுவதற்குப் பதிலாக மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து இரண்டு மாணவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்றுதான் வாதாடினார்களே தவிர, செலக்ஷன் கமிட்டி செய்தது தான் சரி என்று அரசாங்க வழக்கறிஞர் வாதாடவில்லை. வெட்ககரமான—நாணப்படக் கூடிய வகையில் இந்த அரசு எக்ஸ்போஸ் செய்யப்பட்டிருக்கிறது. இது ஊழல் இல்லையா? இந்த பி. ஜி. எல். அட்மிஷனிலேயே இப்படியிருக்கும் என்றால், வேறு அட்மிஷனில் தாராளமாக இருந்திருக்கும் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொல்வார்கள். ஆகவே ஊழல் இல்லை என்று நெஞ்சில் கை வைத்து சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கட்சி கண்ணோட்டத்தோடு ஆளும்கட்சிக்காரர்கள் எந்த அளவுக்கு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எனக்கு முன் பேசிய நண்பர்கள் பலர் எடுத்துச்சொன்னார்கள் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். உலக வங்கி லோனிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சானல் டெவலப்மெண்ட்—மெயின்டனன்ஸ்-க்காக ஒரு திட்டம் தயாரித்திருக்கிறார்கள். அங்கு ஏற்பட்டிருக்கின்ற தண்ணீர் பற்றாக்குறையை தவிர்ப்பதற்காக ஒரு திட்டம் தயார் செய்து அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நான் கேள்விப்படுகிறேன். ஆளும் கட்சியிலுள்ள நண்பர் விரும்புகின்ற இடத்தில் மட்டும் தான் இந்தத் திட்டம் செயல்படவேண்டும் என்று நினைத்து, இந்தத் திட்டத்தை ஸ்பிளிட் செய்து மாற்றியிருப்பதாக கேள்விப்படுகிறேன். இப்படி நடந்திருந்தால் இதை மாற்றி, இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்ற வழிசெய்யவேண்டும். ஆளும் கட்சியினருக்கு ஒரு நீதி, மற்றவர்களுக்கு ஒரு நீதி என்று இருக்கக்கூடாது. திற்பரப்பு வலதுகரை சானலிலிருந்து, அங்குள்ள மக்களுக்கு குடிதண்ணீருக்கும், விவசாயத்திற்கும் பயன்படவேண்டும் என்று நீண்டகாலமாக கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை முழுமையாக செயல்படுத்தக் கூடாது என்ற எண்ணம் ஆளும்கட்சியினருக்கு இருக்குமானால், இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை ஆளும்கட்சியினர் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





(முற்பகல் 10·20)

இப்போதெல்லாம் அண்ணா தி. மு. க. கட்சியிலும், இந்த அரசிலும் தனி நபர் வழிபாடு அதாவது 'பர்சனாலிடி கல்ட்' என்று கூறுவார்களே, அது வளர்ந்துகொண்டு வருகிறது. நிச்சயமாக யாருக்கும் அது விரும்பத்தக்கதல்ல; கட்சிக்கும் நல்லதல்ல; அரசுக்கும் நல்லதல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மீது எனக்கு மிகுந்த மரியாதையும், அன்பும் உண்டு. அவர்களை நான் மதிக்கின்றவன் ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் முதல் அமைச்சர் அவர்களை கண்டு, காலில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணுவது நிச்சயமாக அநாகரிகம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதன்விளைவாக, ஏரோட்ரோமில் ஒரு ஸ்டேட் ஆபீசர்கூட காலில் விழுந்து... (குறுக்கீடு)

முதலமைச்சர் அவர்கள் வெளிநாடு சென்று சுற்றுப்பயணம் செய்துவிட்டு வந்தபோது, கட்சியைச் சார்ந்தவர்கள் காலில் விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார்கள். அப்போது இடையிலே மாட்டிக்கொண்ட ஒரு ஸ்டேட் ஆபீசர்கூட அவர் காலில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அது சினிமா படமாக எடுக்கப்பட்டு, காட்டப்பட்டும் வருகிறது. அந்த அளவுக்கு நிலைமை செல்வது விரும்பத்தக்கதல்ல, நல்லதல்ல என்பதை சிந்திக்கும் சக்தியுள்ள நண்பர்கள், அமைச்சர் குழு யோசிக்க வேண்டுமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக,...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: யாரும் குறுக்கிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த மாநிலத்திலே 4,000 பேர்களைக் கொண்ட இளைஞர் அணி பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் தேர்வு செய்யப்பட்டு, கடந்த ஒரு ஆண்டு காலம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். தி. மு. க. ஆட்சி காலத்தில் 3, 4 ஆண்டுகள் வேலையிலிருந்தவர்கள், அண்ணா தி. மு. க. ஆட்சி வந்தவுடன் அவர்கள் பிரித்து விடப்பட்டு, வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் குடும்பங்கள் கஷ்டப்படக்கூடிய நிலைமையிலே இருக்கின்றன. எனவே, என் அருமை நண்பர், மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் தற்போது முதல் அமைச்சர் அவர்கள் இங்கே இல்லாததால், இதிலே கவனம் செலுத்தி அவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பட்டதாரி ஆசிரியர்கள் இன்றும், கல்லூரி ஆசிரியர்கள் பி. யு. சி. வகுப்பை நீக்கிவிட்டதன் காரணமாக, இந்த மாநிலத்தில் பலப் பிரச்னைகள் ஏற்பட்டிருக்கின்றன.

அதற்கெல்லாம் ஒரு தீர்வு காணவேண்டும், முன்கூட்டியே ஒ ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப்பட்டது)

விவசாயிகளைப் பற்றிப் பேசப்படுகிறது. மத்திய அரசு ...ளிக்கு 85 ரூபாய் என்று தீர்மானம் செய்திருக்கிறார்கள் அதுகூட போதாது என்ற நிலைமை இருக்கிறது. எனவே விவசாயிகளுடைய பிரச்னைகளை சுமுகமாகத் தீர்க்க வேண் மென்று இந்த அரசு கருதினால், அப்படி 85 ரூபாய்க் விற்கப்படும் நெல்லை அரசே வாங்கிக்கொள்ளமுன்வர வேண்டும் இப்படி வாங்கி விவசாயிகளை இந்த அரசு காப்பாற் வேண்டும், அதற்குத் தயாரா என்று நான் இந்த நேரத்தி சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கரும்பு சம்பந்தமாகவும் சொல்லப்பட்டது. மத்திய அர டன் ஒன்றுக்கு ரூ. 100 என்று சொன்னாலும், வட மாநிலங்களிலே ரூ. 120, ரூ. 130 என்று கொடுக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. ஆனால், இங்கே ரூ. 75, ரூ. 8 என்று சொன்னால், இந்த அரசு அதற்கு உடனடியாக தக் நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். விவசாயிகளை பாதுகாப்பதற்கு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கவேண் மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, லேபர் பாலிசி. ஆளுநர் அவர்களுடைய உரையிலேயே இந்தத் தொழிலாளர்கள் பிரச்னையைப் பற்றி ஒரு வரிகூட குறிப்பிடாமல் இருப்பது, உண்மையிலே மிகவும் வருந்தத்தக்கது. இது தொழிலாளர் சமுதாயத்தை இழிவு படுத்துவதாக இருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: (மணியடித்து) தயவுசெய்து உட்காருங்கள், இன்னும் 5, 6 எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசவேண்டும். அதற்குப் பிறகு முதல் அமைச்சர் அவர்கள் வேறு பதில் அளிக்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், சரியான விலை கொடுக்கவில்லை என்று. இந்த மாநில அரசு மத்திய அரசின் கட்டளையின் மேல் அப்படிக் கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். அது மாத்திரமல்ல. கேரள மாநிலம் 120 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அறிவித்ததை, அப்படிக் கொடுத்தது தவறு என்று மத்திய அரசு அறிவித்த செய்தி பத்திரிகையி லேயும் வந்திருக்கிறது. இந்தத் தமிழக அரசைப் பொறுத்த வரையில், 125 ரூபாய் கேட்டு, அனுமதி அளிக்கவில்லை என்பதையும், அப்படி மீறிக் கொடுக்கக் கூடாது என்று தகவல் வந்திருக்கின்றது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



முன்பு இருந்த தி. மு. க. ஆட்சியின்போது ரூ. 10, ரூ 5 என்று கொடுத்ததைக் கூடத் தவறு என்று இப்போது கேட்கப் பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு ஜே ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதை நான் மறுக்கவில்லை. நான் கூறியதெல்லாம் அரசு நிர்ணயித்திருக்கிற 85 ரூபாய் விலைக்குக் கூட விவசாயிகள் நெல்லை விற்க முடியவில்லை என்பதுதான். இந்த நிலைமையைத் தவிர்க்க வேண்டுமென்று சொன்னால், அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று சொன்னால் அரசே அவர்களிடமிருந்து நெல்லைக் கொள்முதல் செய்ய முன் வர வேண்டும். அப்படியானால்தான் விவசாயிகளைக் காப்பாற்ற முடியும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு ஜனதா கட்சித் தலைவர் அவர்கள் தனனுடைய உரையில் * என்று சொன்னதை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : அவர் பேசும்போது சபாநாயகர் என்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்கள் சொன்னதை சபைக் குறிப்பி லிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் பேசியதைப் பேசியதாகக் கூறி அதை நீக்கவேண்டுமென்று சொல்வது சரியல்ல.

*திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக் கிற தீர்மானத்தில் உணர்வுகளை வெளியிடுவதற்கு வாய்ப்பளித்த மாமன்றத் தலைவருக்கு நன்றியைக் கூறிக்கொள்ள நான் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

இந்த ஆளுநர் உரை ஒரு தெளிவான உரை என்பதும், ஒரு நிர்க்கமான உரைஎன்பதும் ஆளும் கட்சியினுடைய சார்பில் சட்ட மன்ற உறுப்பினர்கள் பல்வேறு புள்ளிவிவரங்களைக் கோடிட்டுக் காட்டி உரைநிகழ்த்தி முடித்திருக்கிறார்கள். ஆனாலும் கூட இந்த ஆளுநர் உரையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று பின்னோமார்கூறி போடுகிற அளவில் பிரதான எதிர்கட்சி வரிசையில்

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைப்படி இவை நீக்க அகற்றப்பெற்றது.

இருக்கக் கூடியவர்களும், அந்த எதிர்கட்சிக்குத் துணை நிற்கக் கூடியமற்றைய எதிர்கட்சிகளைச் சார்ந்தவர்களும் 'நாங்கள் வெளி நடப்புச் செய்கிறோம்' என்று சொல்லி வெளியேறியதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இதைப் பற்றித் தமிழக முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்கிற நேரத்தில் 'அது அவர்களுடைய உரிமை, அந்த உரிமையைப் பறிப்பதற்கு நாம் தயாராக இல்லை' என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

ஆனாலும் பிரதான எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும் மற்றைய மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்களும் வெளியேறியபோது இந்தச்சபை அமைதியைக் கடைப்பிடித்தது என்பதும், கூச்சல் இல்லை, குழப்பம் கொஞ்சம் கூட இல்லை, அமைதியின் மறுவார்ப்பாக ஆளும் கட்சியைச்சேர்ந்தவர்கள் அடக்கத்தின் சின்னமாக இங்கே அமர்ந்திருந்தார்கள் என்பதுதான் நாங்கள் செல்லுகிற பாதைக்கு அது ஒரு புதிய வலுவைச் சேர்க்கிறது, அண்ணா அவர்கள் வழியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கமும், சட்டமன்ற உறுப்பினர்களும் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது, என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

ஆளுநர் கூட இதைப் பற்றி வெளியே குறிப்பிட்டுச் சொல்கிற நேரத்தில் 'அமைதியாகச் சபை இருந்தது' என்பதையும், 'ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் மிகுந்த அமைதியோடு காட்சியளித்தார்கள்' என்பதையும் தெளிவுபடுத்திக் காட்டியிருக்கிறார்கள். ஜனநாயக உணர்வுகள் ஆளும் கட்சியினரிடம் இழையோடி இருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு உதாரணத்தை என்னால் சுட்டிக்காட்ட முடியவில்லை.

ஆனாலும் கூட இந்தச் சபையில் ஆளும் கட்சியைப் பார்த்து புரிகிற கேலிகள், விடுகின்ற கிண்டல்கள். ஏளனங்கள், இழி பேச்சுக்கள் கொஞ்சமா, நஞ்சமா என்பதைதான் இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு மட்டுந்தான் அந்தக் கேலிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோமா? இன்றைக்கு எதிர் வரிசையில் இருப்பவர்கள் அன்றைக்கு ஆளும் கட்சி வரிசையில் இருந்தார்கள். நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு இந்த மன்றத்தில் ஒன்றரை மணி நேரம் பேசியபோது இங்கே இருக்கின்ற ஒலி பெருக்கிக்கு என்ன காய்ச்சல் வந்து விட்டதோ நமக்குத் தெரியாது நம்முடைய முதலமைச்சர் மீது அன்று அந்த ஒலிபெருக்கிக்குஎன்ன கோபமோ தெரியாது; 'ஜனநாயகம் உறங்கிக் கொண்டிருக்கிறது, ஜனநாயகம் தூக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது' என்று அந்த ஒலிபெருக்கி நினைத்துக் கொண்டதோ என்னவோ, உறங்கிக் கொண்டிருக்கும் ஜனநாயகம் விழித்துக்கொள்ளக் கூடாது என்று நினைத்து ஒலிபெருக்கி கூட தலையை நாணிக் கோணி வேகமாகக் குனிந்து கொண்டிருந்ததை நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை.



(முற்பகல் 10.30)

ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டுமென்பதற்காக ஜனநாயகம் கொளுத்துகிற வெயிலில் நடக்கவேண்டுமே பாவம் என்ற பச்சாதாபத்தோடு பரிதாபத்தோடு பாச உணர்ச்சியோடு—அவர்கள் வெளியே வந்தபோது—சட்டமன்றத்திற்கு முன்னாலே வராண்டாவிலே தங்கள் தாகச் சாந்தியைத் தணித்துக்கொள்ள செருப்பை வீசிய சிந்தனைச் செம்மல்களை நிச்சயமாக நாடு மறந்திருக்க முடியாது. அப்போது மேலே இருந்து எச்சிலைத் துப்பி ஜனநாயகத்தின் தாகசாந்தியை தணியவைக்க முயற்சி எடுத்தார்கள் என்பதை நாடு மறந்திருக்க முடியாது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பலமாக எச்சில் துப்பிய அந்த பலகுரல் மன்னர்கள் எல்லாம் இன்றைக்கும் நாட்டிலே இருந்துக்கொண்டுதானிருக்கிறார்கள். ஜனநாயகத்தினுடைய காதுகள் பிய்ந்துபோகக்கூடிய அளவிற்கு, ஜனநாயகத்தினுடைய செவிப்பறைகள் அறுந்துபோகக்கூடிய அளவிற்கு காரசாரமான வார்த்தைகளை உக்கிரமமான வார்த்தைகளை, உஷ்ணமான வார்த்தைகளை அள்ளி எறிந்தவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதை நான் இந்தச் சட்டசபைக்கு எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும், ஜனநாயகம் உயிரோடு இருக்க வேண்டும் என்பதற்காக எத்தகைய தியாகங்களை எல்லாம் செய்தார்கள் என்பது இங்கே நினைவு கூறத்தக்கது. ஜனநாயகத்தின் தொட்டில் அமெரிக்கா தான் என்று யாரோ சொல்லிவைத்தார்கள். சொல்லிவிட்டவர்கள் எங்கே இருக்கிறார்களோ தெரியவில்லை. யாரோ சொல்லியிருக்கிறார்கள், அப்படிச் சொன்னவர்கள் நிச்சயமாகப் பைத்தியக்காரர்களாகத்தான் இருக்க வேண்டும்....

திரு. என். கிட்டப்பா: ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார், மாண்புமிகு ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் மணிமாறன் அவர்கள் தங்களுடைய உரையிலே குறிப்பிடும் பொழுது தி.மு.க. ஆளுங்கட்சியாக இருந்தபோது ஆளுங்கட்சியினர்—இப்போதைய ஆளுங்கட்சினர்களைப்—பார்த்து அப்போது செருப்பு வீசப்பட்டதாக இங்கே குறிப்பிட்டார்கள். யார் செருப்பு வீசினார்களோ அவர்கள் இப்போது உங்கள் கட்சியிலே தான் இருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன்: எய்தவர் இருக்க அம்பை நோவானேன். அந்தக் கதைதான்.

திரு. என். கிட்டப்பா: அப்படிப்பட்ட செயல் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உடன்பாடானது அல்ல என்று எங்கள் கட்சித் தலைவர் வலியுறுத்தியிருக்கிறார். அதை அப்போது அவர் ஏற்றுக்கொள்ளவில்லை இப்போது ஏற்றுக்கொள்கிறாரோ என்னவோ தெரியவில்லை.

திரு. ஆர். மணிமாறன்: அதை ஏற்றுக்கொள்கிற தலைவர்கள் இன்றும் இங்கே இருக்கிறார்கள், அது நாட்டுக்கும் தெரியும், எங்களுக்கும் தெரியும், உங்களுக்கும் எங்களைவிட நன்றாகத் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜனநாயகத்தின் தொட்டில் அமெரிக்கா என்று சொல்லி வைத்தார்கள். சொன்ன அவர்களைக்கூட 1972 ஆம் ஆண்டு சென்னையிலே உள்ள இந்தக் கோட்டைக்கு அழைத்து வந்திருந்தால் அவர்கள் ஜனநாயகத்தை உணர்ந்திருப்பார்கள். ஜனநாயகத்தின் கம்பீரத்தை உணர்ந்திருப்பார்கள் இரண்டு சட்டமன்றங்கள் நடந்த இந்தச் சபையை ஜனநாயகத்தின் தொட்டில் என்று சத்தியப் பிரமாண வாக்குமூலத்தைத் தந்துவிட்டு அவர்கள் அமெரிக்காவிற்குப் பறந்துபோய் விட்டிருப்பார்கள். ஜனநாயகத்தை அறிமுகப்படுத்த அப்படிப்பட்ட சூழ்நிலை தான் இங்கே அப்போது உருவாயிற்று. இன்றைக்குப் பேசிய எதிர்க்கட்சிக்காரர்கள் நாட்டிலே சட்டம் இல்லை, ஒழுங்கு கெட்டுவிட்டது, நீதி கெட்டுப்போய் விட்டது என்று ஒரே குரலில் ஒருமித்த குரலிலே சொன்னார்கள். ஆனால் அந்தக் குரல்கள் இன்று மட்டும் தானா ஒலித்துக்கொண்டிருக்கின்றன? அந்தக் குரல்கள் இன்று மட்டும் தானா என்றால் நிச்சயமாக இல்லை.

1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மாமன்றத்திலே முதலமைச்சராக அமர்ந்த அந்த நேரத்திலே ஆளுங்கட்சியாகப் பொறுப்பேற்ற பத்தாவது நாளிலே இதே நாள் ஒலித்ததை நாங்கள் மறந்துவிடவில்லை. அண்ணா அவர்கள் பொறுப்பேற்ற பத்தாவது நாளிலே அண்ணா அவர்களைப் பார்த்து முதலமைச்சர் அவர்களைப் பார்த்து—ஏகோபித்த குரல்கள் எழுந்தன என்பதை நாட்டு மக்கள் மறக்கவில்லை. அன்றைக்குச் சொன்னார்கள், நாட்டிலே சட்டம் கெட்டுவிட்டது, ஒழுங்கு கெட்டுவிட்டது, நாட்டிலே நீதி காற்றோடு காற்றாய் பறந்து கொண்டிருக்கிறது என்று இன்றைக்குச் சொல்கிற நபர்கள் வேறாக இருக்கலாம், நபர்கள் வேறு ஆனால் நயம் மாறவில்லை அதே நயம் அதே குரல் தான் இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது.

பொள்ளாச்சியிலே ஒரு விவசாயி அவருடைய கைகளிலே விலங்கிடப்பட்டு தெருத்தெருவாக இழுத்துவரப்பட்டார் என்று சொல்லி அண்ணாதுரையே ராஜினாமா செய் என்று குரல்கள் எழுந்ததில்லையா? அவர் அங்கே துணை கலெக்டரை கன்னத்தில் அறைந்துவிட்டார், அதற்காக கைது செய்யப்பட்டார். அதற்கு இங்கே குரல்கள் எழுப்பப்பட்டன, ராஜினாமா செய் என்று அதற்காகக் கைது செய்யப்பட்டார். அந்த நேரத்தில் எப்படிப் பட்ட வாதங்கள் எடுத்து வைக்கப்பட்டன? பூஜை அறைக்குள்ளே போலீஸ் நுழைகிறது, அண்ணாதுரை ஆட்சியிலே போலீஸ் பூஜை அறைக்குள்ளேயே போகிறது, அதைக் களங்கப்படுத்தும் காரியங்களை இவர்கள் செய்கிறார்கள் என்று அன்றைக்கே [illegible]



காட்டப்படவில்லையா? அந்த நேரத்திலும் சொன்னார்கள், நாட்டிலே சட்டம் இல்லை, நாட்டிலே ஒழுங்கு இல்லை, நாட்டிலே நீதி இல்லை, அண்ணாதுரையே இராஜினாமா செய் என்று சொன்னதை நாம் நிச்சயமாக மறக்க முடியாது.

மாணவர்கள்—பஸ் தொழிலாளர்கள் போராட்டம் இந்தச் சென்னை நகரத்திலே நடைபெற்றது. அப்பொழுது, அண்ணாதுரை அவர்களே, உங்களுக்கு ஆளுகின்ற யோக்கியதை இல்லை, சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று சொல்லவில்லையா?

மாணவர்கள் இந்தி எதிர்ப்பின் உணர்வின் காரணமாகப் போராட்டம் நடத்தியபொழுது இரயில் பெட்டிகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்ட நேரத்தில், அப்பொழுதும் சொன்னார்கள், அண்ணாதுரை அவர்களே, நீங்கள் ஆள்வதற்கு இலாயக்கு இல்லை கீழே இறங்குங்கள், நாட்டிலே சட்டம் இல்லை, நீதி இல்லை, ஒழுங்கு இல்லை என்று சொல்லவில்லையா?

கீழ்வெண்மணி சம்பவம் நடந்தது. அண்ணா அவர்கள் அதைக் கேள்விப்பட்டு பாகாக உருகி கண்ணீர் விட்ட நேரத்தில் கூட, நாட்டிலே சட்டம் இல்லை, ஒழுங்கு இல்லை, அண்ணாதுரையால் கையாள் ஆகவில்லை, போலீஸ் துறை கண்காணிக்கப் படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் அடுக்கடுக்காக படையெடுத்துக் கிளம்பி வரவில்லையா?

இன்றைக்கு விழுப்புரம் கலவரம் சம்பந்தப்பட்ட வரையில் சாதிச் சண்டைகள் கோலோச்சிக் கொண்டிருக்கின்றன..

திரு. ர. ஜெபமணி: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். உதவி சபாநாயகர் அவர்களே, கடந்த காலத்தில் இப்படி இப்படி நடந்தது என்றால் இப்பொழுதும் அப்படி நடக்கலாம் என்று சொல்கிறாரா என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. ஆர். மணிமாறன்: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு அவசரம் கூடாது, கொஞ்சம் பொறுமையாக இருந்து கவனிக்க வேண்டுமென்று நம்முடைய அருமைப் பெரியவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

விழுப்புரம் சம்பவம் இன்றைக்கு நடைபெற்றிருக்கிறது, அதில் ஆளுங்கட்சிக்குப் பங்கு இருக்கிறது, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் அதில் பெரும்பான்மையான பங்கு வகிக்கின்றார் என்று பல எதிர்க்கட்சி மேடைகளிலே பேசப்படுகிறது, அவர்களின் பிரச்சாரப்பலமே அதுவாகத்தான் இருந்து வருகிறது. ஆனால் நான் கடந்த கால நினைவுகளை இந்த மாமன்றத்தில் இழையோட வைக்க விரும்புகிறேன், நடந்து முடிந்த இந்தச் சம்பவத்திற்கு நிழற்படமாக ஓட வைப்பது தவறாக இருக்காது என்று நம்புகிறேன். 1967 ஆம் ஆண்டில் அண்ணா அவர்கள் இந்த மாமன்றத்திலே உட்கார்ந்திருந்த நேரத்தில்.....

[1979 பிப்ரவரி 16

திரு. மா. மணிமாறன் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். எதிர்ககட்சி மேடைகளிலே பேசப்பட்டது என்று சொல்கிறார்கள் எதிர்க்கட்சி மேடை தவிர, ஆளுங்கட்சி உறுப்பினர்களே, பச்சை குத்தியவர்களே சட்டமன்ற உறுப்பினரைப்பற்றிச் சொல்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். ஒருவர் பேசும்பொழுது இன்னொருவர் குறுக்கிடுவது என்பது, பேசுகிறவரின் பேச்சு நடைமுறையிலே விதிகளுக்கு மாறுபட்டு இருந்தால், தவறாகப் பேசினால், இந்த உறுப்பினரைப் பற்றி ஏதாவது பேசியிருந்தால் குறுக்கிட்டுக் கேட்கலாமே தவிர ஒவ்வொன்றுக்கும் குறுக்கிட்டுக்கொண்டு இருந்தால் அவரும் பேச முடியாது. நேரமும் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் தகவலைத்தான் சொல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தகவலை இவர் சொல்ல வேண்டியதில்லை. அவர் விழுப்புரமும் இல்லை. எதிர்க் கட்சி வரிசையிலே தலைவர் இருக்கிறார்.

திரு. அ. ரகுமான்கான் : எதிர்க்கட்சி வரிசையிலே சொல்லப் படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் பச்சை குத்தியவர்களே அந்தக் குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இங்கே எதிர்க் கட்சித் தலைவர், துணைத் தலைவர் ஆகியோர் இருக்கிறார்கள். அப்படிப் பிரச்னை வரும்பொழுது அவர்கள் பதில் சொல்வார்கள். எனவே, நீங்கள் அவசரப்பட்டுப் பதில் சொல்ல வேண்டியதில்லை.

திரு. ஆர். மணிமாறன் : 1967 ஆம் ஆண்டு விழுப்புரம், பேரணாம்பட்டு போன்ற பகுதிகளில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்த பொழுது நம்முடைய மறைந்த மாண்புமிகு அமைச்சர் மரியாதைக்குரிய கோவிந்தசாமி அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள்: இன்றைக்குச் சொல்கிற அதே நிலைமைகள் அன்றைக்கு இருந்தன என்பதை நான் கோடிட்டு காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ''ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்தக் கலவரத்திற்கும் சம்பந்தம் இருப்பதாக சிவசுப்பிரமணியன் என்ற உறுப்பினர் சொல்வது ஒரு தவறான காரியமாகும். இது இரண்டு வர்க்கத்தைச் சேர்ந்தவர்களிடையே ஏற்பட்ட கலவரமே தவிர இதிலே அரசியல் இல்லை, அரசியல் பின்னணியும் கிடையாது'' என்று அன்றைக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்:





அதற்குப்பிறகும், இப்படிப்பட்ட சாதிக் கலவரங்கள் அண்ணா துரையின் ஆட்சியிலேதான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, நாட்டிலே சட்டம் இல்லை, நாட்டிலே ஒழுங்கு இல்லை, நாட்டிலே நீதி பரிபாலனம் சரியாகக் கவனிக்கப்படவில்லை, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களே, சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது, இராஜினாமா செய்யுங்கள் என்ற இப்படிப்பட்ட குரல் எதிரொலித்துக் கொண்டிருந்தது. 1967-ஆம் ஆண்டிலும் இப்படி எதிரொலித்துக் கொண்டிருந்தது என்பதைத்தான் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10.40)

அன்றைக்கிருந்த எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள் ஒரு நிமிட நேரம் கூட அண்ணா அவர்கள் இனி ஆளக் கூடாது, அவரை ஆள விடக் கூடாது, ஒரு நிமிட நேரம் கூட அண்ணா அவர்களை இனி உட்கார வைக்கக் கூடாது, என்று. அதை நிச்சயமாக மறக்கக் கூடாது.

அன்றைக்கிருந்த காங்கிரஸ் கட்சியினர் சென்னையிலே ஊர்வலத்தை நடத்தி, பொதுக்கூட்டம் நடத்த முன் வந்த பொழுது, அந்த ஊர்வலம் அண்ணாசாலையில் அப்பொழுது முரசொலி அலுவலகம் இருந்த கட்டிடம் பக்கமாக போனது. அப்பொழுது அங்கே இருக்கிற காலிகள் எல்லாம் சோடா பாட்டில்கள் வீசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகக் குண்டர்கள் பாய்ந்தார்கள், அடித்தார்கள், என்று அடிபட்டவர்களை மேடையிலே ஏற்றிப் பொதுமக்களுக்குக் காண்பித்து, ஆகவே, இனி இந்த ஆட்சி இருக்கக் கூடாது என்று அன்றைக்கு வாதிட்டார்கள் என்பதை நான் இன்றைக்கு கவனத்திலே வைத்துக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

ஆகவே, ஒலி ஒன்றுதான். அந்த ஒலி இன்றைக்கும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அன்றைய கோஷம்தான் இன்றைக்குத் தொடர் கதையாக இருந்து கொண்டிருக்கிறது. அண்ணா அவர்கள் மிக அழகாக 'ஹிஸ்ட்ரி ரிபிட்ஸ் இட்செல்ப்' என்ற வார்த்தைகளை அடிக்கடி சொல்வார்கள். அந்தக் கதைதான் இங்கே நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். சரித்திரம் தன்னைத்தானே திருப்பிக் கொண்டிருக்கிறது, அவ்வளவுதான்.

பட்டப் பகலில், பஸ்ஸில், தொழிற்சங்கத் தலைவர், மார்க்சிஸ்ட் சித்தாந்தங்களை ஊருக்கும் உலகத்திற்கும் எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிற சிந்தனையாளர் வி.பி. சிந்தன் படுகொலைக்கு ஆளாக்கப்படுகிற கொலை முயற்சிக்கு ஆளாக்கப் படுகிறார். மார்க்சிஸ்ட் சித்தாந்தங்களைப் பரப்பும் அந்த சிந்தன் அடிபட்டு கத்தியாலே குத்தப்படுகிறார். நூல் அளவு தவறி, அது அவர் மீது முழுமையாகப் பாய்ந்திருக்குமானால்,

அந்தச் சிந்தனையாளர் சிந்தனைப் பார்த்திருக்க முடியாது. அவரது சிந்தனைகளைத்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நாட்டிற்கும் உலகத்திற்கும் எடுத்துக் காட்டியிருக்க முடியும். ஆனால், அந்தச் சிந்தனைக் கொலை செய்ய முயன்றவர்கள் யார், குத்தியவர்கள் யார், அதன் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்று அறிகின்ற வகையில் அன்றைக்கிருந்த அரசாங்கம், அன்றைக் கிருந்த போலீசார் யார் மீதாவது வழக்கு போட்டிருக்கிறதா? யாரையாவது யாரையாவது கைது செய்திருக்கிறதா ? யாரையாவது நீதி மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறதா என்பதை நான் இன்றைக்கு எதிர்க்கட்சியிலே பிரதானமாக இருப்பவர்களைக் கேட்கிறேன். அன்றைக்கு என்ன சட்டம் தலைநிமிர்ந்து கொண்டிருந்ததா? அன்றைக்கு சட்டம் - ஒழுங்கு நிமிர்ந்து நின்றதா? இன்றைக்குக் கூப்பாடு போடுகிறவர்களுக்கு அன்றைக்கு அது சுட்டிக்காட்டப்படவில்லையா?

நான் இன்னொன்றையும் இந்த நேரத்திலே சொல்வது தவறாக இருக்க முடியாது என்று கருதுகிறேன். நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய முருகையன் அவர்கள் படுகொலை செய்யப்படுகிறார், இரத்தக் கண்ணீர் வடிக்கிறோம். புரட்சித் தலைவர் கோவையிலே இருந்தவர், இக்கொலையைப் பற்றிக் கேள்விப்பட்டவுடன், ஓடோடி மன்னார்குடிக்குப் போகிறார். அங்கே இறுதி ஊர்வலத்திலே கலந்துகொள்கிறார். யார் இந்தக் கொலையைச் செய்திருந்தாலும் அவரைக் கண்டு பிடிப்பதுதான் என்னுடைய தலையாய பணி என்ற உறுதியினை அங்கே தந்திருக்கிறார்.

நான் கடந்த காலத்தை நினைவுபடுத்துவது இந்தச் சபைக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு அந்த உணர்ச்சியோடு ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். 1974 ஆம் ஆண்டு விமான விபத்து ஒன்று ஏற்படுகிறது. விமானத்தில் சென்று கொண்டிருந்தவர்களில் ஒருவரான மோகன் குமாரமங்கலம் இறக்கிறார். இன்னொருவர் ஈரேழு பதினான்கு ஆண்டுகள் சிறைக்கூடத்திலிருந்துவிட்டு வெளியே வந்தவர், தியாகத்தின் மறுவடிவம் என்று பொதுவுடைமைதிக வாதிகளால், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களால் பாராட்டுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிற தோழர் பாலதண்டாயுதம் இறக்கிறார். எதிர்பாராத விபத்து நடக்கிறது. அவர்களுடைய சாம்பல் கூட கிடைக்கவில்லை. ஊரே அழுது கொண்டிருக்கிறது. உலகமே உருகிக் கொண்டிருக்கிறது. நல்ல உணர்வு படைத்தவர்கள் அத்தனை பேரும் தங்களுடைய ரத்தக் கண்ணீரை வடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இங்கே ஒருவருக்கு பிறந்தநாள் விழா கொண்டாடப் படுகிறது. இதே சட்டமன்றத்தில் சீனிவாசன் கேட்கிறார். ஊரே அழுது கொண்டிருக்கிறது, பொதுவுடைமைச் சிந்தனையாளர் மோகன் குமாரமங்கலம் அவர்களும் பாலதண்டாயுதம்



அவர்களும் மறைந்து விட்டனர். சிறையிலே வாடிய பாலதண்டாயுதம் வெளியே வந்து நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். அவரும் அகால மரணத்திற்கு ஆளாகிவிட்டார். விபத்திற்கு பலியாகிவிட்டார். இந்த நேரத்திலே பிறந்த நாள் விழா தேவையா என்று கேட்கிறார். நான் கேட்கவில்லை. அன்றைக்கு சீனிவாசன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இன்றைக்குப் பிரதான எதிர்க்கட்சியின் தலைவராக இருப்பவரைப் பார்த்து, அன்றையதினம் இந்தச் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியிலே இருந்த சீனிவாசன் கேட்கிறார். அதற்கு இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர் அப்பொழுது என்ன சொன்னார் தெரியுமா? நேரு பெருமகனார், ஆசியாவின் ஜோதி, பண்டித நேரு அவர்கள் மறைந்தபோது காமராஜர் அவர்கள் பிறந்த நாள் விழா கொண்டாடவில்லையா? நான் கொண்டாடக்கூடாதா என்று இவர் கேட்டிருப்பதை அன்றைக்கு சீனிவாசன் சுட்டிக்காட்டியிருக்கிறார். நான் இன்றைக்கு மாமன்றத்திலேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து கேட்கிற கேள்வியெல்லாம், இப்பொழுது காட்டுகிற மனிதாபிமானம் அன்றைக்கு எங்கே போயிற்று? முருகையனுக்காக இப்போது வடிக்கிற கண்ணீரில் ஒரு சொட்டு கண்ணீரை பாலனுக்காக விட்டிருக்கக் கூடாதா?

அன்றைக்கு அந்த மனிதாபிமானம் எங்கே போயிற்று ? திடீரென்று இறக்கைகள் முளைத்து எங்கேயோ பறந்தோடிப் போய் விட்டனவா ? உணர்வுகள் அற்றுப் போய்விட்டனவா என்பதைத்தான் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் உமாநாத் அவர்கள் வீடு தாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அப்படிப்பட்ட அராஜகச் சக்திகள் இந்த நாட்டில் வேரூன்றக் கூடாது என்பதற்காக முதல் கொடி பிடிப்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான். அதை நாங்கள் மறுக்கவில்லை. இன்றைக்குப் பிரதான எதிர்கட்சித் தலைவர் சுற்றுப்பயணம் செய்தபோது உளி பாய்ந்ததாகச் சொன்னார்கள். அங்கு உளி பாய்ந்ததோ அல்லது புலி பாய்ந்ததோ எங்களுக்குத் தெரியாது.

<u>திரு. க. அன்பழகன் :</u> தலைவர் அவர்களே, எதிர்கட்சித் தலைவர் மீது உளி பாய்ந்ததோ, புலி பாய்ந்ததோ எங்களுக்குத் தெரியாது என்று மாண்புமிகு உறுப்பினர், ஆளுங்கட்சிச் சார்பில் ஆணித்தரமாகப் பேசுகிறவர் அந்தக் கருத்துக்களோடு பேசுகிறார். உளி மேலே பட்டால்தான் ஒப்புக்கொள்வார்களா அந்த அளவுக்கு முடிவிற்கு வந்து விட்டார்களா என்று இந்த அவைக்கு அவர்கள் தெரிவிக்கவேண்டும்.

<u>திரு. ஆர். மணிமாறன் :</u> தலைவர் அவர்களே, நாங்கள் பத்திரிகையிலே பார்த்துத்தான் புரிந்து கொண்டோம். நேரடியாகப் பார்க்கிற வாய்ப்பில்லை. ஆனாலும் கூட இந்தச் சூழ்நிலையைத் திட்டம் இட்டு யார் செய்திருந்தாலும் இதற்குக்

கண்டனத்தைக் காட்டுகிற முதல் கட்சி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதைப் பணிவோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டனவாக இருக்கிறேன். ஆகவே இந்தச் சூழ்நிலையில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் கடமை, பொறுப்புணர்ச்சி முறையிலேதான் எடுத்து வைக்கிறேனே தவிர வேறு காரணத்தினால் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, எதிர்கட்சித் தலைவர் மீது உளி வீசியது திட்டமிட்டுச் செய்ததாக ..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. உங்கள் கட்சித் துணைத் தலைவர் கேட்டுவிட்டார்.

திரு. துரை முருகன் ; துணைத் தலைவர் அவர்களே, பர்மிஷன் தருவதும் தராததும் உங்கள் பொறுப்பு. நாங்கள் அதை எதிர்க்கவில்லை. ஆனால் அதை எதிர்க் கட்சியிலே இருக்கின்ற தலைவர்கள்தான் கேட்கவேண்டும், மற்றவர்கள் கேட்கக் கூடாது என்று சொல்வது தவறு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் அப்படிச் சொல்லவில்லை. அவர் பேசிய பிறகு மறுபடியும் அதைப்பற்றிப் பேசவேண்டிய அவசியம் இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : திரு. மணிமாறன் அவர்கள் சொன்னதை வரவேற்கிறேன். திட்டமிட்டு கலைஞர் மீது உளி வீசப்பட்டதைக் கண்டித்து வருத்தம் தெரிவிக்கிறேன் என்று ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் சொன்னார். இன்றைக்கு இன்வெஸ்டிகேஷன் டிப்பார்ட்மென்டை கையிலே வைத்திருக்கக்கூடிய முதல் அமைச்சர் அவர்கள், உத்திரப்பிரதேச மாநில முதல்வர் கத்தியால் குத்தப்பட்டதற்கு வருத்தம் தெரிவித்த அவர்கள், கலைஞர் தாக்கப்பட்டதைப் பற்றி வருத்தம் தெரிவிக்கவில்லை. எனவே உறுப்பினர் அவர்கள் முரண்பட்ட கருத்தைச் சொல்லுகிறார்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; தயவு செய்து உட்காருங்கள். திட்டமிட்ட சதியாக இருந்தால் வருத்தம் தெரிவிக்கிறேன் என்று அவர் சொல்லவில்லை. அது எப்படி நடந்திருந்தாலும் வருத்தம் தெரிவிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்.





திரு. ஆர். மணிமாறன் : துணைத் தலைவர் அவர்களே முரண்பட்ட கருத்துக்களின் மொத்த உருவங்கள் நாங்கள் அல்ல; அப்படிப்பட்ட நிலையில் இருக்கவேண்டும் என்கின்ற நிலையில் எங்கள் இயக்கம் கிடையாது. வன்முறையை வளரவிடக்கூடாது, வன்முறை நாட்டிலே பிரவேசிக்கக் கூடாது என்பதிலே ஆழ்ந்த கவனத்தோடு ஈடுபட்டிருப்பவர்தான் எங்களுடைய—நம்முடைய முதல் அமைச்சர், புரட்சித் தலைவர் என்பதைப் பணிவோடு சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுங்கட்சிக்காரர்கள் தலையீடு அதிகமாக இருக்கிறது என்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால் ஒன்றை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிர்வாகத் தலையீடுகளின் சிருஷ்டி கர்த்தாக்களே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்பதை நான் இந்த இடத்திலே சொல்வது தவறாக இருக்காது என்று கருதுகிறேன். அவர்கள் தலையீடு செய்ததை அடுக்கடுக்காக, படிப்படியாகப் புள்ளி விவரத்தோடு என்னாலே சொல்லமுடியும். இருந்தாலும் ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 10.50)

திருப்பூர் நகரத்தில் ராஜமாணிக்கம் என்ற கான்ஸ்டேபிள், அவரோடு இன்னொரு கான்ஸ்டேபிள். அவர்களின் மீது பொய்யான குற்றச்சாட்டு சொல்லி அன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவர், ஒரு நகரத்தின் செயலாளர் கொடுத்த புகாரின் அடிப்படையில் எந்தவிதமான என்கொயரியும் வைக்காமல், எந்தவிதமான விசாரணையும் நடத்தாமல், கூப்பிட்டுக் கூட கேட்காமல், அவரைப் பதவியில் இருந்து டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள் அன்றைக்கு ஆட்சியில் இருந்தவர்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த போலீஸ்காரரின் எண். 1286. 25 ஆண்டுகாலமாக அவர் போலீஸ் வேலை பார்த்துக்கொண்டு இருந்தவர். அவர் மீது பொய்யான குற்றச்சாட்டை சுமத்தி, எந்தவிதமான விசாரணையும் வைக்காமல் அன்றிருந்த தி. மு. க. அரசு அவரைப் பதவியில் இருந்து நீக்கியதால், அந்தப் போலீஸ்காரருக்கு வேறு வேலை எதுவும் கிடைக்காத காரணத்தால் பஞ்சம், பட்டினி, பசி, வறுமை இவற்றின் கோரப்பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காக தற்கொலை செய்து கொண்டு இருக்கிறார். அவர் கடைசியாக தன் மனைவியிடத்தில் ஒரு குறிப்பு எழுதிக்கொடுத்துவிட்டுச் சென்று இருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள இன்னார், இன்ன நபரால் நான் பழிவாங்கப்பட்டேன், என் சாவிற்கு அவர்தான் காரணம் என்று எழுதிக்கொடுத்துவிட்டுச் சென்றிருக்கிறார். இன்னொரு போலீஸ்காரர் ராஜமாணிக்கம் அவர் சர்க்காருக்கு அப்பீல் செய்து இருக்கிறார். என்மீது குற்றம் சுமத்தியது குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டது எல்லாம் அன்றைய தினம் இருந்த ஆளும்

[திரு. திருப்பூர் ஆர். மணிமாறன்] [1979 பிப்ரவரி 16

கட்சியைச் சார்ந்தவர்களால் பொய்யாக ஜோடிக்கப்பட்டு, என்னை பழி வாங்கிவிட்டார்கள் என்றுச் சுட்டிகாட்டியிருக்கிறார். அவர் கூறியிருப்பதாவது :

'R. Murugesan, was the town D. M. K. party Secretary and he was wielding very high influence with Government officials, public and in the Government in the Ministry level. By virtue of his political influence and close contacts with ministers the said Murugesan was dictating terms to local police officers and they were dancing to his tune.'

வெகு ஆணித்தரமாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் போலீஸ்காரருக்கு 6 குழந்தைகள். அதுதான் சொத்து அவருக்கு. அந்த 6 குழந்தைகளையும் கிணற்றில் போட்டுவிட்டு தானும் தற்கொலை செய்து கொள்ளக்கூடிய நிலையில் இருக்கிறார். அவர் முதலமைச்சருக்கு அப்பீல் செய்து இருக்கிறார். என்னிடத்திலும் ஒரு மகஜர் தந்து இருக்கிறார். ஆகவே, நாங்கள் நிர்வாகத்தில் தலையிடுகிறோம் என்று சொல்பவர்களைப் பார்த்து நான் கேட்கிறேன், உங்கள் ஆட்சிகாலத்தில் செய்யப்பட்ட இவைகள் நிர்வாகத் தலையீடுகள் இல்லையா என்று நான் கேட்டால், அவர்கள் காலத்தில் இருந்தது உங்கள் காலத்திலும் இருக்க வேண்டுமா என்று பெரியவர் அவசரப்பட்டு எழுந்து கேட்டு விடுவார். வயதானாலே ஆத்திரம் அதிகம் வரும். நம[illegible] பெரியவருக்கு அது அதிகத்திலும் அதிகம். ஆனாலும் நா[illegible] தெரிவித்துக்கொள்வேன், அது எங்கள் கருத்து அல்ல, அது எங்கள் முறை அல்ல, அது எங்களுடைய மரபு இல்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட நிர்வாகத் தலையீடு, நிர்வாகத்தில் குறுக்கீடு, ஆங்காங்கே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்று இருக்கின்றன. இந்தப் போலீஸ்காரரைப் பற்றி நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் அவர் ஒரு சாதாரண அரிசன். ஏழை. ஒரு குடிசையில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார். அவருக்கு இப்படிப்பட்ட அநீதி இழைக்கப்பட்டு இருக்கிறது.

இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்வேன். புரட்சித் தலைவர் மீதும், கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே. ஏ. கே. அவர்கள் மீதும் ஒரு மான-நஷ்ட வழக்கு திருப்பூர் நகரில்— புரட்சித் தலைவர் பேசாத ஒன்றை பேசியதாகச் சொல்லி ஒரு விசித்திரமான வழக்கைப் போட்டார்கள்.

<u>திரு. துரை முருகன் :</u> தலைவரவர்களே, திருப்பூர் நகரில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் முருகேசன் தான் ஏதோ தன்னுடைய ஆளும் கட்சியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி செய்தார் என்று யாரோ ஒருவர் எழுதியதாக உள்ளதை இங்கே படித்துக் காட்டினார்கள். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நான் பேசுகிறபோது சொன்னார். இந்த சபையில் இல்லாதவரை நடிகையைப்பற்றி நாம் குறிப்பிட்டு அவர் மனதைப் புண்படுத்தவேண்டாம், காரணம் அவர் இங்கே அதற்கு மறுப்பு தெரிவித்துப் பேசுவதற்கு வாய்ப்ப இல்லை என்று சொன்னார்கள். நான், ஏன் புண்படுத்தப் போகிறேன் அவரே புண்பட்டுதான் அமெரிக்கா போனார். அதேபோல் இங்கே முருகேசன் இல்லை. அவர் பெயர் இங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. நம்முடைய நிதி அமைச்சர் வாதப்படி அவர் மனதை இது புண்படுத்தாதா, இரண்டாவதாக, யாரோ ஒருவர் எழுதிய கடிதத்தை இங்கே படித்தார்கள், அப்படிப் படிப்பது என்று சொன்னால் எங்களுக்கும் ஆயிரம் கடிதங்கள் வருகின்றன, இன்ன எம் எல். ஏ. இதைச் செய்தார், இப்படி செய்தார் என்று வருகிறது. அதையெல்லாம் சபையில் படிக்க தாங்கள் அனுமதிப்பீர்களா?



1979 பிப்ரவரி 16] [திரு. துரை முருகன்]

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> வெளியே இருக்கிற ஒருவர் எழுய கடிதங்களையோ அல்லது பத்திரிக்கையில் வந்த செய்திகளையோ அல்லது கடிதங்களையோ அவையில் படிப்பதற்குமுன் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்ற பிறகு தான் அதைப் படிக்கவோ அல்லது அதில் உள்ள தகவல்களையோ கருத்துக்களையோ சொல்லலாம்.

<u>திரு. திருப்பூர் ஆர். மணிமாறன் :</u> நான் படிக்கவில்லை. அந்த கடிதத்தில் உள்ள கருத்தின் குறிப்பைத்தான் எடுத்துச் சொன்னேன்.

<u>திரு. துரை முருகன் :</u> அப்படிப் படிப்பதோ அல்லது அக்கருத்தை மனப்பாடம் செய்து கொண்டு வந்து சொல்வதோ, இரண்டும் தவறுதான்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> நானும் அதைத் தான் முன்பு சொன்னேன்.

<u>திரு. ஆர். மணிமாறன் :</u> வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சென்னையிலிருந்து ஒரு 'ஃபோன்' வருகிறது. அங்கே இருக்கிற மாஜிஸ்ட்ரேட்டிடம் பேசவேண்டுமென்று போனில் கூறப்படுகிறது. மாஜிஸ்ட்ரேட் பேசுகிறார். அதிகாரி பேசிவிட்டு வருகிறார். அதற்குப் பின்னால் விசாரணை நடக்கிறது. புரட்சித் தலைவரவர்கள் சென்னைக்கு வருகிறார்கள். தீர்ப்பு எழுதப்படுகிறது. தீர்ப்பு எழுதப்பட்ட பின்னால், இரண்டு மூன்று நாளில் அவருக்கு அங்கேயிருந்து அந்த நீதிபதிக்கு திடீரென்று பறக்கிற சக்தி வருகிறது. திடீரென்று அவருக்கு பறக்கும் சக்தி வந்துவிடுகிறது. நாகர்கோவிலுக்குப் பயணமாகிறார்: அங்கிருந்து உடுமலைப்பேட்டைக்கு வருகிறார். இப்படிப் பட்ட சூழ்நிலைகளெல்லாம் அப்போது ஏற்பட்டிருக்கின்றன.......

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, முடிந்து போன வழக்கைப்பற்றிப் பேசியிருக்கிறார். நீதிபதியை குற்றஞ் சாட்டியிருக்கிறார். அது அவ்வளவு பொருத்தமுடையாக இல்லை. அவர்களுக்கு இன்னொரு விவரத்தையும் சொல்கிறேன். அந்த நீதி பதிதான் எம். ஜி. ஆர் அவர்களுடன் நீதி மன்றத்திலேயே போட்டோ எடுத்துக் கொண்டார்: அது அவர்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : நீதிமன்றத்தில் வைத்து போட்டோ எடுத்துக் கொள்வது தவறுதான்.

திரு. துரை முருகன்: அதைப்போல போன் போவதும் தவறு.

திரு. ஆர். மணிமாறன் : நீதிமன்றத்திலே போட்டோ எடுத்துக் கொண்டார் என்பதை உங்களால் நிரூபிக்க முடியுமா ?

திரு. துரை முருகன் : போன் போவதை உங்களால் நிரூபிக்க முடியுமா ?

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் இப்படி ஒருவருக்கொருவர் நேரடியாகப் பேசக்கூடாது.

திரு. க. சுப்பு : சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். ஒரு தீர்ப்பு சம்பந்தமாக திரு மணிமாறன் அவர்கள் இங்கே பேசுகிறார்கள். அது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் துரைசாமி அவர்கள் இன்றைய முதலமைச்சர்மீது தொடுத்த மான நஷ்ட வழக்கு. எம். ஜி. ஆர். அவர்கள் அங்கே ஒரு பொதுக் கூட்டத்தில் துரைசாமி லஞ்சம் வாங்கினார் என்று பேசினார், அதனால் அவர்மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. பின்னர், இன்றைய முதலமைச்சர் கோர்ட்டுக்குப் போய் நான் அப்படிப் பேசவில்லை என்று எழுதிக்கொடுத்தார். அதனால் அவர் விடுதலை செய்யப் பட்டார். அப்படி இருக்கும்போது நீதிபதிமீதும் நீதிமன்றங்கள் மீதும் களங்கம் கற்பிப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, உறுப்பினர் சுப்பு அவர்கள் இங்கே கூறும்போது அந்த வழக்கினுடைய உண்மையை சரியாகப் புரிந்துகொள்ளாமல் அல்லது மறந்துவிட்டுப் பேசியிருக்கிறார்கள். முன்னாள் முதலமைச்சர் என்று இல்லாத ஒரு வழக்கைச் சொல்கிறார்கள்.

திரு. க. சுப்பு : நான் முன்னாள் முதலமைச்சர் என்று சொல்லவில்லை: இன்றைய முதலமைச்சர் என்றுதான் சொன்னேன்.



திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, நண்பர் சுப்பு அவர்கள் அப்படிச் சொல்லவில்லை: இன்றைய முதலமைச்சர், அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது திருப்பூருக்குச் சென்றார். திருப்பூர் எம்.எல்.ஏ. துரைசாமி லஞ்சம் வாங்கினார் என்று பொதுக் கூட்டத்தில் பேசினார். அவர் எம்.ஜி.ஆர். மீது—முதலமைச்சர் என்று சொன்னால் குழப்பம் வருகிறது, அதனால் எம்.ஜி.ஆர். என்று குறிப்பிடுகிறேன்—வழக்குத் தொடர்ந்தார். நான் இந்த எம்.எல்.ஏ. பற்றிச் சொல்லவில்லை என்று எம்.ஜி.ஆர், கோர்ட்டிலே சொன்னார், வழக்குத் தள்ளப்பட்டது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ; தலைவரவர்களே, சுப்பு அவர்களுக்கு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் சொல்லியதை நான் திருத்த வேண்டியிருக்கிறது, துரைசாமி லஞ்சம் வாங்கினார் என்று நான் பேசவில்லை. அது அங்கே தெளிவாக்கப்பட்டிருக்கிறது. எனக்குக் கொடுக்கப்பட்ட குறிப்பிலே அப்படி இருந்தது. அதைப் படித்துப்பார்த்தால் தெரியும். நேரம் கிடைக்கும்போது நானும் படிக்கிறேன், நீங்களும் படித்துப்பாருங்கள்,

திரு. மு. கருணாநிதி : திருப்பூர் கூட்டத்தில் கையிலே ஒரு தாளை வைத்துக்கொண்டு இந்த ஊர் எம்.எல்.ஏ. லஞ்சம் வாங்கினார் என்று கூறியதாக வழக்கு.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தயவுசெய்து அந்த வழக்கின் விவரங்களை வாய்ப்புக் கிடைக்கும்போது படித்துப்பார்த்தால் நல்லது. நானும் படிக்கிறேன். நீங்களும் படித்துப்பாருங்கள்.

திரு. க. சுப்பு : அதனால் அதைப்பற்றி இப்போது பேசுவது நல்லதல்ல. (மணியடிக்கப்பட்டது) நான் ஒழுங்குப்பிரச்சனை எழுப்பியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய ஒழுங்குப் பிரச்சனையைப் புரிந்துகொண்டேன், நேரம் இல்லை. தயவு செய்து உட்காருங்கள்.

திரு. க. சுப்பு : ஏற்கனவே நடைபெற்ற ஒரு வழக்கைப் பற்றியும், நீதிபதியைப் பற்றியும் சொன்னார். ஒரு தீர்ப்பு வந்த பிறகு அந்த வழக்கைப்பற்றி அவதூறாக இங்கே பேசுவது இடம் பெறக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். இடம் பெறலாம் என்று சொன்னால் இருக்கட்டும்: நாளை ஒரு உரிமைப்பிரச்சனை கொண்டுவர வாய்ப்பாக இருக்கும்.

திரு. ஆர். மணிமாறன் : இங்கே பேசுகின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் எல்லாவற்றிற்கும் ஆதாரத்தை கையிலே வைத்துக்கொண்டுதான், சாட்சிகளை கையிலே வைத்துக்கொண்டு

தான் பேசியிருக்கிறார்கள் என்ற உண்மையை நான் இப்போது தான் புரிந்துகொண்டேன். அதோடு ஆதாரங்களையும், சாட்சியங்களையும், எடுத்துக்காட்டுக்களையும் அவைத் தலைவரிடம் காட்டிவிட்டுத்தான் பேசுகிறார்கள் என்பது மட்டும் நிச்சயமாகப் புரிகிறது என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

நான் இவைகளை எல்லாம் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நிர்வாகத்திலே தலையிடுகிறார்கள், எல்லா இடங்களிலும் நிர்வாகத்திலே குறுக்கிடுகிறார்கள் என்று எதிர்க்கட்சிக்காரர்கள் எங்கு பார்த்தாலும் அள்ளித் தெளித்த கோலத்தை வைத்துக்கொண்டு அதை அழகுப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே குறிப்பிட்டுக் காட்ட முனைந்தேன்.

(முற்பகல் 11·00)

தலைவரவர்களே, குறுக்கீட்டில் நேரத்தை நிறைய எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எனக்கு நீங்கள் சற்று அதிகமாக நேரம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளும் கட்சியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக்கொண்டு 18 மாத காலம் ஆகிறது. இந்தக் கால கட்டத்திலே திருப்பூர் நகரத்திலே 58 அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர்கள் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. ஆளும் கட்சி ஒருதலைப்பட்சமாக நடந்துகொண்டிருக்கிறது, ஒருதலைப்பட்சமாக நடந்து கொண்டிருக்கிறது என்று திரும்பத் திரும்பப் பேசுகிறார்களே, இந்த 58 பேர் மீதும் கிட்டத்தட்ட 8-க்கு மேற்பட்ட வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன, இது என்ன நிர்வாகத்திலே தலையீடா? எதிர்க்கட்சிக்காரர்கள் கொடுத்திருந்த புகார்களை வைத்துக்கொண்டு எங்களது தோழர்கள் 58 பேர்களை கைது செய்திருக்கிறார்கள். இன்றைக்கும் அந்தத் தோழர்கள் நீதிமன்றத்தின் படிக்கட்டுகளை எண்ணிக்கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது என்பதை என்னால் மிகக் கம்பீரமாகச் சொல்லிக் காட்டாமல் இருக்க முடியாது. ஒருதலைப் பட்சமாக ஆளும் கட்சி நடந்திருக்குமேயானால் இந்த வழக்குகள் போடப்பட்டிருக்குமா என்று நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன். ஆகவே யாராக இருந்தாலும் சீரான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்ற நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த காலத்திலே, அதாவது 1971 ஆம் ஆண்டு முன்னாள் எம்.எல். ஏ., கே. வி. கந்தசாமி அவர்கள் மீது நூற்றுக்கு மேற்பட்ட வழக்குகள் போடப்பட்டன. 1971-லே இருந்து 1978 வரை நூற்றுக்கு மேற்பட்ட வழக்குகள், அவருடைய



மகன் மீது வழக்கு போடப்பட்டது. வயது வந்த அவரது மகள் பருவ மங்கை. அந்தப் பெண்ணின் மீதும் வழக்கு போடப்பட்டிருக்கிறது. அவருடைய மனைவி மீது வழக்கு போடப்பட்டது. தியேட்டர் மீது கல்லெறிந்தார் என்று வழக்கு போடப்பட்டது. இதனுடைய உண்மை நிலை என்ன என்பது ஊருக்குத் தெரியாதா? இதன் பின்னணி மக்களுக்குத் தெரியாதா? இப்படிப்பட்ட சூழ்நிலைகளை எல்லாம் நான் இந்த மன்றத்திலே எடுத்து வைப்பது தவறாக இருக்க முடியாது என்று கருதுகிறேன். ஆகவே சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது என்று பேசுகின்ற நம்முடைய மாண்புமிகு மரியாதைக்குரிய எதிர்க்கட்சிக்காரர்கள், அதிலும் பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களது முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளட்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல வன்முறைக்கு வித்திடும்படியான வார்த்தைகள், வேகத்தை வெறியை ஊட்டும்படியான பேச்சுக்கள், உணர்ச்சியைத் தூண்டிக் கொந்தளிப்பை உருவாகும்படியான எழுத்துக்கள் ஆகியவை தான் இப்போது நடமாடிக்கொண்டிருக்கின்றன. இப்படிப் பட்டவர்கள் தமிழகத்தினுடைய வீதிகளிலே வந்துகொண்டிருக்கிறார்கள் என்று நான் இந்த மன்றத்திலே சொல்லிக் கொள்கிறேன். இதற்கு நான் ஒன்றிரண்டு உதாரணங்களை மாத்திரம் இங்கே தருவது தவறாக இருக்க முடியாது என்று கருதுகிறேன்.

12.11.77 அன்று முரசொலி பத்திரிகையிலே, சில நேரங்களில் வன்முறை தவிர்க்கப்பட முடியாததாகிவிடுகிறது என்று எழுதப்பட்டிருக்கிறது. அடுத்து இன்னொரு குறிப்பையும் காட்டுகிறார்கள். எங்களுடைய தலைவரை கைது செய்தால் புகை வண்டி புகைந்து போகும், போகின்ற ஊர்திகள் நொறுங்கும், பொதுக்கூட்டம் கலையும், செல்கின்ற வழியெல்லாம் மாறும். மூப்பனார்கள் தலை தப்பி வந்தால் வந்த வரை லாபம் என்று எழுதினார்கள். இது எந்தப் பத்திரிகையிலே வந்தது? முரசொலி பத்திரிகையிலே வந்தது. அண்ணா பத்திரிகையிலா வந்தது? அல்லது தென்னகம் பத்திரிக்கையில் வந்ததா? மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஏடான முரசொலியில் தானே வந்திருக்கிறது.

அடுத்து, இன்னொரு உதாரணம். 13.11.77 அன்று அதே பத்திரிகையில் எழுதுகிறார்கள். "தொடரட்டும் தொடரட்டும் அறப்போராட்டம், தொன்னையுள்ளம் கொண்டவனின் மகுடந் தன்னை இடரட்டும் நம் கால்கள் என்றும் அலரட்டும் அவன் சர்க்கார்" இங்கேதான் தமிழ்ப்பண்பாடு தலைவிரித்தாடுகிறது. ஏடா வரிசையில் மதிப்பு மரியாதைகள் கொடிகட்டிப் பறக்கின்றன. வெளியே பேசுகிறார்கள் இந்த ஆட்சி இருக்க வேண்டும் என்று; 10 ஆண்டுகாலத்திற்கு அவரே முதலமைச்சராக இருக்க வேண்டும் என்பதுதான். ஆகவே இடரட்டும் கால்கள் என்று மகுடம் கீழே கவிழ்க்கப்படும் என்று எழுதுகிறார்கள்.

அடுத்து இன்னொன்று, 24.11.77 அன்று முரசொலியிலே வந்திருக்கிறது. "அரசு நிலை குலையும் அளவுக்கு போர்க் களம் அமையவேண்டும்" என்று முரசொலியிலே வந்திருக்கிறது.

இது சட்டத்தைக் காப்பாற்றும் தாரக மந்திரமா? இது என்ன ஒழுங்கை நிலைநாட்டக்கூடிய ஔதடப் பெட்டகம் என்று கருதுகிறார்களா? அரசு நிலைத்திருக்க முடியாது என்று சொன்னார்கள். இது என்ன வன்முறையைத் தூண்டுவதாகாதா? இது என்ன ஒழுங்கைக் காப்பாற்றக் கூடியதா? உரத்த குரலில் அவர்கள் சொல்கிறார்கள். ஆர்ப்பாட்ட கோஷத்தைக் கிளப்பினார்கள். இதை உங்கள் பார்வைக்காக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தி. மு. க. வில் உள்ளவர்கள் அனைவரும் போர்க் குணம் படைத்தவர்கள். இது அதிலே ஒரு வரி தி.மு.க. வில் இருக்கிறவர்கள் அனைவரும் போர்க் குணம் படைத்தவர்கள் என்கிறார்கள். நமது எல்லையைப் பாதுகாக்க பாரத தேசத்தைப் பாதுகாக்க அது படு லாபம். போர்க்குணம் படைத்தவர்கள், போர்க்குணம் படைத்தவர்கள் என்றால் அது எந்தப் பொருளை அல்லது அர்த்தத்தைக் கூறுகிறது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விழைகிறேன். போர்க்குணம் என்றால் எந்த அர்த்தத்தில் எந்தத் தொனியில் அது கூறப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திற்கு விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பூதகி என்று வர்ணனை செய்து, பேய் என்று வர்ணனை செய்து, பிசாசு என்று வர்ணனை செய்து எழுதியது சட்டத்தை பாதுகாக்கவா? ஒழுங்கைப் பாதுகாக்கவா? நீதியைக் காப்பாற்றவா? என்பதை நான் பணிவன்போடு எதிர்கட்சியைச் சார்ந்த தலைவர்களையும், மற்ற உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பாலங்களுக்கு வெடி-வைப்பது நல்ல காரியமா? மரங்களைச் சாய்த்து சாலைகளில் போடுவது தீர்க்கமான தீர்மானமான கருத்துத்தானா? பொதுமக்கள் குடிக்கிற தண்ணீரில் பாலிடால தெளிப்பது மிகப் பெரிய தர்மமா, சத்திய சித்தாந்தமா? இதுதான் நடுநிலைமைக் கொள்கையை ஏற்றுக்கொண்டிருப்பது என்பதற்குப் பொருளா? அதுதான் அதனுடைய பிரதிபிம்பமா? கொஞ்சம் தயவு செய்து எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதேபோல் இங்கே பேசிய உறுப்பினர்கள் கூடச் சொன்னார்கள். தலைகள் உருளும், மண்டைகள் பிளக்கப்படும் என்று சொன்னார்கள். அதைவிட மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொன்னார்கள். ஹிட்லருக்கு ஏற்பட்ட கதி முசோலினிக்கு ஏற்பட்ட கதி இந்த நாட்டின் முதல் அமைச்சர் அவர்களுக்கும் ஆகும் என்று சொன்னார்கள். அவ்வளவு ஆக்கிரஷத்தோடு சொற்கள் இங்கு அலை பாய்ந்து வந்தன. ஹிட்லருக்கான கதி, முசோலினிக்கு ஆன கதி முதல் அமைச்சர் அவர்களுக்கும் ஆகும் என்று உரத்த குரலில் சொன்னார்கள். அவர்கள் இதே வார்த்தைகளை இந்தச் சட்டமன்றத்தில் சொன்னார்கள்.



முன்பு திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் வெளியே இப்படிப் பேசினார்கள் என்று அப்போது சுட்டிக்காட்டப்பட்டு, ஹிட்லருக்கான கதி, முசோலினிக்கு ஆன கதி இன்றிருக்கிற முதல் அமைச்சருக்கும் ஆகும் அன்று சொல்லிய நேரத்தில் கே.டி.கே. தங்கமணி அவர்கள் கைது செய்யப் பட்டார்கள், இப்படிப் பேசினார் என்றெல்லாம் அவர்கள் மீது பொய் வழக்கு புனையப்பட்டது. அன்று அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்கினார்கள். அப்படி இன்று திரு. லத்தீப் அவர்கள்மேல் செய்யப்படமாட்டாது. அந்த நம்பிக்கையை அவர்கள் வைத்துக் கொள்ளலாம், சர்வாதிகாரம், பாஸிஸ்ட் ஆட்சி இங்கே கோலோச்சிக் கொண்டிருக்கிறது, வெறி உணர்ச்சி கொண்ட வேங்கைகளாக நாங்கள் இன்று இங்கே காட்சி அளித்துக் கொண்டிருக்கிறோம் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இந்த நாட்டின் முதல் அமைச்சர் அவர்கள் சர்வாதிகாரி என்பதை ஒப்புக் கொள்கிறேன். அவர்கள் ஒரு சர்வாதிகாரியாகவே இருக்கட்டும். ஆனால் நான் ஒன்றை நான் மாமன்றத்திற்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். காந்தியடிகள் ஒரு காலத்தில் சொன்னார்கள். எனக்கு மட்டும் இந்த நாட்டின் சர்வாதிகாரியாக விளங்குவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தால் மதுவிலக்கை நான் தீவிரமாக அமல்படுத்துவேன் அதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டு வருவேன் என்று சொன்னார்கள்.

திரு. துரை முருகன் : * * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு துரை முருகன் அவர்கள் சொன்னது அனைத்தும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப் படுகின்றன.

(முற்பகல் 11.10)

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு காந்தியடிகள் சொன்னார், நான் ஒரு சர்வாதிகாரியாக இருக்கும் வாய்ப்புக் கிடைத்தால், மதுவிலக்கைத் தீவிரமாக அமல் நடத்துவேன் என்று அன்றைக்கு காந்தியடிகள் சொன்னார்கள். உதாரணமாக ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனது நேரத்தை அவர்கள் * * சபாநாயகர் அவர்கள் தான் என்னுடைய நேரத்தை காப்பாற்ற வேண்டும். துரை முருகன் அவர்கள் என்னுடைய நேரத்தை எடுத்துக் கொண்டார்கள்.

திரு. மு. கருணாநிதி : நேரத்தைப் பற்றிச் சொல்வதற்காக இதைக் கேட்கிறேன். அவர் பேச வேண்டாம் என்று சொல்லவில்லை. அவர் பேசுவதால் ஏதோ முக்கியமான விஷயங்களைச்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.

சொல்லப்போகிறார் என்று நினைந்து பயந்து கொண்டு இதை குறிப்பிடவில்லை. நீங்கள் அலுவல் ஆய்வுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளை மதிக்கப் போகிறீர்களா என்பது தான் தெரியவில்லை. இன்றைக்கு தலைவர் மட்டும் தான் பேசுவார்கள் என்று அன்றைக்கு உத்திரவாதம் அளித்தீர்கள். ஆனால் இன்றைக்கு இரண்டு தரப்பிலிருந்தும் சிலர் பேசிக்கொண்டிருக்கிறார்கள, இப்படி தலைவர்களுக்கு கொடுக்கப்பட்ட நேரத்தை எடுத்துக் கொள்வதாக இருந்தால், இதில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும் இதில் கலந்து கொள்வது குறித்து யோசிக்கவேண்டுமெனக் கோருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மன்னிக்கவேண்டும். அலுவல் ஆய்வுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவு, பேராசிரியர் பேசியதற்குப் பின்னால், உறுப்பினர்கள் யாரும் பேசக்கூடாது என்று முடிவு எடுக்கப்பட்டது, ஆளும் கட்சியைப் பொறுத்த அளவில் 126 எண்ணிக்கை கொண்டவர்களாக இருக்கிறார்கள். அந்த அளவில் தான் சிலர் பேசுகிறார்கள். அன்றைக்கு பேராசிரியர் கேட்டுக்கொண்டது, நான் பேசியதற்குப் பின்னால் வேறு யாராவது பேசுவதாக இருந்தால், நான் பேசுவதாக இல்லை, அவையில் இருப்பதாகவும் இல்லை என்று அன்றைக்குச் சொன்னார்கள், பேராசிரியர் பேசிய பிறகு யாரும் பேசப் போவதில்லை. முதலமைச்சர் அவர்களின் பதிலுரை தான் வரும்.

<u>திரு. துரை முருகன் :</u> மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனது நேரத்தை * * என்று சொன்னார்கள். அப்படி * * என்று சொல்வது சரிதானா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் சொன்ன அந்த வார்த்தையை நீக்கி விடும்படி உத்தரவிடுகிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் ஏதோ வேகமாகப் பேசினதாக சொன்னார்கள். நான் பேசும்போது வேகமாகத்தான் பேசுவேன். ஆனால் நான் சொன்னதை மாற்றித் திசை திருப்பிப் பேசக்கூடாது. நான் குறிப்பிட்டது' இந்த அமைச்சரவையை குறிப்பிட்டுத்தான் சொன்னேன். குறிப்பிட்டு ஒரு அமைச்சரைச் சொன்னதாக எனக்கு நினைவில்லை. ஒட்டு மொத்தமாக அமைச்சரவையைத்தான் சொன்னேன்.

<u>திரு. பி. முசிரிபுத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :</u> நீங்கள் முதலமைச்சர் என்று தான் குறிப்பிட்டுப் பேசினீர்கள். நாங்கள் கேட்டுக்கொண்டு இருந்தோம்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நீங்கள் முதலமைச்சர் என்று தான் சொன்னீர்கள் என்று நினைக்கிறேன். அந்தப் பிரச்னையை விட்டுவிடுங்கள்.

<u>திரு. எம். ஏ. லத்திப் :</u> அப்படியே கைது செய்வதாக இருந்தால், கைது செய்யுங்கள், தயாராக இருக்கிறேன் இதைச் சவாலாக எடுத்துக் கொள்ளுங்கள்....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இங்கு சவால் விடுவதற்கு நேரமில்லை. நீங்கள் சொன்னதை ஏதாவது மறுப்பதற்கு வேண்டுமானால், அதை சுட்டிக்காட்டுவதற்காக எழுந்திருக்கலாம், சவால் விடுவதற்கு இங்கு இடமில்லை....திரு. மணிமாறன்....

<u>திரு. ஆர். மணிமாறன் :</u> நான் கற்பனை செய்து கொண்டு எதுவும் பேசவில்லை, நேற்றைக்குத்தான் லத்திப் அவர்கள் பேசினார்கள்....

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> அப்படித்தான் என்றால், தைரியமிருந்தால் கைது செய்யுங்கள்..

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தலைவரின் அனுமதியில்லாமல் இப்படி அடிக்கடி எழுந்து நின்று நேருக்கு நேர் சவால் விட்டுப் பேசுவதற்கு இங்கு இடமில்லை.

<u>திரு. ஆர். மணிமாறன் :</u> நாங்கள் சவால் விட்டுப் பேசுவதில்லை. சவால் விட்டு இன்றைக்கு யார் யார் எப்படியெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இன்றைக்கு நாட்டு மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக அவர்கள் சொல்லாததை நான் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிக அதிகமாகத் தூற்றப்பட்டுக்கொண்டிருக்கிறார் என்பதை இந்த மாமன்றத்தில் என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. (திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் எழுந்திருந்தார்கள்....)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இப்படி நீங்கள் நினைத்தபோதெல்லாம் எழுந்திருந்து பேசக் கூடாது. முன்வரிசையில் இருப்பதற்குத் தகுந்தபடி எனக்கு ஒத்துழைப்புத் தாருங்கள்.

<u>திரு. ஆர். மணிமாறன்:</u> திரு. லத்தீப் மட்டும் மற்றவர்களைச் சொல்லலாம், ஆனால் நாங்கள் அவர்களைப்பற்றி சொல்லும் போது மட்டும் அவர்களுக்கு ஆத்திரம் ஏற்படுகிறது. இதை நாங்கள் அவர்களுக்கு சொல்லக்கூடிய நிலையில் இருக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனுபவ சாலிகள் நீங்கள் என்று எண்ணுகிறேன். எங்களுக்கு பாடம் சொல்லித்தாருங்கள். நாங்கள் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டிய நிலையை

நீங்கள் உருவாக்க வேண்டாம். ஆனாலும் கூட, இன்றைக்கு பல இடங்களிலே அம்மாதிரி அசம்பாவிதங்கள் நடைபெற்றிருக்கின்றன. பொதுக் கூட்டங்களிலே மிகவும் கேவலமாக முதலமைச்சர் அவர்களைப் பேசும் நிலையை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை என்னால் இங்கே சொல்லிக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. எங்களை நோக்கி இப்படி வரக்கூடிய சோதனைகளையெல்லாம், எங்கள் கழுத்திலே விழுந்த பூமாலைகளாக நாங்கள் அன்றும் தாங்கிக் கொண்டிருந்தோம்; இன்றும் தாங்கிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு எங்கள் கழுத்திலே விழுந்த, விழும் பூமாலைகள் எங்களுக்குப் போதையைத் தருவதில்லை. நாங்கள் புகழை மயங்க வைப்போம், புகழுக்கு மயங்க மாட்டோம். ஏனென்றால் புகழே உயிர்பெற்று புரட்சித் தலைவராக இங்கே அமர்ந்திருக்கிறார். அவர் எந்தப் புகழுக்கும் தயாராக இல்லை. எங்களது பயணப் பாதையிலே பல பேர்களுடைய உயிர்களை நாங்கள் பணயமாக வைத்திருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஒரு சாலிக்கிராமம்; ஒரு ஆவடி. இந்த ஆவடிக்கு கல்யாண சுந்தரம் அவர்களும், புரட்சித் தலைவர் அவர்கள் எதிர்க்கட்சியிலே தலைவராக இருந்த நேரத்தில் அன்று காரிலே போகின்றபோது, இந்த கார் எப்படியெல்லாம் சேதத்திற்கு ஆளானது என்பது நடந்த கதை; முடிந்த கதை. இந்த சாலிக்கிராமம் இதைக் கண்கூடாகக் கண்டு கொண்டிருந்தது. ஆவடியும் பார்த்துக் கொண்டிருக்கிறது. எனவே, எங்களுடைய பயணப் பாதை பல பேர்களுடைய உயிர்களைப் பணயமாக வைக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எங்களுடைய வீடுகள் எல்லாம் பலமுறை சூறையாடப்பட்டிருக்கின்றன. அப்போதெல்லாம் நாங்கள் கவலைப்படவில்லை. எங்கள் கட்சிக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு............

(திரு. து. இராசரத்தினம் எழுந்திருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது குறுக்கிட வேண்டாம்: உட்காருங்கள். பிறகு விளக்கம் தாருங்கள்.

திரு. ஆர். மணிமாறன்: தயவுசெய்து குறுக்கிட வேண்டாம். இன்று இந்த ஆர்ப்பாட்டங்கள் உங்கள் ஆட்சிக் காலத்தில் நடக்க வேண்டுமா என்று கேட்கிறீர்கள். பெரியவர் கூட கேட்டார்கள். ஆளும்கட்சி சட்டமன்ற உறுப்பினர் உக்கிர பாண்டியன் மீது எதிர்க்கட்சியினர் வழக்குக் கொடுத்திருக்கிறார்கள். அது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்படி ஆளும் கட்சியிலே உள்ள பல பேர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டு, நீதியை நிலைநாட்ட வேண்டுமென்பதற்காக நீதித் துறையினரும், காவல் துறையினரும் நடவடிக்கைகள் சட்டப்படி எடுத்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை நான் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொண்டு, என்னுடைய நன்றியை இந்த ஆளுநர் பேருரைக்குத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



திரு. து. இராசரத்தினம்: தலைவர் அவர்களே, ஆவடி என்னுடைய தொகுதி என்ற காரணத்தினாலே, உறுப்பினர் அவர்கள் ஆவடியைப் பற்றிச் சொல்கிறபோது முதலமைச்சர் அவர்களுடைய கார் தூளாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அங்கே இன்றைய முதலமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினரும் சென்றபோது, அவர்கள் சென்ற கார் நொறுக்கப்படவில்லை. அதை நான் மறுக்கிறேன். அதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசியமில்லை. பேரவைத் தலைவரே அதில் சம்பந்தப்பட்டவர். எனக்குத் தெரியும். எனவே, நீக்கவேண்டிய அவசியமில்லை.

திரு. து. இராசரத்தினம்: பேரவைத் தலைவர் அவர்களே, ... அவர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை எடுக்க வேண்டிய அவசியமில்லை. அங்கே நானும் பாதிக்கப்பட்டவன். அந்த விவரம் எனக்குத் தெரியும். தெரியாமல் இல்லை. உட்காருங்கள்.

திரு. து. இராசரத்தினம்: கார் நொறுக்கப்பட்டதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குத் தெரியும். அந்த உண்மைகளைப் பேசத் தயாராக இல்லை.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். 2, 3 அமைச்சர்கள் இங்கே இல்லை. பத்திரிகையிலே 3 அமைச்சர்கள் நீக்கப்படுவார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங்கள்

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று ஆளுநர் அவர்கள் உரையின் மீது நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்த விவாதத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான பிரச்சினைகளை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அலுவல் ஆய்வுக் குழுவில் 10 மணிக்குள் மற்ற உறுப்பினர்கள் பேசுவது என்றும், பிறகு நானும், நண்பர் மாரிமுத்து அவர்களும், பேராசிரியர் அவர்களும் பேசுவதாக ஏற்பாடு. ஆனால் இப்போது மணி 11·20 ஆகப் போகிறது. ஆகவே, இதைத் தாங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை நான் என்னுடைய பேச்சை நடத்துவதற்கு முன்பு குறிப்பிட விரும்புகிறேன்.

இன்று எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில், பிரதானமாக இந்தத் தமிழகத்தில் உள்ள 4½ கோடி மக்களின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட மிக அவசர அத்தியாவசியமான பிரச்னைகளைத்தான் நான் உங்கள் முன்னிலையில் கொண்டு வந்து, அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் பரிசீலிக்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.

(முற்பகல் 11·20)

ஆகவே, ஒரு சட்டமன்றத்தினுடைய நடவடிக்கைகளில் பொதுமக்கள் எதிர்பார்ப்பது அதுதான், உண்மையான மக்கள் பிரச்னைகளில் அரசாங்கத்தின் கொள்கைகள் என்ன, எதிர்க்கட்சிகளின் கொள்கைகள் என்ன, இதிலே மக்களின் வாழ்க்கையைப் பாதுகாக்கக் கூடிய கொள்கைகள் எவை, மக்களின் வாழ்க்கைக்குத் தீங்கு பயக்கின்ற கொள்கைகள் எவை என்பதை விவாதிப்பதுதான் முக்கிய பிரச்சினை என்று நான் கருதுகிறேன்.

அப்படிப் பார்க்கும்போது ஆளுநர் உரையிலே பெரிதும் வருந்தத்தக்க முறையில் மக்களுடைய முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி எந்தவிதமான கொள்கை அறிவிப்பும் காணப்படவில்லை. எனவே, அவற்றில் சிலவற்றை இன்றைக்கு நான் அரசாங்கத்தின் கவனத்திற்கும் இந்தப் பேரவையின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பல உறுப்பினர்கள் பேசினார்கள். இன்று தமிழகத்தில் மிகப் பெரும்பகுதி மக்கள் கிராமப் புறங்களில் வாழக்கூடிய விவசாயிகள், அந்த விவசாயிகளில் இரண்டு வர்க்கங்கள் உண்டு, நிலத்திலே நேரடியாகத் தாங்களே பாடுபடுகிற விவசாயிகள், அப்படிப் பாடுபடாமல் பிறரை வேலை செய்யச் செய்து, உழ வைத்து அவர்கள் உழைப்பின் மூலம் வாழ்பவர்கள் மிராசுதார்கள், நிலப் பிரபுக்கள், நில முதலாளிகள். தமிழ்நாட்டில் இன்றைய நிலையில் நில முதலாளிகள் தாங்கள்தான் விவசாயிகள் என்று சொல்லிக்கொண்டு சாதாரண விவசாயிகளையும் தங்கள் பக்கத்தில் திரட்டிக் கொள்வதற்குப் பெரும் முயற்சி செய்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை விவசாயத் தொழிலாளர்கள், உழைக்கும் விவசாயிகள், சிறு நிலக்காரர்கள், மத்திய தர விவசாயிகள் ஆகியோர் நலன்களைப் பாதுகாக்கவேண்டுமென்ற கொள்கையை உடையவர்கள். சாதாரண விவசாயிகளை வேறுபல காரணங்களைக் கூறி தங்கள் பக்கம் திருப்ப பெருநிலக் கிழார்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அரசு சிறுநிலக்காரர்கள் பிரச்சினையைப் பற்றித் தக்க நடவடிக்கைகளை எடுக்காது இருப்பதன் காரணமாகத்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.





நெல் விலையை எடுத்துக் கொள்வோம். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள்—சர்க்கார் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 85க்குமேல் கொடுத்து வாங்கக்கூடாது என்று மாநிலங்களுக்கு தாக்கீது அனுப்பியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதை மீற முடியாது என்றுகூறினார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி குவிண்டாலுக்கு 100 ரூபாய் கொடுத்தால்தான் நியாயமான விலையாக இருக்கும் என்று கருதுகிறது. ஆனால் இன்றைக்கு 85 ரூபாய் விலையாவது சிறு விவசாயிகள் உற்பத்தி செய்கிற நெல்லுக்குக் கிடைக்கிறதா என்றால் இல்லை. மாநில முழுவதும் சிறு விவசாயிகளிடமிருந்து 85 ரூபாய் விலைக்கு நெல்லைக் கொள்முதல் செய்தால் ஓரளவு அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க முடியும். அவ்வாறு கொள்முதல் செய்வதற்கு ஏதும் தடை போட்டிருப்பதாகச் சொல்ல முடியாது.

அதே சமயத்தில் இந்த அரசுக்கு ஒரு கொள்கை இருக்க வேண்டும். உழைக்கக்கூடிய சிறு விவசாயிகளுக்கு அவர்கள் விவசாயம் செய்யும்போது பயன்படும் இடுபொருள்களுக்கு நியாயமான விலை வைக்கவேண்டும். அதுபற்றி மத்திய சர்க்காரையும் கலந்து வற்புறுத்த வேண்டும். பருத்தி, கரும்பு, மஞ்சள், வெங்காயம் என்று விவசாயிகள் பயிரிடும் அத்தனைக்கும் ஒரு விலை வைக்கவேண்டும். மத்திய, மாநில அரசாங்கமே அந்த வர்த்தகத்தை கையில் எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு விலை கீழே போகாமல் நியாயமான விலை கிடைக்க வழி செய்யவேண்டும். இந்தக் காரியங்களை அரசு செய்யாமல் இருக்கும் காரணத்தால்தான் பெருநிலக் கிழார்கள் சிறு விவசாயிகளையும், நடுத்தர விவசாயிகளையும் தங்கள் பக்கம் திருப்பக்கூடிய முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஏழை நடுத்தர விவசாயிகளுடைய கோரிக்கையை அரசாங்கம் புறக்கணிப்பதன் காரணமாகத்தான் இந்த நிலை ஏற்படுகிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்றைக்கு விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய பொருள்களின் விலை உயர்ந்திருக்கிறது. நம்முடைய மாநில அரசாங்கம் அவற்றின்மேல் விற்பனை வரி விதிக்கிறது. அந்த விற்பனை வரியைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்துக்கொள்ளவேண்டும். மத்திய சர்க்கார் விதிக்கக்கூடிய எக்ஸைஸ் வரியை ரத்து செய்ய வேண்டுமென்றும் மாநில சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும்.

அடுத்து கிராமப்புற வேலையின்மையைப் பற்றி இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது, கிராமப்புற மக்களுக்கு வேலைக்கு உத்திரவாதம் அளிக்கக்கூடிய திட்டத்தைக் கொண்டுவரப் போவதாக இதிலே வெளியிடப்பட்டு இருக்கிறது. தமிழகத்திலே மிகப் பெரும்பான்மையான பிரச்சினை

முதன்மையான பிரச்சினை—இன்றைக்கு அரசியல் கட்சிகள் இருக்கலாம், பிரச்சினைகள் இருக்கலாம்—கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்கு, நகரப்புறங்களிலே உள்ள மக்களுக்கு வேலை அளிக்கும் பிரச்சினை தான். தமிழகத்திலே உள்ள அரசு அதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா, சரியான முறையிலே முற்போக்கான கொள்கை வழியிலே, ஜனநாயக முறையைப் பின்பற்றுகிறதா என்று பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கிறபோது நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள் கிறேன்.

ஆளுநர் உரையிலே அவர்கள் சொந்த முறையிலே வேலை செய்வதற்குச் சாதகமான சூழ்நிலை உருவாக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களிலே இன்றைக்கு வேலையில்லாமல் லட்சக்கணக்கானவர்கள் இருந்து கொண் டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் நிலமில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் போய் நீங்கள் சொந்த முறையிலே வேலைசெய்யும் சூழ்நிலையை உருவாக்குவோம் என்று சொன்னால் என்ன நடக்க முடியும். கடந்த 30 ஆண்டுகளாகச் சொல்லி ஒன்றும் நடைபெறவில்லை, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே அப்படிச் சொல்லி ஒன்றும் நடைபெற வில்லை, அதைப்போன்றே இந்த ஆட்சியின் இரண்டாண்டுக் கால ஆட்சியில் ஒன்றும் நடைபெறவில்லை. தமிழகத்திலே இன்றைக்கு பத்து லட்சம் பேர்கள் வேலையில்லாது பதிவு செய்து காத்துக்கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறங்களிலே 10 லட்சம் பேர்கள் என்பது 50 லட்சமாக இருக்கலாம், 60, 70 லட்சமாக இருக்கலாம், இன்னும்கூட உயரும். நிலமற்ற விவசாயிகள் தான் இருக்கிறார்கள். நிலமும் கிடையாது, விவசாயம் செய்வதற்கான கருவிகளும் கிடையாது, அவர்களை எப்படிச் சொந்தமாக வேலை செய்யச் சொல்லமுடியும்? இன்றைக்கு மற்ற சில மாநிலங்களிலே இதற்காக முயற்சி யெடுத்து கிராமப்புறங்களிலே உள்ள ஏழை எளிய விவசாயி களுக்கு தொழிலாளர்களுக்கு நிலங்களைக் கொடுத்திருக்கிறார் கள். அந்த முறையிலே நிலமில்லாதவர்களுக்கு வேலையும் அளித்து, அவர்களுக்கு உணவும் அளித்து புட் பார் ஒர்க் என்ற முறையிலே அப்படிப்பட்ட திட்டத்தை அமல் நடத்தினா லொழிய லட்சக்கணக்கான வேலையில்லாதவர்களுடைய நிலைமை மேலும் மேலும் மோசமாகிவிடும், அபிவிருத்தி யடையாது. கிராமப்புறங்களிலே இருப்பது நிலம் தான். அதை அவர்களுக்குக் கொடுக்காவிட்டால் என்ன வேலை அவர்கள் செய்யமுடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அங்கே மற்றப் பிரச்சினைகளிலே சாதாரணமான நிவாரணத்தை அளிக்கக்கூடிய முறையிலே ரோடுகள் போடுவது, மற்ற வேலைகளைக் கொடுப்பது இருந்தாலும் கூட, வேலையின் மையைப்போக்க வேண்டுமென்றால் நிலம் கொடுத்தாக வேண்டும்.



இன்றைக்கு நான் பத்திரிகையிலே பார்த்தேன். ஜனதா அரசாங்கம் கூட குத்தகைதாரர்களை பாதுகாக்கின்ற சட்டத்தை கொண்டுவந்து, அதை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 9-வது பிற்சேர்க்கையிலே இணைக்கப்படவேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருப்பதாகவும் பார்த்தேன், பெரிய முதலாளிகள் அந்தச் சட்டத்தை எதிர்த்து கோர்ட்டிற்குச் செல்வார்கள், மத்தியிலே அந்த சட்டத்தைக் கொண்டுவந்து மற்ற மாநிலங்களின் ஒப்புதலோடு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 9—வது பிற்சேர்க்கையிலே இணைந்துவிடுவதற்கு அப்படிச் செய்தால் முதலாளிகள் கோர்ட்டுக்குப் போக முடியாத நிலைமை ஏற்படும் என்பதால்—ஒப்புக்கொண்டிருப்பதாக பத்திரிகையிலே செய்தியைப் பார்த்தேன். அப்படியென்றால் நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், பினாமி நிலங்களைக் கைப்பற்ற இந்த சர்க்கார் என்ன நட வடிக்கை எடுத்திருக்கிறது. அதை எடுத்து மனை கட்டுவதற்கு கொடுக்கப்போவதாகச் செய்தி வருகிறது. மனை கட்டுவதற்கு வேறு நிலங்களைக் கொடுத்துக் கொள்ளலாம். அந்த நிலங்களை விவசாயிகளுக்குச் சாகுபடிக்குத் தான்கொடுக்க வேண்டும், அப்படிக் கொடுக்கவேண்டுமென்று தான் 30 ஆண்டுகளாக விவசாயிகள் இயக்கங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள், மனைகட்டிற்காக குறைந்த விலையில் உள்ள நிலங்களை வழங்கலாம்.

ஆனால் நிலப்பிரபுக்கள் மற்ற டிரஸ்ட்டுகள் இவைகளிட மிருந்து எடுக்கப்படுகின்ற நிலங்களையெல்லாம் விவசாயி களுக்கு தொழிலாளர்களுக்கு சாகுபடிக்காகத்தான் கொடுக்க வேண்டும். இன்றைக்கு தமிழ்நாட்டிலே உள்ள சட்டப்படி ஒருவர் 15 ஏக்கர் தான் வைத்திருக்கலாம். நெஞ்சிலே கைவைத்துச் சொல்லமுடியுமா? 15 ஏக்கருக்குள் தான் இன்றைக்கு மிராசுதார்கள் நிலம் வைத்திருக்கிறார்கள் என்றால் கிராமப்புறங்களிலே வறுமை நிலைமை மாறியிருக்கும் அல்லவா. இன்றைக்கு மிராசுதாரர்கள், மற்றவர்கள் பிரித்து எழுதியிருக் கிறார்கள், குழந்தைகள் பெயரில், கோயில்கள் பெயரில், மடங்களின் பெயரில் பிரித்து எழுதியிருக்கிறார்களே தவிர சொத்துக்கள் அப்படியே தான் இருக்கின்றன. கணக்குப் பிள்ளையைக் கேட்டால் தெரியும். பல பேர்களுக்கு பிரித்து எழுதி வைத்திருந்தாலும் வரிகட்டுவது எல்லாவற்றிற்கும் சேர்த்து தான் கட்டுவார்கள் அவர்களுக்குத் தெரியும். இப்படி நிலக் குவியலைத் தகர்த்து எறிவதற்கு அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்தால், எந்த நடவடிக்கை எடுத்தாலும் அதை கம்யூனிஸ்ட்ஸ் மார்க்சிஸ்ட் கட்சி அந்தத் திட்டம் வெற்றியடைய நாங்கள் பாடுபடுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11.30]

அதைப்போல, கோயில் நிலங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் பேசும்பொழுது, திருப்பதிக்குக் கொடுக்கக்கூடிய ஏராளமான பணத்தைக் கொடுத்தால் அந்தப் பணத்தை அரசாங்கத்திற்குக் கொடுத்தால் மருத்துவமனைகளைக் கட்டலாம் என்று சொன்னார்கள். இதைத்தான் நாங்கள் சொல்கிறோம்.

மதச்சார்பற்ற அரசு என்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சொல்லியிருக்கும்பொழுது, ஒரு மதத்தைப் பாதுகாக்க வேண்டியது அந்தப் பக்தர்களின் கடமை. அவர்கள் நிதி கொடுக்கிறார்கள். அவர்கள் பாதுகாத்துக் கொள்ளட்டும். ஆனால் கோயில், மடங்களின் நிலத்தில் வேலை செய்பவர்களுக்கு இதர முதலாளிகளிடம் வேலை செய்பவர்களுக்குக் கொடுக்கப்படும் நியாயம், பாதுகாப்பு ஆகியவற்றை ஏன் மறுக்க வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன், மடம் ஒரு தொழிற்சாலையை நடத்துகிறது என்று வைத்துக்கொள்வோம். ஆகவே, மடம் நடத்துகிற இந்தத் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குச் சாதாரண தொழிலாளர்களுக்கு உள்ள சட்டம் பொருந்தாது, விதிவிலக்கு கொடுக்கிறோம் என்று சொல்ல முடியுமா? அதைப்போலத்தான் நிலமும். அவர்களுக்கு எதற்காக நிலம்? நாங்கள் கேட்கிறோம், ஏற்கனவே கேரளாவில் இந்த நிலத்தை அரசாங்கம் எடுத்து விவசாயிகளிடம் வாங்கும் நஷ்டஈட்டுத் தொகையை வைத்துக்கொண்டு வருஷந்தோறும் கோயில்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுத்து விட்டார்கள். இப்படி வேறு பல மாநிலங்களிலும் நடந்திருக்கிறது. ஆகவே, இதில் நியாயம் அடங்கியிருக்கிறது. ஆகவே, அந்தக் கோயில்களைப் பாதுகாப்பதற்கான பணம் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டு விடுகிறது, எனவே கோயில்கள் பாதிக்கப்படவில்லை. இன்றைக்கு இதிலே பாடுபடும் விவசாயிகளைப் பொறுத்தவரையில் நிலப் பிரபுக்களிடமிருந்தும், பெரிய நிலச்சுவான்தாரர்களிடமிருந்தும் பினாமி நிலங்களை எடுத்துக் கொடுத்தால் நிலப்பிரச்னையை ஓரளவுக்குத் தீர்க்க முடியும்.

அடுத்து, கடன் சுமையைப்பற்றி நாங்கள் கூறுகிறோம். இன்றைக்கு டிராக்டர் வாங்குவதற்காக வாங்கப்பட்ட கடனைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சி சொல்லவில்லை. மாளிகைகள் கட்டுவதற்காக வாங்கப்பட்ட கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் பயிர் செய்வதற்காக வாங்கியிருக்கும் கடன்களைத்தான் தள்ளுபடி செய்ய வேண்டுமேன்று கேட்கிறோம். அதிலும்கூட பயிர் செய்வதற்காக வாங்கிய கடன்களை எல்லோருக்கும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றுகூட நாங்கள் கூறவில்லை. நிகர வருமானம் 3,600 ரூபாய் அல்லது 5 ஏக்கர்களுக்கு உட்பட்டு நிலம் வைத்திருப்பவர்கள் இந்த மாநிலத்திலே மழையாலும்,





புயலினாலும், மற்றும் இயற்கைக் கோளாறுகளினாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களுக்குத்தான் இந்தக் கூட்டுறவு, அரசு, தனியார் கடன்களை முழுவதும் ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். அடுத்தபடியாக, 7,500 ரூபாய் வருஷ வருமானம் அல்லது 10 ஏக்கர்கள் வரை நிலம் வைத்திருப்பவர்கள் வாங்கிய கடன்களுக்கான வட்டியைத் தள்ளுபடி செய்யுங்கள், குறுகிய காலக் கடனை நீண்ட காலக் கடனாக மாற்றுங்கள் என்று கேட்கிறோம். அதற்குமேல் வைத்திருப்பவர்களுக்குக் கடனை ரத்து செய்ய வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்கவில்லை. ஏன் இதைத் திருப்பித் திருப்பிச் சொல்கிறோம் என்றால், கிராமப்புறங்களிலே வாழக் கூடியவர்கள் ஏழை விவசாயிகள் மட்டும்தான் என்று நாங்கள் சொல்லவில்லை கிராமப்புறங்களில் விவசாயிகளும் இருக்கிறார்கள், முதலாளிகளும், நிலச்சுவான்தார்களும்கூட வாழ்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்திலிருந்து வாங்கிய கடன்களைக் கண்டிப்பாகக் கொடுக்கத்தான் வேண்டும். ஆனால் கடனைக் கொடுக்க முடியாத சிறு நிலக்காரர்கள் வாங்கிய கடன்களை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயத் தொழிலாளர்களின் கூலிப் பிரச்னை. 45 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கின்ற இந்த மாநிலத்திலே சர்க்கார் இயந்திரத்தை முடுக்கிவிட்டு, போலீஸ் இயந்திரத்தை முடுக்கி விட்டு, ரெவின்யூ இலாக்காவை முடுக்கி விட்டு, அரசியல் கட்சிகளின் ஆதரவைக்கொண்டு, இந்த மாநிலம் முழுவதும் குறைந்தபட்சம் கூலி எட்டு ரூபாய் இருக்க வேண்டுமென்று அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வந்தால் அது உண்மையிலேயே கோடிக்கணக்கான விவசாயக் குடும்பங்களுக்குப் பெரும் உதவி அளிப்பதாக இருக்கும். கிராமப்புறங்களில் நிலவும் வேலையின்மையைத் தீர்க்க இப்படிப்பட்ட மிக முக்கியமான காரியங்களை இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், சுய வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ள வேண்டுமென்று சொல்வது இந்தப் பிரச்னைக்கு பரிகாரம் ஆகாது.

நகர்ப்புறங்களிலே இருக்கின்ற வாலிபர் முன்னணிகள் தங்களுக்கு வேலை கொடுங்கள் அல்லது நிவாரணம் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். மேற்கு வங்கம் போன்ற அரசுகள் சில ஆண்டுக்காலமாகப் பதிவு செய்தும் அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்றால், மூன்று ஆண்டுக்காலத்திற்கு மாதம் 50 ரூபாய் நிவாரணத் தொகையாக் அளித்து அவர்களை சமுதாய வேலைகளில் ஈடுபடச் செய்கிறது. இப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டு வந்தால் நகர்ப்புற வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருக்கும் மக்களுக்கு நிவாரணம் ஏற்படும். ஆகவே இன்றைக்கு நிச்சயமாக இந்தக் காரியத்தை அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு அடுத்து கைத்தறித் தொழிலாளர்களின் பிரச்னை இருக்கிறது. ஏற்கனவே இராஜா சுப்பிரமண்யம் சிபாரிசுகள் அமலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்றைக்குப் பல மாஸ்டர் வீவர்கள் ஏராளமான இலாபம் சம்பாதிக்கிறார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டில் உள்ள நிலைமை, சில மாதங்களுக்கு முன்பிருந்ததைப்போல் கைத்தறித் துணி விற்பது இல்லை என்பது அல்ல, கைத்தறித் துணி ஸ்டாக் இல்லை என்பதுதான். ஆகவே, தொழில் நடக்கிறது. ஏராளமாக ஏற்றுமதி செய்கிறார்கள். ஆனால் கூலிப் பிரச்னைதான் இருக்கிறது. அவர்களும் தொழிலாளர்கள் அல்லவா? அவர்களுக்குச் சட்டப் பாதுகாப்பு வேண்டாமா? இன்றைக்கு தொழிலாளர்கள் ஏராளமான பேக்டரிகளிலே வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்களுக்கு இருக்கும் பாதுகாப்பு நெசவுத் தொழிலாளர்களுக்கும் இருக்க வேண்டாமா? ஆகவே, அந்தப் பாதுகாப்பைக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காகக் கைத்தறி நெசவாளர் சங்கங்கள் கிளர்ச்சி செய்கின்றன. மாநில அரசு ஊழியர்களுக்கு இருப்பதைப் போல, ஒரு கைத்தறித் தொழிலாளர் இறந்தால் அவரது குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கின்ற அளவிலாவது, பிடிப்பு ஏற்படுத்தி அவர்களது கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் சேமிப்பு நிதியைத் துவக்குவதற்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு செய்தால் அவர்களுக்கு மிகப்பெரிய உதவியாக இருக்கும். மாஸ்டர் வீவர்களிடத்தில் பணம் இல்லையா? எனவே, மாஸ்டர் வீவர்களிடம் வேலை செய்யும் தொழிலாளர்கள் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு நிவாரணப் பங்கு கொடுக்க வேண்டுமென்று செய்வது நியாயமாக இருக்கும்.

ஆனால், இன்றைக்கு மாஸ்டர் வீவர்ஸ்---அந்தத் தொழில் நடத்தக்கூடியவர்கள் இதை எதிர்ப்பார்கள். ஆனால், அதற்காக அரசாங்கம் தயங்கக்கூடாது. அவர்கள் ஆதரவில்லாமல் விட்டு விடுவார்கள் என்று பயப்படக்கூடாது. பல இலட்சக் கணக்கான தொழிலாளிகள் ஒரு பக்கம். கைவிரல் விட்டு எண்ணக்கூடிய மாஸ்டர் வீவர்ஸ் ஒரு பக்கம். அந்த மாஸ்டர் வீவர்ஸ் இதனை விட்டுக் கொடுக்க முன்வரமாட்டார்கள். ஒரு பைசா கொடுக்கக் கூட முதலாளிகளுக்கு மனம் வராது. ஆனால் நியாயத்தின் பேரிலே, கைத்தறி தொழிலாளர்களுக்கு இத்தகைய காரியங்களைச் செய்ய இந்த அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு கொள்கைப் பிரச்னை. இந்த அரசு பல்வேறு காரியங்களிலே உலக வங்கி கடனை எதிர்பார்க்கிறது என்பதை நான் வன்மையாக விமர்சிக்க விரும்புகிறேன். உலக வங்கி என்பது என்ன? அமெரிக்கா ஆதிக்கத்தின் கீழுள்ள, அதன் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு நிறுவனம் இது. அந்நிறுவனம், மூன்றாவது நாடுகள் செய்யக்கூடிய காரியங்களில் தலையிட்டு,





தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்சிக்கிறது. அந்த வங்கி ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளை விதித்து காரியங்களைச் செய்கிறார்கள். குடிநீர்த் திட்டம், முனிசிப்பல் அபிவிருத்தி இப்படிப்பட்டவற்றிற்காக கடன்களை வாங்கக் கூடிய நேரத்திலே முதலமைச்சர் அவர்களைக் கேட்கவிரும்புகிறேன். அக்கடன்களுக்கு நாம் என்ன வட்டி கொடுக்கிறோம்? அவர்கள் வேறு ஏதாவது நிபந்தனைகளை விதிக்கிறார்களா? சில ஆபத்தான நிபந்தனைகளை விதித்திருக்கிறார்கள் என்று நான் சொல்ல முடியும்.

சில மாதங்களுக்கு முன்பு மெட்ராஸ் மெட்ரோபாலிட்டன் டெவலப்மென்ட் அத்தாரிட்டி சம்பந்தமாக ஒரு சட்டம் வந்தது. அச்சட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக் கடுமையாக ஆட்சேபித்தது. இன்றைக்கு சென்னை கார்ப்பரேஷனுக்கு சென்னைக் குடிநீர்த் திட்டத்தின் மீது வரி விதிக்கவோ கட்டணம் வசூலிக்கவோ அதிகாரம் கிடையாது. ஸ்தல ஸ்தாபனம் என்ற உள்ளாட்சிமன்றத்திலேயிருந்த அதிகாரம் எடுக்கப்பட்டு, உலக வங்கி கடன் கொடுக்கிறார்கள் என்ற காரணத்திற்காக, தனியான நிறுவனத்திற்கு அளிக்கப்படுகிறது. உள்ளாட்சிமன்றத்திற்குள்ள வாய்ப்பையும் வலிமையையும் அது குறைக்கிறது என்று அப்பொழுதே நாங்கள் ஆட்சேபித்தோம். ஆனால் பெரும்பான்மை பலம்கொண்டு அச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. அப்படிப் பட்ட ஒரு தனி ஏஜென்ஸி இருந்தால்தான் கடன் கிடைக்கும் என்று உலக வங்கி வற்புறுத்தியது. ஆகவே தான் குறுக்கீடு இருக்கிறது என்று சொல்கிறேன்.

நம்முடைய நாட்டிற்கோ, மாநிலத்திற்கோ, காரியங்களைச் செய்ய, குடிநீர் திட்டங்களை நிறைவேற்ற உலக வங்கியிடமிருந்து கடன் எதிர்பார்ப்பது நாட்டினுடைய கவுரவத்திற்கு ஏற்றதாக இல்லையென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அப்படியில்லையென்றால், வேறு எப்படி செய்யமுடியும் என்று கேட்கலாம். சமீபத்திலே பாங்க் ஊழியர்கள் ஸ்டிரைக் செய்தாகள, அவர்களை எதிர்த்து வியாபாரிகளையும் மற்றவர்களையும் ஆர்ப்பாட்டம் செய்ய வைத்தார்கள் சிலர். நீங்கள் நூற்றுக்கணக்கான ரூபாய் சம்பளம் வாங்குகிறீர்கள். உங்களுக்கு பாங்குகள் இவ்வளவு சம்பளம் கொடுப்பதால், நாட்டில் வறுமை நிலவுகிறது என்று பொருள்படப் பேசினார்கள். மாநில அரசாங்கத்திற்கும், பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மற்ற கட்சிகளுக்கும் எங்கள் கட்சி ஒன்றைச் சொல்ல விரும்புகிறது. இந்த அடிப்படைக் கொள்கையிலே மாற்றம் ஏற்படாவிட்டால் இந்தியாவிலே வறுமையில் வாடுகின்ற மக்களுக்கு ஏதாவது நன்மை செய்ய முடியுமா என்பதை சிந்தித்துப் பாருங்கள். Department of Company Affairs, Government of India சொல்லியிருக்கிறது, 81 பெரு முதலாளிகள் 1900 நிறுவனங்களைவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, அவர்கள் 26 தனிப் பெரும் தொழில்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். 1972—76 ஆண்டுகளில் டாடா, பிர்லா எப்படி உயர்ந்திருக்கிறார்கள் என்பதை அவர்களது புள்ளி விவரம் கூறுகிறது. Department of Company Affairs Government o India இந்திய அரசாங்கத்தினுடைய கம்பெனிகள் சம்பந்தப்பட்ட இலாகா கொடுக்கும் புள்ளிவிவரமாகும் இது. 1973 ஆம் வருஷத்திலே டாடாவினுடைய அசெட்ஸ்—அவர்களுடைய சொத்து ரூ. 641 கோடி, 3 ஆண்டுகளுக்குப் பின்னால், 1976—லே கணக்கெடுக்கும்போது, அந்த ரூ. 641 கோடி ரூ. 980 கோடியாக உயர்ந்து விட்டது. 3 ஆண்டுகளில், ரூ. 339 கோடி இந்தப் பாரத நாட்டிலே, சோஷலிசம் பேசக்கூடிய நாட்டிலே உயர்ந்திருக்கிறது என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

பிர்லாவினுடைய கதை என்ன? 1973-லே அவருடைய சொத்து மதிப்பு ரூ. 589 கோடி. 1976-லே, 3 ஆண்டுகளுக்குப் பிறகு அவருடைய சொத்து மதிப்பு, ரூ. 974 கோடி. 3 ஆண்டுகளிலே ரூ. 385 கோடி அளவுக்கு உயர்ந்திருக்கிறது. ரூ. 300 கோடிக்கும் அதிகமாக தங்கள் சொத்துக்களை உயர்த்தி, இரு பெரும் முதலாளிகள் மட்டும் உயர்த்த இந்த நாட்டுச் சமுதாயப் பொருளாதார முறை அனுமதிக்கிறதென்றால், இந்தப் பொருளாதாரத்தை வைத்து, வறுமையில் வாடுபவர்களுக்கு, ஏழைகளுக்கு நாம் என்ன செய்ய முடியும். ஆகவே, நாம் மத்திய சர்க்காரை ஒன்று வற்புறுத்தவேண்டும். இந்த ஏகபோக முதலாளிகளின் கேந்திரங்களை நாட்டுடைமையாக்கினாலொழிய, மக்களுக்கு, அரசுக்குக் சொந்தமாக்கினாலொழிய, இந்த நாட்டிலே உள்ள ஏழை—பாழைகளுக்கு உருப்படியாக எந்தக் காரியத்தையும் செய்ய முடியாதுஎன்பதை நாம் கவனத்தில கொள்ள வேண்டும்.

( முற்பகல் 11.40)

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே பெரும் தொழில்கள் துவக்குவதாகக் கூறப்பட்டிருக்கிறது. நீங்கள் பிளாக் கிரானைட்டை—கருங்கல்லை எடுத்துக் கொள்ள அரசாங்கமே கம்பெனி ஏற்படுத்த உள்ளதை வரவேற்கிறோம். தனியார் நிறுவனங்களுக்குச் செல்லும் லாபம், அரசாங்கத்திற்கே வரும் என்ற காரணத்தினால் பாராட்டுகிறோம். தமிழ்நாடு மாக்னசைட் என்ற நிறுவனத்தை இன்றைக்கு அரசாங்கம் எடுத்துக் கொண்டிருப்பதைப் பாராட்டுகிறோம். அதைப் பொதுத்துறையிலே வைத்திருக்கிறீர்கள் என்று தான் நம்புகிறோம் ஆனால் உற்பத்தி செய்யக்கூடியமாக்னசைட்டை உற்பத்தி செய்வதற்கு ஏன் இன்றைக்குக் கூட்டுத் துறையிலே ஆரம்பிக்கவேண்டும். மாக்னசைட்டை பொருளாகச் செய்ய ஏன் இன்றைக்குத் தனியார் கம்பெனியைச் சேர்ந்தவர்களிடம், கூட்டுத்துறையிலே ஆரம்பிக்க வேண்டும். தனியார் கம்பெனி என்று போடப்படவில்லை. ஆனால் கூட்டுத்துறை என்று அறிக்கையிலே போடப்பட்டிருக்கிறது- எனவேதான் நாங்கள் உற்பத்தி ஆகக்கூடிய பொருள்கள் பொதுத்துறையிலே இருக்க வேண்டும் என்று கூறுகிறோம்.





அடுத்து தூத்துக்குடி அல்கஹாலிக் நிறுவனம், ஜப்பானியநாட்டு நிறுவனத்துடன் தொழில் நுட்ப ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். அந்த ஒப்பந்தங்களில் என்ன நிபந்தனைகள் அடங்கி இருக்கின்றன என்பதைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கு ராயல்டி எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது. அது இந்த நாட்டு பொருளாதாரத்திற்கு உகந்ததாக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

இதைத்தவிர அவர்களுக்கு வேறு என்னென்ன உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதை பொது ஜனங்களின் நன்மையைக் கருதி தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதிலே ஒரு வருந்தத் தக்க விஷயம் என்னவென்றால், ஸ்பிக் என்ற நிறுவனம் பல ஆண்டுகளுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது. 62 கோடி ரூபாய் மூலதனத்திலே, மத்திய சர்க்கார் நிறுவனங்கள், மாநில சர்க்கார் நிறுவனங்கள் இவைகள் எல்லாம் சேர்ந்து 60 கோடி ரூபாய்கள் போட்டிருக்கின்றன. ஆனால் தனிப்பட்ட முதலாளி போட்ட மூலதனம் 2 கோடி ரூபாய்கள். ஆனால் 60 கோடி மூலதனம் போட்ட அரசு நிறுவனங்களை விட 2 கோடி ரூபாய் மூலதனம் போட்ட தனியார் நிறுவன முதலாளியினிடத்திலே அந்தக் கம்பெனியின் மேனேஜிங் டைரக்டர் பதவி எழுத்து மூலமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு பெரிய அபாயம். மக்களின் பணத்தைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனத்தில் தனியார் முதலாளி ஒருவர் மேனேஜிங் டைரக்டர் ஆக இருந்து விளையாட நாம் ஏன் அனுமதிக்கவேண்டும். எனவே இன்றைக்கு அந்த ஒப்பந்தம் காலாவதியான பிறகு, அதை ரத்து செய்து, மாநில சர்க்கார் அல்லது மத்திய சர்க்கார் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களை அந்த நிறுவனத்திலே போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள் ஒரு பிரச்சினையைச் சொல்ல விரும்புகிறேன். குரோம் லெதர் கம்பெனி என்று ஒரு கம்பெனி இருக்கிறது. அதில் 700 பேர்கள் வேலை செய்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையின் மதிப்பு 2 கோடி ரூபாய். அந்தக் கம்பெனிக்கு 137 லட்சம் ரூபாய் கடன் இருக்கிறது. முதலாளி செய்த தவறின் காரணமாக, சென்ட்ரல் பாங்க் மேலும் கடன் கொடுக்க மறுக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையிலே மட்டும் 1976—77—லே 1-3/4 லட்சம் டர்ன் ஓவர் கிடைத்திருக்கிறது. 1977—லே வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்த பொருள்களின் மதிப்பு ஒரு கோடி ரூபாயாகும். ஆசியாவிலேயே மிகப்பெரிய தோல்பதனிடும் தொழிற்சாலை இது. ஆனால் கடந்த 8 மாத காலமாக அந்தத் தொழிற்சாலை மூடிக்கிடக்கின்றது. தொழிலாளர்கள்பட்டினியால் வாடுகிறார்கள். கோர்ட்டிலே தீர்ப்புக் கொடுத்தும் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்காமல் இருக்கிறார்கள். ஆகவே முதலிலே மூடி கிடக்கக்கூடிய தொழிற்சாலைகளைத் திறக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

[திரு. என். சங்கரய்யா] [1979 பிப்ரவரி 16

அடுத்து நான் கூற விரும்புவது மதுவிலக்கு பற்றி. இது பற்றி எங்கள் கட்சியின் கொள்கையை தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மதுவிலக்குப் பற்றி அவசர சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது எங்களுக்கு உடன்பாடாக இல்லை. இந்த அவசர சட்டம் இயற்றக்கூடாது. என்று நாங்கள் பலமாகக் கருதினோம். சாதாரணமாக குடிப்பவர்களுக்கு சமூக சீர்திருத்தத்தின் படி தண்டனை கொடுக்கக்கூடாது இந்தநாட்டிலே இன்று குறிப்பாக டிரக்ஸ்கள் இருக்கின்றன. மரிஜ்வானா, அபின், கஞ்சா போன்ற போதைப் பொருள்கள் இருக்கின்றன. மாணவர்கள், படிக்கக்கூடியவர்கள் படிப்பதைவிட்டு, மரிஜ்வானா அபின் போன்ற போதைப் பொருள்களைப் பயன்படுத்து கிறார்கள்.

இன்றைக்கு அப்படிக் கடுமையாகச் சட்டம் கொண்டு வர வேண்டிய காரணம் என்ன? 1937–லே ராஜாஜிகொண்டு வரவில்லையா? 40 ஆண்டுக் காலமாக என்ன நிலைமை? இப்படி கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்து தான் அதை அமல் நடத்தவேண்டுமா? ராஜாஜி அவர்கள் கூட சிறைத் தண்டனை என்று சொல்லவில்லை? இத்தனை ஆண்டுக் காலமாக நிறுத்த முடியாததை இப்போது சிறை தண்டனை மூலமாக நிறுத்திவிட முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

இந்தச் சட்டம் கொண்டு வந்த இந்த நான்கு மாதத்தில் நிலைமை என்ன? 30,000 வழக்குகள் போடப்பட்டு இருப்பதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையில் செய்தி வந்து இருக்கிறது. அதை ஆதாரமாக வைத்துச்சொல்கிறேன். அதை ஆய்வு செய்ய ஆய்வுக்கூடங்கள், விசாரிக்க வழக்கு மன்றங்கள் ஆகியவை ஏற்படுத்தப்படவேண்டும். அப்படியே எடுத்துக்கொண்டாலும், இந்த 6 மாத காலத்தில் இந்த 30,000 வழக்குகளில் எத்தனை வழக்குகளில் பெரிய நிலப்பிரப்புக்கள் சம்பந்தப்பட்டு இருக் கிறார்கள். அவர்கள் எல்லாம் வரமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்.

இதனுல் பாதிக்கப்படுகிறவர்கள் ரிக்ஷா தொழிலாளி, சைக்கிள் ரிக்ஷா தொழிலாளி, விவசாயிகள் ஆகியோர்தான். இப்படிப்பட்ட மக்களுக்கு சிறை தண்டனை விதித்துதான் அவர்கள் குடிக்காமல் இருக்கவேண்டுமா? தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள், இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே கூட மது விலக்கு ஒரு மாரல் பிரின்சிபிளாக, ஹெல்த் ப்ராப்பளமாக. மக்களின் நல்வாழ்வு என்பதைக் கருத்தில்கொண்டு தான் சொல்லப்பட்டு இருக்கிறது. நான் அதைப்படிக்கிறேன்.

PROHIBTION : DIRECTIVE PRINCIPLES OF STATE POLICY

Art 47: The State shall regard the raising of the level of nutrition and the standard of living of its people and the improvement of public health as among its people and the improvement of public health as



1979 பிப்ரவரி 16] [திரு. என். சங்கரய்யா]

among its primary duties and, in particular, the State shall endeavour to being about prohibition of the consumption except for medicinal purposes of intoxicating drinks and of drugs which are injurious to health.

முதலில் சொல்லப்பட்டு இருப்பது என்னவென்றால், எல்லோருக்கும் சாப்பாடு கொடுக்க வழிவகை செய்து, அவர்கள் நல்வாழ்வு வாழ நியுடிரீட்டிவ் டையட் கொடுத்து அதன் மூலம் மது அருந்துவதை தடை செய்யுங்கள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. தமிழ் நாட்டிலே உணவுப் பிரச்னை அந்த வகையில் தீர்க்கபட்டு இருக்கிறதா? மனிதனுக்கு உணவில்லாத ஒரு நிலைமை இருக்கிற காரணத்தால் தான் மதுவை அருந்துகிறான். ஆகவே, அந்த நிலையை உருவாக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

காலைப் பத்திரிக்கையில் பார்த்தேன். மாதவரத்தில் கோவிந்தன் என்பவர் குடித்தார் என்ற காரணத்திற்காக கொண்டு செல்லப்பட்டு இருக்கிறார். ஆஸ்பிடலுக்குப் போனவர் அங்கே இறந்து விட்டு இருக்கிறார். இதுபோன்று பல்வேறு இடங்களில் நடைபெற்று இருக்கிறது. ஆகவே. நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது மதுவிலக்கு நடைமுறைப் படுத்துவது என்பது சரியான பிரச்சாரத்தின் மூலமாகத்தான் முடியும். இந்தச் சட்டத்தை அரசாங்கம் புனர்பரிசீலனை செய்யவேண்டும். எத்தனை பெரிய தண்டனை வைத்தாலும், இந்த சமுதாய மக்களே விரும்பி மதுவிலக்கை ஏற்றுக்கொண் டால் ஒழிய அதை அமல் நடத்த முடியாது. ஆகவே, அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் உடனடியாக நடத்தப் பெறவேண்டும். ஏற்கனவே பலதடவை ஒத்திப்போட்டு இருக்கிறீர் கள்மதுரைக்கு மட்டும் மாநகராட்சித்தேர்தல் நடத்திவிட்டு மற்ற உள்ளாட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு தேர்தல் நடத்தாமல் இருப்பது சரியல்ல. இந்த அரசு ஜனநாயகத்தை வளர்க்க விரும்பினுல் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட நகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள், அமைய வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பூர் மணிமாறன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நான் ஒன்றைக்குறிப்பிட விரும்புகிறேன். 1967-ம் ஆண்டில் அன்று முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்கள் பதவிக்கு வந்த 10 நாளிலேயே இந்த மன்றத்தில் இருந்த எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து சட்டம் ஒழுங்கு குலைந்து விட்டது என்று சொன்னார்கள். அப்போது நடந்த தேர்தலில் மார்க்கிச கம்யூனிஸ்ட் கட்சியும், திராவிட முன்னேற்றக்கழகமும் தேர்தல் உடன்பாடு கொண்டு இருந்தது. அந்த அடிப்படையில் தான் மாண்புமிகு அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருக்கிறார்

தொழில் பாதிக்கும், வேலையிழப்பு நேரிடும், அதனால் சம்பளம் குறையும் என்றெல்லாம் பேசவில்லையா? ஆனால் அதற்குப் பின்னாலே இந்திராவுக்கு பாராளுமன்றத்தில் தண்டனை வழங்கப்பட்டபோது இந்திரா காங்கிரஸ்காரர்கள் போராட்டம் நடத்தினார்களே, அவர்கள்மீது இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டதா? அப்போது என்னென்ன நடைபெற்றது? வெண்படை எங்கே போயிற்று? தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தால் கூலி போய்விடும் என்ற உங்களுடைய அறிவுரை அப்போது எங்கே போயிற்று? அதற்குக் காரணம் இந்திரா காங்கிரசுக்கும் உங்களுக்கும் இருக்கிற உறவுதானே. வேறு என்ன காரணம்? அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க மாட்டீர்கள் என்று தெரிந்ததால்தானே அவர்கள் அராஜகத்தில் ஈடுபட்டார்கள், நீங்கள் அதை ஆதரிப்பதுபோல்தானே நடந்து கொண்டீர்கள். 23-10-78 அன்று நடைபெற்ற அர்த்தாலுக்கு விடப்பட்ட எச்சரிக்கை ஏன் இந்திரா காங்கிரஸ் போராட்டக் காரர்களுக்கு விடப்படவில்லை. இதை எல்லாம் நீங்கள் மறந்து விடக்கூடாது,

அன்றைக்கு கன்னியாகுமரியில் நடைபெற்றது என்ன? பஸ் எரிப்பு சம்பவம், பலர் உயிரிழப்பு. ஏன்? 23-10-78-ல் இந்த நிலை ஏற்பட்டிருந்தால் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்? இந்த மாநில எதிர்க்கட்சிகள் அனைத்தும் சேர்ந்து செய்த சதி என்று தானே சொல்வீர்கள்? இந்திரா காங்கிரஸ் சம்பந்தப் பட்டிருப்பதால் நீங்கள் வழக்கு மட்டும் போட்டிருக்கிறீர்கள். வேறு ஒன்றும் இல்லை, கட்சியின் கொள்கைகள் வேறு வேறாக இருக்கலாம். ஆனால் அரசாங்கத்தின் கொள்கை ஒன்றாகத் தான் இருக்க வேண்டும். நடவடிக்கையில் மாற்றம் இருக்கக் கூடாது.

அடுத்து ஒரே ஒரு விஷயம். மாண்புகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது காங்கிரஸ் கட்சியைப் பற்றிக் குறிப் பிட்டார்கள். எதேச்சாதிகார சக்திகள் 1977-லே முறியடிக்கப் பட்டது. எதேச்சாதிகாரச் சக்தி மீண்டும் தலை தூக்கக்கூடாது என்றுதான் நான் கூறுகிறேன். எதேச்சாதிகாரச் சக்திகள் பற்றிச் சொல்லும்போது ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே இன்றைய தின்ம் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு யார் தலைவர் என்கின்ற வகையிலே தேர்ந்தெடுப்பதற்கு ஜனநாயக உரிமை கொடுக்க வேண்டும் என்று அவர்களுடைய கட்சிக்காரர்களே அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இதிலேயே எதேச்சாதிகாரத்தின் நிலை என்ன என்பதை நன்கு புரிந்து கொள்ள முடிகிறது.

அடுத்து நான் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இது கடைசியாக நடந்திருக்கக்கூடிய சம்பவம், 11-2-79 அன்று இரவு 10 மணிக்கு சிவகெங்கையிலே உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் இரண்டு போலீஸ்காரர்கள் திடீரென்று வந்து சோதனை நடத்தியிருக்கிறார்கள். என்



இப்படி சோதனை நடத்துகிறீர்கள் என்று கேட்ட அங்கிருந்த பி. ராஜு என்ற மார்க்ஸிஸ்ட் தோழரை அடித்து இழுத்துச் சென்றிருக்கிறார்கள். நீ யாரடா கேட்பதற்கு என்று பேசி அடித்து இழுத்துச் சென்றிருக்கிறார்கள். இதுதான் தமிழ்ப்பண்பு. இங்குள்ள காவல்துறை அதிகாரிகளின் பண்பு இதுதான். இது 13-2-79 தேதியிட்ட மதுரைப்பதிப்பு தீக்கதிர் பத்திரிக்கை யிலே வந்தது, அதனுடைய வெளியூர் பதிப்பு 14-2-79. அந்தப் பத்திரிக்கையிலே முதல் பக்கத்தில் போட்டிருக்கிறார்கள். நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்த சிவகெங்கை ஊர் சின்ன மருது. பெரிய மருது பிறந்த ஊர். ஆகவே அங்குள்ள ஜனங்களும் சேர்ந்து கொண்டு பதிலுக்கு தாக்க ஆரம்பித்தால் நிலைமை என்னவாகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே அதிகாரிகள் இந்தமாதிரி காரியங்களில் ஈடுபடாமல் இருக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன். இந்த மாதிரி நிலைமைகள் எல்லாம் சரியானதல்ல,

அடுத்து நக்ஸலைட் கைதிகள் பற்றி ஒன்று சொல்ல விரும்பு கிறேன். மேற்கு வங்காளம் போன்ற பல மாநிலங்களிலே நக்ஸலைட்டுகளை விடுதலை செய்திருக்கிறார்கள். நக்ஸ லைட்டுகள் இப்போது திருந்துகின்ற நிலை இருக்கிறது. அவர்கள் தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொள்கின்ற நிலையினையும் பார்க்க முடிகிறது. ஆகவே அவர்களை மேற்கொண்டும் ஆயுள் தண்டனை என்கின்ற பெயராலே சிறையில் வைத்துக்கொண்டிருப் பதை விட விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிவகாசியிலே நடந்த விபத்து பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஆண்டு குழந்தைகள் ஆண்டு. இண்டர் நேஷனல் இயர் ஆப் தி சைல்ட். இந்தக் குழந்தைகள் ஆண்டிலே குழந்தைகளின் நிலை என்ன? அவர்களை ஃபேக்டரியிலே வேலை செய்வதற்கு அனுப்புகிறார்கள். ஃபேக்டரிச் சொந்தக்காரர்கள் பெரியவர்களை விட்டுவிட்டு குழந்தைகளைக் கூட்டிச் செல் வதற்குக் காரணம், பாதி கூலி கொடுத்துக் கொள்ளலாம், அதனால் கூலியில் லாபம் கிடைக்கும் என்று கருதுவதால்தான். குழந்தைகள் வேலைக்குச் செல்கிறார்கள், ஆகவே பெரியவர் களுக்கு வேலை இல்லை. குழந்தைகள் கல்வி கற்க முடியவில்லை. பெரியவர்கள் வேலைக்குச் சென்றால்தான் குழந்தைகள் கல்வி கற்க முடியும், பெரியவர்களால் அவர்களைப் படிக்க வைக்க முடியும். இப்போது ஏற்கெனவே 30 சதவீதம் பேர் கல்வி அறிவற்றவர்கள் இருக்கிறார்கள்.

(நண்பகல் 12.00)

இரண்டு மூன்று விஷயங்கள் பற்றி எடுத்துச் சொல்லி விட்டு முடித்துக்கொள்கிறேன். தமிழ் சீர்திருத்தம்பற்றி எங்களது கருத்துக்களைக்கூற விரும்புகிறேன்.

நாங்கள் எந்தச் சீர்திருத்தத்திற்கும் எதிர்ப்பானவர்கள் அல்ல. பெரியார் நூற்றாண்டு விழாவில் நாங்களும் பங்கெடுத்துக் கொண்டோம். ஆனால் இன்று இந்திப் பிரச்னையை எப்படிச் சமாளிப்பது என்பதற்காக முதல் அமைச்சர் அவர்கள் ஒரு சர்வகட்சி மாநாடு கூட்டினார்கள். அதை விட மூலாதாரமான பிரச்னை இது. தொன்றுதொட்டு இருந்து வரும் ஒரு மொழி, இலக்கிய இலக்கண வளம் நிறைந்த ஒரு மொழி, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிற மொழி தமிழ் மொழி. இதில் என்னென்ன சீர்த்திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்பதுபற்றி பரந்த அளவில் தமிழ் நாட்டிலுள்ள ஆராய்ச்சியாளர்கள், மொழி வல்லுனர்கள், மக்கள் ஸ்தாபனங்கள், அரசியல் கட்சிகள், இவர்களோடு கலந்து பேச வாய்ப்பளிக்க வேண்டும்.

அதல்லாமல் திடீரென்று அரசு மட்டும், மக்களைக் கலந்து கொள்ளாது, இந்தச் மொழிச் சீர்திருத்தத்தை அவசரமாகக் கொண்டு வந்து முடிவு செய்வது சரியல்ல. ஆகவே இதுகுறித்து எடுக்கப்படும் நடவடிக்கைகளை நிறுத்திவைத்து இதுகுறித்த விவாதத்தை நடத்த வேண்டும். சாதாரணமாக ஒரு அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்றால் கூட மக்கள் மத்தியில் வாக்கெடுப்பு நடத்தி திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று கூறக்கூடிய நிலை இருக்கும்போது நாலரைக் கோடி மக்கள் பேசும் ஒரு மொழி பற்றி, அம்மொழியில் சீர்த்திருத்தம் செய்யும்போது அது நல்ல அளவிற்கு விவாதிக்கப் படவேண்டும், எல்லோரையும் கலந்து ஆலோசிக்க வேண்டும். சீர்திருத்தம் வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்னைக்குள் நான் நுழையவில்லை. பெரியார் நூற்றாண்டு விழாக் குழு இந்த சிபார்சை செய்தது என்று சொல்கிறார்கள். அதில் நாங்கள் இடம் பெறவில்லை. அறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது—பெரியார் அந்தக் காலத்திலும் சொல்லி வந்தார், எழுதி வந்தார்கள்—ஏன் இந்தச் சீர்த்திருத்தம் கொண்டுவரப்பட வில்லை? அதற்குப் பிறகு நீங்களும் திராவிட முன்னேற்றக்கழகத் தினரும் சேர்ந்திருந்தபோது, 1972ம் ஆண்டு வரை இருந்தபோது அப்பொழுது ஏன் இந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டுவரவில்லை பெரியார் சிபார்சாக இருந்தாலும் அதில் பரிசீலிக்க வேண்டிய அம்சங்கள் இருக்கின்றன என கருதியிருக்கிற காரணத்தால்தான் அதைப்பற்றி அப்பொழுது முடிவு எடுக்கவில்லை.

ஆகவே இந்த சீர்திருத்தம் பற்றி மக்கள் ஸ்தாபனங்கள், மொழி வல்லுனர்கள் இவர்களை கலந்து செய்யவேண்டும். இன்று கூட காலம் கடந்துவிடவில்லை. ஆகவே அரசாங்கம் இதுபற்றி மறுபரிசீலனை செய்து மக்களிடம் கலந்து தேவையான திருத்தங்களைச் செய்யலாம் மக்கள் சம்மதத்தின் பேரில்,

அடுத்தபடியாக, கலைஞர்களுக்குப் பணம் கொடுப்பதுபற்றி எங்களுக்கு ஆட்சேபணையில்லை. தமிழ்நாட்டின் புராதனக் கலைக்கு, சங்கீதத்திற்கு, நாட்டியத்திற்கு, நாட்டியம் பயிற்றுவிக்கக் கூடியவர்களைப் பாதுகாக்க வேண்டியது



அரசின் கடமை. அவர்களுக்கு போதிய அளவிற்கு வருமானம் கிடைக்க வேண்டியதுதான். அதில் பூர்ண உடன்பாடுதான் அவர் களுக்கு பரிசுகள் கொடுக்கலாம், தங்க மெடல்கள் கொடுக்கலாம், பாராட்டுகள் வழங்கலாம். ஆனால் கலைஞர்கள் என்று சொல்லும்போது பல்லாயிரக்கணக்கான ரூபாய் வருமானம் வரக் கூடியவர்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்க வேண்டுமா என்பது தான் கேள்வி, அது அவசியமா என்ற கேள்வியைத்தான் நாங்கள் கேட்க விரும்புகிறோம். அப்படிக் கொடுக்கப்பட்டவர்கள் சிலருக்காவது ஆயிரக்கணக்கான ரூபாய் வருமானம் வருகிறது. ஆகவே அப்படிப்பட்டவர்களுக்குக் கொடுப்பதை நிறுத்திவிட்டு வறிய கலைஞர்களுக்கு கொடுத்திருப்பார்கள் என்றால் மகிழ்ச்சி யாக இருந்திருக்கும்.

அடுத்து, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில், இன்று நாட்டில் காங்கிரஸ் ஆட்சியும் சரி, ஜனதா ஆட்சியும் சரி முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையில்தான் செல் கிறார்கள். நிலப்பிரபுக்களின் பிடிப்பைத் தகர்க்க அவர்கள் விரும்பவில்லை. இந்தியாவில் பிரச்னை தீராதவரை தமிழ் நாட்டின் பிரச்னைகளும் தீராது. இன்று இந்திய நாட்டின் பிரச்னை தீராமல் தமிழ்நாட்டின் பிரச்னைகளும் தீர முடியாது என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் ஒப்புக் கொள் கிறார்கள். உலக வங்கியின் உதவி, முதலாளிகளின் ஆதிக்கம் பன்னாட்டு மூலதன வெளியேற்றம் இவற்றில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையும் எங்கள் கொள்கையும் மாறுபட்டு இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தைப் பொறுத்தவரையிலும் நாங்கள் அவற்றை ஒரு ஜனநாயக அணியில் சேர வேண்டிய கட்சிகள் என்று எதிர்ப்பார்க்கிறோம். எங்களுக்கு, எந்தக் கட்சியின் மீதும் நிரந்தரமான எதிர்ப்பு என்ற பேச்சுக்கே இடம் கிடையாது. 1962ல்இருந்து இதுவரைமக்களுக்கு நன்மைசெய்யும்திட்டங்களை தி.மு.க. தீட்டியபோது அவற்றை ஆதரித்தோம். சில திட்டங்கள் மக்களின் நன்மைக்கு விரோதமாக இருக்கிறது என்று நாங்கள் கருதியபோது அதை எதிர்த்தோம். அதேபோல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் மக்களுக்கு நன்மை தரக்கூடிய காரியங்களை ஆதரிப்போம், தவறான கருத்துக்கள் அல்லது திட்டங்கள் என்று நாங்கள் கருதும் பட்சத் தில் உங்களுக்கு வேறுவிதமாகத் தோன்றக்கூடும் அதை எதிர்க்க எங்களுக்கு உரிமை இருக்கிறது என்பதை அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். முற்போக்குக் கருத்துக்களை கொண்ட ஒரு இடதுசாரி ஜனநாயக முன்னணியை ஏற்படுத்து வதற்கு முனைய வேண்டும். பன்னாட்டு மூலதன எதிர்ப்பு, முதலாளிகளின் ஆதிக்கத்தை எதிர்ப்பது, இந்தியாவில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவது, உழைப்பாளி மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்தல் இவற்றிற்காக ஒரு இடதுசாரி ஜனநாயக முன்னணியை ஏற்படுத்த

வேண்டும். அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் இதுபற்றி பரிசீலனை செய்ய முன்வரவேண்டும் என்று நான் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சென்ற காலத்தில் சில விஷயங்களில் வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. இந்தி திணிப்பை நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொன்னோம். இந்தியை எதிர்ப்பதாக அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த வித்தியாசம் இருந்தது. எல்லா மொழிகளுக்கும் சமத்துவம் வேண்டும் என்று சொல்கிறோம். இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள 15 மொழிகளும் இந்தியாவின் ஆட்சிமொழிகளாக வரவேண்டும். பாராளுமன்றத்தில் அத்தனை மொழிகளிலும் பேசுவதற்கு, கேள்விகள் கேட்பதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். அது மட்டுமல்ல.

மத்திய சர்க்காரின் அலுவலகங்களான வருமான வரி இலாகா, ரயில்வே இலாகா போன்றவற்றில் அந்தந்த மாநில மொழிகளை கையாளலாம். அதை செய்யவேண்டும். இப்பொழுது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் என்ன இருக்கிறது என்றால், மத்திய சர்க்காரின் மொழி இந்தி என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை மாற்றியாக வேண்டும். இந்த ஜனநாயக அமைப்பில் இந்த நிலை தொடர்ந்து இருக்க முடியாது. நமது ஜனாதிபதி சஞ்சீவரெட்டிக்கு மிசோரத்தில் ஏற்பட்ட நிலையை நாம் பார்த்தோம். யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுகளில் மிசோர மொழியில் தேர்வு எழுத வாய்ப்பு அளிக்கவில்லை என்பதை எடுத்துக்கூறுவதற்காக கறுப்புக்கொடி காட்டியிருக்கிறார்கள். அது நியாயம் என்று ஜனாதிபதி அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலுள்ள உரிமையில் அடிப்படையில் எல்லா மொழிகளிலும் தேர்வு எழுத உரிமை இருக்கவேண்டும்.

இந்தி எதிர்ப்புப் பிரச்னையைப் பொறுத்தவரையில், வாஸ்தவத்தில், அகில இந்திய ரீதியில் இயங்கும் கட்சியாக இருக்கின்றவர்கள் நாங்கள். எத்தனையோ போராட்டங்களை நடத்தி நாம் சுதந்திரம் பெற்றிருக்கிறோம். ஒன்றை நாம் மறந்து விடக்கூடாது, தென்னகத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள எல்லா மக்களுக்கும் மார்ச் 77-ல் அப்போதிருந்த எதேச்சாதிகாரத்திற்கு எதிராக வோட்டளித்ததின் காரணமாகத்தான் நாம் ஜனநாயக அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறோம். எங்களை பொறுத்தவரையில் இந்தி மொழியை எதிர்க்கவில்லை. நாமும் இந்தியை எதிர்க்கக்கூடாது. அதேபோன்று வடக்கேயிருக்கின்றவர்களும் தமிழை எதிர்க்கக்கூடாது. அதேநேரத்தில் அங்கீகரிக்கப்பட்ட எல்லா மொழிகளையும் இந்தியாவின் ஆட்சிமொழிகளாக ஆக்க வேண்டும், அதற்கு மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கிடையில் இடைக்காலத்தில் என்ன செய்வது? நாங்கள் கூறுகிறோம், இந்த சிக்கலை தீர்ப்பது வரையிலும், நேருவின் வாக்குறுதியை-அதாவது இந்தி பேசாத மக்கள் விரும்புவது வரையிலும் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கும்—என்ற



வாக்குறுதியை பின்பற்ற வேண்டும் என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன். இதே விஷயத்தில் அரசியல் கட்சிகளுக்குள் வேண்டுமானால் வித்தியாசம் இருக்கலாம். ஆனால் இந்திரா காங்கிரஸ்காரர்கள் கூட சொன்னார்கள், முதலமைச்சர் இதற்காக போராட்டம் நடத்தினால் அதில் கலந்து கொள்ள நாங்கள் தயார் என்று சொன்னார்கள். நான் கூற விரும்புவது. இந்தி மொழி ஆட்சி மொழி என்றிருப்பதற்குப் பதிலாக, இந்தியாவிலுள்ள 15 மொழிகளும் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்ற ஒரு கொள்கைக்காக போராடினால் அதில் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ்காரர்கள் கலந்து கொள்ள தயாராக இருக்கிறார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஜனதா கட்சியைப் பொறுத்த வரையில், திரு. ஜெபமணி அவர்கள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் இந்தி ஆட்சி மொழி என்பதற்குப் பதிலாக 15 மொழிகளும் இருக்கவேண்டும் என்ற திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்று இம்மன்றத்திலுள்ள உறுப்பினர்கள் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

(திரு. ஜெபமணி அவர்கள் பேசுவதற்கு எழுந்திருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் பேசி முடிந்த பின்னர் நீங்கள் விளக்கம் சொல்லலாம். இப்பொழுது வேண்டாம்.

திரு. என். சங்கரய்யா: இந்தப் பிரச்னையில் இங்குள்ள கட்சிகளுக்குள்ளேயே உடன்பாடு இல்லாமல் இருக்கிறது. எல்லா மக்களுக்கும் பாதுகாப்பு இருக்கின்ற அளவில், ஆட்சிமொழியாக 15 மொழிகளையும் ஆட்சிமொழியாக ஆக்குவது தான் சிறந்ததாக இருக்கும். இந்தப் பிரச்னையில் ஒரே கருத்தை வற்புறுத்துகின்ற வகையில் தமிழ்நாட்டிலுள்ள அகில இந்திய தலைமையுள்ள கட்சிகள் தயாராக இருக்க வேண்டும். அப்போது தான் தமிழ் நாட்டுக்கு பாதுகாப்பு ஏற்படுத்தியதாக இருக்க முடியும்.

இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்போதுள்ள அரசியல் அமைப்புச் சட்டத்திலுள்ள பிரிவுகளை பயன்படுத்திய அதாவது 348-வதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், மாநில சட்டமன்றம் விரும்பினால், மாநிலங்களில் இயற்றக்கூடிய சட்டங்களை அந்தந்த மாநில மொழிகளிலேயே இயற்றிக் கொள்ளலாம் என்றிருக்கிறது. இதைப் பயன்படுத்தவில்லை. இன்னும் நாம் ஆங்கிலத்தில் தான் சட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். நீதி மன்றத்தில் கூட அந்தந்த மாநில மொழியை பயன்படுத்தலாம். அந்தந்த மாநில கவர்னர்கள் இதற்கான ஆணைகளை பிறப்பிக்கலாம் என்றிருக்கிறது. சில சட்டங்கள் தமிழில் வந்தும், நீதிமன்றத்தில் அதற்கு தடை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை தான் இருந்து கொண்டிருக்கிறது. இதையும் மாற்றியாக வேண்டும். பயிற்று மொழியைப் பொறுத்தவரையில், சென்னை பல்கலைக் கழகத்திலிருந்து பயிற்றுமொழிப் பிரச்னை சம்பந்தமாக விசாரணை

செய்வதற்கு மீனுட்சிசுந்தரம்அவர்கள் தலைமையில் போடப்பட்ட கமிட்டியினர் கூட பொறியியல், மருத்துவம் இவைகளிலும் தமிழ் பயிற்று மொழியாக இருக்கலாம் என்று தீர்மானம் போட்டிருக்கிருர்கள்.

இலங்கையில் ஏற்கனவே மருத்துவ நூல்கள் பொறியியல் நூல்கள் இவைகள் எல்லாம் தமிழில் இருக்கின்றன, இவைகளை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூறியிருக்கிறது. ஆகவே தமிழ்மொழியை நிர்வாக மொழியாகவும், நீதிமன்றத்தில் பயன் படுத்தும் மொழியாகவும், பயிற்று மொழியாகவும் ஆக்கவேண்டும். அப்போது தான் தமிழ்மொழிக்கு பாதுகாப்பாக அமையும் என்ப தோடு மட்டுமல்ல. மத்திய ஆட்சியில் எல்லா மொழிகளும் ஆட்சிமொழியாக இருப்பதற்கான வழிவகை காண்பது தான் பொருத்தமாக இருக்கும் என்று கூறிக்கொண்டு முடித்துக் காள்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12 10)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> காலையிலே உறுப்பினர் திரு. கூத்தகுடி சண்முகம் அவர்கள் பேசியபோது, அவர்கள் சொன்ன கருத்து இந்த அவைக்கு தெரிந்துவிட்ட காரணத்தால், அது நடவடிக்கைக் குறிப்பிலும், பத்திரிகையிலும் இருக்க வேண்டாம் என்பது என் கருத்து. சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியின் ஜன்னல் வழியாக பாட்டில்கள் விழுகின்றன என்று சொன்னபோது, இரண்டு வார்த்தைகள் இரண்டு பெயர்கள் சொல்லப்பட்டது. அவைகள் இந்தக் குறிப்பேட்டிலும் பத்திரிகைகளிலும் வரவேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தால், அவைகளை நீக்கிவிட வேண்டுமென்று உத்தர விடுகிறேன்.

<u>திரு. ரா. உமாநாத் :</u> ஒரே ஒரு விஷயம். குறிப்பேட்டிலே யிருந்து அவைகளை எடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். ஆனால், பத்திரிகைகளுக்கு நீண்ட நாட்களாக ஒரு சங்கடம் இருக்கிறது. இப்போது மணி 12-10 ஆகிறது, அவர் பேசியதோ காலையில். அது பிரஸுக்கு போயிருக்கும். பிரிண்டாகி சில எடிஷன்சும் வந்திருக்கும். இப்போது அவைகளை குறிப்பிலே இருந்து எடுக்க வேண்டுமென்று சொன்னால், அவைகளில் சில இஷ்யூக்களில் வந்திருக்கும். அதற்காக பிரிவிலெ மோஷன் வரும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஒன்றை மட்டும் நான் சொல்கிறேன். 1½ மணி வரை அவகாசம் இருக்கிறது. நான் இதைப்பற்றி ஆய்வு நடத்தி, அவைகளை எடுக்கலாமா வேண்டாமா என்று சிந்தித்து தீர்ப்பு சொல்வதற்கு 1½ மணிவரை அவகாசம் இருக்கிறது.

<u>திரு. க. அன்பழகன் :</u> நேற்றைய தினம் இந்த சட்ட மன்றத்திலே பேசுகின்றபோது, யாரோ ஒரு உறுப்பினர்,— அவர் பெயர் எனக்கு இப்போது நினைவுக்கு வரவில்லை,



அந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்குகின்ற அந்த விடுதியில் பாட்டில் வீசப்பட்டது என்ற கருத்து பேசப்பட்டது. அப்படி பேசப்பட்ட கருத்து நீக்கப்படவில்லை என்ற காரணத்தால், இதற்கும் அதற்கும் தொடர்பு இருக்கின்றது. ஆகவே, இதை நீக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். பத்திரிகையிலே வர வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். தங்களுக்கு மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றவர்கள் கேட்கக்கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு)

<u>திரு. ரா. உமாநாத் :</u> பத்திரிகையிலே வரவேண்டாம் என்று சொன்னாலும், Let us not forget it. நேற்று உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய நேரத்தில், நான் இல்லை, ஆனால், நான் இருக்கக்கூடிய ஜன்னலின் அறையிலேகூட 'படார், படார்' என்று பாட்டில்கள் வந்து விழுந்தன. அப்போது அவற்றை நான் கவனிக்கவில்லை. அந்தப் பிரச்னையைப் பற்றி சொன்னபோதுதான் எனக்கு ஞாபகம் வந்தது. ஆனால் அது உண்மை. பத்திரிகையிலே வராமல் நிறுத்தி விட்டால், இந்த ஆஸ்டலிலே நடக்கிறதை நிறுத்த முடியுமா? Let us go into this.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. உமாநாத் அவர்களுடைய உணர்வையும், வேகத்தையும் நான் உணர்கிறேன். பேரவைக்கு இந்த விஷயம் தெரிந்துவிட்ட காரணத்தால், அந்த வார்த்தைகள் நீக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. தெரிய வேண்டாம் என்று எல்லா கட்சி உறுப்பினர்களும் சொன்னால், அது பொருத்தமானது.

<u>திரு. மு. கருணாநிதி :</u> நேற்றையதினம் நீங்கள் இல்லாத நேரத்தில், அவையின் துணைத் தலைவர் தலைமை ஏற்றுக் கொண்டிருந்த போது, ஜனதா கட்சி உறுப்பினர் விஜயராகவன் இதே கருத்தை, சட்டமன்ற விடுதியிலே நடக்கின்ற இந்த நிலையைப்பற்றி இதே கருத்தைப் பேசியிருக்கிறார். அது அவைக்குறிப்பிலே இடம் பெற்றிருக்கிறது.

<u>திரு. கு. ரமணி :</u> தலைவர் அவர்களே, எங்களுக்கு பாது காப்பு இல்லை. நான் தங்கியுள்ள அறையில் 215வது அறையில் இருக்கும்போது முந்தாநாள் மேலேயிருந்து பாட்டில் திடீரென்று வீசப்பட்டது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இப்படி ஒவ்வொருவரும் சொல்லிக்கொண்டே போகலாம். தயவுசெய்து நீங்கள் விரும்பினால், அவைகளை நீக்காமல் விட்டுவிடுகிறேன்.

<u>திரு. கு. ரமணி :</u> அந்த பாட்டில் உடைந்து எங்கள் தலையில் விழுந்தால், நாங்கள் என்ன செய்வது?

திரு. சோ. அழகர்சாமி : எதையுமே நீக்கவேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோருடைய கருத்தும் அவைகள் வரவேண்டும் என்று விரும்புகிறபோது, அதை நான் விட்டுவிடுகிறேன். எதையும் நீக்கவில்லை. உட்காருங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, மாநிலக் கல்லூரியிலே இப்போது போலீஸ்காரர்கள் நுழைந்து, கண்ணீர்ப் புகை செய்து கொண்டிருக்கிற ஒரு மோசமான நிலைமை இருக்கிறது. இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து, நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முன்னாலே பேசிய மதிப்பிற்குரிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அவர்கள் எங்கள் கட்சியைப் பற்றிச் சில கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள், தலைவர்கள் எங்களைப்பற்றிப் பேசுகிறபோது இரண்டு வார்த்தைகளை எப்போதும் தவற விடுவது கிடையாது. சர்வாதிகாரம், யதேச்சதிகாரம்-இது இரண்டும் அவர்கள் தேர்ந்தெடுத்து வைத்திருக்கக்கூடிய ஒன்று. இன்றைக்குப் புதிதாகச் சொல்லவில்லை. ரொம்ப நாளாகச் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். அதைச் சொல்லாமல் அவர்களால் பேசுவது என்பது முடியாது. நான் அதிலே போய் தலையிட விரும்பவில்லை. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் நியமனம் பொறுத்தவரை பெரிய சர்வாதிகாரம் ஒன்றும் நடந்துவிடவில்லை. பேசி பண்ணி முடிக்கும்போது இந்திரா காந்தி அம்மையாரைப் பற்றி சர்வாதிகாரி என்று சொல்லி முடிக்கவேண்டும். அதைக் கொஞ்சம் சேர்த்தால்தான் அவர்களுக்குத் திருப்தியாக இருக்கும். அந்த முறையில் சொல்லி இருப்பார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தேர்தல் இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் நடைபெற இருக்கிறது. அதற்குள்ளாக வேறு ஒருவரைப் போட வேண்டுமென்ற முறையில் நியமனம் செய்து போட்டு தேர்தல் நடத்துவது என்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி முடிவு எடுத்திருக்கிறதே தவிர சர்வாதிகாரம் ஒன்றும் இதிலே கிடையாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆட்சியிலிருக்கக்கூடியவர்களைப் பற்றிச் சொல்லும்போது தொழிலாளர் பந்த் நடந்தபோது நடவடிக்கை எடுத்தார்கள், இந்திரா காந்தி கைது செய்யப்பட்டபோது நடைபெற்ற



அசம்பாவிதங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். தொழிலாளர்கள் பந்த் என்பது அறிவிப்புக் கொடுத்து நடத்தப்பட்டது. அதிலே முன்கூட்டியே பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க முடியும். இந்திரா காந்தி கைது செய்யப்பட்டபோது நடந்த சம்பவங்கள் 'ஸ்பான்டேனியஸ்' ஆக நடந்தது. இதிலும் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அன்று ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் பேரில் கோர்ட்டுகளில் வழக்குகள் இருக்கின்றன என்பதை மட்டும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜனதா கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது ஒன்று சொன்னார்கள். மதிப்பிற்குரிய ஜனதா கட்சித் தலைவர் ஜேம்ஸ் அவர்களிடத்தில் நான் பெரும் மரியாதை உள்ளவன். இன்றைக்குப் பார்த்தால் அவர்களுக்குப் பெரும் குழப்பம் ஏற்பட்டுவிட்டது போல் தோன்றுகிறது. அவர்களுக்கு என்ன குழப்பம் வந்ததோ தெரியாது. ஜனதா கட்சியே குழப்பம். அந்தக் குழப்பத்திற்குள் அவர்கள் அகப்பட்டுக் கொண்டார்கள் என்று கருதுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஜனதாக் கட்சியில் எந்தவிதமான குழப்பமும் இப்போது இல்லையென்பதைத் தலைவர் அவர்கள் அறிவார்கள். குழப்பம் எல்லாம் இந்திரா காங்கிரசில்தான் ஏற்பட்டிருக்கிறது என்பது மாநில அளவிலேயே தெரிகிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஜனதா கட்சியே குழப்பம். ஜேம்ஸ் அவர்களுக்குக் குழப்பம் அதிலே இருந்து வந்தது. இன்று காலையில் யாதவ், உ.பி. சீஃப் மினிஸ்டர் பதவி இழந்தார் என்று செய்தி பார்த்தோம். அதிலே குழப்பம் வந்து விட்டது.

திரு. ர. ஜெபமணி : பாயின்ட் ஆப் ஆர்டர். யாதவ் அவர்களுடைய மந்திரி சபை கலைந்துவிட்டது என்றால் அது ஜனநாயகத்தைக் காட்டுகிறது. ஜனதாக் கட்சியில் ஆண்கள் இருக்கிறார்கள், ஆகையால் அபிப்பிராயத்தைச் சொல்லுகிறார்கள். உங்கள் கட்சியில் ஒரே ஒரு ஆண்தான் இருக்கிறார். ஆகையால் அபிப்பிராயம் சொல்ல முடியவில்லை.

திரு. ரா. உமாநாத் : அப்படியானால் திரு. மாரிமுத்து பெண்ணா?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஜனநாயகம் உருப்படியாக நடக்கிறது என்றால் மூன்று நாளைக்கு ஒரு மந்திரிசபை மாறினால்தான் அது ஜனநாயகமா? மதிப்பிற்குரிய ஜனதா கட்சித் தலைவர்கள், தோழர்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ளவேண்டும். பின்னாலே இந்திய சரித்திரத்தை எழுதப் போகிற சரித்திர ஆசிரியர்கள் ஜனதா கட்சியைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது

குழப்பந்தான் நிரம்பி இருந்தது என்று நிச்சயமாக எழுது வார்கள். ஜனதா கட்சி அகராதியில் ஜனநாயகம் என்பதற்குக் குழப்பம் என்றுதான் பொருள் என்பதை நிச்சயமாக பின்னால் வருகிற சரித்திர ஆசிரியர்கள் எழுதப்போகிறார்கள் என்பதில் எனக்குக் கொஞ்சம் கூட சந்தேகம் கிடையாது.

(பிற்பகல் 12.20)

அகில இந்திய அண்ணா தி.மு.க.வுக்கும் காங்கிரஸுக்கும் உறவு வரும்போல் தோன்றுகிறது என்று சொன்னார்கள். அதற்கான காரணத்தையும் அவர்கள் சொன்னார்கள். சர்வாதி காரமும் சர்வாதிகாரமும் ஒன்று சேரத்தான் முடியும் என்று சொன்னார்கள். எப்படி சர்வாதிகாரம் ஆகும்? ஜனதாவோடு உறவு வைத்தால் ஜனநாயகம், காங்கிரஸோடு உறவு வைத்தால் சர்வாதிகாரமா? அகில இந்திய அண்ணா தி.மு.க.வோடு ஜனதா கட்சி உறவு வைத்துக்கொள்ள முயற்சித்தது எங்களுக்குத் தெரியாதா? சிக்மகளூர் தேர்தலுக்கு முன்பு ஜனதா கட்சி அகில இந்திய அண்ணா தி.மு.க வை ஆதரவு தர வேண்டுமென்று கேட்க வில்லையா? காங்கிரஸ் கட்சியோடு உறவு வைத்துக்கொண்டால் சர்வாதிகாரம், ஜனதாவோடு உறவு வைத்துக்கொண்டால் சர்வாதிகாரம் இல்லை இதுவா முறை? ஆகவே இந்த கருத்து எந்த அடிப்படையில் வந்தது என்றால் அந்தக் குழப்பத்தின் அடிப் படையிலே வந்ததுதான். . .

__திரு. ஜே. ஜேம்ஸ் :__ ஜனதா கட்சி எப்போதும் அகில இந்திய அண்ணா தி.மு.க.வோடு உடன்பாடு வைத்ததே இல்லை, வைக்கவேண்டிய அவசியமும் இல்லை. மாநில அரசின் தயவால் தமிழ்நாட்டில் ஜனதா கட்சி இல்லை என்பதை நான் காங்கிரஸ் கட்சியின் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

__திரு. ஏ. ஆர். மாரிமுத்து :__ யாருடைய கட்சியும் யாருடைய தயவிலேயும் இல்லை. உறவும் இல்லை எதுவும் இல்லையென்றால் திரு. செழியன் எப்படி ராஜ்ய சபா உறுப்பினரானார்? மந்திரக் கோலா? வேறு ஏதாவதா?

__திரு. ஜே. ஜேம்ஸ் :__ திரு செழியன் ராஜ்யசபாவிற்கு சென்றார்கள் என்று சொன்னார்கள். நான் திரு. மாரிமுத்து அவர்களைக் கேட்கிறேன், தாங்கள் இந்தச் சபைக்கு எப்படி வந்தீர்கள்? இந்திரா காங்கிரஸ் மட்டும் வாக்களித்துத்தான் வந்தீர்களா? அனைவரும் வாக்களித்தார்கள், வந்தீர்கள். தேர்தல் என்று வரும்பொழுது வாக்களித்தார்கள், வாக்களிக்க வில்லை என்றெல்லாம் பிரச்னை வராது. திரு.செழியன் அவர்கள் ராஜ்ய சபாவுக்கு அகில இந்திய அண்ணா தி.மு.க.வோடு உடன்பாடு காரணமாக வந்தார்கள் என்று சொல்வது உண் மைக்குப் புறம்பானது.



__திரு. ஏ. ஆர். மாரிமுத்து :__ ஜனதா கட்சித் தலைவர் முதலமைச்சர் ரூமிலே பேசும்போது நான் அங்கேயேதான் இருந்தேன்.

__திரு. ஜே. ஜேம்ஸ் :__ திரு. செழியன் தேர்தல் சம்பந்தமாக நான் முதலமைச்சர் அறைக்கு சென்றதுமில்லை, பேசியது மில்லை என்பதை முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிற போதே தெரிவித்துக் கொள்கிறேன்.

__திரு. ஏ. ஆர். மாரிமுத்து :__ நான் ஜேம்ஸ் அவர்களைச் சொல்லவில்லை. அகில இந்திய ஜனதா தலைவர்களில் ஒருவர் என்று சொன்னேன். திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசும் போது சொன்னார்கள், டாடா, பிர்லாவை காங்கிரஸ்காரர்கள் வளர்த்தார்கள் என்று, நான் சொல்கிறேன், இப்போது ஜனதாக்காரர்கள் வளர்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஏன் தேசியமயம் பண்ணவேண்டியதுதானே, யார் வேண்டா மென்றது? உங்களுக்குத்தான் மெஜாரிட்டி இருக்கிறதே, ஏன் செய்யவில்லை, யார் தடுத்தது? ஆகவே டாடா, பிர்லா இப்போதும் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் மறுக்க முடியாது.

தமிழ்நாட்டிலே இருக்கிற அரசியல் நிலைமையைப்பற்றி விமர்சிப்பதற்கு காலம் எனக்குப் போதாது, இந்த அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது, அப்போது பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்தால் தமிழ் நாடு அரசியல் சம்பந்தமான விமர்சனங்களை அப்போது வைத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொண்டு மற்ற விவரங்களை இங்கே பேசுவதற்கு நான் முன்வருகிறேன்.

இந்த உரையிலே விவசாயிகளுடைய பிரச்னை பற்றி ஆரம்பத்திலே கூறப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு போதிய விலை கிடையாது, விலை வீழ்ச்சி அடைந்திருக்கிறது. உணவு உற்பத்திப் பெருக்கத்தினாலே தான் இந்த வீழ்ச்சி. அதிக விலை முன்பு இருந்தது, இப்போது அதுகூடக் குறைந்துவிட்டது. அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்வதற்கு இந்த அரசுதான் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதை இரண்டு விதமாகச் செய்யலாம். ஒன்று மத்திய சர்க்காருக்கு அதிக விலை கொடுக்கவேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்கள் என்பது உண்மை, ஆனால் அதோடு இந்தச் சர்க்காருடைய கடமை முடிந்து விட்டது என்று கருதினால் பிறகு விவசாயிகளைக் காப்பாற்றுவது யார்? நீங்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் சிபாரிசு செய்திருக்கிறீர்கள். சிபாரிசு செய்துவிட்டாலே விவசாயிகளுக்கு விலை கிடைத்துவிடாது. நியாயமான விலை அவர்களுக்குக் கிடைப்பதற்கு நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சி என்ன? இன்றைக்கு விலை குறைந்து இருப்பதற்குக் காரணம் என்ன என்பதைப் பார்க்கவேண்டும், 15 நாட்களுக்கு

முன்னாலே 57 கிலோ 52 ரூபாய்க்கு விற்றது. 15 நாட்கள் கழித்து நான் ஊருக்குப் போகிறபோது பார்த்தால் 46 ரூபாய்க்கு விலை வீழ்ந்து விட்டது— விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுவிட்டது.

இது சர்க்கார் நிர்ணயித்திருக்கும் விலையைவிடக் குறைவு. சர்க்கார் 85 ரூபாய் ஒரு குவிண்டாலுக்கு நிர்ணயம் செய்திருக்கிறது. ஆனால் இதைவிடக் குறைவாக அவர்களுக்குக் கிடைக்கிறது. இப்படிக் குறையும் காலத்திலாவது அவர்களுக்கு நியாயமான விலை கொடுக்க நீங்கள் முன் வந்தால் என்ன என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை, இதற்கான பொறுப்பை அரசு எடுக்கவில்லை என்றால் எப்படி விவசாயிகள் காப்பாற்றப்படுவார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு விலை வீழ்ச்சி ஏன் ஏற்பட்டிருக்கிறது? கொஞ்சம் அதிகமாக உற்பத்தி ஆகிவிட்டது என்று சொல்லப்படுகிறது.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் இந்தியாவிலே உணவு தானியம் 50 இலட்சம் டன் அதிகரித்திருக்கிறது சென்ற ஆண்டைவிட. இந்த 50 இலட்சம் டன் அதிகரித்திருப்பதன் காரணமாக விலை சரிய ஆரம்பித்திருக்கிறது. இதை மார்க்கெட்டுக்கு விடாமல் கொள்முதல் செய்ய முடியாதா அரசாங்கம்? இங்குள்ள உபரியை தமிழ்நாட்டிலேயே கொள்முதல் செய்ய முடியாதா? விலையை உயர்த்திக் கொடுக்காவிட்டாலும்— அதை உங்களால் செய்ய முடியாதா? விலையில் மத்திய அரசு குறுக்கிடுகிறது— என்றுல் மார்க்கெட்டுக்கு வரும் தானியங்களைக் கட்டுப்படுத்தியாவது ஓரளவுக்கு விலை கிடைக்க உத்தரவாதம் கொடுக்க முடியுமே. ஐந்து இலட்சம் டன்களை அரசே புகுந்து வாங்கியிருக்க வேண்டாமா? பருத்தியை எடுத்துக் கொண்டோமானால், மத்திய அரசு கார்ப்பரேஷன் போட்டிருக்கிறது. அவர்கள் புள்ளி விவரம் மூலமாகக் கணக்கிட்டு அதிக உற்பத்தி இருந்து பருத்தி விலை குறைந்தால், பருத்தி அபரிமிதமாக விளைந்து பருத்தி விலை குறைந்தால், தேவையைவிட உபரியாக விளைந்திருந்தால் அரசே கொள்முதல் செய்யத் தனியாகக் கார்ப்பரேஷன் வைத்துவிட்டால் கட்டுப்படுத்தப்படுகிறது. அப்பொழுது விலை ஒரு சீரான நிலையில் அமைகிறது என்பது ஒரு கொள்கை. இந்தக் கொள்கையை நீங்கள் அமலாக்குவதற்கு முன்வந்திருந்தால் விவசாயிகளைக் காப்பாற்றியிருக்கலாம். கையிலேயிருந்த கடன் வாங்கிய பணத்தையெல்லாம் போட்டு விட்டு விவசாயிகள் சங்கடமான நிலையிலே இருக்கிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லத் தேவையில்லை.

விவசாயிகளுக்கு மூன்று முறை கூட்டுறவு அரசுக் கடன் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. நான்காவது முறையும் விவசாயம் போய் விட்டது. இப்படி நான்காவது முறையும் விளையவில்லை என்றால் அவர்களுடைய நிலை என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவன் எப்படி வாழப் போகிறான்?



அவனுடைய எதிர்காலம் என்ன? என்பதைப் பற்றி அவனால் சிந்திக்கவே முடியவில்லை. விவசாயிகள் மாநாடு வந்தால் ஆயிரக்கணக்கான வண்டிகளைக் கட்டிக்கொண்டு சாரிசாரியாக வருகிறார்கள். பேராவூரணியிலே நடந்தது, பட்டுக்கோட்டையிலே நடந்தது, ஒரத்தநாட்டிலே நடந்தது, அந்த மாநாடுகளுக்குப் போய்ப் பார்த்தால் பெண்கள் முதற்கொண்டு வருகிறார்கள், ஏன்? அவனுக்கு அச்சம் வந்து விட்டது. இந்த வீழ்ச்சியிலேயிருந்து நாம் எப்படி மீளப்போகிறோம், இதிலிருந்து நமக்கு விமோசனம் கிடைக்குமா என்று பார்க்கிறார்கள். அரசியல் ரீதியில் யார் வருகிறார்கள், யார் வரவில்லை என்பதைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. அவனுக்கு அச்சம் இருப்பதால் தான் நிவாரணம் வேண்டுமென்று கேட்கிறான். கடன் சுமை பற்றி மூன்றுண்டுகளுக்குப் பிறகுகூட அரசு முடிவெடுத்து அறிவிக்கவில்லை என்றால் எப்பொழுது அறிவிக்கப் போகிறது? எப்பொழுது விவசாயிகள் மனம் நிம்மதியாக இருக்கப் போகிறார்கள் என்பது தெரிய வேண்டும்.

மூன்று ஏக்கர் வைத்துக் கொண்டிருக்கும் ஒரு சாதாரண விவசாயி 4,000 ரூபாய்க்குக் கடன்காரனாக இன்றைக்குக் கூட்டுறவுச் சங்கத்திலே இருந்து கொண்டிருக்கிறான். தஞ்சை மாவட்டத்திலே மூன்று ஏக்கர் வைத்துள்ள விவசாயி— நான் ஓல்ட் டெல்டாவைச் சொல்லவில்லை, நியூ டெல்டாவைப்பற்றிச் சொல்கிறேன்— எங்கள் பகுதியில் கேட்டால், புஞ்சைப் பகுதியாக இருக்கிறது— இங்கே மூன்று ஏக்கர் வைத்திருப்பவர் குடும்பம் முழுவதும் உழைத்தும் இரண்டாயிரம் ரூபாய் கிடைக்கும் அளவிற்குத்தான் விளைச்சல் இருக்கும் என்று அனுபவம் மிக்க விவசாயி கணக்கு சொல்கிறான். அதுவும் போய் இந்த ஆண்டு ஒன்றுமே விளையவில்லை. தஞ்சை மாவட்டத்தில் உள்ள விளைச்சல் சகிக்க முடியவில்லை. தாங்க முடியவில்லை. நான் ஒன்றைச் சொன்னால் கற்பனை என்று கருதக் கூடாது. என்னுடைய பக்கத்து வீட்டுக்காரன், பங்காளி, இரண்டரை ஏக்கர் நஞ்சை சாகுபடி செய்கிறார்; நான் போனபொழுது கண்டுமுதல் என்ன என்று கேட்டேன். கூலி செலவு இல்லை. ஏனென்றால் தன் குடும்பத்திலுள்ள பெண்கள், பெண்டு பிள்ளைகள் உழைத்து, அவர்களே அறுத்து, இரண்டரை ஏக்கரில் 14 மூட்டை நெல் கிடைக்கிறது என்று சொல்கிறார். இந்த 14 மூட்டை நெல்லுக்கும் இன்றைக்கு மார்க்கெட் ரேட் என்ன தெரியுமா? 700 ரூபாய். இந்த இரண்டரை ஏக்கருக்கு அரசு கடன் கொடுத்திருப்பது ஆயிரம் ரூபாய். ஆனால் அவர்களுக்கு வந்திருப்பது 700 ரூபாய் பெறுமானமுள்ள தானியம். இப்படியிருந்தால் அவனுடைய கதி என்ன? எப்படி அவன் வாழ்வான்? அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டாமா? வாங்கிய கடனைக் கொடுக்காமல் இருக்க முடியுமா என்று கேட்கலாம். அது உண்மைதான். வாங்கிய கடனைத் கொடுக்கத்தான் வேண்டும். அவர்கள் இருந்தால் கொடுத்து விடுவார்கள். அவர்கள் நாணயத்தோடு இருக்க

வேண்டுமென்று நினைக்கிறவர்கள். கூட்டுறவுச் சங்கச் சரித்திரத்தைப் பார்த்தால் தெரியும். விவசாயிகள் யாரும் ஏமாற்றவில்லை. மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள் பழைய கணக்குகளைப் பார்க்க வேண்டும். யாரும் ஏமாற்ற வில்லை, ஒழுங்காகக் கட்டியிருக்கிறார்கள். எங்கோ ஒன்றிரண்டு பேர் முடியாமல் கட்டாமல் இருந்திருக்கலாம், பிறகு அவர் களிடமும் வசூல் செய்திருக்கிறார்கள். ஆனால் இன்றுள்ள நிலைமையில் அவனால் கொடுக்க முடியவில்லை, ரீபேயிங் கெபா சிட்டி, அதாவது திருப்பிச் செலுத்தும் சக்தியை அவர்கள் இழந்து விட்டார்கள். அப்படிப்பட்ட நிலையில் வசூல் செய்ய ஆரம்பித் தால் என்னவாகும் என்பதைச் சிந்தித்துப் பார்கக வேண்டும்.

(பிற்பகல் 12.30)

நீங்கள் கடன்களை ரத்து செய்யாமல் கடுமையான நடவடிக்கை களை எடுப்பீர்களானால், நிலம் உடைய ஆயிரக்கணக்கானவர் கள், நிலமற்ற கூலி விவசாயிகளாக மாறுவார்கள். முன்னாலே ஏற்பட்ட கடன் சுமையால்தான் கூலி விவசாயிகள் அதிக மானார்கள் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் இருந்தபொழுது அதன் புள்ளி விவரம் எடுத்துக் காட்டியது. அவனால், கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை, கடன் சுமை யிலிருந்து மீள முடியவில்லை. அந்நிலையிலே, சொந்த நிலத்தை விற்று, கடனைத் திருப்பி கொடுத்தார்கள். அதனால், கூலி விவசாயிகள் அதிகமானார்கள். இன்றைக்கு, விவசாயிகளது கடனை ரத்து செய்யாமல், அரசு வசூல் செய்தால் நிலமற்ற வர்கள் எண்ணிக்கை மிக அதிகமாக ஏறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடன்களை ரத்து செய்வதில் சங்கடங்கள் இருக்கின்றன, தெரிகிறது. கோடிக்கணக்கான ரூபாயைக் கொடுத்துள்ளீர்கள். அதை ரத்து செய்யுங்கள் என்று வேடிக்கையாகச் சொல்ல வில்லை. ஆனால், விவசாயிகளால் கடன் சுமையைத் தாங்க முடியவில்லை. அவனுக்கு உற்பத்தியிருந்தால்தானே பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியும். நாங்கள் யாரிடம் சொல்ல முடியும்? உங்களிடம் தானே சொல்ல முடியும். அதற்கான வழியை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

பெரிய விவசாயிகளைப் பற்றி நான் சொல்லவில்லை. அவர்கள் 4%, 3% இருக்கிறார்கள். அவர்களுக்காக நான் வாதாடவில்லை. அவர்கள் விஷயத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கணிப்பு தவறு என்பது எங்களுடைய கருத்து. பெரிய விவசாயிகள் சேர்ந்து கொள்கிறார்கள். எல்லோருக்குமே பிரச்னை இருக்கிறது. பெரிய விவசாயிகள் பிரச்னைகளைச் சொல்வதில் கலந்து கொள்ள முடியாது என்று சொல்ல முடியாது. அவர்களை வராதே என்று சொல்ல முடியாது. சுதந்திரப் போராட்டத்திலே முதலாளிகளும் சேர்ந்து



தான் போராட்டம் நடத்தினார்கள். ஆகவே, அரசு நிவாரணம் அளிக்கும்போது யாருக்கு நிவாரணம் அளிப்பது என்பதை ஆராய்ந்து, யாருக்கு அளிக்க வேண்டுமோ அவர்களுக்கு திட்ட வட்டமாக உதவி செய்யவேண்டும். ஆகவே, அரசு ஏதாவது செய்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சையிலே விளைச்சல் மிக மோசமாக இருக்கிறது. அரசு வரி எல்லாவற்றையும் வஜா செய்ய வேண்டும், கடன்களை ரத்து செய்ய வேண்டும். எத்தனையோ வரிகள் போட்டிருக் கிறார்கள். அதையெல்லாம் நீங்கள் போட்டீர்கள் என்று சொல்லவில்லை, முன்னாலே போட்டது. முன்னாலே விளைச்சல் இல்லாதபோது 3 தடவை வரி வஜா செய்திருக்கிறார்கள். இந்தத் தடவையும் வரி வஜா செய்ய வேண்டிய நிலைமை யிருக்கிறது. முன்னாலே 3 தடவை வஜா செய்தாகிவிட்டது, இன்னுமா கேட்கிறாய் என்று சொல்லாதீர்கள். விளைச்சல் இல்லை, அவர்களால் வரியைக் கட்ட முடியாது. ஆகவே, ஏதாவது செய்தாகவேண்டும். நான்கூட ராஜராஜன் என்ற நெல்லை போட்டேன். ஆனால், விளைச்சல் சைபர் ஆகிவிட்டது. நான் நெல்லைக் கோளாறு என்று சொல்லவில்லை, காலக் கோளாறு அது. ஆகவே, தஞ்சை ஜில்லா விவசாயிகளுக்கு நிச்சயமாக வரி வஜா செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

அடுத்து விவசாயக் கூலிகள் இருக்கிறார்கள். விவசாயக் கூலிகளது நிலை என்ன? அடிமட்டத்திலிருக்கிற பெரும்பான்மை யான மக்களைப்பற்றி அரசு ஒன்றும் கவனம் செலுத்தவில்லை யென்பது என்னுடைய குற்றச்சாட்டு. நெசவாளிகள் சமூகம், சிறு விவசாயிகள் சமூகம், விவசாயக் கூலிகள் இவர்களெல்லாம் சேர்ந்ததுதானே அரசியல். அவர்களில்லாமல் வேறு என்ன அரசியல். இந்த அரசு பொறுப்பேற்ற 20 மாதகாலத்திலே அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளாலே அவர்களுக்கு கிடைத்த பலன்கள் என்ன என்று பார்த்தால், எந்தப் பலனும் கிடைத்ததாக என்னால் கூறமுடியவில்லை. எல்லா மாவட்டங் களுக்கும் நான் போனேன். பெண்களுக்கு ரூ. $1\frac{1}{2}$, முதல் ரூ. $2\frac{1}{2}$ -க்கு மேல் கூலி கொடுப்பதில்லை. ஆண்களுக்கு தஞ்சை மாவட்டத்திலே ரூ. $4\frac{1}{2}$, ரூ. 5 கூலி கிடைக்கிறது. குறைந்த பட்சக் கூலி இருக்கிறது, பெண்களுக்கு ரூ. $3\frac{1}{2}$, ஆண்களுக்கு ரூ. $5\frac{1}{2}$ என்று, சட்டமே இருக்கிறது. ஆனால் அதை அமுலாக்கு வதில்லை. இப்பொழுது கொடுக்கப்படும் கூலியால் ஒரு குடும்பத்திற்கு ரூ. 120-க்கு மேல். வருமானம் வருவதில்லை. ஏனெனில், 15 நாட்களுக்கு மேல் அவர்களுக்கு வேலை கிடையாது. ரூ. 100, ரூ. 125-லே வாழ்க்கை நடத்த முடியுமா? 30% நில உடமையாளர்களில் 20% சிறு உடமை யாளர்கள். 50% மேல் சமுதாயத்திலே மிக மோசமான நிலைமையிலே வாழ்கிறார்கள். ஏக் ந்த நிலைமை.? நான் ஒரு கணக்கு போட்டேன். மிகமிக குறைந்த அளவு செலவு

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1979 பிப்ரவரி 16

செய்தால்கூட, மாதம் ஒன்றுக்கு ரூ. 300-க்குக் குறைந்து
குடும்பம் நடத்தமுடியாது. ஆனால், வருகின்ற ரூ. 125
வருமானத்திலே எப்படி வாழ்க்கை நடத்தமுடியும்? எந்தச்
சட்டத்தைப் போட்டாலும் அமுலாக்குவது கிடையாது. ரூ. 5½
ரூ. 3½ கூலி சட்டத்தைக்கூட அமுலாக்குவதில்லை. அதை
அமுல்படுத்தினாலே சமுதாய அடிமட்டத்திலே உள்ளவர்களுக்கு
பெரிய வரப்பிரசாதமாக இருந்து இருக்கும் என்று கருதுகிறேன்.
அவர்கள் பான்டட் லேபர் அல்ல. அதைவிட மோசமான
வாழ்க்கை வாழ்கிறார்கள். மிருக வாழ்க்கை வாழ்கிறார்கள்.
அவர்களைப் பற்றி நீங்கள் எண்ணிப் பார்த்தீர்களா? தயவு
செய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சொந்த நிலம் வைத்துள்ள விவசாயிகளின் கதியே மோசம்
என்றால் குத்தகை விவசாயி எப்படிக் குத்தகை கொடுப்பான்.
யோசனை செய்து பார்க்க வேண்டும். கோவில் நிலம் இருக்கிறது.
கோவில் நிலம் காப்பாற்றப்பட வேண்டும், கலைச்செல்வம்
காப்பாற்றப் படவேண்டும் என்பதிலே யாருக்கும் அபிப்பிராய
பேதம் கிடையாது. கோவில் நிலங்களில் உழைக்கின்ற விவசாயி
வாழ மாதம் 300 ரூபாய் கிடைக்க உத்திரவாதம் வேண்டாமா?
குத்தகை கொடுக்க முடியுமா? குத்தகை கொடுக்கிற சக்தி இருக்
கிறதா? என்றால் இல்லை. எல்லாவற்றையும் இழந்து இருக்கிற
மோசமான நிலைமை இருக்கிறது. சொசைட்டியிலே கடன்
வாங்கி இருக்கிறான். அதைச் செலுத்த முடியவில்லை. ஆக
அவனுடைய பிரச்னையைக் கவனித்து ஆகவேண்டும். விவசாய
வருமான வரி போடுகிறார்கள். பெரிய மிராஸ்தார்கள் பற்றிச்
சொல்லவில்லை. மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் ஒரு
கூட்டத்திலே பேசும்போது சொன்னார்கள். வஜா செய்யப்பட்ட
இடங்களில் வருமான வரி வாங்கப்பட மாட்டாது. என்று வஜா
செய்யப்பட்ட இடங்களில் வருமானவரி வாங்கி இருக்கிறார்கள்.
இதை அவர்களுடைய கவனத்திற்கு எடுத்து வைத்திருக்கிறேன்.
ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

எம்ப்ளாய்மென்ட் கேரன்டி ஸ்கீம் கொண்டு வந்திருக்கிறார்
கள். அது மிக நல்ல திட்டம். அதில் யாருக்கும் அபிப்பிராய
பேதம் கிடையாது. ஆனால் அதை எப்படி அமல் நடத்தப்
போகிறீர்கள். ? விவசாயம் செய்கின்றவர்கள் 15 நாட்களுக்கு
வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு 25 நாட்கள் வேலை
கிடைக்க உத்தரவாதம் ஏதாவது கொடுக்கவேண்டும். ஆக
மீண்டும் 10 நாட்களுக்கு அரசு வேலை கொடுக்கவேண்டும்.
படித்தவர்களுக்கு நீங்கள் வேலை உத்தரவாதம் கொடுக்கலாம்.
படிக்காதவர்களுக்கு வேலைவாய்ப்பிற்கு முழுமையான ஏற்பாடு
களை செய்யவில்லை என்றால் நிறைவு பெற்றதாக இருக்கவே
முடியாது. நீங்கள் அளித்திருக்கின்ற அறிக்கையில் போதிய
விவரம் இல்லாத காரணத்தினால் அடிப்படையிலேயிருந்து இந்தக்
கண்ணோட்டத்திலே சிந்தித்துச் செயல்படவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.



1979 பிப்ரவரி 16] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

ஏழைகள் குடும்பத்திலே உள்ள படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் முன்னுரிமை தரவேண்டும் என்று அரசு விரும்புகிறது என்பதை ரொம்ப நாளாக சொல்லிக்கொண்டிருக்கிறாம். How to implement it? Where is the Government machinery? அதற்கு என்ன சாதனம் வைத்திருக்கிறீர்கள். அதைச் செயல்படுத்துவதற்கான மெஷினரிகள் இருக்கின்றனவா? அதைச் செயல்படுத்துவது மிகவும் கஷ்டம். ஆந்திராவிலே இப்படிப்பட்ட ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஏழை எளியவர்களுக்கு முன்னுரிமை கொடுப்போம் என்று சொன்னார்கள். அப்போது படித்து வேலையில்லாத எல்லோருமே ஏழைகள் என்று சர்ட்டிபிகேட் வாங்கிக் கொண்டு வந்து விட்டார்கள். நடைமுறையில் சிக்கல் ஏற்பட்டுவிட்டது. அதை நாம் எப்படி கண்டு பிடிப்பது? ஒவ்வொரு குடும்பத்துக்கும் சொத்து-வருவாய் குறிக்கப்பட பாஸ் கொடுக்கப் போகிறோம் என்று சொன்னார்கள் அதிலே ரெவின்யூ அதிகாரிகள் என்ட்ரி போட்டு வைப்பார்கள். பாஸ் புத்தகங்கள் வழங்கப்பட்டிருந்தால் நடைமுறைப்படுத்தியிருந்தால் இதை அமுலாக்குவதற்குச் சுலபமாக இருக்கும்.

அடுத்து மதுவிலக்குத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மதுவிலக்கு வேண்டும் என்பதிலே அபிப்ராயபேதம் கிடையாது. ஆனால் இது சரியாக அமல் நடத்தப்படுகிறதா என்றால் இல்லை. சாராயம் காய்ச்சுகிறார்கள், குடிக்கிறார்கள் நாட்டிலே எங்கு பார்த்தாலும். அதனாலே எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்கூட மதுவிலக்கையே ரத்து செய்துவிடலாம் என்று சொன்னார்கள். அது அவர்கள் சொந்தக் கருத்து. ஆனால் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் மதுவிலக்குக் கொள்கையில் நம்பிக்கை இருக்கிறது. ஆனால் நீங்கள் சட்டம் போட்டால் மக்கள் பயந்து குடிப்பதையே விட்டுவிடுவார்கள் என்று நினைக்காதீர்கள். அந்த நிலமை இன்னும் வரவில்லை.

(பிற்பகல் 12.40)

உங்களுக்கு அதிகாரிகள் ரிப்போர்ட் கொடுக்கலாம், எல்லாம் குறைந்து போய்விட்டது என்று கொடுத்து இருக்கலாம். ஆனால் உண்மையில் நிலைமை அப்படி இல்லை. நடைமுறையில் முன்பு நிலை எப்படி இருந்ததோ அப்படியே இருக்கிறது. ஆகவே, இதை அரசு கவனத்தோடு பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மினி பஸ்கள் தமிழ்நாடு முழுவதும் போடுவதாகத் திட்டம் போட்டு இருப்பதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறதே தவிர போடப்படவில்லை. அரசுப் போக்குவரத்துக்கழகங்கள் அந்த மினி பஸ்களை விடுகிறேன் என்று சொன்னால் கார்ப்பரேஷன்கள் போடுவதாகக் கூறுகிறார்கள். அதனால் எந்தவிதமான முடிவும் எடுக்க முடியாமல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அந்த மினி பஸ்களை எல்லா இடங்களிலும் போடுவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலமற்ற ஏழைகளுக்கு வீட்டு மனைப்பட்டா கிராமப்புற மக்களுக்குக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள், இப்போதும் நாம் கிராமப்புறத்தில் இருக்கும் மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் இனி மேல் எப்படிக்கொடுக்கப் போகிறார்கள் என்றால், பினாமி நிலத்தை எடுத்து கொடுக்கப் போகிறோம் என்று சொல்லி யிருக்கிறார்கள். பினாமி நிலம் எடுப்பதற்கு எங்களுடைய பூரண ஒத்துழைப்பு உங்களுக்கு உண்டு. ஆனால் நான் தெரிவிக்க விரும்புவது பினாமி நிலம் என்றால் நல்ல நிலமாகத்தான் வைத்துக் கொண்டு இருப்பார்கள். அது நல்ல வருவாய் உள்ள நிலமாகத் தான் இருக்கும். நஞ்சையாக இருக்கும். ஆகவே, அதை மனைப் பட்டாவாக மாற்றிக் கொடுப்பதற்கு முடியுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே, நான் தெரிவித்துக் கொள்வது, அரசாங்கம் காலக்கெடு போட்டு, போட்டு, இத்தனை ஆண்டுகளுக்குள் எல்லோருக்கும் மனைப்பட்டா வழங்கப்பட வேண்டும் என்று வைத்துக்கொண்டு செயல்பட வேண்டும். நீண்ட நாட்களுக்கு இந்தப் பிரச்னையை வைத்துக்கொண்டு இருக்கக் கூடாது. அடுத்து, கிராமப்புறத்தில் இருப்பவர்களுக்கு மட்டும் மனைப்பட்டா கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படியானால் நகர்ப்புறத்தில், டவுன் பஞ்சாயத்துக்களில் உள்ள வர்களுக்குக் கொடுக்கப்போவது இல்லையா? கேரளாவில் மிகத் தெளிவாகச் செய்து இருக்கிறார்கள். திருவனந்தபுரத்தில் இருப்பவர்களுக்குக்கூட மனை கொடுத்து இருக்கிறார்கள். நகர மாக இருந்தாலும் கிராமமாக இருந்தாலும் மனைப்பட்டா கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு என்ற வகையில் நாம் சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். தனியார் பள்ளிகளின் ஆசிரியர்கள் நல்ல முறையில் நடத்தப்படவேண்டும் என்று சட்டம் இருந்தாலும், அரசாங்க ஆணை இட்டாலும் அதை நிர்வாகத்தினர் மீறுகின்றனர். அதை அமல்படுத்த அவர்கள் தயாராக இல்லை. இதைத் தடுக்க எந்தவிதமான நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை. ஆகவே, அந்தத் தனியார் பள்ளியில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு என்ன பாதுகாப்பை இந்த அரசாங்கம் அளிக்கக் கருதினாலும், அது சரியான பாதுகாப்பை அளிக்கவில்லை நடைமுறையில் என்று பார்க்கிறபோது பாது காப்பளிப்பதற்கு வேண்டிய நட வடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் என்பது நடைமுறை யில் இருந்து வருகிறது. ஆனால் அந்தத் திட்டம் முழுமையான பயனைக் கொடுப்பதாக இல்லை. நீக்குப் போக்கு இல்லாத திட்டமாக அது இருக்கிறது. மாநில அரசு கூடி திட்டத்தை நடைமுறைக்கு ஒப்ப அமுலாக்க வேண்டும், அதைச் செய்ய





வேண்டும் இதை அரசு பரிசீலிக்க வேண்டும். இப்போது 1 ஏக்கர், $1\frac{1}{2}$ ஏக்கர் வைத்து இருக்கிற சிறு விவசாயிகளுக்கு மாடுகள் வாங்கு வதற்குக் கடன் தருகிறார்கள். அவன் மாட்டை வாங்கிவிட்டால், அதற்குத் தீனிபோட முடியாமல் இருக்கிறான், அதன் காரணமாக நிலத்தையும் போய் பார்க்க முடியவில்லை, மாட்டையும் கவனிக்க முடியவில்லை. ஆகவே, அவர்களுக்குக் கொடுக்கப்படும் அந்த உத வித்தொகை வேறு வகையில் வருவாயை ஈட்டித்தருகிற வகையில் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் இதைக் கவனத்தில் கொண்டு செயல் படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் மாடுகள், வண்டிகள் வாங்கிக் கொடுக்கும் நிலை இருந்தது. ஆனால் பலருக்கு இன்னும் சாங்ஷன் செய்யப்பட்ட பணமே கொடுக்கப்படாத நிலை இருப்பதாகத் தெரிகிறது. என்னிடத்தில் சிலர் வந்து முறையிட்டார்கள். நான் அலாட்மென்ட் வராததால் இருக்கும் என்று சொல்லி விட்டு வந்தேன். ஆகவே, அவற்றைக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறு விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கறவை மாடுகள் வழங்கப்படுகிறது. ஆனால் அந்தக் கறவை மாடுகள் உற்பத்தியை அபிவிருத்தி செய்ய எந்தவிதமான நடவடிக்கை யும் மேற்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே கறவை மாடுகள் அபிவிருத்தி தேவை என்ற அளவில் நல்ல கலப்பின மாடுகளை, பசுக்களை உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கலப்பின மாடு களை அதிகம் உற்பத்திச் செய்யாமல், மாடு வாங்கு, மாடு வாங்கு, கறவை மாடு வாங்கு என்று பணம் கொடுக்கிறார்கள். பணத்தை வாங்கிக்கொண்டு, மாடு வாங்கச் சென்றால் 500 ரூபாய் இருந்த மாட்டின் விலை 2,000 ரூபாயாகிவிடுகிறது. ஏனென்றால் எல்லோரும் வாங்கக்கூடிய அளவுக்கு மாடு உற்பத்தி இல்லை. ஆகையால பணத்தை வாங்கிவிட்டு, விவசாயிகள் பெருத்த சங்கடங்களுக்கு உள்ளாகிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி சிறு தொழில்கள் என்ற பெயரால் கொடுக்கின்ற பணம் உரியவகையில் பயன்படாமல், விரயமாகும் சூழ்நிலை ஏற்பட் டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஐ. என். ஏ. தியாகிகள் இருக்கிறார்கள். பலர் தியாகி பென்ஷன் கேட்டு மனு போடுகிற நிலைமை இல்லாமல் இருக்கிறது. ஒருவர் சிங்கப்பூரில் இருந்து கொண்டு. இப்போதுதான இங்கே வருகிறார் என்றால் அந்தத் தியாகி மனு செய்ய முடியவில்லை. காரணம் நாம் ஒரு கால நிர்ணயம் செய்திருக்கிறோம். அதற்குப் பின்னால் மனு : செய்ய முடியாது என்று இருக்கிறது. ஆகையால் இந்தக் கால வரையறை இல்லாமல்

ஐ. என். ஏ. தியாகிகள் எப்போது வேண்டுமானாலும் மனு செய்து கொள்ளும் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, ஐ. என். ஏ. யில் பாலர் சேனை என்று ஒன்று இருந்தது. முன்னால் அவர்களுக்கும் தியாகி பென்ஷன் கொடுக்கப்பட்டது. இடையிலே நிறுத்திவிட்டார்கள். அவர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவு; 40 அல்லது 50 பேர்கள்தான் இருப்பார்கள்: ஆகவே, இந்த அரசு அவர்களுக்கும் உதவித் தொகை கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்கள் பிற்பட்டோர் வகுப்பில் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய நேரத்தில் வேலைவாய்ப்பு கிடைக்கவும் வழியில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்தில் வயது வரம்பு தாண்டி விடுகிறது. அதற்குமேல் அவர்கள் அரசாங்க வேலையில் சேர முடியாது. வேலைக்கு மனு செய்துகொண்டே இருக்கிறார்கள். ஆனால் வயதின் உச்சவரம்பு காரணமாக வேலை பெறுவதற்குள்ள தகுதியை இழந்துவிடுகிறார்கள். வேலை கிடைக்காதது அவன் குற்றமல்ல, நிர்வாக நடைமுறைதான் காரணம். ஆகையால் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு அரசாங்க வேலையில் சேருவதற்கு உச்ச வயது வரம்பு என்பது இருக்கக்கூடாது. எல்லோருக்கும் வேலை கொடுக்க வேண்டும், வேண்டுமானால் சர்வீசை 58 வயது என்றோ அல்லது 60 வயது என்றோ வைத்துக்கொள்ளுங்கள்: ஆனால் வயது உச்சவரம்பு தேவையில்லை.

இப்போது 'டிசென்ட்ரலைசேஷன் ஆஃப் அட்மினிஸ்ட்ரேஷன்' என்ற முறையில் சில அலுவலகங்களை மாவட்டங்களுக்கு மாற்றியிருக்கிறது அரசு என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைத் தீர ஆலோசனை செய்துதான் செய்தீர்களா என்பது தெரியவில்லை. டிசென்ட்ரலைசேஷன் என்று சொல்லும்போது கீழ் மட்டத்தில் இருக்கிற அதிகாரிகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமே தவிர, ஓரிடத்திலிருக்கும் அலுவலகத்தை இன்னொரு இடத்திற்கு மாற்றுவது அல்ல; அல்லது இன்னொரு அதிகாரியை நியமிப்பது அல்ல. வீட்டுவசதி கூட்டுறவு சங்கம் திருச்சிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இதனால் இன்னும் பல சிக்கல்கள்தான் ஏற்படும். ஏனென்றால் அவர் ஒரு அடிஷனல் ரெஜிஸ்ட்ரார்தான். சென்னையில் இருக்கும் ரெஜிஸ்ட்ராரைக் கலந்துகொண்டுதான் அவர் எல்லாவற்றையும் செய்ய முடியும். அப்படி வரும்போது அவர் ஒவ்வொரு காரியத்திற்கும் திருச்சியிலிருந்து சென்னைக்கு வந்து போக வேண்டும். அரசுக்கு ஏதாவது குறிப்பு அனுப்ப வேண்டுமென்றாலும் அவர் ரெஜிஸ்ட்ராரைக் கலந்து கொண்டுதான் அனுப்பவேண்டும்: அவராக அனுப்ப முடியாது. ஒரே இடத்தில் இருக்கும்போதே 'ரெட் டேப்பிசம்'—காலதாமதம் ஏற்படுகிறது. இப்படிப் பிரித்து வைப்பதானல் மேலும் காலதாமதம் ஏற்படுமே தவிர நிர்வாகம் சீரடைய வழியில்லை. அப்படி மாற்றுவதனால்





திருச்சி மக்களுக்காவது பிரயோசனம் உண்டா என்றால் அதுவும் இல்லை. இந்த நடவடிக்கையினால் சிக்கல்தான் ஏற்படுகிறதே தவிர பலன் ஒன்றுமில்லை. ஆகவே, இப்படி அலுவலகங்களை மாற்றக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவாபரேடிவ் சென்ட்ரல் சொசைட்டி சென்னையில் இருக்கிறது. அலுவலகத்தை திருச்சிக்கு மாற்றிவிட்டதனால் திருச்சியிலுள்ளவர்களுக்குக் கூட்டுறவு கடன் கிடைக்கவில்லை என்றால் உடனே என்ன ஆச்சு என்பதைத் தெரிந்துகொள்ள சென்னைக்குத்தான் வரவேண்டும். ஆகவே, இதில் சிரமம்தான் மிச்சம். அதனால் இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இராமேஸ்வரத்தில் சுமார் 500 விசைப் படகுகள் புயலால் உடைந்து சேதமடைந்தன. அவர்களுக்கு எந்தவிதமான உதவியும் அரசு மூலமாகக் கிடைக்கவில்லை. அமைச்சர்கள் எல்லாம் போய்ப் பார்த்திருக்கிறார்கள். 5,000 ரூபாய் கடனும், 5,000 ரூபாய் மானியமும் தருகிறோம், நீங்கள் பழுதுபார்க்கும் வேலைகளைச் செய்யுங்கள் என்று வாக்குறுதி அளித்ததாகச் சொல்கிறார்கள். பத்திரிகையிலும் அந்தச் செய்தி வெளியானதாகச் சொல்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இன்னும் எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை. அதுபற்றி அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கைத்தறி நெசவாளர்கள் பிரச்சனைபற்றி குறிப்பிட விரும்புகிறேன், பீடித் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் இருப்பதைப் போல கைத்தறி நெசவாளர்களுக்கும் விசைத்தறி நெசவாளர்களுக்கும் பாதுகாப்புச் சட்டம் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் மாஸ்டர் வீவர்ஸிடம் மாட்டிக்கொண்ட தொழிலாளர்களுக்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லாமல் போய்விடும். ஆகையால் கைத்தறி நெசவாளர்களுக்கும் விசைத்தறி நெசவாளர்களுக்கும் தனித்தனியாக பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்து பாதுகாப்பு அளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12 50)

அடுத்து திருச்சியிலே சிம்கோ மீட்டர்ஸ் விவகாரம் பற்றி மதிப்பிற்குரிய உமாநாத் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். நான் அவர்கள் பேசிய அந்த விவகாரத்தின் உள்ளே போக விரும்பவில்லை. அவர்கள் வீட்டிலே கூட புகுந்து தாக்கியதாகக் கூறப்படுகிறது, ஆகவே அவருக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்ற அந்த வகையிலே எனக்கு அபிப்ராய பேதம் கிடையாது. ஆனால் அங்கே இருக்கின்ற தொழிற்சங்கங்களின் நிலையைப் பற்றிச் சொல்ல வேண்டி இருக்கிறது. அங்கே முன்பு அய். என். டி. யூ. சி. என்ற ஒரே ஒரு சங்கம்தான் இருந்தது. இண்டஸ்ட்ரியல்

டிஸ்ப்யூட் ஆக்ட், செக்ஷன் 123-ன்படி அவர்கள் ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். அந்த அக்ரீமென்டின்படி அந்தச்சங்கத்தினர் தங்களுடைய அக்ரீமென்டைப் பாதுகாக்கின்ற வகையில் அவர்கள் வேலை செய்து கொண்டு வருகிறார்கள். ஆனால் சி.அய்.டி.யூ சங்கத்தினர் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அவர்கள் வேலை நிறுத்தம் செய்வது பற்றி ஒன்றும் ஆட்சேபனை இல்லை ஆனால் அவர்கள் வேலை நிறுத்தம் செய்யாதவர்களை வேலைக்குச் செல்லாமல் தடுக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே வேலைக்குப் போகின்றவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, வேலை செய்கிறவர் களைத் தடுத்தார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். நான் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன் வேலை நிறுத்தம் நடைபெற்ற அந்த இடத்திலே இருந்த அதிகாரிகள் வேலை நிறுத்தம் செய்பவர்களைத் தடுக்கப் போகிறீர்களா, உங்களது யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்கள் அவர்களைத் தடுப்பார்களா என்று கேட்டதற்கு வேலைக்குச் செல்கின்றவர்களைத் தடுக்க மாட்டார்கள், ஆனால் செல்பவர்கள் மற்றவர்களை வந்து வேலை செய்ய வேண்டும் என்று நிர்பந்தம் பண்ணக்கூடாது என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது நடந்தது என்னவென்றால் என்னுடைய வீட்டைக்கூட தாக்கி இருக்கிறார்கள். இந்த மாதிரி நடந்திருக்கிறது....

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, திரு. உமா நாத் அவர்களைத் தாக்கியதைப் பொறுத்த வரையில், அவர் களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்ற பிரச்சினையைப் பொறுத்த மட்டில் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை கிடையாது. ஆனால் வேலைக்குப் போகின்றவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன், என்னுடைய தொகுதியிலே காலேஜ் ஆரம்பிக்க வேண்டும் என்று முயற்சி செய்யப்பட்டது. ஆனால் ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே அங்கே ஒரு பாலிடெக்னிக் காவது அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், அடுத்து அங்கே ஒரு சப் கோர்ட் ஆரம்பிக்க வேண்டும் என்றும் நீண்ட நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக் கிறார்கள்....

திரு: மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, மன்னார் குடியிலே எஸ். டி. எம். கோர்ட் இருக்கிறது. முதலமைச்சரவர் களிடம் அது குறித்துச் சொல்லியிருக்கிறேன், ஆகவே அதற்கு ஆபத்து வந்துவிடுமோ என்கின்ற நிலை ஏற்படுகிறது...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உட் காருங்கள் அவரவர் தொகுதிக்குரியதை அவரவர்கள் கேட்க உரிமை இருக்கிறது. அதை எப்படி நீங்கள் கேட்கக்கூடாது என்று சொல்லமுடியும்.





திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, திரு. அம்பி காபதி அவர்களுடைய பிரச்சினைக்கு நான் போகவே இல்லை. அதில் தலையிடவே இல்லை. நான்சொல்வது சப்-கோர்ட் பற்றி, அவர் குறிப்பிடுவது எஸ். டி. எம். கோர்ட் பற்றி.

அடுத்து இராமேஸ்வரம் எக்ஸ்ப்ரஸ் காரைக்குடி-திருச்சி வழியாகச் செல்கிறது. அதை பட்டுக்கோட்டை, அறந்தாங்கி வழியாக விடுவதற்கு நமது மாநில அரசு முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு மாநில அரசு தன்னால் இயன்ற அனைத்து முயற்சியையும் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பட்டுக்கோட்டை பகுதியிலே பல இடங்கள் வெள்ளத் தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே ரோடுகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. பல பள்ளிக்கூடங்கள் பாதிக்கப் பட்டிருக்கின்றன. பல கட்டிடங்கள், போதிய தொகை ஒதுக்கப்பெறாத காரணத்தால் இன்னும் மோசமான நிலையி லேயே இருக்கின்றன.அவை பழுது பார்க்கப்படாமல் கிடக்கின்றன, ஆகவே அந்தப் பகுதிக்கென்று அதிகப்படியான தொகை ஒதுக்கி பழுதுபட்ட கட்டிடங்களையும், ரோடுகளையும் சீர்திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு, நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு இருப்பதால் என்னுடைய கருத்துக்களை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

*திரு. க. அன்பழகன்: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டினுடைய ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரைமீது ஆளும் கட்சி சார்பில் நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்திற்குப் பல திருத்தங்களைத் தருகிற எதிர்க்கட்சியின் சார்பில் நான் பேசுகிற வாய்ப்ப ஏற்பட்டிருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆளும்கட்சி நன்றி தெரிவிக்க வேண்டியது மிக அவசியமான ஒரு காரியம் என்பதை நான் உணர்வேன். அப்போதுதான் ஆளுநர் உரை நிகழ்த்த வருகிற போது, சிறப்பான கருத்துக்களை வழங்க முடியாத போது ஆளுநர் அவர்களுக்கு மன நிறைவு ஏற்பட முடியும். அப்படி யில்லாவிட்டால் வந்து போவது கூட ஆளுநர் அவர்களுக்கு ஒரு சடங்காகத்தான் தோன்றும். எனவே அந்த சங்கடமான சடங்கை நிறைவேற்றியதற்காக ஆளும் கட்சி நன்றி தெரிவிக்கத் தான் வேண்டும். ஆனால் எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில் உரையில் கருத்துக்கள் பயனுள்ள வகையில் இருக்குமானால் நன்றி தெரிவிக்கிற கருத்துக்கு மாற்றுக் கருத்து இருக்க வேண்டிய அவசியமிருக்காது. ஆனால் ஆளுநர் உரை அவ்வாறு அமையவில்லை. ஆளுநர் 1977ஆம் ஆண்டில் உரைநிகழ்த்திய போது பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைகளை மிகவும் வலியுறுத்தும் வகையில் அவ்வுரையின் பல்வேறு பகுதிகள் இடம் பெற்றிருந்தன என்று நான் இந்த அவைக்கு நினைவூட்ட விரும்புகிறேன். 1978ஆம் ஆண்டு கொள்கைகள்

ஓரளவிற்கு வலியுறுத்தப்பட்டு சில திட்டங்களை நிறைவேற்று வோம் என்ற நம்பிக்கை ஊட்டப்படுகிற முறையில் வாசகங்கள் அமைந்திருந்தன என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன். 1979ஆம் ஆண்டு, இந்த ஆண்டு உரையில் கொள்கைகள் தேய்ந்து, திட்டங்கள் மறைந்து, கற்பனைகள் உருவாகி ஏதோ ஒரு வகையில் இந்த உரை இன்றையதினம் உருவாக்கப் பட்டிருக்கிறது என்பதை நான் காண்கிறேன். இந்த மூன்று உரைகளையும் சேர்ந்து பக்கத்திற்குப் பக்கம் வைத்துப் படித்துப் பார்த்து ஆளும் கட்சி நண்பர்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆளும் கட்சியாய் இருப்பது என்பது எளிதான காரியம் அல்ல. கடுமையான பொறுப்பு வாய்ந்தது. எனவே அந்தக் கடுமையான பொறுப்பு களின் இடையில் அவ்வப்போது நடைபெறுகிற நிகழ்ச்சிகளைப் பல்வேறு ஆளுநர் உரைகளை ஒப்பிட்டு பார்க்கமுடியாத நிலையில் நீங்கள் இருக்கின்றீர்கள். இந்த ஆட்சியின் குறைகளை அல்லது குற்றங்களை அல்லது தவறுகளைக் களைய என்ன திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்? இந்தத் தவறுகள் எல்லாம் முன்னாள் ஆட்சியில் நடைபெறவில்லையா. முன்னாள் ஆட்சியில் இருந்தவர்கள் செய்ததை நாங்களும் செய்கிறோம் என்ற வாதம் பல நேரங்களில் எடுத்து வைக்கப்படுகிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அந்த முறையில் தங்களது கருத்துக்களை எடுத்து வைப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. குற்றங்கள் நடைபெறுகின்றன என்று சொல்லும்போது ஆளும் கட்சி பொறுப்பேற்று அந்தக் குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமே தவிர இதற்கு முன்பு நடைபெறவில்லையா என்று கேட்பது வெறும் வாதமாக இருக்குமே தவிர அது பயனுள்ள வாதமாயிருக்காது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

காவல் துறையினரிடம், பொதுமக்களில் சிலர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வீட்டில் திருட்டு போகிறது, திருடர்கள் நுழைந்திருக்கிறார்கள், அதைத் தடுக்கவேண்டும் என்று கேட்கிற போது காவல்துறையினர் உங்கள் வீட்டில் மட்டுமா திருட்டுப் போகிறது, ஊரெல்லாம் திருட்டுப்போகிறது, இப்போது மட்டும் அல்ல பல ஆண்டுகளாகத் திருட்டுப்போகிறது, ஆகவே இப்போது நீங்கள் தொலைபேசி மூலம் புகார் சொல்லி என்ன பயன் என்று கேட்டால் எப்படியோ, அப்படித்தான் ஆளும் கட்சியினரால் நாட்டில் நடைபெறுகிற அக்கிரமங்களையெல்லாம் எடுத்துச் சொல்கிறபோது, அப்படிப்பட்ட அக்கிரமங்களை யெல்லாம் முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களே நேரடியாகச் செய்வதுபோல நாங்கள் சொல்வதாக எண்ணிக்கொண்டு முதல் அமைச்சர் அவர்களைப் பாதுகாப்பதாகவும் எண்ணிக்கொண்டு நிர்வாகத்திலே இருக்கும் குறைகளைக் கண்காணிக்க வேண்டுமே என்ற உணர்வு கூட இல்லாமல் இப்படிப்பட்ட தவறுகள் முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் ஆட்சியில் இருந்த போது, அந்தக் கட்சி ஆட்சியில் இருந்தபோது நடக்கவில்லையா



(பிற்பகல் 1·00)

என்று கேட்பதும் சரியல்ல. இன்றையதினம் எதிர்க்கட்சிக் காரர்கள் எல்லாம் ஒரே குரலில் ஒரேவிதமாக பேச்சைப்பேச தலைப்பட்டிருக்கின்றனர் என்று சொல்வதும் எதிக்கட்சிகள் ஒன்றுசேர்ந்து சொல்லக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறதே என்ற கவலையின் விளைவாகப் பிறக்கிற வாதமே தவிர. தெளிவானமுறையில் முறையோடு நடந்துகொள்கிறோம் என்ற உறுதியான எண்ணம் ஆளும்கட்சியினருக்கு இருந்தால் அப்படிப் பட்ட வாதங்களே பிறக்காது. 77-வது ஆண்டு ஆளுநர் உரையில் சொல்லப்பட்ட ஒரு கருத்து, ''இந்திய யூனியன் பொருளாதார அமைப்பைவலுப்படுத்தமாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப் படும்'' என்று பாரதப் பிரதமர் உறுதியளித்திருப்பதையும் வரவேற்கிறோம். ''மாநிலங்களையும் வலுப்படுத்தினால்தான் மத்திய அரசு வலுவுள்ளதாய் இருக்குமென்பது இப்போது மேலும் மேலும் உணரப்படுகிறது. இவ்வகையில் இந்தியக் கூட்டாட்சி அமைப்பிலுள்ள ஏற்றத்தாழ்வுகள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் தக்க திருத்தங்கள் செய்வதன் மூலமாக விரைவில் சீராக்கப்படும் என நம்புகிறோம்.. ..'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிரதமர் சொன்ன காரணத்தால் வரவேற்கிறோம் என்கிறார்கள். பிரதமர் சொன்னால்தான் வரவேற்க முடியும் என்கிற எண்ணம் நம்மிடையே இடம் பெற்றிருக்கிறது. ஆனால் அது நம்பிக்கை காட்டுவதாக 77-ல் கருத்து சொல்லப்பட்டது. அதற்குப்பின்னர், கூட்டாட்சி அமைப்பில் திருத்தம் பெற வேண்டும் என்று அழுத்தந்திருத்தமாக சொல்லப்பட்ட கருத்து 78-ல் இடம் பெறவில்லை.. 78-ல் கூறப்பட்டது.... ''மேலும், மாநில அரசுகளின் பொறுப்பில் உள்ள வேளாண்மை, மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளின் கீழ், மத்திய அரசு நாடு முழுமைக்குமாக சிறப்புத்திட்டங்கள் பலவற்றை தீட்டி, மாநிலங்கள் அவற்றை செயல்படுத்தும் நிலை மாறி, இந்தத் துறைகளில் மத்திய அரசு தீட்டும் திட்டங்கள் மிகக் குறைவாக இருக்கவேண்டுமென்று 1968-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்திய கருத்து மீண்டும் தமிழக அரசினால் வலியுறுத்திக் கூறப்பட்டது....'' என்கிற கருத்து மத்திய அரசுக்கு தெரிவித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் பொறுப்பில் உள்ள வேளாண்மை, மருத்துவம் இன்னும் சிலதுறைகளில் அகில இந்திய ரீதியில் மாநிலங்களுக்குத் திட்டங்கள்தீட்டுகின்ற உரிமை மத்தியஅரசுக்கு இருப்பதை மாநில அரசுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் வற்புறுத்திய கருத்து மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டப்பட்டது, என்ற கருத்து இந்த மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது ஆனால் அந்தக்கருத்து வெற்றி பெற்றதா? அந்தக் கூட்டாட்சி தத்துவம் என்கிற கருத்து வெற்றி பெறு வதற்காக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? அது இன்னு வெற்றி பெறவில்லையானால் அதற்கு இனிமேல் என்ன செய்யப் போகிறோம்? இந்தக் கருத்து மேலும் மத்திய அரசிடம்

வலியுறுத்தப்பட்டதா? என்பதெல்லாம் இந்த ஆளுநர் உரையில் அரசாங்கத்தின் கொள்கையை விளக்குகிற இந்த உரையில் அதன் தொடர்பாக எடுத்துக்காட்டப்பட்டிருக்க வேண்டாமா?

அதுமட்டுமல்ல, 1978ஆம் ஆண்டு உரையில்.... இன்னொரு கருத்து ''மீண்டும் 'கல்வி', மாநிலங்களின் பொறுப்பில் வர வேண்டுமென்ற இந்த அரசின் உறுதியான கருத்தைச் செயல்படுத்துவதற்கான திட்டங்களை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதைப் பாராட்ட விரும்புகிறேன்..'' என்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. கல்வி மாநில அரசால் நிறைவேற்றுவதாக இருந்து, மத்திய அரசால் யோசனை மட்டும் கூறப்படும் நிலை இருந்து, அதற்குப் பின்னர் நெருக்கடி காலத்தில் மத்திய அரசால் கல்வி எடுத்துக் கொள்ளப்படலாம் என்ற நிலைமை ஏற்பட்டு அதன்மூலம் இந்தி மொழித் திணிப்பை மிக வேகமாக நிறைவேற்றி விடலாம் என்ற முடிவு செய்யப்பட்ட காலத்தில், பல்வேறு எதிர்ப்பு ஏற்பட்ட போதிலும், அவை ஏற்றுக்கொள்ளப்படாமல், இன்றைக்கு மத்தியிலிருக்கின்ற ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள் கல்வித்துறை போன்றவை மாநில அரசின் கீழ் இருக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்த காலத்தில், தமிழக அரசு இதை வரவேற்றது. ஆனால் இது வரை கல்வித்துறை மாநில அரசுக்கு உரியதாக மாற்றப்படவில்லை. மத்திய அரசு தொடர்புடைய பட்டியலில்தான் 'கல்வி' வைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு கூறுகின்ற திட்டங்களை எல்லாம் பெரும் செலவு செய்து செயல்படுத்துகின்ற அதிகாரம்தான் மாநில அரசுக்கு இருக்கிறதே தவிர, வகுப்புகளின் அமைப்பை மாற்றி அமைப்பதற்கோ, கல்வி முறைகளை மாற்றி அமைப்பதற்கோ, பல்கலைக் கழக விவகாரங்களில் தலையிடவோ, கல்வி பற்றிய மொழிப்பிரச்சினைகளில் முடிவு செய்யவோ இந்த மாநில அரசுக்கு உரிமை இல்லை. அது மத்திய அரசின் கையில்தான் இருக்கிறது. இதை மாற்ற அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான முயற்சி வற்புறுத்தப்பட்டிருக்கிறதா என்பதும் தெரியவில்லை. இந்த ஆளுநர் உரையில் வேளாண்மைப் பற்றியோ. மருத்துவம் பற்றியோ, மத்திய அரசு நிர்வகித்து வரும் வேறு பல துறைகள் பற்றியோ ஏற்கனவே கூறப்பட்டு வந்த கல்வித்துறை பற்றிய உரிமை மாநில அரசுக்கு இருக்கவேண்டும் என்பது பற்றியோ, அதன் அவசியத்தைப்பற்றியோ இப்போது ஆளுநர் உரையில் இல்லாததற்கு காரணம் பிரதமர் இதைப்பற்றிப் பேசினால் தான் பின்னர் தமிழக அரசு அதைப்பாராட்டலாம் என்ற நிலையில் விட்டு விட்டிருப்பதாகத் தெரிகிறது. பிரதமர் சொல்லவில்லை என்றால், நம்மால் வலியுறுத்திக் கேட்கமுடியவில்லை என்பதாலோ அல்லது பிரதமர் இதைப்பற்றிச் சொன்னால்தான் மாநில அரசு கேட்கலாம் என்ற முறையினாலோ இது விடப்பட்டிருக்கிறது. ஆக இதுபற்றி எதுவும் இந்த உரையில் தெரிவிக்காமல் விடப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவது என்னுடைய கடமை என்று எண்ணுகிறேன்.





அடுத்து நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, காவிரி நீர் பங்கீடு குறித்து. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், காவிரி நீர்ப்பங்கீடு குறித்து கர்நாடக மாநிலத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே இருந்த கருத்துவேறுபாடுகள் தீர்க்கப்படவில்லை என்றும், இந்த அரசு உடனடியாகப் பெரிய மாநாடு கூட்டி இதுபற்றி விவாதிக்கும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆளுநர் உரையில் காவிரிநீர்ப் பங்கீடு பற்றி எதுவும் இல்லை. முன்னாள் முதலமைச்சர் அறிக்கை விடுகிறார்கள், ட்ரிபுனலுக்கு விடவேண்டும், நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டும் என்றெல்லாம் கூறிக்கொண்டிருக்கிறார்கள். இது ஒரு சகோதரப் பிரச்சினை. இப்படிப்பட்ட மிக முக்கியமான ஒரு பிரச்சினையில், முக்கியமாக எடுத்துக்கூற வேண்டிய இந்த மக்களின் ஜீவாதாரமான பிரச்சினையில், இந்த அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதை இந்த ஆளுநர் உரையில் எடுத்துச்சொல்லப்படவில்லை. வேண்டுமானால் ஆளும் கட்சி சார்பில் முன்னாள் ஆளுங்கட்சியினர் மீது குற்றம் சுமத்துவதற்காக இந்தப்பிரச்சினைகளைப் பற்றிப் பேசலாம். ஆனால் அப்படித் தொடர்ந்து பேசுவதற்கும் முடியாது. முன்னாள் ஆளும் கட்சியின் பொறுப்பிலே இருந்த சிலர் இப்போதும் ஆளும் கட்சியிலே இருக்கிறார்கள். காவிரி நீர்ப் பிரச்சினையிலே ஆலோசனை வழங்கியவர் இப்போது அங்கே இருக்கிறார்கள். எனவே, அப்படியே பிரச்சினைகள் இருக்கிறபோது, முன்னாள் ஆளும் கட்சியினர் மீது ஆளும் கட்சியினர் குற்றம் சொல்லித் தப்ப முடியாது. ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் இரண்டு பேர்களையும் பொதுமக்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆளும் கட்சியினால் இந்தப் பிரச்சினை நிறைவேற்றப்படவில்லை என்ற கேள்வி எழுமே தவிர, ஏன் இன்னும் இவர்களால் செய்யப்படவில்லை என்று சொல்லிக்கொண்டு போவார்களே தவிர, நீங்கள் எண்ணுகின்றபடி மக்கள் கருதமாட்டார்கள். அதற்கான காரணமும் இருக்கிறது. ஆகவே, பேசிக்கொண்டே காலத்தைக் கடத்த முடியாது.

காவிரி நீர்ப் பிரச்சினை மட்டுமல்ல, கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தைப் பற்றியும் நம்பிக்கை தரப்பட்டது. அந்த முயற்சி எந்தக் கட்டத்தில் இருக்கிறது. எந்த அளவுக்கு அதிலே வெற்றி வாய்ப்பு இருக்கிறது, அதற்கு எத்தனை கோடி ரூபாய் தேவை, எவ்வளவு விரைவிலே அத்திட்டம் செயல்படுத்தப்படும் என்ற குறிப்பு ஆளுநர் அவர்கள் உரையிலே இல்லை.

வீராணம் திட்டத்தைப் பற்றி குற்றச்சாட்டு சொல்லுகின்ற நேரத்திலே, அந்தத் திட்டத்திற்காகப் போடப்பட்ட குழாய்கள் எல்லாம் கொண்டு போய் போடப்பட்ட அந்தந்த இடங்களிலேயே இன்றைக்கும் முடங்கிக் கொண்டிருக்கின்றன. இதிலே கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் வீணாகிக் கொண்டிருக்கின்றன. அதற்காக துறையிலே நியமிக்கப்

பட்ட அலுவலர்கள் சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் இதைப்பற்றிச் சொல்லும் போது, வீராணம் திட்டத்திலே ஊழல்கள் நடைபெற்றிருக்கிறது அந்த ஊழலை ஒழிப்போம், இந்த ஊழலை செய்வர்கள் மீது வழக்குகள்போட்டு, குற்றவாளிக் கூண்டிலே ஏற்றப்போகிறோம் என்று சொன்னாலும்கூட இன்றைக்கு இவர்கள் ஆட்சிக்கு வந்து இரண்டாண்டுகள் ஆகின்றன. அதற்கு முன்னால் குடியரசுத் தலைவர் அவர்கள் ஆட்சி நடந்தது. இவ்வளவு ஆண்டு காலமாக அந்தத் திட்டத்திற்காகப் போடப்பட்ட மூலதனம் வீணாகி இருக்கிறது. அதற்காக உற்பத்தி செய்யப் பட்ட பொருள்கள் வீணாகி இருக்கிறது என்பதற்கு யார் பொறுப்பு ஏற்பது? ஆண்டு ஒன்றுக்கு இதற்காக கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தீய நோக்கத்திலே நடந்ததாக இதை நான் சொல்லவில்லை, தெளிவு இருக்குமானால், புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் இருக்குமானால், இந்தத் திட்டத்தை கைவிட முடியுமா என்பதைப் பரிசீலனை செய்து பார்த்துவிட்டுக் கைவிட வேண்டும். நான் தி.மு.க.—விற்காக வாதாடவில்லை. வீராணம் திட்டம் நாங்கள் போட்ட திட்டம் என்பதற்காக வாதாடவில்லை. தமிழ்நாட்டு மக்களுடைய பொருள், இதிலே பெருநிதி செலவழிக்கப்பட்டு, இந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டிருப்பதற்காக வாதாடுகிறேன். என்னுடைய வாதம் எல்லாம், அதிலே எந்தவிதமான முயற்சியும் இல்லை, அக்கறையும் இல்லை என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

சேது கால்வாய் திட்டம் என்பது பேசிப் பேசியே அலுத்துப் போன திட்டம். அதைப்பற்றிய பேச்சே இல்லை. சென்னை பெருநகரத்தில் அண்டர்-கிரவுண்ட ரயில்வே போடும் திட்டம் இருந்தது. அந்தத் திட்டத்திற்காக பல கோடி ரூபாய் மத்திய அரசு வழங்க வேண்டும் என்றும், அந்தத் திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கான எல்லாவிதமான ஆதாரங்களையும், சான்றுகளையும் எடுத்துக்காட்டினோம். ஆனால் மத்திய அரசின் நிலமை இதிலே என்ன என்பது தெரியவில்லை. இன்றைக்கும் அதை வலியுறுத்த வேண்டிய கட்டத்திலே இருக்கிறோம். அப்படி வலியுறுத்திச் சொன்னாலும், மத்திய அரசு ஏற்று சென்னையிலே செயல்படுத்துவதற்கு, உருவாக்கு வதற்கு சில ஆண்டுகள் ஆகும். ஆனால், அதைப்பற்றி ஆளுநர் அவர்களுடைய உரையிலே எந்தக்கருத்தும் சொல்லவில்லை. இந்த அரசு அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

மேலும், இந்த உரையில் பெரிய தொழிற்சாலைகளுக்கான எந்தத் திட்டமும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், ஒரே ஒரு திட்டம்பற்றித் தெரிவித்திருக்கிறார்கள். இதிலே அரசு மேற் கொள்ளும் என்று சொல்வது கரும்புச் சக்கைகளிலே இருந்து காகிதம் செய்யும் தொழிற்சாலை. இதற்கு அனுமதி கோரி





மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது மத்திய அரசினுடைய கொள்கையின் அடிப்படையிலே நிறைவேற்றப்பட வேண்டும். இதுபற்றி அனுமதி கேட்டு இங்கேயிருந்து அனுப்ப பட்டிருக்கிறது. அதை வரவேற்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், செய்தித்தாள் காகிதம் செய்வதற்காகத்தான் இந்தத் தொழிற்சாலை. இதற்கு 100 அல்லது 120 கோடி ரூபாய் போட்டு இந்த தொழிற்சாலையை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. கரும்பு சக்கையிலிருந்து தயாரிக்கும் காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும்போது, அந்த கரும்பு சக்கை உருவாவதற்கு முன் சாறு வேறு யாருக்கோ போகப்போகிறது போல செய்தி கேள்விப்பட்டேன். கரும்புச்சாறு எடுக்கிறவரை அந்தத் தொழிற்சாலையை அமைக்கும் முதற்கட்ட பணி தனியார் துறைக்குத் தரப்போவதாக கேள்விப்படுகிறேன். அரசாங்கத்தி லுள்ள திறமைபெற்றவர்களை விட்டுவிட்டுத், தனியார் துறையிலே உள்ளவர்களிடத்தில் அப்படிப்பட்ட தொழிற் சாலைகளை உருவாக்கித்தரும் பொறுப்பை தருகின்றபோது எத்தனை கோடி எப்படி எப்படி, எந்தெந்தப் பக்கம் போகும் என்பது தெரியவில்லை. நான் இதை நடைபெற்றுவிட்ட குற்றமாகச் சொல்லவில்லை. பசு மாடு காணாமல் போய் விட்டது என்று சொல்வதற்கு முன், அந்தப் பசு மாடு கொட்டிலில் இருக்கும்போதே, அது திருட்டுப் போகாமல் பார்த்துக் கொள்வது நல்லது என்ற முறையிலேதான் இதை நான் முன்கூட்டியே எடுத்துச் சொல்கிறேன். இந்தத் தொழிற் சாலையை நிறுவும் பணியைத் தனியார் துறையிலே கொடுப் பதற்குப் பதில், இந்த அரசுக்குத் திறமை இருக்குமானால், அவர்களே இதற்கு பொறுப்பேற்று நிறைவேற்றலாம் என்பதற்காக நான் முன்கூட்டியே இதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 1·10)

பஸ்களை தேசிய மயமாக்குவது என்பது அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கொள்கை. அதை நடைமுறைப்படுத்துவதற்கு திராவிட முன்னேற்றக்கழக ஆட்சிக் காலத்தில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த முயற்சிகள் நீதிமன்றத்தின் தீர்ப்பு காரணமாக ஒரு வகையில் தடைப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது அந்த முயற்சிகளுக்கு மாறாகப் பஸ் முதலாளிகளுக்குப் பல உறுதி மொழிகள் தரப்பட்டிருக்கின்றன. இந்த உறுதிமொழிகள் தரப்பட்டிருக்கின்றன என்பது மட்டுமல்ல, அந்த உறுதி மொழிகளுக்கு அவர்கள் கப்பம் செலுத்தியிருக்கிறார்கள். இதை லஞ்சம் என்ற சொல்லால் நான் சொல்லத் தயாராக இல்லை. தனிப்பட்டவர்கள் தங்கள் வசதிக்காக வசூலித்துக் கொண்டால் அது லஞ்சம் என்று சொல்லத்தக்கது. பஸ் முதலாளிகளுக்கு தரப்பட்ட வாக்குறுதி உடைக்கப்பட்டால் கூட நான் ஏற்றுக் கொள்ளத் தயார்—இந்த அரசாங்கத்திற்கும் அதற்கும் தொடர்பு இல்லை என்று கருதத் தயார். ஐந்து

ரூட்டுகள் வரை அவரவர்கள் சவுகரியத்திற்கு வைத்துக் கொள்ளலாம் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டதாகவும் அந்த அடிப்படையில் ஒரு பஸ்ஸுக்கு ஒரு ரூட்டுக்கு இவ்வளவு பணம் என்று வசூலிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. முதலமைச்சர் அவர்கள் பணம் வாங்கினார்கள் என்று சொல்ல நான் கூசுகிறேன். அவரை நான் அப்படிச் சொல்லவில்லை. அவருக்கு இல்லாத வசதி யாரும் கொடுத்து வரப் போவதில்லை. அவர் சம்பாதிக்காத பணத்தை இனிமேல் யாரும் தரப்போவதில்லை. ஒரு கட்சியின் சார்பில் இந்த நிதி வசூலிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று பணம் வாங்கவில்லையென்றால் அவர்களுக்கு கொடுத்ததாகச் சொல்லப்படுகிற உறுதிமொழியை உடைத்தெறியுங்கள். இல்லையென்றால் பணம் கொடுத்தார்கள், கட்சிக்கு வாங்கி கொண்டோம் என்று சொல்லத் தயாராகுங்கள். பணம் கொண்டு வந்து கொடுத்தபோது எண்ணும் இடத்தில் கூட 22 லட்சம் 21 லட்சமாக எண்ணப்பட்டது. எண்ணும் இடத்தில் தவறு நடந்ததாகக் கூட கூறப்படுகிறது. இந்த நிலைமை எங்கிருந்து வருகிறது? இந்த நிலைமை தமிழ்நாட்டில் வளரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். பஸ் முதலாளிகளின் ஆதிக்க உணர்வுக்கு இந்த ஆட்சி இடம் தரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். பெரிய தொழில்களைத் தேசியமயமாக்கவேண்டுமென்பது நாம் ஏற்றுக் கொண்டுள்ள கொள்கை. ஆலைகள், சர்க்கரை ஆலைகள், சிமெண்ட் ஆலைகள் போன்றவற்றைத் தேசியமயமாக்குவது பற்றி எந்த குறிப்பும் இந்த ஆளுநர் உரையில் இல்லை. கொள்கைக் குறிப்பு என்ற முறையில் ஆளுநர் உரை வர வேண்டுமென்ற காரணத்தால் இதை குறிப்பாகச் சொல்லுகிறேன்.

கிராம மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக ஒரு பெரிய திட்டம் இன்றையதினம் இந்த அரசாங்கத்தால் ஆளுநர் உரையில் வகுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பெரிய திட்டம் என்று சொல்கிறார்களே என்று நான் படித்து படித்துப் பார்த்தேன்.—

"கிராமப்புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பது, கிராமங்களில் ஐந்தாண்டுகளில் மொத்தம் ஒரு இலட்சம் வீடுகள் கட்டி தரும் திட்டமொன்றை வகுத்து கிராம அமைப்பை மாற்றுகிற திட்டம், கிராமப்பகுதிகளிலும் புதிய கிராமங்களை உருவாக்கவும், தற்போதுள்ள கிராமங்கள் திட்டமிட்ட முறையில் விரிவாக்கப்படுவதற்கும் ஊரமைப்புத் திட்டங்கள் தீட்ட அரசு முடிவு செய்துள்ளது. நகரங்களும் நகரை அடுத்துள்ள புறநகர்ப் பகுதிகளும் மட்டுமே திட்டமிட்ட முறையில் வளர்வது என்பதோடு நில்லாமல், கிராமங்களில் முறையான வளர்ச்சி ஏற்படவும், அதனடிப்படையில் குடிநீர், வடிகால் வசதி, கல்வி வசதி, தெரு விளக்கு வசதி போன்ற தேவையான வசதிகளுடன் கிராமங்கள் மிளிரவும் அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும்"





நான் ஆளும் கட்சித் தரப்பிலுள்ள அமைச்சர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்—இந்தத் திட்டங்களைப் பற்றிச் சொல்லுகிற வார்த்தைகளில் புதுமை இருக்கிறதே தவிர வேறு என்ன இருக்கிறது? புதிய கிராமங்களை உண்டாக்கப் போகிறோம் என்கிறார்கள். புதிய தரித்திர நாராயணர்களை உண்டாக்கப் போகிறார்களா? கிராமங்களில் குடிதண்ணீர் வசதி, மின்சார வசதி, கல்வி வசதி, தெரு விளக்கு வசதி போன்றவை நீண்டகாலமாக 'இன்டகிரேடெட் ப்ரோகிராம்' என்ற வகையில் தமிழ்நாடு முழுவதும் பரவலாக ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்தின் மூலமாகவும் பல காலமாக நடைபெற்றுவந்தது, வருவதுதான். இந்தத்திட்டம் எந்தவகையில் உள்ளது என்றால் இந்திரா காந்தி அம்மையார் நெருக்கடி காலத்தில் ஒரே ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டு அந்தக் கிராமம் முழுவதையும் ஒரு மாடல் கிராமமாக மாற்றியமைத்து உருவாக்க வேண்டுமென்று சொன்னார்களே அதைப்போல. ஒரு கிராமத்தை அப்படி உருவாக்கிவிட்டால் போதுமா? தமிழ்நாட்டில் 58,000 கிராமங்கள் இருக்கின்றன. ஒரே ஒரு கிராமத்தை சுவீகாரப் பிள்ளையாக எடுத்துக் கொள்வதாலே என்ன ஏற்படும்? தமிழ்நாடு முழுவதும் பரவலாக நடைபெற வேண்டிய காரியம் இது. மின்சாரத் துறையின் மூலமாக நடைபெற வேண்டிய காரியம். குடிநீர் வாரியத்தின் மூலமாக நடைபெற வேண்டிய காரியம். பஞ்சாயத்து ஒன்றியங்களின் மூலமாக நடைபெறவேண்டிய காரியம் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நடத்தப்பெறுகின்ற வளர்ச்சிக் குழுக்கள் ஆங்காங்கே எடுக்கின்ற ஆலோசனைகளின்படி முடிவு எடுக்கப்பெற்று நடைபெறவேண்டிய காரியம். பெரிய பாலங்கள், சில கிராமங்களை இணைக்கின்ற பணி இவைகள் எல்லாம்அரசாங்கத்தாலே முடிவு செய்து நடைபெறவேண்டிய காரியம், உள்ளாட்சி அமைப்புகளாலும் அரசாங்கத்தினாலும் உத்திரவிடப்பட்டு நடைபெற வேண்டிய காரியம். பள்ளிகள் அமைப்பது அரசாங்கத்தினால் முடிவு எடுக்கப்பட்டு நடைபெற வேண்டிய காரியம், அதைப் போலவே மருத்துவ மனைகளை ஏற்படுத்துவதில் இதுவரையில் இருக்கின்ற திட்டப்படி பார்த்தால் கூட-எல்லா இடங்களிலும் இல்லை— ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமாவது கட்டிட வசதியோடு ஏற்படவேண்டுமென்ற முறையிலே நடைபெற வேண்டிய காரியம். இப்படி நடைபெற வேண்டிய காரியங்களை—நான் குறை சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை—இத்தனை பிரச்னைகள் இருக்கின்றபோது எதையோ நினைத்துக்கொண்டு ஏதாவது சொல்ல வேண்டுமென்பதற்காக இந்த அவையிலே இருக்கிறவர்களுக்கு உண்மையை விளக்கிக் கொள்ளுகின்ற ஆற்றல் சற்றுக் குறைவாகத்தான் இருக்கும் என்று எண்ணிக்கொண்டு அந்தக் காரணத்தாலே நீங்கள் இப்படிப்பட்ட கருத்துக்களை தெரிவித்து இருக்கிறீர்கள்? 1977ஆம் ஆண்டிலே நீங்கள் என்ன தெரிவித்து இருக்கிறீர்கள். கிராமங்களைப்பற்றி அப்போதே சிறப்பாக சொல்லியிருக்கிறீர்கள். 1978ஆம் ஆண்டிலே அதையே தொடர்ந்து சொல்லியிருக்கிறீர்கள்.

1979ஆம் ஆண்டிலே நீங்கள் சொல்வது, இருக்கிற கிராமங்களை விட்டுவிட்டு புதிய கிராமங்களை உண்டாக்குவோம் என்பது. புதிய கிராமங்கள் தேவையா இப்போது? நகர்ப்புற வளர்ச்சியை எடுத்துக்கொண்டாலுங்கூட தாங்கமுடியாத குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. சென்னை மாநகரத்திலே இருக்கின்ற குறைபாடுகள் இந்த அரசு தேவையான நிதி ஒதுக்கமுடியாத அளவிற்கு குறைபாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன. அவைகளைப் போக்குவதற்கான முறையிலே வெளிநாட்டு (யு.என்.ஓ) அமைப்பு மூலமாக 138 கோடி ரூபாய் செலவில் திட்டம் வகுக்கப்படுகிறது என்று கூறப்பட்டு வந்தது. நான் அந்த விவரங்களை எல்லாம் எழுதி வைத்திருக்கிறேன். எடுத்து காட்டுவதற்கு நேரம் இல்லை. அந்தத் திட்டமும் வகுக்கப் பட்டுவிட்டதா? மத்திய அரசு அதற்கு அனுமதி அளித்து விட்டதா, அதைப்பற்றிய விளக்கங்கள் இதிலே இல்லை. ஆளுங்கட்சியினருக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருப்பது இது. 'கிராமங்களில் அய்ந்தாண்டுகளில் மொத்தம் ஒரு இலட்சம் வீடுகள் கட்ட உதவும் திட்டமொன்றை வகுத்து, அரசு செயலாற்றத் தொடங்கியுள்ளது.' என்று சொல்லியிருக்கிறீர்கள். இது என்ன பெரிய திட்டமா? அய்ந்தாண்டுகளிலே நிறைவேற்றக் கருதும் ஒரு திட்டம், அதுவும் சென்னையிலே இருப்பதைப் போன்ற பங்களா போலவா, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கட்டித்தரப்படுகிற வீடுகளை விடச் சற்று வசதியாக இருக்கக் கூடும். 8 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் போகாது. அப்படிக் கட்டுவது கூட ஆண்டு வருமானம் 4,200ரூபாய்க்கு மேற்படாமல் உள்ளவர்களுக்கு என்று சொல்லியிருக்கிறீர்கள் 600 ரூபாய் உதவி கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். 600 ரூபாய் உதவி கொடுப்பது 6000 ரூபாய் கடன் வழங்கினால் தான் கொடுப்பீர்களே தவிர, 20 ஆயிரம் கடன் பெறுபவர்கள் 600 ரூபாய் உதவிக்கா வருவர்? வீடு கட்ட கடன்களை வாங்குகிறவர்கள், வீட்டின் விலையில் 20 சதவீதத்தை உடல் உழைப்பாகவோ பொருளாகவோ கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். 5 ஆண்டுகளில் ஒரு இலட்சம் வீடுகள் என்றால், ஆண்டுக்கு 20 ஆயிரம் வீடுகள் வீதம் கட்டிக் கொடுப்பதற்கு ஒரு திட்டம். அது கூட அரசாங்கத்தினுடைய பணம் அல்ல. கடன் உதவிதான் தருகிறீர்கள். நாட்டிலே இன்றைக்கு கூட்டுறவு மூலம் வீடு கட்டுவதற்கு 10 கோடி ரூபாய், 15 கோடி ரூபாய் கடன் வழங்கும் நிலை உள்ளது. இது என்ன புதிய திட்டம்? நீங்கள் செய்யக்கூடிய இந்தத் திட்டம் ஒன்றும் மகத்தான திட்டமல்ல. குடிநீர் வசதி என்றால் ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித்தனியாகச் செய்யமுடியுமா? கிணறு வெட்டுவது என்றால் ஒரு கிராமத்திலே செய்யலாம். குழாய் இறக்குவது என்றால் ஒரு கிராமத்திலே செய்யலாம். 10 கிராமங்களுக்காகத் தண்ணீர் தொலைவிலிருந்து கொண்டு வருகிறபோது இன்டக்ரேடட் ப்ரோகிராம் என்ற முறையிலேதான் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் நடைபெற்றாக வேண்டும். ஒவ்வொரு





ஒன்றியங்களை எடுத்துக்கொண்டு செய்யப்போவதாகச் சொல்லி இருக்கிறீர்கள். ஒரு யூனியன் என்பதிலேகூட ஏறத்தாழ 30 கிராமங்கள் எடுப்பார்கள் ஒரு ஆண்டிலே. இப்படி நிறை வேற்றினால் நிறைவேற்றுவதற்கு எப்படியும் 40 ஆண்டுகள் ஆகும். அதற்கு ஒரு மாஸ்டர் பிளான் வேண்டும். அப்படிப் பட்ட மாஸ்டர் பிளான் போடப்படுமானால் அதற்கு திட்டக் குழுவில், மத்தியத் திட்டக்குழு அல்ல. தமிழ்நாட்டின் திட்டக் குழு ஆய்ந்து அனுமதிக்க வேண்டும். பொதுமக்கள் நன்கொடை மூலமாகவோ அல்லது அரசாங்கப் பணமாகவோ வழங்கிச் செய்யப்படக்கூடியதல்ல தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்பட்ட மக்களுக்கும் வீடுகள் கட்டித்தரப்படவேண்டும். ஒரு வீடு 3 ஆயிரம், 4 ஆயிரத்திலே நாடு முழுவதுமாகத் திட்டமிட்டு திராவிட முன்னேற்றக்கழக ஆட்சிக்காலத்தில் 35 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டன.

(பிற்பகல் 1 20)

அது தொடர்ந்து இலவசமாக வழங்கப்பட்டது. அப்படி இலவசமாக வழங்குவது இந்த அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ள முடியாத கொள்கையாக இருக்கலாம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் அது அவசியம் என்று கருதியது, அடித்தட்டில் உள்ள மக்கள் மட்டுமல்ல, பிரித்து வைக்கப்பட்ட மக்கள், தீண்டாமைக்காளான மக்கள் இருக்கிறார்களே அவர்களோடு பொதுமக்கள் கலந்துகொள்ள விரும்பமாட்டார்கள், எனவே அவர்களது தரத்தில் நிலையில் உயர்வு ஏற்பட்டால்தான் மற்றவர்களோடு அவர்கள் கலந்து வாழ முடியும், இல்லையென்றால் அப்படிப்பட்ட வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்காது என்று கருதியது. தாழ்த்தப்பட்ட வகுப்பினரானாலும் படித்த ஐ.ஏ.எஸ். அதிகாரியை மதிக்காதவனே கிடையாது, அதேபோல் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் சட்டமன்றத்திலே இருந்தாலும் அமைச்சர்களாக இருந்தாலும் அவர்களுக்கு வணக்கம் செலுத்தாதவர்கள் கிடையாது. எனவே, தாழ்த்தப்பட்டவர்கள் பொருளாதாரத்தில் கடைநிலையில் இருந்துகொண்டு, கிராமத்தின் கோடியில் உள்ள வீடுகளில், அதுவும் பன்றியும், ஆடுகளும் அடைபடும் இடங்களைப் போல் இருந்தால் அங்கேயுள்ள மக்களின் நிலைமை மதிக்கக் கூடியதாக இருக்காது, அத்தகைய பரிதாபகரமான நிலைமை அங்கே இருக்கிறது என்பதை உணர்ந்து அதை மாற்றியமைக்க இந்த நாடு அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பொருளைச் செலவிடக் கடமைப்பட்டிருக்கிறது என்று கருதியது. அது தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்யப்பட வேண்டிய காரியம் என்று மேற்கொண்டது.

அமைச்சர் வீரப்பன் அவர்கள்கூடச் சொல்லியிருக்கிறார்கள், 4,000 ரூபாயில் அவர்கள் வீடு கட்டிக் கொடுத்தார்கள், அந்த வீடுகள் நன்றாக இல்லை, நான் 6,000 ரூபாயில் வீடு கட்டப் போகிறேன் என்று சொன்னார்கள். அவரும் கட்டுவார், நான் போய்ப்பார்க்கலாம் என்று காத்துக்கொண்டிருந்தேன். ஆனால் 6,000 ரூபாயில் இதுவரையில் வீடு கட்டப்பட்டதாக எனக்குத்

தெரியவில்லை. அதற்குப் பிறகு நான் கேள்விப்பட்டது என்னவென்றால், அதுவும் கடன் மூலம்தான் அவரவராகக் கட்டிக் கொள்ள வேண்டும் என்பது. அந்தக் கடனில் 600 ரூபாய் இப்பொழுது உதவித் தொகையாக வழங்கப்படுவதாகச் சொல்லப் படுகிறது.

எதாவது நடைபெற்ற திட்டங்களைக் கைவிடுவதாக இருந்தால் தகுந்த காரணத்தைக்காட்டிக் கைவிடுவதை நான் வேண்டாமென்று சொல்லவில்லை. அதற்கு உங்களுக்கு முழு உரிமை உண்டு. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், கிராமப் புற மக்களுக்கும் இந்த அரசு செய்கின்ற காரியத்தால் ஏற்படக் கூடிய பலன் என்ன? இதை ஆளுங்கட்சியினர் எண்ணிப் பார்க்க வேண்டும்.

குடிநீர் வாரியத்தாலே நிறைவேற்றப்படாத காரியத்தை இந்தப் புதுக் காரியத்தால் நீங்கள் நிறைவேற்றப் போகிறீர்களா? இன்னொரு கட்டத்தில், கிராமங்களுக்கு வடிகால் திட்டம் என்று சொல்லப்படுகிறது. இதற்காக எவ்வளவு ரூபாய் வேண்டுமானாலும் அரசு செலவு செய்யலாம். ஆனால் ஒவ்வொரு கிராமத்திலும் வீடுகள் வரிசையாக இருந்தால் அல்லவா நீங்கள் வடிகால் திட்டத்தை கிராமத்தில் நிறைவேற்ற முடியும்.

சிதம்பரம் போன்ற இடங்களிலேயே தகுந்த வசதிகள் இல்லாமல், கக்கூஸ்கூட அமைப்பதற்கு வீட்டுக்காரர்கள் முன்வரவில்லை என்ற பிரச்னை மூன்றாண்டுக் காலமாகப் பேசப்பட்டது. ஒரு கக்கூஸ் அமைப்பதற்கு—ஃப்ளஷ் அவுட் அமைப்பதற்கு—1,200 ரூபாய் அல்லது 1,000 ரூபாய் தேவைப்படுகிறது. வசதியுள்ள வீடுகளிலே உள்ளவர்கள்கூட அதைக் கட்டுவதற்குத் தயாராக இல்லை. எனவே, நகரப் பகுதிகளிலேயே வடிகால் இல்லை, நகர சபைகளிலே வடிகால் இல்லை, பெரிய நகர பஞ்சாயத்துக்களிலே வடிகாலுக்கு வழியில்லை, இன்னும் அவர்களுக்குக் குடிநீருக்கே வழியில்லை என்ற நிலைமையிருக்கிறது. ஆகவே, நீங்கள் சொல்வது 40 ஆண்டு, 50 ஆண்டு கழித்து நிறைவேறக் கூடிய காரியங்கள். அதை ஐந்தாண்டுக்காலம், ஆறாண்டுக்காலம் ஆட்சி நடத்தப்போகும் ஒரு அரசாங்கம் சாதாரணமாக, முன்பின் ஆலோசனையின்றி, எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகிறது என்ற திட்டம் இல்லாமல் சொல்வது முறைதானா?

வரைபடம் தயாரிக்கும் முறையில் Town planning நகரமைப்புத திட்ட இலாக்காவைச் சேர்ந்தவர்கள், (Town and Count y planning) நகர நாட்டுப்புற அமைப்பை வரன் முறைசெய்யும் அடிப்படையில் கிராமங்களில் எந்தெந்த வகையில், எப்படி எப்படிக் காரியங்களைச் செய்து முறையான கிராம வளர்ச்சிக்கு உறுதுணை செய்வதன் மூலம் கிராம முன்னேற்றத்திற்குத் துணை செய்யலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதை நிறைவேற்றுவதற்கு வழிவகைகள் ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. ஆகவே, நான் குறிப்பிட விரும்புவது என்ன



வென்றால், அரசு ஏற்பாடு செய்யும் கடன் உதவிகளை வைத்துக் கொண்டு கிராமங்களில் வீடு கட்டுவார்கள் என்று கருதினால் அது வெற்றிபெறுவதும் கடினம்—பெரிய கிராம வளர்ச்சியாகவும் அமையாது.

பொதுவாக வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது என்பதை ஆட்சியில் உள்ளவர்கள் ஒப்புக்கொள்கிறீர்கள். ஆனால் ஏன் அதுபற்றிய புள்ளிவிவரத்தைத் தர மறுக்கிறீர்கள்? வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக எவ்வளவு பேருக்கு வேலையில்லை என்று அரசாங்கத்திற்குத் தெரியவேண்டாமா? Additional employmens opportunities என்ற ஒரு சொல் இந்த அறிக்கையிலே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதைக் கூடுதல் வேலைவாய்ப்புத் திட்டம் என்று தமிழில் படிக்கிறார்கள். தமிழிலே அப்படித்தான் மொழிபெயர்ப்பு இருக்கிறது. அப்படிப் படிப்பவர்களுக்கு ஒரு எண்ணம் வரக்கூடும், அதாவது இன்னும் 20,000 பேர், 30,000 பேர்களுக்கு புதிய வேலை கிடைக்கப் போகிறது என்ற எண்ணம் வரக்கூடும். ஆனால் உண்மை அதுவல்ல. ''Additional employment opportunities'' என்றால் அவரவர்கள் செய்து கொண்டிருக்கின்ற வேலையோடு இன்னும் சில வேலைகளைச் சேர்த்துச் செய்வதற்கு வாய்ப்பு உருவாக்குவது ஆகும். ''Additional employment opportunities'' என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நான் படித்துவிட்டுச் சொல்கிறேன். முன்னவர் மனோகரன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''New job opportunities' என்ற பயன்படுத்திய அந்த இடத்தில் புதிய வேலை வாய்ப்பு என்ற சொற்றொடர் வந்திருக்கிறது. சிறு தொழில்கள் உற்பத்தி துவங்குவதன் மூலம் 11,000 பேர் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கின்றனர் என்ற இடத்தில் அப்படி வருகிறது. மற்றொரு இடத்தில் நாட்டில் இலட்சம் பேருக்குக் கூடுதலாக வேலைவாய்ப்பு உருவாக்க வழி செய்யப் படுகிறது என்று சொல்லப்படுகிறது. தேனீ வளர்ப்பு என்பது எப்படி முழு நேர வேலையாகும்? அதில் எப்படி 20,000 பேர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு வரும்? கிராமத்திலுள்ள மக்கள் ஒரு தொழிலைக் கூடுதலாகச் செய்கிறார்கள் என்றால் அது எப்படி முழு நேர வேலையாகும், அதில் முழு நேர ஊதியம் என்பது எப்படிக் கிடைக்கும்? Additional employment opportunities என்றால் Additional working opportunities but not job opportunities என்பதுதான், அவ்வளவுதான். இப்படி நீங்கள் இலட்சம் பேருக்கு புதிய வேலைவாய்ப்புத்தான் என்று சொன்னால் இதைப்பற்றி விவாதிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். முதலமைச்சரவர்கள் உரிய செயலாளர்களைக் கூப்பிட்டுக் கேட்கட்டும். ஏனென்றால் நீங்கள் சொல்லியிருக்கிற எந்தத் திட்டமும் நிறைவேறவில்லை. நிறைவேறியிருக்கிற திட்டங்களும் கடந்த 2 ஆண்டுகளில் எந்த அளவு நிறைவேறியிருக்கிறது என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இங்கே கடந்த ஆண்டு காதி-கிராமத் தொழில் பற்றி
ஆளுநர் உரையிலே ஒன்று சொல்லப்பட்டது. அது ஒன்றாக
இருக்கிறது. காதியையும் வளர்க்க வேண்டியிருக்கிறது, கிராமத்
தொழிலையும் வளர்க்க வேண்டியிருக்கிறது அது மிகப் பெரிய
பணியாக இருக்கிற காரணத்தால், அதனை இரண்டாகப் பிரித்து
கிராமத் தொழில் இலாகா, காதி இலாகா என்று வைத்து,
அதன் மூலமாக கிராமத் தொழில் வளர்ச்சிக்கு இந்த அரசு
ஆவன செய்யும் என்ற கருத்து இந்த அவையிலே, ஆளுங்கட்சி
யாலே ஆளுநர் உரை மூலமாகத் தெரிவிக்கப்பட்டது. அவையிலே
உள்ள பலர் சந்தேகம் தெரிவித்தார்கள், மத்திய சர்க்காரின்
அனுமதியின் பேரில்தான் நீங்கள் அதைச் செய்யவேண்டும்.
அவர்களை அனுமதி கேட்டால் வழங்கமாட்டார்கள். ஆகவே,
பிரிக்கமுடியாது என்று கருத்து தெரிவித்தார்கள். இப்படி எதிர்
கட்சியினர் தெரிவித்ததற்குப் பின்னாலே இந்த அவையிலே
அதை எப்படியும் நிறைவேற்ற முயற்சி எடுக்கப்படும் என்று
அரசாங்கத்தின் சார்பிலே சொல்லப்பட்டது. இப்பொழுது,
இந்த ஆண்டு அது இரண்டாகப் பிரிக்கப்படவில்லை. வெளிப்
படையாக அதைச் சொல்லவில்லை. ஆனால், அந்தக் கருத்து
இருக்கிறது. காதி அண்ட் விலேஜ் இன்டஸ்ட்ரீஸ் போர்ட் இருக்
கிறது. அதன்கீழே இந்த இரண்டும் இரண்டு கூறுகளாக இயங்கும்.
அந்த போர்ட் ஒன்றுதான், அதற்குக் கீழே கிராமத் தொழிலுக்காக
ஒரு பிரிவு. இன்னொரு பிரிவு காதிக்காகவும் இயங்கும் என்ற
கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இரண்டு டெபுட்டி
டைரக்டர்கள் இருக்கிறார்கள். ஒருவர் கிராமத் தொழிலுக்காக
இருக்கிறார். இன்னொருவர் காதிக்காக இருக்கிறார். மாவட்ட
அளவில் இரண்டுக்கும் சேர்ந்து ஒருவர்தான் இருக்கிறார்.
அங்கே இந்தப் பிரிவு இல்லை. இன்னும் சொல்லப்போனால்,
இந்த உரையில், காதி, கிராமத் தொழில் என்ற அந்த அமைப்பைக்
குறிப்பிட்டு அந்த அமைப்பின் கீழே இந்த இரண்டும் இயங்கும்
என்ற கருத்து இல்லை. தமிழிலே இருப்பதை நான் படித்துக்
காட்ட விரும்புகிறேன், ஆனால் நேரம் இல்லை. தமிழிலே
சொல்லும்போது அந்த போர்டு இரண்டாகப் பிரிக்கப்படவில்லை
என்ற கருத்து இடம் பெறக்கூடாது என்பதற்காக இவ்வாறு
சொல்லப்படவில்லை. அதற்கு மாறாக எப்படி சொல்லப்
படுகிறது? இரண்டு பிரிவுகள் இயங்கும் என்று சொல்லப்படுகிறது
ஆங்கிலத்திலே சொல்லப்படுகிற பொழுது அந்தக் கருத்து
முழுமையாக இருக்கிறது.

"'An Independent rural industries wing is being organised und
the Khadi and Village Industries Board in order to encourag
setting up of rural industries and to pay special attention to th
marketing of their products.'

இவ்வாறு ஆங்கிலத்திலே இருக்கிறது: தமிழிலே அதனுடைய
மொழிபெயர்ப்பிலே காதி அண்ட் விலேஜ் இன்டஸ்ட்ரீஸ் என்
வார்த்தையே இல்லை. ஏனென்றால் உடனே மனதில் பட்
விடும், சென்ற ஆண்டு சொன்னதற்கு நேர் மாறாக அது இரு





றது என்பது மற்றவர்களுக்குத் தெரிந்துவிடும் என்பதற்காக
விட்டிருக்கிறார்கள். அது தேவையில்லாத காரியம். அதைத்
தெரிவிப்பதால், யாரையும் பாதிக்கப்போவது இல்லை. ஆனால்
நான் குறிப்பிட விரும்புவது, கடந்த ஆண்டு நீங்கள் சொன்ன
பொழுது எவ்வளவு உறுதியாக சொன்னீர்கள், அது வெற்றி
ரமாக நிறைவேறும் என்று. ஆனால் அந்த எண்ணம் நிறை
வறவில்லை. அந்த எண்ணம் நிறைவேறிவிட்டால் இப்படி
சொல்லியிருக்கமாட்டீர்கள். ஏற்கனவே, போர்டில் இரண்டு
விங் இருப்பது உண்மையிலேயே மறைக்கப்பட்டிருக்கிறது.
அதை மறைத்து புதிதாக இரண்டு விங் ஏற்படுத்துவதுபோல்
கற்பனை செய்து தகவல் கொடுக்கப்படுகிறது. பழைய சோறைப்
போட்டு, புது சோறு என்று எண்ணிக்கொள் என்று சொல்வதா?
அதனால் பயன் என்ன?

அதுமட்டுமல்ல, கடந்த ஆண்டு ஏறத்தாழ இலட்சம்
பருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று சொல்லும்பொழுது
இந்த அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்து, ஏறத்தாழ
00 தொழிற்கூடங்களை, அதாவது சிட்கோ மூலமாக என்று
ருதுகிறேன். அமைக்க முடிவு செய்யப்பட்டது. தமிழ்நாடு சிறு
தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம், இப்பொழுதுள்ள நிதி
ஆண்டுக்குள் 900 சிறு தொழிற் கூடங்கள் நிறுவப்படும் கூடங்கள்
என்றால், தொழில் நிறுவனங்களை நடத்த நிலையங்கள்—என்று
அறிவிக்கப்பட்டது. அந்தக் கூடங்கள் உருவாக்கப்பட்டு சிறு
தொழில் ஆரம்பிக்க கடன் வசதி அளிக்கப்பட்டு, பின்னர்
அந்தக் கூடங்களுக்கான செலவுத் தொகை, தொழில் நடத்து
வர்களிடமிருந்து தவணை முறை மூலமாகப் பெறப்படும்
என்பது அறிவிக்கப்பட்ட திட்டம். இந்த ஆண்டு முடிவிற்குள்ளாக
அல்லது நிதி ஆண்டு முடிவிற்குள்ளாக 900 கூடங்கள் அமைக்கப்
படும் என்று உறுதி செய்யப்பட்டது. இப்பொழுது, ஆளுநர்
உரையிலே அது குறித்து எந்த வார்த்தையும் தெரிவிக்கவில்லை.
ஏறத்தாழ 180 கூடங்கள்தான் கட்டப்பட்டிருக்கின்றன என்றும்,
16 அல்லது 20 கூடங்கள் மட்டும்தான் இன்றைக்கு பணி
செய்வதற்குரிய, தொழில் செய்வதற்குரிய இடங்களாக ஏற்றுக்
கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் மிச்ச இடங்களில் எந்தத்
தொழிலும் ஆரம்பிக்கப்படவில்லையென்றும் தெரிய வருகிறது.
சொன்னது 900 தொழிற் கூடங்கள். வேலை வாய்ப்பின்மையை
க்க எடுக்கப்படும் முயற்சியில் இதுவரை உருவாக்கியிருப்பது 180
டங்கள். அதில் . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி
டு அவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

(பிற்பகல் 1·30)

திரு. க. அன்பழகன்: அதில் 16 அல்லது 20 கூடங்களில்தான்
ப்போது வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதிலே எவ்வளவு
பர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்? எவ்வளவு பேர்களுக்கு
வலை வாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது? ஏறத்தாழ

20,000 பேர்களுக்கு வேலை கிடைக்க இந்த ஆண்டில் ஏற்பாடு என்று கூறி நாம் கொடுப்பது 200 பேர்களுக்குக்கூட இல்லை. ஆனால் ஒரு ஆண்டு காலத்தில் ஒரு லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு தரப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அரசாங்கத்தின் சார்பில் புள்ளி விவரத்தைத் தாருங்கள். எவ்வளவு பேர்களுக்கு, எந்தெந்த இடத்தில் வேலை தந்திருக்கிறீர்கள், அல்லது வேலை தரவாய்ப்பு உண்டாக்கியிருக்கிறீர்கள். அல்லது தருவதற்கு உதவி யிருக்கிறீர்கள் என்று சொன்னால் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால். இந்த ஆண்டு ஆளுநர் அறிக்கையில் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு என்று மிகச் சாதாரண மாகச் சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு எதுவரை செய்திருக்கிறோம், இந்த ஆண்டு எதுவரை செய்யப்போகிறோம் என்று சொல்லியிருக்க வேண்டாமா? இந்த ஆண்டு உரையில் அந்த 900—தொழில் கூடங்களைத் துவங்குவதைப் போல் காட்ட வேண்டுமென்று எண்ணியிருக்கிறார்கள். கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பை உருவாக்குவது என்னும் திட்டத்தின்கீழ் அதைக் கொண்டுவந்து, 900 சிறுதொழில்கள் உற்பத்தி துவங்குவதற்கு 8 மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் உதவியிருப்பதாகச் சொல்லியிருக் கிறார்கள். இது மத்திய அரசாங்கத்தாலே வழங்கப்பட்ட திட்டம். நாம் ஏற்றுக்கொண்ட திட்டம். 6 மாதகாலமாக மத்திய அரசு உதவி செய்துள்ளது. அது வேறு. இந்தத் திட்டம் மத்திய அரசாங்கம் சொல்லி மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக 8 மாவட்டங்களிலே தொடங்கப்பட்டுருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் தொடங்கலாம் என்று மத்திய அரசு கூறியிருக்கிறது. ஒரு வேளை படிப்படியாக இந்தக் காரியங்களைச் செய்யலாம். நீங்கள் குறிப்பிட்டிருப்பது இதன் மூலம் 11,000 பேர் புதிய வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர் என்பது. நான் இந்த அரசாங்கத்தைக் கேட்க விரும்புவது, 900-தொழிற் கூடங்கள் அமைப்பதாகக் கூறிய உரையின் அதே இடத்தில் இந்தக் கருத்தைச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன? இப்பொழுது 900 என்று சொன்னால் அது ஏற்கனவே சொல்லப்பட்ட திட்டம் தான் என்று கருதிக்கொள்ளட்டும் என்பதுதானே அதை நிறை வேற்றவில்லை. அதற்கு வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால், இன்னொரு 900 சிறு தொழில்கள் வேறுவிதமான திட்டத்தில் உருவாகிறது. அது இங்கே இடம் பெறுகிறது. தனிப்பட்ட வர்கள் தொழில் செய்ய அட்வைஸ் அல்லது உதவி செய்கிற காரியம், கடன் ஏதாவது வழங்க ஒரு திட்டம். அந்த வகையில் 11,000 பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர் என்று நீங்கள் தந்த அந்த புள்ளி விவரத்தை நான் மறுக்கவில்லை. ஆனால், இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடியாதபொழுது கொடுக்கிறேன் என்று அறிவித்துவிட்டு கொடுக்க முடியாதபொழுது அதைக் கூறவேண்டாமா? நான் இந்த அரசாங்கத்திற்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், தமிழ்நாட்டிலே தகுதியுள்ள படித்த வர்கள், படிக்காதவர்கள், வேலை தேடி காத்துக் கொண்டிருப் பவர்களுடைய எண்ணிக்கை ஏறத்தாழ 10 இலட்சம் பேர். தமிழ்





நாட்டில், முழு நேர வேலையில்லாமல், பகுதி நேர வேலை செய்து வாழ்கிற மக்கள், உழைத்து வாழ்கிற மக்கள் ஏறத்தாழ ஒருகோடி பேர்கள் இருக்கிறார்கள். ஒரு கோடி பேர் பகுதி நேர வேலையிலேயே வாழ்கிறார்கள். நான் சொல்வது உழைக்கக் கூடியவர்கள், 20 வயதிலே, 18 வயதிலேயிருந்து 55 வயது வரையிலே இருப்பவர்களைப் பற்றிச் சொல்கிறேன். அதற்கு மேற்பட்டவர்களை நான் சொல்ல விரும்பவில்லை. ஒரு கோடி பகுதி நேர ஊழியர்கள் வேலை செய்து வாழ்கிறார்கள். பத்து இலட்சம் பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆனால், 11,000 பேருக்குத்தான் நாம் வேலை தேடி தரக்கூடிய நிலைமை இருக்கிறது. நான் அதற்காகக் கூட இந்த அரசாங்கத்தைக் குறை சொல்ல மாட்டேன். இவ்வளவுதான் முடிந்தது. ஆனால், அரசினர் நம்மாலே முடியவில்லையென்று சொல்ல விரும்பாமல், நம்மைவிட ஆற்றல் உள்ளவர்கள் இல்லை, நாம் எல்லா வற்றையும் உருவாக்குகிறோம் என்ற கருத்து உண்டாகும் வண்ணம் ''..........அனைவரும் தங்களது எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையைப் பெறுவதோடன்றி, நிகழ் காலத்தில் நிலவும் விரக்தி மனப்பான்மையை அறவே போக்கிட அரசு தீர்மானித்துள்ளது'' என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடு கிறீர்களே, அது எப்படி இருக்கிறது? உலகம் முழுவதும உள்ள ..........''எல்லோரும் இன்புற்றிருப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே'' என்று பண்டாரம் கூடப் பாடுவான். ''அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி அரும்பசி எவர்க்கும் ஆற்றி, மனத்துளே பேதா பேதம் அகற்றி', என்று வள்ளலார் பாடிய பாடல்களையாவது போட்டு வைத்தால் சுவையாகவாவது பாடிக் கொண்டிருப்போமே. (குறுக்கீடு) உங்களைப் பண்டாரம் என்று சொன்னால் கூடப் பொருள் உள்ளவர் என்றுதான் அர்த்தம். ஆக, அந்த வகையிலே பொருள் உள்ளவராக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். நான் உங்களைக்கூட குறை சொல்லவில்லை. அரசாங்கத்திலேயிருக்கிற செயலாளர்கள், விவரம் தெரிந்தவர்கள் எப்படி வேண்டு மானாலும் எழுதித் தருவதற்காக வேலை பார்ப்பதா? ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருக்கும் செயலாளர்கள், அரசாங்கத்தாலே என்ன முடியும் என்று தெரியாமல் எதற்காக இலாகாவிலே பொறுப்பில் உள்ள தலைவராக இருக்கிறார்கள்? இவ்வளவுதான் முடியும், இவ்வளவு பேருக்குத்தான் இந்தத் திட்டத்தில் வேலை தரமுடியும். இதற்கு மேல் முடியாது என்று சொல்லவேண்டாமா?

இந்த அரசாங்கத்தாலே இந்த ஓராண்டு காலத்தில் எவ்வளவு பேருக்கு வேலை கொடுக்க முடியும் என்று சிந்தித்துப் பார்த்து இருக்கவேண்டும். சென்ற ஆளுநர் அறிக்கையில் சொல்லப்பட்டது, ஆனால் அது நடைமுறை படுத்தப்பட்டதா என்பதைக் குறித்து அடுத்த ஆண்டு ரிவ்வியூ பரிசிலனை செய்ய என்ன வழிமுறை, இருக்கிறது? ஆகவே, நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, இந்த ஆளுநர் அறிக்கையில் உண்மை மூடி மறைக்கப்பட்டு இருக்கிறது. நீங்கள் கூறியுள்ளவாறு ஒரு திட்டத்தை நிறை

வேற்ற உங்களாலே மட்டுமல்ல, எங்களாலும் முடியாது, யார் வந்தாலும் முடியாது. ஆகவே, உண்மை நிலைமையை எடுத்துச் சொல்லி மக்களின் நல்லெண்ணத்தைப் பெறவேண்டும்.

இந்த அரசாங்கத்திலே சட்டம் இல்லை, அமைதி இல்லை, ஒழுங்கு இல்லை என்று சொன்னால் வருத்தப்படுகிறார்கள். இப்போது ஆங்காங்கு கல்லூரி மாணவர்கள் தாக்கப்படுகிறார்கள். அவர்கள் ஏதோ ஒரு வம்புக்கு இழுக்கப்பட்டு தாக்கப்படுகிறார்கள். இப்படி வன்முறைகள் ஆங்காங்கு நடக்கின்றன என்றால் அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது. இந்த அரசாங்கம் நடவடிக்கை எடு என்று சொன்னாலும் சொல்லாவிட்டாலும் காவல் துறை நடவடிக்கை எடுக்கும். இப்போது எல்லாம் காவல் துறை ஒரு புது முறையை இதுவரையில், இல்லாத ஒரு முறையைக் கையாளுகிறார்கள். நானும் மாணவனாக இருந்து இருக்கிறேன். தனி ஒருவனாக இருந்து கூடப் பலரை எதிர்த்துக் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். பலரின் விரோதத்திற்கு ஆளாகியிருக்கிறேன். ஆனால் மாணவர்கள் ஊர்வலம் நடத்தப் புறப்பட்டால் அப்போது எல்லாம் இல்லாத ஒரு புது முறையை இந்த அரசாங்கம் புகுத்தி இருக்கிறது. இது அவசியம்தானா? மாணவர்களும் பொது மக்களும் மோதிக்கொள்கிறார்கள் என்று வேண்டுமென்றே ஒரு செயற்கை முறை உருவாக்கப்பட்டு இருக்கிறது. மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே ஒரு நல்ல உறவை இந்த அரசாங்கத்தால் ஏற்படுத்த முடியவில்லையா? அப்படி ஏற்படுத்துவதற்கு இந்த அரசு என்ன முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது. எடுத்துக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு முயற்சிகள் என்ன? மாணவர்களை எதிர்த்துத் தாக்கும் பொதுமக்கள் போலீசார் சொல்வதைக் கூட கேட்காமல் எதிர்த்துப் போராடும் அளவிற்கு யோக்கியதை அற்ற நிலையிலா நம்முடைய காவல்துறை இருக்கிறது. காவல் துறையிடத்தில் மக்களுக்கு நம்பிக்கை இருக்கவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது நடந்த கலவரங்களுக்கு எல்லாம் நீங்கள்தான் பொறுப்பு என்று எங்கள்மீது குற்றம் சுமத்தினீர்கள். நீங்க்ள் சாட்டிய குற்றம் உண்மை என்று நாங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் கூட நேற்றைய தினம் பேசியபோது கூட ஒருவர் கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் பற்றிக் குறிப்பிட்டார்கள். நேற்றைய தினம் பச்சையப்பன் கல்லூரியில் நடந்த சம்பவத்திற்கு என்ன சமாதானம் சொல்லப்போகிறீர்கள். நான் காங்கிரஸ் கட்சி அமைச்சரவை இருந்தபோது கூட பேசியிருக்கிறேன். நடந்து விட்ட சம்பவத்திற்கு விளக்கம் சொல்லி, வருத்தம் தெரிவிக்கவேண்டாமா? பச்சையப்பன் கல்லூரியில் நடந்த சம்பவத்திற்கு முதலமைச்சர் வருத்தம் தெரிவிக்க வேண்டாமா? 4 மாணவர்கள் தவறு செய்ததாகவே வைத்துக்கொண்டாலும், அதைத்தடுக்க வழிமுறைகள் இல்லையா ஆயிரம் மாணவர்கள் இருக்கிற இடத்தில் ஒரு மாணவன் தவறு செய்தால் அவனை தண்டிக்கவேண்டியது தான். ஆனால் அதை சாக்காக வைத்துக் கொண்டு கல்லூரிக்குள்ளே நுழைந்து கலவரம் செய்வது, சரியா? கல்லூரிக்குள் நுழைந்து அடிக்கவேண்டும் என்று திட்டவட்டமாகவே காரியம் செய்து இருக்கிறார்கள். நான் நிரூபிக்கத் தயார். அடியாட்களை வைத்து அடித்து இருக்கிறார்கள். பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர்கள் அடிக்கப்பட்டு இருக்கிறார்கள். நான் பச்சையப்பன் கல்லூரியில் ஆசிரியனாக இருந்தேன் என்பதற்காகச் சொல்லவில்லை, அண்ணா அவர்கள் அந்தக் கல்லூரியில் படித்தார்கள் என்பதற்காகச் சொல்லவில்லை, மனோகரன் அவர்கள் அங்கே மாணவனாக இருந்தார் என்பதற்காகச் சொல்லவில்லை. அந்த உணர்வுகள் இப்போது இருக்காது. ஆகவே, அந்தக் காரணத்தால் நான் அதைச் சொல்ல விரும்பவில்லை. ஒரு கல்லூரியில் புகுந்து அடிப்பதற்கு என்ன நியாயம் இருக்கிறது. அதுவும் வகுப்பறையில் நுழைந்து, லாபரட்டரியில் நுழைந்து அடிக்கவும், பெண்கள் இருக்கும் இடத்தில் நுழையவும் அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டு இருப்பவர்களை அடிக்கவும் என்ன காரணம்? என்னிடத்தில் அடிபட்டவர்கள் பட்டியலே இருக்கிறது. நீங்கள் எங்களுக்கு பதில் சொல்லவேண்டாம். உங்கள் மனசாட்சிக்குப் பதில் சொல்லிக் கொள்ளுங்கள். மதுரையில் ஒரு கல்லூரி விடுதி மாணவர்களை தாக்கிய சம்பவம் முறைப்படி விசாரிக்கப்பட்டு இருந்தால் தொடர்ந்து இப்படி நடைபெறுவது தடுக்கப்பட்டு இருக்கலாம். கலெக்டர் கார் மதுரையில் அடிக்கப்பட்டது என்பதற்காக மாணவர்கள் விடுதி தாக்கப்பட்டது உண்மையல்லவா? நான் ஸ்ரீவில்லிபுத்தூர் செல்லும் வழியில் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டக்காரர்களால் அடிக்கப்படவில்லையா? ஒரு கட்சித் தோழர்களுக்கு ஆத்திரம் வருகிறபோது அடிப்பார்கள்; தாங்கிக்கொள்ளவேண்டியது தான். அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, எழும்பூர் ரயில் நிலையத்திற்கு வண்டியேற்ற சென்றபோது நானும் என்னுடைய பெண்கள் இரண்டு பேரும் காரில் இருக்கிறபோது நல்லவேளை, என்னுடைய நண்பர் ஒருவரும் இருந்தார், அவர் தடுத்தார். காங்கிரஸ் நெடுமாறன் நண்பர்களால் தான் அந்தப் பிரச்னை வந்தது. எழும்பூர் நிலையத்தில் அவரை வரவேற்க வந்த நண்பர்கள் 500 பேர் என் காரில் கட்டியிருக்கும் கருப்பு சிகப்பு கொடியைப் பார்த்து விட்டு அதைத் தாக்கிவிட்டார்கள். அப்போதுதான் வாங்கப்பட்ட புதிய கார் அது. ஊர்வலத்தில் வந்த தோழர்களால் காரினுள் இருந்த என் சட்டை கூடக் கிழிக்கப்பட்டது.





(பிற்பகல் 1·40)

அந்தத் திடீர் தாக்குதலில் என்னுடைய நண்பர் சுந்தரம் என்பவர் அடி வாங்கிக்கொண்டார். நான் இதைச் சொல்வதற்குக் காரணம் எந்த ஆட்சியிலும் சில குறைகள் நடக்கும். குறைகளே நடக்காது என்று சொல்ல முடியாது. மாணவர்களுக்கு ஆத்திரம் வரும்; வராது என்று சொல்ல முடியாது. 55 வயதான எனக்கே ஆத்திரம் வருகிறது. என்னைவிட வயதானவர்களுக்கும் ஆத்திரம் வருகிறது. அப்படி இருக்கும்போது மாணவர்களுக்கு ஆத்திரம் வராதா? மாணவர்கள் என்றால் யார் என்று பேரறிஞர் அண்ணா

அவர்கள் சொன்னார்கள். 'இரத்தத்தின் இரத்தம், சதையின் சதை' என்று சொன்னார்கள். அவர்கள் தவறு செய்தால் திருத்துவதற்கு ஒரு வழிவகை கிடையாதா? ஆனால் இன்றைக்கு அந்த வார்த்தைகள் தான் மிஞ்சியிருக்கிறதே தவிர அதனுடைய பொருள் எதையும் காணவில்லை.

போலீசார் இராணுவத்தினரைப்போல மதுரையிலே கல்லூரிக்குள் புகுந்து அடித்து நொறுக்கினார்கள். பக்கத்திலே இருக்கிற ஒரு குடிசைப் பகுதிக்குள்ளிருந்து சுமார் 200 பேர்கள் வந்து நுழைந்து, மாணவர்களை அடித்து நொறுக்கினார்கள். கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம் பெறுமானமுள்ள பொருட்களை எல்லாம் சூறையாடிவிட்டார்கள். ஹாலிலே இருந்து மாணவர்களைத் தூக்கி எறிந்தார்கள்.

சென்னையில் அப்படி ஒரு சம்பவம் நடைபெற்றது. முதலமைச்சருக்கும் நன்றாகத் தெரியும். நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். விசாரித்து பார்க்கட்டும். தியாகராயர் கல்லூரி மாணவர்களுக்கும் பஸ் தொழிலாளர்களுக்கும் தகராறு. தகராறு வரக்கூடாது. வந்துவிட்டது. அது வராமல் தடுக்க வேண்டியது அரசின் பொறுப்பு. தடுக்க முடிந்தால் வரவேற்கத்தக்கது. தகராறு வந்தவுடனே 50, 100 பேர் அந்த கல்லூரிக்குள் நுழைந்து மூன்று மணி நேரம் மாணவர்களை அடித்தார்கள். சைக்கிள், ஸ்கூட்டர், லாபரட்டரியில் உள்ள பொருட்கள், மேஜை, நாற்காலிகள் எல்லாம் உடைக்கப்பட்டன. மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களும் அடிபட்டார்கள். ஒரு அறைக்குள்ளே பூட்டிக் கொண்டிருக்கும்போது வெளியே நின்று ஒரு கம்பியை நீட்டி அடித்தார்கள். 10, 20 மாணவர்கள் படுகாயமடைந்தார்கள். அடிபட்ட மாணவர்களை ஆளுநர் மருத்துவமனையிலே பார்த்து ஆறுதல் கூறினார். அந்த மாணவர்கள், அமைச்சர் பொன்னையன் என்று நினைக்கிறேன், அவர்களிடம் மனு கொடுத்தார்கள். அந்த மனு இன்னும் தூங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் அமைச்சர் தூங்கவில்லை. இன்றைய தினம் வரையில் யாராவது கைது செய்யப்பட்டதுண்டா? அதுபற்றி ஒரு கண்டன அறிக்கை விட்டதுண்டா? மாணவர்கள் தவறு செய்கிறார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறேன். அதற்கு இதுதான் பரிகாரமா? நீங்கள் செய்வதுதான் முறையா?

அந்தக் கல்லூரியில் நடைபெற்ற தாக்குதல்-விளைவு பற்றி விசாரணை செய்ய ஒரு குழு நியமிக்கப்பட்டது. விசாரணை குழு சென்னை பல்கலைக் கழகத்தால் நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் தலைவராக பச்சையப்பன் கல்லூரி முதல்வர் டாக்டர் சண்முகநாதன் இருந்தார். காவல் துறையினர் உரிய நேரத்தில் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று குழு அறிக்கைக் கொடுத்திருக்கிறது: அது பல்கலைக் கழகத்தால் அமைக்கப்பட்ட குழுவின் கருத்து. நான் சொல்வதில் தவறு இருந்தால் எடுத்துக்காட்டுங்கள், திருத்திக்கொள்கிறேன். அந்த அறிக்கையைத் தந்தவர் பச்சையப்பன் கல்லூரி முதல்வர் என்பதால், அந்தக் கல்லூரியும்





மாணவர்களும் தாக்கப்பட வேண்டுமா? இந்த நாட்டில் யாரும் அறிக்கை கொடுக்கக்கூடாதா? யாருக்கும் உண்மையை விளக்கி அறிக்கை கொடுக்க உரிமை இல்லையா? கருத்துக்களைச் சொல்லக் கூடாதா? நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். ஒரு குறையுமே இல்லாமல் நான் நீங்கள் ஆட்சி நடத்துகிறீர்களா? ஒரு குறையும் இல்லாமல் ஆட்சி நடத்த உங்களால் முடியுமா? எந்தக் குறையும் இல்லாமல் ஆட்சி நடத்த பேரறிஞர் அண்ணாவாலேயே முடியவில்லையே; மூதறிஞர் இராஜாஜியால் முடியவில்லையே; தலைவர் காமராஜால் கூட முடியவில்லையே; திறமையான நிர்வாகி பக்தவத்சலத்தாலே கூட முடியவில்லையே. அப்படி இருக்கும்போது குறைகள் வந்தால் அதை ஒப்புக்கொள்ளாத நீங்கள் எப்படி திருந்தப் போகிறீர்கள்; அல்லது மற்றவர்களைத் திருத்தப்போகிறீர்கள்?

அதுமட்டுமல்ல. விவசாயிகள் பிரச்சனை இன்றைக்கு வளர்ந்து கொண்டே போகிறது, விவசாயிகள் போராட்டம் என்றால் பார், பார், திராவிட முன்னேற்றக் கழகம் தான் தூண்டிவிடுகிறது, கருணாநிதிதான் காரணம் என்று சொல்கிறார்கள். கருணாநிதி தான் தூண்டிவிடுகிறார் என்று அமைச்சர்கள் பேசினார்கள். அமைச்சர்கள் பேசட்டும்; அதில் தவறு இல்லை. கலைஞர் கருணாநிதியைப் பற்றி பேசாவிட்டால் கேட்பதற்கு ஆள் இல்லை. அது வேறு பிரச்சனை. அவர் தூண்டிவிடுகிறார் என்பதற்கு ஏதாவது ஆதாரம் உண்டா?

மற்றவர்களைத் தூண்டி விட்டுத்தான் ஒரு போராட்டத்தை நடத்த வேண்டுமென்ற நிலைமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எப்போதுமே இருந்ததில்லை; இனியும் இருக்கப் போவதில்லை. போராட்டம் நடத்த வேண்டுமென்றால் நாங்களாகவே போராட்டத்தை அறிவித்து, அதை சிறப்பாக நடத்திக்காட்ட எங்களால் முடியும். அதனால் விவசாயிகள் போராட்டத்தைத் தூண்டிவிடுகிற ஆட்கள் நாங்கள் அல்ல.

தொழிலாளர்கள் போராட்டங்களை அந்தந்த தொழிற் சங்கங்கள் நடத்துகின்றன; நாங்கள் அல்ல. ஆனால் நியாயம் கேட்கின்றபோது எங்களுக்குத் தெரிந்த நியாயத்தின் பக்கம் நாங்கள் நிற்க வேண்டாமா? அப்படி நிற்கக்கூடாதா? உமாநாத் அவர்களும் சிந்தன் அவர்களும் எங்கள் சார்பாக பேசுகிறார்கள் என்றவுடனே உங்களுக்கு எவ்வளவு ஆத்திரம் வருகிறது? ஏன் இந்த ஆத்திரம்?

முன்பு சிந்தனைக் கொலை செய்ய முயற்சி செய்தார்கள். அவரை அடித்தார்கள்; உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது. அப்போது வழக்குப்போட்டு அரசு நடவடிக்கை எடுக்கவில்லையா? அதற்கு முன்னாலே எங்கள் தோழன் பிரதாபசந்திரன் கொலை செய்யப் பட்டானே, உங்களுக்குத் தெரியாதா? 10 பேர் சூழ்ந்து கொண்டு கத்தியால் குத்திக் கொலை செய்தார்கள். அந்த உண்மை மணிமாறனுக்குத் தெரியாதா?

பல இடங்களிலே சாராயம் காய்ச்சப்படுகிறதே. அந்த இடங்கள், ஆட்கள் தனக்குத்தெரியாது என்று திரு. மணிமாறன் அவர்களால் சொல்ல முடியுமா? அதுபற்றி புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிடுவார்களா? ஒரு கான்ஸ்டபிள் தவறான காரியங்களிலே தொடர்புடையவராக இருக்கிறார் என்றால் அவரைப் புகார் கூறினால் தவறா? அவர் மீது நடவடிக்கை எடுக்காமல் விட்டு விடுவார்களா? விவரம் விசாரிக்காமல் நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு துப்பு கெட்டவர்களா உங்கள் காவல் துறையிலே இருப்பவர்கள். தவறு நடைபெறுகிறது என்றால் அதற்கு யார் பொறுப்பு? ஆளும் கட்சிதானே பொறுப்பு. திராவிட முன்னேற்றக்கழகம் ஆளுகிறது என்றால் அதன் பொறுப்பு. இன்னொரு கட்சி ஆளுகிறது என்றால் அதுதானே அந்த மாதிரி தவறுகளுக்கும் பொறுப்பாக இருக்க முடியும்.

அடுத்து இந்த மதுவிலக்குத் திட்டத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் மதுவிலக்குக் கொள்கையை எதிர்க்கவில்லை. அப்படித் தவறாகத் தயவு செய்து நீங்கள் கருதிவிட வேண்டாம். மதுவிலக்குக் கொள்கை என்பது ஒன்று. அதனை நிறைவேற்றுகின்ற முறை மற்றொன்று. அதனை நிறைவேற்றுவதற்குச் சட்டம் ஒரு துணை. மதுவிலக்கு தேவைதான். ஆனால் அந்த மதுவிலக்கினை அமல் படுத்துவதற்கு வெறும் சட்டத்தினால் மட்டும் கடுமையாக்கினால் போதுமா? வெறும் சட்டத்தினால் மட்டும் யாரால் தான் இதனை நல்லமுறையில் நிறைவேற்ற முடியும். யாராக இருந்தாலும் நிறைவேற்ற முடியாது. ராஜாஜியால் குறையின்றி நிறைவேற்றிட முடிந்ததா? அல்லது மற்ற யாரால்தான் நிறைவேற்ற முடியும். ஆகவே சட்டத்தைக் கடுமையாக்குவதன் மூலமாக மட்டும் சமுதாயச் சீர்திருத்தம் செய்ய முடியாது. மது அருந்துவது என்பது தனி மனிதனுடைய உணர்ச்சியைப் பொறுத்த விஷயம். திடீரென்று சட்டத்தினால் மட்டும் அவனைத் திருத்திவிட முடியாது. பொதுவாக மதுவிலக்கு தேவை என்றுதான் அனைவரும் சொல்வார்கள். வெளிநாட்டிலே கூட மது குடிக்கக்கூடாது என்னும் கொள்கை உடையவர்கள் இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய முதலமைச்சரவர்கள் ஏதோ இந்த அவசரச் சட்டத்தின் மூலம் உடனடியாக மதுவிலக்கினை நிறைவேற்றிவிடலாம் என்று கருதுவது தவறான கருத்து என்று சொல்ல விரும்புகிறேன். இந்த மதுவிலக்குக் கொள்கை பற்றி அவரை ஆதரிக்கின்ற ஆனந்தவிகடன் பத்திரிகை, 15-10-78 தேதியிட்ட அந்த பத்திரிக்கையிலே வந்திருப்பதைப் படித்துக் காட்ட விரும்புகிறேன். இதிலே இருக்கின்ற தலையங்கத்தை மட்டும் படிக்க விரும்புகிறேன். குற்றச்சாட்டு என்கின்ற வகையிலே இல்லாமல் ஒரு விளக்கம் என்கின்ற வகையிலேதான் இதைப் படிக்க விரும்புகிறேன்; ''அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதுமே மதுவிலக்குச் சட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்படும் என்பது அனைவரும் எதிர்பார்த்ததுதான். மது விலக்கில்





தீவிரப் பற்று கொண்டிருக்கும் எம். ஜி. ஆர். அதன் முழு வெற்றிக்குப் பாடுபடுவார் என்பதில் யாருக்குமே சந்தேகம் இருக்கவில்லை.'' சந்தேகம் இல்லை என்று சொல்லவில்லை. சந்தேகம் இருக்கவில்லை என்றுதான் சொல்கிறது. ''ஆனால், என்ன காரணத்தாலோ, சட்டத்திற்குப் புறம்பாக மது அருந்துபவர்கள் அதிகமானார்கள்.'' திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலேயா மது அருந்துபவர்கள் அதிகமானார்கள் என்று சொல்கிறது, இல்லை. ''ஆனால் என்ன காரணத்தாலோ, சட்டத்திற்குப் புறம்பாக மது அருந்துபவர்கள் அதிகமானார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களும் நாளுக்கு நாள் பெருகத் தொடங்கினார்கள்.'' இதிலே என்ன சொல்லப்படுகிறது என்றால் மது அருந்துபவர்கள் நாளுக்கு நாள் அதிகமானார்கள் என்று சொல்லப்படுகிறது ஆண்டுக்கு ஆண்டு கூட அல்ல, நாளுக்கு நாள். அடுத்து மேலும் படிக்கிறேன், ''தமிழகத்தின் குடிசைத் தொழில்களில் ஒன்றாகிவிட்டது,, என்று மக்கள் கேலி பேசும் அளவுக்கு அது பரவலாகவும் பகிரங்கமாகவும் நடைபெறத் தொடங்கியது.'' யாருடைய தயவிலே நடைபெறுகிறது? திராவிட முன்னேற்றக் கழகத்தின் தயவிலேயா நடைபெறுகிறது?இல்லையே எப்போதுமே ஆளும் கட்சியின் தயவிலேதானே நடைபெறுவது இயற்கை. இன்னும் சொல்லப் போனால் திரு. காமராஜ் அவர்கள் காலத்திலே கூட அரசின் ஆதரவில் சாராயம் காய்ச்சினார்கள். திரு. மாரிமுத்துவுக்கு வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம். எனக்குத் தெரியும். மேலும் ஆனந்த விகடனைப் படிக்கிறேன், ''காவல்துறையினரும் இதற்கு உடந்தையாக இருப்பதாகக் கூடப் பேசியவர்களும் உண்டு. இப்படியொரு நிலைமை உருவாகி வருவதைக் கண்டு வேதனையும் வருத்தமும் அடைந்த முதலமைச்சர் 'மதுவிலக்குக் குற்றங்களை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவேன். சட்டத்தை மீறி நடப்பவர்களுக்குக் கடுமையான தண்டனை அளிப்பேன்' என்று சூளுரைத்தார். உறுதி மிக்க இந்த எச்சரிக்கையும் கண்டு அஞ்சாமல், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் தங்கள், 'தொழிலை' தொடர்ந்து நடத்தி வந்ததோடு, அவர்களைக் கைது செய்யச் சென்ற காவல் துறையினரையும் தாக்கி வந்தனர். இந்த இடத்திலே நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். காவல்துறையினரைத் தாக்கிய சாராயம் காய்ச்சுபவர்கள் மீது இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? தாக்கிய அத்தனைபேர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டதா?

(பிற்பகல் 1·50.)

ஏறத்தாழ எனக்குத் தெரிந்தவரையில் பத்து இருபது இடங்களில், காவல் துறையினர் தாக்கப்பட்டுள்ளனர். ஓட்டேரியில் பகிரங்கமாக நான்கு நாட்கள் தொடர்ந்து ஒரு கலவரம் நடைபெற்றது. கள்ளச்சாராயம் காய்ச்சுகிற இரண்டு பிரிவினருக்கிடையே ஏற்பட்ட போட்டி காரணமாக, சாராய விலையில் ஏற்பட்ட போட்டியின் காரணமாக நடைபெற்ற கலவரத்தை

சாராயமாக காய்ச்சி பல உயிர்களைப் போக்குகிறவர்களுக்கு வேண்டுமானால் தூக்கு தண்டனை கூடக் கொடுங்கள். அப்படி அக்கிரமம் செய்கிறவர்கள் தூக்கு தண்டனையை ஏற்றுக் கொள்ளட்டும். ஒரு கோடி பேர்கள் குடிக்கும்போது. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல் பிரசாரம் மூலமாகவும், மனமாற்றம் ஏற்படத்தக்கவகையிலும் ஓரத்தநாடு திட்டத்தைப் போன்று, அது கலைஞர் அவர்கள் ஆட்சியில் ஏற்பட்டதால் வேண்டுமானால் திருவையாறு திட்டம் என்று பெயரைமாற்றி வைத்துக் கொள்ளுங்கள் — திட்டங்களை உருவாக்கிச் செய்தால் ஓரளவு வெற்றிபெறும் என்று மனதிருப்தி ஏற்படமுடியும்.

ஆனந்தவிகடன் சொல்கிறது, நான்வேண்டுமானால் சொல்லலாம். ஆனந்த விகடன் சொல்லலாமா?...... "பெரும்பாலும் ஆளும் கட்சியினரும், கட்சி அனுதாபிகளுமே மதுவிலக்குச் சட்டத்திற்குப் புறம்பாக நடந்து கொள்ளுகிறார்கள் என்ற ஓர் எண்ணம் மக்களிடையே பரவியிருக்கிறது.... "என்று சொல்லுகிறது ஆனந்தவிகடன், அது மட்டுமல்ல.... "குபேரனுக்கு ஒரு விதி, குசேலனுக்கு ஒரு விதி" என்ற வேற்றுமை இல்லையோ, அதேபோல் மந்திரிகளும் மக்களும் ஒன்று..' என்று கூறியிருக்கிறது. மந்திரிகளிலும் குற்றம் குறையுள்ளவர்கள் இருப்பது எனக்குத் தெரியும். அதனால் தான் ஆனந்தவிகடன் சொல்லுகிறது.. "மந்திரிகளும் மக்களும் ஒன்று.." என்று, அப்படிப்பட்டவர்களாக பெரிய மந்திரிகள் இல்லையென்றால், அதற்கடுத்த நிலையில் உள்ள மந்திரிகள் அப்படி இருப்பார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. பொதுமக்கள் அறிவார்கள். இன்னும் என்ன சொல்லுகிறது.. "சட்டத்தில் இருக்கிறபடி ஆளும்கட்சியினரும் எதிர்கட்சியினரும் ஒன்று, சட்ட விரோதமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் யாராகயிருந்தாலும் அவர்களுக்கு எவ்வித சலுகையும் காட்டாமல் கடுமையான தண்டனை அளிக்க முதல்வரும் அவர் ஆணைப்படி நடக்கும் அதிகாரிகளும் முன் வந்தால் தான் இந்த அவசரச் சட்டம் பலனளிக்கும்— இல்லையேல் இது ஒரு கேலிக்கூத்து-எதிர்கட்சியினரை பழிவாங்கவே இது பயன்படும். மதுவிலக்குக் குற்றங்கள் குறைவதற்குப் பதில், அதிகமாகும். இதைவிட மதுவிலக்கைப்பற்றி நான் என்ன கூற முடியும்? என்ன சொல்லவேண்டும்? இவர்களைவிட நடுநிலைமையாக யார் சொல்லப்போகிறார்கள்? இந்த ஆட்சி நடைபெறவேண்டும் என்று எண்ணுகின்றவர்கள்.. சொல்லுகின்ற கருத்துக்கள் இவை. இந்த நிலைமையில் எப்படிச் சட்டத்தின் அடிப்படையில் நீதி வழங்க முடியும்?

அது மட்டுமல்ல. இன்னும் குறிப்பாக சொல்லப்போனால் இந்தத் துறை இன்னும் காவல் துறையில் இருப்பதால்தான் இவ்வளவு குற்றங்கள் வளருவதற்கு காரணம் ஏற்படுகிறது என்பதை என் அனுபவத்திலிருந்து சொல்லுகிறேன். இந்த காவல்துறையில் இருப்பதால்தான் கையூட்டுப் பெறுகின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் சரியாக நடத்த





முடியவில்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் ஒன்று, காவல்துறையின் தரம் குறைந்து போவதற்கு உள்ள காரணங்களில் மதுவிலக்கு இந்தத்துறையில் இருப்பதும் ஒன்று என்று அறிவாளிகள் கருதுகிறார்கள். இந்த இலாகா காவல் துறையில் இருக்கின்ற காரணத்தால் தான் மற்ற பொறுப்பையும் சரியாக நிறைவேற்ற முடியாத நிலையில் இருக்கிறார்கள். அடையாறில் பிரேமா கொலை நடைபெற்றது, இதுவரையில் குற்றவாளிகள் யாரும் கண்டுபிடிக்கப்படவில்லை. நமது காவல்துறைதான் காவல் துறைக்கே முன்மாதிரியாக கருதப்பட்டது. இப்போது குற்றவாளிகளையே கண்டுபிடிக்க முடியவில்லை. புட்லூர் தண்டபாணி கொலை சம்பந்தமாக மக்கள் யாரைச் சந்தேகப்படுகிறார்கள் என்று இந்த அவையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். இது குறித்து இன்னும் ஒரு வழக்குக் கூட தொடரப்பட்டிருப்பதாக எனக்கு தெரியவில்லை. குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க இதுவரை எந்தவிதமான தகுந்த விசாரணையும் நடத்தப்பட்டதாக தெரியவில்லை. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகளை எதிர்கட்சித் தலைவரிடம் கொடுத்தார் என்ற காரணத்திற்காக சட்டமன்ற உறுப்பினர் ராஜரத்தினம் அவர்களது வீட்டில் 10 மணி நேரம் 8 மணி நேரம் சோதனை நடைபெற்றது. ராஜரத்தினம் வீட்டில் சோதனை செய்யவேண்டும் என்னும் அறிவு காவல்துறைக்கு ஏற்பட்டிருக்கிறது. தெளிவு ஏற்பட்டிருக்கிறது. எந்தக் காரணத்திற்காக ராஜரத்தினம் அவர்களுடைய வீட்டில் சோதனை போடலாம் என்ற துப்பு கிடைக்கிறதோ, அந்த துப்பு துலக்கும் அறிவு குற்றவாளிகளை கண்டுபிடிப்பதில் தோற்றுப் போய்விடுகிறது. கண்டுபிடிக்க வழியில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். குற்றவாளி இன்னார் தான் என்று கொலை செய்யப்பட்டவர் குடும்பத்தார் சொல்லுகிறார்கள். இவ்வளவு இருந்தும், பொதுமக்களின் மனத் திருப்திக்கு ஏற்றவகையிலாவது ஒரு கருத்தைச் சொல்லவேண்டாமா.

மதுரையைச் சேர்ந்த இளஞ்செழியன் என்கிற மாணவன், 10, 12 வயதுள்ள மாணவன், அழகாக பேசக்கூடியன், திருவில்லிப்புத்தூரில் சென்று பேசிவிட்டு வருகிறான். தனியாகச் செல்லவில்லை, அவர்களோடு வேறு பலரும் சென்றார்கள். மதுரையிலிருந்து நான்கைந்து கழக நண்பர்களோடு திரும்பி வந்து கொண்டு இருக்கிறான். வரும் வழியில் அவர்கள் வந்த கார் மீது இரண்டு பக்கத்திலிருந்தும் கற்கள் வீசப்பட்டிருக்கின்றன. வீசப்பட்ட கற்கள் காரில் உள்ள கண்ணாடியில் பட்டு உடைந்து காரில் இருந்தவர்கள் மீதும் பட்டிருக்கிறது. பின்னால் கார் மரத்தில் மோதி நின்றிருக்கிறது. இந்த இடத்தை நான் கூட நேரில் பார்த்தேன். வழக்கறிஞர் என்ற முறையில் நான் பேசவில்லை. வழக்கறிஞரின் வாதம் இந்த தவறை மூடி மறைத்துவிட முடியாது என்பதற்காக இதைச் சொல்லுகிறேன். பின்னர் அடிபட்ட தோழர்கள் காவல்நிலையத்தில் சென்று புகார் கொடுத்திருக்கிறார்கள். கொடுக்கப்பட்ட அந்த புகாருக்கு காவல் நிலையத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? வழக்கு நடை

பெறவில்லை. பலரும் இதற்காக தங்கள் வருத்தத்தையும் கண்டனத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். வேண்டுமென்றே கூட புகார் கொடுக்கப்படலாம். புகாரில் சொல்லப்படுவது பொய் என்று கூட சொல்லலாம். புகார் என்று சொல்வதற்கு என்ன ஆதாரம் கொடுக்கிறார்கள்? நிகழ்ச்சி எப்படி நடைபெற்றுள்ளது என்று ஆராய வேண்டாமா?

(பிற்பகல் 2·00)

அடி வாங்கியவன் புகார் கொடுப்பதற்கு கூட உரிமை இல்லை என்று சொல்லுகிறீர்களா? ஒரு சாதாரண குடிமகனுக்குக்கூட இந்த உரிமை இருக்கிறது அல்லவா? ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர் என்ன சொல்கிறார்? அந்த இளஞ்செழியன் காரிலே போகிறபோது, கல்லால் அடிபட்டுச் செத்தான் என்று சொல்ல முடியாது என்று நான் கேட்க விரும்புகிறேன். கல்லடி பட்டபோது அவர் அங்கே இருந்தாரா? அப்படி இருப்பாரா? அப்படியே அவர் அங்கே இருந்தாலும் நிற்பாரா? அதிகாரிகள் என்ன வேண்டுமென்றாலும் அறிக்கை கொடுப்பதா? அவர் ஒரு அறிக்கை கொடுப்பதற்கு யோக்கியதை உண்டா? தகுதி உண்டா? காவல் துறையைச் சேர்ந்தவர்கள் இதுபற்றிக் கருத்து சொன்னாலும் பரவாயில்லை, தாம் கேட்கலாம். ஆனால் மாவட்ட ஆட்சியாளர் எப்படிச் சொன்னார்? கல்லடி பட்டதினாலே அவன் இறக்கவில்லை, அதற்கான ஆதாரம் இல்லை. ஆனால் கார் மரத்திலே மோதியபோது தான் இறந்திருக்கலாம் என்று அப்படி மாவட்ட ஆட்சித்தலைவர் சொன்னாலும், அது உண்மை என்று வைத்துக் கொண்டாலும், அந்த இளஞ்செழியன் இறந்ததற்கு மூலகாரணம் கற்கள் எறிந்ததினால், ஏற்பட்ட தாக்குதலில் அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டு கார் மரத்திலே மோதியிருக்கிறது. அது குற்றமல்லையா? அதற்கு வழக்கு கிடையாதா? வழக்குப் போட்டீர்களா? ஏன் போடவில்லை? ஆளும் கட்சியினரைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக வழக்குப் போடவில்லையா? அப்படியே ஒன்றிரண்டு பேர்கள் மீது வழக்குப் போட்டால், ஆளும் கட்சி எப்படி கெட்டுப் போகும்? அப்படி ஒன்றிரண்டு பேர்கள் மீது வழக்குப் போட்டால் நான், மீதியுள்ள 98 பேர்களையாவது யோக்கியர்கள் என்று நம்புவார்கள். அப்படி ஒன்றுமே இல்லை என்றால், ஆளும் கட்சியிலே உள்ள அத்தனை பேர்களும் குற்றவாளிகள் என்றல்லவா கருத நேரிடும்? ஒரு குடும்பத்திலே நாலு பேர்கள் இருக்கிறார்கள், ஓரிரண்டு பேர் நல்லவர்களாக இல்லாமல் இருக்கலாம். அதற்காக நடவடிக்கை எடுக்காமலா இருப்பது? ஏன் இந்த விஷயத்தில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? முதலமைச்சர் அவர்களே ஒரு சில இடங்களில் பேசியிருக்கிறார். எதிர்க் கட்சியினரின் பிரச்சாரத்திற்காக நான் இதைச் சொல்லுகிறேன், இந்தச் சிறுவன் கல்லடி பட்டு இறக்கவில்லை என்று. இன்னும் எவ்வளவோ பேசியிருக்கிறார். இப்படி அவரே பேசுவது நியாயம்தானா? முதலமைச்சர் இப்படி பேசக்கூடிய சூழ்நிலையிலே உலகம் என்ன கருதும்? ஆளும் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர் அவர்கள் பேசுவதற்கும், மற்றவர்கள் பேசுவதற்கும் வித்தியாசம் உண்டு. தமிழகத்திலே மாவட்ட





தலைமை பீடத்திலே உள்ள நீதிபதிகளை மாற்றுவதற்கு அதிகாரம் உள்ளவர், காவல்துறை அதிகாரிகளை மாற்றுவதற்கோ, நியமிப்பதற்கோ தண்டிப்பதற்கோ அதிகாரம் உள்ள, அதிகாரத்திலே இருப்பவர் பேசக்கூடிய கருத்தா இது இப்படி அவரே பேசினால், இதிலே நியாயம் கிடைக்குமா? இதைப்பற்றி பொதுமக்கள் என்ன நினைப்பார்கள்?

எதிர்க் கட்சித் தலைவர் கருணாநிதி அவர்கள் வீடு ஆளுங் கட்சியினர் வீசிய கற்களால் பகல் 1·30 மணிக்குத் தாக்கப்படுகிறது. நான் 2·30 மணிக்கே நேரிலே போய்ப் பார்த்தேன். கண்ணாடி ஜன்னல்கள் எல்லாம் உடைக்கப்பட்டிருக்கின்றன, சிதறிக் கிடந்தன. காவல்துறையினர் என்ன சொல்லுகிறார்கள் அப்போது அங்கே காவல்துறையினர் இருந்திருக்கிறார்கள். அவர்கள் இருக்கும்போதே எப்படித் தாக்கினார்கள். அங்கே இருந்தவர்கள் நடவடிக்கை எடுக்கக் கூடாதா? எடுக்கவில்லை. அதேபோல், ஆளுங்கட்சியினர் ஊர்வலமாக வருவதற்கு பாதுகாப்புக்கு வந்தவர்கள், அந்த ஊர்வலத்தினரால் தாக்கப்படுகின்ற போது அவர்யுமல் யாரையும் கைது செய்யவில்லை. பின்னர் யார் கைது செய்யப்படுகிறார்கள்? தி. மு. க. தோழர் ஒருவர், ஒரு தொழிலாளி—கலைஞரின் பேரக் குழந்தை இடையில் சிக்கிக் கொண்டது. எங்கே கண்ணாடித் தூள் கொட்டியதோ அங்கே சென்று குழந்தையைக் காப்பாற்றுவதற்காக வந்தவனை போலிஸ ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போய் அடித்து, கையை உடைத்திருந்தார்கள். அரசாங்கத்திற்கு இது ஏற்றதுதானா? முறைதானா? நீங்கள் இதை ஒப்புக்கொள்ளமாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும், யார் இதைச் செய்தார்கள் என்று கண்டுபிடிக்கவும் மாட்டீர்கள். எனவே ஒப்புக்கொள்ளவும் மாட்டீர்கள், கண்டுபிடிக்கவும் மாட்டீர்கள். எனவே, இவற்றைக் கண்டும் காணாததுபோல் இருந்துவிட்டால், இதற்கு வேறு வழிதான் என்ன?

ஒன்றை நான் சொல்கிறேன். ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் கருணாநிதி அவர்கள் காரிலே சென்றபோது உளி வீசியது பற்றியும் அதில் அவர் தப்பியதைப் பற்றியும் பேசினார்கள். அனுதாபப் பட்டார்கள். அதற்காக மிக்க மகிழ்ச்சி; ஆனால், அவர் தப்பியதற்கு இப்போது நீங்கள் மகிழ்ச்சி அடையவில்லை என்றால் பிறகு எப்போது மகிழ்ச்சி அடையப் போகிறீர்கள்? அப்புறம் மகிழ்ச்சியே எப்பொழுதும் இருக்காது. இதுவரைக்கும்தான் நீங்கள் மகிழ்ச்சி அடையலாம். அவர். தப்பவில்லை என்றால், உங்களுக்கும் மகிழ்ச்சி என்றைக்கும் இருக்காது, ஆனால், ஆளும் கட்சியைச் சார்ந்த ஒரு உறுப்பினர் பேசும்போது, 'உளி வீசப்பட்டதோ, புலி வீசப்பட்டதோ, என்று பேசினார்கள். ஒருவேளை உங்கள் ஆட்சியிலே நாட்டில் புலிதான் வாழ்கிறதோ என்னவோ தெரியவில்லை. காட்டிலேதான் புலி இருக்கும், ஆனால், இந்த உளி நிகழ்ச்சியைக் குறித்து ஒரு பார்லாமென்டுக்காகவாவது

கண்டித்து சொல்லியிருக்கலாம. மொத்தத்தில் இந்த நிகழ்ச்சி என்று சொல்லியிருந்தாலாவது, நீங்கள் இதைப்பற்றி கண்டிக்கின்றபோது உங்கள் மீது வருத்தம் ஏற்பட்டிருக்காது.

உளி வீசப்பட்டதா புலி வீசப்பட்டதா என்றார்கள். புலி, யோசனை சொன்னால் கேட்காது. புலிக்கு யோசனை சொல்லிக் கேட்பதாக இருந்தால் அப்படிப்பட்ட காரியத்தில் கூட ஈடுபடுவார்கள்.

நான் குற்றச்சாட்டாகக் கூட சொல்லவில்லை. அரசியலில் இதெல்லாம் உருவாகலாம் அதை ஏற்றுக்கொள்ள தயாராகுங்கள். எல்லோரும் இதற்கு ஆட்படலாம. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நேரத்தில் ஏற்படலாம். ஆட்சிப் பொறுப்பு என்பது இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது. அந்தப் பொறுப்பில் இருக்கும்போது இப்படிப்பட்ட நிகழ்ச்கள் நடைபெறுமானால் அந்த நிகழ்ச்சிகள் மறுபடியும் யாருக்கும் ஏற்படாத வகையில் எண்ண ஓட்டத்தை உண்டாக்க வேண்டும். அறிஞர் அண்ணா அவர்கள் இப்போத முதலமைச்சராக இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் மீது இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடந்துவிட்டால் அறிஞர் அண்ணா அவர்கள் என்ன அறிக்கை விடுவார்கள், எப்படிப்பட்ட கருத்தைத் தெரிவிப்பார்கள்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களை எண்ணிப் பார்த்துச் சொன்னால் கூட நாட்டு மக்களுக்கு நல்லெண்ணம் பிறக்கலாம். கலைஞர் கருணாநிதியை ஒழித்து விடுவதாகவே வைத்துக் கொள்ளுங்கள். அதனால் அரசியலில் யார் வெற்றி பெற முடியும்? அதனால் என்ன பலன் ஏற்பட்டுவிடும்? மகாத்மா காந்தியைக் கொலை செய்தார்கள். மகாத்மா காந்தியின் லட்சியத்தைக் கொலை செய்ய முடிந்ததா? மிகச் சாதாரண மனிதரானாலும், பெரிய மனிதரானாலும் கொலை செய்வதால் யாருக்கு லாபம் கிடைக்கும்? அறியாமை, மூடத்தனம், அகங்காரம், ஆணவம், கொலைவெறி பிடித்தவர்களாக இருந்தால் தான் அப்பேர்ப்பட்ட காரியத்தில் ஈடுபடுவார்கள்.

இந்த நிகழ்ச்சியில் ஈடுபட்டவரை மருத்துவ மனையில் சேர்த்து என்ன நோக்கத்தில் இன்னும் வைத்திருக்கிறார்கள்? பொதுமக்களால் அவர் அடிபட்டார், காயம்பட்டார், தாக்கப்பட்டார், காவல் துறையினர் அவரைக் காப்பாற்றி கைதுசெய்து காவலில் வைத்து மருத்துவ மனையில் சேர்த்தார்கள் என்று அறிகிறேன். அவருக்கு மூளை சரியில்லை என்று கூறலாமா என ஒரு முயற்சி நடக்கிறது. யாருக்கு மூளை சரியில்லை? சொல்லுகிறவனுக்கெல்லாம் மூளை சரியில்லை என்று சொல்ல எவ்வளவு நேரம் ஆகும்? ஒரு கட்சியைச் சார்ந்த பல லட்சம் பேரில் ஏதோ ஒருவன் ஆத்திரப்பட்டோ — தூண்டப்பட்டோ இது போன்ற ஒரு காரியத்தைச் செய்தான் என்றால் அவன் ஆளும் கட்சியைச் சேர்ந்தவராக இருந்த நிலைமையை மறைக்கும்





முயற்சியை எதற்காகச் செய்யவேண்டும்? கலைஞர் கருணாநிதி அந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பெரிதுபடுத்தவில்லை. இயற்கை யாகக் கிடைக்க வேண்டிய நியாயம் கிடைக்கட்டும் என்று விட்டு விட்டார்.

ஆனால் நாடாளுமன்ற உறுப்பினர் முருகையன் அவர்கள் கொலை செய்யப்பட்டு மறைந்ததற்கு இந்த அரசாங்கமே அனுதாபம் தெரிவித்திருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர், தாழ்த்தப்பட்டவர்—அவருக்கு அனுதாபம் தெரிவிக்கிற நிலை இருந்துங்கூட முறைப்படி புலனாய்வு காரியம் நடக்கிறதா என்றால் இல்லை. இந்த அவையிலுள்ள எதிர்க்கட்சியிலுள்ள அவ்வளவு பேரும்— மாரிமுத்து அவர்களையும் சேர்த்துக் கொண்டு சொல்லுகிறேன்— உழைப்பாளர் கட்சியையும் சேர்த்துச்சொல்லு கிறேன். இந்தக் கொலைக்குக் காரணமானவர்கள் ஒருவர் அல்ல, பலர் என்பது. அவ்வளவு பேரின் கருத்தும் அது. அதை ஒத்துக் கொள்வது அல்லது ஒத்துக்கொள்ளாதது உங்கள் விருப்பம். இப்படிப்பட்ட நிலைமையில் நாட்டில் சட்டம், அமைதி, ஒழுங்கு இவற்றை எப்படிச் செம்மையாகக் காப்பது? கல்லூரி மாணவர் கள் தாக்கப்படுகிறார்கள், விடுதியில் புகுந்து அடிக்கிறார்கள். தொழிலாளர்கள் போராட்டத்தில் அடிக்கப்படுகிறார்கள். தனிப்பட்டவர்கள் கொலைக்கு ஆளாகிறார்கள். காவல் நிலை யத்தில் சில பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள், சில இடத்தில் தூக்குப் போட்டுக் கொண்டார்கள். பழனியில் காவல் துறையினர் முஸ்லீம் தோழர் ஒருவரின் உயிரைப் போக்கினார்கள், காவல் துறையில் யார் யார் எதை மறைப்பதற்காக இப்படிப்பட்ட அக்கிரமம் செய்தார்கள் என்பது அந்த வட்டாரத்தில் தெரியும், சில அமைச்சர்களுக்கும் விவரம் தெரியும். சொல்ல மனம் இருந்தால் சொல்லலாம். இந்த அரசாங்கம் சட்டம் அமைதியைக் காப்பாற்ற என்ன நடவடிக்கை எடுக்கக் தயாராக இருக்கிறது? இந்த அவை, ஆளுநர் உரையின் மீது தெரிவித்த இந்தக் கருத்துக்களுக்குத் தகுந்த பதிலை எதிர்பார்க்கிறது. உங்களைச் சந்தேகப்பட நாங்கள் தயாராக இல்லை. நாட்டு நன்மைக்காகவே இவற்றை எடுத்துச் சொன்னோம். அதை எடுத்துக் காட்ட வேண்டிய கடமை காரணமாக எடுத்துக் கூறுகிறோம். எடுத்துக் கொண்டால் எடுத்துக் கொள்ளுங்கள், சொன்ன குற்றச்சாட்டுகளில் இருந்து உங்களை விடுவித்துக் கொள்வது உங்கள் விருப்பம். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்க இயலாமைக்கு இன்னொரு முக்கியமான காரணம் அன்றைக்கே நாங்கள் வெளிநடப்புச் செய்துள்ளோம். எனவே நன்றி கூறத் தேவையில்லை என்று கூறி விடைபெறுகிறேன்.

<u>திரு. துரை முருகன்</u> : மாலைக் கூட்டம் எப்போது முடியும்?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினராக நடந்துகொள்ள வேண்டும்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று
மீண்டும் மாலை 5 மணிக்குப் பேரவை கூடும்.

பின்னர் பேரவை 2.10 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

மாலை 5—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்
திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் மீண்டும் பேரவை
கூடியது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர்
அவர்களே, மேதகு ஆளுநருடைய உரையின்மீது இந்த மாமன்றத்
தில் மக்களுடைய பிரதிநிதிகளாகப் பொறுப்பேற்று, மக்கள்
நல்வாழ்விலே அக்கறை காட்டுகின்ற மாபெரும் உறுப்பினர்கள்—
அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும், தங்கள் கருத்துக்களை
எந்த அளவுக்கு எங்களுக்குப் புரிய வைக்க முடியுமோ அந்த
அளவுக்கு அவர்கள் தங்கள் ஆற்றலின் விளைவாகப் பணியாற்றி
யிருக்கிறார்கள். இந்த ஆளுநர் உரையைப் பற்றி நான் முதல்
லேயே ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நாங்கள் பதவியேற்ற உடனேயே வெளியிட்ட ஆளுநர் உரை
ஒட்டுமொத்தமான ஒரு கொள்கையின் பிரதிபலிப்பாக அமைக்கப்
பட்டது. அடுத்த ஆண்டு நாங்கள் எதை எதைச் செய்ய
வேண்டுமென்று ஆசைப்பட்டோமோ அதைப்பற்றிப் புள்ளி
விவரங்கள் அல்லாத நிதிநிலை அறிக்கையில் சொல்வதை விட்டு
விட்டு மேல் எழுந்தவாரியாகச் சிலவற்றை நாங்கள் குறிப்பிட்டி
ருந்தோம். இப்போது இங்கே வெளியிடப்பட்டிருக்கின்ற இங்கே
படித்த அறிக்கை இந்த ஆண்டில் என்ன என்ன நாங்கள் செய்
வோம் என்ற விருப்பத்தை, எங்களுடைய ஆசையை எங்களுக்கு
உதவுகின்றவர்களுடைய ஆற்றலையும் அறிவையும் பயன்
படுத்தி நாங்கள் தெரிந்து கொண்டுள்ள கொள்கையை எப்படிச்
செயல்படுத்த முடியுமோ எப்படி நாங்கள் செயல்படுத்த வேண்டு
மென்று ஆசைப்படுகிறோமோ அந்த வகையில் அதை நிறை
வேற்றுவதற்கு அவர்களுடைய திறமையையெல்லாம் துணை
யாகக் கொண்டு திட்டங்களைத் தீட்டுகின்ற பொறுப்பை
ஒப்படைப்பதன் மூலமும் அதை நாங்கள் எங்கள் உள்ளத்திற்கு
ஏற்ப ஏற்றுக் கொள்கின்ற வகையிலே ஒரு முடிவு எடுத்து அதை
ஒரு கோடிட்டுக் காண்பிக்கின்ற முறையிலே தான் ஆளுநர் உரை
அமைக்கப்பட்டு இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது
என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மக்களுடைய பிரதிநிதிகள் ஆட்சியிலே இருப்பவர்களுக்கு
எடுத்துக் காட்டவும் சுட்டிக் காட்டவும் சில சமயங்களில்
இடித்துக் கூறவும் அவர்களுக்கு உரிமையிருக்கிறது என்பது
மட்டுமல்ல, கடமையும் இருக்கிறது என்பதை மனமார நான்
ஒப்புக்கொள்கிறேன், எடுத்துச் சொல்லவும் ஆசைப்படுகிறேன்.



அந்த வகையில் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும்
தலைவர்களும் தங்களுடைய எண்ணங்களையும் எடுத்துக் கூறி
குறைகளைச் சுட்டிக் காண்பித்து ஒரு சிலவற்றைத் தங்களுக்கு
மனத்திற்குச் சரியென்று ஒப்புதல் அளிக்கலாம் என்ற விதத்தில்
அவர்களது மனம் எப்படி அனுமதிக்கிறதோ அதற்கேற்ப
ஆதரித்தும் கண்டித்தும், சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்
கொள்வதற்கு இங்கே கேள்விகளை எழுப்பியிருக்கிறார்கள், அவர்
களுக்கெல்லாம் நான் உண்மையிலேயே நன்றி கூறக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

பிரச்சினைகளை ஒட்டுமொத்தமாக இங்கே எடுத்துக்கொண்டு
பேச வேண்டுமென்று கருதுகிறேனே தவிர, இதற்கு முன்பு நான்
பதில் சொல்வதற்கு எடுத்துக் கொண்ட நேரத்தைப்போல்,
எனது அன்பு மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள்
கவலைப்பட்டது போல் நீண்ட நேரம் நான் பேச மாட்டேன்
என்பதையும் வெகு விரைவிலே முடித்துக் கொள்வேன் என்பதை
யும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இங்கே பலர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக்
கொள்ளும்போது கருத்துக்களை வெளியிட ஒதுக்கி வைத்திருக்
கின்ற அவர்களுடைய எண்ணத்தைப் போலவே அதற்குப் பதில்
சொல்லும்பொழுது என்னுடைய நேரத்திலே கொஞ்சம் அதிக
மாகக் கேட்டு வாங்கிக் கொள்ளலாம் என்பதால் இப்போது
நான் அதிகமாக நீட்டி விரிவுபடுத்திப் பேசவில்லை என்பதையும்
அந்த வகையில் உங்களுக்கு எவ்வளவு நேரம் ஆகுமோ என்ற
கவலை வேண்டாம் என்பதையும் நான் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் என்ன இருக்கிறது ? இது எதற்காக
என்று கேட்பது போன்ற கேள்விகளையும், இதற்கு முன்னால்
சொல்லப்பட்டவைகள் என்னவாயிற்று, இதில் சொல்லப்பட்டவை
களை எந்த வகையில் நிறைவேற்றி விடப் போகிறீர்கள் என்ற
ஐயத்தையும் கிளப்பினார்கள். அதே நேரத்தில், என்னென்ன
செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா
போன்றவர்கள் எடுத்துக்காட்டுகின்ற வகையிலேயும், நண்பர்
மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து போன்றவர்களும் ஆக்கபூர்வ
மான யோசனைகளையும் சொன்னதையும், மற்றும் பல
நண்பர்கள் அப்படிச் சொன்னதையும் நான் உளமார வர
வேற்கிறேன்.

குறை கூறியவர்களையும், குறை கூறியதோடு ஆக்கப்பூர்வ
மான யோசனைகளைச் சொன்னவர்களையும் நான் உண்மை
யிலேயே மரியாதையுடனும், அவைகளையெல்லாம் உன்னிப்பாகக்
கவனிக்கின்ற பொறுப்புணர்ச்சியுடனும் இந்தப் பேச்சை நான்
தொடர்ந்து கொண்டிருக்கிறேன் என்பதை முதலில் உங்களுடன்
உள்ளத்தில் பதிய வைக்க விரும்புகிறேன்.

பிரச்சினைகள் நம்மைச் சுற்றி எழுகின்ற நேரத்தில், அவரவர் களுடைய இடத்திற்கேற்ப அந்தப் பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியவர்களாக நாம் ஆகி விடுகிறோம் என்பதை என்னை விட அனுபவம் பெற்ற பல முதியவர்கள் இங்கே இருக்கின் றார்கள், அனுபவம் பெற்ற பெரியவர்கள் இங்கே இருக்கின் றார்கள் என்பதை எண்ணும்பொழுது அவர்களுடைய கருத்துக் களை நாம் அலட்சியப்படுத்திவிட முடியாது.

ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த அரசுக்குப் பிடிவாத குணம் இருக்கிறது, நான் சொன்னதுதான் சரி, நாங்கள் செய்ததுதான் சரி என்ற எண்ணம் நிச்சயமாக இல்லை என்பதை அத்தனை மாமன்ற உறுப்பினர்களும், தலைவர்களும் நம்ப வேண்டுமென்பது என்னுடைய பணிவான வேண்டுகோளாகும். நாங்கள் ''எல்லாம் தெரிந்தவர்கள்'' என்ற நிலையில் எங்கள் கடமையைச் செய்து கொண்டிருக்கவில்லை என்பதைப் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இங்கே பேராசிரியர் சொல்லும்பொழுது, '' தவறு இருந்தால் நான் திருத்திக் கொள்கிறேன், மன்னிப்பும் கேட்டுக் கொள்கிறேன்,, என்று அவரே சொல்லும்பொழுது என்னைப் போன்றவர்கள் தவறு செய்து விட்டால் நான் செய்தது தவறு என்று சொன் னாலும், திருத்திக் கொள்கிறேன் என்று சொன்னாலும், மன்னிக்கப்பட வேண்டியவனாக நான் இருந்தேனேயானால் என்னை மன்னியுங்கள் என்று கேட்பதும், அவரைவிட எனக்கு மோசமான காரியம் என்று தோன்றவில்லை, அவரே செய்வார் என்று சொல்லும்பொழுது நான் அதைச் செய்யக்கூடிய அளவில் தான் இருக்கிறேன் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே பேசியவர்கள் பலருக்குச் சில நேரங்களில் கோபம் வர வேண்டிய நிலையில் நிகழ்ச்சிகள் இடைக்காலத்தில் நடந்திருக்க லாம். ஆனால் அந்த நிகழ்ச்சிகளுக்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதையும், அந்த நிகழ்ச்சிகள் தவிர்க்க முடியாமல் நடந்து விட்டதற்கு எந்தச் சூழ்நிலை உதவிற்று என்பதையும் அவர்கள் கொஞ்சம் பொறுமையோடு சிந்தித்துப் பார்ப்பார்களே யானால் எங்கள் மீது அவர்கள் அனுதாபம் கொள்வார்களே தவிர எங்கள் மீது ஆத்திரப்படுவதற்குக் காரணம் இருக்காது என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன்.

தொழிலாளர் பிரச்சினையைப் பற்றி ஆளுநர் உரையிலே இல்லையே என்பதிலே எல்லோருக்கும், குறிப்பாக, சி.பி. எம்., சி. பி. ஐ., மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் அத்தனை பேருக்கும் அதிலே குறை யிருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. முதலிலேயே சொல்வேன், இந்த ஆளுநர் உரை இந்த இடைக்காலத்தில் எப்படி வந்து விட்டிருக்கிறது என்பதையும், இனி என்ன செய்யப் போகிறது என்பதைப்பற்றியும் சிந்திக்கும்பொழுது, நிதிநிலை அறிக்கையிலே சொல்லிவிட்டு அதற்குப்பிறகு இங்கே





நிறைவேற்றப்பட வேண்டுமென்று நாங்கள் விரும்பும் வரவு-செலவுத் திட்டம் வெளிப்படுத்தப்படும்பொழுது இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற சந்தேகங்கள் குறையும் அல்லது எங்களுக்குச் சந்தேகங்களை உண்டு பண்ணி எங்களைத் திருத்த முடியுமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

நாங்கள் கொண்டு வர இருக்கின்ற சட்டங்கள் நிறைவேறு வதற்கு முன்னால் எதிர்க்கட்சித் தலைவர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும், அல்லது எங்கள் கட்சியில் இருப்பவர்கள் என்று கூட நான் சொல்வேன், அவர்களுக்கு அந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது, அவர்கள் ஏதாவது திருத்தங்களைச சொன்னால் கூட, அவைகள் உண்மையிலேலே நடைமுறைக்கு ஒத்து வரக்கூடியது என்று இருக்குமேயானால், கண்டிப்பாக நாங்கள் அதை ஏற்போம் என்பதையும் சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

(மாலை 5·10)

தொழிலாளர்களைப் பற்றி, ஒரு கொள்கையை மட்டும் நான் இங்கே தெளிவுபட சொல்ல விரும்புகிறேன். என்னைப் பொறுத்த வரையில் இரண்டு பிரச்சினைகளை முன் வைத்து தொழிலாளர் களையும் தொழில் தகராறுகளையும் நான் கவனிக்க, சந்திக்க விரும்புகிறேன். ஒன்று, உற்பத்தி பெருக்கு அதிகமாக வேண்டுமே தவிர உற்பத்தி குறையக் கூடாது என்பதிலே எனக்கு அதிக அக்கறை உண்டு என்பதும், இதைச் சொல்வதால் மற்றவர்களுக்கு அந்த அக்கறை இல்லையென்ற அர்த்தம் ஆகாது என்பதும் என்னுடைய எண்ணம் என்ன என்பதை நான் வெளியிடுகிறேன் என்பதையும் அதற்குப் பொருளாகக் கொள்ள வேண்டுமென் பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதே நேரத்தில், தொழிலாளர்களுடைய உரிமை பறிக்கப் படுகிறது என்ற நிலைமை ஏற்படுகிறபொழுது இந்த அரசைப் பொறுத்த வரையில் தனித் தன்மை வாய்ந்த முறையில், தனிப் பட்ட முறையில், கையெழுத்து வாங்கி ஒவ்வொரு தொழிலாளி யாக, தொழில் அதிபர்கள் வேலைக்கு வாங்குவது போல் அல்லது ஏழ்மையைப் பயன்படுத்தி அவர்களை அடிமையாக்குவது போல், வேலைக்கு வைத்துக் கொள்கிற முறையை இந்த அரசு உண்மையிலேயே வெறுக்கிறது என்பதையும் அதை ஆதரிக்க நாங்கள் நிச்சயமாக எங்கள் உள்ளத்தோடு, மனத் திருப்தி யோடு தயாராக இல்லையென்பதையும் எங்கள் கொள்கையாக நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால், சில இடங்களில் நடை பெறுகின்றனவே என்று கேட்டால் சில தீர்ப்புகள் அவர்களுக்குச் சாதகமாக இருக்கின்ற நிலைமைகளையும் வெவ்வேறு மாநிலங்கள், வெவ்வேறு வகையிலே பலரைப் பயன்படுத்திக் கொள்ள தயாராக இருக்கிற நிலையிலும் நாங்கள் அதை விட்டுக்

சட்டத்தைக் காப்பாற்ற விரும்பவில்லை என்பது மட்டுமல்லாமல் சட்டத்தின் மதிப்பை பின்னாலே வருகிற எந்த அரசும், அது 25 ஆண்டு காலத்திற்குப் பின் வந்தாலும் சரி, இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னாலே வந்தாலும் சரி, இதே நிலைமை ஏற்படுவதற்கு வெவ்வேறு காரணங்கள் ஏற்படும் என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். விவசாயப் பிரச்னை என்ற பெயரி நியாயம் இருந்தாலும் கூட இந்த வன்முறை நிலைமைகளை, அராஜகத்தை, தவறான காரியங்களை செய்ய மக்களைத் தூண்டி விடுவதற்கு அவர்களுக்கு துணிச்சல் உண்டாக்கும் என்பதும் அதனால் இந்த நாட்டின் ஜனநாயக வளர்ச்சி வேகம் குறைந்து விடும் என்பதும் கொஞ்சம் வேதனையோடும் வேறு வழியின்றியும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அந்த வகையில் தமிழக அரசு அப்படிப்பட்ட கொள்கை பிரச்சாரங்களை அனுமதிக்காது என்பதையும், இந்த மாமன்றம் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளும் என்றும் நான் நம்புகிறேன். ஆனாலும் ஏழை எளிய விவசாயிகள் எத்தனை நாளைக்கு அவர்கள் பட்டினி கிடக்க முடியும், அவர்கள் வாழ்க்கைக்கு என்னவெல்லாம் உத்தரவாதம் என்கிற கேள்விக்கு இந்த அரசு பதில் சொல்லியாக வேண்டும்.

(மாலை 5·20)

ஏழைகளுக்காக ஒரு அரசு தேவை என்று சொல்லி, ஏழைகளுடைய, பெரும்பான்மை மக்களுடைய, வறுமைக்கோட்டிற்கும் கீழே உள்ளவர்களுடைய வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த பிறகு அவர்களைப் பற்றிச் சிந்திக்காமல், திட்டமிடாமல் இருப்பது நிச்சயமாக தமிழக அரசுக்கு மட்டுமல்ல; எந்த அரசுக்கும் உகந்ததாக இருக்க முடியாது; ஒரு தவறான கொள்கைக்குச் சொந்தக்காரர்களாகி விடுவோம் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன்.

அந்த வகையில் ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகள் இதுவரையில் எவ்வளவு கஷ்டங்கள் பட்டிருக்கிறார்கள் என்பதையும், கடன்காரர்களாகி இருக்கிறார்கள் என்பதையும் தமிழக அரசு உணர்ந்திருக்கிறது. சென்ற முறை நான் டில்லிக்கு சென்றபோது கூட இதைப்பற்றி பேசியிருக்கிறேன் என்பதையும் மீண்டும் இதைப்பற்றி பேச இருக்கிறோம் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு குறித்த விலைக்கே ஏன் அரசே எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டால் 50 லட்சம் டன் அரிசிக்கு எத்தனை கோடி ரூபாய் என்று கணக்கிட்டுப் பார்த்தால் தான், அதை எந்த நிர்வாகத்தின் பெயரால் எப்படி வாங்க முடியும், எப்படித் திருப்பிக் கொடுக்க முடியும், அதை எப்படி காப்பது என்பதையும் எண்ணிப்பார்த்தால் அது ஒரு சாதாரண விஷயமல்ல என்பதை இங்கே இருக்கிற மாமன்றத்து உறுப்பினர்கள் எல்லாம் தெரிந்துகொள்வார்கள்.





அதோடு எங்கே வேண்டுமென்றாலும் அரிசியை எடுத்துக் கொண்டு போகலாம் என்ற நிலையை ஏற்படுத்திவிட்டு, தற்காப்புக்காக 20 சதவீதத்தை அரசுக்கு தர வேண்டுமென்ற ரீதியில் இருக்கிறதே தவிர, அது கூட ஓரளவுக்குப் பிறகு நிறுத்தப்பட இருக்கிறது என்பதை அரசின் சார்பிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே குறிப்பிட்டவர்களிலே வேடிக்கையாக பேசியவர்கள் இருக்கிறார்கள். மற்றவர்களை அவமானப்படுத்த வேண்டுமென்ற நோக்கம் இல்லாவிட்டாலும் அப்படிப்பட்ட கருத்துக்கள் எடுத்து வைப்பதிலே ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய விருப்பம் நல்ல நோக்கத்தோடு இருந்தாலும் அது பிறர் மனதைப் புண்படுத்தும் வார்த்தையாக இருக்கலாம். ஆனால் நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. இருந்த போதிலும் இந்த மாமன்றத்திலே பேசுகின்றவர்கள் வேண்டுமென்றே சில பிரச்சனைகளை உருவாக்கி, இங்கே பேசுவது என்பது ஒரு மரபாக ஆகவேண்டுமானால் அது நிச்சயமாக இந்த மாமன்றத்தின் மரியாதையைக் கெடுத்து விடும்; இதுவரை இருந்த தகுதிக்கு உகந்ததாக இருக்க முடியாது. அதை நினைத்துப் பார்க்ககூட முடியவில்லை: ஒப்புக் கொள்ள முடியவில்லை. இருந்தாலும் அப்படிப்பட்டவர்களுக்கு தமிழக அரசின் சார்பாக ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். கொள்கையை கொள்கை விளக்கங்களை நாம் இங்கே பேசுவோம். அதை மனதிலே பதியக்கூடிய வகையில் பேசுவோம். கடுமையான வார்த்தையைப் பயன்படுத்த வேண்டியிருந்தாலும், அப்படி பேச வேண்டுமென்ற எண்ணம் யாருக்காவது இருந்தால் அப்படித்தான் பேச வேண்டுமென்று நான் முடிவு செய்திருக்கிறேன் என்று சிலர் நினைத்திருந்தால் அவர்களுக்கு நான் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்; மற்றவர்களும் அப்படிப்பட்ட பேச்சைப் பேச வேண்டிய நிலை ஏற்படுமானால் அது எங்கே கொண்டுபோய் விடும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கடுமையான வார்த்தைகளைப் பயன் படுத்தினாலும் கண்ணியக் குறைவு ஏற்படாமல், பிறர் மனது புண்படாமல் பேசுவதாக இருந்தால் அது வரவேற்கக் கூடியதாக இருக்கும். குறை சொல்வதிலே கூட கண்ணியத்தோடு சொல்ல முடியும்; நல்ல சொற்களிலே சொல்ல முடியும்.

மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் இங்கே எவ்வளவு வேகமாக வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள், எவ்வளவு ஆவேசமாகப் பேசினார்கள் என்பதை நீங்கள் எல்லாம் பார்த்தீர்கள். அதே நேரத்தில் அவருடைய பேச்சிலே எங்கும் கண்ணியக் குறைவான வார்த்தைகள் இல்லை. கோபமாக சொன்னாலும் சிரித்துக்கொண்டே சொல்லி, அவருடைய கருத்தை மற்றவர்கள் மனதிலே பதியக் கூடிய அளவுக்கு பொறுமை இழக்காமல் பேசினார்கள். குற்றச்சாட்டுக்களைச் சொல்லும் போதும் வார்த்தை தவறவில்லை.

[திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்] [1979 பிப்ரவரி 16

இங்கே இராஜாஜி அவர்கள் இருந்தபோது எப்படியெல்லாம் குண்டு வெடித்தார் என்பதையும், வழக்குகள் போடப்பட்டன என்பதையும் எடுத்துச் சொல்லி, இருந்தபோதிலும் அவர்கள் தன்னை விடுதலை செய்தார்கள் என்று கூறினார்கள். நான் உண்மையிலேயே சொல்கிறேன். அப்போது அவர்களுக்கு என்ன வயது இருக்கும் என்று தெரியாது. ஒரு வேளை இராஜாஜி நினைத்திருப்பார். இந்த குழந்தை செய்திருக்க மாட்டான், அல்லது யாரோ செய்து விட்டு பழியை இவன் மேல் போட்டி ருக்கலாம் என்று நினைத்து விடுதலை செய்திருப்பார். இப்போது கூட, அவர் தான்தான் செய்தேன் என்று சொன்ன பிறகு கூட அவர் செய்திருப்பாரா என்று என்னால் நம்ப முடியவில்லை. அந்த அளவுக்கு அவர் பழகுகின்ற முறை, மாமன்றத்திலே நடந்து கொள்கின்ற விதம் அமைந்திருக்கிறது. அதே நேரத்தில் தன்னுடைய உரிமையையும் விட்டுக் கொடுக்காமல், தன்னுடைய கொள்கையையும் விட்டுக் கொடுக்காமல், பிறர் மனதிலே கருத்துக் களை பதிய வைக்கின்ற முறையை எண்ணிப்பார்க்கும் போது அதைப்போல அனைவரும் மரபை காத்து, நல்ல பெயரை காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நண்பர் உமாநாத் அவர்கள் கருத்தை இங்கே குறிப்பிட்ட பிறகு ஒன்றை நான் இங்கே சொல்லியாக வேண்டும்.

வன்முறையிலே ஈடுபடுபவர்களை நிச்சயமாக வழக்கிலே இருந்து விடுவிக்க முடியாது என்றாலும், அவர்கள் மீது இருக் கின்ற வழக்குகளை வாபஸ் வாங்க முடியாது என்றாலும் அப்படிப் பட்ட கொள்கையினை மாற்றிக்கொள்வது இயலாது என்றாலும் அவர் சொன்ன பிறகு ஒரு சில பிரச்சினைகளைப்பற்றி நான் மீண்டும் பரிசீலனை செய்வேன் என்பதையும் அதைப்பற்றி இந்த அரசு விரைவிலே நல்ல முடிவை சொல்வதற்கு முயற்சிக்கும் என்பதையும் இந்த அவையிலே நான் குறிப்பிட விரும்புகிறேன், யார் மீதும் தனிப்பட்ட வரையில் விருப்பு வெறுப்பு காட்ட வேண்டும் என்கின்ற வகையிலோ அல்லது ஏதாவது ஒரு பழி சுமத்த வேண்டும் என்கின்ற வகையிலோ நடவடிக்கைகள் எடுக் கின்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதை மட்டும் தயவுசெய்து நண்பர் மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் நம்புவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஆளுநர் அவர்களது உரையில், இதுவரையில் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்பது பற்றிச் சொல்லப்படவில்லை என்று மிகத் தெளிவாகவும் அழுத்தம் திருத்தமாகவும், மனத்தைப் புண்படுத்தாத வகையிலும் பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டதை இங்கே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன், இந்த ஆட்சியிலே ஒரு லட்சம் பேர்களுக்கு வேலை கொடுக்கும் என்றீர்களே, இப்போது 11 ஆயிரம் பேருக்குதான் கொடுக்கப்படும் என்று சொல்கிறீர்களே, ஏன்



1979 பிப்ரவரி 16] [திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்]

இந்த வேறுபாடு, முன் கூட்டியே திட்டம் போட்டுவிட்டு இதைச் சொல்லியிருக்கக்கூடாதா என்று அவர்கள் கேட் டார்கள், இது நியாயமான ஒரு கேள்விதான், இதற்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். இவைகளை எல்லாம் ஆளுநர் உரையிலேயே சொல்லவேண்டும் என்றால் ஒரு நீண்ட பிரசங்கம் போல் ஆகிவிடும் என்பதால் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக் கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இருப்பினும் நான் அவைகளில் ஒருசிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆளுநர் உரையிலே அந்தத் திட்டத்தின் மூலம் ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு உண்டாக்கப்படும் என்று குறிப்பிட் டிருந்தது. என்னிடம் இருக்கின்ற புள்ளிவிவரங்களின்படி முதல் 9 மாதத்திலே அதாவது 31-12-78 வரை இந்தத் திட்டத்தின் மூலம் 1 லட்சத்து 30 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டு உள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பட்டு வளர்ப்பு திட்டத்தின் மூலம் 29 ஆயிரம் பேர்களுக்கும், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் 9 ஆயிரம் பேர்களுக்கும் சிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் 58 ஆயிரம் பேர்களுக்கும் ஆக 1 இலட்சத்து 30 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இலட்சம் பேர்களுக்கு என்று சொன்னோம். ஆனால் இலட்சத்து 30ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லும் போது நமது பேராசிரியர் அவர்கள் உண்மையிலேயே மகிழ்ச்சி கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். நான் இன்னொன் றையும் சொல்லவேண்டி இருக்கிறது. சில நேரங்களில் சில கேள்விகள் எழும்பும்போதுதான் உண்மைகள் வெளி வருகின்றன. ஆகவே இப்படி அனுபவம் மிக்கவர்கள் இப்படிப்பட்ட கருத் துக்களை இங்கே எடுத்து வைப்பது இந்த அரசுக்கும் இந்த அவைக்கும் நல்லது என்பதை நான் மன நிறைவோடு சொல்லி அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ஏழை விவசாயிகளுக்கு பயன்தரும் முயற்சியாக குத்தகையை 40 சதவிகிதத்திலேயிருந்து 25 சதவீதமாகக் குறைக்க இவ்வரசு முடிவு எடுத்துள்ளது என்றும் இந்தச் சட்ட சபையில் அதற்கான திட்டம் கொண்டுவரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இது மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களுக்கு நான் சொல்லுகின்ற ஒரு பதிலாகும். இதுமட்டும்தானா, கோயில் நிலங்கள் பற்றி என்ன சொல்கிறீர்கள் என்ற கேள்வி அவருடைய மனதிலே எழுவது எனக்குப் புரிகிறது. இப்போது ஏற்றுக்கொண்டிருக்கின்ற கடமைகளை நிறைவேற்றுவதோடு நாம் மக்களுக்கு என்ன சொல்லி இருக்கிறோமோ அதையும் நிறைவேற்றுவதற்கும், இந்த தமிழகத்திலே உள்ள மக்களுக்கு வீடு இல்லை என்கிற நிலைமை இல்லாத அளவுக்கு நாம் அனைவரும் சேர்ந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சிப்போம் என்றும் அப்போது இதை நிறைவேற்றுவது சுலபம் என்றும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நண்பர் மாண்புமிகு துரை முருகன் ஒரு சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள், அதாவது ஓவர்சீஸ் எம்ப்ளாய்மென்ட் கார்ப்பரேஷன் என்ற அமைப்பு பற்றி அவர்கள் கேட்டார்கள். ஓவர்சீஸ் மேன் பவர் கார்ப்பரேஷன் என்ற அந்த அமைப்பு வெளி நாடுகளிலே இருக்கின்ற கம்பெனிகளோடு தொடர்பு கொண்டு அங்கிருக்கக்கூடிய வேலைவாய்ப்பினை அறிந்து இங்குள்ளவர்களை தக்கமுறையில் அனுப்புவதற்கு ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாலை 5.30)

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் 40-ஐ 25 ஆகக் குறைத்து இருப்பதாக, அதை அறிவித்திருப்பதாக, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க இருப்பதாக குறிப்பிட்டார்கள். அதேபோல் கோவில் நிலங்கள் பற்றியும் குறிப்பிடுவார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இதை இரண்டாகப் பிரித்துப் பார்க்கவேண்டும். கோவில் நிலங்கள் என்று சொல்லும்போது கோவில் நிலங்களுக்கும் அது பொருந்தும் என்று சொன்னாலும் கூட அதே நேரத்தில் கொடுக்க வேண்டியவர்கள் கோவில்களுக்குக் கொடுத்தால் இப்பேர்ப்பட்ட நிலைமையை அதற்கும் சேர்த்து கொண்டுவருவதற்கு இந்த அரசுக்கு மாற்றுக் கருத்து இருக்காது என்று திரு. கிட்டப்பா அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. துரை முருகன் : ஓவர்சீஸ் கார்ப்பரேஷன் பற்றிச் சொன்னார்கள். அது எப்போது அமைக்கப்பட்டிருக்கிறது. இப்போது எவ்வளவு பேர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். யார் அதை நிர்வகிக்கிறார்கள் என்பது போன்ற விளக்கங்கள் கொடுத்தால் உதவியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் நேரத்தை வீணாக்கவேண்டாம் என்பதற்காக ஒட்டுமொத்தமாகப் பதில்சொல்லிக் கொண்டு போகிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது எல்லாவற்றையும் பற்றிப் பேசுங்கள், எவ்வளவு மணி நேரம் வேண்டுமானாலும் பதில் சொல்கிறேன் என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய்த் துறை பற்றி குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாடு நிலச்சீர்திருத்தம் 5-வது விதிப்படி உபரி நிலங்களை யார் யாருக்குக் கொடுக்கலாம் என்றால் கீழ்க்கண்டவாறு கொடுக்கலாம். உபரி நிலத்தை குத்தகைக்கு உழுபவர்கள், நிலச்சீர்திருத்தச் சட்டத்தினால் இப்போது முற்றிலும் இழந்தவர்கள், மூன்று ஸ்டான்டர்ட் ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்கள், நிலம் இல்லாத தாழ்த்தப்பட்ட அல்லது பின்தங்கிய



விவசாயத் தொழிலாளர்கள், இராணுவத்தினர், நிலம் இல்லாத விவசாயத் தொழிலாளர்கள், மூன்று ஸ்டாண்டர்டு ஏக்கருக்குக் குறைவாக குத்தகை நிலம் உள்ளவர்கள். பர்மா, சிலோனிலிருந்து வந்த அகதிகள், நிலம் இல்லாத விவசாயத் தொழிலாளர்களைக் கொண்ட கூட்டுறவு ஸ்தாபனங்கள். மேலே குறிப்பிட்ட விதிப்படி நிலம் இல்லாத விவசாயத் தொழிலாளர்கள். ஆக, உபரி நிலங்கள் இந்த வரிசைக் கிரமப்படி கிடைக்கும். இன்னும் சில திட்டங்கள், விவசாயிகளுக்கு மொத்த விளைச்சலில் 75% விவசாய வாரம் என்று பிடித்துக்கொள்ளவும், 25% நிலச் சொந்தக்காரருக்குக் குத்தகைத் தொகையாக நிர்ணயிக்கவும் அரசு முடிவு எடுத்திருக்கிறது என்று குறிப்பிட்டேன். ஆளுநர் அவர்களது உரையில் பலவற்றைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்பதுபற்றி பலருக்குக் குறையிருந்தாலும் சில நண்பர்களுக்குள்ள சந்தேகத்தைத் தீர்க்கவேண்டிய கடமை என்ற வகையில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாட்டுடமையாக்கும் கொள்கையை நாங்கள் கைவிட்டுவிடவில்லை. சிறிய மாவட்டம், நீலகிரி மாவட்டத்திலிருந்து ஆரம்பித்து மாவட்டம் மாவட்டமாக நாட்டுடைமையாக்கும் சட்டத்தை 1977-ல் கொண்டுவந்து நீதிமன்றத்தின் தடை உத்தரவு இருப்பதால் நிறுத்தப்பட்டு 76 வரை வழக்கை விரைவில் முடிக்க நடவடிக்கைகள் எடுக்க வில்லை (பெருந்துகள்.) தற்போது இந்த அரசு எடுத்த முயற்சி காரணமாக அந்த வழக்கு உச்சநீதிமன்றத்திற்கு வந்துள்ளது. எல்லா மாவட்டங்களிலும் கொண்டுவர வேண்டும் என்று, ஒரே நேரத்தில் கொண்டுவர வாய்ப்பு இருந்தும் ஆனால் நீலகிரியில் மட்டும் கொண்டுவரப்பட்டு மற்ற மாவட்டங்களில் கொண்டு வர முடியாமல் போனதற்குச் சட்டம் தடுத்தது என்று சொன்னாலும் எப்படியோ எண்ணம் நல்ல எண்ணம்தான்—அதுவும் இந்த அரசின் கொள்கைதான் என்று குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே அதைப் பற்றி இங்கே கூடுதலாக சொல்லாமல், மினி பஸ்கள் விடுவது என்னவாயிற்று என்ற கேள்வியை எழுப்பினார்கள்.

தமிழ்நாட்டில் இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு.. (குறுக்கீடு) கனம் காங்கிரஸ் கட்சி தலைவர் மாரிமுத்து அவர்கள் கேட்கிறார்கள். அதற்கும் பதில் சொல்லுகிறேன். தமிழ்நாட்டில் முதன்முறையாக எத்தனைக் கிராமங்களுக்குப் பஸ் வசதியில்லை என்பதையும், எத்தனைக் கிராமங்களுக்குச் சாலை வசதியில்லை என்பதையும் கணக்கிடப்படவேண்டும் என்று கருதி விரிவான சர்வே நடத்தப்பட்டது. அதன் அடிப்படையில், வட ஆற்காடு, மதுரை, கோயம்புத்தூர், தர்மபுரி, தஞ்சை போன்ற இடங்களில் மினி பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன. மேலும் 700 மினி பஸ்கள் தொடர்ந்து விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்ற புள்ளி விவரங்களை எல்லாம் இப்போது சொல்லிக் கொண்டு நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. இந்த அரசு வழக்குமன்றத்தில் இருக்கின்ற வழக்குகளிலோ அல்லது அதிகாரிகளைத் தடுப்பதின் மூலமாகவோ நிர்வாகத்தில் நீதியில் குறுக்கிடுகிறார்கள் என்கின்ற குற்றச்சாட்டுகளுக்கு நான் ஒன்றைப் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்தக் காரணத்தை முன்னிட்டும் நடக்காது, எப்படிப்பட்ட நிலையிலும் இதில் ஈடுபடத் தயாராக இல்லை என்பதையும், எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் முதலில், மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்கள் என்பதையும் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதைக் குறிப்பிடும்போது. நண்பர் சிந்தன் அவர்கள் தாக்கப்பட்டது பற்றி எடுத்துக்கூறியிருந்தாலும், அவர் எப்படி தாக்கப்பட்டார். எப்படி வழக்குமன்றத்திற்குச் சென்றது, தீர்ப்பு எப்படி வழங்கப் பட்டது என்பதும், அப்படித் தீர்ப்பு வழங்கப்பட்டதற்கு என்னென்ன காரணங்களால் தீர்ப்பு அவ்வாறு அளிக்கப்பட்டது என்பதையும் நாம் அறிவோம். முதலில் தாக்கியவர்களின் யார் என்பதை அடையாளம் காட்டிய அதிகாரிகள் மேல்கோர்ட்டுக்குப் போனவுடன் அவர்களே அடையாளத்தை காட்ட முடியவில்லை என்று சொன்ன காரணத்தால் அந்த வழக்கு தோல்வி அடைந்தது என்பதையும் இங்கு குறிப்பிடுகின்ற நேரத்தில், இதை அதிகாரிகளாக செய்தார்களா, அல்லது வேறு யாராவது வெளியில் உள்ளவர்கள் அப்படி சொல்ல செய்தவர்கள் யார் என்பதை தெரிந்த வரையில் சொல்லமுடியாது என்றாலும் இப்படி மாறுபட்ட அளவுக்கு இந்த அரசு எங்களுக்குத் தெரிந்த அளவில் அனுமதிக்க மாட்டோம், அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபட மாட்டோம் என்பதை நான் உறுதியாகக் கொள்ள விரும்புகிறேன். இதை நீங்கள் நம்ப வேண்டும் என்பது எனது வேண்டுகோளாகும்.

வழக்குகள் என்பதும், அதிகாரிகள் என்பதும், நான் முன்பே குறிப்பிட்டிருப்பது போல் இன்று தொடங்கியது அல்ல. நீண்ட காலமாக இருக்கின்ற அதிகாரிகள் காங்கிரஸ் காலத்திலிருந்து பணியாற்றுகிறார்கள். அவர்கள் காலத்திலிருந்து பணியாற்றுகின்றவர்களும் இருக்கிறார்கள். எதிர்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்தில் பணியாற்றுகின்றவர்களும் இருக்கின்றார்கள். அதற்குப் பிறகு சேர்க்கப்பட்டவர்களும் இருக்கலாம். இப்படி சேர்க்கப்பட்டவர்களும் இருந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் இப்போது தேர்ந்தெடுக்கப்படவில்லை. இந்த நிலைமையில் அதிகாரிகள் தவறு செய்தார்கள் என்றிருந்தால், அந்த அதிகாரிகளைச் கண்டிப்பதற்குரிய நியாயமான சட்டம், அல்லது அதிகாரம் இருந்தாக வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொய் வழக்கு போடுதல் என்கின்ற முறை, கட்டாயமாக மாற்றியாகவேண்டும், நிறுத்தியாக வேண்டும் என்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. மாற்றுக் கருத்தும் இல்லை





அதைப்போலவே, மதுவிலக்கைப்பற்றி சொல்லும்போது. பணத்தைக் கொடுக்கின்றார்கள், அது யார் என்று தெரியவில்லை என்பதையும், அப்படிப்பட்டவர்கள் நல்ல பணவசதியுள்ளவர்கள் தப்பித்துக்கொள்கிறார்கள், ஏழைகள் தான் சிக்கிக்கொள்கிறார்கள் என்பதை மாமன்ற உறுப்பினர்கள் எடுத்துச்சொல்லும்போது, ஒன்றை மனதில் பதிந்து கொள்ள வேண்டும், பதிய வைத்துக்கொள்ளவேண்டும். இப்படிப்பட்டவர்களையும் தண்டனைக்கு உள்ளாக்கும் வகையில் ஏதாவது சட்டத்தைக் கொண்டு வந்தால், அதற்கு எப்படிப்பட்ட, சட்டத்தைக் கொண்டுவந்தால், அல்லது எப்படிப்பட்ட, எவ்வித முறைகள் இருந்தால், இதைத் தடுக்க பயன்படும் என்பதை பற்றியும் நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். நான் உண்மையிலேயே இதைப்பற்றி தீவிரமாக சிந்தித்துக்கொண்டிருக்கிறேன் என்பதையும் இங்கு வெளியிட விரும்புகிறேன்.

(மாலை 5.40)

சில மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள் என்று கருதுகிறேன். ஒரு கோடி பேர்கள் குடிக்கிறார்கள் என்று சொன்னார்கள். (குறுக்கீடு-பேராசிரியர்) மன்னிக்க வேண்டும், பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். இதிலே 50 லட்சம் பேர்கள் பழக்கப்பட்டவர்கள் என்றெல்லாம் கூறினார்கள். நான் அவர்களுக்குச் சொல்வதெல்லாம். அவர்கள் எப்படி நம்பி சொல்லுகின்றார்களோ, அவர்களை நான் நம்புகிறேன். அவர்கள் இந்த குறைகளுக்கு அப்பாற்பட்டவர் என்பதிலே எனக்கு நிச்சயமாக நம்பிக்கை உண்டு, நான் அவர்களுக்குச் சொல்வது, ஒரு கோடி பேர்களோ அல்லது எத்தனை கோடி பேர்களோ என்று கணக்கிடுவதற்கு முன், இதை நாம் கண்டு கொண்டால் நல்லதென்று நம்பினேன். அந்த வகையில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் இதிலே ஒருங்கிணைந்து இதை செயல்படுத்துவதற்கு வெற்றிகரமாக உதவினால், நாம் சட்டத்தை அதற்கேற்ப அமைத்து, அனைத்துக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து உழைத்தால், நிச்சயமாக அண்ணாவின் கொள்கை, நமது அரசின் கொள்கை, முன்பிருந்த அரசின் கொள்கை வெற்றி பெறும் என்பதிலே சிறிதும் சந்தேகமில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத்: இந்த மதுவிலக்கு சம்பந்தமாக புது சட்டம் சம்பந்தமாக கனம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, என்ன நடக்கிறதென்றால், இதற்கு முன்னாலே இருக்கிற சட்டத்திலே மினிமம் தண்டனை 3 மாதங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி குறைந்த பட்சம் 3 மாதங்கள் என்று இருந்தும்கூட, பரவலாக கோர்ட்டுகளில் 1 மாதம் தான் போடுகிறார்கள். அதையும் மீறி இந்த மாதிரி 6 மாதங்கள் ஒரு வருஷம் என்று போடுவது எதற்காக ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: அதற்குத் தான் உங்கள் யோசனையை, அனுபவத்தை ஏற்றுக்கொள்ளும் வகையில், இதுபற்றி திருத்தங்கள் வரும்போது அவைகளைப் பயன்படுத்திக்கொள்ள இருக்கிறோம். முன்னாலே இருந்த சட்டத்தில் ஒரு விதி இருந்தும், பழக்கத்தின் காரணமாக, அனுமதிக்கப்பட்டதன் காரணமாக இப்படி விட்டுவிடுகிறார்கள், ஆகவே, இந்த நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அதை மாற்றி அமைக்க வேண்டும். உங்கள் எண்ணத்தைச் சரிவரப் பயன்படுத்தி, உங்கள் யோசனைகளையும் கொடுத்து, சரியாக இந்தச் சட்டத்தை உருவாக்கினால், நமது அனைவருடைய நல்ல நோக்கம் நிறைவேறும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

மறைந்த இராஜாஜி அவர்கள் இருந்த காலத்தில் இருந்து, இதுவரை எப்படியெல்லாம் இது நடைபெற்று வந்தது, அது மீறப்பட்டு எப்படியெல்லாம் இது அதிகமாகி இருக்கின்றது என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை நான் கவனித்தபோது, எனக்குத் தெரிந்ததெல்லாம் குடிப்பவர்கள் அதிகமாகி விட்டார்கள் என்பதைவிட, குடிப்பவர்களுடைய எண்ணிக்கை வெளியிலே தெரிய ஆரம்பித்து விட்டது என்பதை சொல்ல விரும்புகின்றேன். அப்படியே அதிகமாகியிருந்தாலும், சட்டம் வந்தபிறகு, தெருவிலே சண்டை சச்சரவுகள், குழப்பங்கள் குறைந்திருக்கிறது என்ற நம்பிக்கை மக்கள் மத்தியிலே வந்திருக்க முடியாது. அந்த எண்ணம் மக்களுக்கு வந்திருக்கிறது என்பதை கிராமப்புறங்களிலே உள்ள மக்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். சில இடங்களில் பண வசதி உள்ளவர்கள், மிகுந்த பண வசதி உள்ளவர்கள், ஒரு கிராமத்திலே தங்களுடைய சொந்த ஓர் அரசு போல் நினைக்கிறவர்கள், இந்த நேரத்தில், இந்தக் கிழமையில் வந்து சாராயத்தை காய்ச்சிக் கொள்ளுங்கள் என்று சொல்லுகின்ற அளவுக்குக்கூட, அப்படிச் செயல்படுகின்றார்கள் என்ற செய்தி வரும்போது, சட்டம் அவர்களைத் தொட முடியாது என்ற ஒரு காரணமே தவிர, அவர்கள் சட்டத்திலே இருந்து, தண்டனையிலே இருந்து தப்பித்துக் கொள்ளுகிறார்கள் என்ற ஒரு நிலைமையை உருவாக்க முடியாது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய சட்டம் வருவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னால், யார் யார் இதிலே ஈடுபட்டுச் சாராயம் காய்ச்சுகிறார்கள் என்ற பட்டியல் என்னிடம் இருக்கிறது. எனக்குத் தெரியும், அதை நான் வெளியிடப் போகிறேன் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இதுவரையிலே அந்தப் பட்டியல் வெளியிடவில்லை. புதிய சட்டம் வந்த பிறகு, அந்தப் பட்டியல் காவல் துறைக்கு அனுப்பப்பட்டதா, அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதை அன்பு கூர்ந்து தெரிவிக்க வேண்டுகிறேன்.





மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அரங்கநாதன் அவர்கள் கேள்வி நியாயமானது. அந்தப் பட்டியலை நான் கொடுக்காமல் இல்லை, ஒரு சிலரிடம் கொடுத்தேன். அந்தப் பட்டியலை நான் கொடுத்த பிறகு அந்த அதிகாரிகள் அங்கு செல்வதற்கு முன்பாகவே அவர்களுக்குச் செய்தி தெரிந்துவிட்டது. ஆகவேதான் அதை மேலும் வெளிப்படையாகச் சொல்லவில்லை. ஆகவே, அவர்களைக் கண்காணிக்கக்கூடியவர்களையும் உள்ளடக்கி சட்டம் உருவாக்கப்படவேண்டும். அது வந்தால், இந்த நிலைமைகள் மாற்றப்படும். முன்னாலே சொல்வார்களே 'மாமூல்' என்று அப்படிப்பட்ட ஒரு சிலரும் இன்னமும் இருக்கிறார்கள். பதவியிலும் இருக்கிறார்கள், பக்கபலமாகவும் இருக்கிறார்கள். இவர்களை எல்லாம் நீக்குவதற்கு உரிய வகையில் சட்டம் உருவாக்கப்பட வேண்டும். இந்தக் கொள்கை மக்களுக்குத் தேவை என்று நம்புகிற நாம, ஏழைகளுக்கு தேவை என்று நம்புகிற நாம், உடலைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணுகிற நாம், இவற்றையெல்லாம் உளமார ஏற்றுக்கொள்கிற நாம் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும், இப்படிப்பட்டவர்கள் அதிலே குற்றம் புரிய தைரியம் இன்றி ஒதுங்குவதற்கு நிச்சயமாக சட்டம் வந்தால்—அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்பதை விட அவர்கள் ஒதுங்கிவிடுவார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். இன்று அத்தகைய சட்டம் இல்லை என்பதால் அவர்கள் துணிந்திருக்கிறார்கள். சட்டம் அவர்களையும் குற்றவாளியாக்கும் என்று இருந்தால் நிச்சயமாக, துணிந்து இப்படிப்பட்ட காரியத்தில் இறங்கமாட்டார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவந்து உங்களுடைய திருத்தங்கள், யோசனைகள், ஆகியவற்றையெல்லாம் சேர்த்து நல்ல முறையில் செயல்படுத்தக்கூடிய வகையில் அனைத்துக் கட்சித் தலைவர்களோடும் தொடர்பு கொண்டு செயல்படுத்தக் கூடிய நிலைமையை உருவாக்குவோம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

முன்பு சொல்லப்பட்ட நிலையைப் போல் எதிர்க்காலத்திலே உச்சமட்டக் கமிட்டி அமைப்பதைக்கூட இந்த அரசு நிச்சயமாக விரும்புகிறது என்பதை சொல்லிக் கொள்கிறேன். சட்டத்தைப் பயன்படுத்தும்போது உண்மையான நோக்கத்தோடு பயன்படுத்தப்பட வேண்டும். வேறு எந்தக் காரணத்திற்காவும் விருப்பு வெறுப்புக்கேற்ற வகையில் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை வராமல், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கொண்ட குழு, அவைகளைக் கவனிக்கக்கூடிய வகையில் எப்படி தவறு செய்தால் எடுத்துக்காட்டக்கூடிய யோசனை சொல்லக்கூடிய குழுவாகக் கூட அமைப்பதில் இந்த அரசுக்கு ஆட்சேபணை இல்லையென்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசி கொடுப்பதில் ஊழல் என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. நான் ஒன்றைப் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். எங்களால் முடிந்த அளவுக்கு அதிகாரிகளைக்

கொண்டு ஆங்காங்கே இருக்கிறவர்கள், பிரமுகர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள் அல்லது பொதுவான சங்கங்களைச் சேர்ந்தவர்கள் மற்றைய ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இவர்கள் எல்லாம் இருந்து எந்த அளவுக்கு ஒத்துழைத்தார்களோ அந்த அளவுக்கு அதிகாரிகள் அந்தப் பணியைச் செய்திருக்கிறார்கள். கூடுமான வரையில் தவறுகள் நடந்துவிடக் கூடாது என்று அமைச்சர்களைக் கேட்டுக் கொண்டு அமைச்சர்கள் முன்னிலையில் கொடுக்க வேண்டுமென்று கூறி அந்த நிலைமை ஏற்படுத்தப்பட்டது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சில தவறுகள் நடந்திருக்கலாம், நடந்திருக்காது என்று நான் சொல்லவில்லை. ஆனால் வேண்டுமென்றே யாருக்கோ கொடுக்கக்கூடாது, யாருக்கோ கொடுத்தாக வேண்டும் என்ற நோக்கத்தோடு அதிகாரிகள் அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய அனுமதிக்கப்படவில்லை. அப்படிச் செய்வதற்கு காரணமாக எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் இருந்தாலும் நான் ஏற்கவில்லை. மீண்டும் மீண்டும் பட்டியல் புதுப்பிக்கப்பட்டு வந்து கொண்டே இருந்தது. எங்களால் ஆன அளவுக்குக் கொடுத்துக் கொண்டே வந்தோம்.

வெள்ளத்தின்போது இடம் இன்றி மக்கள் தவித்த காலத்தில் கார்ப்பரேஷன் அதிகாரிகளுடைய பாதுகாப்பில் எங்கெங்கு தங்கியிருந்தார்களோ அவர்களுக்கெல்லாம் தேவையான அளவுக்கு வசதியான நிலைமைகளை உருவாக்கித் தந்தோம். அவர்களுக்காக அரிசி மூட்டைகளைக் கொடுக்கும்போது அந்தந்தப் பட்டியலை வைத்துக் கொண்டு தாய்மார்களானாலும் ஆண்களானாலும் அந்தந்த அரிசி மூட்டையின்மேல் அவர்களை உட்கார வைத்து அதற்குப் பிறகு அவர்களுக்கு எடுத்துக் கொடுக்கப்பட்டது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தவறு நேர்ந்திருந்தால் எடுத்துக் காட்டினால் நிச்சயமாக அரசு பரிசீலிக்கும். ஆனால் வெள்ளம் வந்தபோது குடிசைகளில் தங்க இடம் இன்றி கார்ப்பரேஷன் அதிகாரிகளுடைய பாதுகாப்பில் அவர்கள் கொடுத்த இடங்களில் தங்கியிருக்கிறவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கியபோது எடுத்த பட்டியல் அல்லாமல் புதியதாக எடுத்த பட்டியல்களையும் சேர்ந்து அவர்களுக்கும் அரிசி வழங்கப் பட்டிருக்கிறது.

(மாலை 5·50)

அது நியாயமாக இல்லாமல் பின்னால் ஒரு தவறான காரியத்தைச் செய்ய எல்லோரையும் தூண்டிவிடும் என்பதை மனத்திலே வைத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.....

திரு. சென்னை மு. அரங்கநாதன்: முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றை நான் கொண்டுவர விரும்புகிறேன். குறுக்கீடு என்று தவறாக எண்ண வேண்டாம். மன்னித்துக் கொள்ள வேண்டுகிறேன். சென்னை நகரத்திலே வெள்ளத்தால்





பாதிக்கப்பட்டபோது அப்படிப் பாதிக்கப்பட்டவர்கள் தங்குவதற்கு கார்ப்பரேஷன் சிப்பந்திகள் நல்ல முறையிலே வேலை செய்தார்கள். ஆனால் கட்சிக் கண்ணோட்டத்துடன் அந்த அடிப்படையிலே சிலர் செயல்பட்டார்கள். என்னுடைய தொகுதியாகிய திருவல்லிக்கேணியிலே பல பேர்கள் அப்படிச் செய்திருக்கிறார்கள். நான் நிரூபிக்க தயாராக இருக்கிறேன். கல்வீடு உள்ளவர்களுக்குக்கூட அரிசி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்திலே உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்களுக்கு அரிசி வழங்கப்படவில்லை. தென் சென்னையிலே இன்றைக்கு அதற்காக ஜனதா கட்சியினர் உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். குறிப்பாகச் சொல்கிறேன். 90-வது வட்டத்திலே கட்சி அமைப்பாளர்களுக்கு, அந்த கட்சி அமைப்பாளர்களே 4 கார்டு என்றும் 10 கார்டு என்றும் வாங்கியிருக்கிறார்கள், இதனால் அவர்களுக்குள்ளேயே சண்டை ஏற்பட்டு காவல் நிலையத்திலே புகார் இருக்கிறது. அதேபோன்று 80-வது வட்டத்திலே இரண்டு அமைப்பாளர்கள் தங்களுக்குள்ளேயே அவர்கள் சண்டைபோட்டுக்கொண்டு அதுபற்றியும் காவல் நிலையத்திலே புகார் இருக்கிறது என்பதை நான் முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நான் அதையெல்லாம் பேசவேண்டாம் என்று தான் கருதினேன், ஆனால் அதையெல்லாம் பேசும்படியான நிலைமையை உருவாக்கிவிட்டதற்காக நான் வேதனைப்படுகிறேன். நான் அது சம்பந்தப்பட்ட இந்தப் பட்டியல்களையெல்லாம் அவர்களுடைய கட்சித்தலைவரிடத்திலே கொடுத்துவிடுகிறேன்.

அவைகளைப் பரிசீலித்து, அவைகள் எப்படி நடந்திருக்கின்றன என்பதை அவர்களே முடிவு எடுத்துச் சொல்லட்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.....

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சென்னை நகரத்திலே தான் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருக்கிறபோது அந்த நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் இப்படிப்பட்ட குறைபாடுகள்கூட இல்லாமல் செய்திருக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: யாரையும் வரக்கூடாது என்று நாங்கள் சொன்னதாக நிரூபித்தால் அது எந்தக் குற்றமாக இருந்தாலும் நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். யாரும் கலந்து கொள்ளக் கூடாது என்று தடுக்கப்பட்டிருந்தால், அதைப்பற்றிச் சொன்னால், அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். எங்கெங்கோ யார் யார் அரிசி வழங்குகிறார்கள். எங்கெங்கே

யார் துணிகளை வழங்கப் போகிறார்கள் என்பதையெல்லாம் விளம்பரப்படுத்தித்தான் அந்த அமைச்சர்கள் அங்கங்கே சென்று வழங்கியிருக்கிறார்கள். அதுவும் மாலையிலே சென்று வழங்கியிருக்கிறார்கள். இது அவர்களுக்குத் தெரியாதது அல்ல—. வேண்டுமென்றே அலட்சியப்படுத்துவோம் என்று நீங்கள் கருதியிருந்தால் இதுபோன்ற பொது நிகழ்ச்சிகளை வெளியிடும் போது தயவுசெய்து சட்டமன்ற உறுப்பினர்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், பங்குகொள்ள வரவேண்டுமென்றும் ஏதாவது மனக் கஷ்டம் ஏற்பட்டால், அதற்கு இந்த அரசு பரிகாரம் தேடத தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் அதிகாரிகளைச் சொல்லவில்லை. என்னுடைய குறை. அமைச்சர்கள் விநியோகம் செய்யும்போது அந்தச் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்களும் இருக்கின்ற முறையில் எங்களுக்கும் தகவல் கொடுத்தால் என்ன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: முதலமைச்சர் அவர்கள் எவ்னமோ ஒரு கத்தை காகிதத்தை எதிர்க்கட்சித் தலைவரிடத்திலே கொடுத்தார்கள், நாங்களும் இந்த அவையின் பகுதிதான். ஆகவே அது எங்களுக்கும் தெரிந்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: காண்பிக்கக் கூடாது என்பதல்ல. எந்த, எந்தக் கட்சியினர் வாங்கியிருக் கிறார்கள். நேரத்தை வீணாக்க வேண்டாமென்று நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். யார், யார் வாங்கியிருக் கிறார்கள் என்ற பட்டியல் தரப்பட்டிருக்கிறது அதைத்தான் சொன்னேன். இதையெல்லாம், உங்களுக்கு எல்லாம் தெரியாத ஒன்றை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞரிடம் காட்டவேண்டுமென்ற எண்ணமே எங்களுக்குக் கிடையாது என்பதையும் நீங்களும் எங்களுக்குத் துணை நிற்கக்கூடியவர்கள். தவறு இருந்தால் கண்டிக்கவேண்டியவர்கள் என்பதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோல ஒவ்வொன்றிலும் நாங்கள் எங்கள் கடமையைச் செய்ய எங்களால் முடிந்த அளவுக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதையெதை எங்களால் செய்ய முடியவில்லையோ அவைகளை எங்களால் செய்ய முடியவில்லை என்பதை நிச்சயமாக வெளியிலே சொல்லுவோம், அதிலே வெட்கப்பட எதுவுமே இல்லை.



சில நேரங்களில் ரெட் டேப்பிசம் என்று சொல்லுகிறார்களே அந்த சிகப்பு நாடா முறையில். அதனால் ஏற்படும் காலதாமதம் என்ன என்பதை எனக்கு முன்னால் இருந்தவர்கள் நன்றாக அனுபவித்திருப்பார்கள். எனவே நான் அதைப்பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். அவைகளை மாற்றி ஒழுங்குபடுத்தி விரைவாகக் காரியங்களை ஆற்றக்கூடிய வகையில் அமைப்புகளை மாற்றியமைக்க வேண்டுமென்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. வெகுவிரைவில் அந்த மாற்றத்தை அவர்கள் செய்து தருவார்கள். அதை எந்த அளவிற்குப் பயன்படுத்திக்கொண்டு, காரியங்களை விரைவாக நடத்தி நாங்கள் எங்கள் பணிகளை ஒழுங்காகச் செய்யப் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அந்த வகையில் ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத்தலைவர்-தலைமை)

நான் சேலத்தில் பேசிய ஒரு கருத்தைப்பற்றி இங்கே குறிப்பிடும்பொழுது மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் அன்பழகனார் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்லும்பொழுது உளியால் அவர் காரில் தாக்கப்பட்டு. அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய செய்தி வருகிறபொழுது ஏன் அறிக்கை விடவில்லை என்ற குறையை அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சேலத்தில் நான் அதைப்பற்றி மட்டும் குறிப்பிட்டிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏனோ தெரியவில்லை, பத்திரிகை ஏடுகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற நண்பர்கள் ஒரு சிலவற்றை அதில் மறைத்து விட்டார்கள். அது எனக்குச் செய்யும் நன்மை என்று கருதுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. இதைப்போன்றவைகளை ஏன் குறிப்பிடுவதில்லை என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் சேலத்தில் குறிப்பிட்டதைப்பற்றி ஒரு பத்திரிகையிலே வந்த செய்தி மட்டுமல்ல, அங்கேயுள்ள தோழரைச் சந்தித்த பொழுதும் அந்தச் செய்தியை ஏதோ முதலமைச்சர் நம்பாததைப்போல உளிக் கதையெல்லாம் சொல்கிறார்கள் என்ற அந்தக் கருத்து வந்தது. புதிய கதை என்று சொல்லி விட்டதற்குப் பிறகு அந்த அனுதாப உணர்ச்சி அதிலேயிருந்து பிறக்கவில்லை. அந்த அனுதாப உணர்ச்சி பிறக்கவில்லை என்ற இந்தச் செய்திதான் மக்களிடம் இவ்வளவு நாளும் பரவியிருக்கிறது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் எந்தந்த வகைகளிலே தாக்கப்பட்டவன், எந்த அளவிற்கு அந்த வேதனையைத் தெரிந்தவன் என்ற அந்த உரிமையோடு என்னால் பேசமுடியும். யாருக்கு என்ன ஆபத்து வந்தாலும் அதைப்பற்றி நான் என்ன நினைப்பேன் என்பது உவ்வொருவருக்கும் தெரியும்.

நான் அமெரிக்காவில் இருக்கும்பொழுதுகூட என் நண்பா ஒருவரிடத்தில் சொல்லி, அவருடைய நண்பரிடம் இதைச் சொல்லுங்கள் என்று நான் சொல்லியதை அந்த நண்பர் நிச்சயமாகப் புரிந்து கொண்டிருப்பார் என்று நான் சொல்லும் பொழுது, இவைகளையெல்லாம் எடுத்து வைக்கும் நேரத்தில் கொள்கை வேறுபாடு இல்லை என்ற நிலைமையிருந்தாலும், தொண்டர்களிடையே கட்சி வேறுபாடு என்ற நிலைமைகள் ஏற்பட்டு விட்டது என்பதையும், சிலநேரங்களில் கருத்துகளிலே கூட நடைமுறையிலும் நாம் வேறுபட்டிருக்கிறோம் என்ற நிலைமைகள் சிலருக்கு ஏற்பட்டு இருந்தாலும்கூட ஒரு உயிரை அழிப்பதன் மூலம் ஒரு கொள்கையை அழித்துவிட முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது என்பதை நான் சேலத்தில் குறிப்பிட்டு அண்ணா சொல்லியிருப்பதையும் நான் சொல்லியிருக்கிறேன் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு கத்தியை வைத்துக்கொண்டு ஆயிரம் ஆட்களைக் கொன்றுவிட முடியும், ஆனால் ஆயிரம் கத்திகளை வைத்துக்கொண்டு ஒரு மனிதனுடைய உள்ளத்திலே இருக்கும் கொள்கையை மாற்றி விட முடியாது என்று அமரர் அண்ணா சொல்லியிருக்கிறார்கள் என்பதையும் அதே சேலம் கூட்டத்தில் பேசியிருக்கிறேன். இதுவும் வெளிவரவில்லை. இதைப்பற்றியும் பேராசிரியரின் நண்பர் அவரிடம் என்ன சொல்லியிருக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. இதைக்கூட மாற்றிச் சொல்லியிருக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை.

ஒன்றை நான் சொல்கிறேன், அன்பு உணர்ச்சி எல்லோர்க்கும் இருக்க வேண்டுமென்பதில் நான் பின் தங்கியவன் அல்ல என்பதையும், இன்னொருவரை அழித்துவிட்டால்தான் நாம் வாழ முடியும் என்ற கொள்கைக்கு நான் சொந்தக்காரன் அல்ல, என்னுடைய கட்சியும் அந்தக் கொள்கைக்குச் சொந்தம் அல்ல என்ற உத்தரவாதத்தை மட்டும் நான் துணிவோடு சொல்ல விரும்புகிறேன்.

ஆனால் ஆங்காங்கே சில பிரச்னைகள் எழும்பொழுது கருத்துக்களைச் சொல்ல வேண்டிய கட்டத்திற்கு ஒவ்வொரு வரும் ஆளாகிவிடுகிறார்கள். அரகியல் காழ்ப்புணர்ச்சி என்று சொன்னாலும், அரசியல் சூழ்நிலைக்கு நண்பர்கள் பொறுப்பாக இருந்தாலும் நாமும் அந்த உணர்ச்சிவசப்பட்ட நிலைமைக்கு ஆளாகிவிடுகிறோம். அந்த வகையில் சில பிரச்னைகளை நாம் சந்திக்கும்பொழுது வார்த்தைகள் வரலாம், ஆனால் கொலை முயற்சி என்பதை நாம் எப்பொழுதும் விரும்புகிறவர்கள் அல்ல, அதிலும் நான் அதை அனுபவித்தவன், பிறருக்கு அந்தத் துன்பம் வரக்கூடாது என்பதிலே அக்கறை உள்ளவனாக இருப்பேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாலை 6.00)

அதோடு இன்னொன்றை நான் குறிப்பிட வேண்டும். இன்றைய தினம் காலையில் கூட மாண்புமிகு உறுப்பினர்—யார் என்று நான் குறிப்பிட வேண்டாம், அவருக்கே தெரியும்—





கோபாலபுரத்திற்குப் போவோம் என்று சொன்னார்கள். பேசிய பேச்சு நாடாவில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது, தேவை யென்றால் நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். நான் பேசிய பேச்சு இதுதான். நான் பேசிய பொதுக் கூட்டங்களில் அங்கங்கே அமளி ஏற்படுத்தப்பட்டது. நான் பொதுமக்களுக்கும் கட்சித் தோழர்களுக்கும் சொன்னேன், தயவுசெய்து நீங்கள் அமைதியாக இருங்கள், யார் அந்தக் குழப்பத்தை எழுப்புகிறார்கள் என்று மக்களுக்குத் தெரிவிக்கின்றவகையில் நீங்கள் அமைதியாக இருங்கள், கல்லையோ, மண்ணையோ எறிபவர்கள் யார் என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்த நீங்கள் அமைதியாக இருங்கள். லியாகத் அலிகானை சுட்டுக் கொலை செய்தவனைப் பொதுமக்கள், சுட்டுக் கொலை செய்தவன் யார் என்று அடையாளம் தெரியாத அளவுக்கு அடித்துவிட்டார்கள். நீங்கள் அதைச் செய்துவிடுவீர்களென்றால் சாட்சிக்கு ஆள் இருக்காது. இதைச் செய்வதிலே நமக்கு இலாபம் இராது, அப்படி நடப்பது நம்முடைய கொள்கையும் அல்ல என்று சொன்னேன். இந்தப் பேச்சுக்கும் ½ மணி நேரத்திற்குப் பிறகு எங்கு போனாலும் மக்களே தூண்டினார்கள் என்றால், இப்படியே நீங்கள் அனைவரும் அவரைச்சந்திக்க வேண்டுமென்று போவீர்களென்றால், எத்தனை போலீசார் போவார்கள். எத்தனை போலீசார் வந்து எத்தனைப் பேரைச் சுட்டுக் கொல்ல வேண்டியிருக்கும் என்று சொன்னேன். அங்கொன்றும் இங்கொன்றும் இரண்டு வார்த்தைகளை எடுத்துக் கொண்டு, எதற்காகப் பேசினேன் என்பதைப் பற்றி கொஞ்சங் கூட என்னை நன்றாகத் தெரிந்திருந்தும் சிந்திக்காமல், இரண்டு வார்த்தைகளை மட்டும் சேர்க்கும்போது லார்ட் அமெரி மகாத்மா காந்தியைப்பற்றி தெரிவித்த கருத்துக்களைப் போல், இது தவறான கருத்துக்களெல்லாம் உருவாவதற்கு காரணமாகி விடுகிறது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். சந்தேகம் இருந்தால் பேசித் தீர்த்துக் கொள்வோம். நான் தவறு செய் திருந்தால், பேராசிரியர் சொன்னதைப் போல் திருந்தத் தயார், மன்னிப்பு கேட்டுக்கொள்ளவும் தயார். ஆனால், சொல்லாத ஒன்றை—பேசத் தெரிந்தவர்கள் நாலும் படித்தவர்கள், விவரம் தெரிந்தவர்கள்— மற்றவர்கள் சொன்னதை வைத்து ஒன்றுபடுத் துவது சரியாக இருக்காது.

இந்த அளவில் ஆளுநர் உரையில் பேச வாய்ப்பினை தந்த நேரத்தில் ஒட்டுமொத்தமாக இன்னொரு கொள்கையை நான் சொல்லியாகவேண்டும். மாணவர்கள் தாக்கப்படுகிறார்கள், மாணவர்களைக் கல்லூரிக்குள் புகுந்து மக்கள் தாக்கினார்கள் என்கிற பெயரில் ஆளுங்கட்சியின் தூண்டுதல் அல்லது ஆளுங் கட்சியினர் சிலர் ரவுடிகளைக் கையிலே வைத்துக்கொண்டு அங்கே போய் நடத்துகிற தாக்குதல் என்றெல்லாம் சொல் கிறார்கள், நான் இங்கே பணிவோடு ஒரு நிலைமையை நினைவு படுத்த விரும்புகிறேன். இதைச் சொல்வதால் முன்பு நடந்தது, இப்பொழுதும் நடப்பது நியாயம்தான் என்கிற அளவில் அந்தக்

கருத்தைச் சொல்கிறேன் என்று நினைத்து விடக்கூடாது. மக்கள் பேருந்தில் பயணம் செய்கிறார்கள். அவர்களுக்கும் மாணவர்கள் பிரச்னைக்கும், காவல் துறைக்கும் சம்பந்தம் கிடையாது. தொழிலாளர் பிரச்னைக்கும் மாணவர்கள் பிரச்னைக்கும் இடையில் என்று சொன்னால், இருவருக்குமிடையே ஒரு பிரச்னை ஏற்பட்டது. அது பொதுப் பிரச்னையாக மாறி குழப்பம் ஆகி விட்டது. அது வேறு விஷயம். ஆனால், ஒன்றும் அறியாத பொதுமக்களை, பேருந்திலே செல்லும்போது கல் எறிவது, தாக்குவது என்று வந்துவிட்டால், அது முறையாகிவிடுமானால், அதற்கு மாணவர்கள் ஆட்படுவதாக இருந்தால்கூட, பெற்றோர்கள், உடன்பிறப்புகள், அண்ணன்மார்கள் இந்த நிலைமைகளையெல்லாம் அவர்களுக்குச் சொல்ல வேண்டாமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

இதற்காக, முன்னொருமுறை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இல்லாத நேரத்தில் நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக இருந்த நேரத்தில், சென்னையில் நடந்ததை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். சென்னையில் ஒரு கல்லூரியில் மாணவர்கள் வெளியே பஸ்களையெல்லாம் தாக்கி குழப்பங்கள் ஏற்பட்டு, பிரச்னை விபரீதம் அடைந்தபொழுது, பக்கத்திலே குடிசையிலே, மற்ற இடங்களிலே இருந்த பொதுமக்கள் வந்து தாக்கினார்கள். போலீசார் குறுக்கிட வேண்டி வந்தது என்பதையும். இது ஆளுங் கட்சியாக இருக்கும்போது கெட்டபெயர் ஏற்படுத்த வேண்டுமென் பதற்காக செய்யப்படுவது என்பதையும் அது ஒரு நியாயமான, பொதுவான மரபாகி விடுமோ என்றும் ஐயப்படுகிறேன். அந்தச் சந்தேகத்தை நாம் மாற்றியாகவேண்டும்.

அந்த நிலைமைக்கு அன்று நான் எப்படி தி. மு. கழகத்தில் இருந்தபோது பொறுப்பு இல்லையோ அதே போல் இன்றும் சொல்கிறேன், அந்த நிலைமைக்கு நான் பொறுப்பு இல்லை. ஆனால் மாணவர்களுக்கு இடையே சச்சரவுகளை உருவாக்கு வதற்கும் ஒரு கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் இன்னொரு கல்லூரிக்குள் சென்று அவர்களை அடிப்பதும், அவர்களைப் பழி வாங்குவதும், அதிலே சிலரைப் பிடித்து வைக்கும் நிலைமை உருவாவதும், 100-க்கு மேற்பட்டவர்களை காவல் துறையினர் குறுக்கிட்டு தடுக்கும்போது விபரீதங்கள் நடைபெறுவது இவைகள் எல்லாம்—அதற்கு மேல் நான் சொல்லவிரும்பவில்லை-நாட்டுக்கு நல்லதல்ல என்பதை உங்களைப் போலவே நானும் நினைக்கி றேன், என்பதை உங்கள் மனதில் பதிய வைக்க விரும்புகிறேன்.

இதற்கு ஒரே ஒரு வழி இருக்கிறது. முன்பொரு முறை, மாணவர்கள், பெற்றோர்கள், பிரமுகர்கள், கல்லூரி ஆசிரியர்கள் ஆகியோரை வைத்துப் பேசி ஒரு அமைப்பை உருவாக்கி அதன் மூலம் அவர்களுக்கு வேண்டியவற்றை, நிறைவேற்றுவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கித் தந்தேன். கொஞ்ச நாளைக்கு அந்த அமைப்பு இருந்தது. மீண்டும் குழப்பம் கிளம்பியிருக்கிறது. நான்





அண்மையில் சொன்னது போல் இதற்கு முன்னால் நான் திராவிட முன்னேற்றக்கழகத்தில் உறுப்பினராக இருந்தபோது என்ன சொன்னேனோ அதையே இப்போதும் சொல்கிறேன், மாணவர்கள் அரசியல் கட்சிகளின் பிடிப்பில் இருந்து விடுபட வேண்டும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அந்த கட்சியின் பொறுப்பில் இருக்கிற தமிழக அரசின் சார்பில் நான் சொல்லிக் கொள்கிறேன், அந்தக் கட்சி அந்தப் பணியை செய்யக்கூடாது என்று தடுக்க, அந்தப் பணியில் இருந்து விடுபட தயாராக இருக்கிறது அனைத்துக்கட்சி நண்பர்களும் பெரியவர்களும் அப்படி ஒப்புக்கொள்ள முன் வந்தார்கள் என்றால் அரசியல் கட்சி அங்கே நுழையாமல் அவர்கள் தங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு, படித்துக் கொண்டு, அவர்களுக்கு பிரச்னை ஏதேனும் வருகிறபோது அதற்கு அரசியல் தலைவர்களின் துணையைக்கொண்டு அந்த நிலைமைகளை எப்படி சமாளிக்கலாம் என்கிற வகையில் அவர்கள் முன் வந்தால் இப்படிப்பட்ட பிரச்னைகள் வருமா என்பதில் எனக்கு ஐயம் உண்டு. இதற்கு என்னைப்போன்ற வர்கள் அரசியல் தலைவர்கள் ஏதாவது காரணமாக தடையார்க இருக்கிறார்களோ என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது. ஆகவே, நான் கேட்டுக்கொள்கிறேன், நமக்குள்ளே இருக்கும் காழ்ப்பு உணர்ச்சி அல்லது கட்சி வேறுபாடு இவைகளை மறந்து மாணவர்களின் நலன் கருதி நாம் எல்லோரும் உட்கார்ந்து பேசி, இதற்கு என்ன வழி என்பதைக் கண்டுபிடித்து எல்லோருக்கும் பொதுவாக மாணவர்கள் கல்வி கற்பிக்க வேண்டிய நேரத்தில் அவர்கள் நன்றாகப் படித்து தேறவேண்டிய நேரத்தில் படித்துத் தேற வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்கிற ஒரு நல்ல நிலைமையை நான் உருவாக்கித் தருவதற்கு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உட்கார்ந்து பேசுவோம், முடிவு எடுப்போம், அதை எல்லோரும் பின்பற்றுவோம், அதற்கு உங்களுடைய, எல்லோருடைய ஒத்துழைப்பையும் நான் வரவேற்கிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முருகையன் அவர்களுடைய கொலையைப் பற்றி இங்கே ஒரு கருத்தை வெளியிட்டு இருக் கிறார்கள். அதிலும் குறிப்பாக மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அவரை கொலை செய்தது ஒருவரா, பலரா என்பதைச் சொல்லவேண்டும், அதை முதலில் நான் தெரிவித்தாக வேண்டும் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்சர் என்ற பொறுப்பில் நான் இங்கே உட்கார்ந்து கொண்டு ஒருவர் தான் அல்லது பலர்தான் என்பது எப்படி விசாரணைக்கு முன், சாட்சிகள் கொடுப்பதற்கு முன், ஆதாரங்கள் அடையாளங்கள் வருவதற்கு முன், எப்படிச் சொல்ல முடியும் என்பதை அவர்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும், நான் எப்படிச் சொல்ல முடியும்? உண்மையிலேயே யாராவது ஒருவர் அல்லாமல் பல பேர் செய்து இருந்து, அதை மாற்ற முயற்சித்து, அந்த உண்மை வழக்கு மன்றத்தில் நிரூபிக்கப்படும்

என்றால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும், அவர்களுக்கு உரிய தண்டனை வழங்குவதற்கு தமிழக அரசு தயங்காது என்பதை நான் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் முருகையன் கொலைக்குக் காரணமாக இருந்தவர்கள் ஒருவரா, பலரா என்பதை முதலமைச்சர் என்ற முறையில் நான் எப்படிச் சொல்ல முடியும், சொல்லிவிடலாமா, அது எத்தனை பேர் என்பது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படுமானால்தான் தெரியும் என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் எங்களுக்குச் சொல்லவேண்டாம், வெளிப்படையாகவும் சொல்லவேண்டாம். ஆனால் நான் சொல்ல விரும்புவது, ஒருவர்தான் என்ற அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு. அதனால் அந்த வழக்கு நிரூபிக்கப்படாமல் போவதற்கு நிலைமை உண்டானால், அதன் மீது நீதிமன்றம் தீர்ப்பு கொடுத்தபிறகு, பலபேர் என்று பின்னர் நீதிமன்றத்தில் எப்படிச் சொல்ல முடியும். 'காக்னிசென்ஸ் ஆப் தி அபென்ஸ் பை செவரல் அதர் பீபிள்' என்று சொல்லி இப்போதே சம்பந்தப்பட்டவர்களை அதிகாரிகள் கண்டுபிடித்து சேர்ப்பார்களானால் அது சரியானதாக இருக்கும். அந்த வகையில் தான் ஆட்சிப்பொறுப்பில் உள்ள முதலமைச்சர் என்ற வகையில் உங்களைக் கேட்டுக் கொள்கிறோம், அருள் கூர்ந்து உங்களுடைய இலாகா அதிகாரிகளைப் பயன்படுத்தி நிலைமை தவறாகப் போய்விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நிலைமைகள் உண்மைக்கு மாறாகப் போய்விடக்கூடாது. இதுதான் இந்த அவையில் உள்ள மாற்றுக்கட்சி உறுப்பினர்களின் எண்ணமாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாலை 6.10)

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, அவர்கள் பேசியதைத் தொடர்ந்து ஒரு கருத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் கொலை செய்தவர் ஒருவரா பலரா என்பதை இப்போது கூற முடியாது என்று சொன்னார்கள். சரி. ஆனால் அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் அளித்த சாட்சியத்தை ஏற்க போலீசார் மறுத்திருக்கிறார்கள். அவருடைய மனைவியின் சாட்சியத்தை பதிவு செய்யவில்லை; அவரை விசாரணை செய்யவில்லை. அதற்கடுத்து, 5-ந்தேதி நிலத்தகராறு சம்பந்தமாக என்னை கொலை செய்துவிடுவேன் என்று கூறியிருக்கிறார் என முருகையன் புகார் கொடுத்திருக்கிறார், 12–ந்தேதி தீர்ப்பு வந்திருக்கிறது, இதையெல்லாம் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. துரை முருகன்: அதையொட்டி நானும் ஒரு கருத்தைச் சொல்கிறேன். முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். ஒருவரா. இருவரா என்று எப்படிச் சொல்ல





முடியும் என்று கூறினார்கள். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஒரு அதிகாரி அவர் ஒருவர்தான் ஓங்கி, ஓங்கி குத்தியிருக்கலாம் என்று சொல்லியிருக்கிறாரே அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள். உங்களுடைய பதில் நியாயமானது. ஆனால் ஒரு அதிகாரி இப்படிச் சொல்லியிருக்கிறாரே.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இன்வெஸ்டிகேஷன் முடியாமல் இருக்கும்போது இந்த பொறுப்பான பதவியில் இருக்கும் நான் கொலை செய்தவர் ஒருவரா பலரா என்று எப்படிச் சொல்ல முடியும் என்றார்கள். சொல்ல முடியாது. சொல்லக்கூடாது. அதே பேசிஸ் அதிகாரிக்கும் அப்ளை ஆகும் அல்லவா? அப்படி இருக்க அந்த டி. ஐ. ஜி., இன்வெஸ்டிகேஷன் கம்ப்ளீட் ஆகாமல் இருக்கும்போது ஒருவர்தான் செய்தார் என்று ஸ்டேட்மெண்ட் விட்டிருக்கிறாரே, அது சரியா?

அடுத்தது கோர்ட் முடிவு செய்தால் என்று முதலமைச்சர் சொன்னார். கோர்ட்டின் தீர்ப்பு பிரதான அசிஸ்டன்சான இன்வெஸ்டிகேஷன் ஏஜென்சியைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இன்வெஸ்டிகேஷன் ஏஜென்சி கொலை செய்தவர் ஒருவர்தான் என்ற முடிவுக்கு வருமானால். அப்படி ஒரு 'ப்ரிஜட்ஜிடு வியு' எடுத்துவிட்டால். கோர்ட் தீர்ப்பும் அப்படித்தானே இருக்கும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்; தலைவரவர்களே, நான் சொல்லுகின்ற பதிலை ஏடுகளில் வரக்கூடாது என்று உத்தரவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

* * *

அதோடு இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன் நண்பர் முருகையன் அவர்கள் உடல் அடக்கத்தன்று நான் அங்கே சென்றிருந்தபோது என்ன நடந்தது என்பதை எல்லாப் பத்திரிகைகளிலும் சரியாக வெளியிட்டார்களா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் அங்கே இருந்தார்கள். அங்கே நான் வருத்தம் தெரிவித்தது மட்டுமல்ல; இதனால் ஒரு கொள்கையை அழித்துவிட முடியாது என்று அங்கே தெரிவித்ததோடு, இந்த வழக்கை சரியாக விசாரிக்காமல் யாராவது தவறு செய்தால், அவர் எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும் தமிழக அரசு அவர்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று நான் சொன்னதைக் கேட்டுவிட்டு, அங்கே கூடியிருந்த சிலர் கைதட்டியதையும், இங்கே அப்படியாரும் கை தட்டக்கூடாது என்று நான் கேட்டுக் கொண்டதையும் அவர்கள் அறிவார்கள்.

* மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

இருந்தாலும் சிலர் நான் வருத்தம் தெரிவிக்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அலட்சியமாக இருக்கிறேன் என்று சொல்கிறார்கள். அதிகாரிகள் தவறு செய்திருந்தால் நிச்சயமாக அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும். பத்திரிகைகளில் இப்படி செய்திகள் வரும்போது ஒவ்வொரு வருக்கும் சில சங்கடங்கள் வரும். அதையெல்லாம் உணர்ந்து அரசு தகுந்த முறையில் விசாரணை செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும். இப்படிப்பட்ட நேரத்தில் என்ன நடக்கிறது என்று பார்த்து அவசரப்படாமல் உண்மையிலேயே ஒருவர் தவறு செய்திருக்கிறார் என்று தெரிந்தால் மேற்கொண்டு அரசையோ அல்லது அதிகாரிகளையோ கலந்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசுக்கு யோசனை சொல்லி, நடவடிக்கை எடுக்க உறுப்பினர்கள் உதவியாக இருந்தால் எந்தச் சந்தேகமும் வராமல் பார்த்துக் கொள்ள முடியும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நல்ல சூழ்நிலைகளை உருவாக்கிக்கொள்வது இந்த முறையை ஏற்படுத்திக்கொள்வது, அப்படித் தொடர்பு வைத்துக்கொள்வது நல்லது என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களது வீட்டிலே சோடா பாட்டில் எறிந்தது பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்தச் சமயத்திலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் உசிலம்பட்டியிலே பேசிக்கொண்டிருந்த போது என்மீது கற்கள் வீசி எறியப்பட்டது. அப்போது என்னைக் காப்பாற்ற வந்த நண்பர்கள் அந்த அடியினை வாங்கியதை நான் நினைத்துப் பார்க்கும்போது இந்த நிலைமையை என்னால் உணர்ந்துகொள்ள முடிகிறது. அப்படிப்பட்ட வன்முறையிலே இறங்குபவர்கள் இந்த சமுதாயத்தினுடைய பெயரைக் கெடுப்பவர்கள். அவர்கள் அமைதியைக் கெடுக்கின்ற கொடுமைக்காரர்கள் என்கின்ற வகையில் அவர்கள் மீது நாம நடவடிக்கை எடுப்பது நமது கடமை என்பதையும் அந்த நடவடிக்கை கட்டாயமாக எடுக்கப்படும் என்பதையும் மீண்டும் இங்கே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.......

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, தவறான தகவலைத் தந்த அதிகாரிகள் மீது அதாவது கொலைக்கு ஒருவர் தான் காரணம் என்று சொன்ன அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உறுதி அளித்ததற்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பி.ஏ.பி.எல் படித்தவராக இருக்கலாம். ஆனால் நான் அவரை விட வயது அதிகமானவன். இங்கே நான் சொல்லாததைச் சொன்னதாகச் சொல்லி அதனை எப்படியாவது குறிப்பேட்டிலே ஏற்றிவிட வேண்டும் என்று முயல்வது நிச்சயமாக நடைபெறாது என்றும் அவர்கள் அப்படிப் பேச வேண்டாம் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்,



அடுத்து நான் இன்னொன்றை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அய்யா அவர்களுடைய இதயம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொன்னார்கள். அதை எப்படியாவது எடுத்து பாதுகாக்க வேண்டும் என்ற உண்மையை வெளியிட்டேன். அதற்குப் பிறகு என்ன நேர்ந்தது என்பது தெரியும். ஆனால் இப்போது அந்த இதயம் இருக்கிறது என்பதும், அதுவும் இந்த செக்கரட்டேரியட்டிலேயே இருக்கிறது என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அது விரைவிலே ஈரோட்டிலே இருக்கின்ற அவருடைய நினைவாலையத்திலே வைக்கப்படும் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிலை உருவாவதற்குக் காரணமாக இருந்தவர்களுக்கும், இதை முயற்சி செய்து கொண்டுவருவதற்கு உதவி செய்த நண்பர்களுக்கும் நான் இந்த நேரத்திலே எனது பாராட்டைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அய்யா அவர்களுடைய இதயம் மட்டுமல்ல. எந்தெந்த உறுப்புக்கள் கிடைக்குமோ அத்தனையும் கொண்டு வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: தலைவரவர்களே, ஈரோட்டிலே நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேசியதற்குப் பிறகு சி.எம்.சி. ஆஸ்பத்திரி டைரக்டராக இருப்பவர் அப்படிப்பட்ட இதயம் இங்கே இல்லை, நாங்கள் எடுத்து வைக்கவும் இல்லை என்று அவர் ஒரு அறிக்கை விட்டார். நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் ப.உ.ச. அவர்கள் கூட 'என் மீது கோபம் இருந்தால் பரவாயில்லை, அய்யாவுடைய இதயத்தைக் கொடுத்துவிடுங்கள்' என்று சொன்னார். இதற்கிடையிலே அந்த ஆஸ்பத்திரியின் டைரக்டர் இப்படிப்பட்ட ஒரு அறிக்கையை விடுகிறாரே அவர் மீது சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் நல்ல யோசனை சொன்னதற்காக அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை விசாரிப்பதற்கு நான் அதிகாரிகளை ஏற்பாடு செய்திருக்கிறேன். அந்த அதிகாரிகள் விசாரிப்பார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். அதற்கான ஃபோட்டோ ஸ்டெட் காப்பிகள் எல்லாம் கூட இருக்கின்றன.

(மாலை 6.20)

ஆகவே அதை நான் இங்கே சொல்லும்போது நாம் எல்லோரும் நினைத்துநினைத்து வணங்கி பாராட்டக்கூடிய ஐயா அவர்களின் இதயம் அவர்கள் இறந்து விட்டாலும் இந்தத் தமிழகத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாக இருக்கவேண்டும் என்பதற்காக அதை எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்பதற்காக மருத்துவர்களின் யோசனைகளைக் கேட்டு அதை எப்படியாவது காத்து வைக்கவேண்டும் என்பதுதான் என் ஆசை. எதிர்கட்சியில் இருந்தாலும் அல்லது வேறு எங்கிருந்தாலும் நிபுணர்கள் யோசனைகள் சொன்னால் அது மிகவும் உதவியாக இருக்கும் என்று சொல்லி—நிச்சயமாக இரண்டு டாக்டர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள், ஒருவர் அல்ல, தினத்தந்தியில் வெளியிடப் பட்டிருக்கிறது. அந்தக் குறிப்புகளை வைத்துக்கொண்டு செய்யலாம். ஆகவே இதைப் பாதுகாத்துத் தந்தவர்களுக்கு நன்றி கூறுவது மட்டுமல்லாமல் தவறான செய்தி வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க, அவர்கள் எப்படி தவறு செய்தார்கள், எதனால் செய்தார்கள் யார் தவறான செய்தியைக் கொடுத்தார்கள் என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள நிச்சயமாக அதிகாரிகளைக் கொண்டு ஒரு விசாரணை வைக்கப்படும்.

திரு. துரை முருகன்: அது ஐயா அவர்களின் இதயம்தான் என்று எப்படிச் சொல்லமுடியும்?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: ஜி.எம்.ஜி. ஆஸ்பத்திரியில் யார் அந்த நேரத்தில் அறுவை செய்யும் பொறுப்பில் இருந்தார்களோ, அந்தப் புத்தகத்தில் இருக்கிற குறிப்புகள் எல்லாம் அப்படியே இருந்திருக்கிறது. அந்தப் புத்தகம் கிடைத்திருக்கிறது. அந்தப் புத்தகத்தில் குறிப்புகள் இருக்கின்றன. எடுத்து வைத்திருக்கிறார்கள். நவம்பரில் விபரம் கிடைத்திருக்கிறது. அதைக் கொண்டு வந்து சேர்த்து எங்கே வைப்பது என்று முடிவு செய்வதுவரை பொருந்திருந்தேன். பல உறுப்பினர்கள் பல பிரச்சனைகளை எழுப்பினார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இன்னும் ஏதாவது சந்தேகங்கள் இருக்குமானால், அவற்றிற்கெல்லாம் உள்ளபடியாக விரிவாக பதில் சொல்லவில்லையென்றால் நான் வேண்டுமென்றே அவைகளை அலட்சியப்படுத்திவிட்டதாக எண்ணாமல் மணி இப்போது 6.20 ஆகிறது, முன்பே ஐந்து மணி என்று சொல்லும்போது பலருக்கு வேலைகள், பொறுப்புகள் இருப்பதால் முன்னாலேயே நடத்த வேண்டும் என்று சொல்லும் நிலை ஏற்பட்டது. அந்த நிலையிருந்தும் அவர்கள் ஒத்துழைத்ததற்காக. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மற்ற கட்சித் தலைவர்களுக்கும், மாமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி பாராட்டி வாழ்த்தவிரும்புகிறேன். எனது விளக்கத்தை முழு விளக்கமாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது எந்தெந்த புள்ளிவிவரங்களை நான் தரவேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்களோ அந்தப் புள்ளிவிவரங்களை என்னிடம் இருக்கிற அளவில் நான் கூற முன்வருவேன் என்று கூறி யாராவது லஞ்சம் பெற்றவர்கள் என் கட்சியில் இருப்பார்கள் என்றால் நான் ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து இங்கே என்னிடம் நீங்கள் சொல்ல வேண்டாம், அப்படி இங்கே சொன்னாலும் எனக்குக் கவலையில்லை. இங்கே சொல்லுங்கள் அல்லது தனியாகச் சொல்லுங்கள் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கிறேன் என்று கூறி ஆளுநர் அவர்களது உரையை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கே தன்னுடைய உரையை சிறப்பாக நிகழ்த்தியிருக்கிறார்கள். பல எதிர்கட்சித் தலைவர்கள் நம் தமிழகத்திலுள்ள நக்ஸலைட் கைதிகளை விடுதலை செய்யவேண்டியதற்கான அவசியத்தை இங்கே எடுத்து விளக்கினார்கள். . . . .

திரு. வி.கே. கோதண்டராமன்: பாயிண்ட் ஆப் க்ளாரிபிக்கேஷன் நமது பெருமதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கக் கூடிய நேரத்தில் ஒன்றைக் கூறினார்கள். தொழிற்சங்கங்களின் மூலமாகத்தான் தொழிலாளர்களை எடுக்கவேண்டும் என்பதில் எங்களுக்கு அதிக அக்கறை உண்டு என்று. எந்த அடிப்படையில் தொழிற்சங்கங்கள் சார்பில் எடுக்கமுடியும்? அது உண்மையில் நடைமுறையில் சாத்தியமானதா? ஒவ்வொரு தொழிற்சாலையிலும் பல தொழிற் சங்கங்கள் உண்டு. அப்படி பல தொழிற் சங்கங்கள் இருக்கக் கூடிய இந்த நிலையில் தொழிற்சங்கங்கள் சார்பில் அவர்கள்மூலம் தொழிலாளர்களை எடுக்கவேண்டும் என்று கூறுகிறார்களா?

மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: நான் சொன்ன கருத்தை அவர்கள் வேறுவிதமாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதை விளக்கவேண்டிய கடமை எனக்கிருக்கிறது. வேலைக்கு எடுத்துக்கொள்கிற தொழில் அதிபர்கள் சங்கங்களை அலட்சியம் செய்துவிட்டு தனித்தனியாக அந்தத் தொழிலாளர்களிடம் கையெழுத்து வாங்கி சேர்த்துக்கொள்கிற முறையை மாற்றுவதற்கு வழி கண்டுபிடிக்கவேண்டும் என்பதுதான் என் கருத்து.

மாண்புமிகு திரு.எம்.ஜி. இராமச்சந்திரன்: மாமன்ற உறுப்பினர்கள் என்னுடைய விளக்கத்திற்குப் பிறகு, இங்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற திருத்தங்களை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. து. இராமசாமி: விவசாயிகளுடைய பிரச்னைகளைப் பற்றி எடுத்துக் கூறியிருந்தேன். அவர்களுடைய கடன்களை ரத்து செய்து செய்யவேண்டும் என்ற கோரிக்கையைப்பற்றி சொல்லியிருந்தேன். அதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் எதுவும் அறிவிக்கவில்லை? என்ன அறிவிக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: 24, 25-ம் நாட்களில் என்.டி.சி. கூட்டத்திற்குச் செல்லுகிறேன். எத்தனை கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்கின்ற பிரச்னை வரும்போது, நம்முடைய நாட்டிலுள்ள விவசாயிகளுடைய பிரச்னைகளைப் பற்றி கண்டிப்பாகட் பேசுவேன் என்பதையும் எந்த அளவுக்கு எங்களுக்குள்ள முழு சக்தியையும் உபயோகித்து, எங்களுக்கு ஆற்றல் இருக்கிறது என்று நினைக்கின்ற அத்தனை ஆற்றல்களையும் பயன்படுத்துவோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: அதுவரை ஏலம் நடக்குமா? ஜப்தி நடக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வியின் கருத்து அவர்களுக்கும் தெரியும் எனக்கும் தெரியும். வசதியுள்ளவர்கள் தந்து தீர வேண்டும். ஏழை விவசாயிகள் துன்புறுத்தப்பட மாட்டார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி; முதலமைச்சர் அவர்கள் நாகை நாடாளுமன்ற உறுப்பினர் முருகையன் கொலை சம்பந்தமாக பேசினார்கள். இதைப்பற்றி நான் பேசும்போது, இந்தக்கொலை சம்பந்தமாக இன்னும் அவருடைய மனைவியிடம் விசாரிக்கவில்லை. 7-ம் தேதி துப்பு துலக்கும் நாய் காட்டியவர்களையும் கைது செய்யவில்லை. அவர்களை விசாரிக்கவும் இல்லை.......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் எனது பேச்சிலேயே குறிப்பிட்டேன். இதைப்பற்றி விசாரிக்கப்படும் என்று அதற்கு மேல் நான் சொல்லக்கூடாது.
(திரு. உத்திராபதி அவர்கள் எழுந்து நின்று கொண்டிருந்தார்...)

திரு. ரா. உமாநாத்; அவர் சொல்ல விரும்புவது, அவர் நேற்றைக்கு பேசியபோது, என்ன சொன்னார் என்றால், மூன்று பேர்களிடம் இப்போது ஒருவர்தான் பொறுப்பு என்று சொல்லும்





படி போலீசார் மிரட்டுவதாக சொன்னார்கள். இதை ஸ்பெஸிபிக்காக சொன்னார்கள், அதற்கு முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைத்தான் இப்போது கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: இதுபற்றி நிரூபிப்பார்களேயானல் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் செ. சிவசாமி. பெ.சு. திருவேங்கடம். ஆ. நடராசன். கே. உச்சி, கோ. இளங்கோவன், கூ. ச. முருகேசன், என். கிட்டப்பா, ஆர் மணிமாறன், சு. பாலன், ஏ. ஆர். மாரிமுத்து, கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம் ஆர். கிருஷ்ணன். என். வரதராசன் இவர்களுடைய திருத்தங்கள் சபையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி '1979ஆம் ஆண்டு பெப்ரவரி திங்கள் 9ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்து அளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றி உடையவர்களாவர்'.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

*பின்னர் பேரவை மாலை 6.29-க்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

93. அவசரகால நிலை அமுலிலிருந்தபோது ஆயுதந்தாங்கிய படைப்பிரிவினரின் தனிப் பயனுக்காக வழங்கப்பெற்ற ரம் எனும் மதுபானத்திற்கு ஆயத்தீர்வை, காலனுக்கான கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து 25.11.1978ஆம் தேதியிடப் பெற்ற உள்துறையின் 2909ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.
எதுவுமில்லை.

122135

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
... Limited, Madras-1.
... Sitharaman and Company, Madras-14.
...an Pathippagam and Book Depot, Madras-5.
...Venkatesan Chetty and Company No. 8-C, Pycrofts Road, Madras-5
...South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli
...Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
...Century Book House (Private) Limited, Madras-2.
...aivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Company, Velore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Tanjore) District.
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company 20. Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35. Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons. Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES

Jain Book Agency, New Delhi-1.
International Book House, Trivandrum.
The Book Syndicate, Hyderabad-1.
Labour Law Publications, Hyderabad.
Puthaghaleyam, Pondicherry.
Prabu Book Service, Gurgaon, Haryana.
K. P. Bagchi and Company, 286-B, B. Ganguli Street, Calcutta-17.

---

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

## தவணைத்தாள்.

சே எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| 29/7/94 | 24/8 | | |
| 13/3/95 | 15/3 | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.